விகடன்

தீர்க்கசுடர்

சிவபெருமான்

ர்ச்சுடர் - 1

தோற்றுவாய்

மலைசரிந்து இறங்கி, மண் செழிக்க ஒழுகி, அழிமுகத்தில் கடலைச் சேர்ந்து விரிநீர் என்றானது கங்கை. அலையலையெனப் பெருகி தன்னைத் தானே நிறைத்துக்கொண்டது. காற்றும் ஒளியும் கொண்டு வெளியாகியது. நீலவானாகியது. தன்னில் தான் செறிந்து எட்டுத் திசைகளையும் நிறைத்து அமைந்தது.

கேள் அரசே, இது முன்னர் நிகழ்ந்த கதை. முன்னர் நிகழ்ந்தவை கோடி கோடி. அவற்றில் கண்ணீரும் கனவும் சென்று தொட்டவை மட்டுமே ஒளிகொள்கின்றன. ஒளிகொள்வனவற்றை மட்டுமே எடுத்துச்சேர்க்கின்றனர் நூலோர். எண்ணிப்பயில்கின்றனர் வழிவழி வருவோர். மானுடரின் விழிநீர் தன் ஒழுக்கில் உருட்டி எடுத்த சொற்களே, கூழாங்கற்கள் கங்கையால் சாளக்கிராமங்களாவதுபோல் மெய்மை என்றாகின்றன. மலைதழுவியிறங்கும் ஏழு குளிர்ந்த கைகளை விரித்து கற்களை சாளக்கிராமமாக்கும் கங்கைப்பெருக்கை வணங்குக! கங்கையால் தூய்மை அடைந்தவை அழிவதில்லை என்று உணர்க!

செறிந்து ஒளிகொண்ட சொல் ஒன்று கங்கையினூடாக ஒழுகியது. செல்லச்செல்ல ஒரு மீன்விழி என்றாகி நீர் இறுகி கரும்பாறையென்றாகிய ஆழத்தை சென்றடைந்தது. அங்கே விழியோ செவியோ மூக்கோ கைகால்களோ இல்லாமல் சுவையறியும் நீர்வடிவான வாய் மட்டுமே கொண்ட உயிர்கள்

அடிநிலமெனச் செறிந்திருந்தன. அவற்றின்மேல் ஒரு நீர்க்குமிழி என அது பறந்து சென்றமைந்தது. நெளிந்து கொப்பளித்துக்கொண்டிருத அவற்றிடம் கேட்டது "சொல்க, நீங்களெல்லாம் யார்? இங்கே நீங்கள் அமைந்திருப்பது ஏன்?"

அவற்றில் ஒன்று தன் உடலதிர்வால் சொன்னது "நாங்கள் கங்கைப்பெருக்கில் ஒவ்வொரு நாளும் திரண்டு வந்து இங்கே அடையும் பெரும்பிழைகளை, நீங்காப்பழிகளை, துயர்களை கணமொழியாது நக்கி உண்டு அழிக்கும் ஆழத்து தெய்வங்கள். எங்களால் தூய்மை செய்யப்படுகிறது கடல். எங்களிலிருந்து மீண்டும் எழுகின்றன நதிகள்." அவற்றின் கரிய முடிவிலாப் பரப்பை நோக்கி உளம் மலைத்த மீன்விழி சொன்னது "அன்னையின் ஆழத்தில் நீங்கள் கனிந்திருக்கிறீர்கள். உங்களை வணங்குகிறேன். சொல்க, நீங்கள் எழுவது எங்கிருந்து?"

"நாங்கள் எதை உண்கிறோமோ அவற்றிலிருந்தே எழுகிறோம்" என்று அது சொன்னது "ஒவ்வொரு பிழையும் ஒவ்வொரு பழியும் ஒவ்வொரு துயரும் தன்னை திரட்டிக்கொள்ளவே தவித்துக்கொண்டிருக்கிறது என்று அறிக! தன் வடிவின்மையே அதை ஓயாது துடிக்கச் செய்கிறது. அத்துடிப்பே உயிர்களால் வலியென உணரப்படுகிறது. வடிவை அடைந்ததும் அது அமைதிகொள்கிறது. எல்லா வடிவங்களும் இறுக முயல்கின்றன. கூர் கொள்ள முயல்கின்றன. அறிக, அங்குள அனைத்தும் கூர்கொண்டபடியே இருக்கின்றன! கூர் என்பது ஒளி. உடல்களின் கூர் விழி எனப்படுகிறது. தாவரங்களின் கூரே தளிரும் மலரும். அகவடிவான அனைத்திலும் கூர் என எழுகிறது மெய்மை."

"மெய்மை திரண்டு உடல்கொண்டவர்கள் நாங்கள்" என அது சொன்னது. "எங்கள் நோக்கமே எங்களை முழுமை செய்வதே.

நாங்கள் தோன்றிய அழுக்கை உண்கிறோம். பின்னர் வளைந்து எங்களை நாங்களே விழுங்கி உண்டு மறைகிறோம்." விழித்துளி அவற்றை வணங்கியபின் கோரியது "கங்கைப்பெருக்கினூடாக வருகையில் நான் ஒற்றை வினாவையே அறுதியாக ஏந்தியிருந்தேன். அவ்வினா எஞ்சியமையால்தான் நான் முழுமைகொள்ளவில்லை. அதை நீங்கள் உரைத்து என்னை விடுவித்தாகவேண்டும்."

"கூறுக!" என்றது கடலுயிர். "பேரன்னை கங்கை கரைதோறும் காண்பது மானுடரின் துயரை மட்டுமே. கொள்வது மண்ணின் அழுக்கை. அவள் ஆறுதல் அளிக்கிறாள். அனைத்தையும் தூய்மை செய்கிறாள். எனினும் அந்தத் தீயூழ் ஏன் அவளுக்கு ஏற்பட்டது? ஆக்கி அமுதளிக்கும் அன்னையருக்கு உயிர்கள் ஏன் துயரை மட்டுமே திருப்பியளிக்கின்றன?"

"ஏனென்றால் அன்னை கங்கை ஐந்து தீச்சொற்களை பெற்றவள்" என்றது கடலுயிர். "முன்பு குறியோனாக உருக்கொண்டு விண்வடிவன் மண்ணிலெழுந்தபோது அவனுக்குமேல் விரிந்த நீர்வெளியாக அவள் வானிலிருந்தாள். கீழிருக்கும் பெருமானுக்கு குடைபிடித்து அவனை நான் காப்பேன் என்று எண்ணினாள். அந்த ஆணவத்தால் மறுகணமே அவள் தண்டிக்கப்பட்டாள். மூவடியால் புடவியை அளந்த மாலோன் தூக்கிய காலின் நகக்கணுவால் வானில் கீறல் விழுந்தது. அவள் பொழிந்து மண்ணிலிறங்கி மலைகளை மூடி பெருகி கடலை அடைந்தாள்."

பிறகொரு யுகத்தில் சகரன் என்னும் அசுரகுடி மன்னன் தன் ஆசுரவேள்வியை நிறைவுசெய்யும் பொருட்டு இந்திரனின் புரவியை நாடினான். இந்திரன் அஞ்சி தன் புரவியை கபில மாமுனிவரின் வேள்விச்சாலைக்குள் கொண்டுசென்று

கட்டினான். அரசன் தன் படையினருடன் கபிலரின் வேள்விச்சாலைக்குள் புகுந்து அப்புரவியை கவர்ந்துசெல்ல முயன்றான். கபிலர் அவனையும் அவன் குடியினரையும் தீச்சொல்லால் சுட்டெரித்து சாம்பலாக்கினார். சாம்பலில் எஞ்சிய ஒரு துளி முனிவரிடம் சொல்மீட்பு கோரியது. இச்சாம்பலனைத்தையும் தான் பெற்று உங்கள் ஆத்மாக்களை தூய்மை செய்யும் நீர்ப்பெருக்கு ஒன்றால் மீட்புகொள்க என அவர் சொல்லளித்தார்.

சகரனின் குலத்தில் எழுந்த பகீரதன் தன் குடிக்கு மீட்பளிப்பது விண்கங்கை ஒன்றே என்று உணர்ந்தான். அவன் கடுந்தவம் செய்து பிரம்மனை தன் முன் தோன்றச்செய்தான். பிரம்மனிடம் கங்கை மண்ணிறங்கவேண்டும் என சொல் கேட்டான். "அவள் உளம்கனிந்தால் அவ்வாறே ஆகுக!" என அவர் கூறினார். "அவள் உளம்கனிவது எப்போது?" என்று பகீரதன் கேட்டான். "அன்னைப்பசுவின் மடியை முட்டுகிறது கன்று... எந்த முட்டில் எப்போது அன்னை பால்கனியும் என அது அறியாது. ஆயினும் அது முட்டிக்கொண்டே இருக்கிறது" என்றார் பிரம்மன்.

பல்லாயிரமாண்டுகள் தவம் செய்த பகீரதன் கங்கையை அழைத்துக்கொண்டே இருந்தான். ஒரு கணத்தில் அவன் அழைப்பால் தன் முலைகளில் அமுது ஊற அன்னை கீழே நோக்கினாள். விண்முனிவர் அவளிடம் சொன்னார்கள் "அவன் எளிய மானுடன், அசுரகுடியினன். அவனுக்காக கனியலாகாது உன் முலை. அவை விண்ணவருக்கு அழிவின்மையை அளிக்கும் அமுது ஊறும் சுனைகள் என்று உணர்க!" அன்னை நோக்கை திருப்பிக்கொண்டாலும் உள்ளம் திரும்பவில்லை. மீண்டும் மீண்டும் மானுடமைந்தனின் அழைப்பு அவள் மடியை முட்டியது. அவளை மீறி அவள் முலைகள் சுரந்து மண்மேல்

பெருகிவழிந்தன. “நீ மண்ணிலிறங்கி மானுடருக்குரியவள் ஆகுக!” என முனிவர் அவள் மேல் தீச்சொல்லிட்டனர்.

மண்ணிறங்கிய அன்னை சிறுமியாக இருந்தாள். அவளுடன் ஏழு தங்கைகள் பிறந்தனர். அவர்களுடன் சிரித்து நகையாடி மலையிறங்கி வந்தாள். வழியில் நீராடும்பொருட்டு இறங்கிய துர்வாச முனிவரின் ஆடையை கோமதி இடித்து இழுத்துச்சென்றாள். வெற்றுடலை மறைக்கும்பொருட்டு திணறிய முனிவரைக் கண்டு மந்தாகினி நகைத்தாள். அளகநந்தையும் நாராயணியும் மகாகாளியும் உடன்சேர்ந்துகொண்டார்கள். கங்கை சிரிப்பை அடக்கிக்கொண்டாள். சினம்கொண்ட முனிவர் கங்கையை நோக்கி “அழகி எனும் நிமிர்வும் இளமை என்னும் விசையும் கன்னியரை ஆணவம் கொள்ளச் செய்கின்றன. அவர்கள் அன்னையராகி அடங்குவதே நெறி. நீ பல்லாயிரம்கோடி மானுடருக்கு அன்னையென ஆவாய். அவர்களின் பிழைகளை பொறுப்பாய். பழிகளை சுமப்பாய். துயர்களை கரைப்பாய்” என்று தீச்சொல்லிட்டார்.

துயருற்ற அன்னை செல்லும்தோறும் சீற்றம்கொண்டாள். அமாவசு கொடிவழியின் அரசமுனிவரான ஜஹ்னு தன் வேள்விநிலத்தில் தவம்செய்துகொண்டிருக்கையில் அந்நிலத்தை அள்ளிச்சுருட்டி கொண்டுசென்றாள். அவளை தன் கையசைவால் நிறுத்திய ஜஹ்னு “சொல், நீ யார்? தவச்சாலையை கலைக்கும் ஆற்றலை எங்கிருந்து பெற்றாய்?” என்றார். “நான் விண்கங்கை. விண்ணிலுறையும் தூய வேதச்சொல் போன்றவள். என்னை மண்ணிலுள்ளோர் பிழைகளையும் பழிகளையும் துயர்களையும் கொள்ளும்படி

ஆணையிட்டார் முனிவர்... நான் அதை பொறுத்துக்கொள்ள மாட்டேன்" என்று அன்னை சொன்னாள்.

"விண்ணுறையும் வேதச்சொல் மண்ணில் நால்வேதங்களாகியது முனிவர் சொல்லினூடாக என்று உணர்க!" என்றார் ஜஹ்னு. "உன்னை என் நாவால் உண்டு செவியால் புறந்தருகிறேன். நீ மண்ணவருக்கு உரியவள் ஆவாய்." அவர் அவளை அள்ளி உண்டு தன் செவியினூடாக வெளியேவிட்டார் "இனி நீ என் மகளென்றாகி ஜானவி என அழைக்கப்படுவாய்.வேதம்போல் பல்லாயிரம் நாப்படினும், பலகோடி பிழைபடினும் தூய்மை இழக்காதவளாவாய்" என்று வாழ்த்தினார்.

மண்ணவர்க்குரிய அன்னையென அவள் அவ்வண்ணம் மாறினாள். வேதமெய்மையே நீர் வடிவு கொண்டதுபோல் மண்ணில் ஒழுகிச்சென்றாள். மானுடர் அளித்த அன்னத்தை பெற்றுக்கொண்டு அவர்களின் மூதாதையரை விண்புகச் செய்தாள். உளம் கனிந்து உளம் நிறைந்து மண்ணில் தன்னை முழுதமைத்துக்கொண்டாள்.

பின்னர் ஒருநாள் மாமுனிவர் நாரதர் அன்னையின் நீரில் மூழ்கி எழுந்தபோது அன்னை தன்னை அடையாளம் காணவில்லை என்று கண்டார். திகைப்புடன் "கங்கையே, விண்ணில் என் தோழி நீ. எங்ஙனம் என்னை மறந்தாய்?" என்றார். அன்னை "நான் விண்ணை நினைவுறவில்லை... மண்ணிலேயே நிறைவுற்றிருக்கிறேன்" என்றாள். அவள் இருந்த நிறையன்னை நிலையை உணர்ந்த நாரதர் சொன்னார் "ஆம், நீ கனிந்த அன்னை. ஆனால் பேரன்னையரே விண்புக முடியும். தன் குழவியரின் குருதிச்சுவை அறியாதவள் விண்புகும் பேரன்னை ஆவதில்லை. அவ்வாறே ஆகுக!"

அத்தீச்சொல்லால் அன்னை கங்கை அஸ்தினபுரியின் குருகுலத்தில் பிறந்த சந்தனு என்னும் மன்னனுக்கு துணைவியாக வந்தாள். எட்டு வசுக்களை மைந்தராக ஈன்றாள். எழுவரைக் கொன்று குருதிச்சுவை அறிந்தாள். பேரன்னையாக மாறி விண்ணில் ஒழுகலானாள். மண்ணில் அவளுடைய நிழலே நீர்வடிவாக பெருகி கடல்சேர்ந்தது.

தன் மைந்தரைக் கொன்று கடக்காத அன்னை முழுமைகொள்வதில்லை. அரசே, அறிக! பேரன்னையர் தன் மைந்தரை படிகளாக்கி ஏறி விண்புகுபவர்கள்.

நீர்ச்சுடர் - 2

பகுதி ஒன்று : இருள்நகர் – 1

அரசியே, கேள். முதற்பொருளாகிய விஷ்ணுவிலிருந்து படைப்பிறையாகிய பிரம்மனும் பிரம்மனிலிருந்து பிறவித் தொடராக முதற்றாதையர் மரீசியும், கஸ்யபனும், விவஸ்வானும், வைவஸ்வதமனுவும் பிறந்தனர். புவிமன்னர் குலத்தை உருவாக்கிய பிரஜாபதியாகிய வைவஸ்வதமனுவின் மைந்தர் இக்ஷ்வாகு. வைவஸ்வதமனு தன் மெய்யறிவையே சிரத்தா என்னும் பெண்ணென எழச் செய்து அவளுடன் இணைந்து இக்ஷ்வாகு, நிருகன், சர்யாதி, திஷ்டன், திருஷ்டன், கரூஷன், நரிஷ்யந்தன், நாபாகன், பிருத்ரன், கவி என்னும் பத்து மைந்தர்களை பெற்றார். மெய்மையின் நிழலான ஐயத்தை சாயை என்னும் பெண்ணாக்கி அவளைப் புணர்ந்து மனு, யமன், யமி, ரேவந்தன், சத்யும்னன், அஸ்வினிகுமாரர்கள் என்னும் மைந்தர்களுக்குத் தந்தையானார். இக்ஷ்வாகுவிலிருந்து

பிறந்தது இக்ஷ்வாகு குலம் என்று அறிக! அவர்கள் சூரியகுலத்தவர் என்று அறியப்படுகிறார்கள். அவர்களின் புகழ் அழிவிலாதெழுக!

இக்ஷ்வாகுவிலிருந்து தண்டன், விகுக்ஷி, நிமி என்னும் மூன்று அரசர்கள் பிறந்தனர். அவர்களில் விகுக்ஷியிலிருந்து சசாதனும் அவன் மைந்தனாக புரஞ்சயனும் பிறந்தனர். ககுல்ஸ்தன், அனேனஸ், பிருதூலாஸ்வன், பிரசேனஜித், யுவனாஸ்வன் என்னும் கொடிவழியில் மாமன்னன் மாந்தாதா பிறந்தார். அவருடைய மைந்தர்களே அம்பரீஷன், முசுகுந்தன், புருகத்ஸன் என்னும் அரசர்கள். புருகத்ஸனின் மைந்தன் திரிசதஸ்யு. அவனிலிருந்து அனரண்யன், அர்யஸ்வன், வசுமனஸ், சுதன்வா, த்ரைர்யாருணன் ஆகியோர் பிறந்தனர். அவன் மைந்தன் திரிசங்கு தனக்கென்று உலகைப் படைத்தவன். அவன் மைந்தனே மெய்யே வாழ்வென்று நிலைகொண்ட ஹரிச்சந்திரன். அவன் புகழ் வாழ்க!

ஹரிச்சந்திரனின் மைந்தன் லோகிதாஸ்வனிலிருந்து ஹரிதன், சுஞ்சு, சுதேவன், ஃபருகன், சகரன் என்னும் கொடிவழி நீட்சி உருவாகியது. அசமஞ்சஸின் மைந்தன் அம்சுமான். அவன் மைந்தனே கங்கையை மண்ணுக்குக் கொண்டுவந்தவனாகிய பகீரதன். அவன் புகழ் என்றும் நிலைகொள்க! வாழ்வோருக்கு அன்னமும் நீத்தோருக்கு நீரும் தெய்வங்களுக்கு ஊர்தியும் ஆகிய கங்கையை வணங்குக! மீன்குலங்களால் விழிகள் கொண்டவள். மூவிழியனின் சடையில் அமர்ந்தவள். குளிர்ந்த கைகளால் கற்களை சாளக்கிராமம் ஆக்குபவள். கனிந்தவள். கைபெருகி பாரதப்பெருநிலத்தை அணைப்பவள். அவளில் கரைக நம் கனவுகள்! நம் துயர்களும் ஏமாற்றங்களும்

பழிகளும் அவளிலேயே அமைக! நம் உவகைகளும் களியாட்டுகளும் அவள் மடியிலேயே நிகழ்க! அவள் வாழ்க!

பகீரதனின் குருதியிலிருந்து சுருதநாபன், சிந்துத்வீபன், ஆயுதாயுஸ், ரிதுபர்ணன், சர்வகாமன், சுதாசன், மித்ரசகன், கன்மாஷபாதன் என குலச்சரடு நீண்டது. அஸ்மகன், மூலகன், கட்கவாங்கன், தீர்க்கபாகு என வளர்ந்தது. திலீபன் என அழைக்கப்பட்ட தீர்க்கபாகுவின் மைந்தனே ரகு. அவன் குருதியினரே ரகுகுலத்தோர். ரகுவின் மைந்தன் அஜன். அவன் மைந்தன் பத்து தேர்களில் தனித்தூரும் அரசனாகிய தசரதன். தசரதனின் மைந்தனாக எழுந்தவன் ராமன். ராகவராமன் திரேதாயுகத்தின் தலைவன். அவன் ஆண்டமையால் இந்த மண் அரசநெறி என்றால் என்னவென்று அறிந்தது. அது மானுடநெறியிலிருந்து எவ்வண்ணம் முரண்பட்டு உருக்கொண்டு எழும் என்பதைக் கண்டது. அரசநிலையே தவமென்றாகும் என்று கற்றது. வானுறையும் தெய்வங்களும் மண்ணில் வாழ வரலாகும் என அவன் பிறவி நிறுவியது. அவன் வாழ்க!

அரசியே, இக்ஷ்வாகுவின் மூன்றாவது மைந்தன் நிமி. நிமியின் மைந்தனே மிதி. கௌதம முனிவரின் மாணவனாகிய நிமி வேதவேள்விகளில் ஈடுபட்டு தன் நாட்டையும் தன் மூதாதையர் வாழும் விண்ணுலகையும் செழிக்கச் செய்தான். அவருக்காக ஜயந்தபுரம் என்னும் வேள்விச்சிற்றூரை உருவாக்கி அளித்தான். வேள்வியால் தன் அகத்தைச் செழிப்புறச் செய்தான். அரசக்கொண்டாட்டங்களால் தன் உடலை நிறைவுறச் செய்தான். ஒன்று பிறிதொன்றை வளர்த்தது. ஒன்று பிறிதொன்றுக்குப் பொருள் அளித்தது.

நல்லரசன் தந்தையெனக் கனிகிறான். தந்தையெனக் கனிபவன் நல்லரசன் என்றாகிறான்.

அந்நாளில் ஒருமுறை நிமி தன் அவைக்கு வந்த கௌதம முனிவரிடம் "ஆசிரியரே, ஓர் அரசன் இயற்றும் வேள்விகளில் முதன்மையானது எது?" என வினவினான். கௌதமர் "அரசே, தன் படைகள் வெல்லவேண்டும் என அரசன் இயற்றும் வேள்வி உயர்ந்தது" என்றார். அதைவிட உயர்ந்தது என்ன என்று நிமி கேட்டான். "தன் நாட்டில் வேதம் பொலியவேண்டி கருவூலம் முற்றொழிய அந்தணர்க்கு ஈந்து அரசன் ஆற்றும் வேள்வி" என்றார் கௌதமர். அதையும் கடந்தது என்ன என்றான் நிமி. "தன் குடிகள் செழிக்கவேண்டும் என்று அரசன் தன்னையே ஈந்து இயற்றும் வேள்வியே மேலும் சிறந்தது" என்றார் கௌதமர். அதைவிடவும் சிறந்த வேள்வி என்ன என்று நிமி கேட்டான். "தன் நிலத்தில் மழை ஒழியலாகாது என்று அரசன் தன் வேள்விநலன்களையும் அளித்து இயற்றும் வேள்வி" என்றார் கௌதமர். அதைவிடவும் மேலானது என்ன என்று நிமி கேட்டான். "தன் மூதாதையர் நிறைவடையவேண்டும் என அரசன் தன் மைந்தரையும் அளித்து ஆற்றும் வேள்வியே அதனினும் மேலானது" என்றார் கௌதமர்.

நிறைவுறாதவனாக "முனிவரே, அதைக்காட்டிலும் மேலான வேள்வி எது?" என்றான் நிமி. "தன் கொடிவழியினர் அழிவின்மை கொள்ளவேண்டும் என அரசன் இயற்றும் வேள்வியே அனைத்தைவிடவும் மேலானது. அதற்கப்பால் ஒரு வேள்வி இல்லை. வெற்றி, வேதச்சிறப்பு, குடிப்பெருக்கம், மழைநிறைவு, மூதாதையர் மகிழ்வு என்னும் ஐந்து நலன்களையும் இவ்வேள்வியே அளித்துவிடும்" என்றார்

கௌதமர். “ஐந்து வேள்விகளை நான் சொன்னபோதும் உன்னுள் இருந்து நிறைவுறாது பொங்கியது தந்தையென்னும் பெருநிலை. பெருந்தந்தை என்றாகுக! பேரரசன் என உன்னை அமைப்பது தெய்வங்களின் கடன்” என்று கௌதமர் சொன்னார்.

அவ்வண்ணம் ஒரு வேள்வியை நிகழ்த்த நிமி முடிவுசெய்தான். வேள்விக்குரிய பொருட்கள் அனைத்தும் வரவழைக்கப்பட்டன. அவை பாரதவர்ஷத்தின் எட்டு திசைகளில் இருந்தும் கொண்டுவரப்பட்டன. கௌதமர், பிருகு, அங்கிரஸ், வாமதேவர், புலகர், புலஸ்த்யர், ருசீகர் என்னும் ஏழு மாமுனிவர்களும் வேள்வியில் அமர ஒப்புக்கொண்டனர்.
வேள்வித்தலைமைகொள்ள முதல் வைதிகரும் தன் குலகுருவுமான வசிட்டரை சென்று பணிந்து அழைத்தான் நிமி. ஆனால் அப்போது வசிட்டர் இந்திரன் ஒருங்கமைத்துக்கொண்டிருந்த மாபெரும் வேள்வி ஒன்றை நிகழ்த்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தார். தன்னால் நிமியின் வேள்விக்கு வர முடியாது என அறிவித்தார். பலமுறை பணிந்து கோரியும் வசிட்டர் சொல்மீற முடியாதென்று உரைத்தார்.

குறித்த நாளில் வேள்வி தொடங்கவில்லை என்றால் தீங்கு விளையக்கூடும் என்று நிமித்திகர் கூறியமையால் கௌதமர் தலைமையில் முனிவர் அறுவரைக் கொண்டே நிமி வேள்வியை முடித்தான். மைந்தர் பெருகவும், கொடிவழிகள் சிறப்புறவும் தேவர்கள் வந்து சொல்லளித்தனர். வேள்விநலன் பெற்று நாடு செழிக்க உளம் நிறைந்து நிமி அமர்ந்திருந்த நாட்களில் விண்ணிலிருந்து வசிட்டர் மீண்டுவந்தார். அரண்மனைக்கு வந்த அவர் அரசன் நிமியை சந்திக்க விழைந்தார். ஆனால் வேள்விநிறைவில் கேளிக்கைகளில்

ஈடுபட்டிருந்த அரசன் அப்போது பகல்பொழுதில் துயில் கொண்டிருந்தான். அவனை எழுப்பத் தயங்கிய காவலர் வசிட்டரின் வரவை அறிவிக்கவில்லை. சினம்கொண்ட வசிட்டர் நிமியை நோக்கி தீச்சொல் ஏவினார். "கோலேந்தி அவையமர வேண்டிய பொழுதில் துயிலும் நீ உன்னால் பேணிப் பெருகவைக்கப்பட்ட அவ்வுடலை உதறுக! இப்போதே நீ உடலிலி ஆகுக!" என்றார்.

அவருடைய சொல் நிகழ்ந்ததுமே நிமியின் உடலில் இருந்து ஆத்மா கற்பூரத்தில் இருந்து நறுமணம் என பிரிந்து எழுந்தது. அவன் உடல் அங்கேயே கிடந்தது. வாழ்க்கை முடிவடையாமல் உடல்நீத்த அவன் ஆத்மா கடுவெளியில் நின்று தவித்தது. உடலிழந்ததுமே அது மூச்சுலகை அடைந்தது. அங்கே மூதாதையரின் தெய்வநிலையை அடைந்தது. "உயிர்பறிக்கும் உரிமை யமனுக்கு உரியது. ஏனென்றால் வாழ்க்கையின் பொருள் அறிந்தவன் அவன் மட்டுமே. மாமுனிவராக இருந்தாலும் நீங்கள் இவ்வண்ணம் உயிரகற்றியது உங்களுக்கு வாழ்வென்றால் என்னவென்று தெரிந்திருக்கவில்லை என்பதன் சான்று. நெடுநாட்கள் பயின்ற நோன்பாலும் ஊழ்கத்தாலும் நீங்கள் வாழ்க்கையை மறந்துவிட்டீர்கள். நோன்பும் ஊழ்கமும் வாழ்க்கையை அறிந்து கடத்தலின்பொருட்டே. மெய்மையும் வீடுபேறும் வாழ்க்கையை பொருள்கொள்ளச் செய்வன மட்டுமே. பெண்ணென்றும் ஆணென்றும் மைந்தன் என்றும் மகளிரென்றும் நின்று வாழ்க்கையை உணரும் ஓர் எளிய மானுடன் ஒவ்வொரு தவமுனிவனுக்குள்ளும் குடிகொண்டாகவேண்டும். இல்லையேல் அவன் பிறரை உணராதவனாவான். பிறர்மேல் அளியற்றவனாவான்" என்றான் நிமி.

“ஆசிரியரே, உங்களுக்கும் மூதாதையென நின்று இதை சொல்கிறேன். நீங்கள் இழந்ததை அடைந்து எழுக! எளியோனாக பிறந்து எய்தி மீள்க... இதுவே என் தீச்சொல்” என்று நிமி சொன்னான். வசிட்டர் அக்கணமே உடல்நீத்து மறுபிறப்பு கொண்டார். ஆதித்யர்களாகிய மித்ரனுக்கும் வருணனுக்கும் மைந்தனாக ஒரு குடத்திலிருந்து எழுந்தார். கமண்டலத்தில் பிறந்த அகத்தியரின் இளையோன் என அவர் அறியப்பட்டார். அங்கே அவர் அருந்ததியை மணந்து தவம்செய்து மெய்மையை மீண்டும் வந்தடைந்தார். கடலில் இருந்து கிளம்பி மலைமேல் பொழிந்து ஊறி நதியென ஒழுகி மீண்டும் கடலை அடைந்து நீர் என்று ஆனார்.

அரசன் மறைய நாடு மைந்தரில்லாமல் ஆகியதை அறிந்த அந்தணர்கள் முனிவர்களிடம் சென்று செய்வதென்ன என்று வினவினர். கௌதமர் “நீடுவாழும் கொடிவழியை அரசனுக்கு அளித்துள்ளனர் தேவர்கள். அச்சொல் அழியாது. அவர்களே அதற்குப் பொறுப்பு. அவர் உடலை வேள்விச்சாலைக்கு கொண்டுசெல்க! அவ்வுடலில் இருந்து மைந்தன் எழுந்தாகவேண்டும்” என்றார். அந்தணர் நிமியின் உடலை வேள்விச்சாலைக்கு கொண்டுசென்றனர். வேள்வியில் அமர்ந்த முனிவராகிய பிருகு “பால் கடையப்பட்டு வெண்ணை எழுகிறது. கடல் கடையப்பட்டு அமுதும் நஞ்சும் பிறந்தன. வான் கடையப்பட்டு எழுந்தவை சூரியனும் சந்திரனும் விண்மீன்களும் என்கின்றன நூல்கள். புடவியும் காலமும் மெய்யுணர்வால் கடையப்பட்டதன் விளைவாகத் திரண்டதே பிரம்மம் என்னும் அறிதல். அறிக, மைந்தர் பெற்றோரின் உடலில் எழும் அமுது! இவ்வுடலை நாம் கடைவோம். இவனிலிருந்து எழுக இவன் குடித்தொடர்!” என்றார்.

அவர்கள் அவ்வுடலை அனலுக்கு அளித்தனர். ஆடையென்பது அரையுடல். அணியென்பது அவ்வுடலின் ஒளி. உடல் உண்ட அன்னம் என்பதே அவ்வுடலின் முதல்வடிவம். ஆகவே அரசன் விரும்பி உண்ட உணவால் அவன் வடிவை அமைத்தனர். அதை அவன் அணிந்திருந்த ஆடைகளாலும் அணிகளாலும் அழகுசெய்தபோது அவன் அங்கே கிடப்பதாகவே உணர்ந்தனர். அவனைச் சூழ்ந்தமர்ந்திருந்த சூதர் அவனுடைய வெற்றியையும் கொடையையும் அளியையும் அன்பையும் அழகையும் புகழ்ந்து பாடப்பாட அவன் முகம் மலர்ந்தது. விழிகளில் உயிர் சுடர்ந்தது.

அந்தணர் வேதம் முழக்கியபடி அந்த உடலை மென்மையாகக் கடைந்தனர். அவ்வுடலில் இடத்தொடை அதிர்ந்தது. அதை பிளந்துகொண்டு ஒரு மைந்தன் எழுந்தான். மதனத்தால் ஜனித்த அவனை மிதி ஜனகன் என அவர்கள் அழைத்தனர். உடலிலியின் மைந்தன் என்பதனால் விதேகன் என்றனர். விதேகன் ஆட்சிசெய்த நிலம் விதேகம் என்றும், மிதி அமைத்த அதன் தலைநகர் மிதிலை என்றும் பெயர்கொண்டது. ஜனகர்களின் நிரையில் அரசமுனிவர் தோன்றினர். அருகமர்ந்து சொல்தேர்ந்து மெய்மை உரைத்தனர். அவர்களின் குருதியில் புவிமகள் என சீதை பிறந்து ராகவராமனை மணந்தாள். தன் தூய கால்களால் பாரதவர்ஷத்தை நடந்தே பொலிவுறச் செய்தாள். பேரன்னையை வணங்குவோம். அவள் புகழ் கணம்தோறும் பெருகி எழுக!

“கோசலனாகிய பிருஹத்பலனை வாழ்த்துக! இக்ஷ்வாகு குடியில் பிரசேனஜித்தின் மைந்தனாகப் பிறந்து குருக்ஷேத்ரப் போர்க்களத்தில் நின்றுபொருதி மாண்ட நிமியின்

குருதிம்ரபினனை வாழ்த்துக! விண்ணில் அவன் நிறைவுறுக! மண்ணில் அவன் புகழ் செறிவுறுக! ஆம், அவ்வாறே ஆகுக!" என்று பாணன் பாடினான். அவன் முன் காந்தாரியும் பிற அரசியரும் பானுமதியும் அமர்ந்திருந்தனர். தென்னகத்துச் சூதன் கருகிய சுள்ளிபோல் மெலிந்த சிற்றுடல் கொண்டிருந்தான். அவனுடன் அவன் நிழலென்றே தோன்றிய விறலி வெண்சிப்பிகள் என அகன்ற விழிகள் கொண்டிருந்தாள். அன்று காலை அவன் அரண்மனை முற்றத்தில் வந்து நின்று "புகழ்பாடி பரிசில் பெறவந்த பாணன் நான்... வாயில்கள் எனக்காகத் திறக்கட்டும்!" என்றான்.

அரண்மனையே அக்குரல் கேட்டு திகைத்தது. நெடுங்காலமாக அங்கே பாணரும் புலவரும் அணுகவில்லை என்பதைப்போல் அவர்கள் உணர்ந்தனர். அவனை என்ன செய்வது என்று தெரியாமல் காவல்பெண்டிர் தயங்கினர். முதிய செவிலி "இங்கே எவரும் பாடலுக்கு செவியளிக்கும் நிலையில் இல்லை... அவனை எளிய பரிசில் அளித்து அனுப்பிவையுங்கள்" என்றாள். இளைய அந்தணராகிய சிற்றமைச்சர் ஸ்ரீமுகன் பொன்நாணயத்துடன் சென்று பாணனை வணங்கி "கொள்க, பாணரே. இவ்வரண்மனை இறப்பின் துயரால் இருள்மூடியுள்ளது என அறிந்திருப்பீர்கள். இங்கே சொல்கொள்ளும் உள்ளங்கள் இன்றில்லை... இதை பெறுக! ஊட்டுபுரையில் உண்டு தங்கி மீள்க! என்றேனும் இங்கு மங்கலம் திகழ்கையில் வருக!" என்றார்.

தன் கையை பின்னிழுத்துக்கொண்டு பாணன் சொன்னான் "நான் இரவலன் அல்ல, பாணன். இங்கு வரும்வழியெங்கும் எனக்கு உணவிட இல்லறத்தோர் இருந்தனர். என் சொல்கொள்ள எவருமில்லை. சொல்லுக்கு

பொருள்கொள்வேனே ஒழிய எவருடைய அளியையும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். நானும் என் விறலியும் உணவுண்டு பன்னிரு நாட்களாகின்றன. இங்கு பசித்து மடிவதற்கும் எங்களுக்குத் தயக்கமில்லை." ஸ்ரீமுகன் என்ன செய்வதென்று அறியாமல் முதிய செவிலியை நோக்க மேலே உப்பரிகையில் வந்து நின்ற ஏவற்பெண்டு "முழவொலி கேட்டு பேரரசி உசாவினார்கள். பரிசில்கொள்ள வந்த பாணனா என்று அறியவந்தேன்" என்றாள். "ஆம், சொல்லுக்கு ஈடாக மட்டுமே பொருள்கொள்ளும் தென்னிலத்துப் பாணன் என்று கூறுக!" என்றான் பாணன்.

சென்று திரும்பிவந்த ஏவற்பெண்டு "அரசி அவரை அகத்தளத்திற்கு அழைத்துச்செல்லும்படி ஆணையிட்டார்கள்" என்றாள். பாணன் தலைவணங்கி தன் யாழுடனும் முழவுடனும் உள்ளே வந்து படிகளில் ஏறினான். முதிய செவிலி "இவர் போர்ப்பரணிகள் பாடப்போகிறார். அதுவன்றி இவர்களிடம் பாடுபொருள் வேறில்லை" என்றாள். ஸ்ரீமுகன் "போரைப்பற்றியா?" என்றார். "ஆம், ஆனால் போர் என்னும் சொல்லைக் கேட்டாலே இந்த அரண்மனை சருகுக்குவை என சரிந்துவிடும் போலுள்ளது" என்றாள் செவிலி. "நாம் என்ன செய்ய இயலும்? அவர்கள் காற்றுபோல. நம்மை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. நமக்கு புழுங்குவதும் நடுங்குவதும் காற்றுக்குத் தெரிவதேயில்லை" என்றார்.

அகத்தளத்தில் காந்தாரிமுன் அமர்ந்த பாணன் அவள் கோராமலேயே பாடத்தொடங்கினான். "சூரியகுலத்தின் பெருமையை பாடித் திரியும் பாணன் நான். எழுகதிர் பெருமையை, வீழ்கதிர் சிறப்பை, அழியாக்கதிர் ஒளியை பாடுபவன்" என்றான். காந்தாரி மறுமொழி சொல்லவில்லை.

அவள் சொல்லெடுத்தே நெடுநாட்களாகிவிட்டிருந்ததுபோல் தோன்றியது. பளிங்காலான சிலை என அவள் பீடத்தில் அமர்ந்திருந்தாள். சிறிய வெண்ணிற விரல்கள் கோத்து மடியில் வைக்கப்பட்டிருந்தன. உதடுகள் இறுகி ஒட்டி செந்நிறப் புண் என தெரிந்தன.

"குருக்ஷேத்ரப் போர்க்களத்தில் கோசலனாகிய பிருஹத்பலன் மலர்ச்சூழ்கைக்குள் நின்று பாண்டவ மைந்தனாகிய அபிமன்யுவுடன் பொருதினான். இரு மாவீரர்களும் அணுவிடை குறையாத ஆற்றலுடன் ஒருவரை ஒருவர் தாக்கி போரிட்டனர். விலகியும் அணுகியும் நிகழ்ந்தது அப்போர்" என்று பாணன் பாடினான். "ஆயிரத்தெட்டு இதழ்களுடன் விரிந்த பெருந்தாமரையின் இதழ்கள் ஒன்றன்மீது ஒன்றென மெல்ல படிந்து ஒற்றை வளையமென்றாகி குவிந்து மொட்டாகி இறுகி செண்டாகி மணியாகி மூடிக்கொண்டன. உறுதியான ஓர் எண்ணம் மலரை உலோகமென்றாக்கும் என்று அறிக! மலர்ச்சூழ்கைக்குள் பாண்டவ இளையோனாகிய அபிமன்யு முழுமையாகவே சிக்கிக்கொண்டான். அவனைச் சூழ்ந்து கௌரவர்களின் பெருவீரர்கள் அனைவரும் குலைத்த வில்லுடன் நிறைந்த ஆவநாழியுடன் வந்து வளையமென்றானார்கள்."

கை பெருகி சித்தம் ஒன்றென்றாகி நின்று போரிட்ட அபிமன்யுவைச் சூழ்ந்திருந்த கௌரவ வீரர்கள் ஒவ்வொருவரும் காற்றெரியில் சுழன்று பதறிப் பறக்கும் பறவைகள்போல் அலைமோதினார்கள். உடன்வந்த பாஞ்சால வீரர்கள் அனைவரும் கொன்றொழிக்கப்பட அபிமன்யு தன்னந்தனியனாக நின்று போரிட்டான். அவன் அம்புகள் பட்டு சுபலரின் ஏழு படைத்தலைவர்கள் தேர்த்தட்டுகளில்

விழுந்தனர். துரியோதனன் தன்னெதிரே தழலென ஆடி நின்றிருந்த அர்ஜுனனை பார்த்தான். என் மைந்தன் என் மைந்தன் என எழுந்து கொந்தளித்த நெஞ்சை உணர்ந்தான். நடுங்கும் கைகளுடன் தேரில் அமர்ந்திருந்தான். அவனுக்கு இருபுறமும் துச்சகனும் துச்சாதனனும் வில் சோர தேரில் பின்னடைந்துகொண்டிருந்தனர்.

அக்கணம் கோசலனாகிய பிருஹத்பலன் தன் தேரிலிருந்து வில்லுடன் பாய்ந்திறங்கி நெஞ்சில் அறைந்து வஞ்சினம் கூவினான். "இந்தக் கணத்திற்கென்றே வாழ்ந்தேன், பாண்டவனே" என்று குரலெழுப்பியபடி நாணொலித்துக்கொண்டு அபிமன்யுவை நோக்கி சென்றான். உடைந்த அம்புகளில் சிலவற்றை பொறுக்கியபடி எழுந்த அபிமன்யு நாண் தளர்ந்த வில்லுடன் அவனை எதிர்த்தான். அபிமன்யுவில் எழுந்த ஊழின் ஆற்றலை உணர்ந்த துரியோதனன் "செல்க, கோசலனை காத்துநில்லுங்கள்!" என்று கூவினான். ஆனால் ஊழ் வகுத்ததை மானுடர் திருத்த இயலாதென்று அவனும் அறிந்திருந்தான். "அழியாக் கொடிவழிக்காக நிமி தெய்வங்களிடம் சொல் பெற்றுள்ளான். பிருஹத்பலனோ மைந்தன் இல்லாதவன், இளையோன். எனவே இக்களத்தில் அவன் வீழப் போவதில்லை" என்று அப்பாலிருந்து கிருபர் கூவினார்.

மறுகணமோ முற்கணமோ அற்றவன்போல் பிருஹத்பலன் போரிட்டான். ஏழு அம்புகளால் அவன் அபிமன்யுவின் வில்லை உடைத்தான். எஞ்சிய ஒற்றை அம்புடன் அவன் தேர்ச்சகடம் ஒன்றுக்கு அடியில் பதுங்கினான். கர்ணன் நாண்குலைத்தபடி தேரில் அபிமன்யுவை நோக்கி வருவதற்குள் அருகில் உடைந்து கிடந்த தேர் ஒன்றின் மேல் பாய்ந்தேறிய அபிமன்யு அந்த ஒற்றை அம்பை வீசினான். காற்றின் திரைகளை

ஒவ்வொன்றாக கிழித்துக்கொண்டு அந்த அம்பு எழுந்தது. ஒருகணமே நூறு அணுக்கணங்களாக மாறியது. ஒவ்வொரு அணுக்கணமும் நூறு தன்மாத்திரைகளாக ஆயின. ஒவ்வொன்றிலும் ஒரு முகம் என இக்ஷ்வாகு குடியின் மூதாதையர் தோன்றினர். திகைப்பும் துயரும் சீற்றமும் அமைதியும் என முகங்கள் தெரிந்தன.

அவற்றில் ஒன்றில் மாமன்னன் நிமி தோன்றினான். "தெய்வங்களே, கூறுக! நான் உங்கள் அருட்சொல் கொண்டிருக்கிறேன். இக்ஷ்வாகுவின் கொடிவழி அழியாது பெருகும் என்று வேள்வித்தீயில் வந்து சொன்னவர்கள் நீங்கள். உங்கள் சொல்வந்து தடுக்கட்டும் இந்த கொலையம்பை..." என்று கூவினான். அவன் முன் பிரம்மன் தோன்றினார். "மைந்தா, உன் குடியே உன் உயிரில் இருந்து எழவில்லை என்று அறிவாய்" என்றார். "உன் வேள்விப்பயனே மைந்தன் எனத் திரண்டது. அதுவே இக்ஷ்வாகு குலமாக நீண்டது. ஐயமிருப்பின் உன் தந்தை இக்ஷ்வாகு இதோ உள்ளான். அவன் உடலை முகர்ந்து நோக்குக! உன் மைந்தனையும் முகர்ந்து ஒப்பிடுக!" என்றார்.

தன் முன் திரையிலெழுந்த இக்ஷ்வாகுவை நிமி முகர்ந்தான். "இவரிலெழுவது என் குருதியின் மணம்" என்றான். பின்னர் அப்பால் எழுந்த அலையில் தோன்றிய மிதிஜனகனை முகர்ந்து "இது என் குருதியின் மணம் அல்ல. வேள்விநெய்யின் மணம் இது" என்றான். "அறிக, உன் வேள்விப்பயன் மைந்தன் என்று ஆகுமென்றால் உன் குடியின் புகழ் திரண்டு ஒரு மைந்தன் என்று ஆகி தொடரலாகாதா?" என்றார் படைப்பிறைவன். நிமி "ஆம்" என்று சொல்லி பெருமூச்சுடன் தலையசைத்தான். "அவர்களில் எழுவது புதுப் பனையோலையின் மணம் என்று அறிக! சொற்களில் அழியாமல் திகழும் உன் குலமென்று

தெளிக!” என்றார் பிரம்மன். நிமி சொல்லின்றி பிரம்மனை வணங்கிவிட்டு தன்னைக் கடந்துசெல்லும் அம்பை வெறுமனே நோக்கி நின்றான். நீந்தும் நாகம் என கடந்து சென்றது அந்த அம்பு.

அதன் கூர்முனை பிருஹத்பலனின் கழுத்துநரம்பை வெட்டியது. திடுக்கிட்டு அள்ளிப் பொத்திய விரல்களின் நடுவே குருதி கொப்பளித்து எழ, வாய் கோணலாகி, கால்கள் குழைய பிருஹத்பலன் களத்தில் விழுந்தான். அவன் குருதி பெருகி மண்ணில் விழுந்தது. இரு கைகளாலும் காற்றை அளைந்தபடி உடல் புளைந்தது. விழிகளில் வெறுமை அசைவிலாதமைந்தபோது அவன் உடலை அவன் வேறெங்கிருந்தோ திகைத்து நோக்கிக்கொண்டிருந்தான். அவ்வுடல் சிதையேற்றப்படுவது வரை காற்றில் இருந்தான். எரியணைந்து வெள்ளெலும்பானபோது இறுதியாக நோக்கிவிட்டு விண்ணிலேறி காத்திருந்தான்.

கோசலத்தின் தலைநகர் குசாவதியைச் சூழ்ந்து ஓடும் சிற்றாறான ஹிரண்யவதியின் நீரில் கோசலத்து அந்தணரும் அமைச்சரும் குடித்தலைவர்களும் படைமுதல்வர்களும் கூடி பிருஹத்பலனுக்கு நீர்க்கடன் செய்தனர். குருக்ஷேத்ரத்திலிருந்து சிறு மண்கலத்தில் கொண்டுவரப்பட்ட எலும்புகளை ஹிரண்யவதிக் கரையில் மணல்கூட்டி செம்பட்டு விரித்து அமைக்கப்பட்ட பீடத்தில் வைத்து மலர்மாலை சூட்டி வழிபட்டனர். அவன் புகழை சூதர்கள் கலமுழவும் யாழும் மீட்டிப் பாடினர். அங்கே சமைக்கப்பட்ட எள்ளரிசி அன்னமும் காய்களும் கனிகளும் அவனுக்கு படைக்கப்பட்டன.

ஹிரண்யவதி குளிர்ந்து கிடந்தது. அங்கே காற்றலைகளில் பிருஹத்பலன் இருப்பதாக அனைவரும் உணர்ந்து மெய்ப்பு

கொண்டனர். அங்கேயே குடித்தலைவர்கள் கூடி அமர்ந்து முன்னரே முடிவெடுக்கப்பட்டபடி கோசலத்துத் தொல்குடியாகிய குசர்களில் இருந்து ஏழு அகவை நிறைந்த இளமைந்தன் ஒருவனை தெரிவுசெய்து பிருஹத்பலனின் புகழ்மைந்தனாக அனலைச் சான்றாக்கி தெரிவுசெய்தனர். அவன் தன் கையை அறுத்து ஏழு துளிக் குருதியை மண்ணில் சொட்டி தன் குருதித்தந்தையையும் குடியையும் உதறினான். நீருள் மும்முறை மூழ்கி எழுந்து மறுபிறப்புகொண்டு மேலே வந்தான். அந்தணர் அவனை வாழ்த்தி அவனுக்கு பிருஹத்ஷத்ரன் என்று பெயர் சூட்டினர். அமைச்சர்கள் அவனை வணங்கி சொல்கொண்டனர். படைத்தலைவர்கள் அவன்முன் வாள் தாழ்த்தினர்.

பிருஹத்ஷத்ரன் தன் தந்தை பிருஹத்பலனுக்கு ஹிரண்யவதியின் தூய பெருக்கில் நீர்க்கடன் செய்தான். கைநூறு கைகள் விரித்து கங்கை பலிநீர் கொள்கிறது. பெருநீர் வடிவென்றாகி கடலை அடைகிறது. பிருஹத்ஷத்ரன் கரையை அடைந்தபோது விண்ணிலிருந்து தழைந்திறங்கிய செம்பருந்து ஒன்று அவன் தலைக்குமேல் மும்முறை வட்டமிட்டு பொன்னொளியில் கணம்சுடர்ந்து மேலேறி காற்றில் மிதந்து வானில் மறைந்தது. அந்தணர் வேதம் ஓத, கோசலத்தினர் மறைந்த மாமன்னரை வாழ்த்திக் கூவினர். "இக்ஷ்வாகு குலம் பெருகுக! பிருஹத்பலன் புகழ் நிலைகொள்க! பிருஹத்ஷத்ரன் கோல் சிறப்புறுக!" என்று ஆர்ப்பரித்தனர்.

"அரசியே அறிக, செல்வம் அழியும். குருதி அறுபடும். குடிகளும் நகர்களும் மண்ணிலிருந்து மறையும். அறம்நின்று புகழ்பெற்ற குலம் என்றும் அழிவதில்லை. ஆம், அவ்வாறே ஆகுக!" என்று பாடியபின் பாணன் யாழை தாழ்த்தினான். கூடத்தில் அமைதி

நிறைந்திருந்தது. தன் மடியில் கைகளைக் கோத்து இறுக்கியபடி காந்தாரி தலைகுனிந்து அமர்ந்திருந்தாள். அவளைச் சூழ்ந்தவர்களாக நின்றிருந்த ஒன்பது அரசியரில் எவரிடமிருந்தோ மெல்லிய விசும்பலோசை மட்டும் எழுந்தது.

வெண்முரசு விவாதங்கள்

நீர்ச்சுடர் - 3

பகுதி ஒன்று : இருள்நகர் – 2

அஸ்தினபுரியின் அரண்மனை எரிபுகுந்து எழுந்ததுபோல் கருகி இருந்தது. அதன் தூண்கள் அனைத்தும் தொட்டால் கையில் கரி படியுமோ என நின்றிருந்தன. சுவர்கள் இருள்திரையென்று தொங்கின. நடக்கும் பாதையில் மரப்பலகையின் தேய்தடம்மேல் படிந்திருந்த சாளரத்து மெல்லொளியும் கூட இருளே நீர்மை கொண்டதென்று தோன்றியது. அரண்மனையின் இடைநாழிகளுக்குள் நடக்கையில் அதுவரை அறிந்திராத இடத்திற்கு வரும் பதற்றத்தை கனகர் உணர்ந்தார். மறுகணம் ஏதோ கொடிது நிகழவிருப்பதைப்போல. எவரோ ஓசையின்றி பின்தொடர்வதுபோல. இருளுக்குள் எவரோ பதுங்கியிருக்கிறார்கள். அல்லது இருளே பதுங்கிக் காத்திருக்கிறது.

அந்தத் தொன்மையான அரண்மனையின் பல பகுதிகள் புழக்கத்திலிருந்து விலகிவிட்டவை. அங்கே உள்ளறைகளுக்குள் இருள் நிறைந்திருப்பதை அவர் கண்டதுண்டு. அந்த

அரண்மனைக்கு அடியில் ஹஸ்தி கட்டிய பழைய அரண்மனையின் பகுதிகள் உண்டு. அவற்றை தொல்கருவூலங்களாக பயன்படுத்தினர். குறுகிய மரப்படிகளினூடாக கீழிறங்கி இருண்ட ஆழத்திற்குள் மூழ்கி அங்கே சென்றுசேரவேண்டும். அங்கே அவர் அரிதாகவே சென்றிருக்கிறார். பெரும்பாலும் ஏதேனும் அரிய பூசைச்சடங்குக்காக அதற்குரிய பண்டைய அரும்பொருட்களை எடுக்கும் பொருட்டு அங்கே செல்லவேண்டியிருக்கும். அரிதாக ஏதேனும் ஆவணங்கள் தேவைப்படும்.

அந்தச் சிற்றறைகளுக்குள் வழிந்தோடி உறைந்து மையென்றாகியதுபோல் இருள் செறிந்திருப்பதை அவர் கண்டிருக்கிறார். முதல்முறையாக அத்தகைய சிற்றறை ஒன்றுக்குள் நுழைந்து அங்கிருந்த ஏதோ தீய காற்றால் கையிலிருந்த அகல்விளக்கின் நெய்ச்சுடர் அணைக்கப்பட சற்று பொழுது விழியில்லாது ஆகிவிட்டதைப்போல் உணர்ந்து பதைத்து அங்குமிங்கும் கைதவித்து சுவர்களிலும் பொருட்களிலும் முட்டிக்கொண்டார். உடன் வந்த துணைஅமைச்சர் சவிதர் "அசையாமல் அங்கு நில்லுங்கள், அமைச்சரே. நான் விளக்கு கொண்டுவரச் சொல்கிறேன்" என்று சொன்னார்.

அசையாமல் நின்றபோது இருள் எல்லாப் பக்கங்களிலுமிருந்து வந்து கவ்விப் பற்றிக்கொண்டதைப்போல தோன்றியது. இருளை கையால் தொட முடியுமென்றும் வழித்து எடுத்துவிட முடியுமென்றும் உளமயக்கு எழுந்தது. நெடும்பொழுதுக்குப் பின் தொலைவிலிருந்து அகல்மணிச் சுடரொன்று அணுகி வந்தது. அதற்குப் பின்னால் பேயுருக்கொண்டு காவலன் ஒருவன் அசைந்துகொண்டிருந்தான். அவன் அருகில் வந்த

பிறகும் அச்சுடர் அங்கு நின்றுகொண்டிருப்பதுபோல் தோன்றியது. அவன் அருகணைந்து சுடரை அங்கிருந்த இன்னொரு விளக்கில் கொளுத்தினான். அது தயங்கி மெல்ல நெளிந்து எழுந்து நீண்ட போது அறை மீண்டும் பொருள் கொண்டது.

அங்கிருந்த ஒவ்வொரு பொருட்களையாக அவர் மாறி மாறி பார்த்தார். அவ்வனைத்தும் வேறாக உருமாறிவிட்டிருந்தனவா? இருளுக்குள் அவை பேருருவம் கொண்டெழுந்து, பின்னர் ஒளி வந்ததும் பழகிய பொய்வடிவம் சூடி அங்கு அமர்ந்திருக்கின்றவா? அங்கு பிடரியை சிலிர்ப்படையச் செய்யும் நோக்குணர்வு இருந்துகொண்டே இருந்தது. அவர் அமைச்சரிடம் "விளக்கை எவரோ அருகே வந்து ஊதியணைத்ததுபோல் தோன்றியது. இங்கு காற்றே இல்லை. எவ்வாறு விளக்கு அணைந்தது?" என்றார். சவிதர் "இந்த அறைகளுக்குள் நிலைக்காற்று உள்ளது என்கிறார்கள். உலவும் காற்று தெய்வங்களுக்குரியது. தேங்கிய காற்று கீழுலக இருப்புகளுக்கு ஊர்தி" என்றார்.

"இங்கே சில அறைகளில் நச்சுநீரென அது தேங்கியிருக்கும் என்கிறார்கள். முன்பு ஹஸ்தாஹாரம் என்னும் மேலும் ஆழத்து அறைக்குள் ஓர் ஏவலனை அனுப்பினேன். மாமன்னர் ஹஸ்தி அமைத்த நிலவறை அது. இருண்ட கிணறு போன்றது. ஆழத்தில் இருள் அலைகொண்டு மின்னுவது. பட்டுச்சரடாலான ஏணியினூடாக இறங்கிச்சென்ற அவன் எந்த ஒசையுமின்றி அந்த விழிதொடா நீரில் மூழ்கி மறைந்தான். அவன் கையில் கொண்டு சென்ற விளக்கு அணைந்தது. அவனைத் தூக்கும் பொருட்டு மேலும் நால்வர் இறங்கிச்சென்றனர். அவர்களும் இறந்த பின்னர் மேலும் நின்றவர்கள் அஞ்சி அகன்றுவிட்டனர்.

கொக்கிகளை வீசி எறிந்து அந்த உடல்களை மேலே எடுத்தோம். நீரில் மூழ்கி இறந்தவர்களின் வெறிப்பு கொண்டிருந்த முகங்கள்... அவற்றிலிருந்தே அவர்கள் கண்ட தெய்வங்களின் கொடிய உருவை அறிய முடிந்தது."

அதற்குப் பின் அங்கே நின்றிருக்க இயலவில்லை. "ஆவணங்களை கொண்டுவருக!" என்று சொல்லிவிட்டு அவர் வெளியே சென்றார். நெடும்பொழுது உள்ளம் படபடத்துக்கொண்டிருந்தது. அங்கிருந்து மேலே வந்தபின் அந்த இடத்தை முற்றாகவே நினைவிலிருந்து அழித்துக்கொண்டார். அவ்வப்போது கனவில் மட்டும் அந்த இடத்தை கண்டுகொண்டிருந்தார். ஒவ்வொருமுறை கனவிலும் அவர் அங்கே நாகங்களையும் கண்டார். விழி மின்ன இருளுக்குள் அவை சுருண்டு அமர்ந்திருந்தன. இருளென்றே செதில்கள் அசைந்தன. ஆனால் அங்கே அவர் நாகங்களை கண்டதில்லை. இருளில் நாகங்கள் இருந்தே ஆகவேண்டும். அவற்றின் கண்களில் மட்டுமே அங்கு ஒளி இருக்கமுடியும்.

கனகர் படியிறங்கிச் சென்றபோது அங்கே கல்லால் ஆன இருண்ட சிற்றறையில் மேலே எங்கோ திறந்த சிறுசாளரம் வழியாக ஆடிகளில் பட்டுத்திரும்பி வந்த மங்கலான ஒளி ஓர் கிழிந்த ஆடைபோல் விழுந்துகிடந்த இடத்தில் சவிதர் அதே விழிகளுடன் அமர்ந்திருந்தார். அவர் தன்னை அறிவித்ததும் அவரிடம் சற்று முன்னர்தான் பேசி நிறுத்தியதுபோல சொல்லொழுக்கை தொடர்ந்தார். அவர் தன்னை அடையாளம் கண்டுகொண்டார் என்று கனகர் எண்ணினார். பின்னர் உணர்ந்தார், அவருக்கு எவரும் ஆள் அல்ல என்று. முகங்கள் ட பொருட்டல்ல. கண்களை அவர் பார்ப்பதே இல்லை. அவர் பிறரை தன் ஆடிப்பாவை அசைவெனவே பார்த்தார். நெடுநாள்

புழுதிப்படலம் கலைந்து மீண்டும் அமைவது போன்றதே அவருடைய பேச்சு.

“செப்பு ஆவணங்கள் அறுபத்தெட்டு அறைகளிலாக உள்ளன. அறுநூற்றெண்பது பேழைகள். நீங்கள் கோருவது எந்த அரசரின் காலத்தைச் சேர்ந்தது என்று கூறுக! அரசச்செயல் சார்ந்த ஆவணங்கள் கருடமுத்திரை கொண்டவை. தெய்வச்சடங்குகள் என்றால் சந்திரசூரியர். குடிகள் குறித்த பதிவுகள் என்றால் அமுதகலம். அதற்குள் ஒவ்வொரு உள்ளடக்கத்திற்கும் தனியடையாளங்கள் உண்டு. அடையாளங்களை வெவ்வேறு வகையில் இணைத்து ஒற்றை அடையாளமாக ஆக்கியிருப்பார்கள். எவை என்று உரையுங்கள்...” என்றார். கனகர் அடையாளங்களை கூறியபோது சிற்றகலில் நெய்ச்சுடரை ஏற்றிக்கொண்டு அவர் கிளம்பினார். கனகர் உடனெழுந்தார். “நீங்கள் வரவேண்டும் என்பதில்லை” என்றார் சவிதர். ஆனால் கனகர் உடன்செல்ல விழைந்தார். அந்தப் பொழுதின் சோர்வை அச்செயல் கலைக்கும் என்பதுபோல. அத்தருணத்தில் எவரேனும் தன்னை இழிசொல் உரைத்தால், அறைந்தால்கூட மகிழ்ச்சியே உருவாகும் எனத் தோன்றியது. எதையேனும் வீசியெறிந்து இந்த அகந்திகழ் அசைவின்மையை கலைத்தேயாகவேண்டும்.

சவிதருடன் அவர் இருளிலிருந்து மேலும் இருளுக்கு என சென்றுகொண்டிருந்தார். தலைக்குமேல் காலம் ஒழுகிச்செல்வதை உணர முடிந்தது. அறைக்கதவுகள் இரும்புக்குமிழி வைத்த தடித்த மரத்தாலானவை. அவை மூடி இறுகி சுவர்களே என்றாகி நின்றிருந்தன. சவிதர் நோக்கி நோக்கி அடையாளங்களைத் தேர்ந்து ஒரு வாயில் முன் நின்று “இதுதான்” என்றார். இடையிலிருந்து தாழ்க்கோலை எடுத்து

அறைக்கதவை திறந்தார். முனகலோசையுடன் வாயெனத் திறந்து இருளில் இறங்கிச்சென்ற சிறிய சுரங்கப்பாதை தெரிந்தது. இருளில் குத்தி நிறுத்தியதுபோல வெண்கலத்தாலான ஏணி ஆழ்ந்து சென்றது. அவர் தயங்க சவிதர் "வருக!" என உள்ளே இறங்கிச்சென்றார். அவர் தொடர்ந்தபோது குளிர்ந்த கற்சுவர்கள் மேலேறிச் சென்றன.

"இங்கிருந்த பெரும்பாறை ஒன்றின்மேல்தான் ஹஸ்தி தன் அரண்மனையை கட்டினார். பின்னர் சிற்பிகள் அந்தப் பாறையை குடைந்து குடைந்து கீழிறங்கிச்சென்று இந்த அறைகளை உருவாக்கினர். இவை முன்னர் அரசகுடியினர் இடர்ப்பொழுதுகளில் வந்து மறைந்துகொள்ளும் இடங்களாகவும் கருவூலங்களாகவும் வடிவமைக்கப்பட்டன. பின்னர் கருவூலங்கள் பெருக அறைகள் ஒன்றிலிருந்து ஒன்றெனத் தொடர்ந்து ஆழ்ந்திறங்கிச் சென்றன. இங்கே நாங்கள் அறிந்தவரை நூற்றெட்டு அறைகள் உள்ளன. பல அறைகள் ஒழிந்துகிடக்கின்றன. அறியாத மேலும் அறைகள் இருக்கவும் கூடும். கீழிருக்கும் அறைகளில் நீர் நிறைந்துள்ளது. எவ்வண்ணமோ ஊறிய நீர். ஏதோ யுகத்தின் நீர்."

"இருளே குளிர்ந்து எடைகொண்டு நீரென்றாயிற்று என்கிறார்கள். இருக்கலாம். ஆனால் நச்சுநீர் அது. அதில் ஒரு துளி நம் உடலில் பட்டாலும் எரியும். நம் உடல் உருகத்தொடங்கும்... இருள் செறியுந்தோறும் இருளுலக தெய்வங்கள் இங்கே குடியேறலாயின. ஏனென்றால் அவை ஒளியை அஞ்சுபவை. ஒளியில் திகழும் காலத்தை வெறுப்பவை. இங்கே அவை இன்மைக்கு நிகரான இருப்பு கொண்டு உறங்குகின்றன. ஒவ்வொரு சிறுஒளியும் இங்கு அசைவுகளாகவே பெருகுகின்றது. அவை தெய்வங்களை

எழுப்புகின்றன. எழுந்த தெய்வங்கள் உரிய பலி கொள்ளாமல் மீண்டும் அமைவதில்லை. ஆகவே கூடுமானவரை இந்த அறைகளை திறப்பதில்லை. ஒருமுறை ஓர் அறையை திறந்தால்கூட குருதிகொடுத்தே மீண்டும் மூடுவோம். அக்குருதியால் அத்தெய்வம் நிறைவுறாவிட்டால் மேலெழுந்து சென்று அரண்மனையில் பலிகொள்ளும். அவ்வப்போது அதுவும் நிகழ்வதுண்டு."

சவிதர் விளக்கொளியால் கொண்டுசெல்பவர்போலச் சென்று அறைகளை திறந்தார். பேழைகளுக்கு நடுவே நிழலெனச் சென்றார். கனகர் கால் ஓய்ந்து அங்கிருந்த பெட்டிகளில் ஒன்றில் அமர முயன்றபோது "வேண்டாம், அமைச்சரே. இப்பெட்டிகள் அனைத்திலும் புழுதி படிந்துள்ளது" என்று சவிதர் சொன்னார். அப்புழுதியை விழிகளால் நோக்க இயலவில்லை. அவர் அறிந்த புழுதி மெல்லிய அலைகளாக படிந்திருப்பது. அது இருப்பது அறியாமல் சீரான வண்ணப் பூச்சாக மாறியிருந்தது. அவர் அந்தப் பெட்டிகளை கூர்ந்து நோக்கினார். அவை மரத்தாலும் இரும்பாலுமான பேழைகள். அனைத்தும் மண்ணாலானவை போலிருந்தன.

அவர் எண்ணத்தை அறிந்த அமைச்சர் "நீங்கள் கண்டது அலைவுறும் காற்றின் புழுதி, இது நிலைக்காற்று" என்றார். அவர் அப்போதுதான் சவிதரை கூர்ந்து நோக்கினார். அவர் பதறும் விழிகளும், சற்றே கூன் விழுந்த முதுகும், கன்னம் ஒட்டியமையால் எழுந்தமைந்த பற்களும் கொண்டிருந்தார். கனகரை விடவும் மூத்தவர். ஆனால் நெடுங்காலமாக கருவூலத்தின் சிற்றறைகளிலேயே பணிபுரிந்தார். எந்த அரசவிழவுகளிலும் அவரை நோக்கியதில்லை. சிற்றமைச்சர் அவைகளிலேயே பார்த்ததுபோல் நினைவிலெழவில்லை.

ஒருவேளை அவர் இந்த ஆழத்திலேயே வாழ்கிறார் போலும். வெளிவராமலேயே இங்கே இருக்கமுடியுமா? முடியும், வெளியுலகை அறியாமலேயே இருக்கவேண்டும். இவர் உண்மையில் இருப்பவரா, அன்றி பேய்த்தோற்றமா? முன்பு கண்ட அவர்தானா இவர்? இவர்கள் அனைவருமே ஒற்றைமுகம் கொண்டுவிடுகிறார்களா என்ன?

கனகர் விரைந்து ஆவணங்களை எடுத்து அளிக்கும்படி அவரிடம் கையசைவால் சொன்னார். அவர் கனகர் கூறிய ஆவணத்தின் நிரைக்குறி எண்ணை உள்ளத்தில் மீண்டும் குறித்துக்கொண்டு ஒவ்வொரு பெட்டியாக விரல் சுட்டி எண்ணியபடி அகன்றார். தலையை ஆட்டியபடி "இங்குள்ள பெட்டிகள் அனைத்தின் மீதும் புழுதி படிந்துள்ளது. அவற்றை நான் தொடுவதில்லை. சில பெட்டிகளின் மீது கை புதையும் அளவுக்கு புழுதி உள்ளது. அப்புழுதி ஒரு காப்பு. அது திரையிட்டு இங்கிருக்கும் பொருட்களை மறைத்துள்ளது. அப்பொருட்களுடன் இணைந்துள்ள தெய்வங்களையும் அதுவே கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. இங்குள்ளவை அனைத்தும் புதையல்கள். பூதங்களும் தெய்வங்களும் காவல் காக்காத புதையல்கள் இல்லை என்று அறிந்திருப்பீர்கள்" என்றார்.

அவர் நகைத்தபோது முற்றிலும் அது மானுட ஒலிபோல் தோன்றவில்லை. கன்னங்கள் குழிந்து உள்ளே போயிருக்க பிதுங்கிய சிறிய விழிகள் அலைமோதின. அவருடைய கையிலிருந்த விளக்கிலிருந்து முகம் மட்டும் இருளிலிருந்து எழுந்து தெரிந்தது. "இத்தகைய அறைகளுக்குள் இருக்கும் இருள் வேறு வகையானது. வானம் இருக்குமிடத்தில் உள்ள இருள் வேறு. அது ஒருவகை ஒளியேதான். ஏனென்றால் எந்நிலையிலும் அங்கே விழிகள் முற்றிலும் இல்லாமல்

ஆவதில்லை. ஒவ்வொரு பொருளும் தன்னை தான் கண்டடையும் அளவுக்கு அங்கு வெளிச்சம் இருக்கும். இத்தகைய இருள் மண்ணுக்கு அடியிலுள்ள குகைகளிலும், அனைத்து வழிகளும் முற்றாக மூடப்பட்ட இதுபோன்ற நிலவறைகளிலும் மட்டுமே இயல்வது" என்றார் சவிதர்.

"இது இருளல்ல. இதற்கு வேறு சொல் உள்ளது" என்று அவர் தொடர்ந்தார். "மயர்வு, மயல், மருள்... சரியான சொல் செம்மொழியில் உள்ளது. அவர்கள் இதை தமஸ் என்கிறார்கள். தமஸ் என்றால் இருள் மட்டுமல்ல, செயலின்மையும்கூட. நிலைத்ததன்மையும் ஆகும். இருளென்பது மாறாமை. நிலைத்தன்மை. இன்மை. ஒன்றுபிறிதொன்றாகும் மயக்கவெளி" அவர் எவருடன் பேசுகிறார் எனத் தெரியவில்லை. இருளுக்குள் இருந்து என குரல் ஒலித்துக்கொண்டிருந்தது.

"நான் இங்கு பணிக்கு வந்தபோது எனக்கு பதினாறு அகவை. இந்த அறைகளில் பணிபுரிய அந்தணர்கள் விரும்புவதில்லை. இங்கு சில நாட்கள் பணிபுரிந்தால் அதன் பின் வேள்விக்கூடத்திற்குள் நுழைய இயலாதென்றும் அனலெழும் எரிகுளத்திற்கருகே அமரமுடியாதென்றும் சொல்வார்கள். ஆகவே இங்கு மிகக் குறைவாகவே அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வழிவழியாக வருபவர்கள். இதன் காவலர்கள் கூட ஒருசில குடிகளில் இருந்தே மீண்டும் வருகிறார்கள். அவர்கள் இங்குள்ள தெய்வங்களால் ஆட்கொள்ளப்பட்டவர்கள். தெய்வங்களிடமிருந்து மானுடருக்கு மீட்பில்லை."

"எந்தை இங்கு பணிபுரிந்தார். அவர் விழிகளில் இருள் நிறைந்திருக்க மறைந்தார். அவரை நான் நன்கு

நினைவுறுகிறேன். முதுகு வளைந்த, தோல் வெளிறிய, பற்கள் உந்திய சிறிய மனிதர். ஆம், என்னைப் போலவே." அவர் அனல் பற்றிக்கொள்ளும் மூச்சொலி எழுப்பி சிரித்தார். "அவர் இங்கே ஒரு காவலறைக்குள் இறந்து அமர்ந்திருந்தார். கையில் விளக்குடன் உள்ளே நுழைந்தவர் அந்த விளக்கு அணைந்து போனதும் அங்கேயே உயிரிழந்து மூலையொன்றில் அமர்ந்திருந்தார். இறந்து உலர்ந்து ஒட்டியிருக்கும் பல்லிபோல." அவர் மீண்டும் நகைத்தார்.

"எப்போதும் அப்படித்தான் இருப்பார். இங்கே பெரிய அறைகூவலே காலம்தான். அது ஒழுகிக்கொண்டிருப்பது. அதை உணரும் உள்ளம் இங்கே அமைந்திருக்க முடியாது. காலத்தை உணர்பவன் இங்கே இருந்தால் பித்தனாவான். காலம் கரிய யானைபோல் துதிக்கையால் கால்களை சுழற்றிப்பிடித்து இழுக்கும் என்பார்கள். ஆகவே இங்கே அனைவருமே அகிபீனா உண்பார்கள். எங்களுக்கு தடையில்லாமல் அதை அளிக்கவேண்டும் என்பது நெறி. அது காலத்தை அழித்துவிடும். உள்ளத்தின் மேல் ஒரு கரிய பாறையைத் தூக்கி வைத்துவிடும். அவ்வப்போது அதன் விளிம்புகள் அலைகொள்ளுமே ஒழிய அசைவு நிகழாது. வைத்த இடத்தில் அவ்வண்ணமே அமைந்திருக்கும். இந்த எடைமிக்க பேழைகள் என நாமும் அமர்ந்திருக்கலாகும்."

"மெல்ல மெல்ல புழுதி படியத் தொடங்கும். எண்ணங்கள் மேல் உணர்வுகள் மேல் நினைவுகள் மேல். மெய்யாகவே உடல் புழுதி வடிவமாக ஆகும். அதன்பின் இடர் இல்லை. இங்கே இருப்பது எளிது. இருப்பதும் இல்லாமலிருப்பதும் வேறுபாடில்லாமலாகும்போது இருப்பதைப்போல் எளிது பிறிதில்லை." அவர் மீண்டும் சிரித்தார். அது சிரிப்பல்ல, வெறும்

ஓசை என்று தோன்றியது. தேனீக்கூட்டில் கல்பட்டதுபோல் அந்தப் பேச்சு ஒரு கலைவு. அவர் விரைவிலேயே அடங்கி சொல்லின்மைக்குள் சென்றுவிடுவார். இச்சொற்கள் அனைத்தும் மீண்டும் சென்றமையும்பொருட்டே சுழன்று சுழன்று பறக்கின்றன.

“எந்தையை நான்கு நாட்கள் தேடினர். இங்கே உடல்கள் மட்கிய கெடுமணம் எழுவதில்லை. எழக்கூடும், இங்குள்ள பொதுமணத்தில் அதை தனித்தறிய இயலாது. இங்கே அனைத்துமே மட்கிக்கொண்டிருப்பவை” என்றார் சவிதர். “தற்செயலாக ஒரு அறை திறந்திருப்பதைக் கண்டு ஏவலர்கள் உள்ளே வந்து அவரை மீட்டனர். அப்போது அவர் உடல் வற்றிவிட்டிருந்தது. முகத்தில் விந்தையானதொரு இளிப்பும் கண்களில் ஒளியின்மையும் நிகழ்ந்திருந்தது. அந்தணராயினும் எங்களை எரிப்பதில்லை, அவரை புதைத்தனர். அந்த இளிப்பு அப்படியே மண்ணுள் மறைந்தது.”

“என் அன்னை அரண்மனைப்பணி தவிர வேறு எந்தப் பணிக்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்று சொன்னார். எனக்குக் கீழே ஏழு மைந்தர்கள். தந்தை கொண்டுவரும் ஊதியமன்றி வேறு வாழ்க்கைக்கு அடிப்படை ஏதுமில்லை. எந்தையும் என்னை அரண்மனைக்கு கொண்டுசெல்ல விரும்பவில்லை. என்னை அவர் வேதம் படிக்க அனுப்பினார். என் நினைவில் வேதம் எழவில்லை. எரிகுளத்தை நோக்கி அமர்ந்திருக்கையில் மேலிருந்து பொழிந்து அனலை கவ்விக் கவ்வி உண்ணும் இருளை மட்டுமே நான் பார்த்திருந்தேன். பதினாறாண்டு அகவையில் ஒரு சொல்கூட வேதம் சித்தத்தில் நிற்கவில்லை.”

“ஆகவே வேறு வழியில்லாமல் நான் இங்கு பணிக்கு வந்தேன். இங்கிருந்த மூத்த அமைச்சர் பிரகதர் என்னை அருகணைத்து தன் கையை என் தோளில் வைத்து சொன்னார். உன் தந்தையை எனக்குத் தெரியும். நீ இங்கு பணிக்கு வரமாட்டாய் என்று சொன்னார்கள். நான் அதை நம்பவில்லை. எவ்வண்ணமாயினும் நீ இங்கு வந்துவிடுவாய் என்றே எனக்கு உறுதியிருந்தது. மைந்தா, ஒளியின் ஊழியர்கள் போலவே இருளுக்கும் ஊழியர்கள் உண்டு. அவர்களைவிட நாம் மேலும் வல்லமை கொண்டவர்கள். ஏனெனில் நம்மை ஆள்வது பலமடங்கு ஆற்றல் கொண்டது. இங்கே இப்புள்ளியில் இருந்து கடுவெளியின் முடிவிலி வரை புடவியை நிறைத்திருப்பது இருளே. அந்தப் பெருவெளியில் உள்ள இருளையே இங்குள்ள அறைகள் தேக்கி வைத்திருக்கின்றன என்றார்.”

“இருள் ஒன்றே அது சென்று தொடும் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு தெய்வமாக தான் வெளிப்படுவது. ஒவ்வொரு மூலைக்கும் ஒவ்வொரு வளைச்சுழிப்புக்கும் உரிய தெய்வத்தை அது தன்னிலிருந்து பிறப்பித்துக்கொள்கிறது. இங்கிருக்கும் தெய்வங்கள் முடிவற்றவை. நோக்க நோக்க பெருகுபவை. எண்ணங்கள் தொடும்தோறும் பேருருக் கொள்பவை. இருளை வணங்குபவன் அழிவிலாததும் எங்குமிருப்பதும் அனைத்திற்கும் அன்னையானதுமான ஒன்றை வணங்குகிறான். வெளியே அதை பராசக்தி என்கிறார்கள். மூன்று தெய்வங்களை ஈன்றவள் அவள். கைகளை விரித்து பெரும் உளஎழுச்சியுடன் அவர் கூவினார் சர்வ கல்விதமாமேகம் நான்யாஸ்தி சனாதனம்! அன்னை சொன்ன சொல்! சர்வ கல்விதமாமேகம் நான்யாஸ்தி சனாதனம்!”

“அவர் முகத்திலிருந்த களிப்பு பித்தர்களுக்கும் யோகியருக்கும் உரியது. கன்னங்கரியவள், இருளே உருவானவள், இன்மையை இருப்பெனக் கொண்டவள் என்று அவர் கூவினார். நான் அவரை நோக்கிக்கொண்டிருந்தேன். அக்கணம் முடிவுசெய்தேன், என் இடம் இது. இங்கன்றி வேறெங்கும் எனக்கு விடுதலை இல்லை.” அவர் குனிந்து அவர் விழிகளை பார்த்தார். “விடுதலை என்றால் என்ன? கட்டுப்படுத்துவனவற்றை கடந்து எய்தவேண்டியவற்றைச் சென்றடைவது அல்லவா? சிறையை ஒருவன் தன் அறுதிப் பரிசென அடைந்தால் அதுவே அவனுக்கு விடுதலை என்றாகும் அல்லவா?”

சவிதர் “என்னிடம் அவர் சொன்ன அந்தச் சொற்களை ஒவ்வொரு நாளும் தொட்டுத் துலக்கி வந்திருக்கிறேன். அந்த முதல் நுண்சொல்லை என்னுள் உரைக்காத நாழிகையே இல்லை” என்றார். கைகளை விரித்து “சர்வ கல்விதமாமேகம் நான்யாஸ்தி சனாதனம்! சர்வ கல்விதமாமேகம் நான்யாஸ்தி சனாதனம்!” என்று கூவினார். கனகர் அவரை விந்தையுணர்வுடன் நோக்க “அஞ்சவேண்டாம். நான் சித்தம் புரண்டவன் அல்ல. அகிபீனா என் சித்தத்தை நிலைநிறுத்துவதன்றி கலைப்பது அல்ல” என்றார்.

கனகர் எரிச்சலுடன் “பேச்சைக் குறைத்து அதை தேடித் தருக!” என்றார். “ஆம், தேடிக்கொண்டிருக்கிறேன். ஆனால் நான் பேசுவது மிக அரிது. நீங்கள் அறியமாட்டீர்கள், பத்தாண்டுகளில் இங்கே ஆவணம் கோரி வந்த ஏழாவது மானுடர் நீங்கள். இங்கு சில பணியாளர்களும் அமைச்சர்களும் இருப்பதை அப்போது மட்டும்தான் மேலிருக்கும் ஊழியர்களும் அமைச்சர்களும் உணர்கிறார்கள். எங்களைப் பார்த்து அவர்கள் திகைக்கிறார்கள். மண்ணில் விழுந்து மறந்துவிட்ட பொருளை

எடுத்து நோக்குகையில் அடியில் புழுக்கள் நெளிந்து கொண்டிருப்பதை பார்ப்பதுபோல. அல்லது மண்ணுக்குள்ளிருந்து வேர்கள் வந்து அதை கவ்வியிருப்பதைக் கண்டு திகைப்பதுபோல. நான் எண்ணுவதுண்டு புழுக்கள் வேறு வகையான வேர்கள் என. வேர்கள் ஒருவகை புழுக்கள். நான் என்ன சொல்லிக்கொண்டிருந்தேன்?"

கனகர் அவரை பார்த்துக்கொண்டிருந்தார். "ஆம், இருள். இதை தமஸ் என்கிறார்கள். அச்சொல்லை எனக்கு பிரகதர் சொன்னதை நினைவுகூர்கிறேன். தமஸ் என்றால் தேக்கமும் கூடத்தான். தேங்கியிருப்பது இருள். எழுவது ஒளி. விசைகொள்வது, விரைவது, எரிவது, அணைவது, மீண்டும் எழுவது, நெளிவது, துவள்வது, புகைவது, வெடிப்பது, சுழல்வது, அலைகொள்வது, தாவிப்பற்றி ஏறுவது, தொற்றிக்கொள்வது, மின்னுவது, துடிப்பது, பரவுவது, குவிவது. ஒளி அனைத்தையும் நிகழ்த்துகிறது. இருள் எதையும் செய்வதில்லை. அது தேங்கி நின்றுகொண்டிருக்கிறது."

ஏற்ற இறக்கமில்லாமல் ஏதோ தொன்மையான வழிபாட்டுச்சொல்லொழுக்கு என அவர் பேசிக்கொண்டே சென்றார். "இப்புடவி ஒரு மாபெரும் கலம். அதில் இருளை நிரப்பி வைத்திருக்கிறாள் பேராற்றல்வடிவினள். இல்லை, இருள் அதுவே ஒரு கலமாக தன்னைத்தானே தாங்கி புடவியென்று நின்றிருக்கிறது. அது நம்மிடம் கூறுகிறது சர்வ கல்விதமாமேகம் நான்யாஸ்தி சனாதனம்..." கனகர் மூச்சுத்திணறுவதுபோல் உணர்ந்தார். சொற்கள் மூச்சுத்திணறச் செய்யும் என அறிந்தார். "நன்று, நீங்கள் கோரியது இந்தப் பெட்டியில் உள்ளது" என்றார் சவிதர். "விரைவாக எடுங்கள்.

இங்கு நான் மிகைப்பொழுது நின்றிருக்க இயலாது" என்றார் கனகர்.

"ஆம்" என்றபின் அவர் அப்பெட்டியை கூர்ந்து நோக்கி கண்களை மூடி உதடுகளை அசைத்துக்கொண்டிருந்தார். பின்னர் பெருமூச்சுடன் கண் திறந்து கை தொழுது அந்தப் பெட்டியின் பூட்டுக்குள் தாழை நுழைத்து வெவ்வேறு வகையில் சுழற்றினார். "இதற்குரிய தாழ்க்கோலை கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்று கனகர் கேட்டார். "இங்குள்ள அனைத்துப் பெட்டிகளுக்கும் தாழ்க்கோல் ஒன்றே. இவற்றை ஆளும் தெய்வத்திற்குரிய நுண்சொல் உண்டு. ஒவ்வொரு பெட்டிக்கும் அது நுட்பமாக உருமாறுகிறது. அப்பெட்டியின் அளவிலிருந்தும் வடிவத்திலிருந்தும் அது வைக்கப்பட்டிருக்கும் இடத்திலிருந்தும் அக்கணக்கை நம் உள்ளத்திலிருந்து கறந்து எடுப்பதுபோல் திரட்டிக்கொள்ள வேண்டும். அதற்கேற்ப இத்தாழ்க்கோலைச் சுழற்றி பெட்டிகளை திறப்போம்" என்றார் சவிதர்.

பெட்டியை அவர் திறந்தபோது பிறிதொரு கெடுமணம் எழுந்தது. காட்டுப்பன்றி வாய்திறந்ததுபோல் வெம்மைகொண்ட ஆவியின் மணம். அதுவரை இருந்த கெடுமணமே இருளின் மணம் என்று எண்ணியிருந்தார். அது ஒரு மட்கிய உடல்களின், நெடுநாள் பழகிய புழுதியின், காறல் என மாறிய எண்ணெய்ப் பிசுக்கின், மயிர் எரிவதன் மணங்கள் கலந்தது. எண்ணும்தோறும் உருமாறிக்கொண்டிருப்பது என்றும் என்றுமென அங்கு நின்றிருப்பது என்றும் தோன்றுவது. அக்கெடுமணத்திற்குள் நீருக்குள் நீர் ஊறுவதுபோல அந்தப் புதிய கெடுமணம் கரந்து எழுந்து வந்தது.

“என்ன கெடுமணம் அது?” என்றார் கனகர். “இந்தப் பெட்டிக்குள் இருக்கும் மணம். இவ்வறைக்குள் இருக்கும் மணத்தைவிட மேலும் செறிவானது இது” என்றபின் உள்ளே குனிந்து செப்பேடுகளை தொட்டுத் தொட்டு நோக்கி மாந்தளிர்ச்சுருள்கள்போன்ற மெல்லிய செப்பேடுகளால் ஆன எடைமிக்க நூல் ஒன்றை எடுத்து விளக்கருகே கொண்டுவந்து அதன் முகப்பை கூர்ந்து நோக்கி “தாங்கள் கோரியது” என்றார் சவிதர். “மிகத் தொன்மையானது என எண்ணுகிறேன்... அக்காலத்து எழுத்துக்கள்...” கனகர் “அவற்றை படித்தறிவோர் உண்டு” என்றார். சவிதர் “ஆம், அறிவேன். இங்கே எங்களில் எவராலும் இங்குள்ள எவற்றையும் படிக்கமுடியாது. ஒரு சொல்கூட” என்றபின் நகைத்து “அறிந்துகொள்ள முடியாதவற்றையே முறையாக காவல் காக்க முடியும்” என்றார்.

கனகர் அருகே சென்று அதை பெற்றுக்கொண்டார். கூர்ந்து அதன் அடையாளங்களை மட்டும் நோக்கி “ஆம், இதுதான்” என்றார். சவிதர் “இது பலநூறாண்டுகள் தொன்மையானது என்று தோன்றுகிறது” என்றார். “ஆம், மாமன்னர் ஹஸ்தியின் மைந்தரான அஜமீடரின் மைந்தர் ருக்ஷரின் காலத்தையது. ஏற்கெனவே அவர் மைந்தர் சம்வரணரின் காலம் வரையிலான ஆவணங்களை நோக்கிவிட்டேன்” என்றார். “சென்ற நாலைந்து நாட்களாகவே ஆவணங்களைத்தான் துழாவிக்கொண்டிருக்கிறேன்.”

“இதை இங்கிருந்து எடுத்துச் செல்கையில் ஓர் முற்றமைதியை குலைக்கிறீர்கள் என்று எண்ணுக! இந்த இருளில் அனைத்தும் விதைவடிவில் கருநிலையில் உறைகின்றன. இங்கிருந்து துயில் கலைந்து அசைவுகொள்பவை மேலெழுந்து அங்கே

நீங்கள் காணும் நகரும் வாழ்வும் மொழியும் எண்ணங்களும் ஆகின்றன. அசைவிழக்கையில் மீண்டும் எடைகொண்டு ஆழ்ந்து இங்கே வந்து படிகின்றன. அவ்வண்ணம் வந்தமைந்த ஒன்று இது...” கனகர் “ஆம்” என்றார்.

நீர்ச்சுடர் - 4

பகுதி ஒன்று : இருள்நகர் – 3

ஆழத்து நிலவறைகளில் இருந்து வெளிவந்த பின்னரும் கனகரின் விழிக்குள் அந்த இருள் இருந்துகொண்டிருந்தது. அவரால் ஒளியை நோக்கி திரும்ப முடியவில்லை. கண்கள் கூச இமைகள் துடித்து மூடிக்கொள்ள விழிநீர் வழிந்தது. அரண்மனையின் இருண்ட மூலைகளை நோக்கியே அவர் நோக்கு திரும்பியது. மூச்சில் நுழைந்த காற்று தெளிந்து மென்மையானதாக இருந்தது. அதுவரை உள்ளே சென்ற காற்று நெஞ்சுக்குள் கொண்டு படியவைத்த இருண்ட விழுக்கு கரைந்து கரைந்து அகல்வதுபோல் ஆறுதல் தோன்றியது. அரண்மனையெங்கும் செறிந்திருந்த அந்த இருள் எங்கிருந்து வந்தது? நெய்ச்சுடர்களை ஏற்றும்படி ஆணையிட்டாலென்ன? ஆனால் பகலில் ஏன் சுடரேற்றவேண்டும்? சுடர் என்பது ஒரு கொண்டாட்டம். ஒற்றைச்சுடர்கூட ஒரு வகை உவகையே. இங்கே சுடர்கள் அனைத்தும் ஒவ்வாமையை அளிக்கின்றன. வழிதவறி வந்தவைபோல் நின்று நெளிகின்றன.

அரண்மனையிலுள்ள பன்னிரண்டாயிரம் நெய்விளக்குகளையும் சுடர்பொருத்திப் பொலியவிடுவது விழவுகளின்போது மட்டுமே. பெருவேள்விகளின்போது மூவாயிரம் விளக்குகள்.

வெற்றித்திருமகளின் பூசனையின்போது ஆறாயிரம் விளக்குகள். ஆண்டுக்கொருமுறை வரும் அரசரின் முடிசூட்டுநாள் விழாவின்போது அனைத்து விளக்குகளும் என்பது முறைமை. அன்றிரவு அரண்மனை எரியெழுந்ததுபோல் மின்னும். நகரமெங்குமிருந்து மக்கள் அரண்மனை நோக்கி வந்து முற்றங்களையும் சுற்றுப்பாதைகளையும் நிரப்புவார்கள். பேரலைகள் சுருண்டு வந்து நுரைத்து அறையும் கடற்பாறைபோல் அரண்மனை நின்றிருக்கும். இசைக்கலங்கள் முழங்க களிகொண்ட யானை என அது பிளிறலோசை எழுப்பிக்கொண்டிருக்கும். பெரும்பறையின் தோல் விம்மி விம்மி அதிர்வதுபோல அதன் சுவர்கள் தோற்றமளிக்கும். மண்ணிலிருந்து எழுந்து வானில் மிதக்கத் தொடங்கிவிடும் என்பதுபோல.

அவர் நின்று அந்த இடைநாழியை நோக்கினார். அங்கே வந்ததே இல்லை என்று தோன்றியது. தூண்கள் இருள்விழுதுகள் என நின்றிருந்தன. அவற்றுக்கு நடுவே இருண்ட பாதைக்கு அப்பால் வெண்பட்டுத்திரை என திறந்திருந்தது மறுபுறத்து வாயில். ஏன் இந்த இருள்? அஸ்தினபுரியின் அரண்மனை ஆயிரத்தெட்டு சாளரங்கள் கொண்டது என்பது கணக்கு. எவரேனும் அதை எண்ணியிருக்கிறார்களா என அவர் ஏளனத்துடன் சொல்வது உண்டு. ஆனால் அத்தனை சாளரங்களையும் நாளும் திறந்து மூட ஏராளமான பணிப்பெண்களும் ஏவலர்களும் வேண்டும். அரண்மனையில் முன்பிருந்தவர்களில் பத்திலொருவர்கூட அப்போது இல்லை. சாளரங்களில் மிகச் சிலவே நாளும் திறக்கப்பட்டன. ஆகவே அறைகளுக்குள் காற்று வீசுவது குறைந்தது. இருளுக்குள் ஓசையில்லாமல் சிலந்திவலைகள் விரிந்தன.

ஏவலர் எவரையேனும் அழைத்து அனைத்து வாயில்களையும் திறக்க ஆணையிடவேண்டும் என அவர் எண்ணினார். அவருக்குப் பின்னால் செப்பேட்டுத் தொகையுடன் வந்துகொண்டிருந்த ஏவலனை நோக்கி திரும்பினார். அவன் ஆணை ஏற்க விழிகூர்ந்து முன்னால் வந்தான். அவர் அவனை தவிர்த்துவிட்டு திரும்பிக்கொண்டார். மீண்டும் நடந்தபோது எவரிடமென்றில்லாமல் சீற்றம் எழுந்தது. இந்த அரண்மனையில் ஒளி பெருகி பரந்திருந்தால், இக்குமிழ்களும் அத்திரைச்சீலைகளும் ஒளிகொள்ளுமென்றால், அந்தத் தூண்கள் வாழைத்தண்டுகளென மெருகடையும் என்றால் அது மாண்டவர்களுக்கு இழைக்கப்படும் சிறுமை. விண்ணில் வாழும் அரசருக்கு, அவர் உடன்பிறந்தாருக்கு, அவர் மைந்தர்த்திரளுக்கு, அவர்களின் ஆசிரியருக்கு... அவர் பெருமூச்சுவிட்டு மேலும் நடந்தார்.

காலடியில் எங்கோ ஆழத்தில் இருக்கும் நிலவறைகளை உணரமுடிந்தது. அந்த அதிர்வுகள் அங்கே இருள்மேல் சென்று பதிந்துகொண்டிருக்கின்றன. நீருக்குள் சென்று பதியும் ஓசைகளை அடிச்சேற்றில் மெல்லிய அலைவடிவுகளாகக் காணமுடியும் என்பார்கள். நிலவறைகளுக்குள் இருக்கும் செறிவிருள் அம்மாளிகையைத் தாங்கும் அடித்தளத்தின் நுண்வடிவ அடித்தளம். அதன் மீதுதான் அனைத்தும் கட்டி எழுப்பப்பட்டிருந்தன. ஒளியும் அழகுகளும் நுட்பங்களுமென பெருகிச் சூழ்ந்திருக்கும் அனைத்தும். அனைத்து எடையையும் தன்மேல் ஏற்றிக்கொண்டு அதை சற்றும் உணராமலிருக்கும் அளவிற்கு அவ்விருள் திணிவு கொண்டிருந்தது.

எடையின்மை கொண்ட திணிவு அது. திணிவு முழுமை அடைகையில் எடையின்மை மறைந்துவிடுகிறது போலும்.

எடை என்பது ஒன்று பிறிதொன்றை அழுத்துவது. ஒன்று எல்லைமீறி மண்ணை அழுத்துவது. தன்னைத் தான் அழுத்தி முற்றிலும் நிகர் விசை கொண்டுவிட்ட ஒன்று எடையிலி ஆகிவிடுகிறது. இருள் முற்றிலும் எடையற்றது. அனலுக்கு எடையுண்டு. காற்றுக்கும் நீருக்கும் எடையுண்டு. ஒளிக்கும் எடை இருக்கக்கூடும். இருள் மட்டுமே எடையற்றது. ஏனென்றால் அது இன்மை. இன்மை மட்டுமே முழுமை. ஏனென்றால் அது அனைத்துக் கோணத்திலும் இன்மையே. இன்மையெனும் இருப்பை உணர்ந்த முதல் மெய்யறிவன் எவன்?

இங்கே இருண்டிருக்கின்றன அனைத்தும். இருள் ஆமையென தன்னை முற்றிலும் உள்ளிழுத்துக்கொண்டு அவ்வண்ணமே முடிவிலி வரை அமையும் இயல்புகொண்டது. புவியைத் தாங்கும் திசையானைகள் இருண்டவை. அவை நின்றிருக்கும் ஆமை மேலும் இருண்டது. இருளின் வெவ்வேறு செறிவுகள் அவை. இருண்டவன் மாலவன். மாலென்பதே இருள். கனகர் மூச்சிரைத்தார். ஏவலன் அவர் அருகே வந்து நின்றான். அவர் அங்கே எங்கேனும் அமர விழைந்தார். பின்னர் மீண்டும் நடந்தார். இந்த அரண்மனை ஒளியில் சுருங்கி சிறிதாக இருந்தது. இருளில் எல்லைகள் கரைந்து விரிந்து பரவிவிட்டிருக்கிறது. அறிந்தவை சிறிதாகின்றன. அறியாதவை பெருகுகின்றன. அறியவொண்ணாதது முடிவிலியென்றாகிறது.

கனகர் அஸ்தினபுரியின் அரண்மனையிலிருந்து அகன்று செல்ல விழைந்தார். ஒவ்வொரு கணமும் மண்ணுக்கடியில் இருக்கும் முடிவிலா கரிய தேக்கத்திலிருந்து வெவ்வேறு துளைகளினூடாக ஊறிப் பெருகி அவ்வரண்மனையை நிறைத்துக்கொண்டிருந்தது இருள். தூண்கள் மூழ்கின.

அறைகள் ஓசையிலாது நிரம்பின. கூரைக்குவைகளில் இருள் சுழித்தது. அங்குள்ள ஒவ்வொரு மானிடருக்கும் இருளில் நீந்தும் விழித்தெரியாத சிறகுகள் முளைத்தன. அவர்கள் இருளை மட்டுமே நோக்குபவர்கள் ஆயினர். இருளால் நோக்கு கொண்டனர். ஒளி துலக்கும் பொருட்களை நோக்குவது ஒழிந்து இருளால் சமைக்கப்படுவனவற்றை பார்க்கலாயினர். அவர்களின் ஓசைகள்கூட கரிய குமிழ்கள்போல அவற்றில் மிதந்து கிடந்தன.

இருள் வழியாக செல்கையில் தானும் இரு கைகளையும் வீசி இருளை உந்தி நீந்தி முன்னேறுவதாக அவருக்கு தோன்றியது. மூச்சிழுத்தபோது உள்ளே சென்று உடற்குகைக்குள் நிறைந்து செறிந்து அனைத்து உறுப்புகளையும் நிறைத்தது. சித்தத்திற்குள் புகுந்து அனைத்து சொற்களையும் கரியதாக்கியது. அனைத்து எண்ணங்களையும் இருளலையாக ஆக்கியது. அனைத்து நினைவுகளும் நிழலாட்டங்களாக மாறின. எதிரே வரும் ஒவ்வொருவரும் இருள் நிறைந்த விழிகள் கொண்டிருந்தார்கள். இருள் இருளை கண்டுகொண்டது. இருள் இருளுடன் உரையாடிக்கொண்டது.

நோயின் அணுக்கள் உடலுறுப்புக்குள் எங்கோ ஒளிந்திருப்பதாக நச்சு நீக்கும் மருத்துவர்கள் சொல்வதுண்டு. உடல் அமுதாலும் நஞ்சாலும் ஆனது. அமுது ஓங்கியிருக்கையில் நஞ்சு சுருங்கி ஒளிந்துகொள்கிறது. பேராற்றல் கொண்ட மல்லனின் உடலுக்குள்கூட தன்னை துளியென சுருட்டிக்கொண்டு அமைந்திருக்கிறது நஞ்சு. நஞ்சுக்கு தன்னை சுருட்டிக்கொள்ளும் ஆற்றல் உண்டு. மிகச் சிறிய இடத்தில் தன்னை முற்றொளித்துக்கொள்ள அதனால் இயலும். துயிலாதது அது. தன் வாலை தானே விழுங்கி இறுகி கரிய

விதையென்றாகி, அணுவென்றாகி அசைவின்மை கொள்ள, அதனூடாக முடிவற்று காத்திருக்க அதனால் இயலும். அமுது நலிகையில் நஞ்சு முளைத்தெழுகிறது. ஆயிரம் தலைவிரித்து நாபறக்க விழியொளி கொள்கிறது.

நச்சிருள். முடிவிலாத செயல் பேருருக்கொண்டு எழுகிறது. இவையனைத்தையும் தாங்குவது நஞ்சு. விண்ணுருவன் பள்ளிகொண்டிருப்பது. அனல் விழியன் கழுத்தில் அணிந்தது. புரவியை ஈன்ற அன்னையின் அணிகலன். அத்தனை தேவர்களுக்கும் படைக்கலம். அவர் தன்முன் இருளின் நெளிவை கண்டார். உளம் அதிர்வு கொள்ள அசைவழிந்து நின்றார். அவருக்கு முன் தோன்றி தோன்றியதா என்ற ஐயத்தை உடனே எழுப்பி ஓர் இருள் நெளிவென அரண்மனை இடுக்கொன்றில் மறைந்தது கரிய நாகம் ஒன்று.

கனகர் தன் அரண்மனைக்கு வந்தபோது மெல்ல மெல்ல உளமடங்கிவிட்டிருந்தார். அமைச்சுநிலையில் அவருடைய சிற்றறையில் அவருடைய உடலின் வெம்மையும் வியர்வைமணமும் நிறைந்திருந்தது. அவருடைய உடலே ஓடென்றாகிவிட்டதுபோல. அதற்குள் கைகளையும் கால்களையும் தலையையும் இழுத்துக்கொண்டுவிடமுடியும். அவர் தன் பீடத்தில் அமர்ந்து கால்களை மேலே தூக்கி வைத்துக்கொண்டார். உடலைத் தளர்த்தி கண்களை மூடிக்கொண்டு மெல்லிய துயிலில் ஆழ்ந்தார். அவர் உள்ளம் கரைந்து கரைந்து எங்கோ சென்றுகொண்டிருந்தது. தலை தழைந்து உடல் நிலையழிந்தபோது அவர் விழித்துக்கொண்டார். சாளரம் வழியாக வந்து கிடந்த ஒளிக்கீற்றை வெறித்து நோக்கிக்கொண்டிருந்தார்.

ஏவலன் அவரை நோக்கியபடி அப்பால் நின்றிருந்தான். அவனிடம் வாய்கழுவ நீரும் உண்ண நீரன்னமும் கொண்டுவரும்படி ஆணையிட்டார். அவன் கொண்டுவந்த மரத்தாலத்தில் முகம் கழுவிக்கொண்டார். சுரைக்கொப்பரையில் நன்றாகக் கரைத்த நீரன்னம் இருந்தது. சற்றே புளித்தது. அவர் பல நாட்களாக அதை மட்டுமே உணவென அருந்திக்கொண்டிருந்தார். பசி என ஒன்றை உணர்ந்தே நெடுநாட்களாகிவிட்டிருந்தது. விடாயை பசியெனக்கொண்டு அதை அருந்திவிடமுடியும். எதையேனும் உண்ணும் பொருட்டு சென்று அமர்ந்தால் குமட்டல் கொண்டு வயிறு பொங்கி எழுந்தது. குடுவையை அளித்துவிட்டு அவர் மீண்டும் அமர்ந்து "சொல்லறிவர் வருக!" என்றார்.

சொல்லறிவர் ஸ்ரீபத்மன் வந்து வணங்கினார். அவர் அந்த செப்பேட்டுத்தொகையை சுட்டிக்காட்டினார். அவர் அதை எடுத்து இலச்சினைகளை நோக்கிவிட்டு "படித்துப்பார்க்கிறேன்" என்றார். கனகர் அவருடைய விழிகளை நோக்கிக்கொண்டிருந்தார். மண்மறைந்த மொழிகளில் வாழ்பவர். அங்கே இருளில் மறைந்திருக்கும் எழுத்துக்கள். இந்த ஏடுகளினூடாக அவை இவர் சித்தத்திற்குள் நுழையக்கூடுமா என்ன? ஸ்ரீபத்மன் மிகக் குறைவாகவே பேசுபவர். சொல்லறிவர்கள் அனைவருமே பேசும்திறன் அற்றவர்கள். பேச்சு என்பது நிகழ்மொழி. எழுத்து கடந்தமொழி. படிப்பதென்பதே எழுத்து என்னும் அடையாளங்கள் வழியாக சென்று மறைந்த மொழியொன்றை இன்றென மீட்டு நிகழ்த்தும் செயல்தான். இறந்தகாலம் மொழியினூடாக மீள் பிறப்பு கொள்கிறது.

ஒருகணம் அவர் அந்த விந்தையில் திகைப்பு கொண்டார். சென்று மறைந்ததை மீட்டெடுக்க மானுடருக்கு இருக்கும் ஒரே வழி எழுத்தைப் படிப்பது மட்டும்தான். இறந்தகாலம் நிகழ்காலத்திற்குள் ஊடுருவும் ஒரே பாதை. அவர் அச்சத்துடன் எழுந்துவிட்டார். அங்கே ஆழத்தில் உறையும் இருள் மேலெழுந்து வருவதற்கும் வேறு வழியே இல்லை. "என்ன?" என்றார் சொல்லறிவர். "ஒன்றுமில்லை, கொண்டுசெல்க!" என்றார் கனகர். அவர் தலையசைத்தார்.
செப்பேட்டுத்தொகையை அவர் தோல்பையில் போட்டபோது "ஸ்ரீபத்மரே" என கனகர் அழைத்தார். "சொல்க!" என்றார் ஸ்ரீபத்மன். "என்றேனும் இத்தகைய தொல்லெழுத்துக்களுடன் இணைந்து நாகங்கள் எழுந்துள்ளனவா?" என்றார் கனகர்.

"ஏன்?" என்று ஸ்ரீபத்மன் கேட்டார். "இல்லை, அறியும்பொருட்டே" என்றார் கனகர். "நாகம் இல்லாத தொன்மை என்பதே இல்லை" என்று ஸ்ரீபத்மன் சொன்னார். "நாங்கள் தொல்மொழிகளை படிக்கையில் எல்லாம் நாகங்களை நோக்குவதுண்டு. தொல்மொழியை பயில்வதற்கே இமையா விழிகள் தேவை என்பார்கள்." கனகர் "ஆம்" என்றார். "எழுத்துக்கள் என்பவை நுண்ணிய நாகநெளிவுகளின் பல்லாயிரம் வடிவங்களே என்பது எங்கள் குடியின் தொல்கூற்று" என்றார் ஸ்ரீபத்மன். "வெறும்நெளிவென ஏடுகளிலும் சுவர்களிலும் தெரியும் எழுத்துக்கள் ஏதோ ஒரு கணத்தில் பொருள்கொள்கின்றன. அத்தருணத்தை நாகம் படமெடுக்கும் பொழுது என்றே எந்தை சொல்வார்."

கனகர் தலையசைக்க ஸ்ரீபத்மன் வெளியே சென்றார். அவர் செல்வதை சற்றுநேரம் நோக்கிக்கொண்டிருந்த பின் கனகர் ஒற்றர்களை வரச்சொல்லி ஆணையிட்டார். முதல் ஒற்றன்

நெடுந்தொலைவிலிருந்து வந்திருந்தான். அவரை முறைப்படி வணங்கி அமர்ந்தான். அவர் சொல்க என ஆணையிட்டு விழிகளை மூடிக்கொண்டார். "அமைச்சரே, குருக்ஷேத்ரத்திலிருந்து பாண்டவர்கள் அருகிலுள்ள தசவிருக்ஷம் என்னும் குறுங்காட்டில் ஒருங்கிணைந்திருக்கிறார்கள். அங்கே ஓடும் பிரபாவதி என்னும் சிற்றாறின் கரையில் அவர்கள் தங்கள் தங்குமிடங்களை அமைத்திருக்கிறார்கள். நேற்றுமுன்னாள்தான் அவை கட்டி முடிக்கப்பட்டன. நேற்று காலைதான் அவர்கள் அங்கே குடியேறினார்கள். அருகே உயர்ந்த மரத்தின்மேல் அவர்களின் மின்படைக்கொடி பறந்துகொண்டிருக்கிறது. வில்லேந்திய காவலர்கள் சூழ்ந்திருக்கும் மரங்களுக்குமேல் சிறுகுடில் கட்டி அமர்ந்து காவல்காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் போர்வெற்றி முழுதமைந்துவிட்டமையால் அஸ்தினபுரியின் ஒற்றர்களை அவர்கள் எதிரிகளாக காண்பதில்லை. ஆகவே அருகணைந்து நோக்கவும் உள்ளே நுழைந்து உசாவவும் இயன்றது."

அவர்கள் தசவிருக்ஷம் நோக்கி செல்வதை கனகர் முன்பே அறிந்திருந்தார். "அவர்களின் படைகளில் எவரும் எஞ்சவில்லை. உபப்பிலாவ்யத்திலிருந்தும் இந்திரப்பிரஸ்தத்தில் இருந்தும் அவர்களை ஆதரிக்கும் குடிகள் கிளம்பி அவர்களுடன் சேர்ந்துகொள்ளும்படி ஓலை சென்றிருக்கிறது. ஒவ்வொருவராக வந்துசேர்ந்துகொண்டிருக்கிறார்கள். நாள்தோறும் புதியவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். சிறிதுசிறிதாக அவர்களின் எண்ணிக்கை மிகுந்துகொண்டிருக்கிறது. நான் சென்று நோக்குகையில் இருந்த குடில்களின் எண்ணிக்கை கிளம்புகையில் இருமடங்காக பெருகிவிட்டிருக்கிறது."

“ஆம், அவர்கள் வென்றவர்கள்” என்று கனகர் முனகிக்கொண்டார். “அமைச்சரே, நான் அஸ்தினபுரியின் வணிகன் என்று சொல்லிக்கொண்டே உள்ளே சென்று நோக்கினேன். காட்டில் தொடர்ந்து மழைபொழிந்துகொண்டிருப்பதனால் பாண்டவர்கள் பெரும்பாலும் குடில்களுக்குள்ளேயே முடங்கியிருக்கிறார்கள். கடுந்துயரும் அவர்களை முடக்கியிருக்கக்கூடும். அரசர் யுதிஷ்டிரன் தனிக்குடிலில் நோயுற்று படுத்திருக்கிறார் என்று அறிந்தேன். அவருக்கு தொடர்ச்சியாக அகிபீனா அளிக்கப்பட்டு துயிலிலேயே வைக்கப்பட்டிருக்கிறார். விழித்தெழுகையில் உரக்க அலறி அழுகிறார். வலிப்பு வந்து துடிக்கிறார். இருமுறை பித்தர்போல் எழுந்து வெளியே ஓட முயன்றாராம். ஒருமுறை வாளை எடுத்து கழுத்தில் பாய்ச்சிக்கொள்ளப்போனார் என்றனர். ஆகவே அவருடன் எந்நேரமும் படைவீரர்கள் காவலிருக்கின்றனர்.”

“மைந்தர்துயர் அவர்களை எரியெனச் சூழ்ந்துள்ளது. இளைய பாண்டவர் பீமசேனர் மைந்தர் இறந்த செய்தியைக் கேட்டதும் அலறியபடி நினைவழிந்து விழுந்தார். பின்னர் விழித்துக்கொண்டு நெஞ்சில் வெறிகொண்டு அறைந்தபடி ஒருநாள் முழுக்க கதறி அழுதார். தன்னிலை மீண்டபின் இதுவரை ஒருசொல்லும் உரைக்கவில்லை. விழிநீர் வழிய தனித்து அமர்ந்திருக்கிறார். இறந்தவர்போல் வானை வெறித்தபடி மழையிலேயே படுத்திருக்கிறார். காட்டுக்குள் மரங்களில் முட்டி விழுந்து எழுந்தும் அடிமரங்களிலும் பாறைகளிலும் கைகளால் ஓங்கியறைந்தபடியும் அலைகிறார். அவரிடம் எவரும் பேசக்கூடவில்லை. அருகே எவர் சென்றாலும் மதம்கொண்டு முகம்மறந்த களிறு என தாக்கவருகிறார். உணவு உண்ணவில்லை. நீர் அருந்தவில்லை.

இந்த ஏழு நாட்களுக்குள் அவர் உடல் பாதியாக குறைந்துவிட்டது. தசைகள் தளர்ந்து தோள்கள் ஒடுங்கி முகம் தொங்கி முதியவர்போல் ஆகிவிட்டிருக்கிறார்.”

“அங்கே சற்றேனும் தன்னிலையுடன் இருப்பது கடைப்பாண்டவரான சகதேவன் மட்டிலுமே. இணையரான நகுலன் சகதேவனிடமிருந்து தன் ஆற்றலை பெற்றுக்கொண்டவர் போலிருக்கிறார். ஆனால் அவர்களும் சொல்கொள்வதில்லை. உசாவப்படும்போது தலையசைத்தோ கையசைத்தோ சகதேவன் மட்டுமே அரச ஒப்புதலை அளிக்கிறார். அனைத்தையும் காவலர்தலைவனாகிய வீர்யவான் தானே எடுத்து செய்துகொண்டிருக்கிறான்” என்றான் ஒற்றன். “அஸ்தினபுரியிலிருந்து மீண்ட நகுலன் சகதேவனைக் கண்டதும் ஓடிச்சென்று தழுவிக்கொண்டார். இருவரும் சொல்லின்றி உடல்நடுங்கி அதிர மேலும் மேலும் அணைத்து இறுக்கிக்கொண்டு சுழன்றனர். பின்னர் விடுவித்துக்கொண்டு இரு எல்லைகளை நோக்கி சென்று தலைகுனிந்து நிலம்நோக்கி அமர்ந்து ஏங்கினர். அதன்பின் இன்றுவரை அவர்கள் பேசிக்கொள்ளவே இல்லை என்கிறார்கள்.”

கனகர் வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தார். ஒரே செய்தியே மீண்டும் மீண்டும் வந்துகொண்டிருப்பது போலிருந்தது. ஆனால் ஒவ்வொரு முறையும் அது நடுக்குறச் செய்தது. அவரே அங்கிருப்பதுபோல் உணர்ந்தார். “பேரரசி குந்தியும் பாஞ்சாலத்து அரசி திரௌபதியும் அவர்களுடன் உள்ளனர். பேரரசி குந்தியின் இடக்கையும் காலும் இழுத்துக்கொண்டுவிட்டன. அவர் முகம் கோணலாகி நாக்கு உள்ளே மடிந்துவிட்டது. விழிநீர் வழிய நினைவுகொண்டு முனகி அழுத ஒலியைக் கேட்டதுமே சேடியர் அகிபீனாவை அளிக்கிறார்கள். நான்கு மருத்துவர்கள்

அவருக்கு சேவையளிக்கிறார்கள். உபப்பிலாவ்யத்திற்கோ அல்லது அருகிலுள்ள சிற்றூர்களில் எதற்கேனுமோ அவரை கொண்டுசென்று மருந்து அளிப்பதே நன்று என்று மருத்துவர் கூறினர். ஆனால் சாவுச்சடங்குகள் நிறைவடையாமல் இல்லம்திரும்புவது முறையல்ல என்று அந்தணர்கள் கூறிவிட்டனர்."

"பாஞ்சாலத்து அரசி எவ்வண்ணம் இருக்கிறார்கள் என உசாவினேன். ஒவ்வொருவரும் ஒவ்வொன்று சொன்னார்கள். அரசி உளமழிந்து நிலைமறந்தவர் போலிருக்கிறார். அவரிடமிருந்த அனைத்து நிமிர்வும் அழகும் அகன்றுவிட்டிருக்கின்றன. முதுமை வந்து மூடிவிட்டது. சொல்லடங்கி விழிகள் வெறித்து தனித்திருக்கிறார். இதை ஒரு சேடிப்பெண் சொன்னாள். அதன்பின் இன்னொருத்தி அரசி நீர்நிறைந்த கலம் என எடையும் அமைதியும் கொண்டுவிட்டிருக்கிறார் என்றாள். இங்கே இல்லாதவராக அப்பாலிருந்து அனைத்தையும் நோக்குபவராக ஆகிவிட்டிருக்கிறார். மைந்தர்துயரை அவர் அறியவே இல்லை. நேற்று அங்கே வந்தபோது அருகிருந்த சிறுமரத்தில் எழுந்த தளிரிலைக்கொத்தை நெடுநேரம் நின்று நோக்கிக்கொண்டிருந்தார். முகம் மலர்ந்திருக்க மெல்ல பாடினார். அதைக் கேட்டு அருகே சென்றபோது திரும்பி நோக்கி புன்னகைத்தார் என்றாள் அச்சேடி."

"அவருக்குள் மலைத்தெய்வம் ஏதோ குடியேறியிருக்கக் கூடும் என்று ஒரு முதிய சேடி சொன்னாள். நன்கு உண்கிறார். அது பசிக்கோ சுவைக்கோ உண்பது அல்ல, பள்ளம் ஒன்று நிரம்புவதுபோன்ற ஊண். காட்டுமலர்களைக் கொய்து குழல்சூடிக்கொள்கிறார். இரவில் எழுந்தமர்ந்து இனிப்புணவு

வேண்டுமென்று கேட்டார். எழுந்து வெளியே சென்று இருளில் மழைபொழிவதை நோக்கியபடி நின்றார். பொழிநீரில் குழல்விரித்து கைவிரலால் அளைத்தபடி வான்நோக்கினார். அவர் தன் கொழுநர் ஐவரையுமே மறந்துவிட்டவர் போலிருக்கிறார். கேட்கக்கேட்க அவர் சொல்லும் ஒவ்வொன்றும் ஒவ்வொருவரைப் பற்றியதென்று தோன்றுகிறது. ஓருடலில் பலர் திகழ்வதுபோல. கணந்தோறும் புதியவராக எழுவதுபோல" என்றான் ஒற்றன்.

கனகர் "இளைய பாண்டவர் அர்ஜுனன் எங்கே இருக்கிறார்?" என்றார். "அவரும் இளைய யாதவரும் நான் செல்லும்போது அங்கே இல்லை. அவர்கள் தங்கள் உடன்பிறந்தவர்களுடன் அங்கே வந்தனர். உணவுண்ட பின் பார்த்தன் தன் வில்லுடன் காட்டுக்குள் புகுந்தார். உடன் இளைய யாதவரும் சென்றார். அவர்கள் அதன்பின் இரவிலேயே மீண்டுவந்தனர். காலையில் மீண்டும் சென்றுவிட்டனர். அவர்களை அங்கு சிலரே பார்த்திருக்கிறார்கள்" என்றான் ஒற்றன். "இளைய பாண்டவர் அர்ஜுனன் அங்கு நிகழ்வன எதையுமே அறியாதவர் போலிருக்கிறார். விந்தையான ஏதோ பித்து குடியேறிய விழிகள். தனக்குத்தானே பேசிக்கொள்வதுபோன்ற உதட்டசைவு. கைகள் எப்போதுமே அம்பும் வில்லும் கொண்டிருப்பது போலிருக்கின்றன என்றனர்." கனகர் தலையசைக்க ஒற்றன் வணங்கி வெளியேறினான்.

அடுத்த ஒற்றன் பாஞ்சாலத்திற்கும் விராடநகரிக்கும் ஓலைகள் சென்றிருப்பதாகவும் அங்கிருந்து எஞ்சிய படைவீரர்களும் ஏவலர்களும் கிளம்பி தசவிருக்ஷம் நோக்கி வர ஆணை என்றும் சொன்னான். "இன்னும் ஐந்தாறு நாட்களில் அவர்கள் ஒரு சிறு நகர் அளவுக்கே விரிந்துவிடக்கூடும்." கனகர் அதை

எதிர்பார்த்திருக்கவில்லை. "அவர்கள் அங்கே நெடுநாட்கள் தங்கும் எண்ணம் உண்டா என்ன?" என்றார். "அவர்கள் முதன்மை வைதியர் தெளம்யரும் மாணவர்களும் வருவதற்காக காத்திருக்கிறார்கள். அதன் பின்னரே ஆவன குறித்து முடிவெடுக்கப்படும் என்று சொல்லக்கேட்டேன்" என்றான் ஒற்றன். "நான் அறிந்தவரை அவர்கள் ஒருமாதகாலம் நீண்டுசெல்லக்கூடிய ஈமச்சடங்குகளை முடித்து அனைத்திலிருந்தும் விடுபட்ட பின்னரே நகர்புகுவதற்கு முடிவெடுப்பார்கள். இன்றைய நிலையில் அவர்களால் எந்த விழவையும் இயற்ற முடியாது. எதிலும் உவகைகொள்ளவும் இயலாது."

மூன்றாவது ஒற்றன் இந்திரப்பிரஸ்தத்தின் உளநிலை குறித்து சொன்னான். "அங்கே உவகையோ களியாட்டோ இல்லை. ஏனென்றால் அங்குள்ள அத்தனை இல்லங்களிலிருந்தும் மைந்தரோ தந்தையரோ கொழுநரோ மறைந்திருக்கிறார்கள். நகரம் அஸ்தினபுரியைப்போலவே இருள்மூடித்தான் கிடக்கிறது. ஒவ்வொருநாளும் வெற்றிமுரசு முழங்கியது. ஆனால் முரசுடன் இணைந்து எழவேண்டிய வெற்றிக்கூச்சல்கள் எழவில்லை. நகரம் வெறும்பாறையடுக்குகள்போல் அவ்வோசையை எதிரொலித்தது. அதை அம்மக்கள் கேட்டதுபோலவே தெரியவில்லை. அதன்பின் முரசொலிகளை நிறுத்திவிட்டார்கள்."

"அங்கே அமைச்சர் சுரேசர் ஆட்சியை நடத்துகிறார். ஒவ்வொருநாளும் அவர் அரசவைகூட்டி வந்து அமர்கிறார். குறைகளும் கோரிக்கைகளுமாக எவரும் அங்கே செல்வதில்லை. குடியவை கூட்டியபோதும் ஒருவர்கூட சென்று அமரவில்லை. ஒழிந்த மாபெரும் அவைக்கூடத்தில்

அமைச்சருக்குரிய பீடத்தில் அவர் மட்டும் தனித்து அமர்ந்து ஒற்றர்களின் செய்தியை கேட்டுக்கொண்டிருக்கிறார். சலிப்புற்றவராகவும் ஆகவே எரிச்சலுடன் பேசுபவராகவும் திகழ்கிறார்" என்றான் ஒற்றன்.

அடுத்த ஒற்றன் காட்டில் பரந்திருந்த உதிரிப்படைவீரர்கள் சிதறி சிறு குழுக்களாக தெற்கும் கிழக்கும் சென்றுகொண்டிருப்பதைப் பற்றி சொன்னான். "அவர்கள் செல்லச்செல்ல நாடோடிகளாக மாறிவிட்டிருக்கிறார்கள். அவர்கள் படைவீரர்கள் என அறிந்தால் மக்கள் அவர்களை தாக்குகிறார்கள். கூட்டம்விட்டு வந்த ஓநாய் கொடியது என அதற்கு கொள்கையும் கூறுகிறார்கள். பலநூறு படைவீரர்கள் இதற்குள் கொன்று புதைக்கப்பட்டுவிட்டனர். ஆகவே எஞ்சியவர்கள் தங்களை சூத்திரர்கள்போல் மாற்றிக்கொண்டுவிட்டார்கள். சூத்திரர் என காட்டும்படி நெற்றியிலும் தோளிலும் சூடுபோட்டு முத்திரைகளை பொறிக்கிறார்கள். பலர் தங்களை அடிமைகளாகவே விற்றுக்கொண்டுவிட்டார்கள். கிழிந்த உடைகளும் பசித்துமெலிந்த உடலுமாக ஊர்களை ஒழிந்து காடுகளினூடாக வழியறியாமல் சென்றுகொண்டே இருக்கிறார்கள். பசித்தும் களைத்தும் நோயுற்றும் வழியிலேயே பலர் செத்து விழுந்துகிடப்பதை கண்டேன்."

கனகர் அவனிடம் "அஸ்வத்தாமனைப் பற்றியும் கிருபரைப் பற்றியும் ஏதேனும் செய்தி உண்டா? கிருதவர்மன் சததன்வாவின் குலம் நோக்கி சென்றுவிட்டதாகச் சொன்னார்களே, சான்றுகள் உண்டா?" என்றார். "கிருதவர்மன் யாதவக் குடிகளை நாடிச் சென்றிருப்பது உறுதி. ஆனால் சென்றடையவில்லை" என்று ஒற்றன் சொன்னான். "அவர்கள்

அவரை காத்திருக்கிறார்கள். தங்கள் குடியை மீட்கும் பெருவீரன் என எண்ணுகிறார்கள். யாதவர்கள் நடுவே கிருதவர்மனைப் பற்றிய வீரப்பாடல்கள்தான் முழங்கிக்கொண்டிருக்கின்றன. அவர் தங்கள் ஊருக்கு வந்ததாகவும் தங்கி உண்டு கடந்துசென்றதாகவும் அத்தனை யாதவச்சிற்றூரிலும் சொல்கிறார்கள். அவர் தலைமையில் அந்தகர்களும் போஜர்களும் குக்குடர்களும் ஒன்றுகூடக்கூடும் என்கிறார்கள். விருஷ்ணிகளிலும் ஒருசாரார் அவருடன் இருக்கிறார்கள். அவர்கள் போரிட்டு துவாரகையை வெல்லவும் முயல வாய்ப்புண்டு.”

“ஆனால் அஸ்வத்தாமனைப்பற்றி எச்செய்தியும் இல்லை. அவர் ஏதோ பிலத்திற்குள் நுழைந்து மண்ணுக்குள் மறைந்துவிட்டதாக ஒரு கதை சொல்லப்படுகிறது. கங்கையின் சுழியினூடாக நாகருலகு சென்றார் என்றும் கேட்டேன். அவர் உத்தரபாஞ்சாலத்திற்கு மீளவில்லை. போர்வெற்றிச் செய்தி சென்றடைந்ததுமே தட்சிணபாஞ்சாலத்தினர் பெருந்திரளாக கிளம்பிச்சென்று உத்தரபாஞ்சாலத்தை கைப்பற்றிக்கொண்டார்கள். அங்குள்ளவர்களும் உடன்பிறந்தார் என இவர்களை வரவேற்று இணைந்துகொண்டனர். நீரோடு நீர் கலந்ததுபோல் இரு நாடுகளும் இணைந்தன என சூதர் பாடுவதைக் கேட்டேன். அங்குள்ளோர் அஸ்வத்தாமனை இழிவுசெய்தும் ஏளனம்செய்தும் பாடிக்கொண்டிருந்தனர். அவர் உருவங்களை முச்சந்தியில் இட்டு எரித்தனர். அவருடைய கொடிகளை மண்ணிலிட்டு இழுத்தனர். அவருடைய மாளிகை ஒன்றும் தீயிடப்பட்டது என அறிந்தேன்.”

“கிருபர் அஸ்வத்தாமனுடன் செல்லவில்லை என்றார்கள். அவர் தன் தந்தை சரத்வானின் குருநிலைக்கே சென்றிருக்கக் கூடும்.

அங்கே அவர் சென்றிருந்தார் என்றால் செய்தி இங்கே வருவதற்கு மேலும் பத்து நாட்களாகும்" என்று ஒற்றன் சொன்னான். கனகர் பெருமூச்சுடன் அவன் செல்லலாம் என கையசைத்தார். அவன் சற்றே தயங்கி "நான் இளைய யாதவரைப்பற்றி கேள்விப்பட்டேன்" என்றான். "சொல்" என்றார் கனகர். "அவர் அங்கே தசவிருக்ஷத்தில் பாண்டவர்களுடன் இருக்கிறார். அவரிடம் எத்துயரும் இல்லை என்றார்கள். காட்டில் ஆநிரை மேய்ப்பவர் போலிருக்கிறார் என்று முதிய வேடன் ஒருவன் சொன்னான். அவருடன் இளைய பாண்டவர் அர்ஜுனனும் கானாடுகிறார் என்றான். காட்டில் மலைப்பாறை ஒன்றின் மேலிருந்து இளைய யாதவர் குழலூதுவதை அவ்வேடன் கேட்டிருக்கிறான் என்றான்" என்றான் ஒற்றன்.

கனகர் வெறுமனே நோக்கிக்கொண்டிருக்க அவன் தொடர்ந்தான். "அவ்வேடன் என்னிடம் சொன்னான். காட்டில் நனைந்த இலைகள் ஒளிகொண்டிருப்பதைக் கண்டே அவன் அங்கே சென்றானாம். அருகணைந்தபோது அங்கே இளவெயில் விழுந்த நீர்நிலை ஒன்று இருப்பதுபோல் ஒளி தேங்கி மெல்ல அலையடித்துக்கொண்டிருந்தது. அவன் மேலும் அருகே சென்றபோது அக்காடே ஒளிர்ந்துகொண்டிருக்க நடுவே நீலச்சுடர்போல இளைய யாதவர் அமர்ந்து குழலூதுவதை கேட்டானாம்."

"மழைச்சரடுகளுக்கும் துளியுதிர்வுகளுக்கும் ஊடாக அந்த இசை காட்டை நிறைத்ததைக் கேட்டு அவன் அஞ்சி திரும்பி ஓடிவந்துவிட்டான். அது பல்லாயிரம் உகிர்க்கைகளும் நஞ்சுவழியும் பற்களும்கொண்ட கொடிய தெய்வம்போல் தன்னை அச்சுறுத்தியது என்றான். அதைச் சொல்லும்போதும் அவன் நடுங்கினான். அதைக் கேட்டு நின்றிருந்த வீரர்கள்

இருவர் அச்சத்துடன் கைகள் நடுங்க கால்கள் தளர அப்பால் சென்றனர். ஏனென்று அறியாமல் நானும் அஞ்சி உடல்நடுக்கு கொண்டேன். அதன்பின் அவர்களைப்பற்றி எதுவுமே கேட்கவில்லை.”

கனகர் அவனை நோக்கிக்கொண்டிருந்தார். அவன் முகத்தில் அப்போதும் அச்சம் நிறைந்திருந்தது. செல்க என அவர் கையசைக்க அவன் தலைவணங்கி அகன்றான். அவர் பெருமூச்சுவிட்டு உடலை எளிதாக்கிக்கொண்ட போதுதான் தானும் அஞ்சி மெய்ப்பு கொண்டிருப்பதை உணர்ந்தார்.

நீர்ச்சுடர் - 5

பகுதி ஒன்று : இருள்நகர் – 4

அகத்தளத்தின் இடைநாழியினூடாக நடந்து காந்தாரியின் அரண்மனை முகப்பை அடைந்து அங்கு காவல் நின்றிருந்த ஏவல் பெண்ணிடம் தன் வரவை அறிவிக்கும்படி கனகர் கைகாட்டினார். அவள் தலைவணங்கி உள்ளே சென்றதும் பெருமூச்சுடன் தன் ஆடையை சீரமைத்தபடி உடல்தளர்த்தி நின்றார். ஓர் இடத்திற்குச் சென்றபின்னரும் அங்கே சென்றுசேராத தன் உள்ளத்தைப் பற்றி எண்ணிக்கொண்டார். எண்ணியிராத இடங்களுக்குச் சென்று திகைத்து நின்றிருந்தது தன்னுணர்வு. அங்கு வந்த பாதை முற்றாகவே அழிந்துவிட்டிருந்தது. அங்கிருந்து மீண்டு வருகையில் மீண்டும் வழி தவறியது. இந்த அரண்மனையில் இப்போது உளத்தெளிவுகொண்ட எவரேனும் இருக்கிறார்களா?

சாளரத்திற்கு வெளியே முரசில் கோலிழுத்ததுபோல் ஆழ்ந்த உறுமலோசை கேட்டது. சாளரத்திரைச்சீலை காற்றில் பறந்து சுருண்டு அமைந்திருக்க கீழே முற்றத்தின் ஒளி தெரிந்தது. முற்றம் இப்போதெல்லாம் முற்றொழிந்து கிடக்கிறது. ஓரிரு அரசபல்லக்குகள், புரவிகள் இல்லாத தேர்கள் இரண்டு. புரவிகளும் யானைகளும் அரிது. குடித்தலைவர்களும் அந்தணரும் பெருவணிகரும் அவைக்கு வருவதேயில்லை. வந்தாலும் நடந்தே வருகிறார்கள். பல்லக்கு தூக்குவதற்கு நகரில் போகிகளே இல்லை. பெண்கள் தூக்கும் பல்லக்கில் ஏறுவதற்கு இன்னமும் எவரும் துணியவில்லை. ஆனால் அதற்கும் விரைவிலேயே உளக்குவிவு கொண்டுவிடுவார்கள். பெண்களால் இந்நகரையே சுமக்க இயல்கிறது.

அவர் அருகணைந்து எட்டிப்பார்த்தபோது அங்கே முதிய பிடியானை ஒன்று நிலையழிந்து தன் உடலை தானே ஊசலாட்டியபடி நின்றிருப்பதை கண்டார். அஞ்சியோ துயருற்றோ நோயுற்றோ அது கொந்தளித்துக்கொண்டிருந்தது. மிகப் பெரிய யானை. அகவைமுதிர்வை நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பது அதன் முதுகெலும்பின் புடைப்பிலிருந்து தெரிந்தது. கன்னக்குழிகள் சிறுகொப்பரைகளின் உட்குவைகள் என தெரிந்தன. நீராட்டி நெடுநாட்களாகியிருக்கக்கூடும். உடல் கரிய புழுதிமலை எனத் தெரிந்தது. விழிகளுக்குக் கீழே விழிநீர் வழிந்து சேற்றில் வழிந்த ஊற்றுத்தடம் எனத் தெரிந்தது. அதன் உடலின் அசைவுகளை பார்த்துக்கொண்டிருந்தபோது ஒரு நீர்த்துளி ததும்பிக்கொண்டிருப்பதுபோல், எக்கணமும் உதிர்ந்து மறைந்துவிடும் என்பதுபோல் தோன்றியது.

என்ன கருமை என்று அவருடைய அகம் வியந்தது. யானையின் கருமைபோல் விழி நிறைக்கும் பிறிதொன்றில்லை. யானை அருகணைந்து கடந்து செல்கையில் ஒரு கணம் நோக்குபவரை இருளுக்குள் கொண்டு சென்றுவிடுகிறது. ஒரு கண இரவு ஒரு கண புடவிப்பயணம். அவர் நோக்கை விலக்கிக்கொண்டார். ஆனால் விழிகளுக்குள் இருள் எஞ்சியிருந்தது. மீண்டும் நோக்கினார். யானை ஒரு கரிய நிலவறையா? அதற்குள் குடியேறியிருப்பது எந்த தெய்வங்கள்? என்ன கருமை என்றே உள்ளம் அரற்றிக்கொண்டிருந்தது. ததும்பும் கருமை. உள்ளிருந்து வெளியேற ஏதோ வன்விசை ஒன்று முட்டிக்கொண்டிருக்கிறது. அது கொடுங்காற்றென எழக்கூடும். அவர் அதை நோக்காதொழிய எண்ணினார். நோக்காதபோது அதை மேலும் அருகே நோக்குவதை உணர்ந்து மீண்டும் நோக்கினார்.

யானை துதிக்கையால் தன்னிரு கால்களையும் மாறி மாறி அறைந்துகொண்டது. முன்னங்காலைத் தூக்கி தரையில் தட்டியது. தலையை குலுக்கி அசைத்தது. காதுகளை விரைந்து வீசியது. பின் அரைக்கணம் உடல் உறைய, செவிகள் நிலைக்க எதையோ உற்றுக் கேட்பதுபோல் அசைவமைந்தது. மறுகணம் தீச்சுட்டதுபோல் விதிர்ப்புற்று மீண்டும் அசைவு கொண்டது. அதை அங்கே கட்டிப்போட்டிருக்கவில்லை என்று கண்டார். ஆனால் அதுவே அங்கே தன்னை பிணைத்திருப்பதாக எண்ணிக்கொண்டிருந்தது. வலது பின்னங்காலை தளையிட்டிருப்பதுபோல அழுந்த ஊன்றி உடலை முடிந்தவரை நீட்டி துதிக்கையை வீசியது. அதன் மூச்சுபட்டு புழுதி எழுந்து பறந்தது.

அவர் சாளரத்திலிருந்து விலகி தூணருகே சென்று நின்றார். அதற்கு என்ன செய்கிறது? நோயுற்றிருக்கக் கூடும். இந்த அரண்மனையில் நோயுறாத எவருமே இல்லை. போரின்போது விலங்குகளில் நோயுற்றவை மட்டுமே அஸ்தினபுரியில் எஞ்சவிடப்பட்டன. அஸ்தினபுரியின் காவலுக்கும் பணிகளுக்கும் என விடப்பட்டிருந்த உடலில் நிகர்நிலை அழிந்தவையும் விழிநோக்கு குறைந்தவையும் முதுமை எய்தியவையும் அகவை எய்தாதவையுமான அனைத்து யானைகளும் ஒவ்வொன்றாக படைகளுக்கு கொண்டு செல்லப்பட்டன. எஞ்சிய யானைகளையும் அனுப்புங்கள், அவை எவையாக இருப்பினும் என்று சகுனியின் ஆணை வந்துகொண்டே இருந்தது. "இனி யானைச்சிற்பங்களைத்தான் அனுப்பவேண்டும்" என்று அமைச்சர் சபரர் சீற்றத்துடன் கனகரிடம் சொன்னார்.

அறுதியாக ஒரு யானைத்திரள் கிளம்பிச் சென்றபோது யானைக்கொட்டில் காப்பாளராகிய முதிய சூதர் பஞ்சகர் அவரைப் பார்ப்பதற்காக வந்தார். அமைச்சறையில் சூழ்ந்து நின்றிருந்த ஒற்றர்கள் நடுவே பித்தன்போல் அமர்ந்திருந்த அவரிடம் ஏவலன் யானைக்கொட்டில் தலைவர் பஞ்சகர் வந்திருப்பதை அறிவித்தபோது அங்கு ஏதோ சில யானைகள் உயிர் துறந்துவிட்டிருக்கின்றன என்பதைத்தான் அவர் உள்ளம் எண்ணியது. பின்னர் சலிப்புடன் வரச்சொல்க என்று கை காட்டினார். பஞ்சகர் அருகணைந்து வணங்கி "இன்று வந்த ஆணையின்படி தரம் பிரிக்காமலேயே பெரும்பாலாலும் அனைத்து யானைகளையும் அனுப்பிவிட்டிருக்கிறேன். கொட்டில் முற்றொழிந்துவிட்டது" என்றார்.

சொல்க என கனகர் நோக்கினார். “இனி இங்குள்ளவை துதிக்கை வலுக்காத குழவிகள்” என்று பஞ்சகர் சொன்னார். “கருவுற்றிருக்கும் நான்கு யானைகள் ஒழிய அகவைநிறைவுற்ற யானை எதுவுமே இல்லை.” அவர் என்ன சொல்லவருகிறார் என்பதை கனகர் விழிகளால் உறுத்து நோக்கிக்கொண்டிருந்தார். “பொதுவாக கருவுறும் அகவைகொண்ட யானைகளை போருக்கு அனுப்புவதில்லை. அவை வளர்திருக்கள் எனப்படுகின்றன. விதைநெல்போல, கருவூலவைப்புபோல. அவற்றை எந்நிலையிலும் நாம் பயனுறுசெயலுக்கென வெளியே எடுக்கலாகாது.” கனகர் எரிச்சல்கொண்டாலும் அடக்கிக்கொண்டார்.

“இப்போரில் நாம் வறுமைகொண்ட இல்லத்தின் உணவுக்கலமென அனைத்தையும் ஒட்ட சுரண்டிக்கொண்டிருக்கிறோம் என சூதர்கள் பாடினார்கள். அரசு ஆணையை என்னால் மீற இயலாது. ஆயினும் சொல்லியாகவேண்டும். இங்கு முதிய யானை ஒன்றேனும் வேண்டும்” என்றார் பஞ்சகர். “யானை என்பது பிற விலங்குகளைப் போன்றது அல்ல. அதற்கு ஒரு மரபுத்தொடர்ச்சி உள்ளது. இங்குள்ள சிறிய யானைகளை மட்டுமே கொண்டு நம்மால் ஒரு சிறந்த யானைப்படையை அமைக்க முடியாது. இங்கிருந்த அத்தனை யானைகளையும் தன்னுள் கொண்ட ஒரு முதிய யானையேனும் எஞ்சியிருக்க வேண்டும். அந்த யானையைக் கண்டே குட்டிகள் தங்கள் மூதாதையரின் மெய்மையையும் வாழ்க்கையையும் கற்றுக்கொள்ள இயலும்.”

கனகர் “இங்கு முதிய யானை...” என்று சொல்லி தயங்கி “தேவையெனில் கானகத்திலிருந்து யானைகளை...” என்றார்.

பஞ்சகர் இடைமறித்து "கானகத்து யானை வேறு, நகரத்து யானை வேறு. இங்குள்ள யானைகள் இன்றோ நேற்றோ இங்கு வந்தவை அல்ல. என்று மானுடர் நகரங்களுக்குள் வந்தார்களோ அப்போதே யானையும் வந்துவிட்டது. அதற்கு நகரங்களைக் குறித்த இடஉணர்வும் மானுடரைக் குறித்த நுண்புரிதலும் உண்டு. வருவது உணரும் நுண்மையை, சென்றதை நினைக்கும் ஒழுங்கை அது அடைந்துள்ளது. இங்கு திரளென்றும் தனித்தும் வாழ்வதற்குரிய அனைத்து அறிதல்களையும் அது வாழ்ந்து திரட்டி வழி வழியாக கொடுத்து வருகிறது" என்றார்.

"இங்கிருக்கும் குட்டியானைகள் தங்களை முன்நின்று நடத்தும் ஒரு யானையை நோக்கியே அவற்றை பெற்றுக்கொள்ள இயலும். நகரத்து யானைகள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் மொழி ஒன்று உண்டு. அது காட்டு யானைகள் பேசிக்கொள்ளும் மொழி அல்ல. இங்குள்ள பயின்ற யானைகளின் மொழி இங்குள்ள பொருட்களால் ஆனது. மொழி என்பது புறப்பொருட்களின் நுண்ணிய அகநிழல்களின் தொகை என்கின்றது மதங்கநூல்" என்றார் பஞ்சகர். "என்றாவது காட்டுக்குள் நகரத்து யானை செல்லும்போது இதை தாங்களே நோக்கி அறிய இயலும். காட்டு யானைகள் நாட்டு யானைகளிடம் உரையாடும் போது முதற்சில நாழிகைகளில் அவர்களுக்குள் திகைப்பும் பதற்றமும் தேவையில்லாத சினக்கொந்தளிப்பும் உருவாகிறது. மிக மெல்லத்தான் அவர்கள் தங்கள் பொதுச்சொற்களை கண்டடைகிறார்கள். பொதுவாக பேசிக்கொள்கிறார்கள். சொல்லமைவு உருவான பின்னரே ஒருவரை ஒருவர் புரிந்துகொள்கிறார்கள்."

“ஆம்” என்றார் கனகர். அவர் அதை கண்டிருந்தார். “இத்தகுதிகள் அனைத்தும்கொண்ட முதிய யானை ஒன்று அங்கே குருக்ஷேத்ரத்தில் இன்று உள்ளது... அதையேனும் இங்கே கொண்டுவந்தால் நன்று” என்று பஞ்சகர் சொன்னார். “அது குருக்ஷேத்ரத்துக்கு சென்றுவிட்டதா?” என்றார் கனகர். “ஆம், அதை அனுப்பும்படி காந்தார அரசர் ஆணையிட்டார். இங்கிருந்து யானைப்படை கிளம்பிச்செல்கையில் முழுப் படையையும் வழிநடத்திச் செல்லும் ஆற்றல்கொண்ட மூத்த பிடியானை ஒன்று வேண்டும் என்று அவர் கோரினார். அதன்படி ஸ்ரீகரம் என்ற யானையை படைகளுக்கு தலைமையேற்க அனுப்பினோம்” என்றார் பஞ்சகர்.

கனகர் “அது போர்க்களத்தில் உயிருடன் இருப்பதை யார் அறிவார்?” என்றார். “அது அங்கு இருக்கும், ஐயமில்லை” என்று பஞ்சகர் சொன்னார். “ஏனெனில் அதை கொட்டில் நடத்தும் அன்னையென்றே அழைத்துச் சென்றார்கள். மூதன்னை அவள். நூறாண்டு அகவை கொண்டவள். அவளுடைய ஒற்றைச் சொல்லுக்கு எந்த மதகரியும் அடங்கும். அதன்பொருட்டே அவளை கொண்டு சென்றார்கள். அவளை போருக்கு கொண்டுசென்றிருக்க வாய்ப்பே இல்லை. எனவே களம்பட்டிருக்க மாட்டாள். அங்குதான் இருப்பாள்” என்றார் பஞ்சகர். “அந்த யானையை திருப்பி கொண்டுவர வேண்டும். அவள் ஒருத்தி இருந்தாலே இங்குள்ள அடுத்த தலைமுறைகளை யயாதியின் பட்டத்து யானையின் தொடர்ச்சியுடன் இணைத்துவிடுவாள்.”

கனகர் “அதன் பொருட்டு ஓர் ஆணையை என்னால் அனுப்ப இயலாது. தாங்களே நேரில் சென்று அந்த யானையை அழைத்து வருக! இங்கு என்னிடம் சொன்னதையே

காந்தாரரிடம் கூறுங்கள்" என்றார். அவர் தயங்கி "காந்தாரர் அங்கே போரில் இருப்பார். எனது சொற்களை அவர் செவிகொள்வாரா என்று தெரியவில்லை. போரிலிருப்பவர்கள் இறந்தகாலத்தை முற்றாகவே வெட்டிவிட்டே செல்கிறார்கள். மெய் என்னவென்றால் அவர்கள் எதிர்காலத்தையும் முற்றாகவே வெட்டிவிடுகிறார்கள். போர்க்களத்துக்குச் செல்லும்வரைதான் எதிர்காலம் பற்றிய திட்டங்களும் கனவுகளும் இருக்கும். போர் தொடங்கிய பின்னர் அந்நாள், அப்பொழுது, அக்கணம் மட்டுமே எஞ்சியிருக்குமென்று கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றார்.

"மெய்" என்றார் கனகர். "வரும் தலைமுறைகளுக்காக ஒரு விதையை எஞ்சவிடவேண்டுமென்று காட்டுநெருப்பு நடுவே நின்று பொருதும் அவரிடம் சொல்ல இயலாது" என்றார் பஞ்சகர். கனகர் "நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. வேண்டுமெனில் நீங்களே சென்று அந்த யானையை அழைத்து வரலாம்" என்று சொன்னார். "இங்கு கருவுற்றிருக்கும் யானைகளிலிருந்து புதிய யானைகள் தோன்றும். வழிவழியாக இங்கு திகழ்ந்த யானைகளின் குடிமரபுகள் இங்கே திகழும். உள்ளிருந்து கற்பவை இங்குள்ள யானைப்படையில் சுடர் கொண்டெழும். நான் பேசிக்கொண்டிருப்பது வெளியிலிருந்து அளிக்கப்படுபவற்றைப் பற்றி" என்று சொன்னபின் பஞ்சகர் "வேறு வழியில்லை எனில் நானே செல்கிறேன்" என்றார்.

கனகர் "தங்களை படைமுகப்பு வரை கொண்டுசெல்வதற்கு துணை ஒருக்குகிறேன். காந்தாரரை தாங்கள் நேரில் சென்று சந்திப்பதற்கான ஓலை ஒன்றை அளிக்கிறேன். அது ஒன்றே என்னால் செய்யக்கூடுவது" என்றார். பஞ்சகர் தலைவணங்கினார். அவர் கிளம்பிச்சென்றபோது ஒற்றர்கள்

வந்து அச்செய்தியை சொன்னார்கள். அப்போது அவரை எதற்காக அனுப்பினோம் என்பதை மறந்துவிடும் அளவிற்கு மேலும் ஒற்றர்களிடமும் அயல்செய்தியாளர்களிடமும் அவர் உழன்றுகொண்டிருந்தார். பல்லாயிரம் செய்திகள் ஒன்றையொன்று நிகர் செய்து முற்றிலும் செய்தியின்மை நோக்கி சென்று கொண்டிருந்தன அப்போது.

மேலும் சில நாட்கள் கழித்து அவர் யானைக்கொட்டில் வழியாக பழைய கதைகள் குவிக்கப்பட்டிருந்த கொட்டகைக்குச் சென்றபோது வழியில் பஞ்சகரை பார்த்தார். அரைக்கணம் இவரை எங்கோ பார்த்திருக்கிறோம் என்று எண்ணி பின் அணைந்தது அவர் அகம். யானைக்கொட்டில் முற்றோய்ந்து கிடந்தது. அசைவில்லாத இடத்தில் படியும் புழுதியின் மணம். உலர்ந்த யானைச்சாணியுடன் கலந்திருந்தது அது. அவர் திரும்பும்போது பஞ்சகர் பின்னால் வந்தார். வணங்கி "அமைச்சரே, நான் காந்தாரரை பார்த்துவிட்டு திரும்பி வந்தேன்" என்றார். "கூறுக!" என்று கனகர் சொன்னார். அவரை அப்போதுதான் அடையாளம் கண்டார்.

பஞ்சகர் தயங்கி "எனது சொற்களை அவர் செவிகொள்ளவில்லை. என்னை கடிந்து துரத்தினார்" என்றார். "ஏன்?" என்று கனகர் கேட்டார். "ஏன் என்பது அப்போது புரியவில்லை. பின்னர் புரிந்துகொண்டேன். திரும்பி வரும் வழியில் மேலும் மேலும் தெளிவு கொண்டேன்" என்றார் பஞ்சகர். "கூறுக!" என்று கனகர் சொன்னார். "அஸ்தினபுரியில் யானையின் மரபு தொடர்ந்து நிலைநிறுத்தப்பட வேண்டும் என்று நான் சொல்லும்போது இப்போரில் அஸ்தினபுரி தோற்றுவிடுமென்ற முன் உய்த்தல் அதிலிருப்பதாக காந்தாரர் எண்ணினார். ஆகவே பெருஞ்சினத்துடன் என்னை நோக்கி

கூச்சலிட்டார். போரில் வென்று புதிய யானைத்திரளுடன் அஸ்தினபுரிக்குள் நுழைவேன். அஸ்தினபுரிக்கு யானைத்தொடர்பு மட்டுமல்ல இந்திரப்பிரஸ்தத்தின், மாளவத்தின், மகதத்தின், பாரதவர்ஷத்தின் அனைத்து யானைகளின் மெய்யறிதல்தொடரும் அஸ்தினபுரியில் திரளும். அதில் உங்களுக்கு ஏதேனும் ஐயம் உள்ளதா என்றார். இல்லை என்றேன். பிறகென்ன கிளம்புக என்றபின் திரும்பி தன் குடிலுக்குள் சென்றுவிட்டார். நான் தனித்து திரும்பி வந்தேன்" என்றார்.

கனகர் "மெய்தான். வெற்றி, மறுகணமே வெற்றி, முழுமையாக வெற்றி, உறுதியான வெற்றி என்ற நம்பிக்கையின் வெறியே போரை நிகழ்த்துகிறது" என்றபின் "இதைச் சொல்லி பயனில்லை. இவ்வண்ணம்தான் இவை நிகழ்கின்றன. இதோ அஸ்தினபுரியின் கொடிவழிகள் முற்றழிந்துகொண்டிருக்கிறார்கள். என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்றும் எஞ்சுவதென்ன என்றும் எண்ணும்போது நெஞ்சு திடுக்கிடுகிறது. யானைக்கொட்டிலை அன்றி பிறிதொன்றை எண்ணாத உங்களால் யானையின் தொடர்ச்சியைப்பற்றி மட்டுமே இப்போது பேசிக்கொண்டிருக்க இயலும். என்னிடம் பேச எதுவுமில்லை. எது ஊழோ அது நிகழட்டும்" என்றார்.

அஸ்தினபுரியின் முழுத் தோல்வி குறித்த செய்தி வந்து, நகர் மேல் படுகளம் விட்டு ஓடியவர்களின் தாக்குதலும் நிகழ்ந்து, மண் மழையும் பின் பெருமழையும் பெய்து ஓய்ந்த அடுத்த நாள் கோட்டைக் காவல்மாடத்திலிருந்து முரசொலி கேட்டு அவர் தன் அமைச்சு அறையில் எழுந்து நின்றார். "என்ன ஆயிற்று? ஏன் முரசொலி?" என்றார் சிற்றமைச்சர் ஸ்ரீபதர்.

அவரே உரக்க "அது பேரரசியை வரவேற்கும் முரசொலி அல்லவா? பேரரசி எங்கு சென்றார்?" என்றபின்னர் கனகரிடம் "குந்திதேவி நகர் புகுகிறார்களா என்ன? அவ்வண்ணம் அவர் இங்கு வர வாய்ப்பே இல்லையே" என்றார். இளைய அமைச்சர் ஆகையால் நாவின்மேல் கட்டுப்பாடற்றவராக இருந்தார்.

"அரசர்கள் இங்கு வந்து நகர் கைக்கொண்டு அரியணை அமர்ந்து முடிசூடிய பின்னரே அரசமுறைமைகளுடன் பேரரசியை வரவேற்று உள்ளே அழைத்துவருவார்கள் என்று எண்ணினேன். ஒருவேளை திரௌபதி தேவியாக இருக்கலாமோ?" என்றார் ஸ்ரீபதர். இன்னொரு இளைய அமைச்சராகிய உர்வரர் "அவர்கள் வருவதற்கு இன்னும் வாய்ப்பு குறைவு..." என்றார். "பின் எவர்?" என்று ஸ்ரீபதர் கேட்டார். கனகரும் திகைத்துப்போயிருந்தார். மேலும் தெளிவாக முரசுகள் பேரரசி நகர்புகுவதை அறிவித்து முழங்கத்தொடங்கின. நகரெங்கும் வாழ்த்தொலிகளும் எழுந்ததை கேட்கமுடிந்தது.

கனகர் மாளிகை முற்றத்திற்கு வந்தபோது அரண்மனை முகப்பில் பேரரசியை வரவேற்பதற்காக சிறிய படையொருக்கம் நிகழ்ந்துகொண்டிருந்தது. காவல்பெண்டுகள் வேல்களுடனும் வாள்களுடனும் ஏழு நிரைகளாக நின்றிருந்தனர். முகப்பில் வரவேற்பொலி எழுப்பும் முரசுகளும் கொம்புகளும் வந்து அணியமைந்தன. காவலர்தலைவி கலிகை கனகரிடம் வந்து தலைவணங்கி "பேரரசி வருகை தருகிறார்கள் என்று முரசுகள் கூறுகின்றன. ஆனால் அங்கிருந்து பறவைச்செய்தி ஏதும் வரவில்லை. எதிர்பாராத வருகை என எண்ணுகிறேன். வருவது எவர் என்று நாங்கள் அறிந்துகொள்ளலாமா?" என்றாள்.

கனகர் எரிச்சலுடன் செல்க என்று கைகாட்டினார். அங்கு நின்றிருக்கையில் ஒவ்வொரு கணமும் பதற்றம் ஏறிக்கொண்டிருந்தது. குந்தியோ திரௌபதியோ நகர் நுழைவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. ஆனால் அவ்வாறு நிகழக்கூடாதென்றும் இல்லை. போர் அனைத்தையும் கலைத்து குவித்துவிட்டது. அதிலிருந்து உருவாகும் முறைமை என்பது முற்றிலும் புதிய அடுக்கு. அதன் பொருளென்ன என்பதை முந்தைய காலகட்டத்திலேயே வாழும் எவரும் புரிந்துகொள்ள முடியாது. இனி போருக்குச் சென்று அங்கிருந்து மீண்டவர்களால் மட்டுமே பாரதவர்ஷத்தை நடத்த இயலும் போலும். போருக்குச் சென்றவர், எஞ்சியவர் என இரண்டு வகை மக்கள் பாரதவர்ஷத்தில் உருவாகிவிட்டனர்.

சற்று நேரத்தில் செய்திமுரசு முழங்கத்தொடங்கியது. ஒவ்வொரு சொல்லாக கூட்டி எடுத்தபோது கனகர் முதலில் திகைத்து பின்னர் விந்தையானதோர் நிறைவை அடைந்தார். வந்துகொண்டிருப்பது ஒற்றைத் தனி யானை. பஞ்சகர் பேருவகையுடன் இரு கைகளும் பதறி அலைபாய முற்றத்தின் மறுமுனையில் தோன்றி கூச்சலிட்டபடி அவரை நோக்கி ஓடிவந்தார். வெறும் வெளியில் ஒரு வியந்த முகம் வெறித்த கண்களும் திறந்த வாயுமாக திரையில் வரையப்பட்டு நின்று நெளிவது போலவே தோன்றியது. ஓசை ஏதுமில்லாத அலறல்போல செவிகளை வந்தறையும் பிறிதொன்றில்லை. அது கனவில் நிகழ்கிறது.

பஞ்சகர் அருகே வந்து "அமைச்சரே, அவள் திரும்பி வந்துவிட்டாள்! அவள்தான்! அவள்தான் திரும்பி வந்துவிட்டாள்!" என்றார். அதற்குள் புரவியில் வந்திறங்கிய கோட்டைமுகப்பின் காவலர்தலைவி பத்ரை அவரை அணுகி

வணங்கி "இன்று காலை காட்டுக்குள்ளிருந்து தன்னந்தனியாக முதிய யானை ஒன்று வந்து வாயிலில் நின்றிருந்தது. கோட்டைத்தலைவி சம்வகை அது அணுகுவதைப் பார்த்ததுமே பேரரசியருக்குரிய முரசொலியும் வரவேற்பும் அளிக்கும்படி ஆணையிட்டுவிட்டார். யானைகளுக்கு அவ்வாறு அளிக்கும் வழக்கமில்லை என்று முதிய காவல்பெண்டு ஒருத்தி சொன்னபோது தன் ஆணை அது என்று கூறினார். ஆகவே..." என்றாள். "நன்று, அது முறைமையே" என்றார் கனகர்.

பஞ்சகர் "ஆம், அவள் நகர்புகும்போது அவ்வரவேற்பு அளிக்கப்படவேண்டும். பேரன்னை இன்னமும் இந்நகரை கைவிடவில்லை. இவளில் குடிகொள்ளும் தெய்வம் இந்நகரை வாழ்த்தியிருக்கிறது. மங்கலச்செல்வி நகர்புகுந்துவிட்டாள்! இனி இவ்வூர் நீடுவாழும்" என்று கூவினார். சற்று நேரத்தில் கோட்டைமுகப்பின் காவல்பெண்டிர் அணிவகுத்து பின்னால் வர முகப்பில் பேருடல்கொண்ட பிடியானை மெல்ல அசைந்து நடந்து வந்தது. "அவள் உடலில் புண்கள் இருக்கின்றனவா? போர்க்களத்திலிருந்தா வருகிறாள்?" என்று கனகர் கேட்டார். "அன்னையே! அன்னையே!" என்று கூவியபடி பஞ்சகர் அதை நோக்கி ஓடினார். அதனருகில் சென்று ஓடிய விசையிலேயே குப்புற விழுந்து நிலத்தில் முகம் படிய கைநீட்டி பணிந்து வணங்கினார். யானை துதிக்கை நுனியால் அவர் தலையை மெல்ல தொட்டது. எழுந்தமர்ந்து "அன்னையே! அன்னையே!" என்று பஞ்சகர் கூக்குரலிட்டார். ஏதென்றறியாத உணர்வால் கனகர் உளம் பொங்கி விழிநீர் மல்கினார்.

அந்த யானைதான் இது என்னும் எண்ணத்தை அடைந்ததும் கனகர் திடுக்கிட்டார். அந்த யானையை எப்படி மறந்தேன்? ஓரிரு நாட்கள்கூட கடந்து செல்லவில்லை. அதற்குள்

நெடுந்தொலைவு வந்துவிட்டிருக்கிறேன். ஒவ்வொருநாளும் இங்கு நிகழ்வன ஒரு யுகம் நிறைக்கும் நினைவுகள். ஒரு தலைமுறைக்குரிய துயரங்கள். அவர் மீண்டு சென்று சாளரத்தினூடாக அந்த யானையை பார்த்தார். நிலையழிந்து அது தவித்துக்கொண்டிருந்தது. எதையோ அறிவிக்க விரும்புவதுபோல. எதையோ சொல்லிவிட்டு அகல விரும்புவதுபோல.

உள்ளிருந்து சத்யசேனை வந்து "அரசி நீராடிக்கொண்டிருக்கிறார்கள்" என்றாள். அவள் விழிகள் தளர்ந்து, கண்கீழ்த் தசைகள் கருகி வழிந்திருக்க, தொல்மரப்பாவைபோல மெருகிழந்திருந்த முகத்துடன் மிக முதியவள்போல் தோன்றினாள். கனகர் திரும்பி அந்த யானையை பார்த்தார். அவளும் யானையைப் பார்த்தபின் "நேற்று முன் தினம் புலரியில் இங்கு வந்தது. பாகர்கள் இங்கிருந்து அதை கொண்டு செல்ல முயல்கிறார்கள். உறுதியாக மறுத்துவிடுகிறது. அங்கேயே நின்றுகொண்டிருக்கிறது. அது எண்ணுவதென்ன என்பது எவருக்கும் புரியவில்லை" என்றாள். "வருக!" என்று உள்ளே சென்றாள்.

கனகர் உள்ளே சென்று அவள் காட்டிய பீடத்தில் அமர்ந்தார். ஒவ்வொரு முறை எங்கேனும் அமரும்போதும் ஏற்படும் பெருங்களைப்பை உணர்ந்தார். அமருமிடத்திலேயே அப்படியே விழுந்து துயின்றுவிடவேண்டுமென்று தோன்றியது. அரைக்கணம் கண்கள் மயங்கி, இமைகள் தழைய, வாய் திறந்து குறுந்துயிலில் மூழ்கினார். அறைமூலையில் அந்த யானை நின்றிருந்தது. அதன் உடல் தவிப்பு கொண்டிருந்தது. "இங்கு அறைமூலையில்..." என்றபடி அவர் விழித்துக்கொண்டார்.

அறைமூலையில் தேங்கிய இருளை பார்த்தார். கையால் வாயைத் துடைத்தபடி சூழ நோக்கியபோது அக்கூடத்தின் நான்கு மூலைகளிலும் இருள் செறிந்திருப்பதை கண்டார். உள்ளே இடைநாழிகள், சிற்றறைகள் அனைத்திலும் இருள் நிறைந்திருந்தது. நோயுற்ற யானைபோல் இருள் தவித்துக்கொண்டிருந்தது.

நீர்ச்சுடர் - 6

பகுதி ஒன்று : இருள்நகர் – 5

கூடத்தை ஒட்டியிருந்த உள்ளறைகளுக்குள் மெல்லிய காலடி ஓசைகள் கேட்கத் தொடங்கின. எவரோ கனகரிடம் “விழித்துக்கொள்ளுங்கள், யானை அணுகுகிறது” என்றார். அவர் “யானையா?” என்றார். “யானை!” என்று மீண்டும் அவர்கள் சொன்னார்கள். “விழியற்றது அது. அதன் வழியில் நின்றுகொண்டிருக்கிறீர்கள்” என்றார் ஒரு முதியவர். அவர் கனகருக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்தார். அவரை பார்க்கமுடியவில்லை. “யார், நானா?” என்று அவர் கேட்டார். “நீங்கள் விழியற்றவராக ஆனால் நன்று.” மறுகணம் தன்னுணர்வு கொண்டு வாயைத் துடைத்தபின் மேலாடையை சீரமைத்து எழுந்து நின்றார்.

அறையின் மறுபக்க வாயில் திறந்து சத்யவிரதையின் கையைப் பற்றியபடி காந்தாரி சிறிய கால்களை நிலத்தை ஒற்றுவதுபோல் எடுத்து வைத்து, பருத்த உடல் அசைந்தாட, மிக மெல்ல நடந்து வந்தாள். கனகர் “வணங்குகிறேன், பேரரசி” என்றார். “வணங்குகிறேன் அமைச்சரே, அமர்க!” என்றபின்

சத்யவிரதையின் தோள்களை பற்றிக்கொண்டு மெல்ல உடலைத் தாழ்த்தி காந்தாரி பீடத்தில் அமர்ந்தாள். அந்த நடையின் விளைவாக அவள் மூச்சிரைத்துக் கொண்டிருந்தாள். கழுத்திலும் கன்னங்களிலும் நீல நரம்புகள் புடைத்து அதிர்ந்தன. உடலெங்கும் வியர்வை பொடித்திருந்தது. பெருமூச்சுவிட்டு இரு கைகளையும் மடியில் கோத்துக்கொண்டாள்.

கனகர் அவள் தன் மடியில் கோத்துவைத்த கைகளையே பார்த்துக்கொண்டிருந்தார். ஒளி ஊடுருவும் தளிர்களைப்போல் சிவந்தவை, மென்மையானவை. அவள் விரல்கள் ஏன் அத்தனை சிறிதாக இருக்கின்றன என்று எப்போதும்போல் வியந்தார். சிறுமியின் விரல்கள். உண்மையில் சற்று பெரிய குழந்தையின் விரல்கள். பாளையை சற்று முன்னர்தான் கீறி குருத்தென அவற்றை வெளியே எடுத்திருப்பாள் என தோன்றச்செய்பவை. எப்போதும் அவள் கைகளை விரல் கோத்து மடியில் வைத்துக்கொண்டாள். அவளுடைய இயல்பான அமர்வு அது என்றாலும் அப்போதுதான் அதை அவர் அத்தனை கூர்ந்தறிந்தார்.

பருத்த தோள்கள் கொண்ட பெரிய கைகளுக்கு உகந்தது அந்த அமைவுதான். இயல்பாகவே அவள் அதை தெரிவு செய்திருக்கலாம். ஆனால் சென்ற பல நாட்களாகவே மடியில் கோத்த கைகள் இறுகி ஒன்றையொன்று கவ்விப் பற்றிக்கொண்டிருக்கின்றன என்று அவருக்குத் தோன்றியது. அவ்விறுக்கத்தில் முழங்கைகளிலும் தோள்களிலும் தசைகள் அசைவதை காணமுடிந்தது. கைகளை அவள் விலக்கும்போது ஒவ்வொரு முறையும் நெடுமூச்செறிந்தாள். உடனே விரல்கள்

தவிக்கத் தொடங்கின. ஒன்றையொன்று நாடி மீண்டும் தழுவிக்கொண்டன. இறுக்கிக்கொண்டன.

எப்போதுமே சொல்லெண்ணிப் பேசும் காந்தாரி கடந்த நாட்களில் மிகமிகக் குறைவாகவே வாய்திறந்தாள். பெரும்பாலும் முறைமைச்சொற்கள். அச்சொற்களை அவள் சொல்கிறாளா அவள் பொருட்டு அருகிருந்து பிறர் சொல்கிறார்களா என்ற ஐயம் எழுந்தது. காந்தாரியின் உதடுகளை ஒருகணம் நோக்கியபின் விழிதாழ்த்திக்கொள்வது அவருடைய வழக்கம். மிகச் சிறிய செவ்விதழ்கள் அவை. அவர் அகவிழிக்குள் அவை அசைந்து குவிந்து நீண்டு பேசிக்கொண்டே இருக்கும். அவள் மூக்கும் மிகச் சிறியது. முகம் பரந்து அகன்றபோது அவை மேலும் சிறியதாயின. அப்போது அவை மெல்லிய சிவந்த கோடுபோல அசைவில்லாது இணைந்துவிட்டிருப்பதாகத் தோன்றியது. அவள் பேசும்போதுகூட அவருடைய விழிகளுக்குள் அசையா உதடுகளே தெரிந்தன.

காந்தாரியின் உடன்பிறந்த அரசியர் அவளைப்போலவே இருந்தனர். ஆனால் அவள் மட்டும் தனக்கே உரிய பிறிதொரு குரல் கொண்டிருந்தாள். அரண்மனையில் காந்தாரியின் இனிய குரலைப்பற்றி குறிப்பிடாத ஏவலரோ சேடியரோ இல்லை என்பதை அவர் கண்டிருந்தார். இன்குரல் கொண்ட பெண்டிர் அரண்மனையில் பலர் இருந்தனர். பாடகிகளாகிய சேடியர், பாடுவதற்கே பிறந்த விறலியர் வந்து சென்றனர். ஆனால் காந்தாரியின் குரல் வீணை நரம்பொன்றை விரலால் சுண்டுவதுபோல் ஒலித்தது. நூறு மடங்கு பெரிய வீணையின் ஒற்றை நரம்பு சுண்டப்படுவதுபோல் அது கார்வை

கொண்டிருந்தது. அவள் குரல் ஒருபோதும் மேலெழுவதில்லை. ஆகவே சொல்லப்படுபவருக்காக மட்டுமே ஒலித்தது.

ஒவ்வொரு சொல்லிலும் எவ்வண்ணமோ அவள் ஆழ்ந்து வெளிப்பட்டாள். அவள் முன் சென்றமர்ந்த ஒவ்வொருவரும் தங்கள் அன்னையரை நினைவுகொண்டனர். மிக எளிய ஏவற்பெண்டுகள்கூட தங்கள் அன்னையிடமென அவளிடம் பேசினர். எழுந்து கை நீட்டி உரத்த குரலில் பேசி அவளிடம் கண்ணீருடன் முறையிடுபவர்களை கண்டிருக்கிறார். பூசலிடும் இளம் பெண்களைக்கூட அவர் கண்டதுண்டு. அப்போது அவள் பாரதவர்ஷத்தின் பேரரசி என்பதை அவர்கள் மறந்துவிடுவார்கள். தன் துயரையெல்லாம் அவளே அளிக்கிறாள் என அவர்கள் எண்ணுவது போலிருக்கும். தங்கையர் சூழ்ந்திருக்க முகங்கள் விரிந்து விழிகள் பெருகியவள்போல் காந்தாரி தோன்றுவாள். கூர்ந்து நோக்கும் பதினெட்டு விழிகளுக்குக் கீழே நீலத் துணியால் மூடிக்கட்டிய விழிகள் இரண்டு. ஒன்பது நோக்குவிழியிணைகள் அறியாததை பத்தாவது நோக்காவிழியிணை அறிகிறது.

பெரும்பாலும் காந்தாரி எவருக்கும் எந்த அறிவுரையும் உரைப்பதில்லை. எவரையும் வழிநடத்துவதில்லை. தன்முன் கூறப்படும் அனைத்தையும் கனிவுடன் கேட்டு அருகணைத்து அவர்கள் தோளிலும் தலையிலும் கைவைத்து மெல்ல வருடி தன் உடலுடன் சேர்த்துக்கொண்டு மெல்லிய குரலில் ஓரிரு சொற்கள் அவர்கள் செவியில் சொன்னாள். பெரும்பாலானவர்கள் அப்பொழுதே உளம் உடைந்து அவள் தொடையிலும் காலிலும் தலைவைத்து விம்மி அழத்தொடங்கியிருப்பார்கள். அங்கிருந்து கிளம்பிச்செல்கையில்

தங்கள் இடர்களும் துயர்களும் முற்றிலும் விலகி அனைத்திலிருந்தும் விடுபட்டவர்கள்போல் தோன்றுவார்கள்.

கனகர் பலமுறை காந்தாரியின் காலில் விழுந்து அழுதிருக்கிறார். அவருடைய துணைவி உடல்நலம் குன்றி மறைந்தபோது முதல்முறை. ஒரே மைந்தன் துறவு பூணுகிறான் என்று அறிவித்து இல்லம் நீங்கியபோது மறுமுறை. விதுரர் இனி திரும்புவதில்லை என அறிவித்து கானேகியபோது அவள்முன் வந்து வெறுமனே பித்தனென அமர்ந்திருந்தார். ஒவ்வொரு முறையும் காந்தாரியின் மெல்லிய தொடுகையினாலேயே இப்புடவியில் தான் தனித்தவன் அல்ல என்ற உணர்வை அவர் அடைந்தார். மீள்வதற்கு வழியொன்றுண்டு என உணர்ந்தபின் எல்லா பயணங்களும் எளிதாகிவிடுகின்றன.

அது ஒவ்வொரு நாளும் நிகழும் ஒன்று. ஆலயத்தில் அமர்ந்த தெய்வத்தை தேடி வருவதைப்போல் அவளை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். மேல்கீழ் என்றும் அணுக்கம் அயன்மை என்றும் எண்ணாமல் அவர்கள் அனைவரையுமே தழுவிக்கொண்டு தன் சொற்களை சொன்னாள். தெய்வங்கள் வேறுபாடு பார்ப்பதில்லை. வேறுபாடு பார்க்காததனாலேயே அவை தெய்வங்கள் ஆகின்றன. மானுடரின் துயர்களின் நடுவே அமைந்திருக்கின்றன தெய்வங்கள். ஆயின் மானுடத் துயர்களை தெய்வங்கள் உணர்வதே இல்லை. மானுடமென திரண்டுள்ள ஒன்றை மட்டுமே அறிந்திருக்கின்றன. விழிவிரித்து அவை நோக்கி அமைந்திருப்பது அவ்விரிவை. ஒவ்வொரு துளியிலும் அவை காண்பது முழுமையை.

ஒவ்வொரு துயருக்கும் தனித்தனி விடை சொல்லும் தெய்வங்கள் உண்டா? மாமுனிவர்கள் அவ்வாறு

சொல்வதுண்டா? அவ்வாறு தனித்தறிந்தால் அவர்களும் இத்துயருக்குள் உழலத் தொடங்கிவிடுவார்கள். அப்பால் நின்று அனைத்தையும் குனிந்து நோக்குவதால் அவர்கள் பேருருக்கொள்கிறார்கள். அப்பேருருவம் உரைப்பதனால் அவர்களின் சொற்கள் அத்தனை அழுத்தமும் ஆழமும் கொள்கின்றன. யானை எப்போதேனும் துதிக்கையை தன் தோளில் வைத்தால் ஏன் உள்ளம் பெருகியெழுகிறது என கனகர் வியந்ததுண்டு. அதன் எடை. அதன் பேருருவை அறிவிக்கும் அழுத்தம் அது. அது மிக மெல்ல தொடலாம். ஆனால் அது கானகத்திலிருந்து எழுந்து வந்தது. மாமலைகளின் குழவி.

கனகர் காந்தாரியை நோக்கிக்கொண்டு வெறுமனே அமர்ந்திருந்தார். அமைதி கலைந்து காந்தாரியே பேசவேண்டுமென்று எதிர்பார்த்தார். அவள் அகம் எவ்வண்ணம் இருக்கிறது என அவரால் மதிப்பிட இயலவில்லை. அந்நாட்களில் அவள் எப்படி உண்டு உறங்கி எழுந்து உரையாடி அமர்ந்தாள்? பெருந்துயர்களும் பெருங்களிப்புகளும் தெய்வங்களுக்கு மட்டுமே உரியவை. மானுடரால் தாள இயலாதவை. இவள் முன் பெய்த துயரின் சிறுதுளி என்னை சிதறடித்து பித்தனாக்கிவிட்டிருக்கிறது. இவள் பெருஞ்சுழியின் உச்சவிசையின் ஆழந்த அமைதியுடன் இருந்துகொண்டிருக்கிறாள்.

காந்தாரி உடலிலிருந்து அகன்றுவிட்டதுபோல் தோன்றியது. அவர் விழிதூக்கி அவள் முகத்தில் துயர் இருக்கிறதா என்று பார்த்தார். அங்கே துயரே வெளிப்படவில்லை. ஆனால் அவள் முகத்தின் தசையமைப்பிலேயே துயர் இருந்தது என்றும் தோன்றியது. அத்துயர் அன்னையருக்குரியது. எல்லா

அன்னையரும் எப்போதும் அகலாத துயரொன்றில் அமைந்திருக்கிறார்கள். அன்னைமை என்பதே துயரே என்பதுபோல். அரண்மனை நிறைத்து மைந்தரும் பெயர்மைந்தருமென கொப்பளித்துக்கொண்டிருந்த நாட்களில்கூட அத்துயர் அவள் முகத்தில் இருந்தது.

அல்லது விழியின்மைதான் அத்துயராக வெளிப்படுகிறதா? விழிகளிலிருந்துதானே எப்போதும் துயர் வெளித்தெரிகிறது? அவள் உடல் அசைவில்கூட அத்துயர் இருந்தது. புன்னகையில் அத்துயர் வெளிப்பட்டது. அது மைந்தர் துயரோ மகளிர் துயரோ அல்ல. புவித்துயர் அல்ல. தெய்வங்களுக்குரிய துயர். கருவறைக்குள் அமர்ந்திருக்கும் அத்தனை தெய்வங்கள் முகத்திலும் சற்றே துயர் இருப்பதுபோல் அவருக்கு அப்போது தோன்றியது. துயரில்லாத தெய்வம் ஒன்று இப்புவியில் எழக்கூடுமா?

அவ்வெண்ணம் எழுந்ததுமே ஏனென்றறியாமல் அவர் இளைய யாதவரை நினைவு கூர்ந்தார். மாறாத புன்னகை. எந்நிலையிலும் களித்து மகிழ்ந்திருக்கும் விழிகள். அவனும் தெய்வம் என்கின்றனர். கலியுகம் எழுகிறது என்கிறார்கள். ஊழ்கத்திலிருக்கும் தெய்வங்கள் கிருதயுகத்திற்குரியவை. சினந்திருக்கும் தெய்வங்கள் திரேதாயுகத்திற்குரியவை. துயர்கொண்ட தெய்வங்களாலானது இந்த துவாபர யுகம். எழவிருக்கும் கலியுகத்தில் மாறாச் சிரிப்புகொண்ட இம்முகமே தெய்வமென்று ஆகுமோ?

அவர் கட்டுமீறி அலைந்த தன் எண்ணங்களை உலுக்கிக்கொண்டு மீண்டு காந்தாரியை பார்த்தார். இன்று அரண்மனை முற்றோய்ந்து கிடக்கிறது. நூறு மைந்தரையும் ஆயிரம் பெயர்மைந்தரையும் பெற்றவள் ஒருவர்கூட எஞ்சாமல்

இங்கு அமர்ந்திருக்கிறாள். இவள் உள்ளம் எவ்வண்ணம் திகழ்கிறது? ஒரு துளி துயர் ஒவ்வொரு மைந்தருக்கெனில்கூட கடலென அது அலையடிக்கவேண்டும். இங்கிருக்கும் அனைத்திலிருந்தும் அகன்று எங்கோ அமர்ந்திருக்கிறாள். அத்துயர் எதையும் அவள் அறிந்ததில்லை என்றால் இவள் அன்னையென்றாகக் கூடுமா என்ன?

இல்லை, என்றுமிருக்கும் துயர் மட்டுமே ஏந்தியிருக்கிறாள். புல்நுனி பனித்துளியை ஏந்தியிருப்பதுபோல். ஒளிரும் வான் சுருண்டமையும் ஒரு முத்து என. அது எவருடைய வரி? சூதன் எவனோ சொன்னது. அப்போது விதுரர் இருந்தார். புன்னகையுடன் "பிறர் துயரை சொல்கையில் சூதர்கள் கவிஞர்களாகிறார்கள்" என்றார். சூதன் நகைத்து "பிறர் துயரை அழகாக்குபவை சூதர்பாடல்கள். தெய்வத்துயரை அழகாக்குவன காவியங்கள்" என்றான். என் எண்ணங்கள்மேல் ஒரு பாறாங்கல்லை ஏற்றிவைக்கவேண்டும். இக்காற்றில் என் அகம் பறந்து அகன்றுவிடக்கூடும். நெடுந்தொலைவு சென்று விரிந்த பாலையில் கூர்முட்களின்மேல் மெல்ல படிந்திருக்கும். மேலும் மேலுமென வீசும் காற்றில் எழமுயன்று கிழிந்துகொண்டே இருக்கும். மீண்டும் பித்துகொள்கின்றன என் எண்ணங்கள்...

காந்தாரி பெருமூச்சுடன் கலைந்து "என்ன நிகழ்கிறது, அமைச்சரே?" என்றாள். திடுக்கிட்டு உள்ளிருந்து வெளிப்போந்து திகைக்கும் விழிகொண்டு அவளே மேலும் கேட்கும் பொருட்டு கனகர் காத்திருந்தார். "கூறுக, இந்நகரில் ஒரு துளி புதிய உயிரேனும் எஞ்சுகிறதா?" என்றாள் காந்தாரி. கனகர் அவள் கேட்பதென்ன என்று உணர்ந்தும் பேசாமல் இருந்தார். "ஏதேனும் வயிற்றில் ஒரு கரு எஞ்சுகிறது என்று கூறுக, அமைச்சரே! அதை நெஞ்சோடு பற்றிக்கொள்கிறேன்" என்று

காந்தாரி சொன்னாள். அந்நாட்களில் முதல்முறையாக அவள் குரலில் இடறலை அவர் அறிந்தார். அவருள் நிறைவுதான் எழுந்தது. ஆம், அன்னைதான், தெய்வமல்ல.

கனகர் இருமுறை நாவில் சொல்லெழத்தொடங்கி அச்சொற்களில் பொருள் திகழாமையை உணர்ந்து தயங்கி முகத்தை மட்டும் அசைத்தார். "நன்று!" என்று காந்தாரியே கைவீசி அக்கணத்தை கலைத்து "இல்லையென்று நானறிவேன்" என்றாள். கனகர் "ஆம் அரசி, இவ்விரு நாட்களில் அனைத்து ஏவலரையும் ஒற்றரையும் அனுப்பி இந்நகரில் ஒரு மங்கையேனும் கருவுற்றிருக்கிறாளா என்று உசாவும்படி ஆணையிட்டேன். எவருமில்லை. கருதிகழ்கையில் இல்லத்தின்முன் மங்கலக்கொத்து சூட்டிவைக்கும் வழக்கம் இங்கிருப்பதனால் கண்டடைவது எளிது. ஒவ்வொரு இல்லத்தையும் ஏவல்பெண்கள் சென்று நோக்கினர். கலைந்த கருக்களுக்காக கட்டிவைக்கப்படும் கரிய நூல்பாவைகள் ஆயிரத்தெழுநூற்று எண்பத்தாறு இல்லங்களில் உள்ளன" என்றார்.

"யானைக்கொட்டில்களில், புரவித்திரளில், தொழுவத்தில் எங்கும் எந்தக் கருவும் எஞ்சவில்லை. நேற்றுவரை எஞ்சியிருந்தது யானைக்கொட்டிலில் நான்கு கருக்குழவிகள். இன்று காலை அவையும் வெளிவந்துவிட்டன" என கனகர் தொடர்ந்தார். காந்தாரி தலையசைத்தாள். பின்னர் "இங்கு அரண்மனையிலும் சூழ்ந்துள்ள அரசகுடிகளிலும்கூட எக்கருவும் எஞ்சவில்லை, அறிந்திருப்பீர்கள்" என்றாள். "சேடியர் உட்பட. ஐநூற்றிஎழுபத்தொன்பது பேர் கருவுற்றிருந்தனர். வெவ்வேறு வளர்நிலைகளில் திகழ்ந்த கருக்கள்... அனைத்தும் குருதியென

வெளியேறின. ஒன்பது பெண்டிர் கருவெளியேற்றத்தில் உயிர்விட்டிருக்கிறார்கள்.”

“நிமித்திகர்கள் கவடி நிரத்தி நோக்கினர். பன்னிரு ருத்ரர்கள் நகர் புகுந்திருக்கிறார்கள். இங்குள்ள கருக்கள் அனைத்தையும் அவர்களே உண்கிறார்கள் என்கிறார்கள். அவர்களின் குருதிவிடாய் அணைந்த பின்னரே இங்கிருந்து அகன்று செல்வார்கள்” என்று கனகர் சொன்னார். காந்தாரி அமைதியிலாழ்ந்து சற்றுநேரம் இருந்தபின் “இதற்கு முன் இவ்வாறு நிகழ்ந்துள்ளதா?” என்றாள். “இதற்கு முன் இங்கு நிகழ்ந்த அனைத்துமே ஏடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றை சிலநாட்களாக எடுத்து தொடர்ந்து ஆராய்ந்து கொண்டிருந்தேன். ஓலை ஆவணங்கள் நூறாண்டுகளுக்குப் பின் பட்டில் பொறிக்கப்படும். அவற்றுக்கும் முந்தையவை செப்பேட்டுச்சுருள்களில் பொறிக்கப்பட்டுள்ளன” என்று கனகர் சொன்னார்.

“ஆயிரத்தெழுநூறாண்டுகால ஆவணங்கள் நம் அரண்மனையில் உள்ளன என்கிறார்கள். அவற்றுக்கும் அப்பால்கூட நிலவறைகள் உள்ளன. இன்று நாம் எட்டக்கூடிய தொலைவு அவ்வளவுதான். நேற்று நிலவறைக்குள் ஆழத்திலிருந்து செப்பேடுகள் சிலவற்றை எடுத்துவந்தேன். தொன்மையான செப்பேடுகளை சொல்லறிவரே படிக்கமுடியும். தொன்மையான குறிஎழுத்துக்களால் ஆனவை. பழைய செப்பேடுகளில் ஒன்றில் ஒரு செய்தி உள்ளது என இன்று சற்றுமுன்னர்தான் சொல்லறிவர் கூறினர். ஆகவேதான் தங்களை நாடிவந்தேன்.” காந்தாரி வெறுமனே அமர்ந்திருக்க அவர் மேலே சொல்லலாமா என்று ஐயுற்றார். சத்யசேனை சொல்க என கையசைத்தாள். கனகர் தொடர்ந்தார்.

முன்பொரு முறை இவ்வாறு நிகழ்ந்திருக்கிறது, பேரரசி. அது அரசர் ருக்ஷரின் கோல் திகழ்ந்திருந்த காலம். அன்று அஸ்தினபுரி மிக சிற்றூர். இங்கிருந்து அரசர் ருக்ஷர் ஓர் அரசமண நிகழ்வுக்காக சிந்துநாட்டுக்கு சென்றார். அங்கிருந்து திரும்பும்வழியில் செம்புலத்தில் வழிதவறினார். நெடுந்தொலைவு வடமேற்காகச் சென்று காந்தாரப் பெருநிலத்தை நோக்கி செல்லும் பாதையை அடைந்தார். அங்கு அவர் கண்ட சோனக வணிகன் ஒருவன் அவர் வழிதவறிவிட்டதை அறிவித்து திரும்பும் வழியை கற்பித்தான். அதற்குள் அவர்களின் புரவிகள் மடிந்துவிட்டிருந்தன. வழியிலேயே அவர்கள் சுமையென எண்ணி செல்வங்களை வீசிவிட்டிருந்தனர். மெலிந்து கருகி கந்தலாடை அணிந்த இரவலர்போல் மாறிவிட்டிருந்தனர். அரசரின் இலச்சினையாலேயே அவரை வணிகன் அடையாளம் கண்டான்.

நீரும் உணவும் இன்றி களைத்திருந்த அரசரும் குழுவினரும் அவ்வணிகன் அளித்த உணவுடன் அவன் காட்டிய சிறுசோலை நோக்கி சென்றனர். அவர்கள் திரும்பச்சென்று அருகிருக்கும் சிற்றூரை அடைவதற்கு உதவும்பொருட்டு அவன் தன்னிடமிருந்த ஒட்டகங்களில் ஒன்றை அளித்தான். அதில் உணவையும் நீரையும் மட்டும் ஏற்றிக்கொண்டு அவர்கள் நடந்துசெல்லவேண்டுமெனப் பணித்தான். அதற்கு அரசர் அளித்த பொன்னை அவன் பெற்றுக்கொள்ளவில்லை. சோனக வணிகர்களின் நெறிகளின்படி அவர்கள் பாலைநிலச் சோலைகளிலோ ஊர்களிலோ வைத்து விற்கப்படும் பொருட்களுக்கே விலைபெற்றுக்கொள்ளவேண்டும். பாலையில் அலைபவரிடம் வணிகம் செய்வதென்பது விண்ணில் எரிவடிவாக எழுந்துள்ள தெய்வத்திற்கு உகக்காத பெரும்பழி.

அது முள்மரங்கள் சூழ்ந்த பாலைநிலக் காடு. அனலே மண்ணென்றானதுபோல் சிவந்த மென்பூழி சுழித்துச் சூழ்ந்த சோலைக்குள் சிறிய ஊற்றில் நீர் இருந்தது. உணவுண்டபின் சோலையில் இளைப்பாறுகையில் அவர்களுடன் சென்ற இளம் படைவீரனொருவன் நோயுற்றான். அவனால் எழுந்து நடக்க முடியவில்லை. நோயுற்றவனை அங்கிருந்து கொண்டு செல்ல எவ்வழியும் இல்லை. அவனை என்ன செய்வதென்று வினா எழுந்தது. வீரன் ஒருவனை துணைக்கு அங்கே விட்டு விட்டுச் செல்லலாம் என்றனர். அவ்வாறு வீரனை விட்டுச்சென்றால் அரசருடன் செல்லும் காவலரில் ஒருவன் குறைவான் என்று அமைச்சர் சொன்னார். அவர்களுக்குரிய உணவையும் அங்கே விட்டுச்செல்லவேண்டியிருக்கும். அவர்கள் எத்தனை நாட்கள் அங்கே தங்கவேண்டியிருக்குமென்றும் சொல்ல இயலாது.

சொல்முட்டி திகைப்பெழுந்த கணத்தில் அரசர் பிறிதொரு எண்ணமில்லாமல் வாளை உருவி வீரன் தலையை வெட்டி அங்கேயே வீழ்த்தினார். "நன்று, இச்சிக்கல் இங்கே முடிந்தது. கிளம்புவோம்" என்று கூறி ஒட்டகத்தை கிளப்பும்படி கைகாட்டினார். வீரர்கள் திகைத்துப்போயிருந்தாலும் மறு சொல் இன்றி உடன் கிளம்பிவிட்டனர். வெட்டுண்ட வீரனின் உடல் கிடந்து துள்ளியது. அவன் காலை உதைத்து எழுந்து விழுந்தபோது குருதி தெறித்து அங்கே பதினொரு சிறு கற்களாக பதிட்டை செய்யப்பட்டிருந்த தெய்வங்களின் மேல் பட்டது. அவர்கள் பன்னிரு ருத்ரர்கள். நெடுங்காலமாக விடாய்கொண்டு காத்திருந்த அவர்கள் அக்குருதியை பலியெனப் பெற்றனர்.

பலியால் எழுந்த பதினொரு ருத்ரர்களும் செம்முகிலென உயர்ந்து வானில் ஒரு பெருஞ்சிறைப் பறவையென மாறினர்.

நாடுகளையும் நதிகளையும் கடந்து அஸ்தினபுரியின் மேல் வந்து இறங்கி இங்கு அமைந்திருந்த அரண்மனையின் குவைமாடத்தின் உச்சிமேல் அமர்ந்தனர். அங்கிருந்து அவர்கள் நகரில் உள்ள அனைத்து கருக்களையும் உறிஞ்சிக்குடித்தனர். ஆயிரத்தெட்டு பெண்டிர் கருவழிந்தனர். ஆயிரத்தெட்டு பசுக்கள் கருக்களை இழந்தன. நூற்றெட்டு யானைகள் குருதி வழிய கரு உமிழ்ந்தன. நகரெங்கும் கருவறைக்குருதி பரந்திருந்தது.

பிறக்காது போன குழந்தைகளின் கண்கள் கரை வந்து விழுந்த மீன்கள்போல் துடித்தன என்று அச்செய்யுள் கூறுகிறது. வானிலிருந்து குருதி மழை பொழிந்து நகரை நிரப்பியது. அதில் அவ்விழிகள் கிடந்து துள்ளித்துடித்தன. சில விரல்கள் புழுக்கள்போல் நெளிந்தன. இருள் பரவி நகர் மூடியபோது பல்லாயிரம் குழந்தைகளின் அழுகுரல்கள் கேட்டன. அன்று இங்கிருந்த அந்தணர்கள் அஞ்சி வேதம் ஓதியபடி தங்கள் இல்லங்களுக்குள் மறைந்துகொண்டனர். தங்கள் வாள்களையும், வேல்களையும் பொருளற்றதாக்கும் எதிரியைக் கண்டு படைவீரர்கள் திகைத்தனர்.

நிமித்திகர் கவடி நிரத்தி மெய் கண்டு உரைக்க, தன் செயலால் நகர்மேல் பெரும்பழி வந்ததை உணர்ந்து திகைத்து, பின் உளம் கொந்தளித்து தன் உடைவாளை உருவி கழுத்தில் பாய்ச்சிக்கொள்ள சென்றார் அரசர். அமைச்சர் அவரை தடுத்தார். அவர் கைகளை பற்றிக்கொண்டு "அரசே, நகர் மேல் பழி வந்தது உங்களால் என்றால் அப்பழியை நீங்கள் அகற்றிவிட்டுச் செல்வதே முறையாகும். உயிரை மாய்த்துக் கொள்வதனால் உங்களுக்கு பெருமை சேராது. நீங்கள் இழைத்த பழி அவ்வண்ணமே நீடிக்கும். அதைச் சுமந்தபடி சென்று மூதாதையரை காணவேண்டியிருக்கும்" என்றார். "நான்

என்ன செய்வது, அமைச்சரே?" என்று அரசர் விழிநீர் உகுத்தார். அமைச்சர் அவைகூட்டி ஒரு வழியை கண்டடைந்தார்.

அன்று இங்கே தீர்க்கசாரதர் என்னும் விழியிலாத முதுநிமித்திகர் இருந்தார். அவரை அழைத்து வரும்படி அமைச்சர் ஆணையிட்டார். தீர்க்கசாரதர் களம் வரைந்து கருநீக்கி கணித்து குறித்தபடி பழிநிகர் சடங்குகள் செய்யப்பட்டன. அரசர் அச்சடங்குகளைச் செய்ததும் இந்நகர் முழுக்க நிறைந்திருந்த இருள் அகன்றது. விண்ணில் இருந்து ஒளி இறங்கி அனைத்து மூலைகளையும் துலங்கச்செய்தது. இருண்ட மூலைகளில் திகழ்ந்த கருநாகங்கள் அகன்றன. மரக்கிளைகளில் சேக்கேறியிருந்த காகங்கள் மறைந்தன. நகர் மேல் ஏழு நாட்கள் மழை பொழிந்தது. வானம் இருளாமலேயே பெய்த மழையாதலால் ஒவ்வொரு துளியும் ஒளி கொண்டிருந்தது. வைரமணிக்கற்களென நீர்த்துளிகள் நகர் மேல் விழுந்து பளிங்கு வழிவதுபோல் ஓடைகளாயின என்று பாடல் கூறுகிறது.

ஏழு நாள் மழையில் முற்றாக கழுவப்பட்டது. பன்னிரு நாட்களில் முழுமையாக மீண்டது. நாற்பத்தொரு நாட்களில் நூற்றெட்டு பெண்கள் கருவுற்றிருக்கும் செய்தியை அரசர் அறிந்தார். நூற்றெட்டு நாட்களில் பன்னிரு யானைகளும் நாற்பத்தொரு பசுக்களும் கருவுற்றிருக்கும் செய்தி வந்தது. அதன்பின் அரசர் முடி துறந்து தன் மைந்தனை அரியணை அமர்த்தி கானேகி விண் புகுந்தார். அவருடைய முதல் மைந்தரான சம்வரணர் முடிசூடினார். தன் தந்தை இயற்றிய அச்சடங்கை ஏழாண்டுகளுக்கு ஒருமுறை அவர் விழாவென்றே தொடர்ந்தார். ஏழு தலைமுறைகளுக்குப்பின் அச்சடங்கு மறைந்து போயிற்று.

“சொல்லறிவர் நூற்றெட்டு வரிகள் கொண்ட செய்யுளாக இந்நிகழ்வை படித்து எடுத்துரைத்தார்” என்று கனகர் சொன்னார். “என்னென்ன சடங்குகள்?” என்று காந்தாரி கேட்டாள். “அவை செப்பேடுகளில் இல்லை. என்ன சடங்குகள் என்பதை முன்பு நிகழ்ந்தவற்றைச் சார்ந்து நாம் முடிவெடுக்கவும் இயலாது. கோள்கள் அமைந்துள்ள கோணங்களும் அன்றிருந்தோர் வாழ்வின் தருணங்களும் இணைந்து அச்சடங்குகளை முடிவெடுக்கின்றன. மருந்தும் சடங்கும் நாள்கண்டு கூறவேண்டும் என்பது தொல்கூற்று” என்று கனகர் கூறினார்.

காந்தாரி பெருமூச்சுவிட்டாள். “இத்தருணத்தில் நாம் இயற்றக்கூடுவதொன்றே, அரசி. தீர்க்கசாரதரின் வழிவந்த நிமித்திகர் எவரேனும் இன்று இருக்கிறார்களா என்று கேட்போம். அவர்கள் ஆணையிடுவதை செய்வோம்” என்றார். காந்தாரி “அவ்வண்ணம் எவரோ இருக்கிறார்கள் அல்லவா?” என்றாள். “ஆம், தீர்க்கசியாமர் என்னும் விழியிழந்த நிமித்திகர் இருக்கிறார். ஆனால் முதியவரல்ல” என்றார் கனகர். காந்தாரி “அவரை நான் பார்த்திருக்கிறேன். அவருடைய மூதாதையை கண்டிருக்கிறேன். இங்கு என் முதல் மைந்தன் பிறந்தபோது நாள்குறிக்க வந்தவர் அவர்” என்றாள். “அவரை அரண்மனைக்கு அழைத்து வர தாங்கள் ஆணையிட்டால் ஆவன செய்கிறேன். ஆவதென்ன என்று அவர் கூறட்டும்” என்று கனகர் கூறினார்.

நீர்ச்சுடர் - 7

பகுதி இரண்டு : குருதிமணிகள் – 1

கனகர் வழிதவறிவிட்டிருந்தார். அதை தெற்குக் கோட்டையின் கரிய பெருஞ்சுவரில் முட்டிக்கொண்டு நின்றபோதுதான் அவர் உணர்ந்தார். முதலில் அவர் அதை கோட்டை என்றே உணரவில்லை. இருளென்றே எண்ணினார். அணுகுந்தோறும் இருள் அவ்வண்ணமே நின்றிருப்பதுகூட விழிகளுக்கு விந்தையாகப் படவில்லை. மிக அருகே சென்று அவ்விருள் பரப்பின் பருபருப்பை விழிகளால் உணர்ந்த பின்னரே அது சுவரென அறிந்து புரவியை நிறுத்தினார். மூச்சிரைத்தபடி அதை வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தார். சுவர் காற்றில் திரைச்சீலை என ஆடுவதாகத் தோன்றியது. அது தன் களைப்பால் தோன்றுவது என உணர்ந்து கண்களை மூடிக்கொண்டார். கண்களுக்குள்ளும் அவ்விருள் தேங்கியிருந்தது.

அது எந்த இடம் என உய்த்தறிய அவர் முயன்றார். ஆனால் எத்தனை எண்ணியும் சித்தம் திகைத்து திசைகளில் முட்டி நின்றிருந்தது. தெற்குதிசைக்கு கிளம்பியதை எண்ணி எண்ணித்தான் நினைவிலிருந்து எடுத்தார். எனில் இது தெற்குக் கோட்டை. தென்மேற்கா தென்கிழக்கா? எந்த அடையாளங்களும் தென்படவில்லை. அங்கிருந்த குறுங்காடும், அச்சாலையின் இருபுறங்களிலும் இருந்த கைவிடப்பட்ட சிறுவீடுகளும் கல்லால் ஆன சிறிய துர்க்கையன்னையின் ஆலயமும் எந்தச் செய்தியையும் அளிக்கவில்லை. ஏதேனும் ஓர் அடையாளத்திற்காக அவர் விழிகளை சுழற்றினார். அனைத்துமே நன்கறிந்தவை, ஆனால் எந்தத் தனியடையாளமும் அற்றவை.

அஸ்தினபுரியின் ஒவ்வொரு ஆலயமும் ஒவ்வொரு இல்லமும் ஒவ்வொரு சாலையும் பிறிதொன்றைப்போலவே உள்ளன. சிதல்கள் தங்கள் கூடுகளை எப்படி ஒன்று பிறிதைப்போலவே கட்டிக்கொள்கின்றன, ஏன் அத்தனை தேன்கூடுகளும் ஒன்றென்றே தோன்றுகின்றன என்று அவர் வியந்ததுண்டு. அவற்றின் உடலென்றான அகம் பிறிதொன்றை இயற்றும் ஆற்றல்கொண்டது அல்ல. மானுட உள்ளம் உடலைக் கடந்து தானெழுவது, உடலை ஆள்வது என்று அவரே அதற்கு விளக்கமும் அளித்துக்கொண்டிருந்தார். ஆனால் மானுடரும் அனைத்தையும் ஒன்றுபிறிதென்றே அமைத்துக்கொள்கிறார்கள். இந்த இல்லம் அஸ்தினபுரியின் அத்தனை இல்லங்களையும் போலத்தான் இருக்கிறது. தனியடையாளம் என்று நாம் எண்ணுவதெல்லாம் மிகமிகச் சிறிய வேறுபாடுகளைத்தான்.

மானுடரால் அவ்வண்ணம்தான் இயலும். ஒரே காலகட்டத்தில் அமைவன ஒன்றுபோலிருக்கின்றன. ஒரே இடத்திலமைபவை ஒன்றுபோலிருக்கின்றன. அகன்று நோக்கினால் அந்நகரமே ஒன்றுபோல் அமைந்தவற்றாலானது. மலைமேல் நின்று நோக்கினால் அனைத்து நகரங்களும் ஒன்றுபோலவே தோன்றக்கூடும். விண்ணில் நின்று நோக்கும் தெய்வங்களுக்கு அனைத்து மானுட அமைப்புக்களும் ஒன்றே என்று தோன்றக்கூடும். அனைத்து மானுட முகங்களும் ஒன்றென்றே தோன்றக்கூடுமா என்ன? அனைத்து மானுடரும் ஒற்றை உருவம் கொண்டவர்கள்தானா?

எதிரே ஒரு சூதர் தலையாட்டி பாடியபடியே வந்தார். கனகர் அவரிடம் "சூதரே, இது எந்த இடம்?" என்றார். அவர் மகிழ்ச்சியுடன் தலையசைத்து "நன்று... நாம் ஒன்றாக

உண்போம். ஒன்றாகப் புணர்வோம். ஒன்றாக இருப்பதே நம்மை மகிழ்ச்சியாக்கும்... ஏன் தனிமைகொள்ளவேண்டும்?" என்றார். கனகர் திகைத்து பின் அவருடைய பதறும் விழிகளை கூர்ந்து நோக்கி "இது அரசாணை. இந்த இடம் என்னவென்று சொல்லுங்கள்" என்றார். "ஏன் என்றால் நாம் ஆணவம் கொண்டிருக்கிறோம். நாம் வைத்திருக்கும் அந்தச் சிறிய உறுப்பைக்கொண்டு உலகையே அளக்க விழைகிறோம்."

அவர் காற்றோசையுடன் நகைத்து "சுங்கச்சாவடியில் முத்திரையிடும் மரத்துண்டு அது என எண்ணுகிறார்கள் சில ஆண்கள். அதைக்கொண்டு ஒருமுறை அழுத்தி எடுத்தால் அந்தப் பெண் அவனுக்குரியதாகிவிடுவாளாம்... எனில் அந்த மாளிகையை அதைக்கொண்டு முத்திரையிடு, மூடா!" என்றார். கனகர் சலிப்புடன் தலையசைத்தார். "அரசே, போரில் எத்தனை ஆயிரம் முத்திரைக்கோல்கள் அவ்வண்ணம் மண்படிந்திருக்கும்? அவற்றைப்பற்றி ஏதேனும் செய்தி உண்டா?" என்றார். "செல்க!" என்றார் கனகர். "வெடிப்பொருளைப் பற்றவைக்கும் கரிய சிறு திரிபோல் அது மானுடரில் அமைந்துள்ளது என்று என் ஆசிரியன் சொன்னான். அது சிதையேறி அனல் பற்றிக்கொள்ளும்போது நீலச்சுடர் எரிவதுண்டா?"

அவருடைய முகம் மெல்ல நடுங்கிக்கொண்டிருந்தது. வாயில் மாறாத இளிப்பு தங்கியிருந்தது. கைகள் எதையோ காற்றில் சுழித்துச் சுழித்து அலைபாய்ந்தன. "தேவர்கள் மானுடரை விழிகளைக்கொண்டு அடையாளம் காண்கிறார்கள் என்பார்கள். ஆனால் நான் அறிவேன், பாதாளமூர்த்திகள் மானுடரை அவர்களின் காமச்சிற்றுறுப்பைக்கொண்டே அடையாளம் காண்கிறார்கள். அது மெய்யாகவே ஒரு சிறு கைப்பிடி. அதைப்

பிடித்துத் தூக்கி எடுக்கிறார்கள்... ஆம்!" அவர் மீண்டும் நகைத்தார். "அது எப்போதுமே அவர்களை அறிந்திருந்தது... அது மானுட உடலில் இருந்தாலும் அவர்களுக்கு உரியது... ஏனென்றால்..."

கனகர் அத்தனை பொழுது அந்தப் பித்தை ஏன் அப்படி நின்று செவிகொண்டோம் என தன்னை எண்ணியே வியந்தார். புரவியைத் திருப்பி வந்த வழியிலேயே செல்லத் தொடங்கினார். அவர் பின்னாலிருந்து உரக்க கூவினார் "பல்லாயிரம் பேரின் காமச்சிற்றுறுப்புகள்... பல லட்சம். அவற்றை மட்டும் வெட்டிக் கொண்டுவந்திருக்கலாம். அவற்றை இந்நகரில் நடலாம். கருணைக்கிழங்கின் முளைக்கண் போன்றவை அவை. இங்கே அவை முளைத்தெழும். நான் அறிவேன், அகன்ற தளிரிலைகளுடன் அவை முளைக்கும். கருணைக்கிழங்கின் தண்டுபோலவே இருக்கும். ஆனால் கரியவை... அவை பெருமரங்களாக இந்த நகரில் பெருகி நிழல் பரப்பும். இங்கே நாங்களெல்லாம் அதன்கீழ் அமர்ந்து..."

கனகர் தன் உடல் வியர்வைகொண்டிருப்பதை கண்டார். என்ன ஆயிற்று? அச்சொற்கள் தானறியாத எங்கோ சென்று தொடுகின்றன. எதையோ அசைத்துவிட்டிருக்கின்றன. இல்லை, இப்போது நான் தேடுவது வழியை மட்டுமே. ஆனால் வழிகள் என எதுவுமே அகத்தே எழவில்லை. அவர் அஸ்தினபுரியில் எப்போதுமே வழிகளை நினைவுகூர்ந்தவர் அல்ல. கால்கள் நடக்கத்தொடங்கிய நாட்கள் முதல் அந்நகரின் தெருக்கள் அவருக்குரியவையாக இருந்தன. இளமையில் மொத்த நகரிலும் அவர்கள் ஒளிந்து விளையாடுவதுண்டு. வேள்விச்சாலைகள் முதல் அங்காடிகளின் இருண்ட

சிறுசந்துகளுக்குள் வரை ஒளிந்துகொள்வார்கள். ஒளிந்துகொள்பவனை தேடிச்சென்று பிடிப்பதில் அவர் தேர்ச்சி கொண்டிருந்தார். ஒளிந்துகொள்பவனாக நின்று அந்நகரை அவர் தன்னுள் எழுப்பிக்கொள்வார். அவன் சென்றவழி நத்தையின் ஒளித்தடம் என தெரியும். அங்கே சென்று அவனை பற்றிக்கொள்வார்.

ஒரு கட்டத்தில் அவர் நகரை உணர்வதையே மறந்துவிட்டிருந்தார். செல்லவேண்டிய இடம் தோன்றியதுமே கால்கள் வழியை தெரிவுசெய்துவிடும். நினைத்தபோது சென்றெய்தும் அந்த நகருக்கு அப்பால் அவருடைய சித்தம் சென்றதுமில்லை. சிறுவர்கள் வழிதேடுவதே இல்லை. அவர்களின் உவகையும் கொப்பளிப்பும் வழிகளை அளிக்கின்றன. காற்றுக்கு கதவுகள் திறப்பதுபோல. இச்சாலைகளில் ஏன் ஒரு குழந்தைகூட இல்லை? சிறுவர்கள் இல்லாமல் இச்சாலைகளை நான் கண்டதே இல்லை. ஏனென்றறியாமல் ஓடிக்கொண்டிருப்பார்கள். எண்ணியிராமல் கூச்சலிடுவார்கள். அவர்களெல்லாம் எங்கே? உணவுதேட அன்னையருடன் காடுகளுக்குள் சென்றுவிட்டிருக்கக் கூடும்.

இத்தெருக்களில் கட்டடங்களும் தூண்களும் அவ்வண்ணமே உள்ளன. மண்ணும் கல்லும் மாறவில்லை. ஆனால் அவை அனைத்துமே பிறிதாக ஆகிவிட்டிருந்தன. இவற்றை சமைத்திருந்தவர் மானுடரே. பொருட்கள் மானுடரால்தான் தங்களைக் கோத்து தெருவென்றும் நகரென்றும் துலக்கிக்கொண்டன. இந்நகர் இத்தனை ஒழிந்து கிடக்குமென என் அகம் எண்ணியதே இல்லை. இதை எதிர்கொள்ள இயலாது அது உள்வாங்கிக்கொண்டுவிட்டிருக்கிறது. இதை

நோக்குவதையே மறுக்கிறது. எனவேதான் எந்த அடையாளத்தையும் பெற்றுக்கொள்வதில்லை.

முதிரா இளமையில் அந்நகரின் பரத்தையர் இல்லங்கள் வழியாக உலவிக்கொண்டிருந்தது அவர் அகம். கற்கையிலும் பணியாற்றுகையிலும் அவர் அகத்தில் ஒரு தன்னுணர்வு அப்பாதைகளை சிக்கலான நூலிழைகளை பிரித்து நீவி எடுப்பதுபோல ஆராய்ந்துகொண்டிருந்தது. கொடிகளைப் பற்றியபடி சென்று கிழங்கைக் கண்டடைவதுபோல அங்குள்ள சாலைகளை தொட்டுத்தொட்டுச் சென்று அவற்றின் இறுதியில் உகந்த பெண்ணை கண்டடைவார்.

அப்பெண்ணை விழவுகளில் கண்டிருப்பார். சாலைகளில் கடந்திருப்பார். அங்காடியில் பொருட்களுக்கு நடுவே பார்த்திருப்பார். மிதக்கும் முகங்களின் அலைகளில் ஒரு துளி. ஓர் அசைவின் கீற்று. ஒரு விழிமின். ஆனால் வழி ஒன்று உள்ளே தெளியும். அதனூடாகச் சென்று அவளை அடைந்த பின்னரே கால்கள் கிளம்பும். அவளைச் சென்றடையும்போது அவள் எப்படி வந்தீர்கள் என்று எப்போதுமே கேட்பாள். இந்நகரில் நானறியாத ஏதுமில்லை என்று அவர் மறுமொழி சொல்வார். அவள் நகைத்து முழு நகரையுமா என்பாள். இந்நகரென்றானது என் அகம் என்று அவர் மறுமொழி சொல்வார்.

சென்ற பிறப்பில் இந்நகரில் ஒரு பூனையாக இருந்தேன். பூனையறியாத பாதைகள் இல்லை. குதிரையின் வழி கண்களில். நாயின் வழி மூக்கில். பசுவின் வழி செவிகளில். பூனையின் வழி இருப்பது அதன் ஆத்மாவில். ஆகவே அதன் வழியை அதுவேகூட அறிந்திருக்காது. முந்தைய கணத்தை வைத்து அடுத்த கணம் அது எங்கிருக்கும் என கணிக்க

முடியாது. விலங்குகள் அந்தந்த கணங்களில் வாழ்பவை. பூனை அடுத்த கணத்தில் வாழும் சித்தம் கொண்டது. அதன் உடல் அக்கணத்திலிருந்து அடுத்த கணம் நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. அவர் சுட்டிக்காட்டியதும் மஞ்சத்தறையில் இருந்த பூனை எழுந்து நாவால் மூக்கை நக்கி மெல்லிய ஓசை எழுப்பியது.

பரத்தையர் இல்லங்களில் பூனைகள் ஏன் பெருகியிருக்கின்றன என அவர் எண்ணிக்கொண்டார். அவர் பூனைகளில்லாத பரத்தையர் இல்லங்களை கண்டதே இல்லை. நாய்கள் இருப்பதையும் கண்டதில்லை. கண்டதை கண்டதுமே கூவியறிவிக்கும் நாய்களை பரத்தையர் வெறுப்பதில் பொருளுண்டு. அயலாரை வெறுப்பவை அவை. ஆனால் பூனைகளுக்கு அயலாரும் அணுக்கரும் என எவருமில்லை. அவை மானுடரை உண்மையில் பார்க்கின்றனவா என்றே ஐயம் எழும். அவை வாழும் உலகம் மானுடரின் உலகுக்கு நடுவே மானுடர் அறியாமல் பின்னப்பட்டிருக்கிறது.

அவர்களுக்கு அந்தச் சிறுவிலங்கின் மென்மை பிடித்திருக்கலாம். எங்கும் நழுவும் உடலும் ஓசையற்ற நடையும் உகந்ததாக இருக்கலாம். எந்நிலையிலும் நான்கு கால்களில் நிலம் வந்துசேரும் உடலை அவர்கள் விரும்பக்கூடும். இருளிலும் ஒளிவிடும் அவற்றின் விழிகள் அவர்களுக்கு எப்போதும் துணையெனத் தோன்றலாம். பகலில் அவ்விழிகள் நீண்டு வெறிப்பு எனத் தோன்றுவது நிறைவளிக்கலாம். நோக்குக, அதன் முன்கால் ஒரு கணம் முன்னாலிருக்கிறது! அது நிகழ்கணத்தில் பின்னங்காலையும் நெளியும் வாலையுமே வைத்திருக்கிறது. அந்த வால்

எப்போதுமே தவித்துக்கொண்டிருக்கிறது. அது இங்கே இக்கணத்தில் இருக்க விழையவில்லை என்று சொல்கிறது...

பரத்தையர்தெருவின் பெண்களுக்கு அத்தகைய பேச்சுக்கள் பிடிக்கும் என அவர் அறிந்திருந்தார். அவர்கள் ஒருவர் போலவே இன்னொருவரை பார்த்துக்கொண்டிருப்பவர்கள். முகங்களை நினைவுகூராதவர்கள். தனித்தெழுபவன் அவர்களில் ஆர்வத்தை உருவாக்குகிறான். தனித்தெழுபவர்கள் இரு வகை என ஒருமுறை ஒருத்தி அவரிடம் சொன்னாள். வன்முறையும் குற்றமும் கொண்டவர்கள். பெரும்பாலும் திருடர்கள். திருடர்களில் சூதாடிகளல்லாதவர்கள் பெரும்பாலும் எவருமில்லை. அன்றி பித்தர்கள். நான் இருவரில் எவன் என்று அவர் கேட்டார். பித்து உள்ளே கரந்த சூதாடி என்று அவள் சொல்லி நகைத்தாள்.

அவர் அந்த இடத்தை அடையாளம் கண்டுகொண்டார். அது முன்பு சுமமாலிகை என்னும் பரத்தையின் இல்லம். அவள் இனிய புன்னகை கொண்டவள். அறிவிலாது பேசும் மைந்தரை நோக்கி உள்ளே நகைக்கும் அன்னையின் முகம் கொண்டிருந்தாள். பேசவைப்பதற்குத் தெரிந்தவள். பேசும் ஆண் தன்னை புனைந்து புனைந்து முழுமைகொள்கையில் வென்றதாகவே எண்ணிக்கொள்கிறான். அதை அவள் அறிந்துவிட்டிருக்கிறாள். அதை ஏற்றுக்கொள்கிறாள் எனத் தோன்றுகிறாள். ஆனால் பேதையல்ல என்றும் தெரிகிறாள். ஆகவே மேலும் சொல்லெடுக்கத் தூண்டும் புன்னகையாக காட்சியளிக்கிறாள். அவளிடம் அவர் நெடுங்காலம் பித்துப்பிடித்து கிடந்ததுண்டு. முதல் மைந்தன் பிறப்பது வரை அந்த மையல் நீடித்தது.

இது தெற்குவாயிலை ஒட்டிய பரத்தையர் தெரு என்றால் நிமித்தச் சூதர்தெரு இதற்கு அப்பால்தான். அவர் தேடிச்செல்லும் இடம் அதற்கு அப்பால்தான். அவர் புரவியை நிறுத்தி அந்த இல்லத்தை நோக்கிக்கொண்டு நின்றிருந்தார். சுமமாலிகை அங்கிருக்கக் கூடுமா? அவள்தானா அது? இல்லத்தின் உள்ளிருந்து வந்த இளம்பெண் மெலிந்து எலும்புருவாக இருந்தாள். தோல் நிறம் மங்கி விழிகள் உட்குவிந்து வாய் உலர்ந்து நோய்ப்படுக்கையிலிருந்து எழுந்தவள்போல. நடுக்கு கொண்ட கால்களுடன் அவள் அணுகி வந்தாள். "வருக, உத்தமரே! இவ்வில்லம் காத்திருக்கிறது" என்றாள்.

"சுமமாலிகை..." என்று அவர் கேட்டார். "என் அன்னைதான்... சென்ற வாரம் அன்னை இறந்துவிட்டார்கள்... உள்ளே நுழைக, உத்தமரே! இது இனிய இல்லம்" என்றாள் அவள். அவர் அவளை வெறித்து நோக்கிக்கொண்டு நின்றார். "அன்னை எப்படி மறைந்தாள்?" என்றார். "நோய்" என்று அவள் சொன்னாள். "உடன் பசியும் உளச்சோர்வும்." கனகர் "நீ அவள் மகளா? உன் பெயரென்ன?" என்றார். "ராகினி என்பார்கள்... நான் ஆடலும் பாடலும் பயின்றவள்" என்று அவள் சொன்னாள். "உனக்கும் உடல்நலமில்லையா?" என்று அவர் கேட்டார். "ஆம், இந்நகரில் ஆடவர் என எவருமில்லை. ஆகவே இங்கே எவருமே வருவதில்லை. நாங்கள் உண்பதற்கு ஏதுமில்லை... இங்குள்ள எல்லா இல்லங்களிலும் அடுப்புகள் எரிவதில்லை."

கனகர் எண்ணியதை அவள் சொன்னாள். "இங்கே எங்களிடம் செல்வமென்றும் ஏதுமில்லை." கனகர் "ஏன்?" என்றார். அவள் ஒன்றும் சொல்லவில்லை. "சொல்க, ஈட்டியவை எங்கே சென்றன?" அவள் எரிச்சலுடன் "ஈட்டிய செல்வத்தால்

இன்புற்றிருந்த பரத்தையர் எவரையேனும் நீங்கள் இதற்கு முன் அறிந்ததுண்டா?" என்றாள். கனகர் திகைத்தார். "அவை பறிக்கப்பட்டுவிடும்... இம்முறை அரசே பறித்துக்கொண்டது. இறுதிப்பொன் வரை. போர்நிகுதி... அள்ளிக்கொடுத்தவர்களுக்கு அடி விழுந்தது. அவர்களிடம் மேலும் கேட்டார்கள். கரந்துவைத்தவர்களுக்கு மேலும் அடி விழுந்தது. அவர்கள் மேலும் கரந்திருப்பார்கள் என கருதினார்கள்."

கனகர் விழிகளை திருப்பிக்கொண்டார். "படைவீரர்கள் இல்லங்களுக்குள் நுழைந்து சுவர்களையும் தரையையும்கூட அகழ்ந்து அனைத்தையும் எடுத்துக்கொண்டனர். அவர்கள் சென்றபின் மறுவேளை உணவுக்காக நாங்கள் அலைமோதத் தொடங்கிவிட்டோம்." அவள் உதடுகள் இகழ்ச்சியாக வளைந்தன. "எல்லா போர்களும் குலமகள்களுக்கு எதிராக நிகழ்பவை என்பார்கள். அது முழு உண்மையல்ல. போர் தொடங்குவதற்கு முன்னரே பரத்தையர் தோற்கடிக்கப்பட்டுவிடுவார்கள்..."

கனகர் புரவியை மெல்ல தட்டினார். அது முன்கால் எடுத்துவைத்தது. "இச்சொற்களுக்காகவேனும் ஏதேனும் அளித்துச்செல்க, அந்தணரே!" என்றாள் அவள். அவர் ஒரு வெள்ளிநாணயத்தை எடுத்து நீட்ட இயல்புக்கு மீறிய விசையுடன் வந்து அவள் அதை பற்றிக்கொண்டாள். இடையாடையில் அதை முடிந்து செருகிக்கொண்டபோது அவள் முகம் மலர்ந்து விழிகள் ஒளிகொண்டன. "படைவீரர்களையும் சொல்லிப் பயனில்லை. அவர்களுக்கு ஆணையிடப்பட்ட செல்வத்தை அவர்கள் வரியாக சேர்த்தேயாகவேண்டும். அந்தணருக்கு வரி இல்லை. ஆயரிடமிருந்து விலங்குகளும் உழவரிடமிருந்து நெல்லுமே

கொள்ளத்தக்கவை. பொன்னிருப்பது வணிகர்களிடமும் எங்களிடமும்தான். அவர்கள் வணிகர்களை எலிகள் என்றனர். எங்களை தேனீக்கள் என்று. வரப்புகளை தோண்டியும் கிளைகளில் ஏறியும் புதையலெடுக்கிறோம் என்று ஒரு வீரன் சொன்னான்...” என்றாள்.

“சூதர்களிடமும் அவர்கள் அடித்துப்பிடுங்கினர் என்றார்கள்” என்று அவள் தொடர்ந்தாள். “அவர்கள் இங்கே நகரிலிருந்து எடுத்துக்கொண்டவற்றில் சிறுபகுதியே கருவூலத்திற்குச் சென்றிருக்கும். அரசர்கள் அறிவது அதை மட்டுமே. எத்தனை கூரிய ஆட்சியாளனும் ஆட்சி நிகழும் முழுத் தோற்றத்தை அறிந்துவிட முடியாது. அவர்களுக்கு அது சொல்லப்படுவதில்லை. அவர்கள் அமர்ந்திருக்கும் அரியணையிலிருந்து அதை காணவும் முடியாது. அவர்கள் காணவிரும்பும் வடிவிலேயே ஒவ்வொன்றையும் காட்சிப்படுத்துகிறது அரசு.” அவள் “உள்ளே வருக, அந்தணரே... வாயிலிலேயே நின்றிருக்கவேண்டாம்” என்றாள்.

அவர் “இல்லை” என்றார். அவர் செல்லவிரும்பினார். ஆனால் அவள் பேச்சு அவரை தடுத்து நிறுத்தியிருந்தது. அதை அறிந்து அவள் அப்பேச்சையே நீட்டித்தாள். “அன்றாட நெறியின்மைகளினூடாக இயங்குவதே அரசு என்று என் அன்னை சொல்வதுண்டு. அதை காணும் கண்கொண்ட அரசன் கோல்கொண்டு அரியணை அமர முடியாது. தானறிந்த சிறு வட்டத்திற்குள் நெறிநின்று ஆட்சிபுரப்பதாகவே அவன் எண்ணிக்கொள்ளவேண்டும். அது ஒன்றே வழி...” என்றாள். “போர்நிகுதிக்கு ஆணையிடப்பட்டதுமே கொள்ளை தொடங்கிவிட்டது. வேலோடு நின்றான் இடு என்பதும் கோலோடு நின்றவன் கொடு என்பதும் நிகரே.”

“நகரின் செல்வத்தில் பெரும்பகுதி வேல்முனையில் கொள்ளப்பட்டுவிட்டது. அவற்றில் பெரும்பகுதி இந்நகரிலேயே எங்கெங்கோ புதைக்கப்பட்டிருக்கும். போருக்குப் பின் திரும்பிவந்து வாழ்வதற்கு அவை தேவை என வீரர்கள் எண்ணியிருக்கலாம். போருக்குப் பின் திரும்பி வருவோம் என்னும் நம்பிக்கை இல்லாது படையில் சென்ற எவரும் இருக்க முடியாது. அச்செல்வம் இந்நகருக்கு அடியில் கூறப்படாத சொல் என இனி பல நூறாண்டுகள் இருக்கும். உணவில்லாவிட்டாலென்ன, நாமனைவரும் செல்வத்தின் மேல் அல்லவா நடமாடிக்கொண்டிருக்கிறோம்.”

கனகர் எண்ணியிராதபடி சினம்கொண்டார். அவர் விழிகளில் அதைப் பார்த்த அவள் “அவர்களும் எதுவும் செய்யமுடியாதுதான்...” என்றாள். கனகர் “எவரும் எதுவும் செய்யமுடியாது. அவர்களுக்கு ஆணையிட்டவர்களுக்கும் வேறுவழியில்லை. இத்தகைய போர்நகர்வுக்கு எல்லையில்லாத செல்வம் தேவையாகிறது... அஸ்தினபுரியே அத்தனை படைகளுக்கும் செலவிட வேண்டியிருந்தது” என்றார். “எவரையும் குறைசொல்ல முடியாது... அவரவர் ஊழ்நெறிப்படி இயங்கினர்” என்ற ராகினி “நீங்கள் விழைந்தால் இல்லத்திற்குள் வந்து...” என்றாள். “தாழ்வில்லை... நான் சூதர்தெருவில் ஓர் இடத்தை தேடிச்செல்கிறேன், சற்றே வழிதவறி வந்தேன்” என்றார்.

“எனக்கு இந்நகரில் எந்த வழிகளும் தெரியாது. எல்லா வழிகளினூடாகவும் இங்கே வந்துகொண்டிருப்பார்கள். நாங்கள் எங்கும் செல்வதில்லை. கருவறைத் தெய்வங்களும் பரத்தையரும் நிகர் என்பார்கள்” என்று அவள் சொன்னாள். சிரித்தபடி “போர் சூழத் தொடங்கியதுமே பெருவணிகர்

இடம்பெயர்ந்துவிட்டனர். செல்வங்களை ஒளித்துக்கொண்டனர். எங்களுக்கும் வரவிருப்பதென்ன என்று தெரியும். ஆனால் இந்த வீடுகளை விட்டு எங்கும் செல்லமுடியாது. ஈமத்தாழியை தன் உடலெனச் சுமந்தலையும் ஆமைகள் போன்றவர்கள் நாங்கள்" என்றாள் ராகினி.

கனகர் மீண்டும் புரவியை தட்டியபின் "இங்கே பூனைகள் நிறைய இருந்தனவே?" என்றார். "ஒருநாள் உணவில்லாமல் ஆனதுமே அவை கிளம்பி காடுகளுக்குள் சென்றுவிட்டன..." என்று ராகினி சொன்னாள். "அங்கே காடுகளில் இருளில் மின்மினிகள்போல் அவற்றின் விழிகள் ஒளிவிடுவதாகச் சொன்னார்கள்." கனகர் உளம்நடுங்க புரவியை முன்னே செலுத்தினார். அவள் பின்னால் வந்தபடி "இங்கே ஆண்கள் வரத்தொடங்க இன்னமும் ஒரு தலைமுறைக்காலம் ஆகும், அந்தணரே. நாங்கள் இந்த இல்லங்களுக்குள்ளேயே மடிந்து மட்கி அமைவோம். இன்றுள்ள இளையோர் வளர்ந்து தங்கள் காமத்தைக் கண்டடையும்போது எங்கள் வெள்ளெலும்புகளிலிருந்து பெண்கள் முளைத்தெழக்கூடும்... வெண்ணிற காளான்களைப் போன்று..." என்றாள். அவருடைய புரவி சென்றுகொண்டே இருந்தது. அவள் அதன் கடிவாளத்தைப் பற்றியபடி "நீங்கள் உள்ளே வரலாமே" என்றாள். கனகர் அவள் கையை விலக்கி "இல்லை, நான் சென்றாகவேண்டும்" என்று புரவியை செலுத்தினார்.

திகைத்தவர்போல அவர் புரவியில் அமர்ந்திருந்தார். என்ன இடர் என ஒருவாறாகப் புரிந்தது. அவர் புரவியூர்வதே இல்லை. எப்போதும் தேரிலேயே நகரில் சென்றுகொண்டிருந்தார். புரவியூர்கையில் உள்ளே இருக்கும் தன்னுணர்வு அதில் அமரவில்லை. அது தேரை செலுத்துகிறது. புரவியின்

கழுத்தைத் தடவிக்கொண்டிருந்தார். அது உடலைச் சிலிர்த்தபடி சென்றது. அந்தச் சூதனின் சொற்கள் நினைவிலெழுந்தன. அவை ஒரு பெரிய சொல்லொழுக்கின் துளிகள். அவன் என்னதான் சொல்லிக்கொண்டிருந்தான்? எவரிடம்? அவனுடன் வந்தபடி ஏதேனும் தெய்வங்கள் அதை செவிகொண்டனவா?

சூதர்தெரு முற்றொழிந்ததுபோல் கிடந்தது. ஆண்கள் என எவருமே கண்ணுக்குப்படவில்லை. சில திண்ணைகளில் சோர்ந்த குழந்தைகள் படுத்திருந்தன. அவற்றைப் பேணும் சிறுமியர் வெறித்த விழிகளுடன் அவரை நோக்கினர். போர்முறைமைகள் தொடங்கி எத்தனை நாட்களாகியிருக்கும்? மூன்றுமாதம் கடந்திருக்கவில்லை. அதற்குள் நகரிலிருந்து பொலிவனைத்தையும் உறிஞ்சி அகற்றிவிட்டிருக்கிறது. தெருக்களில் சருகும் குப்பையும் குவிந்து கிடந்தன. காற்று அள்ளிக் குவித்த புழுதி அத்தனை சுவர்களுக்குக் கீழேயும் எழுந்து கிடந்தது. பல இல்லங்களில் எவருமிருக்கவில்லை. காற்று வீசுகையில் குடுமிகளில் முனகிச்சுழலும் கதவுகளுடன் அவை அகன்று வாய்திறந்து கிடந்தன. அவருடைய புரவியின் குளம்படியோசை அவற்றின் அறைகளுக்குள் இருந்து எதிரொலித்தது.

எதிரில் ஒரு கிழவி கூன்விழுந்து மடிந்த முதுகுடன் கைகளையும் கால்களைப் போலவே வீசியபடி பசுபோல நடந்து வந்தாள். புரவியைக் கண்டதும் கண்களைச் சுருக்கியபடி நின்று நோக்கினாள். இரு விழிகளும் இரு வெண்புள்ளிகள்போலத் தெரிந்தன. வாய் சுருங்கி குவிந்திருந்தது. அவருடைய புரவி அருகணைந்ததும் இயல்பாக கைநீட்டி இரந்தாள். அவர் கடிவாளத்தை இழுத்து புரவியை நிறுத்தினார். சூதர்குடியினர் இரந்ததை அவர் கண்டதே இல்லை. சிலகணங்களுக்குப் பின்

அவர் ஒரு வெள்ளிநாணயத்தை எடுத்து அவளை நோக்கி நீட்டினார். அவள் விசையுடன் அருகே வந்து அதை வாங்கி அப்படியே வாய்க்குள் போட்டுக்கொண்டாள்.

அவர் திடுக்கிட்டு நெஞ்சதிர்ந்தார். என்ன செய்கிறாள்? அவள் அந்த நாணயத்தை குதப்பிக்கொண்டிருப்பதை கண்டார். புரவியைத் தட்டி முன்செலுத்தியபோது அவர் வியர்த்திருந்தார். என்ன நிகழ்ந்தது? கரை உடைந்து நீர்வெளியேறுவதுபோல இந்நகரிலிருந்து அனைத்தும் வெளியேறிவிட்டிருக்கின்றன. மானுடர், செல்வம், மொழி, ஓசைகள். போர்கள் என்றுமென நிகழ்பவை. அவை ஆண்டுதோறும் காட்டிலெழும் எரிபோல. அழிவது மேலும் எழுவதற்காக. பழையன கழிந்து புதியன எழுவதற்காக. இது ஊழித்தீ. எஞ்சியது என்ன? எஞ்சுவதிலிருந்து எழுவது எது?

அவர் மீண்டும் கரிய சுவரை சென்றடைந்துவிட்டிருந்தார். அது நேர்முன்னால் பெருகிச்சூழ்ந்து நின்றிருந்தது. அதன் விரிசல்கள், பொருக்குகள், கருகிய பாறைப்பாசிப் பரவல்கள். உள்ளத்தில் ஒரு சொல்லும் எஞ்சாமல் அவர் அதை நோக்கிக்கொண்டு நின்றிருந்தார்.

நீர்ச்சுடர் - 8

பகுதி இரண்டு : குருதிமணிகள் – 2

புரவி அருகணையும் ஒலி கேட்டு கனகர் திரும்பி நோக்கினார். புரவிமேல் அமர்ந்திருந்த இளம்வீரனை அவரால் அடையாளம் காணமுடியவில்லை. புரவி புண்பட்டு ஒரு கால்

உடைந்திருந்தது. ஆனால் சற்றே தேறி அந்தக் காலை சாய்வாக எடுத்துவைத்து நடந்து வந்தது. அதன்மேல் அமர்ந்திருந்தவன் உடலிலும் அந்தக் கோணல் தெரிந்தது. அருகணையும்தோறும் அவன் மிகவும் இளையோனாகத் தோன்றினான். புரவி நின்று அவன் கால்சுழற்றி இறங்கி அவரை அணுகியபோது அவன் பெண் என அவர் உணர்ந்தார். ஏற்கெனவே எங்கோ கண்டிருந்த முகம். அவர் உள்ளம் வழக்கம்போல் எங்கே என துழாவித் தவிக்கவில்லை. வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தார்.

அவள் அணுகி தலைவணங்கி "வணங்குகிறேன் உத்தமரே, தங்களை நான் இங்கு எதிர்பார்க்கவில்லை. என் உதவி தேவையாகுமா?" என்றாள். "நீ யார்?" என்று கனகர் கேட்டார். "என் பெயர் சம்வகை... கோட்டைக்காவலர்தலைவி" என்றாள். "ஆம், நாம் பார்த்திருக்கிறோம்..." என்ற கனகர் "நான் இங்கே ஒருவரைத் தேடி வந்தேன். ஒற்றர்களை அனுப்பி அவரை கொண்டுவரச் சொல்லியிருக்கலாம். ஆனால் எனக்கே கிளம்பவேண்டும் எனத் தோன்றியது. அரண்மனையில் அமர்ந்து அமர்ந்து உடலும் உள்ளமும் சலித்துவிட்டன... நான் புரவியேறியும் நெடுநாட்களாகின்றன. அது பிழை என உணர்கிறேன். என்னால் இங்கே வழி கண்டடைய முடியவில்லை" என்றார்.

"நான் தங்களை விழையுமிடத்திற்கு கொண்டுசெல்கிறேன், உத்தமரே" என்றாள் சம்வகை. "நீ இங்கே இருக்கும் சூதர்களை அறிவாயா?" என்று அவர் கேட்டார். "போருக்குமுன் நான் நகரில் உலவியது மிகக் குறைவு. என் தந்தையுடன் யானைக்கொட்டிலுக்குச் சென்றுள்ளேன். அங்காடிகளுக்கும் விழவுகளுக்கும் சென்றுள்ளேன். நகரை முழுக்க

பார்த்ததில்லை. நகர்குறித்த உளப்படிவமும் என்னிடமில்லை. ஆனால் இந்தச் சில நாட்களில் இந்நகரை இரவும்பகலும் சுற்றிவருகிறேன். நானறியாத இடங்கள் இங்கே அரிதென்றே எண்ணுகிறேன்" என்றாள். கனகர் "நான் பார்க்கவிழைபவர் ஒரு நிமித்திகர், சூதர். அவர் பெயர் தீர்க்கசியாமர்" என்றார். "விழியிலாதவரா?" என்றாள் சம்வகை.

"ஆம்" என்று வியப்புடன் கனகர் சொன்னார். "அவரை நான் அறிவேன். இங்கே ஹிரண்யாக்ஷரின் ஆலயத்தின் முகப்புத்திண்ணையில் குடியிருக்கிறார்..." என்று சம்வகை சொன்னாள். "முன்பு இங்கே தீர்க்கசியாமர் என்னும் சூதர் வாழ்ந்திருக்கிறார். அவருக்காக எழுப்பப்பட்ட ஆலயம் அது. அது ஹிரண்யாக்ஷர் ஆலயம் என பின்னர் அழைக்கப்பட்டது. அங்குதான் சூதர்கள் தங்கள் மைந்தர்களை இசைப்பயிற்சி தொடங்கும்பொருட்டு கொண்டு வந்து அமர்த்தி முதற்கோல் கொடுக்கிறார்கள்." கனகர் "அங்கிருப்பவரை நீ எப்போது பார்த்தாய்?" என்றார். "இன்று காலைகூட தொலைவிலிருந்து பார்த்தேன்... இசைச்சூதர்கள் அனைவருமே போர்க்களம் சென்றபின் அவ்வாலயம் ஒழிந்துகிடக்கிறது. விழியிழந்த சூதர் ஒருவர் மட்டுமே அங்கே தங்கியிருக்கிறார். விழியில்லாவிட்டாலும் அவர் கோயில்கொண்டிருக்கும் ஹிரண்யாக்ஷருக்குரிய எல்லா பூசனைகளையும் செய்கிறார். சூதர்குடிப் பெண்கள் அவருக்கு உணவும் பூசனைக்குரிய பொருட்களும் அளிக்கிறார்கள். அவர் பெயரும் தீர்க்கசியாமர்தான்" என்றாள்.

"அவரேதான்" என்று கனகர் சொன்னார். "அவரை அரண்மனைக்கு அழைத்துச்செல்லவேண்டும்... அவர் குறிநோக்கிச் சொல்ல சில சடங்குகளை இயற்றவேண்டும்...

அரசியின் ஆணை." சம்வகை "அவரிடம் நான் அழைத்துச் செல்கிறேன்" என்றாள். அவர்கள் புரவியில் ஏறிக்கொண்டனர். சீரான நடையில் சூதர்தெருக்களினூடாகச் சென்றனர். "இங்கே எல்லா குடிகளிலும் ஆண்களில்லாமலாகிவிட்டிருக்கின்றனர். போரில் மறவர்கள் மட்டுமே ஈடுபடுவார்கள் என்று எண்ணியிருந்தேன். ஆயரும் உழவரும்கூட போருக்குச் செல்வார்கள் என்று இப்போதுதான் காண்கிறேன்..." என்றாள் சம்வகை. "இது பெரும்போர்" என்று கனகர் சொன்னார். "ஆம், இறுதிப்படைக்கலம்கூட எடுக்கப்பட்டுவிட்டது" என்றாள் சம்வகை. அவள் ஏன் அப்படிச் சொன்னாள் என அவருக்குப் புரியவில்லை.

சம்வகை "இங்கே ஆயர்குடியிலும் உழவர்குடியிலும் பட்டினி இல்லை. அவர்களால் உணவை சேர்த்துவைக்கவும் எஞ்சியவற்றால் வாழவும் முடிகிறது. வணிகர்களுக்கு கரந்துவைக்கும் கலை கைவந்தது. உணவில்லாமல் அழிபவர்கள் சூதர்கள். அவர்கள் ஒருநாளுக்கு அப்பால் எதிர்காலம் இல்லை என்னும் எண்ணத்தில் வாழ்ந்தவர்கள்போல் தோன்றுகிறார்கள்" என்றாள். "சூழ்ந்திருக்கும் காடுதான் இன்னமும் உணவை அளிக்கிறது... ஆனால் அதுவும் சின்னாட்களில் ஒழிந்துவிடக்கூடும். அஸ்தினபுரி பாரதவர்ஷத்திலேயே செழிப்பான பெருநகர். ஒரு மாதத்திற்குள் இங்ஙனம் முற்றொழியும் என்பது எண்ணவும் விந்தையே." அவள் தன்னை அமைச்சராக நடத்தாமல் இயல்பான தோழமையுடன் பேசுவது குறித்து கனகர் முதலில் வியப்பும் பின்னர் எரிச்சலும் அடைந்தார். ஆகவே அவர் ஒன்றும் சொல்லவில்லை.

“தாங்கள் என்ன எண்ணுகிறீர்கள், அமைச்சரே? அரண்மனையிலிருந்து நீங்கள் வேறுவகையில் நோக்கக்கூடும்” என்றாள் சம்வகை. அவர் ஒன்றும் சொல்லவில்லை. அவருடைய சொல்லின்மையில் தெரிந்த மறுப்பை புரிந்துகொள்ள அவளால் இயலவில்லை. “எனக்குத் தோன்றுகிறது அஸ்தினபுரியைப்பற்றிய புகழ்மொழிகள்தான் அரசர்களுக்கும் அமைச்சர்களுக்கும் அறிவை மறைப்பவையாக ஆகிவிட்டன என்று. முடிவில்லாது செல்வம் ஊறும் சுனை என இந்நகரை சூதர்கள் பாடிக்கொண்டிருப்பதை இளமை முதல் நான் கண்டிருக்கிறேன். நானும் அவ்வாறே நம்பினேன். அது சூதர்களின் கற்பனை. அவர்கள் அவ்வாறு நம்ப விழைந்தனர். அந்நம்பிக்கையால்தான் அவர்கள் இங்கே வந்துகொண்டிருந்தனர். அந்நம்பிக்கையை அரசர்களிடம் நிலைநாட்டியமையால்தான் அவர்கள் பொன் பெற்றனர். மேலும் பொன் பெற சூதர்களை ஆற்றுப்படுத்தினர்.”

“ஆம்” என்று அறியாமல் கனகர் சொன்னார். “இந்த நகரம் வரும்செல்வத்தில் பெரும்பகுதியை கொடையென்று அள்ளிக்கொடுத்துக் கொண்டிருந்தது. உண்மையில் வருஞ்செல்வத்தை கணக்கிடுவதைப்போல் பிழை என ஏதுமில்லை. செல்வம் வருவது நிகுதிகளிலிருந்து. சுங்கநிகுதி முதன்மையாக. பிற நிகுதிகள் எழுபத்திரண்டு உள்ளன. ஆனால் அந்நிகுதியை அளிக்கும் நிலத்தைப் பேணுவதென்பது பெருஞ்செலவுகொண்டது. அந்நிகுதியை சேர்த்து தொகுத்து கருவூலம்வரை கொண்டுவருவதென்பது அதனினும் செலவேறியது. வேலிகட்டவும் அறுவடைசெய்யவும் விளைச்சலின் பெரும்பகுதியைச் செலவிடும் வேளாண்மை போன்றது அரசாள்கை.”

அவருக்கே அவருடைய அப்பேச்சு விந்தையாக இருந்தது. ஆனால் பேசத்தொடங்கியதுமே அவர் இயல்படைந்தார். இதுவரை தன்னுள் அனைத்துச் சொற்களும் அலையடித்தமை இதனால்தான். நாவால் தொடர்ச்சியாகப் பேசி நெடுநாட்களாகின்றன. ஆனால் ஏன் இந்த அறியாப் பெண்ணிடம் பேசவேண்டும்? அறியாப் பெண்ணிடமே பேசமுடியும். அறிந்த எவரிடமும் இப்படி சொல்பெருக்க இயலாது. "காவல்பணிக்கு பெரிய படை தேவைப்படுகிறது. அவர்களின் எண்ணிக்கை பெருகுந்தோறும் ஒரு விந்தை நிகழ்கிறது... கீழ்நிலைப் படைவீரர்களின் எண்ணிக்கை கூடும்போது அவர்களை ஆட்சிசெய்ய தகுதிவாய்ந்த தலைவர்கள் தேவைப்படுகிறார்கள். அவர்களுக்கு பலமடங்கு ஊதியம் அளிக்கப்படவேண்டும். கீழ்நிலைப் படைகளுக்கான செலவு மிகுந்தோறும் மேல்நிலைப் படைகளுக்கான செலவு மேலும் ஒருமடங்கு பெருகும்."

"இன்னுமொரு விந்தை உள்ளது, இவற்றை நான் ஒரு சிறு நூலாகவே எழுதிவிடலாமென எண்ணுகிறேன்" என்று கனகர் சொன்னார். "நிலம் பெருகும்போது படைவீரர்களின் எண்ணிக்கை பெருகுகிறது. அவர்களின் எண்ணிக்கை மேலும் செலவை கோருகிறது. நிலம் நிலையான அளவில் இருக்கும். அதிலிருந்து வருவாயும் வளர்வதில்லை. ஆனால் படை வளர்ந்தபடியேதான் இருக்கும். ஆகவே நிலத்தை பெருக்கியாகவேண்டும். அதற்கு படையெடுப்புகள் தேவையாகின்றன. படையெடுப்புக்கு செலவு மிகுதி. அதற்காக மேலும் நிலம் தேவைப்படுகிறது. நாம் படையெடுக்கக்கூடும் என்றாலே அண்டைநகர்கள் அஞ்சுகின்றன. ஆகவே அவர்கள் படைகளை பெருக்குகிறார்கள். அவர்கள் நம்மீது படையெடுக்கக்கூடும் என்னும் அச்சத்தால் நாம் மேலும்

படைபெருக்குகிறோம். அப்படைக்குரிய செலவுக்காக நிலம் நிலம் என வெறிகொள்கிறோம். அதாவது எந்த அரசும் ஒன்று இரண்டு என பெருகமுடியாது. ஒன்று பத்து நூறு ஆயிரம் என்றே பெருகமுடியும்...”

“ஆகவே பெருகும் நகரம் மிக விரைவிலேயே அதன் அறுதியெல்லையை சென்றடையும். மகதமும் வங்கமும் அவ்வண்ணம் நம் கண்முன் அழிந்தன. முன்பு அழிந்த பலநகரங்களின் கதைகளை நாம் அறிவோம். அஸ்தினபுரி இவ்வண்ணம் இதுவரை நீடித்தது இதன் அரசர்களின் போர்வல்லமையால்தான். பிரதீபரின் காலம்வரை அத்தனை அரசர்களும் வெல்லற்கரிய போர்வீரர்களாகவே திகழ்ந்தனர். நாம் ஆண்டுக்கு இரண்டு அயல்படையெடுப்புகளை செய்தோம். தொலைநாடுகளை கொள்ளையிட்டு பெரும்செல்வத்துடன் திரும்பினோம். அதைக்கொண்டு இந்நகரை பேணினோம். பீஷ்மரும் படைகொண்டு சென்று வென்று பொருள் கொண்டுவந்திருக்கிறார். பாண்டவர்கள் சௌவீரர்களை வென்று பொருள் கொண்டுவந்தனர். அங்கர் படைத்தலைமை ஏற்றபின் நாம் பதினெட்டு போர்களில் வென்று திறைச்செல்வம் கொண்டுவந்தோம்.”

அவள் அவ்வாறு அவர் பேசுவதை எதிர்பார்த்திருக்கவில்லை. அவள் முகம் விரிந்து விழிகள் நிலைத்தன. கரிய பெரிய உதடுகள் விரிந்து பற்களின் கீழ்நுனிகள் தெரிய அவரை நோக்கிக்கொண்டு வந்தாள். “ஆனால் இப்போர்களுக்கெல்லாம் எல்லை உள்ளது. காட்டில் புலி மான்களை வேட்டையாடி உண்ணும். மான்கள் புல் உண்ணும். புல் வறண்டால் புலிக்கு உணவின்றி ஆகும். நாம் வென்ற அரசர்கள் அனைவரும் சிற்றரசர்களை வென்று திறைகொண்டவர்கள். சிற்றரசர்கள்

காடுகளில் வாழும் நிஷாதர்களையும் கிராதர்களையும் வென்று திறைகொண்டவர்கள். இந்நகரம் இங்கே இவ்வண்ணம் செழித்திருக்க காடுகளிலும் தொலைநிலங்களிலும் நூறுமடங்கு ஆயிரம்மடங்கு நிஷாதரும் கிராதரும் அசுரரும் அரக்கரும் சிறுவாழ்க்கை வாழ்ந்தாகவேண்டும்" என்றார் கனகர்.

"ஆனால் இன்று நிலை மாறிவிட்டிருக்கிறது. கிராதர்களும் நிஷாதர்களும் அரசர்களாகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நாடுகள் வெல்லற்கரியவையாக மாறிவிட்டன. அசுரர்களும் அரக்கர்களும்கூட ஆற்றல் பெற்று எழுந்துவிட்டனர். ஆகவே வேறுவழியே இல்லை, வென்றுவாழும் அரசர்கள் சுருங்கியாகவேண்டும்... அதை தவிர்ப்பதற்கான அறுதிப்போர் இப்போது நிகழ்ந்தது. அதில் நாம் தோற்றுவிட்டோம். அவர்களே வென்றிருக்கிறார்கள். இனி அவர்களின் காலம் எழவிருக்கிறது. அவர்களிலிருந்து பேரரசுகள்கூட எழலாம்... ஷத்ரியர்நாடுகள் தேய்ந்து மறைந்தாகவேண்டும்... அஸ்தினபுரியும்கூட அதை நோக்கியே சென்றுகொண்டிருக்கிறது" என்றார் கனகர். "காட்டில் புல் வறளும்போது பெரும்புலிகள் தங்கள் குட்டிகளை கொன்றுவிடும் என்கிறார்கள். அதுதான் நிகழ்ந்ததோ என நான் அஞ்சுகிறேன். ஷத்ரிய குலமே ஒன்றையொன்று கொன்று அழிந்துவிட்டிருக்கிறது... பிறிதொரு யுகத்திற்காக பாரதவர்ஷம் ஒருங்கிக்கொண்டிருக்கிறது."

சம்வகையால் அவர் சொல்வதை முழுமையாக புரிந்துகொள்ள முடியவில்லை. ஆயினும் அவள் அகம் கொந்தளித்துக்கொண்டிருப்பதை முகம் காட்டியது. அவளால் புரவியில் அமர்ந்திருக்கவே இயலவில்லை. "நீ சொல்வது உண்மை. புகழ்மொழிகளால் அரசரின் விழிகள்

மறைந்துவிட்டிருந்தன. இந்நகரம் தன் இயல்பை மீறி பெரிதாகிவிட்டிருக்கிறது. இதன் கருவூலம் இதன் நிலத்தை ஆள்வதற்கு போதுமானது அல்ல. ஆனால் அஸ்தினபுரியின் அரசர்கள் கணக்கு பார்ப்பதில்லை. கணக்கிடுவதே இழிவென எண்ணுகிறார்கள். அரசரோ அவர் என்றுமென இங்கே அமைந்திருப்பவர் என எண்ணினார். ஆகவே செல்வத்தை மேலும் மக்களுக்காக அள்ளிச் செலவழித்தார். பாதைகளை அமைத்தார். நீர்நிலைகளை சமைத்தார். நகர்களுக்கு கோட்டைகளை கட்டினார். கழனி பெருக்கினார். கல்விச்சாலைகளை அமைத்தார். கருவூலம் ஒழிந்திருக்கையில் எழுந்தது இப்பெரும்போர். இத்தகைய போருக்குத் தேவையான செல்வம் நம்மிடம் இருக்கவில்லை."

"ஆனால் போர் அறிவிக்கப்பட்டுவிட்டது. ஆகவே வேறுவழியில்லை. கொலைக்களத்திற்குக் கொண்டுசெல்லப்படும் பசுவை ஒட்டக்கறப்பதுபோல அஸ்தினபுரியை நிகுதியிட்டு பிழிந்தெடுத்தோம். எத்தனை பொருள்கொண்டுவந்தாலும் போதவில்லை. பாரதவர்ஷத்தின் படைத்தலைமை என்றால் அது செல்வத்தால்தான் இயல்வது. அடியிலாப் பிலத்தில் அஸ்தினபுரியின் செல்வத்தை கொட்டிக்கொண்டே இருந்தோம்" என்றார் கனகர். "உண்மையில் வரி கொள்வது என்பது கொள்ளையேதான். நூறு பொன்னுக்கு ஐந்து பொன் என்ற மேனிக்குத்தான் அறுவடை களம்வந்துசேரும். ஒன்றும் செய்ய முடியாது. நிகழ்ந்ததை அரசர்வரை கொண்டுசெல்லாமலிருக்க முடிந்தது நன்று. போர் முடிவெடுத்தபின் குடியவையைக் கூட்டுவதை தவிர்த்தோம். பேரமைச்சர் விதுரர் இருந்திருந்தால் அவையிலேயே இவை பேசப்பட்டிருக்கும். அவர் இல்லாமலிருந்தது அனைத்து வகையிலும் நலம் பயந்தது."

அதையெல்லாம் அவர் வேறுஎவரிடமோ சொல்லிக்கொண்டிருந்தார் என உணர்ந்தார். சம்வகை "இனி என்ன நிகழும், அமைச்சரே? ஒழிந்த ஓடெனத் திகழும் அஸ்தினபுரியை வென்றிருக்கிறார்கள் பாண்டவர்கள்" என்றாள். அப்போதுதான் அவளை அவர் ஏறிட்டு நோக்கினார். அவளிடம் பேசிக்கொண்டிருப்பதை அப்போதுதான் உணர்ந்தவராக திகைத்தார். "அவர்கள் இந்நகரை எப்படி மீட்டெடுக்கப்போகிறார்கள்?" என்று அவள் கேட்டாள். அவ்வினாவே அவள் அனைத்தையும் நுணுக்கமாக சொல்தொடர்வதை காட்டியது. ஆகவே அவரால் மேலும் பேசாமலிருக்க இயலவில்லை. "ஆம், மெய்தான். அவர்களிடம் சென்றுசேரும் நகரம் ஒழிந்த கலம்தான்" என்றார். "அதை அவர்கள் நிறைப்பதற்கு இரண்டு வழிகளே உள்ளன" என்றார் கனகர்.

"தொலைநிலங்களில் சிற்றரசுகளாகத் திரண்டிருக்கும் கிராதரையும் நிஷாதரையும் வெல்வது. அவர்களைப் பிழிந்து திறைகொள்வது. அதைச் செய்ய அவர்களால் இயலாது. ஏனென்றால் அவர்களைத் துணைகொண்டே வென்றிருக்கிறார்கள். எனில் எஞ்சியிருப்பது அவர்களிடம் திறைகொள்ளும் பிற ஷத்ரியர்களை வென்றழிப்பது. திறைகொள்ள பாரதவர்ஷத்தில் பிற நாடு இல்லாமலாக்குவது. எனில் அஸ்தினபுரி மேலும் சிலகாலம் முடிபெருகி நீடிக்கும். ஆனால் இருந்த பெருமையை இனி ஒருபோதும் அது சென்றடையாது. பாண்டவர் நால்வரும் திசைவெற்றிகொண்டு திறைசுமந்து வந்தார்களென்றால் ஒரு தலைமுறைக்காலம் அது செல்வம்கொண்டு பொலியும்... ஆனால் அது நீடிக்காது."

“ஷத்ரியர்களால் வென்று திறைகொள்ளப்படாத நிஷாதரும் கிராதரும் பிறரும் வளர்ந்து ஆற்றல்பெறுவார்கள். அவர்களிடம் திறைகொள்ளும் ஆற்றலும் அஸ்தினபுரிக்கு இருக்காது. அவர்களிடமிருந்து பேரரசுகள் தோன்றலாம். அப்போது அஸ்தினபுரி வெறும் சொல் என மாறி பாரதவர்ஷத்தின் நினைவில் மறையலாம். காவியங்களில் மட்டும் எஞ்சலாம்... இதை இப்போது சொல்லமுடியாது. எனில் நாம் இவ்வண்ணம் கணிக்கமுடியும்...” என்று கனகர் சொன்னார். சம்வகை அவரை நோக்காமல் தலையைத் தாழ்த்தி எண்ணங்களில் மூழ்கியபடி வந்தாள். எளிய சூதர்குலத்துப் பெண். ஆனால் சூதர்களில் இந்த ஆற்றல் நிகழ்வதில்லை. இவள் பிற குடியின் கலப்புள்ளவள். ஆயினும் அரசியலை இவள் எவ்வண்ணம் புரிந்துகொள்ள முடியும்?

அவர் அவளையே நோக்கிக்கொண்டு சென்றார். தான் சொன்னதையெல்லாம் அவள் எவ்வண்ணம் புரிந்துகொள்கிறாள் என்னும் வியப்பு அவருக்கு ஏற்பட்டது. வேறு ஏதோ ஒருவகையில், அவரால் எண்ணமுடியாதபடி, அவள் அவற்றை விளக்கிக்கொண்டிருக்கிறாள். ஒருவேளை எளிய குழந்தைக்கதையாக. அதற்கே வாய்ப்பு மிகுதி. அவள் சிறுமியென்றே தோன்றினாள். அஸ்தினபுரி போருக்குச் சென்று ஆண்களை இழந்திராவிட்டால் அவளால் இப்படி புரவியில் ஊர்ந்திருக்கமுடியாது. சாலையில் இவ்வண்ணம் சென்றிருக்கவும் முடியாது. அவள் புரவியின் கடிவாளத்தை இழுத்து நிறுத்தி திரும்பி “எனில் துவாரகை என்ன ஆகும்?” என்றாள். “ஏன்?” என்று அவர் கேட்டார். “துவாரகையால் தொலைநிலங்களை வென்று கொள்ளைச்செல்வம் அடைய முடியாது. அவர்களிடம் திசைவெல்லும் ஆற்றலும் இல்லை” என்று அவள் சொன்னாள்.

“அவர்களிடம் வணிகம் உள்ளது. கடல்வணிகத்தால் ஈட்டியதே அவர்களின் செல்வம்.” கனகர் மெல்லிய எரிச்சலுடன் அதை சொன்னார். அவள் அவர் சொன்னவற்றை புரிந்துகொண்டிருந்ததே அவரை சீற்றம் கொள்ளச்செய்தது. அது அவரை சிறுமைப்படுத்துவதுபோலத் தோன்றியது. அவளிடம் எது தன்னை பேசவைத்தது? பேசவேண்டியிருந்த உளத்தனிமை மட்டும் அல்ல. அவளிடம் அவரைப் பேசவைக்கும் எதுவோ இருந்தது. அவள் “கடல்வணிகம் நெடுநாள் நீடிக்காது. புதிய அரசுகள் வீறுடன் எழுந்துவரும். கடலோரம் அமைந்த அரசுகளும் இனி திறைச்செல்வம் திரளாதென உணர்ந்து கடல்வணிகத்தில் கருத்தூன்றலாம். துவாரகையில் இளைய யாதவரின் மைந்தர் திறனற்றவர்கள் என்கிறார்கள். அதைவிட அவர்களிடம் ஒற்றுமையும் இல்லை. அங்கே அவர்களுக்குள் ஒரு போர் நிகழ்ந்தால், அயல்வணிகர் ஒருமுறை தாக்கப்பட்டால், அனைவரும் துவாரகையை கைவிடுவார்கள்” என்றாள்.

கனகர் “அதனாலென்ன ஆகும்?” என்றார். “இல்லை” என அவள் தயங்கினாள். “சொல்” என்றார் கனகர். “துவாரகை அழியும் என்று சொல்லப்படுகிறது” என்றாள். “எவர் சொன்னது?” என்றார் கனகர். “நாம் காணப்போகும் தீர்க்கசியாமர் அதைச் சொன்னதாக சொல்லப்படுகிறது... நான் அவரைப் பார்க்கச்சென்றபோது அவ்வாறு கேள்விப்பட்டேன்.” கனகர் “வெறும்கதை... யாதவர்கள் வந்து அவரிடம் குறிகேட்டனரா என்ன?” என்றார். “இல்லை...” என அவள் மேலும் தயங்கி “அமைச்சரே, இன்று அஸ்தினபுரியின் பெண்டிரால் மிகமிக வெறுக்கப்படுபவர் இளைய யாதவரே என அறிந்திருப்பீர்கள்” என்றார். அதை ஒற்றர்வழி பலமுறை கேட்டிருந்தபோதிலும்

கனகர் திகைப்படைந்தார். அது ஒரு பெண்ணின் குரல்வழியாக வந்ததனால்தான் எனத் தெரிந்தது.

“இங்கே ஒவ்வொரு இடத்திலும் அன்னையரும் கன்னியரும் அவரை வசைபாடுகிறார்கள். உளமுடைந்து தீச்சொல்லிடுகிறார்கள். இங்கு பல இல்லங்களில் அவருடைய நினைவாக நீலச் சோழிக்கற்களை வைத்து வழிபடும் வழக்கம் இருந்தது என அறிந்திருப்பீர்கள். அவற்றைத் தூக்கி வந்து வெளியே வீசினார்கள். தெருவெங்கும் அவை இறைந்துகிடந்தன. நான் உணவுதிரட்ட காட்டுக்குச் சென்றபோது ஒரு மைந்தன் உதிர்ந்துகிடந்த மயில்பீலி ஒன்றை கையில் எடுத்துக்கொண்டு ஓடிவந்து அன்னையிடம் காட்டினான். அன்னை சீறி அதைப் பிடுங்கி அப்பால் வீசி மைந்தனை அறைந்தாள். அந்த இழிபொருளை இனி கையாலும் தொடுவாயா என கூச்சலிட்டாள். அமைச்சரே, இங்கே அன்னையர் மயில்களைக் கண்டாலே கற்களால் அறைந்து துரத்துகிறார்கள். அவை இங்குள்ளோரால் தெய்வமெனவே வழிபடப்பட்டவை. இன்று அஞ்சி காட்டுக்குள் சென்று மறைந்துவிட்டன.”

“ஆம்” என்றார் கனகர். “மூதன்னை ஒருத்தி தன் குடியின் பதினேழு மைந்தரை போரில் இழந்தாள். அவளுடைய குடியில் எஞ்சிய ஒற்றைக்கருவும் குருதியெனக் கரைந்தது. அவள் சீறியபடி தன் காலடி மண்ணை இடக்கையில் எடுத்தபடி ஓடி ஹிரண்யாக்ஷரின் ஆலயமுகப்புக்கு வந்தாள். அங்கிருந்த அஜபாகரின் சிற்றாலயத்திற்கு முன்னால் நின்று இளைய யாதவரின் குடி முற்றழியும்படி தீச்சொல்லிடுவதற்கு கையை தூக்கியபோது அப்பாலிருந்த தீர்க்கசியாமர் கூவி அதை தடுத்தார். அந்த மூதன்னையுடன் இணைந்து நூறு

மூதன்னையர் அதேபோல காலடி மண்ணை இடக்கையில் எடுத்தபடி வந்தனர். அனைவரும் திகைத்து நிற்க தீர்க்கசியாமர் உங்கள் சொல் அவரை அழிக்கும், அன்னையரே. ஆனால் தீச்சொற்கள் இடும் உரிமை தெய்வங்களுக்கே உரியது. மானுடர் தீச்சொல்லிட்டால் அவர்கள் அதை தங்களை நோக்கியும் ஏவிக்கொள்கிறார்கள் என்று அறிக என்றார். அனைவரும் தயங்கி கைதாழ்த்தினர். தெய்வங்களின் நெறியே அவருக்கு அழிவை அளிக்கும். அவர் குடி எச்சமில்லாமல் முற்றழிவதை அவர் காண்பார். அவர் நகரில் ஒரு கல்லேனும் எஞ்சாது என்று அறிக என்றார். அன்னையர் திகைத்து பின்னர் ஓலமிட்டனர்."

"மானுடராயினும் தெய்வமாயினும் இங்கே மண்மீதிலங்குகையில் மண்ணுக்குரிய நெறிகளாலேயே ஆளப்படுவார்கள் என்று தீர்க்கசியாமர் கூறியதாகச் சொல்வார்கள்" என்று அவள் சொன்னாள். "அச்செய்தியைக் கேட்டபின் அன்னையர் சோர்ந்து அழுதபடி ஆங்காங்கே அமர்ந்துவிட்டார்களாம். அவர்களால் மீண்டும் தங்கள் இல்லம்வரை நடப்பதுகூட இயலவில்லை என்றார்கள்." கனகர் நீள்மூச்செறிந்தபடி புரவியில் அமர்ந்திருந்தார். "அது மெய்யென்றாகவேண்டும் என்றே நான் எண்ணுகிறேன்" என்று சம்வகை சொன்னாள். "அவருடைய புகழ் கேட்டே நான் வளர்ந்தேன். தெய்வமென்றே என்னுள் அவர் திகழ்கிறார். ஆனால் இப்பேரழிவுக்குப் பின் அவர் அதன் விளைவை அடையவில்லை என்றால் இப்புவியின் நெறிகளில் பிழை நிகழ்கிறது. அவர் பிறருடைய அழிவை நிகழ்த்தியவர். தனக்கும் அதையே நிகழ்த்திய பின் அவர் விண்மீண்டாலொழிய இது முழுமையடைவதில்லை."

கனகர் ஒன்றும் சொல்லவில்லை. அவளும் சொல்லடங்கி புரவியிலேயே அமர்ந்திருந்தாள். அவர்கள் ஹிரண்யாக்ஷரின் ஆலயத்தை அடைந்தார்கள். இசைச்சூதர்களின் நான்கு தெருக்கள் முட்டிக்கொள்ளும் முனையில் அமைந்த ஹிரண்யாக்ஷரின் ஆலயத்தருகே புழுதி மண்டிக்கிடந்தது. கனகர் புரவியை கடிவாளத்தை சற்றே இழுத்து நிறுத்தினார். அங்கே சூதர்குலச் சிறுவர்களுக்கு யாழ் தொட்டளிக்கும் சடங்கு நிகழும் மேடையில் ஒரு அங்காடி நாய் படுத்திருந்தது. ஆலயம் திறந்திருந்தது. கருவறையில் பொன்னாலான விழிகளுடன் கையில் யாழுடன் ஹிரண்யாக்ஷர் அமர்ந்திருந்தார். அவருக்கு முன்னால் அரியும் மலரும் பொரியும் வெல்லமும் படைக்கப்படும் பெரிய பலிமேடையில் ஒற்றை எண்ணைவிளக்கு மட்டும் எரிய கைப்பிடி அன்னம் படைக்கப்பட்டிருந்தது.

ஆலயத்திற்கு வலப்பக்கமாக அஜபாகரின் சிறிய மண்சிலை இருந்தது. அதற்குச் சூட்டப்பட்ட மலர்மாலைகள் சருகுகளாகிவிட்டிருந்தன. அவர் விழிகளால் தீர்க்கசியாமரை தேடினார். சில கணங்களுக்குப் பின்னர்தான் உயிருள்ள விழிகளைத் தேடுகிறோம் என்று உணர்ந்தார். நோக்கை விலக்கி மீண்டும் நோக்கியபோது தூணில் ஒட்டியபடி கிழிபட்ட கட்டைவிரல்கள் கொண்ட கையால் மடியில் வைத்த பேரியாழை வருடியபடி அமர்ந்திருந்த தீர்க்கசியாமரை கண்டார். அவர் தலைமயிர் வளர்ந்து சுருள்கற்றைகளாக பின்னால் சரிந்திருந்தது. அவற்றில் சடைத்திரிகளும் இருந்தன. ஓரிரு நரைமயிர்கள் தெரிந்தன. அவருடைய தோள்கள் குறுகி முன்னால் வளைந்து மேலும் கூனல் விழுந்திருந்தது. மூக்கு முதுகழுகின் அலகுபோல கூர்ந்து வளைந்திருக்க உதடுகள் உள்ளடங்கியிருந்தன.

புரவிக்குளம்படிகளை அவர் முன்னரே கேட்டிருந்தார். அவர்கள் இறங்கியதும் திரும்பி அவர்களை தன் செவ்விழிக்கோளங்களால் நோக்கினார். கனகர் கடிவாளத்தை புரவியின்மேல் வீசிவிட்டு அவரை நோக்கி நடந்தார். தீர்க்கசியாமர் புன்னகை செய்து "வருக அரசி, அமைச்சருக்கும் நல்வரவு" என்றார்.

நீர்ச்சுடர் - 9

பகுதி இரண்டு : குருதிமணிகள் – 3

கனகர் தீர்க்கசியாமரை புரவியில் அமரச்செய்து சம்வகையின் புரவியில் தான் அமர்ந்து அரண்மனைக்கு அழைத்துச்சென்றார். சம்வகை உடன் நடந்து வந்தாள். தீர்க்கசியாமர் தன் மகரயாழை மடியில் அமைத்து அதன் தந்திகளின்மேல் வெறுமனே விரலை வைத்திருந்தார். விந்தையான ஒரு சிறு விலங்கு என அவருடைய விரல் தந்திகளின்மேல் அமைந்திருந்தது. அதன் கட்டைவிரலையும் சுட்டுவிரலையும் இணைக்கும் தசை கிழிக்கப்பட்டிருந்தமையால் விரல்கள் மிக விலகி மிக நீண்டு தெரிந்தன. அவர் தலையைச் சுழற்றி உதடுகளை கூப்பியபடி மகிழ்ச்சியுடன் நகைத்து "இந்த வழியே நான் வந்திருக்கிறேன். இது அரண்மனைக்குச் செல்லும் வழி" என்றார். தன்னை அறியாமல் கனகர் "எப்படி0 0தெரியும்? மணம், ஒலி அனைத்துமே மாறிவிட்டிருக்கிறதே?" என்றார். "நான் மணத்தாலும் ஒலியாலும் உணர்வதில்லை" என்றார்

தீர்க்கசியாமர். “பின்?” என்றார் கனகர். தீர்க்கசியாமர் ஒன்றும் சொல்லவில்லை.

அவர் எப்படி வழியறிகிறார் என்று கனகர் எண்ணிக்கொண்டிருந்தார். பறவைகள் திசையறிவதற்கு தலைக்குள் ஒரு நுண்விழியை கொண்டிருக்கின்றன. ஆகவேதான் வெட்டவெளியென விரிந்த வானில் வலசை செல்கின்றன. அவருடைய நெற்றிக்குப் பின்னாலும் அவ்வண்ணம் ஓர் அறிவிழி உள்ளதா? தீர்க்கசியாமர் “அரசியும் நம்முடன் வருகிறார்கள் அல்லவா?” என்றார். கனகர் “எவர்?” என்றார். “அரசி” என அவர் சம்வகையை சுட்டிக்காட்டினார். “அவள் அரசி அல்ல, என் ஏவல்பெண்டு” என்றார் கனகர். “ஆம், கூறினீர்கள்” என தலையைச் சுழற்றி தீர்க்கசியாமர் புன்னகைத்தார்.

முதலில் சம்வகையை அவர் அரசி என அழைத்ததும் கனகர் சினம்கொண்டார். இந்தச் சூதன் தன்னை அரசியர் சந்திக்கவருவதாக பகற்கனவு கண்டு அமர்ந்திருக்கிறான் போலும் என எண்ணிக்கொண்டார். “இவள் அரசியல்ல, என் காவல்பெண்டு சம்வகை” என்றார். சம்வகை குழப்பத்துடன் அகலே நின்றுவிட்டாள். “நன்று... நீங்கள் யார்?” என்று தீர்க்கசியாமர் கேட்டார். “நான் அஸ்தினபுரியின் தலைமை அமைச்சன் கனகன். நீங்கள் என்னை பார்த்திருக்கிறீர்கள்.” தீர்க்கசியாமர் அதை செவிகொள்ளாமல் “நாம் அரண்மனைக்குச் செல்கிறோமா?” என்றார். “எங்கே அரசி? அவர் நடந்தா வருகிறார்?” என தலை திருப்பினார்.

“ஆம், நாம் புரவியிலேயே செல்வோம். என் ஏவல்பெண் சம்வகை உடன் வந்திருக்கிறாள். அவள் காவலுக்கு வருவாள்... புரவியில் ஏறுவீர்கள் அல்லவா?” தீர்க்கசியாமர் “ஆம், நான்

புரவி ஊர்ந்தது உண்டு... ஆனால் அத்திரி என்றால் மேலும் நன்று" என்றார். கனகர் சம்வகையிடம் சினத்துடன் "புரவியில் அவரை ஏற்றி அமரச்செய்" என்றார். தீர்க்கசியாமர் "நாம் அரண்மனைக்கு எதன்பொருட்டு செல்கிறோம்?" என்றார். "அரசியே உசாவுவார்கள்..." என்றார் கனகர். தீர்க்கசியாமர் "அரண்மனைகளுக்குள் நறுமணங்கள் நிறைந்திருக்கும். யாழின் இசை ஒலிக்கும். நான் அறிவேன்" என்றார். பின்னர் மீண்டும் வெண்பற்களைக் காட்டி நகைத்து "அரசி ஏன் ஒன்றும் பேசாமல் உடன்வருகிறார்?" என்றார்.

இந்த விழியிலாதோன் உண்மையில் உலகறியாதவனாக இருக்கலாம் என எண்ணிக்கொண்டார். அவன் கூறும் தொடர்பற்ற சொற்களுக்கு கேட்பவர்கள் விழைந்த பொருளை அளிக்கிறார்கள் போலும். அவ்வப்போது குறிசொல்பவர்கள், வரும்பொருளுரைப்பவர்கள் என சிலர் அஸ்தினபுரியில் அவ்வாறு கிளம்புவதுண்டு. பானுமதி உடனே அசலையுடன் அவர்களை பார்க்கச் செல்வாள். அவருக்கு அதில் நம்பிக்கையே வந்ததில்லை. பெரும்பாலும் அவை பிழையாகவே இருக்கும். ஓரிரு ஆண்டுகளிலேயே அவர்கள் பொய்யர்களாக தெளிவார்கள். ஆனால் பானுமதிக்கோ அசலைக்கோ அது பொருட்டாகத் தெரிவதில்லை. அவர்கள் இன்னொருவரை நாடிச் சென்றுவிட்டிருப்பார்கள்.

அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் வளரும் பதற்றம் ஒன்றிருந்தது போலும். பல கவலைகள் கொண்டவர்கள் மிகுதியாக நிமித்திகர்களை நாடுவதில்லை. மாறாத ஒற்றைக்கவலை கொண்டவர்கள் மீளமீள நிமித்திகர் சொல்லும் நம்பிக்கைச்சொற்களை நாடிக்கொண்டிருக்கிறார்கள். நிமித்திகர்களின் சொற்களில் வாழ்ந்துகொண்டிருந்தது

அஸ்தினபுரி. நிமித்திகர்கள் அஸ்தினபுரியைவிட சில அடி தொலைவு முன்னால் சென்று அங்கிருந்து அவர்களை அழைத்தனர். அவர்கள் எச்சரிக்கையுடன் எண்ணி காலடி வைத்து பின்தொடர்ந்தனர். அவர்களின் ஒவ்வொரு நிகழ்செயலும் நினைவுகளால் இறந்தகாலத்துடனும் அச்சங்களால் எதிர்காலத்துடனும் இணைந்திருந்தன.

தெருவில் செல்கையில் தீர்க்கசியாமர் "இனி போர் இல்லை" என்றார். "இனி நீணாள் போர்கள் இல்லை" என்று தலையசைத்துக்கொண்டே சொன்னார். "அது அனைவருக்கும் தெரிந்ததே" என்றார் கனகர். "இனி மகதமும் கூர்ஜரமும் இல்லை. எனில் எதிரியென ஏதுமில்லை" என்று மேலும் சொன்னார். "மகதம் என்றால்?" என்று தீர்க்கசியாமர் கேட்டார். கனகர் புன்னகைத்து "அது ஒரு நாடு" என்றார். "இரட்டையுடல்கொண்டவனின் குடி அழியாது. அது பெருகும்... கங்கைக்கரையில் ஆயிரம் கால்கள் கொண்ட துறைமுகம் அமையும். அவர்களின் கொடி பறக்கும். ஐநூறாண்டுகள் அவர்களின் முடி நிலைக்கும்" என்றார் தீர்க்கசியாமர். கனகர் சற்றே திகைத்தபின் "சூதரே, அக்கொடியின் அடையாளம் என்ன?" என்றார். "யானைக்கொடி..." என்றார் தீர்க்கசியாமர். "ஆனால் கீழே சக்கரம் ஒன்றுள்ளது."

கனகர் என்ன சொல்வதென்று அறியாமல் வெறுமனே நோக்கிக்கொண்டு சென்றார். சம்வகை "அவர் கூறுவதைப் பார்த்தால் வங்கம் பேராற்றல்கொண்டு எழும்" என்றாள். கனகர் கையை வீசி அப்பேச்சை தவிர்த்தார். சம்வகை அரசியல் பேசுவதை தன் அகம் ஏன் வெறுக்கிறது என எண்ணிக்கொண்டார். எந்த உளநிலையில் இந்த சூதர்குலத்துப் பெண்ணிடம் நான் அமைச்சுத்தொழில் குறித்து

பேசத்தொடங்கினேன்? ஏதோ அறியா விசை அதை பேசச் செய்ததா என்ன? தீர்க்கசியாமர் "கட்டடங்கள் அனைத்திலிருந்தும் சீழ்மணம் எழுகிறது... புதுச் சீழின் மணம்" என்றார். கனகர் பற்களை கடித்துக்கொண்டார். "வானில் முகில்கள் நிறைந்துள்ளன" என்றார் தீர்க்கசியாமர். "முகில்களைக் கீறியபடி பறவைகள் செல்கின்றன." கனகர் எரிச்சலுடன் உரக்க "நீங்கள் எதை பார்த்தீர்கள்?" என்றார். "நான் பார்ப்பதில்லை" என்று தீர்க்கசியாமர் சொன்னார். "அவை பாடல்போல என்னுள் எழுகின்றன."

அரண்மனை முற்றத்தை அடைந்ததும் தீர்க்கசியாமர் உரக்க "அரண்மனை முற்றம்!" என்றார். மூக்கைச் சுளித்து "குருதிமணம்... இங்கென்ன போர் நிகழ்ந்ததா?" என்றார். கனகர் ஒன்றும் சொல்லவில்லை. "இங்கே செம்புழுதியின் மணமும் எழுகிறது... வெயிலில் வெந்த பாலைநிலப் புழுதிபோல." கனகர் எரிச்சலுடன் "நீங்கள் பாலைநிலத்தை எங்கே பார்த்தீர்கள்?" என்றார். "நான் நூல்களில் பயின்றேன்..." என்றார் தீர்க்கசியாமர். "நூல்களிலா?" என்றர் கனகர் இகழ்ச்சியுடன். "எனக்கு நேர் அறிவும் நூலறிவும் ஒன்றுதான். இரண்டுமே சொற்கள்" என்றார் தீர்க்கசியாமர்.

கனகர் சீற்றம்கொண்டு கைகளை இறுக்கிக்கொண்டார். அந்தக் காலையிளவெயில் அவரை வியர்வை வழியச்செய்தது. மயக்கம் வந்து விழுந்துவிடுவோம் என்று தோன்றியது. தீர்க்கசியாமர் "இந்த இடத்தில் குழந்தைகளின் ஒலிகள் நிறைந்துள்ளன. அனைத்துக் குழந்தைகளும் அழுதுகொண்டிருக்கின்றன" என்றார். கனகர் "செல்வோம், சூதரே" என்றார். தீர்க்கசியாமர் அரண்மனை முற்றத்தைச் சுற்றி நோக்கி மூக்கைச் சுளித்து புரவிபோல் மணம்பிடித்தார். "என்ன

செய்கிறீர்கள் இங்கே?" என்றார். கனகர் "என்ன?" என்றார். "இங்கே ஏன் நின்றிருக்கிறீர்கள்?" என்றார் தீர்க்கசியாமர். கனகர் "என்ன?" என்றார். சம்வகை "அழைத்துச்செல்க, அமைச்சரே!" என்றாள். அவளை வெறுமனே நோக்கிவிட்டு கனகர் "செல்வோம்" என தீர்க்கசியாமரை தொட்டார்.

அரண்மனைக்குள் செல்லும்போது அந்தச் சூழலுக்கே பொருந்தாதபடி தீர்க்கசியாமர் வேறெங்கோ நோக்கி புன்னகை புரிந்துகொண்டிருந்தார். அவருடைய முகத்தில் விழிகள் உருண்டுகொண்டே இருந்தன. அவை இரு குருதியுருளைகள் என எண்ணியதுமே கனகர் திடுக்கிட்டார். அமைச்சுநிலையிலிருந்து சொல்லறிவர் தீர்க்கசியாமரைக் கண்டு ஓடி அருகே வந்தார். "வருக சூதரே, தங்களுக்காகவே காத்திருந்தோம். தங்கள் மூதாதையரில் ஒருவர்தான் இங்கே எழுந்த இடர் ஒன்றுக்கு முன்பு செல்வழி கண்டு சொல்லியிருக்கிறார். ஆகவே தாங்கள் உதவக்கூடும் என நான் அமைச்சரிடம் சொன்னேன்" என்றார். "நான் எவருக்கும் வழி ஏதும் சொல்வதில்லையே?" என்று தீர்க்கசியாமர் சொன்னார். "வழிகாட்டுவது உங்கள் கடமை..." என்றார் சொல்லறிவர். தீர்க்கசியாமர் "நான் எனக்கு தோன்றும் சொற்களைச் சொல்கிறேன்" என்றார்.

இடைநாழிகளினூடாகச் செல்கையில் "முன்பு இங்கே வந்திருக்கிறேன்" என்றார். "ஆம், அரசியைப் பார்க்க வந்துள்ளீர்கள்" என்றார் கனகர். "முன்பொருமுறை வந்தபோது ஓர் அரசி மகவொன்றை ஈன்றார். பேருருவ மகவு... எடைமிக்கது. வாய்முழுக்க பற்கள் கொண்டது... தலையில் கருமயிர்ச் சுருள்கள்... அதை நான் பார்த்தேன்" என்றார் தீர்க்கசியாமர். "நீங்களா?" என்றார் கனகர். "ஆம், அதை

கண்களாலேயே பார்த்தேன்." கனகர் "நாம் அரசியின் அறையை அடைந்துவிட்டோம்..." என்றார். "அரசியிடம் நீங்கள் மிகையாக பேசவேண்டியதில்லை. அவர் உசாவுவனவற்றுக்கு மட்டும் சொல்லெடுத்தால் போதும். இங்கே நீங்கள் அரசப்பணிக்காகவே வந்திருக்கிறீர்கள்."

தீர்க்கசியாமர் "நான் எப்போதுமே கேள்விகளுக்கு மறுமொழி சொல்வதில்லை..." என்றார். "நான் என்ன பேசுகிறேன் என்பதை என்னாலேயே சொல்லிவிட முடியாது..." என்றபின் சுற்றிலும் நோக்கி "எங்கே அரசி?" என்றார். "அரசி வெளியே வருவதில்லை. அவர் கைம்மைநோன்பு கொண்டிருக்கிறார்" என்றார் கனகர். "நான் என்னை சற்றுமுன் புரவியில் வந்து சந்தித்த அரசியை சொன்னேன்" என்றார் தீர்க்கசியாமர். "அவள் அரசி அல்ல... அதை இருமுறை சொல்லிவிட்டேன். அவள் காவலர்தலைவி மட்டிலுமே" என்று கனகர் எரிச்சலுடன் சொன்னார். தீர்க்கசியாமர் "ஆம், சொன்னீர்கள்... மறந்துவிட்டேன்" என்றார். "இந்த அறைக்குள் ஏன் குருதிமணம் நிறைந்திருக்கிறது? தரையெங்கும் வற்றிய ஏரிப்பரப்பில் மீன்கள் துள்ளுவதுபோல விழிகள்..." என்றார். கால்களை நீட்டி வைத்தபடி "இந்த அரண்மனை மிதந்துகொண்டிருக்கிறது. இதன் அடியில் இருக்கும் இருள் செறிவுகொண்டு பெருகி ஒழுகி மேலே வந்துகொண்டிருக்கிறது... இது அவ்விருளிலேயே மூழ்கிவிடவும்கூடும்" என முணுமுணுத்தார்.

காந்தாரியின் அவைவாயிலில் நின்றிருந்த சத்யசேனை தீர்க்கசியாமரைக் கண்டதும் திகைத்து "இவர்..." என்றபின் "அவருடைய அதே உருவம்..." என்றாள். "மானுடர் அழிவதில்லை" என்று கனகர் சொன்னார். சத்யசேனை "வருக, சூதரே" என்றாள். தீர்க்கசியாமர் "நான் இங்கே வந்திருக்கிறேன்...

கீழே ஒரு யானை நின்றிருந்தது...” என்றார். சத்யசேனை “ஆம், பிடியானை... இரு நாட்களாகவே நிலையழிந்து நின்றிருக்கிறது” என்றாள். தீர்க்கசியாமர் “அல்ல, அது களிறு. பெருங்களிறு அது... அன்றே அது உயிரிழந்தது. அதை அப்பால் புராணகங்கையில் புதைத்தனர்” என்றார். “என்ன சொல்கிறார்?” என்று சத்யசேனை பதற்றத்துடன் கனகரிடம் கேட்டாள். “அவர் பேசுவது எனக்கும் பெரும்பாலும் புரியவில்லை...” என்ற கனகர் “பேரரசியிடம் தெரிவியுங்கள்” என்றார். தீர்க்கசியாமர் “பெருங்களிறு, முதியது. விழிநோக்கும் செவிக்கூரும் மங்கிப்போனது. ஆனால் அது குருதியை அறிந்துவிட்டிருந்தது” என்றார்.

அவள் குழப்பத்துடன் மீண்டும் தீர்க்கசியாமரை நோக்கியபின் உள்ளே சென்றாள். தீர்க்கசியாமர் “கொழுங்குருதி மணம்... கருவறைக் குருதி... அந்த அறையிலிருந்து இடைநாழிவரைக்கும் அது தெறித்துப் பரவியது” என்றார். சத்யசேனை வந்து தலைவணங்கினாள். “உள்ளே செல்லலாம், சூதரே” என்றார் கனகர். அவர்கள் உள்ளே நுழைந்தனர். காந்தாரி தாழ்வான அகன்ற பீடத்தில் வெண்பட்டாடை அணிந்து கைகளை மடியில் கோத்துவைத்தபடி அமர்ந்திருந்தாள். இளைய அரசியர் அறுவர் சற்று அப்பால் தரையில் விரிக்கப்பட்ட கம்பளங்களில் அமர்ந்திருந்தனர். இருவர் நின்றிருந்தனர். சத்யசேனை மெல்லிய குரலில் “சூதர்” என அவர் வருகையை அறிவிக்க தீர்க்கசியாமர் அருகணைந்து “பேரரசியை வணங்குகிறேன். பெருந்துயரில் அமர்ந்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் என்றும் கண்டுவந்த கனவுதான் இது என்பதனால் அத்துயரை உங்களால் தாங்கிக்கொள்ளவும் இயல்கிறது” என்றார்.

“ஆம், நான் கண்டுவந்த கனவுதான்” என்றாள் காந்தாரி. தீர்க்கசியாமர் சிரிப்புபோல முகம் சுளித்து “முதல்நாளே அக்கனவை கண்டீர்கள்... அன்று அஸ்தினபுரியில் இருள் நிறைந்திருந்தது. காகங்கள் மரங்களை நிறைத்திருந்தன... எங்கும் நரிகளின் ஓலம்...” என்றார். “ஆம்” என்று காந்தாரி சொன்னாள். “அன்றே தொடங்கிவிட்டது...” என்றார் தீர்க்கசியாமர். “அமர்க, சூதரே!” என்றாள் காந்தாரி. அவர் பீடத்தில் அமர்ந்து கையிலிருந்த யாழை மடியில் வைத்துக்கொண்டார். “இங்கே நிகழ்வதென்ன என அறிந்திருப்பீர்கள்” என்றாள் காந்தாரி. “ஆம், அறிவேன்... இதோ இந்த அறையில் குருதி வழியும் உடலுடன் குழந்தைகள் நிறைந்திருக்கிறார்கள். சுவர்களிலெல்லாம் பழுத்த கனிகள்போல் தொங்கிக்கிடக்கிறார்கள். சாளரம் வழியாக உள்ளே வந்துகொண்டே இருக்கிறார்கள்.”

கனகர் மெய்ப்பு கொண்டார். “நிறைய குழவியர்... அங்கே முற்றம் எங்கும் அவர்களே... சில மகவுகளுக்கு கையளவே உடல்” என்றார் தீர்க்கசியாமர். “ஆம் சூதரே... சொல்க. நாங்கள் என்ன செய்வது? இங்கே அத்தனை கருக்களும் கலைந்துவிட்டன. இந்நகரில் கருவுற்ற பெண்டிர் அனைவருமே குருதிபெருக்கி அழிகின்றனர். கருக்குருதி பலிகொள்ளும் பதினொரு ருத்ரர்கள் நகர்புகுந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களை இந்நகர்விட்டு அகற்றும் வழியென்ன?” என்றாள். கனகர் “முன்னரும் இது நிகழ்ந்துள்ளது...” என்பதற்குள் தீர்க்கசியாமர் “ஆம், ருக்ஷரின் ஆட்சிக்காலத்தில். அன்று நான் ஒரு வழி சொன்னேன். அதையே இப்போதும் சொல்வேன்” என்றார்.

“நீங்கள்...” என சத்யவிரதை பதற்றத்துடன் சொல்லத்தொடங்க அவளை கையசைத்து காந்தாரி விலக்கினாள். “என்ன சொன்னீர்கள்? சொல்க!” என்று காந்தாரி சொன்னாள். தீர்க்கசியாமர் தன் தசைகிழிந்து விலகிய கைவிரல்களை யாழின்மேல் செலுத்தினார். இரு விரல்களும் விந்தையாக விரிந்து நீண்டு நண்டு நடப்பதுபோல் அசைந்தன. யாழ் விம்மியது. அதன் தந்திகள் துடித்தன. விரல்கள் ஒரே கணத்தில் பட்டாம்பூச்சிகளின் சிறகுகள்போல் ஆயின. அவை தந்திகளின்மேல் தாவி அலைய யாழ் ரீங்கரிக்கத் தொடங்கியது. அவருடைய குரல் இணைந்துகொண்டது. அறியாத தொன்மொழியில் அவர் உடனிணைந்து பாடத்தொடங்கினார்.

அவரை வெறித்து நோக்கியபடி அரசியர் அமர்ந்திருந்தார்கள். அந்த மொழி அவர் முன்னரே அறிந்ததாகவும் தோன்றியது. அதைத்தான் மலைக்குடிகள் பேசுகிறார்களா? ஆனால் வேறென்றும் ஒலித்தது. அது செம்மொழியின் ஓசை கொண்டிருந்தது. அதற்கப்பால் ஒன்று ஒலித்தது. வண்டுகள் முரலும், கிளிகள் மிழற்றும் மொழி ஒன்று. பின் அதில் சொல் தெளிந்தது. ஓரிரு அறிந்த சொற்கள். அவர் நீர்ப்பரப்பில் பாறைமுனைகளை மிதித்துக் கடப்பதுபோல் அச்சொற்களை தொட்டுத்தொட்டுச் சென்றார். அவை பெருகின. அறிந்த சொற்களால் ஆன பாடலாக அது மாறியது.

“அன்னையை வணங்குக! இடிமின்னலை கையிலேந்திய வஜ்ரநாகினியின் அருளை நாடுக! முடிவிலா அலைநெளிவுகள் என உடல்கொண்டவள். ஐந்து தலையெழுந்த நாகபடம் கொண்டவள். அணையா ஒளிவிழிகளும் தழல்பறக்கும் நாவுகளும் கொண்டவள். அன்னை, கருவெனச் சுருண்டு

ஆழ்புனத்திற்குள் உறைபவள். புயலெனச் சீறி எழுந்து பெருகி கருமுகிலென படம்தூக்கி வானை நிறைப்பவள். அன்னையை வணங்குக! அன்னையின் அருள் பொழிக!”

தீர்க்கசியாமரின் சொற்களில் வஜ்ரநாகினி அன்னையின் கதை ஒலித்தது. கரு வடிவில் சுருண்டு புதைந்திருக்கும் அன்னையை வணங்குக! வஜ்ரயோகினி அன்னையை வணங்குக! அவள் கதை என்றும் அழியாத மொழியில் முளைத்து முளைத்தெழும் நாவுகளில் வளர்க! கேளுங்கள் இக்கதையை. தொல்யுகமொன்றில் மண்ணும் விண்ணும் நாகங்களால் நிறைந்திருந்தது. விண்பேருருவ நாக அன்னையர் மாமலைகளை முட்டைகளாக ஈன்ற காலம் அது. அவர்கள் கடல்களை நிரப்பி அலைகளாக படமெடுத்து தரையை அறைந்த காலம். பின்னர் அவர்களின் அசைவுகளையே கடல்நீர் தன்னுடையதெனக் கொண்டது. நதி தன் நெளிவென நடித்தது. மரங்கள் தங்கள் அடித்தடிகளென அமைத்துக்கொண்டது நாகங்களையே.

அந்நாளில் மிருண்மயி என்னும் நாகஅன்னை பன்னிரண்டாயிரத்து எட்டு முட்டைகளை ஈன்றாள். அவற்றை தன் உடலின் பன்னிரண்டாயிரத்து எட்டு சுருள்களால் அணைத்து வெம்மையளித்து அடைகாத்தாள். உயிர்வளர்ந்துகொண்டிருந்த முட்டைகளுக்குமேல் அன்னை இமையா விழியுடன் தவமிருந்தாள். அப்போது மழைக்கார் இருண்டது. விண்ணில் மின்னல்கள் வெட்டித்துடித்தன. விண்ணில் கருமுகில் யானைமேல் இந்திரன் தோன்றினான். அவன் கையில் மின்படைக்கலம் சாட்டைபோல் நெளிந்தது. கதைபோல் விண்முகில்களை அறைந்து பேரோசை எழுப்பியது.

வாள் என திசைகளை வெட்டிச்சென்றது. ஒளியதிர்ந்து அடங்கியபோது உள்ளிருந்து அஞ்சிய நாகக்குழவிகளில் ஒன்று நெளிய அந்த முட்டைமட்டும் அன்னையின் அணைப்பிலிருந்து உருண்டு நிலச்சரிவில் ஓடி அப்பால் சென்றது. அறிக, பன்னிரண்டாயிரத்தில் ஒரு குழவிக்கு ஊழுடன் விளையாடுவது உவப்பாக உள்ளது! அது தெய்வங்களுக்கு உகந்த குழவி.

இந்திரனின் அருகே செம்பருந்தின் வடிவில் வந்த இந்திரமைந்தனாகிய ஜயந்தன் அதைக் கண்டு விழைவுகொண்டான். சிறகு விரித்துப் பாய்ந்திறங்கி அவன் அந்த முட்டையை கவ்விக்கொண்டு வானில் எழுந்தான். அன்னை சீறி எழுந்து விண்ணில் பாய்ந்தாள். அப்பருந்தை துரத்திச்சென்றாள். இந்திரன் அவளிடமிருந்து தப்ப மலைகளுக்குமேல் பறந்தான். அன்னை அவனைத் தொடர்ந்து சென்றாள். இந்திரன் விண்ணில் நிறைந்திருந்த கருமுகில்களில் ஒளிந்தான். அன்னை அவனை விடாது துரத்தினாள். அவன் தேவகுருவாகிய பிரஹஸ்பதியை அணுகி அவருக்குப் பின்னால் மறைந்துகொண்டான்.

அவரை அணுகிய அன்னை "என் குழவியை கொடுக்க ஆணையிடுங்கள், பிரஜாபதியே... இல்லையேல் என் நஞ்சால் இவ்விண்ணுலகை அழிப்பேன்... என் உடலின் குருதியனைத்தையும் நஞ்சாக்குவேன் என்று அறிக! என் குருதியில் நிறைந்திருக்கும் பலகோடி திரளாத முட்டைகள் அனைத்தும் இங்கே நச்சுக்குமிழிகள் என வெடிக்கும். விதைகளென எழும். அவை இவ்வுலகை முற்றழிக்கும்... ஐயம் வேண்டாம்" என்றாள். "அன்னையின் பகை அவள் குருதியிலுறங்கும் எழுதலைமுறைகளின் வஞ்சம் என நான்

அறிவேன்... ஆனால் தாய் வேட்டையாடிப்பெற்ற உணவை ஒழிய எந்தப் பறவையும் ஒப்பாது... அது அப்பறவையின் வீரத்திற்கு இழுக்கு. உன்னிடம் இருக்கும் பன்னிரண்டாயிரம் முட்டைகளில் ஒன்று மட்டுமே இது... மீள்க! அந்த முட்டைகளில் முளைக்கும் அனைத்து நாகங்களும் பேருடல்கொண்டு எழும் என நான் உன்னை வாழ்த்துகிறேன். என் தவ வல்லமையை அதன்பொருட்டு அளிக்கிறேன்" என்றார்.

"நான் இந்த ஒரு மைந்தனுக்காகவே வந்தேன். அதற்குள் அவன் தன் அன்னை தனக்காக வருவாள் என நம்பி அமைந்திருக்கிறான். அவன்பொருட்டு உயிர்கொடுப்பதும், வேண்டுமென்றால் மூவுலகையும் அழிப்பதும் என் கடன் என்றே உணர்கிறேன்" என்றாள் அன்னை. "உன் முட்டைகள் அனைத்தும் அங்கே பாதுகாப்பில்லாமல் உள்ளன... நீ அவற்றை இழப்பாய்" என்றார் பிரஹஸ்பதி. "அவற்றை என் மூதன்னையர் காக்கட்டும்... நான் இந்த முட்டைக்காகவே போரிடுவேன்... பிறிதொன்றும் எண்ணமாட்டேன்" என்று அன்னை சொன்னாள். "குழவியர் முட்டைக்குள் இருப்பதுவரை என்னால் காக்கப்படவேண்டியவர்கள். அவர்கள் விண்ணை நோக்கிவிட்டார்கள் என்றால் மூதன்னையரால் காக்கப்படுபவர்கள்."

"எனில் நீ இந்தச் செம்பருந்துடன் போரிடுக... அவனை வென்றால் நீ முட்டையுடன் மீள்வாய்" என்றார். செம்பருந்து தன் இரையை அப்பால் வைத்துவிட்டு சிவந்த சிறகுகளை அந்திமுகிலென திசைதொட விரித்து போருக்கிறங்கியது. அன்னை சீற்றத்துடன் அவனுடன் போரிட்டாள். ஆனால் செம்பருந்தின் கூருகிர்கள் வாள்கள் என அவள் உடலை கிழித்தன. அதன் அலகு அவள் தசையை குதறியது. அவள்

உடலில் இருந்து வழிந்த குருதியால் வான்பரப்பு செம்மைகொண்டது. ஆயினும் ஒரு கணமும் அன்னை பின்னடையவில்லை. வாலால் செம்பருந்தை அறைந்தாள். தன் நச்சுப்பல்லால் அதை கவ்வ முயன்றாள். உடலால் அதை பன்னிரண்டாயிரம்முறை சுற்றி இறுக்க முயன்றாள்.

அவள் இரு விழிகளையும் செம்பருந்து கொத்தி குருடாக்கியது. நோக்கிழந்து கரிய அலைகளென விண்ணில் நெளிந்த அன்னை "மூதன்னையரே, காத்தருள்க!" என்று கூவினாள். "நீ திரும்பிச்செல்வாய் என்றால் உன்னை விட்டுவிடுவேன்... உன் பிற மைந்தருக்கும் அன்னையென அமைவாய்" என்று செம்பருந்து கூறியது. "இந்த ஒரு மைந்தன் அன்றி எனக்கு முப்புடவியும் இல்லை" என்றாள் அன்னை. மீண்டும் போர் நிகழ்ந்தது. அன்னை ஒவ்வொரு கணமும் என உயிரிழந்துகொண்டிருந்தாள். அப்போது விண்ணில் இந்திரனின் மின்னல்படை நெளிந்தாடியது. விழியிலாதவரும் நோக்கும் பேரொளி கொண்டிருந்தது அது. விண்ணாளும் தேவர்களுமே அஞ்சும்படி அது சுடர்துடித்தது. ஆனால் அன்னை அது என்னவென்று அறியாமலேயே பாய்ந்து தன் வாயால் கவ்விக்கொண்டாள்.

அவள் வாயில் அது நூறு நாகநாவுகளாக மாறியது. அதை படைக்கலமாகச் சுழற்றி ஜயந்தனை அடித்தாள். அவன் இடச்சிறகு வெட்டுண்டு மண்ணில் விழுந்து அங்கே மாபெரும் காட்டெரியாக பரவியது. வலச்சிறகு வெட்டுண்டு விழுந்து கடலை செவ்வண்ணம் கொள்ளச்செய்தது. அவன் பேரொலியுடன் மண்ணில் விழுந்து ஒரு மாமலையானான். ஜயந்தம் என்னும் அந்த மலையின் உச்சியில் திகைத்த விழிகள் இரு குகைகள் என திறந்திருக்க அவன் தலை ஒரு

பாறைமுகடு என எழுந்து விண்ணில் நின்றது.
பன்னிரண்டாயிரம் யுகம் தவம் செய்து மீண்டும் விண்ணுக்குச் செல்ல அவன் அங்கே அமைந்தான்.

“அன்னை தன் முட்டையை வாலில் சுருட்டி எடுத்துக்கொண்டு திரும்பிவந்தாள். மின்படையை வாயில் கவ்வியிருந்தாள். அங்கே அவளுடைய பன்னிரண்டாயிரத்துக்கு ஒன்று குறையும் முட்டைகளை மூன்று அன்னைதெய்வங்களும் நாகங்களாக வந்தமைந்து காவல்காத்துக்கொண்டிருந்தார்கள்.
மின்படையுடன் வந்த அன்னையைக் கண்டு புன்னகைத்து அவர்கள் மீண்டு சென்றனர். அந்தப் பன்னிரண்டாயிரம் நாகங்களிலிருந்து பெருகிய நாகர்குலத்தோர் அன்னையை வஜ்ரநாகினி என தங்கள் ஆலயங்களில் அமைத்தனர்.
இடக்கையில் மின்படையும் வலக்கையில் கருமுட்டையும் கொண்டு அமர்ந்திருக்கும் அன்னை கருவிலெழும் குழவியருக்குக் காப்பு என்றனர். அன்னைக்கு படையலிட்டு வணங்கி அருள்பெற்று மைந்தரை ஈன்று பொலிந்தனர்.
மின்படையன்னை வெல்க! அவள் அருள் பெண்டிரின் அடிவயிற்றுக்கு காப்பாகுக! ஆம், அவ்வண்ணமே ஆகுக!” என்றார் தீர்க்கசியாமர்.

“அஸ்தினபுரியில் மாமன்னர் ஹஸ்தி நூற்றெட்டு நாகஅன்னையரைக் கொண்டு களம்வரைந்து பூசனைசெய்து எழுப்பிய வஜ்ரநாகினி அன்னை அங்கேயே கோயில்கொண்டமைந்தாள். அவர் கட்டிய சிற்றாலயத்தில் வலக்கையில் முட்டையும் இடக்கையில் மின்படையும் நோக்கில்லா விழிகளும் அலைசுழன்ற வாலுடலும் அன்னைமுலைகளுமாக கல்வடிவில் தோன்றினாள். அங்கே அமைந்த பேரன்னையால் இந்நகர் மைந்தரால் பொலிந்தது.

இந்நகரில் குழவியர் கருவுக்குள் கண் அமைந்ததுமே அவளைத்தான் முதலில் கண்டு புன்னகைத்தனர். அவள் அவர்களுக்கு மட்டுமே விழிகள்கொண்டவள் என இருந்தாள். அன்னையின் வால்நுனியை சிறுவிரலென்று வாயிலிட்டு நுணைந்தனர் மைந்தர். முலைப்பாலுக்கும் முந்தைய முதற்சுவையென அவள் எழுந்தாள். அஸ்தினபுரியின் தென்மேற்கே அமைந்த அவ்வாலயத்தில் கருவுறக்கம் கொள்ளும் அன்னை வெல்க! அவள் அருளால் நகர் பொலிக!”

நீர்ச்சுடர் - 10

பகுதி இரண்டு : குருதிமணிகள் – 4

தீர்க்கசியாமர் பாடிக்கொண்டிருந்தபோதே அப்பாலிருந்த முதிய சேடி ஓலைச்சுவடியில் அதிலிருந்த செய்திகளை பொறித்துக்கொண்டிருந்தாள். அவளுடைய எழுத்தாணியின் ஓசை யாழின் கார்வையுடன் இணைந்தே கேட்டது. யாழிசை பறந்துகொண்டிருக்க அது நிலத்தில் அழுந்த ஊர்ந்துகொண்டிருப்பதுபோலத் தோன்றியது. கனகர் அந்த எழுத்தாணியையும் தீர்க்கசியாமரின் யாழையும் மாறிமாறி நோக்கிக்கொண்டிருந்தார். அவை இரண்டும் ஒன்றையொன்று தொட முயன்றபடி சுழன்றுவந்துகொண்டிருக்கின்றன என்று எண்ணிக்கொண்டார்.

“அன்னைக்கு அரிசிப்பொடியும் மஞ்சள்பொடியும் வேம்பின்தளிரும் செம்மலர்களும் கொண்டு பூசனை செய்க! ஐந்து கான்மங்கலங்களும் எட்டு இல்மங்கலங்களும் அன்னைக்கு படைக்கப்படுக! அன்னையின் களமுற்றத்தில்

அவள் மலர்வடிவென எழுக!" என அவர் கூறிக்கொண்டே சென்றார். "அஸ்தினபுரியின் தென்மேற்கு எல்லையில் திகழும் அன்னையின் ஆலயத்தில் பூசனை எழட்டும். முழங்குக முழவுகள்! ஓங்குக சங்கங்கள்! அன்னையை வாழ்த்தி எழுக மகளிர் குரல்கள்! முன்பு செய்ததுபோல் பூசனைகள் நிகழ்க! அப்பூசனை செய்த சூதர்மகளிரே இப்பூசனையையும் நிறைவுற இயற்றுக! நலமே நிகழ்க! ஆம், நன்றே நிகழ்க! ஆம், மங்கலமே எஞ்சுக! ஆம்! ஆம்! ஆம்!"

அவர் பாடி முடித்ததும் கனகர் "ஆனால் அங்கே அவ்வண்ணம் ஓர் ஆலயம் இல்லை" என்றார். காந்தாரி அதை கேட்டதுபோலத் தெரியவில்லை. கனகர் மேலும் உரக்க "அங்கே அவ்வண்ணம் ஓர் ஆலயம் இல்லை, சூதரே" என்றார். தீர்க்கசியாமர் திகைப்புடன் திரும்பி நோக்கி "எங்கே?" என்றார். "நீங்கள் சொன்ன இடத்தில் வஜ்ரநாகினியின் ஆலயம் ஏதுமில்லை... நான் நன்கறிவேன்." தீர்க்கசியாமர் "நான் என்ன சொன்னேன்?" என்றார். அவர் விழிகளை நோக்கியபின் பேசுவதில் பொருளில்லை என உணர்ந்து கனகர் அமைதியானார். "எந்த ஆலயம்?" என தீர்க்கசியாமர் மீண்டும் கேட்டார். கனகர் ஒன்றும் சொல்லவில்லை.

சத்யசேனை "மெய்யாகவே அங்கே அவ்வண்ணம் ஆலயம் ஏதுமில்லையா?" என்று கேட்க முதிய சேடி "இல்லை அரசி, அங்கே அப்படி எந்த ஆலயமும் இல்லை" என்றாள். இன்னொரு முதுசேடி "அவ்வாறு ஓர் ஆலயம் இந்நகரிலேயே இல்லை. அவ்வண்ணம் ஒரு தெய்வத்தை கேள்விப்பட்டதே இல்லை" என்றாள். "ஆம்" என இணைந்த குரலில் சேடியர் சொன்னார்கள். "அழிந்திருக்கும். இவர் சொல்வது தொல்பழங்காலத்துக் கதையை" என்று சத்யவிரதை சொன்னாள். "எனில்

அவ்வண்ணம் ஒன்றை அமைக்கவேண்டும்... உடனே அமைக்கத் தொடங்கினால்கூட...” என்று சத்யசேனை சொல்ல சத்யவிரதை “அது எளிதா என்ன? நாம் பூசனையை நாளையே செய்வதென்றாலும்கூட...” என்றாள்.

“ஏன் கல்லிலோ மண்ணிலோதான் அமைக்கவேண்டுமா? மரத்தாலோ துணியாலோகூட அமைக்கலாமே” என்றாள் சத்யசேனை. காந்தாரி “இல்லை, அவர் ஆலயத்தை அமைப்பதைப்பற்றி சொல்லவில்லை. அது அங்கிருக்கிறது என்றார்” என்று மெல்லிய குரலில் சொன்னாள். “அங்கே அது இல்லை என்பதில் ஐயமில்லை. வேண்டுமென்றால் சற்றே இடம் மாறிக்கூட இருக்கலாம். தேடும்படி ஒற்றர்களிடம் ஆணையிடலாம், அரசி” என்றார் கனகர். “வேண்டாம்... அது மண்ணுக்கு அடியில் இருக்கலாம்... இவரை அழைத்துச்செல்க! இவர் காட்டும் இடத்திலேயே குழிதோண்டிப் பாருங்கள்...” என்று காந்தாரி சொன்னாள். “இவர் பாடுகையில் கருவடிவில் சுருண்டு புதைந்திருக்கும் அன்னை என்றுதான் சொன்னார்... பெரும்பாலும் அவ்வாலயம் மண்ணுக்கு அடியில்தான் இருக்கும்.”

அவ்வண்ணம்தான் இருக்குமென உடனே தோன்றினாலும் கனகர் வீணாக அதை எதிர்த்தார். “இவர் மிக இளையவர், கேட்ட கதைகளை பாடுபவர். இவருக்கு தன் நாவிலெழுவதென்ன என்றுகூட தெரிந்திருக்கவில்லை.” காந்தாரி “அவர் அனைத்தும் அறிந்த ஆழம்கொண்டவர்” என்றாள். கனகர் சலிப்புடன் “தங்கள் ஆணைப்படி” என்றார். காந்தாரி “சூதரே, அந்த அன்னையின் ஆலயமிருக்கும் இடத்தை காட்டுக!” என்றாள். “எந்த அன்னை?” என்று தீர்க்கசியாமர் கேட்டார். “ஆலயம் என்றால் எங்குள்ளது?” கனகர் “நான்

உரைத்தேனே அரசி, அவர் உளம்குழம்பிப்போன இளையவர். அவருள் வாழும் கதைகளுக்கு அவரே பொறுப்பல்ல" என்றார்.

காந்தாரி "சூதரே கூறுக, உங்கள் உள்ளத்தை சூழ்ந்துநோக்கி சொல்லுங்கள். எங்கே அந்த ஆலயம் உள்ளது? தென்மேற்கிலா? அன்றி வேறெங்கிலுமா?" என்றாள். தீர்க்கசியாமர் பற்கள் தெரிய புன்னகைத்து "நான் என்ன சொன்னேன் என இவர்கள் எவரேனும் என்னிடம் மீளவும் சொல்லமுடியுமா?" என்றார். காந்தாரி கைநீட்டி "அருகே வருக!" என்றாள். "என்ன?" என்றார் தீர்க்கசியாமர். "அருகே வருக, நான் உம்மை தொட்டறியவேண்டும்" என்றாள் காந்தாரி. "நான் எப்படி?" என்றார் தீர்க்கசியாமர். சத்யசேனை அருகணைந்து அவர் கையை பற்றினாள். "இது அரசி அல்ல... இது விழிகொண்டவரின் கை" என்றார் தீர்க்கசியாமர்.

சத்யசேனை அவரை கொண்டுசென்று காந்தாரியின் அருகே நிறுத்தினாள். அவர் கைநீட்ட அக்கையை காந்தாரி பற்றிக்கொண்டாள். "ஆம், இது அரசியின் கை" என்றார் தீர்க்கசியாமர். இரு கைகளும் நடுங்குவதுபோல கனகர் எண்ணினார். காந்தாரியின் முகம் கூர்கொள்ள உதடுகள் அழுந்தியிருந்தன. காந்தாரி பெருமூச்சுவிட்டாள். பின்னர் கைகளை விலக்கிக்கொண்டாள். "பேரரசி அழகாக இருக்கிறார்கள்" என்றார் தீர்க்கசியாமர். காந்தாரி "வெளியே நின்றிருக்கும் யானையை தொடர்ந்துசெல்க... அது சென்று நின்றிருக்கும் இடத்தை அகழ்ந்து நோக்குக!" என்றாள். கனகர் திகைப்புடன் இருவரையும் மாறிமாறி நோக்கினார். பின்னர் "ஆணை, அரசி!" என்றார்.

தீர்க்கசியாமரை அனுப்பிவிட்டு கனகர் வெளியே விரைந்தார். அங்கே சம்வகை நின்றிருக்கவேண்டும் என அவர் விழைந்தார். அவளில்லாமல் அப்பணியை செய்யமுடியாதென்று தோன்றியது. அவளிடம் அனைத்தையும் ஒப்படைத்துவிட்டுச் சென்று படுத்துவிடவேண்டும். எச்சமில்லாமல் கரைந்து அழிந்துவிடவேண்டும். அவர் வியர்வையுடன் அங்குமிங்கும் நோக்க ஏவலன் "காவல்பெண்டு இங்குதான் இருக்கிறார்கள். தாங்கள் தேடினால் கூறும்படி உரைத்தார்கள்" என்றான். "நான் உன்னிடம் கேட்டேனா? கேட்டேனா?" என கனகர் கூவினார். "அறிவிலி... உன் பணியை நீ நோக்கு. சவுக்கால் உடலை வரிவரியாக இழைக்க ஆணையிடுவேன்... கீழ்மகனே."

அவன் பேசாமல் நின்றான். கனகர் மூச்சிளைக்க "அவளை வரச்சொல்" என்றார். அவன் தலைவணங்கி அகன்றான். அவர் எங்கேனும் அமர விழைந்து சூழ நோக்கினார். சம்வகை அருகே வந்து வணங்கியதும் உரக்க "இங்கே பணியாற்றுவதைவிட யானைக்கீழ் தலையை கொடுக்கலாம்" என்று கூவினார். அவள் ஒன்றும் சொல்லவில்லை. "என்ன பேசாமல் நிற்கிறாய்?" என்றார். "கொடுக்கலாம்" என அவள் சொன்னாள். அவர் சீற்றம் அடங்கி புன்னகைத்து "ஏளனம் செய்கிறாயா? நான் இப்போது சேற்றில் சிக்கிய யானை. தவளைகள் ஏறி விளையாடுகின்றன" என்றார். பின்னர் "அரசியின் ஆணை. அந்த வெறியெழுந்த பிடியானையை கொண்டுசென்று தென்மேற்கு கோட்டைப்பகுதியை துழாவவேண்டும். அது நமக்கு மண்ணுக்குள் புதைந்த ஆலயம் ஒன்றை கண்டறிந்து அளிக்கும்" என்றார்.

சம்வகை "ஆணை" என்றாள். "என்ன ஆணை? உனக்கு என்ன செய்வதென்று புரிகிறதா? அந்த பிடியானைக்கு பித்து எழுந்துள்ளது. அது மைந்தரையும் சுற்றத்தையும் இழந்துள்ளது... அது எப்படி..." என்றபின் சலிப்புடன் கையசைத்து "நமக்கென்ன? நாம் ஆணையை நிறைவேற்றுவோம்" என்றார். எழுந்துகொண்டு "அதன் பாகன் என எவரேனும் இருக்கிறார்களா என்று பார்" என ஆணையிட்டார். "தேவையில்லை. நான் நன்கறிந்த யானைதான் அது..." என்றாள் சம்வகை. "ஆம், நீ யானைப்பாகர் குலத்தவளாயிற்றே... நீயே அதை நடத்து" என்ற கனகர் "நானே வியந்துகொண்டிருதேன், நீ இதை இயற்றுவாய் என எனக்கு ஏன் தோன்றியது என... செல்க!" என்றார்.

சம்வகை திரும்பிச்செல்ல "துரட்டி, குத்துக்கம்பு எதுவும் வேண்டியதில்லையா என்ன?" என்றபடி கனகர் உடன் சென்றார். "தேவையில்லை. நான் யானைக்கு ஆணையிடப் போவதில்லை. யானைமேல் ஊர்வதும் இயல்வதல்ல..." என்றாள் சம்வகை. அவர்கள் காந்தாரியின் மாளிகையை ஒட்டிய முற்றத்தை அடைந்தனர். அவர்களின் வருகையை மணத்தால் உணர்ந்த யானை செவிமடித்து கூர்ந்தது. அதன் துதிக்கை நீண்டு வந்து காற்றை அள்ளியது. சம்வகை திகைப்புடன் நின்று "அது நோக்கிழந்திருக்கிறது!" என்றாள். "என்ன சொல்கிறாய்?" என்றார் கனகர். "அது துதிக்கையை நீட்டும்போதே தெரிகிறது."

கனகர் "ஆனால் அது போருக்குச் சென்ற யானை" என்றார். "அங்கிருந்து திரும்பும்போதே நோக்கை இழந்திருக்கலாம். நாம் அதை உணரவில்லை" என்றாள் சம்வகை. "யானைகள் நோக்கிழந்தால் நன்கு உற்று ஆராய்ந்தாலொழிய கண்டறிய

இயல்வதில்லை.” அவள் அதனருகே சென்றாள். அவர் தள்ளி நின்று நோக்கிக்கொண்டிருந்தார். அவள் கையை நீட்டியபடி மெல்லிய குரலில் ஏதோ சொல்லியபடி அருகணைந்தாள். யானை துதிக்கையை நீட்ட அவளுடைய கையும் நீண்டு செல்ல இரண்டு நுனிகளுக்கும் நடுவே இருந்த வெளி அச்சொற்களால் அதிர்வதுபோலிருந்தது. மெல்லமெல்ல இடைவெளி குறைந்தது. இரு முனைகளும் தொட்டுக்கொண்டன.

சம்வகை அருகே சென்று யானையின் செவியை வருடினாள். அதனிடம் ஏதோ சொன்னாள். யானை செவிமடித்து ஒலிகூர்வதை அவர் கண்டார். பின்னர் அது காலெடுத்துவைத்து நடக்கத்தொடங்கியது. அவள் அதனுடன் செல்ல கனகர் பின்னால் சென்றார். தன்னைத் தொடர்ந்த ஏவலனிடம் மெல்லிய குரலில் “ஐம்பது பேர்கொண்ட ஏவலர்படை ஒன்று பின்தொடர்ந்து வரவேண்டும். அங்கே ஆழமாக தோண்டவேண்டியிருக்கும்... செல்க!” என ஆணையிட்டார். முதிய ஏவலனின் ஒருங்கிணைப்பில் மண் அகழும் கருவிகளுடன் ஏவல்பெண்டுகளின் படை ஒன்று வந்தது. அவர்களின் காலடியோசைகளன்றி வேறேதும் ஒலிக்கவில்லை. அவர்கள் பெருகிக்கொண்டே இருந்தனர்.

யானை சூதர்தெருக்களினூடாகச் சென்றது. அங்கே அவ்வேளையில் எவருமிருக்கவில்லை. தெருக்களில் குழந்தைகள் ஒன்றிரண்டு புழுதியில் விளையாடிக்கொண்டிருந்தன. கனகர் சாலையின் ஓரமாக சிறிய சந்து ஒன்றின் முகப்பில் அந்தக் கூன்விழுந்த முதிய சூதப்பெண்ணை பார்த்தார். அவள் மங்கலடைந்த விழிகளால் யானையை பார்த்தபின் திரும்பிக்கொண்டு விலங்குபோல்

மடிந்து நடந்து அப்பால் சென்றாள். தென்மேற்கு கோட்டைமடிப்பை நோக்கி யானை சென்றது. அதன் உடல் ஊசலாடிக்கொண்டே இருந்தது. அது நின்று நாற்புறமும் மோப்பம் கொண்டது. மீண்டும் துதிக்கையை வீசியபடி நடந்தது. அதன் நடை தளர்ந்தது. கோட்டையருகே இருந்த சிறிய புதர்க்காடு ஒன்றை நோக்கி சென்றது. அங்கிருந்த சிறிய சிதல்புற்றின் அருகே நின்றது. மும்முறை அந்தப் புற்றை தொடமுயன்று துதிக்கை விலக்கிக்கொண்டது. பின்னர் தலைமேல் துதி வளைத்து பிளிறியது.

சம்வகை "இந்த இடம்தான்" என்று திரும்பி கனகரிடம் சொன்னாள். கனகர் திரும்பி கைகாட்ட காவலர்கள் அருகே சென்று அப்பகுதியை நோக்கினர். சம்வகை யானையை அகற்றிக்கொண்டுசென்றாள். "பாம்பு உள்ளது" என்றான் ஒரு காவலன். சம்வகை "அகழ்க, பாம்பு அகன்றால் நன்று! சீறிப்படமெடுத்தால் என்ன செய்வதென்று எண்ணிப்பார்ப்போம்" என்றாள். கனகரை ஏவலர் நோக்க அவ்வண்ணமே செய்க என அவர் கைகாட்டினார். அந்த இடத்தில் மண்ணுக்கு அடியில் ஓர் ஆலயமிருக்கிறது என்ற எண்ணமே சிறிய பதற்றத்தை உருவாக்கியது. அங்கே உள்ளே ஏதுமிருக்கக் கூடாது என அவர் விழைந்தார். அந்த எண்ணம் ஏன் ஏற்படுகிறது என அவரால் கண்டடைய இயலவில்லை.

யானையை இரு ஏவலர் அகற்றி கொண்டுசென்றார்கள். அதன் உடலில் தசை விதிர்த்துக்கொண்டே இருந்தது. நோயுற்றதுபோல அது அவ்வப்போது உறுமிக்கொண்டது. அது அகன்றுசெல்வதை கனகர் வெறுமனே நோக்கினார். ஏவல்பெண்டுகள் அந்தப் புற்றை மண்வெட்டியால் வெட்ட உள்ளிருந்து நாகம் சீறி மேலெழுந்தது. அவர்கள்

பின்னடைந்தனர். நாகம் அவர்களை நோக்குவதுபோல தலைதிருப்பியபின் வழிந்து இறங்கி நெளிவுகளாக அலைகொண்டு அப்பால் சென்று புதர்களுக்குள் மறைந்தது. "தோண்டுக!" என்று அவர் ஆணையிட்டார். அவர்கள் ஐயத்துடன் ஒருவரை ஒருவர் நோக்கியபடி அகழத் தொடங்கினர்.

புற்றுக்குள் பாம்பின் முட்டைகள் இருந்தன. சுண்ணக்கற்கள்போல விந்தையான கோடுகளும் வடிவங்களும் கொண்ட சிறிய உருளைகள். "அவற்றை எடுத்து அப்பால் வையுங்கள். ஒன்றுகூட உடையக்கூடாது" என்றார் கனகர். அவர்கள் முட்டைகளை ஒவ்வொன்றாக எடுத்துச்சென்று மிகத் தொலைவிலிருந்த சிறிய புதருக்குள் வைத்தனர். பதினெட்டு முட்டைகள் இருந்தன. அதன்பின் புற்றை அவர்கள் தோண்டி அகற்றத்தொடங்கினர். உள்ளே வெண்ணிறமான சிதல்கள் நிறைந்திருந்தன. அரிசிமணிகள்போல அவை ஊர்ந்தன. தோண்டி விலக்கி அகற்றிக்கொண்டிருந்த ஏவல்மகளிர் நின்று "அமைச்சரே" என்றார்கள்.

கனகர் சற்று முன்னால் சென்று நோக்கினார். ஒரு கல்முகடு தெரிந்தது. மண்படிந்து சற்றே பெரிய உருளைக்கல் என்றுதான் அது தோன்றியது. ஆனால் சற்று நோக்கியபோதே அதன் மேலிருந்த கல்செதுக்குகள் புலப்பட்டன. அது ஒரு ஆலயத்தின் உச்சிகோபுரக்குடம் என அவருக்கு தெரிந்தது. "மெல்ல அகழ்ந்தெடுங்கள்... கல்லில் இரும்பு பட்டுவிடக்கூடாது" என்றார். ஏவல்பெண்டுகள் மெல்லிய குரலில் பேசியபடி தோண்டத் தொடங்கினர். மெல்ல நீரிலிருந்து எழுவதுபோல் சிறிய கோபுரம் ஒன்று தோன்றியது.

கனகர் பெருமூச்சுடன் சம்வகையின் அருகே வந்தார். "இங்கே ஆலயங்கள் இல்லாத இடமே இருக்காது. இந்நகரமே முன்னர்

இருந்த இன்னொரு நகர்மேல் எழுந்தது என்று சொல்லப்படுவதுண்டு... அறிந்திருப்பாய். இங்கேதான் குருநகரி இருந்தது. மாமன்னர் யயாதி ஆண்டது. அது ஏழுமுறை அழிந்து மீண்டும் கட்டப்பட்டது என்கிறார்கள். மாமன்னர் ஹஸ்தி இங்கே தன் நகரைக் கட்டியது இது அவருடைய தொல்நிலம் என்பதனால்தான்" என்றார். "ஆம், அறிந்திருக்கிறேன்" என்று அவள் சொன்னாள். "இந்த தெய்வம் என்ன, இதன் இயல்புகள் என்ன என்று எவருக்கும் தெரியாது. ஆனால் நீள்துயிலில் இருந்து அதை எழுப்பிவிட்டோம்" என்றார் கனகர். "நாம் வரலாறெங்கணும் செய்வது இதுதான். அறியாத் தெய்வங்களை எழுப்பிக்கொள்வது."

"அது அன்னைதெய்வம்... எந்நிலையிலும் அது நலம்பயப்பதே" என்று சம்வகை சொன்னாள். "ஆம்" என்றபின் கனகர் "ஆனால் நாகினி" என்றார். "பேரன்னையர் கத்ருவும் வினதையும் நாகினியரே. அவர்களிடமிருந்தே புடவி பிறந்தது" என்று அவள் சொன்னாள். அவர் அவளை கூர்ந்து நோக்கியபின் விலகிச் சென்று நின்றார். அங்கே நின்றிருக்க அவர் விழையவில்லை. ஆனால் அங்கிருந்து அகலவும் முடியவில்லை. ஏவல்பெண்டுகள் மூச்சிரைப்பின் ஒலியில் ஒத்திசைவுக்குரிய சொற்களை உரைத்தபடி கூடைகளில் மண்ணை அள்ளி அப்பால் கொட்டினர். மண் சிறு குன்றென மேலே எழ உள்ளிருந்த ஆலயம் துலங்கி உருவம் காட்டியது.

நெடுங்காலம் அது விதையென புதைந்து அங்கு கிடந்திருக்கிறது. அதை அகழ்ந்து விண்ணை காட்டுகிறார்கள். இனி அதனுள் கருவென வாழும் அன்னைக்கு பூசனைகள் நிகழும். சடங்குகளால், ஊழ்கநுண்சொற்களால் விதை முளைத்தெழப்போகிறது. விதையுறைகள் வெடித்து உள்ளிருந்து

புது ஈரிலை முளை என அன்னை எழப்போகிறாள். விழியிழந்த அன்னை. அவர் ஒரு புதிய எண்ணத்தை அடைந்து திகைப்புகொண்டு சூழ நோக்கினார். விழியுடையோர் எதையும் காணாதவர்களாக ஆக விழியிலாதோரால் அனைத்தும் முடிவுசெய்யப்படுகின்றனவா இங்கே? விழியின்மையால் அறியும் நகரம் ஒன்று இந்நகருக்குள் இருந்திருக்கிறது.

அவர் மீண்டும் சலிப்பை அடைந்தார். எத்தனை தெய்வங்கள்! அழிப்பவை, ஆக்குபவை, ஊட்டுபவை, கொல்பவை, கனிபவை, சினப்பவை... இத்தனை தெய்வங்களை அகற்றிவிட்டு எங்கேனும் ஏதேனுமின்றி வாழும் நிலை ஒன்று அமைந்தால் நன்று. ஒவ்வொரு கணமும் ஏதேனும் ஒரு தெய்வத்திற்கு நாம் அளிக்கும் திறை என்று சூதர்கள் சொல்வதுண்டு. அவ்வாறே இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு கணமும் ஒரு தெய்வத்தை உணர்ந்தபடி வாழ்வதுபோல் எடைமிக்க வாழ்வு பிறிதில்லை. யானை ஒன்றை தோளில் சுமந்துகொண்டிருப்பதைப்போல். ஒவ்வொரு காலடியும் யானைக்குரியது. ஒவ்வொரு கால் பிறழ்வும் யானைக்குரியது. ஒவ்வொரு வீழ்ச்சியும் யானைக்குரியது. எண்ணங்களும் விழிகளும் மட்டும் மானுடர்க்குரியவை.

இன்னும் எத்தனை நூறு தெய்வங்கள் இந்த மண்ணுக்குள் புதைந்துகிடக்கக்கூடும்! இந்த மரங்களின் வேர்கள் தொட்டறியும் தெய்வங்கள் இருக்கலாம். இவ்விலைகள் அனைத்திலும் திகழ்வது அவற்றின் நுண்சொற்களாக இருக்கலாம். இந்த இல்லங்கள் அனைத்திற்கும் அடித்தளமாக அமைபவை. இந்த அரண்மனை கோட்டை அனைத்தும் அவற்றின்மேல் அமைந்தவை. இந்நகரே ஒரு மாபெரும் தெய்வத்தின் உடல்மேல் எழுந்த சிறு கொப்புளமாக

இருக்கலாம். விண்ணிலிருந்து நோக்கும் தெய்வங்கள் கோடி. காற்றென்றும் ஒளியென்றும் மணமென்றும் இங்குலாவும் தெய்வங்கள் வேறு. இங்கு இத்தருணத்தில் எத்தனை தெய்வங்கள் செறிந்திருக்கின்றன என்று எவருக்குத் தெரியும்? தெய்வங்கள் ஊசி முனையில் ஒருகோடி என வசிக்கக் கற்றவை எனில் இப்புடவி எவ்வளவு தெய்வங்களின் இருப்பிடம்!

அவர் திரும்பச்சென்று துயில்கொள்ள விழைந்தார். சம்வகையிடம் கைகளால் ஆணையிட்டுவிட்டு தன் புரவியில் ஏறிக்கொண்டார். மாளிகைக்குச் செல்ல விரும்பினாலும் ஒற்றர் செய்திகளை நோக்கி நெடும்பொழுதாகிறது என உணர்ந்து தன் அமைச்சு அறைக்குத்தான் திரும்பினார். ஒற்றுச்செய்திகள் குவிந்துகிடந்தன. அவர் இலக்கில்லாமல் ஓலைகளை அள்ளிப் படித்தார். சின்னாட்களாகவே அவர் செய்திகளை அவ்வாறுதான் புரிந்துகொண்டார். கையில் தற்செயலாகச் சிக்கும் ஓலைகளிலிருந்து உருவாகும் உளச்சித்திரத்தையே அவர் மெய்மை எனக்கொண்டார். அதில் பிழைகள் நிகழவில்லை. உண்மையில் பிழை என ஏதேனும் உண்டா என்ன? ஏனென்றால் சரி என ஏதும் இங்கில்லை.

ஒருவேளை காலையில் பூசனை செய்ய சூதர்மகளிர் தேவைப்படலாம். ஆனால் சூதர்மகளிருக்கு இப்பூசனை முறை தெரிந்திருக்கவேண்டும். நாகசூதர்கள் ஒருவேளை பூசனையை ஆற்றக்கூடும். நாகசூதர்கள் நகரில் வாழ்வதில்லை. அவர்கள் வந்து செல்பவர்கள். இமையா விழிகள் கொண்டவர்கள் அவர்கள். நாகசூதர்கள் எங்கேனும் இருந்தால் தேடிவரச் சொல்லலாம். ஆனால் இனிமேல் பொழுதில்லை. நாளையே பூசனைகள் நிகழ்ந்தாகவேண்டும். இந்திரப்பிரஸ்தத்தின்

ஆணைக்கு காத்திருக்கிறது அஸ்தினபுரி. சூதர்பெண்கள் பூசனை செய்வார்கள் என்றார் தீர்க்கசியாமர். அவருடைய சொற்களையே தொடர்ந்துசெல்லலாம். அது ஒன்றே செய்யக்கூடுவது.

களைத்து பீடத்திலேயே பின்னால் சரிந்து அவர் துயில்கொண்டார். நெடுநேரம் கழித்து உணர்வடைந்தபோது இருண்ட அமைச்சு அறையில் பீடத்திலிருந்து விழுந்து தரையில் கிடந்தார். அறைக்குள் எவரேனும் இருக்கிறார்களா என எண்ணி எழுந்தமர்ந்தார். எவரோ உடனிருக்கும் உணர்வு ஏற்பட்டது. ஆனால் இவ்வரண்மனையில் எல்லா இடங்களிலும் அவ்வுணர்வே நிறைந்திருக்கிறது. இந்நகரெங்கும் அவ்வுணர்வு திகழ்கிறது. அவர் எழுந்து உடைகளை சீரமைத்துக்கொண்டு வெளியே வந்தார். முன்புலரி எனத் தெரிந்தது. விண்மீன்கள் இடம் மாறியிருந்தன.

அவர் புரவியை அணுகி அதன்மேல் ஏறிக்கொண்டார். அதன் மென்மயிர்ப்பரப்பு குளிர்ந்து ஈரம் படிந்திருந்தது. அவருடைய தொடுகையில் அது நடுக்கு கொண்டது. அவர் ஏறிக்கொண்டதும் அவர் எங்கெனச் சொல்லாமலேயே செல்லத்தொடங்கியது. அவர் மீண்டும் துயில்கொண்டுவிட்டிருந்தார். குதிரை நின்றபோது விழித்தார். அது அந்த ஆலயமிருக்கும் இடத்தை அடைந்து நின்றிருந்தது. அவரை அணுகி வந்த சம்வகை "அகழ்வுப்பணி பெரும்பாலும் முடிந்துவிட்டது, அமைச்சரே. சிறிய ஆலயம். ஓர் ஆள் உயரம்தான். கல்லால் கட்டப்பட்டது" என்றாள்.

அவர் இறங்கி அதை நோக்கியபடி நின்றார். சிறிய ஆலயம், விதைபோல. இதை இங்கிருந்து கொண்டுசென்று எங்கேனும் விதைத்தால் கல்பெருகி மாளிகைகளும் அரண்மனைகளும்

ஆலயங்களும் கோட்டைகளுமாகி நகர் என முளைக்கும். “அமைச்சரே!” என்று ஏவல்பெண்டு சொன்னாள். சம்வகை அருகே செல்ல சற்று தயங்கியபடி கனகர் கூடவே சென்றார். வெட்டி அகற்றப்பட்ட மண்ணின் மணம். அவருடைய காலடிகள் புதைந்தன. சரிவில் இறங்கி அருகணைந்தனர். ஆலயத்தின் வாயில் திறந்திருந்தது. முதிய சூதப்பெண் உள்ளிருந்து கைகளால் மண்ணை அள்ளி அகற்றினாள். உள்ளிருக்கும் சிறிய கற்சிலை தெரியத் தொடங்கியது.

மண்திரை விலக விலக சிலை தெளிவுகொண்டது. வழுவழுப்பான கரிய கல்லில் செதுக்கப்பட்டிருந்தது. இடக்கையில் மின்படை. வலக்கையில் ஒரு சிறிய கலம். அமுதகலமா? அமர்ந்த கோலம். அப்பீடத்தில் நாகம் பத்திவிரித்திருந்தது. தலைக்குமேல் பத்துதலை நாகம். நாகவிழிகள் அனைத்தும் நோக்கு கொண்டிருந்தன. ஆனால் அன்னையின் முகம் நோக்கிலா விழிகளுடன் தன்னுள் ஆழ்ந்திருந்தது. உதடுகளில் புன்னகை இருந்தமையால் அவள் ஏதோ ஆழ்ந்த இனிய நினைவில் இருப்பதுபோலத் தோன்றியது.

நீர்ச்சுடர் - 11

பகுதி இரண்டு : குருதிமணிகள் – 5

வஜ்ரநாகினி அன்னையின் சிற்றாலயத்தின் அருகே மண் சரிவாக செதுக்கப்பட்டு ஆழத்திற்கு இறங்கிச் சென்றது. ஐந்தடி உயரமான சிறிய கல்ஆலயத்திற்குள் ஒரு முழ உயரத்தில் நின்றிருந்த அன்னையின் உருவம் சந்தன காப்பிடப்பட்டு மலர்

அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. அதற்குள் கால் மடித்து அமர்ந்திருந்த முதிய சூதப்பெண்மணி அணிகளை முழுமை செய்துகொண்டிருந்தார். ஆலயத்திற்கு முன்பு மண் வெட்டி அகற்றப்பட்டு உருவாக்கப்பட்டிருந்த நீள்சதுர வடிவ முற்றத்தில் மலர்களால் களம் அமைக்கப்பட்டிருந்தது. சிவந்த மலர்களாலும் நீல மலர்களாலும் அமைக்கப்பட்டிருந்த களத்தின் ஓரம் அப்போதும் முழுமை அடையவில்லை. நாக தேவியின் அந்த உருவை அருகணைந்து இடையில் கைவைத்தபடி கனகர் பார்த்து நின்றார்.

பத்து நாகங்கள் ஒன்றுடன் ஒன்று உடல் பின்னிப்பிணைந்து ஒரு பரப்பென ஆகி நடுவே தங்கள் வாலுடல்களால் ஒரு மலர்ப்பீடத்தை அமைத்து அதில் தேவியை அமரச்செய்திருந்தன. சுழிவட்டத்தின் விளிம்பு நாகத்தின் படமெடுத்த தலைகளால் ஆனதாக இருந்தது. அத்தனை சிக்கலான ஒரு உருவத்தை மலர்களால் உருவாக்கிவிட முடியும் என்பது அவருக்கு விந்தையாக இருந்தது. சூதப்பெண்கள் பணி தொடங்குகையில் அது மிக எளிய ஒரு மலர்க்கோலமாக இருக்கும் என்று அவர் எண்ணியிருந்தார். ஆவணி மாதத்தில் அவர்கள் தங்கள் இல்லங்களுக்கு முன் மலர்க்களங்களை அமைப்பதை அவர் பார்த்திருந்தார்.

இளவேனில் மலர்க்களங்கள் நெடுங்காலமாக செய்து செய்து கைகளிலேயே அசைவென அமைந்திருந்தவை. பேசிச் சிரித்தபடியும் அவ்வப்போது எழுந்து சென்று வெவ்வேறு இடங்களில் அமர்ந்தும், சில தருணங்களில் பூசலிட்டபடியும் அவர்கள் அதை வரைந்து முடிப்பார்கள். அவர்கள் அனைவருக்குள்ளும் ஒற்றை உருவம் எப்படி அமைந்துள்ளது என அவர்களே அறிந்திருக்கவில்லை. பெரும்பாலும்

வசந்தத்தின் தெய்வமாகிய இந்திரன். மின்படையும் யானையூர்தியும் கொண்டவன். செங்கழுகுகளால் சூழப்பட்டவன். அதை முடித்த பின்னர் அது அவர்களின் தெய்வமாக ஆகிவிட்டிருப்பதனால் அதை வியந்து நோக்கவும் அவர்களால் இயல்வதில்லை.

கொற்றவை அன்னையின் ஆலயத்தின் பூசனைக்கு வண்ணக்களமெழுதும் விறலியர் ஓர் ஓரத்திலிருந்து முழுமையாகவே அம்மாபெரும் ஓவியத்தை வரைந்து செல்வதை அவர் கண்டிருக்கிறார். முதன்மைக் கோட்டு வரைவு உருவாக்கப்படுவதில்லை. அதற்குள் வண்ணங்கள் தீற்றப்படுவதும் இல்லை. முழுக்களத்தையும் ஒரு முறை நோக்கிய பின்னர் தென்மேற்கு மூலையில் ஒரு செம்மலரை வைப்பார்கள். அதைச் சுற்றி சிவந்த வண்ணத்தைக் கொண்டு ஒரு சுழல் வட்டம் போடுவார்கள். அங்கிருந்து மண் எனும் திரையை இழுத்து அகற்றி அடியில் பதிந்திருக்கும் ஓவியத்தை வெளியே எடுப்பதுபோல் அக்களம் எழுந்து வரும். தேவியின் முகத்தில் புன்னகை கனிந்திருக்கும். சிம்மமும் பூத கணங்களும் வெவ்வேறு கொடுந்தோற்றத்திலிருக்கும். சீறுபவை, சினப்பவை, வெறிப்பவை, அப்பாலென ஊழ்கத்திலமர்ந்தவை.

இறுதிக்கோட்டை விறலி வரைந்து முடிப்பதற்குள் முதலில் அமர்ந்திருக்கும் விறலிக்கு தெய்வமெழுந்தாகவேண்டும் என்பது நெறி. அக்கோடு வண்ணப்பொடியாக உதிர்ந்து முழுமையடையும் கணத்தில் அறியாப் பெருவிலங்கொன்றின் உறுமல்போல் ஓசையெழுப்பி விறலி வெறியெழுந்து நடுக்கு கொள்வாள். நோக்கி நிற்கையில் ஏற்படும் அத்தருணத்து மெய்ப்பு கொள்ளல் அவருக்கு இறையெழும் தருணமாகவே

எப்போதும் இருந்திருக்கிறது. ஆண்டோடு ஆண்டு நிகழ்ந்து நிகழ்வது என்னவென்று நன்கு அறிந்திருந்த போதும்கூட அவருக்கு அது அகப்பெருக்கையே அளித்தது. அவர் கால் நடுங்கி உடல் விதிர்க்க கைகளைக் கூப்பி இறுக்கியபடி நீர்கோத்த விழிகளுடன் நோக்கி நின்றிருப்பார்.

விறலி துள்ளி அதிர்ந்து சுழன்று தலைமுடியைச் சுழற்றி வரைந்த புள்ளியிலிருந்து அந்த ஓவியக்களத்தை அழிக்கத் தொடங்குவாள். வண்ணங்கள் கரைந்து குழம்பி முகில் தீற்றல்கள் என்றாகி நீர்க் குழம்பல் என்று மாறிப் பரவ அதில் தரையில் பிடித்திட்ட மீனென விறலி கிடந்து நெளிந்து துடிப்பாள். கண்ணெதிரில் அந்த ஓவியம் கலைந்து மறையும். முகிலில் விழிமயக்கோ என தோன்றி மறையும் தெய்வ உருவங்கள்போல. அதன் முழு உருவை எவரும் காணக்கூடாதென்பது நெறி. முழுதுருவைக் கண்டவர்கள் இல்லம் திரும்ப இயலாது. முழுதுரு விண்ணிலிருந்து இறங்கும் ஆகாய கங்கை போன்றது. விரிசடையரால் மட்டுமே அதை ஏந்த இயலும். பேரழகும் பெருங்கனிவும் முற்றிலும் துறந்த முனிவர்களாலன்றி பிறருக்கு அறிய ஒண்ணாதவை.

சூதர் பெண்டிரில் அத்தனை பெரிய களமெழுத்து கலை திகழும் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. சம்வகையுடன் புலரியில் அவர் சூதர்தெருக்களுக்குச் சென்றார். அங்கிருந்த முதிய சூதர்பெண்களிடம் சம்வகை நிகழ்ந்ததைச் சொன்னபோது அவர்கள் அனைவருமே அச்சமுற்றனர். “இல்லை தேவி, நாங்கள் எவரும் அத்தகைய தேவியை அறிந்ததில்லை. அதன் பூசனைமுறைகள் எவையும் நாங்கள் அறிந்திராதவை” என்று முதுசூதப்பெண் சொன்னாள். “மேலும் அறியாத் தெய்வத்திற்கு நாங்கள் பூசனை செய்யக்கூடாது... அது

எங்கள் குடித்தெய்வங்களாலும் குலதெய்வங்களாலும் மூதாதையராலும் ஏற்கப்படுவது அல்ல."

"அரசாணை என்று சொல்" என அப்பால் நின்றிருந்த கனகர் உறுமினார். "எவருடைய ஆணையாயினும் நெறிகளை நாங்கள் மீறக்கூடாது..." என்று முதுமகள் சொன்னாள். "நீங்கள்தான் இப்பூசனையை செய்திருக்கிறீர்கள். தீர்க்கசியாமரில் எழுந்த அழியாச் சொல் அதை கூறியது" என்றார் கனகர். "அச்சொல்லே எழுந்துவந்து எங்களுக்கு ஆணையிடவேண்டும்... நாங்கள் அறியாததை எப்படி செய்யமுடியும்?" என்றாள் முதுமகள். கனகர் ஏதோ சொல்வதற்குள் அருகணைந்த சம்வகை "நாம் ஒன்று செய்யலாம். இம்மகளிர் அனைவரும் வந்து அன்னையை வணங்கவேண்டும் என ஆணையிடலாம். அதை அவர்கள் தட்டமாட்டார்கள். அன்னையின் விழி பட்டால் அவர்களில் வெறியாட்டு எழக்கூடும்" என்றாள்.

"அது எங்ஙனம்...?" என கனகர் தயங்க "வெறியாட்டெழவேண்டிய உள்ளத்தை தெய்வங்களே முடிவுசெய்கின்றன" என்றாள் சம்வகை. "இப்படி ஒரு தெய்வம் இங்கிருந்தது என்றால் இவர்கள் அறியாமலிருந்திருக்க வாய்ப்பில்லை" என்று கனகர் சொன்னார். "ஆம், ஆனால் தெய்வம் புதைந்து கிடந்தது. ஆகவே அவர்களின் நினைவில் அல்ல கனவிலேயே அது வாழ்ந்திருக்கக்கூடும். அதை அவர்கள் நேரில் பார்க்கட்டும். அவர்களின் கனவுகள் திறந்துகொள்ளட்டும்" என்றாள் சம்வகை. "வரவர உன்னிடமிருந்து நான் ஆணைபெற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டேன்" என முணுமுணுத்த கனகர் "அவ்வாறே ஆகுக!" என்றார்.

அவர்கள் அனைவரும் மலர்த்தாலங்களுடன் வந்து அன்னையை வழிபடவேண்டும் என கனகரின் ஆணை அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் கலைந்த குரலில் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். குழம்பியும் பதற்றம்கொண்டும் அவர்கள் ஓயாது சொல்லாடிக்கொண்டே இருந்தனர். "எவ்வகையில் வழிபடுவது?" என முதுமகள் கேட்க "வெறும் அகல்விளக்கே போதும்" என்றாள் சம்வகை. அவர்கள் முடிவெடுத்து சிற்றகல்களில் சுடருடன் நிரைவகுத்து வஜ்ரநாகினி அன்னையின் சிற்றாலயம் நோக்கி சென்றார்கள்.

அந்த ஆலயம் என்ன என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஒருவரோடொருவர் பேசிக்கொண்ட முழக்கத்துடன் அவர்கள் சம்வகையைத் தொடர்ந்து சென்றார்கள். ஆனால் தென்மேற்குக் கோட்டைமுனையை அடைந்தபோது அவர்களின் நடை தளர்ந்தது. ஒரு முதுமகள் "எனக்கு தலைசுழல்கிறது" என்றாள். ஒரு சில இளம்பெண்கள் அழத்தொடங்கிவிட்டிருந்தனர். பலர் மெய்ப்புகொண்டு கழுத்தில் தசைகள் இறுகியிருக்க கைகளை சுருட்டிப்பற்றியபடி நடந்தனர். ஆலயத்தை தொலைவில் பார்த்ததுமே முதுமகள் "இந்த ஆலயம்... இந்த ஆலயம்!" என்று கூவினாள். பின்னர் அவர்கள் அந்த ஆலயம் நோக்கி கூச்சலிட்டபடி ஓடத்தொடங்கினர். சரிவிலிறங்கி அதனருகே சென்று விழுந்து வணங்கினர். "அன்னையே அன்னையே" என கூச்சலிட்டனர்.

முதுமகள் திரும்பி கனகரிடம் "எங்களுடன் ஒரு நாகசூத முதுமகள் இருக்கிறாள். முன்பு இங்கே வந்தவள், இங்கேயே தங்கிவிட்டவள். இல்லமற்றவள். உறவும் இல்லாதவள்... அவளுக்குத் தெரியும் இந்த ஆலயத்தின் பூசனைமுறைகள்...

அவளை அழைத்துவருக!" என்றாள். சம்வகை "எனக்குத் தெரியும் அவளை" என்றபின் "நான் அழைத்துவர ஆணையிடுகிறேன்" என்றாள். கனகர் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று வந்து இணைந்துகொள்ளும் விந்தையை உணர்ந்தபடி நின்றிருந்தார். சூதப்பெண்கள் அந்தக் களமுற்றத்திலேயே அமர்ந்துவிட்டனர். கைகூப்பி அழுதபடியும் அரற்றியபடியும் ஒருவரை ஒருவர் தழுவியபடியும் அங்கிருந்தனர்.

சற்றுநேரத்திலேயே குனிந்த உடலுடன் கைகளை காலென வீசியபடி முதுமகள் வந்தாள். சம்வகை அருகே சென்று "அன்னையே, இந்த ஆலயத்தின் பூசனைகளை நீங்கள் அறிவீர்களா?" என்றாள். அவள் ஒன்றும் சொல்லாமல் ஆலயத்தை நடுங்கும் தலையுடன் நோக்கினாள். பின்னர் மெல்ல நடந்து ஆலயத்தருகே சென்று உள்ளே பார்த்தாள். அவள் முகம் புன்னகையால் மலர்ந்தது. திரும்பி சம்வகையிடம் "அன்னைக்கான பூசனைகளை நான் இயற்றுகிறேன்..." என்றாள். "நான் நாள்தோறும் செய்யும் பூசனைகள்தான் அவை..." கனகர் என்ன சொல்கிறாள் என கையசைவால் கேட்டார். சம்வகை பிறகு சொல்கிறேன் என விழிகாட்டினாள்.

நாகசூத முதுமகளின் ஆணைப்படி பூசனைகள் ஒருக்கப்பட்டன. அனைத்தும் ஒருங்கியதும் அரசிக்கு செய்தியறிவிக்க சிற்றமைச்சர் சூரியசேனரை அனுப்பிவிட்டு கனகர் ஓரமாக மரநிழலில் அமர்ந்தார். சூதப்பெண்கள் காட்டுக்குள் சென்று மலர் கொண்டுவந்தனர். அவர்களிடம் முதுமகள் மெல்லிய குரலில் ஆணையிட்டுக்கொண்டிருந்தாள். அவர்கள் மலர்க்களம் அமைக்கப்போகிறார்கள் என்பதே சற்றுப்பொழுது கழித்துத்தான் அவருக்குப் புரிந்தது. சம்வகை அருகே வந்து "அவர்கள்

தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள். என்ன சொல்கிறார்கள் என்ன புரிந்துகொள்கிறார்கள் எதுவும் புரியவில்லை" என்றாள். "அரசியர் கிளம்பிவருவதற்கு முன் இவை முடியவேண்டும்" என்றார் கனகர்.

மலர்க்குடலைகளுடன் சூதப்பெண்கள் கூடினர். மலர்களை விரித்த பாயில் குவித்தனர். முதுநாகினி நீராடி ஈர ஆடையுடன் கண்களை மூடியபடி நடுக்குற்ற உடலும் அசைந்தாடும் கால்களுமாக நடந்துவந்தாள். அவள் குனிந்து நடக்கையிலேயே அத்தனை விசையும் நிமிர்வும் எப்படி உருவாகிறது என்று அவர் வியந்துகொண்டிருந்தார். அங்கு ஒலித்துக்கொண்டிருந்த குறுமுழவுகளும் சிறுமுரசும் எழுப்பிய தாளமே அவ்வசைவை உருவாக்குகிறது போலும். அன்றி உடலசைவிலிருந்து அத்தாளத்தை பெறுகிறார்களா? உறுமி தேம்பலோசை எழுப்பி அதிர்ந்துகொண்டிருக்க முதுநாகினி வந்து அக்களத்தின் சரிவிலிறங்கி முற்றத்தை அடைந்து உள்ளிருக்கும் தேவி சிலையை நோக்கி நின்றாள்.

அவள் சிற்றுடல் அதிர்ந்து துள்ளிக்கொண்டிருந்தது. சுற்றும் முற்றும் நோக்கியபின் வலப்பக்கத்தில் பெரிய கூடையில் நிறைத்து வைத்திருந்த செம்மலர்களை நோக்கி சென்று அள்ளி இரு கைகளாலும் எடுத்து அம்மலர்களை களத்தில் வீசினாள். அவை பறந்து சென்று விழுந்தன. மும்முறை மூன்று வண்ணங்களில் மலர்களை வீசிய பின்னர் அவள் சென்று தென்மேற்கு மூலையில் அமர்ந்துகொண்டாள். அவளுடைய இரு கைகளுக்கும் அருகே மலர்க்கூடைகளை கொண்டு வைத்தனர். அவற்றை அள்ளி அள்ளி மண்ணில் போடத்தொடங்கினாள். என்ன நிகழ்கிறதென்று கனகர் திகைப்புடன் பார்த்திருந்தார்.

மலர்களை அள்ளி வெறுமனே வீசுவது போலவும் குவிப்பது போலவும்தான் தோன்றியது. ஆனால் சற்று நேரத்திலேயே நீலநிற நாகம் செவ்விழிகளுடன் முகம் தெளிந்தது. மேலும் மேலும் சூதப்பெண்டிர் சன்னதம் கொண்டு உடல் நடுக்குற்று அக்களத்தின் வெவ்வேறு மூலைகளில் அமர்ந்து மலர்களை அள்ளி நிலம்பரப்பத் தொடங்கினர். களம் விரிந்து பரவிக்கொண்டிருந்தது. அதில் நாகபடங்கள் தெளிந்தன. தேவியின் காலடிகள் துலங்கின. அவள் சடையென விரிந்த நாகச்சுருள்கள் உருவாகி வந்தன.

அரண்மனையிலிருந்து எப்போது அரசியர் எழவேண்டும் என்று ஏவல்பெண்டு வந்து கேட்டாள். அக்களம் எப்போது முடியும் என்று தெரியாததனால் கனகர் "பொழுது அணைகையில் நான் ஆணையிடுகிறேன்" என்றார். அதற்குள் பூசனைக்குரிய பொருட்களுடன் ஒரு வண்டி அங்கே வந்தது. அதை ஓட்டி வந்த காவற்பெண்டிடம் ஆணையிட்டுவிட்டு அவர் மீண்டு வந்து பார்த்தபோது வட்டமலரின் இதழ்கள்போல நாகங்களில் ஏழு தலைகள் எழுந்துவிட்டிருந்தன. அவரால் அவற்றை நோக்க முடியவில்லை. பின்னர் அவர் உள்ளத்தில் அந்நாகங்கள் நெளிந்துகொண்டே இருந்தன என்றாலும் அவர் திரும்பி களத்தை பார்க்கவே இல்லை. இரண்டாவது தூதன் வந்து "நிமித்திகர் குறித்துக் கொடுத்த பொழுதுக்கு இன்னும் இரண்டு நாழிகையே உள்ளது. அரசியர் அனைவரும் ஒருங்கியிருக்கிறார்கள். அவர்கள் கிளம்பலாமா என்று கேட்டுவரும்படி அரசி ஆணையிட்டார்" என்றான். கனகர் வந்து களத்தை பார்த்தபோது பெரும்பகுதி பணி முடிந்திருந்தது. அவர் திறந்த வாயுடன் எண்ணங்களற்று நின்றார். ஒற்றன் அருகே வந்து "அமைச்சரே" என்றான். கனகர் திரும்பி நோக்கி "அவர்களுக்குத்தான் பொழுது குறித்துக் கொடுத்திருக்கிறோமே?

அதன்பிறகும் ஏன் திரும்பத் திரும்ப நம்மை உசாவிக்கொண்டிருக்கிறார்கள்? அரசிக்கு எண்ணமிருந்தால் குறித்த நேரத்தில் கிளம்பட்டும். அதற்கு மேல் நானொன்றும் சொல்வதற்கில்லை" என்றார். அச்சினத்தை நோக்கி திகைத்த ஒற்றன் தலைவணங்கி அகன்றான்.

கனகர் அந்த நாகச்சுருள் ஓவியத்தை பார்த்துக்கொண்டிருந்தார். ஒரு வலுத்த காற்றில் மலர்களில் அவ்வுருவம் அப்படியே மறைந்து வண்ணச்சிதறலாக மாறிவிடக்கூடும். எனில் அறியாத பிறிதொரு காற்றால் இம்மலர்கள் தொகுக்கப்பட்டு இவ்வடிவம் உருவாகி வந்திருக்கின்றதா? இப்பெண்டிரின் கைகளைப் பற்றி இயக்கும் காற்று. மரக்கிளைகளையும் இலைகளையும் ஆள்வதுபோல் அது இவர்களைக்கொண்டு தன்னை நிகழ்த்துகிறது. காற்றை ஆள்பவள் அவள்தான் போலும்.

சில நாட்களாகவே தன்னிலெழும் எண்ணங்கள் அனைத்துமே பிறிதொருமுறை நோக்குகையில் பித்தெனத் தெரிபவை. ஆனால் தன்னுள் ஓடும் எண்ணங்களை அவரால் நிறுத்த முடியவில்லை. உள்ளிருந்து ஒருவர் காய்ச்சல் வெறியில் அவற்றை சொல்லிக்கொண்டிருப்பதைப்போல. அச்சொற்களினூடாக அவர் உள்ளிருக்கும் அனைத்தையும் கலைத்து பிறிதொன்றாக்கி அடுக்குகிறார். அவர் சொன்ன அனைத்தையும் அள்ளி ஓரமாக தள்ளிவிட்டே அவர் அன்றாடத்தில் புழங்க முடிந்தது. அமைச்சுப் பணிகளை ஆற்ற முடிந்தது. வெளியே இருந்து வரும் ஒவ்வொரு சொல்லும் அந்த அடுக்குகளை சிதைக்கின்றன. அவரை எரிச்சல்கொண்டு கூச்சலிடச்செய்கின்றன.

கீழிருந்து இளம் சூதப்பெண்ணொருத்தி மேலே ஏறி வந்து "களம் வரைந்து முடிக்கப்பட்டுவிட்டது. அறுதி மலர் வைக்கப்படவில்லை. அது வைக்கப்படும்போது இந்த ஓவியமும் கலைக்கப்படத் தொடங்கிவிடவேண்டும் என்பது நெறி. ஆகவே அரசியர் வரலாம்" என்றாள். அவளுக்கு அந்தச் சடங்கில் ஓவியம் கலையும் என எவ்வண்ணம் தெரியும் என்று கனகர் எண்ணினார். அவர்கள் முன்பு அக்களத்தை வரைந்ததே இல்லை. ஆனால் எங்கோ அவர்கள் எவருமறியாமல் அக்களத்தை வரைந்து கொண்டிருந்திருக்கிறார்கள். வெளியே பருவடிவான முற்றத்தில் வரைந்திருக்கலாம். கனவுகளில் வரைந்திருக்கலாம்.

சூதப்பெண் "பூசனைக்கு தாங்கள் ஆணையிடவேண்டும், அமைச்சரே" என்று உரத்த குரலில் சொன்னாள். "ஆம், பூசனைகள் தொடங்கட்டும்... அரசியர் இந்நேரம் கிளம்பிவிட்டிருப்பார்கள் என நினைக்கிறேன்" என்றபின் திரும்பிச்சென்று சாலை விளிம்பில் நின்ற சூதனிடம் "என்ன செய்கிறாய் இங்கே? அரசியர் கிளம்பிவிட்டார்களா? செய்தி தெரியுமா உனக்கு?" என்றார். "அறியேன், அமைச்சரே" என்று அவன் சொன்னான். "பிறகென்ன செய்கிறாய் நீ? அறிவிலி!" என்றார் கனகர். அவன் ஏற்கெனவே பலமுறை அவரிடம் சினச்சொல் பெற்று சலிப்புடன் இருந்தான். "என் பணியை நான் செய்கிறேன். சென்று உசாவி வரவேண்டுமென்றால் என் காவலுக்கு பிறரை அனுப்புக!" என்றான்.

"என்ன சொல்கிறாய்?" என்று கனகர் சீற்றத்துடன் கையை ஓங்க அவன் "இல்லையெனில் நீங்கள் இங்கே வாளேந்தி காவல் நிற்கலாம்" என்றான். "இழிமகனே!" என்றார் கனகர். "அதை

திரும்ப நான் சொல்ல நெடும்பொழுது ஆகாது. நான் அவ்வாறு சொல்வதில்லை. குடிப்பிறப்பும் நெறியும் என்னை ஆள்கின்றன" என்றான். கனகர் தளர்ந்து அவனை வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தார். அவன் அவரைப் பார்த்து முகம் கனிந்து "இங்கு அனைவருமே பித்துநிலையில்தான் இருக்கிறோம், அமைச்சரே. பித்தை உள்ளொடுக்கித்தான் புழங்க வேண்டியிருக்கிறது. இல்லையெனில் ஒருவரை ஒருவர் கொன்று குவித்து இங்கே விழுந்து கிடப்போம்" என்றான்.

கனகர் பற்களைக் கடித்து அவனை நோக்கி ஓர் அடி எடுத்துவைத்தார். அவன் அவர் விழிகளை நேர்நோக்கி "இங்கே எவரும் இன்னொருவரை கொல்வதற்கு இரண்டாம் முறை எண்ணும் நிலையில் இல்லை. சற்றுமுன் இந்த வாளால் உங்கள் கழுத்தை வெட்டினேன். அவ்வாறு நிகழவில்லை என்பதை அடுத்த கணம்தான் உணர்ந்தேன்" என்றபின் சலிப்புடன் "வேண்டாம். சொல் காக்க! செயல் காக்க!" என்றபின் தலையசைத்தான். "ஆம்" என்றார் கனகர். "பொறுத்துக்கொள்க... நான் நிலையில் இல்லை." அவன் "நானும்தான்... நான் கிடந்து துயின்று பதினைந்துநாள் கடந்துவிட்டது" என்றான்.

கனகர் எடை மிக்க உடலை உந்தித் திருப்பி அப்பால் நடந்து சென்றார். அவரில் ஆழ்ந்த சலிப்பு ஒன்று எழுந்தது. அழுத்தமான மெழுக்குபோல, பசைபோல அது அவருடைய எண்ணங்கள் அனைத்தையும் பற்றிக்கொண்டது. ஒவ்வொன்றும் அசைவிழந்தன. உடற்தசைகள்கூட இறுகி நின்றன. நோக்கில் தெரிந்த அத்தனை அசைவுகளும் மிக மெல்ல நிகழ்வதுபோல, அப்பசையிலிருந்து விடுவித்துக்கொள்ளும் முயற்சியே அசைவுகளாக மாறியவைபோலத் தோன்றின. ஒவ்வொரு செயலுக்கு அடியிலும் இருப்பது சலிப்பே. எழுந்து பறந்து

சுழன்று சுழித்தாலும் அமையவேண்டியது அதில்தான். சலிப்பு மட்டுமே மெய். பிற அனைத்தும் அந்த மெய்யை அஞ்சி சென்று அடைக்கலம் புகுந்துகொள்ளும் பொய்கள்.

ஒன்றுமே நிகழாதபோது எழும் சலிப்பை அவர் அறிந்திருந்தார். ஒவ்வொரு கணமும் எண்ணியிராதவை நிகழ்ந்துகொண்டிருக்க, ஒவ்வொரு செயலையும் புதியதெனக் கண்டடைந்து செய்யவேண்டியிருக்க எழும் அந்தச் சலிப்பை அதற்கு முன் அறிந்ததில்லை. அதுதான் மெய்யான சலிப்பு. எப்போதுமுள்ள சலிப்பு. ஒரு கண்டடைதல்போல் அவர் ஒன்றை உணர்ந்தார். அச்சலிப்பு அவர் உணர்ந்த அச்சமின்மையிலிருந்து எழுந்தது. குருக்ஷேத்ரப் போர் முடிந்தபின் அச்செய்திகள் வருந்தோறும் அவர் தன் இறப்பையே எண்ணிக்கொண்டிருந்தார். தான் இறக்கக்கூடும் என. இறந்தால் என்ன ஆகும் என. பின் இறப்பின் வெவ்வேறு தருணங்களை உள்ளத்தால் நடித்தார். நாளுக்கு நூறுமுறை இறந்தார்.

இறப்பு முதலில் அச்சமூட்டி சிலிர்க்கச் செய்தது. எடையுடன் மூடிய சலிப்பிலிருந்து கிழித்து வெளிவரச் செய்தது. ஆகவே மீண்டும் மீண்டும் அதை கற்பனையில் நிகழ்த்தினார். பின்னர் அந்த அச்சம் மறைந்தது. கழிவிரக்கம் உருவாகியது. கழிவிரக்கம் இன்னொரு வகையில் அலுப்பை இல்லாமலாக்கியது. எண்ணி எண்ணி இரங்கி விழிநீர் வார்த்து ஏங்கி படுத்திருக்கையில் எழும் நிறைவு இனிதாக இருந்தது. ஆனால் அதுவும் சின்னாட்களுக்கே. பின்னர் சாவு குறித்த எண்ணம் இயல்பான ஒரு கீற்று என வந்துசென்றது. ஒவ்வொரு எண்ணத்துடனும் அது இணைந்துகொண்டது. அதிலிருந்து அச்சமும் துயரும் மறைந்தபோது அது ஓர்

உறுதிப்பாடாயிற்று. சாகவில்லை. ஆனால் செத்ததற்கு நிகர்தான்.

அந்த உச்ச உளச்சோர்வு செயல்பட்ட முறையிலிருந்த விந்தைகளையும் அவர் நோக்கிக்கொண்டிருந்தார். ஒன்றும் செய்வதற்கு உளம்கூடவில்லை. கண்ணெதிரே ஓலைகளில் பணி குவிந்திருந்தது. அவற்றை வெறுமனே நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தார். எந்த எண்ணமும் கோவையாக உருக்கொள்ளவில்லை. ஆகவே பெரும்பாலான பொழுதுகளில் வெறித்த விழிகளுடன் அமர்ந்திருந்தார். ஆனால் அது துயிலை கொண்டுவரவில்லை. அமர்ந்திருக்கையில் துயில்வந்து அழுத்திச் சாய்த்தது. சற்றே துயின்று விழித்துக்கொண்டால் உள்ளம் விசைகொண்டு சொற்களைப் பெருக்கியது. சோர்வே ஓய்வுக்கு எதிரானதாக ஆகக்கூடும் என அவர் அப்போதுதான் அறிந்தார்.

சாவு குறித்த அச்சம் அகன்றபோதுதான் சலிப்பு மேலும் அழுத்தம் கொண்டது என அவர் புரிந்துகொண்டார். அச்சம் அகன்ற சாவென்பது சாவே அல்ல. அச்சமே அலுப்பை வெல்ல மானுடருக்கிருக்கும் ஒரே வழி. ஆகவேதான் உயிரை வைத்து போராடுகிறார்கள். ஆணவத்துக்காக, பெண்ணுக்காக, நிலத்துக்காக, உரிமைக்காக, தெய்வங்களுக்காக கொல்லவும் சாகவும் துணிகிறார்கள். சாவின் விளிம்பில் நின்றிருக்கையில் அச்சம் பேருருக்கொண்டு சூழ்ந்திருக்கிறது. அப்போது மட்டுமே அலுப்பென்பது இல்லை. இழப்பும் நோயும் சிறுமைப்படுத்தப்படலும் சிறிய இறப்புக்கள். இறப்பை எண்ணி எண்ணி பேருருவம் கொள்ளச் செய்கிறார்கள். அது அச்சத்தை கடலெனப் பெருக்கி அவர்களுக்கு அளிக்கிறது. அதில் முடிவிலாது திளைக்கிறார்கள்.

மானுடரின் அச்சமே போர்களின் அடிப்படை. அஞ்சியே நிகழ்கின்றன போர்கள். பெரியோனை அஞ்சி, எளியோனை வென்று உண்டு வலுப்பெற முயல்கிறார்கள். செல்வம் சேர்க்கிறார்கள். அறிவை குவிக்கிறார்கள். நினைவை தொகுத்துவைக்கிறார்கள். சற்று சலித்தால், ஒருகணம் உளம் ஓய்ந்தால் வந்து கவ்விவிடும் சாவு குறித்த அச்சமில்லையேல் இந்நகர் இல்லை. இக்கோட்டைகள் இல்லை. அரண்மனையும் கருவூலங்களும் அறநூல்களும் அவைகளும் இல்லை. இப்போர் என்னை அச்சமில்லாதவனாக ஆக்கிவிட்டிருக்கிறது. தொழுநோயாளி வலியுணர்வை இழப்பதுபோல. கைகால்கள்போல உதிர்கின்றன. உடல் மட்கி அழிகிறது.

எண்ணி எண்ணிப் பெருக்கி எழுப்பி எழுப்பி நிறைத்து சலித்து அழித்துச் சிதைத்து வெறுமைகொண்டு அவ்வெறுமையை அஞ்சி மீண்டும் எண்ணி எண்ணிப் பெருக்கி எழுப்பி எழுப்பி நிறைத்து சலிப்பை நாடும் இந்த ஓயாச் சுழற்சியில் ஒருதுளி. அச்சுழற்சியைக் காணும் கண்கொண்ட தீயூழினன். கனகர் மீண்டும் சிறுதுயில் ஒன்றில் மூழ்கி திடுக்கிட்டு எழுந்தார். எவரேனும் பார்க்கிறார்களா என நோக்கினார். அப்போது தோன்றியது அத்தனை பேரும் அவ்வண்ணமே இருக்கிறார்கள் என. அந்தக் காவலன். அந்த ஏவல்பெண்டு. அந்தப் புரவி. அஸ்தினபுரியின் மாளிகைகளும் காவல்நிலைகளும்கூட சோர்ந்து அரைத்துயிலில் என நின்றிருந்தன.

புரவியில் வந்திறங்கிய காவல்பெண் "அரசியர் கிளம்பிவிட்டார்கள்" என்றாள். கனகர் "முழவு ஒலிகள் எழவில்லையே?" என்றார். அவள் "எந்த ஓசையும் இன்றி இங்கு வரவேண்டுமென்பது சடங்கு. அதை தாங்களே மும்முறை என்னிடமும் கூறினீர்கள்" என்றாள். கனகர் "ஆம், எந்த

ஓசையும் இருக்கலாகாது. ஓட்டைக்கலத்திலிருந்து நீரொழுகிப் போவதுபோல் அரண்மனைவிட்டு வரவேண்டும் என்று நாகினி கூறினாள்" என்றார். "வந்து கொண்டிருக்கிறார்கள்" என்று அவள் கூறினாள். கனகர் திரும்பி வந்து அங்கு நின்றிருந்த சூதப்பெண்ணிடம் "பூசனைகள் நிகழட்டும். இன்னும் அரை நாழிகைக்குள் அரசியர் இங்கு வந்துவிடுவார்கள்" என்றார்.

அவள் தலையசைத்து இறங்கிச் சென்று சிற்றாலயத்திற்குள் இருந்த முதிய சூதப்பெண்ணிடம் அச்செய்தியை கூறினாள். முழவுகள் ஓய்ந்தன. சூதப்பெண்ணொருத்தி வலம்புரிச்சங்கை உதடுகளில் பொருத்தி ஓம் ஒலி எழுப்பினாள். ஆலயமுகப்பில் செந்நிறப் பட்டுத் திரைச்சீலையொன்று போடப்பட்டது. உள்ளே சூதப்பெண் செய்யும் சடங்குகளில் ஒரு சிற்றகல் சுழல்வது மட்டும் வெளியே தெரிந்தது. கனகர் அதை நோக்கி நின்றார்.

நீர்ச்சுடர் - 12

பகுதி இரண்டு : குருதிமணிகள் – 6

களம் ஒருங்கி வஜ்ரநாகினியின் உருவம் முழுமையாகவே எழுந்துவிட்டிருந்தது. அதை மலர்களில் அமைப்பது ஏன் என கனகர் எண்ணிக்கொண்டார். அவள் காட்டில் விரிந்த மலர்ப்பரப்பில் இயல்பான வண்ணங்களாக தோன்றியிருக்கக்கூடும். ஒரு மெல்லிய சாயலாக. அதைக் கண்ட யாரோ ஒரு மூதன்னை அதை மீண்டும் தன் கைகளால் களமுற்றத்தில் அமைத்திருக்கக்கூடும். தொல்நாகர் குலத்து அன்னை. வஜ்ரநாகினி அன்னை புவியின் உயிர்க்குலங்கள் அனைத்தையும் படைத்த முதலன்னை கத்ருவின் மகள்

குரோதவசையின் மகளான புஷ்டியின் நூற்றெட்டு மகள்களில் ஒருத்தி. கருக்குழவிகளை காப்பவள். கருவறைக்குள் சிறிய நாகக்குழவியெனச் சென்று தானும் உடனிருந்து அவற்றுடன் விளையாடுபவள். கருவுற்ற பெண்கள் அவளை கனவில் காண்கிறார்கள். எட்டு மாதம் கடந்த பின் அசைவென அவளை வயிற்றில் உணர்கிறார்கள்.

பத்து தலைகொண்ட நாகங்களின் பீடத்தில் அன்னை சுருளுடல் படிந்து அமர்ந்திருந்தாள். பாரதவர்ஷமெங்கும் மகவுப்பேறுக்குரிய தெய்வங்கள் அனைத்தும் நாகங்களே. பேராலயங்களின் புறச்சுற்றில் கல்பீடத்தில் அவை அமர்த்தப்பட்டுள்ளன. விண்ணளந்தோனும் விடமுண்டவனும் கதிரோனும் மின்னோனும் மைந்தனும் கரிமுகனும் மூவன்னையரும் அங்கே கோயில்கொண்டு அமர்ந்திருந்தாலும் அன்னையரும் கன்னியரும் நாகங்களை வணங்காது கடந்துசெல்வதே இல்லை. நாகங்களை மட்டும் வணங்கி மீள்பவர்களும் உண்டு. நாகபஞ்சமி நாளில் பிறிதொரு தெய்வத்தை எண்ணவும் கூடாதென்கின்றன நெறிகள். பிறவிநூலில் நாகக்குறை இருக்குமென்றால் அது காமத்தில், கருவுறுதலில், குடிப்பெருகுதலில் தீங்கென வெளிப்படும் என்று நிமித்திகர் கூறுகிறார்கள்.

இப்புவியே ஒருகாலத்தில் நாகங்களால் நிறைந்திருந்தது என்று சொல்லும் நூல்களை அவர் படித்திருந்தார். அவையன்றி வேறு உயிர்களே இல்லை. அன்று ஆண் என்று எவருமில்லை. நாகங்கள் அனைத்தும் ஆண்களே. அவை தங்களுடன் தாங்களே விளையாட தங்கள் வால்முனைகளை ஆண்களாக்கிக்கொண்டன. வால்களை வாயால் கவ்வி விழுங்கி தங்களைத் தாங்களே புணர்ந்தன. அவ்விளையாட்டின்

விளைவாக தங்களுள் ஊறிய தனியுணர்வுகள் சிலவற்றை ஆண்களுக்கு அளித்தன. அவ்வியல்புகள் கூர்கொண்டு திரண்டு விலங்குகள் ஆயின. பறவைகளும் பூச்சிகளும் புழுக்களும் ஆயின. மானுடர் ஆயின. நிமிர்வு யானையாகியது. சீற்றம் சிம்மம் ஆகியது. நிலைகொள்ளாமை குரங்காகியது. சுடர்வு பருந்தாகியது. தண்மை மயிலாகியது. அவை நாகங்களுடன் புணர்ந்து மேலும் விலங்குகளை ஆக்கின. விலங்குகள் பெருகிப்பெருகி நாகங்களை வென்றன. அவற்றுடன் பொருதி வெல்ல நாகங்களால் இயலவில்லை. ஏனென்றால் அவையனைத்துமே நாகங்களின் குழவிகள்.

மானுடனாகியது எது? ஞானமுழுமைக்கான தேடலே மானுடனை நாகங்களில் இருந்து உருதிரட்டி எழச்செய்தது என்று நூல்கள் கூறின. அறிவை உணர்ந்ததுமே அறியாமையை கண்டடைந்தான். கனிவை அறிந்ததும் கசப்பை. பணிதலை உணர்ந்ததும் சீற்றத்தை. மானுடன் எப்போதும் நாகமென தன்னை உணர்ந்தபடியும் இருக்கிறான். ஆகவேதான் துயர்களில் சுருண்டுகொள்கிறான். வலியில் நெளிகிறான். துயரில் துவள்கிறான். உவகையில் குழைந்தாடுகிறான். மானுடப்பெண்கள் அனைவரும் நாகினிகளே. பெண்ணில் அவள் ஆழமெழுகையில் அவள் நாகமாகிறாள். விழிவெறித்து உடல்மெழுக்குகொண்டு நெளிய மூச்சு சீறி எழுகிறாள். நாகங்களையே ஆண்கள் புணர்கிறார்கள். நாகங்களுடன் போரிடுகிறார்கள். நாகங்களை வென்று நிலைகொள்கிறார்கள். செயலற்றவர்களாக நாகங்களிடமே மன்றாடவும் செய்கிறார்கள்.

சிற்றமைச்சர் சூரியசேனர் விரைந்து வந்து கனகரிடம் "அரசியர் அரண்மனையிலிருந்து கிளம்பிக்கொண்டிருக்கிறார்கள். தேர்கள்

புறப்பட்டுவிட்டன" என்றார். கனகர் சீற்றத்துடன் அவரை நோக்கி பற்களைக் கடித்தபடி "அரைநாழிகைக்கு ஒருமுறை எவரேனும் என்னிடம் வந்து இதை சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்... அவர்கள் கிளம்பிவிட்டார்களா என்று எவரேனும் பார்த்தார்களா?" என்றார். சூரியசேனர் விழிகளிலும் சீற்றம் தெரிந்தது. ஆயினும் தணிந்த குரலில் "நான் எனக்கு கூறப்பட்டதைத்தான் இங்கு கூற முடியும். உரைக்க வேண்டியதில்லை என்று ஆணையிலிருந்தால் அதை கூறுக!" என்றார்.

கனகர் துயில்நீப்பால் சிவந்த விழிகளால் அவரை பார்த்தார். அவர் தலை நடுங்கிக்கொண்டிருந்தது. உதடுகளை மடித்து கடித்திருந்தார். சூரியசேனரும் தன் விழிகளை விலக்கவில்லை. மிக இளையவர். முகத்தில் தாடி மென்மையாக படிந்திருந்தது. பெண்களுடையவை போன்ற உதடுகள். ஒளி ஊடுருவும் காதுமடல்கள். மார்பில் அகல்விளக்கின் மேல் கரி படிந்ததுபோல் கரிய மயிர்த்தீற்றல். அவர் சாதுவனை நினைவுகூர்ந்தார். அவரால் இளம் அகவை கொண்டவர்களை இயல்பாக ஏற்றுக்கொண்டு பழக முடிவதில்லை. சில தருணங்களில் மிகைநெகிழ்வு, சிலதருணங்களில் அதை மறைக்கும் பொருளிலாச் சீற்றம்.

கனகர் பெருமூச்சுடன் தளர்ந்தார். "செய்யும் பணியை முறையாகச் செய்க... சொல்லொடு சொல் நிற்பதற்கு அமைச்சுத்தகுதி வேண்டியதில்லை" என வேறெங்கோ நோக்கியபடி சொன்னார். மேலும் கூர்மையாக ஏதேனும் சொல்லலாம் என்று எண்ணினார். ஆனால் சொல்லவேண்டிய சொற்கள் எவையும் எழவில்லை. அவர் உள்ளம் களைத்து துவண்டிருந்தது. அத்துடன் தன் சீற்றத்தின் பொருளின்மையும்

அவருக்கு எப்போதும் தெரிந்துகொண்டுதானிருந்தது. சற்று முன்பு வரை அரசியர் அங்கிருந்து கிளம்பவில்லை என்ற செய்திதான் அவருக்கு வந்துகொண்டிருந்தது. "கிளம்பிவிட்டார்களா இல்லையா? அங்கே என்ன செய்கிறார்கள் அமைச்சர்கள்?" என அவர்தான் ஏவற்பெண்டிடம் கூச்சலிட்டார்.

எந்நிலையிலும் எவரிடமும் சீற்றம் கொள்பவராக அவர் ஆகிவிட்டிருந்தார். அச்சீற்றம் பொருட்களின்மீது கூட திரும்பியது. அன்று காலையில்கூட அவர் ஒரு கலத்தை தூக்கி வீசி உடைத்தார். ஏவலனை வசைபாடி கையோங்கி அறையச் சென்றார். அவரிடம் பேசவே ஏவலர் அஞ்சினர். அவர் அறைகளுக்குள் நுழைந்ததும் பேச்சை நிறுத்திவிட்டு காத்திருந்தார்கள். கனகர் எவரிடமென்றில்லாமல் "அறிவிலிகள்!" என்று உறுமிவிட்டு திரும்பி ஆலயத்தை நோக்கி சென்றார். செல்லும் வழியிலேயே வாயில் ஏதோ புகுந்ததுபோல் இரு பக்கமும் துப்பிக்கொண்டார். அவர் காலில் கல் ஒன்று இடறியது. காலில் அணிந்திருந்த குறடு அப்பால் தெறித்தது. அவர் வலியுடன் பல்லைக் கடித்தபடி நின்றார்.

அருகே நின்ற ஏவல்பெண்டு ஓடிவந்து கால்குறடை எடுத்து அவர் காலில் அணிவிக்க குனிய அவர் "உம்" என அவளை விலக்கினார். அவள் அவ்வொலியின் பொருள் புரியாமல் மீண்டும் குறடை அவர் காலடியில் அணிவிக்க முயல கனகர் "விலகு..." என்றார். அவள் அதை அவருடைய சினமாக எடுத்துக்கொண்டு முகம் சுருங்கினாள். "நான் ஷத்ரியன் அல்ல. அந்தணர் மனைவி மைந்தர் மாணவர் ஆகியோரிடமிருந்து அன்றி பிறரிடமிருந்து ஏவல்பணியை பெற்றுக்கொள்ளலாகாது..." என்றார். அவள் தலையில் கைவைத்து "மைந்தர் பெருகுக!" என்றார். அவள் விசும்பி

அழுதபோதுதான் அவர் அவளை பார்த்தார். நாற்பது அகவைக்குமேல் சென்ற பேரிளம்பெண். மெலிந்து வறண்ட உடலும் குழிந்த விழிகளும் கொண்டிருந்தாள்.

தான் ஏன் அதை சொன்னோம் என அவருக்கு திகைப்பு எழுந்தது. ஆனால் அவள் தலையை பிறிதொரு முறை தொட்டு "என் நாவில் ஏன் அச்சொல் எழுந்தது என அறியேன். ஆனால் அது அந்தணன் வாழ்த்து, அதை கடைக்கொள்ளவேண்டியவை அவன் வணங்கும் தெய்வங்கள். நீ மக்களால் சிறப்பாய், குடிமுதல் அன்னையென அமைவாய்..." என்றார். அவள் விசும்பி அழுதுகொண்டிருந்தாள். கொழுநனை இழந்தவள் எனத் தெரிந்தது. மைந்தரையும் இழந்திருக்கக்கூடும். "அவர்கள் மீண்டு வருவார்கள், பெண்ணே. நீ ஒரு வாயில் அவர்களுக்கு. அதை நினைவில்கொள்க!" என்றபின் மூன்றாம்முறை அவள் தலையைத் தொட்டு வாழ்த்தியபின் நடந்தார்.

புரவியில் வந்திறங்கிய பிறிதொரு சூதக் காவல்பெண்டு "அரசியர் அணுகிக்கொண்டிருக்கிறார்கள், அரண்மனை முகப்பை கடந்துவிட்டனர்" என்றாள். அதுவரைக்கும் அவர்கள் தேரில்தான் வந்துகொண்டிருக்கிறர்கள் என்ற உளப்பதிவு கனகரிடம் இருந்தது. அப்பதிவு ஏன் தன்னுள் உருவாயிற்று என்று அவர் வியந்தார். அவர்கள் தேரில் வரவில்லை என்பதை அவர் அறிந்திருந்தார். தேரில் வரலாகாது என்ற ஆணையை அவர்தான் அளித்திருந்தார். நடந்து வரவேண்டும் என முதுநாகினி ஆணையிட்டிருந்தாள். அவர் மேலாடையை சீரமைத்தபடி சரிவில் ஏறிச்சென்று பெருஞ்சாலையிலிருந்து மண்பாதை பிரியுமிடத்தில் நின்றார். அள்ளிக்கொட்டிய பச்சைச்செம்மண் பரவிய பாதை உருவி நீட்டிபோட்ட

குருதிக்குடல்போல கிடந்தது. அதில் நூற்றுக்கணக்கான காலடிகள் பதிந்திருந்தன.

தொலைவில் ஒரு புரவிவீரன் சீரான விசையில் வருவது தெரிந்தது. அவர் அருகே வந்து புரவியை நிறுத்தி கால் சுழற்றி இறங்கி அவரை அணுகி "அரசியர் அணுகிக்கொண்டிருக்கிறார்கள். இச்சாலையை இறுதியாக ஒருமுறை பார்த்துவிடலாம் என்று வந்தேன்" என்றான். அது பெண் என்பதை அவர் கண்டார். எங்கோ அறிந்த முகம். "உன் பெயர் என்ன?" என்றார். சம்வகை "நான்தான், அமைச்சரே" என்றாள். அவர் "ஆம், நீதான்..." என்றபின் "இச்சாலையை காக்கவேண்டுமென்பதில்லை. இங்கு அரசியரை வாழ்த்துவதற்கும் வசைபாடுவதற்கும் எவருமில்லை" என்றார். "என் பொறுப்பு எதுவோ அதை பழுதின்றி ஆற்றுவது என் இயல்பு" என்று அவள் மீண்டும் சொன்னாள். சிறிய புன்னகையுடன் மீண்டும் புரவியிலேறி திரும்பிச்சென்றாள்.

அவர் அவள் செல்வதை நோக்கிக்கொண்டு நின்றார். தீர்க்கசியாமர் மீண்டும் ஹிரண்யாக்ஷரின் ஆலயத்தில் அமர்ந்துவிட்டாரா என அறிய விழைந்தார். ஆனால் அவள் விழிகளிலிருந்து மறைந்திருந்தாள். ஓசைகள் எதுவும் எழவில்லை. ஆனால் சாலையிலிருந்து காகங்கள் சில பறந்து அகன்றன. புரவிகள் திரும்பி நோக்கின. மீண்டும் அவள் சாலையின் எல்லையில் தோன்றினாள். அவள் சீரான விசையில் உடல் பெருக அணுகிவந்தாள். அவளுக்குப் பின்னால் தொலைவில் ஏழு சேடியர் கையில் மலர்த்தாலங்களுடன் வருவதை அவர் கண்டார். அவர்களுக்குப் பின்னால் ஒரு விறலி கையில் சங்குடன் வந்தாள். அவர்கள்

அனைவருமே இளஞ்செந்நிற ஆடை அணிந்திருந்தனர். மலைவெள்ளம் அணுகுவதுபோல என அவர் எண்ணினார்.

சேடியரின் அணிநிரைக்குப் பின்னால் காந்தாரி வருவதை கனகர் கண்டார். காந்தாரி அவ்வாறு நடக்க இயலுமென்பதையே அவர் முன்பு கற்பனை செய்திருக்கவில்லை. அரண்மனையில் இடைநாழியில் நடக்கையில்கூட இருபுறமும் உடன்பிறந்த அரசியர் அவளை தோள்பற்றி எடைநிகர் செய்வதுண்டு. அவள் கால்கள் மிகச் சிறியவை. அப்பேருடலின் எடையை அவை தாங்குவதில்லை. இரு கைகளையும் சிறகுகள்போல சற்றே விரித்து காற்றில் துழாவி அவள் நடக்கையில் ஒரு திரைச்சீலை ஓவியம் காற்றில் நின்று நெளிவதாகவே தோன்றும். அவள் ஓர் இடைநாழியை கடப்பதற்கு கால் நாழிகைப்பொழுது தேவைப்படும். அவள் நடப்பதை நோக்கி நிற்கையில் உள்ளம் பலமுறை நடந்து இலக்கை எய்தி பின் திரும்பி வந்து அவளுக்காக சலித்துக் காத்து நிற்பதாகத் தோன்றும்.

ஆனால் அப்பொழுது அவள் உறுதியான காலடிகளுடன், சீரான விசையில் வந்துகொண்டிருப்பதை கண்டார். பிடியானையின் நடை. அவள் கைகள் இரண்டும் சீராக அசைந்து அவள் உடலை முன் செலுத்தின. துதிக்கையை நீட்டி நீட்டி தலையை தொட்டுத் தொட்டெடுத்துச் செல்லும் யானைபோல. அவளைத் தொடர்ந்து வந்த உடன் பிறந்த அரசியரும் அதேபோல சீர்நடை கொண்டிருந்தனர். அவர்கள் முகங்கள் தொலைவிலிருந்து பார்க்கையில் பாவைகளென உணர்வுகளற்றுத் தெரிந்தன. அவர்களுக்குப் பின்னால் பானுமதியும் அசலையும் வந்தனர். கௌரவஅரசியர் அவர்களுக்குப் பின்னால் நான்கு நிரைகளாக

வந்துகொண்டிருந்தனர். அவ்வரிசையின் மறுஎல்லை சாலைவளைவுக்கு அப்பால் சென்றிருந்தது.

மகாநிஷாதகுலத்து அரசியர் ஒழிய பிறர் அங்கு வந்திருக்கிறார்கள் என்று கனகர் உணர்ந்தார். அங்கு அரண்மனையில் சாளரத்தருகே பித்தெழுந்த விழிகளுடன் அமர்ந்திருக்கும் மகாநிஷாதகுலத்து இளவரசியரை நினைத்துக்கொண்டார். அவர்கள் கருவுற்றிருக்க வாய்ப்பில்லை. தொடர்ந்து கௌரவமைந்தரின் இளந்துணைவியர் வரத்தொடங்கினர். பெரும்பாலானோர் சிறுமியர். ஓரிருவர் பன்னிரு அகவை கூட அமையாதவர். போர் அறிவித்த பின்னர்தான் கௌரவமைந்தருக்கு மணநிகழ்வுகள் நடந்தன. பல்வேறு குடிகளிலிருந்து பெண்டிர் பரிசில் பணம் கொடுத்தும் நிகர்ச்சடங்குகள் செய்தும் கொள்ளப்பட்டனர். எஞ்சிய கௌரவமைந்தர்கள் சிறுகுழுக்களாகச் சென்று பெண் கவர்ந்து வந்தனர். படைகள் போருக்கு எழுவதற்கு முந்தையநாள் இரவில்கூட நாற்பத்தொன்பது கௌரவமைந்தருக்கு மணநிகழ்வு ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது.

ஆறு மாதங்களுக்குமுன் அஸ்தினபுரிக்கும் இந்திரப்பிரஸ்தத்திற்கும் போர் நிகழக்கூடும் என்ற சூழல் இருந்தபோது கௌரவமைந்தரில் போருக்குச் செல்லும் அனைவரும் மணம்புரிந்தாகவேண்டும் என்று அந்தணர் கூறினர். போர்ப்பயில்கை முடித்து கூந்தல் திருத்தி குண்டலமணிந்து வாளுரிமை பெற்ற பின்னரே போருக்குச் செல்ல முடியுமென்பது ஷத்ரிய நெறி. கௌரவமைந்தருக்கு மகளிரை அளிக்க அப்போது ஷத்ரிய அரசர்கள் போட்டியிட்டனர். போர் அணுகுந்தோறும் அவ்விசை

குறைந்தது. இளைய அரசர்களுக்கு பெண்களை அளிக்க ஷத்ரியர் எவரும் ஒருங்கவில்லை. எவ்வண்ணமாயினும் போர் அணுகிக்கொண்டிருக்கிறது, போருக்குப்பின் உரிய சடங்குகளுடனும் களியாட்டுகளுடனும் அந்த மணநிகழ்வை நிகழ்த்துவதே சரியாகும் என்ற மறுமொழியே வந்தது. "நம் மைந்தர் களம் மீளமாட்டார்கள் என எண்ணுகிறார்களா?" என்று துச்சாதனன் கூச்சலிட்டான். "அவர்கள் நிமித்திகரை உசாவியிருப்பார்கள்" என்றார் விதுரர். துச்சாதனன் சொல்லடங்கி வெறுமனே நோக்கிவிட்டு கைவீசி அப்பேச்சை ஒழிந்தான்.

ஆயிரத்தவரில் இறுதி மைந்தனாகிய சுபத்ரனுக்கு பதினாறு அகவை ஆகியிருந்தது. பதினெட்டு அகவை நிறையாதபோது முடிகளைந்து குண்டலமணிந்து வாள் கைக்கொள்ளும் வழக்கமில்லை என்று படைக்கலம் பயிற்றுவித்த கிருபரின் மாணவர் சுகிர்தர் சொன்னார். "நான் முடிவெடுத்துவிட்டேன். போருக்குச் செல்லாது ஒழியப்போவதில்லை. உடன்பிறந்தார் போருக்குச் செல்ல நான் மட்டும் இங்கு எஞ்சினேன் எனில் அது சாவை விடக்கொடியது எனக்கு" என்று அவன் சொன்னான். கிருபர் "அவன் படைக்கலம் கொள்ளட்டும். அகவை நிறையாவிடினும் மைந்தன் சொல்லுறுதி கொள்வானெனில் வாள் கொள்ளலாம் என்ற நெறி நூல்களில் உள்ளது" என்றார். "என் உள்ளம் உறுதிகொண்டிருக்கிறது. நான் படைக்கலம் எடுத்து களம்புகுவேன். மூத்தோரும் ஆசிரியரும் வாழ்த்தி நான் சென்றால் நன்று" என்றான் சுபத்ரன்.

வாளேற்புச் சடங்குகள் முடிந்தபின் அவனும் நான்கு உடன்பிறந்தவர்களுமாக கிளம்பிச்சென்று மச்சர்

குலத்திலிருந்து பெண்களை கவர்ந்துகொண்டு வந்தனர். அது மெய்யான பெண்கவர்தல் அல்ல என்று அனைவரும் அறிந்திருந்திருந்தனர். அவர்கள் கொள்ள வேண்டிய பெண்களை மட்டும் நீர்வெளிக்கு மீன்கொள்ள அனுப்பிவிட்டு பிற பெண்களை தங்கள் குடில்களுக்குள் ஒளித்துவைத்தனர் மச்சர். முலை குவியாத சிறுமியரான அப்பெண்கள் முதிய பெண்டிருடன் தனிப்படகில் மீன் கொள்ள வந்தார்கள். அவர்களில் இளையவளாகிய சந்திரைக்கு பன்னிரு அகவை. அவளுக்கு நிகழவிருப்பது என்னவென்று அவள் அறிந்திருக்கவில்லை. மெல்லிய எடைகொண்ட விரைவுப்படகுகளில் வந்த கௌரவமைந்தர்கள் அம்புகளால் அம்மீன்படகின் பாய்மரத்தைக் கிழித்து அதை திசையழியச் செய்து பறந்தணைவதுபோல அதை அணுகி அச்சிறுமியை தோள்பற்றித் தூக்கி தங்கள் படகில் எடுத்துக்கொண்டனர். பிற பெண்கள் கூச்சலிட்டனர். அவர்களை வேல்காட்டி அச்சுறுத்தி தங்கள் படகில் வரச்செய்தனர்.

சந்திரை கூச்சலிட்டு கதறி அழுதபோது வாயை துணியால் கட்டி கைகளை பின்புறம் பிணைத்து படகில் இட்டனர். அஸ்தினபுரிக்கு வந்து இறங்கும்போது அவள் மயங்கிவிட்டிருந்தாள். அரண்மனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே ஆலயத்தில் அவளை இறக்கி அங்கே மணம் புரிந்துகொண்டான் சுபத்ரன். மயங்கி விழுந்த பெண்ணை கொண்டுசென்று அரண்மனை சேர்த்தபோது அரண்மனைப்பெண்டிர் வாயிலில் கூடி நின்று குரவையொலி எழுப்பினர். அரசியர் உரக்க நகைத்துக்கொண்டிருந்தனர். தன்னினைவு கொண்ட இளவரசி எழுந்தமர்ந்து அனைவரையும் நோக்கி மீண்டும் அஞ்சி கூச்சலிட்டு அழத்தொடங்கினாள். சுபத்ரனின் அன்னை சாந்தை வந்து அவள் தோள் பற்றி

“அஞ்சாதே, நீ அரசியாகிவிட்டிருக்கிறாய். அஸ்தினபுரியின் மைந்தனின் துணைவி நீ. உன் குடி இங்கு நிலைகொண்டு வாழும். உன் குருதியிலிருந்து அரசகுடி பிறக்கும்” என்றாள். அச்சொற்களை அவள் உள்வாங்காமல் மீண்டும் மீண்டும் கூச்சலிட்டு அழுதுகொண்டிருந்தாள். அவளைப் பற்றி தூக்கி உள்ளே கொண்டுசெல்கையில் மீண்டும் நினைவழிந்து நிலத்தில் சரிந்தாள். அன்னையும் சேடியருமாக அவளை தூக்கிக்கொண்டனர்.

அரசியரைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த இளவரசியர் நிரையில் அவள் இருக்கிறாளா என்று கனகர் விழிகளால் துழாவினார். அவளை இறுதி நிரையில் கண்டுகொண்டார். இரு பெண்களால் தாங்கப்பட்டவளாக, ஆற்றல் இழந்த உடல் துணிப்பாவைபோல் தொய்ந்து இழுபட, அவள் வந்துகொண்டிருந்தாள். அவள் கால்கள் அவ்வப்போது தரையில் உரசி இழுபடுகின்றன என்று கண்டார். அவள் பெயரென்ன என்று தன் உள்ளத்தை துழாவினார். சித்திரை, சில்பை, அல்ல சிவதை... சிவாங்கியா? பின்னர் அதை கைகளால் தொடுவதுபோல் அசைத்து விலக்கினார். அப்பெயரை ஒருபோதும் சென்றடையமுடியாது. எந்தப் பெயர் கூறினாலும் ஆயிரத்தவரின் துணைவியர் அப்பெயரில் இருப்பார்கள் என்ற இளிவரல் அரண்மனைச் சூழலில் உண்டு. அப்பெயர்கள் எவருக்கேனும் நினைவிருக்குமா? காந்தாரியோ பானுமதியோ எண்ணிச்சொல்லிவிடமுடியுமா?

அவர்களின் கொழுநர் அறிந்திருப்பார்கள். அப்பெயரை நெஞ்சிலேற்றிச் சென்றிருப்பார்கள். போரில் களம்படும்போது சிலர் அதை சொல்லியிருப்பார்கள். அறுதியாக எண்ணி நெஞ்சை பற்றிக்கொண்டிருப்பார்கள். இப்பொழுது இவ்வாயிரம்

பேரில் நுண்வடிவில் அவர்களும் வந்துகொண்டிருப்பார்களா? தங்கள் துணைவியரை விட்டுப் பிரிந்ததை இப்போதுதான் முழுத் துயருடன் உணரத்தொடங்கியிருப்பார்கள். போருக்குச் செல்கையில் அவர்கள் அத்துணைவியரை திரும்பியும் பார்க்கவில்லை. அவர்கள் அனைவரும் களியாடிக்கொண்டிருந்தனர். கூச்சலிட்டு ஆர்ப்பரித்து காற்றில் படைக்கலங்களை வீசி நடனமிட்டனர். கரிய முகங்களில் வெண்ணிறப் பற்களும் வெண்விழிகளும் முற்றம் நிறைத்து தென்பட்டன. அது முன்புலர்காலை. கைகளில் சிற்றகல்களுடன் ஆயிரம் இளவரசியரும் அவ்வீரர்களின் நூறுஅன்னையரும் அரண்மனை முற்றத்தில் கூடியிருந்தனர். ஒவ்வொருவரும் தங்கள் கொழுநரை நோக்கிக்கொண்டிருந்தனர். கொழுநர்களோ அவர்களை ஒற்றைத் திரளென, ஒளிவிளக்குகளின் நிரையென மட்டுமே கண்டனர்.

அவர்கள் ஒற்றை உடலெனத் திரண்டவர்கள். ஒற்றை உள்ளமென்றானவர்கள். அவர்களில் ஒருவன்கூட தனியெண்ணம் கொண்டு தன் துணைவியை எண்ணியிருக்க வாய்ப்பில்லை. முன்னால் நின்றிருந்த துருமசேனன் தன் இடையிலிருந்து கொம்பை எடுத்து ஊதி "கிளம்புக!" என்று ஆணையிட்டதும் வாள்களை உருவி தலைக்குமேல் சுழற்றி "வெற்றிவேல்! வீரவேல்! அஸ்தினபுரி வெல்க! அமுதகலம் வெல்க! அரசர் துரியோதனன் வெல்க!" என்று கூச்சலிட்டபடி அவர்கள் தங்கள் புரவிகளில் ஏறிக்கொண்டனர். குளம்படிகள் மலையிடிந்து கூழாங்கற்களாகப் பொழிவதுபோல் ஒலித்தது. படை நிரைகொண்டு நீண்டு முனைகொண்டு தெருவை அடைந்து அப்பாதையினூடாக வளைந்து வழிந்தோடி மறைந்தது.

கைகளில் சுடர்களுடனிருந்த இளவரசியர் அனைவரும் விழிநீர் உகுத்துக்கொண்டிருந்தனர். அச்சுடர்கள் அவர்கள் உடல் குலுங்கி அழுகையில் அசைந்து நீரில் என அலைகொண்டன. அனைவரின் முகங்களும் ஒன்றாகத் தெரிந்தன. முகமிலாதவர்கள், பெயரில்லாதவர்கள். தங்கள் இல்லங்களில் அன்னையருக்கு இனியவளாக இருந்திருப்பார்கள். அவ்வரண்மனைகளில் தலைவியராக வலம் வந்திருப்பார்கள். ஆணையிட்டிருப்பார்கள். தாங்கள் பிறிதொரு நிகர் இலாதவர்கள் என்று உணர்ந்திருப்பார்கள். பின் நிரையிலிருந்து சில இளவரசிகள் மயங்கி விழுந்தார்கள். கீழே விழுந்த சுடர்கள் மேல் கால்கள் பதிந்தன. சிலர் எண்ணையில் வழுக்கி நிலையழிந்தனர். அவர்களை தூக்கும்பொருட்டு சேடியர் பிற இளவரசியரை விலக்கினர். சுடர்நிரை குழம்பி கலைந்து மின்மினிச் சுழல்போல் ஆயிற்று.

அவர்கள் உள்ளே செல்லலாம் என்று அரசி பானுமதி ஆணையிட்டாள். பின் நிரையிலிருந்து ஒவ்வொருவராக அகன்று உள்ளே செல்லத்தொடங்கினர். அக்கலைவோசையின் உள்ளே விம்மல்களையும் அழுகையொலியையும் அவர் கேட்டார். முதல் அழுகையொலி எழுந்ததுமே அனைவருமே அழத்தொடங்கிவிட்டிருந்தனர். சற்று நேரத்தில் அழுது கூச்சலிட்டபடி உடல் தளர்ந்து நிலத்தில் அமர்ந்தனர். சிலர் நினைவழிந்து படுத்தனர். உடல் குழைந்து நழுவிய இளவரசியரை சேடியர் ஒவ்வொருவராக தோள்பற்றி தூக்கி உள்ளே கொண்டுசென்றனர். அவர்கள் விட்டுச்சென்ற அகல் விளக்குகளால் அரண்மனை முகப்பு ஒளித்துளிகளாக சிதறிக் கிடந்தது. எரிசுடரின் செம்மை சிந்திய எண்ணைத்தீற்றல்களை குருதியோ என எண்ணச்செய்தது.

கனகர் நீர்வழிவென ஓசையில்லாமல் வந்துகொண்டிருந்த அவ்வரசியரை பார்த்தார். அவர்களில் அவர் அறிந்த முகம் ஒன்று இருக்கிறதா என்று விழிகளால் துழாவினார். அனைத்து முகங்களும் ஒன்றென்றே தோன்றின. திரளாக ஆவதுபோல் மானுடரை பொருளற்றவர்களாக ஆக்குவது பிறிதில்லை. அவர்களில் தனித்தன்மையை நிறுவும் அவர்களுக்குரிய தெய்வம் ஒன்று அகன்றுவிடுகிறது. அவர்களைப் பெற்ற அன்னையரேகூட தனித்தறிய முடிவதில்லை. அந்த இறுதி மச்சநாட்டு இளவரசியின் முகம் மட்டுமே அவர் நினைவில் இருந்தது. அவர்கள் அணுகி வந்துகொண்டிருந்தார்கள். அணிகளேதும் அவர்களின் உடல்களில் இல்லை. கால்களில் குறடுகளும் இல்லை. ஆகவே மெல்லிய ஆடைச்சரசரப்பு மட்டுமே கேட்டது. இலைகள் செறிந்த குறுங்காட்டுக்குள் நீர் வருவதுபோன்ற ஓசை. அவள் பெயர் சந்திரை. அவள் முகம் சிறியது, கூரிய மூக்கும் எழுந்த நெற்றியும் கொண்டது.

மேலும் அந்த நிரை அணுகியபோது புலர்காலையில் மெல்லிய வெளிச்சத்தில் அவள் முகத்தை கண்டார். அது வெளிறி சற்றே வீங்கி களிமண்ணால் ஆனதுபோல் உயிரற்றுத் தெரிந்தது. ஒருகணத் திடுக்கிடலுடன் அது ஓர் இறந்த உடல் என்று அவர் எண்ணிக்கொண்டார். இளவரசியர் எத்தனை பேர் கருவழிந்திருக்கிறார்கள்? நாநூற்று எண்பத்தைந்து? அல்ல நாநூற்று தொண்ணூற்றாறு? எது இறுதி எண்ணிக்கை? ஐநூறா? ஐநூறு குருதிக்குமிழிகள். ஐநூறு ஆத்மாக்கள். அவை இங்கு நுண்வடிவில் உடன் வந்துகொண்டிருக்கின்றன. அவர்களை அவர்களின் தந்தையர் அறிவார்களா? அன்றி, தந்தையருடன் கை கோத்தபடி அவர்கள் இங்கே வந்து கொண்டிருக்கிறார்களா?

சம்வகை அருகே வந்து கையில் ஏந்தியிருந்த வேலைத் தாழ்த்தி தலைவணங்கி அப்பால் சென்றாள். அணிநிரை அருகே வந்தது. கனகர் ஒவ்வொரு முகத்தையாக வெறித்து நோக்கியபடி நின்றிருந்தார். அவை அவரை நோக்காமல் கடந்து சென்றுகொண்டே இருந்தன. அவர் அன்று காலை வந்த செய்தியை நினைவுகூர்ந்தார். பாண்டவர்களின் காட்டில் குடிகள் திரண்டுவிட்டார்கள். தௌம்யர் அங்கே சென்றுவிட்டிருக்கிறார். நீர்க்கடன் செய்வதற்குரிய முறைமைகள் அன்றே வகுக்கப்படும். அங்கும் இதேபோல பெண்களின் நிரை எழும். இறந்தவை போன்ற முகங்கள். அப்பால் எதையோ நோக்கி வெறித்த விழிகள். எந்த வேறுபாடும் இருக்காது.

நீர்ச்சுடர் - 13

பகுதி இரண்டு : குருதிமணிகள் – 7

அணிவகுத்தபடி வந்த அரசியர்நிரை தன்னை அணுகியபோது கனகர் குருதியின் கூரிய கெடுமணத்தை உணர்ந்தார். அது அலையென எழுந்து சூழ்ந்துகொள்ளும் மணம் அல்ல. சிறிய பளபளக்கும் ஊசிபோல மென்மையானது. அறிதற்கரியது, ஆயினும் தைத்து உட்புகுந்து அங்கிருப்பது. பசியின்போது உணவின் மணம்போல அனைத்துப் புலன்களும் சென்று தொட்டு ஏற்றுக்கொள்ளும் மணம் அது. ஆனால் எப்போதும் புலன்கள் அதை பெருகிச்சென்று பெற்றுக்கொள்கின்றன. எனில் எப்போதும் அகம் அதை காத்திருக்கிறதா? ஒவ்வொரு நீர்த்துளியும் இன்னொரு

நீர்த்துளியை காத்திருக்கிறது. உடலுள் தேங்கிய குருதி குருதிக்காக நோற்றிருக்கிறதா?

முதலில் தன்னுள் எண்ணங்கள் குருதியை மையமாகக் கொண்டவையாக மாறிவிட்டிருப்பதையே அவர் உணர்ந்தார். எத்தொடர்பும் இன்றி சிற்றாலயங்களில் அன்னை தெய்வங்களுக்கு கொடுக்கும் குருதிபலி பற்றி அவர் எண்ணிக்கொண்டிருந்தார். ஊடாக மருத்துவநிலையில் தசையை குருதிவழிய அறுக்கும் ஒரு நினைவு வந்தது. பின்னர் அங்கு கொடுக்க வேண்டிய குருதிபலிக்கான விலங்குகள் கொண்டுவரப்பட்டனவா என்னும் எண்ணத்தை அடைந்து சூழ நோக்கினார். அதன் பின்னரே அங்கு குருதிபலி கொடுக்கப்பட வேண்டியதில்லை என்று தீர்க்கசியாமர் குறிப்பிட்டதை நினைவு கூர்ந்தார். அவ்வெண்ணம் தனக்கு ஏன் ஏற்பட்டது என்று எண்ணிய பின்னரே தன்னுள் குருதிபலியின் காட்சிகள் நிறைந்திருப்பதை அறிந்தார். அக்காட்சிகளை எழுப்பும் கூரிய குருதிமணத்தை பிரித்தறிந்தார்.

அது அணுகிக்கொண்டிருக்கும் இளவரசிகளின் நிரையிலிருந்து எழுகிறது என்று எண்ணியபோது அவர் உடல் மெய்ப்பு கொண்டது. அவர்கள் அப்போதும் தொலைவிலேயே தெரிந்தனர். அங்கிருந்து காற்றும் அவரை நோக்கி வீசவில்லை. எனினும் அந்தக் கெடுமணம் அணுகி உள் நுழைகிறதெனில் அது மிக வலுத்ததாகவே இருக்கவேண்டும். ஒருவர் இருவரில் அல்ல அவர்கள் அனைவரிடமிருந்தும் அது எழுந்திருக்க வேண்டும். அவர் அரசிகளையும் இளவரசிகளையும் விழிவிரித்து நோக்கிக்கொண்டிருந்தார். அவர்கள் அனைவருமே மிக மெல்ல காலடி எடுத்து வைத்து நடந்தனர். எடுத்த காலை

வைத்து உறுதியாக நிலைகொண்டு அதன்பின் அடுத்த காலை எடுப்பதுபோல் தோன்றியது.

முன்பும் அவர் அவ்வண்ணம் அரசியரும் இளவரசியரும் பெருநிரையாக விழவுச் சடங்குகளுக்கு வருவதை கண்டிருந்தார். அஸ்தினபுரியின் துர்க்கை வழிபாட்டு நாளிலும் முடிசூட்டு விழாவின்போதும் அவர்கள் அனைவருமே வந்தாகவேண்டும். அனைவரும் ஒளிரும் பட்டுகளாலும் அருமணி நகைகளாலும் அழகு செய்யப்பட்டிருப்பார்கள். பொன்னுருகி சிற்றலைகொள்வதுபோல் என்று சூதர்கள் அவர்களின் வருகையை பாடுவார்கள். "அவ்வலையின் மீது கதிரொளி நடமிடுவதைப்போல் அருமணியின் அசைவுகள். அவற்றுடன் இணையும் விழிமணி மின்னல்கள். எயிற்றொளி நகைப்புக்கள். தெய்வங்கள் கீழே நோக்கி திகைக்கின்றன. இங்கு எழுந்த இப்பொன்னலை எது என்று!" சூதர்கள் பாடிப்பாடி ஒரு கனவென்றே அதை மாற்றியிருந்தார்கள். கண்ணேறு விழுந்துவிடக்கூடாது என்பதற்காக அவர்களில் ஒரு இளவரசியுடன், கரிய உடையணிந்து ஒரு சேடிப்பெண்ணையும் அனுப்புவதுண்டு. அவளை சூதன் பொன்னணியும் அருமணியும் சூடிய முகத்தின் அழகை நிறைவுகொள்ளச் செய்யும் கரித்துளிப்பொட்டு என்றான். இனிய பண்ணின் தாளமுடிப்பு என்றான்.

அஸ்தினபுரியின் பெண்டிர் அரசியர் கொலுவமையும் காட்சியை தவறவிடுவதில்லை. அரசியர் எழுந்தருள்வதை அறிவிக்கும் முரசுகள் தொலைவில் ஒலிக்கத்தொடங்கியதுமே பெண்டிர் ஒருவரையொருவர் பற்றிக்கொண்டு இறுகி மெல்லிய அசைவு கொண்டு பாதையின் இருமருங்கும் ததும்புவார்கள். மூச்சொலிகளும் சிறு பேச்சொலிகளும்

கேட்டுக்கொண்டிருக்கும். அரசியர்நிரை மிகத் தொலைவில் தெரிந்ததுமே ஒற்றை வியப்பொலியாக திரள் தன்னை வெளிப்படுத்தும். அணுகிவரும்போது அந்நிரையே ஒரு பொன்னணி என்றே தோன்றும். பட்டுகள் பொன்னுடன் இணையக்கற்றவை. பொன்னை துணியாக்கியதே பட்டு. ஆடையும் அணியும் ஒன்றானது அது. பொன்னும் பட்டும் அணிந்திருக்கையில் பெண்டிர் முகங்களில் பிறிதேதோ ஒன்று வந்து அமைந்துவிடுகிறது. அவர்கள் விழிகள் சிவந்து கள்மயக்கிலென நோக்கு மறைந்து காற்றிலோ சூழொளியிலோ மிதந்து கொண்டிருப்பவர்கள்போல் தோன்றுகிறார்கள். அவர்களின் தலைநிமிர்வில், கழுத்து ஒசிவில், தோள்குழைவில் முழுதணிகொள்ளுகையில் மட்டுமே பெண்களில் எழும் தெய்வங்கள் தோன்றுகின்றன.

அரசியர் அணுகும்போது சூழ்ந்திருக்கும் பெண்டிர் மூச்சொலியால், மூச்சென ஒலிக்கும் ஒற்றைச்சொல்லொலியால் தங்களை வெளிப்படுத்துவார்கள். கனன்ற விறகின் மேல் நீர்த்துளி பட்டதுபோல். அவர்கள் ஒருவரை ஒருவர் தழுவிக்கொள்வார்கள். தோள்களையும் கைகளையும் பற்றி இறுக்கிக்கொள்வார்கள். அவர்களின் விழிகளிலும் முகங்களிலும் முதலில் தெரிவது வியப்பு, பின் வெறுப்பு. அது சினமென்றும் கசப்பென்றும் தோன்றும். அரசியர் அணுகி கடந்து சென்று அவையமர்ந்த பின்னர் திரும்பி நோக்குகையில் அங்கிருக்கும் அனைத்துப் பெண்களின் விழிகளிலும் அவர்களின் விழிகளில் அமைந்த அதே வெறிமயக்கு நிகழ்ந்திருப்பதை அவர் காண்பதுண்டு. அவர்கள் அனைவரும் அவ்வரசிகளாக மாறி நடித்து தங்களுள் அத்தெய்வத்தை ஊற்றி நிறைத்துக்கொண்டிருப்பார்கள்.

அங்குள்ள அனைத்துப் பெண்களிலும் பரவி நிறைந்து ததும்பி எழுந்து தோன்றும் அத்தெய்வம் இம்மண்மேல் ஒரு விண்துளியென எப்போதோ விழுந்திருக்க வேண்டும். அதற்கு முன்னர் இங்கு விழைவென்றும் செல்வமென்றும் உடைமை என்றும் எதுவும் இருந்திருக்காது. அத்துளி மண்ணில் ஆழ்ந்திறங்கி, சேற்றின் அடுக்குகளையும் பாறைப்படிவுகளையும் கடந்து சென்று அங்கே துயின்ற பொன்னை தொட்டு எழுப்பியது. "எழுக! நீ என் ஊர்தி!" என்றது. அருமணிகளை உலுப்பி விழிக்கச்செய்தது. "எழுக! எழுக! நீங்கள் என் வண்ணப்புரவிகள்" என்றது. ஒன்பது புரவிகள் இழுக்கும் புலரி வண்ணத்தேர் புவி மீது சுழன்றோடுகிறது. அரசபாதைகளில், ஊழின் மறைவழிகளில், நாகக்களம் என பின்னிவிளையாடும் புதிர்ச்சுழிப்புகளில். பெண்டிர் அதை நன்கறிந்திருக்கிறார்கள். பேரரசர்கள் அந்த மாயத்தால் ஆட்டுவிக்கப்படுகிறார்கள். அரியணைகள், மணிமுடிகள், களஞ்சியங்கள், கருவூலங்கள் அனைத்தையும் ஆள்வது அது. அவைக்கூடங்களில் முழங்குகிறது. படைக்கல அறைகளில் ஆழ்ந்த அமைதியாக நிறைந்திருக்கிறது. முடிசூடி அமர்ந்த அரசர்கள் பதற்றம் கொள்வதை, அருகமர்ந்த அரசியர் நகைதிகழ நிறைந்திருப்பதை அவர் எப்போதும் காண்பதுண்டு. அது பெண்டிர் மட்டுமே நேருக்குநேர் கண்டு அறியும் பெருந்தெய்வம்.

அணுகி வந்து விழிக்கு நன்கு தெளியும்வரை அந்த அரசியர்நிரையும் அணிகொண்டு ஒளி பொலிவதாகவே இருக்குமென்று கனகர் எவ்வண்ணமோ உளப்பதிவு கொண்டிருந்தார். காந்தாரி எளிய மென்வண்ணப் பட்டாடை அணிந்து அணிகளில்லாத தோற்றம் கொண்டிருப்பதை ஒருகணம் கழித்தே அவர் உணர்ந்தார். பேரரசியாக அஸ்தினபுரியின் அரசவைக்கு வருகையில்கூட குறைவாகவே

அணிபூண்பவள் என்பதனால் அவ்வேறுபாடு முதலில் அவருக்குத் தெரியவில்லை. பின்னர் உடன் வந்த துணைப்பேரரசியரை பார்த்தபோதுதான் அவர்களும் அணிகளேதும் அணிந்திருக்கவில்லை என்பதை அவர் கண்டார். தொடர்ந்து வந்துகொண்டிருந்த அரசியர் நூற்றுவரும் ஆயிரத்தவரின் இளவரசியரும் அணியாடைகள் கொண்டிருக்கவில்லை. அனைவருமே வெளிறிய வண்ணம்கொண்ட ஆடைகள் அணிந்திருந்தனர். புகைச்சுருளின் அசைவென அவர்களின் வருகை தெரிந்தது.

அவர்கள் முறைப்படி இன்னும் கைம்மை நோன்பு கொள்ளவில்லை. தொல்முறைப்படி இருப்போர் நீர்க்கடன்கள் செய்து விண்ணேற்றிய பின்னரே மாண்டவரின் இறப்பு முழுமையடைகிறது. அதன் பின்னரே துணைவியர் கைம்மை நோன்பு கொள்ளவேண்டும். அதுவரை அணிகள் பூணுவதிலோ ஆடை அணிவதிலோ தடையேதுமில்லை. மரபின்படி அவர்கள் ஆடையும் மலர்களும் அணிந்தாகவேண்டும். மாண்டவர் அருகிருந்து அவ்வழகை இறுதியாகக் கண்டு மகிழ்வார்கள் என்பதுண்டு. ஆயினும் அவர்கள் அனைவருமே அகத்தால் கைம்பெண்களாகிவிட்டிருந்தனர். அவர்களின் உடல்களும் முகமும் வெளிறிவிட்டிருந்தன. விழிகள் விழிநீர் ஒழிந்து வெறும் மலர்ச்சருகுகளெனத் தெரிந்தன.

அவர்கள் எவரும் அழுதுகொண்டிருக்கவில்லை. வெறித்த முகங்களில் எங்கிருக்கிறோம் என்னும் தன்னுணர்வே இருக்கவில்லை. பலரால் நடக்க இயலவில்லை என்பதை அவர் கண்டார். அவர்களை இருபுறமும் தோழியரோ சேடியரோ பற்றிக்கொண்டிருந்தனர். எவரேனும் நின்று சற்று தயங்குகையில் பிறரும் விரைவழிந்தனர். அப்பகுதியில் நிரை

பிரிந்து இடைவெளிவிட முன்னால் சென்றவர்கள் மெல்ல நின்று அவர்கள் வந்து சேர்வதற்காக காத்திருந்தனர். மீண்டும் இணைந்துகொண்டு நிரை வகுத்தனர். ஆடையின் ஓசை எவரோ மந்தணம் உரைப்பதுபோல் கேட்டது. காலடியோசைகள் வேறேதோ மொழியின் சொல்லாடல்கள்போல.

காந்தாரியும் சத்யவிரதையும் சத்யசேனையும் அருகணைந்தபோது கனகர் முன்னால் சென்று வாழ்த்துச் சொற்கள் இன்றி தலைவணங்கினார். காந்தாரி அவர் வருவதை அறியவில்லை. சத்யசேனை மெல்லிய குரலில் "பூசனைக்கான அனைத்தும் ஒருக்கப்பட்டுவிட்டனவா?" என்றாள். அவர் மெல்லிய தலையசைவால் ஆமென்று உரைத்தார். பின்னர் அணி நிரையிலிருந்து சற்றே விலகியபடி அவர்களை வழி நடத்தியபடி அவர் நடக்க அவர்கள் உடன் வந்தனர். சரிந்த மண் பரப்பில் அவர்கள் இறங்கிச் செல்வதற்காக மரப்பலகைகள் அடுக்கி வழி அமைக்கப்பட்டிருந்தது. அதனூடாக ஒவ்வொருவராக மிக மெல்ல இறங்கி கீழே சென்றனர். பூழிப்பரப்பில் அவர்கள் அமர்வதற்காக முற்றம் ஒருங்கியிருந்தது. அங்கே இருந்த ஏவற்பெண்டிர் எழுந்து அகன்று அவர்களுக்கு வழியமைத்தனர்.

அவர்கள் ஆலயமுற்றத்தை அடைந்தபோது அங்கு களம் வரைந்துகொண்டிருந்த சூதப்பெண்கள் நிமிர்ந்து அவர்களை பார்த்தனர். அவர்களில் ஒருத்தி தனக்குள் என புன்னகை செய்வதைக் கண்டு கனகர் அஞ்சியதுபோல் கால்தளர்ந்து நின்றுவிட்டார். பிறிதொருத்தி நிமிர்ந்து அவர்களை நேர்நோக்கி புன்னகைத்தாள். பின்னர் களம் வரைந்து கொண்டிருந்த ஏழு சூதப்பெண்களும் இளவரசியரையும் அரசியரையும் நோக்கி புன்னகைத்தனர். அக்களத்தில் எழுந்திருந்த வஜ்ரநாகினி

தேவியின் முகத்திலும் அதே புன்னகை இருப்பதை கனகர் கண்டார். முதிய சூதப்பெண் அருகே வந்து சொல்லின்றி கையசைவால் அரசியர் எவ்வாறு எங்கே அமரவேண்டுமென்று சொன்னாள். அரைப்பிறை வடிவில் அரசியர் அமர அவர்கள் நடுவில் மூதரசி அமர்ந்தாள். அவள் அமர்வதற்கு மிகவும் இடர்ப்பட்டாள். பெண்டிர் அவளைப் பற்றி அவள் எடையை கைகளில் தாங்கி அமரவைக்க வேண்டியிருந்தது.

தன்னைச் சூழ்ந்திருந்த குருதிவாடை மிகுந்திருப்பதை உணர்ந்து கனகர் சுற்றிலும் பார்த்தார். மூக்கைச் சுளித்தபடி அரசியரையும் ஏவற்பெண்டுகளையும் நோக்கினார். ஒருவேளை வஜ்ரநாகினிக்கு ஊன்பலி கொடுத்திருப்பார்களோ என எண்ணினார். ஆனால் அது புதுக்குருதி மணம் அல்ல. சம்வகை புரவியிலிருந்து இறங்கி அவர் அருகே வந்தாள். "நான் தேர்க்கொட்டடிக்குச் சென்று மீண்டேன்" என்றாள். "எங்கிருந்து வருகிறது இந்தக் குருதிமணம்?" என்றார் கனகர். அவள் "அவர்கள் அனைவருமே குருதி வார்ந்துகொண்டிருக்கிறர்கள். பலருக்கு குருதிப்பெருக்கு மிகையாகவே உள்ளது என்றுபடுகிறது. இத்தருணத்தில் அவர்கள் மஞ்சத்திலிருந்து எழவே கூடாது" என்றாள்.

கனகர் "ஆனால் அவர்களின் உயிர்களை காப்பதற்கேனும் இச்சடங்கு தேவையாகிறது" என்றார். சம்வகை விழிகளைச் சுருக்கி அவர்களை பார்த்தாள். "இக்குடி முற்றழியலாகாது. ஒருதுளியேனும் இங்கே எஞ்சவேண்டும். தெய்வங்களிடம் அக்கோரிக்கையை முன் வைப்பதற்குத்தான் இப்பூசனை" என்று கனகர் மீண்டும் சொன்னார். அவள் தாழ்ந்த குரலில் "இக்குடி வாழ்வதில் அவர்களுக்கு என்ன நன்மை?" என்றாள். கனகர் திகைப்புடன் அவளை திரும்பிப் பார்த்தார். "இக்குடி

வாழும்பொருட்டே அவர்கள் வாழ்கிறார்களா என்ன?" என்றாள் சம்வகை. அவள் என்ன சொல்கிறாள் என்று அவருக்கு புரியவில்லை. "அவர்களை இங்கிருந்து அவர்களின் பிறந்த நாடுகளுக்கு அனுப்பலாம். அவர்களில் பெரும்பாலானவர்கள் நிஷாதர்களும் கிராதர்களும் மச்சர்களும்தான். அக்குடிகளில் கொழுநன் மறைந்த ஓரிரு மாதங்களுக்குள்ளேயே மறுமணம் செய்துகொள்ளலாம். அவர்கள் தங்கள் குடியை பெருக்கட்டும். மைந்தரால் பொலியட்டும். இங்கு இந்நகரில் ஏன் குருதிவீழ்த்தி உடல் நலிய வேண்டும்?" என்றாள் சம்வகை.

தன்னுள் எழுந்த பெருஞ்சினத்தை கனகர் உணர்ந்தார். ஆனால் உதடுகளை இறுக்கியபடி அசையாமல் நின்றார். அவள் கனகரிடம் "அவர்களில் எவரேனும் உடல் நலிந்து மறைந்தால் அப்பழியையும் அஸ்தினபுரி பெற்றுக்கொள்ளவேண்டியிருக்கும். அதை எண்ணுக!" என்றாள். கனகர் தன் உடலெங்கும் குருதி வடிந்து தோள்கள் தளர்ந்து மூச்சு குளிர்வதை உணர்ந்தார். இவளிடம் ஒரு சொல்லேனும் உகுக்கும் ஆற்றல் எனக்கில்லை. இவள் பேசுவனவற்றை நானே அங்கிருந்து பேசிக்கொண்டிருக்கிறேன் போலும். அவள் "பூசனைகள் விரைந்து முடியவேண்டும், அமைச்சரே. அப்பெண்களால் நெடும்பொழுது அமர்ந்திருக்க இயலாது. அவர்கள் தேரிலேயே அரண்மனை திரும்பட்டும். இங்கே தேர்கள் குறைவு. ஆகவே அஸ்தினபுரியில் எஞ்சியிருக்கும் அனைத்துத் தேர்களையும் இங்கு கொண்டுவரச் சொல்லியிருக்கிறேன். நகரிலும் சூழ்ந்திருக்கும் சிற்றூர்களிலும் இருக்கும் அனைத்து மருத்துவச்சிகளையும் அரண்மனைக்கு கொண்டுவர வேண்டுமென்றும் ஆணையிட்டிருக்கிறேன். பூசனை முடிந்து அரண்மனைகளுக்குச் சென்றதுமே அவர்கள் மஞ்சங்களுக்கு

கொண்டுசெல்லப்பட்டு உரிய முறையில் மருத்துவம் பார்க்கப்பட வேண்டும்" என்றாள்.

கனகர் புன்னகைத்து "நன்று, ஆணையிட்டிருக்கிறாய் அல்லவா?" என்றார். அந்த இளிவரலை அவள் உணர்ந்து "கோட்டைக் காவலர்தலைவியாக ஆணையிடும் உரிமை எனக்குண்டு" என்றாள். கனகர் "உனது ஆணைகளை இங்குள்ளோர் தலைமேற்கொண்டார்களென்றால் நீ ஆணையிடும் உரிமையை கொண்டிருக்கிறாய் என்றுதான் பொருள்" என்றார். அவள் அவர் சொன்னதென்ன என்பதை விழிசுருக்கி ஒருகணம் கூர்ந்து நோக்கி புரிந்துகொண்ட பின் திரும்பிச்சென்று தன் புரவியில் ஏறிக்கொண்டாள். இவளிடம் ஒருபோதும் ஒரு சொல்லும் மீறிச்சொல்ல தன்னால் இயலாது என்று அவர் எண்ணிக்கொண்டார். இந்நகரில் எவரேனும் எதையேனும் அவளிடம் மறுத்துச் சொல்கிறார்களா என்று வியந்தார்.

கனகர் அங்கு நிகழும் பூசனைகளை நோக்க விரும்பவில்லை. அதிலிருந்து விலகி நெடுந்தொலைவு சென்று குருதிமணமில்லாத காற்றில் நின்றிருக்க வேண்டுமென்று விரும்பினார். இயல்பாகவே சில அடிகள் எடுத்து வைத்து மண்சாலையில் நடந்தபின் நின்றார். கூர்ந்து தரையை பார்த்தபோது நீர்த்துளிகள் உதிர்ந்திருப்பதுபோல் தோன்றியது. நீர்த்துளிகளா என்று உளம் வியந்தபோது அவை குருதியாக இருக்கலாம் என்று தோன்றியது. அவர் அவற்றில் கால் படாமல் சாலையின் ஓரமாக நகர்ந்தார். நீர்த்துளிகள்தான். அவர்கள் நீராடி வந்திருக்கலாம். கூந்தலில் இருந்து சொட்டியிருக்கலாம். ஆனால் இத்தனை தொலைவுக்கா?

இளவெயிலில் வந்த வியர்வையாக இருக்கலாம். அல்ல, எனக்கு நன்கு தெரிகிறது. அவை கொழுவிய குருதித்துளிகள். செம்மண்ணில் உருண்டு அவை மணிகள் போலிருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒரு குழவி. ஒவ்வொன்றும் விழைவும் கனவுகளும் கொண்டெழுந்து மண் திகழவிருந்தது.

அவர் அருகிருந்த மரத்தை பற்றிக்கொண்டு தன்னை நிலை நிறுத்திக்கொண்டார். விழி தொடும் தொலைவு வரை நீண்டுகிடந்த செம்மண் பூழி பரவிய அந்தச் சாலையை மாறி மாறி நோக்கினார். பல்லாயிரம் உடல்கள் விழுந்த செந்நிறக் களம் அது. குருக்ஷேத்ரத்தைப் பற்றி சூதர்களும் ஒற்றர்களும் சொன்னவை அவர் உள்ளத்தில் எழுந்தன. இதுவும் குருக்ஷேத்ரம்தான் போலும். இவ்வண்ணம் நூறுநூறு போர்க்களங்கள் பாரதவர்ஷமெங்கும் பரவிக்கிடக்கின்றன. ஆறுகளும் ஓடைகளும் கடல் சேர்வதுபோல அவை அங்கு சென்று சேர்கின்றன. அங்கே நேற்றும் செத்துக்குவிந்தனர். இனியும் அங்கே இறந்து பரவி நிறைவர் மானுடர். இந்த செம்மண்பூழிக்களம்... பிறக்காதவர்கள் போரிட்டு மடிந்து விழுந்த நிலம் இது.

அவர் மீண்டும் திரும்பி சடங்கு நடக்குமிடத்திற்கே வந்தார். அங்கு நின்றால் புறத்தே நிகழ்வனவற்றை விழிகள் தொட்டுத்தொட்டு அள்ளிக்கொள்கின்றன. புறத்தே நிகழ்வதை உள்ளம் முற்றாக புறக்கணிக்க முடிவதே இல்லை. எவ்வண்ணமோ அது உளப்பெருக்கை தடைசெய்கிறது. ஒழுங்குபடுத்துகிறது, ஆற்றுப்படுத்துகிறது. புறத்தே ஒன்றும் நிகழாதிருக்கையில் உள்ளம் அனைத்து எல்லைகளையும் மீறி பரவி பித்துகொள்கிறது. களத்தில் முரசு முழங்கியது. உறுமி தேம்பிக்கொண்டிருந்தது. உடன் ஒலித்தன குடமேளங்கள்.

இலைத்தாளங்கள் அதிர்ந்தன. அவ்வோசை அலறல் எனவும், கதறல் எனவும், உறுமல் எனவும், தேம்பல் எனவும், விம்மல் எனவும், முனகல் எனவும், ஓலம் எனவும் ஒலித்தது. இணைந்து ஒற்றைப் பெருங்குரலென நிறைந்திருந்தது.

கருவறைக்குள் இருந்த தெய்வம் செம்மலர்களால் முழுமையாக மூடப்பட்டிருந்தது. அங்கு நிகழ்ந்துகொண்டிருந்த பூசனையை அவர் வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தார். அனைத்துப் பூசனைகளும் ஒன்றே. அசைவுகளில், நுண்சொற்களில் சில மாறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அனைத்து தெய்வப் பூசனைகளும் ஒன்றே. அது பசிகொண்டு நா சுழற்றி உறுமியபடி எழுந்து வரும் வேங்கையின் முன் பணிந்து உடலீந்து தன் குடியினரை விட்டுவிடும்படி இரக்கும் சிற்றுயிரொன்றின் மன்றாட்டு மட்டுமே. தன்னளிப்பில்லாத பூசனை எதுவுமில்லை. பூசனை என்பது ஓர் அடிபணிதல் அன்றி வேறேதுமல்ல.

பூசனையினூடாக தன் ஆணவத்தை மண்ணோடு பரப்பிக்கொள்கிறார்கள். நான் என்பது இல்லை, நான் எவருமில்லை, எனக்கினி எதுவுமில்லை என்கிறார்கள். இன்னும் கூறுக, இன்னும் அடிபணிக, ஒரு துளி எஞ்சாதொழிக என்கின்றன தெய்வங்கள். ஒருதுளியுமில்லை, இங்கு வாழ்வதற்குரிய ஒரு துளியன்றி வேறெதுவுமில்லை என்கிறார்கள். எச்சமின்றி, ஓர் அணுவும் எச்சமின்றி என்கின்றன தெய்வங்கள். பணிந்து மேலும் பணிந்து பணிவையே குறுக்கி சுருக்கி துளியென்றாக்கி முன்னால் விழுந்து கிடக்கிறார்கள். பணிந்தவன் மேல் பேருருக்கொண்டு எழுகின்றன தெய்வங்கள். குனிந்து நோக்கி நீ இப்பணிவை என்றும் கொள்க என்கின்றன. முன்பு நீ நிமிர்ந்தாய் அல்லவா அதனால்தான் என்கின்றன.

இனி நீ நிமிரக்கூடும் என்பதனால்தான் என்கின்றன. தெய்வங்களுக்கு மனிதரை முழுமையாக தோற்கடித்து எழுகையிலேயே தெய்வத்தன்மை கை கூடுகிறது.

அருவருப்புடன் அவர் விழிதிருப்பிக்கொண்டார். தெய்வங்களிடமிருந்து அரசர்கள்முன் வருகிறார்கள். அங்கும் அதேபோல பணிந்து வழிபடுகிறார்கள். பின்னர் முனிவர்கள். அதன்பின் அந்தணர். அதன்பின் சான்றோர். அதன்பின் மூத்தோர். தந்தை, கணவன்... பணிந்து பணிந்து, அளித்து அளித்து, எச்சமின்றி ஆகி இவர்கள் அடைவதென்ன? வெறும் இருத்தல். வெறும் இருத்தலுக்காக இருத்தலையே இறுதித் துளி வரை அளித்து மீள்கிறார்கள். வழிபட்டு மீள்பவர்களின் கண்களில் இருக்கும் விடுதலையை அவர் எப்போதும் பார்த்ததுண்டு. எதிலிருந்து விடுதலை? அது பெற்றதனால் வரும் விடுதலை அல்ல. அளித்ததனால் வரும் விடுதலை. தான் என்பதை அளித்து விடுகிறார்கள் போலும். அது தன்னதென்று எதுவும் எஞ்சாமையின் விடுதலை போலும்.

ஆண்களைவிட பெண்களே மேலும் நன்றாக வழிபடுகிறார்கள். ஆண் வழிபடும்தோறும் பெண்ணென்றாகிறான். பெண்கள் முற்றிலும் இன்மையை அடைந்து மீள்கிறார்கள். அங்கிருக்கும் ஒவ்வொரு இளவரசியின் முகத்தையும் அவர் மாறிமாறி பார்த்துக்கொண்டிருந்தார். அவர்கள் கைகூப்பி விழிநீர் வடித்து தோள்குறுக்கி தலை தாழ்த்தி அமர்ந்திருந்தனர். பலர் பிறிதொருவர் மேல் சாய்ந்து உடலதிர அழுதுகொண்டிருந்தனர். காந்தாரியின் கண்களில் நீலத்துணி நனைந்து நீர் வழிந்தது. ஆனால் அவளுடைய வெண்ணிற முகமும் உடலும் அந்தக் காலையொளியில் மிளிர்வுகொண்டிருந்தன. ஒரு மாபெரும் வெண்தாமரைபோல. ஆம், அதுவே சரியான ஒப்புமை.

இந்நீர்த்துளிகள்கூட அதற்கு அழகே. என்ன எண்ணிக்கொண்டிருக்கிறேன்! பித்தன்போல. ஆம், பித்தேதான்.

கருவறைக்குள்ளிருந்து பூசகி கையில் செம்மலர்களுடன் வீறிட்டலறியபடி பாய்ந்து வெளியே வந்தாள். அம்மலர்களை அள்ளிஅள்ளி அரசியர் மேல் வீசினாள். இரு கைகளையும் விரித்து வெறியாட்டு கொண்டு துள்ளத்தொடங்கினாள். அக்கணம் சென்று தொட்டு பற்றிக்கொள்ளச் செய்ய களம் வரைந்துகொண்டிருந்த ஏழு சூதப்பெண்கள் தாங்களும் வெறியாட்டு கொண்டனர். தலைமுடியைச் சுழற்றி அங்கிருந்த மலர்க்களத்தை அழிக்கத்தொடங்கினர். ஏழு மூலைகளிலிருந்தும் அவ்வோவியம் தன்னைத்தானே கலைத்து வெறும் வண்ணங்களாக ஆக்கிக்கொண்டது. அவர் நோக்கியிருக்கையில் முற்றாக கரைந்து மறைந்தது. அவ்வண்ணங்களின்மேல் விழுந்து நெளிந்து வலிப்பு கொண்டு ஏழு பெண்டிரும் துள்ளி ஆர்ப்பரித்துச் சுழன்றனர்.

பூசகி பாய்ந்து ஓடி கருவறைக்குள் புகுந்தாள். அங்கிருந்து அவள் உரத்த குரலில் "பேரரசி வருக! பேரரசி இங்கணைக!" என்றாள். சத்யசேனை காந்தாரியைப் பற்றி தூக்கமுயல "வேண்டாம்" என அவள் விலக்கினாள். காந்தாரி நடந்து கருவறையை அடைந்து முழந்தாளிட்டு அதன் படிகளுக்குக் கீழே அமர்ந்தாள். உள்ளிருந்து பூசகி எழுந்து காந்தாரியின் தலைமேல் கைவைத்தாள். அவள் கைகள் குருதியால் மூடியிருந்தன. காந்தாரியின் வெண்ணிறக் கழுத்திலும் தோளிலும் கோடென இறங்கியது குருதி. காந்தாரியின் தலையை இழுத்து தன் வாயருகே கொண்டு வந்து அவள் செவியில் அவள் ஏதோ சொன்னாள். காந்தாரி கைகளை

கூப்பிக்கொண்டாள். தலைகுனிந்து விழிகள்மூடி ஊழ்கத்தில் என அமர்ந்து அதை கேட்டாள்.

நீர்ச்சுடர் - 14

பகுதி மூன்று : பலிநீர் – 1

அஸ்தினபுரியில் கனகரின் பித்து தொட்டுத்தொட்டு படர்ந்து செறிந்துகொண்டிருந்தது. போர் தொடங்கியபோதே எழுந்தது அது. ஒருநாளில் ஒன்றுடனொன்று தொடர்பில்லாத நூறு பணிகள் அவர்மேல் வந்து விழுந்தன. நாழிகைக்கு நூறு ஆணைகளை இடவேண்டியிருந்தது. ஆனால் அவற்றை இயற்றும் அமைப்பு முழுமையாகவே அழிந்துவிட்டிருந்தது. நாளும் வந்துகொண்டிருந்த ஒற்றர்களில் பெரும்பாலானவர்களை அவர் முன்னர் நேரில் சந்தித்திருக்கவில்லை. ஏவலர்கள் அனைவருமே புதியவர்கள். அமைச்சர்களிலேயே பெரும்பாலும் அனைவரும் காடேகிவிட்டிருந்தனர். துரியோதனனுக்கு கங்கைநீர் தொட்டு சொல்லுறுதி எடுத்துக்கொண்டவர்கள் அவர்கள். குடிகளிலேயே ஒரு பகுதியினர் அஸ்தினபுரியைத் துறந்து அயல்நிலங்களுக்குச் சென்றுவிட்டிருந்தனர். கானேகிய அமைச்சர்களின் அடுத்த தலைமுறையினரான இளம் அந்தணர்கள் தந்தையரின் இடங்களில் அமைச்சர்களாக பணியாற்றினர்.

ஆகவே அவர் தன்னிடம் வந்த அத்தனை சொற்களையும் பலமுறை கேட்டு புரிந்துகொள்ள வேண்டியிருந்தது. அதைவிட தன் ஆணைகளை சொல்லிச்சொல்லி புரியவைக்க

வேண்டியிருந்தது. எனினும் ஒவ்வொன்றும் சற்றுப் பிழையாகவே நிகழ்ந்தன. ஆனால் அப்பிழைகளின் எதிர்வினைகள் பெரியவையாக இருந்தன. அவர் ஒவ்வொருநாளும் சலித்துக் களைத்து உள்ளம் பொருளற்ற சொற்களின் கிடங்காக மாறிவிட்டிருக்க பின்னிரவில் படுக்கச் சென்றார். அதன் பின்னரும் துயில நெடும்பொழுதாகியது. மங்கலான விளக்கொளியில் ஏடுகளை வாசித்துப்பார்த்தார். அந்தியை அணுகும்போது வெந்நீரில் நீராடி பசும்பால் அருந்திப்பார்த்தார். துயில் அணையவில்லை. ஆகவே மருத்துவரிடம் கேட்டார். "அந்தணர் மது அருந்தலாகாது, அமைச்சரே. ஆனால் சிவமூலி அவர்களுக்கும் உரியதே" என்றார் மருத்துவர்.

கனகர் "சிவமூலியா?" என்று தயங்கினார். "எனில் சற்றே ஃபாங்கம் அருந்தலாம்... மயக்கம் அளிக்கும். உள்ளத்தில் சொற்சுழல் அடங்கினால் துயில்கொள்ள முடியும்" என்றார் மருத்துவர். "நான் உள்ளத்தை வைத்து விளையாடவேண்டியவன்... இந்த மயக்கப்பொருட்கள் அகத்தை மழுங்கடித்துவிடுபவை" என்றார் கனகர். ஆனால் அவரால் அதைக் கடக்கமுடியவில்லை. ஏழெட்டு நாட்களுக்குப் பின் அவரே மருத்துவரிடம் "சற்றே ஃபாங்கம் கொண்டுவருக. ஆனால் அது வேறொரு மருந்தின் வடிவிலிருக்கவேண்டும். எவர் செவிக்கும் செய்தி சென்றுவிடக்கூடாது" என்று ஆணையிட்டார். "அதை அறிவேன். நான் அதை லேகியத்தின் வடிவில் அளிக்கிறேன். மணம்கூட நெல்லிக்காயுடையதாகவே இருக்கும்" என்றார் மருத்துவர். "முன்பும் அமைச்சர்கள் ஃபாங்கம் உண்டது உண்டு... அதற்குரிய நோன்புநிகர்ச் சடங்குகள் உள்ளன."

உண்மையில் சுவையிலும் வேறுபாடு தெரியவில்லை. அதில் ஓர் உருளையை விழுங்கிவிட்டு படுத்தபோது எந்த வேறுபாடும் தெரியவில்லை. தன்னில் என்ன நிகழ்கிறது என்று கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தார். ஒன்றுமே நிகழவில்லை. தன் உள்ளத்திற்கு அதனால் பயனில்லை போலும் என எண்ணிக்கொண்டார். ஆனால் மறுநாள் எண்ணிநோக்கியபோதுதான் ஆழ்ந்து உறங்கியிருப்பதை அறிந்தார். இறுதியாக நெடும்பொழுது அகல்சுடரை வெறித்துக்கொண்டே இருந்ததும், அது கிளம்பி மிக அருகே வந்து காற்றில் தொங்கிநிற்பதுபோல நின்று அசைந்ததும் நினைவிலெழுந்தது. மறுநாள் மெல்லிய ஆர்வத்துடன் அதை உண்டார். சுடரை நோக்கிக்கொண்டிருந்தார். ஒன்றும் நிகழவில்லை. அது வெறும் உளமயக்கா? ஆனால் மெல்ல சித்தம் கரைந்தபோது சுடர் அவர் அருகே நின்றிருந்தது. விழித்தெழுந்தபோது வாயிலில் ஏவலன் காலைக்கடனுக்குரிய மரவுரியும் நறுமணப்பொருட்களுமாக நின்றிருந்தான்.

பின்னர் ஒவ்வொருநாளும் அவருக்கு அந்தியிலேயே அந்த உளக்கிளர்ச்சி உருவாகத் தொடங்கியது. எப்போது பணிகளை முடிப்போம், அறைக்குள் சென்று லேகியத்தை உண்போம் என உள்ளம் துழாவிக்கொண்டே இருந்தது. அப்படி ஒரு பிறர் அறியாச் செயல் இருப்பதே இனிமையாக இருந்தது. இளஅகவைக்குப் பின் அவரிடம் பிறர் அறியாத தனிச்செயல் என ஒன்று இருந்ததில்லை. பின்னர் அவர் வாழ்க்கையின் ஒரு பகுதியாக அது ஆகியது. ஆனால் ஃபாங்கம் அவரை துயிலச் செய்தாலும் அவருடைய காலைகள் ஊக்கமளிப்பவையாக விடியவில்லை. கண்ணிமைகள் தடித்து தொங்க, வாய் உலர்ந்து உயிரில்லாதது போலிருக்க, எச்சிலில் சற்றே கசப்பு மிஞ்சியிருக்க, தசைகளிலும் எலும்புப்பூட்டுகளிலும்

உளைச்சலுடன் காலையில் எழுந்தார். நடை தள்ளாட நீராட்டறைக்குச் சென்றார். “நான் ஒவ்வொரு துயிலிலும் சற்றே இறந்துவிடுகிறேன் எனத் தோன்றுகிறது, மருத்துவரே” என்றார் கனகர்.

மருத்துவர் “இனிப்பு உண்க, காலையில் இனிமையால் நாவை நிறையுங்கள். உடலுக்குள் அகிபீனாவின் தேவனாகிய ருத்ரன் எழவேண்டும். அவனுக்கான படையல் அது” என்றார். அவர் காலையிலேயே ஆலயத்திலிருந்து வெல்லமிட்ட பொங்கல் கொண்டுவரும்படி சொல்லி உண்டார். அது அவரை மீட்டது. மெல்லமெல்ல அவருடைய ஊக்கம் மிகுந்து வந்தது. சித்தம் முன்னைவிடக் கூர்மை கொண்டது. ஆனால் அவ்வளவு கூர்கொள்ளும்தோறும் அவருக்கு அமைச்சுச் செயல்பாடுகள் பொருளற்றவையாகத் தோன்றின. பெரும்பாலானவற்றை பிறரிடம் ஒப்படைத்துவிட்டு தன்னை விடுவித்துக்கொண்டார்.

வஜ்ரநாகினி அன்னையின் பூசனை முடிந்த மறுநாள் பாண்டவர்களின் அமைச்சரான சுரேசர் அஸ்தினபுரிக்கு வந்தார். யுயுத்ஸுவுடன் இயல்பாக அவர் வந்தாலும் அது ஒரு ஆட்சிமாற்றச் சடங்கு என கனகர் அறிந்திருந்தார். யுயுத்ஸு தேரிலிருந்து இறங்கிய பின் உடன்வந்த தேரை நோக்கி நின்றபோதுதான் கனகர் அதிலிருந்து இறங்கியவரைப் பார்த்தார். சுரேசர் இறங்கியதும் கனகரைப் பார்த்து வணங்கி இன்முகத்துடன் முகமன் சொன்னார். யுயுத்ஸு “இங்குள்ள பணிகளை இனிமேல் தங்களுடன் சுரேசர் பகிர்ந்துகொள்வார்” என்றான். கனகர் தலைவணங்கினார். முதலில் தோன்றிய எண்ணம் பூசனைநிகழ்வுகள் குறித்து யுயுத்ஸு உசாவக்கூடும் என்பது. ஆனால் அவன் அதை அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. அவர்களின் ஒற்றர் அமைப்பு

வலுவிழந்திருக்கக்கூடும். அல்லது அவர்கள் ஆர்வமிழந்திருக்கலாம்.

“இங்கே அனைத்தையும் மீண்டும் தொடங்கவேண்டியிருக்கிறது. அவையும் அங்காடியும் புதிதாக ஒருங்கவேண்டும். தெய்வச்சடங்குகளேகூட ஏராளமாக உள்ளன. அதை நீங்கள் தனியாகச் செய்ய இயலாது. சுரேசர் உடனிருப்பார்” என்றான் யுயுத்ஸு. கனகர் அனைத்தையும் உடனே புரிந்துகொண்டார். பூசனைச்செய்தி அவர்களைச் சென்றடைந்துவிட்டிருக்கிறது. அது அவர்களுக்குப் பொருட்டாகத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் அதை தங்கள் அறிதலுக்கு அப்பால் நிகழ்வதை விரும்பவில்லை. அவர் சுரேசரிடம் “வருக” என்றார். யுயுத்ஸு முறைப்படி வரவேற்கப்பட்டு அரண்மனைக்குள் கொண்டுசெல்லப்பட்டான்.

இடைநாழியில் நடக்கையில் சுரேசர் புன்னகையுடன் “தங்கள் மைந்தர் கானேகிய செய்தியை அறிந்தேன், கனகரே. என்னைவிட மூன்று அகவை இளையவன்... நாங்கள் ஒரு சாலை மாணாக்கர்” என்றார். அதை அவர் ஏன் சொன்னார் என்று கனகர் குழம்பினார். தன்னை எவ்வகையிலேனும் சீண்டுகிறாரா? நிலைகுலைவேன் என எண்ணுகிறாரா? ஆனால் அதை அவர் இயல்பாகக்கூடக் கேட்டிருக்கலாம். என் உள்ளம்தான் திரிபடைந்திருக்கிறது. அவர் மங்கலாகப் புன்னகைத்து “ஆம், அறிவேன். அவன் இருக்குமிடம் தெரியவில்லை. நன்று நிகழ்க அவனுக்கு என்று வாழ்த்துவதன்றி தந்தையென நான் செய்வதற்கொன்றுமில்லை” என்றார். “குடியில் ஒருவர் துறவுகொள்வது தெய்வங்களின் ஆணை. மூதாதையர் விழைவு” என்றார் சுரேசர். கனகர் “ஆம்” என்றபின்

நீள்மூச்செறிந்தார். அவ்வுரையாடல் அவர்களை அணுக்கமாக்குவதற்கு மாறாக மேலும் விலக்கியது.

முதலிரு நாட்கள் அவருக்கு சோர்வும் கசப்பும் இருந்தது. அனைத்தையும் அப்படியே விட்டுவிட்டு விதுரர் வாழ்ந்த குடிலுக்குச் சென்றுவிடலாமா என்றுகூட அவர் எண்ணிப்பார்த்தார். ஆனால் அது தன்னால் இயலாதென்றும் அறிந்திருந்தார். அந்த இடமும் பொறுப்புமே அவருடைய அடையாளமாக இருந்தன. அவை இல்லையேல் எஞ்சுவது ஒன்றுமில்லை. விதுரருக்கு அமைச்சுப்பொறுப்பு ஆடை, எனக்கு உடல் என அவர் சொல்லிக்கொண்டார். அவர் அரண்மனையிலேயே வளர்ந்தவர். பாம்பு தோலை உரிக்கும், ஆமை ஓட்டுக்குள்ளேயே இறக்கும் என்று எண்ணி அவரே பெருமூச்செறிந்தார்.

சுரேசர் கடுமையாகவும் இளக்காரமாகவும் தன்னை நடத்துவதைப்போல கற்பனைசெய்துகொண்டு வெவ்வேறு நிலைகளில் சீற்றமும் தன்னிரக்கமும் விலக்கமும் கொண்டார். அவ்வாறு அவர் தன்னை நடத்திவிட்டதாகவே நடந்துகொண்டார். ஆனால் சுரேசர் மிக மிக நுண்ணுணர்வுடனும் பொறுப்புடனும் நடந்துகொண்டார். அவர் எல்லா ஆணைகளையும் கனகரிடம் ஒரு வேண்டுகோளாக முன்வைத்து அவருடைய சொற்களினூடாக அது வெளிப்படும்படி செய்தார். தன் கருத்துக்களை பரிந்துரைகளாக முன்வைத்தார். பிறர் முன்னால் ஒருபோதும் கனகரிடம் மாற்றுக்கருத்து சொல்லவில்லை. எப்போதும் பணிவுடனும் முகமலர்வுடனும் மட்டுமே பேசினார். மெல்லமெல்ல கனகர் எல்லா பொறுப்பையும் சுரேசரிடமே விட்டார். “நீங்களே முடிவெடுங்கள், உத்தமரே. நீங்கள் இளையவர், எனில் என்னை

விடவும் கற்றவர்" என்றார். "இவ்வரண்மனையின் பொறுப்பு உங்களுக்கு அஸ்தினபுரியின் பேரமைச்சரால் அளிக்கப்பட்டது. அந்த கணையாழி உங்களிடமே உள்ளது. நான் தங்கள் பணியாளன் மட்டிலுமே" என்றார் சுரேசர்.

ஆனால் சுரேசர் அரண்மனையின் அனைத்து நடத்துகையையும் ஒருசில நாட்களிலேயே கையிலெடுத்துக்கொண்டார். மெல்லமெல்ல நாடெங்குமிருந்து வந்துகொண்டிருந்த ஒற்றர்செய்திகளை முறைப்படுத்தினார். தான் செய்யத் தவறியது என்ன என அதன் பின்னரே கனகர் அறிந்தார். ஒற்றர்கள் மேல்கீழ் அடுக்குகளினால் ஆனவர்கள். கீழ்நிலை ஒற்றர்கள் அனைத்துச் செய்திகளையுமே மேலே அனுப்புகிறார்கள். மேலே உள்ள ஒற்றர்கள் அவற்றில் உரியவற்றை மட்டும் தனக்கு மேலே அனுப்புகிறார்கள். பல செய்திகளை தொகுத்து ஒற்றைச்செய்திகளாக்குகிறார்கள். செய்திகளுடன் தங்கள் கருத்துக்களையும் இணைக்கிறார்கள். போர்க்காலத்தில் தலைமை ஒற்றர்கள் கொல்லப்பட கீழிருந்தவர்கள் மேலேறியபோது அவர்களில் பலரால் மேலிருந்து செயல்பட இயலவில்லை. ஆகவே அவர்முன் ஒற்றுசெய்திகள் நாளும் மலையெனக் குவிந்தன. அவர் அனைத்தையும் படித்தறிய இயலாமல் சீற்றம்கொண்டார். எரிச்சலுடன் பெரும்பாலானவற்றை படிக்காமல் ஒதுக்கினார். படித்தவற்றை மட்டும்கொண்டு கருத்துக்களை உருவாக்கினார். அவை பிழையாக ஆயின.

சுரேசர் ஒற்றர்களில் எவர் மேலே அமையும் தகுதிகொண்டவர் என கணித்தார். அவர்களை மேலே கொண்டுவந்து பதவியளித்தார். அவர்களுக்கு இணையான நிலையிலிருந்த ஆனால் அத்தகைய திறன் இல்லாத ஒற்றர்களுக்கு ஏதேனும்

பட்டத்தையோ பரிசையோ கொடுத்து நிறைவுசெய்தார். ஓரிரு நாளிலேயே ஒற்றர்களின் மேல்கீழ் அமைப்பு ஒழுங்குகொண்டது. ஏவலர்கள் அனைவருமே இளைஞர்கள், முன்னர் பணியாற்றிய பட்டறிதல் அற்றவர்கள். ஆகவே அவர்கள் ஒவ்வொன்றுக்கும் செய்வதறியாது குழம்பினர். ஆளுக்கொரு முடிவெடுத்து ஒருவரோடொருவர் மோதிக்கொண்டனர். அவர்கள் முடிவெடுக்க முடியாமல் இருக்கையில்கூட சற்றே உள்ளொழுங்கு நிலைகொண்டது. சிறந்த முடிவுகளை எடுத்துவிட்டால் அம்முடிவுகள் விசையுடன் மோதிக்கொண்டன. முடிவெடுத்தவர்கள் தங்கள் ஆணவங்களையே முன்வைத்தனர்.

பட்டறிவின் பயன் என்ன என்பதை அப்போதுதான் கனகர் புரிந்துகொண்டார். பட்டறிவு முன்னர் நிகழ்ந்து நல்விளைவை உருவாக்கிய முடிவையும் செயல்பாட்டையும் நினைவுகூர்கிறது. அதையே மீண்டும் பரிந்துரைக்கிறது. அரசு என்பது மீளமீள நிகழ்வது. மீளமீள நிகழ்கையிலேயே அரசு உறுதியாக இருக்கிறது. மாற்றமின்மையே அரசின் ஆற்றலை உருவாக்குகிறது. ஏனென்றால் அரசு என்பது அதன் குடிகளிடம் திகழும் ஒரு நம்பிக்கையின் குவிமையம். மாற்றமில்லாமையையே மக்கள் விழைகிறார்கள். ஆலயக்கருவறையில் இருக்கும் தெய்வம் என்ன என்று அறிந்திருப்பதுபோல. எது எவ்வண்ணம் மாறினாலும் அது அவ்வண்ணம் இருக்கும் என்னும் நம்பிக்கையே ஆலயத்தெய்வத்தின் அருள் எனக் கருதப்படுகிறது. அரசுச் செயல்பாடுகள் எண்ணியபடியே நிகழ்கையில் குடிகள் நிறைவடைகிறார்கள். ஊழியர்கள் இயல்பாக இருக்கிறார்கள். மேலாளர்கள் சுமையில்லாமல் செயல்படுகிறார்கள்.

ஒரு சிறு புதிய செயல்பாடுகூட அரசை நிலைகுலையச் செய்கிறது. விசையுடன் ஒன்றுடன் ஒன்று கவ்விச் சுழலும் பற்சகடங்களின் நடுவே சிறு கல் ஒன்று சிக்கிக்கொண்டதுபோல ஓசையும் அனலும் உருவாகிறது. அனைத்தும் நிலைகுலைகின்றன. ஆனால் புதியவர்களுக்கு முன்பு நிகழ்ந்தவை எதுவும் தெரிந்திருக்கவில்லை. முறைமைகள் பொருளற்றவையாகத் தோன்றின. பெரும்பாலானவர்கள் பதினாறு அகவைகூட ஆகாத சிறுவர்கள். கல்விநிலையிலிருந்து நேரடியாகவே அமைச்சுப்பணிக்கு வந்தவர்கள். ஆணைகளையே மும்முறை சொல்லவேண்டியிருந்தது. அந்த ஆணை நிறைவேற்றப்பட்டதா என மீண்டும் நோக்கவேண்டியிருந்தது. அதன் பிழைகளைச் சுட்டிக்காட்ட வேண்டியிருந்து. அவை ஏன் பிழைகள் என அவர்களுக்குப் புரியவைக்கவும் வேண்டியிருந்தது. ஆயினும் குடிகள் திகைப்படைந்தனர். அவர்கள் முன் என்ன செய்வதென்று அறியாமல் திகைத்து இன்னொருவரிடம் உசாவும் அரசுப்பணியாளன் அவர்களைக் கைவிடும் ஒரு தெய்வத்தின் விழித்தோற்றம். அரசு முடிவெடுக்காது என எண்ணியபோது அவர்களின் சிக்கல்கள் மேலும் பெருகின.

ஒவ்வொரு முடிவும் பிறிதொன்றுடன் முரண்பட பல நாட்கள் அஸ்தினபுரியே உறைந்துகிடந்தது. போர்நாட்களில் அவ்வாறு இருக்கவில்லை. அப்போது பானுமதி ஊக்கத்துடன் இருந்தாள். ஒவ்வொன்றுக்கும் அவளிடமிருந்து ஆணைகள் வந்தன. அன்று நகரம் மிகமிகச் சிறிதாகச் சுருங்கிவிட்டிருந்தது. நகரில் வணிகமும் தொழிலும் பெரும்பாலும் இல்லாமலாகிவிட்டிருந்தன. சிறுபூசல்கள் அனைத்தும் நின்று அனைவருமே போரை எண்ணிக்கொண்டிருந்தனர். ஆனால் போர்முடிந்ததும் அனைத்தும் முன்னைவிட விசையுடன்

எழுந்தன. ஒவ்வொன்றிலும் புதிய சிக்கல்கள் உருவாயின. “அஸ்தினபுரியையே மீண்டும் புதிதாக கட்டி எழுப்பவேண்டியிருக்கிறது என தோன்றுகிறது” என்று கனகர் சொன்னார். பழைய வணிகர்கள் வராமலானார்கள். வந்துசேர்ந்த புதிய வணிகர்களுக்கு அங்காடியில் நெடுங்காலமாக அமைந்திருந்த முறைமைகள் ஏதும் தெரியவில்லை. ஆயர்களும் வேளாண்குடிகளும் மீண்டு வந்து தொழில்தொடங்கியபோது பூசல்கள் நாளும் நூறு ஆயிரமென வெடித்துப் பெருகின.

முன்பே அளிக்கப்பட்டிருந்த சொற்களை நினைவுகூர்வோர் சிலரே இருந்தனர். நீர்க்கடன்கள் செய்வதிலிருந்து மாண்டவரின் உடைமைகளை கைக்கொள்வது வரை ஒவ்வொரு குடியிலும் மோதல்கள் உருவாயின. அரசவையில் பானுமதி அமரவில்லை. ஆகவே அறுதிச்சொல் இன்றி பலநூறு வழக்குகள் காத்து நின்றிருந்தன. “நான் என்ன செய்யக்கூடும்?” என்பதே கனகரின் சொல்லாக இருந்தது. “இது இன்று அரசரில்லா நிலம். நீர்க்கடன்கள் கழிந்து அரசர் நகர்புகுந்து அவையமரவேண்டும். கோல் நிலைகொள்ளவேண்டும். குடியவை நிறையவேண்டும். அதன் பின்னரே ஒவ்வொன்றும் ஒருங்க முடியும். அதுவரை இதை இவ்வண்ணம் உருட்டிக் கொண்டுசெல்வதே என் பணி.” சுரேசர் வந்த மறுநாளே நிலைமையை உணர்ந்துகொண்டார். அதற்கான வழியையும் அவர் கண்டடைந்தார். “மகளிர் இந்நகரை ஆண்டிருக்கிறார்கள். முதுமகளிருக்கு இங்குள்ள முறைமைகள் அனைத்தும் தெரியும். பட்டறிதலின் வளம் அவர்களிடம் உண்டு” என்றார்.

“ஆனால் ஆண்கள் பெண்களின் சொற்களை ஏற்கமாட்டார்கள்... இது அன்னைவழி ஆளும் நாடல்ல” என்றார் கனகர். “ஆம்,

மைந்தரே பொறுப்பிலிருக்கட்டும். ஒவ்வொரு மைந்தனுக்கும் துணைக்கு பட்டறிவு மிக்க மூதன்னையர் அமைந்த ஒரு சிறு சொல்லவை துணைநிற்கட்டும்" என்றார் சுரேசர். அன்னையர் பொறுப்பேற்றுக்கொண்டதும் இரண்டு நாட்களிலேயே ஒவ்வொன்றும் தெளிவுகொண்டன. மிகச் சிக்கலான நூல்கண்டை ஓரிரு இழுப்புகளில் தனித்தனியாகப் பிரித்து நேர்செய்வதுபோல சுரேசர் அனைத்தையும் சீரமைத்தார். கனகர் தன்னிடமிருந்து எல்லா பொறுப்பும் அகன்றுவிட்டதை பத்து நாட்களுக்குள் உணர்ந்தார். ஆனால் எல்லா ஓலைகளும் அவர் பெயருடனேயே சென்றன. அவர்தான் ஒவ்வொருநாளும் பானுமதியைச் சந்தித்து நிகழ்வனவற்றை சுருக்கிச் சொன்னார்.

பானுமதி எதையும் செவிகொள்ளவில்லை. அவள் ஒவ்வொருநாளும் மெலிந்துகொண்டிருந்தாள். அத்தனை விரைவாக மானுடர் உருவழியமுடியுமா என்பதே அவருக்கு எண்ணத்தொலையாததாக இருந்தது. அவளுடைய முகத்தசைகள் சுருங்கி, பற்கள் உந்தி வெளிவந்தன. கண்கள் குழிந்ததும் முகத்திலிருந்த மலர்ச்சி மறைந்தது. புன்னகைத்தாலும் முகம் மலராமல் ஆகியது. தலைமுடியில் நரை தோன்றியது. பெரும்பாலான பொழுதுகளில் அவள் தன் தனியறையிலேயே இருந்தாள். வெண்ணிற ஆடை அணிந்து மங்கலங்கள் ஏதுமின்றி மரவுரியிட்ட பீடத்தில் அமர்ந்திருந்தாள். அவர் அரசுச்செய்திகளைச் சொல்லி முடித்ததும் மிக மெல்லிய குரலில் ஓரிரு ஆணைகளை மட்டும் பிறப்பித்தாள். அவளருகே அவளைப் போலவே தோன்றிய அசலையும் இருந்தாள். அவள் எச்சொற்களையும் செவிகொள்ளவில்லை. சாளரம் வழியாக வெளியே பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தாள். அவர்கள் உள்ளத்தால் அங்கிருந்து நெடுநாட்களுக்கு முன்னரே

கிளம்பிவிட்டிருந்தார்கள். போர்குறித்த எச்செய்தியையும் கேட்க அவர்கள் விரும்பவில்லை. அன்றாடச் செய்திகளை மட்டுமே அறித்தால் போதுமென அரசியின் ஆணை இருந்தது.

பானுமதி ஒரே ஒருமுறை மட்டும் "நீர்க்கடன்கள் முடிய எத்தனை காலமாகும்?" என்றாள். "நீர்க்கடன்களுக்கு நூல்கள் வகுத்த நெறிகள் உள்ளன அரசி. பிராமணர் பத்து நாட்களிலும் ஷத்ரியர் பன்னிரண்டு நாட்களிலும் வைசியர் பதினைந்து நாட்களிலும் சூத்திரர் ஒரு மாதத்திலும் இறப்புத்தீட்டு அழிகிறார்கள் என்பது நூல்வகுப்பு. அங்கே விதுரர் இருக்கிறார். அவருக்கும் நீர்க்கடன் பொறுப்பு உண்டு. ஆகவே ஒரு மாதமாகலாம்" என்று கனகர் சொன்னார். பானுமதி ஒன்றும் சொல்லவில்லை. சற்றுநேரம் காத்துவிட்டு "பேரரசர் திருதராஷ்டிரர் நீர்க்கடன் முடிந்து பதினொரு நாட்கள் கடந்தபின் நகரணையக்கூடும். தங்கள் முடிப்பொறுப்பை அவரிடம் ஒப்படைத்துவிடலாம். அவரிடமிருந்து பாண்டவ அரசர் பெற்றுக்கொள்வார்" என்றார். "நான் நீர்க்கடன் முடிந்து பேரரசர் இங்கே வந்த அன்றே காசிக்குக் கிளம்பவேண்டும். அனைத்தும் ஒருங்கியிருக்கட்டும். என் நோக்கம் அவர்களுக்கும் அறியப்படுத்தப்பட வேண்டும்" என்று பானுமதி சொன்னாள். "முடிசூட்டுவிழாவுக்கு..." என்று கனகர் சொல்ல "எந்த விழாவிலும் நான் பங்கெடுக்கக்கூடாது..." என்று பானுமதி சொன்னாள். கனகர் தலைவணங்கினார்.

யுயுத்ஸு மூன்று நாட்களுக்கு ஒருமுறை கங்கைக்கரையில் அஸ்தினபுரிக்கு வந்து ஒருநாள் தங்கி மறுநாள் கிளம்பிச் சென்றான். அவனுடைய வருகையால்தான் அஸ்தினபுரி அரசர் என ஒருவர் எங்கோ இருக்கும் உணர்வை அடைந்தது. அவனிடமிருந்து எழுவன யுதிஷ்டிரன் சொல்லும் சொற்கள்

என்று கனகர் எண்ணினார். சுரேசரும் அதையே சொன்னார். அவன் மொழியும் சாயலும் யுதிஷ்டிரன் போலவே இருந்தன. அவன் எப்போதுமே யுதிஷ்டிரனை எண்ணிக்கொண்டிருந்தவன். அருகமைந்தபோது விழிகளாலும் அள்ளி உள்ளே அமைத்துக்கொண்டுவிட்டிருந்தான். யுதிஷ்டிரனின் மெல்லிய கூன்கூட யுயுத்ஸுவுக்கும் வந்திருக்கிறது என இளம் அமைச்சரான சூர்யசேனன் சொன்னார். கனகர் "சொற்களை அமைச்சன் வீணடிக்கக் கூடாது. தனக்குள்ளேயே கூட எண்ணித்தான் பேசவேண்டும்" என அவரைக் கடிந்துகொண்டாலும் அது மெய் என்றே உள்ளத்துள் உணர்ந்தார்.

அஸ்தினபுரியின் அரசப்பொறுப்பை யுதிஷ்டிரன் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதனால் பாண்டவர்களிடமிருந்து நேரடியாக ஆணைகள் எவையும் அஸ்தினபுரிக்கு வந்துசேரவில்லை. யுதிஷ்டிரன் உளம் சோர்ந்து சொல்லவிந்து ஒதுங்கியிருப்பதாகவும், நாற்பத்தொருநாள் நீளும் கடுநோன்பு கொண்டிருப்பதாகவும் செய்தி வந்தது. யுதிஷ்டிரனின் ஆணை என யுயுத்ஸுவின் சொற்களே கொள்ளப்பட்டன. பிறிதொன்று எண்ணமுடியாதபடி அவை நெறிசூழ்ந்தவையாகவும் நடைமுறைக்கு உகந்தவையாகவும் இருந்தன.

வஜ்ரநாகினி அன்னையின் பூசனை முடிந்து தன் அறைக்குத் திரும்பிய அன்றுதான் கனகர் முதல்முறையாக பகலில் அகிபீனா குளிகைகளை உண்டார். தன் உடலெங்கும் குருதி வாடை அடிப்பதாக எழுந்த உணர்விலிருந்து அவரால் தப்பவே முடியவில்லை. அன்று சாலையில் புரவியில் வருகையில் செம்புழுதி குருதிச்சேறென்று தோன்றியது. புரவிக்கால்கள் மென்பூழியில் விழுந்தபோது நைந்து துவைந்தவை

கருக்குழவிகளின் மெல்லுடல்கள் என தோன்ற அவர் விதிர்த்து நடுங்கிக்கொண்டிருந்தார். பற்கள் கிட்டித்து கண்கள் கலங்கி வழிந்தன. தன் மாளிகையை அடைந்ததும் அவர் நழுவி விழுவதுபோல் புரவியிலிருந்து கீழிறங்கினார். தரையில் கையூன்றி அமர்ந்து தலைதாழ்த்தி வாயுமிழ்ந்தார். ஏவலர் அவரை உள்ளே கொண்டுசென்றனர்.

அவர் மஞ்சத்தறைக்குச் சென்றார். குருதியின் கெடுமணம் உடலெங்கும் பரவியிருப்பதாகத் தோன்ற நீராட்டறைக்குச் செல்ல ஆணையிட்டார். நீராடி நறுஞ்சுண்ணம் பூசி வந்து அமர்ந்தபோது ஏவலர் உணவு பரிமாறினர். ஆவிபறந்த அப்பத்தை கையில் எடுத்தார். அது உயிருள்ள சிறு குழந்தை என நெளிந்தது. மெல்லிய முனகலோசையை அவர் கேட்டார். அலறி அதை வீசிவிட்டு எழுந்து நின்றார். ஏவலர் அவரைக் கூர்ந்து நோக்கியபடி நின்றனர். அவர் கையை உதறியபடி சுவர் அருகே சென்றார். பின்னர் இடையைப்பற்றியபடி அமர்ந்து வாயுமிழ்ந்தார். வயிற்றுக்குள் நீரன்றி ஏதுமிருக்கவில்லை. அவர் வாயுமிழ்ந்தபடியே இருந்தார். பின்னர் விழிகள் வழிய சோர்ந்து அப்பால் அமர்ந்தார்.

அவர்கள் அவரை தூக்கி கொண்டுசென்று படுக்கச்செய்தார்கள். அவர் வலிகண்டவர்போல புரண்டபடியே இருந்தார். ஏவலன் ஒரு கிண்ணத்தில் இன்கூழ் கொண்டுவந்தான். அதைப் பார்த்ததும் மீண்டும் உடல் உலுக்கிக்கொண்டது. "வேண்டாம்!" என்றார். பின்னர் எழுந்து அமர்ந்து அப்பாலிருந்த கலத்தைச் சுட்டி "அதைக் கொண்டுவா" என்றார். "இது..." தயங்கிய ஏவலன் "பகலில்..." என்றான். "கொண்டுவா" என அவர் ஆணையிட்டார். அவன் அதை எடுத்துக்கொண்டுவர இரு உருளைகளை விழுங்கிய பின் மல்லாந்து படுத்துக்கொண்டார். மீண்டும்

மீண்டும் வாயுமிழ்வதுபோல உடல் அதிர்ந்துகொண்டிருந்தது. குருதியின் வாடை அவர் மூக்கருகே இருந்து எழுந்தது. அல்லது உடலுக்குள் இருந்து. ஆனால் அவர் துயில்கொண்டுவிட்டிருந்தார்.

அதன்பின் பகல்பொழுதிலும் சற்றே ஃபாங்கம் கலந்த லேகியத்தை உண்ணும் வழக்கம் கனகரிடம் உருவாகியது. சுரேசர் அனைத்தையும் ஒருங்கிணைத்து சீர்ப்படுத்தி தானே செயலாக்கிக்கொண்டும் இருந்தார். காலையில் அமைச்சுநிலைக்கு வந்தால் ஓரிரு ஒற்றுச்செய்திகளை கேட்டபின் வெறுமனே கைகளைக் கட்டிக்கொண்டு அமர்ந்திருப்பார். அவ்வப்போது கோழி என விழிசரிந்து வாய் விழுந்து அரைத்துயிலில் ஆழ்ந்து திடுக்கிட்டு விழித்துக்கொள்வார். வெறுமனே அமர்ந்திருக்கையில் எல்லாம் ஃபாங்கம் நினைவிலெழுந்தது. அமைச்சுநிலையில் அதை உண்ணுவது பெரிய குற்றம் என முன்னரே வகுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு உண்ட பலரை அவர் தண்டனைக்கு அனுப்பியதுமுண்டு. ஓரிரு நாட்கள் போராடிய பின் அவர் சற்றே லேகியத்தை சிறிய வெள்ளிச்சிமிழில் கொண்டுவரத் தொடங்கினார். அதை வெற்றிலையுடன் வைத்து வாயிலிட்டு மென்று விழுங்கினால் சிறிது நேரத்திலேயே உடலில் அனைத்து கட்டுகளும் அவிழும். அத்தனை தசைகளும் தளரும். உள்ளத்தில் ஓரிரு சொற்கள் மட்டும் ஊசலாடிக்கொண்டிருக்கும். அலைநீர்ப்பரப்பில் நெற்றுகள்போல ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற ஒருவகை ஆடல்.

சுரேசர் அமைச்சுநிலைக்குள் புகுந்தபோது கனகர் துயின்றுகொண்டிருந்தார். அவர் இருமுறை அழைத்த பின்னரே விழித்துக்கொண்டார். வாயைத் துடைத்தபடி “என்ன?” என்றார்.

“பேரமைச்சர் விதுரர் நாளைக் காலை முக்தவனத்தை வந்தடைகிறார். தாங்கள் அங்கே செல்லவேண்டும் என ஆணை வந்துள்ளது” என்றார் சுரேசர். திகைப்புடன் “நானா?” என்றார். “ஆம், தங்களைத்தான் வரச்சொல்லியிருக்கிறார்” என்றார் சுரேசர். “ஆனால் இங்கே...” என கனகர் தயங்க “இங்குள்ள பணிகளை நான் பார்த்துக்கொள்கிறேன். தாங்கள் செல்லலாம்... அரசு ஆணைக்கு நிகர் அமைச்சரின் ஆணை” என்றார் சுரேசர். “ஆம்” என்றபின் கனகர் “நான் நாளை புலரியிலேயே கிளம்புகிறேன்” என்றார். சுரேசர் மேலும் ஏதோ சொல்ல விழைந்து பின்னர் அதை ஒழிந்து தலைவணங்கி அகன்றார்.

அவர் செல்லும்போது சொல்லாக எழாத உதட்டு அசைவை கனகர் எண்ணிக்கொண்டிருந்தார். அவர் சொல்ல வந்தது என்ன? அவர் எழுந்துசென்று வாயை கழுவிவிட்டு வெற்றிலைச்செல்லத்தை திறந்தார். உள்ளே வெள்ளிச்சிமிழ் இருந்தது. அவருக்கு சுரேசர் சொல்லவந்தது புரிந்தது. அவரைப் பார்த்ததுமே விதுரர் உணர்ந்துவிடக்கூடும். அவர் அச்சத்தால் அடித்துக்கொண்ட நெஞ்சுடன் அந்த வெள்ளிச்சிமிழிலிருந்த ஃபாங்கத்தை வழித்து சாளரம் வழியாக வெளியே வீசினார். சிமிழை தூக்கி உள்ளறைக்குள் போட்டார். உடல் வியர்வைகொண்டிருந்தது. பின்னர் மெல்ல எண்ணங்கள் தெளிந்தன. அவர் முகம் களைத்திருக்கிறது. கண்கள் நீர்மைகொண்டிருக்கின்றன. கையில் நடுக்கு இருக்கிறது. குரலிலேயே கூட இடறல் தெரியலாம். ஆனால் அதெல்லாம் அஸ்தினபுரியில் அனைவரிடமும் இருக்கும் இயல்புகள். இந்தப் போருக்குப் பின் இங்கே தன்னிலையில் இருப்பவர் எவர்? திடுக்கிட்டு எழாது, கொடுங்கனவு இல்லாது துயில்கொள்பவர் எவர்?

அவர் பெருமூச்சுவிட்டார். “ஒன்றுமில்லை... வீண் அச்சம். அவருக்குத் தெரியும்” என எவரிடமோ என தன்னுள் சொல்லிக்கொண்டார். “நான் மட்டுமா? இங்கு அனைவருமேதான்” என்றார். “சொல்வது எளிது, இங்கிருப்பது மேலும் கடினம்... இதுவும் ஒரு போர்க்களம். இங்கே போர் இன்னும் முடியவில்லை” என்றார். சீற்றத்துடன் “விட்டுவிட்டு ஓடியவருக்கு இதைக் கேட்கும் தகுதி உண்டா?” என்றார். கையை ஆட்டி முகம்சுளித்து சினத்துடன் “இங்கே நாங்கள் மட்கி அழிந்துகொண்டிருக்கிறோம். எரிந்தழிவது மிக எளிது!” என்றார். பின்னர் எழுந்து ஏவலனிடம் “நான் கிளம்பி என் மாளிகைக்குச் செல்கிறேன். சுரேசரிடம் சொல்” என்று கூறிவிட்டு இடைநாழியினூடாக நடந்தார். செல்லச்செல்ல அவர் நடை விசைகொண்டது. முகம் மலர்ந்தது. மூச்சுவாங்க தன் மாளிகையை அடைந்து மஞ்சத்தறைக்குள் நுழைந்து லேகியம் இருந்த கலத்தை திறந்து பெரிய உருளைகளாக இரண்டு எடுத்து விழுங்கினார். அருகே இருந்த குவளையிலிருந்து நீரை குடித்துவிட்டு மஞ்சத்தில் கால்நீட்டி படுத்துக்கொண்டார். கண்களை மூடியபோது வழக்கமான சுடர் தெரிந்தது, அணுகி வரலாயிற்று.

நீர்ச்சுடர் - 15

பகுதி மூன்று : பலிநீர் – 2

கனகர் முதற்புலரியில் தன்னை எழுப்பும்படி ஏவலரிடம் ஆணையிட்டுவிட்டுதான் படுத்தார். ஏவலன் விழிகளில் தெரிந்த நம்பிக்கையின்மையைக்கண்டு உரத்த குரலில் ”என்ன?”

என்றார். அவன் இல்லை என்று தலையசைத்தான். "முதற்புலரியில், கருக்கிருளிலேயே!" என்றார். அவன் ஆம் என்று தலையசைத்தான். "ஒளியெழுவதற்குள் இங்கிருந்து அனைவரும் கிளம்பிவிட வேண்டும். முதல் நாழிகைக்குள் நகரிலிருந்து வெளியேறிவிடவேண்டுமென்று நிமித்திகர் கூற்று. அதற்குள் நான் நீராடி ஒருங்க வேண்டும். செல்வதற்கு முன் ஒற்றர்களை சந்தித்து ஆணைகளை பிறப்பிக்கவேண்டும். இயற்றுவதற்கு பணிகள் மிகுந்துள்ளன" என்றார். "ஆம், அமைச்சரே" என்றான் ஏவலன். "ஒன்று தவறினாலும் நாளெல்லாம் நான் இடர்ப்படவேண்டியிருக்கும்" என்றார். அதை அவர் தனக்கேதான் சொல்லிக்கொண்டார். அவனும் அதை உணர்ந்திருந்தான் என்று தோன்றியது.

செல்க என்று கையசைத்துவிட்டு கனகர் தன் மஞ்சத்தறைக்குள் சென்றார். மேலாடையைத் தூக்கி சிறு பீடத்தில் வீசிவிட்டு கைகளை சோம்பல் முறித்தபின் மஞ்சத்தில் அமர்ந்தார். தலை எடை கொண்டிருந்தது. வாய் கசந்தது. அன்று பகல் முழுக்க அவர் இனிப்பு கலந்த மாவுக்கூழை மட்டுமே அருந்தியிருந்தார். அதுவும் ஒவ்வொரு முறையும் அரைக்குடுவை மட்டுமே. ஓரிரு வாய் உள்ளே சென்றதுமே வயிறு குமட்டி உடல் உலுக்கிக்கொண்டிருந்தது. துயில் அமைந்தால் அனைத்திலிருந்தும் விடுபட்டுவிடலாம். ஆனால் கணம்நூறு அலை வந்து அறைந்தாலும் கரையாத கடற்பாறை போலிருந்தது தன்னுணர்வு. அகிபீனாவின் துயில் உள்ளத்தை மட்டுமே கரைந்தழியச் செய்யும். ஆனால் காலையிலெழுந்தால் உடல் நெடும்பொழுது உழைத்து சலித்ததுபோல் களைத்திருக்கும்.

ஒருவேளை மஞ்சத்திலேயே துயிலில் புரண்டுகொண்டும் கைகால்களை அசைத்தபடியும் இருக்கிறோமோ? இருமுறை அவர் ஏவலரிடம் "நான் இரவில் எப்படி துயில்கிறேன்?" என்று கேட்டிருக்கிறார். அவர்கள் விழிகளில் எந்த உணர்வும் தெரியவில்லை. "நன்கு துயில்கிறேனா? கேட்ட வினாவுக்கு மறுமொழி சொல்க!" என்று உரக்க கேட்டபோது ஏவலன் தயக்கமாக "நிறைய பேசுகிறீர்கள்" என்றான். அவர் "என்ன பேசுகிறேன்?" என்றபோது அவன் "கூச்சலிடுகிறீர்கள்" என்று மேலும் தாழ்ந்த குரலில் சொன்னான். அவர் ஐயத்துடன் "என்ன கூச்சலிடுகிறேன்?" என்றார். "தெரியவில்லை. நான் உள்ளே வருவதில்லை. குழறலாகப் பேசுவதால் சொற்களும் புரிவதில்லை. நீங்கள் என்னை அழைக்கிறீர்களா என்று மட்டும்தான் பார்ப்பேன். இல்லையெனில் விலகிவிடுவேன்" என்று அவன் சொன்னான்.

"என்ன கூச்சலிட்டேன்? எவரிடம் கூச்சலிட்டேன்? சொல்!" என்று அவர் மீண்டும் கேட்டார். அவன் பேசாமல் நிற்க "சொல்!" என்றார். "உத்தமரே, நீங்கள் இரவில் தெய்வங்களிடம் பேசுவதுபோல் இருந்தது" என்றான். "தெய்வங்களுடனா?" என்று அவர் கேட்டார். "ஆம், நீங்கள் பேசும் ஒலியும் மொழியும் தெய்வங்களிடம் பேசுவதுபோலத்தான் இருந்தது" என்றான். "விலகிச்செல்லுங்கள்! விட்டுவிடுங்கள்!" என்று அவன் சொல்லிக்காட்டினான். அவர் வெறுமனே நோக்கினார். "மன்றாடி கூச்சலிடுவதுபோல் தோன்றியது" என்றான். அவர் கண்களைக் கூர்ந்து அருகே வந்து " நன்கு எண்ணிச்சொல், தெய்வங்களிடமா இல்லை உயிர் நீத்தாரிடமா?" என்றார். "அதை என்னால் அறியக்கூடுவதில்லை. ஆனால் பெரும்பாலும் விட்டுவிடுங்கள், விட்டு அகன்றுவிடுங்கள் என்று மன்றாடினீர்கள். சில முறை அழுதீர்கள். சில முறை நெஞ்சில்

ஓங்கி அறைந்துகொண்டு அலறினீர்கள். ஓரிருமுறை எழுந்து அறைக்குள் சுழன்று ஓடுவது போலவும் விழுவது போலவும் கூட தோன்றியது" என்றான்.

"ஒரே ஒருமுறை மஞ்சம் ஓசையிட்டபோது நான் உள்ளே வந்து பார்த்தேன். நீங்கள் மஞ்சத்தின் விளிம்பில் மோதி அதன் காலடியிலேயே விழுந்து கிடந்தீர்கள். உங்களைத் தூக்கி படுக்க வைத்தேன்" என்றான். "நீ என்ன கேட்டாய்? சொல், நான் என்ன சொல்லிக்கொண்டிருந்தேன்?" என்றார். "விட்டுப்போங்கள் என்று மட்டும்தான்" என்றான். அவர் அவன் விழிகளை மேலும் அணுக்கமாக நோக்கினார். "அல்ல, அதற்கு மேல் ஏதோ சொன்னேன். உன் விழிகளில் தெரிகிறது அது" என்றார். அவன் விழி தாழ்த்தி தனக்குள் என "நீங்கள் அவர்களை வசை பாடினீர்கள்" என்றான். "நானா?" என்று அவர் கேட்டார். "ஆம், மிகக்கீழ்மை நிறைந்த சொற்கள்..." என்றான். "கீழ்மை நிறைந்த சொற்கள் என்றால்?" என்று அவர் கேட்டார். "அந்தணர் நாவிலிருந்து ஒருபோதும் எழுந்துவருமென நான் கேட்டிராத சொற்கள். ஆகவேதான் அவை உங்களுடையதல்ல என்று தெளிந்தேன்."

பெருமூச்சுவிட்டு கனகர் அவரிடம் "செல்க!" என்றார். அவன் சென்றபின் அந்த அறையை அச்சத்துடன் நோக்கினார். இந்த அறைக்குள் அத்தெய்வ உருவங்கள் இருக்கின்றனவா? நீத்தாரா? என்னை வந்து சூழ்ந்துகொள்ளும் அளவுக்கு எவரும் அக்களத்தில் உயிரிழக்கவில்லை. அரசர்களுக்கு என் முகமே தெரிந்திருக்க வாய்ப்பில்லை, எனில் எவர்? எங்கும் எவரும் உயிரிழக்கும்படி நான் எந்த முடிவையும் எடுக்கவில்லை. உண்மையில் வாழ்நாளெல்லாம் முடிவென எதையுமே எடுத்ததில்லை. பிறர் முடிவுகளை

நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கிறேன். பிறர் முடிவுகளுக்கு ஏற்ப துணை முடிவுகளை எடுக்கிறேன். என்வாழ்வை குறித்துக்கூட எந்த முடிவையும் எடுத்ததில்லை. எந்த முடிவையும் எடுக்காதவர்கள் இப்புவியில் எதற்கும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டியதில்லை. அவர்களை எந்த தெய்வமும் முனியப்போவதில்லை.

ஆனால் எவரும் அவர்களை மதிப்பதுமில்லை. எவரிடமிருந்தும் நன்றியில் விழி நனைந்த ஒரு சொல்லை கேட்டதில்லை. எவரும் அடைக்கலமென வந்து முன் நின்றதும் இல்லை. எவரும் உளம் கனிந்து தோளில் தொட்டு ஒரு நற்சொல் உரைத்ததில்லை. இயற்றும் செயல் பிழையானால் மட்டுமே அவர் ஒருவர் இருப்பது அவர்களுக்கு தெரிகிறது. அப்பிழைக்கென அவரை கடிந்துகொள்கையில் மட்டுமே விழிநோக்கி சொல்லெடுக்கிறார்கள். எண்ணியிராக்கணத்தில் அவருடைய உளம் உருகி, தன்னிரக்கம் பெருகி கண்ணீர் வழியத்தொடங்கியது. அவர் அகிபீனா கலந்த லேகியத்தை எடுத்து அதிலிருந்து ஒரு உருளையை உள்ளங்கையில் உருட்டிக்கொண்டார்.

அதை வாயிலிடுவதற்குமுன் வேண்டியதில்லை என்று அவருக்குள்ளிருந்து ஒரு குரல் எழுந்தது. இதை உண்டால் நாளை புலரியில் என்னால் எழ முடியாது. அகிபீனா சித்தத்தை மயங்க வைக்கிறது. உள்ளே உறையும் அனைத்துக் குரல்களையும் எழுப்பி ஒன்றுடன் ஒன்று போராட வைக்கிறது. உள்ளம் கொப்பளித்து நுரையடங்குகையில்தான் அவற்றுக்குமேல் படியும் ஓர் இருள் என துயில் அணைகிறது. அதற்கு நெடுநேரம் ஆகும். பெரும்பாலும் புலரியிலேயே ஆழ்ந்த துயில் அமைகிறது. எழும்போது முகம் உறைந்தது

போல், வாய் உலர்ந்து ஒட்டிக்கொண்டது போல் தொண்டையில் மணல் சிக்கிக்கொண்டது போல், கைகால்கள் தளர்ந்து மூட்டுகள் குடைச்சலெடுத்து விழிகள் எரிய காய்ச்சல் கண்டது போல் தோன்றவைக்கிறது. அகிபீனா உண்டு துயின்றெழுந்தால் ஒருநாழிகைப்பொழுது உடல் ஒன்றுடன் ஒன்று ஒத்திசையாத உறுப்புகளின் தொகையாக இருக்கும், உள்ளம் சொற்களின் பெருக்காக இருக்கும். வேண்டியதில்லை. அவர் அந்த லேகியக்குளிகையை மீண்டும் புட்டிக்குள் போட்டு மூடி அப்பால் வைத்தார் கால்களை நீட்டி மஞ்சத்தில் படுத்துக்கொண்டார்.

அவ்வறை மிதந்ததுபோல் அசையலாயிற்று. கூரை மிகத்தாழ்ந்து வந்து அருகே நின்றது. அவர் கண்களை மூடிக்கொண்டபோது சுவர்கள் அனைத்திலுமிருந்த வெவ்வேறு வடிவம்கொண்ட கறைகள் மட்டும் பிரிந்து அவரைச்சூழ்ந்தன. அவை கண்களாயின. மீன்களென துடிக்கத்தொடங்கின. பின்னர் மிகச்சிறிய குழந்தைகளாயின. குருதியிலிருந்து எடுத்த குழந்தைகள். சற்றே பெரிய புழுக்கள். புழுக்களுக்கு மட்டும் ஏன் விழிகள் இத்தனை பெரிதாக இருக்கின்றன? ஏன் அவை இமைக்காமல் வெறித்து உலகை நோக்குகின்றன? அருகணைந்து கூர்ந்து நோக்குகின்றன என்னை. ஓசையிடும் புழுக்களுண்டா? அவற்றுக்கு குரலில்லையா? குரலின்மையால்தான் அத்தனை பெரிய விழிகளை அடைந்தனவா? அவர் திடுக்கிட்டு எழுந்து அமர்ந்துகொண்டார். உடல் நடுங்கிக்கொண்டிருந்தது.

எழுந்து சென்று நடுங்கும் கைகளால் புட்டியைத்திறந்து ஒரு குளிகையை எடுத்து வாயிலிட்டார். நீரை அருந்திவிட்டு கண்களை மூடி அமர்ந்திருந்தார். குருதியின் மணம்

வரத்தொடங்கியது. இவ்வறைக்குள்ளிருந்தா? அவர் சூழ நோக்கினார். அறை அவரை இறுக அணைக்க விழைவதுபோல் அதிரும் சுவர்களுடன் நின்றிருந்தது. அவர் கண்களை மூடியபடி விழுவதுபோல படுத்தார். கண்கள் சுழலும் பம்பரத்தின் மையச்சுழி என தோன்றின. குமட்டல் எடுக்க கண்களை திறந்தார். சுவர்மூலையில் குருதியைக்கண்டார். எழுந்து அமர்ந்து "குருதியா?" என்றார். மீண்டும் அருகே சென்று பார்த்தபோது அது தரையில் விழுந்த சிறிய நீர்க்கறை என்று தெரிந்தது. காலால் அதை தொட்டுப்பார்த்தார். ஆனால் குருதியின் மணம் இருக்கிறது. பசுங்குருதியின் மணம். இது புண்குருதியல்ல, புதுக்குருதியல்ல. கருக்குருதி. இது பிறிதொரு மணம் கொண்டது. அதில் நீந்தும் உயிர்களின் மணம். மெல்லிய குமிழ்கள் வெடிக்க உயிர் கொண்டு தளும்புவது. செம்மண்ணில் உதிர்ந்து மணிகளெனச் சுருண்டு கிடக்கையில்கூட உள்ளே சிறு உயிரின் துடிப்பு இருந்தது.

அறிவின்மை. வெறும் உளமயக்கு. பித்து. வெறுங்குருதியில் உயிரா? ஆனால் வெறுங்குருதியில்தான் உயிர்கள் முளைக்கின்றன. குருதிக்குள் வாழும் உயிர்கள். அவர் தலையை இரு கைகளாலும் இறுக பற்றிக்கொண்டார். அங்கே களத்தில் பெருகியது ஆண்களின் குருதி. இங்கு பெருகுகின்றது பெண்களின் குருதி. ஒரு துளிப் பெண்குருதி நூறாயிரம் ஆண்களின் குருதிக்கு நிகர். ஆண்குருதியில் உயிர்களில்லை .பெண்குருதி விதைத்தொகுதி போல. அவர் எழுந்து அக்குடுவையை எடுத்து மேலும் மேலுமென மூன்று குளிகைகளை அருந்தினார். மீண்டும் சென்று படுத்தபோது வாளை எடுத்து கழுத்தில் பாய்ச்சிக்கொண்ட நிறைவு எழுந்தது. இதோ என் குருதி வழிந்து வெளியேறுகிறது. மஞ்சம் முழுக்க என் குருதி பரவுகிறது. மஞ்சம் நனைந்து சேறென ஆகிறது.

சேற்றில் புழுவென நான் படுத்திருக்கிறேன். இல்லை. தேனில் எழுந்த புழு. சிறகுகளை கனவுகாண்பது. இதோ மென்குருதி என்னை ஏந்தித் திரிகிறது. இளவெம்மையுடன் மென்மையாக அணைத்திருக்கிறது. குருதி ஒரு போர்வை போல். மெத்தை போல். இளங்காற்று போல்...

இதுவே எனது துயர். இப்போரில் எனது குருதி விழவில்லை. நான் குருதி வீழ்த்தியிருக்க வேண்டும். எனது குருதியை, எனது மைந்தர்களின் குருதியை, எனது உற்றாரின் குருதியை நான் வீழ்த்தியிருக்கவேண்டும். இந்நகரில் எந்த அந்தணரேனும் இவ்வுணர்விலாது இன்று இருக்க முடியுமா? குருதி வீழ்த்தியவர்கள் நல்லூழ் செய்தவர்கள். இழக்கையில் ஏற்படும் நிறைவை அடைந்தவர்கள். இழக்காதவர்கள் இழக்கப்படாத அனைத்தையும் தன்னுள் கொண்டவர்கள். அழுகிய உடல் உறுப்பு போல் அகற்றவும் கொள்ளவும் இயலாது அது ஒட்டியிருக்கிறது. அவர் எப்போது துயின்றார் என்று தெரியவில்லை. ஏவலன் அவரை உலுக்கி, பின்னர் நன்றாகவே அறைந்து எழுப்பியபோது ன் அவர் விழிப்பு கொண்டு எழுந்து அமர்ந்தார். குருதியில் இருந்த அவரை எவரோ தூக்கி எடுத்தது போலத் தோன்றியது. அவர் அகன்றபின்னரும் அக்குருதி பெருஞ்சுனையின் சுழியாக விசையுடன் சுழன்றுகொண்டிருந்தது. அதன் மையத்தில் ஆழ்ந்த இருண்ட பிலம் ஒன்றிருந்தது. அவர் அதை நோக்கி சுழன்றபடி சென்றுகொண்டிருந்தார்.

வெறித்து நோக்கியபடி அமர்ந்திருந்த அவரிடம் "பொழுது எழுந்துவிட்டது, அமைச்சரே. ஒவ்வொருவரும் கிளம்பிக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் மட்டுமே எஞ்சியிருக்கிறீர்கள்" என்றான் ஏவலன். "ஏன்? முன்னால்

எழுப்புவதற்கென்ன?" என்றபடி அவர் எழுந்தார். ஆனால் உடல் நிலையழிய பிடித்து தள்ளப்பட்டவர்போல் ஒருபக்கமாக சென்று விழுந்தார். ஏவலன் அவரை பிடிப்பதற்குள் தரையில் உடல் அறைபட முகம் மரப்பலகையில் பட்டது. உதடுகளில் கிழிசல் விழுந்து குருதி சுவைக்க அவர் மீண்டும் தன்னிலையழிந்தார். ஏவலன் குனிந்து அவரைப்பிடித்துத் தூக்கி உலுக்கினான். அருகிருந்த குவளையிலிருந்த இன்நீரை எடுத்து அளித்து அதட்டலாக "அருந்துக!" என்றான். இருகைகளாலும் அதைப்பற்றி அருந்தினார். உடலுக்குள் இன்நீர் சென்று நிறைந்தபோது மெல்ல தவிப்படங்கி உடலெங்கும் நூற்றுக்கணக்கான குருதிக் குமிழிகள் வெடித்தமைய, கண்களுக்குள் சிற்றலைகள் பரவி விசையழிய, மூச்சு தளர உடலில் வியர்வை குளிரத்தொடங்க அவர் மீண்டு வந்தார்.

கனகர் நீராடி ஆடையணிந்து தலைப்பாகையை அழுத்திப் பிடித்தபடி உடல் தசைகள் குலுங்க ஓடி அரண்மனை முகப்பை அடைந்தபோது அங்கு ஏற்கெனவே பந்தங்களின் ஒளி நிறைந்திருந்தது. ஏவற்பெண்டுகள் அணிநிரந்து நின்றிருந்தன.ர் முகப்பில் நின்றிருந்த முதிய காவற்பெண்டு விழிகளைச் சுழற்றி அவரை தேடிக்கொண்டிருந்தாள். அவரைப் பார்த்ததும் அவள் கண்களில் தெரிந்த சினம் அவரை குன்றவைத்தது. உடல் விசையழிய, கால்கள் தரையில் உரசி நீள, அவர் நோக்கைத் திருப்பி மெல்ல நடந்து வந்தார். அவளருகே சென்றதும் அவள் "அரசி தங்களை பல முறை கேட்டுவிட்டார், அமைச்சரே" என்றாள். "ஆம், நான் சில ஒற்றர்களை சந்திக்க வேண்டியிருந்தது. நான் அவரிடம் பேசிக்கொள்கிறேன்" என்றார். "ஒற்றர்களும் தங்களை தேடினார்கள்" என்றாள். அவர்

சீற்றத்துடன் அவளை திரும்பிப்பார்க்க அவள் அவரைக்கூர்ந்து நோக்கியபடி "அமைச்சர்கள் ஆற்றக்கூடாத சில உள்ளன" என்றாள். "நீ எனக்கு அறிவுரை சொல்கிறாயா?" என்றார். "ஆம், அறிவுரையேதான்" என்று அவள் சொன்னாள்.

அவர் அவளிடமிருந்து விலகி பற்களைக்கடித்தபடி உள்ளே சென்றார். அவருக்குப் பின்னால் அவளுடைய ஆணை எழ காவற்பெண்டுகள் வாள்களையும் வேல்களையும் தூக்கி தோள்களிலும் கைகளிலும் வைத்தபடி நெடுநிலை கொண்டனர். ஆணைகள் ஒலித்துக்கொண்டிருந்தன. தேர்கள் ஒருங்கி நின்றிருந்தன. அவர் படிகள் மேல் ஏறி இடைநாழியினூடாக பேரரசியின் அறை நோக்கி சென்றார். தன் உடலில் இருந்த தள்ளாட்டமும் நடுக்கும் வெளித்தெரிகிறதா என்று ஐயுற்றார். அந்த காவற்பெண்டின் முகம் நினைவுக்கு வந்தது. ஒருபோதும் ஒரு காவலர்தலைவன் அவ்வாறு பேசுவதில்லை. முதிய பெண்டிர் ஓர் அகவைக்குப் பின் தங்களை எங்கும் அன்னையராக உணர்கிறார்கள். எவரையும் அவர்களால் குறைசொல்லவும் திருத்த முயலவும் முடியும். எதற்கும் அவர்கள் அஞ்சுவதும் இல்லை. உண்மையில் அச்சொற்களை ஒரு காவலர் தலைவன் சொல்லியிருந்தால் அதற்குள் அவனை சிறைப்பிடிக்கவே ஆணையிட்டிருப்பார். அன்னைக்கு எதிராக சொல்லெடுக்க இயல்வதில்லை.

அவர் ஏதேனும் ஒரு ஆடியில் தன்னை பார்த்துக்கொள்ள விழைந்தார். நீராடிக்கொண்டிருக்கையிலேயே அவர் ஆடி நோக்க விழைவுகொண்டிருந்தார். முகம் எவ்வண்ணம் இருக்கிறது என்று நோக்கி நெடுநாட்கள் ஆகிவிட்டிருந்தன. ஆடை அணியும்போதும் அவர் இரு கைகளாலும் சுவடிகளைப் பிரித்து ஒற்றுச் செய்திகளை பார்த்துக்கொண்டிருந்தார். ஒரு

சொல்லும் சித்தத்தில் ஏறவில்லை. பின்னர் சுவடிகள் அனைத்தையுமே சுரேசர் பார்த்திருப்பார் என்ற எண்ணம் வந்தது. அவற்றை அப்படியே அடுக்கி அருகிருந்த ஏவலன் கையில் கொடுத்துவிட்டு தலைப்பாகையை கையில் வாங்கி தானே தலையில் அழுத்தியபடி கிளம்பினார். அரண்மனை இடைநாழிகள் எங்கும் ஆடிகள் இல்லை. ஆடி நோக்குவது அத்தருணத்தில் உகந்ததுதானா என்றும் தெரியவில்லை முற்றிலும் அறியாத பிறர் ஒருவரைக் கண்டு திகைத்துவிடக்கூடும்.

அவர் முகப்புக்கூடத்திற்குள் நுழைந்தபோது அங்கு வாயிலில் நின்றிருந்த சத்யசேனை அவரைப்பார்த்து சினத்துடன் பற்களைக் கடித்து "வருக!" என்றாள். அவர் அருகணைந்து "ஒற்றர்களின் செய்திகள் வந்துகொண்டிருந்தன, அரசி. அனைத்தையும் தொகுத்து சில ஆணைகளை..." என்று தொடங்க கையமர்த்தி "சுரேசர் அரசியுடன் இருக்கிறார்" என்றாள். அவர் தலைவணங்கி உடலைக் குறுக்கியபடி உள்ளே சென்றார். காந்தாரி அகன்ற பீடத்தில் அமர்ந்திருக்க அவர் அருகே சுரேசர் அமர்ந்திருந்தார். துணையரசிகள் அப்பால் நின்றனர். அவர் அருகணைந்து தலைவணங்கினார். காந்தாரி அவரை ஓசையால் அடையாளம் கண்டு "தாங்கள் கிளம்ப பொழுதாகும் என்றார்கள்" என்றாள். "இல்லை, நான் ஒற்றர் செய்திகள்..." என்றபின் அவர் சுரேசரை பார்த்தார். சுரேசர் "இன்னும் பொழுதாகவில்லை. நாம் கிளம்புவதற்கு உரிய தருணம் இது" என்றார். கனகர் ஆறுதல் அடைந்தார். சுரேசர் "மேலும், இளவரசியருக்கு நாம் சற்று பொழுதளிக்கவேண்டியிருந்தது. அவர்களில் சிலர் உடல் நலம் குன்றியிருக்கிறார்கள். அவர்களுடன் மருத்துவப் பெண்டிரும் வரவேண்டுமென்று நான் ஆணையிட்டிருந்தேன். அவர்கள்

ஒவ்வொருவராக இப்பொழுதுதான் வந்துகொண்டிருக்கிறார்கள்" என்றார்.

காந்தாரி "கிளம்புவோம்" என்றபடி எழுந்தாள். பின்னர் "பயணம் செய்ய முடியாத நிலையில் எவரேனும் உள்ளனரா?" என்றாள். "அப்படி எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. அனைவருமே குருதிவார்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் எவரும் நிலை மறந்தவர்களாகவோ எழமுடியாதவர்களாகவோ இல்லை" என்று சுரேசர் சொன்னார். சத்யசேனை "எவ்வண்ணமிருப்பினும் அவர்கள் அங்கு சென்றாக வேண்டும். அவர்கள் அங்கு இயற்றப்போகும் சடங்குகளினூடாகவே அவர்களின் கொழுநர்கள் அவர்களிடமிருந்து விடுவித்துக்கொள்கிறார்கள். அவர்களும் கொழுநர்களிடமிருந்து விடுபடுகிறார்கள்" என்றாள். சத்யவிரதை "கொழுநர்களிடமிருந்து விடுபடுவது இன்றியமையாதது. அது இரும்பு நங்கூரம்போல் அவர்களை துயரத்தில் ஆழ்த்துகிறது" என்றாள்.

காந்தாரி "விடுபட இயன்றால் நன்று" என்றாள். சுரேசர் பேச முற்படுவதற்குள் கனகர் "பெண்டிர் கைம்மைத்துயரிலிருந்து எளிதில் விடுபடுவார்கள் என்று நூல்கள் சொல்கின்றன. ஆகவே அவர்களுக்கு நோன்புகளை அத்தனை கடுமையாக விடுத்து அமைத்திருக்கிறார்கள். பிறிதொரு ஆணின் துணையிருந்தால் முந்தைய ஆணை முற்றாக மறக்க அவர்களால் இயலும். ஏனெனில் படித்துறைகளில் தன்னை முற்றாக புதிய பேருடன் புதிய நீருடன் அடையாளப்படுத்திக்கொள்வது நதிகளின் இயல்பு" என்றார். சத்யசேனை மீண்டும் சீற்றத்துடன் பற்களைக் கடித்து அவரை பார்த்தாள். தான் ஏதேனும் பிழையாக சொல்லிவிட்டோமா

என்று கனகர் குழம்பினார். பெருமூச்சின் ஒலியில் “செல்வோம்” என்றபடி காந்தாரி எழுந்தாள்.

அரண்மனை முற்றத்திற்கு கனகர் மீண்டும் வந்தபோது அங்கே கௌரவ இளவரசியர் ஒவ்வொருவராக வந்து கூடியிருந்தனர். முற்றம் முழுக்க அவர்களின் மங்கலான ஆடைகளால் நிரம்பியிருந்தது. அவற்றில் பந்த வெளிச்சம் பட்டு அங்கு செந்நிறப் புகை நிரம்பியிருப்பதுபோல் தோன்றியது. புகையின் மெல்லிய அசைவுகள் அங்கே ஒரு சிதை எரிகிறதோ என்ற எண்ணத்தை எழுப்பின. அந்த எண்ணம் எழுந்ததும் அவ்வெண்ணத்தை அவரே திகைப்புடன் துறந்தார். மேலும் அரசியர் உள்ளிருந்து வந்துகொண்டிருந்தார்கள். அவர் குருதியின் மணத்தை உணரத்தொடங்கினார். கொழுங்குருதி. உயிர்கள் நிறைந்த குருதி. என்னால் ஆகாது. இவ்வெண்ணம்தான் என்னை உணவுண்ணவிடாது தடுக்கிறது, பித்தனாக்குகிறது, துயிலொழியச் செய்கிறது. ஆனால் குருதி மணம் கூடியபடியே வந்தது. குருதி வழிந்து பளிங்குத் தரை வழுக்குவதுபோல. சுவர்களில் கையை வைத்து குருதி வழிவதை உணர்ந்து திடுக்கிட்டு விலக்கிக்கொண்டார். பின்னர் அது பந்தங்களின் செவ்வொளிதான் என்று தெரிந்தது.

இளவரசிகளின் முகங்கள் தீப்பந்தங்களின் வெளிச்சத்தில் நெளிந்து அசைந்துகொண்டிருந்தன. எவரும் அணிகள் பூண்டிருக்கவில்லை. பொற்பின்னல்கள் இல்லாத வெளிர்நிறம் கொண்ட ஆடைகளை அணிந்திருந்தார்கள். வெண்ணீல, இளமஞ்சள் வண்ணம் கொண்டவை. பலர் மரவுரி ஆடைகளை அணிந்திருந்தார்கள். அனைவருமே தலைகுனிந்து தங்களில் ஆழ்ந்து அமர்ந்திருந்தனர். அவர் காவற்பெண்டிடம் சென்று “கிளம்ப வேண்டியதுதான்” என்றார். அவள் அதே பகைமை

விழிகளில் தெரிய "ஆம்" என்றாள். கனகர் முன்னால் சென்று வழிநோக்கியிடம் "சாலை ஒழிந்துள்ளதல்லவா?" என்றார். "ஆம், ஆணைகளை பிறப்பித்துவிட்டேன்" என்று அவன் சொன்னான். கனகர் கையசைக்க முதற்காவல் மாடத்திலிருந்து முரசுகள் ஒலிக்கத்தொடங்கின. அஸ்தினபுரியின் ஒழிந்த தெருக்களில் இருந்த காவல் மாடங்களில் முரசுகள் ஒலித்தன. மிகத்தொலைவில் கோட்டை முகப்பிலிருந்து முரசு ஒலித்தது. நகரம் ஒரு யானைபோல் ஒலி எழுப்புவதாகப் பட்ட்து. நோயுற்ற யானை. உயிர்பிரிந்துகொண்டிருக்கும் யானை.

காவற்பெண்டு அவரிடம் கேளாமலேயே தன் இடையில் இருந்த கொம்பை எடுத்து ஊதினாள். அஞ்சித் துயிலெழுந்த பறவைகளின் ஓசைபோல கொம்பொலி எழுந்தது. படைவீரர்களும் காவல்பெண்டுகளும் வாள்களையும் வேல்களையும் தூக்கி நிலத்திலும் தோளிலும் வைத்துக்கொண்டனர். முதற்படை கிளம்பி முற்றத்தை அடைந்தது. அதைத் தொடர்ந்து புரவி வீரர்கள் சென்றனர். காந்தாரியும் உடன் பிறந்தோர் நால்வரும் சென்று முதற் தேரில் அமைவு கொண்டனர். தொடர்ந்து வந்த கூண்டு வண்டிகளில் பிற அரசியரும் ஏறிக்கொண்டனர். ஒவ்வொருவரும் தளர்ந்திருந்தனர். பிறர் தோளைப்பற்றியபடி எடைகொண்ட உடல்களை மெல்ல அசைத்து ஏறினர். அவர்களின் எடை தாளாதவை போல தேர்கள் முனகின.

பானுமதி காந்தாரியைப்போலவே ஆகிவிட்டதாகத் தோன்றியது. அவளுடல் எடை மிகுந்து, கால்கள் மிகச்சிறுத்து நடை தள்ளாடியது. உடலுக்குள் நீர் நிரம்பியிருப்பதுபோல ததும்பியபடி அவள் தேரில் ஏறிக்கொண்டாள். அசலை அவள் அருகில் அமர்ந்தாள். தேர்கள் கிளம்பி சாலையில் செல்ல

கனகர் தன் புரவியிலேறிக்கொண்டு தொடர்ந்து சென்றார். சுரேசர் அவருக்குப் பின்னால் வந்து கைகாட்ட புரவியை நிறுத்தினார். சுரேசர் அருகே வந்து "தாங்கள் இன்று புலரியில் அமைச்சுக்கு வந்து இறுதியான ஆணைகளை அளித்துவிட்டுச் செல்வீர்கள் என்று எண்ணினேன்" என்றார். "நான் சற்று துயின்றுவிட்டேன்" என்று அவர் சொன்னார். "சொன்னார்கள். ஆகவே ஆணைகள் அனைத்தையும் நானே பிறப்பித்துவிட்டேன். தங்களுக்கான செய்திகள் அனைத்தையும் ஓலையில் எழுதி இப்பெட்டியில் வைத்துள்ளேன். தங்களிடம் இருக்கட்டும்" என்றார் சுரேசர்.

கனகர் அதை வாங்கி தன் புரவியில் கொக்கியில் மாட்டியபின் அவரை நோக்காமல் "அங்கு எனக்கு பெரிய பணிகள் ஏதுமில்லை. அங்கு அனைத்தையும் நோக்குவதற்கு இந்திரப்பிரஸ்தத்தின் அமைச்சர்கள் இருப்பார்கள்" என்றார். "ஆம். ஆனால் அஸ்தினபுரியின் அமைச்சர் நீங்கள். அரசியருக்கு நீங்களே இன்னும் அமைச்சராகத் தெரிவீர்கள். அரசியருக்கும் இந்திரப்பிரஸ்தத்தின் அவையினருக்குமான தொடர்பு உங்கள் வழியாகத்தான் நிகழவேண்டும்" என்றார் சுரேசர். "ஆம்" என்று கனகர் தலையசைத்தார். "கருதுக! எப்போதும் விழிப்பு நிலையில் உடனிருங்கள்" என்றார். சீற்றத்துடன் திரும்பி அவர் கண்களைப் பார்த்தபின் அவரை புண்படுத்தும்படி ஏதேனும் சொல்ல விரும்பினார் கனகர். சீற்றம் எழுந்ததே ஒழிய சொல் எதுவும் எழவில்லை.

பின்னர் திரும்பிக்கொண்டு "என்னால் நன்கு துயில இயலவில்லை" என்றார். சுரேசர் "அஸ்தினபுரியிலோ இந்திரப்பிரஸ்தத்திலோ இன்று இயல்பாகத் துயில்பவர் இன்று எவருமில்லை" என்றார். "நான் யோகம் பயின்றவன் அல்ல,

எளிய அமைச்சன்" என்று கனகர் சொன்னார். "மேலும் இவ்வுடலுக்குள் நான் சேர்த்த குருதி நிறைந்திருக்கிறது. அதில் ஒரு துளியையேனும் வீழ்த்தினால் நிறைவுற்று என்னால் விண்ணுலகம் செல்ல இயலும்". சுரேசரின் விழிகள் மாறுபட்டன. அக்கணமே தான் சொல்லவேண்டியதென்ன என்பது அவருக்கு தெரிந்தது. "இப்போரின் அழிவுகளைக் காண்கையில் நானும் உடன் அழியவேண்டியவன் என்றே என் மனம் உணர்கிறது. நான் நிரப்பிக்கொள்ள வேண்டிய வெற்றிடத்தைக் கண்ட நிறைவு எனக்கில்லை" என்றார். சுரேசரின் கண்களில் கடும் சீற்றமெழ முகம் சிவந்து உதடுகள் விரிவதைக் கண்டார். புரவியைத் தட்டி முன்னால் செலுத்தி அஸ்தினபுரியின் மையச்சாலையை சென்றடைந்தார்.

நீர்ச்சுடர் - 16

பகுதி மூன்று : பலிநீர் – 3

கோட்டைக்கு வெளியே செல்லும்போதுகூட கருக்கிருள் அகன்றிருக்கவில்லை. கோட்டை முகப்பின் முற்றம் நிறைய ஏராளமான மக்கள் சிறிய துணிக்கூடாரங்களிலும், பாளைகளையும் இலைகளையும் கொண்டு செய்யப்பட்ட குடில்களிலும் தங்கியிருந்தனர். அவர்களில் பலர் முன்னரே கிளம்பிச்சென்றுவிட்டிருந்தமையால் அவை ஒழிந்து கிடந்தன. பலர் அப்போதுதான் விழித்தெழுந்து கிளம்பிக்கொண்டிருந்தனர். இருளுக்குள் அவர்களின் கலைந்த குரல்களின் முழக்கம் எழுந்து சூழ்ந்திருந்தது. விண்ணில் தொலைவில் ஒளிமிக்க சில விண்மீன்கள் மட்டும் துலங்கின. கைப்பிடி அளவிற்கு உப்புப்

பரல்களை எடுத்து வீசி எறிந்ததுபோல் என்று தோன்றியது. அவற்றை அடையாளம் காணவோ வடிவு வகுத்துக்கொள்ளவோ கனகரால் இயலவில்லை.

முகப்பில் சென்ற காவல்படையினர் சாலையெங்கும் நிறைத்து சென்றுகொண்டிருந்த மக்கள்திரளை அகற்றி வழி உருவாக்கி அவற்றினூடாக அரசியரின் தேர்களை செல்லவைத்தனர். அந்நிரையின் இறுதித் தேர் மிகப் பின்னால் அப்பொழுதும் அஸ்தினபுரியின் கோட்டைக்கு உள்ளே இருந்தது. கனகர் தன் புரவியில் உடல் தளர அமர்ந்து, இடக்கையால் கடிவாளத்தை பற்றிக்கொண்டு துயிலில் எடைகொண்டு கீழ்சரிந்த இமைகளுடன், ஒன்றையொன்று தொட்டுத் தொட்டுச் செல்லும் எண்ணங்களுடன் அமர்ந்திருந்தார். உடலின் அசைவில் அங்கு மீண்டு வந்து, சூழலை உணர்ந்து வியப்புற்று, நீள்மூச்சுடன் விழிசுழற்றி நோக்கி, மீண்டும் எங்கோ அமிழ்ந்து, எங்கோ எழுந்து, நினைவுகளையோ பொருளிலா எண்ணங்களையோ தொட்டு மயங்கிக்கொண்டிருந்த சித்தத்துடன் சென்றுகொண்டிருந்தார்.

சாலையோரங்களை நிரப்பி சென்றுகொண்டிருந்த அந்த மக்கள்திரள் இருளுக்குள் ஓசைகளாக, நிழலசைவுகளாக, விழிமின்னாக, உலோகங்களின் மிளிர்வாக, விலங்குகளின் செருக்கடிப்போசையாக, பலநூறு குளம்படி ஓசைகளாக தோன்றியது. பந்தங்களின் வெளிச்சம் அவர்களின் மீது பட்டபோது அச்சுறுத்தும் யவன ஓவியங்களிலென முகங்கள் தெளிந்து பின் இருளில் அமிழ்ந்தன. எந்த முகமும் இயல்பான உணர்வுநிலை கொண்டிருக்கவில்லை. உச்ச சினத்தில் சீறி எழுந்தவைபோல், வசைச் சொல்லொன்றை கூவியபடி நெஞ்சில் அறைந்து அலறவிருப்பதன் முந்தைய கணத்தில்

நின்றுவிட்டவைபோல், கனவில் எதையோ கண்டு அஞ்சி விதிர்ப்பு கொண்டவைபோல், நோயுற்று வலிப்புகொண்டவைபோல், பெருவலியில் இழுத்துச் சுழித்தவைபோல் தோன்றின. பேரெடையொன்றை தலைக்குமேல் தூக்கி கொண்டுசெல்பவைபோல் கன்னத்தசைகளும் கழுத்து நரம்புகளும் இறுகிய பற்களும் கொண்டவை.

ஒவ்வொரு முகமும் தனக்கெதிரான வஞ்சமொன்றை கரந்திருப்பதாக கனகருக்குத் தோன்றியது. பந்த வெளிச்சத்தில் முகங்களைப் பார்த்ததுமே அவர் கடிவாளத்தை இழுத்து தன் புரவியை பின்னடையச்செய்து இரு பந்தங்களுக்கு நடுவே இருக்கும் குறைவான ஒளிகொண்ட பகுதிக்கு சென்றார். ஆயினும் சீறி முட்டிமோதிக்கொண்டிருந்த அக்கூட்டத்தின் நடுவே சீரான ஒழுக்காக வண்டிகள் செல்ல இயலவில்லை. முன்னால் சென்ற தேரோ வண்டியோ எங்கேனும் முட்டி நின்றுவிட்டால் அங்கிருந்து ஏவல்பெண்டுகள் அகல்சுடரை சுழற்றியும், கொம்போசை எழுப்பியும் ஆணைகளை இட்டனர். அந்த ஆணை பின்னிருப்போரால் பெற்று கையளிக்கப்பட்டு வண்டிநிரையின் இறுதி வரை காற்றில் பறந்து சென்றது. அதற்கேற்ப அனைத்து வண்டிகளும் கடிவாளங்கள் இழுக்கப்பட்டு, சகடக்கட்டைகள் இறுக்கப்பட்டு, மரம் உரசும் ஒலியும் அச்சு சுழன்று இறுகும் ஒலியுமாக முனகலும் அலறலும் விம்மலும் விதும்பலுமாக தேங்கி நின்றன. கடிவாளம் இழுக்கப்பட்ட புரவிகள் தலை திருப்பி மூச்சிரைத்தன. காளைகள் தலை தாழ்த்தி கொம்புகளால் நுகத்தை தட்டின. குளம்புகளால் தரையை அறைந்து மூச்சு சீறலோசை எழுப்பின. அந்தத் தேங்கலில் பந்த ஒளியில் மீண்டும் அச்சமூட்டும் முகங்கள் தெரிந்தன.

அம்முகங்களை பார்க்காமல் இருக்கவும் இயலவில்லை. மீண்டும் மீண்டும் அவற்றை பார்த்தபோது மெல்ல அம்முகங்களை அவரால் அடையாளம் காண இயன்றது. குலப்பெண்டிர். முதுமகளிர். முதியவர்கள். உழவரும் ஆயரும் நெசவாளரும் குயவரும் என எளிய மக்கள். பெண்கள் தங்கள் தோள்களில் கட்டிய தூளிகளில் குழந்தைகளை தொங்கவிட்டிருந்தனர். முதியவர்களின் தோள்களில் தலையைப் பற்றியபடி குழந்தைகள் உடல்துவள துயின்றுகொண்டிருந்தன. முதுமக்கள் சில குழந்தைகளை நடக்க வைத்து அழைத்துச் சென்றுகொண்டிருந்தனர். பெரும்பாலான குழந்தைகள் துயிலில் இருந்தன. நடக்கும்போதே துயிலில் துவண்டு முட்டிமோதின. வெறித்திருந்த விழிகள் எவற்றிலும் ஒரு சொல்கூட இல்லை. கல்விழிகள். வடுக்கள்போல, வண்டுகள்போல, கூர்முனைகள்போல வெறும்விழிகள். ஒரு சிறுவனின் விழிகளை அருகே கண்டு அவர் திடுக்கிட்டார். குழந்தைவிழி அவ்வண்ணம் வெறுமைகொள்ள இயலுமென அவர் எண்ணியதே இல்லை.

இத்தனைபேர் அஸ்தினபுரியைவிட்டு ஒவ்வொரு நாளும் அகன்று சென்றுகொண்டிருக்கிறார்களா என்ன? அஸ்தினபுரியின் அமைச்சரென அங்கு அமர்ந்திருந்தபோது இதை ஏன் அறியாமலிருந்தேன்? அவர் கடிவாளத்தை இழுத்து வண்டி ஒன்றைக் கடந்து தனக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த ஒற்றனிடம் "எங்கு செல்கிறார்கள் இவர்கள்?" என்றார். அவன் புரவியில் அமர்ந்தபடியே துயின்றுகொண்டிருந்தவன் போலிருந்தான். அவருடைய கேள்வியை சற்று பிந்தியே அவன் உளம் வாங்கியது. கடிவாளத்தை இழுத்து புரவியை விசையழியச்செய்து கையால் முகத்தையும் வாயையும்

துடைத்தபின் "என்ன கேட்டீர்கள், உத்தமரே?" என்றான். "இத்தனை குடிமக்கள் எங்கு சென்றுகொண்டிருக்கிறார்கள்?" என்றார் கனகர். அவன் "ஆம்" என திரும்பி நோக்கினான். மீண்டும் முகத்தை துடைத்தான். "ஏராளமானவர்கள்!" என்றான். "ஆம், அவர்கள் செல்வது எங்கே?" என்றார் கனகர் எரிச்சலுடன்.

"இவர்கள் ஒவ்வொரு நாளும் சென்றுகொண்டுதான் இருக்கிறார்கள், உத்தமரே. இன்று பதினாறாம் நாள். ஆகவே நீர்க்கடனுக்காக கங்கைக்கரைக்கு சென்றுகொண்டிருக்கிறார்கள்" என்றான் ஒற்றன். "எவருக்கு?" என்று கனகர் கேட்டார். அவன் அவரை திகைப்புடன் சில கணங்கள் பார்த்துவிட்டு "போரில் உயிர் நீத்தவர்களுக்கு" என்றான். "ஏழாம் நாள் நீர்க்கடன் அளிப்பவர்கள் சிலர் உண்டு. பதினாறாம் நாள் நீர்க்கடன் சிலருக்கு... அரிதாக சிலருக்கு நாற்பத்தோராம் நாள். உடல் கிடைக்காதவர்களுக்கு நூற்றெட்டாம் நாளில் நீர்க்கடன் செய்யலாம் என்பது மரபு" என்றான். "இவர்களில் பெரும்பாலானவர்கள் நாற்பத்தொன்றாம் நாள் வரை அங்கு கங்கைக்கரையிலேயே தங்கிவிட்டு அதன் பின்னரே அஸ்தினபுரி திரும்புவார்கள் என தோன்றுகிறது."

கனகர் மீண்டும் பந்தங்களின் ஒளியில் துலங்கி துலங்கி இருளில் மூழ்கிய பேய்த்தோற்றம் கொண்ட முகங்களைப் பார்த்தபின் "அவர்களின் வஞ்சத்தைப் பார்த்தால் மீண்டும் அஸ்தினபுரிக்கு வருவார்கள் என்பதே ஐயம்தான்" என்றார். பெருமூச்சுடன் ஒற்றன் "மெய்யாகவே அவர்களில் பலர் திரும்பி வருவதில்லை. கங்கைக்கரையிலிருந்து அப்படியே படகுகளில் ஏறி பிற நாடுகளை நோக்கி சென்றுகொண்டிருக்கிறார்கள். நானே பலமுறை இதை தங்களிடம் வந்து உரைத்திருக்கிறேன், அமைச்சரே" என்றான்.

"ஆம், ஆம் நினைவிருக்கிறது" என்று கனகர் கூறினார். "இது பழிபடர்ந்த நிலம் என நினைக்கிறார்கள். தெற்கே புதிய நிலங்கள் உள்ளன என்று இவர்கள் இடையே ஒரு சொல் உலவுகிறது. அங்கே சென்றுகொண்டிருக்கிறார்கள்." கனகர் "மெய்யாகவே இருக்கிறதோ என்னவோ" என்றார். அவன் புன்னகைத்து "ஆம், ஆனால் இவர்கள் சென்றால் அங்கும் சில தலைமுறைகளுக்குள் குருக்ஷேத்ரம் எழும்" என்றான். கனகரும் புன்னகைத்தார்.

வண்டிநிரை முனகலோசை எழுப்பி தேங்கியது. வண்டியோட்டிகளின் கூச்சல்களும் சவுக்கோசைகளும் குளம்புகளின் மிதிபடும் ஒலிகளும் எழுந்தன. காந்தாரியின் தேர் முன்புறம் தயங்கி நின்றிருந்தது. அங்கிருந்து கனகருக்கான அழைப்பு ஒளியசைவாக வந்தது. கனகர் தன் புரவியைத் தட்டி ஊக்கி பெருநடையில் வண்டிகளுக்கு இணையாகவே சென்றார். சென்றுகொண்டிருக்கும் மக்களில் பெரும்பாலானவர்கள் உடைமைகள் ஏதும் இல்லாமல் இருப்பதை அவர் கண்டார். உடைமைகள் இல்லாமல் கிளம்புகிறார்கள் என்றால் அவர்கள் திரும்பி வரும் எண்ணத்துடன்தான் அஸ்தினபுரியிலிருந்து வெளிவருகிறார்கள் என்று பொருள். கங்கைக்கரைக்குச் சென்று நீர்க்கடன் முடித்த பின்னர்தான் அவர்களுக்குத் தோன்றுகிறது திரும்பிச் செல்லவேண்டாம் என்று. உள்ளிருந்து ஏதோ ஆணை எழுகிறது. அன்றி, உயிர்நீத்தோர் வந்து அவ்வண்ணம் அவர்களிடம் சொல்கிறார்களா என்ன?

அவர் புரவிக்குக் குறுக்காக ஒருவன் விழுந்தான். புரவியை இழுத்து விசையழியச் செய்தார். தனக்கு குறுக்காக வந்த முதியவர் ஒருவரை தோளில் தொட்டு "மண்நோக்கி

காலெடுத்து வையுங்கள், மூத்தவரே" என்றார். முதியவர் சீற்றத்துடன் திரும்பி "சீ! கையை எடு, இழிமகனே! எவ்வுரிமையில் நீ என்னை தொடுகிறாய்?" என்றார். கனகர் திகைத்து கையெடுத்து பின்னர் "முதியவரே, நான்..." என்றார். "நீ யாரென்று தெரியும் எனக்கு. நீ உயிருடன் இருப்பதே நீ கீழ்மகன் என்பதற்கான சான்று" என்றார் முதியவர். இன்னொரு முதியவர் "இங்கு உயிருடன் இருக்கும் அத்தனை மானுடரும் கீழ்மக்களே. நானும் கீழ்மகனே. உயிருடன் இருப்பதே மாபெரும் கீழ்மை என்று ஆக்கிவிட்டு களத்தில் விழுந்தனர் என் மக்கள்" என்றார். "ஆம், அவர்கள் மேலே சென்றிருக்கிறார்கள். அங்கிருந்து காறி உமிழ்கிறார்கள். இந்த மண்ணை மேலும் மலப்பெருக்காக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள்" என்றார் முதல் முதியவர். கைகளை விரித்து "மலம்! நாற்றமெடுக்கும் மலம்... மலப்புழுக்கள். புழுத்த மலத்தில் நெளியும் உயிர்கள் நாம்!" என்றார்.

அவர்களின் உளம் கலங்கியிருப்பதை முகம் காட்டியது. கண்கள் அலைபாய்ந்தன. முகம் துடித்துக்கொண்டே இருந்தது. "ஆம்" என்றபடி அவர் புரவியை முன்னால் செலுத்த பல கைகள் அவர் புரவியை பற்றிக்கொண்டன. "நில்! எங்கே செல்கிறாய்? எங்கள் கேள்விக்கு மறுமொழி கூறிவிட்டுச் செல்!" என்று கூவின. "நில்! நில்! பிடி அந்த அந்தணனை!" ஒருவன் அருகே வந்து வெறிப்புகொண்ட முகத்துடன் கூவினான். "இத்தனை பேரின் சாவுக்கு விளக்கம் கூறாமல் நீ சென்றுவிடுவாயா என்ன? உன்னால்தான் என் குடி அழிந்தது. உனது சொற்களால்தான் இப்பேரழிவு..." ஒருவர் கைநீட்டி அருகே வந்தார். "உனது சொற்கள் இங்கே

நிறுவப்படவேண்டுமெனில் எங்கள் மைந்தர் களம் விழவேண்டுமா என்ன?”

இன்னொருவர் நெஞ்சில் ஓங்கி அறைந்தபடி கனகரை நோக்கி வந்தார். எலும்புருவான உடல். நரம்புகள் புடைத்த கழுத்து. கண்கள் குழிக்குள் மின்னிக்கொண்டிருந்தன. வெறியுடன் துள்ளிய உடல். வலக்கையால் ஓங்கி ஓங்கி நெஞ்சில் அறைந்தார். “கீழ்மகனே! கீழ்மகனே! உன் ஆணவத்திற்கு என் மைந்தரை பலி கொடுத்தேன்! என் இளமைந்தரை பலி கொடுத்தேன்! என் பெயர்மைந்தர் அனைவரையும் பலிகொடுத்தேன்! இன்று இதோ ஏழு பெண்களுடன் குருதி வழியில் ஓர் உயிர்கூட எஞ்சாமல் கருகிய மரம்போல் இங்கு நின்றிருக்கிறேன். நிறைவுற்றாயா நீ? இப்போது உன் சொல் ஒளிகொண்டதா? ஒளி குறைகிறதென்றால் சொல், வந்து உன் சொற்களுக்கு மேல் என் கழுத்தறுத்து விழுகிறேன்.” “கீழ்மகன்! இழிதகையன்!” என்று கூச்சல்கள் எழுந்து சூழ்ந்தன.

அப்பகுதி எங்கும் இருந்து முதியவர்கள் அனைவரும் அங்கே கூடத்தொடங்கினர். தன்னைச் சுற்றி முகங்கள் செறிந்ததை கனகர் கண்டார். அனைத்து முகங்களிலும் வெறியாட்டு எழும் பூசகனின் முகத்தில் தோன்றும் சீற்றம் நிறைந்திருந்தது. “நீ விழைவதென்ன சொல்? இன்னும் எவ்வளவு குருதி வேண்டும் உனக்கு? இதோ!” என்றபடி ஒரு முதியவர் தன் அருகே நின்றிருந்த முதுமகளிடமிருந்து கைக்குழந்தை ஒன்றைப் பிடுங்கி அதன் கால்கள் காற்றில் பறக்கச் சுழற்றி தலைக்கு மேல் தூக்கினார். “இதை பலிகொடுக்கவா? இதை உன் காலடியில் வீசவா? கீழ்மகனே, இதோ இதன் சங்கறுத்து குருதி குடி! அடங்கட்டும் உனது விடாய்! இதோ!” எதிர்பாராத ஒருகணத்தில் அவர் அக்குழவியை கனகரை நோக்கி வீசினார்.

கனகர் திகைத்து அலறி பின்னடைய அவர் அருகே நின்ற ஒற்றன் தன் பயின்ற கரங்களால் குழவியை பற்றிக்கொண்டான். அது விழித்துக்கொண்டு கதறி அழத்தொடங்கியது.

அப்பாலிருந்த முதுமகள் ஒருத்தி "நீ மானுடனல்ல... நீ மண்ணுக்கடியிலிருந்து ஊறி வந்த ஏதோ கீழ்த்தெய்வம். மானுட குலத்தை அழித்து குருதிகொண்டு நிறைவுற வந்தவன் நீ. பல்லாயிரம் ஆண்டுகள் அங்கு காத்திருந்தவன்... எந்த கெடுபிறப்போ உன் துயிலை எழுப்பினான். எந்த இழிசினனோ உன்னை இக்காலகட்டத்துக்கு கொண்டு வந்தான். எங்கள் குடியழித்தாய்! கொடிய நோயெனப் பரவி எங்கள் கொடிவழிகளையும் அழிக்கிறாய்! இனி எங்களுக்கு விண்ணிலும் தெய்வங்கள் இல்லை. உன்னை விண்ணிறங்கி வந்த தெய்வம் என்று நம்பியதனால் அங்கிருக்கும் தெய்வங்களாலும் கைவிடப்பட்டோம்!" என்று கூவினாள். "உனக்கு சங்கறுத்து குடித்த குருதி போதவில்லை. விடாய் கொண்டு எங்கள் மகளிரின் கருச்சிதைத்து உண்கிறாய்... நீ ஆழிருள்தெய்வம்... அடங்காப் பழிகொண்ட கீழமைத்தேவன்."

ஒருகணத்தில் மெல்லிய உலுக்கலென அவர்கள் எவரைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று கனகர் புரிந்துகொண்டார். அவருடைய உள்ளம் விந்தையானதோர் நிறைவை அடைந்தது. அவரே ஒன்று பலவாக பிரிந்து சூழ்ந்து அச்சொற்களை கூவிக்கொண்டிருப்பதுபோல் தோன்றியது. கனகர் ஒற்றனை நோக்கி கைகாட்ட அவன் தன் புரவியை முன்னால் செலுத்தி கனகரை சூழ்ந்துகொண்டு கொப்பளித்த அக்கூட்டத்தின் நடுவே புரவியைச் செலுத்தி அதைப் பிளந்து ஒரு வழியை உருவாக்கினான். அதனூடாக தன் புரவியைச் செலுத்தி

அவனை அணுக்கமாக தொடர்ந்து அவர்களைக் கடந்து அவர் சென்றார். அவரது ஆடையை எவரோ பற்றினார்கள். புரவியின் கடிவாளத்தைப் பற்றியபடி ஓடி வந்த ஒரு முதியவர் கீழே விழுந்தார். குழவிகள் கூவி அழுதன. முதுமக்கள் பழிச்சொற்களை கூவி உரைத்தபடி ஓடி உடன்வந்தனர்.

"கீழ்மகனே! கீழ்மகனே! உன் குடி அழியும்! எங்கள் குடியென உன் குடியும் ஒருவர் எஞ்சாது அழியும்! உன் நகர் அழியும்! உன் கொடி பறக்க விண் இலாதாகும்! உன் குருதி முளைக்க மண் இலாதாகும்! நீ என்றென்றும் அழியாப் பெரும்பழி கொண்டு இனி எங்கள் கொடிவழியினரால் நினைக்கப்படுவாய்! அழிக! அழிக! நீ அழிக! உன் குலம் அழிக! உன் சொல் அழிக! உன் புகழ் எஞ்சாதொழிக!" அக்குரல்பெருக்கு ஒற்றைமொழியென எவ்வண்ணம் ஆகிறது? அதில் ஒவ்வொரு சொல்லும் எப்படி துலங்குகிறது?

குதிரையின் கழுத்தின்மேல் தன் தலையைத் தாழ்த்தி அமைத்து, உடலை இறுக்கி, தசைகள் அனைத்தையும் குறுக்கியபடி அமர்ந்திருந்த கனகர் மெல்ல மெல்ல தளர்ந்து பெருமூச்சுவிட்டு வியர்வை குளிர்ந்த உடலுடன் மூச்சிரைக்க மீண்டு வந்தார். கண்களில் குருதியின் அனல் பறந்தது. சூழ நோக்கியபடி புரவியில் அமர்ந்திருந்தபோது அவர் கண்களிலிருந்து நீர் வழிந்துகொண்டிருந்தது. காந்தாரியின் தேர் நின்றிருக்க அதைச் சூழ்ந்து கூச்சலிட்ட மக்களை வேல்வீரர்கள் உந்தி அகற்றிக்கொண்டிருந்தார்கள். தேரை அணுகியதும் அவர் மேலாடையை எடுத்து முகத்தை அழுந்தத் துடைத்தார். பின்னர் குழலை நீவி குடுமியாக முடிச்சிட்டு தேரை அணுகி "வணங்குகிறேன், அரசி!" என்று உரக்க சொன்னார்.

தேரின் திரை விலக சத்யசேனை வெளியே பார்த்து "அமைச்சரே, என்ன நிகழ்கிறது? இதோ திரண்டு சென்றுகொண்டிருக்கும் இவர்களெல்லாம் யார்?" என்றாள். "அரசி, இவர்கள் அனைவரும் நீர்க்கடன் பொருட்டு கங்கைக்கு சென்றுகொண்டிருக்கிறார்கள்" என்றார் கனகர். "நீர்க்கடன்! ஆம்!" என்று குழப்பமாக முனகிக்கொண்ட சத்யசேனை காந்தாரியின் செவிகளில் அதை சொன்னாள். பின்னர் திரும்பி "அவர்கள் சொல்லும் பழிச்சொற்கள் பேரரசியின் காதில் விழுகின்றன. அவர்கள் பழிப்பது எவரை என்று அறிய விரும்புகிறார்" என்றாள். கனகர் ஒன்றும் சொல்லவில்லை. "அரசியின் உசாவல் அது" என்று சற்று கூரிய குரலில் சத்யசேனை சொன்னாள். "அரசி, அவர்கள் பழிப்பது இளைய யாதவரை என்று தோன்றுகிறது" என்று அவர் சொன்னார்.

சத்யசேனை பெருமூச்சுடன் "ஆம், நானும் எண்ணினேன். ஆனால் அவர்கள் எவரும் பெயர் சொல்லவில்லை. இங்கே காற்றில் இருளென சூழ்ந்திருப்பது அவரே என்று எண்ணுகிறார்கள் போலும். எல்லாத் திசைகளையும் நோக்கி அச்சொற்களை கூவுகிறார்கள்" என்றாள். "ஆம், அரசி. இன்று அவரை எவரும் ஒரு மானுடர் என்று எண்ணவில்லை. தெய்வம் என்றாகிவிட்டிருக்கிறார். முன்னரும் அவரை இவர்கள் தெய்வமென்றே எண்ணினார்கள். ஆனால் அதில் சிறு ஐயமிருந்தது. இன்று அந்த ஐயம் விலகிவிட்டிருக்கிறது" என்றார் கனகர். "ஏனென்றால் இப்பெரும்பலியை தெய்வங்களன்றி மானுடர் கொள்ள இயலாது என்று எண்ணுகிறார்கள்."

சத்யசேனை "அது அவர்களுடைய சொற்கள் அல்ல, உங்கள் சொற்கள் என்று தோன்றுகிறது" என்றாள். "நானும் அவர்களில்

ஒருவனே" என்று கனகர் சொன்னார். சத்யசேனை "பேரரசி சோர்வுற்றிருக்கிறார். இந்த நீண்ட பயணம் அவர் உடலுக்கு களைப்பை அளிக்கிறது. அதைவிட இருபுறமும் ஒலித்துக்கொண்டிருக்கும் இந்த வெறுப்பும் பழிப்பும் பேரரசியின் அகம் சோரச் செய்கிறது" என்றாள். கனகர் "இதை நாம் முன்னரே எண்ணியிருக்க வேண்டும். ஒற்றர்கள் ஏற்கெனவே என்னிடம் சொன்னார்கள். அஸ்தினபுரியின் அத்தனை பெண்டிரும் இளைய யாதவரை இப்போது வெறுக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் பழிச்சொல் பெருகிக்கொண்டிருக்கிறது" என்றார்.

பெருமூச்சுடன் தலையசைத்துவிட்டு சத்யசேனை அதை காந்தாரியிடம் சொன்னாள். காந்தாரி இரு கைகளையும் கூப்பி "அப்பழிச்சொற்கள் என் செவியில் விழலாகாது. ஆயிரம் பழிச்சொற்களில் ஒன்றாக அறியாதேனும் என் நெஞ்சில் ஒரு பழிச்சொல் எழுந்துவிடலாகாது. அதை கூறவே தங்களை அழைத்தேன்" என்றாள். கனகர் தேரின் விளிம்பைப் பற்றியபடி நெஞ்சு தளர்ந்து வாய் சற்றே திறந்திருக்க அவளை பார்த்துக்கொண்டிருந்தார். "அனைத்தும் அறிந்தவன்! மண்ணில் இறையுருவென எழுந்தவன்! இந்த யுகத்தை ஒரு மென்பீலியென சூடியவன்! ஆக்குவதும் அழிப்பதும் அவனுடைய விளையாட்டு. அதை அறிவதும் வகுப்பதும் நமக்கு இயல்வதல்ல. ஆகவே அவனை போற்றுவதும் பழிப்பதும் நமது பணியுமல்ல. ஆட்படுவதொன்றே அடியவர் செய்யக்கூடியது" என்றாள் காந்தாரி.

கனகர் புரவியில் அமர்ந்தபடி தேருக்கு இணையாக ஒழுகிச்சென்றுகொண்டிருந்த பந்தங்களின் ஒளியில் மின்னி மின்னி அணைந்த காந்தாரியின் முகத்தையே

பார்த்துக்கொண்டிருந்தார். காந்தாரி "இவையனைத்தும் அவன் விழைவு. அது பெருகி மலையிறங்கும் கங்கை போன்றது. கடலிலிருந்து எழுந்து நிலம் நிறைக்கும் பெருங்காற்றுபோல விசை கொண்டது. தன் திசையை தான் மட்டுமே அறிந்தது. நாம் சிற்றெறும்புகள். ஒழுகும் சிறுசருகுகள். அவ்விசைக்கு ஆட்படுவதன்றி வேறெந்தத் தெரிவும் இல்லாதவர்கள்" என்றாள். கனகர் எண்ணியிராக் கணத்தில் தன் உள்ளிலெழும் சீற்றத்தை உணர்ந்தார். அதை கட்டுப்படுத்த வேண்டுமென எண்ணி இரு கைகளாலும் கடிவாளத்தையும் தேர் முனையையும் அழுந்தப் பிடித்த அக்கணத்திலேயே அவருடைய வாய் எல்லை கடந்து சொற்களை கொட்டத்தொடங்கியது.

"ஆம், தெய்வங்கள் இரு வகை. அழிக்கும் தெய்வங்கள், ஆக்கும் தெய்வங்கள். அழிக்கும் தெய்வங்களுக்கு எதிராகவே ஆக்கும் தெய்வங்களை சரணடைகிறோம். நோயும் தெய்வம், இறப்பும் தெய்வம், பேரழிவும் தெய்வம்தான். ஆனால் எந்த ஆலயத்திலும் மிருத்யுவையோ வியாதியையோ காலதேவனையோ வைத்து வணங்குவதில்லை. பொலியும் திருமகளையும் சொல்லாயும் கலைமகளையும் அச்சம் கொல்லும் பாய்கலைப்பாவையையும் மட்டுமே வணங்குகிறோம். மங்கலப்பேருருவென எழுந்த மூன்று தெய்வங்களை வணங்குகிறோம்... இவன் யார்? இவன் கலியுகத்தின் தெய்வம்! தெய்வமுகம் கொண்டு வந்த இருள். மெய்யென மாற்றுருக்கொண்ட மருள். ஆக்கமென மயங்க வைக்கும் அழிவு..."

"போதும்! இனி ஒரு சொல் அவனைப் பழித்தெடுத்தால் உமது தலைகொய்து இங்கிட ஆணையிடுவேன்" என்று காந்தாரி கூவினாள். மூச்சிரைக்க "அகல்க... இனி என் முன்

நில்லாதொழிக!" என்றாள். "நீங்கள் அன்னையென அமைந்து அனைவரையும் வாழ்த்தலாம். தெய்வமென இருந்து அவன் செயலையும் புரிந்துகொள்ளலாம். நான் எளிய மானுடன். என் தலைவன் அங்கு தொடையறைந்து கொல்லப்பட்ட செய்திக்குப் பின் என்னால் எந்த நெறியையும் பேண இயலாது. இச்சொற்களின்பொருட்டு என் தலை இங்கு உருளுமென்றால் அதுவும் நன்று" என்றார் கனகர். "பேரரசி, சில நாட்களாகவே என் தலையை தாங்க இவ்வுடலால் இயலவில்லை. எங்கேனும் இது உடைந்து தெறிக்குமென்றால் விடுபடுவேன். இந்த உடலுக்குள் கொதிக்கும் குருதியனைத்தையும் கொட்டிச் சிதறினாலொழிய என்னால் அமைதியடைய இயலாது... அளிகூர்ந்து அந்த வாளை எடுத்து என் தலையை வெட்டி எறியச் சொல்லுங்கள்."

பாய்ந்து புரவியிலிருந்து எழுந்து தேருக்குள் புகவிருப்பவர்போல் எழுந்தார். "எனக்கு தெய்வம் ஒன்றே! நான் தலைகொண்ட அரசன்! அவனுக்களித்த என் சொல்! பிறருக்கு அச்சொல்லை அளிக்க என்னால் இயலாது. அஸ்தினபுரியின் அரசனை அழித்த அவன் என் இன்சொல்லுக்கு உரியவன் அல்ல. எதன் பொருட்டு என் தலைவன் கொல்லப்பட்டான்? மண்ணாசையின் பொருட்டு! மண் விழைவில்லாத மன்னனென ஒருவன் உண்டா? நெறிகளை மீறி என் அரசனைக் கொன்றவன் தெய்வமே எனினும் அவன் எனது எதிரியே... அவனை நான் தீச்சொல்லிடுகிறேன். அந்தணன் என நின்று என் முப்புரிநூல்பற்றி வேதச்சொல் சான்றாக்கி சொல்கிறேன். அவன் மைந்தர்துயரால் அழிவான்... அவன் குடி கல்பொரு சிறுநுரை என மெல்ல மெல்ல இல்லாதாகும்."

காந்தாரி அவரை நோக்கிக்கொண்டு சிலகணங்கள் அமைந்தபின் பெருமூச்சுவிட்டாள். “உங்கள் உணர்வுகளை புரிந்துகொள்கிறேன், அமைச்சரே. இங்கிருக்கும் அனைத்து உணர்வுகளையும் நான் அறிவேன். ஆயினும் கார்வண்ணனே நீயே அறிவாய், உனக்கே அடைக்கலம், நீயன்றி பிறிதில்லை. நான் உன் அடித்தூளியன்றி வேறிலை எனும் சொற்களையன்றி வேறெதுவும் உரைப்பதாக இல்லை. அந்தணரே, அச்சொற்களை உங்கள் நாவும் உரைக்கட்டும். அதுவன்றி எதுவும் உங்களை விடுதலை செய்யப்போவதில்லை. அதிலன்றி எதிலும் நீங்கள் மெய்யை அறியப்போவதுமில்லை” என்றாள்.

கனகர் தேரிலிருந்து தன் கையைவிட்டு இரு கைகளால் கடிவாளத்தை பற்றிக்கொண்டார். தேர் நகர்ந்து முன்னால் சென்றது. அவருடைய புரவி நின்றுகொண்டே இருக்க இடப்புறம் அஸ்தினபுரியின் மக்கள்திரள் பொருளிலா வசைச்சொற்கள் கலந்த கூச்சலுடன் அவரைக் கடந்து ஒழுகிக்கொண்டிருந்தது.

நீர்ச்சுடர் - 17

பகுதி மூன்று : பலிநீர் – 4

புரவியில் பயணம் செய்துகொண்டிருந்தபடி அரைத்துயிலில் சென்றுமீண்டுகொண்டிருந்த சித்தத்தை அறைந்து எழுப்பிய விந்தையான முழக்கத்தை கனகர் கேட்டார். அதை தன்னைச் சூழ்ந்திருந்த காட்டிலிருந்து பல்லாயிரம் நிழலுருவங்கள் கொப்பளித்து ஒழுகியபடி எழுப்புவதாக உணர்ந்தார். பிறிதொரு இடத்தில் அவரே

அவர்களை முகமில்லாத பெருந்திரள் மக்களாக பார்த்துக்கொண்டிருந்தார். அவர்கள் ஒரு மலைச்சரிவிலென ஒழுகி இறங்கினர். அம்மலைச்சரிவு ஒருகணத்தில் செங்குத்தாக வெட்டப்பட்ட பாறை விளிம்பென மாறி அவர்களை கீழே உதிர்த்தது. அப்பால் இருண்டு திரண்டு அமைந்திருந்த இருள் அவர்களை வாங்கிக்கொண்டது. கூச்சலிட்டு அலறியபடி கைகளை வீசியபடி அவர்கள் அவ்விருளில் பொழிந்து மூழ்கி மறைந்துகொண்டிருந்தனர். மானுட உடல்களாலான அருவி. மானுட உடல்கள் சென்றிறங்கும் சுழி.

விழிகளின் வெறிப்பும், திறந்த வாய்களில் பற்களின் வெண்மையும், துடித்து உதறிக்கொள்ளும் கைகால்களின் குழம்பிய அசைவுக்கொப்பளிப்பும், அவற்றுடன் ஒட்டாமல் ஒலிப்பதென இருளை அனைத்து திசைகளிலிருந்தும் அறைந்து அதிரவைத்த அலறல்களின் முழக்கமும் அவரை நடுக்குறச் செய்தன. பல்லாயிரம் பேர் அவ்விருளுக்குள் சென்று மறைந்த பின்னரும் மேலும் வந்துகொண்டிருந்தனர். முன்னர் விழுந்தவர்கள் தொடர்ந்து வந்தவர்களை இழுத்து வந்து தாங்கள் இட்ட வெற்றிடத்தை நிரப்பினர். அலையலையென உடல்களின் கொப்பளிப்பு. பெண்கள், குழந்தைகள், முதியவர்கள்... அவ்வீழ்ச்சிக்கென்றே நெடுந்தொலைவிலிருந்து அவர்கள் அவ்வாறு கிளம்பி வந்திருந்தார்கள்.

கனகரின் தலை புரவியின் கழுத்தில் சென்று முட்டிக்கொண்டபோது அவர் விழித்துக்கொண்டார். புரவியிலிருந்து விழுந்துவிடுவதுபோல் அவர் உடல் ஒரு பக்கமாக சரிந்திருந்தது. கையிலிருந்த கடிவாளத்தை மணிக்கட்டில் நன்றாகச் சுழற்றிக் கட்டியிருந்தமையால் புரவி

நிற்கவில்லை, அவருடைய பழகிய உடல் புரவியிலிருந்து சரியவும் இல்லை. நிமிர்ந்தமர்ந்து சூழ நோக்கியபோது சற்று முன் அவர் கண்டுகொண்டிருந்த கனவே அங்கு நிகழ்ந்துகொண்டிருப்பதை அறிந்தார். அவரைச் சூழ்ந்திருந்த மக்கள்திரள் கூச்சலிட்டபடி முட்டி மோதி ததும்பி தேங்கிச் சுழித்து வழிகண்டு பெருகிப் பீறிட்டு அவருக்கு முன்னால் ஓடிக்கொண்டிருந்தது. அந்த முழக்கம் இருளெனச் சூழ்ந்திருந்த காட்டுக்குள் எதிரொலித்து திரும்பி வந்தது.

அவர் கடிவாளத்தை இழுத்து புரவியை நிறுத்தி அப்பால் வந்துகொண்டிருந்த ஏவலனிடம் "யார்? என்ன?" என்றார். அவனும் சூழ நோக்கியபின் வாயைத் துடைத்தபடி அணுகிவந்து "அனைவரும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள், அமைச்சரே!" என்றான். கனகர் எரிச்சலுடன் "ஆம், அதை என் கண்களாலேயே பார்க்கிறேன். அறிவிலி, அவர்கள் எங்கு ஓடுகிறார்கள்?" என்றார். அதற்குள் பின்புறம் அவரை அணுகிய ஒற்றன் "கங்கை வந்துவிட்டது, அமைச்சரே" என்றான். அவர் அச்சொல்லை வாங்கிக்கொள்ளவில்லை. "இவர்கள் எங்கு ஓடுகிறார்கள்?" என்றார். "கங்கை நோக்கி ஓடுகிறார்கள்" என்று ஒற்றன் சொன்னான். "கங்கை நோக்கி எதற்கு?" என்று உளம் பதியாமல் மீண்டும் கனகர் கேட்டார். "அதை அவர்களே அறியார். முதலில் கங்கையைப் பார்த்தவர்கள் சிலர் கூச்சலிட்டபடி அந்நீர்ப்பரப்பை நோக்கி ஓடினார்கள். அவ்வொலியே ஆணை என்றாக எஞ்சியவர்களும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்" என்றான் ஒற்றன்.

கனகர் ஓடிக்கொண்டிருப்பவர்களின் குரல்களை அதன் பின்னரே ஒவ்வொரு தனிச்சொற்களாக பிரித்து பொருள்கொள்ளத் தொடங்கினார். அவர்கள் "அன்னையே!

அன்னையே!” என்று கூவினர். “மூதன்னையே! குடித்தெய்வமே! விண்ணின் விழுப்பொருளே! உணவூட்டுபவளே!” என்று கதறினர். அருகில் செல்லும் ஒவ்வொரு முகத்தையாக அவர் மாறி மாறி பார்த்தார். பதறும் கைகளை விரித்து கதறும் பெண்கள். அன்னையரை கால் தழுவிக் கூவியழும் குழந்தைகள். நடுக்குற்று, உடல் துடிக்க, விம்மிக் குமுறியபடி செல்லும் முதியவர்கள். “அன்னையே! அன்னையே! அமுதானவளே!” என்று அவரைச் சூழ்ந்து பல்லாயிரம் மானுடக்குரல்கள் கூவிக்கொண்டிருந்தன. அவை ஒருங்கிணைந்து விண்ணில் அறையும் ஒற்றைக்குரலென்றாயின.

முன்னால் சென்ற காந்தாரியின் தேர் தயங்கி நின்றது. கனகர் புரவியை முன் செலுத்தி அருகணைந்தார். அவருக்கு முன் மரக்கிளைகளின் இடைவெளியினூடாக கங்கையின் இருள்நீரின் ஒளிர்வு தெரிந்தது. சிற்றலைகளில் இலைகள் நிழலுருக்கள் என நெளிந்தாடின. வானிலிருந்து ஒளிபெற்று கங்கை அந்த துலக்கத்தை அடைகிறது என்பார்கள். ஆனால் அப்போது வானில் ஒளியிருக்கவில்லை. வேறெங்கிருந்தோ அது ஒளிவிட்டுக்கொண்டிருக்கிறது. அங்கே அவள் தோன்றும் இமையமலை உச்சியில் வெண்பனி நிறைந்திருக்கும் என்பார்கள். அது விண்ணிலிருக்கும் ஒளி பனித்து உதிர்ந்து செறிந்து பருவடிவு கொண்டது. கங்கைக்குள் எப்பொழுதும் அவ்வெண்பனியின் ஒளி உண்டு என்பர். இரவில் உள்ளிருந்து எழும் புன்னகையென அது அவளை மிளிரச்செய்கிறது என்று அன்னை சொல்லி அவர் கேட்டிருந்தார்.

மேலும் நெருங்க இப்போது கங்கையின் விரிந்த நீர்ப்பரப்பு கண்களை நிறைத்தது. அதிலிருந்து நோக்கை விலக்க

இயலாமல் அவர் புரவியின் மீது அமர்ந்திருந்தார். கருமை ஒளிகொண்டுள்ளது. கரிய வைரங்கள் இவ்வாறு ஒளி கொள்ளுமா? கரிய வைரங்களா? அவை காப்பிரி நாட்டிலிருந்து வருவதுண்டு. காளிக்குரியவை என்பதனால் அவற்றை அரண்மனைக் கருவூலத்தில் வைப்பதில்லை. அஸ்தினபுரியின் தென்மேற்கு மூலையிலுள்ள பாய்கலைப்பாவையின் ஆலயத்தில் கருவறைச் சிலையின் கண்கள் கருவைரங்கள். எருமைவிழிகளே கரிய வைரங்கள்தான். ஆனால் வெறும் மணி இவ்வாறு ஒளிகொண்டிருக்காது. அதை ஒளிரச்செய்ய வானம் தேவை. எங்கிருந்தாலும் வைரம் வானை வாங்கிக்கொள்ளும். வானம் மூடிய பின்னரும் தான் பெற்ற ஒளியை உள்ளே வைத்துக்கொள்ளும். மண்ணுக்கு அடியில்கூட அது ஒளிகொண்டிருக்கும். அது ஒரு விழி.

பாரதவர்ஷத்தின் நீள்விழி கங்கை. எக்கவிஞர் இதை பாடினார்கள்? எவரோ எங்கோ. பின்னர் உள்ளில் சொற்களும் ஒழிய வெற்று நோக்கு மட்டுமாக நின்று அவர் அதை நோக்கிக்கொண்டிருந்தார். நெடும்பொழுதுக்குப் பின் தன்னுணர்வு கொண்டபோது விழியினூடாக தன்னுடலெங்கும் குளிர்ந்த நீலஒளி நிறைந்திருப்பதைப்போல் உணர்ந்தார். சிற்றலைகளாக குருதி நெளிந்துகொண்டிருந்தது. விழிகளுக்குள் ஒளியலை. சித்தத்திற்குள் ஓடும் சொல்லும் ஒளியலை. தன் உடலே சிற்றலைகளாக ததும்பிக்கொண்டிருப்பதாக உணர்ந்தார். அதுவரை உணர்ந்த அனைத்து தனிமையும் சோர்வும் சலிப்பும் அகன்று உள்ளம் அமைதிகொண்டிருந்தது. நெருப்பு பட்டு எரிந்த தோற்பரப்பின் மீது குளிர்ந்த எண்ணெய் பட்டதுபோல். ஓயா வலி நின்றுவிட்டதுபோல. துயின்று விழித்தெழுந்ததுபோல் தெளிந்து அலையழிந்து தண்ணென்று தன்னை உணர்த்தியது அகம்.

அவரை அணுகிய ஒற்றன் “கங்கைக்கரை முழுக்க செறிந்து அடர்ந்துவிட்டனர். சாலை நிறைந்து அசைவிழந்துவிட்டது. பின்னிருந்து மேலும் வந்துகொண்டிருக்கிறார்கள். நமது அரசியின் தேர்கள் இனி முன்னால் செல்ல இயலாது” என்றான். கனகர் “நாம் செல்ல வேண்டியது எங்கு?'' என்றார். அப்போது அனைத்து ஆர்வங்களும் வடிந்து அவர் உள்ளம் சலிப்புற்றிருந்தது. அங்கிருந்து கிளம்பி எங்கேனும் சென்று தனிமையில் அமர்ந்துவிடவேண்டும் என அகம் ஏங்கியது. ஒற்றன் “கங்கைப்படித்துறையில் இறங்கி படகுகளில் முக்தவனம் வரை செல்வதாகத்தான் திட்டம். ஆனால் இப்போது தேர்கள் கங்கைக்கரையை அணுகவே இயலாது எனப்படுகிறது” என்றான். கனகர் தன் புரவியை முன்னால் செலுத்தி மேலும் அணுகி கங்கைக்கரையை பார்த்தார். ஒளிவழிவாக ஓடிய கங்கையின் விளிம்பிலிருந்து நாணல்கரை வரை இடைவெளியில்லாமல் மானுடத்திரள்கள் செறிந்திருப்பதை கண்டார். மேலும் மேலும் சாலையிலிருந்து மக்கள் பொழிந்து அப்பெருக்கை அடர்வுறச் செய்துகொண்டிருந்தனர். கங்கையின் படகுப்படித்துறையை அவர்கள் முற்றாகவே மூடி மறைத்திருந்தார்கள்.

“ஆம். நாம் இப்போது எவரையும் விலக்கவோ வழி அமைக்கவோ இயலாது. இவர்கள் எவரும் நமது ஆணையை இப்போது செவிகொள்ள மாட்டார்கள்” என்று கனகர் சொன்னார். “ஆணையுடன் அவர்கள் நடுவே சென்றால் அவர்கள் நம்மை தாக்கவும்கூடும்” என்றான் ஒற்றன். “பக்கவாட்டுக் காடுகளுக்குள் தேர்நிரையை செலுத்துங்கள். பாதை இருக்கும் வரைக்கும் தேர்கள் செல்லட்டும். அதன்பின் சற்று நடந்து எங்கேனும் நீள்பாறை ஆற்றுக்குள் துருத்தியிருக்கும் இடத்தை சென்றணைவோம். படகுகள் அங்கு வரட்டும், அங்கிருந்து

ஏறிக்கொள்வோம்" என்றார் கனகர். ஒற்றன் "இங்கிருந்து சற்று அப்பால் உதகம் என்னும் இடம் உள்ளது. அங்கு இரண்டு பேராலமரங்கள் ஆற்றுக்குள் சரிந்து என நின்றிருக்கின்றன. ஆலமர வேர்களினூடாகவே படகு வரைக்கும் செல்ல இயலும். படகுகளை அங்கு அணையச்செய்யலாம்" என்றான். "ஆம், இங்கிருந்து ஒளிச்செய்தி அனுப்புக!" என்றபின் கனகர் முன்னால் சென்றார்.

தேர்கள் பக்கவாட்டில் காட்டுக்குள் திரும்பும்படி ஆணை எழுந்தது. அது பலமுறை காற்றில் சுழன்றது. தேர்களில் சகடம் உரசும் ஒலியாக அது மாறியது. வண்டியோட்டிகளும் வீரர்களும் சொல்லிணைந்த முழக்கமாக இணைந்துகொண்டார்கள். கருக்கிருட்டில் ஒளிச்சுழற்சிகளினூடாக எழுந்த ஆணைகள் முன்னும் பின்னும் பரவி அங்கே வழிகாட்டும்தெய்வங்கள் தோன்றிவிட்டன எனத் தோன்றச் செய்தன. முகப்பில் சென்றுகொண்டிருந்த ஏவற்பெண்டுகளின் தேர்கள் திரும்பி பக்கவாட்டில் காட்டிற்குள் சென்ற மண்பாதைக்குள் நுழைந்தன. அவ்வாறு ஒரு கிளை பிரிந்து காட்டுக்குள் நுழைந்ததை பெருகிச்சென்ற மைய ஒழுக்கினர் அறியவில்லை. அவர்களிடமிருந்து முறியாத முழக்கம் எழுந்துகொண்டிருந்தது. கங்கையின் ஒளி அனைத்து விழிமணிகளிலும் துளித்து நின்றது. அவர்கள் பிற எதையும் நோக்கவில்லை.

காட்டுக்குள்ளிருந்து மலைப்பொருட்களையும் விறகையும் மையச்சாலைக்குள் கொண்டுவரும் பொருட்டு அமைக்கப்பட்ட அந்தச் சிறிய பாதை நெடுநாட்களாக கைவிடப்பட்டு, மழையில் பெருகி வந்து படிந்த மணலும் சேறும் நிறைந்து கிடந்தது. சகடங்கள் புதைந்து, அச்சுகள் கூக்குரலிட்டன. வண்டிகள்

அலைகளிலென ஊசலாடி குடம் முட்டும் ஓசையுடன் சென்றன. ஆங்காங்கே புரவிகளும் காளைகளும் சேற்றில் கால் புதைந்து நிற்க அவற்றுக்கு முன் பலகைகளைப்போட்டு உந்தி மேலழுப்பினர். பல இடங்களில் சகடங்கள் ஆழப் புதைந்து வண்டிகள் நின்றன. அவற்றிலிருந்த அரசியரும் ஏவற்பெண்டுகளும் இறங்கிக்கொள்ள காவலர் நீண்ட கழிகளை சகடங்களுக்கு அடியில் கொடுத்து நெம்பி அவற்றை எழுப்பி மீண்டும் செலுத்தினர். அவை முனகிக் கூச்சலிட்டு எழுந்து உருள மீண்டும் ஏறிக்கொண்டனர். சற்றுநேரத்திலேயே நின்றுவிட நேர்ந்தது. மீண்டும் ஏவலர் நெம்புகோல்களுடன் வந்தனர்.

கனகர் "இவ்வாறு நெடுந்தொலைவு செல்ல இயலாதென்று தோன்றுகிறது" என்றார். ஒற்றன் "இன்னும் சற்று தொலைவுதான். அதன் பின்னர் படகுத்துறை வரை நடந்தே சென்றுவிடலாம்" என்றான். கனகர் புரவியில் அமர்ந்தபடியே இடப்பக்கம் கங்கைக்கரை தெரிவதை பார்த்துக்கொண்டிருந்தார். அங்கு அப்போதும் மக்கள்திரள் நெருங்கி பெருகிக்கொண்டே இருந்தது. "மேலும் மேலும் வந்துகொண்டிருக்கிறார்கள். நெரிசல் இவ்வண்ணமே தொடர்ந்தால் இவர்களில் பலநூறு பேர் இன்று கங்கையில் மூழ்கி உயிர்துறக்கக் கூடும்" என்றார். ஒற்றன் மறுமொழி சொல்லாமல் வந்தான். "எந்தப்பெருக்கும் கட்டுப்படுத்தப்படாவிட்டால் அழிவே" என்று கனகர் மீண்டும் சொன்னார். "இவர்களை எவரும் கட்டுப்படுத்த இயலாது" என அவரே தொடர்ந்தார். "அவர்களின் உள்ளங்கள் மேலும் மேலுமென பெருகிக்கொண்டிருக்கின்றன."

"இம்மக்கள்நிரையின் பின்னால் இருந்து வருபவர்களின் அழுத்தத்தால் முன்னால் நிற்பவர்கள் நீருக்குள்

தள்ளிவிடப்படுவார்கள். கங்கையில் மழைநீர் பெருகிவருவதால் ஓரத்துநீரின் எதிர்சுழலும் விசையும் மிகுந்திருக்கும்" என்று கனகர் சொன்னார். ஒற்றன் அதற்கும் மறுமொழி சொல்லவில்லை. கனகர் அவனை நோக்கி திரும்பி "எவ்வகையிலேனும் பின்னால் வருபவர்களை தடுத்து நிறுத்தி இப்பெருக்கை மறுபக்கமாக மடைமாற்றிச் செலுத்தி காட்டிற்குள் அனுப்பிவிட முடியுமா? சற்று அப்பால் கங்கைமணலுக்கு இவர்களில் ஒருசாராரை கொண்டு செல்ல இயன்றால் போதும்" என்றார். ஒற்றன் தொண்டையை கனைத்தபின் "அமைச்சரே, அவர்களில் பெரும்பாலோர் உயிர்துறக்கவே வருகிறார்கள்" என்றான். "என்ன சொல்கிறாய்?" என்று சினத்துடன் கேட்டபடி கனகர் திரும்பினார்.

"அவர்களில் பலர் அழுதபடி செல்வதை நீங்கள் பார்க்கலாம். உயிர்விடுவதற்கு உகந்த வழி கங்கையில் ஒழுகிச்செல்வதே என்பதை பல்லாயிரம் ஆண்டுகளாக நம் நெறிகள் கூறி வந்துள்ளன. இங்கு அவர்கள் இருந்து என்ன செய்யப்போகிறார்கள்? முதியவர்கள் மைந்தரை இழந்த துயருடன் இங்கு வாழ்வதில் பொருளில்லை என்றே உணர்வார்கள். கணவரை இழந்த பெண்டிருக்கு இளங்குழவியரும் இல்லை என்றால் அவர்களுக்கு இனி வாழ்வில் இன்பம் இல்லை. இங்கு சென்றுகொண்டிருப்பவர்களில் மிகச் சிலரே திரும்பிச்செல்வார்கள். அவர்கள் பெரும்பாலும் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்புள்ளவர்கள். பிறர் மீளப்போவதில்லை" என்றான் ஒற்றன். கடிவாளத்தை இழுத்து நிறுத்தியபடி திகைப்புடன் திரும்பி அக்கூட்டத்தை பார்த்தார் கனகர். அக்கணமே அச்சொற்கள் உண்மை என உணர்ந்தார்.

மணற்கரை விண்டு சரிவதுபோல் கங்கைக்கரையை நெருங்கியிருந்த திரள்முகப்பிலிருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக நீருக்குள் விழுந்துகொண்டிருப்பதை பார்த்தார். அவர்கள் விழுந்த இடங்களில் நீர் கொந்தளித்தது. அரையிருளில் நிழல்தோற்றங்களாக தெரிந்தபோதும் கூட அது அவரை நடுக்குறச் செய்தது. "அவர்கள் நீர்ப்பலி கொடுக்க வந்தார்கள் என்று எண்ணிக்கொண்டேன்" என்றார். ஒற்றன் "இதுவும் ஒரு பலிக்கொடையே. கங்கையில் தன்னை அளித்தல் முதன்மை பலிக்கொடை என்று நூல்களில் கூறப்பட்டுள்ளது. அன்னங்களில் தூய அன்னம் என்பது உடலே." கனகர் உடல் குளிரிலென நடுங்கிக்கொண்டிருக்க வெறித்து நோக்கியபடி புரவி மேல் அமர்ந்திருந்தார். நோக்கு நன்கு தெளிந்த அவருடைய கண் எதிரில் கங்கையில் கரையிலிருந்து பல்லாயிரக் கணக்கானவர்கள் நீருக்குள் விழுந்து சுழித்து புரட்டி கொப்பளித்து அலையெழுந்து சென்றுகொண்டிருந்த நீரில் மறைந்துகொண்டிருந்தனர்.

முன்னால் சென்றுகொண்டிருந்த ஏவற்பெண்டுகளின் வண்டியிலிருந்து ஒளிச்செய்தி வந்தது. "மேலே செல்ல பாதை இல்லை என்கிறார்கள்" என்று ஒற்றன் சொன்னான். கனகர் தேர்நிரையை ஒட்டி தன் புரவியைச் செலுத்தி ஏவற்பெண்டுகளையும் அத்திரிகளையும் கடந்து முகப்பை அடைந்தார். அங்கிருந்து வந்த ஏவலன் "மரங்கள் விழுந்து முற்றாகவே பாதை மூடியிருக்கிறது, அமைச்சரே. மேலே செல்ல வழி இல்லை" என்றான். இருளைக் கூர்ந்து ஒருமுறை பாதையை பார்த்துவிட்டு "நான் அரசியிடம் சொல்கிறேன்" என்று கனகர் காந்தாரியின் தேரருகே சென்றார். கடிவாளத்தை

இழுத்து புரவியை நிறுத்தி "பேரரசி, வணங்குகிறேன்!" என்று உரத்த குரலில் அழைத்தார்.

உள்ளிருந்து சத்யசேனை திரையை இழுத்துத் திறந்து "என்ன?" என்றாள். அவள் தேரின் அசைவால் அலுப்புகொண்டு சினம் அடைந்திருந்தாள். "அரசி, நாம் கங்கைக்குள் இறங்க முடியவில்லை. அங்கு அஸ்தினபுரியின் மக்கள் செறிந்து வழி இல்லாதாகிவிட்டிருக்கிறது. ஆகவே படகுகளை சற்று தள்ளி இங்கு கொண்டுவர ஆணையிட்டிருந்தோம். இங்கிருக்கும் இரண்டு ஆலமரங்கள் படகுத்துறைகளென அமைய உகந்தவை. அங்கு செல்லும் பொருட்டே இங்கு காட்டுக்குள் நுழைந்தோம். வழியை மரம் விழுந்து மூடியிருக்கிறது. சற்று தொலைவு நடந்தே ஆகவேண்டும்..." என்றார். சத்யசேனை ஏதோ சொல்வதற்கு முன் காந்தாரி "செல்வோம். இங்கு அமர்ந்து செல்வதைவிட அது எளிதாக இருக்குமென்று நினைக்கிறேன்" என்றபின் தன்னை தூக்கும்படி இரு கைகளையும் நீட்டினாள். "வழி எவ்வண்ணம் உள்ளது?" என்று சத்யவிரதை கேட்டாள். "காட்டுப்பாதை" என்றார் கனகர். "காடு எனத் தெரிகிறதே" என்றாள் காந்தாரி.

சத்யசேனையும் சத்யவிரதையும் அவள் இரு கைகளையும் பற்றி தூக்கினர். அவள் எழுந்தபோது தேர் அசைந்து முனகியது. மெல்ல தேரிலிருந்து வெளியே வந்து காலை முதற்படியில் வைத்தாள். அந்த இருளிலும் வெண்மலர்போல் அவளுடைய சிறிய பாதம் துலங்குவதை பார்த்தபின் கனகர் விழிகளை விலக்கிக்கொண்டார். நீர்க்கடனுக்குச் செல்கையில் கால்குறடுகள் அணியலாகாது என்பதை அதன் பின்னரே அவர் உணர்ந்தார். அவள் பாதங்கள் மண்பட்டு எத்தனை காலமாகியிருக்கும்! அவள் கால்கள் படிகள்மேல் அமைந்து

இறங்குவதை அகக்கண்ணால் கண்டார். அப்படிகள் மெல்ல அழுந்தி அவளை ஏற்றுக்கொள்வதைப்போல ஒலித்தன. அவள் பாதம் மண்ணில் படிவதை தன் உள்ளத்தில் ஓர் அதிர்வாக அறிந்தார். அன்னையே அன்னையே என்னும் சொல்லாக அவர் உள்ளம் அரற்றிக்கொண்டிருந்தது. விழிகளில் இருந்து நீர் வழிந்து கன்னத்தில் ஓடியது.

அத்தனை விழிநீர் பெருகும் அளவுக்கு துயரமென எதுவும் அவரில் இருக்கவில்லை. ஏன் அழுகிறோம் என்று அவர் அகம் வியந்துகொண்டிருந்தது. ஆனால் அவரை மீறி நெஞ்சிலும் தோள்களிலும்கூட இளவெம்மையுடன் நீர்த்துளிகள் சொட்டின. மேலாடையைக் கொண்டு முகத்தை அழுந்தத் துடைத்தார். விம்மலோ விசும்பலோ இன்றி அத்தனை விழிநீர் பெருகக்கூடுமென்பதை அப்போதுதான் அவர் அறிந்தார். அவ்விருளில் அதை எவரும் காணப்போவதில்லை. எவரும் காணாத விழிநீருக்கு ஒரு தூய்மை உள்ளது. அவர் பந்தங்களின் ஒளி தன் முகத்தில் விழாதபடி சற்றே விலகி புதர் ஓரமாக நின்றுகொண்டார். பெருமூச்சுகள் எழுந்துகொண்டே இருந்தன. ஒவ்வொரு மூச்சுக்கும் அவர் எளிதாகிக்கொண்டே சென்றார். உள்ளிருந்த அனைத்து அழுத்தங்களும் காற்றாக வெளியே சென்றுகொண்டிருந்தன.

காந்தாரி சத்யசேனையின் தோளைப் பற்றியபடி மெல்ல காலடி வைத்து நடந்தாள். அவள் உடன்பிறந்த அரசியர் இருபுறமும் சூழ்ந்து சென்றனர். நான்கு ஏவல்பெண்டுகள் நீண்ட வாள்களுடன் முன்னால் சென்று நீட்டி நின்றிருந்த கிளைகளையும் சரிந்திருந்த நாணல்களையும் வெட்டி அவளுக்கு வழி ஒருக்கினர். அவளும் இணையரசியரும் அரசமகள்களும் செல்ல பின்னர் அப்பாதையில் கனகர்

நடந்தார். அவள் காலடிகள் பட்ட மண் என நினைத்துக்கொண்டார். ஒருவேளை அவள் காலடித்தடத்தில் தன் காலடி படக்கூடும் என்று எண்ணி பாதையை கூர்ந்து நோக்க முயன்றார். பின்னர் மிக விலகி நாணல்களை மிதித்துக்கொண்டு நடந்தார். பானுமதியும் அசலையும் ஒருவர் தோளை ஒருவர் பற்றியபடி, ஒருவரால் ஒருவர் தாங்கப்படுவதுபோல் நடந்துசென்றார்கள். அவர்கள் இருவரும் ஒரே முகம் கொண்டுவிட்டிருந்தனர். ஒன்றேபோல் உடல்கள் அசைந்தன. அவர்கள் இருவரும் மாளிகையிலிருந்து கிளம்பியபின் ஒரு சொல்லும் உரைக்கவில்லை. இல்லையென்றே ஆகிவிட்டிருந்தனர்.

காட்டின் இருளினூடாக அவர்கள் சென்றபோது கிளைகளிலிருந்து பறவைகள் எழுந்து ஓசையிட்டன. காற்று இலைகளை உலுக்கியபடி கடந்து சென்றது. கங்கையின் ஒளி இலைகளுக்கும் மரக்கிளைகளுக்கும் அப்பால் அலைகளாக தெரிந்துகொண்டிருந்தது. அவர்களின் காலடியோசைகள் பல்லாயிரம் நாக்குகள் மண்ணை நக்கி உண்ணும் ஒலி என கேட்டுக்கொண்டிருந்தன. கனகர் முடிவிலாது சென்றுகொண்டிருப்பதுபோல் உணர்ந்தார். இப்பயணம் இவ்வண்ணம் பல்லாண்டுகள் செல்லக்கூடும். இது ஒரு இருண்ட சுரங்கப்பாதை. மறுமுனை என ஒன்றில்லாதது.

தேர்களும் அத்திரிகளும் பின்னால் விலகி அகன்றன. மக்களின் திரளொலி ஊமைமுழக்கமென மாறி மேலும் விலகி மறைந்தது. காடே அவ்வொலி கேட்டு ரீங்கரித்துக்கொண்டிருந்தது. அவர்கள் சதுப்புச் சரிவில் மெல்ல இறங்கத்தொடங்கினார்கள். கனகர் ஆணையிட அவரது சொற்கள் ஒளியாக மின்னி இருளில் முன்சென்றன. அரசியர்

ஒருவரை ஒருவர் பற்றியபடி மெல்ல இறங்கி அந்த படர்ந்த ஆலமரத்தை அடைந்து மூச்சுவாங்க நின்றனர். "இங்குதான், அரசி" என்றான் ஏவலன். காந்தாரி "ஆம்" என்றாள். ஆலமரத்தொகையின் வேர்முனம்புகளுக்கு மேல் மரத்தடிகளை இழுத்துப் போட்டு நீர்ப்பரப்புக்குள் செல்லும்படி நடைபாதை அமைத்திருந்தார்கள். படகுகள் வந்து பெருநாகங்கள்போல் நீரிலிருந்து எழுந்து தெரிந்த வேர்முகப்பில் நின்றிருந்தன. மேலும் படகுகள் கங்கைக்குள் விளக்குஒளிகளாக நிரைகொண்டு நெளிந்தாடின.

முதற்படகில் காந்தாரி ஏறி அமர்ந்தாள். அவள் மரப்பாலத்தினூடாக மெல்ல காலடி வைத்துச் செல்வதை கனகர் நோக்கி நின்றார். அவள் படகிலேறி அமர்ந்ததும் அது மெல்ல அசைந்து ததும்பி அவளை அமைத்துக்கொண்டது. இணையரசியர் ஏறி அவள் அருகே அமர்ந்தனர். காந்தாரி காட்டை ஒருமுறை கைகூப்பி தொழுதாள். துடுப்பை உந்தி படகை அகற்றி கங்கையின் ஒழுக்குக்குச் சென்று சுழன்று பாய்விரித்து நீரலைகளின் மீது ஏற்றிக்கொண்டான் படகோட்டி. படகு ஒளிப்புள்ளிகளாக மாறி கங்கைமேல் இருந்த அரையிருளில் புதைந்தது. பானுமதியும் அசலையும் இணையாக நடந்துசென்று படகில் ஏறிக்கொண்டனர். தொடர்ந்து அரசியரும் இளவரசியரும் படகுகளில் ஏறத்தொடங்கினார்கள். ஒவ்வொரு படகாக சிறகு விரித்து நீர்வெளிமேல் எழுவதை கனகர் நோக்கிநின்றார். பறவைகள் கலைவதுபோல பதற்றமான ஒலிகள் கேட்டன. "என்ன? என்ன?" என்றார். "மச்சநாட்டு இளவரசியரில் ஒருவர் கங்கையில் பாய்ந்துவிட்டார்..." என்றான் ஏவலன். கனகர் பெருமூச்சுவிட்டார்.

அதற்குள் இன்னொரு ஒலிச்சுழி எழுந்தது. “சௌரநாட்டின் இளவரசியர் இருவர் கைகோத்தபடி நீரில் பாய்ந்துவிட்டார்கள்!” என்று ஒற்றன் முன்னாலிருந்து கூவினான். “அவர்களை தடுக்கவேண்டாம்” என்று கனகர் சொன்னார். மேலும் மேலும் இளவரசியர் கங்கைநீரில் பாய்ந்து மூழ்கி மறைந்துகொண்டிருந்தார்கள். சற்றுநேரத்திலேயே அதிர்ச்சி மறைந்து அது ஒரு முறைமை என ஆயிற்று. ஒவ்வொருவர் நீரில் பாய்கையிலும் சீரான வாழ்த்தொலிகள் எழுந்தன. “அன்னையே! கங்கையே! ஏற்றருள்க, அரிய பலியை! ஏற்றருள்க, இவளை! உன் ஆழம் இவளுக்கு விண்ணுலக வழியென்றாகுக! அன்னையே! வாழ்க, அன்னையே!” பாய்பவர்களின் எண்ணிக்கை பெருகப்பெருக பாய்பவர்கள் தயக்கம் அழிந்து இயல்பாக நீர்புகுந்தனர். அருகிருந்த இளவரசியர் நீரில் விழுவதைக் கண்டு பிறரும் பாய்ந்தனர்.

அவர்கள் எண்ணி முடிவெடுத்துப் பாயவில்லை என கனகர் எண்ணினார். அவர்களின் அறியா அகம் உடலை அதுவே இயக்குகிறது போலும். அல்லது அவர்களைச் சூழ்ந்து அகமும் நிறைத்திருக்கும் இருளால் அவர்கள் இழுத்து எடுக்கப்படுகிறார்கள். படகுகளிலிருந்து அவர்கள் உதிர்ந்துகொண்டே இருந்தனர். கங்கையின் ஒளிரும் நீரில் கொப்புளங்களாக எழுந்து அலைவளையங்கள் என ஆகி மறைந்தனர். அகலே நின்று நோக்குகையில் சிறுசிறு குமிழிகளாக மட்டுமே தெரிந்தனர்.

நீர்ச்சுடர் - 18

பகுதி மூன்று : பலிநீர் – 5

படகில் ஏறி அமர்ந்ததுமே கனகர் பிறிதொரு உளநிலையை அடைந்தார். கங்கைக்கரையிலிருந்து கிளம்பிய இறுதிப்படகில் அவர் இருந்தார். அனைத்து இளவரசிகளும் படகில் ஏறிக்கொண்டுவிட்டார்களா என்பதை உறுதி செய்த பின்னர் தன் படகில் ஏறி படகோட்டி அமைத்த விசிப்பலகையின்மேல் எடைகொண்ட உடலை அமைத்து கைகளை மார்பில் கட்டிக்கொண்டு பின்னால் சாய்ந்தார். அவருக்கு முன்னால் நிழலுருவக் காட்டுடன் நாணல்கரை கொண்ட நிலம் மாபெரும் மரக்கலம்போல் ததும்பி அலைகொண்டபடி நின்றது. அவருடைய ஆணைக்காக படகோட்டி காத்திருந்தான். ஏவலன் அருகே வந்து மெல்ல தொண்டையொலி எழுப்பியதும் நிமிர்ந்து பார்த்தார். "கிளம்பலாமா என்று கேட்கிறார்கள், அமைச்சரே" என்றான். "ஆம், ஆம், கிளம்பலாம்" என்றபின் அவர் பெருமூச்சுவிட்டு மீண்டும் உடலை தளர்த்திக்கொண்டார்.

அவர் முன் விழிநிறைத்து நின்றிருந்த மாபெரும் நிலம் அசைந்து பின்னகர்ந்து செல்லத்தொடங்கியது. நீரலைகளின் கிளைப்பொலி விலகிச்சென்றது. படகின் விலாவில் அறையும் சிற்றலைகளின் ஓசையும், துடுப்புகள் நீரில் விழுந்து சுழன்று மேலெழும் சலசலப்பும் மட்டும் அவரைச் சூழ்ந்திருந்தன. காற்றில் விரிந்த பாய் விம்மிப் புடைத்து வளைவு கொண்டு வடங்களை இறுக்கி வலியுடன் முனக வைத்தது. வெவ்வேறு பலகைகள் ஒன்றுடன் ஒன்று உரசிக்கொண்டும், முட்டிக்கொண்டும் ஒலி எழுப்பின. முறுகலோசை, இறுகலோசை, உரசலோசை, தேய்வோசை, வழுக்கலோசை, குழைதலோசை. ஓசைகள் ஒவ்வொன்றும் ஒரு சொல்.

அனைத்தும் வலி வலி என்றே கூவின. அப்படகு சற்றும் விரும்பாத ஒரு பயணத்தை செய்துகொண்டிருப்பதாக உணர்ந்தார். அதன் ஒவ்வொரு பலகையும் அதை முன்செலுத்தும் துடுப்புக்கும் பாய்க்கும் எதிராக முனகிக்கொண்டிருந்ததுபோல் தோன்றியது.

கண்களை மூடி அந்த ஒலியை கேட்டுக்கொண்டிருந்தபோது ஏதோ ஒரு கணத்தில் அஸ்தினபுரியின் அரண்மனையில் அமர்ந்திருப்பதாக உணர்ந்தார். சாளரக்கதவுகள் காற்றில் அசைகின்றன. கீல்கள் முனகிக்கொள்கின்றன. நூற்றுக்கணக்கான கலங்கள் முட்டி ஒலிக்கின்றன. குறடுகள் ஓசை எழுப்புகின்றன. அவ்வரண்மனை காற்றில் ஒழுகிச் சென்றுகொண்டிருக்கிறது. அங்குள்ள ஒவ்வொரு பொருளும் அவ்விழுப்புக்கு எதிராக வலு கூட்டுகிறது. ஒன்றையொன்று பற்றிக்கொண்டும் கவ்விக்கொண்டும் செறுத்து நிற்கிறது. ஆனால் அவ்வொழுக்கு மிகப் பெரியது. தெய்வங்களாலும் நிறுத்த இயலாது. அவ்வொழுக்கிலிருந்து தப்ப ஒன்றே வழி. மூழ்கிவிடுவது, மண்ணுக்குள் எவரும் விழிகளாலோ சிந்தையாலோ தொட முடியாத ஆழத்தில். அங்கு அசைவில்லை. எங்கும் செல்ல வேண்டியதில்லை. அமைந்து செறிந்து ஊழ்கத்திலென காலம் கடந்து கிடக்கலாம்.

என்றோ ஒருநாள் மேலிருந்து அகழ்ந்து இறங்கி வருவார்கள் மானுடர்கள். வேறு உலகத்திலிருந்து, வேறு மொழிகளுடன், வேறு எண்ணங்களுடன். ஆனால் நம் முகங்களுடன், நம்மை அறியாத விழிகளுடன். அஸ்தினபுரியின் அரண்மனை முகட்டுக் குவைகளினூடாக துளைத்து இறங்கி வந்த ஒருவனை அவர் கண்டார். அவன் அவர் விழிகளை சந்தித்ததும் திடுக்கிட்டு பின்னகர்ந்தான். எவரிடமோ இங்கே

என்று சுட்டிக்காட்டினான். மேலும் சிலர் அணுகிவந்தனர். அவரைச் சூழ்ந்து நின்று கைசுட்டி நோக்கி அறியா மொழியில் பேசிக்கொண்டனர். அவரை மேலும் அணுகி வந்து கூர்ந்து நோக்கினர். அவர் கால்களையும் கைகளையும் தொட்டனர். அவர் தான் கல்லாகிவிட்டிருப்பதை உணர்ந்தார். ஆனால் எப்படி அவர்களை என்னால் நோக்க முடிகிறது? கல்லில் விழி எழுமா என்ன? விழி எங்கும் எழும். கல்லில் மரத்தில் சிப்பியில்... எழவேண்டும் என எண்ணினால் எங்கும் விழி மலர்ந்துவிடும். காளான் பூப்பதுபோல...

அவர் விழித்துக்கொண்டபோது படகு கங்கையின் நடுவே இருண்ட நீரின்மேல் ஒழுகிச் சென்றுகொண்டிருந்தது. வானம் தீட்டப்பட்ட இரும்பென ஒளிகொண்டிருந்தது. கரையில் நின்றிருந்தபோது இந்த நீர்தான் ஒளி வழிவெனத் தெரிந்தது. இதன் மீதேறி வந்தபின்னர் எப்போது இது இருள் கொண்டது? அவர் வானில் நிறைந்திருந்த விண்மீன்களை பார்த்துக்கொண்டிருந்தார். மழைமுகில்கள் அகன்றுவிட்டிருக்கின்றன. ஆகவேதான் விண்மீன்கள் எழுந்துள்ளன. விண்மீன்கள் எப்பொருளையும் அளிக்காத சொற்கள் போலிருந்தன. மாபெரும் காவியம் ஒன்றை முன்பின் தொடர்பற்ற சொற்களின் பெருக்காக மாற்றிவிட்டதுபோல். அறியாத மொழிதான், ஆனால் முன்னோர் ஊழ்கம் வழியாக அதில் சிலவற்றை மட்டும் படித்தறிந்திருக்கிறார்கள். அப்பொருளை உதறி வெறுமனே விழிகளால் வெறித்துக்கொண்டிருக்கிறேன் நான்.

முகில் விலகியதனால் போலும் காற்று வலுத்தொலித்து ஓடியது. அதை அள்ளி நடனக்கைகள்போல் ஒன்றுடன் ஒன்று பொருந்தியிருந்த பாய்களுக்குள் சுழற்றிச் செலுத்திக்கொண்டு

தன்னை முன்செலுத்திக்கொண்டிருந்தது படகு. வானம் ஊதிப் பறக்கவைக்கும் சிறு சருகு. அவர் பெருமூச்சுடன் எழுந்தமர்ந்தார். "ஏதேனும் அருந்துகிறீரா, அமைச்சரே?" என்று ஏவலன் கேட்டான். "ஆம், குளிர்ந்த நீர்... இன்நீரெனில் நன்று" என்று அவர் சொன்னார். "அவ்வாறே" என்று ஏவலன் வணங்கி திரும்பிச்சென்றான். அவன் கொண்டு வந்த குடுவையை வாங்கி இன்நீரை அருந்தி நெஞ்சையும் வயிற்றையும் நிரப்பிவிட்டு அருகே வைத்தார். பின்னர் "எத்தனை இளவரசியர் நீரில் விழுந்திருப்பார்கள்?" என்றார். ஏவலன் பேசாமல் நின்றான். "எவரிடமேனும் கணக்கேதும் இருக்க வாய்ப்புண்டா?" என்றார். "இல்லை. அங்கு சென்ற பின்னர் கணக்கெடுக்கவேண்டும். சிலநூறு பேர் விழுந்திருக்கக் கூடும்" என்று அவன் சொன்னான். "கரையிலிருந்து நடு ஆற்றுக்கு வந்த பின்னர் எவரும் நீரில் குதிக்கவில்லை."

அது கனகருக்கு விந்தையாக இருந்தது. "ஏன்?" என்றார். அப்பால் நின்றிருந்த படகோட்டி "பொதுவாக கங்கைக்கு உள்ளே வந்த பின்னர் எவரும் நீரில் பாய்வதில்லை, அமைச்சரே" என்றான். "ஏன்?" என்று அவர் கேட்டார். "அறியேன். ஆனால் அது வழக்கமில்லை என்று மட்டும் அறிந்திருக்கிறேன்" என்றான் படகோட்டி. கனகர் விந்தையான உளஎழுச்சியுடன் "நான் சொல்கிறேன். ஏனெனில் கங்கையின் நடுவில் வந்த பிறகு கரை அகன்றுவிடுகிறது. அங்குள்ள வாழ்க்கையும் அங்கு சொல்லப்பட்ட நெறிகளும் பொருளற்றவையாகிவிடுகின்றன. எனவே அங்குள்ள துயர் முற்றாக மறைந்துவிடுகிறது" என்றார். படகோட்டி புன்னகைத்து "எனில் கரை செல்லாமல் கங்கையிலேயே உலவிக்கொண்டிருக்க வேண்டும். கடல் முதல் காசி வரை

மீண்டும் காசி முதல் கடல் வரை. ஒருபோதும் மண்ணை உணரக்கூடாது. வாழ்வு துயரற்றிருக்கும்" என்றான்.

அவன் சொல்வதில் இருந்த பொருளின்மையை உணர்ந்து கனகர் புன்னகைத்ததுமே அது பொருள் மிக்க கூற்றாகவும் தோன்றியது. உளமெழுந்து பறக்க எழுந்துகொண்டு "ஏன் கங்கையிலேயே வாழக்கூடாது? அது இயல்வதுதானே?" என்றார். "மாலுமிகள் எத்தனையோ பேர் கரையணைவதே இல்லை. கரையணைந்தாலும் மிக விரைவிலேயே மீண்டும் கலத்திற்கு திரும்பிவிடுகிறார்கள்." படகோட்டி "ஆம். அது இயல்வதுதான், அமைச்சரே. ஆனால் மண்ணிலுள்ள மானுடர் அனைவரும் கங்கைக்குள் வாழமுடியாதல்லவா?" என்றான். அவர் மீண்டும் அமர்ந்துகொண்டு "மாலுமிகள் துயரற்றவர்களா என்ன?" என்றார். படகோட்டியின் முகம் மாறுபட்டது. "பின்னர் இவ்வினா எழும்வரை நான் எண்ணியதில்லை, அமைச்சரே. ஆனால் மெய்யாகவே மாலுமிகள் துயரற்றுதான் இருக்கிறார்கள்" என்றான்.

கனகரின் உள்ளம் படபடத்தது. அமர்ந்துகொண்டு "சொல்" என்றார். "அவர்கள் இன்று மட்டுமே கொண்டவர்கள். நேற்றும் நாளையும் அற்றவர்கள். ஆகவே அவர்களுக்கு கடன் கொடுக்கலாகாது, அவர்களின் சொற்களுக்கு எந்த மதிப்பும் இல்லையென்று கரையில் கூறப்படுவதுண்டு. கரையில் அவர்கள் கொள்ளும் உறவுகளை நீரில் எழுந்ததுமே மறந்துவிடுவார்கள் என்று பெண்டிரை எச்சரிக்கிறோம். மாலுமிகளும் தாங்கள் கிளம்பியதுமே தங்களை மறந்துவிடும் பரத்தையரைதான் விரும்புகிறார்கள்." கனகர் மூச்சுத்திணறலுடன் "ஆம்!" என்றார். "அவர்கள் சூதாடுகிறார்கள், மிஞ்ச மிஞ்ச குடிக்கிறார்கள். நாளையென ஒன்றில்லையென்று

இன்று களியாடுகிறார்கள். கடலுக்குள் சென்று அமைந்த எந்த மாலுமியும் கரை வந்து வாழ்ந்ததில்லை. கரையில் இன்பமொன்று இருப்பதாகவே மாலுமிகள் உணர்ந்ததில்லை. எனில் அவர்கள் கரையிலிருப்பவற்றைவிட மேலான வாழ்க்கை ஒன்றை வாழ்கிறார்கள் என்பதுதானே பொருள்?" என்றான்.

"மெய்தான்" என்றபின் கனகர் மீண்டும் எழுந்துகொண்டார் "ஏனெனில் நீருக்குமேல் அரசுகளில்லை. நகரங்களுமில்லை. அரசுகள் இல்லை எனில் நெறிகள் இல்லை. நெறிகள் தேவையில்லை எனில் வரலாறில்லை. வரலாறில்லை எனில் நாளை எனும் கனவும் இல்லை. எத்தனை பெரிய விடுதலை!" என்றான். "ஆம்!" என்றார் கனகர். எண்ண எண்ண அவனுக்குள் சொற்கள் பெருகின. "ஏன் அங்கு அரசுகளில்லை? ஏன் எனில் அங்கு நீர் நிலையற்றிருக்கிறது. அதன்மேல் மிதக்கத்தான் முடியுமே தவிர அடித்தளங்களை அமைக்க இயலாது. வேரூன்ற இயலாது. வேரின்மைபோல் விடுதலை வேறில்லை." அவன் நெஞ்சில் கைவைத்து மெல்ல கூவினான். "தெய்வங்களே, இதை எப்போது உணர்ந்தேன்! இத்தனை காலம் எப்படி உணராமல் இருந்தேன்!"

கனகரால் அமர இயலவில்லை. சரிந்திருந்த வடத்தைப் பிடித்தபடி தனக்கு சுற்றும் அலையடித்த அலைவளைவுகளை நோக்கினார். நிலையின்மையைத்தான் இத்தனை காலம் அஞ்சியிருந்தேனா? இத்தனை காலம் நிலையின்மையிலிருந்து தப்பத்தான் முயன்றேனா? இத்தனை அறிதல், இவ்வளவு சொற்கள், எண்ணற்ற நெறிகள் அனைத்தும் இந்நிலையின்மையிலிருந்து எழுந்து ஒரு நிலைக்கோளை உருவாக்கிக் கொள்வதற்காகத்தானா? எத்தனை எளியவர்

மானுடர்! அங்கே மனிதர்கள் உருவாக்கியிருக்கும் அனைத்து நகரங்களும் நிலைக்கோளுக்கான அவர்களது கனவுகள் மட்டுமே. அந்நகரங்கள் ஒன்றுடன் ஒன்று போர்புரிவதுகூட அறுதியாக நிலைகொண்டு விடவேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் மண்ணும் அலைகொள்வதே. சற்று விசை குறைந்த அலை. காலத்தை இன்னும் விரித்து நீட்டிக்கொண்டால் அந்நகரங்களும் மரக்கலங்களே. அவற்றில் கொடிகள் பறப்பதைக் கண்டாவது அதை உணர்ந்திருக்கவேண்டும்!

அவர் எண்ணங்கள் மேலும் கட்டுமீறி செல்லத்தொடங்கின. அவருடைய பித்துடன் தானும் உடன் வந்தவனாக விழிகள் ஒளிகொண்டு நின்றான். அறிஞர்கள் இத்தனை காலம் சொன்னவை அனைத்துமே நிலைகொள்க நிலைகொள்க என்றுதான். வேதம் விண்ணிடம் முறை கொள்வது இங்கே நிலைபெறச்செய்க என்று மட்டுமே. சொற்கள் நிலைகொள்க! நெறிகள் நிலைகொள்க! குடி நிலைகொள்க! குருதி நிலைகொள்க! எது நிலைகொள்ளல்? நிலைகொள்ளாமை என்னும் பேரருள் மனிதனுக்கு அளிக்கப்பட்டிருக்கையில் கைகளை பின்னுக்குக் கட்டி தலைகுனிந்து தெய்வக்கொடை அனைத்தையும் மறுத்து இங்கு நோக்கி நின்றிருக்கிறான். உண்மையில் இங்கிருந்து நான் எங்கும் மீள விரும்பவில்லை. கலம் இப்படியே கடலுக்குச் செல்லட்டும் என்றே ஆணையிடுவேன். "நான் நிலைகொள்ள விரும்பவில்லை. இங்கே வேரூன்றி எழுந்த அனைத்தையும் உதறிச்செல்லவே எண்ணுகிறேன்" என்றார்.

படகோட்டி "நாம் செல்லும் ஒரு காலம் வரும், அமைச்சரே" என்றான். அனைத்து அகச்சொற்களும் ஒருகணத்தில் விசையழிய கனகர் நடுங்கும் கைகளுடன் வடங்களைப்

பற்றியபடி நின்றார். பின்னர் கால் தளர்ந்து பின்னகர்ந்து அமர்ந்துகொண்டார். பெருமூச்சுவிட்டபடி மெல்ல தன்னுள் தான் அமைந்தார். நிமிர்ந்து அந்தப் படகோட்டியிடம் "உன் பெயரென்ன?" என்றார். "நான் தென்னிலத்தைச் சார்ந்தவன். நாகர்குலத்தவனாகிய சாத்தன்" என்று அவன் சொன்னான். "தென்னிலத்திலிருந்து இங்கு வந்தவனா?" என்றார். "அல்ல. நெடுங்காலத்துக்கு முன் தென்னிலத்திலிருந்து எனது மூதாதை ஒருவர் இங்கு வந்தார். இங்கே ஒரு பெண்ணை மணந்து மைந்தரை ஈன்றார். அவர் பெயர் சாத்தன். நான் அவர் பெயர் கொண்டவன்" என்று அவன் சொன்னான். "சாத்தன் இளநாகன் என என்னை அழைக்கிறார்கள்."

"சாத்தன்!" என்று அவர் தனக்குள்ளே சொல்லிக்கொண்டார். "உன் நிலத்துக்கு என்றேனும் சென்றிருக்கிறாயா?" என்றார். "இல்லை. எனக்கு நிலமென்று ஒன்றில்லை என்று என் தந்தை சொன்னார். அங்கே தென்னிலம் நீரருந்தும் பசுவின் நாவென கடலில் துழாவி நெளிந்துகொண்டிருக்கிறது என்றார். நிலையற்றது தென்குமரி நிலம். ஒரு நாள் அங்கு செல்லவேண்டும். அங்கு சென்று அமைவதற்காக அல்ல, அங்கிருந்து கிளம்பிச்செல்வதற்காக" என்று சாத்தன் சொன்னான். அவனை கனகர் வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தார். கன்னங்கரிய சிற்றுடல். செதுக்கப்பட்ட முகம். ஒளிரும் கண்கள். இவனை எங்கோ பார்த்திருக்கிறேன். எங்கே கண்டேன்? "உன் மூதாதை ஏன் வடக்கே வந்தார்?" என்று அவர் கேட்டார். அவன் புன்னகைத்தபோது சிறுவன் என ஆனான். "ஏனென்றால் அவர் தெற்கே பிறந்தவர்" என்றான்.

கனகர் தன் அருகே நின்று எவரோ தன்னை கூர்ந்து நோக்கிக்கொண்டிருப்பதாக உணர்ந்தார். "எழுக! எழுக!" என்று அவன் சொன்னான். அக்குரல் தெரிந்ததாக இருக்கவே திடுக்கிட்டு மேலெழுந்து பார்த்தபோது குழலில் சூடிய மயில்பீலியைத்தான் கண்டார். திகைப்புடன் எழுந்து "நீயா? நீ எப்போது இப்படகுக்குள் வந்தாய்?" என்றார். "நான் உங்கள் அருகேதான் நின்றுகொண்டிருந்தேன். உங்களுடன் படகில் நானும் ஏறினேன்..." என்றான். "நான் பார்க்கவில்லையே?" என்றார். "நீங்கள் வேறேதோ கனவிலிருந்தீர்கள்" என்று அவன் சொன்னான். "இதோ முக்தவனம் வந்துவிட்டது. நீங்கள் இங்குதான் இறங்கவேண்டும்."

"முக்தவனம்! அங்கு பாண்டவர்கள் அல்லவா இருக்கிறார்கள்? நான் அங்கு செல்ல எண்ணவில்லை" என்றார் கனகர். "நான் இவையனைத்தையும் உதறிவிட்டுக் கிளம்பியவன். என் இடம் இங்கே இல்லை. அது தெற்கே உள்ளது. கடல் அருகே எழுந்த ஒரு மலை. அதன் உச்சியில் ஒரு சிறு குடில்." அவன் புன்னகைத்தான். "நான் ஏன் உன்னிடம் பேசிக்கொண்டிருக்கிறேன்?" என்றார். "அமைச்சரே!" என்று அழைத்தபோது அக்குரல் மாறுபட்டிருப்பதை உணர்ந்து அவர் திடுக்கிட்டார். அருகே சாத்தன் நின்றிருப்பதை கண்டார். ஒருகணத்துக்குப் பின்புதான் முன்பு வந்தது கனவு என்று தெளிந்தார். "அமைச்சரே!" என்று சாத்தன் மீண்டும் அழைத்தான். "என்ன?" என்றபடி அவர் எழுந்தார்.

"முக்தவனம் வந்திருக்கிறது. தொலைவில் விளக்குகள் தெரிகின்றன" என்றான் சாத்தன். "நமது படகுகள் சென்று சேர்ந்துவிட்டனவா?" என்று கனகர் கேட்டார். "நாம் நமது

படகை மும்மடங்கு பாய்விரித்து முன்னால் செலுத்தி நிரைமுகப்பிற்கு வந்துவிட்டோம். நம்மைத் தொடர்ந்து அரசியரின் படகுகள் வந்துகொண்டிருக்கின்றன" என்று சாத்தன் சொன்னான். "ஆம், நான் துயின்றுவிட்டேன்" என்று கனகர் சொன்னார். மேலாடையால் வாயை துடைத்தார் "எத்தனை பொழுது துயின்றிருப்பேன்?" என்று கேட்டார். "ஆறு நாழிகைப் பொழுது" என்று சாத்தன் சொன்னான். "ஆறு நாழிகையா!" என்றபின் அவர் "அகிபீனாகூட உண்ணவில்லை" என்றார். அகிபீனா இன்றி அத்தனை பொழுது துயின்று எத்தனை நாளாகிறது என்று எண்ணிக்கொண்டார். "இந்தக் காற்று ஆழ்ந்த துயிலை அளிக்கிறது போலும்" என்று சொன்னார். சாத்தன் ஒன்றும் சொல்லவில்லை. அவர் அவனிடம் "உன் பெயர் சாத்தன் என்று சொன்னாயல்லவா?" என்றார். "ஆம்" என்றான். "நான் உன்னை கனவில் கண்டேன்" என்றார். அவன் புன்னகைத்தான்.

ஒரு திடுக்கிடல்போல அவனை திரும்பிப்பார்த்து "உன் முகம்!" என்றார். சாத்தன் தலைவணங்கி "கூறுக, அமைச்சரே!" என்றான். "உன் முகத்தில் வேறேதோ சாயல்" என்றபின் கைவீசி "பித்து... வெறும் மாயை" என்று சொன்னார். அவன் தலைவணங்கி அகன்றான். அவர் படகின் முகப்பில் சென்று நின்று தொலைவில் முக்தவனத்தின் விளக்குகள் செந்நிறச் சுடர்நிரையென நெளிவதை பார்த்துக்கொண்டிருந்தார். வானில் சுழற்றி வீசி எறியப்பட்ட செவ்வரளி மாலைபோல என்று எண்ணிக்கொண்டார். உடனே அவர் புன்னகைத்தார். அத்தகைய ஒப்புமைகள் அவர் உள்ளத்தில் வழக்கமாக எழுவதில்லை. இதை வேறெவ்வாறு சொல்லலாம் என்று அவர் எண்ணினார். செம்மணி மாலையைச் சுழற்றி வீசியதுபோல என்று அதே ஒப்புமையே பிறிதொரு வடிவில் நெஞ்சில் எழுந்தது. சரி, இது

நமக்குரிய வழி அல்ல என்று அவர் தனக்கே சொல்லிக்கொண்டார்.

தன் முகம் புன்னகையில் மலர்ந்திருப்பதை உணர்ந்தார். இப்படி ஓர் உளவிரிவு எங்ஙனம் நிகழ்ந்தது? சென்றுகொண்டிருக்கும் இடம் என்ன என்று அறிந்த பின்னரும்கூட ஏன் இந்த மகிழ்ச்சி? ஆறு நாழிகை ஆழ்ந்து துயின்றதனால் இருக்கலாம். விழிகளும் உள்ளமும் தெளிந்துவிட்டிருக்கின்றன. உடலெங்கும் அனைத்துத் தசைகளும் தளர்ந்திருக்கின்றன. அவர் திரும்பி சாத்தனை நோக்கி கையசைத்தார். அவன் அருகே வந்ததும் "இன்நீர்!" என்றார். அவன் கொண்டுவந்த இளஞ்சூடான இன்நீரை அருந்தி கைகளை விரித்து சோம்பல் முறித்தபின் படகின் முகப்புக்குச் சென்று வடத்தைப் பற்றியபடி நின்றார். அவருடைய படகுக்குப் பின்னால் பெருநிரையென விழி தொடும் தொலைவு வரை ஒளி விளக்குகள் நெளிந்தாட படகுகள் வந்துகொண்டிருந்தன. அனல் உருகி வழிவதுபோல் என்று அவர் எண்ணிக்கொண்டார். அதுவும் முன்பு எண்ணியதுதானா என்ற ஐயம் எழுந்தது. நீர் அனல்கொள்கிறது என இன்னொரு எண்ணம் எழுந்தது.

அதை எங்கு பார்த்தோம் என்று தன் நினைவை துழாவினார். ஒருமுறை உலைக்களமொன்றின் அருகே சென்றுகொண்டிருந்தார். அங்கு இரும்பை உருக்கி கம்பிகளாக நீட்டிக்கொண்டிருந்ததை பார்த்தார். அனல் அவ்வண்ணம் வழிந்தோட முடியுமென்பதை முதன்முறையாக அப்போதுதான் கண்டார். ஒழுகும் அனல். கொழுந்தாடும் நீர். அவர் விழிகளிலிருந்து சித்தத்தை விடுவிக்க முயன்றார். சித்தம் இப்போது எதையோ தவிர்க்கிறது. எதை? முக்தவனத்தின் காவல்மாடத்திலிருந்து முரசுகள் முழங்கத் தொடங்கின.

முக்தவனத்திற்கு உள்ளே இருந்த குடில்களின் நடுவிலிருந்து முரசொலி எழுந்தது. அவருடைய படகு ஒவ்வொரு பாயாக சுருக்கி சுருட்டிக்கொண்டது. பாய்கள் பாய்மரத்தூணில் அறைந்து காற்றில் இழுபட்டுத் துடித்தன. காற்றின் விசையைக்கொண்டே அவற்றைச் சுழற்றி பாய்மரத்தில் கட்டினார்கள். கயிறுகள் தளர்ந்து சுருள்களாகி படகின் பலகைப்பரப்பில் உரசலோசையுடன் விழுந்தன.

அதுவரை கூரிய அம்பென சென்றுகொண்டிருந்த படகு விசையழிந்து இருபுறமும் தள்ளாடியது. யானை மேல் அமர்ந்திருப்பதுபோல் அவர் உடல் அசைந்தது. முக்தவனத்தின் முகப்பில் கங்கைக்குள் மூங்கில்களை அறைந்து அவற்றின்மேல் பலகைகளைப் பரப்பி படகுத்துறை ஒன்றை அமைத்திருந்தார்கள். அதன்மேல் நின்றிருந்த காவலர்கள் எரி சுழற்றி ஆணையிட படகின் முகப்பில் நின்றிருந்த மரக்காவலன் எரியால் மறுமொழி கூறினான். படகு முனைதிரும்பி ஒழுகி துறைமேடை நோக்கி சென்று அங்கிருந்த மூங்கில் வில்களில் முட்டி தடுமாறி விலா ஒதுங்கி பலகைவிளிம்பின் மேல் ஒட்டி நின்றது. சீழ்க்கை ஓசைகளால் பேசிக்கொண்டபடி படகிலிருந்த குகர்கள் வடங்களை துறை நோக்கி வீசினர். அங்கிருந்தவர்கள் அவற்றை எட்டிப் பிடித்து பெருமூங்கிலால் ஆன தறிக்கால்களில் சுற்றி இறுக்கினர். படகு நிலைகொண்டதும் துறையிலிருந்து நீண்ட பலகை வந்து விளிம்பில் பொருந்தியது.

ஏவலர் இருவர் துறைமேடைமேல் ஏறினர். அதன்பின் மேலாடையை இழுத்து சுற்றிக்கொண்டு கனகர் கால்வைத்து அதன்மேலேறிச் சென்று நின்றார். அதுவரை உடலிலிருந்த

அசைவு குருதியை அலைகொள்ளச் செய்திருந்தமையால் நிலைகொண்ட படகுத்துறையிலும் அவர் உடல் தள்ளாடியது. உடல் ஆடுவதுபோல் ஒருகணமும் பின் படகுத்துறை ஆடுவதுபோல் மறுகணமும் தோன்ற தலை சுழன்றது. கண்களை மூடிக்கொண்டபோது உடலுக்குள் குருதியலையை உணர்ந்தார். மூச்சை இழுத்துவிட்டு தன்னுடலை நிலைப்படுத்திக்கொள்ள முயன்றார். அதற்குள் அவர் உடல் ஒரு பக்கமாக பிடித்து தள்ளப்பட்டதுபோல் சரிந்தது. அருகிருந்த ஏவலன் அவரை பற்றிக்கொண்டான். அவர் தள்ளாடியபடி சென்று குமட்டி வாயுமிழத்தொடங்கினார். உடலிலிருந்து முழு நீரும் வெளிவருவதுபோல உமிழ்ந்துகொண்டிருந்தார். பின்னர் எழுந்து நீரை அள்ளி வாயிலிட்டு கொப்பளித்தார். மீண்டும் நீரருந்தியபோது உடல் குமட்டி அதையும் வெளியே தள்ளியது.

படகுத்துறையின் காவலர்தலைவன் வந்து அவர் அருகே நின்றான். அவர் எழுந்ததும் தலைவணங்கினான். “தாங்கள் படகில் வழக்கமாக பயணம் செய்வதில்லை போலும்” என்றான். “நான் பயணமே செய்வதில்லை” என்று அவர் சொன்னார். “படகில் செல்வது எப்போதும் துன்பம் அளிப்பது எனக்கு.” காவலர்தலைவன் “படகு நிலையற்ற அடித்தளம் கொண்டது. நம் உடல் நிலையான மண்ணுக்காகவே படைக்கப்பட்டுள்ளது” என்றான். அவர் அவனைப் பார்த்தபின் தன்னருகே நின்றிருந்த சாத்தனை பார்த்தார். காவலர்தலைவன் “பேரரசியரின் படகு அணுகும்போது கூறுக, அமைச்சரே. இங்கிருந்து பார்த்தால் தெரியவில்லை” என்றான். கனகர் “ஆம்” என்று தலையசைத்தார். காவலர்தலைவன் “நீத்தார்சடங்குகளுக்கு வருகிறார்கள் என்பதனால் முறைமைகள் தேவையில்லை

என்பது மரபு. ஆயினும் வருவது பேரரசி என்பதனால் சில சடங்குகள் இருக்கவேண்டும் என்று ஆணை" என்றான்.

தொலைவில் பானுமதியின் கொடிகொண்ட படகு தெரிந்தது. அதற்கு வலப்பக்கம் காவலர் படகு வந்தது. அவ்விரு படகுகளுக்கும் நடுவே காந்தாரியின் படகை பார்த்தார். "பேரரசியும் அரசியும் சேர்ந்தே வருகிறார்கள்" என்று அவர் கூறினார். "நன்று" என்று காவலன் கூறி கையசைக்க முழவுகள் முழங்கி காந்தாரி கரையணைவதை அறிவிக்கத் தொடங்கின. முரசுகளின் ஓசை இருளில் எழுந்து மேலும் மேலும் முரசுகளால் வாங்கப்பட்டு அகன்று சென்றது. பானுமதியின் படகு மெல்ல பின்னடைந்தது. காந்தாரி முதலில் வருவதனால் இறுதியாக கரையணைய பானுமதி எண்ணுவதை அவர் உணர்ந்தார்.

இருளுக்குள் சாலையில் இருந்து ஒரு சங்கொலி எழுந்தது. கனகர் "எவர் வரவேற்க வருகிறார்கள்?" என்றார். "இளைய பாண்டவர் நகுலன் படித்துறைக்கு வந்து வரவேற்பதாக எனக்கு செய்தி வந்தது" என்று காவலர்தலைவன் சொன்னான். "ஆனால் அவர் பொருட்டு சங்கொலி எழுவதில்லை" என்றார் கனகர். "ஆம், அரசர்களுக்கே சங்கொலி எழும்" என்றபின் காவலர்தலைவன் குழப்பத்துடன் முன்னால் சென்று இடையில் கைவைத்து நோக்கி நின்றான். இருளுக்குள்ளிருந்து மீண்டும் சங்கோசை எழுந்தது. பந்தங்களின் ஒளி அணுகிவர தெரிந்த கொடியைப் பார்த்ததுமே கனகர் "இளைய யாதவர்!" என்றார். "ஆம், அவர்தான்" என்றான் காவலர்தலைவன். "அவர் பேரரசியை வரவேற்க வரவேண்டியதில்லையே? எம்முறைப்படியும் அதற்கான வழி இல்லையே" என்று கனகர்

சொன்னார். "ஆனால் அவர் வந்துகொண்டிருக்கிறார்" என்று காவலர்தலைவன் சொன்னான்.

அவரை வரவேற்பதற்காக காவலர்தலைவன் முன்னால் சென்று நின்றான். அவனுக்கு இருபுறமும் காவலர்கள் அணிவகுத்தனர். கனகர் துவாரகையின் கருடக்கொடியை பந்தங்களின் ஒளியில் பார்த்தார். அதற்குப் பின்னால் வந்த வெண்ணிறப் புரவி மீது இளைய யாதவர் அமர்ந்திருந்தார். அவர் தலையிலணிந்திருந்த பீலியைத்தான் கனகர் முதலில் கண்டார். ஒரு தனி விழி என அது பந்தங்களின் ஒளியில் துலங்கித் தெரிந்தது.

நீர்ச்சுடர் - 19

பகுதி மூன்று : பலிநீர் – 6

கனகர் இளைய யாதவரை விழியசையாது நோக்கிக்கொண்டு நின்றிருந்தார். முன்பு ஒருமுறையும் அவரை அவ்வண்ணம் பார்த்ததில்லை என்று தோன்றியது. பார்க்கும்தோறும் முன்பொருமுறையும் அவரை மெய்யாகவே பார்த்ததில்லை என்ற நம்பிக்கை உறுதிப்பட்டபடி வந்தது. ஒவ்வொரு முறையும் தொலைவில் அவரை பார்க்கையில் முதற்கணம் எழும் அகத்திடுக்கிடல், அவர் அணுகி வருகையில் எழும் சொல்லில்லா உளக்கொந்தளிப்பு, அணுகியபின் மெய்மறைய உளமழிய இன்மையென்றே உணரும் இருப்பு, அகன்றபின் விழிக்குள் எஞ்சும் பாவையென அவரை மீண்டும் காணுதல், எண்ணம் தொடுந்தோறும் கரையும் அவ்விழிப் பாவையை உள்ளத்தில் அழியாது சேர்த்து வைத்துக்கொள்ளும்

பொருட்டு எழும் பதற்றம், பின்பு அவரை பார்க்கவே இல்லை எனும் ஏக்கம், பிறிதொருமுறை பார்த்தாகவேண்டும் எனும் தவிப்பு, பார்க்கவே முடியாதோ என்னும் துயரம்... ஒவ்வொருமுறையும் அது மலைப்பாறை உருண்டு வந்து நீரில் விழுவதுபோன்ற ஒரு கொந்தளிப்பு. அறிந்த எந்த இன்பத்துடனும் அதற்கு தொடர்பில்லை. ஆயினும் அறிந்த இன்பங்களில் எல்லாம் அதுவே தலையாயது.

தொலைவில் இளஞ்சிறுவனைப்போல் தெரிபவர் அணுகுந்தோறும் முதியவராகி, அருகே தந்தையுருவென நின்று, அகல்கையில் மீண்டும் இளமைந்தனாகி, நினைவில் குழவியென எஞ்சுவது எவ்வண்ணம்? இதோ இப்போதுகூட அத்தொலைவில் புரவிமேல் அமர்ந்தபடி சிறுவனாகவே தெரிகிறார். நலுங்கும் பீலி. காற்றில் உலையும் மஞ்சள் பட்டாடை. ஒளிகொண்ட கரிய சிற்றுடல். ஒவ்வொன்றையும் அக்கணம் முதன்முறை பார்ப்பதுபோல் உவகையுடன் தொட்டுத் தொட்டு அசையும் விரிந்த கரிய விழிகளா, ஒவ்வொன்றுக்கும் அணுக்கமானவன் என்று எழும் அந்த புன்னகையா, எக்கணமும் புரவியிலிருந்து இறங்கி விளையாடக்கூடும் எனத் தோன்றும் உடல் அசைவுகளா? அவரை இளமைந்தனாக்குவது என்னுள் நான் கொண்டிருக்கும் எண்ணங்களா? பாடிப்பாடி பதிந்த பல்லாயிரம் பாடல்களா?

வாழும்போதே பாடல்தலைவன். உடல்கொண்ட கருவறைத் தெய்வம். அல்லது பிறிதொன்று. எந்த வழியிலும் அவனை அணுகிவிடமுடியாதென்பது. எவ்வகையிலும் புரிந்துகொள்ள முடியாதென்பது. ஒது கொலைவாளின் கூரழகு. பாம்பும் எரியும் பெருநீரும் கொண்ட பேரழகு. புலிக்குட்டி ஒன்றைக் கண்ட நினைவை அவர் அடைந்தார். அது ஓர் அழகிய

மலர்மொட்டு போலிருந்தது. மெல்லிதழ்போல் உடல். ஒளிரும் மென்மை. மலர்முள் போன்ற உகிர்கள். வெண்ணிற ஒளிகொண்ட இணைஎயிறுகள். நோக்க நோக்க குழைந்தது நெஞ்சு. தொடத்தொட அகம் பெருகியது. ஆனால் இது குருதிவெறிகொண்ட கொலைவிலங்கு என ஆழம் தவித்தது. அந்தத் தவிப்பே அதை பேரழகு கொண்டதாக ஆக்கியது. நோக்க நோக்க, வருட வருட, கொஞ்சக்கொஞ்ச தீராததாக மாற்றியது.

இளைய யாதவரின் புரவி நான்கு பந்தங்கள் அமைந்த படகுமுற்றத்தை அடைந்தது. சற்றே களைத்த கண்களும் கலைந்து தோளில் சரிந்த குழல்கற்றைகளுமாக அவர் போர்க்களம் ஒன்றிலிருந்து திரும்பி வருவது போலிருந்தார். புரவியிலிருந்து கால்சுழற்றி இறங்கி அவர் நின்றபோது படகுத்துறையின் காவலர்தலைவன் அருகணைந்து வணங்கி முகமனுரைத்தான். பிற வீரர்கள் வாள் தாழ்த்தி வணங்கினர். இளைய யாதவர் துறைக்காவல் தலைவனின் தோளில் கைவைத்து நகையாட்டென ஏதோ கூற அவன் வெண்பற்கள் தெரிய உரக்க நகைத்தான். சூழ்ந்திருந்த படைவீரர்களும் முறைமை மறந்து நகைத்தனர். அவர் ஒவ்வொருவரையும் அறிந்திருந்தார். ஒவ்வொருவரிடமும் ஒரு சொல்லேனும் உரைத்தார். காவலர்தலைவன் அவரிடம் ஏதோ கூற அவர் மறுத்துவிட்டு படகுமேடை நோக்கி சென்றார்.

அவருடன் வந்த வீரர்கள் அணிநிரைகொண்டனர். அவர்களுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த சிறிய குழுவிலிருந்து கொம்போசை எழுந்தது. தொடர்ந்து இந்திரப்பிரஸ்தத்தின் மின்கொடி பறக்கும் கம்பத்தை ஏந்திய வீரன் புரவியில் வந்தான். அவனுக்குப் பின்னால் நகுலன்

முதிய புரவி மேல் அமர்ந்திருந்தான். காவலர்தலைவன் இளைய யாதவருக்கு தலைவணங்கிவிட்டு முன்னால் சென்று நகுலனை வணங்கி வரவேற்றான். நகுலனுக்குப் பின்னால் வந்த புரவிவீரர்களின் நிரையைத் தொடர்ந்து ஒளிச்சரடென தேர்களும் மூடுவண்டிகளும் காவலர்புரவிகளுடன் வருவது தெரிந்தது. அஸ்தினபுரியின் அமுதகலக்கொடி கொண்ட வீரன் ஒருவன் முகப்பில் வருவதை கனகர் கண்டார். நகுலன் புரவியிலிருந்து இறங்கி முகமன்களை உரைத்தபடி இளைய யாதவர் அருகே வந்து நிற்க இளைய யாதவரின் விழிகள் சூழலைத் துழாவி கனகரை பார்த்தன.

கனகர் அவருடைய இனிய புன்னகையை பார்த்தார். உளம் எரிய இரு கைகளையும் விரல் சுருட்டி அழுந்தப்பிடித்து பற்களை கடித்தபடி விழிகளை தாழ்த்திக்கொண்டார். காவலர்தலைவன் அருகே வந்து "இளைய யாதவர் அழைக்கிறார், வருக அமைச்சரே" என்றான். உடலுக்குள் உயிர் இரும்புக்கட்டியென மாறிவிட்டதுபோல் கனகர் உணர்ந்தார். "வருக, அமைச்சரே! இது அரசரின் ஆணை" என்று காவலர்தலைவன் மீண்டும் சொன்னான். இருமுறை இழுத்து மூச்சுவிட்டபோது கனகர் மெல்ல உடல் தளர்ந்தார். "ஆம்" என்றபடி இளைய யாதவரின் அருகே சென்றார். ஒவ்வொரு காலடியும் எடையுடன் தூக்கி வைக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு அடியின் வழியாகவும் உள்ளத்தின் நெடுந்தொலைவை கடக்க வேண்டியிருந்தது. அருகணைந்து நின்று முகமன் உரைக்காமல் தலைகுனிந்து நிலம் நோக்கினார். இளைய யாதவர் "வணங்குகிறேன், அமைச்சரே" என்றார். கனகர் அதற்கும் மறுமொழி கூறவில்லை.

இளைய யாதவர் “தங்களை இங்கு எதிர்பார்க்கவில்லை. அஸ்தினபுரியிலிருந்து தங்களை பிரித்துப்பார்க்க இயலவில்லை” என புன்னகைத்து “தாங்கள் அரசியுடன் வந்தது ஒருவகையில் நன்று” என்றபின் இயல்பாக கைநீட்டி கனகரை தொட வர தன் உடலை விலக்கி கனகர் பின்னடைந்தார். சினத்துடன் நகுலன் ஏதோ சொல்ல முன்னெழ தன் உடற்பாவனையினால் அதை விலக்கி இளைய யாதவர் சிற்றொலியெழ நகைத்து “நன்று, சினம் கொண்டிருக்கிறீர்கள். தங்கள் அரசரின் பொருட்டு தாங்கள் அவ்வாறு சினம் கொள்வது இயல்பானதே” என்றார். கனகர் மூச்சை விழுங்கி நெஞ்சை நிரப்பி, தன் உடலை உந்தி பின்னெடுக்க முனைந்தார். அது அங்கு கற்பாறையென மண்ணில் புதைந்ததுபோல் நின்றிருந்தது. இளைய யாதவர் காவலர்தலைவனிடம் திரும்பி “முறைமைகள் நிகழ்க!” என்றார். நகுலன் பெருமூச்சுவிட்டான்.

“பேரரசி அணுகிக்கொண்டிருக்கிறார்கள்” என்று காவலர்தலைவன் சொன்னான். இளைய யாதவர் “அரச முறைமைகள் குறைவிலாது நிகழட்டும்” என்று சொல்லி காலடி எடுத்து முன்னால் வைக்க உரத்த குரலில் கனகர் “நில்லுங்கள்!” என்றார். இளைய யாதவர் நிற்க நகுலன் கைநீட்டியபடி கனகரை நோக்கி வந்தான். இளைய யாதவர் இடக்கையால் அவன் தோளைத்தொட்டு தடுத்தார். கனகர் நடுங்கி எழுந்த உரத்த குரலில் “அரசே, நான் எளிய அந்தணன். அறமுணர்ந்தவன் அல்ல. அரசுசூழ்தல் அறிந்தவனும் அல்ல. அரண்மனைக் கடையூழியன். வாழ்நாளெல்லாம் அடிபணிதல், ஆணைபேணுதல் அன்றி வேறேதும் அறியாது வாழ்ந்து இன்று கீழ்மையன்றி எதுவும் எஞ்சாமல் இங்கு நின்றிருக்கிறேன். எனினும் இதோ இதை சொல்லத் துணிகிறேன். ஏனென்றால் இப்புவியில் வாழும் எக்கடையனை விடவும் கடையனாக

உங்களை இத்தருணத்தில் உணர்கிறேன். மானுடரை வைத்தாடும் இழிந்தோன் நீங்கள். இதோ இக்குருதி அனைத்திற்கும் பொறுப்பேற்கவேண்டிய கொடுந்தெய்வம்!" என்றார்.

"நெஞ்சில் இரக்கமற்றவனை கடையன் என்கின்றன நூல்கள். அறம் மீறியவன் அவன். கால்தூளியென கருதப்படத்தக்கவன். கற்றறிந்தபின் அளியும் அறமும் அல்லன செய்பவனோ கடையருக்கும் கடையன். அனைத்தும் அறிந்தும் அறிவை வெறும் படைக்கலமாகக் கொண்டு கீழ்மை புரிந்து வென்று தருக்கி இங்கே நின்றிருக்கும் நீங்கள் இப்புவி கண்டவரில் கீழோன். இதை உங்கள் முகம் நோக்கி சொல்லிவிட்டேன். இனி இக்கங்கையில் குதித்து உயிர் துறந்தால் நிறைவுறுவேன்" என்றார் கனகர். இளைய யாதவரின் விழிகளில் எந்த உணர்வுமாற்றமும் உருவாகவில்லை. இன்சொல் கேட்கும் சிறுவனின் மென்நகைப்பும் வியப்புமாக அவை மலர்ந்திருந்தன. அவ்விழிகள் அவரை திகைக்க வைத்தன. வரைந்து ஒட்டப்பட்ட இரு அழகிய ஓவிய வடிவங்கள். அவற்றுக்குப் பின்னால் ஓர் ஆத்மா இல்லை. அவை காட்டும் உணர்வுகள் எவ்வகையிலும் அகமுறைவோனால் அடையப்பட்டவை அல்ல. அவை வெறும் கைத்திறன் வெளிப்பாடுகள். இரு வைரங்கள். வைரங்களின் ஒளிபோல் பொருளற்ற பிறிதொன்றுண்டா என்ன?

கனகர் தன் சினம் முற்றடங்கிவிட்டிருப்பதை உணர்ந்தார். தன் சினத்தை விரைவில் இழந்ததைக் குறித்த உணர்வை அடைந்தபோது மீண்டும் சீற்றம் கொண்டார். "இதோ என் தலைவனின் ஏவலனென நான் இங்கு நின்றிருக்கிறேன். அவனை அறம் மீறி கொன்றுவீழ்த்தியவர் நீங்கள்.

பிதாமகர்களையும் ஆசிரியர்களையும் களத்தில் வீழ்த்தியவர் நீங்கள். அவர்கள் எவரையும் நீங்கள் வெல்லவில்லை என்று உணர்க! அவர்களின் குரலென நான் இங்கு நின்றிருக்கிறேன். இன்னும் பல்லாயிரவர் இப்பாரதவர்ஷத்தில் பிறந்து அவர்களின் பெயர் சொல்வார்கள். வழிவழியாக எழுவார்கள். ஆயிரம் ஆண்டுகள், பல்லாயிரம் ஆண்டுகள், பல்லாயிரம் பல்லாயிரம் ஆண்டுகள். அவர்கள் சொல்லில் அழியாமல் வாழ்வார்கள். இன்று அவன் பொருட்டு அறம் கூற, அவன் பொருட்டு தெய்வங்களுக்கே தீச்சொல்லிட, அவனை எண்ணி விழிநீர்விட, அவனுக்காக சங்கறுத்து உங்கள் முற்றங்களில் விழ, நான் எழுந்துள்ளேன். என்னைப்போல் மானுடர் வந்துகொண்டேதான் இருப்பார்கள். உங்கள் அரசுமுற்றத்தில் ஒருபோதும் பழிச்சொல் ஒழியாது. உங்கள் அரியணைக்கால்களில் ஒருபோதும் குருதி மறையாது" என்று கனகர் கூவினார். அவர் தொண்டை அடைத்தது. குரல் உடைந்து பிறிதொன்றாக ஒலித்தது. "களம்வீழ்பவர்கள் சொல்லில் எழுவது மரபு. அறம் பிழைத்து களம் வீழ்த்தப்பட்டவர்கள் ஆயிரம் மடங்கென சொல்லில் பேருருக்கொள்கிறார்கள் என்று அறிக! நீங்கள் ஒருபோதும் என் தலைவனை வீழ்த்தவில்லை. அவன் இந்த மண்ணில் என்றுமிருப்பான். மாவலி அழுத்தி செலுத்தப்பட்ட மண் இது. அங்கிருந்து அவன் முளைவிட்டெழுவான். ஒருபோதும் அழியமாட்டான்!"

இளைய யாதவர் முகத்தில் எந்த மாறுதலும் ஏற்படவில்லை. நகுலன் தளர்ந்ததுபோல் கைகள் இருபுறமும் தழைய, தோள் குழைய, பின்னடைந்தான். சூழ்ந்திருந்த அத்தனை வீரர்களும் வெறித்த நோக்குடன் கனகரை நோக்கிக்கொண்டிருந்தனர். கனகர் மூச்சு தளர்ந்தார். வலிமிக்க கேவல் என, தனக்குத்தான்

என ஒலித்த சொற்களால் "என்னை நீங்கள் கொல்லலாம். அன்றி என் முகத்தில் கீழ்க்குடியினனென தீச்சுட்டு வடுபொறித்து இழிசினரிடம் விற்றுவிடலாம். எனினும் சித்தம் உள்ள கணம் வரை இதை சொல்லிக்கொண்டிருப்பேன். முற்றழிக! உங்கள் குலம் முற்றழிக! உங்கள் குருதி ஒருதுளியேனும் இப்புவியில் எஞ்சாதழிக! இது அந்தணன் சொல்! வேதமொன்று இப்புவியில் நிகழ்ந்ததென்றால் உளம்தொட்டு அந்தணன் விடும் சொல்லும் நிகழ்ந்தாகவேண்டும்! அழிக! முற்றழிக!" என்றார். நடுக்கு தாளாது அவர் பின்னடைந்தார். விழப்போன அவரை எவரும் பற்ற வரவில்லை. உடல் உலைந்தபின் அவர் தன்னை நிலைப்படுத்திக்கொண்டார்.

இளைய யாதவர் "அச்சொல் இங்கு திகழும், அந்தணரே" என்றார். "அதுவே அறம் பிழைத்தார்க்கு என்றும் படிப்பினை என்று ஆகுக!" அவர் முகத்தில் துயரிலாச் சிரிப்பே இருந்தது. "அத்தீச்சொல்லை உங்கள் அனைவருக்கும்முன் நானே எனக்கு விடுத்துக்கொண்டுவிட்டேன்." கனகர் விழிநீர் வழிய கால்கள் மடிந்து நிலத்தில் அமர்ந்து முழங்கால்களில் தலைவைத்து விம்மி அழத்தொடங்கினார். இளைய யாதவர் அவரை ஒருகணம் நோக்கிவிட்டு கங்கையைப் பார்த்து "அரசியர் அணுகிவிட்டனர். பாண்டவரே, வருக!" என்றபின் நகுலனின் தோளை ஒருமுறை தொட்டுவிட்டு முன்னால் நடந்தார். கனகரைச் சூழ்ந்திருந்த வீரர்களும் உடன் சென்றனர். நதிநீர் பாறையை சுழிசுற்றிச் செல்வதுபோல அவர்கள் அவரை அணுகாது தவிர்த்து அகன்றனர்.

கனகர் மீண்டும் தன்னை உணர்ந்தபோது அவரைச் சுற்றி எவரும் இருக்கவில்லை. தரையில் கையை ஊன்றி உடலைத்

தூக்கி எழுந்து நின்று நோக்கியபோது அனைவரும் அகன்று சென்றுவிட்டிருந்தனர். படித்துறையில் கொம்புகள் ஒலித்தன. உடனெழுந்து முரசுகள் முழங்கின. ஒளிச்சுழல்கள் வழியாக ஆணைகள் செல்ல தொலைவில் காந்தாரியின் அரசப்படகு மறுசொல் எழுப்பியபடி அலைகளின்மேல் எழுந்தமைந்து அணுகி வந்தது. அவர் பிறிதெங்கோ நிகழும் ஒன்றை பார்ப்பதுபோல் நின்றார். அக்கூட்டத்திலிருந்து உதிர்ந்து வேறெங்கோ சென்றுவிட்டதுபோல் உணர்ந்தார். பந்தங்களின் ஒளியில் கீழிருந்து பெரிய வடம் சீறிப் பறக்கும் நாகமென எழுந்து படித்துறைமேல் விழுவதைக் கண்டார். அந்த ஒலியை அவர் உடல் விதிர்ப்புடன் கேட்டது. படகுத்துறையில் ஆணைகள் ஒலித்தன. காந்தாரியின் படகு குலுங்கியபடி அணுகி படித்துறையை முட்டி நின்றது.

படகிலிருந்து கொம்பு முழங்கியது. அதிலிருந்து சேடியர் இறங்கி படகுமேடை மேல் வந்தனர். நகுலனும் இளைய யாதவரும் படகுமேடையில் கைகூப்பியபடி நிற்க சேடியர் தாலங்களுடன் இரு நிரைகளாகி விரிந்தகன்றனர். நிமித்தப்பெண்டு அறிவிப்பொலிக்க சத்யசேனையின் தோள்பற்றியபடி மெல்ல காந்தாரி பலகையினூடாக படித்துறைக்கு மேல் வந்தாள். இளைய யாதவர் குனிந்து வணங்கி முகமன் உரைப்பதை கனகர் கண்டார். காந்தாரியின் முகம் பந்தங்களின் ஒளியில் அருகிலெனத் தெரிந்தது. அதில் எந்த உணர்வும் வெளிப்படவில்லை. இளைய யாதவர் கூறிய முகமனுக்கு மறுமொழியாக அவள் கூறிய சொற்களைக்கூட உதடசைவிலிருந்து கேட்டுவிடலாம் என்று தோன்றியது. கைகூப்பியபடி அவள் நகுலனை அடைந்தாள். நகுலன் குனிந்து அவள் கால்களைத் தொட்டு வணங்க அவன் தலைக்குமேல் கைவைத்து அவள் வாழ்த்துரைத்தாள்.

தொடர்ந்து இணையரசியர் இருவராக நடந்து பலகையினூடாக படித்துறைக்கு மேல் வந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் இளைய யாதவரை அணுகி அவர் உரைத்த முகமன் சொற்களைக் கேட்டு மறுவாழ்த்துரைத்து அப்பால் சென்றனர். அவர்கள் ஒவ்வொருவரையும் நகுலன் கால்தொட்டு வணங்கினான். அவர்களும் காந்தாரியைப் போலவே வாழ்த்துச்சொல் உரைத்தனர். காந்தாரி கைகூப்பியபடியே நடந்து துறைமுற்றத்துக்கு வந்தாள். அவள் செல்ல வேண்டிய தேர் வந்து நின்றது. அதை காத்துவந்த புரவியில் இருந்து இரு வீரர்கள் இறங்கி தலைவணங்கினர். மூவர் மட்டுமே அமரக்கூடிய சிறு தேரில் முதலில் சேடி ஏறிக்கொள்ள சத்யசேனை காந்தாரி ஏற உதவினாள். காந்தாரி ஏறி அமர்ந்துகொண்டதும் சத்யசேனை அவளுக்கு வலப்புறம் அமர்ந்தாள். தேர் அவர்கள் எடையால் சற்று அழுந்தி உலைந்தது. சத்யசேனையின் கையசைவில் பாகன் தலைவணங்கி புரவியை சவுக்கினால் தட்ட தேர் முடுக்கு கொண்டு குளம்படி ஓசைகளுடன் மரப்பலகையிட்ட பாதையில் சகடங்கள் ஒலிக்க கடந்து சென்றது.

அரசியரும் தேர்களில் ஏறி அகன்றனர். பிற அரசியர் ஊர்ந்த படகுகள் ஒவ்வொன்றாக வரத்தொடங்கின. படகுகள் வந்து கரையணைந்து நிற்க அவற்றிலிருந்து கௌரவ இளவரசியர் நால்வராக இறங்கி படலை வழியாக துறைமேடை மேல் ஏறினர். இளைய யாதவர் அவர்களையும் கைகூப்பி முகமன் உரைத்து வரவேற்றார். அவர்களில் பலர் இளைய யாதவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. நிலம் நோக்கியவர்களாக தளர்ந்து அவரைக் கடந்து சென்றனர். சிலர் முகம் தாழ்த்தி வசைச்சொற்களையும் பழிச்சொற்களையும் உரைப்பதுபோல் தோன்றியது. கூப்பிய கைகளுடன் இளைய யாதவர்

அசையாமல் நின்றார். அவர் புன்னகை மாறாமலிருப்பதை தொலைவிலேயே முகத்தின் பக்கவாட்டுத்தோற்றமே காட்டியது.

எண்ணியிராக் கணம் ஓர் இளவரசி இரு கைகளையும் விரித்து வெறிகொண்டவள்போல் வீறிட்டபடி இளைய யாதவரை நோக்கி வந்தாள். பிற இளவரசியர் இருவர் அவளை பற்றிக்கொண்டனர். "பழிகொண்டவனே! அறப்பழி சூடியவனே! கீழ்மகனே! குருதியுண்ணும் கீழ்மகனே!" என்று அவள் வெறியுடன் கூவினாள். உடல் துள்ள, நரம்புகள் தெறிக்க தொண்டை புடைத்திருக்க, பற்கள் வெறித்துத் தெரிய கூச்சலிட்டுத் துடித்து அறுபட்டதுபோல் விழுந்து மயங்கினாள். அவளை அவர்கள் இழுத்துச் சென்றனர். அதுவரை ஓசையில்லாத நிரையாக வந்துகொண்டிருந்த இளவரசியரிடமிருந்து சொல்லெனத் திரளாத முழக்கமொன்று எழத்தொடங்கியது. அக்கூக்குரலின் எதிரொலிக் கார்வையென இளவரசியரின் படகுகளிலும் ஓசை எழுந்தது. மேலும் மேலும் படகுகள் வந்தணைந்து இளவரசியர் இறங்கி படித்துறையில் ஏறி கடந்து செல்ல அந்த மாபெரும் பழிச்சொல் பெருமுழக்கமென்றாகி சூழ்ந்துநின்றது.

கொடுந்தெய்வம் ஒன்றைக் கண்டு அஞ்சியவர்கள்போல அங்கிருந்த காவலர்தலைவனும் படைவீரனும் மெல்ல மெல்ல பின்னடைந்தனர். பின்நிரையினர் படகுமுற்றத்தின் விளிம்புவரை வந்து காட்டுக்குள் நுழைந்துவிட்டனர். இளைய யாதவருக்கருகே நின்றிருந்த நகுலனும் காற்றில் மூழ்கி அகன்று செல்பவன்போல் இளைய யாதவரிடமிருந்து சென்றான். முதலில் படைவீரர்கள் நடுவே வந்து நின்றான். சற்று நேரத்தில் படைவீரர்களுக்குள் புகுந்து முற்றாகவே

மறைந்துகொண்டான். கூப்பிய கைகளுடன் இளைய யாதவர் மட்டும் படித்துறையில் தனித்து நின்றார். கங்கையின் குளிர்ந்த காற்றுபோல அவரைச் சூழ்ந்திருந்தது அப்பழிச்சொல் என்று தோன்றியது. அவரது ஆடையை உடலைச்சுற்றி பறக்கச் செய்தது. மேலாடை நுனியை நாகநாவென எழுந்து உலையச் செய்தது. குழல்கற்றைகளை குலைந்து உலையச் செய்தது.

கனகர் இளைய யாதவர் முகத்தை பார்க்க விழைந்தார். அதில் அதே மாறாத புன்னகைதான் இருக்கும் என்று எண்ணினார். விழிகளில் இளமைந்தருக்குரிய ஒளி நிறைந்திருக்கும். இறுதியாக பானுமதியின் படகு வந்து நின்றபோது கனகர் நெஞ்சத்துடிப்பை உணர்ந்தார். பானுமதி பலகையினூடாக கைகளைக் கூப்பியபடி வர அவளுக்குப் பின்னால் அசலை வந்தாள். இருவரும் இளைய யாதவரை அணுகியதும் நின்றனர். கைகூப்பியபடி நின்ற இளைய யாதவர் உரைத்த முகமனுக்கு பானுமதி மாற்றுரை சொன்னாள். பின்னர் மேலாடையால் தன் முகத்தை இழுத்து மூடியபின் அவரைக் கடந்து அப்பால் சென்றாள். அவளைப் போலவே நின்று ஒரு சொல்லில் மறுமொழி உரைத்து மேலாடையை இழுத்து முகத்திட்டு அசலை கடந்து சென்றாள். அவர்களிருவருக்கும் பின்னால் வந்த நான்கு இளவரசியர் சொல்லடங்கி அமைதி கொண்டனர்.

இளவரசியர் நிரை அத்துடன் அமைதியாகியது. ஓசை இல்லாத ஒழுக்கு எனச் சென்றது. அங்கு வந்து நின்றிருந்த வண்டிகளிலும் தேர்களிலும் ஏறிக்கொண்டு அரசியரும் இளவரசியரும் அகன்றனர். அவர்களை இறக்கிவிட்ட படகுகள் மீண்டும் கங்கைக்குள் மீண்டு ஒழுக்கில் ஏறி அப்பால் சென்று கரையோர மரங்களை அணுகி கட்டப்பட்டன. படித்துறை

ஒழிந்தது. இளைய யாதவர் திரும்பி எவரையும் பார்க்காமல் நடந்து தன் புரவி நோக்கி சென்றார். அப்போதும் அவர் கைகள் நெஞ்சில் கூப்பியிருந்தன. அந்த முகத்தை அங்கு நின்று கனகர் நோக்கிக்கொண்டிருந்தார். அதே புன்னகை, அவ்வண்ணமே மலர்ந்த விழிகள். அவர் உடல் மெய்ப்பு கொண்டது. கண்களிலிருந்து நீர் வழியத்தொடங்கியது. தன் இரு கைகளையும் நெஞ்சோடு கூப்பி ஆலய முற்றத்தில் கருவறைச் சிலை நோக்கி நிற்பவர்போல் நின்றார்.

இளைய யாதவர் தன் புரவியிலேறிக்கொள்ள முன்னால் சென்ற வீரன் சங்கொலி எழுப்பினான். அவர் சென்று மறைந்த பின்னர் நகுலன் தன் புரவியில் ஏறிக்கொண்டான். அவர்களும் சென்று இருளுக்குள் மறைந்தனர். அதுவரை அங்கிருந்த ஒளி மறைந்து துறைமுற்றம் இருட்டானதுபோல் தோன்றியது. கனகர் அந்த முற்றத்தை நோக்கியபடி அங்கு நின்றிருந்தார். ஓரடி வைத்து முன் நகரக்கூட தன்னால் இயலாதென்று தோன்றியது. பின்னர் திரும்பி கங்கையை பார்த்தார். இருண்ட நீர்ப்பரப்பின்மேல் அலைகளின் வளைவுகளில் ஒளி இருந்தது. நோக்க நோக்க அது தெளிவு கொண்டது. உள்ளம் தெளிந்தவர்போல கனகர் கங்கை நோக்கி நடந்தார். படித்துறையில் அலைந்தாடிக்கொண்டிருந்த சிறுபடகொன்றில் சாத்தன் அமர்ந்திருப்பதை கண்டார். அருகணைந்து "சாத்தரே, என்னை அலைகளுக்கு மேல் கொண்டு செல்க!" என்று ஆணையிட்டார்.

நீர்ச்சுடர் - 20

பகுதி நான்கு : கழுநீர்க் கரை – 1

நகுலன் தன் புரவியில் ஏறிக்கொண்டு இளவரசியரின் தேர்நிரையின் இறுதியாகச் சென்ற தேருக்குப் பின்னால் சீரான விசையில் சென்றான். அவன் புரவியின் ஒரு கால் முறிந்து கட்டுபோடப்பட்டிருந்தது. ஆகவே அதன் நடையின் தாளத்தில் ஒரு பிழை இருந்தது. அப்பிழையை அவன் உள்ளம் மீட்டி மீட்டி அதை தன் அகத்தாளமாக ஆக்கிக்கொண்டது. அந்தப் பிழைக்காலடியின் ஓசை ஒரு தொடுகைபோல, ஒரு தனிச்சொல்போல ஒலித்துக்கொண்டிருந்தது. சீரான தாளங்களின் இரக்கமற்ற முழுமையிலிருந்து அவனை அது விலக்கியது. ஒன்று இரண்டு ஒன்று இரண்டு எனச் சென்று இல்லை என ஒலித்து மீண்டும் ஒன்று இரண்டு ஒன்று இரண்டு. மீண்டும் ஒரு இல்லை. இல்லை இல்லை இல்லை.

கடிவாளத்தை இடக்கையால் பிடித்து, வலக்கையை உயிரிழந்ததுபோல் தொங்கவிட்டு, தோள்கள் தொய்ய, துயிலில் என தலை எடைகொண்டு தழைய, அவன் புரவி மேல் அமர்ந்திருந்தான். புரவிச்சகடங்கள் அச்சுகளில் மோதி ஒலிக்கும் ஓசையும், பாதைப்பலகைப்பரப்புகளின் பொருத்துக்களிலும் விடவுகளிலும் அவை விழுந்தெழுந்து செல்லும் முழக்கமும் அவனைச் சூழ்ந்திருந்தன. அவன் புரவியில் இருந்தபடியே துயில்கொண்டு முன்னால் சரிந்து அவ்வசைவால் விழித்துக்கொண்டு சூழ நோக்கினான். அந்த ஒரு சில கணங்களுக்குள்ளாகவே தனக்குள் குருக்ஷேத்ரத்தின் கொடும்போர் ஓர் அலையென வந்தறைந்து கொந்தளித்து கொப்பளித்து அள்ளிச் சுழற்றி வீசிச் சென்றுவிட்டிருப்பதை உணர்ந்தான்.

அக்கனவிற்குள் வலிமுனகல்களாகவும், சாவுக்குரல்களாகவும், படைக்கல ஓசையாகவும், சகடங்களின் முழக்கமாகவும் கேட்டுக்கொண்டிருந்த ஒலிக்கொந்தளிப்பு இந்தத் தேர்நிரைகளின் ஒலிகள்தானா? இவ்வொலியிலிருந்து எப்படி அப்பேரொலியை உள்ளம் சென்றடைந்தது? அவன் பெருமூச்சுவிட்டு தன் குழலை அள்ளிச் சுழற்றி தோளுக்குப் பின்னால் அமைத்தான். ஒருகணம் கண்களை மூடியபோதே அந்த ஒலி குருக்ஷேத்ரப் பேரொலியாக மாறியது. அவன் கண்களைத் திறந்து அந்தச் சகட ஓசைகளை கேட்டான். கண்களால் சகடங்களைப் பார்த்தபோதும் அந்த ஓசை போரொலியென்றே தோன்றியது. அவன் விழிகளும் உள்ளமும் அது வேறு ஒலி என உணர்ந்தாலும் உடல் உச்சம்கொண்டு பதறியது. கைகள் படைக்கலம் நாடின.

போர் முடிந்த பின்னரும் அவன் அகம் போரிலிருந்தே மீளவில்லை. பாண்டவர்களில் யுதிஷ்டிரன் மட்டுமே போருக்கு வெளியே வந்துவிட்டிருந்தார். ஏனெனில் அவர் போருக்குள் செல்லவே இல்லை. பிற அனைவருமே போருக்குரிய உளநிலையில்தான் எப்போதும் இருந்தனர். உள்ளத்தைவிட உடலே மிகவும் பழகிவிட்டிருந்தது. உடலெங்கும் முளைத்த பலநூறு கண்கள் அப்போதும் எச்சரிக்கையுடன் விழித்து காத்திருந்தன. மரக்கிளைகளுக்குக் கீழே அமர்ந்திருக்கையில் ஒரு சருகு உதிர்ந்தால் அக்கணமே உடல் விதிர்த்து திரும்பி அதை அணுகும் படைக்கலமென எதிர்கொண்டது. அருகே வரும் வண்டை நோக்கி அம்பெடுக்க அறியாது கை சென்றது. சுள்ளிகள் ஒடியும் ஒலிகூட உடலை நாண் இறுகிய வில்லென துடிப்பு கொள்ளச் செய்தது.

படைக்கலக்கல்வியில் எப்போதும் அடைந்தது என்றாலும் குருக்ஷேத்ரத்தை நோக்கி செல்கையில் ஒவ்வொரு நாளுமென பயின்று பயின்று உடலில் ஏற்றுக்கொண்டது அவ்விழிப்பு. குருக்ஷேத்ரத்துக்கான அழைப்பு எழுந்ததுமே அத்தனை போர்வீரர்களும் படைக்கலநிலைக்குச் சென்று மேலும் பயிலத் தொடங்கினர். முதலில் கை படைக்கலத்தை அறியவேண்டும். பின்னர் உள்ளம் அதை ஏந்த வேண்டும். நாளடைவில் அகம் அதை பெற்றுக்கொள்ளும். அதன் பின்னரே உடல் அதன் ஒரு பகுதியாக ஆகும். பின்னர் உடலே ஒரு படைக்கலம் என்றாகும். அதன் பின்னர் உள்ளம் மேலே பறக்கும் பருந்தெனச் செல்ல கீழே அதன் நிழல் என உடல் செல்லும். போரிடுவது உடல், வெல்வது உள்ளம்.

வெள்ளம் வழிந்த ஆற்றுப்படுகையென இன்று என் உடல் இருக்கிறது. பல்லாயிரம் குமிழிகள் அதில் முளைத்து வெடித்துக்கொண்டிருக்கின்றன. நோக்கித் திகைக்கும், தேடித் தவிக்கும் கண்கள் அவை. அக்கண்கள் ஒவ்வொன்றாக மூடவேண்டும். மீண்டும் உலர்ந்து அசைவிழந்து இது உடல் மட்டுமே என்றாக வேண்டும். அதுவரை குருக்ஷேத்ரப் போரிலிருந்து மீள இயலாது. விழி மூடினால் கேட்கும் காற்றோசையும் போரொலியாகிறது. இருளில் துயில்கையில் எழும் மெல்லிய ஓசைகூட ஆழத்தில் முரசொலி என்று பெருகுகிறது. தான் மட்டும் அவ்வாறாகிவிட்டிருக்கிறோமா என்ற ஐயம் அவனுக்கிருந்தது. பின்னர் சகதேவனின் விழிகளும் தன்னைப்போலவே என்று கண்டுகொண்டான். பின்னர் அவ்விழிகளையே சூழ்ந்திருக்கும் அனைவர் முகத்திலும் கண்டான்.

எவரும் போரெனும் அக்கொடுங்கனவிலிருந்து மீளவில்லை. ஒருவேளை மீளமுடியாமலேயே போகலாம். உடலிலிருந்து இந்தக் கூர் விசையழியாமலேயே நின்றுவிடலாம். பயிற்சிக்குப்பின் வில் நாணை அழுத்திவிடவேண்டும் என்று கிருபர் முன்பொருமுறை கூறினார். நாண் வில்லை போருக்கு எழச்செய்கிறது. போரில் அதுவே வில்லை ஆள்கிறது. வில்லின் நிமிர்வை வளைத்து விசையென்றாக்கி அம்புகளை ஏவுகிறது. வில்லை ஆட்டுவிக்கும் நாண் போரிலாதபொழுது அவிழ்ந்து சுருண்டு உயிரிழந்திருக்கவேண்டும். நாண் அவிழ்க்கப்படாத வில் நாளடைவில் வளைவையே தன் இயல்பெனக் கொள்ளும். அது விசையை முற்றிழக்கும். நிமிர்வே அதன் இயல்பு. நிமிர்வென அன்றாடம் வெளிப்படுவதே வளைந்து விசையென போரில் எழுகிறது. நாண் எத்தனை குறைவான பொழுது வில்லைத் தொடுத்து இறுக்கியிருக்கிறதோ அந்த அளவுக்கே வில் ஆற்றல் கொண்டிருக்கிறது.

ஒருவேளை இன்னும் பல தலைமுறைகள் ஆகலாம். இங்கிருக்கும் ஒவ்வொருவருடைய உடல்மொழியும் மாறிவிட்டிருக்கிறது. இனி எழும் மைந்தர் அனைவரின் உடலிலும் இம்மொழியே குடியிருக்கும்போலும். ஒரு சொல்லுக்கு மறுசொல் அவர்கள் படைக்கலம் எடுக்கக்கூடும். ஓயாத சினமும் ஒழியாத வஞ்சமும் அவர்களுக்குள் நிறைந்திருக்கக்கூடும். நான் அமைதியின் இன்பத்தை அறிந்தவன். நினைவென அதை எங்கோ கொண்டிருப்பவன். அவர்கள் வஞ்சத்தையே இனிமையாக அறிந்திருக்கக் கூடும். அதையே அழகென்றும் மெய்மை என்றும் தலைக்கொள்பவர்களாக இருக்கக்கூடும். பிறிதொன்றறியாமல் அதிலேயே வாழக்கூடும். அவ்வண்ணம் ஒரு தலைமுறை

உருவாகுமென்றால் இப்பாரதவர்ஷத்தில் இனி இப்போர் அழியாது. ஏனெனில் அவர்களின் விளையாட்டும் தொழிலும் தவமும் அதுவே.

அவ்வண்ணம் இருக்கலாகுமா என்ன? அது மானுடரை முற்றழிப்பது. இப்புவியில் உண்ணத் தகுந்தவற்றை பெருக்கி நஞ்சை துளியெனச் சுருக்கி வைத்திருக்கும் தெய்வம் அதை அவ்வண்ணம் திகழ ஒப்புமா என்ன? அந்த வஞ்சப்பெருக்கிலிருந்து எங்ஙனம் எழும் கனிவின் முதற்துளி? அன்பென்றும் பரிவென்றும் அறமென்றும் நெறியென்றும் தன்னை வெளிப்படுத்தும் மேன்மை? அது என்றும் இங்கிருக்கிறது. இத்தனை குருதிப்பெருக்கிலும் சற்றே கை நீட்டினால் அதை தொட முடிகிறது. கசப்பும் சோர்வும் வெறுப்பும் நிறைந்த இவ்வெளியில்கூட அதன் இருப்பை அறியாத ஒருவர்கூட இல்லை. அது உயிர்த்துளி. அது முளைத்தெழ வேண்டும். இல்லையேல் இங்கு மானுடர் வாழவியலாது. அது வெல்ல வேண்டும்.

ஒருவேளை உழுதிட்ட வயலின் சேற்றுப்பரப்பின் அமைதி போலும் இது. இத்தனைக்கும் அடியில் விதைகள் உயிர்கொள்கின்றன போலும். கனிந்தெழுந்தவை. ஈரிலை விட்டெழுபவை. மலர் கொள்பவை. கனி சூடுபவை. விதை பெருக்குபவை. எழுக! எழுந்தாகவேண்டும்! எழுந்தேயாக வேண்டும்! எழுக! எழுக! எழுக!

அச்சொல்லினூடாக அவன் நெடுந்தொலைவைக் கடந்து மீண்டு வந்தான். மீண்டும் பெருமூச்சுடன் வண்டிகளின் நிரையை பார்த்தான். முக்தவனத்துக்கு வந்து சேர்ந்தபோதே அதுவரை இருந்த இறுக்கமொன்று தளர்ந்துகொண்டிருப்பதை அவன் உணர்ந்தான். காட்டிற்குள் குடிலில் தனித்திருப்பதே அதுவரை

அவன் நாள்பொழுதாக இருந்தது. அருகில் சகதேவன் இருக்கையில்கூட அம்முழுத்தனிமை அவ்வண்ணமே நீடித்தது. தனிமையில் பெருகும் சொல்லே அதை அத்தனை தாளமுடியாததாக்குகிறது என்று அதுவரை எண்ணியிருந்தான். சொல்லின்மையில் உணரும் தனிமை மேலும் எடைமிக்கதென்று அப்போது அறிந்தான். சொல்லின்மை தனிமையின்மீது எடைகொண்ட மலையை தூக்கி வைத்ததுபோல் ஆகிவிடுகிறது. இரவும் பகலுமென வெட்டப்படாத, எண்ணங்களென சிதறடிக்கப்படாத இருத்தல். தான் எனும் உணர்வென இருத்தல் கூர் கொள்ள வெறும் சோர்வென சென்று மறைந்தன அந்நாட்கள்.

பின்னர் தௌம்யர் வந்தார். முக்தவனம் தெரிவு செய்யப்பட்டிருப்பதை யுதிஷ்டிரனிடம் கூறினார். அன்று யுதிஷ்டிரன் மரத்தடியில் தன் சிற்றவையை கூட்டியிருந்தார். அர்ஜுனன் காட்டிற்குள் வேட்டைக்குச் சென்றிருந்தான். பீமனும் காட்டிலிருந்து பெரும்பாலும் மீளாதவனாகவே இருந்தான். இளைய யாதவர் அரசரின் வலப்பக்கம் மார்பில் கைகளைக்கட்டி வேர்க்குவையொன்றில் சாய்ந்தமர்ந்திருந்தார். சுரேசரும் அமைச்சர்கள் மூவரும் அரசர் முன்பாக நின்றனர். திரௌபதி தன் குடிலைவிட்டு வெளியே வருவதே இல்லை. குந்தி நினைவழிந்து மீளாமல் படுத்திருந்தாள். ஒற்றர்களும் ஏவலரும் மட்டுமே கொண்டதாக இருந்தது யுதிஷ்டிரன் அவை. ஆயினும் அவர் ஒவ்வொருநாளும் பெரும்பொழுதை அவையில் கழித்தார். செய்திகளைக் கேட்டு ஆணைகளை இட்டார்.

தௌம்யர் முக்தவனம் குறித்து சொல்லி முடித்ததும் யுதிஷ்டிரன் அவனிடம் திரும்பி “உன் கருத்தென்ன,

இளையோனே?" என்றார். தௌம்யர் அவனை நோக்கி "முன்பும் அஸ்தினபுரியின் அரசர்கள் தங்கள் போர்வெற்றிகளை அங்கே நீர்க்கடன் இட்டு முழுமைசெய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் பிரதீபருக்குப்பின் நாம் அத்துறையை பயன்படுத்தியதில்லை. அவ்வண்ணம் ஒன்று அங்கே இருப்பதே இச்செயலின்பொருட்டுதான்போலும்" என்றார். அவன் அச்சொற்களைக் கேட்டும் வெறிப்பு மாறா விழிகளுடன் நோக்கியிருக்க சகதேவன் "இதில் நாம் கூறுவதற்கொன்றுமில்லை" என்றான். யுதிஷ்டிரன் "ஆனால் நாம் இதை கொண்டாடுவது ஒருவேளை வெற்றிக்கொண்டாட்டம் எனத் தோன்றலாம்" என்றார். "எனில் என்ன பிழை?" என்று சகதேவன் சொன்னான். தௌம்யர் "ஆம், அதையே நானும் சொல்வேன். இத்தருணத்தின் இழப்பும் துயரும் கடந்துசெல்லும். வெற்றி என்றும் இங்கிருக்கும்" என்றார். "நாம் இயற்றவேண்டியவற்றை எதன்பொருட்டும் தவிர்க்கவேண்டியதில்லை என்பதே என் எண்ணம், மூத்தவரே" என்றான் நகுலன்.

தௌம்யரிடம் "அவ்வண்ணம் ஆகுக! முக்தவனம் ஒருங்கட்டும். இந்திரப்பிரஸ்தத்திலிருந்து ஏவலர் படையொன்று அங்கு சென்று அதை நாமும் அரசகுடியினர் அனைவரும் தங்கும்பொருட்டு கட்டி அமைக்கட்டும். நீர்க்கடன்கள் அனைத்தையும் உரிய முறையில் முடிப்போம்" என்றார் யுதிஷ்டிரன். தௌம்யர் "இம்முறை நீர்க்கடனுக்குப் பின் அப்படித்துறையை அவ்வண்ணமே முற்றாக கைவிட்டு நீங்கவேண்டும் என்று தோன்றுகிறது" என்றார். யுதிஷ்டிரன் வினாவுடன் அவரை நோக்க "இனி ஒருமுறை இவ்வண்ணம் நிகழவேண்டியதில்லை" என்று அவர் விழிதாழ்த்தி சொன்னார்.

யுதிஷ்டிரன் பெருமூச்சுவிட்டார். சகதேவன் "அது நம் கையிலா உள்ளது?" என்றான்.

யுதிஷ்டிரன் "நாம் எளியோர். ஒவ்வொரு பெருநிகழ்வும் நம்மிடம் சொல்வது அதையே" என்றார். திரும்பி நகுலனிடம் "இளையோனே, நீயே சென்று முக்தவனத்தை ஒருக்குக!" என்றார். அவன் இயல்பாக திரும்பி சகதேவனை பார்த்தான். "இளையோன் இங்கிருக்கட்டும். அவன் இங்கு உடனிருந்தாகவேண்டிய நிலையில் நானிருக்கிறேன். இச்சூழலில் சற்றேனும் என்னுடன் சொல்லாடக்கூடியவனாக அவனே இருக்கிறான். பிற அனைவரும் சொல்லிழந்துவிட்டிருக்கிறார்கள். ஊமையர் நடுவே வாழ்பவன் போலிருக்கிறேன்" என்றார் யுதிஷ்டிரன். அதைச் சொன்னதுமே அவர் சீற்றம் கொண்டார். அவ்வெண்ணத்தை பலமுறை அடைந்து தன்னுள் அமிழ்த்தியிருந்தமையால் அது தானே மேலெழுந்ததுமே அதன்மீதான கட்டுப்பாடுகளை இழந்தார்.

"நாவில் சொல்லெழாமையைக்கூட என்னால் தாங்க முடிகிறது. எவர் விழிகளிலும் சொல்லில்லை. பொருளிலாப் பேதைப் பாவைகள் போலிருக்கிறோம். அல்லது நாமனைவரும் இறந்துவிட்டோமா? இங்கு வெற்றுடல்கள்தான் நடமாடிக்கொண்டிருக்கின்றனவா? ஒருகணம் எழுந்து சென்று கங்கையில் பாய்ந்துவிடவேண்டுமென்று தோன்றும். வாளை எடுத்து கழுத்தில் பாய்ச்சாமல் ஒவ்வொரு நாளையும் கடந்து செல்வதை எண்ணி எண்ணி வியக்கிறேன்" என்றார். பின்னர் "அது ஏன் நிகழவில்லை என்று உணர்கிறேன். ஒவ்வொரு சொல்லாலும், எண்ணத்தாலும் என்னை நானே குத்திக் கிழித்துக்கொள்கிறேன். குருதி வார ஒவ்வொரு தருணத்தையும்

கடந்து செல்கிறேன். ஒவ்வொரு நாளிலும் நூறுமுறை மாய்ந்து எழுபவனுக்கு மெய்யான சாவு சிறிதாகிவிடுகிறது" என்றார்.

அவர் உடல் தளர்ந்தது. நெஞ்சை கையால் பற்றியபடி "தெய்வங்களே, இறந்தவர்கள் எத்தனை நல்லூழ் கொண்டவர்கள்! இருப்பவர்கள் இத்துயரை அணுவணுவாக கடந்துசெல்ல வேண்டியிருக்கிறது!" என்றார். நகுலன் அவரை வெறித்து நோக்கியபடி அமர்ந்திருந்தான். யுதிஷ்டிரன் சீற்றம்கொண்ட குரலில் "அவ்வாறு பார்க்காதே. நான் என்ன இங்கு உன்னிடம் கீழ்மை நடனத்தை ஆடிக்காட்டிக்கொண்டா இருக்கிறேன்? அறிவிலி!" என்றார். அச்சொற்களின் பின்னும்கூட அவர் தன்னுடன் பேசுவதை உணராமல் நகுலன் நோக்கிக்கொண்டிருந்தான். "என்ன பார்க்கிறாய்? அறிவிலி, ஏன் அப்படி பார்க்கிறாய்?" அவன் விழியுணர்வுகொண்டு "இல்லை" என தலைகவிழ்ந்தான்.

யுதிஷ்டிரன் தன் தலையை தானே வெறிகொண்டு ஓங்கி அறைந்தார். "என் மைந்தர்! என் மைந்தர்!" என்று கூவினார். உடைந்து குமுறி அழத்தொடங்கினார். "என் மைந்தர்கள்! என் மைந்தர்கள்! என் மைந்தர்கள்! என் செல்வங்கள்!" என்று அவரிடமிருந்து சொற்கள் எழுந்துகொண்டே இருந்தன. இரு ஏவலர்கள ஓடிவந்து அவரை இருபக்கமும் தூக்கிப் பற்றிப் பிடித்து அகற்றி கொண்டுசென்றனர். செல்லும் வழியிலேயே கால்தளர்ந்து அவர் நினைவழிந்தார். அவரை அவர்கள் உயிரிழந்த உடலை என கொண்டு செல்வதை அவன் வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தான். அவர்கள் அவரை குடிலுக்குள் கொண்டுசென்றனர். அகிபீனா கொண்டுவருவதற்காக ஒரு வீரன் வெளியே வந்து அப்பால் ஓடிச்சென்றான்.

தௌம்யர் அவனிடம் “நாம் இன்றே கிளம்புவோம்” என்றார். அவன் ஆம் என தலையசைத்தான். அவர்கள் எவருமே அந்நிகழ்வால் நடுக்கு கொள்ளவில்லை. அது ஒவ்வொருநாளுமென நடைபெற்றது. ஆனால் ஒவ்வொருமுறையும் அவனை அது அகம்விதிர்க்கச் செய்தது. அவன் நெஞ்சிலிருந்து அந்தப் படபடப்பு அகல நெடும்பொழுதாகியது. தௌம்யர் “இது நீர்க்கடன்களுக்கு முந்தைய நிலை. நீர்க்கடன் வரை அவ்வுயிர்கள் இங்கேதான் இருந்துகொண்டிருக்கின்றன. அவற்றின் அருகமைவை நாம் இவ்வண்ணம் ஆழ்ந்த துயர் என உணர்கிறோம். அவர்களை விண்ணேற்றிவிட்டால் நாம் அவர்களிடமிருந்து மீள்வோம்... இதை நான் மீளமீள உணர்ந்திருக்கிறேன். விந்தை என்றே சொல்லவேண்டும். மானுடர் மிகமிக எளிதாக மீண்டுவிடுவார்கள்” என்றார்.

முக்தவனம் நகுலன் எண்ணியதுபோல் இருக்கவில்லை. பலமுறை கங்கையில் வந்த வெள்ளத்தால் படிந்த வண்டல் சேறென்றும் பின் மணலென்றும் மாறி பல அடுக்குகளாக எழுந்து, அதன் மேல் நாணலும் மரங்களும் முளைத்து, அடையாளம் காணமுடியாத காடாக மாறிவிட்டிருந்தது. தௌம்யர் அவ்விடத்திற்கு பலமுறை வந்திருந்தவர், எனினும்கூட அதை நோக்கி குழப்பத்துடன் நின்றார். நகுலன் “இந்த இடம்தான் அல்லவா?” என்று கேட்டான். “இந்த இடம்தான், ஆனால்...” என்றார் தௌம்யர்.

அவர் நாணலினூடாக விழுந்துகிடந்த மட்கிய மரங்களின்மேல் கால் வைத்து ஏறிச்சென்றார். சேற்றுச் சரிவிலிறங்கி கங்கையை பார்த்தார். பின்னர் “இங்கு இந்த வளைவு

முன்பிருந்ததில்லை. முன்பு இந்நிலம் நீண்டு கங்கைக்குள் சென்றிருந்தது. இம்முனையில் அன்று ஒரு படித்துறை இருந்தது. இங்கு நதி நீண்டு உள்வளைந்து நிலத்தை விழுங்கிவிட்டிருக்கிறது" என்றார். "அது நிகழ்வதுதானே? கங்கை ஒருபோதும் தன் கரைகளை பேணியவளல்ல" என்று நகுலன் சொன்னான். "இங்குதான் அந்த பலித்துறை இருந்தது. எனில் எங்காவது முன்னர் பிரதீபர் காலத்தில் கட்டப்பட்ட கல்படித்துறை இருந்தாகவேண்டும்" என்று தௌம்யர் கூறினார்.

நகுலனின் ஆணைப்படி ஏவலர் நீண்ட மூங்கில்களை வெட்டி முனையை கூர்படுத்தி சேற்றில் ஓங்கி குத்தியபடி அப்பகுதி முழுக்க தேடினார்கள். புரவி மேல் அமர்ந்து அவர்களின் செயலை பார்த்துக்கொண்டிருந்தபோது ஒரு திடுக்கிடல்போல் அவன் உணர்ந்தான், அந்தக் காட்டுநிலத்தை அவர்கள் படைக்கலங்களால் குத்திக்கொண்டிருக்கிறார்கள் என. கொடிய விலங்கொன்றை கொல்வதுபோல. நிலத்தின் சாவுத்துடிப்பை பார்க்கலாம் என்று தோன்றியது. சேறுடன் மேலெழுந்து வந்த மூங்கில் முனைகளில் இருப்பது குருதி. செந்நிணம் தெறிக்கிறது. அவன் விழிகளை விலக்கிக்கொண்டான். ஆனால் ஒவ்வொரு குத்தும் விழுந்தெழும் ஓசையை அவன் உடல் அறிந்தது. நிலம் வலிகொண்டு முனகிப் புளைந்து அதிர்ந்தது.

ஒருவன் "இங்குள்ளது!" என்றான். "எங்கே?" என்று கேட்டபடி தௌம்யர் அருகே சென்றார். கங்கையின் நீர்ப்பரப்பிற்குள் இடையளவு ஆழத்தில் அவன் நின்றிருந்தான். "இந்த இடம் ஒரு மணல்மேடாக உள்ளது. இதன் அடியில் அந்தப் படிக்கட்டை உணர்கிறேன்" என்றான். "அது பாறையாக இருக்கலாமல்லவா?" என்றான் ஒருவன். ஏவலன் "ஏழு இடத்தில் குத்தி ஏழு இடங்களிலும் சீராக பாறையை

உணர்கிறேன். எனில் இது படிக்கட்டேதான்" என்றான். "பிறிதொரு முறை நோக்குக! அது படிக்கட்டெனில் இதுவே முக்தவனம் என்று முடிவு செய்யலாம்" என்றார் தௌம்யர்.

வீரர்கள் இடையளவு நீரில் இறங்கி மூங்கிலால் குத்தி நோக்கினர். "ஆம், அமைச்சரே. இங்கு ஏழு கல்படிகள் மூழ்கிக்கிடக்கின்றன" என்றான் தலைமைக்காவலன். "எனில் இங்கு முக்தவனம் அமையட்டும். காடு தெளிவித்து தங்குமிடம் ஒருக்குக!" என்றார் தௌம்யர். காவலர்தலைவன் "அங்கு குடில் கட்டப்பட்ட அதே அமைப்பு இங்கும் தொடரலாம் அல்லவா?" என்றான். "ஆம், ஆனால் அதற்கு இருபுறமும் இரு கிளைகள் தேவை" என்றான் நகுலன். "வலப்புறக் கிளை பேரரசருக்கும் பேரரசி காந்தாரிக்கும் உரியது. அவர்களுடன் வரும் அரசியரும் இளவரசியரும் அங்கே தங்கட்டும். இடப்புறக் கிளை அன்னை குந்திதேவிக்கும் திரௌபதிக்கும் உரியதாகுக!"

ஏவலர்கள் தலைச்சுமையாக கொண்டுவந்திருந்த தட்டிகளையும் மூங்கில்களையும் வடங்களையும் கொண்டு அங்கே குடில்கள் அமைக்கத் தொடங்கினர். கண்ணெதிரில் அந்த இடம் ஒரு சிற்றூர்போல ஒருங்குவதைக் கண்டான். யுதிஷ்டிரனின் குடில் எழுந்ததும் அதன்மேல் மின்கொடி எழுந்தது. ஒரு கொடி எழுந்ததும் அக்காடு முழுமையாகவே வெல்லப்பட்டுவிட்டது என்று அவன் எண்ணினான். இனி அது இந்திரப்பிரஸ்தம், அல்லது அஸ்தினபுரி. இனி அதற்காக கொல்லலாம், வெல்லலாம், சாகலாம். அதை பல்லாயிரம் அம்புகளால் துளைக்கலாம். அதில் பல்லாயிரம் உடல்களை புதைக்கலாம். அது நனவு உலராமல் குருதி குடிக்கப் பழகவும்கூடும். குருதி குருதி என அது ஆணையிடக்கூடும்.

அன்றிரவு தனக்கான குடிலுக்குள் மூங்கில்படல்மேல் கமுகுப்பாளை விரித்து உருவாக்கப்பட்ட மெத்தையில் படுத்து தலைக்கு மேல் கைவைத்து இருளை நோக்கிக்கொண்டிருந்தான். இக்குடிலிலும் நான் அமைதி கொள்ளப்போவதில்லை. மயங்குதலன்றி இனி துயிலென்பதே எனக்கில்லை. மின்னி மின்னி சலித்து எண்ணம் இருளென சேறில் புதைந்து இன்மை அழிவதே துயிலென்று உணர்ந்துகொண்டிருக்கிறேன். அவன் விழித்துக்கொண்டபோது இருளுக்குள் ஊளை ஒலிகள் கேட்டன. எழுந்து வெளியே சென்றான். தெளம்யரும் ஏவலர்குழாமும் துயில்கொண்டுவிட்டிருந்தனர். பகலெல்லாம் பணியாற்றிய களைப்பு அவர்களை மண்ணோடு அழுத்தியிருந்தது.

அவன் இருள் செறிந்த காட்டிற்குள் சூழ்ந்திருந்த மின்மினிகளை பார்த்தான். ஆனால் அவை பறக்கவில்லை. இருளுக்குள் பதிக்கப்பட்ட விண்மீன்கள் என நின்றன. அவன் மெல்ல அருகே சென்றான். அவை விழிமணிகள் என உணர்ந்தான். நரிகளின் செவியசைவுகளை, மூக்குநுனிகளை காணமுடிந்தது. அவை அந்தக் குடில்களை சூழ்ந்திருந்தன. அவனுடைய காலடியோசையில் ஒன்று உடல் துடித்து உறுமியபடி பின்னால் சென்றது. அவன் மேலும் முன்னால் சென்றபோது அது ஊளையிட்டபடி பாய்ந்து பின்னால் ஓட பிற நரிகள் அதைத் தொடர்ந்து காட்டுக்குள் சென்றன.

அவன் அங்கேயே நின்று அவற்றை நோக்கிக்கொண்டிருந்தான். அவை அந்த நாணல்காட்டில் வாழ்பவை. அந்தப் படித்துறையில் நீர் அருந்துபவை. அவற்றின் நிலம் கொள்ளப்பட்டுவிட்டது. அவை ஏன் தன்னை தாக்கவில்லை? நரிகள் தனியாக வரும் யானையையே தாக்கக்கூடியவை.

முன்னர் பலமுறை நரிகள் நடுவே சிக்கிக்கொண்டதுண்டு. அனல் ஒன்றே அவற்றிடமிருந்து தப்புவதற்கான வழி. இன்று அவை என்னை அஞ்சுகின்றன. என்னிடம் அவற்றை அச்சுறுத்தும் ஒன்று உள்ளது. அது என்னுள் எரியும் ஓர் அனல் போலும். அவன் அங்கே நின்று அவற்றை நோக்கிக்கொண்டிருந்தான். மெல்லமெல்ல அவை மீண்டும் ஒருங்கிணைந்தன. விழிப்புள்ளிகளால் ஆன ஒரு வட்டமாக அவனைச் சூழ்ந்திருந்தன.

நகுலன் தேர்களின் இணையாக புரவியை செலுத்திக்கொண்டு சூழ்ந்திருக்கும் காட்டை பார்த்துக்கொண்டே சென்றான். சிலநாட்களாக அங்கே பந்தங்களும் விளக்குகளும் பெருகிவிட்டன. இரவும் பகலும் ஓசைகள் எழுந்தன. மானுடர்கள் திரண்டனர். நரிகள் விலகிச் சென்றுவிட்டிருக்கும். ஆனால் அவை அவ்வாறு சென்றுவிடுவதில்லை. அவை காட்டுக்குள் எங்கோ நின்று நோக்கிக்கொண்டேதான் இருக்கும். அவன் அவற்றின் விழியுணர்வை உணரமுடியுமா என நோக்கினான். விழிகளை நிலம்நோக்கித் தழைத்து தன் தோல்பரப்பை உணர்வுகொள்ள வைத்தான். சென்றுகொண்டே இருந்த ஒருகணம் அவன் நரிகளின் நோக்கை உணர்ந்தான்.

நீர்ச்சுடர் - 21

பகுதி நான்கு : கழுநீர்க் கரை – 2

நகுலன் யுதிஷ்டிரனின் குடிலை அடைந்தபோது வாசலில் பிரதிவிந்தியன் நின்றிருந்தான். எனில் உள்ளே அவைகூடியிருக்கிறது என்னும் எண்ணத்தை அடைந்து தான்

பேசவேண்டிய சொற்களை தொகுத்துக்கொண்டபோதுதான் அவன் அகம் ஓங்கி அறையப்பட்டதுபோல திடுக்கிட்டது. புரவியிலிருந்து விழப்போகிறவன்போல நிலையழிந்து கடிவாளத்தை இறுகப்பற்றி மீண்டான். அந்த ஒவ்வா அசைவை உணர்ந்து புரவி நின்றுவிட்டது. அதன் கழுத்தைத் தட்டி ஆறுதல்படுத்தி மேலே செல்ல வைத்தான். அவன் அகம் படபடப்பு ஓய்ந்து அமைந்தபோது அழுத்தம் மிக்க ஏக்கம் எழுந்து விழிநீர் கசியுமளவுக்கு உளமுருகச் செய்தது. அவன் தொண்டையை கமறிக் கமறி மூச்சிழுத்து விழுங்கிக்கொண்டான். பெருமூச்சுவிட்டு நெஞ்சை ஆற்றிக்கொண்டான்.

சித்தப்பெருக்கை வேறு திசைநோக்கி திருப்பி தன்னை விலக்க முயன்றான். அந்தச் சிறிய மண்பாதையை, சூழ்ந்திருந்த சிறுகுடில்களை, விடியலில் துலங்கிநின்ற வான்வெள்ளிகளை நோக்கினான். மெல்ல உள்ளம் அமைந்து மீண்டான். “தெய்வங்களே!” என்று தன்னுள் முனகிக்கொண்டான். உள்ளம் துயர்கொண்டிருக்கையில் மென்குளிர்காற்றுபோல் அணுக்கமானது வேறில்லை. அது ஒரு தழுவல். திசைகளின் அணைப்பு. வானின் குழல்வருடல். இளங்குளிர்காற்று மானுடன்மேல் தெய்வங்கள் இன்னமும் அன்புடன் இருக்கின்றன என்பதற்கான சான்று. அவை மானுடப்பிழைகளை எப்போதும் பொறுத்துக்கொள்கின்றன என்பதற்கான சுட்டு. மேலிருந்து இமைக்கும் விண்மீன்கள் ‘ஒன்றுமில்லை ஒன்றுமில்லை’ என்கின்றன. மிகமிக அப்பால். மிகமிக விரிந்து. ககனக் கடுவெளி. முடிவிலி. இருள்பெருக்கு. அது மானுடனை சிறிதாக்கிவிடுகிறது. ஒவ்வொன்றையும் சிறியதாக்குகிறது. துயர்களை இழப்புகளை வெறுமையை சிறிதாக்குகிறது.

சென்றநாட்களில் அது மீள மீள நிகழ்ந்துகொண்டிருந்தது. அவன் இளையோர் அனைவரிலும் மைந்தர்களை கண்டான். ஓர் அசைவில், ஒரு தோற்றத்தில், ஒரு சொல்லில் அவர்கள் தோன்றி மறைந்தார்கள். தோன்றும்போது அவர்கள் முழுமையாகவே தெரிந்தனர். தங்களுக்குரிய விழியொளியுடன், புன்னகையுடன், தனித்த இயல்புகளுடன். அவர்களை பிறர் என உணரும் அக்கணம் அவர்கள் மறைந்தனர். அது ஒரு இறப்பு. ஒவ்வொரு நாளும் பலமுறை மைந்தர் தோன்றித்தோன்றி இறந்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்காக விழிகளுக்குள் ஒரு விழி எப்போதும் துழாவிக்கொண்டிருந்தது. ஆனால் எண்ணித்தேடினால் அவர்கள் எழுவதில்லை. எண்ணாக் கணத்தில் தோன்றி முன் நின்றனர். அந்த எதிர்பாராக் கணத்திற்காக அகம் எதிர்பார்த்திருந்தது.

போரில் மறைந்தவர்கள் பல்லாயிரம். அணுக்கமானவர்கள், உடன்பிறந்தவர்கள், குருதிச்சரடினர். அவர்கள் அனைவரும் மெல்லமெல்ல கரைந்து மறைந்துவிட்டிருந்தார்கள். பலருடைய முகங்களையே நினைவுகூர முடியவில்லை. அவர்களின் பெயர்கள் சொல்லப்பட்டபோது முகங்கள் தற்செயலாக மின்னி தொடுவதற்குள் மறைந்தன. எண்ணி எண்ணி எடுத்தால் கனவிலென மறைந்தும் திரிந்தும் அவை தோன்றின. ஆனால் மைந்தர் முகங்கள் மேலும் மேலும் தெளிவுகொண்டன. அவர்களை வாழ்ந்தகாலத்தில் கூர்ந்து நோக்கியதே இல்லை என்று தோன்றியது. அவர்கள் வளர்ந்த பொழுதில் ஐவரும் காட்டிலிருந்தனர். மீண்டு வந்தபோது கண்ட இளையோர் அயலவராகத் தெரிந்தனர். அவர்களைப் பார்க்கையில் ஆடியை நோக்கும் திகைப்பு எழுந்தது. அறியாதோன் ஒருவன் தன் ஆழம் நோக்கி ஊடுருவுவதுபோல் துணுக்குறல் எழுந்தது. அவர்களையே எண்ணிக்கொண்டிருக்கையில்கூட நேர்விழியால்

நோக்க இயலவில்லை. அணுக்கமாகப் பேசுகையில்கூட அவர்களை விழிதவிர்க்கவே முடிந்தது.

சகதேவனிடம் அதைப்பற்றி ஒருமுறை அவன் கேட்டான். "இவர்களை நாம் ஏன் விழிதொட்டுப் பேசுவதில்லை? இவர்கள் அணுகும்போது அகன்றும் அகல்கையில் அணுகியும் ஏன் விளையாடிக்கொண்டிருக்கிறோம்?" சகதேவன் புன்னகைத்தான். பின்னர் தணிந்த குரலில் "நான் அதைப்பற்றித்தான் எண்ணிக்கொண்டிருந்தேன்" என்றான். "பிரத்யங்கரரின் மிருத்யுவிலாசம் என்னும் காவியத்தில் தந்தையின் முதுமையை வாங்கி கானேகி மீண்ட புருவை முதல்முறை சந்திக்கும் யயாதிமன்னரைப்பற்றி ஒரு விவரிப்பு வருகிறது. மைந்தனின் விழிகளை நோக்க யயாதியால் இயலவில்லை. அவனை தன் மனைவியின் காதலனை சந்திக்கும் கணவன் என உணர்ந்தான்." நகுலனின் நெஞ்சு திடுக்கிட்டது. "என்ன?" என்றான். "அவர்கள் இளைஞர்கள்... நாம் முதியவர்கள்" என்று சகதேவன் சொன்னான். "என்ன சொல்கிறாய்?" என்றான் நகுலன். "அவ்வளவுதான், அதற்குமேல் சொல்வதற்கில்லை" என்றான் சகதேவன்.

"அவர்கள் மேலும் கூர்மையுடன் தோன்றுகிறார்கள்" என்று நகுலன் முணுமுணுத்தான். "மிக மிக அண்மையிலென... அவர்கள் குழவியராக இருந்தபோதுதான் அவ்வண்ணம் கூர்ந்து நோக்கியிருக்கிறோம். அருகே அமர்ந்து அவர்களின் முகத்தை நோக்கிக்கொண்டு பலநாழிகைப் பொழுது அமர்ந்திருப்பேன் அன்றெல்லாம்... அதன்பின் அவர்களை நோக்கியதே இல்லை எனப் படுகிறது. எனில் இந்தத் தெளிவுரு எங்கிருந்து எழுகிறது?" சகதேவன் "அவர்கள் இன்று வாழும் உலகு ஒளிமிக்கது. அங்கிருந்து எழுகிறார்கள் போலும்" என்றான்.

அச்சொல்லால் இருவரும் ஒரே தருணத்தில் உளமழிந்தனர். சகதேவன் விம்மலோசை எழுப்பி முகம் குனிக்க நகுலன் தன் விழிகளிலிருந்து நீர் பெருகி வழிவதை உணர்ந்தான். இருவரும் அருகமர்ந்து நெடுநேரம் அழுதுகொண்டிருந்தார்கள். பின்னர் சகதேவன் பெருமூச்சுடன் ஒரு சொல்லும் உரைக்காமல் எழுந்து அகன்றான். அவன் அவ்வளவு பொழுது உடனிருந்திருப்பதை அப்போதுதான் நகுலன் உணர்ந்தான். அவன் அவ்வாறு உடனிருந்தது கசப்பை உருவாக்கியது. அத்தனை ஆழ்ந்த ஒன்றுடன் இன்னொருவரை உடன்சேர்க்க முடியாதென்பதுபோல.

அவன் சகதேவன் செல்வதையே நோக்கிக்கொண்டிருந்தான். தளர்ந்த நடை. தொய்ந்த தோள்கள். அவனுக்கு அச்சில நாட்களுக்குள்ளேயே பல்லாண்டு அகவைமுதிர்வு வந்துவிட்டதுபோல. தன் உருவை அவன் நீர்ப்பரப்பில் பார்க்கையில் எல்லாம் திடுக்கிட்டான். ஆழத்தில் இருந்து அறியா முதியவன் அவனை தன் தளர்ந்த விழிகளால் நோக்கிக்கொண்டிருந்தான். ஐயமும் கசப்பும் கொண்டவன். நம்பிக்கை அழிந்தவன். சாவை அருகே கண்டுகொண்டவன். சாவு அணுகும்போது தந்தையர் நினைவு மிகும் என்பார்கள். மூதாதையர் அருகணைவார்கள். மைந்தர் அணைவதும் அவ்வாறா? மைந்தர் மூதாதையரின் உருவென்பதுண்டு. முன்னரே மறைந்த மைந்தர் மூதாதை நிரையில் சென்றமர்ந்து காத்திருப்பவர்களா?

மைந்தர் அவ்வண்ணம் தோன்றுவது ஐவருக்கும் நிகழ்ந்துகொண்டிருந்தது. யுதிஷ்டிரன் ஒருநாள் “இளையோர் இங்கே பணிக்கு வரவேண்டியதில்லை” என்றார். நகுலன் பேசாமல் நின்றிருக்க அமைச்சர் “அரசே, நம்மிடம்

செயல்திறனுடன் எஞ்சியிருப்பவர்கள் முதிரா இளைஞர்கள் மட்டுமே...” என்றார். யுதிஷ்டிரன் சீற்றத்துடன் “இங்கே என்ன போரா நிகழ்கிறது? செயல்திறனற்றவர்கள் போதும் எனக்கு... என்னைப்போல் சாவை கண்டுவிட்டவர்கள். மூதாதையர் எழுவதற்காக காத்திருப்பவர்கள்... இனி என் முன் இளையோர் தோன்றலாகாது. இது ஆணை” என்றார். அமைச்சர் தலைவணங்கி அகன்றார். யுதிஷ்டிரன் இளைய யாதவரிடம் “என்னால் இதற்கு மேலும் தாளவியலாது... இளையோர் வைரமணிகள்போல் ஆயிரம் ஆடிப்பட்டைகளால் ஆனவர்கள். அவர்களில் எழுகிறார்கள் மாண்டவர்கள்” என்றார். பீமன் விலங்குபோல் உறுமலோசை எழுப்பினான். பின்னர் அவையிலிருந்து வெளியே நடந்தான். யுதிஷ்டிரன் அவன் செல்வதை நோக்கியபின் முனகலாக “கொடிது இவ்வாழ்க்கை!” என்றார்.

நகுலன் அணுகியதும் யுதிஷ்டிரனின் குடில்வாயிலில் நின்ற அந்தண இளைஞன் வணங்கி “அரசர் துயின்றுகொண்டிருக்கிறார். அவருக்கான செய்தியுடன் வந்தேன்” என்றான். “சொல்க!” என்று அவனை நோக்காமல் நகுலன் சொன்னான். “ஆசிரியர் தௌம்யரின் செய்தி. அஸ்தினபுரியின் அமைச்சர் விதுரர் நாளை முக்தவனத்தை வந்தடைகிறார். நாளை அவர் வந்தபின்னர் அவருடன் கலந்துகொண்டு நாளை மறுநாள் காலையிலேயே நீர்க்கடனுக்குரிய சடங்குகளை செய்யத் தொடங்கிவிடலாமா என்று அரசரிடம் ஆசிரியர் உசாவுகிறார். எனில் அதற்குரிய அனைத்தையும் அவர் ஒருக்கத் தொடங்கிவிடுவார்.” நகுலன் “ஆம், விதுரர் வந்ததும் தொடங்கிவிடவேண்டியதுதான்...” என்றான். “இதை நான் அரசாணையாக ஆசிரியரிடம் தெரிவிக்கலாமா?” என்றான் இளைஞன்.

அவன் முகத்தை நகுலன் நிமிர்ந்து நோக்கினான். தருணங்களை நுண்ணிதின் புரிந்துகொண்டு அதற்கேற்ப எழுபவர்களுக்குரிய தன்னமைவு தெரிந்த முகம். "ஆம். அவ்வாறே" என்றான். "உத்தமரே, உமது பெயர் என்ன?" என்றான். "சாண்டில்ய குடியினனாகிய என் பெயர் காஞ்சனன்... என் தந்தை சோமர்" என்று அவன் சொன்னான். "எங்கிருந்தீர் இதுவரை?" என்றான் நகுலன். "பாரத்வாஜ தவக்குடிலில் கல்வி பயின்றுகொண்டிருந்தேன். கல்வி முடிவதற்குள் இங்கு வர நேர்ந்தது..." நகுலன் "கல்வி இங்கும் தொடரலாமே" என்றான். அவன் புன்னகைத்தான். நகுலன் தலைவணங்க அவன் பின்னடைந்து நடந்து அகன்றான்.

அவனை நோக்கி நின்றபோது நகுலன் தனக்குள் ஒரு நிறைவை உணர்ந்தான். அனைத்தும் முடிந்துவிட்டன என்று தோன்றுகையில் புதியவர்கள் எழுகிறார்கள். காட்டெரியின் சாம்பல்நிலத்தில் பசுமுளைகள் எழும் விந்தையை அவன் முன்னரும் கண்டிருக்கிறான். தன் முகம் மலர்ந்துவிட்டிருப்பதை உணர்ந்தான். உதடுகளில் புன்னகை எழுவது அரிதினும் அரிதாக இருந்தமையால் அவ்வண்ணம் முகத்தசைகள் விரிவதை உடனே முகமே அறிந்து அறிவித்தது. ஒரு துளி இனிமை, ஒரு சிறு இளைப்பாறல். இது தெய்வங்கள் அருளுவது. துயரிலேயே முற்றாக ஊறிவிடக்கூடாது என்பதற்காக. ஊறுகாய் உப்பென்றே ஆகிவிடலாகாது. ஆகவே புளிப்பு, கொஞ்சம் இனிப்பு. துயரறியும் திறனை துயர் மழுங்கடித்துவிடக்கூடும். இனியில்லை என ஒரு நம்பிக்கை. இதோ மறுகரை என ஒரு கானல். இதுவே என ஒரு மாயப்பற்றுக்கோடு. மீண்டும் துயரத்தின் பெரும்பாலை. அலை கொந்தளிக்கும் முடிவிலி. எரியெழுந்த வெறுமை.

நகுலன் யுதிஷ்டிரனின் குடிலுக்குள் நுழைந்து அவரை நோக்கியபடி நின்றான். அவர் மஞ்சத்தில் மடியில் ஒரு சுவடியுடன் அமர்ந்து துயின்று பக்கவாட்டில் சரிந்துவிட்டிருந்தார். சுவடிக்கட்டு உதிர்ந்து நிலத்தில் கிடந்தது. அவருடைய தலை மார்பில் முட்டும் குழல்கற்றைகளுடன் முன்னால் குனிந்திருந்தது. கனிந்து உதிரவிருக்கும் கனிபோல. அவருடைய கழுத்து வலிக்கக்கூடும், மெல்ல தூக்கி அப்பால் படுக்கவைக்கவேண்டும் என்னும் எண்ணமே முதலில் எழுந்தது. ஒவ்வொருமுறை அவரை முதலில் பார்க்கையிலும் எழுவது ஒரு கனிவே என்பதை அவன் முன்னரும் உணர்ந்திருந்தான். அவர் மீதான கசப்புகளும் சினமும் திரள்வது அதன் பின்னர்தான். அந்தக் கனிவு அவருடைய விழி முதற்கணம் தன் மேல் படிகையில் கொள்ளும் கனிவிலிருந்து எழுவது என்று அவன் எண்ணிக்கொண்டதுண்டு. அக்கனிவு ஒரு சரடென இருவரையும் தைத்திருந்தது. அது இப்புவி சார்ந்தது அல்ல, ஆகவே இப்புவிநிகழ்வுகளை அது தொடுவதேயில்லை.

நகுலன் அது என்ன நூல் என்று நோக்கினான். அவன் எண்ணியதுபோல அது நெறிநூல் எனத் தோன்றவில்லை. சற்று அருகே சென்று அதை கூர்ந்து நோக்கியபின் குனிந்து எடுத்துப்பார்த்தான். விருஷ்டிவைபவம் என்னும் நூல். எதைப் பற்றியது? மழையைப் பற்றியது என்று தோன்றியது. அதை புரட்டிப்பார்த்தான். மழை பொழிவதற்குரிய சடங்குகள். பொழியாதொழிந்தால் இயற்றவேண்டிய பிழைநிகர்கள். மழைநீரைப் பேணி மண்ணை வளமாக்க அரசன் இயற்றவேண்டிய முறைமைகள். அவன் அதன் சுவடிகளை அடுக்கிக் கட்டி அருகிலிருந்த பீடத்தில் வைத்தான். அதிலிருந்த குடுவையில் எஞ்சிய இன்நீரில் ஃபாங்கம் கலந்திருப்பது

மணத்திலிருந்து தெரிந்தது. யுதிஷ்டிரன் அகிபீனாவும் ஃபாங்கமும் இன்றி விழிப்பிலோ துயிலிலோ இருக்க இயலாதவராக ஆகிவிட்டிருந்தார்.

அவர் அவனுடைய காலடியோசையை துயிலுக்குள் கேட்டுவிட்டிருந்தார். "ம்ம்" என்று முனகினார். அவன் "மூத்தவரே" என்றான். அவர் "ம்?" என்றார். "மூத்தவரே" என்று அவன் மீண்டும் அழைத்தான். அவர் தலைநிமிர்ந்து கண்களைத் திறந்தபோது முகம் மலர்ந்திருந்தது. "வந்துவிட்டாயா? நீதானா? நீ வருவதை பார்த்தேன்" என்றார். சிரிப்பு என அவர் பற்கள் வெளிப்பட்டன. "நீ சொல்வது பிழை. அவ்வண்ணம் அந்நூலில் இல்லை. அது முற்றிலும் வேறு நூல். இத்தனைபொழுது அதைத்தான் பார்த்துக்கொண்டிருந்தேன். அதை உன்னிடம் சொல்லவேண்டும் என எடுத்து வைத்தேன்... இதோ." அவர் சூழவும் தேடி பீடத்தில் அந்நூலை கண்டுகொண்டார். "நீ இதை எடுத்துப் பார்ப்பதை கண்டேன். ஆனால் உன்னால் இதை கண்டுபிடிக்கமுடியாது. ஏனென்றால் இதை என்னால்தான் படிக்கமுடியும்..."

அக்கணமே அவன் அனைத்தையும் உணர்ந்துவிட்டிருந்தான். சலிப்புடன் அவரை நோக்கியபடி நின்றான். "உன் இளையவன் எங்கே? அவன் அன்னை அவனை தேடிக்கொண்டிருந்தாள்" என்றார். பின்னர் அவர் விழிகள் அலைபாய்ந்தன. உடலில் ஒரு நடுக்கு நிகழ்ந்தது. "ஆ!" என்றபடி எழுந்து இரு கைகளையும் விரித்தார். "நான்தான், மூத்தவரே" என்றான் நகுலன். "நீயா?" என்று அவர் மூச்சொலியுடன் கேட்டார். தளர்ந்து பீடத்தில் அமர்ந்துகொண்டார். கைகளை மடிமேல் கோத்து வைத்துக்கொண்டு "சொல்க!" என்றார். "அனைத்தும் முறையாக

நிகழ்ந்துவிட்டன. அதை சொல்லிவிட்டுச் செல்லலாம் என்று வந்தேன்" என்றான் நகுலன். "ஆம், சொல்" என்றார் யுதிஷ்டிரன்.

"பேரரசி காந்தாரி இன்று கருக்கலில் வந்தணைந்தார். உடன் அஸ்தினபுரியின் அரசியரும் இளவரசியரும் வந்தனர். அவர்களை வரவேற்று அழைத்துச்செல்ல நான் சென்றிருந்தேன். உடன் இளைய யாதவரும் வந்திருந்தார்." யுதிஷ்டிரன் திகைப்புடன் "அவனா?" என்றார். "ஆம், அவர் வருவார் என நான் எதிர்பார்க்கவில்லை" என்றான் நகுலன். "என்ன நிகழ்ந்தது?" என்று யுதிஷ்டிரன் கேட்டார். "கைகூப்பியபடி நின்று அன்னை காந்தாரியை அவர் வரவேற்றார். அன்னை அவரை நோக்கி தீச்சொல்லிடக்கூடும் என நான் எதிர்பார்த்தேன். தீச்சொல்லிடவேண்டும் என எதிர்பார்த்தேன் என்றும் சொல்லலாம்." யுதிஷ்டிரன் "ஆம், நானும் அவ்வண்ணமே எதிர்பார்த்தேன், ஒருகணம் முன்பு" என்றார். "அன்னை எனக்கும் தீச்சொல்லிடவேண்டும், என்னை எரித்து அங்கேயே சாம்பலாக்கவேண்டும் என்றும் விழைந்தேன்" என்றான் நகுலன்.

யுதிஷ்டிரன் "அதுவும் நான் எண்ணுவதே" என்றார். "ஆனால் படகிலிருந்து இறங்கியதுமே அன்னை அவர் பக்கம் பார்த்து வணங்கினார். கைகூப்பியபடி துறைமேடைமேல் ஏறிக்கொண்டார். அவர் அருகணைந்ததும் இளைய யாதவர் "அஸ்தினபுரியின் பேரரசிக்கு யாதவனின் தலைவணக்கம்... குடிநலம் சூழ்க! என்றார்." யுதிஷ்டிரன் "ம்" என்றார். "அனைத்தும் நலமாகுக, யாதவரே. மெய் நிலைகொள்க என்று அன்னை சொன்னார். யாதவர் கைகூப்பி நிற்க அரசியர் ஒன்பதின்மரும் அதையே சொன்னார்கள்." யுதிஷ்டிரன் "அவர்கள் வேறொன்று சொல்ல முடியாது" என்றார். "அரசி பானுமதி

கரையணைந்தபோதும் இளைய யாதவர் அவ்வண்ணமே கைகூப்பியபடி நின்றார். இப்பாரதவர்ஷத்தின் அனைத்து அன்னையரிடமும் மனையாட்டியினரிடமும் அடிபணிவு உரைத்து பொறுத்தருள்கை கோருபவர்போல. அரசி பானுமதியும் அவர் தங்கை அசலையும்கூட நற்சொல்லே உரைத்தனர்.”

“நலம் சூழ்க என்று அவர் நாவுரைத்த அசைவை கண்முன் காண்கிறேன். தெய்வச்சொல் என எனக்கு தோன்றியது. மெய்ப்புகொண்டு விழிநீர் வழிய கைகூப்பி நின்றேன். ஆனால் அவர் அருகே நின்றிருக்க என்னால் இயலவில்லை. அகன்று பின்னடைந்து என்னை மறைத்துக்கொண்டிருந்தேன்.” யுதிஷ்டிரன் தலையசைத்தார். “அவர்களை அவர்களுக்குரிய குடில்களுக்கு கொண்டு தங்கவைத்துவிட்டு வருகிறேன். அனைவருமே களைத்திருக்கிறார்கள். உணவுண்டு ஓய்வெடுக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறேன். நாளை பின்காலைப்பொழுதில் அவர்கள் எழுவார்கள்.” யுதிஷ்டிரன் பெருமூச்சுவிட்டார். பின்னர் “இழிசொல்லே எழவில்லையா என்ன?” என்றார்.

“எழுந்தது” என்று நகுலன் சொன்னான். “அவ்வண்ணம் எழாமலிருக்காது” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “அஸ்தினபுரியின் அமைச்சர் கனகர் இளைய யாதவர் முகத்தை நோக்கி பழிச்சொல் உரைத்தார். அவர் குலம் முற்றழியும் என தீச்சொல்லிட்டார்.” யுதிஷ்டிரன் இமைக்காமல் நோக்கினார். “அத்தீச்சொல்லை தனக்கே தான் இட்டுக்கொண்டுவிட்டதாக இளைய யாதவர் சொன்னார். அச்சொற்களைக் கேட்டு அவர் மகிழ்வதுபோலக்கூட எனக்கு தோன்றியது” என்றான் நகுலன். “அவ்வண்ணம் எனக்கும்

தோன்றியிருக்கிறது" என்று யுதிஷ்டிரன் சொன்னார். அவர்கள் சொல்லிழந்து தனிமைகொண்டு அமைந்தனர்.

நகுலன் "கனகர் நகருக்குள் நுழையவில்லை. படித்துறையிலிருந்து அப்படியே கங்கைக்குள் சென்றுவிட்டார் என்று ஒற்றுச்செய்தி வந்தது" என்றான். யுதிஷ்டிரன் "அவர் விடுதலைகொண்டார்... நன்று" என்றார். "அவர் கங்கையில் பாய்ந்திருக்கக்கூடும். வரும் வழியில் நூற்றுப்பதினெட்டு இளவரசியர் கங்கைபாய்ந்திருக்கிறார்கள்" என்றான் நகுலன். "எனில் அதுவும் விடுதலையே..." என்று யுதிஷ்டிரன் சொன்னார். "இளையோனே, அவரை நான் நன்கறிவேன். இங்கே வெளிப்பட்ட இச்சொற்கள் அவருக்குள் நஞ்சென எழுந்து பெருகித்திரள எத்தனை கொந்தளிப்பும் வலியும் தேவை என்று எண்ணிப்பார்க்கிறேன். அத்தனை பெரிய அலைக்கழிப்புக்குப் பின் அவர் விடுதலைகொண்டே ஆகவேண்டும்" என்றார்.

"நான் சென்று எஞ்சிய பணிகளை நோக்குகிறேன். அமைச்சர் விதுரர் நாளை உச்சிப்பொழுதுக்குள் இங்கு வரக்கூடும். எனில் நாளை மறுநாளே நீர்க்கடன்களை வைத்துக்கொள்ளலாம் என்று வேதியர் தௌம்யரின் சொல் வந்தது." யுதிஷ்டிரன் "ஆம், அவர் வரட்டும்" என்றார். நகுலன் பேசாமல் நின்றான். பின்னர் "நாம் இன்னமும்கூட அரசர் திருதராஷ்டிரரை சந்திக்கவில்லை" என்றான். "ஆம், சந்திக்கவேண்டும். அவர் இங்கேயே இருக்கிறார்... ஆனால் அவரை சந்திக்கும் உளத்திண்மை எனக்கு இருக்கும் என தோன்றவில்லை" என்றார் யுதிஷ்டிரன். "நம் கடமை அது" என்று நகுலன் சொன்னான். "நெறிகளின்படி துரியோதனனுக்கும் இளையோருக்கும்கூட நீங்கள்தான் நீர்க்கடன் செய்யவேண்டும்... அதற்கு அவருடைய ஒப்புதல் தேவை."

யுதிஷ்டிரன் "ஏற்கெனவே அதை பலமுறை தௌம்யர் உணர்த்திவிட்டார்" என்றார். "அரசமுறைப்படி அவரை நானே சென்று வரவேற்றிருக்க வேண்டும். என்னால் இயலவில்லை. ஆகவேதான் தௌம்யரை அனுப்பினேன். நீர்க்கடனுக்காக வந்திருக்கையில் அரசமுறைமை தேவையில்லை என்பது ஒழிதலுக்கான வழியொன்றை காட்டியது. ஆனால் நான் சென்றாகவேண்டும். அடிபணிந்தாகவேண்டும். இளையோனே, அதைவிட என் கழுத்தில் வாளை பாய்ச்சிக்கொள்வேன் என தோன்றுகிறது. தௌம்யர் சொன்னதுமே நான் நடுங்கத்தொடங்கிவிட்டேன். அதை நினைக்காமலிருக்கவே முயல்கிறேன். அதன்பொருட்டு என் துயரைப்பெருக்கி அதை என்னைச் சூழ அரண் என அமைத்துக்கொள்கிறேன்..."

"அவர் இன்னமும் முக்தவனத்திற்குள் முறைப்படி நுழையவில்லை. அருகில் என்றாலும் மரபின்படி அவர் இருக்குமிடம் சமந்தம் என்னும் காடு. ஆகவே முறைமைகளை நாம் கருதவேண்டியதில்லை" என்று நகுலன் சொன்னான். "ஆனால் பேரரசி இங்கே வந்துவிட்டிருக்கிறார்கள். அவரும் இங்கே வந்தாகவேண்டும். நீங்கள் அவர்களை சந்தித்தே ஆகவேண்டும்..." யுதிஷ்டிரன் உடைந்த குரலில் "நான் என்ன செய்வேன்! தெய்வங்களே!" என்றார். "இதை நமக்கான தண்டனை என்று கொள்ளவேண்டியதுதான்" என்றான் நகுலன். யுதிஷ்டிரன் அவனை விழித்து நோக்கினார். நெடுநாள் துயில்நீப்பினால் அவர் விழிகள் பித்தனின் வெறிப்பை கொண்டிருந்தன. நீர் கலங்கி நிறைந்திருந்த சிமிழ்கள்.

பின்னர் அவர் "ஆம்" என்றார். "அதுவே தண்டனை. அவரை சென்று வணங்குகிறேன். அவர் அளிக்கும் தீச்சொற்களை தலைக்கொள்கிறேன். அவரால் கொல்லப்படுவேன் எனில்

உயிர்விடுகிறேன்” என்றார். நகுலன் “ஆனால் நம் சொல்லில், உடலில் வெற்றியின் ஒரு சிறு துளி வெளிப்பட்டால்கூட அது அவரை கொன்றுவிடக்கூடும். அது நமக்கு மேலும் பழியையே சேர்க்கும்” என்றான். “என்ன சொல்கிறாய்?” என்று நடுங்கும் குரலில் யுதிஷ்டிரன் கேட்டார். “நாம் நம் வெற்றியை அறிவிக்க அவரிடம் சென்றோம் என இனி வாழும் சொல்நிற்றலும் கூடும்” என்றான் நகுலன். “நம் மேல் நமக்கே ஆணை இல்லை. நாம் எவரென்று நமக்கே தெளிவில்லை.”

யுதிஷ்டிரன் தன் அனைத்துக் கட்டுப்பாடுகளையும் இழந்து சினவெறி கொண்டார். அதுவரை தளர்ந்திருந்த அவருடைய அனைத்து உளவிசைகளும் அதனூடாக மீண்டெழ விழைந்தன. அவ்வாறு தங்களை நிறுவிக்கொள்ளத் துடித்தன. “கீழ்மகனே!” என்று வீறிட்டபடி அவர் கைவீசிக்கொண்டு எழுந்தார். “என்னை என்னவென்று நினைத்தாய்? என் முன் பணிந்து நின்றிருக்கையில் என்னைக் குறித்த இக்கீழ்மையையா உன் உள்ளத்தில் நிறுத்தியிருந்தாய்? கீழ்மகனே, என்னையும் உன்னைப்போல் கீழ் என்று எண்ணினாயா?” அவர் குரல் உடைந்தது. “வெற்றியில் தருக்குகிறேனா? நானா? எது வெற்றி? உடன்பிறந்தாரைக் கொன்று மைந்தரையும் இழந்து பித்தனாக, பழிகொண்டவனாக இதோ நின்றிருக்கிறேனே இதுவா? இதன்பொருட்டு தருக்குபவனா நான்? சொல்... ஏன் அதை சொன்னாய்?”

நகுலன் அச்சினத்தை உள்வாங்கியவனாகவே தோற்றமளிக்கவில்லை. அவரை நோக்கிக்கொண்டு பேசாமல் நின்றான். அவர் அருகே வந்து அவன் தோளைப்பற்றி உலுக்கினார். “சொல், எதன்பொருட்டு நான் தருக்கவேண்டும்? இன்று நானிருக்கும் இழிநிலையில் இனி எந்த மானுடர்

நின்றிருக்கமுடியும்? இதிலும் மகிழ்வேன் என்றால் நான் யார்? கீழினும் கீழ். இழிவே உருவானவன்... அவ்வண்ணமா எண்ணுகிறாய் என்னை? சொல்... ஏன் அதை சொன்னாய்? என்னை புண்படுத்தி நீ அடையும் இன்பம்தான் என்ன?" அவர் அவன் விழிகளை கூர்ந்து நோக்கி "உன் துயர் என்னால் வந்தது என எண்ணுகிறாயா? என்னை பழிகொள்ள முனைகிறாயா? என்மீதான வெறுப்பு உனக்கு ஆறுதலாக அமைகிறதா?" என்றார்.

அவர் விழிகளை அசையா நோக்குடன் நகுலன் எதிர்கொண்டான். "சொல், என்னை வெறுத்து நீ விடுதலை கொள்வாய் எனில் அவ்வண்ணம் ஆகுக! நானே இவ்வழிவனைத்தையும் இயற்றியவன். இப்பழி முழுக்க என்மேலேயே படியட்டும். என்னை நீங்கள் அனைவரும் வெறுக்கலாம். அனைத்துக்கும் தகுதியானவன் நானே." அவர் விம்மலோசையுடன் தலைகுனிந்தார். மீண்டு சென்று தன் பீடத்தில் அமர்ந்தார். கைகள்மேல் தலையைத் தாங்கி அமர்ந்து விம்மி அழுதார். அவர் தோள்கள் குலுங்குவதை அவன் நோக்கி நின்றான். அவர் மெல்ல மீண்டார். நிமிர்ந்து அவனை நோக்கி அவன் செல்லலாம் என கையசைத்தார். அவன் தலைவணங்கி பின்னடைந்தான்.

அவர் அவனை அழைத்தார். "இளையோனே" என்னும் நலிந்த குரல் கேட்டு அவன் நின்றான். "சொல்க, மெய்யாகவே நீ அவ்வண்ணம் எண்ணுகிறாயா?" அவன் "ஆம், மூத்தவரே. நாம் ஐவருமே ஆழத்திற்கு ஆழத்தில் ஒரு துளியினும் துளியாக அந்த ஆணவத்தை கொண்டுள்ளோம்... வென்றோம் என்னும் சொல்லாகக்கூட நாம் அதை திரட்டிக்கொள்ளவில்லை. ஆனால் அது அங்குள்ளது" என்றான் நகுலன். அவனை உறுத்து

நோக்கியபடி அமர்ந்திருந்த யுதிஷ்டிரன் பின்னர் "மெய்தான்" என்றார். கசப்புடன் சற்றே சிரித்து "மெய்தான்..." என்றார். "மானுடனைப்போல் இழிந்த உயிர் இப்புவியில் இல்லை, இளையோனே" என்றார்.

நீர்ச்சுடர் - 22

பகுதி நான்கு : கழுநீர்க் கரை – 3

நகுலன் சிறுபொழுது துயிலலாம் என்றுதான் குடிலுக்குச் சென்றான். பச்சை ஓலைகளை வெட்டி முடைந்து கட்டப்பட்ட தாழ்வான குடிலுக்குள் அவன் நுழைந்தபோது உள்ளே ஒருவன் நிற்பது தெரிந்தது. "யார்?" என்று திடுக்கிட்டதுமே அவனுக்கு அது நிழல் எனத் தெரிந்துவிட்டது. ஆனால் அந்த முந்தைய கணத்தில் அங்கே நின்றவன் சதானீகன். அவன் நடுங்கியபடி குடில்படலைப் பிடித்தபடி நின்றான். சகதேவன் கழுகுப்பாளை வேய்ந்த மூங்கில் மஞ்சத்தில் படுத்திருந்தான். அவன் "இளையோனே" என அழைத்ததுமே சகதேவன் கண்களை திறந்தான். "வந்துவிட்டாயா?" என்றான். "நான் சற்றுமுன் அவனை பார்த்தேன்."

"நானும் பார்த்தேன்" என்றான் நகுலன். "நான் சதானீகனை..." என்று சகதேவன் சொல்லத்தொடங்க "ஆம்" என்றான் நகுலன். "அது கனவா? கனவெனில்..." என்றான் சகதேவன். "கனவல்ல..." என்று நகுலன் சொன்னான். "அவர்கள் இங்குதான் இருக்கிறார்கள். நம்முடன்." சகதேவன் "ஏன் இருக்கவேண்டும்? இந்தத் துயரை அவர்களின் இருப்பால் பெருக்குகிறார்கள்... அவர்கள் சென்று மறையட்டும்" என்றான். "நாம் அவர்களுக்கு

செய்யவேண்டியவற்றை செய்யவில்லை" என்றான் நகுலன். "மூத்தவரே, மெய்யாகவே உங்களுக்கு இவற்றில் நம்பிக்கை உள்ளதா? நாம் கொடுக்கும் அன்னமும் நீரும் அங்கு சென்று சேர்கின்றனவா?" என்றான் சகதேவன். நகுலன் "நாம் செய்யக்கூடுவது இது ஒன்றே" என்றான்.

அதன்பின் அவனுக்கு துயில் வரவில்லை. மஞ்சத்தில் படுத்து கண்களை மூடிக்கொண்டான். கண்களுக்குள் காட்சிகள் அலையடித்தன. சகதேவன் "பேரரசி வந்தார்களா?" என்றான். "ஆம்" என்றான் நகுலன். "இளைய யாதவர் வந்து அவர்களை எதிரேற்றார்." சகதேவன் "அவருக்கும் அது தேவைப்படுகிறது" என்றான். "எது?" என்றான் நகுலன். "ஆறுதல்... பேரரசி வாழ்த்துச்சொல் மட்டுமே சொல்வார்கள். அதை செவிகளால் கேட்டால் அவர் தன்னை ஆற்றிக்கொள்ள முடியும்." சில கணங்களுக்குப் பின் நகுலன் "எனில் எவர் கடுமொழி உரைக்கக்கூடும்? எவர் தீச்சொல்லிடக்கூடும்?" என்றான். "நம் அன்னை" என்றான் சகதேவன். நகுலன் ஒரு சிறு திடுக்குறலை உணர்ந்தாலும் ஒன்றும் சொல்லவில்லை.

நகுலன் சில கணங்களுக்குப் பின் "நாம் பேரரசரைக் கண்டு நீர்க்கொடைக்கு அவரை அழைக்கவேண்டும். அப்படி ஒரு முறைமை எஞ்சியிருக்கிறது" என்றான். சகதேவன் "ஆம், அதைத்தான் இங்கே அவையில் பேசிக்கொண்டிருந்தார்கள்" என்றான். நகுலன் "மூத்தவர் அஞ்சுகிறார்" என்றான். சகதேவன் "தீமையை அஞ்சிவாழ்ந்தவர் இன்று அறத்தை அஞ்சுமிடத்திற்கு வந்துவிட்டார்" என்றான். நகுலன் அவன் ஏதேனும் சொல்வான் என எதிர்பார்த்தான். "நாம் செய்யக்கூடுவது என்ன?" என்று இறுதியில் அவனே கேட்டான். "செய்யக்கூடுவது ஒன்றே. சென்று தலைவைப்பது.

பெருமதக்களிற்றின் கால் எளிய உயிர்களை அறிவது என்று சொல் உண்டு. அது நிகழட்டும்." நகுலன் "சொல்வது எளிது, அதை இயற்றுதல் அவ்வாறல்ல. பேரரசர் பித்துநிலையில் இருக்கிறார். அவரிடம் மானுடர்க்குரிய எதையும் நாம் எதிர்பார்க்கவியலாது" என்றான்.

சகதேவன் "எனில் ஒன்று செய்க, பேரரசி காந்தாரி பேரரசரை முதலில் சந்திக்கட்டும்" என்றான். நகுலன் எழுந்தமர்ந்தான். "ஆம், அது ஒரு நல்ல வழி" என்றான். "பேரரசியை சந்திக்கும் கணம் முதியவர் உளமுடைந்து கதறுவார். கொந்தளித்து கொதித்து மெல்ல ஆறி நிலைகொள்வார். அதன்பின் நாம் செல்வோம்" என்றான் சகதேவன். "அத்துடன் பேரரசியும் அரசரைக் கண்டு விழிநீர் உகுத்த பின் நிலைமீள்வார்." நகுலன் "பேரரசி நிறைநிலையில்தான் இருக்கிறார்" என்றான். "இல்லை, அவ்வாறு இருக்கவியலாது. எந்த அன்னையாலும் அவ்வண்ணம் இருக்கவியலாது. அவர் பேரன்னை" என்றான் சகதேவன். "இளையோனே, இன்று காலை சற்றுமுன் அவர் இளைய யாதவரை அருகே கண்டார். நிறைகுடம் என்றே தெரிந்தார். வாழ்த்துச்சொல் மட்டுமே அவர் நாவில் எழுந்தது" என்றான். "ஆம், அது அவர் நிறைநிலை. பேரரசியென அவர் முழுமைகொண்டவர். அன்னை அகத்தே கொதித்துக்கொண்டிருக்கிறார். எவர்மேல் எக்கணம் அந்த அனல் பெருகிப்பொழியும் என நம்மால் சொல்லிவிடமுடியாது" என்றான் சகதேவன்.

நகுலன் "அன்னை முகத்தை பலமுறை அருகெனக் கண்டேன். எனக்கு அவ்வாறு தோன்றவில்லை" என்றான். "அவர் அழுதாரா?" என்றான் சகதேவன். "இல்லை" என்றான் நகுலன். "நீயும் நானும் கதறிக்கொண்டிருக்கிறோமே" என்றான்

சகதேவன். "நாம் எளியோர்" என்று நகுலன் சொன்னான். "அவர்கள் பேரன்னை, ஆனாலும் உள்ளே ஓர் எளிய அன்னை உறைந்தாகவேண்டும். நெஞ்சிலறைந்து கதறுபவள். நிலையழிந்து விழுபவள். உலகையே பொசுக்கும் சினம் எழுபவள். மூன்று முழுமுதல் தெய்வங்களுக்கும் தீச்சொல்லிடுபவள்..." என்று சகதேவன் சொன்னான். "அச்சினப்பெருந்தெய்வம் எழுவதை நாம் காண்போம். ஐயமே இல்லை..." நகுலன் பெருமூச்சுவிட்டான்.

சகதேவன் "அன்னை தன் அரசரை சந்திக்கையில் அது வெளிப்பட்டால் பிழையில்லை. அவருடைய கொந்தளிப்பை தாங்கும் மலையென அவர் நின்றிருப்பார். அவர்கள் ஒருவரை ஒருவர் ஆற்றிக்கொள்வார்கள். அவர்களின் துயர் இன்னமும் வெளிப்பாடு கொள்ளாதது. துயர் வெளிப்பாடு கொள்கையில் குறைவது, இன்பம் வெளிப்பாட்டில் பெருகுவது. அத்தருணத்தை ஒருக்குவோம். அதன்பின்னர் அவர்களை நாம் சென்று சந்திப்போம். நாம் செய்வதற்கு உகந்தது இது ஒன்றே" என்றான். நகுலன் பெருமூச்சுவிட்டான். சகதேவன் கசப்பான சிரிப்புடன் "மைந்தரை இழக்கையில் பெண்கள் கணவர்கள்மேல் கடுஞ்சினம் கொள்கிறார்கள். வாழ்நாள் முழுக்க அவ்வெறுப்பை அவர்கள் பேணவும் செய்கிறார்கள்" என்றான்.

"ஏன்?" என்று நகுலன் திகைப்புடன் கேட்டான். "அறியேன். ஆனால் இதை நான் பலமுறை கண்டிருக்கிறேன்" என்றான் சகதேவன். "எனில்..." என்றான் நகுலன். ஒன்றும் சொல்லாமல் சகதேவன் பேசாமல் அமர்ந்திருந்தான். "ஆம்" என்றான் நகுலன். "நாம் இன்னமும் அவர்களை சந்திக்கவில்லை." சகதேவன் "அவர்கள் இன்று மாலை இங்கே வருகிறார்கள்" என்றான். "அவர்கள் வரவேண்டியதில்லை அல்லவா?" என்றான் நகுலன்.

“ஆனால் வரவிழைவதாக சொன்னார்கள்” என்று சகதேவன் சொன்னான். “அவர்களை எண்ணிப்பார்க்கவே இல்லை” என்றான் நகுலன். சகதேவன் கண்களை மூடிக்கொண்டான். நகுலன் கூரைச்சரிவை பார்த்தபடி சொல்லில்லா உள்ளத்துடன் படுத்திருந்தான்.

சகதேவன் பெருமூச்சுடன் எழுந்து சென்றான். நகுலன் துயில்வரக்கூடும் என எண்ணிக்கொண்டே படுத்திருந்தான். ஆனால் உள்ளம் விழிப்புகொண்டுவிட்டது. சென்ற பல நாட்களாக துயில் என அவன் உணர்ந்தது எல்லாம் எதிர்பாராதபோது அலையென வந்து அறைந்து சுழித்துக்கொண்டு சென்று எங்கெங்கோ ஆழ்த்தி மீளக் கொண்டுவீசும் ஒரு நிலைமறப்பை மட்டும்தான். புரவியூர்கையிலேயே துயில்கொண்டான். ஆனால் எண்ணிப்படுத்தால் துயில் மறைந்துவிடும். அவன் தன் அகத்தையே நோக்கிக்கொண்டு படுத்திருந்தான். அது எப்போது தன் மூடுதிரைகளை களையும்? எப்போது அந்த ஆழத்து நஞ்சை வெளியே எடுக்கும்? கூரிய முனையை தேடித்தேடிச் செல்லும் குழவியின் கை என அதை மட்டுமே அகம் நாடியது.

அத்தனை சொற்களும், நினைவுகளும் வெறும் நடிப்புகள் மட்டுமே. அத்தனை குவியல்களுக்கும் அடியில் அதுவே உயிருடன் இருக்கிறது. இரும்பாலும் கல்லாலும் மூடப்பட முடியாத ஒரு நோக்குபோல. அதை நோக்குவதொன்றே அதை ஒத்திப்போடுவதற்கான வழி. அதை நோக்கும்போது அது சுருங்கி மறைந்துவிடுகிறது. அப்படியே விட்டுவிட்டால் ஏதோ ஒரு கணத்தில் அது சுருளவிழ்ந்து எழுந்து சீறிக் கொத்துகிறது. இதோ அதை நோக்கிக்கொண்டிருக்கிறேன். அதற்காக

காத்திருக்கிறேன். எக்கணம் என் நோக்கு திசைமாறும்? எப்படி நான் அதற்கான விரிசலை வழங்குவேன்?

இதை நான் ஏன் செய்கிறேன்? அத்துயரை ஒத்திப்போடுகிறேன். இல்லை. அது மட்டும் அல்ல. அத்துயருடன் விளையாடுகிறேன். உயிர்ப்புண்ணைக்கூட தொட்டுத்தொட்டு விளையாடும் மானுடக் கை. விளையாடுவது மேலும் பெரிய ஒன்றை அகற்றுகிறது. இந்த வலியைவிட, இத்துயரைவிடக் கொடியது அது. காலமெனும் பெருந்துயர். இருத்தல் என்னும் மாபெரும்துயர். காலத்தை எதுவும் நிறுத்தமுடியாது, மூன்று முதற்தெய்வங்களுக்கும் அப்பாற்பட்டது அது. காலத்தை மூவரும் மூவகையில் வென்றனர். ஒருவன் கிடந்து துயின்றான். இன்னொருவன் படைப்பில் அதை கடந்தான். பிறிதொருவன் ஆடலில் அதை சுழற்றிக் கலைத்தான். இங்கே நிறைந்திருப்பவை அவை மூன்றும். உயிர்கள் துயில்கின்றன. படைக்கின்றன. முடிவிலாது ஆடுகின்றன. துயரை வைத்து ஆடுகின்றன. சாவை வைத்து ஆடுகின்றன.

கட்டவிழ்ந்து சூழ்ந்துகொண்டது துயர். அக்கணம் ஒரு மதகுவாயிலெனத் திறந்து அதை பெருக்கெடுக்கச் செய்தது. “மைந்தா... என் மைந்தா!” என்று விம்மியபடி அவன் அழுதான். நெஞ்சத்தசையை கையால் பற்றிக் கசக்கியபடி தொண்டை இறுகி மூச்சு தெறிக்க விம்மலும் விசும்பலும் கேவல்களுமாக அழுதுகொண்டிருந்தான். சூழ்ந்திருந்த இருளில் அவன் அழுகை பரவி அதை ஈரமும் எடையும் கொண்டதாக ஆக்கியது. அது அவன் மேல் அழுந்தி படுக்கைமேல் இறுக்கியது. உடல் பெரும்பாறையொன்றால் மண்ணுள் செலுத்தப்பட்டதுபோல் அசைவிழந்தது. அவன் மெல்ல ஓய்ந்தான். மைந்தன் மைந்தன்

மைந்தன் என்னும் சொல்லாக அவன் அகம் ஓடிக்கொண்டிருந்தது.

பின்னர் அவன் தன்னை உணர்ந்தபோது தனிமைதான் பெருகிவிட்டிருந்தது. ஆழ்ந்த அழுகைக்குப் பின் உணரும் விடுதலை அல்ல. மேலும் எடைகொண்டுவிட்டிருந்தான். இதை நான் கடக்கவே போவதில்லை. இது உயிர்கொல்லும் பிளவை. எனக்கு மட்டும் அல்ல இது. இங்கே அனைவருக்கும்தான். இத்தனை நேரம் அவனும் அழுதுகொண்டிருந்தான் போலும். ஆகவேதான் கிளம்பிச்சென்றான். நீயும் அழுக என விட்டுவிட்டுச் சென்றான். அவன் சகதேவனை நினைத்துக்கொண்டான். அந்தக் குடிலில் அதேபோல அவன் அழுதுகொண்டிருப்பதை.

விடிவதற்கு முன்னரே அவன் எழுந்துகொண்டான். துயிலவில்லை, ஆனால் அரைநாழிகை அவன் சித்தம் இல்லாமலாகி மீண்டது. அது துயிலுக்கிணையான ஓய்வை அளித்துவிட்டிருந்தது. அவன் வெளியே சென்றபோது விடியலின் ஓசைகள் காட்டிலிருந்து எழுந்தன. அப்பால் வேள்விச்சாலையிலிருந்து வேதச்சொல் ஒலித்தது. அவிப்புகையை முகர முடிந்தது. அரசர் வேள்விக்குச் சென்றிருப்பார் என எண்ணிக்கொண்டான். தௌம்யர் கூறும் எல்லா சடங்குகளையும் முறைப்படி செய்பவர் அவர்தான். பீமனும் அர்ஜுனனும் அங்கே இருப்பதாக நம்பிக்கை, அவர்கள் அவ்வப்போது காட்டிலிருந்து வந்துசென்றார்கள்.

நகுலன் புரவியை நோக்கி சென்றான். அது முதிய பெண்புரவி. அவன் அணுகுவதை உணர்ந்ததும் அது நீள்மூச்செறிந்து

செவிகளை முன்கோட்டியது. அதன் முன்னங்கால் முறிந்துவிட்டிருந்தது. அதற்கு கட்டுபோட்டிருந்தனர். மூங்கில் வைத்துக் கட்டி தேன்மெழுகும் அரக்கும் களிமண்ணும் குழைத்து பற்று போட்டு இறுக்கியிருந்தனர். முன்னங்காலில் எடை செலுத்தாமல் அது நடந்தது. அவன் அதன் முன்னங்கால்மேல் உடல் அமையாதபடி அமர்ந்திருக்க பயின்றிருந்தான். போருக்குப் பின் காட்டில் விடப்பட்ட புரவிகளில் ஒன்று அது. புரவிகள் அனைத்தும் கொன்று உண்ணப்பட்டன, பெண்புரவிகளைத் தவிர.

போருக்குப் பின் அவனை எந்தப் புரவியும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவன் அருகணையும்போதெல்லாம் அவை அச்சத்துடன் விழிசுழற்றி வாய்திறந்து நாக்கு வளைய பின்னடி எடுத்துவைத்து மெய்ப்புகொண்டன. மூச்சு சீற மெல்ல உறுமின. அவன் மென்சொல் உரைத்தும் கையசைவுகளால் அணுக்கமுத்திரை காட்டியும் அணுகும்போது மேலும் அஞ்சின. அவற்றின் அச்சம் என்ன என்று அவன் முதல் நாளுக்குப் பின்னரே உணர்ந்தான். அவ்வறிதல் அவனை சாவுக்கு நிகரான சோர்வை நோக்கி கொண்டுசென்றது. மைந்தர்துயர் இல்லையேல் அச்சோர்விலேயே உயிரை போக்கிக்கொண்டிருப்போம் என்று தோன்றியது. ஒரு துயரை இன்னொரு துயரே ஈடுசெய்ய முடியும். வெப்பம் வெப்பத்தால் ஈடுசெய்யப்படுகிறது என்கிறது மருத்துவநூல்.

அவன் அதுவரை ஊர்ந்து வந்த முதிய கடுவன்புரவி அன்று காலைதான் உயிர்விட்டது. அது நோயுற்றிருந்தது. அதன் வாயிலிருந்து கெடுமணம் எழுந்தது. அதன் வெளிப்போக்கு அழுகிய சடலம்போல் நாறியது. போரில் மானுடக்குருதியை உண்டுவந்தது அது. அதனால் காட்டுப்புல்லை அதன்பின்

விரும்பி உண்ண முடியவில்லை. நத்தைகளையும் தவளைகளையும் பிடித்துத் தின்றது. சிதல்புற்றுக்களையும் புழு அடுக்குகளையும் தேடி நா துழாவியது. நீளுடல் கொண்ட ஒரு சாரைப்பாம்பை அது கவ்வி வாய்க்குள் இழுத்து மென்று உண்பதை அவன் கண்டான்.

அதை அணுக வீரர்கள் அஞ்சினர். அது மானுடரை கடித்துக்குதறி குருதி உண்டது. அது குதிரையல்ல, வேங்கை என்றனர் வீரர். அவன் அதை காட்டுக்குள் கண்டான். அவனை தாக்கவந்த குதிரை நின்று செவிகூர்ந்து பின் உறுமியபடி விலகி ஓடியது. அவன் அதை துரத்திச் சென்று பிடித்தான். காட்டுக்கொடிகளால் அதை கடிவாளமிட்டு கொண்டுவந்தான். அச்சுறுத்தி அடக்கி அதை ஊர்தியாக்கினான். அவன் சொல்லும் சொற்கள் எதையும் அது செவிகொள்ளவில்லை. அதன் பழகிய உடல் ஆணைகள் தொடுகைகளாக எழுந்தபோது ஏற்றுக்கொண்டது.

ஆனால் அது அவனை தலைவனாகவோ நண்பனாகவோ ஏற்றுக்கொள்ளவே இல்லை. மானுடரை அது அடையாளம் காணவில்லை. விழியுருட்டி அனைவரையும் கவ்வ வந்தது. புல்லுண்ணவும் அன்னநீர் அருந்தவும் மறுத்துவிட்டது. அருகே நின்ற எருது ஒன்றைக் கொன்று குருதியுண்டபோது அதை மீண்டும் காட்டுக்குள் துரத்திவிடலாம் என்று யுதிஷ்டிரன் சொன்னார். சகதேவன் "அதை கொல்லாமல் காட்டில் விடலாகாது. குருதியுண்ணும் குதிரைகளின் கொடிவழி ஒன்றை அது உருவாக்கிவிடக்கூடும்" என்றான். "அதற்குள் குடியேறியிருப்பது என்ன என்று நாம் அறியோம்."

நகுலன் அது அவ்வண்ணம் நீணாள் வாழாது என்றான். அதன் வயிற்றுக்குரியது அல்ல குருதி. குருதியை உண்ணும்

விலங்குகளின் வயிற்றுக்குள் வாழும் தெய்வங்கள் வேறு. இது போரில் குருதியுண்டது, போருக்குப் பின் நிலைமீளாமல் தவிப்பது. சகதேவன் "நூல்களின்படி நாகங்கள் நஞ்சுகொண்டதும் பின்னாளில்தான். சிம்மங்கள் குருதிபழகியதும் இவ்வாறாக இருக்கக்கூடும்" என்றான். நகுலன் "புரவி தெய்வங்களால் ஆளப்படுவது. நாம் அதை இழிவுசெய்கிறோம்" என்றான்.

அதைப் பழக்கிஎடுக்க அவன் பலவாறாக முயன்றான். அவனை பலமுறை அது கடிக்க வந்தது. ஒருமுறை தோளில் குருதி பெருகும்படி கடித்தும்விட்டது. அக்குருதியை அது நா சுழற்றி உண்பதை அவன் அச்சத்துடன் நோக்கிக்கொண்டு நின்றான். அந்த நாச்சுழல்வு அச்சமூட்டியது. அதை அவன் உள்ளம் மறக்கவே இல்லை. அச்சுழலலில் தெரிந்த சுவை. தன் குருதியை தானே அவ்வண்ணம் நா திளைக்க உண்பவனாக உணர்ந்தான். உணவு செரிக்காமல் அது வயிறு வீங்கி இறந்தது. அது முந்தையநாள் ஒரு பூனையை முடியுடன் கவ்வி உண்டது என்றார்கள் ஏவலர்.

அதன் சாவுக்கணங்களில் அதன் விழிகளை அருகிருந்து நோக்கினான் நகுலன். அது அவனை வஞ்சத்துடன் நோக்கியது. அவன் அதன் முகத்தருகே தன் கையை கொண்டுசென்றான். அது தலைசுழற்றி அவனை கடிக்கவந்தது. அவன் அதன் கண்களிலிருந்த வெறிப்பை நோக்கினான். நெஞ்சு திடுக்கிட எழுந்துகொண்டான். அத்தனை புரவிகளும் அவனிடம் அதே வஞ்சத்தையே காட்டின. அவன் காலடியோசையிலேயே உடல்விதிர்க்க முகம் சுழற்றி மூச்சு சீறி மகிழும் புரவிகளை இனி பார்க்கப்போவதே இல்லை என உணர்ந்தான்.

காட்டுக்குள் அந்த முதிய பெண்புரவியைக் கண்டதும் அவன் அதை நோக்கியபடி நின்றான். அவனைக் கண்டதும் அது அருகே வந்தது. பின்னர் திகைத்ததுபோல நின்று செவிகோட்டியது. மூச்செறிந்தபடி மயிர்ப்பு கொண்டு வால்சுழற்றியது. பின்னர் மெல்ல பின்கால் எடுத்துவைத்தது. அவன் அதன் அச்சத்தை உணர்ந்து கைகூப்பினான். கண்ணீர் வார அவ்வாறே நின்றான். பின்னர் கண்களை மூடி நிலத்தில் அமர்ந்தான். அக்கணம் கத்தியை எடுத்து கழுத்தில் பாய்ச்சியிருப்பான். அவ்வாறான நூறு நூறு தருணங்களில் அவனைக் காத்த ஒன்றே அப்போதும் தடுத்தது.

அவன் அப்புரவி தன் அருகே வந்து நிற்பதை உணர்ந்தான். அது தன் உளமயக்கு என்று தோன்றியது. ஆனால் மெய்யாகவே அது வந்து அருகே நின்றிருந்தது. அவன் அதன் கழுத்தைத் தழுவியபடி "அன்னையே! அன்னையே!" என விம்மி அழுதான். அதன் கால்கள் உடைந்திருப்பதை கண்டான். அதனால் காட்டில் வாழமுடியும். ஆனால் அது மானுடருடன் குலத்தாரும் குட்டிகளும் சூழ வாழ்ந்து பழகியது. அவனுடன் வர அது விழைந்தது. அவன் அதற்கு கூழமை என்று பெயரிட்டான்.

கூழமை அவனைக் கண்டதும் மெல்ல தலையசைத்தது. அது வரவேற்பொலிகளை எழுப்புவதில்லை. எந்த உளக்கிளர்ச்சியையும் வெளிப்படுத்துவதில்லை. அதன் இயல்பான பொறைநிலையில் அனைவரையும் இணையாக நடத்தியது. அவன் அதன் கழுத்தையும் தோளையும் வருடினான். பின்னர் மேலேறி அமர்ந்துகொண்டு காந்தாரியின் குடில் அமைந்திருந்த பகுதி நோக்கி சென்றான்.

காந்தாரி துயில்கொள்ளவில்லை எனத் தெரிந்தது. அவளுடைய குடில் முன் பந்தம் எரிந்துகொண்டிருக்க அதன் ஒளியில் ஏவற்பெண்டுகள் நடமாடும் நிழலசைவு தெரிந்தது. நகுலன் அருகே சென்றபோது அவனை சத்யசேனை கண்டுகொண்டாள். ஏவற்பெண்டுகளுக்கு ஆணையிட்டபடி நின்ற அவள் அவனிடம் முகமனுரைத்தாள். அவன் புரவியிலிருந்து இறங்கி அருகே சென்று தலைவணங்கினான். "அரசி ஒருங்கிவிட்டார்... பிற அரசியரும் இளவரசியரும் விழித்தெழ இன்னும் பொழுதாகலாம்" என்றாள். "அவர்களுக்கு இன்று உச்சிப்பொழுதுவரை வேறு அலுவல்கள் இல்லை. பேரரசியிடம் மட்டுமே நான் சில சொல்லவேண்டும்" என்றான் நகுலன்.

"உள்ளே வருக!" என்றாள் சத்யசேனை. அவள் உள்ளே சென்று வரவறிவிக்க அவன் குனிந்து குடிலுக்குள் சென்றான். காந்தாரியின் குடில் பத்துபேர் படுக்கும் மஞ்சங்களுடன் அவள் அமர்ந்து விருந்தினரை சந்திப்பதற்குரிய பீடங்களுடன் பெரிதாகவும் விரிவாகவும் கட்டப்பட்டிருந்தது. அவள் இளஞ்சிவப்பு ஆடை அணிந்து ஓரிரு அணிகலன்களுடன் மரப்பீடத்தில் அமர்ந்திருந்தாள். அவன் முகமன் உரைத்து வணங்க அவள் அவனை வாழ்த்தி அமரும்படி கை காட்டினாள். அவன் அமர்ந்துகொண்டு "பேரரசி, தாங்கள் இன்று பேரரசரை சந்திக்கலாம். அவர் இன்னும் முக்தவனத்திற்குள் வரவில்லை. தாங்கள் சென்று அவரைச் சந்தித்து இருவராக உள்ளே நுழையலாம் என அரசர் எண்ணுகிறார். அரசரும் தங்களை சந்தித்து அடிபணிய விழைவுடன் இருக்கிறார்" என்றான்.

“ஆம், அவர் இங்கில்லை என அறிவேன்” என்றாள் காந்தாரி. “நானும் இளையோரும் சென்று அவருடன் இருக்கவேண்டும். நீர்க்கடன் என்பது ஆண்களுக்குரியது. பெண்டிர் துயர்த்துணை மட்டுமே.” நகுலன் “ஆம்” என்றான். “அதற்குமுன் நான் யாதவ அரசியையும் பாஞ்சாலத்து அரசியையும் சந்திக்கவேண்டும். அவர்கள் இங்குதான் இருக்கிறார்கள் அல்லவா?” நகுலன் மூச்சடைக்க பேசாமல் இருந்தான். “அவர்கள் இங்கிருப்பதாக அறிந்தேன்” என்றாள் காந்தாரி. நகுலன் இடறிய குரலில் “ஆம் அரசி, இங்குதான் இருக்கிறார்கள்” என்றான். “நான் அவர்களை சந்திப்பதில் அறப்பிழையோ நெறிமீறலோ இல்லை அல்லவா?” என்றாள்.

“அரசி, இது உங்கள் அரசு. இன்னும்கூட நீங்களே அஸ்தினபுரியின் பேரரசி. நீங்கள் சந்திப்பதற்கு நீங்களே முடிவெடுக்கலாம்” என்றான் நகுலன். “ஆனால்...” என்று மெல்ல சொன்னான். “அவர்கள் தங்கள் சந்திப்பை மறுக்கவியலாது. அவர்கள் எந்நிலையில் உள்ளனர் என்பதை நீங்கள்தான் உசாவி முடிவெடுக்கவேண்டும்” என்றான். காந்தாரி “அவர்கள் எந்நிலையில் இருந்தாலும் நான் அவர்களை சந்தித்தாகவேண்டும்” என்றாள். “பேரரசி, அவர்கள் இன்று மைந்தர்சிறந்த அன்னையரோ மண்வென்ற அரசியரோ அல்ல. அவர்கள் கொடுந்துயரில் மூழ்கியிருக்கிறார்கள். சாவுக்கும் மேலான துயர் அது.”

“மைந்தர்துயரை நானும் அறிவேன்” என்றாள் காந்தாரி. அப்போதுதான் தன் சொற்களின் பொருளின்மையை அவன் உணர்ந்தான். அவன் உள்ளம் குன்றியது. “நான் அவ்வாறு பொருள்கொள்ளவில்லை...” என்றான். “நான் அவர்களை சந்திக்கிறேன். என் மருகியரும் அவர்களை சந்திப்பது நன்று.

அதன்பின்னர் நான் அரசரை சந்திக்கச் செல்கிறேன்" என்று காந்தாரி சொன்னாள். நகுலன் "அவர்களில் என் அன்னை படுக்கையில் இருக்கிறார். விழிப்பு எழாதபடி அகிபீனா அளிக்கப்படுகிறது. அரசி திரௌபதியும் எங்கிருக்கிறோம் எவ்வண்ணம் இருக்கிறோம் என்று உணரா நிலையில் இருக்கிறாள்" என்றான். "ஆம், அதை உணர்கிறேன். நான் அவர்களை சந்திக்கவேண்டும்" என்றாள் காந்தாரி. "ஆகுக, அரசி!" என நகுலன் தலைவணங்கினான்.

அவன் வெளியே வந்தபோது சத்யசேனையும் சத்யவிரதையும் முற்றத்தில் நின்றிருந்தனர். அவன் தயங்கி நிற்க அவர்கள் அருகே வந்தனர். "அரசி..." என்றான் நகுலன். சத்யவிரதை "சொல்க!" என்றாள். "பேரரசி அன்னையையும் திரௌபதியையும் சந்திக்க விழைகிறார்கள்..." என்றான். சத்யவிரதை அவனை கூர்ந்து நோக்கினாள். "இத்தருணத்தில் அவர்கள் இருக்கும் நிலை... அதை என்னால் கூறிவிட முடியாது" என்றான் நகுலன். "அவர்கள் ஒரே ஒரு சொல்லால்கூடக் கொல்லப்படக்கூடும்... அதை மட்டுமே கூறவிழைகிறேன்." சத்யசேனை "நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்றாள். நகுலன் "இச்சந்திப்பு இப்போது தேவையில்லை" என்றான். "இதை தவிர்க்க இயலாது, ஆனால் ஒத்திப்போடலாம்... அருள்கூரவேண்டும்."

சத்யவிரதை மறுமொழி சொல்வதற்குள் சற்று அப்பால் நின்றிருந்த நிகுதி சீற்றத்துடன் உறுமலோசை எழுப்பியபடி அருகே வந்தாள். "தவிர்க்க முடியாது. இச்சந்திப்பு நிகழ்ந்தாகவேண்டும். எந்நிலையிலும் இச்சந்திப்பை தவிர்க்க முடியாது... அது என் தமக்கையின் உரிமை. அவருக்குள் யாதவநாட்டு இயக்கியிடமும் பாஞ்சாலத்துக் கொற்றவையிடமும் பேசுவதற்கு சொற்கள் இருக்குமென்றால்

அவற்றை அவர் கேட்டாகவேண்டும். அவருக்கு அதை மறுக்க எவருக்கும் உரிமை இல்லை.” அவள் விம்மலுடன் தன்னை திரட்டிக்கொண்டாள். “அவர் நெஞ்சுக்குள் நஞ்சென அச்சொற்கள் இருக்கும் என்றால் அவற்றை அவர் உமிழட்டும். எவர் இறந்தாலும் எங்களுக்கு ஒன்றுமில்லை. இத்தனை உயிர்களை குடித்துவிட்டு அவர்களுக்கு மட்டும் என்ன ஒரு வாழ்வு? பெற்ற மைந்தரையும் பெயர்மைந்தரையும் கொன்றுகளியாடியவர்களிடம் எவர் அளிகூரவேண்டும்?”

நகுலன் “மெய், ஒரு சொல்லையும் நான் மறுக்கவில்லை. உங்கள்முன் பெரும்பழி சேர்ந்தவனாகவும் கீழினும்கீழோனாகவும் மட்டுமே என்னால் நின்றிருக்க இயலும். ஒரு சொல்கூட நெறிசார்ந்து சொல்லும் தகுதி எனக்கில்லை. எங்களில் எவருக்குமே தெய்வங்களை நேர்நின்று நோக்கும் அறநிலை இல்லை. ஆயினும்...” என்றான். உளம் உலைந்து எழ இரு கைகளையும் நீட்டி “மைந்தன் என்றும் கொழுநன் என்றும் நான் இதை செய்தாகவேண்டும். அரசி உங்களிடம் அளி இரந்து நின்றிருக்கிறேன். அருள்க!” என்றான். சத்யசேனை ஏதோ சொல்ல முயல தேஸ்ரவை உரத்த குரலில் கூவியபடி முன்னால் வந்தாள். “நிறுத்துங்கள், அக்கையே. இவர்களுக்கு நீங்கள் ஒரு சொல்லும் அளிக்கலாகாது. எங்களை மீறி சொல்லளிக்கப்படும் என்றால் சங்கறுத்துச் செத்துவிழுவதே நாங்கள் செய்யக்கூடுவதாக இருக்கும்... ஆறு பாலைநிலத்துத் தெய்வங்களின் மேல் ஆணை! மூதன்னையர் மேல் ஆணை!” என்றாள்.

சத்யசேனை திகைத்து அவர்களை மாறிமாறி நோக்க நகுலன் “நன்று, அரசி. என்னால் உங்களுக்குள் பூசல் வேண்டாம். பேரரசி எண்ணியதே நிகழட்டும். அன்னையையும் அரசியையும் அவர்

உடனே சந்திக்க ஒருங்குசெய்கிறேன். இதுவரை இவையனைத்தையும் கொண்டுவந்து சேர்த்த ஊழே இதையும் நிகழ்த்துக" என்றான். தலைவணங்கி தன் புரவிமேல் ஏறிக்கொண்டான். அது முறிந்த காலை மெல்ல எடுத்துவைத்து மூச்சிளைப்பின் ஒலியுடன் நடக்கத்தொடங்கியது.

நீர்ச்சுடர் - 23

பகுதி நான்கு : கழுநீர்க் கரை – 4

நகுலன் யுதிஷ்டிரனின் குடிலருகே சென்று நின்றான். யுதிஷ்டிரனிடம் எதைப்பற்றியும் உசாவுவதில் பொருளில்லை என்று தோன்றியது. எதை கேட்டாலும் அதை அருகிருக்கும் எவரிடமேனும் வினவி அதே மறுமொழியை தானும் சொல்வதே அவருடைய வழக்கமாக இருந்தது. சகதேவனிடம் கேட்கலாமென்று தோன்றியது. பெரும்பாலான நிகழ்வுகளில் சகதேவன்தான் முடிவெடுத்துக்கொண்டிருந்தான். புரவியைத் திருப்பிய பின் மீண்டும் தயங்கினான். அவனிடம் கேட்பதிலும் பொருளில்லை. அப்போது செய்யக்கூடுவதாக ஏதுமில்லை. காந்தாரி குந்தியையும் திரௌபதியையும் சந்திப்பதை எவ்வகையிலும் தவிர்க்க இயலாது என்று பட்டது.

அவன் தன் புரவியைத் திருப்பி குடில்களின் முற்றங்கள் வழியாக மெல்ல செலுத்தி குந்தியின் குடிலை நோக்கி சென்றான். குந்தியின் குடிலுக்கு அவன் சென்று சில நாட்களாகிவிட்டிருந்தது. ஓரிருமுறைக்குமேல் அவன் அவளை சந்திக்கவில்லை. அவன் சென்று பார்த்தபோதெல்லாம் அவள் தன்னிலையில் இருக்கவில்லை. அகிபீனா மயக்கில் உயிரிலா

உடல் என மஞ்சத்தில் கிடந்தாள். அவளை நோக்கி நின்றபோது அவன் ஒருவகையான ஒவ்வாமையை உணர்ந்தான். தோல் வெளிறிச் சுருங்கியிருந்தது. தசைகள் ஒடுங்கி உடல் குறுகி நெற்றுபோலிருந்தாள். கண்கள் குழிந்து உள்ளே சென்றுவிட்டிருந்தன. உதடுகளும் உள்மடிந்து உதட்டுவரம்பைச் சூழ்ந்து சுருக்கங்களுடன் ஓரிரு நாட்களிலேயே பல்லாண்டு அகவையைக் கடந்து முதுமையை எய்திவிட்டிருந்தாள்.

அருகே நின்ற மருத்துவப்பெண்டு "நினைவு திரும்பவில்லை" என தணிந்த குரலில் சொன்னாள். "மீண்டெழுகையிலும் தன்னிலையழிந்தவராகவே தெரிகிறார். பித்தெழுந்து கூச்சலிடுகிறார். தன்னைத்தானே தாக்கிக்கொள்கிறார். எழுந்து வெளியே ஓட முற்படுகிறார். ஆகவே நினைவுமீளாமலிருப்பதே நன்று என்று மருத்துவர் சொன்னார்கள். அகிபீனா உணவு என அன்றாடமுறைமையாகவே அளிக்கப்படுகிறது" என்றாள். அவனுக்கு அந்த ஒவ்வாமை ஏன் என்று புரியவில்லை. அப்போது அவள் அரசியல்லாமல் ஆகிவிட்டிருந்தாள். அவளிடம் என்றுமிருந்த நிமிர்வும் விழைவின் விசையும் சூழ்ச்சித்திறனும் முற்றாக மறைந்து எந்தப் பாதுகாப்பும் இல்லாதவளாக ஆகிவிட்டிருந்தாள். அவள் பிறருடைய ஆதரவைத் தேடும் தருணம் அது. ஆனால் அவன் உள்ளம் அவளுக்காக கனியவில்லை. அங்கிருந்து உடனடியாக சென்றுவிடவேண்டும் என்றே தோன்றியது.

அதன்பின் அவளுக்குரிய அனைத்தையும் செய்ய அவன் ஆணையிட்டான். ஆனால் அவளை சந்திப்பதை ஒழிந்தான். அவளை அவ்வண்ணம் தவிர்ப்பது குறித்து குற்றவுணர்ச்சி கொண்டான். ஆனால் அவனால் அதை தன்னிரக்கமாக ஆக்கி விழிநீர் கசிந்து பின் பெருமூச்சுடன் கடக்கமுடிந்ததே ஒழிய

அவளைச் சென்று சந்திக்கமுடியவில்லை. சந்திப்பதிலும் பொருளில்லை, அவள் தன்னிலையில் இல்லை என எண்ணிக்கொண்டான். ஆனால் அது வெறும் பேச்சு என்றும் அறிந்திருந்தான். அவள் அவனை ஒருவேளை அடையாளம் காணக்கூடும். ஆனால் அந்த ஒவ்வாமை அவள் மேல் அல்ல. அவளென அங்கே எழுந்தமைந்துள்ளது பிறிதொன்று. மானுடரை மீறிய ஒன்று மானுடரில் திகழ்வது. மானுடரை வெறும் அடையாளமென்றாக்கிக் கொள்வது அது.

அவன் குந்தியின் குடிலை அடைந்தபோது என்ன செய்வதென்று முடிவுசெய்துவிட்டிருந்தான். மருத்துவப்பெண்டு அவனைக் கண்டு வந்து வணங்கி "யாதவ அரசி அகிபீனா மயக்கிலேயே இருக்கிறார்கள். எப்போது நினைவுமீளுமெனச் சொல்ல முடியாது" என்றாள். நகுலன் "நான் பேரரசியின் நிலையென்ன என்று நோக்கவே வந்தேன்" என்றான். பின்னர் "அவர்கள் அந்நிலையில் இருக்கட்டும். சற்றுநேரத்தில் பேரரசி காந்தாரி அவர்களை பார்க்க வரக்கூடும்" என்றான். அவன் சொல்வதை அவள் புரிந்துகொள்ளாமல் "அவர்கள் விழித்தெழ வாய்ப்பே இல்லை" என்றாள். "ஆம், அந்நிலையே நன்று. அவர்கள் சந்திக்காமல் இருப்பதே உகந்தது. பேரரசி அன்னையை வந்து பார்த்துவிட்டுச் செல்லட்டும்" என்றான். அவள் புரிந்துகொண்டு தலையசைத்தாள்.

அவன் மீண்டும் புரவியைச் செலுத்தி அந்தக் குடில்நிரையின் மறு எல்லையில் அமைந்த திரௌபதியின் குடில் நோக்கி சென்றான். அங்கே திரௌபதி இருப்பாளா என்ற ஐயம் அவனுக்கு ஏற்பட்டது. அவள் ஒரு சிறுகுடிலுக்குள் ஒடுங்கியிருப்பவள் அல்ல என்றே உள்ளம் சொல்லிக்கொண்டிருந்தது. ஆனால் பல நாட்களாக அவள்

குடிலின் இருளுக்குள் பிறர் முகம் நோக்காதவளாக ஒடுங்கிக்கிடக்கிறாள் என்றே செய்தி வந்துகொண்டிருந்தது. ஒருமுறைகூட அவன் அங்கே சென்று அவளை பார்க்கவில்லை. அவள்மேல் அவனுக்கு அச்சமே இருந்தது. அவள் முகம் நினைவிலிருந்தே அகன்று பிறிதொரு முகம் அங்கே பதிந்துவிட்டிருந்தது. அது எரிபுகுந்த மாயையின் முகம்.

செல்லச்செல்ல அவன் புரவியின் கால்கள் தள்ளாடின. அவனால் மேலும் செல்லமுடியவில்லை. புரவி நின்றுவிட்டது. அவன் அதை பலமுறை தட்டி ஆணையிட்டு முன்னால் செலுத்தினான். அது கனைத்துக்கொண்டும் இருமிக்கொண்டும் நடந்தது. திரௌபதியின் குடில்முன் ஏவல்பெண்டு நின்றிருந்தாள். அவனைக் கண்டதும் அருகே வந்து வணங்கினாள். "அரசியை பார்க்கவந்தேன்" என்று அவன் சொன்னான். அவள் "அரசி இங்கில்லை" என்றாள். அவன் திகைப்புகொள்ளவில்லை என்பது அவளை குழப்பியது. "அரசியை காலைமுதல் குடிலில் காணவில்லை. காலையுணவு கொண்டுவந்து வைத்தேன். அது அவ்வண்ணமே இருக்கிறது. அரசி எங்கே என்று உசாவினேன். காட்டுக்குள் சென்றுவிட்டதாக சொன்னார்கள். காட்டுக்குள் தேடிச்செல்லும் திறன் எனக்கு இல்லை. ஏவலர்களிடம் சொல்லி இளைய அரசர் சகதேவரிடம் செய்தியறிவித்தேன். அவ்வாறே விட்டுவிடும்படி அவர் ஆணையிட்டார். அரசியே திரும்பி வருவார் என்றார்" என்றாள்.

நகுலன் சில கணங்கள் அவளை வெறித்தபடி எண்ணத்தில் மூழ்கி நின்றான். பின்னர் "நன்று" என்றபடி புரவியை திருப்பினான். காந்தாரி வருகையில் திரௌபதி காட்டிலிருப்பதும் நன்றே. ஒவ்வொன்றும் உகந்தவகையிலேயே

நிகழ்கிறது. அவன் உள்ளம் எளிதாகிக்கொண்டே வந்தது. தன் முகத்தில் புன்னகை எழுந்திருப்பதைக் கண்டு அவன் வியந்தான். அத்தனை துயர்நிறைந்த சூழலிலும் சிறிய ஆறுதல்கள் இனிதாகவே இருக்கின்றன. எண்ணிய நிகழ்ந்தால் மானுடர் உலகம் தனக்கானது என்று எண்ணும் மாயைக்குள் சென்றுவிடுகிறார்கள். அல்லது துயர் கொண்டிருப்பவர்களின் இயல்பு போலும் இது. மிகச் சிறிய இன்பங்களைக்கூட அவர்கள் தவறவிடுவதில்லை. இருளில் ஒளிக்கென விழிகள் தேடிக்கொண்டே இருக்கின்றன.

நகுலன் காந்தாரியின் குடிலுக்குச் சென்றபோது சத்யசேனையும் சத்யவிரதையும் வெளியே நின்றிருந்தனர். அவன் அருகணைந்து "பேரரசி ஒருங்கியிருந்தால் அவர் அன்னையை காணச் செல்லலாம்... அன்னையின் உடல்நிலை நன்று அல்ல. அவர் தன்னினைவு இன்றி இருக்கிறார். இருப்பினும் பேரரசி அவரைப் பார்ப்பது நன்றுதான்" என்றான். சத்யசேனை "அக்கை கிளம்பிவிட்டார்... உங்களுக்காக காத்திருக்கிறார்" என்றாள். நகுலன் பெருமூச்சுவிட்டான்.

காந்தாரி வண்டியில் ஏறிக்கொள்ள அவளருகே சத்யசேனையும் சத்யவிரதையும் ஏறி அமர்ந்துகொண்டார்கள். நீண்டதொலைவு இல்லை என்றாலும் களைத்திருந்த காந்தாரியால் நடக்கமுடியாது என்று சத்யவிரதை சொன்னாள். வண்டியில் ஏறி அமர்வதற்குள் காந்தாரி பெருமூச்சுவிட்டாள். காலையொளி விரியத் தொடங்கியிருந்தது. முற்றத்தின் செம்மண் பரப்பு மிளிர்வுகொண்டது. மரக்கூட்டங்களுக்குள் ஒளி இறங்க இலைவடிவங்கள் துலங்கின. வண்டி மெல்ல முன்னால் செல்ல நகுலன் குதிரையில் உடன் சென்றான்.

அவன் உள்ளம் விந்தையான ஒரு தவிப்பை அடைந்தது. காந்தாரி கிளம்பும்வரை அவனிடம் ஒரு ஆறுதல்நிலை இருந்தது. ஆனால் அவள் வந்து வண்டியில் ஏறிக்கொண்டதும் அது அகன்றது. அவள் கிளம்பிச்செல்வதில் அரிதான ஒன்று இருந்தது. அத்தகைய ஒன்று வீணாக நிகழவிருக்காது. தெய்வங்கள் உச்சநிலைகளை விரும்புபவை. மானுடரை மோதவிட்டு கண்ணீரையும் குருதியையும் கண்டு மகிழ்பவை.

காந்தாரியின் தேர் குடில்முற்றங்கள் வழியாகச் சென்றது. அதன் ஓசைகேட்டு உள்ளிருந்து இளையஅரசியரும் இளவரசியரும் வந்து நோக்கினார்கள். காந்தாரி குந்தியின் குடில்முற்றத்தை அடைவதற்குள் நோக்குபவர்களின் உள்ளங்களில் எத்தனை பெரிய உணர்ச்சிநாடகங்கள் நடந்து முடிந்திருக்கும் என அவன் எண்ணிப் பார்த்தான். மானுடரும் உச்சங்களை விரும்புகிறார்கள். அவற்றை அவர்கள் வகைவகையாக நிகழ்த்திப்பார்க்கிறார்கள். அவற்றிலொன்றே உண்மையில் நிகழ்கிறது. நிகழ்ந்தவற்றை மீண்டும் பெருக்கிக்கொள்கிறார்கள். ஒரு நிகழ்வு நூறாகிறது, ஆயிரமாகிறது.

குந்தியின் குடில்முற்றத்தில் நின்றிருந்த மருத்துவப்பெண்டு வந்து வண்டியின் அருகே நின்று வணங்கினாள். சத்யவிரதை சத்யசேனை இருவரும் இறங்கி காந்தாரியை கைகொடுத்து இறக்கினர். சற்று தள்ளாடிய பின் காந்தாரி வண்டியை பிடித்துக்கொண்டாள். ஒளியில் அவளுக்கு கண்கள் கூசுவது தெரிந்தது. அவள் கைகளை நெற்றிமேல் வைத்து முகத்தை சுருக்கிக்கொண்டாள். வானில் ஒளி எழவில்லை என்றாலும் அவளுடைய வெண்ணிற முகம் சுடர்கொண்டிருப்பதாக நகுலனுக்குப் பட்டது. மருத்துவப்பெண்டு “வணங்குகிறேன்,

பேரரசி. யாதவ அரசி நோயுற்றிருக்கிறார். அவர்களுக்கு அகிபீனா அளிக்கப்பட்டுள்ளது. விழிக்காத துயிலில் பன்னிரு நாழிகைகள் சென்றுள்ளன. அவர்களின் உள்ளம் நைந்திருக்கிறது. தன்மாய்ப்புநோக்கு கொண்டிருப்பதனால் விழிக்கச்செய்ய வேண்டாம் என்பதே மருத்துவர்களின் கூற்றாக உள்ளது. அவர்களை இப்போது வெறுமனே நோக்கமட்டுமே இயலும்" என்றாள்.

"எங்கிருக்கிறார்?" என்று காந்தாரி கேட்டாள். "குடிலுக்குள் மஞ்சத்தில் படுத்திருக்கிறார்கள். தாங்கள் விழைந்தால் வெறுமனே உடலை மட்டும் நோக்கி மீளலாம்" என்றாள் மருத்துவப்பெண்டு. "செல்வோம்" என்றபடி காந்தாரி உள்ளே நுழைந்தாள். சத்யவிரதையும் சத்யசேனையும் உடன் சென்றனர். மருத்துவப்பெண்டு வெளியே நின்றுவிட்டாள். நகுலன் தயங்கி நிற்க சத்யவிரதை "நீயும் வரலாம், மைந்தா" என்றாள். நகுலன் உடன் உள்ளே சென்றான். குடிலுக்குள் இருட்டு நிறைந்திருந்தது. ஒரு சிறு நெய்விளக்கின் சுடர் திரி தாழ்ந்து எரிந்துகொண்டிருந்தது. குடில் மூலையில் இருந்த கலத்தில் கனல் சீறிக்கொண்டிருக்க எழுந்த மூலிகைப்புகை உள்ளே நிறைந்திருந்தது. தாழ்வான மூங்கில்படல் மஞ்சத்தில் குந்தி கிடந்தாள். சுருண்டு அதன் ஒரு ஓரத்தில் ஒடுங்கியிருந்தது அவள் உடல். நீலநரம்போடிய கைகள் மெலிந்து கொடிகள்போல மாறிவிட்டிருந்தன. கூந்தல் நன்றாக நரைத்து பெரும்பகுதி உதிர்ந்து விரிந்து முருக்குத்தடியாலான தலையணையைச் சுற்றிச் சிதறியிருந்தது. வெண்ணிற உடல், வெண்ணிற ஆடை. ஒரு கொக்கிறகு விழுந்து கிடப்பது போலிருந்தாள்.

அவள் ஆழ்ந்து துயில்வதுபோல் மூச்சு உரக்க ஓடிக்கொண்டிருந்தாலும் வாய் எதையோ சொல்வதுபோல் அசைந்தது. மூடிய இமைகளுக்குள் விழிகள் ஓடிக்கொண்டே இருந்தன. அவ்வப்போது உடலில் ஒரு விதிர்ப்பு உருவாகியது. அது சில தருணங்களில் மெல்லிய வலிப்பென ஆகி இடக்கையும் இடக்காலும் இழுத்துக்கொண்டன. காந்தாரி அவளருகே நின்று குனிந்து நோக்கினாள். சத்யவிரதை அருகே இருந்த மூங்கில் பீடத்தை இழுத்து அருகே போட்டாள். அவள் சத்யசேனையின் தோளைப் பற்றியபடி எடைமிக்க உடலைத் தாழ்த்தி அதன்மேல் அமர்ந்தாள். குந்தியின் கையை தன் கைகளுக்குள் எடுத்துக்கொண்டாள். அவளுடைய கைகளும் சிறியவைதான். ஆனால் குந்தியின் கை கருக்குழவியின் கைபோல் அவள் பிடிக்குள் இருந்தது.

அங்கே என்ன நிகழ்கிறது என்பதை நகுலனால் உணரமுடியவில்லை. ஆனால் ஏதோ ஒன்று நிகழ்ந்துகொண்டிருந்தது. சொல்லின்றி உள்ளம் மட்டும் திகழமுடியும் என்பதை, உடலில் இருந்து எழுந்து அது வெளிசூழ்கை என நிலைகொள்ள முடியும் என்பதை அவன் உணர்ந்தான். செவிகளிலல்லாது ஓர் இசை ஒலிக்கக்கூடும். விழியறியாத ஒளி ஒன்று துலங்கக்கூடும். அவன் தன் உள்ளம் ஏன் நெகிழவில்லை என எண்ணிக்கொண்டான். அத்தருணம் விந்தையான அமைதியை கொண்டிருந்தது. அது உணர்வுகளால் ஆனதாக இருக்கவில்லை. சொற்களால் ஆனதாகவும் இருக்கவில்லை. அதில் எந்த அலையும் இல்லை. ஒரு படிகத்துளிபோல் அசைவற்ற ஒளியாக இருந்தது. நீடுசெல்லும் காலம் கொண்டதாக, அழிவற்றதாக. அது அவன் முழு இருப்பையும் இனிமையாக ஆக்கியது. அந்த இனிமை என மட்டுமே அதை அவனால் உணரமுடிந்தது. அல்லது

அவ்வாறு அவன் அதை மீட்டு எடுத்துக்கொண்டான். அது வேறொன்று. அப்போது அவன் எதையும் உணரவில்லை. அதை உணரத்தொடங்கியதுமே அதிலிருந்து மீண்டுவிட்டான்.

குந்தி விழிகளைத் திறந்து காந்தாரியை பார்த்தாள். அவள் விழிகள் சிவந்திருந்தன. உதடுகள் துடித்தன. அவள் விழிகளிலிருந்து நீர் பெருகி கன்னங்களில் வழிந்தது. விசும்பல்களோ விம்மல்களோ இல்லாத அழுகை. உருகிவழிவதுபோல. கரைந்துகொண்டே இருப்பதுபோல. காந்தாரி அவள் கைகளை மிக மென்மையாக பற்றிக்கொண்டிருந்தாள். அத்தனை மென்மையாக ஆண்களால் எதையேனும் பற்றமுடியுமா என நகுலன் எண்ணினான். குந்தியின் உடலில் ஒரு மெல்லிய உலுக்கல் நிகழ்ந்தது. பின்னர் மெல்ல அவள் முகத்தசைகள் தளர்ந்தன. இமைசரிந்து விழிகள் மூடின. ஆனால் முழுமையாக இமை விழிகளை மூடவில்லை. கீற்றுபோல் ஓர் இடைவெளி தெரிந்தது. வாய் திறந்தபோது ஒட்டியிருந்த உதடுகள் விரிசலிட்டன. சிறிய வெண்பற்கள் தெரிந்தன. அவள் மூச்சு சீரடைந்தது.

காந்தாரி எழுந்துகொள்ளும் பொருட்டு கைநீட்டினாள். சத்யவிரதை சத்யசேனை இருவரும் அவளைப் பற்றித்தூக்கினர். அவள் சத்யசேனையின் தோளில் கைவைத்தபடி மெல்ல மூச்செறிந்தாள். அவர்கள் மூவரும் வெளியே சென்றார்கள். அவள் திரும்பியபோது மெல்லிய விளக்கொளியில் நகுலன் அவள் முகத்தை நோக்கினான். அங்கே விழிநீர் தெரியவில்லை. விழிகள் நீர்மைகொண்டவைபோலத் தோன்றின. அது விளக்கொளியின் மினுப்பு என்றும் தோன்றியது. அவர்கள் வெளியே சென்றபின் அறை மெல்ல சுருங்கி மீண்டும் தன்னிலை கொள்வதுபோலத்

தோன்றியது. நகுலன் குந்தியின் முகத்தை நோக்கினான். அவள் புன்னகைப்பது போலிருந்தது. அவன் அகம் திடுக்கிட்டது. கூர்ந்து நோக்கியபோதும் அவ்வாறே தெரிந்தது. முகத்தசைகள் நெகிழ்ந்திருந்தமையாலும் உதடுகள் விரிந்து பற்கள் தெரிந்தமையாலும் எழுந்த தோற்றம் அது என அவனுக்குத் தெரிந்தது. ஆயினும் அது புன்னகை என்று எண்ணவே அவன் விழைந்தான்.

நகுலன் வெளியே வந்தபோது காந்தாரியும் சத்யவிரதையும் வண்டியில் ஏறிவிட்டிருந்தனர். சத்யசேனை கீழே நின்றிருந்தாள். அவன் அவளை அணுகி "பாஞ்சாலத்து அரசியிடம் செல்வதென்று பேரரசி கூறுகிறாரா?" என்றான். "அவர் மற்றொன்று சொல்லவில்லை. எனில் அவர் அங்கே செல்ல விழைகிறார் என்றே அதற்குப் பொருள்" என்று அவள் சொன்னாள். "நன்று" என்று அவன் தன் புரவியை அணுகினான். சத்யசேனை "பேரரசியின் உள்ளம் எனக்கும் புரியாததாகவே உள்ளது" என்றாள். அவன் விழிசுருக்கி நோக்கி நின்றான். அவள் சொல்லவருவதென்ன என்று புரியவில்லை. "பேரரசி இதுவரை உளமுடைந்து அழவில்லை... அவர் அத்தனை தன்னுறுதி கொண்டவர் அல்ல. மெய்யாகவே அவர் இப்படி இருப்பது எனக்கு திகைப்பாக உள்ளது" என்றாள். நகுலனின் அகம் நடுக்கம் கொண்டது. ஆனால் என்ன சொல்வதென்று தெரியவில்லை.

மிகத் தாழ்ந்த குரலில் விசையுடன் தெறித்த சொற்களால் சத்யசேனை "எனக்கு அச்சமாகவே உள்ளது. என்ன நிகழுமென்று சொல்லக்கூடவில்லை. பேரரசி பாஞ்சாலத்து அரசியை சந்திப்பது நன்று என்று எனக்குப் படவில்லை.

எவ்வண்ணமேனும் அதை தவிர்ப்பது நன்று" என்றாள். "நான் அஞ்சிக்கொண்டேதான் இருக்கிறேன், மைந்தா. அவர் இளைய யாதவரைக் கண்டதும் கொந்தளிப்பார் என கருதினேன். பின்னர் அந்த நிலையழிவை புரிந்துகொண்டேன். குந்திதேவியிடம் அவர் அனல்கொண்டெழுவார் என்று ஐயமிருந்தது. ஆனால் குந்திதேவி நினைவிலாது கிடக்கிறார் என்பது ஆறுதலளித்தது. இப்போது நிகழ்ந்ததைப் பார்க்கையில் இதுவே அக்கையின் இயல்பு என்று தோன்றுகிறது. ஆயினும் அச்சம் நீங்கவில்லை. ஒருவேளை இவையனைத்தும் அங்கே அக்கை பெருகியெழும்பொருட்டே என்று இருக்கக்கூடும்..." நகுலன் "நான் என்ன செய்யவேண்டும்?" என்றான். "சென்று அவள் அங்கில்லாதபடி ஏதேனும் செய்" என்றாள் சத்யசேனை. "அவள் அங்கில்லை" என்று நகுலன் சொன்னான். "அவள் காட்டுக்குள் சென்றிருக்கிறாள் என்று காலையில் செய்தி வந்தது. பேரரசி அவளை சந்திக்க வாய்ப்பில்லை."

சத்யசேனை பெருமூச்சுவிட்டு "எனில் நன்று... தெய்வங்கள் துணையிருக்கட்டும்" என்றாள். அவள் முகத்தில் கலக்கம் அகலவில்லை. "அக்கையின் உள்ளத்தை நான் நன்கறிவேன் என்பார்கள். அவ்வண்ணம் நானும் நம்பியிருந்தேன். உண்மையில் மானுட உள்ளத்தை இன்னொருவர் அறியவே முடியாதென்பது இத்தகைய தருணங்களில்தான் தெரியவருகிறது. அக்கை இத்துயரைக் கடந்தவர் அல்ல. அவர் இங்கே உளம்பரப்பி வாழ்பவர். பெருமரங்களைப்போல கிளையையும் தடியையும்விட பெரிய வேர்கள் கொண்டவர். அரசி அல்ல, அன்னை. மைந்தர்களும் பெயர்மைந்தர்களும் மறைந்ததை அவரால் தாள முடியாது. ஆகவே இந்த நிறைநிலை என்னை அச்சுறுத்துகிறது. ஏதோ ஒரு கணத்தில் அவர் வெடித்து எரிந்து அழிந்துவிடுவார் என்று

தோன்றுகிறது...” அவள் மூச்சை இழுத்தபோது கழுத்துக்குழிகள் ஆழ்ந்திறங்கின. “அல்லது எவர்மீதேனும் கொடும் தீச்சொல்லை உமிழக்கூடும்... என்ன இருந்தாலும் நீங்கள் என் மைந்தர்.”

“அக்கையே” என்று சத்யவிரதை உள்ளிருந்து அழைத்தாள். சத்யசேனை “வந்துவிட்டேன்” என்று வண்டியில் ஏறிக்கொண்டாள். நகுலன் அவளை சில கணங்கள் நோக்கிநின்றான். மீண்டும் அந்தப் பதற்றத்தை அடைந்தான். திரௌபதி தன் குடிலில் இருக்கமாட்டாள் என்று நம்புவது என் விழைவுக்கற்பனையாக இருக்கலாம். அவள் அங்கே மீண்டு வந்திருக்கலாம். இத்தருணத்தை தெய்வங்கள் அமைத்திருக்கின்றன எனில் இதற்கு இலக்கையும் அவை உருவாக்கியிருக்கும். ஒவ்வொன்றாகக் கடந்து காந்தாரி சென்று நிற்கப்போவது திரௌபதியின் முன்னால் என தெய்வங்கள் வகுத்திருக்கலாம். ஆனால் அம்முறை மெல்லிய ஆர்வம் ஒன்று எழுவதை உணர்ந்தான். என்ன நிகழும்? விந்தையான, அச்சமூட்டுவதாகிய, எண்ணி எண்ணி உளமழியக்கூடிய ஒன்று. சொல்லிச்சொல்லிப் பெருக்கவேண்டிய ஒரு தருணம். அதில் உடனிருக்கவேண்டும் என்ற முதிரா விழைவு. இச்சலிப்பூட்டும் நாட்களில் ஓர் உச்சம். அவ்வாறு ஒன்று நிகழ்ந்தால் இச்சிறு துயரங்களெல்லாம் மறைந்துவிடும். தெய்வங்கள் வாய்ப்பளித்தால் என் சிறு அல்லல்களை எல்லாம் திரட்டி ஒரு பெருந்துயராக மாற்றிக்கொள்ளலாமா என்றே கேட்பேன்.

அல்லது அவள் மேல் கொண்ட வஞ்சமா இது? அவளை காந்தாரி தீச்சொல்லிடவேண்டுமென விழைகிறேனா? உடனே உள்ளம் அதை மறுத்தாலும்கூட அது அத்தனை எளிதாக கடந்துவிடக்கூடியது அல்ல என்றும் தோன்றியது. இந்தக் குடில்களில் திரௌபதிமேல் வஞ்சமில்லாத எவரேனும் இன்று

இருக்கக்கூடுமா? அவளே இவ்வழிவனைத்திற்கும் முதன்மையாக வழிவகுத்தவள் என்று அனைவரும் நம்புகிறார்கள். அவளை பழிக்கிறார்கள். அவள் தன் மைந்தரை இழந்து கொடுந்துயரில் உழல்வதைக் கண்டு உள்ளூர நிறைவு கொள்கிறார்கள். மேலும் ஒன்று அவளுக்கு நிகழவேண்டும் என விழைகிறார்கள்.

நானும் அவ்வண்ணம்தான் எண்ணுகிறேன். எனக்குத் தெரியும் என் விழைவின் விசை என்ன என்று. என் ஆணவம் எவ்வண்ணம் புளித்து நஞ்சாகியதென்று. எனினும் நான் அவளை பழித்தேன். அதனூடாக என்னை அழுத்தும் துயரிலிருந்து விடுபட்டேன். ஒவ்வொருவருக்கும் பழிசுமக்க இன்னொரு மானுடர் தேவைப்படுகிறார். அனைத்துக்கும் முழுப் பொறுப்பேற்க எவராலும் இயல்வதில்லை. யுதிஷ்டிரனேகூட "எங்கே இவை தொடங்கின, இளையோனே? நாம் பிறக்கும் முன்னரே இவை தொடங்கிவிட்டன என்கிறார்கள். சத்யவதியின் பெருவிழைவே குருக்ஷேத்ரமென விளைந்தது என்கிறார்கள். அவர் நமக்கு கருவிலேயே அளித்துவிட்டுச் சென்ற துயரா இது?" என்று ஒருமுறை சொன்னார். "ஒன்றிலிருந்து ஒன்றென துயரும் வஞ்சமும் தீயும் பற்றிக்கொள்கின்றன என்கின்றது நெறிநூல்" என்று சொல்லி நீள்மூச்செறிந்தார்.

இன்னமும் பாண்டவ அரசியர் வந்துசேரவில்லை. அவர்கள் பாஞ்சாலத்து அரசியை வசைகூறிப் பழித்து கதறியழுததாக ஒற்றர்கள் கூறினார்கள். தேவிகை தலையிலறைந்து கதறியபடி மயங்கி விழுகையில் "அக்குடிகேடியால் அழிந்தது என் குலம். அவள் ஆணவத்தால் அழிந்தது அஸ்தினபுரியின் குடி!" என்று கூவினாள். விஜயை நெஞ்சிலறைந்து அழுதபடி வெளியே

ஓடிவந்து முற்றத்திலிருந்து கைப்பிடி மண் எடுத்து பாஞ்சாலம் அமைந்த வடமேற்கு நோக்கி வீசி "உன் குருதி ஒருதுளியும் இப்புவியிலெஞ்சாது ஒழிக! நீ கொண்ட அனைத்தும் உன் கண்முன் அழிந்து மறைக! ஓயாத் துயரில் ஒரு நாளும் நீ துயிலமுடியாதாகுக!" என்று தீச்சொல்லிட்டாள். பாண்டவ அரசியர் இங்கே வந்து திரௌபதியை சந்திக்கையில் என்ன நிகழும்? அதற்கு முன் இதோ காந்தாரி அவளை சந்திக்கவிருக்கிறார்.

காந்தாரி வசையுரைக்கலாம். தீச்சொல்லிடலாம். என்ன செய்வாள்? திரௌபதி முன்பென்றால் வேங்கைபோல் வெறிக்கும் விழிகளுடன் நோக்கி நின்றிருப்பாள். ஒரு சொல் உரைக்கமாட்டாள். எவருடைய சினமும் பழியுரையும் அவளை சென்றடையாது. மானுடரின் வாழ்த்துக்கூச்சல்களுக்கும் கண்ணீருக்கும் அப்பால் நின்றிருக்கும் கருவறைத்தெய்வம் போலிருப்பாள். ஆனால் இன்று எந்நிலையில் இருக்கிறாள்? அவள் உருமாறிவிட்டிருப்பதை இருமுறை தொலைவிலிருந்து பார்த்தான். உடல் மெலிந்தமையால் மேலும் உயரமாகி சற்றே கூன்கொண்டவள்போல் தோன்றினாள். கன்ன எலும்புகள் மேடாகி எழ, முகவாய் உந்தி பற்கள் சற்றே முன்னெழ, கண்கள் குழிக்குள் பதிந்துகொள்ள அவள் அவன் அறிந்தவளே அல்ல என்று தோன்றினாள். நாட்கணக்காக துயில்நீப்பு. இருளில் முடங்கிய தனிமை. அவள் விழிகளில் என்றுமிருக்கும் நேர்நோக்கின் ஒளி மறைந்து தீரா நோயாளிகளுக்குரிய பொருளில்லா வெறிப்பு வந்துவிட்டிருந்தது.

அவன் அவளை எண்ணி அப்போது துயர்கொண்டான். அவள் ஒரு கொடியடையாளம் மட்டுமே. நாவாயை கொடி இட்டுச்செல்வதுபோலத் தோன்றுவது ஒரு விழிமயக்கு.

நாவாய் கொடியை கொண்டுசெலுத்துகிறது. அதன் கூம்புவடிவும், பாய்களும், துடுப்பும், சுக்கானும். அதை அறியாத எவரேனும் உண்டா? ஆயினும் அவளை அனைத்துக்கும் முதன்மை என்று கொள்வதில் எவருக்கும் தயக்கமில்லை. உண்மையில் அவளை அனைவரும் முன்னிறுத்தியதே அதற்காகத்தான். மாமானுடர் திரளுக்கு கேடயங்கள்போல. முதற்களப்பலிகள் அவர்களே. அவர்களை அதன் பொருட்டே தலைமையில் நிறுத்தி வாழ்த்துகிறார்கள். அவர்கள் பலியான பின் தெய்வமாக்குகிறார்கள். அவளிடம் இச்சூழலே கேட்டுக்கொண்டிருக்கிறது, அவள் இவையனைத்துக்கும் பொறுப்பேற்றுக்கொண்டு தன்னை பலியிடவேண்டும் என்று. அதன்பொருட்டு காத்திருக்கிறது, அதற்காக அவளை அழுத்துகிறது.

அவள் அதை செய்யக்கூடியவள்தான். ஏனென்றால் அவ்வாறு எழுந்து முன்செல்கையில், எரிந்தழிகையில்தான் அவர்களின் ஆணவம் நிறைவடைகிறது. மாமானுடர் என்பவர் ஆணவத்தாலானவர்கள். ஆணவமே அவர்களை பேருருக்கொள்ளச் செய்கிறது. ஆற்றல்கொள்ளச் செய்கிறது. தலைமைகொள்ள வைக்கிறது. வெல்லவும் தருக்கவும் செய்கிறது. பொறுப்பேற்று பலியாவதென்பது தன்னை அளித்து இறுதிவெற்றியை ஈட்டுவது. தெய்வமாவது. தெய்வமாவதே மானுட ஆணவம் கொள்ளும் அறுதிவிழைவு. அதற்குக் குறைவாக எதனாலும் அது நிறைவுறாது. கொள்க என்னை என காலத்தின் முன் தலைகாட்டி நின்றிருக்கிறார்கள். எரிந்தழிய ஒரு முற்றம்தேடி அலைகிறார்கள். அவள் காத்திருக்கிறாள், இங்கு எதையோ அவள் முடிக்கவேண்டியிருக்கிறது.

அவன் தொலைவிலேயே திரௌபதியின் குடிலைப் பார்த்து அவள் உள்ளே இருப்பதை உணர்ந்துவிட்டான். வாயிலில் நின்றிருந்த ஏவல்பெண்டு அவனைப் பார்த்துவிட்டு ஓர் அடியெடுத்துவைத்து பின் திகைத்து நின்றாள். அவன் புரவியின் கடிவாளத்தை இழுத்து நிறுத்தினான். தான் எதுவும் செய்யவேண்டியதில்லை என்று தோன்றியது. நிகழ்வது நிகழட்டும். பேரரசியே சென்று திரௌபதியை சந்திக்கட்டும். அவன் நெஞ்சு படபடத்தது. குடிலை நோக்கியபடி அசையாமல் புரவிமேல் அமர்ந்திருந்தான். அக்குடிலைப் பார்க்கையிலேயே அவள் உள்ளே இருப்பது எப்படி தெரிகிறது? அந்தக் காட்சியை உள்ளம் பலமுறை நடித்துவிட்டிருந்தது. அது நுண்ணுணர்வை கூர்தீட்டியிருந்தது.

வண்டி சகடங்கள் உரசும் ஒலியுடன் நின்றது. உள்ளிருந்து சத்யவிரதை எட்டிப்பார்த்து "பேரரசி திரும்பிச்செல்ல ஆணையிடுகிறார்" என்றாள். நகுலன் திகைப்புடன் "என்ன?" என்றான். "பேரரசி இப்போது பாஞ்சாலத்து அரசியை சந்திக்க விழையவில்லை. திரும்பிச்செல்ல ஆணையிடுகிறார்." நகுலன் பெருமூச்சுவிட்டான். "ஆம், அதுவும் நன்றே" என்றான். அவன் கைகாட்ட வண்டி திரும்பியது. சத்யசேனையின் விழிகளை அவன் விழிகள் சந்தித்தன. சத்யசேனை புன்னகை செய்தாள். வண்டி செல்லத்தொடங்கியதும் அவன் புரவியில் அமர்ந்தபடியே திரும்பி திரௌபதியின் குடிலை நோக்கினான். காந்தாரி ஏன் திரௌபதியை சந்திக்கத் தயங்கினாள் என்னும் வினா எழுந்தது. அதை அப்படியே தவிர்த்துவிட்டு புரவியைச் சுண்டி வண்டியைத் தொடர்ந்து சென்றான்.

நீர்ச்சுடர் - 24

பகுதி நான்கு : கழுநீர்க் கரை – 5

நகுலனின் எண்ணத்தில் எஞ்சியதெல்லாம் ஒன்று மட்டுமே, காந்தாரி அடுத்ததாகச் செல்லும் இடம். வண்டியின் இணையாக புரவியில் சென்றபடி அவன் அவள் தன் குடிலுக்கு மீளவேண்டும் என விழைந்தான். அவள் சற்றே ஓய்வெடுக்கவேண்டும். சற்று துயில்கொண்டால் அவள் பிறிதொருத்தி ஆகிவிடக்கூடும். அவள் இருக்கும் நிலையை அவன் எவ்வகையிலோ உணர்ந்துகொண்டுவிட்டிருந்தான். அவனை அது பதறச் செய்தது. புரவியின் மேல் அமர முடியாதபடி உடலை அதிர்வுகொள்ள வைத்தது.

வண்டி திரும்பிய திசை காந்தாரியின் குடில் என்பதே அவனுக்கு இருந்த ஆறுதலாக இருந்தது. ஆனால் சற்று நேரத்தில் வண்டி விசையழிந்தது. சத்யவிரதை வெளியே நோக்கி "அக்கை பேரரசரை காணச்செல்ல ஆணையிடுகிறார்" என்றாள். "ஆம், ஆணை" என்ற நகுலன் "ஆனால் அவர் எவ்வண்ணம் இருக்கிறார் என நாம் அறியோம். இப்போதிருக்கும் நிலையில்..." என்றபின் "நான் ஓர் ஏவலனை அனுப்பி அவரிடமிருந்து ஆணை பெற்று வருகிறேன்" என்றான். அவனுக்கே தன் குரலின் நடுக்கம் விந்தையாக இருந்தது. "பேரரசி தன் குடிலில் சற்று ஓய்வெடுக்கையில்..." என்றான்.

சத்யவிரதை இடைமறித்து "இப்போதே செல்லவேண்டும் என பேரரசி ஆணையிடுகிறார்... பேரரசரின் நிலை எதுவாக இருப்பினும் பேரரசிக்கு அது தடை அல்ல" என்றாள். "ஆம்" என்று சொல்லி நகுலன் தளர்ந்தான். ஆம், இதுவே நிகழவிருக்கிறது. எவ்வகையிலும் தடுக்க முடியாது. இது

ஒன்றே எஞ்சியிருக்கிறது. "ஆணை" என மீண்டும் தலைவணங்கி முன்னால் சென்று வண்டியோட்டியிடம் "பேரரசரின் குடிலுக்கு" என்றான். வண்டியோட்டியின் விழிகளில் ஓர் உணர்வும் வெளிப்படவில்லை என்றாலும் அவனுக்கு அவன் ஏதோ சொல்லவருவதாகப் பட்டது. தன் உள்ளத்தில் ஒரு கணம் அவன் விழிமுனை எஞ்சி பின் அணைந்ததுபோல் உணர்ந்தான்.

விழிகளை சுழற்றியபோது ஓர் ஏவலன் கண்ணுக்குபட்டான். அவனை விழிகளால் அருகழைத்தான். "சஞ்சயனிடம் பேரரசி அணுகிக்கொண்டிருப்பதாக சொல்" என்றான். ஏவலன் "ஆணை" என்றான். "புரவியில் முடிந்தவரை விரைவில் செல்" என்றான் நகுலன். "ஆணை" என்றபின் அவன் புரவி நோக்கி ஓடினான். வண்டியோட்டி திரும்பி நோக்கினான். நகுலனின் விழிகளிலிருந்து ஆணையை பெற்றுக்கொண்டான். வண்டி விரைவழிந்தது. சற்றே முன்னால் சென்று சுற்றுப்பாதையை தெரிவு செய்து செல்லத்தொடங்கியது. நகுலன் புரவிமேல் உடல் தளர்ந்து அமைந்தான்.

திருதராஷ்டிரரை அவனோ பாண்டவர்களோ அதுவரை நேரில் சந்திக்கவில்லை. அவர் எவ்வண்ணம் இருக்கிறார் என்பதை ஒற்றர்கள் வந்து சொன்னதிலிருந்து கற்பனை செய்து நிகழ்த்தி நோக்கிக்கொண்டிருந்தார்கள். நோக்குமாடத்தில் இருந்து மலையிறங்கி வரும்போது அவர் "ஏன் நாம் செல்கிறோம்? போர் என்ன ஆயிற்று?" என்று உசாவிக்கொண்டிருந்தார். "பேரரசே, போர் முடிந்துவிட்டது" என்று சஞ்சயன் சொன்னான். "முரசறிவிப்பு எழவில்லையே. என் மைந்தனின் வெற்றியை நீ எவ்வண்ணம் அறிந்தாய்?" என்று திருதராஷ்டிரர் கேட்டார். சஞ்சயன் அத்தருணத்தை இயல்பாகக் கடந்து "வெற்றியை

எவ்வண்ணமும் அறியலாகும்... ஏன் போர்முரசுகள் முழங்கவில்லை என நாம் அவரை நேரில் சந்திக்கையில் உசாவுவோம்" என்றான்.

கீழிறங்கிவருகையில் திருதராஷ்டிரர் முரசொலிகளை கேட்டுவிட்டார். "ஆ! முரசொலி! வெற்றி முரசின் ஒலி! ஆம்! அது வெற்றிமுரசொலியேதான்!" என்று கூவினார். பற்கள் வெண்ணிறமாக ஒளிகொண்டு தெரிய இரு கைகளையும் விரித்துத் தூக்கி "அவன் வென்றான்! அவன் வெற்றிகொண்டான்! கௌரவர்களுக்கு வெற்றி! குருகுலத்திற்கு வெற்றி!" என்று கூச்சலிட்டார். சஞ்சயன் திரும்பி அவர் முகத்தையே திகைப்புடன் நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தான். அவருடைய முகம் உவகையால் விரிந்து கன்னத்தசைகள் நெளிந்தன. மெய்யான உவகை. தெளிவாகவே முரசுகள் பாண்டவர்களின் வெற்றியை அறிவித்துக்கொண்டிருந்தன. "இந்திரப்பிரஸ்தத்திற்கு வெற்றி! யுதிஷ்டிரனுக்கு வெற்றி! பாண்டவர்களுக்கு வெற்றி!"

மேலும் மேலும் முரசொலி வலுக்க அவன் அவர் முகத்தையே ஊன்றி நோக்கினான். அம்முரசொலியை முதலில் அவன் அஞ்சி அதை தவிர்க்க எண்ணினான். ஆனால் பின்னர் அதுவே நல்ல வழி, அவ்வண்ணமே அவர் அறியட்டும் என தோன்றியது. ஆனால் அவர் கைகளை அதன் தாளத்திற்கு ஏற்ப அசைத்து தலையை உருட்டி விழியின்மைக்குழிகள் துள்ளி குழம்ப "வெற்றி! வெற்றி! வெற்றி!" என்று கூச்சலிட்டுக்கொண்டிருந்தார். மெல்ல மெல்ல அவன் உளம் தளர்ந்தான். அது நடிப்பு அல்ல. மெய்யாகவே அவருக்கு அவ்வண்ணம்தான் செவிகளில் விழுகிறது. அதை எப்படி கலைக்கப்போகிறோம் என்னும் அயர்வை அடைந்தான்.

மலையிலிருந்து கீழே வருந்தோறும் அவன் அவர் உடைந்து பெருகிக் கொந்தளித்து எழும் அக்கணத்திற்காக நெஞ்சம் துடிக்க காத்திருந்தான். மிக மெல்லிய ஒரு நீர்க்குமிழி என அவன் அவரை கொண்டுவந்தான். இக்கணம் இதோ இக்கணம் இன்னொரு கணம் என காலத்தை கடந்தான். ஆனால் அவர் அந்த உளம்பெருகிய நிறைநிலையிலேயே இருந்தார். இனிய பெருமூச்சுடன் "மைந்தர்கள் வெற்றி கொண்டாடிக்கொண்டிருப்பார்கள்!" என்றார். உரக்க நகைத்து "எந்த மகிழ்ச்சியையும் உண்டாட்டாகவே அவர்களால் கொண்டாட இயலும்... இந்நேரம் அவர்கள் தின்று குடித்து கூச்சலிட்டுக்கொண்டிருப்பார்கள்!" என்றார்.

கைகள் இரு நாகங்கள் என அலைய "அவர்கள் நானே. நான் என் அகத்திலிருந்து பெருகி எழுந்து பரவியதுதான் அவர்கள். நிமித்திகர் சொல்வதுண்டு, என் விழியின்மையிலிருந்து அவர்கள் விழிகொண்டார்கள் என. என் விழைவிலிருந்து அவர்கள் உயிர்கொண்டார்கள். இவ்வுடற்சிறைக்குள் இருந்துகொண்டு பெருகுக நான் என என் ஆத்மா தவித்தமையாலேயே நூறென ஆயிரமென ஆனேன். கந்தகம் இருந்த இடத்திலிருந்துகொண்டே காற்றை நிறைப்பதுபோல அஸ்தினபுரியை நிரப்பினேன்..." அவர் கைகளை அறைந்துகொண்டு நகைத்தார். "அஹ்ஹஹ்ஹஹா!" என்ற ஒலி தேரின் சுவர்களை அதிர்வடையச் செய்தது.

"அவர்களுடன் சென்றமர்ந்து உண்டாட்டில் திளைக்க விழைகிறேன்... அவர்களுக்கு உண்டு நிறைவதில்லை என்பார்கள். உணவால் உடல் நிறைந்து சித்தம் மயங்கி விழுந்து கிடக்கையில்கூட அவர்கள் உண்பதுபோல வாயை மெல்வார்கள், உணவை உருட்டுவதுபோல கைவிரல்களை

அசைப்பார்கள். இதை சேடியர் சொல்லி கேட்டிருக்கிறேன். அவர்கள் தொட்டிலில் கிடக்கையில் எந்நேரமும் வாயை சப்புக்கொட்டிக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு பசி அடங்குவதே இல்லை. எதைக் கொடுத்தாலும் தழலென எழுந்து கவ்வி உண்பார்கள். நீ அறிய மாட்டாய். அன்றெல்லாம் அஸ்தினபுரியின் பால் முழுக்க அரண்மனைக்கு கொண்டுவரப்பட்டது. உச்சிப்பொழுதில் பசும்பால் போதாமலானபோது புரவிப்பால்கூட அவர்களுக்கு அளிக்கப்பட்டது!”

“அதை அந்நாளில் மருத்துவர்களிடம் உசாவியிருக்கிறார்கள். மருத்துவர்கள் பல வழிகளை கண்டடைந்திருக்கிறார்கள். மூத்தவர் இருவருக்கும் யானைப்பால் கொடுத்துப் பார்க்கலாம் என்றார் ஒருவர். யானைப்பால் பளிங்குக்கல்போல் அடர்த்தியானது. அதை கொடுத்தாலும் அவர்களின் வாயில் அந்த அசைவு இருந்துகொண்டே இருந்தது. ஆம், மெய்யாகவே அவர்கள் யானைப்பாலை செரித்துக்கொண்டார்கள். பின்னர் நிமித்திகர் ஒருவர் சொன்னார், அது பசி அல்ல, பிறிதொன்று என்று. அவர்கள் மாபெரும் விழைவொன்றை அகமெனக்கொண்டு வெளிப்பட்டவர்கள். குழவியர் என்பதனால் அதை அவர்களின் வாய் மட்டுமே இப்போது வெளிப்படுத்துகிறது. வளருந்தோறும் ஐம்புலன்களும் அவ்விழைவை வெளிப்படுத்தும். உடலே அதுவாக திகழும். அவர்களின் இருப்பே அதுவென்று நிகழும் என்றார்.”

திருதராஷ்டிரர் நீண்ட பெருமூச்சுகள் விட்டார். அவர் உவகையின் உச்சியில் இருப்பதாகத் தோன்றியது. உவகை வானிலிருந்து அருவியாகக் கொட்ட அதன் கீழே மூச்சுத்திணறி தவித்து அதை உதறி உதறி சிலிர்த்தபடி அவர்

பேசிக்கொண்டிருந்தார். "நிமித்திகர் சொன்னதன்படி ஒன்று செய்தோம். அஸ்தினபுரியின் நான்கு எல்லைகளில் இருந்தும் கைப்பிடி மண் எடுத்து வந்தோம். அதை கலந்து அந்தத் தூளை பாலூட்டி முடித்ததும் அவர்களின் உதடுகளில் சற்றே தடவினோம். நம்ப மாட்டாய், அதன் பின் அந்த உதடசைவு நின்றது. முகங்களில் இருந்த தவிப்பு அணைந்தது. அவர்கள் புன்னகையுடன் தங்களைத் தாங்களே தழுவிக்கொண்டு ஆழ்ந்து உறங்கினார்கள். அதைப்பற்றி சூதர் சிலர் எழுதிய பாடல்கள் உள்ளன. இன்றுகூட அவர்கள் துயில்கையில் அப்பாடலை பாணர் பாடுவதுண்டு..."

அவன் உள்ளம் ஆழ்ந்த துயரை ஒரு வலி என உணர்ந்துகொண்டிருந்தது. இத்தகைய களிப்புடன் தான் அவரை பார்த்ததே இல்லை என எண்ணிக்கொண்டான். இது களிப்பென்றால் களிப்பு என்பதுதான் என்ன? எதையும் எவ்வண்ணமும் உள்ளம் உருமாற்றிக்கொள்ளும் என்றால் மானுட உணர்வுகள் என்பதுதான் என்ன? திருதராஷ்டிரர் அவன் தோளைப்பற்றி உலுக்கி "அங்கே அவர்கள் துயில்கையில் அதைப் பாட பாணர்கள் இருப்பார்கள் அல்லவா?" என்று கேட்டார். "இருப்பார்கள் என்றுதான் படுகிறது" என்றான் சஞ்சயன். "அங்கே அவர்கள் படுத்திருக்கையில் குருக்ஷேத்ரத்தின் குருதி படிந்த மண்ணில் ஒரு துளி எடுத்து அவர்களின் உதடுகளில் வைக்கவேண்டும். அவர்கள் ஆழ்ந்துறங்குவார்கள்."

அவர் வெடித்து நகைத்து "ஆனால் மறுநாள் எழுந்ததுமே பாரதவர்ஷத்தையே வெல்லவேண்டும் என கிளர்வுகொள்வார்கள்... அவர்கள் இம்மாநிலத்தையே விழுங்கினாலும் தீராப் பசி கொண்டவர்கள்!" என்றார். சஞ்சயன்

தோளை அறைந்து "அது என் பசி... அந்தப் பசி என்னுள் இருந்ததை நான் அவர்கள் என்னிலிருந்து எழ எழத்தான் உணர்ந்தேன். நான் என் அகத்தையே கைகளால் தொட்டுத் தழுவி அறியும் வாய்ப்பு கிடைத்தவன்!" என்றார். சஞ்சயன் தன் கன்னங்களில் நீர் வழிவதை உணர்ந்தான். அவருடைய களிவெறிகொண்ட முகத்தையே நோக்கிக்கொண்டிருந்தான்.

தேர் வெடிப்பொலியுடன் முழக்கமிட்டுக்கொண்டிருந்த முரசுகளின் நடுவே வந்திறங்கியது. மையச்சாலைக்கு வந்ததும் அவன் முதல்முறையாக மேலே செல்வது எத்திசை நோக்கி என்னும் திகைப்பு கொண்டான். அப்போதுதான் அவனுக்கு தன் உள்ளம் கொண்டிருந்த மயக்கமும் தெரியவந்தது. அவன் அஸ்தினபுரிக்கு திரும்பிச் செல்வதாகவே எண்ணிக்கொண்டிருந்தான். அங்கே துரியோதனனும் கௌரவர்களும் வழக்கம்போல இருப்பார்கள் என்னும் புனைவையே உள்ளம் கொண்டிருந்தது. அந்த அஸ்தினபுரி அவனுள் அதுவரைக்கும் அழியவில்லை.

அவன் அஸ்தினபுரியில் கௌரவர்கள் இல்லை என தன் உள்ளத்தை நோக்கி சொல்லிக்கொண்டே இருந்தான். அதை ஒரு செய்தியாக வாங்கிக்கொண்டபோதும் அது அந்த அஸ்தினபுரிக்கே மீண்டது. ஒன்றே வழி, அரசகுடி ஒழிந்த அஸ்தினபுரியை நேரில் காணவேண்டும். அங்கே ஒருகணம் திகழவேண்டும். அங்கு சென்ற பின்னரும்கூட உள்ளத்தின் அக்கற்பனை அழியாமல் நீடிக்கக்கூடும். ஆனால் ஒரு கணத்தில் குமிழி என அது உடைந்து இனியில்லை என மறையும். அக்கணம் தன் அகத்தே இன்னமும் நடைபெறவில்லை. ஆகவேதான் அவனிடமிருந்து அது அவருக்கு சென்றுகொண்டிருக்கிறது. அவர் மைந்தர் பொலிந்த

அஸ்தினபுரியை உருவாக்கிக்கொண்டிருப்பது அவன் சொற்களில் தெரியும் உணர்வுகளினூடாகவே.

சஞ்சயன் ஒரு கணத்தில் அம்முடிவை எடுத்தான். குருக்ஷேத்ரம் நோக்கி தேரைத் திருப்ப ஆணையிட்டான். அதை எவ்வகையிலும் எதிர்பார்த்திருக்காத தேர்ப்பாகன் திரும்பி அவனை பார்த்தான். ஆம் என அவன் விழிகளால் சொன்னான். திருதராஷ்டிரர் தொடர்ச்சியாக பேசிக்கொண்டே வந்தார். "வெற்றிவிழவை ஒரு வேள்வியென்றே நாம் கொண்டாடவேண்டும். நாம் உண்டாட்டு கொண்டாடுகிறோம். தேவர்களின் உண்டாட்டே வேள்வி எனப்படுகிறது. அவர்கள் மகிழவேண்டும். நம் நிலம்பொலிய குடிபெருக புகழ்நிலைக்க அவர்களின் வாழ்த்து நமக்கு வேண்டும்."

குருக்ஷேத்ரத்தில் என்ன நிகழும் என அவன் எண்ணிக்கொண்டான். ஆனால் குருக்ஷேத்ரத்தை அங்கே மலை மேலிருந்து நோக்கும் கோணத்திலேயே தன் அகம் புனைந்து வைத்திருப்பதை அவன் உணர்ந்தான். மெய்யாக விரிந்திருக்கும் குருக்ஷேத்ரத்திற்குச் சென்று அதை தன் அகத்தால் வாங்கிக்கொள்ள இயலுமா? அது இப்போது எவ்வண்ணம் இருக்கும்? அவன் அங்கிருந்து நோக்கியபோது அது ஒரு மாபெரும் செம்மண் வெளியாகவே தெரிந்தது. அங்கே ஓர் உயிரசைவுகூட இல்லை. அங்கே சென்று அதுவே அப்போர்நிலம் என்று அகத்திற்குச் சொல்லி நம்பவைக்க இயலுமா?

ஆனால் வேறுவழியில்லை. அங்குதான் சென்றாகவேண்டும். சாவை உள்ளம் ஏற்றுக்கொள்வதற்காகவே சடலத்தின் மேல் விழுந்து அழுகிறார்கள் மானுடர். தொட்டுத்தழுவி கதறிப் புலம்பும்போது அவர்களின் உயிர் அது வெற்றுடல் என்பதை

அறிந்து அமைந்துகொண்டிருக்கிறது. குருக்ஷேத்ரம் அனைத்தையும் சொல்லிவிடும். அது ஒன்றே சொல்லமுடியும். அவனுக்கு மட்டும் அல்ல இன்னும் நெடுங்காலத்திற்கு எழுந்து வரும் தலைமுறைகளுக்கு. அது ஒரு மாபெரும் ஏடு. ஒரு பெருங்காவியம் எழுதப்பட்ட ஒற்றை சுவடிப்பரப்பு.

அவன் காட்டுக்குள் சென்றுகொண்டிருந்தபோது எழுந்த கெடுமணத்தை நெடும்பொழுது உணரவில்லை. அவன் உடல் குமட்டி அதிர்ந்துகொண்டே இருந்தது. வாயில் குமட்டலை உருவாக்கும் நீர் சுரந்து துப்பிக்கொண்டே இருந்தான். திருதராஷ்டிரர் "ஆ, இது குருதிமணம் அல்லவா?" என்றபோது அவன் திடுக்கிடான். "அழுகிய குருதி! சீழ்கொண்ட குருதியின் அதே வாடை!" என்றார். "இதுதான் களத்தின் மணம் போலும்... சஞ்சயா, நீ சொன்ன சொற்களில் இல்லாதிருந்தது இதுவே. மணத்தை நீ உணரவில்லை. உன்னால் அதை சொல்வடிவாக்கவும் இயலவில்லை."

அதை அவன் அப்போதுதான் உணர்ந்தான். "மூடா! நீ சொன்னது குருக்ஷேத்ரமே அல்ல. அது வெறும் கதை. காவியநூல்களில் இருக்கும் கதைகளைப்போன்ற ஒன்று. மெய்யான போர் குருதிமணம் கொண்டது. அதை இப்போதுதான் உணர்கிறேன். நோக்கு... நோக்கு... இக்காடு முழுக்க குருதி நிறைந்திருக்கிறது. போர்க்களத்தில் இருந்து ஊறிநிறைந்த குருதி. வேட்டையாடி உண்டுவிட்டு வயிறு நிறைந்து துயிலும் வேங்கை போலிருக்கிறது இக்காடு." அவர் ஆவலுடன் முகத்தைச் சுளித்து மூக்கை கூர்ப்படுத்தி நீட்டினார்.

"போர்வீரனுக்கு இதுவே நறுமணம்... இது புதிய ஊன்சோற்றின் மணத்தை விட, புளித்த மதுவின் மணத்தைவிட, மதம்கொண்ட பெண்ணின் மணத்தைவிட இனியது... வேள்விமிச்சத்தைவிட,

அவிப்புகையைவிட இனியது... மெய்யாகவே இனியது!" அவர் கைகளை விரித்து "இந்த மணத்தை நான் எங்கோ அறிந்திருக்கிறேன். நான் கனவுகளில் போரிட்டிருக்கிறேன். சௌவீரத்தையும் யவனத்தையும் கூர்ஜரத்தையும் மாளவத்தையும் வங்கத்தையும் மணிபூரகத்தையும் தெற்குத்திருவிடத்தையும் வென்றிருக்கிறேன்... இக்குருதிமணம் நான் நன்கறிந்தது..."

அவர் அவன் தோளை எட்டிப்பிடித்தார். "அந்நாளில் நான் எவ்வண்ணமெல்லாம் கனவு காண்பேன் என நீ அறிந்திருக்க மாட்டாய். ஒற்றர்களிடம் எல்லா நிலங்களில் இருந்தும் மண்ணை அள்ளிக்கொண்டுவரச் சொல்வேன். சிறிய சிப்பிமூடிகொண்ட சிமிழ்களில் அந்த மண்ணை சேர்த்து வைத்திருப்பேன். ஒவ்வொன்றாக திறந்து எடுத்துப்பார்ப்பேன். இது மாளவம், இது விஜயபுரி, இது காஞ்சி, இது தென்மதுரை... எல்லாவற்றையும் என்னால் சொல்லமுடியும். பின்னர் ஒருநாள் அறிந்தேன். குருதிமணமே என்னை கொந்தளிக்கச் செய்கிறது என. குருதி கொண்டுவரும்படி ஆணையிட்டேன். ஆட்டின் குருதி. காளைகளின், குதிரைகளின் குருதி. பின்னர் களிற்றுக் குருதி. பின்னர் மானுடக்குருதியால் அன்றி நிறைவுறாதவன் ஆனேன்."

"குருதி கொண்டுவாருங்கள் என கூச்சலிட்டுக்கொண்டே இருப்பேன். குருதியை முகர்ந்து முகர்ந்து நோக்கி மகிழ்வேன். அடிமைக் குருதி வேண்டாம், வீரர்களின் குருதி வேண்டும் என்பேன். என்னால் குருதியின் மணத்திலேயே அவ்வேறுபாட்டை உணரமுடியும். எனக்காக தொலைநாடுகளிலிருந்து ஒற்றர்களை பிடித்துக் கொண்டுவந்து அக்குருதியை கொண்டுவருவார்கள். பின்னர் அறிந்தேன்.

குருதியை மண்ணுடன் கலந்தால் விந்தையான ஒரு மணம் எழுவதை. மிக விந்தையான மணம் அது. அதை வேறெவ்வகையிலும் உருவாக்க முடியாது. அந்த மணம் என்னை காமவெறிகொண்டவனைப்போல் கிளரச் செய்தது...”

“இதே மணம்தான்... அன்று நான் உணர்ந்தவை துளிகள். இது கடல்... பெருங்கடல் ஒற்றை அலையென எழுந்து என்னை அறைவதுபோல் இதை உணர்கிறேன்... வீரனுக்கு இதைப்போல் நறுமணம் வேறில்லை. என் மைந்தர் இந்த மணத்தை என்பொருட்டு உருவாக்கியிருக்கிறார்கள். சஞ்சயா, குருக்ஷேத்ரம் சென்றதும் என்னை குருதிக்களத்திற்கு கொண்டுசெல். நான் அச்சேற்றில் படுத்து உருளவேண்டும். என் உடலெங்கும் செங்குருதிச்சேறு படியவேண்டும். பதினெட்டு நாட்கள் நானும் இப்போரில் உழன்றவனாக உணர்வேன்” என அவர் அவன் தோளைப்பற்றி பிசைந்தார்.

அந்த முகத்தில் இருந்தது பித்தின் வெறி என அவன் அறிந்தான். அவர் தலையை சுழற்றியபடி அரற்றினார். “ஆனால் அதில் என் குருதியும் கலக்கவேண்டும். இல்லையேல் அந்த மணம் முழுமை அடையாது. அங்கே சென்றதும் ஒரு வாளை என்னிடம் கொடு. நானே என் உடலை வெட்டி குருதி வரவழைக்கிறேன். அக்குருதிக்குழம்புடன் என் குருதியும் கலக்கவேண்டும். அன்றும் அதை செய்வேன். என் உடலில் இருந்தும் குருதியெழச் செய்து அதை மண்ணுடன் கலந்துவிடுவேன். அப்போதுதான் அது முழுமை கொள்கிறது.”

சஞ்சயன் மெல்ல அகத்தே அமைந்துகொண்டிருந்தான். இந்தப் பித்து இவ்வண்ணம் மிகுந்துகொண்டே செல்வது ஒன்றின்பொருட்டே. இது வெடித்துச் சிதறவிருக்கிறது. இன்னும் சற்றுநேரத்தில். இன்னும் சில கணங்களில். அப்போது

அது நிகழ்வதை அறிவதற்கான ஆவல் மட்டுமே தன்னுள் முதன்மைகொண்டிருப்பதை அவன் உணர்ந்தான். தான் ஒரு கதைசொல்லி மட்டுமே என்றும் எதுவும் கதையாகவே தன்னால் அறியப்படுகிறது என்றும் தெளிந்தான். கதையில் மெய்யான எதுவும் இல்லை. உணர்ச்சிகள்கூட மெய்யல்ல. அவை சமைக்கப்பட்டவை. கதை போலவே எல்லைகள் கொண்டவை. கதைசொல்லிக்கு இப்புவியே ஒரு முடிவிலாக் கதை மட்டுமே.

சாலை ஓரத்திலேயே அவர்களை யுயுத்ஸு எதிர்கொண்டான். தேரிலிருந்து இறங்கி சஞ்சயன் அவனை நோக்கி சென்றான். யுயுத்ஸு தணிந்த குரலில் "நாம் பேரரசரை மூத்தவரின் சிதைக்கு கொண்டுசெல்லவேண்டும்" என்றான். சஞ்சயன் திகைப்புடன் "ஏன்?" என்றான். "நானும் அதை அறியேன். ஆனால் இன்று காலை இளைய யாதவர் என்னிடம் அதை சொன்னார். நீங்கள் மலையிறங்கும்போது எதிர்கொண்டு இதை சொல்லும்படி சொன்னார்" என்றான். சஞ்சயன் "மேலும் என்ன சொன்னார்?" என்றான். "ஒன்றுமில்லை" என்று யுயுத்ஸு சொன்னான். "அவர் எவரையோ ஏளனம் செய்வது போலிருக்கிறது. இப்போதெல்லாம் முகத்திலிருக்கும் அப்புன்னகையில் வஞ்சம் நிறைந்திருக்கிறது எனப்படுகிறது."

"வஞ்சம் என தோன்றும் ஏதோ ஒன்றை அவர் சொன்னார் அல்லவா?" என்று சஞ்சயன் கேட்டான். "ஆம், அவர் சொன்னதை நினைவுறுகிறேன். மைந்தனின் சிதையிலேயே அவர் அக்கனவிலிருந்து வெளியே வருவார் என்றார்." சஞ்சயன் உள்ளம் படபடக்க "ஆம்" என்றான். யுயுத்ஸு தேருக்குள் எட்டிநோக்கி "எப்படி இருக்கிறார்?" என்றான். "கனவில்" என்று சஞ்சயன் சொன்னான். "இப்போது அவரை சந்திக்கக்கூடாதவர்

தாங்களே. செல்க!" அவன் "ஆம்" என்றபின் புரவியைத் திருப்பிவிட்டு "இவ்வழியே செல்க... இயல்பாகவே நீங்கள் சிதைக்குழியை சென்றடைவீர்கள். அங்கே இளைய அரசர் நகுலன் உங்களுக்காக காத்திருக்கிறார்" என்றான். சஞ்சயன் "ஆம்" என்றான்.

அந்த ஊடுவழி காட்டுக்குள் சென்றது. திருதராஷ்டிரர் ஏதேனும் கேட்பார் என அவன் எதிர்பார்த்தான். ஆனால் கூண்டிலிருக்கும் விலங்கிடம் தெரியும் ஒரு பதைப்பு மட்டுமே அவரிடம் வெளிப்பட்டது. அவருடைய கேள்வியை அவன் எதிர்பார்த்துக்கொண்டே இருந்தான். அவர் முற்றடங்கி சிலையென ஆனார். தேருள் அவர் இருப்பதை விழிகளால் நோக்கினால் மட்டுமே உணரமுடிந்தது. தேர் நின்றதும் சஞ்சயன் "பேரரசே" என்றான். அவர் "உம்" என்றார். "இறங்குக!" என்றான். அவர் கைநீட்டினார். அவன் அந்தப் பெரிய கையை பற்றிக்கொண்டான். அவர் மெல்ல காலெடுத்து வைத்து இறங்கி மண்ணில் நின்றார். தலையைச் சுழற்றி வாயை இறுக்கி செவிகளால் அந்த இடத்தை நோக்கிக்கொண்டிருந்தார்.

அப்பால் நகுலன் நிற்பதை அவன் கண்டான். அவனைக் கண்டதும் நகுலன் கை வீசி அருகணைய ஆணையிட்டான். நகுலன் விலகிச்செல்லலாம் என சஞ்சயன் கையசைவால் சொன்னான். ஆம் என நகுலன் அகன்று சென்றான். "வருக, அரசே!" என்று சொல்லிக்கொண்டு அவன் அவர் கையைப் பற்றி அழைத்துச்சென்றான். அவர் கால்களை கிளறியிட்ட புது மண்ணில் நடக்கும் யானைபோல நோக்கி கருதி எடுத்துவைத்து நடந்தார். அப்போதுதான் சஞ்சயன் அந்தத் தருணத்தின் இக்கட்டை முற்றுணர்ந்தான். அவரிடம் எப்படி சொல்லப்போகிறேன்? என்னவென்று சொல்லெடுக்க முடியும்?

எட்டுத் திசைகளிலும் அவன் உள்ளம் சென்று முட்டியது. முதற்சொல் போதும். சொற்களஞ்சியமான அவன் உள்ளம் ஒழிந்து கிடந்தது. மொழியையே முற்றிழந்துவிட்டவன்போல் உணர்ந்தான்.

சிதை ஆழ்ந்த கரிய குழியாக மாறி மழையில் ஊறிக் கிடந்தது. சாம்பல்மேல் பெய்த மழை அதன் மேற்பரப்பை மென்படலமாக ஆக்கிவிட்டிருந்தது. அதை நோக்கி செல்லச் செல்ல திருதராஷ்டிரர் நடை தளர்ந்தார். அவர் எதை உணர்கிறார் என அவன் வியந்தான். ஆனால் எதையோ உணர்கிறார். அவர் ஏன் எதுவும் கேட்கவில்லை? அந்த இடத்தில் சாம்பல் மணம் நிறைந்திருந்தது. இலைகளிலிருந்து சொட்டிய நீரில்கூட சாம்பல் கலந்திருந்தது. மழை நீரோடைகள் வற்றிய தடங்களெல்லாம் சாம்பலால் வரையப்பட்டிருந்தன.

குழியை அணுகியதும் திருதராஷ்டிரர் நின்றார். இரு கைகளையும் தலைக்குமேல் தூக்கினார். எடைமிக்க பாறையை தூக்குபவர்போல கைகளை அசைத்தார். அவருடைய பெருந்தசைகள் இறுகி இழுபட்டு நெளிந்தன. பின்னர் வேறெங்கோ என ஒரு பிளிறலோசையை சஞ்சயன் கேட்டான். அவன் வயிற்றுத்தசைகள் இழுத்துக்கொண்டன. அறியாமல் பின்னடி எடுத்துவைத்து விலகினான். திருதராஷ்டிரர் தள்ளாடியபடி ஓடி சிதைக்குழியை அணுகி அவ்விசையிலேயே பாய்வதுபோல் முன்னால் சென்று முகம் மண்ணிலறைந்து விழுந்தார். கைகளால் நிலத்தை ஓங்கி ஓங்கி அறைந்தபடி கரிய சாம்பல்புழுதியில் புரண்டு நெளிந்து கூவிக்கதறி அழுதார்.

அவன் மேலும் மேலும் பின்னகர்ந்து சென்றான். அங்கே நின்றிருந்த நகுலனும் பிறரும் அவன் அருகே வந்தனர். அவன்

கைகளை நெஞ்சோடு கூப்பியபடி கண்களிலிருந்து நீர் வழிய அவரை நோக்கிக்கொண்டிருந்தான். நகுலன் அவன் தோளை தொட்டான். சஞ்சயன் திரும்பி நோக்கியபோது நகுலன் அஞ்சி கையை பின்னிழுத்துக்கொண்டான். சஞ்சயனின் உடல் அப்போது அனற்கலம் என கொதித்துக்கொண்டிருந்ததை நகுலன் நினைவுகூர்ந்தான்.

நீர்ச்சுடர் - 25

பகுதி நான்கு : கழுநீர்க் கரை – 6

நகுலன் எதிரே ஏவலன் வருவதை எதிர்பார்த்து விழிநாட்டி புரவியின் மீது அமர்ந்திருந்தான். காந்தாரியின் வண்டி மிக மெல்ல காட்டுப் பாதையில் உலைந்து அசைந்து, குழிகளில் திடுக்கிட்டு, மேடுகளில் சரிந்து எழுந்து சகடம் உரசும் ஒலியுடன் சென்றுகொண்டிருந்தது. ஏவலன் தொலைவில் புரவியில் வருவதைக் கண்டதும் நகுலனின் உள்ளம் படபடப்பு கொண்டது. அவன் கூறப்போவது பிறிதொன்றல்ல என்று அறிந்திருந்தாலும்கூட அதை தன்னால் நிலைகொண்ட அகத்துடன் கேட்க முடியாது என்று தோன்றியது. அத்தருணத்தை ஒத்திப்போட அவன் உள்ளம் முயன்றது. மேலும் சில கணங்கள். மேலும் சில அடிகள். இன்னும் பொழுதிருக்கிறது. அதுவரை ஒன்றுமில்லை. இந்தக் காட்டின் இனிய காற்று, வெளுத்துவரும் இருள், எழுபறவை ஒலிகள். இருத்தலின் திகட்டாத் தித்திப்பு.

ஏவலன் வண்டியை ஒழியும்பொருட்டு பக்கவாட்டு நாணல் புதர் வழியாக புரவியைச் செலுத்தி கடந்து நகுலனின் அருகே

வந்தான். நகுலன் அவனை நோக்கி தலையசைத்தான். இணையாக அவனுடன் புரவியில் வந்தபடி தாழ்ந்த குரலில் "பேரரசர் நல்ல உளநிலையில் இல்லை. தொடர்ச்சியாக அவருக்கு அகிபீனா கொடுக்கப்படுகிறது. அவ்வப்போது மட்டுமே விழிப்பு கொள்கிறார். உளத்தன்னிலை மீளாதவராகவே இருக்கிறார். சஞ்சயனும் சங்குலனும் அன்றி எவரும் அவர் அருகே செல்ல இயலவில்லை" என்றான். "சங்குலன் உடனிருக்கிறான் அல்லவா?" என்று நகுலன் கேட்டான். "ஆம், இருமுறை பேரரசர் தான் தங்கியிருந்த குடிலையே அடித்து நொறுக்கியிருக்கிறார். நேற்று மாலை எழுந்து கூச்சலிட்டு மூங்கில் தூண்களை அறைந்து உடைத்தார். குடில் அவர் மீதே விழுந்துவிட்டது. சங்குலன் அவரைப் பற்றி நிறுத்தி கைகளை கொடிகளால் பிணைத்துக்கட்டி அகிபீனா புகைசூழ அமைத்திருந்தமையால் துயின்றார். சற்று முன்னர்தான் விழித்தெழுந்தார். மீண்டும் அவருக்கு அகிபீனா கொடுக்கப்பட்டுக்கொண்டிருந்தபோது நான் சென்றேன்" என்றான் ஏவலன்.

"மற்றபடி அகிபீனாவை விரும்பி முகர்கிறாரா?" என்று நகுலன் கேட்டான். "ஆம், அவருக்கு அது வேண்டியிருக்கிறது. விடாய் கொண்டவர்போல் அவர் அப்புகையை அள்ளி அள்ளி இழுப்பதை தொலைவிலிருந்து நான் பார்த்தேன்" என்று சொன்னான். "அது நன்று. அது அவர் மறக்க விழைகிறார் என்பதற்கும் மறந்து துயில்வதில் மகிழ்வைக் காண்கிறார் என்பதற்கும் சான்று... பெருந்துயர்கொண்டவர்கள் துயில் வரவில்லை என்று புலம்பினால் அவர்கள் துயரிலிருந்து மீண்டுகொண்டிருக்கிறார்கள் என்று கொள்ளவேண்டும்" என்றான் நகுலன். பின்னர் "பேரரசி வருவதை சஞ்சயனிடம் கூறியபோது அவன் சொன்னதென்ன?" என்றான். "பேரரசி

வருவதென்றால் அதை தவிர்க்க வேண்டாம் என்றார். எந்நிலையிலும் அச்சந்திப்பு நிகழவேண்டியதுதான். அரசர் உளம் சோர்ந்திருக்கும் இத்தருணம் அதற்கு உகந்ததுதான் என்றார்."

"பேரரசி இருக்கும் நிலையும் மற்றொன்றல்ல" என்று நகுலன் சொன்னான். "அவருக்கும் இப்போது பேரரசர் தேவைப்படுகிறார். அவர் உடைந்து கதறக்கூடும். அழுது மீள்வதும் ஆகும்." ஏவலன் தலையசைத்தான். நகுலன் கைவீசி ஏவலன் செல்லலாம் என்று காட்டினான். அவன் விலகியதும் மீண்டும் கையசைத்து அருகழைத்து "பேரரசி பேரரசரை சந்திக்கச் செல்லும் செய்தியை மூத்தவரிடம் சென்று அறிவி. நிகழ்ந்த அனைத்தையும் சுருக்கமாகக் கூறுக!" என்றான். அவன் மேலும் ஒரு சொல்லுக்காக காத்தான். "அனைத்தும் நன்றெனச் செல்கிறது. பேரரசி மீளக்கூடும் என்றேன் எனச் சொல்க!" என்றான்.

தலைவணங்கி ஏவலன் சென்ற பின்னர் நகுலன் நெஞ்சு தளர்ந்து கடிவாளத்தை இடக்கையால் பற்றிச் சுழற்றியபடி புரவியின் மேலேயே அமர்ந்தான். ஒன்றும் செய்வதற்கில்லை என்று உணரும்போது ஏற்படும் விடுதலை. தெய்வங்களிடம் வாழ்வை முற்றும் ஒப்படைக்க இயல்வதில்லை. உற்றாரிடமோ அரசிடமோ மூத்தோர் சொல்லிடமோ நெறிகளிடமோகூட முழு நம்பிக்கை கொள்ள இயல்வதில்லை. ஆனால் வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் ஏதோ ஒரு நிலையில் அனைத்தையும் காலத்திடம் ஒப்படைத்துவிடுகிறோம். காலம் அடித்துச் சுழற்றி கொண்டுசெல்ல ஒப்புக்கொடுத்து ஒழுகுகையில் மட்டுமே முழு விடுதலையை உணர்கிறோம். மனிதர் கட்டுண்டிருப்பது செயல்,

செயல்வினையென்னும் இருமையின் ஊடாட்டத்திற்குத்தான். செய்க செய்க என்கின்றன உடலும் உயிரும். செயல்வினையை எதிர்நோக்கி தவிக்கிறது உள்ளம். இரண்டையும் கடந்த நிலை ஒன்றே விடுதலை எனில் தவத்தாரும் விடுதலை கொண்டவர் அல்ல. தவம் என்பதும் செயலே. தவம் ஒழிகையில் அடையும் தவப்பேறொன்று இருக்கக்கூடும்.

அச்சொற்களின் விந்தையால் அவன் புன்னகைத்தான். யுதிஷ்டிரனின் முகம் நினைவுக்கு வந்தது. அத்தகைய விந்தையான சொல்லாட்சிகள் வழியாக வாழ்வின் சில மெய்மைகளை சொல்லிவிடமுடியுமென்று நம்புவது அவருடைய இயல்பு. பல்லாண்டுகால நூல் நவில்தல் மெய்மை என்பது ஒருவகையான மொழி அமைப்பே என்னும் நம்பிக்கையை அவருக்கு அளித்திருக்கிறது. மொழியினூடாக வெளிப்படும்போது மட்டுமே மெய்மை மானுடரால் அறியத்தக்கதாகவும் ஆளத்தக்கதாகவும் இருக்கிறது. எனில் மொழி என்பது கைக்குவளை. அப்பெருநதியில் அள்ளி எடுத்த ஒரு மிடறுதான் அது கொண்ட மெய்மை. அதிலேயே அலைகளையும் வானையும் பார்க்கப் பயில்வதற்குப் பெயர்தான் கல்வி. கல்வி என்பது அறிதலின் எல்லைக்குள் நின்று அனைத்தையும் விளங்கிக் கொள்வதற்கான பயிற்சி அன்றி வேறல்ல. கற்றோர் தங்கள் கல்வியால் சிறைப்பட்டோர். கல்வி மானுடரை தங்கள் எல்லைக்குள் மட்டுமே செல்லுபடியாகும் திறன் கொண்டவர்களாக்குகிறது. ஆகவேதான் கற்றோர் மூடர்களென நின்றிருக்கும் தருணங்களை மீள மீள பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

இத்தருணத்தில் அர்ஜுனனின் வில்லும் பீமனின் தோளும் என ஒவ்வொன்றாக பொருளிழந்து செல்கையில் யுதிஷ்டிரனின்

கல்வி மட்டுமே ஏளனத்திற்குரியதாக மாறிவிட்டிருக்கிறது. ஏனெனில் காண்டீபம் தன் தோல்வியை உணர்ந்துவிட்டது. கதை மண்ணில் பதிந்துவிட்டது. இன்னமும் தன் மொழியை பற்றிக்கொண்டு தன் சிறுபீடத்தில் தருக்கி நின்றிருக்கவே யுதிஷ்டிரன் முயன்றுகொண்டிருக்கிறார். அவன் ஏன் ஒவ்வொருவரின் வெறுப்பும் அறுதியாக யுதிஷ்டிரன் மேல் சென்று படிகிறது என வியந்தான். அவர் ஆற்றியதென ஏதுமில்லை. அனைத்துக்கும் தடைகூறுபவராகவே இருந்திருக்கிறார். தயங்காது எதையும் ஆற்றியதில்லை. அனைத்தையும் விளக்கி ஏற்கவைத்தவன், ஆற்றி முடிக்கவைத்தவன் அவன். அவன்மேல் சினமெழவில்லை. ஏனென்றால் அவனுடைய அறியமுடியாமை அச்சமூட்டுகிறது. அச்சம் அளிக்காதவரிடமே சினமெழுகிறது. அறியமுடியாமை என்பது முடிவிலி. முடிவிலி என்பதே தெய்வமெழும் இடம். பிரம்மம் அறியமுடியாதது என்பதனால் அறியமுடியாமைகள் அனைத்தும் பிரம்மமே.

நகுலன் திருதராஷ்டிரரின் குடிலை தொலைவிலேயே பார்த்தான். அதன் மேல் மெல்லிய நீலப்புகை எழுந்துகொண்டிருந்தது. அடுப்பிலிருக்கும் கலம் போன்றிருந்தது அது. மண்ணுக்கு அடியில் அனல் சுழன்றெழும் அடுப்பொன்று இருக்கக்கூடும். அதற்குள் உலைக்கொந்தளிப்பென அலை நிறைந்திருக்கக்கூடும். அணுகுந்தோறும் அது ஒரு மாபெரும் உலைக்கலம் எனும் எண்ணத்திலிருந்து அவனால் மீளவே இயலவில்லை. சத்யசேனை தேரிலிருந்து திரைவிலக்கி எட்டிப்பார்த்து "அக்குடிலா?" என்றாள். "ஆம்" என்று அவன் சொன்னான். "சிறிதாக உள்ளதே" என்றாள். அந்நிலையிலும் பேரரசரின் முதன்மையையே அவள் எண்ணுவது அவனிடம் எரிச்சலை

எழுப்ப "கொடி பெரிதாக உள்ளதே" என்றான். அஸ்தினபுரியின் அமுதகலக்கொடி நனைந்த சிறகுகளுடன் தலைகீழாக கட்டப்பட்ட சேவல் என தொங்கிக்கிடந்தது. அவனை ஒருகணம் நோக்கிவிட்டு தலையை உள்ளிழுத்துக்கொண்டாள்.

வண்டி சேற்றில் சகடங்கள் ஆழப்புதைய முனகி இழுபட்டு, பின் தசை பிளந்து எழுவதுபோன்ற ஒலியுடன் சகடம் விடுபட, கூண்டு உலைந்து அசைய, முன்னால் சென்றது. திருதராஷ்டிரரின் குடிலுக்கு முன்னால் காவல் நின்றிருந்த ஏழு வீரர்கள் வண்டி அணைவதைக்கண்டு தலைவணங்கி வேல் தாழ்த்தி விலகினர். அவர்களின் தலைவன் தன் வேலுடன் நகுலனை அணுகி தலைவணங்கினான். "சஞ்சயனும் சங்குலனும் உடனிருக்கிறார்கள் அல்லவா?" என்று தாழ்ந்த குரலில் நகுலன் கேட்டான். "ஆம், அரசே" என்று அவன் கூறினான். சஞ்சயனுக்காக தனிக்குடில் அமைக்கப்பட்டிருந்தது. அதற்கப்பால் காவலர்களுக்கான கொட்டகை நாற்புறமும் சுவரிலாது திறந்து நின்றது. திருதராஷ்டிரருக்கான உணவு சமைக்கும்பொருட்டு கட்டப்பட்ட அடுமனைக்குடில் சற்று அப்பால் குறுங்காட்டின் விளிம்பிலிருந்தது. சங்குலன் எப்போதுமே அவருடன் இருக்கிறான் போலும்.

சில நாட்களுக்கு முன்னரே அப்பகுதியின் மரங்களும் புதர்களும் வெட்டி அகற்றப்பட்டிருந்தமையால் தரையெங்கும் இலைகளும் சிதைந்த கொடிகளும் பரவி, புரவிகளும் வண்டிகளும் இரும்புக் குறடுகளும் மிதித்த தடங்களுடன் உழுதிட்ட வயல் போலிருந்தது முற்றம். சேற்றுத்தடம் ஆழப்பதிய வண்டி சென்று நின்றதும் நகுலன் அதன் திரைவாயிலருகே நின்று "வந்துவிட்டோம், அரசி" என்றான். சத்யசேனை திரைவிலக்கி அவனைப் பார்த்து "இங்குதானா?"

என்றாள். "ஆம்" என்றபின் அவன் திரும்பி திருதராஷ்டிரரின் குடிலிலிருந்து சஞ்சயன் வெளியே வருவதை பார்த்தான். பின்னர் "அரசர் நல்ல உளநிலையில் இல்லை. அவர் அகிபீனா மயக்கிலிருக்கிறார் என்றார்கள்" என்றான். சத்யசேனை "இங்கு அனைவரும் அவ்வாறுதான் இருக்கிறார்கள். தன்னிலையுடன் இருப்பவர்கள் மிகச் சிலரே" என்றாள். பின்னர் படியில் கால் வைத்து இறங்கி சேற்றில் நின்று உள்ளிருந்து காந்தாரி இறங்குவதற்காக கைநீட்டினாள். காந்தாரி கைநீட்டி அவள் கையைப் பற்றியபின் தன் சிறிய கால்களை மரப்படியில் எடுத்துவைத்து இறங்கி சேற்றில் நின்றாள். உள்ளிருந்து சத்யவிரதை இறங்கி கையில் சிறிய பேழையுடன் நின்றாள். நகுலன் "வருக, பேரரசி!" என்றபின் நடந்தான்.

காந்தாரியின் கண்களைக் கட்டியிருந்த நீலத்துணியின் கீழ்விளிம்பு நனைந்து நிறம் மாறியிருப்பதை அவன் பார்த்தான். முதல் முறையாக அவள் விழிகளில் கண்ணீரைப் பார்க்கிறோம் என்று தோன்றியது. முன்னர் எப்போதேனும் அவள் அழுவதை பார்த்தேனா? குந்தியை சந்திக்கும்போது அவள் அழுதாளா? ஆம், அழுதாள். அவன் திடுக்கிடும்படி ஓர் உணர்வை அடைந்தான். குந்தியின் அருகே அவள் கைபற்றி அமர்ந்திருக்கையில் காந்தாரியின் விழிகளைப் பார்த்ததாகவே அவன் எண்ணிக்கொண்டிருந்தான். அவள் விழிகளை அவன் பார்த்ததே இல்லை என்றாலும் நினைவில் எழுகையில் எல்லாம் அவள் விழி கொண்டவளாகவே வந்தாள் என்பதை உணர்ந்தான். மீள மீள ஒவ்வொரு தருணமாக நினைவில் மீட்டினான். எவ்வண்ணம் இது நிகழ்கிறது? இந்நீலத் துணிக்கு அப்பாலிருந்து அவள் விழிகள் நோக்கிக்கொண்டிருக்கின்றனவா? அவள் விழிகளை நோக்கும் விழி ஒன்று தன் விழிக்கு அப்பாலிருக்கிறதா?

கண்மூடி தொலைநினைவில் ஆழ்ந்தபோதுகூட எப்போதும் விழி கொண்டவளாகவே அவளை அகத்தே உணர்ந்திருக்கிறோம் என்பதை அறிந்தான். அவ்விழிகள் சத்யசேனையின் விழிகள் அல்ல. சத்யவிரதையின் விழிகளோ பிற அரசியரின் விழிகளோ அல்ல. காந்தாரத்தில் வேறு எவருடைய விழிகளும் அல்ல. குந்தியின் விழிகள் அல்ல. திரௌபதியின் விழிகளோ பானுமதியின் விழிகளோ அல்ல. வேறு எவருடைய விழிகள்? மெல்லிய நீலம் கலந்த விழிமணிகள். சிறிய இமைப்பீலி கொண்டவை. எவருடைய விழிகள் என்று அவன் அகம் பதைத்து துழாவிக்கொண்டே இருந்தது. சகுனியின் விழிகளா? உடனே அகம் திடுக்கிட்டது. அவ்விழிகளுடன் காந்தாரியின் விழிகளுக்கு தொடர்பே இருக்கவில்லை. எனில் எவர் விழிகள்? ஏதோ தெய்வ விழிகள். சிலையிலெழுந்தவை. அது பளிங்குச்சிலை. அவ்விழிகள் இளநீலமணிகள்.

குடிலை நோக்கி செல்கையில் சஞ்சயன் அருகணைந்து தலைவணங்கினான். "எவ்வண்ணம் இருக்கிறார்?" என்று நகுலன் கேட்டான். "தன்னினைவு இருக்கிறது" என்று சஞ்சயன் கூறினான். "சங்குலன் உடனிருக்கிறான் அல்லவா?" என்றான். "அவன் அருகேதான் எப்போதும் இருக்கிறான்" என்றான் சஞ்சயன். குடிலை அடைந்து அதன் படலை திறந்தபோது காந்தாரி திரும்பி நகுலனிடம் "மைந்தா, நீயும் உடன் வருக!" என்றாள். நகுலன் "நான்..." என்றபின் "சஞ்சயன் உடன் இருப்பதே நன்று..." என்றான். மேலும் விரைவாக திணறும் குரலில் "மேலும் அங்கே சங்குலனும் இருக்கிறான்" என்றான். காந்தாரி ஒருகணத்திற்குப் பின் சஞ்சயனை நோக்கி முகம் திருப்பி "உள்ளே அழைத்துச் செல்க, சூதனே!" என்றாள். சஞ்சயன் "வருக, பேரரசி!" என்றபடி குடிலுக்குள் நுழைய

காந்தாரி தலை குனிந்து உள்ளே நுழைந்தாள். சத்யசேனையும் சத்யவிரதையும் தயங்கும் காலடிகளுடன் தொடர்ந்தனர்.

அங்கிருந்து விலகிச்சென்றுவிடவேண்டும் என்ற எண்ணத்தை நகுலன் அடைந்தான். ஆனால் அவ்வாறு சென்றுவிடமுடியாதென்றும் தோன்றியது. கதவுப்படலை பிடித்தபடி அவன் வெளியே நின்று குடிலுக்குள் பார்த்தான். உள்ளே திருதராஷ்டிரரின் காலடியில் அமர்ந்திருந்த சங்குலன் தன் மாபெருந்தோள்களுடன் எழுந்து ஓலைவேய்ந்த சுவரில் சாய்ந்து நின்றான். அக்கணமே சிலையென்றாகி அங்கே அவன் இல்லையென்று தோன்றலானான். குடிலுக்குள் மூங்கிலாலான தாழ்வான பெரிய மஞ்சத்தில் விரிக்கப்பட்ட மரவுரியின் மீது திருதராஷ்டிரர் படுத்திருந்தார். பெருந்தசை புடைத்து நரம்புகள் இறுகிய அவருடைய இரு கரிய கைகளும் மஞ்சத்திலிருந்து தழைந்து நிலத்தை முட்டிக் கிடந்தன. இரு பாதங்களும் மஞ்சத்திற்கு வெளியே நீட்டி நின்றன. வயிறு ஒட்டி, விலா எலும்புகள் வரிவரியாகப் புடைத்த மார்பு மூச்சில் ஏறி இறங்கிக்கொண்டிருந்தது. தொண்டைக்குழி பதைத்து அசைந்தது. சிறு கன்றுக்குட்டியின் திமிலளவு பெரிய தொண்டை முழை ஏறியிறங்கியது.

காந்தாரி கைகளைக் கூப்பியபடி திருதராஷ்டிரரை பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள். அவளுக்குப் பின்னால் நின்றிருந்த இரு அரசியரும் கைகளை கூப்பியிருந்தனர். திருதராஷ்டிரர் தலையை உருட்டியபடி விளங்காச் சொல்லொன்றை புலம்பிக்கொண்டிருந்தார். அவரது தாடி மயிர் உதிர்ந்து நனைந்து திரிகளாக கழுத்திலும் தோள்களிலுமாக பரவியிருந்தது. உதடுகள் மடிந்து உள்ளடங்கியிருந்தன. ஆகவே மூக்கு புடைத்து வாய் மேல் மடிந்து நிழல் வீழ்த்தியிருந்தது.

கண்கள் குழிந்து உள்ளே சென்றிருக்க இமைகளுக்குள் விழியுருளைகள் ஓடிக்கொண்டிருப்பது தெரிந்தது. கன்னமுழை எழுந்து நெற்றி புடைத்து அவர் பிறிதொருவராக ஆகிவிட்டிருந்தார். தோலைப் புடைத்து உந்தியபடி மண்டையோடு மேலெழுந்துவிட்டதுபோல. அவரில் அனல் எரிந்துகொண்டிருப்பதுபோல நகுலன் உணர்ந்தான். தொன்மையான அடிமரக்கட்டை நாட்கணக்கில் கனன்று எரியும்.

காந்தாரி ஏதேனும் சொல்வதற்காக சஞ்சயன் காத்து நின்றிருந்தான். நகுலன் மீண்டும் காந்தாரியைப் பார்த்தபோது அவள் தன் விழிகளால் திருதராஷ்டிரரை கூர்ந்து நோக்கிக்கொண்டிருப்பதுபோல் தோன்ற அவன் திடுக்கிட்டான். விழிகள் இல்லாமலேயே பார்க்க முடியும்போலும். அல்லது ஒருவேளை மிக முதன்மையானவற்றை எல்லாம் விழிகளின்றிதான் பார்த்துக்கொண்டிருக்கிறோமோ? சஞ்சயன் காந்தாரியை பார்க்கவில்லை. திருதராஷ்டிரரையும் அவன் பார்க்கவில்லை. தலைகுனிந்து நிலத்தைப் பார்த்தபடி மெலிந்து தொய்ந்த தோள்களுடன் நின்றிருந்தான். ஆனால் அவன் காந்தாரியைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்பது எப்படி அவன் உடலின் வழியாக தெரிந்தது? வெவ்வேறு தன்னுணர்வுகள் ஒன்றையொன்று நுனிதொட்டு அசைவிழந்து நின்றிருந்த தருணம்.

காந்தாரி மெல்ல அசைந்து மூச்சொலி எழுப்பினாள். சஞ்சயன் தானும் உயிர்கொண்டு "தாங்கள் ஆணையிட்டால் நான் அரசரை எழுப்புகிறேன், பேரரசி" என்றான். "வேண்டியதில்லை" என்று சொன்னபின் அவள் சஞ்சயனைப் பார்த்து "அவர் அறிவாரா?" என்றாள். எந்த முன்பின் தொடர்பும் இன்றி

கேட்டபோதும்கூட அவள் கேட்பதென்ன என்பதை உணர்ந்து "அங்கு அழைத்துச் சென்றேன்" என்று சஞ்சயன் சொன்னான். காந்தாரி மீண்டும் பெருமூச்சுவிட்டான். சஞ்சயன் அருகிருந்த மூங்கில் பீடத்தை எடுத்து திருதராஷ்டிரரின் கட்டிலின் அருகே இட்டு "அமர்க, அரசி!" என்றான். சத்யவிரதையும் சத்யசேனையும் இருபுறமும் பிடிக்க காந்தாரி எடைமிக்க உடலை மெல்ல தாழ்த்தி அதன் மேல் அமர்ந்தாள். பெருமூச்சுடன் மஞ்சத்தின் விளிம்பில் தன் கைகளை ஊன்றிக்கொண்டாள்.

இரு இணையரசியரும் திருதராஷ்டிரரின் காலருகே சென்று மண்ணில் அமர்ந்தனர். சத்யவிரதை தன் கையை நீட்டி நடுங்கும் விரல்களால் அவர் கால்களை தொட்டாள். சத்யவிரதையின் தோளை சத்யசேனை பற்றிக்கொண்டாள். காந்தாரி நிலம் தொட தழைந்திருந்த திருதராஷ்டிரரின் வலக்கையை தன் கையிலெடுத்து தூக்கிக்கொண்டாள். திருதராஷ்டிரரின் கையின் எடையை நகுலன் முன்பும் பலமுறை அறிந்ததுண்டு. மல்லர்கள் மட்டுமே அவர் கையின் எடையை தோளில் தாங்க முடியுமென்று அவன் அறிவான். காந்தாரியின் கை திருதராஷ்டிரரின் கையளவுக்கே பெரியது என்பதை அவன் அப்போதுதான் உணர்ந்தான். கரிய பெருநாகமும் வெண்ணிறப் பெருநாகமும் முத்தமிட்டுக்கொண்டதுபோல் என்று தோன்ற விழிகளை விலக்கிக்கொண்டான்.

காந்தாரி திருதராஷ்டிரரின் கைகளை தன் மடியில் வைத்து அவ்விரல்களுக்குள் தன் விரல்களைச் செலுத்தி பற்றிக்கொண்டாள். திருதராஷ்டிரர் தன் துயிலுக்குள் எங்கோ அத்தொடுகையை உணர்ந்து முனகினார். பின்னர்

தீச்சுட்டதுபோல் உணர்ந்து எழுந்து அமர்ந்தார். திரும்பி தலைசரித்து அவளைப் பார்த்து பிறிதொரு கையால் அவள் தோளைப்பற்றி உலுக்கி "அரசி! அரசி!" என்றார். காந்தாரி தாழ்ந்த குரலில் "படுத்துக்கொள்ளுங்கள்" என்றாள். "அரசி! அரசி!" என்று மீண்டும் அவர் கூவினார். பின்னர் உடலைத் தாழ்த்தி மீண்டும் மஞ்சத்தில் படுத்து "நீண்ட நிலம்! பாலை நிலம்! கோடை" என்றார். அவருடைய உதடுகளில் இருந்து அக்குரல் எழவில்லை எனத் தோன்றியது. "அங்கு ஒரு முள்மரச்சோலை. அதற்குள் பதினொரு உருத்திரர்கள்... மூவிழி கொண்டவர்கள். குருதிவிடாய் கொண்டவர்கள்" என்றார்.

நகுலன் அவர் என்ன சொல்கிறார் என்பது புரியாமல் சஞ்சயனைப் பார்த்தான். சஞ்சயன் அங்கிலாதவன்போல் ஆகிவிட்டிருந்தான். இரு விழிகளை மட்டும் அவன் அங்கே பதித்து எஞ்சவிட்டுச் சென்றிருந்தான் எனப் பட்டது. இரு செவிகள் மட்டும் அங்கு திறந்திருந்தன போலும். திருதராஷ்டிரர் உரத்த குரலில் கனைப்போசை எழுப்பினார். உறுமலும் இருமலும் கலந்து அவர் உடலை திணறச்செய்தன. மீண்டும் எழுந்து அமர்ந்து சிவந்த விழிக்குமிழிகள் துள்ள "அரசி, இங்கு வந்துவிட்டாயா?" என்றார். "இங்குதான் இருக்கிறேன்" என்று அவள் சொன்னாள். "நாம் இனி அங்கு திரும்ப வேண்டியதில்லை. நாம் காட்டுக்கு சென்றுவிடுவோம். காடொன்றே இனி நமக்கு எஞ்சியுள்ளது" என்றார். "ஆம் அரசே, காடு ஒன்றுதான் நமக்கு எஞ்சியுள்ளது" என்று காந்தாரி சொன்னாள்.

அவர் அச்சொற்களின் முழுப் பொருளையும் அக்கணம் உணர்ந்தவர்போல துடிப்பெழுந்த உடலுடன் அமர்ந்திருந்தார். பின் நெஞ்சில் ஓங்கி அறைந்து கதறியபடி அவள் மடியில்

தலை அறைந்து விழுந்து இரு பெருத்த தொடைகளுக்கு நடுவே தன் முகத்தை புதைத்துக்கொண்டார். தோள்கள் குலுங்க வலக்கால் வலிப்பு எழுந்ததுபோல் இழுபட்டுத் துடிக்க விம்மி அழுதார். காட்டுமரம் பிளந்து உள்ளே எரிந்த தீயின் தழல் எழுந்து ஆடுவதுபோல. தீயின் உறுமல். தீயின் சீறல். அவருடைய அழுகையை வெறித்த விழிகளுடன், சொல்லற்ற உள்ளத்துடன் நகுலன் பார்த்து நின்றான். கதவுப்படலை இறுகப் பற்றிக்கொண்டு தன் கால்கள் தளர்ந்து உடல் தழைவதை தவிர்த்தான்.

காந்தாரி அவர் தலையில் கையோட்டி, குழலை நீவிக்கொண்டிருந்தாள். அவருடைய உடலுக்குள் இருந்து பலர் பிளந்து வெளிவர முயல்வதுபோல தசைகள் புடைத்து திமிறி நெளிந்தன. அவருடைய குரல் அடைத்தது. தொண்டைமுழை மரமூடியென ஆகி கழுத்தை இறுக்கிக்கொண்டதுபோல அவர் திணறி விம்மி விக்கலோசை எழுப்பினார். பின்னர் வெடித்து மூச்சு எழ மீண்டும் கேவி அழுதார். ஆடி நிலைக்கும் ஊசல் என அழுகை ஓய மிகமிக நொய்ந்த ஒரு தேம்பல் அவரிடமிருந்து எழுந்தது. காந்தாரி மெல்லிய முனகலோசையை எழுப்பி அவரை நோக்கி குனிந்தாள். அழும் குழவியை ஆறுதல்படுத்த அன்னையர் எழுப்பும் ஓசை போலிருந்தது அது. அவள் தன் இரு கைகளாலும் அவர் தலையைப்பற்றி தூக்கி தன் முலைகளுக்கு நடுவே வைத்து அழுத்தி அணைத்து இறுக்கிக்கொண்டாள்.

நகுலன் திரும்பி வெளியே காலடி எடுத்து வைத்தான். உடல் நிலம் நோக்கி சென்றது. அவன் மேலும் இரு அடி எடுத்துவைத்து குடிலின் வெளித்திண்ணையில் அமர்ந்து தலையை தன் கைகளால் தாங்கி கண்களை மூடிக்கொண்டான்.

நீர்ச்சுடர் - 26

பகுதி நான்கு : கழுநீர்க் கரை – 7

நகுலன் யுதிஷ்டிரனின் அவைக்களத்திற்கு உடனே செல்லவேண்டும் என்றுதான் தன் குடிலுக்கு வந்தான். நீராடி ஆடைமாற்றிச் செல்லலாம் என்று தோன்றியது. காலையிலேயே உடல் வியர்வையில் நனைந்து ஆடைகளை ஈரமாக்கியது. புலரொளி மறைந்ததுமே எழுந்த இளவெயில் கீற்றுக்கள் காட்டுக்கு அப்பாலிருந்து இலைகளை ஊடுருவிச் சாய்ந்து வந்து விழுந்து வெட்டி அகற்றிய புதர்களின் வேர்கள் விரல்கள் என, நரம்புகள் என பரவியிருந்த சிவந்த ஈரமண்ணில் விழுந்து மெல்லிய புகையை கிளப்பிக்கொண்டிருந்தன. அவன் புரவி அந்த வெயிலின் வெம்மையால் எழுந்த சேற்று மணத்தை குனிந்து முகர்ந்து கழுத்து சிலிர்த்து மூக்கு விடைத்து ஆழ மூச்சுவிட்டது. அவன் அதன் கழுத்தையும் காதுகளையும் வருடி "செல்க! செல்க!" என்றான்.

அது எப்போதுமே அவனுடைய உளவிசையை பொருட்படுத்துவதில்லை. மிக மெல்ல காலெடுத்து வைத்து தலையசைத்து நடந்து, அவ்வப்போது நின்று தரையில் கிடக்கும் ஏதேனும் இலைச்சருகை வாயால் கவ்வி எடுத்து மென்று பாதியை உமிழ்ந்து, தன் போக்கில் செல்லும். தன் உளவிசையை பொருட்படுத்தாத புரவிதான் அப்போது அவனுக்கு உகந்ததாக இருந்தது. பாய்ந்து திசைவெளியில் விரையும் புரவி விரைவிலேயே கால்சோர்ந்து நுரை கக்கி விழுந்துவிடும் என்று அவனுக்குத் தோன்றியது. இந்த

அன்னைக் குதிரை தன் எல்லைகளை நன்கறிந்தது. தன்னை விலங்கென்று எப்போதும் உணர்வது. அனலென்றும் காற்றென்றும் ஆக முயலாதது. ஒருபோதும் தன் இறுதி விளிம்பில் சென்று முட்டுவதற்காக அது பாய்ந்தெழுவதில்லை. இது எந்த வில்லாலும் செலுத்தப்பட்ட அம்பல்ல. நீரோடையென தன் வழியையும் விசையையும் தானே அமைத்துக்கொள்ளும் அகஆற்றல் கொண்டது.

குடில் முன் வந்து அதுவே நின்று ஒருமுறை செருக்கடித்தது. அவன் இறங்கி அதன் கழுத்தை தட்டிவிட்டு கடிவாளத்தை அதன் முதுகிலேயே போட்டான். அது சிலிர்த்தபடி சென்று முள்மரத்தடியில் நின்று புண்பட்ட காலை தூக்கிக்கொண்டது. குடிலுக்குள் சென்று நின்றபோதுதான் தன் உடல் முழுக்க வெம்மை மிகுந்து ஈரம் பரவியிருப்பதை உணர்ந்தான். மஞ்சத்தில் படுத்து கால்களை நீட்டி கண்களை மூடிக்கொண்டபோது உடல் குளிரத் தொடங்கியது. வெளியே காலடி ஓசை கேட்க, எழ உளம் குவியாமல் கண்களை மூடியபடியே "வருக!" என்றான். ஒற்றன் உள்ளே வந்து தலைவணங்கி நின்றான். "ஆணைகள்?" என்றான். "சொல்" என்று நகுலன் சொன்னான். "பிற அரசியரையும் பேரரசரிடமே அனுப்ப வேண்டுமா?" என்று ஒற்றன் கேட்டான். "அவர்கள் அவ்வாறு கோரினார்கள்." ஒரு கணத்திற்குப் பின் "ஆம், அதுதானே முறை" என்று நகுலன் சொன்னான். "அவ்வண்ணமெனில் ஆகுக! ஒரு சொல் உசாவாமல் அதை செய்யக்கூடாதென்று தோன்றியது" என்றபின் அவன் தலைவணங்கி வெளியே சென்றான்.

நகுலன் சற்று முன் நிகழ்ந்த அனைத்தையும் மீண்டும் உள்ளத்தில் ஓட்ட முயல்பவன்போல கண்களை மூடி நினைவுகளை எடுத்தான். அந்தக் காட்சியே மிகப் பழையதாக

ஆகிவிட்டிருந்ததை உணர்ந்து வியப்படைந்தான். பல ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்ததென்று தோன்றியது. அல்லது எவரோ கூறி நினைவில் பதிந்தது. அல்லது ஏதோ நூலொன்றில் படித்தது. எத்தனை விரைவாக உணர்வுமிக்க தருணங்களிலிருந்து உள்ளம் நம்மை விலக்கிக்கொள்கிறது என்று அவன் எண்ணிக்கொண்டான். எளிய தருணங்கள் அருகிருக்கும் அனைத்தையும் இழுத்து அவற்றுடன் சேர்த்து முடிச்சிட்டு விரித்துக்கொள்ளவும் பெருக்கிக்கொள்ளவும் கூர்த்துக்கொள்ளவும் முயல்கிறோம். அதனில் நம்மை பெய்கிறோம்.

பெருந்தருணங்களை அணுகுகையிலேயே ஏன் கால்கள் தயங்குகின்றன? ஏனென்றால் பெருந்தருணங்கள் முற்றாகவே மானுடருக்கு அப்பால் நின்றிருக்கின்றன. தெய்வங்களால் இயக்கப்படுகின்றன. அங்கு தன் அறிவுக்கும் கற்பனைக்கும் இடமில்லை என்பதை அறியாத மானுடரில்லை. அவ்வறியமுடியாமையின் மையத்தில் கண்களை மூடி பிறிதொன்று எண்ணாமல் பாய்ந்து சென்று அமிழ விழைபவருமில்லை. பெருந்தருணங்களில் மானுடர் செயலற்றுவிடுகிறார்கள். அறிந்த அனைத்தையும் மறந்து ஆவதென்ன என்று அறியாமல் அதன் சுழலுக்கு தன்னை அளிக்கிறார்கள். பெருந்தருணங்களை எண்ணி நோக்கி காலெடுத்து வைத்து சென்றடைபவர்கள் உண்டா? பெருமானுடர்கள் அவ்வாறு இருக்கலாகும். அவனைப்போல. அவன் அவற்றை நாற்களம் என ஆடுகிறான். நடனமென உடலாக்கிக் கொள்கிறான். பீலியென சூடிக்கொள்கிறான். உடற்பொடி என உதறி முன்செல்கிறான்.

நான் எளியன். என்னைப்போன்ற எளியோர் அதை நோக்கி பெருவிசைகளால் தள்ளப்படுகிறார்கள். அதனால் ஏனென்றறியாமல் ஈர்க்கப்படுகிறார்கள். அதில் எரிந்தழிகிறர்கள். அல்லது பிறிதொருவராகி வெளிவருகிறார்கள். அதிலிருந்து விலகவும் விடுவித்துக்கொள்ளவும் முயல்கிறார்கள். அல்லது அதை சிறிதாக்கிக்கொள்ள முயல்கிறார்கள். கையில் நிற்கும் அளவுக்கு எளிதாக்கிக்கொள்கிறோம். பற்றிக்கொள்ள பிடிகளும் புழங்குவதற்கு உரிய வடிவமும் உரியதாக உருமாற்றிக்கொள்கிறோம். அதன்பொருட்டே இத்தவிப்பு. அது ஏன் பெருந்தருணம்? எனில் இப்போது இங்கு நிகழ்வன அனைத்துமே பெருந்தருணங்கள் அல்லவா? ஆம், மெய்யாகவே அப்படித்தான். பெருநிகழ்வொன்றின் பகுதி என்று ஆகும்போது அனைத்துமே அந்நிகழ்வின் முடிவிலா எடையை தாங்களும் கொண்டு விடுகின்றன. இன்று முற்றத்தில் பரவியிருக்கும் நீராவி படிந்த இளவெயில்கூட பொருட்செறிவு மிக்கது. புரிந்துகொள்ளவே முடியாதது. ஒரு கொலைப்புன்னகைபோல. ஒரு வாளின் ஒளிபோல. வேறெங்கிருந்தோ ஊறிவழியும் ஒளிர்நஞ்சு போலும் அது. இல்லை, அது பொருளற்றது. நஞ்சு தன்னில் சாவு என்னும் விழுப்பொருள் கொண்டது. இந்த ஒளி அவ்வாறல்ல.

பெருந்தருணங்கள் அனைத்திலிருந்தும் ஒரு விழுப்பொருளை மானுடர் திரட்டி வைத்திருக்கிறார்கள். ராகவராமனின் கதையை எழுதிய தொல்வேடனின் பாடல்களில்தான் எத்தனை அரிய மெய்மைகள். எவ்வளவு செறிந்த பொருள் கொண்ட வரிகள். பெருந்தருணங்களுக்கு அப்படி ஒரு மானுட உட்பொருள் இருக்க இயலாது. இவ்வுலகில் புழங்கும் ஒரு மெய்மை அதில் திரளவும் வாய்ப்பில்லை. அவை யானை காலில் நாம் இடும் தளைப்புச் சங்கிலிகள். புரவிக்கு நாமிடும்

கடிவாளங்கள். பொன்னிலும் இடலாம். அருமணிகள் பொறிக்கலாம். அவையனைத்தும் நம்முடையவை. அவை அறியாதவை. பெருமலைப்பாறைகளை பார்க்கையில் எல்லாம் உள்நுழைய வழியில்லாத மாளிகைகள் என்று அவன் இளமையில் எண்ணிக்கொண்டதுண்டு. மெய்யாகவே அவை உள்ளீடற்றவைதானா என்ற ஐயம் வளர்ந்த பின்னரும் வந்ததுண்டு. பலமுறை கனவுகளில் பாறைகளை முட்டியும் உந்தியும் சுற்றிச் சுற்றி வருவதாக கண்டிருக்கிறான்.

அவன் துயின்றுவிட்டிருந்தான். ஓசை கேட்டு விழித்தபோது வாயிலில் ஏவலன் நின்றிருந்தான். அவன் எழுந்தமர்ந்து கைகளால் முகத்தை துடைத்தபடி கூறுக என்னும் பொருளில் "ம்" என்றான். "அவை கூடியிருக்கிறது, அரசே. தங்களின் வருகை அங்கு எதிர்நோக்கப்படுகிறது" என்றான் ஏவலன். நகுலன் எழுந்து "நான் நீராடிவிட்டு செல்ல வேண்டும்" என்றான். "அரசர் அமர்ந்துவிட்டார்" என்றான் ஏவலன். "அவை நிகழ்க! நான் உடனே வருகிறேன்" என்றான். ஏவலன் விலகிச்சென்றதும் குடிலுக்குள்ளிருந்து சிறிய மரக்குடைவுக்கலத்தில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த தனது மாற்று ஆடையையும் மரவுரியையும் எடுத்தபடி வெளியே சென்று ஈரமண்ணில் கால் புதைய நடந்து கங்கையை நோக்கி இறங்கினான்.

அந்நிலம் அனல் விழுந்த இடம்போல சூழ்ந்திருந்த காட்டை எரித்து விரிந்துகொண்டிருந்தது. படகுத்துறையில் பணியாளர்கள் காலையிலேயே ஏதோ செய்யத் தொடங்கியிருந்தார்கள். ஒருபக்கம் படகுகளில் பொருட்கள் வந்து இறங்கிக்கொண்டிருந்தன. மறுபக்கம் துறைமேடை

விரிவாகிக்கொண்டிருந்தது. அவன் கண்ட நாள் முதல் அந்தப் படகுத்துறை ஒவ்வொரு கணமும் மேலும் பெரிதாகிக்கொண்டிருந்தது. எண்ண எண்ணத்தான் தேவை பெருகுகிறது. மூங்கில்களை சேற்றுபரப்பில் வைத்து அறைந்து இறக்கிக்கொண்டிருந்தனர். பறக்கும் ஆடையை பலகையில் அறைவதுபோல் கங்கையை கரைச்சேற்றில் அறைகிறார்கள் என்று தோன்றியது. இந்தப் படித்துறையில் திகழும் இக்காலத்தில் அதை கட்டி நிறுத்த முயல்கிறார்கள். பனிமலை இறங்கி ஆழ்கடல் செல்லும் பெருக்கு அவள். இங்கு இந்த மூங்கில் தறிகளில் சிக்குண்டு சற்றே நெளிந்து நிலைகொள்வது போன்ற ஒரு நடிப்பை அவளும் வழங்குகிறாள்.

அவன் நீராடும் துறைக்காக அங்கிருந்து அகன்று அகன்று சென்றான். சில கணங்களிலேயே யுதிஷ்டிரனின் அவைக்கூடலை தான் மறந்துவிட்டிருந்ததை சில கணங்கள் கடந்தே கீற்று நினைவு எழுந்தபோது உணர்ந்தான். கையிலெடுத்த இலையை உளம்கொள்ளாமல் வீசுவதைப்போல் அதை உதறினான். அப்பால் காட்டிற்குள் நீத்தார்பலி கொடுப்பதற்கான படித்துறைகள் ஒருங்கியிருந்தன. ஆனாலும் சிலர் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். பண்படாத மரப்பலகைகளை ஆணிகளால் அறைந்து நீர்விளிம்பில் மேடையாக எழுப்பி இரண்டடுக்குப் படிகளாக ஆக்கியிருந்தார்கள். அதற்குமேல் மண் வெட்டித்தெளிவிக்கப்பட்டு அதன்மேல் மணல் பரப்பி சடங்குமுற்றம் அமைக்கப்பட்டிருந்தது. நீருக்கு அடியில் பிரதீபர் அமைத்த கல்லாலான படிகள் உள்ளன. அந்தப் படிகள் அங்கிருப்பது வீரர்களை உவகைக்கொப்பளிப்பு அடையச்செய்வதை அவன் கண்டான். முதல்நாளே

அனைவரும் நீரில் பாய்ந்து மூழ்கி அதை தொட்டு மீண்டனர். “ஆம், படிகள்!” என்று ஒருவரை ஒருவர் நோக்கி கூவினார்கள். வந்த அன்றே நீரில் இறங்கி மூழ்கி கைகளால் துழாவி அடியைத் தொட்டு மேலெழுந்து வந்த யுதிஷ்டிரன் கையால் குழலை அள்ளி பின்னால் சரித்து, வாயில் அள்ளிய நீரை நீட்டி உமிழ்ந்து, கை சுழற்றி நீந்தி, அணைந்து கால் ஊன்றி நின்று “படிகள் உள்ளன, இளையோனே. மென்பாறையாலானவை! தொட்டறிய இயல்கிறது” என்றார். கரையில் நின்றிருந்த நகுலன் ஆர்வமில்லாமல் “ஆம், கூறினார்கள்” என்றான். “நீ தொட்டறியவில்லையா?” என்றார் யுதிஷ்டிரன். “இல்லை” என்றான் நகுலன்.

“இறங்கிப் பார்! நமது மூதாதை தன் போர் வெற்றியின் பொருட்டு அமைத்தது... அது மிகப் பெரிய போர். அன்று சௌவீரர்களும் யவனர்களும் சைப்யர்களும் ஒற்றைக்குலமென தங்களை திரட்டிக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு சோனகர்களின் உதவி இருந்தது. பீதர்களின் வணிகப்பாதைமேல் அவர்கள் கோன்மை கொண்டிருந்தமையால் முடிவில்லா செல்வமும் இருந்தது. அவர்களை வெல்லாமல் அஸ்தினபுரி நிலைகொள்ள இயலாதென்றனர் அமைச்சர். அவர்கள் ஒருநாள் கீழ்நிலம் நோக்கி வருவார்கள், முளைக்கையிலேயே அழிப்பது மேல் என்றனர் படைத்தலைவர். பிரதீபர் பெரும்படையுடன் வடமேற்கே சென்றார். ஒட்டுமொத்தமாக அவர்களை எதிர்க்க இயலாதென்றும் அறிந்திருந்தார். அவருக்கு இங்கே எவரும் துணையில்லை. அப்போதும் மகதம் நமக்கு எதிராகவே இருந்தது. அன்றைய அங்கமும் வங்கமும் கலிங்கமும் பிரக்ஜ்யோதிஷமும் பௌண்டரமும் பஞ்சசஹ்யம் என்ற பேரில் ஒற்றைக்கூட்டென்று இருந்தனர்.”

யுதிஷ்டிரன் மேலெழுந்து வந்து உடல் நீரை உதறினார். உள்ளத்தின் எழுச்சியாலோ குளிராலோ அவர் உடல் நடுங்கியது. "அன்று அஸ்தினபுரியின் முழுப் படையையும் வடமேற்கே கொண்டுசெல்வதென்பது தற்கொலையென ஆகிவிடும் வாய்ப்புள்ள முயற்சி. ஆனால் பெருமானுடர் பெருந்திட்டங்களையே வகுக்கிறார்கள். பிரதீபர் முதலில் படையுடன் சென்று மகதத்தை தாக்கி அவர்களின் பதினெட்டு கங்கைப் படகுத்துறைகளை அழித்தார். அவர்கள் அஞ்சி பின்வாங்கினர். அஸ்தினபுரியின்மேல் படைகொண்டு வந்து நாம் கைப்பற்றிய படகுத்துறைகளை மீட்க எண்ணிய மகதர் பஞ்சசஹ்யத்திடம் உதவி கேட்டார். அந்தப் பேச்சு நடந்துகொண்டிருந்தபோதே பிரதீபர் வடக்கே கிளம்பிவிட்டார். அவர்கள் பேசி கூட்டமைப்பதற்குள் வென்று மீளமுடியும் என நம்பிக்கை கொண்டிருந்தார். எத்தனை துணிவு, எத்தனை தன்னம்பிக்கை... அது தன் மீதான நம்பிக்கை மட்டும் அல்ல. தெய்வங்கள் மீதான நம்பிக்கையும்கூட."

"வடக்கே பெரும்பாலை. அது உச்சக்கோடையும்கூட. கோடையில் கீழ்நிலத்தார் பாலையில் நுழையவே அஞ்சுவர் என எண்ணியிருந்தமையால் சௌவீரக்கூட்டு நம்மை எதிர்பார்க்கவே இல்லை. படைகள் வந்துகொண்டிருக்கின்றன என்னும் செய்தி சென்றபோதுகூட அவர்கள் பாலைநிலத்தில் நமது படை வற்றி அழியும் என்றே எண்ணினார்கள். ஆனால் பாலையில் வற்றி அழிவது சிறுநதிகள். சிந்து பாலையை நிறைத்து பெருகிச் செல்வது அல்லவா? நமது படைகளில் மூன்றிலொருவர் நீரின்றியும் வெயிலில் வெந்தும் வெங்காற்றில் மூச்சிழந்தும் மடிந்தனர். ஆனால் எஞ்சியோர் சிபிநாட்டுக்குச் சென்றனர். அங்கிருந்து யவனர்களின் நகரங்கள் ஒவ்வொன்றாக வென்றனர். ஆயிரம் யானைகளில் பொன்னை

ஏற்றிக்கொண்டு வந்தார் பிரதீபர் என்று பாடுகிறார்கள் சூதர்கள். இப்போதுகூட அஸ்தினபுரியின் கருவூல அறைகளில் அன்றைய கொள்ளைச்செல்வம் நிறைந்திருக்கக்கூடும்."

"அதன்பின் மகதர் நம்மை எதிர்க்கத் துணியவில்லை" என்றார் யுதிஷ்டிரன். "அது எப்போதுமே அப்படித்தான், இளையோனே. ஒரு பெருவெற்றிக்குப் பின் உண்மையில் வென்றவர்கள் வலு குறைந்திருப்பார்கள். புண்பட்ட யானையை பூனை எதிர்க்கமுடியும். ஆனால் வெற்றி எதிரிகளை அச்சுறுத்தும். அவர்கள் நம்முடன் பேச்சுக்கு வந்தனர். வடக்கே செல்கையில் தன் மைந்தர் சந்தனுவை இங்கே படையுடன் நிலைகொள்ளச் செய்துவிட்டே சென்றார் பிரதீபர். மகதர்கள் நமக்கு பதினெட்டு படகுத்துறைகளை அளித்தனர். எட்டு கோட்டைகளும் நமக்கு வந்தன. மகதம் பணிந்ததுமே சந்தனு படையுடன் சென்று கோசலத்தையும் ஏழு சிறுநாடுகளையும் வென்று கங்கைமேல் நமது ஆட்சியை முழுமை செய்தார்."

"கங்கையின் மேலான நமது கோன்மையே நம்மை வளர்த்தது... கங்கை வந்து மாமன்னர் பிரதீபரின் மடியில் அமர்ந்தாள் என்றும் அவளை தன் மைந்தன் சந்தனுவுக்கு அவர் மணமகளாக ஆக்கினார் என்னும் கதை உருவானது அவ்வண்ணம்தான்" என்றார் யுதிஷ்டிரன். அவன் வெறுமையாக நோக்கிக்கொண்டு நிற்க யுதிஷ்டிரன் "கங்கை நமது ஊர்தியும் படைக்கலமும் ஆக திகழ்ந்திருக்கிறது. விசித்திரவீரியனின் காலத்தில் நாம் கங்கையை இழக்கலானோம். எந்தையின் காலகட்டத்தில் கங்கை முழுமையாகவே நம்மிடமிருந்து அகன்று மகதத்தால் கொள்ளப்பட்டது. கங்கையை ஆள்பவனே ஆரியவர்த்தத்தின் மெய்யான அரசன் என்பார்கள்" என்றார். "அங்கர் கங்கைக்கரையை முழுமையாகவே வென்றார்"

என்றான் நகுலன். யுதிஷ்டிரன் அவனை நோக்கி திரும்பாமல் “நாம் அறுதியான வெற்றியை அடையவேண்டும். நம் கொடிவழிகள் இன்னும் நூறாண்டுகள் ஐயமின்றி கொள்ளும் கோன்மையை” என்றார்.

மீண்டும் நீரில் இறங்கி நீந்தியபடி “அன்று வடபுல வெற்றியின்பொருட்டு பிரதீபர் ஒரு ராஜசூயவேள்வியை நிகழ்த்தினார் என்கிறார்கள். அதன் தொடக்கமாக மாபெரும் நீர்க்கடன் ஒன்று நடந்தது. அனைத்து நீத்தாருக்கும் அளிக்கப்பட்ட கொடை. அதன்பொருட்டு கட்டப்பட்டது இப்படித்துறை. இதைப்பற்றி பிரதீபவிஜயமும் ஜயபிரதீபமும் விரிவாகவே சொல்கின்றன” என்றார். நீந்தி கால்களை நீருள் துழாவியபடி “கீழே இரண்டு படிகளை தொட முடிகிறது. மேலும் ஒரு படி சேற்றுக்குள் இருக்கலாம்” என்றபின் மீண்டும் நீரில் மூழ்கி ஆழத்திற்கு சென்றார். அவருடைய நீண்ட தலைமுடி நீரில் அலைபாய்ந்தது.

அவன் அங்கு நிற்க இயலாமல் திரும்பி நடந்தான். நீருக்குள் மூழ்கி குளிர்ந்து எவர் கண்களுக்கும் படாமல் அந்தப் படிகள் அமைந்திருக்கின்றன. அவற்றின் மேல் கங்கையின் மென்சிறகு பொதிந்திருக்கிறது. இந்தப் படிக்கட்டும் நீரில் மூழ்கும். நீர்ப்பலிக்குப் பிறகு இப்போது அமைந்த மரப்படிகளை கல்லால் எடுத்து கட்டிவிடவேண்டும் என்று யுதிஷ்டிரன் ஆணையிட்டிருந்தார். ஒருவேளை அவருடைய அகத்தில் ஒரு ராஜசூயத்திற்கான திட்டம் இருக்கலாம். ஆண்டுதோறும் அளிக்கும் நீர்ப்பலி அங்குதான் நிகழும். பின்னர் அதுவும் நீரில் மூழ்கும். பலிச்சடங்குகள் சுருங்கி ஒருவேளையாகி, ஒரு கைப்பிடி நீராகி, ஒரு விரல் செய்கையாகி ஒரு சொல் நினைவாகி மறையும். பிறிதொரு படிக்கட்டு எழும்.

எனில் நான் இப்போது நின்றிருக்கும் இந்த மண்ணில் நாளை அமையும் இன்னொரு படிக்கட்டு உள்ளது. அதன் இயல்கை வாய்ப்புக்கு மேல் நின்றிருக்கிறேன். தன் உள்ளம் சென்றுகொண்டிருக்கும் திசையை எப்போதுமே ஒருகணம் திரும்பி நின்று நோக்கி வியப்பது அவன் வழக்கமாகிவிட்டிருந்தது. உள்ளம் பெருக்காகவே எப்போதும் இருந்தது. புறவுலகுடன் அதன் தொடர்பு இலைதாவும் தவளை போலத்தான். தொட்டுத்தொட்டு எழுந்தமைந்தது. அவன் தன் உள்ளம் அனைத்துக் கட்டுப்பாடுகளையும் இழந்துவிட்டது என்றே எண்ணினான். ஆனால் அங்குள்ள அனைவரின் உள்ளமும் அப்படித்தான் கொப்பளித்து ஓடிக்கொண்டிருந்தது என விழிகள் காட்டின.

ஒருவேளை யுதிஷ்டிரனுடைய உள்ளம் அவ்வண்ணம் இல்லாமலிருக்கலாம். கல்வியால் அடைந்த சொற்கரை அதற்கு அமைந்திருக்கலாம். அவன் அங்கு நின்று நோக்கியபோது நீரிலிருந்து எழுந்து தலைமயிரை அள்ளி பின்னாலிட்டு கைகூப்பியபடி கரை நோக்கி வந்த யுதிஷ்டிரனை கண்டான். ஒடுங்கிய தோள்களிலிருந்து நீர்வழிந்து இறங்கியது. நீராடும்போது மட்டும் அவரில் கூடும் சிறுவனின் பாவனை வந்துவிட்டிருந்தது. கரை நின்ற ஏவலனிடம் அவர் எதையோ சொன்னபோது வெண்பற்கள் தெரிந்து மறைய அவர் புன்னகைப்பதுபோல் இருந்தது.

கங்கையின் ஓரமாக இருந்த நாணல் புதர்களுக்குள் செல்லும் பொருட்டு பலகைகள் போட்டு வழி அமைக்கப்பட்டிருந்தது. நாளும் பலர் நடந்து சென்றமையால் பலகைகள் சேற்றில் அழுந்தி அங்கே ஒரு ஒற்றையடித்தடம் இருப்பதாகவே உணரச்செய்தன. கால்கள் மட்டுமே பலகையை

உணரமுடிந்தது. பலகையின் விளிம்பில் கால் வைத்தபோது மறுமுனை திடுக்கிட்டு மண்ணை அதிரவைத்தது.

அவன் இறங்கி கங்கையின் நீர்விளிம்பை அடைந்தான். அது நீராடுவதற்குரிய இடமாக அடையாளம் காணப்பட்டிருந்தது. கங்கைக்குள் ஒரு செறிமண் பாறை நீட்டி நின்றது. கங்கையின் உதடுகளின்மேல் நீட்டிய ஒற்றைப் பல் என்று அது தோன்றியது. அவன் மேலாடையைக் களைந்து மரவுரி அணிந்து நீரில் பாய்ந்திறங்கி மூழ்கி மேலெழுந்து வந்தான். கைவீசி நீந்தி கரையை அணுகினான். உடலில் இத்தனை வெம்மை நிறைந்திருக்கிறதா? நீரில் வெம்மை கரைய உள்ளிருந்து மேலும் வெம்மை எழுந்து தோல்பரப்பை அடைவதை உணர முடிந்தது. ஆனால் அவன் கரையேறிவிட்டான்.

கங்கையில் இறங்கினால் பொழுது பிந்தும் வரை நீந்திக்கொண்டிருப்பது அவன் வழக்கம். அவை நிகழ்வுகளுக்கு பிந்தக்கூடாதென்பதனால் மிக முன்னதாகவே நீராட்டுக்குச் செல்லும் பழக்கத்தை கொண்டிருந்தான். இன்னொரு கைச்சுழல் நீச்சல், இன்னொரு முழுக்கு என எண்ணி எண்ணி பொழுது செல்வதை அறியாது நீரிலிருப்பான். மழைக்கால நீரின் சேற்று மணம், கோடைகால நீரின் ஆழ்ந்த தண்மை, மேல் பரப்பிலொரு மென்படலமாக செல்லும் வெயில்வெம்மை என கங்கையின் அனைத்து நிலைகளையும் அவன் அறிந்திருந்தான். ஒவ்வொன்றினூடாகவும் கடந்துசென்றுகொண்டிருப்பான்.

ஒவ்வொரு நாளும் என நீராடிய பின்னரும்கூட கனவில் கங்கையில் நீராடும் நினைவு வந்துகொண்டே இருந்தது. ஆனால் அப்போது கங்கையில் நீராடுவதை அவன் அஞ்சினான். பெரும்பாலும் சிற்றோடைகளிலோ சிறு சுனைகளிலோதான்

நீராடினான். கங்கைக்கரைக்கு வந்த பிறகு ஒரு முழுக்குக்கு மேல் அவனால் நீராட முடிந்ததில்லை. ஒருகணம் தயங்கினால் கங்கையில் இறங்கவும் முடியாதென்பதனால் அணுகியதுமே கண் மூடிக்கொண்டு எண்ணாமல் பாய்ந்து துழாவி நீந்தி கரையேறிவிடுவது அவன் வழக்கம் என ஆயிற்று.

ஆயிரம் கைகளுடன் அள்ளி இழுத்து ஆழத்திற்கு கொண்டு செல்ல முயலும் கங்கையிடமிருந்து தப்ப விரும்புபவன்போல மூச்சு திணற கரைப்பாறையைப் பற்றி மேலே திரும்பிப்பார்க்காமல் மரவுரி எடுத்து தலை துடைத்து ஆடை மாற்றி அகன்று சென்றான். நீராட எழும்போதும் தலை துவட்டுகையிலும் விழி கொள்ளாது நீரின் ஒளிப்பெரும்பரப்பை பார்த்து நின்றிருப்பது அவன் வழக்கம். நீராடிய பிறகும் நெடுநேரம் கங்கையை நோக்கி நின்றிருப்பதும் உண்டு. இப்படி ஒரு கணமும் திரும்பாமல், அச்சுறுத்தும் விதியிடமிருந்தென அன்னை நீர்ப்பெருக்கிடமிருந்து ஓடி அகல்வோம் என ஒருபோதும் எண்ணியதில்லை.

நடக்கையில் அவன் மிகவும் களைத்திருந்தான். அத்தனை களைப்பு எதனால் என்று எண்ணினான். உள்ளம் ஓடிய நெடுந்தொலைவின் களைப்பு. எண்ணி எண்ணிச் சென்ற தொலைவு அனைத்தையும் சலித்துச் சலித்து நடந்து மீளவேண்டியிருக்கிறது. அவனுக்கு அப்போது யுதிஷ்டிரனின் அவைக்குச் செல்ல சற்றும் உளம்கூடவில்லை. வெளியே எங்காவது சென்றுவிடவேண்டும் என்றுதான் தோன்றியது. உடனே கிளம்பி எங்கேனும் சென்றுவிடுவோம் என்று எண்ணியபோது அவ்வெண்ணமே மேலும் நடக்க ஆற்றல் அளித்தது. குடிலுக்கு மீண்டு

ஆடைமாற்றிக்கொண்டிருந்தபோதுகூட அங்கிருந்து காட்டுக்குள், அறியா நிலம் ஒன்றுக்குள் செல்லப்போகிறோம் என்றே எண்ணிக்கொண்டிருந்தான். ஏவலன் வந்து நின்று தலைவணங்கியபோது பெருமூச்சுவிட்டான்.

நீர்ச்சுடர் - 27

பகுதி நான்கு : கழுநீர்க் கரை – 8

குழல்கற்றைகள் ஈரமாக இருந்தமையால் தலைப்பாகை அணிய முடியவில்லை. தலைதுவட்டிக்கொண்டிருந்தபோது நகுலன் உள்ளத்தால் யுதிஷ்டிரனின் அவைக்கு சென்றுவிட்டிருந்தான். அங்கே என்ன சொல்லவேண்டும் என்று சொல்லை எடுத்து கோக்கத் தொடங்கியபோதுதான் தன் உள்ளம் திருதராஷ்டிரரின் குடிலில் நிகழ்ந்த அனைத்திலிருந்தும் மிக விலகி, எண்ணி எடுக்கத்தக்க சில சொற்களாக அனைத்தையும் மாற்றிவிட்டிருப்பதை உணர்ந்தான். அதன்பொருட்டே வேறெங்கோ சென்றது அகம். எதைஎதையோ கோத்தது. எவற்றையெல்லாமோ எடுத்து போர்த்திக்கொண்டது.

திருதராஷ்டிரரின் குடிலில் நிகழ்ந்தது வாழ்நாள் இறுதிவரை நீடிக்கும் ஒரு நினைவு. அல்லது நாளையே அதை உள்ளம் கழித்துவிடவும்கூடும். அத்தருணத்தின் அறியமுடியாமையும் உணர்வுச்சுழல்களும் அடியிலியைச் சென்றடைந்து மீண்ட அவ்வெறுமைப்பெருவெளியும் இத்தனை எளிதாக சொல்லாக மாறுமென்பதை எண்ணும்போது அவனுக்கு விந்தையானதோர் நிறைவும் பின்னர் புன்னகையும் தோன்றியது.

சொல்லைப்போல் முடிவுற்றுவிட்ட பிறிதொன்றில்லை. மீண்டும் நேரடி நிகழ்வினூடாக, கற்பனையினூடாக அதைத் திறந்து விரித்தாலொழிய அது ஒன்றையே சுட்டி நின்றிருக்கும்.

அவன் யுதிஷ்டிரனின் அவைக்களம் நோக்கி செல்கையில் அச்சொற்களை மீண்டும் ஒருமுறை முறையாக கோத்து அடுக்கி உருவமைத்துக்கொண்டான். ஆகவே அவன் நடை சீரான காலடிகளாக அமைந்தது. யுதிஷ்டிரன் தன் குடிலுக்கு வெளியே சாலமரத்தடியில் போடப்பட்டிருந்த தாழ்வான மூங்கில் பீடத்தில் அமர்ந்திருக்க சகதேவன் அவர் அருகே பின்னால் அமர்ந்திருந்தான். சற்று அப்பால் மரங்களில் சாய்ந்தபடி பீமனும் அர்ஜுனனும் நின்றனர். ஏவலர்கள் மேலும் விலகி நிற்க தௌம்யர் யுதிஷ்டிரனுக்கு நேர் முன்னால் உயரமான மரப்பீடத்தில் அமர்ந்திருந்தார். அவருக்குப் பின்னால் அவருடைய மாணவர்கள் நின்றனர். யுதிஷ்டிரனுக்கு வலப்பக்கம் அமைச்சர்கள் நின்றிருந்தனர்.

அவர்கள் மெல்லிய குரலில் ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். அப்பேச்சு அத்தனை செறிவானதல்ல என்பது அவர்களின் விழிகள் அலைந்ததில் இருந்து தெரிந்தது. யுதிஷ்டிரன் முதலிலேயே நகுலனை பார்த்துவிட்டார். அவருடைய சொல் தயங்கியதும் தௌம்யரும் பிறரும் திரும்பி நோக்கினர். நகுலன் அருகணைந்து சொல்லின்றி தலைவணங்கி நின்றான். யுதிஷ்டிரன் அவனை நிமிர்ந்து பார்த்து சற்றே எரிச்சலுடன் “நெடும்பொழுதாக உனக்காக காத்திருக்கிறோம்” என்றார். “நான் அங்கிருந்து வந்து ஒற்றர்களை சந்தித்து சில ஆணைகள் விடுக்க வேண்டியிருந்தது” என்றான் நகுலன். என்ன என்பதுபோல் யுதிஷ்டிரன் ஏறிட்டுப் பார்த்தார்.

“பிற அரசியரும் திருதராஷ்டிரருடன் தங்க விரும்பினார்கள். அதனால் என்ன நிகழும் என்பதை எண்ணவேண்டியிருந்தது. ஆனால் அது முறையானது என்பதனால் அவர்களை அங்கு அனுப்ப ஆணையிட்டேன்” என்றான். யுதிஷ்டிரன் “அவர்கள் அங்கு தங்க இடமிருக்கிறதா?” என்றார். “இப்போது அவர்கள் பேரரசருடன் இருக்கிறார்கள். இன்று மாலைக்குள் அவர்களுக்கான குடில்களை அங்கு போட்டுவிடமுடியும். அனைத்துக்கும் ஆணையிட்டிருக்கிறேன்” என்று நகுலன் கூறினான்.

அப்பேச்சினூடாக அவர்களின் எண்ணங்களை அவன் திருதராஷ்டிரரின் மேல் திருப்பிவிட்டான். தௌம்யர் “அவர்கள் அவருடன் இருப்பது நன்று” என்றார். ஆனால் கூடவே மெல்லிய குரலில் “அவர்கள் பதின்மர்” என்றார். அவர் தனக்குத்தானே சொல்லிக்கொண்டதுபோல் அச்சொல் ஒலித்தாலும் அனைவரும் திரும்பி கூர்ந்து நோக்கினர். அவரே அச்சொற்களை உணர்ந்து “பத்து முகங்களைப்போல. உள்ளத்தின் பத்து வடிவங்கள்” என்றார். “ராவணப்பிரபுவைப்பற்றி அவ்வண்ணம் சொல்வதுண்டு. அவருடைய பத்து ஆணவநிலைகள் அவை என. இவை அறத்துணையின் பத்து வடிவங்களாக இருக்கக் கூடும்.” அப்போதும் அவர் சொல்ல வருவதென்ன என்று நகுலனுக்கு புரியவில்லை. யுதிஷ்டிரன் தவிர பிறர் அதை உளம்கூர்ந்து எண்ணவுமில்லை.

தௌம்யர் நகுலனை நோக்கிவிட்டு “அவர்கள் அறத்துணை என்பதன் எடுத்துக்காட்டுக்கள் என்பதை மறுக்கவேண்டியதில்லை. ஆனால் பத்து நிலைகள். பத்து எனில் கொழுநருக்காக கண்களை கட்டிக்கொண்ட காந்தாரி ஓர்

எல்லை. மறு எல்லையில் உளம் உடைந்து சாளரத்தில் அமர்ந்தவள்... விழியின்மை. பற்று என்பது ஒரு விழியின்மை. கற்பு என்பதும் இன்னொரு விழியின்மையே" என்றார். புன்னகைத்து "நான் சொல்லவருவதை சொல்லிவிட்டேனா என்று தெரியவில்லை. இதெல்லாம் சற்றே வழிவிட்டுச் செல்லும் எண்ணங்கள். என் குருமரபுக்கு மட்டுமே உரியவை. பிறர் இவற்றை உளக்கோணல் என்றே எண்ணக்கூடும்" என்றார்.

"சொல்க!" என்றார் யுதிஷ்டிரன் தணிந்த குரலில். "இப்படி சொல்கிறேன். உலகளந்தானுக்கு மஞ்சமும் குடையும் ஆகி நின்றிருக்கும் முதல்நாகம் ஆயிரம் தலைகொண்டது. ஈராயிரம் நா கொண்டது. வாழ்த்தும் பணிவும் என அதன் நா ஓயாது ஒலித்துக்கொண்டே இருக்கிறது. ஆனால் ஆயிரத்தின் மடங்குகளில் என பெருகிச் செல்லும் அச்சொற்களில் பலகோடியில் ஒன்று அவர்மேல் நஞ்சு கக்கும் என்று தப்தகீதிகை சொல்கிறது." நகுலன் அவர் சொல்லவருவதை புரிந்துகொண்டு "ஆம், அதற்கும் வாய்ப்புள்ளது" என்றான். யுதிஷ்டிரன் "என்ன வாய்ப்பு?" என்றார். தௌம்யரை நோக்கி "என்ன நிகழும்?" என்றார். நகுலன் "நமக்கு வேறு வழியில்லை, அமைச்சரே" என்றான். "ஆம், அவருக்கும் வேறுவழியில்லை" என்றார் தௌம்யர்.

மீண்டும் ஒரு சொல்லின்மை உருவாகியது. காடு ஓலமிட்டுக்கொண்டிருந்தது. நகுலன் தௌம்யரை பார்த்துக்கொண்டிருந்தான். வேதம் பெருங்கனவென எழுந்து ஆட்டிவைக்கும் காடுகளை அவன் கண்டு மீண்டிருந்தான். இங்கே அது அன்றாட உலகியல் மெய்மையாக, அவற்றை நிகழ்த்தும் சடங்குகளாக மாறி அமைந்திருக்கிறது. வேதமுடிபினர் அளவைநோக்கை வெறுப்பதை அவன்

கண்டிருந்தான். ஆனால் அப்போது அதுதான் பயனுள்ளதா என்ற எண்ணம் ஏற்பட்டது. ஒவ்வொன்றையும் இயற்கை ஒளியில் அவற்றுக்கான மெய்யான அளவில் நிறுத்துகிறது. தெய்வங்களையும் அளந்தே வைத்திருக்கிறது அளவைநோக்கு. வேதமுதன்மைநோக்கு என்கிறார்கள் அவர்கள். வேதம் அவர்களின் அளவுகோல். அதை மாற்றிக்கொள்ள அவர்களால் இயலாது.

யுதிஷ்டிரன் பொருளற்ற எண்ணங்களில் உழல்வதை அவருடைய விழிகளின் மங்கல் காட்டியது. சற்று நேரம் கழித்து உளம் மீண்டு அசைந்தமர்ந்து "நாம் பேரரசரைக் கண்டு வணங்கி சொல் பெற்ற பின்னரே நீர்க்கடன் தொடங்கவேண்டுமென்று தௌம்யர் ஆணையிடுகிறார், இளையோனே" என்றார். நகுலன் "ஆம், அது முறையே" என்றான். யுதிஷ்டிரன் மேலும் ஒவ்வாமையை உடலில் காட்டி "ஆனால் நாம் சென்று வணங்கி சொல் பெறும் நிலையில் அவர் உள்ளாரா? இப்போது இந்த அவை அறிய வேண்டியது அதுவே" என்றார்.

நகுலன் "எந்நிலையிலாயினும் அவர் நம் தந்தை" என்றான். யுதிஷ்டிரன் பெருகும் எரிச்சலுடன் உரக்க "நான் உன்னிடமிருந்து நெறியுரைகளை எதிர்பார்க்கவில்லை. இன்று நிகழ்ந்ததை வைத்து உன் கணிப்பென்ன என்று அறியத்தான் உன்னை அழைத்தேன்" என்றார். அவர் எரிச்சல்கொண்டது நகுலனுக்கு உவப்பாக இருந்தது. அவன் தன் நிலையழிவை கடந்து நின்று சொல்லெடுக்க வாய்ப்பாக அமைந்தது அது. "இன்றைய நிகழ்வுகளை வைத்து நாம் எதையும் முடிவெடுக்க முடியாது" என்றான். "ஆம், ஆனால் நிகழ்ந்தவையே அடையாளம்... சொல்" என்றார் யுதிஷ்டிரன்.

தௌம்யர் “இன்று பேரரசி அரசரைச் சென்று சந்தித்தபோது என்ன நிகழ்ந்தது? அதை முதலில் சொல்க!” என்றார். நகுலன் “அவர்கள் இன்று மைந்தரை இழந்த தந்தையும் தாயும் மட்டுமே. அறுதியில் அவர்களிடம் எஞ்சியது அந்நிலை மட்டும்தான். அதுவே நிகழ்ந்தது. தழுவிக்கொண்டு விழிநீர் உகுத்தனர்...” என்றான். யுதிஷ்டிரன் கை நீட்டி அவனைத் தடுத்து “அவ்வாறே நிகழும் என்று நானும் எண்ணினேன். அத்துயர் உச்சியில் அவர்கள் வஞ்சினம் கொண்டார்களா? நம்மைக் குறித்த பழிச்சொற்கள் அவர்கள் நாவில் எழுந்தனவா? பேரரசியோ அரசரோ நம்மை தீச்சொல்லிட வாய்ப்புண்டா? நாம் சென்று அவர்களைப் பார்ப்பது நலம் பயக்குமா? நான் அறிய விரும்புவது அதை மட்டும்தான்” என்றார்.

நகுலன் கசப்புடன் “இத்தருணத்தில் மானுடரைப் பற்றி என்ன சொல்ல இயலும்? ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலையிலிருக்கிறார்கள். முந்தைய கணம் அடுத்த கணத்தை உருவாக்காமல் ஆகிவிட்டிருக்கிறது இங்கே. மூத்தவரே, இன்று எவரைப் பற்றியும் எக்கணிப்பையும் சொல்லும் நிலையில் நானில்லை” என்றான். பீமன் உடலை அசைத்து எழுந்தபோது கைகள் மார்பிலிருந்து தழைந்தன. “இப்பேச்சுக்கு பொருளே இல்லை. நாம் சென்று அவரைப் பார்த்து வணங்கி சொல் பெறவேண்டுமென்பது முறையெனில் அதை செய்வோம். அதன் பொருட்டு தீச்சொல்லோ பழிச்சொல்லோ வருமெனில் அது நமக்குரியது என்றே கொள்வோம். எண்ணிச் சூழ்ந்து இங்கு அமர்ந்திருப்பதுபோல் வீண்செயல் பிறிதில்லை” என்றான்.

யுதிஷ்டிரன் “வாயை மூடு... நீ அவர் முன் சென்று நின்றிருக்கப்போகிறாயா? கீழ்மகனே, நீ அவருக்குச் செய்தது என்ன என்பதை உணர்ந்திருக்கிறாயா? ஒரு தந்தையின் நூறு

மைந்தரையும் ஆயிரம் பெயர்மைந்தரையும் கொன்றுவிட்டு அவரை எதிர்கொள்ளப்போகிறாய்" என்றார். "நான் அவர்களை போரில் வென்றேன். படைக்கலம் எடுத்து களம்வரும் ஒருவன் முடிந்தால் என்னை கொல் என்னும் அறைகூவலையே விடுக்கிறான். வென்றால் கொல்லும் ஒப்புதலை வழங்குகிறான்... நான் போர்வென்றவன். என் வெற்றியை தெய்வங்களுக்கு அளித்துவிட்டவன். எதைப்பற்றியும் வருந்தவேண்டியதில்லை நான்" என்றான் பீமன்.

யுதிஷ்டிரன் சினத்துடன் உரக்க "நீ நெறி பேசுகிறாயா? என்னிடம் அறம் பேச வந்தாயா?" என்றார். "ஆம், என் அறம் பற்றி எனக்கு எந்த ஐயமும் இல்லை. எதைப்பற்றியும் குற்றவுணர்ச்சியும் இல்லை" என்று பீமன் சொன்னான். "செய்தவற்றின்பொருட்டு குற்றவுணர்ச்சி கொள்வதே நரகம் என்பது... நான் அதில் இல்லை." யுதிஷ்டிரன் "அது மானுட இயல்பு. குற்றவுணர்ச்சி அற்றவை விலங்குகள்" என்றார். "மூத்தவரே, இக்குற்றவுணர்ச்சி ஒரு நடிப்பு. இச்செயலைக் கடந்துசென்று வெற்றியின் கனிகளை உண்ண நாமனைவரும் அதை பயன்படுத்திக்கொள்கிறோம். நான் எதையும் நாடவில்லை. ஆகவே எனக்கு எந்த நடிப்பும் தேவையில்லை" என்றான் பீமன்.

"சீ, கீழ்மகனே! என்ன சொன்னாய்?" என்றபடி யுதிஷ்டிரன் எழுந்துவிட்டார். "என்னடா சொன்னாய்? என் முகத்தை நோக்கி நீ என்னடா சொன்னாய்?" பீமன் உறைந்த முகத்துடன் அமைதியாக நிற்க தௌம்யர் "அரசே, அமர்க!" என்றார். யுதிஷ்டிரன் பதறும் உடலுடன் அமர்ந்துகொண்டார். "இவன் சொல்வதென்ன? இவனுடைய சொற்களில் என்றுமிருந்தது இந்த நஞ்சு. இன்று அது நொதித்து கூர்கொண்டுவிட்டிருக்கிறது.

அறிவிலி... காட்டாளன். அமைச்சரே, இவன் வடிவில் காட்டின் இருள் எழுந்து வந்து பாண்டுவின் குடியை பழிப்பு காட்டுகிறது. பாண்டுவால் கொல்லப்பட்ட அந்த விலங்கின் வஞ்சம் போலும் இது." அவர் தன் தலையில் அறைந்து கொண்டார். "ஊழ், ஊழன்றி வேறில்லை..."

தௌம்யர் "நாம் இப்போது பேசவேண்டியவை இவை அல்ல. ஒருவரை ஒருவர் குத்திக் கிழித்துக்கொள்வதில் பொருளில்லை" என்றார். "ஏன் இதை செய்கிறோம்? அமைச்சரே, இங்கே நிகழ்வது இதுவே. நாங்கள் ஐவரும் சந்தித்துக்கொள்ளவே இயல்வதில்லை. ஒருவரை நோக்கி ஒருவர் நஞ்சு கக்காமல் எங்களால் மீள இயல்வதில்லை" என்றார். "ஏனென்றால் நீங்கள் ஐவரும் ஒருடலின் ஐந்து முகங்கள்" என்றார் தௌம்யர். "நீங்கள் உங்களிடமே சொல்லிக்கொள்வனதான் சொல்லாகவும் எழுகின்றன." யுதிஷ்டிரன் குரல் தளர்ந்து "ஏன் இந்த பெருந்துன்பம்? ஏன் துயரை வளர்த்து அதில் இப்படி திளைக்கிறோம்? ஏன் ஒருவரை ஒருவர் வெறுத்துக்கொள்கிறோம்?" என்றார்.

சகதேவன் "நஞ்சில் புழுத்த புழுக்கள்போல் துயருக்கே பழகி அதில் வாழத் தொடங்கிவிட்டிருக்கிறோம். ஆகவே அது நமக்கு போதாமலாகிவிட்டிருக்கிறது" என்றான். அவன் குரலில் இருந்த ஏளனம் யுதிஷ்டிரனின் உள்ளத்தை அடங்கச்செய்தது. "ஆம், உண்மை. நம்மைப்போல் ஏளனத்துக்குரிய சிற்றுள்ளங்கள் இங்கு வேறில்லை..." என்றார். நகுலன் தன்னுள்ளே புன்னகைத்துக்கொண்டான். துயரைக் கொட்டி அதை வெறுப்பினூடாக வளர்த்து உச்சத்தை அடைந்து ஓர் ஏளனம் வழியாக கீழிறங்கி வருவதே ஒவ்வொருநாளும்

நிகழ்ந்துகொண்டிருக்கிறது. தௌம்யர் “நாம் பேசவேண்டியதை பேசுவோம்” என்றார்.

நகுலன் “ஆம், அதையே நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்” என்றான். “அமைச்சரே, பேரரசர் நம்மை நோக்கி என்ன சொல்லக் கூடுமென்பதை இத்தருணத்தில் அவரே அறியார். இவ்வனைத்தையும் நிகழ்த்தும் தெய்வங்கள்கூட அவற்றை சொல்ல முடியாது. ஒவ்வொருமுறையும் நம் கணிப்புகள் அனைத்தையும் கடந்து ஏதோ ஒன்றுதான் நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்னும்போது இங்கு அமர்ந்து ஒவ்வொன்றையும் எண்ணி எண்ணி கணிப்பதில் உள்ள பொருளின்மையை நாம் உணர்வதில்லை” என்றான். யுதிஷ்டிரன் “நம் செயல்களை பொருளற்றுப் போகச்செய்வது தெய்வங்களின் ஆணை. ஆனால் நாம் ஆற்றும் செயலுக்கான பொருள் ஒன்று நம்மிடம் இருக்கவேண்டும். இல்லையேல் அச்செயலை நம்மால் நம்பி ஆற்றமுடியாது” என்றபின் சகதேவனிடம் “நீ என்ன எண்ணுகிறாய், இளையோனே?” என்றார்.

சகதேவன் “அவர்கள் விழிநீர் உகுத்திருக்கிறார்கள், அது ஒன்றே இப்போது போதுமானது” என்றான். “ஏன்?” என்று யுதிஷ்டிரன் கேட்டார். “மூத்தவரே, விழிநீர் அனைத்தையும் கழுவுவது. முதன்மையாக வஞ்சத்தை. பேரரசியின் அணைப்பில் சிறுமைந்தராக மாறிய பேரரசர்தான் அங்கிருப்பார். ஒருவேளை அவர் அகம் மீண்டும் நஞ்சு கொள்ளக்கூடும். ஆனால் இப்போது இக்காலையிலேயே நாம் அவரை சந்திக்கச் சென்றால் அங்கிருப்பவர் சற்றுமுன் உளம் கனிந்தவர். மைந்தர்போல் உளத்தூய்மை கொண்டவராக அவர் இருக்க வாய்ப்பு. ஆகவே அஞ்சவேண்டியதில்லை” என்றான்.

யுதிஷ்டிரன் திரும்பி நகுலனிடம் "நான் என்பொருட்டு அஞ்சவில்லை. அங்கிருப்பவர் நூறு மைந்தரையும் ஆயிரம் பெயர் மைந்தரையும் இழந்தவர். பாரதவர்ஷத்தின் சக்ரவர்த்தி என மும்முடிசூடி அமரத்தக்க மைந்தனை இழந்தவர். அறியாது ஒரு அவச்சொல் அவர் நாவில் எழுமெனில் அஸ்தினபுரியும் இந்திரப்பிரஸ்தமும் அதன் நஞ்சையே சென்றடையும். எரிமழையென அவர் சினம் நம் குடிமேல் விழும். அதை தவிர்ப்பது அரசன் என என் கடமை" என்றார். நகுலன் ஓர் உளத்துடிப்பை உணர்ந்தான்.

சகதேவன் "அவ்வண்ணம் ஒன்று எழுமென்றால் அதை எவ்வகையிலும் நாம் கடக்க இயலாது. தந்தையென ஒரு சொல்லேனும் அவர் நம்மை பழித்துச் சொல்லாமலிருந்தால் அதுவே குறை" என்றான். "என்ன சொல்கிறாய், இளையோனே?" என்றார் யுதிஷ்டிரன். "நமக்குரிய பழி என ஒன்று உண்டு எனில் அதை நாம் பெறுவோம். அனைத்து தீச்சொல்லுக்கும் தகுதியானவர்கள் நாம் என்பதை நாமே அறிவோம். தந்தையிடமிருந்து தண்டம் பெறாமல் நாம் நம்மை பொறுத்துக்கொள்ள மாட்டோம். மூத்தவரே, இளஅகவையில் ஒரு பிழை செய்தால் அன்னையிடமிருந்து அதற்குரிய தண்டனையைப் பெற்றால்மட்டுமே நம் அகம் நிறைவுறுகிறது" என்றான்.

"இன்று அதை நமக்களிக்க அவரன்றி வேறெவரும் இல்லை" என்று அவன் தொடர்ந்தான். "சென்று அவர் முன் நிற்போம். அவர் நம்மை அழிப்பதென்றால் நிகழட்டும். நம் குடியையே பொசுக்குவார் என்றால் அதுவும் முறையே." பீமன் "நான் எப்பிழையும் இயற்றவில்லை. எவர் அளிக்கும் தீச்சொல்லும் என்னை வந்தடையாது. தேவை என்றால் நானே முன்னால்

செல்கிறேன். நான் மட்டுமே சென்று அவருடைய பழிச்சொல்லை பெற்றுக்கொள்கிறேன்" என்றான். யுதிஷ்டிரன் அவருடைய எல்லா பொறுமையையும் இழந்தார். "நீ உளம்தொட்டுச் சொல். இப்போதேனும் நீ உன் மைந்தரைக் கொன்றவர்களும் போரில்தான் கொன்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறாயா? சொல்" என்றார்.

அச்சொல் எவ்வண்ணம் சென்று அறையும் என யுதிஷ்டிரன் நன்கறிந்திருந்தார். கைகள் தளர விழிகள் சுருங்க முகத்தசைகள் இழுபட்டு அதிர பீமன் அவரை வெறித்துப் பார்த்தான். இரு கைகளையும் ஒன்றுடன் ஒன்று சேர்த்து உரசியபடி மரம் பிளக்கும் ஒலியில் உறுமினான். தௌம்யர் அவர்களின் நடுவே புகுந்து "இங்கு நின்று இதைப்பற்றி வெறுமனே சொல்லாடிக்கொண்டிருப்பதில் எப்பொருளும் இல்லை. அவர் எந்நிலையில் இருந்தாலும் சரி, எது நிகழக்கூடுமென்றாலும் சரி, அங்கே சென்று அவர் கால் பணிந்து சொல் பெற்று இந்நீர்க்கடன் சடங்கை நிகழ்த்துவதே நம்முன் உள்ள ஒரே தெரிவு. மாற்றுவழி ஒன்றில்லை" என்றார்.

நகுலன் "ஆம், நான் கூறவருவதும் அது மட்டும்தான்" என்றான். யுதிஷ்டிரன் பெருமூச்சுடன் "அதை நானும் அறிவேன். இருப்பினும் ஏதேனும் ஒரு வழி தோன்றுமோ என்று எண்ணினேன்" என்றபின் "இளைய யாதவன் எங்கே?" என்றார். "காலையிலிருந்து அவர் தன் குடிலில்தான் இருக்கிறார்" என்றான் சகதேவன். "அவனை உடனழைத்துச் செல்வோம்" என்று யுதிஷ்டிரன் கூறினார். சகதேவன் "மூத்தவரே, இது நமக்கும் நம் தந்தையருக்குமான தருணம். இதில் அவர் எதற்கு?" என்றான். யுதிஷ்டிரன் "ஏனெனில் இப்போரை நிகழ்த்தியவன் அவன். இவையனைத்துக்கும் பொறுப்பேற்க

வேண்டியவனும் அவனே. முதலில் அவன் நின்றிருப்பதே முறை" என்றார்.

"போரை அவர் நிகழ்த்தியிருக்கலாம். நம் தந்தைக்கு எதிராக அனைத்தையும் செய்தவர்கள் நாமே. மானுட குலத்திற்கும் பாரதவர்ஷத்து அரசர்களுக்கும் அவர் தம் பெண்டிருக்கும் மறுமொழி சொல்லவேண்டிய இடத்தில் இளைய யாதவர் இருக்கலாம், நம் தந்தையருக்கு சொல்லளிக்க வேண்டியவர் அவர் அல்ல" என்று சகதேவன் சொன்னான். "ஆம்" என்றபின் யுதிஷ்டிரன் தத்தளிப்புடன் "ஆனால் அவன் வந்து முன்னால் நின்றால் அனைத்தும் எளிதாகலாம். பேரரசி இளைய யாதவன் மேல் பெரும்பற்று கொண்டவர். இன்று காலை வந்திறங்கியபோது இளைய யாதவனை வாழ்த்தினார். அவனுடன் இருக்கையில் தந்தையும் அவ்வாறு எண்ணக்கூடும். அனைத்தையும் எளிதாக்கும் ஒன்று அவனிடம் உள்ளது. இத்தருணத்தையும் அவன் எளிதாக்கி அளிக்கக்கூடும்" என்றார்.

நகுலன் "ஒருவேளை மூத்த தந்தை முனிந்தெழுந்தால்கூட அந்நஞ்சனைத்தையும் அவரே தாங்கிக்கொள்ளவும் கூடும் அல்லவா?" என்றான். அச்சீண்டலால் சீற்றமடைந்த யுதிஷ்டிரன் "ஆம், அவ்வாறே. அந்நஞ்சையும் அவனே தாங்கட்டும். அதுவே முறை. அவன் பொருட்டு நாம் படைகளையும் மைந்தரையும் அளித்தோம். நம் பொருட்டு அவன் அத்தீச்சொல்லை பெறட்டும். அதில் என்ன பிழை?" என்றார். "நன்று. தீச்சொல் அவருக்கு, மண்ணும் முடியும் நமக்கு" என்று பீமன் பல்லைக் கடித்தபடி சொன்னான். யுதிஷ்டிரன் "மண்ணும் முடியும் எனக்கு வேண்டியதில்லை. நீயே வைத்துக்கொள். அரசனையும் இளையோரையும் கொன்றவன் நீ அல்லவா? காட்டரசு நெறிப்படி நீயே முடிசூடும் தகுதி கொண்டவன். நீ முடி

கொள்க! நான் அஸ்தினபுரிக்கோ இந்திரப்பிரஸ்தத்துக்கோ வரவில்லை. இக்காட்டிலேயே இருந்துகொள்கிறேன். இங்கு தவம் செய்கிறேன். என் இறுதியை நான் கண்டடைகிறேன். ஆம், நீ செல், நீயே நிலம்கொள்க!" என்றார்.

"மெய்யாகவே காட்டில் இருக்க விரும்புபவன் நான் என்பதையும் நீங்கள் அறிவீர்கள், மூத்தவரே" என்று சொன்னபின் பீமன் நகுலனிடம் "நாம் கிளம்புவோம். அனைத்து ஒருக்கங்களையும் செய்" என்றான். "நீ சொன்னதற்கு என்ன பொருள்? நீ சொன்னதற்கு என்ன பொருள்? அதை முதலில் சொல்!" என்று யுதிஷ்டிரன் கூவினார். தௌம்யர் "வீண்சொல் வேண்டாம். இளைய யாதவர் உடன் வரட்டும். உரிய சொற்களை எடுப்பதற்கான ஆற்றல் அவருக்குண்டு. மெய்யாகவே இத்தருணத்தை அவர் எளிதாக்கக்கூடும்... கிளம்புக!" என்றபின் "நீங்கள் ஐவரும் இணைந்தே செல்லுங்கள். பேரரசியும் பேரரசரும் உளம் ஒய்ந்து அமர்ந்திருக்கும் தருணமே அதற்குரியது. இன்னமும் பொழுதை வீணடிக்க வேண்டியதில்லை. இளைய யாதவர் நேராகவே அங்கு வரட்டும். அவரை அழைத்துவர நான் என் மாணவர்களை அனுப்புகிறேன்" என்றார்.

"இவன் சொல்லும் இச்சொற்கள்... இவன்!" என்று பீமனை நோக்கி கைநீட்டி பேசத்தொடங்கிய யுதிஷ்டிரனை நோக்கி சினத்துடன் கை நீட்டித் தடுத்து "போதும். இனி இங்கு சொல் வேண்டியதில்லை" என்றார் தௌம்யர். தன்னை அடக்கி தணிந்து யுதிஷ்டிரன் "அவ்வாறே" என்று தலைவணங்கினார். பீமன் பொருட்டின்மை தெரிய உடலை திருப்பிக்கொண்டான்.

நீர்ச்சுடர் - 28

பகுதி நான்கு : கழுநீர்க் கரை – 9

யுதிஷ்டிரனின் குடிலுக்கு வெளியே நகுலன் காத்து நின்றிருந்தான். அவனருகே சகதேவன் நின்றிருக்க சற்று அப்பால் வேறு திசை நோக்கியபடி பீமன் மார்பில் கைகளைக் கட்டியபடி நின்றிருந்தான். மேலும் அப்பால் சிறிய முள்மரம் ஒன்றுக்கு அடியில் இருந்த உருளைக்கல் மீது அர்ஜுனன் அமர்ந்து முழங்காலில் கைமுட்டுகளை மடித்தூன்றி தலைகுனிந்து நிலத்தை பார்த்துக்கொண்டிருந்தான். அவன் குழல்கற்றைகள் சரிந்து முகம் மீது தொங்கிக்கிடந்தன. அவன் குரலைக் கேட்டே எவ்வளவு நாள் ஆகிறது என நகுலன் எண்ணிக்கொண்டான்.

காலை வெயில் எழுந்து முற்றத்தில் கண்கூசும்படி பரவி இருந்தது. ஈரமண்ணிலிருந்து எழுந்துகொண்டிருந்த வெக்கை மூச்சு திணற வைத்தது. மரங்கள் அனைத்திலிருந்தும் நீராவி எழுவதுபோல் தோன்றியது. காற்றில் பரவியிருந்த ஆவியே வியர்வையாக உடலில் வழிகிறதா? எங்காவது அமரவேண்டும் எனத் தோன்றியது. ஆனால் அங்கே எங்கும் அமர்வதற்கான இடம் இருக்கவில்லை. முக்தவனத்தில் பெரும்பாலானவர்கள் மண்ணிலேயே அமர்ந்தார்கள். நகுலன் குடில்நிரைகளை நிமிர்ந்து நோக்கினான். வெயிலுக்கு அப்பால் அவை மெல்ல அலைகொள்வதுபோலத் தோன்றியது. கண்களை ஒளி கூசச்செய்து விழிநீரை வரவழைத்தது.

குடிலுக்கு வலப்பக்கம் காட்டின் ஓரமாக ஒற்றைப்புரவித்தேர் நின்றிருந்தது. சேணம்பூட்டி நுகத்தில் கட்டப்பட்ட புரவி தரையிலிருந்து சருகு ஒன்றை எடுத்து வெறுமனே

மென்றுகொண்டிருந்தது. அதன் கழுத்துமணிகள் ஒலித்தன. பீமனின் புரவி எடைமிக்கது. அது ஒற்றைக்காலைத் தூக்கி தலைதாழ்த்தாமல் துயின்றுகொண்டிருந்தது. அப்பால் முள்மரத்தின் கிளையில் கட்டப்பட்டிருந்த அர்ஜுனனின் புரவி துயிலவில்லை. ஆனால் எப்போதுமே அது துயில்கொள்வது போன்ற அமைதியுடன் இருப்பதைத்தான் நகுலன் கண்டிருக்கிறான்.

நகுலனின் புரவி குடிலுக்கு அப்பால் மரத்தடியில் தலை தாழ்த்தி நின்றது. தலை தாழ்த்துகையில் அது கழுதைபோல் மாறுவதை நகுலன் எப்போதுமே உணர்வதுண்டு. அனைத்துப் புரவிகளுக்குள்ளும் ஒரு கழுதை உறைகிறதென்று அவனுக்கு புரவித்தொழில் கற்றுக்கொடுத்த சூதரான ஜீமுதர் கூறுவதுண்டு. கழுதையிலிருந்து புரவி எழுந்தது என்பது அவருடைய குலக்கதைகளில் ஒன்று. அவருடைய எல்லா கதைகளுமே வேடிக்கையானவை. அவை குழந்தைகளுக்குரியவை, அவர்கள் குழந்தைப்பருவத்திற்குமேல் கதைகளை நாடுவதில்லை. "கழுதையின் தவமே புரவியாயிற்று. ஒவ்வொரு கழுதையும் தன்னுள் ஒரு புரவியை மீட்டிக்கொண்டிருக்கிறது. நீரில் தன்னை புரவியென அது பார்த்துக்கொள்கிறது. கனவுகளில் புரவியென விரைகிறது. பல்லாயிரம் கழுதைகளில் ஒன்று தன் உடலின் எல்லைகளைக் கடந்து உயிரின் விசையைப் பெருக்கி புரவியென ஆயிற்று" என்று அவர் சொன்னார்.

"புரவிகுலம் கழுதைகளைக் கடந்து நெடுந்தொலைவு சென்றது. தொலைவுகளை ஆண்டது. நிலம்வெல்லும் படைக்கலமாயிற்று. அரசப்புரவியென அணிகொண்டது. இந்திரனும் கதிரவனும் அதை தங்கள் ஊர்தி எனக்

கொண்டனர். பின்னர் ஒருமுறை புரவி உணர்ந்தது, தன்னுள் கழுதை உறைவதை. அதை அஞ்சியது, அருவருத்தது. கழுதையல்ல தான் என்று ஒவ்வொரு கணமும் எண்ணத் தலைப்பட்டது. கழுதை இயல்புகள் அனைத்தையும் மறக்கவும் மறைத்துக்கொள்ளவும் முயன்றது. அதன் பொருட்டே புரவிகள் அத்தனை தன்னுணர்வு கொண்டதாயின. நோக்குக, புரவி துயில்வதே இல்லை! அரை உணர்வு நிலையிலேயே எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது. சற்று துயின்றால், சற்று தசைகளை தளரவிட்டால், சற்று தலை தாழ்த்தினால் கழுதையாகிவிடுவோம் என்னும் அச்சம் புரவியை எப்போதும் துரத்திக்கொண்டிருக்கிறது.”

உரக்க நகைத்து ஜீமுதர் சொன்னார் “அவ்வகையில் கழுதை நல்லூழ் கொண்டது. அது தன்னை மறந்து வாயூறி வழிய தலை சரிந்து முகவாய் நிலம் தொட துயில முடியும். நான்கு கால்களையும் பரப்பி வைத்து மண்ணோடு மண்ணாக படுத்துக்கொள்ள முடியும். தன் கழுதையை மீண்டும் சென்றடையும் புரவியின் விடுதலை அரியது. புரவி அரிதாகும்தோறும், அழகுகொள்ளும்தோறும் கழுதையிலிருந்து விலகிச்செல்கிறது. புரவி இலக்கணத்தின் பிழைகளே கழுதை. புரவி தவறவிட்ட அனைத்தும் கழுதையாகி நின்றுவிடுகிறது. ஆனால் கழுதை புரவியை மிக அணுக்கமாக தொடர்ந்துகொண்டிருக்கிறது. நுண்வடிவில் புரவியில் ஏறிப் பாய்ந்துகொண்டிருக்கிறது.”

இதை ஏன் எண்ணுகிறோம் என்று எண்ணியபடி நகுலன் மீண்டும் தன் புரவியை பார்த்தான். அழகில்லாத அன்னையொருத்தி. எவ்வகையிலும் அழகைப்பற்றி தான் கவலைகொள்ள வேண்டியதில்லை என்று எப்போதோ

உணர்ந்து தன் உடலை முற்றாக மறக்கத் தலைப்பட்டவள். அத்தகைய பெண்டிரை அவன் பலமுறை பார்த்திருந்தான். அவர்களிடம்தான் இயல்பாக தாய்மை உணர்வு வெளிப்படுகிறது. தன் அழகைப்பற்றி ஒரு துளி எண்ணம் அகத்தே எஞ்சுபவள்கூட முற்றிலும் அன்னையாவதில்லை. அப்புரவியின் அருகே சென்று நிற்கவேண்டும் என்று நகுலன் நினைத்தான். அங்கேதான் தன்னால் இயல்பாக நின்றிருக்க முடியும். இங்கே உடல் பதைப்பு கொள்கிறது.

இளமையில் மிடுக்கும் திமிரும் கொண்ட பெரும்புரவிகள் மேல் அவனுக்கு பித்திருந்தது. இழுத்து நீட்டப்பட்டதுபோல தோன்றும் சோனகப்புரவிகள். கொக்குக் கழுத்தும் நாரைக் கால்களும் கொண்டவை. நாணமும் அச்சமும் கொண்டவை. நீர்ப்பரப்புபோல் நொடிக்கச் சிலுப்பும் தோற்பரப்பு கொண்டவை. புதுப்பாளை போன்ற ஒளி கொண்டவை. சிம்மம் புரவியானது போன்றவை யவனப்புரவிகள். களிறோ என ஐயுறும் முதுகு கொண்டவை. உறைகீறி எடுத்த விதை என மெருகு கொண்டவை. புரவிக்கு தன் அழகு தெரியும். அதன் நிற்பில் கால் எடுப்பில் தலை எழும் செருக்கில் வெளிப்படுவது அந்த தன்னுணர்வே. அதன் விழிகளில் இருப்பது மேடையேறிவிட்ட நடனமங்கையின் மிதப்பு.

அவன் தன் விழிகளினூடாக கடந்து சென்ற புரவிகளை எண்ணிக்கொண்டான். பிறந்து குழவியென வந்து தன் கைகளினூடாக வளர்ந்து உடல்வடிவை அவனிடம் பதித்துவிட்டுச் சென்றவை. அவன் அறிய மீள மீள பிறந்தெழுந்தவை. அவற்றை பெரும் உவகையுடன் அவன் நோக்கி அமர்ந்திருந்ததுண்டு. ஏடுகளைக் கொண்டுவைத்து அவற்றின் ஒவ்வொரு இயல்பையும் குறித்து வைத்ததுண்டு.

ஓவியர்களைக் கொண்டு அவற்றை பட்டுத் திரைச்சீலையில் வரைந்து சேர்த்ததுண்டு. சூதரைக் கொண்டு அவற்றின் புகழ் பாடி பதிய வைத்ததும் உண்டு. அறுதியாக வந்து சேர்ந்த இப்புரவி எக்கணமும் மேலும் ஒரு அடி பின் வைத்து கழுதை என்றே ஆகிவிடக்கூடியது.

கதவு திறந்து ஏவலன் வெளிவந்து "அரசர்!" என்று வரவறிவிப்பு செய்தான். சகதேவன் நிமிர்ந்து நின்று தன் மேலாடையை இழுத்துவிட்டுக்கொண்டான். யுதிஷ்டிரன் குடிலிலிருந்து வெளிவந்து தன் தலையிலிருந்த பட்டுத்தலைப்பாகையை இன்னொரு முறை பிடித்து நேராக்கி வைத்தார். "செம்பருந்தின் இறகு சற்றே சரிந்துள்ளதா?" என்றார். "இல்லை" என்று சகதேவன் சொன்னான். "நிழலில் நோக்குகையில் சரிந்து தெரிகிறது" என்று அவர் மீண்டும் தலைப்பாகையை சீராக்கி வைத்தார். வெண்ணிற மேலாடையை இழுத்து சுற்றிக்கொண்டு "செல்வோம்" என்றார். சகதேவனும் நகுலனும் அவருக்குப் பின்னால் நடக்க அப்பால் நின்றிருந்த அர்ஜுனன் எழுந்தான்.

பீமன் அவர் அணுகிய பின்னரே நோக்கு கலைந்தான். யுதிஷ்டிரன் பீமனிடம் "மீண்டும் அதே தோலாடையை அணிந்திருக்கிறாய். அரசகுடியினருக்குரிய பட்டாடையை அணிந்தால் என்ன?" என்றார். பீமன் அவரை திரும்பிப் பார்க்கவில்லை. தலைகுனிந்து நின்றிருந்தான். யுதிஷ்டிரன் திரும்பிப் பார்த்தபோது அர்ஜுனனும் பழைய இளநீல ஆடையை அணிந்திருப்பதை கண்டார். "பார்த்தா, நாம் நம் குடிமூத்த தந்தையை பார்க்கச் செல்கிறோம். நமக்குரிய ஆடைகளை நாம் அணிந்திருக்க வேண்டும்" என்றார். அர்ஜுனன் "மீண்டும் குடிலுக்குச் செல்ல பொழுதில்லை"

என்றான். "ஏன், சகதேவன் சென்று வந்திருக்கிறானே?" என்றார் யுதிஷ்டிரன். அர்ஜுனன் மறுமொழி சொல்லவில்லை.

"என்ன ஆயிற்று உங்களுக்கு? நம் உளநிலை என்னவாக இருப்பினும் நாம் இப்போது செல்லவிருப்பது அரசப் பணிக்காக. மைந்தரென்றும் அரசனென்றும் நாம் அவரை சந்திக்கச் செல்கிறோம். தோற்றமே அரசகுடியினரை உருவாக்குகிறது. பழக்கமே அவர்களை நிலைநிறுத்துகிறது. எத்தோற்றத்திலும் செல்லலாம் என்னும் நிலையில் அரசகுடியினர் எப்போதும் இருப்பதில்லை" என்றார் யுதிஷ்டிரன். சகதேவன் "இது துயரத்துக்குரிய மாதம். இங்கு நெறிகள் அத்தனை குறிப்பாக பேணப்படுவதில்லை" என்றான். "இப்போதுதான் நாம் நெறிகளை பேணியாக வேண்டும். விழவுப்பொழுதுகளில் பேணப்படுவது நெறியல்ல, அது வெறும் நடிப்பு. இப்போது நமது அனைத்து எல்லைகளும் சிதறிப் பரந்துகொண்டிருக்கையில்தான் நாம் நம்மை மீள மீள வகுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது" என்றபின் மீண்டும் அர்ஜுனனைப் பார்த்து "வெண்ணிற மேலாடையாவது நீ அணிந்துகொள்ளலாம்" என்றார்.

நகுலன் "மூத்தவரே, நமக்கு பொழுதில்லை. இங்கிருந்து நாம் பேரரசரின் குடில் நோக்கி செல்வதற்கு அரைநாழிகைப் பொழுதாவது ஆகும்" என்றான். "இளைய யாதவன் எங்கிருக்கிறான்?" என்று யுதிஷ்டிரன் கேட்டார். "அவர் அங்கு வந்துவிடுவதாக சொன்னார்" என்று நகுலன் சொன்னான். "என்ன செய்கிறான்?" என்று மீண்டும் யுதிஷ்டிரன் கேட்டார். நகுலன் "அவர் இன்று காலை முதல் அந்த இரும்புப் பாவையுடன் அமர்ந்திருக்கிறார்" என்றான். "எந்தப் பாவை?" என்றபடி யுதிஷ்டிரன் திரும்ப பீமனும் திரும்பிப் பார்த்தான். "மூத்தவரின் வடிவில் அஸ்தினபுரியின் அரசர் உருவாக்கிய

இரும்புப் பாவை. குருக்ஷேத்ரத்திலிருந்து இரு வீரர்களால் அது எடுத்து வரப்பட்டது. மூன்று பகுதிகளாக பிரிந்து கிடந்தது. அதை மீண்டும் பொருத்தி முடுக்கிக்கொண்டிருக்கிறார்" என்றான் நகுலன்.

"இப்பொழுது அதை எதற்கு செய்கிறான்?" என்ற யுதிஷ்டிரன் "சில பொழுதுகளில் அவனை முதிரா உளம்கொண்ட சிறுவன் என்றே எண்ணத் தோன்றுகிறது" என்றார். "நமக்குப் பொழுதில்லை" என்று நகுலன் மீண்டும் சொன்னான். "அவன் அங்கு வந்துவிடுவான் என்றாய். அவன் வருவதற்குள் நாம் சென்றுவிட்டால் என்ன செய்வது?" என்று யுதிஷ்டிரன் கேட்டார். "அவருக்குத் தெரியும். அதற்கு மேல் நாம் அவரை கையாள முடியாது" என்று நகுலன் சொன்னான். "நாம் எவ்வண்ணம் செல்கிறோம்? புரவியில் வேண்டாம். நான் பிற விழிகளுக்கு நடுவே செல்ல விரும்பவில்லை. அங்கு செல்வதற்குள் என் உளம் முற்றிலும் சிதைந்துவிடும்" என்றார் யுதிஷ்டிரன். "ஆம், அறிவேன். தாங்கள் செல்வதற்கு கூண்டுத்தேர் வந்துள்ளது" என்று சொன்ன நகுலன் கை காட்டினான்.

குறுங்காட்டின் ஓரமாக நின்றிருந்த மூடுதிரையிட்ட தேர் வந்து முற்றத்தின் விளிம்பில் நின்றது. ஒற்றைப்புரவி கட்டப்பட்ட, சிறிய சகடங்கள் கொண்ட தேர். யுதிஷ்டிரன் "அங்கு வரை செல்வதற்கு தேர்ப்பாதை உள்ளதா?" என்றார். "சேற்றுப்பாதைதான். ஆனால் எடையற்ற தேர் சிக்கலின்றி செல்லும்" என்று நகுலன் சொன்னான். யுதிஷ்டிரன் தேரை அணுகி ஏறுவதற்குமுன் "நீங்கள் இருவரும் என்னுடன் ஏறிக்கொள்ளுங்கள்" என்றார். "நான் புரவியில் உடன் வருகிறேன்" என்றான் நகுலன். "நான் தனிமையாக உணர்வேன்,

இளையோனே" என்றார் யுதிஷ்டிரன். சகதேவன் "நான் ஏறிக்கொள்கிறேன்" என்றான்.

யுதிஷ்டிரன் ஏறி தேரில் அமர்ந்ததும் சகதேவன் தொடர்ந்து ஏறி அமர்ந்து திரையை கீழிறக்கினான். தேர் முன்னால் சென்றது. அர்ஜுனன் அருகே நின்ற புரவி மேல் ஏறிக்கொண்டான். பீமனை நோக்கி அவனுடைய ஏவலன் புரவியை கொண்டுவந்தான். பீமன் அதில் ஏறிக்கொண்டதும் நகுலன் தன் புரவியை அணுகி அதை தொட்டான். அது தலை தூக்கி அக்கணமே மீண்டும் புரவியென்றாகியது. இதை புரவியென ஆக்குவது என் விழைவு. எவ்வகையிலோ இதை இதன் ஆழ்ந்த இயல்பிலிருந்து மேலெடுக்கிறது அது. புரவி கழுதையிலிருந்து தன் பயணத்தின் பொருட்டு மானுடரால் இழுத்து வெளியே எடுக்கப்பட்ட பிறிதொன்று போலும்.

அவனுள் அவ்வெண்ணம் அவனுடைய கட்டுப்பாடில்லாமலேயே ஓடலாயிற்று. அதை அவன் கேட்டிருந்தான். ஒவ்வொரு கனியும் காட்டிலுள்ள சிறந்த கனியின் விதைகளில் இருந்து தெரிவுசெய்து எடுக்கப்பட்டது. மேலும் மேலுமென நற்கனி தேர்வுசெய்யப்பட்டு இனிதாக்கப்படுகிறது. தேர்வுசெய்யும் கைகளால் மீள மீள கண்டடையப்பட்டு புரவி உருவாக்கப்பட்டது. கழுதையிலிருந்து புரவியாகியது. இனி புரவியிலிருந்து எழுவது பிறிதொன்று. அவன் புரவியின் கால் வளையத்தில் தன் இடக்காலை ஊன்றி வலக்காலைச் சுழற்றி அமர்ந்த கணத்தில் குருக்ஷேத்ரத்தில் குருதி உண்டு வெறித்த விழிகளுடன் சிம்மக்குரலில் கனைத்துப் பாய்ந்த புரவிகளின் முகங்களை கண்டான். நடுக்கு கொண்டு புரவிமேலேயே அமர்ந்திருந்தான்.

யுதிஷ்டிரனின் தேர் அப்பால் முன்னால் சென்றது. அவருக்குப் பின்னால் பீமனும் அர்ஜுனனும் சென்றனர். அவன் தொடைகள் நடுங்க புரவி மேலேயே அமர்ந்திருந்தான். பின்னர் புரவியின் கழுத்தைத் தட்டி அதை முன்னால் செலுத்தினான். அது தலையை அசைத்தபடி ஊனமுற்ற முதற்காலை மெல்ல எடுத்து வைத்து நடக்கத் தொடங்கியது. சிம்மங்கள் எழும். பறக்கும் புரவிகள் எழும். பறக்கும் சிம்மப்புரவிகள் எழும். எழவிருப்பவை எவை? குருதியுண்ணும் புரவிகளா? குருதி உண்டபின் அவை நாகங்கள் என்றாகி மண் பிளந்து உள்ளே சென்று உறையுமா? இருள் வடிவாக எழுந்து வருபவை. நீருள் அலைவடிவெனச் சுருண்டிருப்பவை.

மண்மீது பரவி தொலைவுகளை ஆளும் கொடிய ஊன் விலங்கொன்று இங்கிருந்து எழவிருக்கிறது. நகுலன் உடல் குளிர்ந்து நடுங்க கடிவாளத்தை இறுகப் பற்றியபடி பற்களை சேர்த்துக் கடித்து விழிநீர் வார மீள மீள மெய்ப்பு கொண்டபடி குதிரை மீது அமர்ந்திருந்தான்.

தேர் குடில் நிரைகளைக் கடந்துசெல்ல வாயில்களில் நின்றிருந்த ஏவலர்களுள் பெண்டிரும் அந்தண இளைஞர்களும் வெறித்த விழிகளுடன் அதை பார்த்தனர். அவர்கள் யுதிஷ்டிரனை பார்க்க இயலவில்லை எனினும் அவரை உள்ளத்தால் பார்த்துக்கொண்டிருந்தனர். அவர் அவர்களை பார்க்கவில்லை. எனினும் அந்த நோக்குகளை உணர்ந்துகொண்டிருந்தார். தன் குடிலுக்குள் தனித்திருக்கையில்கூட அவர் அந்நோக்குகளிலிருந்து தப்ப இயலாது.

ஒற்றைப்புரவி சிறுமணியோசையுடன் சேற்றில் குளம்புகள் விழும் துடிப்பொலியுடன் தேரை இழுத்துச் சென்றது. அது அலைகளில் ஏறி ஆடும் படகு போலிருந்தது. அந்த அசைவு நன்று. உள்ளிருக்கும் அசைவை அது மட்டுப்படுத்துகிறது. அலைகொள்ளும் உள்ளத்துடன் அசையாமல் அமர்ந்திருப்பதே கடினம். திருதராஷ்டிரரின் குடிலை தொலைவில் பார்த்தபோது நகுலன் அது ஓர் உலைக்கலம் எனும் எண்ணத்தை மீண்டும் அடைந்தான். அதன் மீது அகிபீனாவின் புகைப்படலம் அப்போதும் நின்றிருந்தது.

காற்று ஒழுகிக்கொண்டிருந்த ஆடிமாதம். எங்கோ அணையிட்டுத் தடுத்ததுபோல் அனைத்து ஒழுக்குகளும் நின்று, இலையசைவுகூட இல்லாமல், வரையப்பட்ட ஓவியம்போல் எழுந்து நின்றிருந்தது காடு. புகையைக் கலைக்கும் காற்று கூடவா இல்லை? ஒரு பறவை பறந்தால்கூட கலைந்துவிடுமளவுக்கு மெல்லிய நீலப்புகை. அப்புகையை முகர்ந்து காடு பித்துகொள்ளக்கூடும். அத்தனை பறவைகளும் பித்துகொள்ளகூடும். துயிலிலிருந்து பிறிதொரு காடு எழும். கனவிலெழும் பிறிதொரு காடு. பிறிதொரு விலங்குத்தொகை. பிறிதொரு சிற்றுயிர்த்திரள். பிறிதொரு வெளி.

அவன் இளைய யாதவரின் தேர் எங்கேனும் நிற்கிறதா என்று பார்த்தான். அவர் வந்திருக்கவில்லை என்பது தெரிந்தது. தவிர்த்துவிட்டாரா என்ற எண்ணம் வந்தது. அதற்கான வாய்ப்பில்லையென்று தோன்றியது. அவரில்லாது பேரரசரை சென்று பார்ப்பது எவ்வகையிலும் இயலாது. பேரரசரைப் பார்க்க அவர்கள் கிளம்பி வந்துகொண்டிருக்கும் செய்தியை அவன் முன்னரே ஏவலன் வழியாக அறிவித்துவிட்டிருந்தான். சங்குலனும் சஞ்சயனும் உடனிருப்பார்கள் என்றும் அவர்கள்

வந்து பார்க்கலாம் என்றும் ஒற்றன் திரும்பி வந்து செய்தி சொன்னான். "திருதராஷ்டிரர் எவ்வண்ணம் இருக்கிறார்?" என்று அவனிடம் கேட்டான். "அழுகை ஓய்ந்து மீண்டு அரசியருடன் சேர்ந்து அமர்ந்திருக்கிறார்" என்று ஒற்றன் சொன்னான்.

"அவர்கள் உரையாடிக்கொள்கிறார்களா?" என்று நகுலன் மீண்டும் கேட்டான். "இல்லை அரசே, அவர்கள் ஒருவரை ஒருவர் உணர்ந்தபடி ஒரு சொல்லும் உரைக்காமல் அமர்ந்திருக்கிறார்கள்" என்றான் ஒற்றன். "அவர் ஏதேனும் உணவருந்தினாரா?" என்று நகுலன் கேட்டான். "ஆம், ஊனுணவு அருந்தினார்" என்றான். அது நகுலனுக்கு ஆறுதலளித்தது. "பேரரசி?" என்று மீண்டும் கேட்டான். "அரசருக்கு உணவூட்டியதே அரசிதான். அதன் பின்னர் தானும் உண்டார்" என்றான். அதன் பின்னரே அவன் திருதராஷ்டிரரை சென்று பார்ப்பதற்கு உகந்த பொழுதென்று அறிவித்தான்.

குடிலின் முற்றத்தை அடைந்தபோது இளைய யாதவர் இல்லாமல்தான் திருதராஷ்டிரரை சந்திக்கப்போகிறோம் என்ற எண்ணத்தை அளித்தது சூழல். அது அவனுக்கு பதற்றத்தை உருவாக்கியது. புரவி நின்று தேர் குலுங்கியது. அவன் தன் புரவியைத் தட்டி அருகணைந்தான். பீமனும் அர்ஜுனனும் சற்று முன்னால் சென்று நின்றனர். குடில் முகப்பிலிருந்து ஏவலர்கள் முன் வந்து அவர்களிடமிருந்து கடிவாளங்களை பற்றிக்கொள்ள பீமன் இறங்கி சற்று அப்பால் சென்று கைகளை கட்டிக்கொண்டு நின்றான். அர்ஜுனன் இறங்கிச் சென்று பீமன் அருகே நிற்க இரு புரவிகளையும் ஏவலர் அழைத்துக்கொண்டு விலகிச்சென்றனர்.

இரு ஏவலர்கள் தேரின் புரவியை பற்றிக்கொள்ள அது முன்பின் உலைந்து நின்றது. சகடக்கொண்டியை ஒருவன்

போட்டான். தேரின் பின்பக்கத் திரையை விலக்கி சகதேவன் வெளியே தலைநீட்டி நகுலனிடம் "இளைய யாதவர் வரவில்லையா?" என்றான். "வருவார்" என்று நகுலன் சொன்னான். "ஏவலர் எவரையாவது அனுப்பி அவரை வரச்சொல்லலாம்" என்று சகதேவன் சொன்னான். "அவர் வராமல் இருக்கப்போவதில்லை" என்று நகுலன் மீண்டும் சொன்னான். "அவர் வந்த பின்னர் மூத்தவர் தேரிலிருந்து இறங்குவதே உகந்தது. இப்போது இறங்கினால் வேறு வழியில்லை. நாம் சேர்ந்து சென்று தந்தையை சந்திக்கவேண்டியிருக்கும். முற்றத்திலேயே நெடும்பொழுது நிற்கவியலாது" என்றான் சகதேவன்.

நகுலன் உள்ளுணர்வின் தொடுகையால் திரும்பிப் பார்த்தான். மிகத் தொலைவில் இளைய யாதவரின் கொடியுடன் ஒற்றைப்புரவித் தேர் வருவது தெரிந்தது. "தேரில் வருகிறார்" என்றான். "தேரிலா?" என்று சகதேவன் கேட்டான். பின்னர் கொடியைப் பார்த்து "ஆம், அவருடையதுதான். தேரில் ஏன் வரவேண்டும்?" என்றான். நகுலன் அதற்கு மறுமொழி சொல்லவில்லை. தேர் தெளிந்து பெருகி அருகணைந்தது. அதன் புரவிக்கால்கள் சீரான அறைதல்களாக தரையை முட்டிக்கொண்டிருக்க சகடம் உருண்டு ஒழுகி வருவதை இருவரும் பார்த்துக்கொண்டிருந்தனர். தேர் வந்து முற்றத்தை அடைந்து சற்றே வளைந்து நிற்க ஏவலர்கள் வந்து அதன் கடிவாளத்தை பற்றிக்கொண்டனர். தேர்ப்பாகன் அமரத்தில் நிமிர்ந்து அமர்ந்திருந்தான்.

தேரின் பின்புறத் திரையை விலக்கியபடி இளைய யாதவர் கீழே குதித்தார். தன் மேலாடையை சீரமைத்தபடி நகுலனைப் பார்த்து புன்னகைத்தார். நகுலன் தலைவணங்கி

“தங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம், யாதவரே” என்றான். “ஆம், பொழுதாகிவிட்டதென்று தெரிந்தது. ஆகவேதான் விரைந்து வந்தேன். செல்வோம்” என்றார். யுதிஷ்டிரன் தேரிலிருந்து இறங்கி தன் மேலாடையை சீரமைத்தபடி இளைய யாதவரை வணங்கினார். மீண்டும் தலைப்பாகையை சீரமைத்தார். இளைய யாதவர் அப்பால் நின்ற அர்ஜுனனை நோக்கி செல்லலாம் என கையசைத்தார்.

அவர்கள் செல்வதற்கு ஒருங்கியபோது இளைய யாதவர் “சொல்வதற்கென சொற்களெதையும் சேர்த்துக்கொள்ள வேண்டியதில்லை” என்றார். யுதிஷ்டிரன் அவர் சொல்வதென்ன என்பதை புரிந்துகொள்ளாமல் திகைப்புடன் பார்த்தார். “முறைமைச் சொற்கள் என எதையும் சொல்லவேண்டியதில்லை” என்று இளைய யாதவர் சொன்னார். “இது ஒரு முறைமைச் சடங்கு. அதன் பொருட்டே வந்திருக்கிறோம். குறித்த சொற்களால் மட்டுமே இத்தருணத்தை கடந்து செல்லமுடியும்” என்றார் யுதிஷ்டிரன். “சில தருணங்களில் முறைமைச்சொற்கள் இரக்கமற்றவையாக தோன்றக்கூடும்” என்றார் இளைய யாதவர். “அவர் முன் சென்று நில்லுங்கள். தன்னியல்பாக உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ அதை சொல்லுங்கள்.”

“அவ்வண்ணமல்ல அது நிகழ்வது” என்றார் யுதிஷ்டிரன். “தன்னியல்பான சொற்கள் என்று எதுவும் எனக்கு தோன்றவில்லை. அவ்வண்ணம் தோன்றுமெனில் அது உகந்தவையாக இல்லாமலும் இருக்கக்கூடும். நான் முறைமைச்சொற்களை மட்டுமே கூறவிருக்கிறேன். அவ்வாறு மட்டுமே என்னால் வெளிப்பட முடியும்” என்றார் யுதிஷ்டிரன். புன்னகைத்தபடி “எனில் அதுவே ஆகுக!” என்றார் இளைய

யாதவர். தன் பாகனை நோக்கி தேரை திருதராஷ்டிரரின் குடிலருகே சென்று நிறுத்தும்படி ஆணையிட்டார். தேர் அவர்களைக் கடந்து முன்னால் சென்று திருதராஷ்டிரரின் குடிலுக்கு இணையாக இருந்த சஞ்சயனின் குடிலை நோக்கி சென்றது.

"செல்வோம்" என்றபடி இளைய யாதவர் நடக்க அப்பாலிருந்து பீமனும் அர்ஜுனனும் வந்து அவர்களுடன் இணைந்துகொண்டனர். யுதிஷ்டிரன் "நாம் இத்தருணத்தில் உரிய சொற்களை சொன்னால் நம் மீது பழியில்லாமல் இதைக் கடந்து மீளமுடியும். எண்ணாது சொல்லும் எச்சொல்லும் அவர்மேல் அம்பென, அனலென பாயக்கூடும்" என்றார். எவரும் மறுமொழி சொல்லவில்லை. "நாம் எண்ணிச் சொல்வது இயலாது. முறைமைச்சொற்கள் என்பவை நம் முன்னோர் எண்ணி எண்ணி வகுத்தவை. எத்தனையோ தருணங்களை கடந்து வந்தவை" என்று மீண்டும் யுதிஷ்டிரன் சொன்னார். "நீங்களே அவற்றை சொல்லுங்கள், மூத்தவரே" என்றான் நகுலன். யுதிஷ்டிரன் வெறுமனே திரும்பி நோக்கினார். அவருடைய கைவிரல்கள் நெளிந்துகொண்டே இருப்பதை நகுலன் பார்த்தான்.

நீர்ச்சுடர் - 29

பகுதி நான்கு : கழுநீர்க் கரை – 10

திருதராஷ்டிரரின் குடில் நோக்கி நடக்கையில் சற்று தயங்கி காலெடுத்து வைத்த நகுலன் சகதேவனின் தோளுடன் தன் தோளால் உரசிக்கொண்டான். அக்கணநேரத் தொடுகை

அவனுள் இருந்த அழுத்தம் அனைத்தையும் இல்லாமல் ஆக்கி, எடையில்லாமல் உணரச்செய்தது. அவ்விடுதலை அளித்த இனிமையில் அவன் நின்றுவிட்டான். சகதேவன் திரும்பிப் பார்த்தான். நகுலன் இரண்டு அடி எடுத்து வைத்து மீண்டும் சகதேவனுடன் இணையாக நடக்கையில் இயல்பாக என கையை நீட்டி தன் இடக்கை விரல்களால் சகதேவனின் கைகளைப் பற்றி விரல் கோத்துக்கொண்டான். சகதேவன் விரல்கள் அவன் விரல்களை பற்றின.

இளஅகவையில் பெரும்பாலான தருணங்களில் அவர்கள் விரல்கோத்துக்கொண்டுதான் எங்கும் செல்வது வழக்கம். விளையாடும்போதுகூட விரல்களை சேர்த்திருப்பார்கள். கங்கையில் நீந்தும்போதும் ஒருவரை ஒருவர் கைகளை பற்றிக்கொண்டு நீந்தும் முறையை அவர்களே உருவாக்கிக்கொண்டார்கள். அமர்ந்திருக்கையில் பெரும்பாலும் நகுலனின் பீடத்தின் விளிம்பில் தொற்றிக்கொள்வது சகதேவனின் வழக்கம். புரவிகளில் செல்லும்போதுகூட இணையாக அவ்வப்போது இரு முழங்கால்களும் ஒட்டி தொட்டு உரசி மீளும்படியாகவே அமைவார்கள். ஒவ்வொரு பேச்சுக்குப் பின்னரும் ஒருவரை ஒருவர் விழிதொட்டுக்கொள்வதுண்டு.

அதைக் குறித்த புரிதலும், கூடவே மெல்லிய ஏளனமும் அரண்மனைச் சூழலில் இருந்தது. அவர்கள் உடல்கள் ஒன்றையொன்று ஒட்டியே கருவறைக்குள் இருந்து வெளிவந்தன, இரு தொப்புள் கொடிகள் ஒன்றையொன்று பின்னி முயங்கும் நாகங்கள் போலிருந்தன என்று செவிலியர் கூறுவர். கருவறைக்குள்ளேயே அவர்கள் ஒருவரையொருவர் கைகோத்திருந்தனர். இளமையில் ஒற்றைச் சொற்றொடரை

சில சொற்களை ஒருவர் சொல்ல எஞ்சியதை பிறிதொருவர் சொல்லி முடிக்கும் வழக்கம் அவர்களுக்கு இருந்தது. ஒருவரோடொருவர் பேசிக்கொள்கையில் இருவரும் இணைந்து ஒன்றையே சொல்லும் விந்தையை பிறர் பேச்சை நிறுத்தி வியப்புடன் பார்ப்பார்கள்.

அவர்கள் ஆடிப்பாவைகள். எப்போதேனும் ஆடியில் தன்னை நோக்கிக்கொண்டால் நகுலன் விரல் நீட்டி ஆடிப்பாவையின் விரலை தொடுவான். விழிகளுக்குள் நோக்கி புன்னகைப்பான். இளமையில் ஒருமுறை சகதேவன் உடல்நலமின்றி ஆதுரசாலைக்குச் சென்றபோது விடாது அழுதுகொண்டிருந்த நகுலன் அருகே பெரிய ஆடி ஒன்றை வைத்து அவ்வழுகையை நிறுத்தி உணவூட்டி தூங்க வைத்ததை செவிலி சொல்வதுண்டு. அவன் வளர்ந்த பின்னர் ஆடி நோக்குவதில்லை. அது ஒரு துணுக்குறலை அளித்தது. ஆடியில் தோற்றம் பெருகும் உணர்வாலேயே அதை மானுடர் விழைகிறார்கள். அவன் தான் மட்டும் ஆடியில் நோக்கினால் இருப்புக் குறைவை உணர்ந்தான். இருவராக ஆடி நோக்கினால் ஆடியில் ஒருவரை இன்னொருவர் நோக்குவர். ஒருவர் விழிகளை இன்னொருவர் நோக்கி புன்னகைப்பர்.

பின்னர் அவர்கள் மெல்ல பிரியலாயினர். நகுலன் புரவிநூலையும் கொட்டில்களையும் சூதர்களையும் நோக்கி செல்ல சகதேவன் சுவடிகளில் பதிந்த ஊழின் ஆடல் நோக்கி தன் சித்தத்தை திருப்பினான். அதில் இருந்த விந்தையை ஒருமுறை இயல்பாகப் பேசும்போது யுதிஷ்டிரன் சொன்னார் "ஒருவன் புறவுலகு நோக்கி சென்றிருக்கிறான். புரவிக்கலை அகமற்றது. இதோ இங்கே இக்கணம் என கண்முன் நிகழ்வது. புரவி ஐம்புலனுக்கும் முன் நின்றுள்ளது. இன்னொருவன்

அகக்கலையை நாடுகிறான். நிமித்தநூலென்பது புறத்தை முற்றே விலக்கி அகத்திலிருந்து மெய் காண்பது. நிமித்திகன் புறத்தை உணர்ந்தான் எனில் நிகழ்காலத்தில் சிக்கிக்கொள்வான். நேற்றையும் நாளையையும் அறிவதற்குத் தடையாக இங்கு திகழும் மாயை என்பது நிகழ்காலமே. நிமித்தநூலென்பது நிகழ்காலத்திற்கெதிரான முடிவிலா போரென்றனர் மூதாதையர்."

"ஆம், அவர்கள் ஒருவரை ஒருவர் நிரப்பிக்கொள்கிறார்கள்" என்று அன்று அவையிலிருந்த விதுரர் சொன்னார். "எதிரெதிர் திசையில் சென்றும் அவர்கள் தங்களை நிறைத்துக்கொள்ளலாம்" என்றார் பீஷ்மர். எப்போதேனும் சகதேவனின் நிமித்தக்களங்களில் புரவிகள் தோன்றியுள்ளனவா என்று நகுலன் எண்ணிக்கொண்டான். அவன் புரவிக்கால்களால் கடக்கப்படும் பன்னிரு களத்தை தன் கனவுகளில் உணர்வதுண்டு. புரவிகள் எப்போதுமே தொடுவான் எல்லை நோக்கி செல்கின்றன. ஓடும் புரவிகளில் ஒன்று, பல்லாயிரத்தில் ஒருமுறை, அத்தொடுவானில் ஏறிக்கொள்ளக்கூடும். அக்கணமே அது உருவழிந்து அனலுடல் கொண்டு மறையும்...

குடில் வாயிலை அடைந்து யுதிஷ்டிரன் தயங்கி நின்றார். அருகணைந்த இளைய யாதவர் அவரிடம் முன்னால் செல்லும்படி கைகாட்ட முணுமுணுக்கும் குரலில் "நீ முதலில் நுழைவதே முறையாக இருக்கும், இளைய யாதவனே" என்றார் யுதிஷ்டிரன். அவருக்குப் பின்னால் நகுலனும் சகதேவனும் நிற்க அவர்களுடன் உடல் முட்ட இளஞ்சிறுவன் என தடுமாறினார். பீமனும் அர்ஜுனனும் தொடர்ந்து வந்தனர். உள்ளிருந்து சஞ்சயன் வெளிவந்து சொல்லின்றி

தலைவணங்கினான். யுதிஷ்டிரன் "இருக்கிறாரா?" என்றார். "ஆம், அரசே. இருவரும் தங்களுக்காக காத்திருக்கிறார்கள்" என்று சஞ்சயன் சொன்னான். "நாங்கள் ஐவரும் வருவதை அவர் அறிவாரா?" என்று யுதிஷ்டிரன் மீண்டும் கேட்டார். "முன்னரே கூறிவிட்டேன்" என்று சஞ்சயன் சொன்னான்.

மேலும் தயங்கி தலையிலிருந்த இறகை சீர்படுத்தியபின் "எதன் பொருட்டென்று கூறினீர்களா?" என்று யுதிஷ்டிரன் மீண்டும் கேட்டார். "ஆம், அவர்கள் அறிவார்கள்" என்றான் சஞ்சயன். இளைய யாதவர் "பிறகென்ன? நீங்கள் ஐவரும் முதலில் செல்லலாம். அதுவே முறையாகும்" என்றார். பீமன் பெருமூச்சுவிட்ட ஒலி உரக்கக் கேட்க நால்வரும் திரும்பி நோக்கினர். அவன் மார்பில் கட்டியிருந்த கைகளை தாழ்த்திக்கொண்டான். அவன் கண்களுக்குக் கீழே சுருக்கங்கள் அடர்ந்து கருகியிருந்தன. வாயை இறுக மூடியிருந்தமை சுருக்கிப்பிடித்த கைமுட்டி என உதடுகளை தோன்றச்செய்தது.

யுதிஷ்டிரன் தன் உடலை இறுக்கி மீண்டும் தளர்த்தி "நான் என்னவென்று உரைப்பது?" என்றார். "சற்று முன் முறைமைச்சொற்களே உங்களுக்கு இயல்பானது என்றீர்கள்" என்றார் இளைய யாதவர். "ஆம், ஆனால் அனைத்துச் சொற்களையும் இப்போது மறந்தவன் போலிருக்கிறேன்" என்று யுதிஷ்டிரன் சொன்னார். "தெய்வங்களுக்கு முன் நாம் முறைமைச்சொற்களைக் கூறி வேண்டிக்கொள்வதில்லை" என்றபின் "உங்கள் உள்ளம் நிகழ்க! செல்க!" என்றார் இளைய யாதவர். பெருமூச்சுவிட்டு தன் தலையிலணிந்த தலைப்பாகையை மீண்டும் சீரமைத்து மேலாடையை இழுத்துவிட்டு திரும்பி சகதேவனையும் நகுலனையும் பார்த்துவிட்டு யுதிஷ்டிரன் குடிலுக்குள் நுழைந்தார்.

நகுலனும் சகதேவனும் சிறிய இடைவெளி விட்டு அவர்களை தொடர்ந்தனர். பீமன் குடிலின் வாயிலிலேயே நின்றுவிட இளைய யாதவரின் அருகே சென்று அர்ஜுனன் நின்றான். அறைக்குள் சுவர் ஓரமாக சங்குலன் நின்றிருந்தான். அவன் ஒரு அடிமரத்தடியை தூணாக நிறுத்தியதுபோல் தோன்றினான். அவனுடைய பருத்த தோள்களும் விரிந்த நெஞ்சும் மேலும் பெருகிவிட்டிருந்தன. போருக்குப் பின்னர் அனைவருமே உடல்கரைந்துகொண்டிருக்கையில் அவன் மட்டும் பொலிவுகொண்டு வளர்ந்திருந்தான். நகுலன் அவனுடைய நரம்புகளின் புடைப்பையும் முடிச்சுகளையும் நோக்கிக்கொண்டிருந்தான். அரசரில் மறைந்துவிட்டவை அவனில் சென்று சேர்கின்றனவா?

அவர்களுக்குப் பின்னால் வந்த சஞ்சயன் உள்ளே நுழைந்து குடிலுக்குள் மூங்கில் பீடத்தில் அமர்ந்திருந்த திருதராஷ்டிரரை அணுகி "தங்கள் மைந்தர்கள் பார்க்கும்பொருட்டு வந்திருக்கிறார்கள், பேரரசே" என்று அறிமுகம் செய்தான். திருதராஷ்டிரர் நெடுநாட்களுக்குப் பின்னர் அன்று புத்தாடை அணிந்திருந்தார். வெண்ணிற மென்பட்டாடை அவர் இடையில் சுற்றி, புகையென மேலெழுந்து, வலத்தோளை வளைத்து முதுகிலிறங்கி சுழன்று வந்து மடியில் விழுந்திருந்தது. கரிய தசைகள் புடைத்து இறுகியிருந்த பெருந்தோள்கள் அந்த ஆடையில் இருபுறத்திலும் விரிந்து கிளையெழுந்த வேங்கை அடித்தடியென தோன்றின. ஆனால் அவர் நன்கு மெலிருந்திருப்பது வயிற்றுத்தசைகளில் பரவியிருந்த நரம்புகளாலும் விலா எலும்புகளின் புடைப்புநிரையாலும் தெரிந்தது.

திருதராஷ்டிரர் தலையை சற்றே திருப்பி செவிகளால் அவர்களை பார்ப்பதுபோல் அமர்ந்திருந்தார். பற்களை இறுகக் கடித்து வாயை மூடியிருந்தமையால் உதடுகள் குவிந்திருந்தன. இரு விழிகளும் ஊற்றெழும் கொப்புளங்கள்போல அசைந்தன. நரையோடிய குழல்கற்றைகள் தோளில் விழுந்து கிடந்தன. பீடத்திலிருந்து விழுந்து மடிந்த கால்கள் குடிலின் தரையில் ஆழப்பதிந்து தொல்மரத்து வேர்கள்போல் தோன்றின. அவன் அக்கால்களை சில கணங்கள் நோக்கினான். அல்லது அது ஒரு கணம் மட்டும்தானா? பெரிய பாதங்களில் புடைத்த நரம்புகள். மின்னும் விழிகொண்ட நகங்கள். கணுக்கால் முழை இரும்பாலானதுபோல. அவர் பேரெடைகளைத் தூக்கி தன் கால்மேல் வைத்து மறுகாலில் நின்று அதை தலைவரை தூக்குபவர்.

அவர் அருகே காந்தாரி நீலத் துணியால் கண்களை மூடி இரு கைகளையும் கோத்து மடியில் வைத்து அமர்ந்திருந்தாள். மெல்லிய பொற்பின்னலால் அணிகள் செய்த பட்டாடையை அணிந்து அதன் முகப்பை எடுத்து தலையில் சுழற்றி அணிந்திருந்தாள். அவள் வெண்ணிறக் கன்னங்களில் நீல நரம்புகளின் பரவலை நகுலன் கண்டான். கழுத்து நரம்பு புடைத்து முடிச்சுகளுடன் தெரிந்தது. பசுநீலக் கொடியொன்று படர்ந்தேறியதுபோல். இளம்பாளையில் வரிகள் என கன்னங்களிலும் தோளிலும் குருதிக்கொடிகள். இரு கைகளும் வெண்தந்தங்கள்போல் உருண்டு திகைப்பூட்டும் அளவுக்கு பெரிதாக தெரிந்தன. அக்கைகளில் அளவுக்குப் பொருந்தாத சிறிய உள்ளங்கை. செந்நிறமான சிறு விரல்கள். அவை ஒன்றோடொன்று கோத்திருந்தன. அவற்றில் எந்த அசைவும் இல்லை என்பதை நகுலன் கண்டான்.

சஞ்சயனின் சொற்களை திருதராஷ்டிரர் கேட்டதுபோல் தெரியவில்லை. அவன் மீண்டும் அருகே சென்று "பேரரசே, தங்கள் மைந்தர்கள் யுதிஷ்டிரனும் இளையோரும் வாழ்த்துச்சொல் பெறும்பொருட்டு வந்திருக்கிறார்கள். தங்கள் முன் நின்றிருக்கிறார்கள்" என்றான். நீர்ப்பரப்பில் சருகு விழுந்ததுபோல் ஓர் அசைவு திருதராஷ்டிரரில் தோன்றியது. உறுமலோசையுடன் "ஆம்" என்றார். யுதிஷ்டிரன் தோள்கள் நடுங்க கூப்பிய கைகள் அருவிவிழும் இலைகள்போல் துள்ளிக்கொண்டிருக்க தலைகுனிந்து நின்றார். தன் மூச்சு அவர் மேல் பட்டால்கூட அவர் நிலையழிந்து விழுந்துவிடக்கூடும் என்று நகுலன் எண்ணினான்.

யுதிஷ்டிரனை மெல்ல தொட்டு சகதேவன் "வணங்குக, மூத்தவரே!" என்றான். யுதிஷ்டிரன் "ஆம்" என்றார். ஆனால் நடுங்கும் உடலுடன் அசையாமல் நின்றார். மீண்டும் அவரைத் தொட்டு "செல்க!" என்று சகதேவன் சொன்னான். யுதிஷ்டிரன் திரும்பி இளைய யாதவர் எங்கே என்று பார்த்தார். சகதேவனுக்கும் நகுலனுக்கும் பின்னால் பீமனும் அர்ஜுனனும் வந்து நிற்பதை பார்த்தபின் திகைப்புடன் உதடுகளை மட்டும் அசைத்து "அவன் எங்கே?" என்றார். சகதேவன் திரும்பிப்பார்த்து "அவர் வெளியே நின்றிருக்கிறார்" என்று ஓசையிலாது சொன்னான். "அவன் எங்கே?" என்று மீண்டும் யுதிஷ்டிரன் கேட்டார். "தேவையெனில் வருவார்" என்று சற்று ஓசையெழ சொன்ன சகதேவன் "செல்க!" என்று சொன்னான்.

அச்சொல்லின் கூர்மையால் யுதிஷ்டிரன் சற்றே உடல் விதிர்த்து அடியெடுத்து வைத்தார். பின்னர் அங்கேயே கால் மடித்து நிலத்தில் அமர்ந்தார். கைகளைக் கூப்பி அதன் மேல் தன் நெற்றியை அமைத்து "வணங்குகிறேன், தந்தையே. தங்கள்

அருட்சொல் கொள்ள வந்தேன்" என்றார். "ஆம்" என்று திருதராஷ்டிரர் சொன்னார். அவருடைய வலது கை எழுந்து காற்றில் துழாவியது. "எங்கிருக்கிறாய், மைந்தா... அருகில் வா" என்றார். யுதிஷ்டிரன் தன்னை அறியாது சற்றே பின்னடைந்து "தந்தையே, நான் தங்கள் மைந்தன்... தங்கள் அடிபணியும் இழிந்தோன்" என்றார். "என் உடன்பிறந்தாருடன் தங்களை நாடி வந்திருக்கிறேன். தந்தை பாண்டுவும் நுண்வடிவில் எங்களுடன் இங்கு வந்திருக்கிறார் என்பதை உணர்கிறோம்."

திருதராஷ்டிரர் நடுங்கத் தொடங்கினார். சகதேவன் முன்னால் ஓர் அடி வைத்து "வணங்குகிறோம், தந்தையே. மூத்தவர் இன்னும் சில நாட்களில் அஸ்தினபுரியின் முடிசூடவிருக்கிறார். அதற்குமுன் இங்கு நீத்தார் அனைவருக்கும் நீர்க்கடன் செய்யவேண்டி உள்ளது. அனைத்துச் சடங்குகளுக்கும் குலமூத்தார் என்றும் பேரரசர் என்றும் தங்கள் வாழ்த்து தேவைப்படுகிறது. அதன்பொருட்டே இங்கு வந்தோம்" என்றான். இரு கைகளையும் நீட்டி காற்றைத் துழாவியபடி "எங்கிருக்கிறீர்கள்? அருகே வருக!" என்று திருதராஷ்டிரர் சொன்னார். அவருடைய முகம் அழுகையில் நெளிந்தது. "அருகணைக, மைந்தர்களே!" என்று அவர் அழைத்தார்.

சகதேவன் அவரை கூர்ந்து நோக்கியபடி "நாங்கள் அஞ்சுகிறோம், தந்தையே... நாங்கள் கொண்டது உங்கள் மைந்தரின் நிலம். மூத்தவர் சூடப்போவது உங்கள் மணிமுடி" என்றான். திருதராஷ்டிரர் "எவ்வாறெனினும் அஸ்தினபுரிக்கு உகந்த அரசன் அமைந்தது நன்று. என் இளையோன் விண்ணிலிருந்து மகிழ்வான். அவன் நிறைவுறுக! என் மைந்தர் சிறப்புறுக! வாழ்க நம் குலம்! குடியும் நகரும் நலம் பெறுக!" என்றார். அவருடைய கைகள் அலைபாய்ந்தன.

விழிகளிலிருந்து நீர் வழிந்தது. “இனியேனும் அனைத்தும் சீர்ப்படவேண்டும். நம் குடி மகிழ்வுகொள்ள வேண்டும்.”

யுதிஷ்டிரன் எழுந்து பிடித்துத் தள்ளப்பட்டவர்போல் முன்சரிந்து திருதராஷ்டிரரின் கால்களின் கீழ் விழுந்து தன் தலையை அவர் பாதங்களில் வைத்துக்கொண்டார். “எந்தையே, பெரும்பழி செய்தவன் நான். தாங்கள் இடும் அனைத்து தீச்சொற்களுக்கும் தகுதியானவன். உங்கள் சொல்லால் சுட்டெரிக்கப்படுவேன் எனினும் அது முறையே என்று எண்ணுவேன். கீழ்மகன், உள்ளிருந்து ஆட்டி வைக்கும் எளிய விழைவுகளால் இயக்கப்படும் சிறியவன். தங்கள்முன் அதற்கப்பால் ஒன்றும் நான் சொல்வதற்கில்லை” என்றார்.

திருதராஷ்டிரர் குனிந்து அவர் இரு தோள்களையும் பற்றி, சிறுகுழவியெனத் தூக்கி, தன் மடியில் அமர்த்தி, இரு கைகளால் அவரை வளைத்து அணைத்து தன் நெஞ்சோடு இறுக்கிக்கொண்டார். “தந்தையே! தந்தையே!” என்று கூறியபடி தன் முகத்தை அவர் மார்பின்மீது அமிழ்த்தி நடுங்கியபடி யுதிஷ்டிரன் அழுதார். அவர் சூடிய தலைப்பாகை செம்பருந்தின் இறகுடன் திருதராஷ்டிரரின் காலடியில் கிடந்தது. திருதராஷ்டிரர் சிறுகுழவியை என யுதிஷ்டிரனின் இரு கன்னங்களிலும் முத்தமிட்டு அவர் தோளையும் முதுகையும் தன் அகன்ற கைகளால் வருடினார். “துயருறாதே... நீ அறத்தோன். அறத்தின்பொருட்டே நீ விழிநீர்விடுகிறாய். அது நம் குடிக்கு நன்றே என்று அமையும்” என்றார்.

நடுங்கும் முதிய குரலில் “இவையனைத்தும் நம் கைகளில் இல்லை. நாம் இயற்றக்கூடுவது இனி நல்லாட்சி ஒன்றே. அஸ்தினபுரிக் குடிகள் துயருற்றுவிட்டார்கள். இனி அவர்களுக்கு உனது கோலே காப்பு” என்றார். அவர்

விழிகளிலிருந்து நீர் வழிந்து யுதிஷ்டிரனின் தலையிலும் தோளிலும் சொட்டியது. யுதிஷ்டிரன் "இளமைந்தன் என்று தங்கள் மடியில் அமர்ந்ததைப்போல் இப்பிறப்பில் பிறிதொரு பேறு எனக்கு அமைந்ததில்லை. இது போதும், தந்தையே" என்று சொன்னபோது குரல் உடைந்து தேம்பி அழுது தளர்ந்து நினைவழிந்ததுபோல் அவர் தோள்களில் தலை தொய்ந்தார்.

சகதேவன் முன்னால் சென்று குனிந்து திருதராஷ்டிரரின் கால்களைத் தொட்டு வணங்கி "வாழ்த்துக, தந்தையே!" என்றான். நகுலனும் இயல்பாக உடன் சென்று வணங்கி "தங்கள் நற்சொல் பெற விழைந்தோம், தந்தையே" என்றான். யுதிஷ்டிரனை இடக்கைக்கு மாற்றி வலக்கை நீட்டி அவர்கள் இருவரையும் பற்றி இழுத்து தன் வலத்தொடை மேல் அமரச்செய்து உடலுடன் சேர்த்து இறுக்கி அவர்கள் தலைகளையும் முகத்தையும் வருடினார் திருதராஷ்டிரர். "மைந்தர் இல்லையென்று ஒருகணம் எண்ணுவேன். மறுகணம் உங்கள் நினைவு வராமல் இருந்ததில்லை. இதோ இந்தக் குழல்மணத்தை எத்தனை காலமாக அறிந்திருக்கிறேன். என் இளையோன் மைந்தர் நீங்கள். என் மைந்தரைவிட நான் தலைக்கொள்ள தக்கவர். சிறப்புறுக! குடி அழியாது பெருகுக! வெற்றியும் புகழும் அமைக! பிறவி நிறைவடைக!" என்றார்.

நகுலன் உடல் தளர்ந்து சரிந்து அவர் தொடையிலிருந்து இறங்கி நிலத்தில் அமர்ந்து அவர் முழங்கால் முட்டில் தலைவைத்து நெஞ்சு பிளக்கும் ஒலியுடன் அழுதான். சகதேவன் கண்ணீர் விட்டபடி அவரது வலத்தோளில் தலை சாய்த்தான். யுதிஷ்டிரன் அவருடைய இடத் தொடையிலிருந்து மெல்ல எழுந்து நின்று கண்களைத் துடைத்தபின் திரும்பி அர்ஜுனனை நோக்கி "வருக!" என்றார். அர்ஜுனன் தழல் எனத்

தவித்த அசைவுடன் நின்றிருந்தான். ஒருகணம் தயங்கி பின்னால் வளைந்து மறுகணம் ஓரடி எடுத்து வைத்து தயங்கி பின்னர் ஓடிவந்து அவர் காலடியில் விழுந்து ஓலம் என ஒலித்த குரலில் "தந்தையே, நான் பார்த்தன். தங்கள் பெயர்மைந்தரைக் கொன்றவன். பிதாமகர்களையும் ஆசிரியர்களையும் களத்தில் வீழ்த்திய பழிகொண்டவன். தாங்கள் அளிக்கும் எச்சொல்லுக்கும் தகுதியானவன்" என்றான்.

திருதராஷ்டிரர் தன் கைகளை அவன் தலைமேல் வைத்து குழல்கற்றையைப் பற்றி மெல்ல தூக்கி "இனி இத்தகைய சொற்களால் என்ன பயன்? இவற்றைக் கடந்து செல்க! கொலை போர்க்களத்தில் நின்றிருக்கும் ஷத்ரியனுக்குரிய அறமே. களம் நிகழ்பெருக்குகளின் வெளி என்பதால் அங்கு மீறலும் இயல்பானது. அதற்கு மாற்றுகளும் வேதங்களில் சொல்லப்பட்டுள்ளன. ஷத்ரியனென போருக்கெழுந்தவன் எந்நிலையிலும் ஷத்ரியன் என்றே நின்றிருக்கவேண்டும். ஆற்றியவற்றின்பொருட்டு குற்றஉணர்வு கொள்ளலும் வென்றபின் சோர்வும் தோல்வியில் பணிவும் அவனுக்குரியவை அல்ல. கடந்து செல்க! உன் விண்வாழும் தந்தையின் அருள் உனக்குண்டு. அஸ்தினபுரிக்குக் காவலென உன் காண்டீபம் அமையட்டும்" என்றார்.

அர்ஜுனன் விம்மி அழத்தொடங்க அவர் அவன் காதைப் பிடித்து உலுக்கினார். "மைந்தா, விளையாட்டுக் குழந்தையென்றே உன்னை அறிந்திருக்கிறேன். இப்போதும் என் உள்ளத்தில் உனது இளம் புன்னகையே நிறைந்திருக்கிறது. அதுவன்றி பிறிதொன்றை அறியவும் நான் விழையவில்லை" என்றார் திருதராஷ்டிரர். திருதராஷ்டிரரின் அருகிலிருந்து காந்தாரியின் பக்கமாகச் சென்று குனிந்து அவள் கால்களைத்

தொட்டு வணங்கி "வாழ்த்துக, அன்னையே!" என்று யுதிஷ்டிரன் சொன்னார். அவள் தன் இரு கைகளையும் அவர் தலையில் வைத்து "பாரதவர்ஷத்தை முற்றாள்க! உன் குலம் பெருகுக! உன் கோலால் குடி செழிக்கட்டும். நலம் பெறுக! நிறைவுறுக!" என்று வாழ்த்தினாள்.

அர்ஜுனன் எழுந்து சொல்லின்றி காந்தாரியின் தாள் தொட்டு வணங்க "மேலும் மேலும் வெற்றி அமைக! வெற்றியில் உளம் திளைக்கும் இளமையும் உடன் அமைக! துயரனைத்தும் விலகி அகம் தெளிக!" என்று காந்தாரி சொன்னாள். நகுலன் நிமிர்ந்து அவள் முகத்தை பார்த்தபோது அதிலிருந்த மலர்ந்த புன்னகை அவன் அகத்தை படபடக்க வைத்தது. அமர்ந்தபடியே கைகளை நீட்டி அவள் கால்களைத் தொட்டு "வாழ்த்துக, அன்னையே!" என்றான். தன் கைகளால் அவன் தலையைத் தொட்டு குழல்பற்றி மெல்ல உலுக்கி "நலமும் நிறைவும் பெறுக!" என்றாள். பின்னர் அவளை வணங்கிய சகதேவனின் தலையைத் தொட்டு "உங்கள் அன்னை துயருற்றிருக்கிறாள். நீங்கள் சிறப்பும் உவகையும் பெறுவதைக் கண்டு அவள் மீளக்கூடும். அன்னையின் பொருட்டும் நீங்கள் சிறப்புற வேண்டும்" என்றாள் காந்தாரி.

சகதேவன் பெருமூச்சுவிட்டு கண்களை மூடி திருதராஷ்டிரரின் தொடைமீது தன் தலையை வைத்துக்கொண்டான். அதன் பின்னரே யுதிஷ்டிரன் பீமனை உணர்ந்தார். நிமிர்ந்து அவனைப் பார்த்து "அருகே வருக!" என்று கைகாட்டினார். பீமன் அவர்களை மாறி மாறி பார்த்தபடி குடில் வாயிலில் நின்றான். அவன் முகத்திலிருந்த ஐயமும் பதற்றமும் நகுலனுக்கு எரிச்சலை உருவாக்கியது. அவன் முகத்தை திருப்பிக்கொண்டான். பீமனுக்குப் பின்னால் இளைய யாதவர்

வந்து நின்றார். அவருக்குப் பின்னால் கவச உடை அணிந்த ஏவலன் ஒருவன் வந்தான். யுதிஷ்டிரன் பற்களைக் கடித்து சினத்துடன் "அருகே வருக!" என்று விழிகளால் பீமனுக்கு ஆணையிட்டார்.

பீமன் மெல்ல ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து திருதராஷ்டிரரை நோக்கி வந்தான். நகுலனும் சகதேவனும் திருதராஷ்டிரரின் அருகிலிருந்து எழுந்தனர். நகுலன் திருதராஷ்டிரருக்குப் பின்னால் சென்று நின்றான். சகதேவன் காந்தாரியின் அருகே நின்றான். யுதிஷ்டிரன் "வணங்குக!" என்று பீமனை நோக்கி கைகாட்டினார். பீமன் திருதராஷ்டிரருக்கு சற்று அருகே வந்து நின்றபோது அவன் உடலிலிருந்து வெம்மை எழுவதுபோல் தோன்றியது. அவன் உடலெங்கும் தசைகள் நெளிந்தன. அவனுக்குப் பின்னால் இளைய யாதவர் வந்து நின்றார். யுதிஷ்டிரன் "தந்தையே, தங்கள் அன்புக்குரிய மைந்தன் விருகோதரன் வந்திருக்கிறான்" என்றார்.

இரு கைகளையும் விரித்து புன்னகையுடன் "வருக, மைந்தா!" என்று திருதராஷ்டிரர் அழைத்தார். பீமன் விம்மியபடி கால்மடித்து முழந்தாளிட்ட கணத்தில் இளைய யாதவர் தனக்குப் பின்னால் வந்த ஏவலனின் தோளைப்பற்றிச் சுழற்றி முன்னால் நிறுத்தினார். அப்போதுதான் அது துரியோதனன் சமைத்த இரும்புப் பாவை என்பது நகுலனுக்குத் தெரிந்தது. முன்னால் வந்து சரிந்து திருதராஷ்டிரரின் கைகளுக்கு நடுவே அது விழுந்தது. "மைந்தா! துரியோதனா!" என்று வீறிட்டபடி திருதராஷ்டிரர் அந்த இரும்புப் பாவையை இரு கைகளாலும் பற்றிச் சுழற்றி நெஞ்சோடணைத்து இறுக்கினார். அதன் இரும்புத்தகடுகள் நொறுங்கின. உள்ளமைந்த விற்சுருள்கள் உடையும் ஓசை கேட்டது. இடுப்பும் இரு தோள்களும்

உடைந்து நெளிந்துருமாற பாவை அவர் கைகளில் வளைந்து மடியில் விழுந்தது.

நீர்ச்சுடர் - 30

பகுதி நான்கு : கழுநீர்க் கரை – 11

இரும்புப் பாவை மடங்கி தன் மடியில் விழுந்ததும் திருதராஷ்டிரர் தோள் தளர்ந்தார். இரு கைகளும் உயிரிழந்தவை என பக்கவாட்டில் சரிய, பாவை அவர் மடியிலிருந்து நழுவி தரையில் கால் மடிந்து சரிந்து ஓசையுடன் விழுந்தது. என்ன நிகழ்ந்தது என்று அறியாமல் அனைவரும் விழி திறந்து நோக்கி நிற்க திருதராஷ்டிரர் இரு கைகளையும் தலைக்கு மேல் விரித்து விரல்களை அகற்றி விரித்து காற்றைப் பற்ற முனைவபர்போல அசைத்தார். குளிர்கண்டவர்போல உடல் நடுங்கினார். சில கணங்களுக்குப்பின் விந்தையானதோர் சீறல் ஒலி அவரிடமிருந்து எழுந்தது. பீடம் ஓசையிட உடலை உந்தி எழுந்து தலையை இருபுறமும் உருட்டி “என்ன? என்ன?” என்றார்.

பின்பு ஒரு மின் என அனைத்தும் தெளிய தன் நெஞ்சில் வெடிப்போசையுடன் இரு கைகளாலும் மாறிமாறி அறைந்தபடி கதறி அழுதுகொண்டு கால் மடிந்து மீண்டும் பீடத்திலேயே விழுந்தார். அவரது பேரெடை தாளாமல் பீடம் முறிய பின்பக்கம் மல்லாந்து விழுந்தார். அவரை தூக்கும்பொருட்டு அறியாது பீமனும் அர்ஜுனனும் முன்னகர அதுவரை அங்கிலாதிருந்தவன் போலிருந்த சங்குலன் கைநீட்டி

ஓசையிலாது அவர்களைத் தடுத்து, அருகே வந்து, இரு கைகளாலும் அவரது தோள்களைப்பற்றி சிறுகுழந்தையை என தரையிலிருந்து தூக்கி நிறுத்தினான். அவர் அவன் கையில் துணிப்பாவை என தொய்ந்து கிடந்தார்.

சங்குலன் முறிந்த பீடத்தை காலால் உதைத்து அப்பால் தள்ளினான். திருதராஷ்டிரர் வீறிட்டலறியபடியே இருந்தார். அவர் உடல் நடுங்க, கைகள் பதைத்தன. அவரை தன் ஒரு தோளில் சாய்த்த பின் சங்குலன் பீமனை நோக்கி அவ்வறைக்குள் அப்பால் கிடந்த பிறிதொரு பீடத்தை எடுக்கும்படி விரல் சுட்டினான். பீமன் பாய்ந்து சென்று அதை தூக்கி வந்து அருகே இட அதை காலால் இழுத்து அருகிட்டு திருதராஷ்டிரரை அதில் அமர்த்தினான். அவர் கால் மடித்து அதில் அமர்ந்து முழங்கால்கள் மேல் தலை வைத்து தன் தலையை கைகளால் பற்றிக்கொண்டு அழுதார்.

அங்கு நிகழ்வதென்ன என்று அறியாதவள்போல உறைந்த முகத்துடன் காந்தாரி அமர்ந்திருந்தாள். திருதராஷ்டிரர் "மந்தா! மந்தா! என் மைந்தா! மந்தா! உன்னை கொன்றுவிட்டேன்! என் கைகளால் உன்னை கொன்றுவிட்டேன்! மகற்கொலை புரிந்த கீழ்மகனானேன்! கெடுநரகுக்குச் செல்லும் பழி கொண்டேன்! என் மைந்தா! என் மைந்தா!" என்று கதறினார். திரும்பி இரு கைகளையும் விரித்து இளைய யாதவரின் திசை நோக்கி "யாதவனே, என்ன நிகழ்கிறது இங்கு? என் மைந்தன்! என் இனிய மைந்தன்! என் மைந்தனை என் கைகளால் கொன்றுவிட்டேன்" என்றார்.

இளைய யாதவர் அருகணைந்து பீமனின் தோளைப்பற்றி "வணங்குக!" என்றார். பீமன் திகைத்து சிறுகுழந்தைபோல் மாறி மாறி பார்க்க "வணங்குக அவரை!" என்றார். பீமன் முன்னகர்ந்து

முழந்தாளிட்டு அவரருகே சென்று "தந்தையே, நான் பீமன். உயிருடனிருக்கிறேன்" என்றான். "மைந்தா!" என்று கூவியபடி எழுந்து அவர் அவனை அள்ளி மார்போடணைத்து இறுக்கிக்கொண்டார். அவன் இரு கன்னங்களிலும் தோள்களிலும் வெறிகொண்டவர்போல் முத்தமிட்டார். அவன் முகத்தைப் பற்றி தன் மார்போடணைத்து அவன் குழல் மேல் முகத்தை வைத்து உரசினார். மானுடரிலிருந்து உள்ளுறை விலங்கு எழும் தருணங்களே உச்ச கணங்கள் என்று நகுலன் எண்ணிக்கொண்டான்.

திருதராஷ்டிரர் திரும்பி கைகளை விரித்து "இளைய யாதவனே, என்ன நிகழ்ந்தது? என்ன நிகழ்ந்தது? என் மைந்தன்! இதோ என் மைந்தன்! ஆ! என் மைந்தனை நான் கொல்லவில்லை. மூதாதையரே! தெய்வங்களே! என் மைந்தன் இதோ இருக்கிறான். என் குடித்தெய்வங்கள் என்னுடன் இருந்தன. என் நற்பொழுது நிலைத்தது! என் மைந்தனை நான் கொல்லவில்லை!" என்று கூவினார். பற்கள் கரிய முகத்தில் ஒளியுடன் தெரிய "என் மைந்தன் இருக்கிறான்! என் மைந்தன் இருக்கிறான்!" என்றார்.

இளைய யாதவர் மேலும் அருகணைந்து "மைந்தனைக் கொன்றதும் உண்மையே" என்றார். அவர் சொல்வது புரியாமல் கை அந்தரத்தில் நிற்க திருதராஷ்டிரர் "என்ன சொல்கிறாய்?" என்றார். "அது துரியோதனன் சமைத்த இரும்புப் பாவை" என்றார். "நன்று! நன்று செய்தாய்! என்னுள்ளிருந்து இவ்வண்ணமொரு கொடுந்தெய்வம் எழும் என்று நான் எண்ணியதே இல்லை. இத்தனை இருள் இருந்திருக்கிறது என்னுள். எத்தனை கெடுமதியாளனாக நான் இருந்திருக்கிறேன்!

நன்று! தெய்வங்களே, என்னை காத்தீர்கள்! மூதாதையரே, எனக்கு நல்லூழ் அளித்தீர்கள்!" என்றார் திருதராஷ்டிரர்.

பின்னர் மீண்டும் பீமனைத் தழுவி அவனை முத்தமிட்டு "எத்தனை இனியவன்! இவன் என் கையில் வளர்ந்த மகவு... தழுவுந்தோறும் தெவிட்டாத உடல் கொண்டவன். இவனை இளமையில் எத்தனை ஆயிரம் முறை தோள் தழுவியிருப்பேன்! என் தோள்களிலிருந்து இவனை இறக்கிவிட்டதே இல்லை" என்றார். தலையைச் சுழற்றியபடி "இனியவன்! இப்புவியில் எதைவிடவும் எனக்கு இவன் இனியவன். இப்புவியில் இனி நான் இவனுருவில் வாழ்வேன். என் மைந்தன் இவன்! எஞ்சியிருக்கும் என் மைந்தன் இவன் மட்டுமே!" என்றார்.

பீமன் அவர் மார்பில் முகம் சேர்த்து "ஆம் தந்தையே, தங்கள் மைந்தன். அப்பாவையென இப்போது என்னை இறுக்கிக் கொல்வீர்கள் எனில் அதுவே என் நல்லூழ் என்று எண்ணுவேன்" என்றான். அவனை ஓசையெழ அறைந்து "பேசாதே! இவ்வண்ணம் எதையும் என்னிடம் பேசாதே!" என்று சொல்லி திருதராஷ்டிரர் மீண்டும் பீமனை இறுகத் தழுவிக்கொண்டார். "நான் அறிகிறேன், உன் உள்ளம் எங்கெல்லாம் செல்கிறது என்று நன்கறிகிறேன். உன் மைந்தர்களின் இறப்பு உன்னை கொல்கிறது" என்றார்.

"ஆம், தந்தையே. என் மைந்தர்களின் சாவில் இருந்து என்னால் வெளிவரவே இயலவில்லை" என்றான் பீமன். திருதராஷ்டிரர் "ஆம் மைந்தா, அது கடினமானதுதான். தந்தைக்கு மைந்தர் இழப்பு தன் இறப்புக்கு நிகர். ஆனால் நீ வெளிவந்தாகவேண்டும். அஸ்தினபுரியின் பொருட்டு, உன் தமையன் பொருட்டு, உன் குடி இங்கு வாழவேண்டும்.

அனைத்தையும் கடந்து செல்க! நிகழ்ந்ததனைத்தும் கனவென்று கொள்க! இல்லையென்று எண்ணினால் இல்லாமல் ஆகுமளவுக்கு கனிவு கொண்டதே இங்குள்ள அனைத்தும். மைந்தரை மறந்துவிடு. பெருகும் கங்கைப்புனலில் அவர்களுக்கு கடன் கழித்த மறுகணமே அவர்களை கடந்து சென்றுவிடு" என்றார்.

பீமன் அவர் தோளில் தலை சாய்த்து ஓசையிலாது அழுதான். அவர் அவன் தலையை வருடினார். மீண்டும் மீண்டும் அவன் குழலில் முத்தமிட்டார். அவர்கள் இருவரும் பிற எவரும் அங்கிலாததுபோல் ஒரு தனிமையை சென்றடைந்தனர். ஒருவரை ஒருவர் தழுவி, தொடுகையாலேயே ஒருவரை ஒருவர் அறிந்து, அங்கிருந்தனர். இரு பெருநாகங்கள் ஒன்றையொன்று தழுவி நெகிழ்ந்து இறுகி மீண்டும் நெகிழ்ந்து இறுகிக்கொண்டிருப்பதுபோல். சுனையொன்றின் சுழிப்புபோல. பிறர் அவர்களை வெறுமனே நோக்கி நின்றிருந்தனர்.

யுதிஷ்டிரன் கைகூப்பி விழிநீர் வடித்துக்கொண்டிருந்தார். அர்ஜுனன் தளர்ந்து இளைய யாதவருக்குப் பின்னால் சென்று நின்று பின்னர் மீண்டும் தளர்ந்து சுவரோரமாக சாய்ந்து நின்றான். சகதேவன் காந்தாரியின் அருகிருக்க அவள் தன் கைகளால் அவன் தலையை வருடிக்கொண்டிருந்தாள். அவன் விழி மூடி அவள் தொடையில் நெற்றியை வைத்து ஊழ்கத்திலென அமைந்திருந்தான்.

நீண்ட மூச்சுடன் இருவரும் பிரிந்தனர். திருதராஷ்டிரர் "செல்க! உன் அன்னையிடம் வாழ்த்துச்சொல் பெறு!. உளம் நிறைந்து அவள் உனக்களிக்கும் சொல்லால் நீ துயர் அற்று மீள்வாய்" என்றார். "ஆம்" என்றபடி பீமன் எழுந்து சென்று காந்தாரியின் கால்களைத் தொட்டு வணங்கினான். அவள் தன் இரு

கைகளையும் அவன் தலையில் வைத்து "சிறப்புறுக! எஞ்சும் வாழ்வு இனிதாகுக! மீட்பு கொள்க!" என்றாள். அவன் அவள் காலில் தன் தலையை வைத்தான். காந்தாரி மேலும் குனிந்து அவன் செவிகளைப் பற்றி தலையைத் தூக்கி தன் மடியில் வைத்துக்கொண்டாள்.

அவன் நிலத்தில் அமர்ந்து அவள் மடியில் முகம் புதைத்து கை தளர்ந்து அமர்ந்திருக்க அவன் குழல்கற்றைகளை கைகளால் வருடியபடி "துயருறாதே, மைந்தா. துயர் மானுட உயிருக்கு இயல்பான ஒன்று அல்ல. உவகையே உயிரின் நிறைநிலை. துயர் நிலைகுலைவு. நிலைகுலைந்தவற்றை சீரமைக்க ஐந்து பூதங்களும் ஓயாது முயல்கின்றன என்பார்கள். வானென அமைந்த தேவர்கள் அதன் பொருட்டே மண்ணுக்கு இறங்குகிறார்கள் என்பார்கள். எண்ணுக, இத்துயர் கடந்து போகும்! அறிக, அனைத்துத் துயர்களும் கடந்துபோகும்! நீ இவை அனைத்திலிருந்தும் எழுவாய். அனைத்தும் ஒருநாள் நினைவென்று ஆகும். நிகழ்ந்தவை நிகழ்ந்தாக வேண்டியவை என்றாகும்" என்றாள்.

பீமன் அவள் மடியில் விழி மூடி கண்ணீர் உகுத்துக்கொண்டிருந்தான். யுதிஷ்டிரன் "நிறைவுற்றோம், தந்தையே. இந்த ஒரு நாளால் அனைத்திலிருந்தும் விடுபட்டோம். இனி துயரில்லை, இனி எதையும் அஞ்சுவதில்லை. இனி எந்த தெய்வங்களிடமும் கேட்க ஒன்றுமில்லை எங்களுக்கு" என்றார். திருதராஷ்டிரர் கைநீட்டி "யாதவனே, ஏன் இவ்வண்ணம் எல்லாம் நிகழ்ந்ததென்று நான் கேட்கப்போவதில்லை. நீ அறியாத ஏதுமில்லை என்று, என்று நீ அஸ்தினபுரிக்கு வந்தாயோ அன்றே அறிவேன். மெய்யுரைக்க வேண்டுமெனில் இவ்வண்ணமெல்லாம் நிகழும் என்று

முன்னரே அறிந்திருந்தேன். இதுவரை நான் ஆற்றிய அனைத்தும் அவ்வண்ணம் நிகழ்தலாகாது என்பதற்காகவே" என்றார்.

பின் மெல்ல கசப்புடன் நகைத்து "உண்மையில் நான் இதுகாறும் செய்தவை எல்லாம் உனக்கெதிரான போர் மட்டுமே. அதில் நான் தோற்றுவிட்டேன். அவ்வாறன்றி வேறு வழியில்லை" என்றார். முகம் உள்ளெழுச்சியில் நெளிய கைகளைத் தூக்கி உரத்த குரலில் "இதோ என் மைந்தரை தோள் தழுவுகையில் மீண்டும் பெருந்தந்தையென்று உணர்கிறேன். இத்தருணத்தில் இவ்வாறு எழ முடிந்ததை எண்ணி ஆம் ஆம் என்று தெய்வங்களிடம் சொல்கிறேன். அவர்கள் என்னை வெல்ல இயலாது. நான் எளிய மானுடன் அல்ல, குலம் சமைக்கும் பிரஜாபதி. பிரஜாபதிகளை காலமும் தெய்வமும் வெல்ல இயலாது. பெருகுவதொன்றே அவர்களின் ஊழ். நான் பெருகி இப்பாரதவர்ஷம் முழுக்க நிறைவேன்" என்றார்.

"ஆம் அரசே, இங்கிருந்து பெருகி எழுபவர் நீங்கள் மட்டுமே. குருகுலம் ஒருபோதும் அழியாது" என்று இளைய யாதவர் சொன்னார். "ஆம்! ஆம்! ஆம்!" என்று திருதராஷ்டிரர் தனக்குத்தானே சொல்லிக்கொண்டார். பின்னர் நீண்ட பெருமூச்சுடன் உளம் நகர்ந்து "அந்தச் சிலை! அதை தழுவுகையில் நான் எதை எண்ணினேன்? அந்தத் தோள்கள் எனக்கு நன்கு பழக்கமானவை. ஒருகணம் இவன் என்றும் மறுகணம் அவன் என்றும் தோன்றும் உடல் அது" என்றார். "அதை நாம் மீண்டும் எண்ணவேண்டியதில்லை. எண்ணி எண்ணிச் செல்லும் தொலைவுகள் வாழ்வுக்குரியவை அல்ல. வாழ்வை துறப்பவை அவை" என்றார் இளைய யாதவர். "ஆம்"

என்று திருதராஷ்டிரர் கூறினார். “நலம் பெறுக! அனைத்தும் நன்றென்றே அமைக!” என்றார்.

யுதிஷ்டிரன் “தந்தையே, இத்தருணத்தில் நீத்தார்கடனுக்காக தாங்கள் எங்களுக்கு நற்சொல் அளிக்க வேண்டும்” என்றார். “நிகழ்க! காற்றுவெளியை நிறைத்திருக்கும் அனைவரும் அன்னமும் நீரும் விழிநீரும் பெற்று விண்புகுக! அவர்கள் இங்கு ஆற்றியவை அனைத்தும் நிறைவுற்றதென்று அவர்கள் அறியட்டும். மானுடரின் விழைவுகளால் எழுவதல்ல அந்நிறைவு, ஊழ் வகுத்த வட்டத்தை இருமுனை இணைத்து முடிப்பதனால் எழும் நிறைவு அது. அதை விண்ணிலிருந்து மட்டுமே மானுடர் அறியமுடியும். அவர்கள் அங்கு அமைக! ஆம், அவ்வாறே ஆகுக!” என்றார்.

யுதிஷ்டிரன் வணங்கி “எனில் நாங்கள் சொல் கொள்கிறோம், தந்தையே!” என்றார். “அவ்வாறே” என்றார் திருதராஷ்டிரர். யுதிஷ்டிரன் பீமனின் தோளைத் தொட்டு “எழுக, மந்தா! தந்தை ஓய்வெடுக்கட்டும்” என்றார். “ஆம், நான் ஓய்வெடுக்க வேண்டியிருக்கிறது. நெடுந்தொலைவு ஓடியவன் போலிருக்கிறேன். இப்பெருங்களைப்பை இதற்கு முன் எப்போதும் உணர்ந்ததில்லை” என்றார் திருதராஷ்டிரர். பீமனின் தோளைத் தொட்டு இளைய யாதவர் “எழுக, பீமசேனரே! நலமே நிறைந்தது. இது தெய்வங்கள் எழுந்த பொழுது” என்றார்.

பீமன் கண்களைத் துடைத்தபடி எழுந்து “வருகிறேன், அன்னையே” என்றான். காந்தாரி அவன் கன்னத்தை மெல்ல தட்டினாள். சகதேவனும் “வாழ்த்துக, அன்னையே!” என்றான். அவள் அவன் கைகளைப் பற்றி தன் உதடுகளில் வைத்து முத்தமிட்டாள். யுதிஷ்டிரனும் அர்ஜுனனும் அருகணைந்து “விடைகொள்கிறோம், தந்தையே” என்றனர். அவர்கள்

ஒவ்வொருவராக வெளியே செல்ல இளைய யாதவர் மட்டும் குடிலுக்குள் நின்றார். நகுலன் திரும்பிப் பார்க்க "செல்க!" என்றார்.

அவன் வெளியே சென்றதும் யுதிஷ்டிரன் திரும்பிப்பார்த்து "அவன் வரவில்லையா?" என்றார். "அவர்களுடன் தனிமையிலிருக்கிறார்" என்றான். "இனியென்ன அவன் சொல்லவேண்டியிருக்கிறது அவர்களிடம்?" என்று யுதிஷ்டிரன் கேட்டார். "ஒருவேளை இனிமேல்தான் அவர் உண்மையிலேயே கூற வேண்டியதை கூறுவார் போலும்" என்று சகதேவன் சொன்னான். புரியாமல் புருவம் சுளிக்க அவனைப் பார்த்தபின் யுதிஷ்டிரன் "நெஞ்சிலிருந்து பேரெடை ஒன்று அகன்றது. இத்தருணத்தை எண்ணி எண்ணியே துயிலழிந்திருந்தேன். ஒரு கணத்தில் அனைத்திலிருந்தும் விடுபட்டவன் போலிருக்கிறேன்" என்றார்.

பெருமூச்சுகள் வழியாக அவர் முகம் மலர்ந்தபடியே வந்தார். "இப்போர் நிகழவேயில்லை என்றே எண்ணத்தோன்றுகிறது. அனைத்துக்கும் முன்னால் சென்று அஸ்தினபுரியில் உடன்குருதியினருடன் விளையாடி மகிழ்ந்திருந்த நாட்களுக்கே சென்றுவிடலாம்போல் தோன்றுகிறது" என்றார். பீமன் பெருமூச்சுடன் "விண்ணுலகொன்று உண்டு, அங்கு அவர்களுடன் தோள்தழுவி விளையாடுவோம்" என்றான். யுதிஷ்டிரன் "அதன் ஒரு கீற்றை இன்று அறிந்தோம், இளையோனே" என்றார்.

திரும்பிச் செல்கையில் தேரிலேயே யுதிஷ்டிரன் துயில்கொள்ளத் தொடங்கியிருந்தார். தேரை நோக்கி

செல்கையிலேயே அவர் நடை தளர்ந்து சகதேவனை பற்றிக்கொண்டுதான் நடந்தார். தேர் மிக மெல்ல ஒழுகிச்செல்வதுபோல் ஓடியது. குடிலை அடைந்து திரைவிலக்கி இறங்கிய சகதேவனும்கூட துயிலிலிருந்து விழித்தவன் போலிருந்தான். "மூத்தவரே! மூத்தவரே!" என இருமுறை அழைத்த பின்னரே யுதிஷ்டிரன் விழித்துக்கொண்டு தேரிலிருந்து தொய்ந்த நடையுடன் இறங்கினார்.

பீமன் புரவியில் வந்து இறங்கி "நானும் துயில்கொள்ளவே விரும்புகிறேன், இளையோனே" என்றான். சகதேவன் யுதிஷ்டிரனை மெல்லத் தாங்கி குடிலுக்குள் கொண்டுசெல்வதை நகுலன் பார்த்தான். சற்று நேரத்தில் அவன் வெளிவந்து "அவர் விழித்துக்கொள்ளவே இல்லை" என்றான். அர்ஜுனன் புரவியை நிறுத்தி குடிலை சிறிது நேரம் பார்த்துவிட்டு திரும்பி குறுங்காட்டுக்குள் புகுந்து மறைந்தான். பீமன் "எனக்கும் காடுதான் துயிலுக்குரிய இடம்" என்றபின் புன்னகைத்து நகுலனை தோளில் தட்டிவிட்டு காட்டுக்குள் புகுந்து கிளையொன்றை பற்றித் தாவி மரத்தின் மீதேறி இலைகளுக்குள் மறைந்தான்.

சகதேவன் புன்னகைத்து "நீயும் துயில்கொள்ள விரும்பக்கூடும்" என்றான். "ஆம், விந்தையானதோர் வெறுமை. அனைத்துமே முடிவுக்கு வந்துவிட்டதுபோல் தோன்றுகிறது. உண்மையில் இது இனிதாகக்கூட இல்லை. இனி ஒரு கணம்கூட இல்லை, இனி எதிர்காலமென்பதே இல்லை என்று தோன்றுகிறது. இத்தருணத்தில் இறப்பொன்றே இயல்பானதென்றுபடுகிறது" என்றான். சகதேவன் புன்னகைத்தபின் நடக்க நகுலன் உடன் நடந்தான். "நாம் துயரை ஏன் விழைகிறோம்? நம்

அன்றாடத்தின் சலிப்பையும் வெறுமையையும் துயர்போல நிறைப்பது பிறிதொன்றில்லை என்பதனாலா?”

அவர்கள் தங்கள் குடிலுக்குள் சென்று அமர்ந்தனர். சகதேவன் தன் மேலாடையைத் தூக்கி அப்பால் வீசிவிட்டு மஞ்சத்தில் படுத்து “தெய்வங்களே!” என்று முனகினான். பின்னர் விழிகளை மூடியபடி “மானுடர் எத்தனை உயர்ந்த நிலைக்கு செல்ல இயல்கிறது! எத்தனை படிகளை மானுடருக்கு தெய்வங்கள் திறந்து வைத்திருக்கின்றன! தெய்வங்களின் அருகே சென்று அமரும் வரை விண் விரிந்திருக்கிறது!” என்றான்.

நகுலன் அவன் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் மிக அழகாக மாறிவிட்டதுபோல் தோன்றியது. முகத்தில் இருந்த அப்புன்னகையை அவன் பார்த்து நெடுநாட்களாகியிருந்தது. சகதேவன் “வேறெந்த நிலையிலும் மனிதன் முழுமை கொள்வதில்லை. தந்தையும் அன்னையும் என்னும் நிலையில் மட்டுமே முழுநிலை கூடுகிறது. பிற அனைத்தும் பொய், மிகை கற்பனைகளை அள்ளிச் சூடிக்கொள்ளும் உருவங்கள். அன்னையும் தந்தையும் என்று ஆவதொன்றே கருவிலேயே மனிதருக்கு அளிக்கப்படும் ஆணை” என்றான்.

பின்னர் எண்ணி மேலும் தொடர்ந்தான் “முனிவர்கள் இப்புவியையே அன்னையும் தந்தையும் என்று நின்று அறிபவர்களாக இருக்கலாம். அளிப்பதற்கு மட்டுமே உளம் கொள்பவர்கள். அன்பன்றி பிறிது எதையும் கொள்ளாதவர்கள்.” அவன் குரல் தாழ்ந்து தாழ்ந்து சென்றது. அவன் சொல்லும் சொற்கள் பொருளழிந்தன. “அன்னையும் தந்தையும்” என்ற சொற்கள் மட்டும் கேட்டன. நாக்குழறி வெற்றொலியாகியது. சற்று நேரத்தில் குறட்டையொலி கேட்கத் தொடங்கியது.

நகுலன் அவனைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். தன் தலை மடியில் வைத்திருந்த கையில் மோதுவதை உணர்ந்து விழித்தெழுந்தான். அமர்ந்தபடியே துயின்றுவிட்டிருப்பதை உணர்ந்து எழுந்து நின்றான். கைகளை நீட்டி சோம்பல் முறித்துவிட்டு மேலாடையைச் சீரமைத்து வெளியே வந்தான். காற்று சீராக வீசிக்கொண்டிருந்தது. பின்காலைக்குரிய உருகி வழிந்த வெயில். பசுந்தழை வெயில்பட்டு வேகும் மென்மணம். மரக்கிளைகளுக்கு அப்பால் கங்கை பளபளத்துக்கொண்டிருந்தது. பறவைக்குரல்கள் அடங்கத் தொடங்கிவிட்டிருந்தன.

குடில்நிரைகளில் ஏவலரும் பெண்களும் அந்தணரும் வெவ்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தனர். பேச்சுக்குரல்கள், தறிகள் மீது முழைக்கழிகள் அறையும் ஓசை. புரவிகளின் மெல்லிய கனைப்பொலி. ஒவ்வொன்றும் இனிதாகிவிட்டிருப்பதை அவன் உணர்ந்தான். மரங்கள், குடில்கள், ஒளி அனைத்தும் கேளா இசையால் ஒன்றோடொன்று இணைந்து ஒற்றைப்படலமென்று ஆகிவிட்டிருந்தன.

அவன் மெல்ல நடந்து தன் புரவி நோக்கி சென்றான். அது நன்றாக தலைதாழ்த்தி துயின்று கொண்டிருந்தது. அருகணைந்து அவன் அதன் தோளில் தொடும்வரை விழிப்பு கொள்ளவில்லை. அதன் பின்னரும் மெல்லவே கண்விழித்து அவனைப் பார்த்து மூக்கை விரித்து சற்றே சீறியது. அவன் அதன் மேல் ஏறி அமர்ந்த பின்னரும் துயிலிலிருந்து முழுதும் விழிக்காமலேயே நடைகொள்ளத் தொடங்கியது. அவன் அதை கழுத்தைத் தட்டி செலுத்தினான். குடில்களையும் மரங்களையும் நன்றாக உலர்ந்து செந்நிறச் சுடர் கொண்டிருந்த நிலத்தையும்

விடாய்கொண்ட விழிகளால் தவிக்கத் தவிக்க தொட்டுத் தொட்டு நோக்கியபடி சென்றான்.

அனைத்திலும் அழகென்று நிறைந்திருந்தது பிறிதொன்று. உளமகிழ்வை அளிப்பவை எல்லாம் அழகானவை. உளமகிழ்வோ உள்ளிருந்து எழுகிறது. வெளியே இருக்கும் அனைத்தையும் தொட்டுத் தழுவி அறிகிறது. இந்த மூங்கில் கழைகள் ஏன் தித்திக்கின்றன? அந்த மரங்களின் இலையசைவில் ஏன் அத்தனை குழைவு? அடுமனைப்புகை தன் மெல்லிய கலைவில் உள்ளத்தைத் தொட்டு வருடிச்செல்லும் மென்மையை எங்ஙனம் அடைகிறது?

ஒரு நாரை சிறகசைத்து மிதந்து வந்து குடிலுக்குப் பின் அமைந்த அசைவில் மெய்ப்பு கொண்டு நடுங்கி அவன் புரவிமேல் அமர்ந்தான். பற்கள் உரசிக்கொண்டு காதுக்குள் விந்தையானதோர் உராய்வோசையை எழுப்பின. பின்னர் மீண்டு மீண்டும் புரவியைத் தட்டி செலுத்தினான். “தெய்வங்களே! தெய்வங்களே!” என்று அவன் உள்ளம் அரற்றிக்கொண்டிருந்தது. காட்டின் அத்தனை இலைகளும் நாநுனிகளாகி தவித்துத் தவித்து துழாவி உண்ணும் ஓர் இனிப்பு எங்கும் நிறைந்திருந்தது.

ஒரு சொல். பொருள் அல்ல, வெறும் சொல். களிப்பென்றும், உவகையென்றும், இனிமையென்றும் அதை மாற்றிக்கொள்ளலாம். பித்தென்றும், கனவென்றும், ஊழ்கமென்றும் அதை ஆக்கலாம். ஒன்றுதல் என்றும், இன்மையென்றும் அதை சொல்லலாம். இது ஒரு துளி. கடலையே உணர்ந்தவர்கள் இருக்கலாம். இத்துளியே எனக்குக் கடல். கடலை உணர்ந்தோர் தேவர். அதை சுவைத்தபின் அவர்கள் சொல்லும் அனைத்தும் வேதம்.

அவன் மீண்டும் திருதராஷ்டிரரின் குடிலுக்கே வந்தான். நான்கு ஏவலர் அங்கிருந்து வந்து தலைவணங்கினர். “இளைய யாதவர் எங்கே? அங்கே இருக்கிறாரா?” என்று அவன் கேட்டான். “இல்லையே. அவர்தான் எங்களை அனுப்பினார். அந்த இரும்புப் பாவையை சீரமைத்துக் கொடுக்கும்படி சொன்னார்” என்றான் ஒருவன். “சீரமைத்துவிட்டீர்களா?” என்று நகுலன் கேட்டான். “ஆம், அது மிக எளிதில் சீரமைத்துக்கொள்ளும்படியே வடிவமைக்கப்பட்டுள்ளது. அது போருக்கானது அல்லவா?” என்றான் அவன்.

நகுலன் அவர்களைக் கடந்து சென்று திருதராஷ்டிரரின் குடில் முன் புரவியை நிறுத்திவிட்டு இறங்கி நின்றான். மிக மெல்ல நடந்தபோது குடிலுக்கு வெளியே நின்றிருந்த சஞ்சயனை கண்டான். சஞ்சயன் அவனைக் கண்டு புன்னகைத்தான். “என்ன செய்கிறார்கள்?” என்று நகுலன் தாழ்ந்த குரலில் கேட்டான். “மைந்தனுடன் இருக்கிறார்கள்” என்று அவன் சொன்னான். நகுலனின் நெஞ்சு படபடத்தது. மிக மெல்ல காலடி எடுத்துவைத்து அவன் குடில் வாயிலை அடைந்து உள்ளே பார்த்தான்.

திருதராஷ்டிரரும் காந்தாரியும் மஞ்சத்தில் அமர்ந்திருந்தனர். மஞ்சத்தில் அந்த இரும்புப் பாவை படுத்திருந்தது. திருதராஷ்டிரர் அதன் தோள்களை தன் கைகளால் வருடிக்கொண்டிருந்தார். காந்தாரி அதன் தலையை தடவினாள். இருவரும் முகம் மலர்ந்து சொல்லின்மையில் மூழ்கி அமர்ந்திருந்தனர்.

நீர்ச்சுடர் - 31

பகுதி ஐந்து : எஞ்சும் கனல் -1

யுயுத்ஸு அஸ்தினபுரியிலிருந்து திரும்பி வந்தபோது முக்தவனம் முற்றிலும் மாறிவிட்டிருப்பதை உணர்ந்தான். அவ்வுணர்வை கங்கையில் படகில் வந்துகொண்டிருந்தபோதே அறிய முடிந்தது. படகுமுனை நீண்டு துறைமேடையை நோக்கி சென்றபோது அங்கிருந்த உடல்களில் விரைவு கூடியிருப்பதை முதலில் விழிகள் அறிந்தன. எழுந்த ஓசைகளில் ஊக்கம் இருந்தது. படகு அணைந்தபோது துறைமேடை நோக்கி வந்த ஏவலர்களின் நடையில் நிமிர்வும் துள்ளலும் இருந்தது. அங்கிருந்து கைவீசி படகில் இருந்த குகர்களை நோக்கி உரக்க குரல்கொடுத்தனர். படகுகளிலிருந்த குகர்களுக்கு அக்குரல்களிலிருந்தே ஊக்கம் கிடைக்கப்பெற்றது. அவர்களும் உரக்க மறுகுரல் கொடுத்தனர்.

யுயுத்ஸு அமரமேடையில் நின்றபடி முகங்களை திகைப்புடன் மாறி மாறி பார்த்தான். அனைத்து முகங்களும் ஒளி கொண்டிருந்தன. பற்கள் மின்னி மின்னி தெரிந்தன. வடம் எழுந்து சுழன்று படகுமேடையில் சென்று விழுந்தது. அங்கு நின்றவர் அதை இழுத்து சுற்றிக் கட்டியபடி ஏதோ சொல்ல உடன் நின்றவர்கள் உரக்க நகைத்தனர். அது காமக் குறிப்புள்ள வேடிக்கை என்று அவன் உணர்ந்தான். அப்புன்னகை மாறாமலே அவனருகே வந்த குகன் "இளவரசே, பாதை ஒருங்கிவிட்டது" என்றான். அவன் பலகையில் ஏறி துறைமேடையை அடைந்து உடலிலிருந்த அசைவை நிகர்நிலைப்படுத்திக்கொள்ளும் பொருட்டு ஒருகணம் கண்மூடி நின்றான்.

கண்களை மூடியபோது அங்கிருந்த ஓசை தெளிவுற சூழ்ந்துகொண்டது. அங்கிருந்த அனைத்துச் சொற்களிலும் நகைப்பு கலந்திருந்தது. ஓசைகளிலும்கூட அந்நகைப்பே திகழ்வதை அவன் உணர்ந்தான். மானுட உள்ளங்களின் நகைப்பையும் அழுகையையும் அவர்கள் புழங்கும் பொருட்களும் கொள்கின்றன போலும். அவன் அந்நாள்வரை கேட்டுக்கொண்டிருந்த அத்தனை பொருட்களும் முனகின, விம்மின, அழுதன. ஆகவே அந்நகைப்பை அவன் செவி தனித்தே கேட்டது. என்ன நிகழ்ந்ததென்று வியந்தபடி அவன் சூழ நோக்கினான். அவனை அறியாமலேயே அவன் முகமும் மாறிவிட்டிருந்தது. உதடுகள் இழுபட்டு புன்னகை சூடியிருப்பதை அவனே உணர்ந்தான்.

அவனை நோக்கி வந்த துறைமேடைக்காவலன் புன்னகையுடன் "தங்களுக்கான தேர் ஒருங்கியிருக்கிறது, இளவரசே" என்றான். "ஆம்" என்றபடி அவன் தன் தேரை நோக்கி சென்றான். தேரிலிருந்து இறங்கிய பாகன் படிக்கட்டை நீட்டிவைத்து தலைவணங்கினான். அவன் முகத்திலும் புன்னகை இருந்தது. தேரில் ஏறி பீடத்தில் அமர்ந்து திரையை தாழ்த்தியபின் நுகமேடைமேல் ஏறி அமர்ந்த பாகனிடம் "என்ன நிகழ்கிறது இங்கே?" என்றான். "இளவரசே?" என்றான் அவன். "அனைவரும் ஊக்கம் கொண்டிருக்கிறார்கள். முகங்களில் சிரிப்பு திகழ்கிறது. என்ன நிகழ்கிறது இங்கே?" என்றான்.

"அறியேன். நாளை காலை நீர்க்கடனுக்கு நாள் குறித்திருக்கிறார்கள். அனைத்தும் ஒருங்கிக்கொண்டிருக்கின்றன. பணிகளை முடுக்கிவிட்டிருப்பதனால் அனைவரும் விசையுடன் செயலாற்றிக்கொண்டிருக்கிறார்கள்" என்றான். "அதுவல்ல.

இங்கே ஓர் உவகை திகழ்கிறது. அனைவரும் இங்கிருந்த துயரில் இருந்து விடுபட்டவர்கள்போல் தெரிகிறார்கள்" என்றான் யுயுத்ஸு. பாகன் ஒருகணத்திற்குப் பின் "அரசர்களின் உணர்வையே பிறரும் அடைகிறார்கள், இளவரசே" என்றான். "அரசர் விடுபட்டுவிட்டாரா?" என்று யுயுத்ஸு கேட்டான்.

"ஆம், நேற்று மாலையிலிருந்தே இங்கு அனைத்தும் மாறிவிட்டன. அரசர் புன்னகையுடன் உலவுவதை நான் கண்டேன். இளையோரிடம் அவர் பேசும்போது சிரித்துக்கொண்டிருந்தார். இளையோரின் முகங்களும் மாறிவிட்டிருந்தன..." என்று பாகன் சொன்னான். ஒருகணத்துக்குப் பின் யுயுத்ஸு "பீமசேனன் எப்படி இருக்கிறார்?" என்றான். "ஆம், அவரும் மாறிவிட்டிருக்கிறார். அவரிடமும் புன்னகையை கண்டேன்" என்றான் பாகன். யுயுத்ஸு "பார்த்தன் மாறிவிட்டாரா?" என்று மீண்டும் கேட்டான். "அவர் நகைக்கவில்லை. ஆயினும் அவர் உள்ளம் மாறிவிட்டிருப்பதை முகத்தில் பார்க்கமுடிகிறது" என்று பாகன் சொன்னான்.

ஏன் என்ற கேள்வி யுயுத்ஸுவின் நா வரைக்கும் வந்தது. ஆயினும் அவன் கேட்கவில்லை. ஆனால் அவன் உள்ளம் அக்கேள்வியிலேயே சென்று முட்டிக்கொண்டிருந்தது. திரையை சற்றே விலக்கி குடில்நிரைகளின் முகப்பில் தெரிந்த ஒவ்வொரு முகத்தையாக அவன் பார்த்துக்கொண்டு வந்தான். அனைவருமே உளம் மலர்ந்திருந்தனர். விழிகளில் சிரிப்பும் நாவில் கூரொலிகளும் கைகளில் சுழற்சியும் கால்களில் விசையும் தெரிந்தன. இவர்கள் இதற்குத்தான் காத்திருந்தார்களா? துயர் அவர்களை அழுத்தி மேலும் அழுத்தி மேலும் மேலுமென எடைகொண்டு மண்ணோடு புதைத்த

கணத்தில் உள்ளிருந்து திமிறிக்கொண்டிருந்தார்களா? இவர்களுக்குத் தேவையாக இருந்தது ஒரு தொடக்கம் மட்டும்தானா?

இங்கிருக்கும் மக்களில் எவரோ ஒருவர் புன்னகைத்தால் ஓர் ஒப்புதல் கிடைத்ததுபோல அனைவருமே புன்னகைக்க தொடங்கிவிட்டிருக்கிறார்கள் போலும். அவர்கள் எதிர்பார்த்திருந்த புன்னகை அரசருடையது. அத்தனை பேரும் அவர் முகத்தையே நோக்கிக்கொண்டு இருந்திருக்கிறார்கள். அவரும் காத்துக்கொண்டிருந்தார். உரிய முறையில் புன்னகைக்கும் ஒரு தருணத்துக்காக. ஒப்புதலுக்காக. எவருடைய ஒப்புதல்? தெய்வங்களுடைய ஒப்புதலா? மூதாதையர் ஒப்புதலா? அகச்சான்றின் ஒப்புதலா? அல்லது பிறர் ஒட்டுமொத்தமாக அளிக்கும் ஏற்பா?

ஒரு கணத்தில் அவனுக்கு அனைத்தும் புரிந்தது. ஆம், மூதாதையரின் ஒப்புதல். தந்தை வடிவாக, அன்னை வடிவாக இங்கு வந்த அரசரின், அரசியின் ஒப்புதல். "நேற்று என்ன நிகழ்ந்தது?" என்று அவன் கேட்டான். பாகன் "நேற்று அவர்கள் பேரரசரையும் பேரரசியையும் சந்தித்து வாழ்த்து பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அரசர்களை உளமுவந்து வாழ்த்தினார்கள், மடியில் வைத்து கொஞ்சினார்கள் என்று சொல்லப்பட்டது" என்றான். ஆம், அவர் இவர்களை வாழ்த்துவார் என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்த முறைமை வாழ்த்து அல்ல, அதற்கு மேல் ஒன்று நிகழ்ந்திருக்கிறது.

"அதன் பின்னரா இவ்வாறு?" என்று அவன் கேட்டான். பாகன் "அங்கிருந்து திரும்பி வருகையில் அவர்கள் துயின்றுகொண்டிருந்தார்கள். அனைவருமே துயின்றுகொண்டிருந்தார்கள். துயின்றெழுகையில் முற்றிலும்

புதியவர்களாக பிறந்தெழுந்தார்கள்" என்றான். "அரசர் தனக்கு இனிய உணவு கொண்டுவரும்படி சொன்னார். இங்கு நோன்பு இருப்பதால் இனிய உணவு உண்ணலாகாதென்று அவருக்கு அறிவிக்கப்பட்டது. இனிப்பை உண்ண விரும்புவதாக அவர் மீண்டும் கூறினார். என்ன செய்யலாமென்று இங்கு அடுமனையாளர்கள் சொல் சூழ்ந்தனர். இனிப்பு உண்ணலாகாது, ஆனால் மூலிகைகளை உண்ணலாம். கடுகளவு அதிமதுரம் அவருக்கு அளிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது."

"மருத்துவர் சாவகர் அதிமதுரச்சாற்றை அவருக்கு கொண்டுசென்று கொடுத்தார். அதை நகமளவுக்கு எடுத்து அவர் நாவில் தடவினர். அவரது நா இனிக்கத் தொடங்கியது. முதற்துளியின் குமட்டும் கசப்புக்குப் பின் அதிமதுரம் குடலில் இறங்கி உடல் முழுக்க இனிப்பை நிரப்பும். என்ன இது என் வாயில் இனிப்பு ஊறிக்கொண்டே இருக்கிறது என்று அவர் சொன்னார். நான் உடனிருந்தேன். விழுங்கும் தோறும் இனிப்பு ஊறுகிறது, என் குருதி இனிப்பாக மாறிவிட்டதா என்ன என்றார். அதிமதுரம் அவ்வாறுதான் அரசே என்று சகதேவன் சொன்னார்."

"அரசர் எஞ்சிய அதிமதுரத்தை சகதேவனின் நாவில் தடவினார். நகுலன் தனக்கு அது வேண்டாமென்று கைகாட்டி பின் நகர்ந்தபோது சகதேவன் அந்தச் சிமிழை எடுத்துக்கொண்டு நகுலனை துரத்திப்பிடித்து சுவரோடு ஒட்டிப் பற்றி நிறுத்தி அவர் நாவிலும் தடவினார். மூவரும் சிரித்தனர்" என்றான் பாகன். "தாங்கள் அறிவீர்கள், அதிமதுரத்தின் இனிப்பு அவ்வளவு எளிதாக நாவை விட்டு அகல்வதில்லை." யுயுத்ஸு "ஆம், ஏழு நாழிகைப்பொழுது நீடிக்கும் என்பார்கள்" என்றான். "கசப்பு உண்டாலும் அதைக் கடந்து அது இனிக்கும். அதை கழுவி

அகற்ற இயலாது. வாயில் அவ்வினிப்பு நிலைகொண்டுவிட்டால் பின்னர் சித்தம் இனிக்கத் தொடங்கிவிடும். வாயிலிருந்து அகன்ற பின்னரும் சித்தத்தில் இனிப்பு எஞ்சியிருக்கும்" என்றான் பாகன்.

"அதன்பின் இங்கு அனைவருமே அதிமதுரம் உண்டனர்" என்று பாகன் தொடர்ந்து கூறினான். "இங்கு அதிமதுரம் சுழன்றுவந்தது. அனைவரையும் தொட்டுத்தொட்டு வாழ்த்தும் தெய்வம்போல. இளைய அந்தணரும் அதிமதுரம் உண்டனர். அவர்கள் அதிமதுரம் உண்ட செய்தியைக் கூறியபோது படகோட்டிகளும் உண்டனர். ஒருவருக்கொருவர் அதிமதுரத்தை நாவில் தடவிக்கொண்டார்கள். சற்று நேரத்தில் இந்தக் காட்டில் ஏவலர் அனைவருமே வாயூற விழுங்கிக்கொண்டும் துப்பிக்கொண்டும் இருந்தனர். சிலர் இனிப்பு தாளாமல் குமட்டினர். குடங்குடமாக நீரை அருந்தினர். கசக்கும் காடியை அருந்திய பின்னரும் இனிக்கிறதென்று ஒருவர் கூறினார்."

"நோன்பு கொள்ளும் முதிய அந்தணர்களுக்கும் அதிமதுரம் விலக்கல்ல என்பதனால் அவர்களும் அதை உண்டனர். பிறர் கொள்ளும் தவிப்பும் துள்ளலும் கூச்சலும் கொப்பளிப்பும் எவரையும் அதை தவிர்க்க விடவில்லை. நேற்று அந்தி முழுக்க அதிமதுரமே இங்கு கொண்டாட்டமாக இருந்தது. இரவிலும் நெடும்பொழுது இருளுக்குள் நகைப்பொலிகளும் கூச்சல்களும் கேட்டுக்கொண்டிருந்தன. இன்று காலையில் எழுந்தபோது அதிமதுரம் நாவிலிருந்து மறைந்துவிட்டிருந்தது. ஆனால் அந்த உவகை மட்டும் முகங்களில் எஞ்சியிருக்கிறது" என்றான் பாகன்.

யுயுத்ஸு பெருமூச்சுவிட்டு "இதை நான் எவ்வாறோ எதிர்பார்த்திருந்தேன்" என்றான். பின்னர் "விதுரர்

வந்துவிட்டாரா?" என்றான். "இன்று சற்று பொழுது கழித்தே அவர் வருகிறார். அவரது படகு விசை கொண்டதல்ல. எதிர்க்காற்றில் இறங்க வேண்டியிருக்கிறது இங்கு" என்று பாகன் சொன்னான். பின்னர் "அங்கிருந்து மூன்றுமுறை கனகரைப்பற்றிய உசாவல் வந்தது. அவர் எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை என்றோம். இங்கிருந்து திருவிடத்து மாலுமி ஒருவருடன் அவர் படகில் சென்றதாக சொல்கிறார்கள். அவரை துரத்திச் செல்லவேண்டாம் என்று அரசரின் ஆணை" என்றான்.

யுயுத்ஸு தொலைவில் யுதிஷ்டிரனின் குடிலை கண்டான். குடிலுக்கு முன் இரு இளம்புரவிகள் நின்றிருந்தன. நகுலன் அவற்றுக்கு சேணமிட்டு பழக்கிக்கொண்டிருந்தான். அவை சேணத்தை உதறி அவ்விசையில் ஓடி சுழன்று நின்றன. சேணத்தை உதறும் பொருட்டு துள்ளி தங்களைத் தாங்களே சுழற்றிக்கொண்டன. ஒன்று ஓடிச்சென்று நிலத்தில் படுத்து முதுகை தரையில் பரப்பி கால்களை உதைத்தபடி புரண்டு எழுந்து தும்மியது. நகுலன் உரக்க நகைக்க அப்பால் இடையில் கைவைத்து நின்றிருந்த யுதிஷ்டிரனும் நகைத்துக்கொண்டிருந்தார்.

புரவி நகுலனை அணுகி அவனை முட்டி பின்னால் தள்ளியது. தடுமாறி பின்னால் விழச்சென்று நிலைகொண்டு அவன் அதை கடிவாளத்தைப் பற்றி கழுத்தைத் தடவி ஆறுதல்படுத்தினான். பின்னர் சேணத்தை அவிழ்த்து அப்பாலிட்டான். ஐயத்துடன் சேணத்தைப் பார்த்த பின் அருகே சென்று முகர்ந்து பார்த்து அது கனைத்தது. அருகே நின்று இன்னொரு புரவியும் கனைத்தது. இரு புரவிகளும் சேணத்திலிருந்து விலகி ஓட

விழைபவைபோல வால் சுழற்றி கால்களை அறைந்து பாய்ந்து காட்டை நோக்கி ஓடின.

யுயுத்ஸுவின் தேர் சென்று நின்றதும் அவன் இறங்கி அவர்களை நோக்கி நடக்க நகுலன் "வருக, அஸ்தினபுரியில் என்ன நிகழ்கிறது?" என்றான். தலைவணங்கி "அங்கு அனைத்தும் முறையாகவே சென்றுகொண்டிருக்கிறது" என்ற பின் யுதிஷ்டிரனின் அருகணைந்து அவன் தலைவணங்கினான். யுதிஷ்டிரன் "அஸ்தினபுரியின் அரசுப் பொறுப்பை சுரேசர் சிறப்புற நிகழ்த்துகிறார் என்றே நினைக்கிறேன்" என்றார். "ஆம், தருணங்களுக்கேற்ப உயர்பவர் அவர். ஆட்சியில் மகிழ்பவரும்கூட" என்று யுயுத்ஸு சொன்னான். "அத்துடன் சம்வகை என்னும் மச்சர்குலத்துப் பெண்ணும் உடனிருக்கிறாள். அரசிக்குரிய ஆற்றல் கொண்டவள்" என்றான்.

"என்றும் அவர் உனக்கு துணையாக இருக்கக்கூடும்" என்றபின் யுதிஷ்டிரன் திரும்பி புரவிகளை பார்த்தார். காட்டுக்குள் புதர்கள் உலைய அவை ஓடும் ஓசைகள் கேட்டன. புதர்களின் சலசலப்பு காற்றின் அசைவென தெரிந்தது. "அஞ்சிவிட்டன" என்று அவர் நகுலனைப் பார்த்து சொன்னார். "இனி இச்சேணத்தை நோக்கி அவை வாரா. இவ்வாறு ஒன்று நிகழுமென்று அவை எதிர்ப்பார்த்திருக்க வாய்ப்பில்லை." யுதிஷ்டிரனைப் பார்த்து யுயுத்ஸு "ஆம், புரவிகள் சேணத்தை விரும்புவதில்லை" என்றான்.

நகுலன் "அவ்வாறல்ல. அரிதினும் அரிதாக சில புரவிகளே அறுதி வரை சேணத்தை எதிர்க்கின்றன. இப்போது அவை சேணத்தை அறிந்துவிட்டன. தங்கள் உடலுக்கு அவை உகக்கவில்லை என்று உணர்கின்றன. மீண்டும் மீண்டும் அவற்றுக்கு சேணம் அணிவிக்கவேண்டும். சேணம்

இல்லாதபோது ஒரு குறையிருப்பதை அவை உணரவேண்டும். அதன் பின் சேணத்தை ஓர் அணியாக, தங்களுக்கு மதிப்பை உருவாக்கும் அடையாளமாக அவை எண்ணிக்கொள்ளும். சேணத்தால் பிற புரவிகளிலிருந்து தாங்கள் மேம்படுகிறோம் என்று அவை கருதும்போது படைப்புரவிகளாகிவிடுகின்றன" என்றான்.

சிரித்தபடி "புரவிகளும் மானுடரைப்போலத்தான். சேணத்தை ஆற்றல் எனக் கொண்டபின் சேணமில்லாத புரவிகளை பின்னர் அவை அணுகவிடா" என்றான் நகுலன். காட்டை கூர்ந்து நோக்கினான். புரவிகள் எல்லைக்கு வந்து மூக்கு விடைத்து அவர்களை நோக்கியபின் மீண்டும் காட்டுக்குள் துள்ளி வால்சுழற்றிப் பாய்ந்து மறைந்தன. "அந்தப் புரவிகள் திரும்பி இங்கே வரும். காட்டுக்குள் துள்ளி ஓடி ஓய்ந்த பின்னர் அவற்றுக்கு இச்சேணத்தின் நினைவு வரும். இது என்ன என்பதை அறிய விரும்பும். அந்த ஆவல்தான் தூண்டில் முள். அதிலிருந்து விலங்குகள் எளிதில் தப்ப இயலாது" என்றான்.

யுயுத்ஸுவின் தோளில் கைவைத்து யுதிஷ்டிரன் சொன்னார் "உன்னிடம் நான் கேட்க வேண்டுமென்று எண்ணினேன், இளையோனே. முதியவர் எங்ஙனம் இருக்கிறார்?" அவர் எவரை கேட்கிறார் என்று புரியாமல் யுயுத்ஸு வெறுமனே பார்த்தான். "நான் கணிகரை சொன்னேன்" என்றார் யுதிஷ்டிரன். யுயுத்ஸு அக்கணம் ஒரு திகைப்பை அடைந்தான். கணிகரை அவன் முற்றிலும் மறந்துவிட்டிருந்தான். அங்கிருந்த அனைவருமே அவரை முழுமையாக மறந்துவிட்டிருந்தார்கள். ஒருமுறை கூட ஏதேனும் பேச்சில் அவர் பெயர் எழுந்ததில்லை.

அவன் அவரை எண்ணிப்பார்த்தது எப்போது என்று பின்னால் திரும்பி நோக்கினான். நெடுங்காலத்துக்கு முன்பு.

குருக்ஷேத்ரத்தின் போர் தொடங்குவதற்கு சில நாட்களுக்கு முன்பு. அவன் அவரைப்பற்றி அதன்பின் எதையும் உசாவவில்லை. "மூத்தவரே, உண்மையில் அவரை மறந்தேவிட்டிருக்கிறேன்" என்றான். "ஆம், அவரை எப்படி மறந்தோம்? எவர் நினைவிலும் எழாமல் எப்படி அவர் அகன்றார்?" என்றான் நகுலன். "என்ன ஆனார் அவர்? மருத்துவநிலையில் இருந்தார் என்று அறிந்தேன்" என்று யுதிஷ்டிரன் சொன்னார்.

"அங்கிருந்து அவர் கிளம்பிச்சென்றதாக ஒற்றர்கள் சொன்னார்கள்" என்றான் யுயுத்ஸு. "அஸ்தினபுரியிலிருந்து அவர் சென்றதை எவருமே பார்க்கவில்லை. படைப்புறப்பாடு தொடங்கியபோதே அவர் நோயுற்று ஒடுங்கத் தொடங்கிவிட்டிருந்தார். அசைவிலாது தன் அறையிலேயே கிடந்தார். காற்று பட்டாலும்கூட வலி தாங்காது முனகினார் என்றார்கள். கதவை திறந்தால் அவ்வொளி அவர்மேல் படும்போது கைகளை நீட்டி கூச்சலிட்டு அழுதார். ஆகவே இருளிலேயே அவரை வைத்திருந்தார்கள். ஆதுரசாலைக்கு கொண்டுசென்று அங்கும் இருளிலேயே வைத்திருந்தார்கள். ஒருநாள் ஆதுரசாலையின் அறைக்கதவை திறந்தபோது அவர் அங்கில்லை."

"தன்னந்தனியாக அவர் கிளம்பிச் சென்றிருக்க முடியாது. எவரோ அவரை கொண்டுபோயிருக்கலாம் என்றார்கள்" என்று யுயுத்ஸு சொன்னான். "ஆனால் அதைப்பற்றி எவரும் அங்கு கவலை கொள்ளவில்லை. பேரரசியின் நோக்கில் கணிகர் வெறுமனே எண்ணுவதற்கும் தகுதி கொண்டவர் அல்ல. அரசியருக்கும் உகந்தவரல்ல. அரசி பானுமதியும் அவரை வெறுத்தார். அவரை விரும்பிய ஒருவர் சகுனி மட்டுமே.

அவரும் படைக்களம் சென்றுவிட்ட பின்னர் அஸ்தினபுரியில் அவருக்கு இடமிருக்கவில்லை. ஆகவே அவர் எங்கு சென்றார் என்று எவரும் எண்ணவில்லை."

"எவரோ அவரை கொண்டுசென்றிருக்கக்கூடும். அல்லது ஒருவேளை கொன்றுவிட்டிருக்கவும் வாய்ப்புண்டு. அதை மேலே சென்று உசாவி அறிய நானும் எண்ணவில்லை. உண்மையில் உசாவி அறியவேண்டும் என்று இப்போது தோன்றுகிறது. நானும் விட்டுவிட்டிருக்ககூடாது" என யுயுத்ஸு தொடர்ந்தான். "துளி நஞ்சு எங்கேனும் எஞ்சக்கூடும். நஞ்சும் பகையும் எஞ்சலாகாது." யுதிஷ்டிரன் "அவர் எஞ்சுவார். அவர் மறையும் ஒரு கணம் வரும். அதுவரை இருப்பார். அவ்வாறு அவர் அழிந்திருக்க வாய்ப்பே இல்லை" என்றார்.

"ஒற்றர்களை அனுப்புகிறேன்" என்று யுயுத்ஸு சொன்னான். "தேவையில்லை. அவர் மறைந்துவிட்டாரென்றால் அவ்வளவு எளிதாக அவரை கண்டுபிடிக்க முடியாது. ஆனால் அவர் தன் பணியை ஆற்றத்தொடங்கினால் எவராலும் அவரை மறைக்கமுடியாது" என்றார். யுயுத்ஸு "அவர் பேரரசர் திருதராஷ்டிரரை பார்க்க வரக்கூடுமோ?" என்றான். "வரமாட்டார். இனி அவர் அஸ்தினபுரிக்குள் நுழைய வாய்ப்பில்லை. அவர் செல்லக்கூடும் இடமென்ன என்று தெரியவில்லை" என்றான் நகுலன்.

"இவ்வெண்ணம் இப்போது உங்களுக்கு எப்படி வந்தது, மூத்தவரே?" என்றான் யுயுத்ஸு. "ஏன்?" என்று யுதிஷ்டிரன் அவனைப் பார்த்து திரும்பி கேட்டார். "ஏன் அவர் உங்களுக்கு இப்போது நினைவுக்கு வந்தார்? சென்ற நாட்களில் எப்போதும் நீங்கள் அவரை எண்ணிக்கொண்டதே இல்லையே?" யுதிஷ்டிரன் "ஆம், அதைத்தான் நானும் எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான்

அவரை நினைவுகூர்ந்தே நெடுநாட்களாகிறது. இப்போது அவர் இயல்பாக நினைவுக்கு வந்தார். இப்போதல்ல, இன்று காலை அவர் நினைவுக்கு வந்தார். கைமறதியாக எங்கோ வைத்த ஒரு பொருள் கிடைப்பதுபோல" என்றார்.

"ஏன் என்று நான் சொல்கிறேன்" என்று நகுலன் சொன்னான். "இன்று உவகையில் திளைக்கிறீர்கள். நாம் கொண்ட இழப்புணர்வையும் குற்றவுணர்வையும் கடந்துவிட்டிருக்கிறோம். விண்ணிலிருந்து பொழிந்த அமுதம்போல் தந்தையின் வாழ்த்து நம்மை மகிழ வைத்திருக்கிறது. இவ்வின்பத்தில் திளைக்க நம்மால் இயலவில்லை. இத்தனை பெரிய இன்பத்திற்கு தகுதியானவர்களா நாம் என்று எண்ணுகிறோம். இவ்வின்பத்தில் ஒரு பிழை இருப்பதாக உணர்கிறோம். அல்லது இன்பம் சலிக்கிறது."

"இன்பத்திற்கு அப்பாலிருக்கும் துன்பமே இன்பத்தை பொருள் கொண்டதாக ஆக்கமுடியும் என்று நாம் எண்ணுகிறோம். அதற்காக தேடிக்கொண்டிருக்கிறோம். பொங்கும் பாலில் நீர் பட்டதுபோல் கணிகரின் எண்ணம் நம் அனைவரையும் அடங்க வைத்துவிட்டது. இனி முள்முனைக்கூரை தடவித்தடவி தினவு கொள்வதுபோல இதை துழாவிக்கொண்டிருப்போம். இதிலிருந்து நம்மால் மீள முடியாது. மூத்தவரே, இன்பத்தை கடந்துவிட்டோம். மீண்டும் கசப்பு. மீண்டும் தேடல்" என்றான் நகுலன்.

யுதிஷ்டிரன் "அவ்வாறல்ல. என் உள்ளம் இனிமையாகத்தான் இருக்கிறது. நீ சொல்வதுபோல அது பொங்கி கட்டற்று மேலெழுந்தது. இதோ கணிகர் எனும் துளியால் சற்று அமைந்தது. மெய்யாக அது ஈடுசெய்யப்பட்டுவிட்டது. இனி

இன்பம் கொந்தளிப்பல்ல, நிலையழிவும் அல்ல. ஒரு நிகர்நிலை. அதுவும் நன்றுதான். வருக!" என்று யுயுத்ஸுவின் தோளைத்தட்டி குடிலுக்குள் அழைத்துச் சென்றார்.

யுயுத்ஸு அவருடன் நடக்கையில் "இன்று காலை அல்லது இன்று மாலை இளைய யாதவர் கணிகரைப்பற்றி ஏதேனும் சொன்னாரா?" என்றான். "இல்லையே" என்றபடி விழிசுருக்கி திரும்பி நோக்கினார் யுதிஷ்டிரன். "அவர் குறிப்புணர்த்தினாரா?" என்று மீண்டும் கேட்டான் யுயுத்ஸு. "நேற்று மாலை அவனை பார்த்தேன். நீர்க்கடன் இயற்றுவதைக் குறித்து மட்டும் பேசிக்கொண்டிருந்தோம். வேறொன்றும் நிகழவில்லை" என்று யுதிஷ்டிரன் சொன்னார். "எனில் நன்று" என்று யுயுத்ஸு கூறினான்.

நகுலன் "மூத்தவரே, நேற்று அவருடைய உரையிலிருந்துதான் வந்தது அது" என்றான். "அவன் கணிகர் பெயரை சொன்னானா?" என்று கேட்டபடி யுதிஷ்டிரன் திரும்பிப் பார்த்தார். "இல்லை. ஆனால் ஒரு சொல் உரைத்தார். வஞ்சமும் வலியும் ஒன்றுடன் ஒன்று கலந்தவை என்று. வஞ்சம் ஒரு வலியே என்றார்" என்றான் நகுலன். "ஆம்" என்று யுதிஷ்டிரன் சொன்னார். "அப்போது நாம் கணிகரை நினைவுகூரவில்லை. ஆனால் நம் ஆழத்தில் கணிகரைப் பற்றிய எண்ணம் தொடங்கிவிட்டது. அது இப்போதுதான் தெரிகிறது" என்றான் நகுலன்.

"அதற்கு அவன் என்ன செய்வான்? அவன் கூறியது அதுவல்ல" என்று யுதிஷ்டிரன் சொன்னார். "அல்ல. அவ்வாறு தற்செயலாக ஒரு சொல்லை உரைப்பவரல்ல இளைய யாதவர். அச்சொல்லுக்கு முன்னும் பின்னும் அவர் விட்ட இடைவெளியை நினைவுகூர்கிறேன். அச்சொல் நம்மில்

முளைக்க வேண்டும் என்றே அவர் சொல்லியிருக்கிறார். மூத்தவரே, ஐயமே இல்லை. கணிகரை நம்மில் எழுப்பியவர் அவர்தான்" என்றான் நகுலன். "என்ன சொல்கிறாய்?" என்று யுதிஷ்டிரன் திகைப்புடன் கேட்டார். "அதனால் அவன் இயற்றுவதுதான் என்ன?"

"இவ்வண்ணம் கூர்ந்து செல்வது நல்லதல்ல. கூர்மை கொண்ட எதுவும் பலி வாங்காது அமைவதில்லை. நம் குருதி, பிறர் குருதி" என்றான் நகுலன். யுதிஷ்டிரன் "மெய்" என பெருமூச்சுவிட்டார். யுயுத்ஸு "அவரிலிருந்துதான் அது தொடங்கியிருக்கும் என்று எனக்கு தோன்றியது" என்றான். "ஏன்?" என்றார் யுதிஷ்டிரன். "அதை என்னால் கூற இயலாது. ஆனால் கணிகரைக் காணும்போது ஒவ்வொருமுறையும் நான் இளைய யாதவரை எண்ணியிருக்கிறேன். இளைய யாதவரைக் காணும்போதெல்லாம் கணிகரையும் எண்ணியிருக்கிறேன்."

"ஏன்?" என்று யுதிஷ்டிரன் கேட்டார். "அறியேன். என் உள்ளுணர்வு என எழும் எதையும் எப்போதும் நான் ஆய்ந்தறிவதில்லை. ஆனால் அவ்வாறு தோன்றுகிறது" என்றான் யுயுத்ஸு. "வீண் அச்சம். அதிலிருந்து நம்மை நாம் குழப்பிக்கொள்கிறோம்" என்றார் யுதிஷ்டிரன். "இளையோனே, என் ஆணைகளை கூறுகிறேன். எழுதிக்கொள். நாளை காலை நீர்க்கடன் தொடங்க வேண்டும். இன்று மாலைக்குள் விதுரர் இங்கு வந்துவிடுவார். அவரிடம் ஆணைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். அவர் முன்னிலையில் அனைத்தும் நிகழட்டும்."

"ஆணை" என்றான் யுயுத்ஸு. பெருமூச்சுடன் "நாளை தொடங்குகிறது" என்றபின் "நான் இன்னும் அன்னையையும் அரசியையும் பார்க்கவில்லை. நேற்றுவரை அவர்களைப் பார்க்கும் உளஆற்றல் எனக்கு இல்லை என்று

எண்ணியிருந்தேன். ஆனால் இன்று அவர்களை பார்க்க என்னால் இயலுமென்று தோன்றுகிறது. அவர்களிடம் சொல்வதற்கு சொற்கள் ஏதுமில்லை. சொற்கள் தேவையில்லை என்ற உணர்வை இன்று அடைந்திருக்கிறேன். மாலை விதுரர் வந்த பிறகு பேரரசியையும் அன்னையையும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை இங்கு ஒருக்குக!" என்றார்.

யுயுத்ஸு தலைவணங்கினான். "முதற்புலரியில் நீர்க்கடன்கள் இங்கு தொடங்க வேண்டும். எத்தனை விரைவில் முடியுமோ அத்தனை விரைவில் இவற்றை முடிக்கவேண்டும். இங்கிருந்து கிளம்பியாக வேண்டும். நேற்று மாலையே இங்கிருந்து கிளம்பியாக வேண்டும் என்ற உணர்வை அடைந்துவிட்டேன். அவ்வுணர்வு வந்த பிறகு இங்கு ஒரு கணமும் தங்கியிருக்க முடியாதென்ற அளவுக்கு என் உள்ளம் விலகிவிட்டிருக்கிறது" என்றார் யுதிஷ்டிரன். "ஆணை" என்று யுயுத்ஸு சொன்னான்.

நீர்ச்சுடர் - 32

பகுதி ஐந்து : எஞ்சும் கனல் – 2

யுயுத்ஸு தனக்குரிய சிறுகுடிலுக்குள் சென்று ஆடை மாற்றிக்கொண்டிருந்தபோது ஏவலன் வந்து சிற்றமைச்சர் பாஷ்பரின் வருகையை அறிவித்தான். ஓய்வெடுப்பதற்காக மஞ்சத்தை நோக்கியபடிதான் அவன் உள்ளே நுழைந்திருந்தான். பெருமூச்சுடன் ஆடையை சீரமைத்துவிட்டு "அனுப்புக!" என்று யுயுத்ஸு சொன்னான். பாஷ்பர் உள்ளே வந்து தலைவணங்க யுயுத்ஸு வணங்கி அவரை அமரும்படி சொன்னான். தரையில் விரிக்கப்பட்ட பாயில் அவன் அமர்ந்ததும் பாஷ்பர் எதிரில் அமர்ந்தார். இளையவரான பாஷ்பர் சற்று நிலைகொள்ளாதவர் போலிருந்தார். அஸ்தினபுரியிலும் இந்திரப்பிரஸ்தத்திலும் மூத்த அமைச்சர்கள் ஒட்டுமொத்தமாகவே கானேகிவிட்டிருக்க இளைய அமைச்சர்களால் சிறு இடர்களைக்கூட நிலையழியாமல் எதிர்கொள்ள இயலவில்லை என்பதை அவன் உணர்ந்திருந்தான்.

முகத்தை இயல்பான புன்னகையுடன் வைத்துக்கொண்டு "கூறுக!" என்று யுயுத்ஸு சொன்னான். பாஷ்பர் மேலும் சில கணங்கள் சொற்களுக்கு தயங்கிவிட்டு "தாங்கள் பாஞ்சாலத்து அரசியை ஒருமுறை சென்று சந்திக்கவேண்டும், இளவரசே" என்று சொன்னார். "நானா?" என்று யுயுத்ஸு கேட்டான். இயல்பாக இருக்கவேண்டும் என்னும் எச்சரிக்கையை மீறி சற்றே முன்சாய்ந்து விழிகூர்ந்து "அவர் என்னை பார்க்க வேண்டும் என்று சொன்னாரா?" என்றான். "இல்லை. அவரை

இன்று மாலை அரசர் சந்திப்பதாக இருக்கிறார் என்று எனக்கு தகவல் சொல்லப்பட்டது. அதற்கு முன்னர் தாங்கள் அரசியை சந்திக்க முடியுமென்றால் நன்று" என்று பாஷ்பர் சொன்னார்.

"என்ன செய்தி?" என்று யுயுத்ஸு மேலும் விழிகளைச் சுருக்கி கேட்டான். "இங்கு வந்ததிலிருந்து அவர் தன்னிலையில் இல்லை என அறிந்திருப்பீர்கள். இருளுக்குள் அடைந்து கிடந்தார். உளம் குழம்பிப் போயிருப்பதாகவும், உதிரிச் சொற்களால் மட்டுமே பேசுவதாகவும், அவ்வப்போது எழுந்தமர்ந்து முனகுவதும் விம்மி அழுவதும் கூச்சலிடுவதும் உண்டென்றும் சொன்னார்கள். அவர் இருக்கும் நிலையை புரிந்துகொள்ள முடிந்தது. பல நாட்கள் அவர் இருட்டிலிருந்து வெளிவரவில்லை என்று இங்கே அனைவரும் அறிவார்கள். ஆனால் நேற்றிலிருந்து அவர் காட்டுக்குச் செல்லத் தொடங்கிவிட்டார். இப்போது பெரும்பகுதி காட்டில்தான் இருக்கிறார். அரசர் வருகையில் அவர் குடிலில் இருக்கவேண்டுமல்லவா?" என்றார் பாஷ்பர்.

யுயுத்ஸுவின் உள்ளம் மேலும் முன்னால் சென்று அவர் சொல்வதற்காகக் காத்திருந்தது. பாஷ்பர் "அதை கூறுவதற்காக சென்றேன். ஏவற்பெண்டு என்னை காட்டுக்குள் அழைத்துச் சென்று அங்கே ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்த பாஞ்சாலத்து அரசியிடம் நிறுத்தினாள். பாஞ்சாலத்து அரசி பிச்சியைப் போலிருந்தார். கலைந்த ஆடை. புழுதிபடிந்த குழல். கண்கள் அலைபாய்ந்துகொண்டிருந்தன. ஏவற்பெண்டு அப்பால் நின்றுவிட்டாள். நான் அரசியை அணுகினேன். எனக்கு மேலும் அணுக அச்சம். ஒரு கணம் அரசி அங்கிலாததுபோல் ஒரு உளமயக்கும் உருவாகியது. அருகே அணைந்து அரசியை வணங்கி அவர் முறைப்படி இன்று குடிலில் இருக்கவேண்டும்,

அரசர் வந்து அவரை சந்திப்பதாக இருக்கிறார் என்ற செய்தியை சொன்னேன்" என்று தொடர்ந்தார்.

"நெடுநேரம் அவர் என்னையோ என் சொற்களையோ உள்வாங்கியதுபோல் தெரியவில்லை. பிறகு திடீரென்று எழுந்து என்னை நோக்கி வந்து அரசரிடம் பேசுவதற்கொன்றுமில்லை என்றார். அரசி, நாளை இங்கு நீர்க்கடன் நிகழவிருக்கிறது. தாங்கள் அதில் நீர்தொட்டுக் கொடுக்கும் ஒரு சடங்கை செய்யவேண்டியிருக்கிறது. அதை முன்னரே அறிவிக்கும்பொருட்டுதான் அரசர் வருகிறார் என்றேன். இங்கு எந்தச் சடங்கும் இப்போது நடக்கப்போவதில்லை, போர் இன்னும் முடியவில்லை என்றார் அரசி. பிச்சியைப்போல் என்னை வெறித்தபடி சென்று சொல் உன் அரசரிடம் போர் இன்னும் முடியவில்லை என்றார்."

யுயுத்ஸு உளம் திடுக்கிட்டான். "என்ன சொன்னார்? சரியாக அவர்கள் சொன்ன சொற்களை கூறுக!" என்றான். பாஷ்பர் "போர் இன்னும் முடியவில்லை என்றார். அதற்கு மேல் நான் எதுவும் கேட்கவில்லை. சென்று சொல் உன் அரசரிடம், போர் இன்னும் முடியவில்லை என்று மட்டுமே சொன்னார். நான் தலைவணங்கி பின்னகர்ந்துவிட்டேன். அதற்குமேல் கேட்க எனக்கு இடமில்லை என பட்டது. அரசரிடம் அதை சொல்ல வேண்டும். அது என் கடமை. ஆனால் எவ்வண்ணம் இதை அங்கு விளக்குவது என்று எனக்கு தெரியவில்லை" என்றார்.

"நான் சற்றுமுன் அரசரை பார்க்கச் சென்றேன். அவர் அங்கு அமைச்சர்கள் சுஃப்ரருடனும் தௌம்யரின் மாணவர்கள் நால்வருடனும் அமர்ந்து நூலாய்ந்து கொண்டிருந்தார். அவருடைய முகத்திலிருந்த உவகையை பார்த்தபோது என்னால் இதை அவரிடம் சொல்ல முடியாதென்று

தோன்றியது. ஆகவே தலைவணங்கி பேரமைச்சர் விதுரர் இன்று மாலை வந்து சேர்வார் என்று செய்தி வந்துள்ளதென்று மட்டும் தெரிவித்துவிட்டு வந்துவிட்டேன். அது முன்னரே வந்துவிட்ட செய்தி அறிவிலி என்று சொல்லி அரசர் நகைத்தார். நான் என்னை அறிவிலியாகவே காட்டிக்கொண்டு வெளியேறினேன். இளவரசே, இன்றைய நிலையில் முக்தவனத்தில் இருப்பவர்களில் தாங்கள் மட்டுமே அரசரிடம் இச்செய்தியை சொல்ல முடியும் என்று தோன்றியது. ஆகவேதான் இங்கு வந்தேன்" என்றார் பாஷ்பர்.

"இதை நான் எப்படி சொல்வது?" என்று யுயுத்ஸு சொன்னான். "இது அவர்களுக்குள் நிகழ்ந்தாகவேண்டிய ஓர் உரையாடல். இதில் உள்ளது நாம் முற்றறிய முடியாத ஒரு செய்தி." பாஷ்பர் "ஆம், ஆனால் அரசர் இன்றிருக்கும் நிலையைக் கலைக்கும் உரிமை நமக்கு உண்டா? அதைவிட அவர் தன்னை கலைத்துக்கொள்ள விரும்புவாரா? இளவரசே, அவரது உலகே கலைக்கப்படுவது அது. ஒருவேளை அவர் எதிர்திசைக்குச் சென்று உச்ச சினத்தை அடையவும் கூடும். அச்சினம் நம்மேல் திரும்பலாம்" என்றார். "இங்கு நாளை தொடங்கவிருக்கும் நீர்க்கடனுக்காக அனைத்துப் பணிகளும் முடிவுற்றுவிட்டன. அந்தணர்கள் நாளை புலரியிலேயே வேள்வி அனல் எழுப்ப எண்ணியிருக்கிறார்கள். இந்நிலையில் இச்செய்தி..."

யுயுத்ஸு "இடர்தான்" என்றான். "இதற்கு என்ன செல்வழி என்று தாங்கள் எண்ணலாம். தேவையென்றால் தௌம்யரை அனுப்பி பாஞ்சாலத்து அரசியிடம் பேச வைக்கலாம்" என்றார் பாஷ்பர். "அவர் பேசுவது உகந்ததல்ல" என்றான் யுயுத்ஸு. "எனில் இன்று மாலை விதுரர் வருகிறார். அவரிடம் பேசச் சொல்லலாம். இறுதி முடிவெடுக்க வேண்டியவர் தாங்களே"

என்றார் பாஷ்பர். யுயுத்ஸு சில கணங்கள் எண்ணிவிட்டு "இல்லை, இன்று விதுரர் இச்சூழலிலேயே உளம் நிலைகொண்டவர் அல்ல. அவர் எங்கிருந்தோ வருகிறார். உண்மையில் அவர் ஏன் இங்கு வருகிறார் என்பது எனக்கு இன்னும் புரியவில்லை. எதன்பொருட்டென்றாலும் அவரது வருகை நன்றென்று தோன்றுகிறது, அவ்வளவுதான். ஆனால் அவரால் இங்குள்ள எதிலும் உளம் செலுத்த இயலாது" என்றான்.

"தௌம்யர் நாளை வேள்விக்குரிய அனைத்தையும் செய்துவிட்டார். ஆகவே வேள்வி தொடங்க வேண்டுமென்ற பதற்றத்தில் இருப்பார். அவராலும் இச்சூழலை கையாள இயலாது" என்றபின் யுயுத்ஸு "போர் முடியவில்லை என்றா சொன்னார்? இன்னும் எஞ்சியிருக்கும் எதிரி யாரென்று சொன்னார்?" என்றான். குரல் தணிய "கணிகரைப் பற்றியா?" என்றான். "தெரியவில்லை. என்னால் அதை எவ்வண்ணமும் எண்ணித் தெளிய முடியவில்லை. மீண்டும் போர் என்னும் சொல் அளிக்கும் பதைப்பு என்னுள் சொல்லமைய வைக்கிறது. ஆனால் இனி ஒரு போர் எனில் எவருடன்? எவர் ஆற்றுவது அப்போரை?" என்றார் பாஷ்பர்.

யுயுத்ஸு மீண்டும் தன்னுள் ஆழ்ந்தபின் "கிருபரையும் கிருதவர்மனையும் அஸ்வத்தாமனையும் பற்றி குறிப்பிட்டிருப்பார் என எண்ணுகிறேன்" என்றான். தன்னுள் சொல்லோட்டிய பின் "ஆம், பெரும்பாலும் அவர்களைத்தான் குறிப்பிட்டிருப்பார் என்று தோன்றுகிறது. அவ்வகையில் போர் முடியவில்லை என்பது உண்மைதான். ஆனால் அதற்கும் நீர்க்கடனுக்கும் என்ன தொடர்பு? அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்திற்கு சென்றுவிட்டிருக்கிறார்கள்.

கிருதவர்மன் தன் யாதவக் குடிகளுடன் சென்று சேர்ந்துவிட்டதாக ஒற்றுச்செய்தி வந்துள்ளது. கிருபர் தன் தந்தையின் தவக்குடிலுக்கே சென்றுவிட்டிருக்கிறார். அஸ்வத்தாமன் காடுகளுக்குள் புகுந்து மறைந்தார். பிருகு குலத்தின் தவச்சாலைகளுக்கு அவர் சென்றிருக்கக் கூடுமென்று ஒற்றர்கள் சொல்கிறார்கள்" என்றான்.

"அவர் சிவச்செல்வர். பாரதவர்ஷத்தின் அனல்குலத்து அரசர்கள் சிலர் அவரை ஆதரிக்கவும் கூடும். ஆனால் அவர் இருக்கும் உளநிலையில் மீண்டும் அரசுகொள்ளவோ படை திரட்டவோ வாய்ப்பில்லை" என்றான் யுயுத்ஸு. "அவர்கள் மூவரையும் தேடித்தேடிச் சென்று முற்றழிக்கலாம். அதற்கான தேவை இன்றில்லை எனினும்கூட அரசர்கள் அதை செய்வதுண்டு. வஞ்சத்தையும் அனலையும் நஞ்சையும் சற்றும் எஞ்சவிடலாகாது என்ற நெறியை பேணுவதற்காக. ஆனால் அதற்கு நம்மிடம் அரசு வேண்டும், படைகள் வேண்டும். தன்னந்தனியாக நாம் சென்று அவரிடம் போரிட முடியாது. அவர் இருக்குமிடத்தை கண்டுபிடிப்பதற்கே பெரிய ஒற்றர் வலை வேண்டும். எப்படியும் இந்நீர்க்கடன் முடியாமல் அஸ்தினபுரியையோ இந்திரப்பிரஸ்தத்தையோ சென்றடைய அரசரால் இயலாது."

"இதை தாங்களே பாஞ்சாலத்து அரசியிடம் சொல்லலாமே?" என்றார் பாஷ்பர். "ஆம், அதுவே உகந்ததென்று எண்ணுகிறேன். பாஞ்சாலத்து அரசி இன்றிருக்கும் நிலையில் அனைத்துக் கோணங்களிலும் அதை எண்ணியிருக்கமாட்டார். இங்கு என்ன சூழ்நிலை திகழ்கிறதென்று பாஞ்சாலத்து அரசியிடம் நானே விளக்குகிறேன். அதன் பின்னர் அரசரைச் சென்று பார்த்து அவரை அழைத்து வந்து பாஞ்சாலத்து அரசியிடம் பேசச்

சொல்கிறேன். அரசுகொண்ட பின் பகை முற்றழிக்கப்படும். அரசரிடமிருந்து அதற்கான ஓர் உறுதிப்பாட்டை பெற்றுக்கொண்டால் அரசி தெளிந்துவிடுவார்" என்றபின் யுயுத்ஸு எழுந்துகொண்டு "நன்று அமைச்சரே, தாங்கள் இச்செய்தியை எவரிடமும் இப்போது பகிர்ந்துகொள்ள வேண்டியதில்லை" என்று சொன்னான். "ஆம்" என்று வணங்கி பாஷ்பர் வெளியேறினார்.

யுயுத்ஸு தன் குடிலிலிருந்து வெளியே வந்து திரௌபதியின் குடில் நோக்கி நடக்கத்தொடங்கினான். பகல் முழுக்க பெய்திருந்த வெயிலால் நிலம் செம்மண் வெந்து மேற்பரப்பு உலர்ந்து பொருக்காடியிருந்தாலும் கால்குறடுகள் அழுந்தியபோது உள்ளிருந்த ஈரமண் புதைந்து மென்தசையென காலுக்கு தன்னை காட்டியது. அது நடப்பதை கடுமையாக்கியது. அவன் நின்று திரும்பி தன்னுடைய காலடிகளை பார்த்தான். போரின் குருதிப்புண் வடுக்களைப்போல் தன் காலடிகள் மண்ணில் பதிந்திருப்பதை வெறித்து நோக்கி சில கணங்கள் நின்றான். பின்னர் எந்த எண்ணமும் எழாமலேயே திரும்பி யுதிஷ்டிரனின் குடில் நோக்கி சென்றான்.

செல்லச் செல்ல தான் செய்யவேண்டியதென்ன என்பதை வகுத்துக்கொண்டான். யுதிஷ்டிரனிடம் நேரடியாக திரௌபதியை அழைத்துச்செல்வதன்றி வேறு வழியில்லை. ஐவரில் திரௌபதியிடம் எப்போதும் பேச வேண்டியவர் அவர்தான். முடிவெடுக்க வேண்டியவரும் அவர் மட்டுமே. அதற்கு நடுவே பிறர் நின்று சொல்லாடுவதில் பொருளில்லை. சென்று சொல் உன் அரசரிடம் என்று திரௌபதி சொன்ன பின்னர் இன்னொரு குரலுக்கு இடமில்லை. இத்தெளிவை

வேறெங்கோ தான் அடைந்த பின்னரே தன் கால் நின்றது என்பதையும் திரும்பிய பின்னரே அதை சித்தத்திற்குச் சொல்லி வகுத்துக்கொள்கிறேன் என்பதையும் அவன் உணர்ந்தான்.

யுதிஷ்டிரனின் குடிலில் அவர் குரல் நகைப்போசையுடன் உரக்க கேட்டது. ஊடே புகுந்த அந்தண இளைஞர்கள் சிலர் செம்மொழியில் ஏதோ சொன்னார்கள். வெளியே நின்றிருந்த ஏவலன் தலைவணங்க "அரசரிடம் ஒரு சொல்" என்றான் யுயுத்ஸு. அவன் உள்ளே சென்று வெளிவந்து "வரச்சொல்கிறார்" என்றான். யுயுத்ஸு குறடுகளை அகற்றிவிட்டு மேலாடையை சீர்செய்து உடலை வளைத்து உள்ளே சென்றான். தலைவணங்கி ஓரமாக நின்ற அவனைப் பார்த்து யுதிஷ்டிரன் "வா, நீ வந்த பொழுது நன்று. உன்னிடம் ஒரு கேள்வி. இங்கு சற்று நேரமாகவே அதைத்தான் உசாவிக்கொண்டிருக்கிறோம்" என்றார். "ஒருவர் தனக்கு மைந்தரில்லை என்பதற்காக பிற குலத்திலிருந்து ஒரு மைந்தனை ஏற்றுக்கொள்கிறார் அல்லது பிற குலத்தில் அவருக்கு ஒரு மைந்தர் இருக்கிறார் என்று கொள்க! அதன் பின்னர் அவர் தன் குலத்திலேயே மணந்து மைந்தன் ஒருவனை பெறுகிறார். இந்நிலையில் அவருடைய உரிமைகளுக்கும், பட்டங்களுக்கும், உடைமைகளுக்கும், குலக்கடமைகளுக்கும் எவர் வழித்தோன்றலாக முடியும்? நெறிநூல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றை சொல்கின்றன" என்றார்.

யுயுத்ஸு "நானறிந்த நூல்களின்படியே சொல்லமுடியும்" என்றான். "குலஉரிமைகளுக்கும் கடமைகளுக்கும் குலத்தில் பிறந்தவரே தோன்றலாக இயலும். ஆனால் எந்நிலையிலும் குருதியால் மூத்தவரே உடைமைக்கும் பட்டங்களுக்கும்

உரிமையாளர்.” யுதிஷ்டிரன் “அதற்கு நூல்களில் திட்டவட்டமான நெறிகள் இல்லை. குடிகள் தோறும் நெறிகள் மாறுகின்றன. அனைத்துக் குடிகளுக்கும் அளிக்கவேண்டிய ஒற்றை வரியாலான நூல்நெறி என்ன என்பதைத்தான் இத்தனை நேரம் தேடிக்கொண்டிருக்கிறோம்” என்றார். “அனைத்து நூல்களிலும் உள்ள ஒற்றை வரி ஒன்று உண்டு” என்றான் யுயுத்ஸு. “மானுட நெறிகளைவிட தெய்வநெறிகள் மேலானவை. எவர் மூத்தவர் என்பதை முடிவு செய்வது தெய்வநெறி. அதை மீறும் நெறிகள் எதுவும் மானுடரிடம் இருக்கலாகாது. அரசுரிமையும் குடியுரிமையும் உடைமைகளும் அவ்வாறே கைமாற்றப்படுகின்றன. உடைமை என ஒன்றிருக்கும்வரை, முறைமை என ஒன்றிருக்கும்வரை அவ்வாறே ஆகும்.”

யுதிஷ்டிரன் “நன்று, இது உரிய கோணம். இச்சொற்களுக்கு இவ்வாறு பொருள்கொள்ள முடியும் என்று நான் எண்ணியதில்லை. நன்று” என்றபின் “எனில் பிறிதொன்றையும் இங்கே பேசிக்கொண்டோம். நீத்தவர் தனக்கு முறையான குருதிவழி என்று தன் குடிப்பிறந்த இளையோரையே சுட்டிச் சொல்லிவிட்டு சென்றாரென்றால்கூட அதற்கும் அவ்வரியே மேற்கோளாகும். ஏனென்றால் அவரும் மானுடரே. மூத்த மைந்தர் என்பவர் தெய்வத்தால் வகுக்கப்பட்டவர். தெய்வத்தை மீற மானுடருக்கு உரிமையில்லை” என்றார். “நம் மைந்தர்கள் நமக்கு அளிக்கப்படுகிறார்கள், நம்மால் தெரிவுசெய்யப்படுவதில்லை” என்று யுயுத்ஸு சொன்னான். “நாம் ஒருவனை நம் மைந்தன் என ஏற்கும் தருணமும் மைந்தன் பிறக்கும் தருணமும் ஒன்றே, இரண்டுமே நம்மால் முடிவெடுக்கப்படுவன அல்ல.”

அமைச்சர் சுஃப்ரர் “எந்நிலையில் எவ்வண்ணம் அவர் தன் மைந்தரை தெரிவுசெய்து மைந்தரென்றாக்கினார் என்பது நோக்கப்பட வேண்டும். அது குலநெறிப்படியோ வேத முறைமைப்படியோ அமைந்திருக்குமெனில் அதை மீறும் உரிமை அவருக்கில்லை” என்றார். “எந்நிலையில் அதை அவர் மீற முடியும்?” என்று அந்தண இளைஞன் கேட்டான். “ஏனென்றால் எந்நிலையில் அவன் மீற முடியும் என்றும் நாம் கூறவேண்டும். எந்நிலையிலும் மீற முடியாதென்று ஒரு நெறி இருக்கலாகாது. ஏனெனில் மானுடனின் இயல்புகள் என்பவை எல்லையிலாதவை” என்று இன்னொரு அந்தணர் சொன்னார்.

யுயுத்ஸு “ஐந்து பிறழ்வுநிலைகளை நெறிகள் வகுக்கின்றன. ஒருவர் உளநிலை பிறழ்ந்தவராக இருந்தால், வேதத்தைப் பழித்து புறம்செல்வாரெனில், தன் மைந்தருக்கு அல்லது தன் மூத்தாருக்கு உரிய கடமைகளை ஏழு ஆண்டுகள் தொடர்ந்து செய்யாதிருந்தால், அயல்நாட்டுக்குச் சென்று பன்னிரு ஆண்டுகள் திரும்பாமலிருந்தால், முனிவரால் அந்தணரால் முறைப்படி தீச்சொல்லிடப்பட்டு விலக்கப்பட்டால் என ஐந்து. குடிபழிக்கும் பெரும்பிழைகள் என்ன? அவற்றை ஐந்தாக வகுக்கின்றன நூல்கள். அரசனுக்குப் பிழை, அன்னையருக்குப் பிழை, குடிமூத்தாருக்குப் பிழை, சான்றோருக்குப்பிழை, பெண்பழி கொள்ளல்...” என்றான்.

அனைவரும் அமைதியாயினர். சிலகணங்களுக்குப் பின் பெருமூச்சுவிட்டு “பெண்பழி எனில்?” என்றார் யுதிஷ்டிரன். “நூல்களில் விந்தையாக இது வகுக்கப்பட்டுள்ளது. பெண்பழி எனில் என்ன என்பதை பெண்ணே முடிவு செய்யவேண்டும். அது எதுவாகவும் இருக்கலாம். அவையில் எழுந்து ஒரு பெண் தனக்கு பெருந்தீங்கிழைக்கப்பட்டுள்ளது என்று கூறுவாளெனில்

அது பெண்பழி என்றே கொள்ளப்படும். அது பொதுநோக்கில் எத்தனை சிறிதென்றாலும் அவள் அதை பெரும்பழி என உணர்ந்தால் பெரும்பழியேதான்." யுதிஷ்டிரன் தலையை அசைத்தார். "அவள் பொய் சொன்னால்? வேண்டுமென்றே வஞ்சம் கொண்டு அவள் அவையில் எழுந்து வீண் பழி சுமத்தினால்?" என்று அந்தண இளைஞன் கேட்டான்.

"மூதாதையர் நெறிப்படி அப்படி பொய்ப்பழி சுமத்தப்பட்டாலும் அது பெண்பழியே. அறுதியாக அது பெண்ணின் சொல்லிலேயே நின்றிருக்கிறது" என்றான் யுயுத்ஸு. "இந்த அளவில்லா உரிமையை எவர் பெண்களுக்கு அளித்தார்கள்? இவ்வாறு பார்த்தால் ஒரு பெண் எவர் மேலாயினும் பழி சுமத்தலாம். எவரையும் முற்றழிக்கலாம்" என்றான் அந்தண இளைஞன். "ஆம், நம் பழம்மரபில், குடிமரபில், அரசமரபில் அவ்வாறுதான் உள்ளது. ஆயிரத்திலொன்று அவ்வாறு நிகழவும் கூடும். ஆயினும் நாம் பெண்ணின் அகச்சான்றை நம்பவே தந்தையரால் ஆணையிடப்பட்டிருக்கிறோம். அவையெழுந்து ஒரு பெண் பொய்ப்பழி கூறமாட்டாள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் அனைத்து நெறிநூல்களும் இங்கு வகுக்கப்பட்டுள்ளன" என்று யுயுத்ஸு சொன்னான்.

யுதிஷ்டிரன் பெருமூச்சுவிட்டு "விந்தையானது இது. ஆனால் இதை நான் இங்கு மட்டுமல்ல எங்குமே பார்க்கிறேன், இளையோனே" என்றார். "நெறிநூல்கள் அறிவார்ந்தவை. விழிமுன் மெய்மை என புறவயமானவை. அனைத்து சொல்லொழுங்குகளையும் தொட்டுத் தொட்டு முன்னெழுகின்றன அவை. ஆனால் அவற்றின் உச்சத்தில் உணர்வு சார்ந்த ஓர் அகஎழுச்சியைச் சென்று தொட்டு அனைத்து சொல்நெறிகளையும் ஒழுங்குகளையும்

கைவிட்டுவிட்டு மேலெழுகின்றன" என்றார். "அத்தனை நெறிநூல்களுக்கும் ஆழத்தில் மானுட அகச்சான்றை நம்பும் ஓர் இயல்பே உள்ளது. மானுடன் எந்நிலையிலும் அறம் சார்ந்தே நின்றிருப்பான் என்னும் நம்பிக்கை அது. ஒரு குமுகத்தில் அனைவரும் அறத்தை கைவிடுவார்களெனில், அல்லது பெரும்பான்மையினர் அறத்தை கைவிடுவார்களெனில்கூட, அல்லது அவர்கள் குடியின் சான்றோர் மட்டும் அறத்தை கைவிடுவார்களெனினும்கூட நெறிநூல்களால் ஒன்றும் செய்ய இயலாது. முனிவரை, அந்தணரை, சான்றோரை நம்பியே அறம் நின்றிருக்க இயலும். வகுக்கப்பட்ட அனைத்தும் அவர்களின் மீதான நம்பிக்கையின் மீதே நிலைகொள்கின்றன."

"ஆம், மெய்தான்" என்று யுயுத்ஸு சொன்னான். அனைத்துச் சொற்களும் அடங்க அவை அமைதியாயிற்று. அது தருணம் என்று உணர்ந்த யுயுத்ஸு தாழ்ந்த குரலில் "தங்களிடம் ஒரு தனிச்சொல், அரசே" என்றான். யுதிஷ்டிரன் நிமிர்ந்து அந்தணரைப் பார்த்து தலைவணங்க அவர்கள் ஒவ்வொருவராக வெளியே சென்றனர். இறுதி அந்தணரும் வெளியே சென்ற பின்னர் யுயுத்ஸு மீண்டும் தலைவணங்கி "இது ஒரு சிறு செய்தி. தாங்கள் இன்றிருக்கும் உளநிலையை மாற்றக்கூடியதல்ல. எனினும்..." என்றான். "சொல்க!" என்று உரைக்கும்போதே யுதிஷ்டிரனின் உளநிலை மாறிவிட்டதை விழிகள் காட்டின. "தாங்கள் அரசியிடம் ஒரு சொல் சொல்லவேண்டும்" என்றான் யுயுத்ஸு. "ஏன்?" என்று யுதிஷ்டிரன் கேட்டார். "அவளை நான் சந்திப்பதை நான் முன்னரே வகுத்திருக்கிறேனே?"

“ஆம், அச்சந்திப்பு முறையாக நிகழ்வதற்கு முன் ஒரு சந்திப்பு இது. அப்போது அரசி ஒருவேளை காட்டில் இருக்கலாம். அரசி இருக்கும் உளநிலையை தாங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காக மட்டுமே தங்களைத் தேடி வந்தேன்” என்றான். “ஒரு சொல் கூறுக! அதுபோதும். அதாவது அரசியிடமிருந்து ஒப்புதல் பெற்ற பின்னர் நாளை காலை நீர்க்கடன்கள் தொடங்குவதைப்பற்றி எண்ணலாம்.” யுதிஷ்டிரன் மேலும் விழிகள் கூர்கொள்ள “அவள் என்ன சொல்கிறாள்? நீர்க்கடன்களுக்கு அவள் வரமாட்டேன் என்கிறாளா? நீர்க்கடன்களை ஒத்திப்போடுகிறாளா?” என்றார்.

யுயுத்ஸு “அவ்வாறல்ல...” என்று சொல்ல யுதிஷ்டிரன் கைநீட்டித் தடுத்து “நீர்க்கடன்கள் முதன்மையாக செய்யப்படுவது அவளுடைய மைந்தர்களுக்காக. ஐந்து மைந்தர்கள் மூச்சுவெளியில் நம் கைநீரையும் அன்னத்தையும் காத்து நின்றிருக்கிறார்கள். என்ன சொல்லிக்கொண்டிருக்கிறாள் அவள்? நீர்க்கடன்களை நிகழ்த்தலாகாதென்று சொல்வதற்கு அவளுக்கு என்ன உரிமையிருக்கிறது?” என்று பதறும் குரலில் கூவினார். “இச்சடங்குகள் எதிலும் பெண்களுக்கு எப்பங்கும் இல்லை என்பதே தொல்நெறி. உண்மையில் அவர்கள் நீர்முனைக்கு வரவேண்டியதே இல்லை. நீர்க்கடன் ஆற்றுபவர்கள் இல்லத்திலிருந்து கிளம்புகையில் ஒரு சொல் அவர்களிடமிருந்து பெறவேண்டும் என்று மட்டும்தான் மரபுகள் சொல்லுகின்றன.”

“அச்சொல்லை பெறும்பொருட்டு மட்டுமே இன்று அவரிடம் பேசப்போகிறோம், அரசே” என்றான் யுயுத்ஸு. “நாளை நீர்க்கடன்கள் முடிக்கும் வரையில் அவர் நீரும் அன்னமும் அருந்தாது நோன்பிருக்கவேண்டும். அதற்கப்பால் அவர்

மைந்தர்களுக்காக செய்ய ஏதும் இல்லை." யுதிஷ்டிரன் "ஆம், அதற்கென்ன தடை அவளுக்கு?" என்றார். "தாங்கள் அதை அவரிடமே பேசலாம்" என்றான் யுயுத்ஸு. சீற்றத்துடன் "பேசுகிறேன்!" என்றபடி யுதிஷ்டிரன் எழுந்துகொண்டார். திரும்பிப் பார்த்து "யாரங்கே?" என்றார். ஏவலன் வந்தவுடன் "என் மேலாடையை எடு" என்றார்.

யுயுத்ஸு கணம் கணமாக யுதிஷ்டிரன் சினம்கொண்டு மேலே போவதை அந்த அசைவுகள் வழியாக பார்த்தான். அதை அவன் எதிர்பார்த்திருந்தான். அந்த உவகைத் தருணம் கலையும்போது எழும் சீற்றம் மட்டுமல்ல அது. உவகைக்கு அடியில் ஓர் ஐயம் இருந்திருக்கும். எதையோ எண்ணி ஒரு பதற்றம் இருந்திருக்கும். அந்த உவகை எவ்வண்ணமோ கலையும் என்றே எண்ணியிருந்திருப்பார்கள். அதை கலைக்கும் பொருட்டு எழும் முதல் துளி என்பது அவர்கள் அஞ்சுவதும், வெறுப்பதும், அகல முயல்வதுமான அனைத்திற்கும் அடையாளமாக எழுவது. அதன் வடிவென வருபவர் எவரென்றாலும் அவர் மீது பெருஞ்சினம் கொள்வது இயல்பு.

யுதிஷ்டிரன் "தேர் ஒருங்குக! இளையோரை அழைத்து நான்..." என்று சொல்ல யுயுத்ஸு உள்ளே புகுந்து "இளையோரை அவர் இப்போது பார்க்கவேண்டியதில்லை. தாங்கள் மட்டுமே பார்ப்பது உகந்தது" என்றான். "அதை நீ சொல்கிறாயா? நான் எவரை எப்போது சந்திக்கவேண்டும் என்பதை நீயா சொல்கிறாய்?" என்று யுதிஷ்டிரன் கூவினார். யுயுத்ஸு "ஆம், இத்தருணத்தில் நானேதான் சொல்கிறேன். இவ்வுணர்வுகளுக்கு வெளியே நின்று இவற்றை ஆள்கிறேன். தாங்கள் மட்டும் அரசியை சந்தித்தால் போதுமானது" என்றான். யுதிஷ்டிரன் விழி தாழ்த்தி உடல் தளர்ந்து "ஆம், அவ்வாறே" என்றபின் மேலாடையை

ஏவலனிடம் வாங்கி தன் தோளிலிட்டபடி வெளியே கிளம்பினார்.

முற்றத்தில் தயங்கி நின்று தன் தலையைத் தொட்டு "எனது தலைப்பாகை" என்றார். யுயுத்ஸு "தலைப்பாகையின்றி தாங்கள் செல்லலாம்" என்றான். "இது அரசமுறை பயணம்... முறைமைச்சொல் கேட்கப் போகிறேன்" என்றார் யுதிஷ்டிரன். "அல்ல, தங்கள் துணைவியை பார்க்கச் செல்கிறீர்கள். மைந்தரை இழந்த ஓர் அன்னையை பார்க்கச் செல்கிறீர்கள்" என்று யுயுத்ஸு மீண்டும் சொன்னான். "இவை அனைத்தையும் நீ வகுக்கிறாயா?" என்றார் யுதிஷ்டிரன். "இவை நிகழ்கின்றன. நான் சற்றேனும் இவற்றை நடத்த முடியுமா என்று பார்க்கிறேன்" என்று யுயுத்ஸு சொன்னான். "நன்று! அவ்வாறே ஆகட்டும்" என்றபின் நீண்ட பெருமூச்சுடன் "தேர் ஒருங்குக!" என்றார் யுதிஷ்டிரன்.

நீர்ச்சுடர் - 33

பகுதி ஐந்து : எஞ்சும் கனல்- 3

திரௌபதியின் குடில் அருகே சென்றபோது யுதிஷ்டிரனின் தேர் தயங்கத்தொடங்கியது. அவர் தேரை ஓட்டவில்லை என்றாலும் தேரில் அவருடைய நடைதளர்வு தெரிந்தது. ஊர்பவரின் உள்ளத்தை தேர் பிரதிபலிப்பதை யுயுத்ஸு முன்னரும் கண்டிருந்தான். குடில் முற்றத்தில் தேர் நின்று சற்று நேரமாகியும் யுதிஷ்டிரன் அதிலிருந்து இறங்கவில்லை. தேருக்குப் பின்னால் வந்து புரவியை நிறுத்தி இறங்கி அதன் கழுத்தைத் தட்டியபடி யுயுத்ஸு காத்து

நின்றான். யுதிஷ்டிரன் திரை விலக்கி "இங்கு அரசி இருக்கிறாளா?" என்றார். "ஆம் அரசே, இங்குதான் இருக்கிறார்" என்றான் யுயுத்ஸு.

"அவள் எந்நிலையில் இருக்கிறாள் என்று சென்று பார்த்துவிட்டு வந்து கூறுக!" என்றார். யுயுத்ஸு "அரசே, அவர் இங்கு இருக்கிறார். தாங்கள் வருவீர்கள் என்றும் அறிந்திருக்கிறார். ஆகவேதான் வாயிலில் பணிப்பெண் நின்றிருக்கிறாள். தாங்கள் சென்று சந்தித்து கூறுவனவற்றைக் கூறி அவர் சொற்களையும் கேட்டு வரலாம்" என்றான். யுதிஷ்டிரன் அவன் முகத்தையே சில கணங்கள் நோக்கிய பின்னர் "சில தருணங்களில் உன்னுடைய உறுதி எனக்கு ஒவ்வாமையை அளிக்கிறது. நீ என்னை எவ்வாறு மதிப்பிடுகிறாய் என்ற ஐயம்கூட ஏற்படுகிறது" என்றார். யுயுத்ஸு அதற்கு மறுமொழி கூறவில்லை. யுதிஷ்டிரன் சீற்றத்துடன் "அவளை எண்ணி நான் அஞ்சுகிறேன் என்று எண்ணுகிறாயா? அல்லது அவளுக்கு முன் பணிந்துவிடுவேன் என்று கருதுகிறாயா?" என்றார்.

அவர் குரலில் ஒலித்த மிகை அவனை சலிப்புறச் செய்தாலும் யுயுத்ஸு அதற்கு மறுமொழி சொல்லவில்லை. "நான் அரசன்! என் வினாவுக்கு முன் மறுமொழி சொல்லாமலிருக்க எவருக்கும் உரிமையில்லை" என்றார் யுதிஷ்டிரன். "உங்களை இத்தருணத்தில் மூத்தவர் என்றே எண்ணுகிறேன், அரசர் என்று அல்ல" என்று யுயுத்ஸு சொன்னான். மேலும் சீற்றத்துடன் ஏதோ கூற வாயெடுத்த பின் யுதிஷ்டிரன் "உன்னிடமிருப்பது அதே ஆணவம். உனது தந்தையிடமிருந்து வந்தது அது. உன் மூத்தவனிடம் அது வேறுவகையில் சமைந்திருந்தது. நீ நூல்நவின்று சொல்தேர்ந்து பிறிதொன்றாக

ஆக்கிக்கொண்டிருக்கிறாய்" என்றபின் தேரிலிருந்து இறங்கி அவனிடம் ஒரு சொல்லும் கூறாமல் குடில் நோக்கி சென்றார்.

அவர் வந்த விசையைக் கண்டு சற்றே அஞ்சிய பணிப்பெண் பதற்றத்துடன் தலைவணங்கினாள். அவளால் முகமன் உரைக்க முடியவில்லை. "அரசி இருக்கிறாரா?" என்று அவர் கேட்டபோது "ஆம் அரசே, உள்ளே இருக்கிறார்... உள்ளே காத்திருக்கிறார்" என்று பணிப்பெண் சொன்னாள். மேலும் தயங்கிய பின் யுதிஷ்டிரன் திரும்பிப் பார்த்து யுயுத்ஸுவிடம் "இளையோனே, நீயும் வா" என்றார். "நான் வருவது உகந்ததல்ல" என்று அவன் சொன்னான். "நீயும் உடனிரு. உரிய முறையில் சொல்லெடுக்க என்னால் இயலாமல் போகலாம். நீ உடனிருப்பது எனக்குத் தேவை இப்போது" என்றார்.

ஒருகணம் எண்ணிய பின் யுதிஷ்டிரன் அருகே சென்று யுயுத்ஸு "வருக!" என்றான். யுதிஷ்டிரன் தலைகுனிந்து குடிலுக்குள் நுழைந்தார். அவரைத் தொடர்ந்து சென்ற யுயுத்ஸு அவருக்குப் பின்னால் வாயிலோரமாக நின்றுகொண்டான். குடிலுக்குள் மறுபக்கத்து சிறுசாளரம் ஒன்று திறந்திருக்க ஒளி சாய்வாக விழுந்து கிடந்தது. தரையிலிருந்து அதன் சுடர் எழுந்து சுவர்களையும் ஒளி கொள்ளச் செய்திருந்தது. திரௌபதி தரையில் விரிக்கப்பட்ட பாயில் அமர்ந்திருந்தாள். யுதிஷ்டிரன் உள்ளே நுழைந்ததும் அவள் எழுந்து தலைவணங்கினாள். பின்னர் யுயுத்ஸுவை திரும்பிப் பார்த்துவிட்டு விழிவிலக்கிக்கொண்டாள்.

யுயுத்ஸு தலைவணங்கி "அரசிக்கு எளியேனுடைய வணக்கம். அஸ்தினபுரியின் அரசர் யுதிஷ்டிரன் தங்களைச் சந்திக்கும் பொருட்டு வந்திருக்கிறார். தங்களிடம் அரசருக்கு அரசமுறையான விண்ணப்பம் ஒன்று உள்ளது" என்றான்.

விழிசுருக்கி அவனைப் பார்த்தபின் திரௌபதி யுதிஷ்டிரனிடம் “அமர்க!” என்று கைகாட்டினாள். யுதிஷ்டிரன் அது ஒரு முறையான தொடக்கமாக அமைந்தமையால் இயல்புநிலை கொண்டார். அவருடைய உடல் தளர்வதை காணமுடிந்தது. அவர் பாயில் அமர்ந்துகொள்ள அவள் சற்று அப்பால் சென்று தூண் சாய்ந்து நின்றாள். மேலும் பேசும்படி கோரிக்கையுடன் யுதிஷ்டிரன் யுயுத்ஸுவை பார்த்தார்.

யுயுத்ஸு “அரசி, இங்கு நீத்தார்கடனுக்காக நாம் வந்து தங்கியிருப்பதை தாங்கள் அறிந்திருப்பீர்கள். நீர்க்கடன்கள் நாளை காலை தொடங்கவேண்டும் என்று அந்தண முதல்வரான தௌம்யரின் ஆணை. அனைத்து ஒருக்கங்களும் முடிந்துவிட்டிருக்கின்றன. நீர்க்கடன்கள் முற்றிலும் ஆண்களால் செய்யப்படுபவை என அறிந்திருப்பீர்கள். ஆயினும் நோன்பு கொண்டு சொல்லளித்து ஆண்களை இல்லத்திலிருந்து வழியனுப்பும் கடமை ஒன்று இல்ல மகளிருக்கு உள்ளது. அரசியாக தாங்கள் அவற்றை இயற்றுவது தங்கள் கடமை. எனினும் அரசரென தங்களிடம் அதை உரைப்பது முறை என்பதால் அரசர் வந்திருக்கிறார்” என்றான்.

“நீர்க்கடன்கள் முடிக்கையில் நாம் போரை முடித்துக்கொள்கிறோம் அல்லவா?” என்று திரௌபதி சொன்னாள். யுதிஷ்டிரன் பதறிய குரலில் “என்ன சொல்கிறாய்? இப்போது போர் முடியவில்லையா என்ன? நாம் அடைந்த இழப்பு போதாதா?” என்றார். அந்தச் சொல்முந்துதலால் யுயுத்ஸு உருவாக்கிய அனைத்து பேச்சுச்சூழலையும் கலைத்தவராக நடுங்கும் குரலில் “நாம் அடைந்த துயரை தெய்வங்களும் கண்டு அஞ்சும்... இதற்குமேல் என்ன?” என்றார். திரௌபதி “நாம் அடைந்த இழப்பினால்தான் போர் இன்னமும்

முடியாமலிருக்கிறது. வெற்றி முழுமைப்படும் வரை போர் முடிய நான் ஒப்பமாட்டேன்" என்றாள்.

யுதிஷ்டிரன் முற்றிலும் நிலைமறந்தார். "இனி என்ன வெற்றி உனக்கு வேண்டியிருக்கிறது? படை கொண்டு பாரதவர்ஷத்தை வெல்ல நினைக்கிறாயா? அல்லது பாஞ்சாலத்திற்குச் சென்று அங்குள்ள உன் இளையோனையும் வென்று நாட்டை கொள்ளவிருக்கிறாயா?" என்றார். திரௌபதி "என் மைந்தரைக் கொன்றவர்கள் எஞ்சியிருக்கிறார்கள்" என்று சொன்னாள். யுதிஷ்டிரன் அதைக் கேட்டதும் அதை முன்னரே அறிந்திருந்தவர்போல் குன்றி நோக்கை விலக்கிக்கொண்டார். யுயுத்ஸு அவரே பேசட்டும் என்று காத்திருந்தான். "அவர்கள் இருக்கும்வரை போர் முடிவதில்லை. அவர்களின் குருதி வந்து சேரும் வரை இங்கு நீர்க்கடன் தொடங்கப்போவதும் இல்லை" என்றாள் திரௌபதி.

"அது இயலாது" என்று உரத்த குரலில் கூறியபடி யுதிஷ்டிரன் எழுந்தார். "இங்கு நின்று நீ அறைகூவலாம். அது அவ்வளவு எளிதல்ல என்று அறிக! கிருதவர்மன் யாதவர்களுடன் சென்று சேர்ந்திருக்கிறான். அவர்கள் இன்னும் பெரும் எண்ணிக்கையில் எஞ்சியிருக்கிறார்கள். நம்மிடம் அவர்களை எதிர்க்கும் அளவுக்கு படைகள் இன்று இல்லை. இன்னும் பல காலம் யாதவர்கள் பாரதவர்ஷத்தில் ஆற்றல் மிக்கவர்களாகவே நீடிப்பார்கள்... கிருபர் சென்றிருப்பது அவர் தந்தையின் குருநிலைக்கு. சரத்வானின் குருவழியினர் பாரதவர்ஷத்தின் மாபெரும் வில்லவர்கள். அவர்களை வெல்ல பார்த்தனாலும் இயலாது."

"மேலும் அங்கு அவர் தன் தந்தையுடன் இணைந்து ஊழ்கத்திலிருப்பார் எனில் அவரைச் சென்று வெல்வது

நெறியே அல்ல. முனிவர்களுக்கு எதிரான போர் என்பது இன்னும் எந்த அரசகுடியாலும் ஒப்புக்கொள்ளப்பட்டதல்ல. அவ்வண்ணம் ஒன்று நிகழ்ந்த பின் நான் அந்தணர் வாழ்த்துபெற்று அரியணை அமரவே முடியாது" என்றார் யுதிஷ்டிரன். "அஸ்வத்தாமன் எங்கிருக்கிறான் என்றே தெரியாது. பிருகு குலத்தவர் அவனை தங்களவன் என்று எண்ணுகிறார்கள். முக்கண் முதல்வனின் அருள் கொண்டவனென்று அவனைப் பற்றி சூதர்கள் பாடுகிறார்கள். அனல்குலத்து ஷத்ரியர்களின் ஆதரவு அவனுக்கு இருக்கும் என்றால் அவனைத் தொடர்ந்து சென்று வென்று வருவது இப்போது இயல்வதல்ல."

"ஒன்று அறிந்துகொள் கிருஷ்ணை, இப்போது நமக்கு படையென்று ஏதுமில்லை. நமக்கு உதவியாக பாஞ்சாலமும் துவாரகையும் இல்லை. எந்நிலையிலும் இன்று ஒரு சிறு போரைக்கூட எடுக்கும் ஆற்றல் கொண்டவர்கள் அல்ல நாம். உண்மையை உரைப்பதென்றால் பாரதவர்ஷத்தின் பிற அரசுகளும் நம்மைப்போல் சிதைந்திருப்பதனால் மட்டுமே நாம் ஒரு அரசு என்று நீடிக்க இயல்கிறது. தெற்கிலிருந்தோ எல்லைக்கு அப்பாலிருந்தோ யவனர்களோ திருவிடத்தவர்களோ நம் மீது படையெடுத்து வருவார்களெனில் அஸ்தினபுரியும் இந்திரப்பிரஸ்தமும் அவர்களுக்கு அடிமையாவதன்றி வேறு வழியில்லை. நீ அரசி. எளிய பெண்போல் பேசுவது முறையல்ல. உன் சொற்களுக்கு இருக்கும் மதிப்பென்ன என்று உணர்ந்துகொள்" என்று யுதிஷ்டிரன் சொன்னார்.

"நான் அறிவேன்" என்று திரௌபதி கூறினாள். "அனைத்தையும் நான் நன்கறிவேன். ஆம், கிருபரையும் கிருதவர்மனையும்

நம்மால் இப்போது வெல்ல இயலாது. கிருபர் நம்மிடமே வருவார், பிழையுணர்ந்து பணிவார். அன்று அவரிடம் சொல்வதற்கு சில சொற்களை நான் கருதியிருக்கிறேன். கிருதவர்மனை எவ்வாறு அழிப்பதென்று நான் அறிவேன். அவன் குருதியை நான் காண்பேன். நான் வெல்ல விரும்புவது அஸ்வத்தாமனை. என் மைந்தரைக் கொன்ற பின் அவன் தருக்கி நின்றிருப்பானெனில் இங்கு அரசியென நான் இருப்பதில் பொருளில்லை. என் மைந்தரின் குருதிக்கு பழிநிகர் செய்தாகவேண்டும்."

யுதிஷ்டிரன் குரல் தழைய "ஒன்று புரிந்துகொள். அளிகூர்ந்து உளம்கொள். அவனை இப்போது நாம் தேடிச்சென்றால்கூட கண்டடைவதற்கு ஓராண்டாகலாம். அதற்கும் நாள் மீறலாம். அதற்கப்பால்தான் நீர்க்கடன் எனில் நீத்தார் அனைவரும் மூச்சுவெளியில் நின்றிருக்க வேண்டியிருக்கும். நம் மைந்தர்கள் அஸ்வத்தாமன் மேல் வஞ்சம் கொண்டிருப்பார்கள் எனில் ஒரு களம் அமைத்து அவர்களிடமே உசாவலாம். அவர்கள் உரைக்கட்டும், அவ்வஞ்சினம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று. அதன் பின்னரே விண்புகுவோம் என அவர்கள் சொன்னால் அவ்வாறே ஆகுக!" என்றார்.

"அவர்களிடம் வஞ்சினம் இருப்பதில்லை" என்று திரௌபதி சொன்னாள். "அவர்கள் விண்ணிலேறியதுமே மண்ணிலிருக்கும் அனைத்து வஞ்சங்களையும் கடந்து சென்றுவிட்டிருப்பார்கள். இங்கிருக்கையிலேயே வஞ்சமற்றவர்களாகவே அவர்கள் இருந்தார்கள். இளமையின் உளத்தூய்மையை அவர்கள் கடக்கவே இல்லை. வஞ்சமிருப்பது என்னிடம். இங்கு அரசியென நான் நின்றிருக்க வேண்டும் என்பதற்காக நான் கொள்ளும் வஞ்சம் இது." "அவ்வண்ணமெனினும்கூட எவ்வாறு

அவனை வெல்ல இயலும்? சொல், அவன் நீடுவாழி என்று அறிந்திருப்பாய்" என்று யுதிஷ்டிரன் சொன்னார்.

"அவனை நாம் கொல்ல முடியாதென்று மட்டுமே அதற்குப் பொருள்" என்று திரௌபதி சொன்னாள். "அவனை வென்றாகவேண்டும். அவன் தருக்கி நின்றிருப்பது அவனுடைய நுதல்மணியால். அதை இழந்தால் அவன் விழியற்றவன். அந்த நுதல்மணி இங்கு வரட்டும். அதை கொண்டுவந்து என் மைந்தர்களுக்கு நீர்க்கடன் செய்யுமிடத்தில் வைப்பேன். அதன் பின்னரே இங்கு நீர்க்கடன் நிகழும்" என்றாள். மூச்சிரைக்க ஒரு அடி முன்னால் வந்து "அதன் பின் அஸ்வத்தாமனின் சாவின்மையே அவனுக்கான பெருந்தண்டனை ஆகும். ஆறாத புண்ணுடன் அழிவிலா வலியுடன் இங்கே காலமில்லாது வாழ்வான் அவன்..." என்றாள். யுயுத்ஸு நடுக்குற்றான். அவளிடமிருந்து நோக்கை விலக்கிக்கொண்டான்.

"அது அவ்வளவு எளிதல்ல. இன்றைய நிலையில் அஸ்வத்தாமனை வெல்ல அர்ஜுனனாலும் இயலாது. நீ அறிந்திருப்பாய், அவனுடைய காண்டீபம் நிலை தாழ்ந்திருக்கிறது. ஒரு சொல்லெடுப்பதற்கே அவன் தயங்குகிறான். இந்நிலையில் அவனிடம் சென்று போருக்கு அறைகூவுவதென்பது இறப்பை அழைப்பது. ஒருவேளை..." என்றபின் யுதிஷ்டிரன் பற்களைக் கடித்து "அதை என் நாவால் சொல்லவேண்டியிருக்கிறது. ஒருவேளை என் இளையோன் கொல்லப்படுவானென்றால்... எண்ணுக, மைந்தரை இழந்து, சுற்றத்தையும் இழந்து இருக்கும் எனக்கு எஞ்சிய ஒரே ஆறுதல் என் ஐந்து உடன் பிறந்தாரும் உடனிருக்கிறார்கள் என்பதுதான்" என்றார்.

அவர் குரல் உயர்ந்தது. "இல்லை, அர்ஜுனனை கொண்டுசென்று அஸ்வத்தாமன் வில்லுக்கு முன்னால் நிறுத்த நான் ஒப்பமாட்டேன்... இது நிகழாது" என்றார். "எனில் இங்கு நீர்க்கடன் நிகழாது. நீங்கள் உங்கள் குருதியினருக்கு நீர்க்கடன் நிகழ்த்தலாம். உங்கள் படைகளுக்கும் பிறருக்கும். என் ஐந்து மைந்தருக்கு மட்டும் நீர்க்கடன் எஞ்சியிருக்கட்டும்" என்றாள் திரௌபதி. யுதிஷ்டிரன் சீற்றத்துடன் "அவர்கள் என் மைந்தர்... என்ன சொல்கிறாய்?" என்று கூவினார். "அவர்கள் முதலில் என் மைந்தர். இந்த நீரொப்புதலுக்கு என்ன பொருள் என்று அறிவீர்கள் அல்லவா? இறுதியாக நான் கூறுவது அது. ஆம், இவ்வைந்து மைந்தருக்கும் தந்தையர் நீங்களே என்று அதற்குப் பொருள். அதை நான் கூறமாட்டேன்" என்றாள் திரௌபதி.

"இழிவு செய்கிறாயா என்னை?" என்றார் யுதிஷ்டிரன். உடைந்த குரலில் "எங்கள் மைந்தர் அல்ல என்று சொல்லி அவர்களை இழிவுசெய்கிறாயா?" என்றார். திரௌபதி "இல்லை. தந்தையரெனில் நீங்கள் சென்று பழிநிகர் கொள்க! அதன் பொருட்டு எவர் இறப்பினும் எனக்கு பொருட்டில்லை. அஸ்வத்தாமன் தோற்கடிக்கப்பட்டாகவேண்டும். அவனுடைய நுதல்மணி இங்கு வந்தாகவேண்டும். அவன் மீளா நரகுக்குச் சென்றாகவேண்டும். அதன் பின்னரே என் மைந்தருக்கான நீர்க்கடன்கள் இங்கு நிகழும்" என்று சொன்னாள். நீர் பரவிய விழிகளால் நோக்கி "இனி ஒரு சொல்லும் என்னிடம் இதைப்பற்றி உரைக்கவேண்டியதில்லை" என்றாள்.

"எனில் இதை நீயே அர்ஜுனனிடம் கூறுக!" என்றார் யுதிஷ்டிரன். "அவனைக் கொன்ற பழியையும் நீயே சூடுக!" திரௌபதி "எவரிடமும் நான் கூறுவேன். ஆனால் அரசரென ஆணையிடவேண்டியவர் நீங்களே. உங்கள் இளையோனிடம்

நீங்கள் ஆணையிடுங்கள். அவ்வாணையை அவர் மீறுவாரெனில் அது உங்களுக்கும் அவருக்குமான பூசல். என் சொற்களை உரைத்துவிட்டேன்" என்றபின் திரௌபதி தலைவணங்கினாள்.

யுதிஷ்டிரன் அவளை நோக்கியபடியே நின்றார். அவரது உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. உதடுகள் மேலும் மேலும் ஏதோ சொல்வதற்கென விரும்பின. யுயுத்ஸு ஒரு அடி முன்னால் வைத்து "அரசே, கிளம்புவோம்" என்றான். அவர் திரும்பி அவனைப் பார்த்த பின் "ஆம்" என்று தலைவணங்கி அவனுடன் வந்தார்.

யுயுத்ஸுவுடன் வெளியே வரும்போது யுதிஷ்டிரன் ஒரு சொல்லும் உரைக்கவில்லை. தேரை அணுகி அதன் படியில் கைவைத்து நின்று சில எண்ணி திரும்பி யுயுத்ஸுவிடம் "இதை அறிந்துதான் நீ என்னை அழைத்து வந்தாயா?" என்றார். "ஆம் அரசே, இதை அவரே உங்களிடம் சொல்ல வேண்டும் என்று தோன்றியது" என்றான் யுயுத்ஸு. யுதிஷ்டிரன் பல்லைக் கடித்து "ஒருநாள்... வாழ்வில் ஒரே ஒருநாள் உவகையுடன் இருந்தேன். எங்கோ தெய்வங்கள் என்னிடம் வஞ்சம் கொண்டிருக்கின்றன" என்றார். "அந்த ஒருநாளின் பொருட்டு தெய்வங்களிடம் நன்றியுடன் இருக்கலாம்" என்றான் யுயுத்ஸு.

"அது ஒருநாள் மாயை. எந்த நோய்க்கும் சிறிய இடைவெளிகள் அளித்து தெய்வங்கள் நம்மை ஆறுதல்படுத்துகின்றன" என்றார் யுதிஷ்டிரன். யுயுத்ஸு புன்னகை புரிந்து "மேலும் துயருக்கு ஒருக்குகின்றன என்கிறீர்களா?" என்றான். "தெய்வங்களிடம் நாம் பேரம் பேசமுடியாது. அளிப்பதை பெறுமிடத்தில்

நாமிருக்கிறோம்" என்றபின் யுதிஷ்டிரன் "கிளம்புவோம்" என்று திரும்பிக்கொண்டார். இருக்கையில் அமர்ந்து திரையை மூடிய யுதிஷ்டிரன் பெருமூச்சுவிடுவதை யுயுத்ஸு கேட்டான். அவருடைய தலை உள்ளே அசைந்து தேர்க்கூண்டில் முட்டிக்கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான்.

தன் குடிலருகே அணுகி தேரிலிருந்து இறங்கி நின்றதும் மீண்டும் அவனைப் பார்த்து "இதை நீ ஏன் செய்தாய்? ஒரு வேளை இத்தருணத்தில் நான் சென்று அவளை பார்க்காமல் இருந்தால் இத்தனை அறுதியாக அவள் இதை சொல்லியிருக்க வாய்ப்பில்லை" என்றார் யுதிஷ்டிரன். "அவர் முன்னரே முடிவெடுத்துவிட்டார்" என்று யுயுத்ஸு சொன்னான். "எனில் நீ என்னை அழைத்துச் சென்றிருக்கக் கூடாது. இளையோனை அழைத்துச் சென்றிருக்க வேண்டும். இப்போது ஆணையிடும் பணியை என் மேல் சுமத்திவிட்டாய்" என்றார் யுதிஷ்டிரன். "நீங்கள் அரசர். நீங்கள் ஆணையிட்டாகவேண்டும்" என்றான் யுயுத்ஸு.

ஒருகணம் விழி தழைய எண்ணம் ஓட்டிய பின் "நீ என்ன நினைக்கிறாய்? நான் அவனிடம் இதை ஆணையிட வேண்டுமா?" என்றார் யுதிஷ்டிரன். "ஆணையிட்டாக வேண்டும். வேறு வழியில்லை" என்றபின் யுயுத்ஸு "வருக!" என்றான். குடிலுக்குள் நுழைந்து தன் பீடத்தில் அமர்ந்துகொண்டு "சகதேவனை வரச்சொல்" என்றார் யுதிஷ்டிரன். "இதை நீங்கள் அவரிடம் கலந்து உசாவ வேண்டியதில்லை" என்றான் யுயுத்ஸு. "பிற அனைத்திலும் அவர் கூறுவது முறையாக இருக்கும். ஆனால் இதில் அல்ல. அவர்கள் அனைவரும் போரில் இருந்து உளம் விலகியிருக்கிறார்கள்."

யுயுத்ஸுவை சில கணங்கள் நோக்கிய பின் "அர்ஜுனனிடம் இதை இப்போதே நான் கூறவேண்டுமா?" என்றார் யுதிஷ்டிரன். "ஆம், இப்போதே ஆணையிட வேண்டும். இன்றே அவர் கிளம்பிச்சென்றும் ஆகவேண்டும். எனில் மட்டுமே நாளை தௌம்யரிடம் கூற முடியும்" என்றான் யுயுத்ஸு. யுதிஷ்டிரன் "தௌம்யரிடம் எப்படி கூறுவதென்று எனக்குத் தெரியவில்லை" என்றார். "அவரிடம் நான் கூறிவிடுகிறேன். அனைவரிடமும் அவர் கூறட்டும். அதற்கு முன் உங்கள் இளையோனிடம் நீங்கள் ஆணையிடுங்கள்" என்றான் யுயுத்ஸு.

யுயுத்ஸுவை நோக்கி "இளையோனே, என் முகத்தை நோக்கி நீ சொல். இப்போரில் அர்ஜுனன் வெல்ல இயலுமா? அஸ்வத்தாமனின் நுதல்மணியுடன் அவன் திரும்பி வர முடியுமா?" என்றார் யுதிஷ்டிரன். "அவர் இதுவரை எங்கும் தோற்கவில்லை" என்று யுயுத்ஸு சொன்னான். "ஆகவே இனியும் வெல்வார்." திகைப்புடன் "ஏன்?" என்று யுதிஷ்டிரன் கேட்டார். "வெல்லற்கரியவனின் கருவி அவர். அவர் போருக்குச் செல்வதா வேண்டாமா என்பதை முடிவெடுக்க வேண்டியவர்கள் நாமல்ல, இளைய யாதவர் மட்டுமே. அவரிடம் நாம் உரைப்போம். இளைய யாதவரிடம் பார்த்தன் சொல்பெற்றுச் செல்வார் எனில் வெல்வார். அவருடைய படைக்கலம் அச்சொல் மட்டுமே. அது மட்டும் இருந்தால் போதும்" என்று யுயுத்ஸு சொன்னான்.

யுதிஷ்டிரன் எளிதாக உள்ளம் மீண்டார். "உனது உளம் ஓடும் திசை எனக்குப் புரியவில்லை. ஆனால் பிற எவரையும்விட உன்னைச் சார்ந்திருப்பது எனக்கு எளிதாக இருக்கிறது" என்றார். அவன் சற்று நகைத்தான். யுதிஷ்டிரன் "விந்தை இதுதான். இன்று அஸ்தினபுரியும் இந்திரப்பிரஸ்தமும் உனது

ஆட்சியிலிருக்கிறது. கௌரவ நூற்றுவரையும் வென்று இளைய கௌரவனாகிய உன்னிடம் மண்ணை ஒப்படைத்திருக்கிறோம். இதோ என் ஊழையும் உன்னிடமே அளித்திருக்கிறேன்" என்றார். யுயுத்ஸு "அதுவும் நன்றே. மண்ணுக்கான அனைத்து போர்களும் மண்ணில் எப்பற்றும் இல்லாதவரிடமே அதை கொண்டுவந்து சேர்க்கின்றன" என்றான்.

"மெய்யாகவே உனக்கு மண்ணில் பற்றில்லையா?" என்று யுதிஷ்டிரன் கேட்டார். "இரு நகரங்களும் குடிகளும் உன் சொல்லுக்கு கட்டுப்பட்டிருக்கின்றன இன்று. கோன்மையில் உனக்கு துளியும் உளமகிழ்வில்லையா?" அவன் விழிகளை நேர்நோக்கி "உன் தந்தை உனக்கு அளிக்க மறுத்த இளவரசுப் பட்டத்தைத் தாண்டி இன்று அரசருக்குரிய இடத்தில் இருக்கிறாய். உன் அன்னைக்கு அளிக்கப்படாத அரசி பட்டத்தை உனது மனைவி அடையக்கூடும். இவ்வளவும் உன்னை மகிழ்விக்கவில்லையா?" என்றார். "இல்லை" என்று அவன் சொன்னான். "ஏன்?" என்று யுதிஷ்டிரன் கேட்டார். "இயல்பாகவே அவ்வாறு தோன்றவில்லை. இது என்னுடையதல்ல என்று மட்டுமே தோன்றுகிறது. உண்மையில் உளமகிழ்வடைவதற்கும் தருக்குவதற்கும் நான் முயன்றதுகூட உண்டு."

"நாள் செல்லச் செல்ல கை பழகும், உள்ளமும் பழகும்" என்றார் யுதிஷ்டிரன். "பழகாதென்றே உணர்கிறேன். நாளையும் அதன் மேல் பிறன் என்றே அமர்ந்திருப்பேன்" என்றான் யுயுத்ஸு. யுதிஷ்டிரன் சில கணங்கள் பார்த்துவிட்டு "செல்க, இளையோனை வரச்சொல்க!" என்றார். தலைவணங்கி யுயுத்ஸு வெளியே செல்ல திரும்பினான். யுதிஷ்டிரன் "இளையோனே, நீயே அர்ஜுனனிடம் என் சொல்லை கூறுக!" என்றார். "நானா?

என் சொல்லில் அது எழலாகாது" என்றான் யுயுத்ஸு. "நீ சொல்வதே முறை என தோன்றுகிறது. இது என் ஆணை" என்றார் யுதிஷ்டிரன். யுயுத்ஸு தயக்கமாக "அரசே, உங்கள் ஆணையென எழவேண்டியது இளையோருக்குரிய கடமை" என்றான்.

"ஆம், அதைத்தான் எண்ணுகிறேன்" என்று யுதிஷ்டிரன் சொன்னார். "நான் ஆணையிட்டால் அதை அவன் தலைமேற்கொள்ளவேண்டும். இன்று அவன் இருக்கும் நிலை என்ன என்று எனக்குத் தெரியாது. நான் நேரில் சொல்லாமல் என்னிடம் திரௌபதி கேட்ட சொல் இது என்று மட்டும் நீ அவனிடம் சொன்னால் அவனால் இதை மறுக்கமுடியும். அவன் மறுப்பான் என்றால் எனக்கும் அது உடன்பாடானதே" என்றார் யுதிஷ்டிரன். "அவர் மறுப்பார் என நினைக்கிறீர்களா?" என்றான் யுயுத்ஸு. யுதிஷ்டிரன் வெறுமனே நோக்கினார். "அவர் உங்கள் சொல்லை கடக்கமாட்டார் என நன்கறிவீர்கள்" என்றான் யுயுத்ஸு. யுதிஷ்டிரன் சீற்றம்கொண்டு "எனில் ஏன் இதை உன்னிடம் சொல்கிறேன்? அவனை நான் அஞ்சுகிறேனா?" என்றார்.

"ஆம்" என்றான் யுயுத்ஸு. யுதிஷ்டிரன் திகைத்தார். "நான்கு இளையோரையும் அஞ்சுகிறீர்கள். அவர்கள் இழிசொல் கூறிவிடக்கூடும் என, கிளர்ந்தெழுந்து படைக்கலம் எடுக்கவும்கூடும் என அஞ்சுகிறீர்கள்." யுதிஷ்டிரன் "நீ யார்? ஏன் என்னிடம் இந்த உரிமையை எடுத்துக்கொள்கிறாய்?" என்று கூவினார். "நான் உங்கள் இளையோன், உங்களால் அஞ்சப்படாத ஒருவன்" என்று யுயுத்ஸு புன்னகைத்தான். யுதிஷ்டிரன் தலைநடுங்க, உதடுகள் விதும்ப அவனை நோக்கிக்கொண்டிருந்தார். பின்னர் பெருமூச்சுடன் தளர்ந்து

“செல்க! என் சூழலை அவனிடம் உரிய முறையில் விளக்குக!” என்றார். யுயுத்ஸு “ஆணை” என தலைவணங்கி வெளியேறினான்.

நீர்ச்சுடர் - 34

பகுதி ஐந்து : எஞ்சும் கனல் – 4

யுயுத்ஸு யுதிஷ்டிரனின் குடிலில் இருந்து வெளிவந்தபோது அதை உணரவில்லை. ஆனால் சில அடிகள் முன்னெடுத்து வைத்த பின்னரே பெருங்களைப்பை உணர்ந்தான். உடலில் பெரிய எடை ஏறி அமர்ந்திருப்பதுபோல. கால்களை முன்னெடுத்துவைக்க இயலவில்லை. கண்களை மூடியபடி முற்றத்திலேயே சில கணங்கள் நின்றான். நோக்குணர்வு ஒன்று வந்து தொட திடுக்கிட்டு விழித்துக்கொண்டான். அருகே எவருமில்லை என்று கண்டான். உடனடியாகச் சென்று அர்ஜுனனை பார்க்கவேண்டும் என்று யுதிஷ்டிரனால் பணிக்கப்பட்டிருந்தான். ஆனால் அவன் உள்ளம் அதை மறுத்தது. சுவரில் முட்டிக்கொண்டதுபோல முழுமையாக திசைகள் மூடியிருந்தன.

தன் குடிலுக்குச் சென்று மீண்டுமொருமுறை ஆடைமாற்றிக்கொண்டு கிளம்பலாம் என்னும் எண்ணம் வந்தது. அது அவன் வழக்கம். ஒருநாளில் நாலைந்துமுறை அவன் ஆடையையும் தலைப்பாகையையும் மாற்றிக்கொள்வதுண்டு. அஸ்தினபுரியில் அவனுக்கு எப்போதுமே பணிச்சுமை மிகுதி. அரசமகன் என்றும் சூதனென்றும் ஒரே தருணத்தில் இருக்கையில்

அனைவருக்குமே எதிர்பார்ப்பளிப்பவனாக ஆகிவிட்டிருந்தான். இடைசென்றால் பொழுதே நசுங்கிவிடும் என்பதுபோன்ற நாள்விரைவு என அவனே ஒருமுறை சொன்னான். பணிச்சுமை மிகும்போதோ ஒவ்வாப் பணி எதிர்நிற்கும்போதோ கால்நாழிகை ஓய்வெடுத்து நீராடி அல்லது முகம் கழுவி மற்றொரு ஆடை அணிந்து புதியவனாக எழுந்து வருவது அவன் வழக்கம். அதுவரை அவன் செய்துகொண்டிருந்த செயல்களிலிருந்து அவ்வாறு தன்னை முற்றாக துண்டித்துக்கொள்வான். அவை அளித்த களைப்பு அனைத்தையும் உதிர்த்துக்கொள்ளவும் முடியும்.

அவன் தன் குடிலை அடைந்து உள்ளே சென்று கதவுப்படலை மூடிக்கொண்டதும் தனியறைகளில் மட்டுமே அவன் அடையும் தற்தொகுப்புணர்வை அடைந்தான். அங்கே அவனை அவனே வெவ்வேறு கோணங்களில் கண்கள் எழுந்து நோக்கிக்கொண்டிருந்தான். அந்நோக்குகளுக்கு முன் தன்னை அமைத்துக்கொண்டான். அவன் அந்தக் குடிலில் ஓரிரு நாட்கள்தான் அந்தியுறங்கியிருந்தான். அதற்குள்ளேயே அதை அவனுடையதாக எண்ணத் தலைப்பட்டான். அதற்குள் வந்ததுமே அதை இன்னொருவர் பயன்படுத்தியிருப்பதாகத் தோன்ற அறையை கூர்ந்து நோக்கினான். எந்த அடையாளமும் தென்படவில்லை. ஆனாலும் அந்த உணர்வு இருந்தது. அவன் மஞ்சத்தில் படுத்து கண்களை மூடிக்கொண்டான்.

அவன் தன் அறைக்குள் பிறர் நுழைய விடுவதில்லை. அவனுடைய துணைவியர் சாந்தையும் சுகிர்தையும் அஸ்தினபுரியில் அவனுடைய தனியறைக்குள் நுழைவதில்லை. அவர்களை அவன் மணமுடித்த நாளில் அதை தெளிவுறச் சொல்லிவிட்டிருந்தான். அவர்கள் அவனை

அஞ்சினர். அவன் அவர்கள் இருவரையும் நினைவுகூர்ந்தான். அன்னையை உடனே நினைவிலிருந்து எடுத்தான். அன்னையை எண்ணாமல் அவர்களைப்பற்றி எண்ணமுடிவதில்லை. அன்னையுடன் இணைந்தே அவர்களை அவன் பெரும்பாலும் பார்த்திருக்கிறான். அவர்களை தனியறைகளில் சந்திக்கும்போதுகூட மிக அருகிலெங்கோ அன்னை இருப்பதாகவே உணர்ந்திருக்கிறான்.

அவர்கள் அஸ்தினபுரியிலிருந்து அகன்று அப்பாலுள்ள சித்ரபீடம் என்னும் சிற்றூருக்குச் சென்றுவிட்டிருந்தார்கள். அவன் அஸ்தினபுரியிலிருந்து அகன்றபின் அவர்கள் அங்கே தங்க முடியவில்லை. அஸ்தினபுரியில் அவர்கள்மேல் கடும் சினம் எழுந்துவிட்டிருந்தது. அவர்களை மூடுதேரில் காவலுடன் வெளியே அனுப்பவேண்டியிருந்தது. அன்னை செல்வதில் பேரரசருக்கு விருப்பமில்லை. ஆனால் அன்னை அவர்களுடன் செல்லவே விரும்பினாள். அவர்கள் அங்கே சென்றுவிட்டதை அவன் அறிந்தான். அவர்களைச் சென்றுபார்க்கவேண்டும் என்று தோன்றவில்லை. அவ்வப்போது அவர்களின் நினைவெழுந்தாலும் உடனே மறைந்தது. அன்று யுதிஷ்டிரன் அன்னையைப்பற்றி கேட்டமையால் இந்நினைவுகள் எழுந்து நின்றுள்ளன போலும்.

சாந்தை எளிய சூதர்குலத்துப் பெண். அஸ்தினபுரியின் தொல்சூதர் குடியில் பிறந்தவள். அவள் தந்தை புஷ்பகோஷ்டத்தில் அடுமனையாளராக இருந்தார். அவள் அன்னை காந்தாரியின் ஏவல்பெண்டு. சாந்தை அரண்மனைக்கு ஒரு நோன்புநிகழ்வுக்காகச் சென்றபோது சத்யசேனை அவளைக் கண்டு "அழகிய பெண்" என வியந்தாள். சாந்தை வெண்ணிறமான பருத்த உடலும் சிவந்த பருக்கள் கொண்ட

வட்ட முகமும் கொண்டவள். நீல விழிகள் அவளை காந்தாரத்தின் குருதி கொண்டவள் என்று காட்டின. காந்தாரி அவளை அருகணையச்செய்து கைகளால் வருடிநோக்கினாள். "இவள் என் மைந்தனுக்கு மணமகள் ஆகுக!" என்று உரைத்தாள்.

அது ஆணை என்றே கொள்ளப்பட்டது. சத்யசேனை அவனை அரண்மனைக்கு அழைத்து பேரரசியின் ஆணையை சொன்னாள். அவனுக்கு மாற்றுச்சொல் இருக்கவில்லை. சாந்தையின் தந்தை அஞ்சினார். அவன் எளிய சூதன் அல்ல என்று அவர் அறிந்திருந்தார். "நமக்குரிய இடமல்ல. சுட்டுப்பழுத்த அடுமனைக்கலம் அது. நாம் அறிந்தது எனத் தோன்றும், தொட இயலாது" என்றார். ஆனால் அவள் அன்னைக்கு அந்த உறவு பேருவகையை அளித்தது. ஒரே நாளில் அவள் அரண்மனையில் தனித்தன்மை கொண்டவளாக ஆனாள். பிற சேடியர் அவளை அஞ்சவும் பணியவும் முற்பட்டனர். "செல்லுமிடத்திற்கு உரியவள் ஆவது பெண்ணின் இயல்பு. அடுமனைக்கலத்தை கையாளத் தெரியாதவள் பெண்ணே அல்ல" என்றாள்.

அச்செய்தியை அவன் அன்னை அறிந்தபோது அவள் முகம் சுருங்கியது. நெடுநேரம் அவள் ஒன்றும் சொல்லவில்லை. "அப்பெண்ணில் உங்களுக்கு நிறைவில்லையா, அன்னையே?" என்று யுயுத்ஸு கேட்டான். "என் கருத்திற்கு இங்கே என்ன இடம் உள்ளது?" என்று அன்னை சொன்னாள். "உங்கள் கருத்தை கேட்க விழைகிறேன்" என்றான் யுயுத்ஸு. "சரி, நான் வேண்டாம் என்கிறேன். பேரரசியின் ஆணையை மீறுவாயா நீ?" என்று அன்னை கேட்டாள். யுயுத்ஸு "மீற இயலாது, அது நன்றும் அல்ல" என்றான். "பிறகென்ன?" என்றாள் அன்னை.

அவன் மேலும் ஏதும் கேட்கவில்லை. அவள் மேலும் சொல்ல விழைந்தாள், அவன் கடந்துசென்றான்.

அரண்மனையிலேயே அவனுடைய மணவிழவு நிகழ்ந்தது. பேரரசரும் விதுரரும் விழவுக்கு வந்திருந்தார்கள். அரசரும் உடன்பிறந்தார் அனைவரும் தங்கள் துணைவியருடன் பங்குகொண்டனர். அவன் அன்னைக்கு முறைமையும் வரிசையும் செய்து அரண்மனைக்கு அழைத்துச்சென்றார்கள். ஆனால் அவன் சாந்தையை மணந்தபோது அன்னையின் இடத்தில் அமைந்து சாந்தையின் கைபற்றி முறைச்சடங்குகளைச் செய்தவள் காந்தாரிதான். அவன் பேரரசியின் காலிலும் பின்னர் பேரரசரின் காலிலும் விழுந்து வாழ்த்துபெற்ற பின்னரே அன்னையின் அடிபணிந்தான். அந்த விழவு நகரெங்கும் நிகழ்ந்தது. ஏழு ஊட்டுபுரைகளில் விருந்து ஒருக்கப்பட்டிருந்தது. குடிகளிடம் பொறாமையும் கூடவே மெல்லிய கசப்பும் அதன் விளைவான இளிவரலும் இருந்தன. சூதர்களில் மிகச் சிலர் பெருமைகொள்ள பெரும்பான்மையினர் உளம்சுருங்கினர்.

அன்னை அரண்மனையில் எந்த முகமாறுதலையும் காட்டவில்லை. ஆனால் அவள் தன் மாளிகைக்கு மீண்டதும் "நான் உனக்காக ஒரு பெண்ணை பார்த்துள்ளேன். நீ அவளையும் மணந்தாகவேண்டும். அவள் அன்னையையும் தந்தையையும் இங்கே வரச்சொல்லியிருக்கிறேன். நாளை வருவார்கள்" என்றாள். "எப்போது அவளைப் பார்த்து முடிவெடுத்தீர்கள்?" என்று யுயுத்ஸு கேட்டான். அவள் மறுமொழி சொல்லவில்லை. "சொல்க அன்னையே, எப்போது?" என்றான். அன்னை "எப்போதாக இருந்தாலென்ன?" என்று சீற்றம்கொண்டாள். "சொல்க, அவள் பெயர் என்ன?" என்றான்.

“அவள் பெயர் சுகிர்தை. இசைச்சூதர் குடியை சேர்ந்தவள்” என்றாள். “இசைச்சூதர் என்றால்?” என்றான். “அவள் அன்னை விறலி. அவள் தன் அன்னையுடன் இங்கே வந்தாள். அவள் அன்னையின் துணைவர் வேறு” என்றாள்.

அவன் வெறுமனே அவளை நோக்கிக்கொண்டிருந்தான். “அதனாலென்ன? நீ சூதகுடியினன் அல்லவா?” என்றாள். “ஆம்” என்று யுயுத்ஸு சொன்னான். “நான் அவளை மணக்க அவள் அன்னை ஒப்புக்கொண்டாளா?” அன்னை அவனை நோக்கி “ஆம், ஒப்புக்கொண்டாள். இன்று அவளிடம் பேசினேன்” என்றாள். “இன்றா?” என்றான் யுயுத்ஸு. “ஆம், இன்று அரண்மனையில் அவள் ஆடினாள், அவள் அன்னை பாடினாள்.” அவளை உடனே யுயுத்ஸு நினைவுகூர்ந்தான். மெலிந்த கரிய இளம்பெண். பெரிய விழிகள் கொண்டவள். வெண்கற்களாலான மாலை அணிந்திருந்தாள். ஆடும்போது அவள் பற்களின் ஒளியுடன் அவை இணைந்துகொண்டன.

அவன் உள்ளம் மெல்லிய கிளர்ச்சியை அடைந்தது. ஆனால் அவன் அதை கடந்தான். “அவளை அவள் அன்னை எளிதில் கைவிடமாட்டாள்” என்றான். “நான் அவளுக்குரியதை அளித்தேன்” என்றாள் அன்னை. “அன்னையே, இதன் வழியாக நீங்கள் அடைவதென்ன?” என்றான். அவள் “நான் அடைவதென்ன? என் மைந்தனுக்குரிய பெண்ணை தேடினேன்” என்றாள். “எனக்குரிய பெண்ணா?” என்றான் யுயுத்ஸு. “அறிவிலி, அந்தப் பெண் சாந்தை என்ன கல்வி அடைந்திருப்பாள்? நீ நூல்நவின்றவன். நெறியும் காவியமும் தேர்ந்தவன். அவள் அடுமனைக்கலைக்கு அப்பால் எதை அறிந்திருப்பாள்? அவளிடம் நீ நான்கு சொல் சேர்ந்து பேச முடியுமா?”

அவன் விழிகளைத் தாழ்த்தி "ஆம்" என்றான். "வேண்டுமென்றே உன்னை இந்த மணத்தில் கட்டினார்கள். நீ அடுமனையாட்டியின் கணவன் என்று ஆக்கிவிட்டார்கள்" என்று அவள் சொன்னாள். "அங்கர் மணந்ததும் அடுமனையாட்டியைத்தான்" என்று யுயுத்ஸு சொன்னான். அவள் சொல்லிழந்தாள். அந்தச் சீற்றத்தில் குரல் உயர "ஆகவேதான் உனக்கு இவளைத் தேடினேன். இவள் விறலி. காவியம் கற்றவள். உன்னுடன் சொல்லாட இயல்பவள்" என்றாள். யுயுத்ஸு "விறலியை மணந்தவன் என்று பெயர் அமையும்" என்றான். "ஆம், சூதர்களுக்கு அது பிழையல்ல என்கிறேன்" என்றாள்.

அந்த மணவிழவு அவன் அன்னையின் மாளிகையிலேயே நிகழ்ந்தது. விறலி தன் மகளுடன் வந்திருந்தாள். அவளுக்கு அங்கே என்ன நிகழ்கிறதென்று தெரியவில்லை என்று தோன்றியது. அவளிடம் ஆர்வம் மட்டுமே தெரிந்தது. நாணமும் அச்சமும் தயக்கமும் வெளிப்படவில்லை. தன் பெரிய கருவிழிகளைச் சுழற்றி சுற்றிலும் நோக்கி அந்த மாளிகையை வியந்துகொண்டிருந்தாள். அவளை சேடியர் அழைத்துச்சென்று ஆடைகளும் அணிகளும் பூட்டியபோது மகிழ்ந்து சிரித்தாள். அதை ஒரு கூத்து என்றே எண்ணுகிறாள்போலும் என அவன் நினைத்துக்கொண்டான். அவனை நேருக்குநேர் நோக்கி பெரிய வெண்பற்களைக் காட்டி சிரித்தாள். அவன் அதனால் சிறுமைகொள்ளவில்லை, மகிழ்ச்சியே ஏற்பட்டது. ஆனால் அன்னை முகம் சிவந்தாள். விறலியிடம் "அவளுக்கு மணமகளாக நடிப்பது எப்படி என்று கூடவா தெரியவில்லை?" என்றாள்.

பேரரசர் வந்தபோதுதான் அங்கே அவர் வரவிருப்பதை யுயுத்ஸு அறிந்தான். "பேரரசரா? அன்னையே, நீங்கள் இதை சொல்லியிருக்கவேண்டும்" என்றான். "சொன்னால் நீ பதற்றம் கொள்வாய்" என்றாள் அன்னை. "பேரரசர் அறிவாரா, இங்கே என்ன நிகழவிருக்கிறது என்று?" என்று அவன் கேட்டான். "அறியமாட்டார். ஆனால் அவரும் நானும் நின்று உனது இந்த மணநிகழ்வை நடத்தவேண்டும் என விழைந்தேன்" என்றாள் அன்னை. பேரரசர் சீற்றம் கொள்ளக்கூடும் என அவன் நினைத்தான். ஆனால் அன்னைக்கு அதை எப்படி முன்வைப்பது என்று தெரிந்திருந்தது. "அரசே, நேற்று புஷ்பகோஷ்டத்தில் ஆடிய இளம்பெண்ணை நினைவுகூர்கிறீர்களா?" என்றாள். "ஆம், அன்னைக்கு இனிய குரல். துள்ளும் சொற்கள்" என்று அவர் முகம் மலர்ந்தார். "அவளையும் மைந்தன் மணப்பது நன்று என எண்ணினேன்... இங்கே அவர்கள் இருக்கிறார்கள். மணநிகழ்வை நீங்களே நின்று நடத்தியளிக்கவேண்டும்" என்றாள்.

அவன் சாந்தையிடம் பெரிய ஈடுபாட்டை காட்டவில்லை. அவள் தன் அன்னையின் இல்லத்திலிருந்து அரசி அளித்த சீர்வரிசைச் செல்வங்களுடன் அவன் இல்லத்திற்கு வருவதற்குள்ளேயே அவன் சுகிர்தையை மணந்த செய்தியை அறிந்துவிட்டிருந்தாள். அவள் தன் வலக்காலை எடுத்துவைத்து நுழையும்போது விழிப்பீலிகளில் நீர்த்துளிகள் இருப்பதை அவன் கண்டான். அவன் உள்ளம் நிலையின்மை கொண்டு புரண்டபடியே இருந்தது. அன்னையிடம் "இன்னொரு துணைவியென முடிவெடுப்பதற்கு முன் அவளிடம் பேசியிருக்கவேண்டும், அன்னையே" என்றான். "இப்போது என்ன நிகழ்ந்துவிட்டது? அரசகுடியினரும் சூதரும் பல மகளிரை

மணப்பது இயல்பு. வைசியருக்கு மட்டுமே ஒரு மணம் கொள்ளும் வழக்கம் உள்ளது" என்று அன்னை சொன்னாள்.

முதல்நாளிலேயே அவனுக்கு அவள் வெறும் அடுமனைப்பெண் மட்டுமே எனத் தெரிந்துவிட்டது. அவளுக்கு அவன் தனக்குரியவன் அல்ல என்னும் எண்ணம் முன்னரே இருந்தது. அவன் எண்ணியதுபோல அரசமாளிகையும், அரசமைந்தனின் மனைவி என்னும் இடமும் அவளை மகிழ்விக்கவில்லை. அனைத்துமே அவளுக்கு அறியாதவையாக, திகைக்கவைப்பவையாக, ஆகவே எந்த உவகையையும் அளிக்காதவையாக இருந்தன. அவளால் ஏவலர்களிடம் குரலெழுப்பி பேச முடியவில்லை. பணிந்த குரலில் மன்றாட்டென்றே அவர்களிடம் தன் தேவைகளை சொன்னாள். அவர்கள் அவளை இளிவரல் தெரியும் விழிகளுடன் நோக்கி மிகையான பணிவை காட்டினர். ஆனால் அவள் கோரிய எதையுமே செய்யவில்லை.

அவளை ஒவ்வொரு செயலாலும் சிறுமைசெய்தனர். அவளை சிறுமைசெய்வது எது என்பதை அவர்கள் நுட்பமாக உணர்ந்திருந்தனர். அவள் உண்ண அமர்ந்தால் இன்னுணவை அள்ளி அள்ளி அவளுக்கு வைத்து "உண்ணுக... உண்ணுக!" என்றாள் விறலி. அவள் உணவை கையால் அளைந்தபின் விழிதாழ்த்தி பசியுடன் எழுந்துசென்றாள். அவள் வெளியே செல்ல விழைந்தால் மிகப் பெரிய பல்லக்கை அவளுக்காக ஒருக்கினர். அவள் அவர்களை நோக்காமல் அதை ஒழிந்தாள். அவர்கள் அவளுடன் விளையாடுவதை ஒருவரோடொருவர் சொல்லிச்சொல்லி பெருக்கிக்கொண்டார்கள். அவளை அஞ்சுவதுபோல நடித்தனர். அவள் அகன்று அப்பால் சென்றதும் ஒரு மெல்லிய சிரிப்பொலித்துணுக்கை அவள் செவிகளுக்கென

போட்டனர். அவள் கேட்க ஒரு சொல் உரையாடலில் இருந்து எழுந்து ஒலிக்கும். அது அவளுக்கு கூரிய பொருள் அளிப்பதாக இருக்கும்.

அவர்கள் அவளை வாய்தவறி "அரசி" என அழைத்தனர். அவள் அஸ்தினபுரியின் அரசியருடன் நின்றிருக்கையில் வேண்டுமென்றே அருகணைந்து தலைவணங்கி "ஆணை, அரசி" என்றனர். அவர்களில் எவரிடமிருந்தோ எழும் மெல்லிய நகைப்பு நச்சுக்கத்தி என அவளை கிழிக்கும் என அறிந்திருந்தனர். அவள் பதறி முகம் சிவந்து மூச்சிரைப்பாள். ஆனால் அவர்களை அழைத்துக் கண்டிக்க அவளால் இயல்வதில்லை. தன் தனியறையில் அமர்ந்து விம்மி அழுதாள். நாட்கணக்கில் தன் அறையிலேயே முடங்கிக்கிடந்தாள். அணிகொள்வதும் ஆடைமாற்றுவதும் ஒழிந்தாள். அதை பிரகதி கண்டித்தாள். "நீ அரசமைந்தனின் துணைவி. இங்கே உனக்கு ஆடையும் அணியும் குவிந்துள்ளன... நீ அவற்றுக்கு உரியவள்" என்றாள். அவள் விழிதழைத்து விம்மினாள்.

"அவளால் இங்கே இசைய முடியவில்லை" என்று அவன் சொன்னான். "அதெல்லாம் சின்னாட்களுக்கே. விரைவிலேயே அவள் கற்றுக்கொள்வாள்... நோக்குக! பெண்ணுக்கு பிறர்மேல் சொல்செலுத்துவதில் பெரும் ஈடுபாடு இருக்கும்" என்றாள் அன்னை. ஆனால் அவ்வண்ணம் நிகழவே இல்லை. அவள் எப்போதும் மாளிகையில் சிறைப்பட்டவளாகவே இருந்தாள். அவன் அவளை மகிழ்விக்க முயன்றான். அவன் அளித்த பரிசுகள் அவளுக்கு பயனற்றவை எனத் தோன்றின. அவன் உரைத்த இன்சொற்கள் வேறு எவரிடமோ என அவளுக்குக் கேட்டன. அவன் தன்னிலையில் இருந்தபோது அவளிடமிருந்து

அயலானான். அவளுக்காக இறங்கிச்சென்றபோது அவள் அவன் இறங்குவதை உணர்ந்து ஒவ்வாமைகொண்டாள்.

ஒருநாள்கூட அவள் அவனுடன் உளம் கரைந்து இருக்கவில்லை. குளிர்ந்த செயலற்ற உடலையே அவன் எப்போதும் அடைந்தான். எவ்வகையிலும் உள்நுழைய வாயில் அற்ற மாளிகை. அவளை இயல்பாக்க முயன்றான். அவள் உள்ளத்தை மலர்விக்கவும் அவளிடமிருந்து புன்னகையும் சொல்லும் எழச்செய்யவும் பலவற்றை இயற்றினான். அத்தோல்வி அவனை சீற்றம்கொள்ளச் செய்தது. அது தன் மீதான புறக்கணிப்பு என எடுத்துக்கொண்டான். அவள் அச்சமென நடிக்கிறாள், ஆழத்திலுள்ளது வெறுப்பு என எண்ணிக்கொண்டான். அவளை வெறுக்கவும் அகலவும் அந்நம்பிக்கை தேவைப்பட்டது. அவள் அவனுடைய குழவி ஒன்றை பெற்றாள். அவன் அவளை அதன்பின் அக்குழவியின் அன்னை என்று மட்டுமே அறிந்தான்.

சுகிர்தை முதற்சில நாட்கள் அவனை அலைக்கழிக்கும் சுழலாக இருந்தாள். அவளுடைய உடல்வலிமையும் துள்ளலும் கட்டற்ற காட்டுக்குதிரை போலிருந்தன. எவர் மேலும் அவளுக்கு அச்சமோ தனிமதிப்போ இருக்கவில்லை. அவன் அன்னையை "முரசு" என்று சொன்னாள். "ஏன்?" என்று அவன் கேட்டான். "ஓசையிடுகிறார்கள்!" என்று சொல்லி வாழைப்பூ நிறமான ஈறுகள் தெரிய சிரித்தாள். "ஏன்? உன்னை அவர் கண்டிக்கிறாரா?" என்றான். "ஓசையிட்டு நகைக்கக் கூடாது என்கிறார். அதைச் சொல்ல அவர் ஓசையிடுகிறார். கிழவி பழைய முரசுபோலிருக்கிறார். தோல்கிழிந்த முரசு." அவள் உரக்க நகைக்க அவன் திகைத்தான். "மெல்ல" என்றான். "மெல்லவா?" என்றபின் அவள் பேரோசையிட்டு நகைத்தாள்.

அவள் பேசும் காவியம் அவனுக்குப் புரியவில்லை. அவளுக்கு காவியம் என்றாலே சொல்லழகுதான். அதை இசையுடன் இணைத்துக்கொண்டாள். இன்சொற்கள் என்றே அவள் காவியத்தை சொன்னாள். அவன் காவியம் கற்றதெல்லாம் அதிலுள்ள நெறிகளுக்காகத்தான். காவியத்தில் நெறிகள் சொல்லப்பட்டுள்ளன என்பதே அவளுக்குத் தெரியவில்லை. "காவியத்தில் சொல்லப்பட்ட நெறிகளின்படி வாழ்ந்த காவியநாயகர்கள் எவர்?" என்று அவள் அவனிடம் கேட்டாள். அவனால் மறுமொழி சொல்லமுடியவில்லை.

அவளுடனான காமம் அவனுக்கு பெருங்கொண்டாட்டமாக இருந்தது. குதிரையை அவனால் வெல்லவே முடியவில்லை. அது அவனை வைத்து விளையாடியது. பின்னர் தூக்கி வீசிவிட்டு அப்பால் சென்றது. அவள் மிகச் சிலநாட்களிலேயே அவனிடமிருந்து விலகினாள். அதன்பின் மாளிகையிலிருந்தும் அகன்றாள். மாளிகைக்கு வெளியே ஒரு சிறு கொட்டகை அவள் இடமாகியது. அங்கே அவளை நாடி விறலியரும் பாணரும் வந்தனர். அவர்களுடன் அவள் சொல்லாடினாள். இல்லம் அதிர வெடித்து நகைத்தாள். அங்கே அவள் மகிழ்ச்சியுடன் இருப்பதை கண்டான். அன்னை "அது காட்டுவிலங்கு. இல்லத்தில் அடங்காது" என்றாள். "ஆம், அதை நான் முன்னரே உணர்ந்திருந்தேன். நீங்கள் எவரையோ பழிவாங்க எண்ணினீர்கள். பழிவாங்கிவிட்டீர்கள்" என்றான். அன்னை அவனை கூர்ந்து நோக்கினாள். சொல்லிழந்து நின்றுவிட்டு திரும்பிச் சென்றாள்.

அவன் அவளிடம் நெருங்க எண்ணினான். தன் கல்வியை, அரண்மனைப் பொறுப்பை கடந்து அவளிடம் சென்றுவிட விழைந்தான். ஆனால் அவனால் தன் எல்லையை கடக்கவே

இயலாதென்று அறிந்திருந்தான். அவள் தன் ஆட்டர்களுடன் கொண்டாடுவதை நோக்கி நின்றிருந்தபோது ஒருமுறை ஓர் ஆட்டன் அவளை பின்னிருந்து அணைத்து ஆடுவதைக் கண்டான். அந்தத் தொடுகையின் பொருள் அவனுக்குப் புரிந்தது. அதன்பின் அவளை நோக்குவதையே அவன் தவிர்த்தான். புரவிக்கு இணை புரவியேதான் என அன்னையிடம் சொல்ல விழைந்தான்.

அன்னை அவன் உணர்ச்சிகள் அனைத்துக்கும் அப்பால் என திகழ்ந்தாள். இரு துணைவியர் அமைந்த பின்னரும் ஏன் அவன் மாளிகைக்கு வராமல் அரண்மனையிலேயே தங்கிவிடுகிறான் என அவள் கேட்டதில்லை. அவளுக்கு பேரரசர் திருதராஷ்டிரர் அளித்த அந்த மாளிகை அரண்மனையை ஒட்டியே இருந்தது. இளமையில் திருதராஷ்டிரர் அங்கே நாள்தோறும் வரும் வழக்கமிருந்தது. பெரும்பாலான நாட்களில் அன்னை தன் ஏவற்பெண்டுகளுடன், இசைக்கருவிகளுடன் புஷ்பகோஷ்டத்திற்கு செல்வாள். பேரரசரின் மாளிகையிலேயே தனியறை அவளுக்கு அளிக்கப்பட்டிருந்தது. பேரரசருக்கு முன் இசைமீட்டி பரிசில்கொள்ளும்பொருட்டு வெவ்வேறு ஊர்களிலிருந்து வரும் சூதர்களையும் விறலியரையும் அவள்தான் முதலில் எதிர்கொள்வாள். அவர்களின் திறனை தான் மதிப்பிட்டு அறிந்து அவர்களை பேரரசர் முன் அமர்த்துவாள்.

அவர்களைப்பற்றி அவள் பேரரசரிடம் கூறும்போது அவர்களுக்குள் சுருக்கமான சொற்பரிமாற்றமே நிகழும். பெரும்பாலும் திருதராஷ்டிரர் முனகலாகவே மறுமொழி உரைப்பார். அன்னையின் முகமும் ஏவலர்களுக்குரிய பணிவையும் அச்சத்தையும் விலக்கத்தையுமே காட்டும்.

ஆனால் அவள் விழிகள் கனிந்திருக்கும். அவள் சொற்களில் தனியான ஒரு மென்மை அமைந்திருக்கும். அவர் அவளிடம் சொல்லும் சொற்களில் வேறெவரிடமும் இல்லாத கனிதல் இருக்கும். அது தன் உளமயக்கா என அவன் எண்ணியதுண்டு. பலமுறை அவன் அதை உற்றுநோக்கினான். பின்னர் அந்தக் கனிவு அதேபோல சங்குலனிடம் அவர் பேசும்போது வெளிப்படுவதை கண்டான்.

அதை உணர்ந்தபோது தன்னுள் பொறாமைக்கு மாற்றாக ஓர் உவகைதான் எழுந்தது என்பதை அவனே விந்தையாக எண்ணிக்கொண்டான். அன்னையை அவன் நோக்கும் கோணமே மாறுபட்டது. 'வைசியர்குலத்து அரசி' என்னும் சொல் முன்னர் அவனுக்கு சற்றே ஒவ்வாததாக இருந்தது. அச்சொல் அதன்பின் ஒரு அழகு கொண்டுவிட்டதாகப் பட்டது. அவள் ஷத்ரியப்பெண் அல்ல. அரசகுடிப் பெண்கள் சூடிக்கொள்ளவேண்டிய அனைத்தையும் கழற்றிவிட்டு அவரை மேலும் அணுக்கமாகச் சென்று அறிய வாய்ப்பு கொண்டவள். அவள் ஷத்ரியக் குருதிகொண்டமையால் அவன் சூதன். அவள் அவன் அன்னையென்பதால் சூதப்பெண். சூதர்களுக்கு இசையும் கவிதையுமே மொழி.

அவர்கள் இசைகேட்கும்போதும் அவன் உடன் அமர்ந்து கேட்டுக்கொண்டிருப்பான். இசை நிகழ்ச்சி தொடங்கும்போது அன்னை பேரரசரையும் இசைக்கலைஞர்களையும் மாறிமாறி பார்த்துக்கொண்டிருப்பாள். அவர்களின் இசையை அவர் ஏற்றுக்கொள்ளவேண்டுமே என அஞ்சுபவள்போல. திருதராஷ்டிரர் எல்லா இசையையும் முகம்சுளித்து விருப்பமில்லாதவர் போலத்தான் கேட்பார். மூக்கினூடாக அவர் மணம் முகர்வதுபோலத் தோன்றும். இசையறிவோரிடம்

வெளிப்படும் முகமலர்வும் தலையசைப்பும் விரல்தாளமும் அவரிடம் வருவதில்லை. ஐயம்கொண்டவர் போலவோ உளவிலக்கம் அடைந்தவர் போலவோ தோன்றுவார். ஒரு தருணத்தில் அவரிடமிருந்து மெல்லிய முனகல் ஒன்று வெளிப்படும். அது அச்சூழலை ஒரே கணத்தில் மாற்றிவிடும். அன்னை முகம் மலர்வாள். இசைஞர்களும் அவ்வோசையை உணர்ந்துகொள்வது விந்தைதான். அனைவரும் இயல்பாகி, உடல் குழைய, முகம் மலர தங்கள் தன்னுணர்வுகளை இழந்து இசையில் ஆழ்வார்கள். பின்னர் அங்கே இசை மட்டுமே திகழும், பிறர் அதன் உறுப்புகளென்றிருப்பார்கள்.

அரிதாக திருதராஷ்டிரர் முனகலோசை எழுப்புவார். அது சில தருணங்களில் மெல்லிய கேவலோசையாகத் தோன்றும். வலிகொண்டவர் போலவோ எதையோ நினைவுகூர்ந்தவர் போலவோ எழமுயல்பவர் போலவோ. அத்தருணம் இசையின் உச்சமென அனைவருமே உணர்ந்திருப்பார்கள். இசை முடிந்தபின் திருதராஷ்டிரர் அசையாது அமர்ந்திருப்பார். அவர் விழிகளிலிருந்து நீர் வழிந்துகொண்டிருக்கும். அன்னை அனைவரையும் எழுந்துசெல்லும்படி கைகாட்டுவாள். அவர்கள் இசைக்கலங்களை அங்கேயே விட்டுவிட்டு விலகிச்செல்வார்கள். அன்னை மட்டுமே அவருடன் அப்போது இருப்பாள். அப்பால் சங்குலன் நின்றிருப்பான். வேறெவரும் அப்போது உடனிருக்க இயலாது. பேரரசி காந்தாரியோ, துரியோதனனோ, நூற்றுவர் மைந்தரோ, துச்சளையோ, அவனோ கூட. அத்தனை தனிமையான ஓர் இடம்.

நீர்ச்சுடர் - 35

பகுதி ஐந்து : எஞ்சும் கனல் – 5

யுயுத்ஸு துயில்கொண்டுவிட்டான். என்ன, துயில்கிறோமே, அரசர் ஆணையிட்ட பணி எஞ்சியிருக்கிறதே என அவன் அத்துயில் மயக்கத்திற்குள்ளேயே எண்ணிக்கொண்டிருந்தான். அவன் பிடியிலிருந்து சித்தம் நழுவி நழுவிச் சென்றுகொண்டிருந்தது. மெல்ல அவனை நோக்கும் விழிகள் பிறருடையவை ஆயின. அவன் உடல்மேல் அந்நோக்குகள் பதிந்திருந்தன. விழிகளே தன்னை அலைக்கழிக்கின்றன. நோக்கும் விழிகள், விலகிக்கொள்ளும் விழிகள். ஒரு விழி மின்னி மறைந்தது. அருகணைந்து அகன்ற பின்னரும் அது எவருடையதென்று அறிய முடியவில்லை. அவ்வினாவே கரைந்தழிய அவன் தான் துயில்வதை தானே உணர்ந்துகொண்டிருந்தான்.

அஸ்தினபுரியில் என்றும் அவன் ஒரு தத்தளிப்பையே பிறருக்கு அளித்தான். சூதன், ஆனால் பேரரசரின் அன்புக்குரிய மைந்தன். அரசரால் தம்பியரில் ஒருவனாகவே எண்ணப்பட்டவன். ஆகவே இளவரசன். அவனிடம் எப்படி நடந்துகொள்வது என அந்தணரும் ஷத்ரியரும் வைசியரும் குழம்பினர். அவனுக்கு அவர்கள் மதிப்பளித்துப் பணிகையில் உடனிருப்போர் உள்ளங்களை எண்ணி அடையும் தவிப்பு அவர்களின் விழிகளில் வந்து மறைந்தது. இன்னொருவர் வணங்குகையில் அவர்கள் விழிகளில் இளிவரல் துளியிலும் துளியாக மின்னியது. அந்த முதற்கணக் குழப்பத்தை இறுதிவரை அவர்கள் கடக்கவே இல்லை. விழிகளில் அதை முதற்கணமே பார்த்துவிடும் வழக்கத்திலிருந்து அவன் மீளவும் இல்லை.

அஸ்தினபுரியின் அத்தனை விழிகளிலும் அது இருந்தது, அதை பொறாமை என்றோ, ஏளனம் என்றோ, அச்சம் என்றோ சொல்லமுடியும். விழிகளினூடாக அவன் சென்றுகொண்டிருந்தான். இயல்பாக அஸ்தினபுரியின் புதிய கோட்டைக்காவல்பெண்ணின் விழிகளை நினைவுகூர்ந்தான். போருக்குப் பின் அவன் அஸ்தினபுரிக்குள் நுழைந்தபோது அவள் அவனை எதிர்கொண்டாள். புரவியை தொலைவிலேயே காவல்பெண்டுகள் பார்த்துவிட்டிருந்தனர். அவர்களுக்கு அவன் எவர் என முதலில் தெரிந்திருக்கவில்லை. அவனுடைய குதிரையிலிருந்த இலச்சினையைக் கண்டமையால் அரசகுடியினன் என எண்ணினர். ஆகவே அவளுக்கு செய்தி தெரிவித்தனர்.

அவள் குறுகிய கோட்டைப்படிகளில் சிறிய வரையாட்டுக்குட்டி என இயல்பாக நடந்து இறங்கினாள். அந்தப் படிகளில் அன்றாடம் நூறுமுறை ஏறியிறங்கினாலொழிய அந்த நிலைக்கோள் அமைவதில்லை. சிறிய உடல் மேலும் மெலிந்து சிறுமியைப் போலவே இருந்தாள். கூரிய முகம், கூரிய மூக்கு. சற்றே பொன்மின்னும் கூந்தல். "வணங்குகிறேன், இளவரசே" என்றாள். அவன் அவள் விழிகளில் இருந்த அச்சமின்மையை நோக்கியபடி "நான் யுயுத்ஸு" என்றான்.

அவள் விழிகளில் எந்த மாறுதலும் உருவாகவில்லை. "பொறுத்தருள்க இளவரசே, நான் இப்போதுதான் நேரில் பார்க்கிறேன்" என்றாள். அவன் அவள் விழிகளையே நோக்கியபடி "நான் போருக்குப் பின் இப்போதுதான் உள்ளே நுழைகிறேன்" என்றான். "அஸ்தினபுரிக்கு இப்போது இந்திரப்பிரஸ்தத்தின் தூதனாக வந்திருக்கிறேன்." அவள் விழிகளில் ஏதேனும் மாறுதலை அவன் எதிர்பார்த்தான்.

அஸ்தினபுரியின் குடிகள் ஒவ்வொருவர் விழிகளிலும் எழும் ஒன்று. அதன் முதல் தீண்டல். அவன் அந்நகரைவிட்டுச் செல்கையில் அவனுக்குப் பின் அவை நச்சுமுள்காடு என செறிந்திருந்தன. அவள் விழிகள் சிறுமியின் விழிகள்போல் மாறாத கள்ளமின்மையுடன் இருந்தன. அவன் புன்னகையுடன் "என்னை சூதர்கள் விபீஷணன் என்கிறார்கள்" என சேர்த்துக்கொண்டான்.

அவள் "ஆம்" என்றாள். அது அவனை திடுக்கிடச் செய்தது. எனில் அவளுக்கு அனைத்தும் தெரியும். அது அறியாமையின் கள்ளமின்மை அல்ல. "ஆனால் இன்று இங்கே எவரும் அதையெல்லாம் எண்ணவில்லை. போர் அனைவரையும் நெடுந்தொலைவு கொண்டுவந்துவிட்டிருக்கிறது. போருக்குப் பின் நகர்க்குடிகள் பெரும்பாலானவர்கள் விட்டுச்சென்றுவிட்டனர். இங்கிருப்போருக்கு இன்று கடந்தகாலமே இல்லை என தோன்றுகிறது." அவன் அச்சொற்களால் ஆறுதல் அடைந்தான். அவளிடம் அவன் எதிர்பார்த்ததே அச்சொல்தான். அதை அவள் அறிந்திருக்கிறாளா? அறிந்தே அதை சொன்னாள் என்றால் அவள் பிறர் உளம்புகும் ஆற்றல்கொண்டவள். அதைவிட பிறரை ஆற்றுப்படுத்தும் அளிகொண்டவள்.

"நீ என்ன நினைக்கிறாய்?" என்று அவன் நேரடியாகவே அவளிடம் கேட்டான். அவளைப்போன்ற ஒருத்தியிடம் ஏன் அதை கேட்கிறோம், துணுக்குறப்போகிறாள் என அவன் எண்ணினான். அவளை மேலும் அணுகி நோக்க விழைந்தானா? அல்லது அனலையும் ஆழத்தையும் எல்லைவிளிம்புவரை சென்று நோக்கும் விலங்கின் ஆர்வமா அது? அவன் அவ்வினாவை மீட்டு எடுத்துவிடமுடியுமா என ஏங்கினான்.

ஆனால் அவள் மறுமொழியை எதிர்பார்த்தான். முந்தைய ஆறுதல்மொழி வெறும் தற்செயலாக இருக்கலாம். நஞ்சுகொண்ட கூர் இம்முறை எழலாம். ஆனால் அவள் மிக இயல்பாக "நீங்கள் உங்கள் உள்ளத்தில் எழுந்த அறத்தின்பொருட்டு எடுத்த முடிவு அது. அதுவே உங்களுக்கு உகந்தது" என்றாள்.

அவன் அகத்தில் முடிச்சுகள் அவிழலாயின. அஸ்தினபுரிக்குக் கிளம்பிய கணம் முதல் அவனுள் பெருகி இறுகிக்கொண்டிருந்தவை அவை. மெய்யாகவே இவள் என்னை ஆற்றுகிறாள். இவள் அதை எண்ணாமலிருக்கலாம். இயல்பிலேயே பிறரை ஆற்றுபவளாக இவள் இருக்கலாம். அவ்வண்ணமும் பெண்கள் உண்டு. அரசி பானுமதியைப் போன்றவர்கள். "நான் எடுத்த முடிவில் ஐயமில்லாதவன் எனில் ஏன் இதை உன்னிடம் கேட்கிறேன்?" என்று அவன் கேட்டான். மீண்டும் ஓர் அடிவைத்து அணுகுகிறேன். எனக்கு உறுதிப்பாடு தேவையாக இருக்கிறது. இவளை உறுதிசெய்துகொண்டு எதை அடையவிருக்கிறேன்?

அவள் புன்னகைத்து "உங்கள் முடிவில் உங்களுக்கு ஐயமில்லை. அது உங்கள் விழிகளில் தயக்கமேதும் இல்லை என்பதனால் தெரிகிறது. நீங்கள் உள்ளூர வேறேதோ ஒன்றை எண்ணி குழம்பிக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவேதான் என்னிடம் கேட்கிறீர்கள்" என்றாள். அப்போதுதான் அதை அவனே உணர்ந்து திடுக்கிட்டான். அஸ்தினபுரிக்கு வருவதற்காகக் கிளம்பிய பின் ஒரு கணம்கூட அவன் அன்னையைப்பற்றி எண்ணியிருக்கவில்லை. அஸ்தினபுரியை உதறிவிட்டு யுதிஷ்டிரனிடம் செல்லும் முடிவை அவன் அன்னையிடம் தெரிவித்தபோது அவள் சொல்லளிக்கவில்லை. அன்னை

அவனிடமிருந்து அனைத்து வகையிலும் விலகி நெடுநாட்களாகிவிட்டிருந்தது. பின்னர் அதை எடுத்து நேராகச் சென்று துரியோதனனிடம் சொன்னான்.
அரண்மனையிலிருந்தே நகர்நீங்கினான்.

“நான் பேரரசி காந்தாரியை சந்திக்கவேண்டும்” என்று அவன் சொன்னான். “உங்கள் பணி சிறக்கட்டும்...” என அவள் தலைவணங்கினாள். “நீங்கள் அரண்மனைக்குச் செல்வதற்குள் உரியவற்றை நான் ஆணையிட்டிருப்பேன். நீங்கள் நீராடி ஆடைமாற்றிக்கொண்டு பேரரசியை சந்திக்கலாம். நீங்கள் இங்கே விட்டுச்சென்ற அறை அவ்வண்ணமே நீடிக்கிறது.” அவன் அவளை மீண்டும் உள அதிர்வுடன் நோக்கினான். “நீங்கள் விட்டுச்சென்ற எதுவும் அங்கே மாறியிருக்காது” என அவள் புன்னகையுடன் சொன்னாள். அவன் “ஆம், அது நன்று” என்றான். அவள் “இங்கே பெரும்பாலும் ஏவற்பெண்டுகள்தான். அவர்களில் பலருக்கு முறைமை அறியாத சிக்கல் உள்ளது” என்றாள்.

அவன் அவளையே நோக்கிக்கொண்டிருந்தான். அவளைப்பற்றி ஒற்றர்கள் சொல்லி அவன் அறிந்திருந்தான். அவளை நேரில் பார்ப்பதற்கு ஒரு கணத்திற்கு முன்னர்கூட அவள் பெயர் நினைவிலிருந்தது. அவளைக் கண்டபின் அவளைப்பற்றிய எண்ணங்களில் அப்பெயர் மறைந்தது. அவன் அகத்தின் ஒரு பகுதி அவள் பெயரை எண்ணி துழாவிக்கொண்டே இருந்தது. “உன் பெயர் என்ன?” என்றான். “சம்வகை” என்று அவள் சொன்னாள். “ஆம், சம்வகை. காற்றின் பெயர். நன்று” என்றபின் “நீ மச்சர்குலத்தவள் என்றார்கள்?” என்றான். “ஆம், அன்னைவழியில்” என்றாள். மேலும் என்ன பேசுவதெனத் தெரியாமல் குழம்பி “நன்று...” என அவன் திரும்பினான்.

மீண்டும் புரவியின் கடிவாளத்தை இழுத்து நிறுத்தி “நான் குழம்பியிருப்பதற்கு விடை கிடைத்தது” என்றான். அவள் புன்னகைக்க அவன் புரவியைச் செலுத்தினான்.

ஆழ்ந்த துயிலில் அவன் படுத்திருக்க அறைக்கதவைத் திறந்து திரௌபதி உள்ளே வந்ததை உணர்ந்தான். அவன் எழமுயன்றாலும் உடல் எடைகொண்டு படுக்கையோடு அழுந்தியிருந்தது. திரௌபதி அறைநடுவே ஓங்கி நின்று அவனை குனிந்து நோக்கினாள். விழிகள் நீர்மைகொண்டு சிவந்திருந்தன. சீற்றத்துடன் ஏதோ சொல்வதுபோன்ற முகம். அச்சத்தில் அவன் நடுங்கினான். உடலை அசைக்க முயன்றபோது அது கல்லென்று ஆகிவிட்டிருப்பதை உணர்ந்தான். அவள் திரும்பி நோக்கினாள். அறைவாயிலில் வேறொரு அசைவு. அவள் பின்வாங்கி பிறிதொரு வாயிலினூடாக மறைந்தாள். அங்கே ஒரு வாயில் இருக்கிறதா என்ன? இது அஸ்தினபுரியின் அரண்மனையில் அவன் அறை. பிறர் நுழையமுடியாத அறை. இத்தனிமையில் பிறர் கனவுகளாகவே நுழைய முடியும். அவ்வாயிலில் நிற்பவர் எவர்?

அவள் அவனருகே வந்தாள். அது சம்வகை என அவன் அடையாளம் கண்டான். அவள் எப்படி உள்ளே வந்தாள்? அவன் பேரரசி காந்தாரியை சந்திக்கச் செல்லவேண்டும். நீராடி ஆடைமாற்றிக்கொள்ளவேண்டும். பேரரசி எவ்வண்ணம் இருக்கிறார் என எவரிடமேனும் கேட்க விழைந்தான். ஆனால் அரண்மனையில் அனைத்து ஏவல்முகங்களும் அவனறியாதவையாக இருந்தன. அவனையே பெரும்பாலும் எவருக்கும் தெரியவில்லை. பேரரசியை சந்திப்பதற்கு முன் அரசி பானுமதியை சந்திக்கலாம். ஆனால் அவள் விழிகளை

நினைவுகூர்ந்ததுமே அவன் உள்ளம் பின்னடைந்தது. ஆனால் வேறுவழியில்லை, அவரை சந்தித்தேயாகவேண்டும். ஒன்றும் நிகழாது, நகுலன் அவரை சந்தித்திருக்கிறார். ஆனால் அவர் அவர்களின் குருதி. களம்நின்று எதிர்த்த ஷத்ரியன். அவன் வேறு.

அவள் அவனருகே குனிந்து "செல்க!" என்றாள். அவன் "நீ எப்படி இங்கே வந்தாய்?" என்றான். "செல்க!" என்று அவள் சொன்னாள். "நான் அஞ்சுகிறேன்" என்று அவன் அவள் விழிகளை நோக்கியபடி சொன்னான். அவள் விழிகள் அளிநிறைந்திருந்தன. முலையூட்டும் அன்னையின் விழிகள் என. "நாம் கருவிகள்" என்று அவள் சொன்னாள். "நீங்கள் ஏந்தியிருப்பது ஒரு கொடியை." அவன் "என்ன சொல்கிறாய்?" என்றான். "நாம் என்னவென்று அறியாதவற்றை செய்கிறோம். ஆகவே எதையும் அஞ்சவேண்டியதில்லை." அவன் "ஆம்" என்றான். புன்னகைத்து "நான் நன்கறிந்தவையே. ஆனால் நீ சொல்லவேண்டியிருக்கிறது" என்றான்.

விழித்துக்கொண்டபோது அவன் உள்ளம் எளிதாகிவிட்டிருந்தது. நீண்ட இரவில் மெய்மறந்து துயின்று இளங்குளிர் நிறைந்த புலரியில் எழுந்துகொண்டதைப்போல. அவன் முகம் புன்னகை கொண்டிருந்தது. குடிலை விட்டு வெளிவந்து ஒரு கணம் நின்றான். உள்ளத்தால் பயணம் செய்து அர்ஜுனனின் குடிலை அடைந்து அங்கிருந்த ஏவலனிடம் அவர் இருக்கிறாரா என்று வினவினான். இல்லை என்று அறிந்து திரும்பி வந்தான். மீண்டும் ஒரு உளப்பயணம் வழியாக இளைய யாதவரின் குடிலை அடைந்து அங்கு

அவர்கள் இருக்கிறார்களா என்று உசாவினான். அவர்கள் அங்கில்லை என்பதை அறிந்தபின் திரும்பி வந்தான்.

மீண்டுமொரு உளப்பயணம் தொடங்குவதற்குள்ளாகவே அவன் கிளம்பிச்சென்று தன் புரவியில் ஏறிக்கொண்டான். புரவியைச் செலுத்தி குடில்களைக் கடந்து குறுங்காட்டுக்குள் நுழைந்து ஊடே ஓடிய காலடிவழியில் குறும்புதர்களை ஊடுருவிச் சென்றான். கங்கை நோக்கி இறங்கும் சிற்றோடைகள் பரவியிருந்த அக்காட்டுக்குள் முயல்களும் கீரிகளும் நிரம்பியிருந்தன. குதிரைகளின் குளம்படியோசை கேட்டு அவை புதர்களை ஊடுருவிக் கலைந்தோடின. தலைக்கு மேல் பறவைகள் எழுந்தெழுந்து அமர்ந்தன. காட்டிற்குள் மாலை ஏற்கெனவே வந்துவிட்டிருந்தது. இலைத்தழைப்புகளுக்குள் இருந்து வந்த ஒளிக்குழாய்கள் சரிந்து நிலம் தொட்டிருந்தன. நீராவி நிறைந்திருந்த நிழலிருளுக்குள் அவ்வப்போது ஒளி பட்டு சுடர்ந்தும் அணைந்தும் அவன் சென்று கொண்டிருந்தான்.

பின்னர் காட்டிற்குள் சிற்றோடையொன்று சுழித்து சுனையாகப் பொங்கி எழுந்து விழுந்த சிறிய சரிவில் இளைய யாதவரும் அர்ஜுனனும் அமர்ந்திருப்பதை அவன் பார்த்தான். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்காமல், ஒருவர் இருப்பதை பிறர் அறியாதவர்போல் இருந்தனர். இளைய யாதவர் கண்களை மூடி ஊழ்கத்திலென அமர்ந்திருந்தார். அர்ஜுனனின் கண்கள் விழித்திருந்தன. ஆனால் அவன் எதையும் பார்ப்பதுபோல் தெரியவில்லை. அவர்களைச் சூழ்ந்து நீரின் ஒலி நிறைந்திருந்தது. நீரின் ஒலி கொந்தளிப்பும் கொப்பளிப்பும் என கணந்தோறும் மாறுவது. ஆனால் கேட்டுக்கொண்டே இருக்கையில் மாறாச் சுதி கொண்ட ஒழுக்கு என எண்ணச்செய்வது.

மேலும் அணுகியபோது அவர்கள் இருவரின் உடல்களையும் அவன் கூர்ந்து பார்த்தான். அர்ஜுனனின் கையில் விரல்கள் அசைந்துகொண்டிருந்தன. காற்றில் எதையோ எடுப்பதுபோல. அறியாத எதையோ துழாவுவதுபோல. ஒன்றையொன்று தொட்டறிந்து கசந்து மீண்டும் தொடுவதுபோல. இளைய யாதவர் உடலில் விரல்கள் தளர்ந்து ஒன்றையொன்று தழுவிக்கோத்து மடியில் அமைந்திருந்தன. அவர் நெற்றியிலணிந்திருந்த பீலிவிழி மட்டும் காற்றில் நலுங்கிக்கொண்டிருந்தது. காற்றில் வரைந்துவைக்கப்பட்ட அழகிய ஓவியம்போல் தெரிந்தது அவருடைய தோற்றம்.

அவன் அந்த முகத்திலிருந்த அழகிய புன்னகையை பார்த்தான். விழி மூடி இருக்கையில் புன்னகைக்கும் முகங்கள் மிக அரிது. முற்றிலும் தன்னுள் ஆழ்ந்து இருக்கையிலும் புன்னகைப்பவர்கள் தங்களை வென்றவர்கள், துயரற்றவர்கள். மிக அரிதாக முனிவர்களிடம் மட்டுமே அப்புன்னகையை அவன் கண்டிருக்கிறான். இவ்வுலகனைத்தையும் கடந்தவர்கள், ஊழ்கத்தால் அறிவை அறிந்து அறிவைக் கடந்து அமைந்தவர்கள் அடைந்து முகம்சூடும் அந்தப் புன்னகையை இங்குள்ள அனைத்திலும் படர்ந்து அனைத்தையும் உணர்ந்து அனைத்தையும் கையாள்பவன் அணிந்திருக்கிறான். அறியாது ஒரு மெய்ப்பு வந்து அவன் உடலைக் கடந்து சென்றது, குளிர்ந்த நீர்த்துளி ஒன்று உடலில் விழுந்ததுபோல.

அவன் அணுக புரவியின் குளம்படிகளை அர்ஜுனன் கேட்டுவிட்டிருந்தான். ஆயினும் அவன் பார்வை வெறுமனே அவன் மேல் நிலைத்திருந்தது. புரவியை நிறுத்திவிட்டு இறங்கி அணுகிச் சென்று அவன் தலைவணங்கினான். அப்போதும்கூட அர்ஜுனன் அவனைப் பார்த்ததுபோல் தெரியவில்லை. மாறாக

இளைய யாதவர் விழி திறந்து அவனைப் பார்த்து புன்னகைத்து "கூறுக இளவரசே, அஸ்தினபுரியில் அனைத்தும் சீராக அமைந்துள்ளன அல்லவா?" என்றார். அவனுக்கு அந்தத் தொடக்கம் உவப்பாக இருந்தது. "ஆம், சுரேசர் அனைத்துச் சரடுகளையும் ஒன்றோடொன்று பின்னி மீண்டும் அந்த அமைப்பை உருவாக்கிவிட்டார். அது தன் விசையால் தான் இயங்கத்தொடங்கிவிட்டது. இனி அதை மெல்ல விரிவுபடுத்தி தொலைநாடுகளுக்கும் அவர் கொண்டு செல்வார்" என்று யுயுத்ஸு சொன்னான்.

இளைய யாதவர் "ஷத்ரியர் அடங்காது குலைக்க அந்தணர் சலிக்காது கட்ட இது இவ்வண்ணம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது" என்று புன்னகைத்தார். யுயுத்ஸுவும் புன்னகைத்து அர்ஜுனனை நோக்கினான். அவர் தன் சொற்களை கேட்கிறாரா? "நான் இன்று காலைதான் அஸ்தினபுரியிலிருந்து வந்தேன். அருகிலிருக்கும் கோட்டைகளுக்குச் சென்றுவிட்டு அஸ்தினாபுரிக்கு சென்றேன்" என்றான். "பேரரசியும் பேரரசரும் இங்கே வந்துவிட்டிருக்கிறார்கள். அங்கே அவர்களின் இன்மை எவ்வகையிலும் உணரப்படவில்லை. ஏனென்றால் நாள்தோறும் மக்கள் விலகிச்செல்ல அஸ்தினபுரி வற்றிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கூட்டத்தினர் அகல்கையிலும் மொத்த நகருமே நுட்பமாக உருமாறிக்கொண்டிருக்கிறது."

"ஆம், அதன் அமைப்பும் உடனே உருமாறும்... சுரேசர் தொடர்ந்து அதை சீரமைத்தபடியே இருக்கவேண்டும்" என்ற இளைய யாதவர் இயல்பாக "பேரரசியை பார்த்தாயா?" என்றார். "இல்லை, இனிமேல்தான் பார்க்கவேண்டும்" என்றான் யுயுத்ஸு. "வந்ததுமே அரசரை பார்த்தேன். அவருடன் சென்று பாஞ்சாலத்து அரசியையும் பார்த்தேன்." இளைய யாதவர்

“அரசியிடமிருந்து செய்தியுடன் வந்திருக்கிறாயா?” என்று இயல்பாக கேட்டார். “ஆம், அரசி அரசருக்கு ஆணையிட்டார். அரசரின் ஆணையுடன் நான் இளையவரை பார்க்க வந்தேன்” என்றான். அர்ஜுனன் “கூறுக!” என்றான். அவன் கேட்டுக்கொண்டிருப்பதை அப்போதுதான் யுயுத்ஸு உணர்ந்தான். அவன் தயங்க இளைய யாதவர் “சொல்க!” என்றார்.

“அரசி போர் இன்னும் முடியவில்லை என்கிறார். வஞ்சம் ஒழியாமல் நீர்க்கடன் முடிக்க அவர் ஒப்பப்போவதில்லை என அறிவித்தார்.” அர்ஜுனன் முனகினான். “அஸ்வத்தாமனின் நெற்றிமணியுடன் வரவேண்டும் என்று அரசி ஆணையிட்டார். அதை இளையவருக்கு அரசர் ஆணையிடுகிறார்.” அர்ஜுனன் பெருமூச்சுடன் “இவர்களுக்கு விழைவும் வஞ்சமும் ஒருபோதும் ஓயப்போவதில்லை” என்றான். “விழைவு செல்லாத இடத்தில் வஞ்சத்தை ஊர்தியாக்கிக் கொள்கிறார்கள்.” இளைய யாதவர் சிரித்து “மானுடர் இரு வகை. குவிபவர்களுக்கு தாங்களே போதும். விரிபவர்களுக்கு உலகே வேண்டும்” என்றார். “இல்லை, அரசரிடம் சொல்க! நான் போருக்கு எழும்நிலையில் இல்லை. இனி எப்போதும் காண்டீபத்தை கையில் எடுக்கப்போவதில்லை” என்றான் அர்ஜுனன்.

“அது மூத்தவரின் ஆணை” என்று யுயுத்ஸு சொன்னான். “ஆம், அதை அறிந்தே இதை சொல்கிறேன். இனி எவருடைய ஆணையையும் நான் தலைக்கொள்ளப் போவதில்லை” என்றான் அர்ஜுனன். “அரசி சொல் அளிக்கவில்லை என்றால் மைந்தருக்கு தந்தையர் என நீங்கள் ஐவரும் நீரளிக்க முடியாது” என்றான் யுயுத்ஸு. “எனில் அவர்கள் விண்ணுலகு அடையவேண்டியதில்லை. அவர்கள் இங்கேயே அலையட்டும்.

அது அவர்களின் அன்னையின் ஆணை என்றால் அவ்வண்ணமே ஆகுக!" என்றான் அர்ஜுனன். கசப்புடன் "தன் வஞ்சத்தின்பொருட்டு உயிர்நீத்தவர்களையும் அவள் கருவியாக்குவாள் என்றால் அதை தெய்வங்களே கையாளட்டும். அவளை இனி மானுடர் நடத்த இயலாது" என்றான்.

யுயுத்ஸு "இது அரசியின்..." என சொல்லத் தொடங்க அர்ஜுனன் "அவளுடைய வஞ்சத்தால் அழிந்தது குருகுலம். பாரதவர்ஷமே குருதியால் மூடியது. இன்னும் வஞ்சம் கொண்டிருக்கிறாளா? இனி விண்ணுலகை அழிக்கவேண்டுமா அவளுக்கு? மூன்று தேவர்களும் போரிட்டு மறையவேண்டுமா?" என்று கூவினான். கசப்பும் துயரும் கலந்த உரத்த குரலில் "பெண்சொல் கேட்ட குலம் வாழ்ந்ததில்லை என்பது மெய்யே. ஏனென்றால் ஒன்றில் அமைந்தபின் அதிலிருந்து விலகாமலிருப்பது பெண்களின் இயல்பு. தங்கள் அடையாளங்களையும் முழுமையையும் வெளியே தேடுபவர்கள் அவர்கள். போதும், இனி என்னால் இயலாது. வீழ்த்திய குருதியைக் கழுவவே நான் இன்னும் செய்யவேண்டிய தவங்கள் பெரிது" என்றான்.

"நான் செல்கிறேன், இளையோனே" என்று பீமனின் குரல் கேட்ட பின்னரே யுயுத்ஸு அவனை கண்டான். மரத்திற்கு சற்று பின்னால் கையில் ஒரு மானுடன் பீமன் நின்றிருந்தான். "நான் பெண்சொல் கேட்டவன், அதன்பொருட்டு எவ்வகையிலும் துயரோ வருத்தமோ கொள்ளவில்லை. இது அன்னையர் நிலம். இங்கே பெண்சொல்லே என்றும் திகழ்க!" மானை கீழே விட்டபடி "நன்று, நான் இப்போதே இங்கிருந்தே கிளம்புகிறேன்" என்றான். "மூத்தவரே, என்ன சொல்கிறீர்கள்? நீங்கள் செல்வது

அஸ்வத்தாமனை எதிர்த்து... அவனை வெல்ல இன்று மூவிழி அண்ணலால் மட்டுமே இயலும்" என்றான் அர்ஜுனன். "நீ அஞ்சுகிறாயா என்ன? நான் அஞ்சவில்லை. இனி எனக்கு அஞ்சுவதற்கென ஏதுமில்லை" என்றான் பீமன்.

"ஆம், நான் அஞ்சுகிறேன், எனக்காக அல்ல. உங்களுக்காக. வேண்டாம்... சொல்வதை கேளுங்கள்" என்று அர்ஜுனன் கூவியபடி எழுந்தான். "அது அவள் எனக்கிட்ட ஆணை" என்றபின் பீமன் திரும்பி காட்டுக்குள் சென்றான். "யாதவரே, அவரை தடுத்து நிறுத்துக!" என்று அர்ஜுனன் கூவினான். இளைய யாதவர் "அவர் எப்போதுமே அவ்வாறுதான்" என்று புன்னகைத்து "கல்யாண சௌகந்திகத்தின் நறுமணம்... அது எளிதில் மறைவதில்லை" என்றார். "அவரை செல்லவிடக்கூடாது. அவர் அஸ்வத்தாமனை எதிர்கொள்ளலாகாது" என அர்ஜுனன் பதறினான். "அதற்கு ஒரே வழி, நீ செல்வதுதான்... இது உன் போர்" என்று இளைய யாதவர் சொன்னார். "யாதவரே, என்னால் போரிட முடியாது. என் தோள் தளர்ந்திருக்கிறது. காண்டீபத்தை கைகள் மறந்தேவிட்டன!" என்றான் அர்ஜுனன். "எனில் அவரே அஸ்வத்தாமனை எதிர்கொள்ளட்டும்" என்றான் யுயுத்ஸு.

ஒரு கணம் தவித்தபின் "நான் கிளம்புகிறேன்... அஸ்வத்தாமனை நான் எதிர்கொள்கிறேன்" என்று அர்ஜுனன் சொன்னான். "மூத்தவரை தடுத்தாகவேண்டும்... அவரை முந்தவேண்டும்." பீமன் தன் புரவியில் ஏறிக்கொண்டு காட்டுப்புதர்களை ஊடுருவிச்செல்லும் ஓசை கேட்டது. "என் தேர் ஒருங்குக... உடனே" என்றான் அர்ஜுனன். "இங்கிருந்தா?" என்று யுயுத்ஸு கேட்டான். அவன் உள்ளத்தில் எழுந்ததை உணர்ந்து "இக்காட்டுக்குள்தான் காண்டீபம் உள்ளது.

இங்கிருந்து எடுத்துக்கொண்டு செல்கிறேன்" என்றான் அர்ஜுனன். யுயுத்ஸு தேர் நின்றிருக்கும் இடைவழி நோக்கி ஓடினான். இளைய யாதவரும் அர்ஜுனனும் அவனுக்குப் பின்னால் வந்தனர். "நீயே தேரை ஓட்டுக, இளவரசே" என்றார் இளைய யாதவர். "ஆணை" என்றான் யுயுத்ஸு.

நீர்ச்சுடர் - 36

பகுதி ஐந்து : எஞ்சும் கனல் – 6

தேர் கிளம்பியதுமே யுயுத்ஸு ஒன்றை உணர்ந்தான். அது போருக்குரிய தேரல்ல. சீரான நெடும்பாதையில் விரைந்து செல்லக்கூடியதும் அல்ல. இரட்டைப்புரவி கட்டப்பட்டது. மேடுபள்ளமான சிறிய தொலைவுக்கு செல்வதற்குரியது. அரசகுடியினர் பிறரறியாது ஊர்வதற்குரிய மூடுதிரைகள் அமைக்கப்பட்டது. அதன் நுகம் தோல்பட்டையால் தளர்வுற தேருடன் இணைக்கப்பட்டிருந்தது. சகடங்கள் மையக்கூடத்துடன் நெகிழ்வாக பொருத்தப்பட்டிருந்தன. அடியில் வளைந்த ஏந்துவிற்களுக்கு நடுவே இழுத்துக் கட்டப்பட்ட தோல்பட்டைகளின் மேல் அதன் மேற்கூண்டு அமைந்திருந்தது. அதை தொட்டில் என்றே ஏவலர்கள் கூறினார்கள். வேர்களிலும் முழைக்கற்களிலும் ஏறி அமர்ந்து செல்கையில் அது படகென ஊசலாடியது. ஆனால் அதிர்வு உள்ளே அமர்ந்திருப்பவர்களுக்கு செல்லாமல் தோல்பட்டை தடுத்தது.

காட்டுக்குள்ளிருந்து சிறிய சேற்றுப்பாதை வழியாக மையச்சாலைக்கு வந்து கங்கையிலிருந்து விலகிச்செல்லத்

தொடங்கியதும் யுயுத்ஸு அத்தேரின் ஆட்டம் நுகத்தையே உலைப்பதாக இருப்பதை உணர்ந்தான். தொட்டில் இரு தூண்களிலும் முட்டியபடி ஊசலாட நுகம் அசைந்து புரவிகளின் ஒத்திசைந்த ஓட்டம் தடைபட்டது. புரவியின் விசையை குறைக்கலாமா என்றெண்ணி அவன் பின்னிருந்து ஆணை வரவேண்டுமென்று எதிர்பார்த்தான். இளைய யாதவரோ அர்ஜுனனோ எதுவும் சொல்லவில்லை என்று கண்டு சீரான விசையில் புரவியை செலுத்தியபடி திரும்பிப்பார்த்தான். தொட்டிலின் ஆட்டத்திற்கு தன் உடலை நிலைப்படுத்தும்பொருட்டு அர்ஜுனன் தூணைப் பற்றியிருந்தான். இளைய யாதவர் இரு கைகளையும் மார்பில் கட்டி அந்த ஆட்டத்தையே விளையாட்டென மாற்றி மகிழ்பவர் போலிருந்தார்.

யுயுத்ஸு "நாம் எங்கு செல்கிறோம்?" என்று கேட்டான். "முதலில் கிளம்பிச்செல்வோம். நாம் செல்வதை அனைவரும் அறியட்டும். உரிய முறையில் நாம் அவனை சந்திக்க முடியும்" என்றார் இளைய யாதவர். அர்ஜுனன் "மூத்தவரை தடுக்க வேண்டும். அவர் சென்று அஸ்வத்தாமன் முன் நின்றிருக்கக்கூடாது. அது ஒன்றே என் இலக்கு" என்றான். இளைய யாதவர் "அவர் தனிப் புரவியில் சென்றிருக்கிறார். அவரால் ஓடைகளை தாவ முடியும். ஒற்றை மரங்களின்மீதுகூட ஊர்ந்து செல்ல முடியும்" என்றார். "அவருக்குத் தெரியுமா அஸ்வத்தாமன் எங்கிருக்கிறான் என்று?" அர்ஜுனன் கேட்டான். "நாம் எண்ணுவதையே பீமசேனனும் எண்ணுவார். நாம் கிளம்பியிருக்கும் செய்தி அஸ்வத்தாமனுக்கு தெரியும். தன்னை எவரும் தேடி வருவதை அறிந்த பின்பு அவன் மறைந்திருக்கமாட்டான். அது

அவனுடைய இயல்புக்கு மாறானது. அவனே நம்மைத் தேடி வருவான்" என்றார் இளைய யாதவர்.

"அவன் மூத்தவரை எதிர்கொள்ளக்கூடாது. மூத்தவரால் அவனை எதிர்த்துப் போரிட இயலாது" என்று அர்ஜுனன் மேலும் சொன்னான். "இன்றைய நிலையில் அவனை எவரும் எதிர்த்துப் போரிட இயலாது. குருக்ஷேத்ரத்தின் போர்க்களத்தில் அவனை நாம் வென்றோமெனில் தெய்வத்துக்குரிய படைக்கலங்கள் எதையும் மானுடருக்கெதிராக எடுக்கக்கூடாது என்று அவன் நன்கு எண்ணியிருந்தான் என்பதனால்தான். இன்று அவ்வாறல்ல, அனைத்து நெறிகளையும் மீறி அமர்ந்திருக்கிறான். இன்றைய அஸ்வத்தாமனை எதிர்கொள்வதற்கு முக்கண் முதல்வனே மண்ணிறங்கி வந்தாகவேண்டும்" என்று இளைய யாதவர் சொன்னார்.

"என்ன சொல்கிறீர்கள்? வெல்ல இயலாதெனில் இப்போருக்கு நாம் ஏன் எழுகிறோம்?" என்றான் அர்ஜுனன். "ஏனென்றால் இப்போருக்கு நாம் எழாமலிருக்க இயலாது" என்றார் இளைய யாதவர். "போருக்கெழ வேண்டாம் என்பதே என் எண்ணமாகவும் இருந்தது. ஆனால் பீமசேனன் எழுந்தபிறகு ஒன்றும் செய்வதற்கில்லை. நமது இலக்கு இப்போது பீமசேனனை மறிப்பது மட்டுமே" என்றார் இளைய யாதவர். "ஆம்" என்ற அர்ஜுனன் பெருமூச்சுவிட்டு "ஆனால் என் அகம் நிலையழிந்துள்ளது" என்றான். "நாம் பீமசேனனை மறிப்பதற்குள் அஸ்வத்தாமன் அவரை மறிக்கக்கூடாது. அதற்கு ஒரே வழி நம்மை நோக்கி அஸ்வத்தாமனை இழுப்பது" என்றார் இளைய யாதவர்.

"ஆம்" என்ற பின் அர்ஜுனன் பெருமூச்சுவிட்டான். "ஒருவேளை அவனுடைய அம்பால் நான் கொல்லப்படுவேன் போலும்.

எனில் அதுவும் நன்று. பெருமைக்குரிய இறப்பு அது. இத்துயரிலிருந்தும் நிலையழிவிலிருந்தும் அவ்வண்ணம் விடுதலை அமையும் எனில் அதுவும் நன்றே" என்றான். யுயுத்ஸு மீண்டும் திரும்பிப்பார்த்தான். இளைய யாதவர் அவனை நோக்கி மீண்டும் புன்னகைத்தார். யுயுத்ஸு விழிகளை திருப்பிக்கொண்டான். அவன் உள்ளம் ஒரு கணம் சற்றே விலகி அச்செயலை விந்தையாக்கிக் காட்டியது. பாரதவர்ஷத்தின் மாவீரனுக்கு அவன் தேராளியாகச் செல்கிறான். அவனை வெல்லும் மாவீரனுடன் போரிட. பெருந்தேராளி தேரில் அமர்ந்திருக்கிறான். சூதர்கள் பாடவேண்டிய தருணம். ஆனால் சூதர்கள் பாடிப்பாடி சலித்துவிட்டார்கள். சொல் தீர்ந்து உளம் அமைந்துவிட்டார்கள்.

"நமது தேர் விரைவதை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று இளைய யாதவர் சொன்னார். "இன்னமும் காடுகளில் அவர்களின் ஒற்றர்கள் இருக்கக்கூடும். அவர்கள் உறுதியாக அஸ்வத்தாமனிடம் அனைத்தையும் கூறுவார்கள். ஐயமே தேவையில்லை" என்றார். சலிப்பு தெரிந்த குரலில் "அவர்கள் மூத்தவர் செல்வதையும் சொல்லக்கூடும்" என்று அர்ஜுனன் சொன்னான். "அவன் நம்மை தெரிவு செய்தாகவேண்டுமென்பதில்லை. இன்றைய நிலையில் அவனுக்கு அந்த நெறியே இருக்க வாய்ப்பில்லை. மூத்தவரைக் கொன்றுவிட்டு நம்மை எதிர்கொள்ளலாம் என்று எண்ணினானென்றால்..." இளைய யாதவர் "நன்று எதிர்பார்ப்போம், அதுவன்றி ஒன்றும் நாம் செய்வதற்கில்லை" என்றார்.

பின்னர் நெடும்பொழுது அவர்கள் பேசிக்கொள்ளவில்லை. தேர்ச்சகட ஓசையே கேட்டுக்கொண்டிருந்தது. அர்ஜுனன்

“யாதவரே, அவனிடம் இருக்கும் மிகப் பெரிய அம்பு எது?” என்றான். “அதை பிரம்மசிரஸ் என்கிறார்கள். அழிக்கும் ஆற்றலில் அதுவே முதன்மையான அம்பு. படைப்பிறைவனின் தலை என்று அதற்கு பெயரிட்டிருக்கிறார்கள்” என்றார் இளைய யாதவர். சில கணங்களுக்கு பின் உரக்க நகைத்து “அப்பெயரிட்டவன் கவிஞன். பெரும்பாலான தருணங்களில் போர்க்கலையிலேயே மெய்யான கவிதை திகழ்கிறது” என்றார்.

“நகைக்கும் தருணமல்ல இது!” என்று உரத்த குரலில் அர்ஜுனன் சொன்னான். தேரின் ஆட்டத்தில் அவன் குரல் அசைந்து முதுமை கொண்டதுபோல் தோன்றியது. இளைய யாதவரின் குரலோ அதே அசைவினால் துள்ளிவிளையாடும் குழந்தையின் குரலென்றாகியது. “அம்புகள் களிப்பாவைகள். பாவைகள் குழந்தைகளுக்குரியவை. சிரித்து மகிழ்வதற்குத் தகுந்தவை” என்றார் இளைய யாதவர். “ஊழித்தொடக்கத்தில் பிரம்மனின் தலைகள் ஐந்து என்பதை அறிந்திருப்பாய்.” “ஆம், நான்கு திசைகளுக்கும் ஒன்று. விண்ணோக்கியது ஐந்தாவது தலை” என்றான் அர்ஜுனன். “இது பராசர சம்ஹிதையிலுள்ள தொல்கதை” என இளைய யாதவர் சொன்னார். “முன்பு பிரம்மனுக்கு முகமோ வடிவோ இருக்கவில்லை. ஓங்காரமெனும் ஒலியாக அவன் விண்பொருளில் இருந்து எழுந்தான். ஓங்காரத்தை தன் சித்தத்தால் ஒளியென்று ஆக்கிக்கொண்டான். அவ்வொளியாலான உடல்கொண்டிருந்தான்.”

ஓங்காரம் அவனில் உறைந்தமையால் அவனில் ஆணவம் குடியேறியது. ஆணவம் தன்னை தான் பெருக்க விழைவது. தன்னைப் பெருக்கவேண்டுமென்றால் தனக்கொரு வடிவம் வேண்டும். ஆகவே அவன் விண்விரிந்த நீரில் தன் முகத்தை

தானே நோக்கினான். ஒளியை விழிகளாகவும் ஓங்காரத்தை நாவாகவும் கொண்டு அவனுக்கு முகம் அமைந்தது. தன் ஆணவத்தை விரித்து விரித்து முடிவில்லா வண்ண வேறுபாடுகளாக ஆக்கி அவன் படைப்பை பெருக்கலானான். தன் அழகின் ஆயிரம்கோடி வடிவங்களை சமைத்தான். தன்னை தான் காமுறும்பொருட்டு தனக்கு எதிர்த்தன்மை கொண்ட தன்னை படைத்துப் பெருக்கினான். அவை பெண்ணென்று ஆயின. முடிவிலா அழகுகொண்ட அவ்வுருவை சதரூபி என்னும் பெண் என வகுத்தான்.

சதரூபியின் அழகைக் காண அவன் நான்கு திசைகளுக்கும் முகம் கொண்டான். விழிபெருக்கினான். நோக்கும்தோறும் பெண் அழகு கொள்கிறாள். அழகு கொள்ளும்தோறும் மாயம் கொள்கிறாள். அவள் அவனுடன் விளையாடினாள். அவன் தலைக்குமேல் சென்று மறைந்தாள். அவளை நோக்கும்பொருட்டு அவன் விண்நோக்கி ஒரு விழியை அடைந்தான். அவ்விழியால் அவன் கண்டது முடிவிலா வெறுமையை. திசைதிசையென பெருகும் பொருள்வெளியின் மையத்தில் அவ்வெறுமை இருப்பதைக் கண்டு அவன் திகைத்தான். இப்பொருட்கள் அனைத்தையும் ஆள்பவன் நான். வடிவங்களையும் வண்ணங்களையும் நிலைகளையும் செயல்களையும் இயல்புகளையும் வகுப்பவன். இவை என்றும், இவையல்ல என்றும், இவையென்று ஆகாத ஒன்று என்றும் அங்கு நின்றிருக்கும் அவ்வெறுமைதான் என்ன? அதை நிகழ்த்துபவன் எவன்? அந்த வினாவே அவனை ஆட்கொண்டது.

தன் நான்கு திசைமுகங்களையும் செயலற்றதாக்கி ஐந்தாவதையும் விழி மூடி ஊழ்கத்திலமிழ்த்து அவன் அப்பேராற்றலைக் கண்டான். ஒருகணம் ஆக்கத்தின்

பேரெழிலும் மறுகணம் அழிவின் கொடுந்தோற்றமுமென அது மாறி மாறி திகழ்ந்துகொண்டிருக்க அதை நோக்கி அறைகூவினான். "இவையனைத்தையும் படைத்தவன் நானென்பதால் இவற்றுக்கு மேல் முழுதாளுமை எனக்கே உரியது. அவள் எனக்குரியவள். என்னிடம் அவளை அளியுங்கள்" என்றான். "அவள் உன்னிலெழுந்தவள். எனவே உன் மகள். அவள்மேல் நீ காமம் கொள்ளலாகாது" என்றது விண்விரிவு. "படைப்பவன் எவனும் தன் படைப்பின்மேல் முதல் பெருவிழைவு கொண்டவன். அவ்விழைவு அவன் தன்மேல் கொள்ளும் விழைவின் பெருந்தோற்றம். அதிலிருந்து எவரும் ஒழிய இயலாது" என்று பிரம்மன் சொன்னான்.

"எனில் உனக்கு நிகரான ஒன்றைப் படைத்து இங்கு விடுக! அது அவளை அடையட்டும். அவர்கள் முயங்கி பெருகி முடிவிலிவரை செல்லட்டும். நீ அவளை அடைய இயலாது. அது இந்நெறியின் அடிப்படைக்கு எதிரானது" என்றது வெறுமை. "அவளை இங்கே விடுக... அன்றி என்னிடம் போர்புரிக!" என்று பிரம்மன் அறைகூவினான். வெறுமை அவனை நோக்கி புன்னகைத்தது. அங்கிருந்து குரல் எழுந்தது "மைந்தா, நாங்கள் இருக்கும் முடிவிலா காலத்தின் ஒரு கணமே நீ. ஏனெனில் பொருட்கள் அமைந்திருப்பது முப்பட்டை என பிரியும் பிளவுண்ட காலத்தில் என்று அறிக! முடிவிலியோ வெறுமையிலேயே அமைய இயலும்."

"எனில் இவையனைத்தும் வெறுமையிலிருந்து பிறந்தவையா? இவையனைத்தும் வெறுமையை சென்றடைகின்றனவா? வெறுமையிலிருந்து வெறுமைக்கு செல்லும் ஒரு பழியிலிருக்கும் இச்சிற்றலைதானா இப்படைப்புலகம்? இதன் பொருட்டுதான் நான் இங்கு நான்முகம் கொண்டெழுந்து

கலையென்றும் சொல்லென்றும் திகழ்ந்துகொண்டிருக்கிறேனா?" என்று பிரம்மன் சீறினான். "ஆம், ஆனால் அதன் முழுப்பொருளென்ன என்று நீ அறியமாட்டாய். படைப்பதொன்றே உன் தொழில். படைப்பு நோக்கத்தை அறியும் உரிமை உனக்கில்லை. எப்படைப்பாளிக்கும் அந்நோக்கு இருக்கலாகாது" என்று அக்குரல் கூறியது. "நீ படைத்த ஒன்று எவ்வண்ணம் வெறுமையை அடைந்து உன்னுடன் விளையாடுகிறது என நீ உணரவில்லையா? உன்னை அது எவ்வண்ணம் வெல்லமுடியும் என நீ எண்ணியதே இல்லையா? உன்னிடமிருந்து பிறந்தவை உன்னை வெல்கின்றன. ஏனென்றால் அவை மாயை. மாயை மெய்யிருப்பை விட பெரியது" என்றது விண்முழுமை.

"என்னிலிருந்து எழுந்தவை என்னை ஆளவியலாது. நான் அவற்றை முழுமையாக வெல்வேன். அவற்றை என் மறுபகுதி என்றே கொள்வேன். இதோ நான் என் படைப்பியக்கத்தை நிறுத்துகிறேன். அதை வெல்லாமல் நான் இனி படைக்கப்போவதில்லை!" என்று கூறி தன் நான்கு விழிகளையும் மூடி ஐந்தாவது விழி திறந்து அமைந்திருந்தான் பிரம்மன். "என் முன் எழுக அவ்வெறுமை! அதன் பின்னரே இங்கு படைப்பு எழும். இது உறுதி" என்றான். படைப்பு நின்றுவிட்டமையால் புடவிநெறி பிறழ்ந்தது. ஆயிரம் பல்லாயிரம் யுகங்களுக்குப் பின் விண்ணகம் கனிவுகொண்டது.

கடுவெளி வெறுமையிலிருந்து நீலச்சுடரென திரண்டெழுந்து, வெண்பிறை சூடி, மூவிழிகொண்டு, அனலாடை அணிந்து, உடுக்கும் மழுவும் மானும் சூலமும் ஏந்தி பேருரு ஒன்றெழுந்தது. "வணங்குக என்னை! முடிவிலியை வணங்குக!" என்று அப்பெருங்குரல் ஒலித்தது. "நான் அறைகூவுகிறேன்!

என்னிடம் போர்புரிக! அன்றி என் படைப்பை என்னிடமே அளித்துவிடுக!" என்று பிரம்மன் சொன்னான். "நீ இருக்கும் காலத்திற்கு வந்து உன்னுடன் போர்புரிய என்னால் இயலாது. நான் பெருவெளி" என்றது அவ்வுரு. "எனில் என்னை பெருவெளியாக்குக! அன்றி நீ இக்காலத்திற்குள் வந்து நின்று என்னிடம் போர்புரிக!" என்று பிரம்மன் அறைகூவினான்.

அப்பெருவெளி அவன் முன் ஒரு மலைவேடன் வடிவில் தோன்றியது. நெற்றியில் எழுந்த அனல்விழி. கைகளில் முப்புரிவேல். அவன் அவ்வேடனுடன் போரிட்டான். திசைகள் இடிபட, விண்ணகம் எதிரொலிக்க அப்போர் நிகழ்ந்தது. போரின் முடிவில் தன் கையால் பிரம்மனின் ஐந்தாம் தலையை திருகிப் பறித்து எடுத்தான் வேடன். ஐந்தாம் தலை அகன்றதும் திகைத்து நான்கு தலைகளும் விழி திறந்தன. இறைவனைக் கண்டு பணிந்தன. மீண்டும் படைப்பியக்கம் தொடங்கியது.

பிரம்மசிரஸ் இப்படைப்பியக்கத்தின் மறுபக்கம் என்று உணர்க! நான்கு திசைகளும் இத்துலாவில் ஒரு தட்டில் அமையுமெனில் மறுதட்டில் அமைவது அது. நான்கிலும் கலந்திருக்கும் வெறுமை தனித்தெழுந்தது. இங்கிருக்கும் அனைத்து ஆக்கங்களுக்கும் உள்ளே அழிவென அமைந்திருப்பது. அன்று தன் தலையை இழந்த பின்னர் பிரம்மன் தன் படைப்பில் உறைந்திருக்கும் அழிவை காண முடியாதவனானான். தன் படைப்பை என்றென்றும் வாழ்வதென்று எண்ணிக்கொண்டான். அழிவின்மை நோக்கி செல்லும் முடிவின்மைகளாகவே ஒவ்வொன்றையும் தன்னுள்ளிலிருந்து எடுத்தான்.

பார்த்தா, இப்புவியில் கலையென, காவியமென, உலகியல் பொருள் என ஒவ்வொன்றையும் படைப்பவர்கள் அனைவருமே அந்த மாயையில் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

‘என்றென்றுமாக! எக்காலத்திற்குமாக!’ என்று அவர்கள் வெறிகொள்கிறார்கள். ‘நிலைகொள்க! நிலைகொள்க!’ என உச்சரித்துக்கொள்கிறார்கள். அந்த மாயை இல்லையேல் இங்கு படைப்பில்லை. படைப்பில் முழுமையை வேண்டி தவம் செய்யவைப்பது அதுதான். முழுமையென ஒன்றை கற்பனை செய்துகொள்ள வைப்பது அதுவே. என்றுமிருக்கும் கலை எனும் சொல் அளிக்கும் ஊக்கமே இங்கு நீ காணும் அனைத்தையும் படைத்தது என்று உணர்க! என்றுமிருப்பது என்று ஒன்றில்லை என்ற அறிவின் துளி எழுகையில் கலைஞனின் கை தழைகிறது. பிரம்மன் இன்று வரை சலிக்கவில்லை. பிரம்மனின் ஆணவம் பிறிதொரு விசையாக எழுந்தது. அதுவே ஆண் என அமைந்து சதரூபியை வென்றது. அவள் ஆக்க அவன் அழித்தான். அவனிடமிருந்து துளி எடுத்து அவள் மீண்டும் ஆக்கினாள். முடிவிலாத அந்த ஆடல் நிகழ புடவி பெருகியது.

“அந்த ஐந்தாம் தலை கிராதனென அமர்ந்த மூவிழியனின் கையில் ஒட்டிக்கொண்டது என்பார்கள். அதை திருவோடென ஆக்கி அவன் இல்லந்தோறும் இரந்தான். ஒருபோதும் நிறையாத பிச்சைக்கலமென அவன் கையில் அமைந்திருக்கிறது அது. ஏனெனில் அது வெறுமை. இப்புவியனைத்தையும் செலுத்தினாலும் சென்றடையாத அடியிலியின் திறப்பு. இப்புடவிகள் அனைத்தும் சென்று மறையும் கரும்பெரும் சுழி” என்றார் இளைய யாதவர். “பழியும் பெருமையும், நன்மையும் தீமையும், கீழ்மையும் தவமும், இருளும் ஒளியும் அதனுள் சென்று மறைந்துகொண்டிருக்கின்றன. உலகுக்கு அளிக்க விரிந்த அருட்கை கொண்டவனின் மறுகையில் கொடு கொடு என நீண்டிருக்கிறது அந்தக் கலம்.”

அர்ஜுனன் “அந்த அம்புக்கு அப்பேரிட்டவர் எவர்?” என்றான். “அது இங்கிருக்கும் அனைத்துப் பொருளிலும் உறையும் அழிவை மட்டுமே தான் எடுத்துக்கொண்டது. எப்பொருளையும் அது உடைத்து அழிப்பதில்லை. அப்பொருளிலேயே உறையும் அழிவை தூண்டி விடுவதே அதன் வழி. ஒவ்வொரு சதுரத்தையும் அது சென்று தொட்டதுமே வடிவிழந்து வட்டமென்றாகும் என்பார்கள். வட்டம் மையம் என்றாகும். மையம் இன்மையென்றாகும். இங்குள்ள ஒவ்வொன்றுக்குள்ளும் அதன் அழிவு என்ன என்பது பொறிக்கப்பட்டுள்ளது. அவ்வழிவின் தாழ்விசையை ஆக்கத்தின் எழுவிசையொன்று அழுத்தி ஆள்கிறது. அந்த அம்பு அந்த அழிவின் விசையை மேலெழச் செய்கிறது. ஆகவே ஒவ்வொன்றும் அழிவை நோக்கி செல்கின்றன. கருவிலேயே மானுடரில் சாவுக்கான விழைவு உறைகிறது. அது சென்று தொட்டால் கருக்குழவி தன்னை குருதிக்குழம்பல் என தானே கலைத்துக்கொள்ளும். ஆகவேதான் அதற்கு பிரம்மசிரஸ் என்று முனிவர்கள் பெயரிட்டனர்” என்றார் இளைய யாதவர்.

நெடுங்காலம் முன்னர் பரசுராமரிடமிருந்தது அந்த அம்பு. அவர் அதை எவர் மேலும் தொடுக்கவில்லை. ஏனெனில் படைப்புக்கு எதிரானது அச்செயல். அதை தொடங்கிவிட்டவன் பிரம்மனுக்கு நிகர் நின்று உலகை அழிப்பவன். அதன்பின் முடிச்சுகள் விழும்போதே அவிழும் ஒரு வீண்செயலென்றாகும் இப்புடவி. அவ்வண்ணம் ஒன்று உண்டு என முனிவர் எவரோ சொல்லக் கேட்டு அஸ்வத்தாமன் அறிந்தான். அதை பெற்றே ஆகவேண்டும் என்று முடிவு செய்து முக்கண்ணனை இறைஞ்சி தவம் செய்தான். ஏழாண்டுகள் பாஞ்சாலத்திற்கு அப்பால் இமையமலை அடிவாரத்திலிருந்த சூரியதாபம் எனும்

மலைமுடி மேல் அமர்ந்து அவன் செய்த தவத்தால் கனிந்து முக்கண் இறைவன் இறங்கிவந்தான்.

அனலில் தோன்றி "நீ கோருவதென்ன, பாஞ்சாலனே?" என்றான். "உன் கையிலமைந்த அந்தத் திருவோடு எனக்கு அம்பென வரவேண்டும்" என்று அஸ்வத்தாமன் இறைஞ்சினான். "இது முற்றழிப்பது. வெறுமையின் வடிவான ஐந்தாவது முகம் இது. நாற்திசை மையம். இதை மானுடர் ஏந்தலாகாது" என்றான் மூவிழியன். "இதை ஏந்தும் பொருட்டு நான் விண்ணவனாகிறேன். எந்நிலையிலும் என் புகழுக்காகவோ வெற்றிக்காகவோ இதை எதிராக செலுத்தமாட்டேன்" என்று அஸ்வத்தாமன் சொன்னான். "எனில் இது உனக்கு எதற்கு?" என்றான் சிவன். "இதை நான் பெற்றேன் எனும் தருக்குக்காக. இங்குள அனைத்தையும் என்னால் அழிக்க இயலுமென்றாலும் என் அளியால் இவற்றை அழிக்கமாட்டேன் எனும் நிறைவுக்காக."

"வென்றவனின் இரக்கமே தேவர்களுக்குரியது என்பார்கள். அது என்னை விண்ணேற்றட்டும்" என்று அஸ்வத்தாமன் கேட்டான். புன்னகைத்து "ஆகுக!" என்றுரைத்து அந்த அம்பை அவனுக்களித்து மீண்டான் கைலாயன். தொல்சூதர் கதையில் இருந்து பராசர சம்ஹிதைக்குச் சென்றது இது. தொல்நூல்கள் எதிலிருந்தேனும் அவன் அந்த அம்பை எடுத்திருக்கக்கூடும். அல்லது அவன் தந்தை அவனுக்கு அளித்திருக்கலாம். அவர் அதை தன் தந்தையிடமிருந்து பெற்றிருக்கலாம். பரத்வாஜரின் குருநிலை தொன்மையானது. ஆக்கத்தின் வழியறிந்த அவர்கள் அழிவின் நெறியும் அறிந்திருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது."

"யாதவரே, அந்த அம்பு தன் உறையிலிருந்து ஒரு போதும் எழலாகாது" என்று அர்ஜுனன் சொன்னான். "அந்த அம்பு

எழலாம். அதற்கு நிகராக நின்றிருக்கும் அம்பொன்று உன்னிடம் உள்ளது. இந்திரனின் வஜ்ரரேதஸ் என்னும் அம்பு" என்று இளைய யாதவர் சொன்னார். "உன் தந்தையால் உனக்கு அருளப்பட்டது அது." அர்ஜுனன் "ஆம்" என்றான். "அது பாலையில் மழைபெருகச் செய்யும். பட்டமரம் தளிர்க்கவைக்கும். மலைகளை பூக்குவைகளாக ஆக்கும். அது சென்று தொட்ட இடமெங்கும் வசந்தம் எழும்..." என்றார் இளைய யாதவர். "இங்குள அனைத்திலும் காமமென்று திகழ்வது அது. சிறு புழுவை பிறிதொரு புழு நோக்கி இழுப்பது. மதயானைகளை மத்தகம் முட்டிக்கொள்ளச் செய்வது. குன்றாப் பெருவிசை. பார்த்தா, இங்கு ஒவ்வொரு கணமும் இறப்பை வென்றுகொண்டிருப்பது காமமே. அழிவனைத்திற்கும் நிகர் அது ஒன்றே. வலிகள் அனைத்தையும் கடந்துபோகும் பேரின்பம் பிறிதொன்றல்ல. அதை முன்வைத்து நீ போரிடுக!" என்றார்.

"களத்தில் ஒருமுறைகூட அதை எடுக்கும்படி நீங்கள் சொல்லவில்லை" என்று அர்ஜுனன் சொன்னான். "ஆம், அந்த அம்பை உன்னிடமிருந்து எடுத்துச் செலுத்தும் அக்கணம் நீ காமமற்றவனாவாய்." அர்ஜுனன் உள எழுச்சியுடன் "நான் விழைவது அது ஒன்றே. இதுநாள் வரை என்னை ஆட்டிப் படைக்கும் இந்த மூலவிசையிலிருந்து வெளிவர விரும்புகிறேன். போதும். செயல்விசை என்றும் விழைவென்றும் வெற்றிவிடாய் என்றும் என்னை இது தூக்கிச் சுழற்றியது" என்றான். "ஒன்று உணர்க! மூலாதாரத்தில் சிறு சுருள்நாகம் என உறையும் அது எழுந்து பிற தாமரைகளுக்குச் சென்றுவிட்டாலொழிய காமத்தை துறப்பது எவராலும் இயல்வதல்ல. உன் குண்டலினி இன்னமும் முற்றெழுந்து தன்விசை அழியவில்லை. நான் உன்னிலிருந்து அதை எழுப்ப

இயலும். உன் மூலக்கனல் எழுந்து நாபியில் நெஞ்சில் நாவில் விழிகளில் திகழ்கையில் முற்றிலும் காமமற்றவனாவாய்.”

“அறிக, அது மீளமுடியா பயணம்! அதன் பின்பு இப்புவியில் உனக்கு ஐம்புலன்களின் இன்பங்களும் இல்லை. காவியத்தில் இனிமையில்லை. கலைகளில் அழகில்லை. மலர்களும் மழலைகளும் பெண்டிரும்கூட உன் கண்களுக்குமுன் அழகு கொள்ளமாட்டார்கள். இங்கிருக்கும் எதனுடனும் உனக்கு தொடர்பிருக்காது. சூழ்ந்திருக்கும் அனைத்தும் விலகி மாபெரும் ஓவியத்திரைச்சீலை என்றாகும். நீ அப்பால் நின்று வெறுமனே அதை பார்த்திருக்கவே இயலும்” என்றார் இளைய யாதவர். அர்ஜுனன் அவரை நோக்கி கைகூப்பி “ஆசிரியனே, என்னை எழுப்புக! என் வில்லுடன் சென்று நான் நிற்கிறேன். அவனை எதிர்கொள்கிறேன்!” என்று சொன்னான்.

நீர்ச்சுடர் - 37

பகுதி ஐந்து : எஞ்சும் கனல் – 7

அன்று பகல் முழுக்க தேரில் அவர்கள் சென்றுகொண்டே இருந்தார்கள். அந்த திசையை ஏன் இளைய யாதவர் தெரிவுசெய்தார் என அவன் வியந்தான். கங்கைக்கு இணையாகவே அது சென்றது. நெடுந்தொலைவில் எங்கோ ஆறு இருந்தது. வழியிலோடிய ஓடைகள் அனைத்தும் அதை நோக்கியே சரிந்தன. பலகைகளைக்கொண்டு ஓடைகள்மேல் பாலம் அமைக்கப்பட்டிருந்தது. சுட்ட செங்கற்களால் காட்டாற்றின்மேல் பாலம் கட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு

பாலத்தின் அருகிலும் மரத்தின்மேல் ஒரு காவல்மாடத்தில் சில காவலர் இருந்தார்கள்.

யுயுத்ஸு தேரை செலுத்திக்கொண்டிருக்கையிலேயே சூழ முழங்கிய முரசொலிகளை கேட்டான். அவை அர்ஜுனனின் போரெழுகையை அறிவித்தன. இளைய யாதவர் அவற்றை அறிவிக்கும்படி வழியிலேயே காவலரண்களில் இருந்த பாண்டவப் படையினருக்கு ஆணையிட்டிருந்தார். காட்டுக்குள் எத்தனை பாண்டவ ஒற்றர்களும் காவல்படையினரும் இருக்கிறார்கள் என்பதை அவன் அப்போதுதான் அறிந்தான். காடு மொத்தமாகவே முழக்கமிட்டுக்கொண்டிருந்தது. ஒரு பெரும் போர்முரசென அதன் பசுமைப்பரப்பு மாறிவிட்டிருந்ததுபோல. அஸ்வத்தாமன் எங்கிருந்தாலும் அதை கேட்டிருப்பார். ஒலிபோல் விரைந்து பரவுவது பிறிதில்லை.

அஸ்வத்தாமன் நெடுந்தொலைவு சென்றிருக்க வாய்ப்பில்லை. அவர் இருக்கும் நிலையில் தேரிலேறிச் செல்லமுடியாது. புரவியில் ஊர்வதற்குரிய உளநிலையும் அவரிடமிருக்காது. புரவியூர்பவர்களுக்கு சென்றடைய இலக்கு இருக்கவேண்டும். எங்கென்றில்லாமல் செல்பவர்கள் கால்களையே ஏவுகிறார்கள். அவன் அவர் காட்டுக்குள் நடந்துசெல்வதை கற்பனையால் கண்டான். புதர்களை ஊடுருவிச்செல்லும் வேங்கைபோல. ஏன் காடு? அவர் ஏன் ஊர்கள் வழியாக செல்லக்கூடாது? கங்கைப்படகுகளில் ஏறியிருக்கலாகாது? காட்டிலேயே அவர் செல்வார். அவரால் மானுடரை எதிர்கொள்ள முடியாது. மானுடரின் திகைக்கும் விழிகள் அவரை கொந்தளிக்கச் செய்யும். அவர் மானுடரைவிட மேலெழுந்துவிட்டவர். மானுடரைவிட மேலெழுந்தவர்கள் மானுடரை முடிவில்லாது

பொறுத்தருளவேண்டும். அவர்கள்மேல் தீராத பேரளி கொண்டிருக்கவேண்டும்.

அவர்கள் அன்று மாலையில் காட்டின் நடுவே சாலையோரமாக எழுந்து தெரிந்த பாறை ஒன்றைக் கண்டடைந்து அதன்மேல் தங்கினார்கள். யுயுத்ஸு புரவிகளையும் பாறைக்குமேல் ஏற்றிக்கொண்டான். அவை குளம்புகள் பாறையில் பட்டு உரசி ஒலிக்க மூச்சிளைத்தபடி ஏறின. பாறைமேல் நெருப்பிட்டு அதைச் சூழ்ந்து அமர்ந்துகொண்டு ஒரு சொல்லும் உரைக்காமல் கொழுந்தாடலை நோக்கிக்கொண்டிருந்தார்கள். யுயுத்ஸு காட்டுக்குள் சென்று சேர்த்துவந்த கிழங்குகளையும் காய்களையும் சுட்டு அனலுடன் எடுத்து வைக்க இளைய யாதவர் அவற்றை எடுத்து உடைத்து உண்டார். ஓரிமுறை வாங்கி உண்டபின் அர்ஜுனன் வேண்டாம் என்றான். அவன் அவர்களுடன் இருப்பதாகவே தெரியவில்லை. முற்றிலும் சொல்லடங்கிவிட்டிருந்தான்.

அவன் மடியில் காண்டீபம் அமைந்திருந்தது. அவன் அதை காட்டுக்குள் ஒரு மரத்தின்மேல் வைத்திருந்தான். அந்த மரத்தின் அடியில் சென்று நின்றதும் அவன் தயங்கினான். பின் யுயுத்ஸுவிடம் "இளையோனே, அந்த வில்லைச் சென்று எடு" என ஆணையிட்டான். யுயுத்ஸு மரத்தில் ஏறி அதை எடுத்தான். எடையற்றது. இரும்பாலானது என்றாலும் மூங்கிலென்றே கைக்கு காட்டியது. மிகச் சிறியது. அதை சுருக்கவும் விரிக்கவும் இயலுமென அறிந்திருந்தாலும் அது அத்தனை சிறிதாக இருப்பது அவனுக்கு வியப்பை அளித்துக்கொண்டே இருந்தது. "கொண்டு வா" என்றபின் அதை கையில் வாங்காமல் அர்ஜுனன் தேரிலேறிக்கொண்டான்.

அன்று அப்பயணம் முழுக்க அவன் அருகில்தான் காண்டீபம் இருந்தது. அர்ஜுனன் அதை கையால் தொடவே இல்லை. இளைய யாதவர் அதைப்பற்றி எதையும் சொல்லவுமில்லை. அது அருகிருக்கும் உணர்வு யுயுத்ஸுவை அலைக்கழித்தது. பாரதவர்ஷத்தை வெற்றிகொண்ட வில். அது ஒரு தெய்வம். அது நெடுநாட்கள் ஆலயத்தில்தான் மையத்தெய்வமென கோயில்கொண்டிருந்தது. அவன் அதை திரும்பி நோக்கவோ தொடவோ அஞ்சினான். ஆனால் அதைப்பற்றி எண்ணிக்கொண்டே இருந்தான். மெல்லமெல்ல வியப்பு விலகி அச்சம் ஏற்பட்டது. அது குருதிகொள்ளும் கொலைத்தெய்வம். குருதிநீராடி சலிப்புறாதது. தெய்வங்கள் சலிப்புறுவதே இல்லை. ஏனென்றால் அவற்றுக்கு காலம் இல்லை.

அவன் அதை அருகே வைத்திருக்க அஞ்சினான். அதிலிருந்து கூடுமானவரை உடலை விலக்கிக்கொண்டான். ஆனால் உடலை பெருமளவுக்கு அசைக்க இயலவில்லை. உள்ளத்தால் மட்டுமே இடைவெளி விட முடிந்தது. தேர் நின்றதும் அவன் இயல்பாக என இறங்கி புரவிகளை அவிழ்த்தான். அவற்றை மேலே கொண்டுசென்று கட்டிவிட்டு கிழங்குகள் சேர்க்கச் சென்றான். அவன் மீண்டுவந்தபோது மடியில் காண்டீபத்துடன் அர்ஜுனன் தலைகுனிந்து அமர்ந்திருக்கக் கண்டான். அவன் மடியில் பாம்புபோல் அது கிடந்தது. அவன் கை அதை தொடவில்லை. அதுவே ஊர்ந்து அவன் மடிமேல் ஏறிக்கொண்டிருக்கவேண்டும் எனத் தோன்றியது.

புரவிகள் அப்பால் நின்று செருக்கடித்தன. அவற்றுக்கு தழைகளை வெட்டிப்போட்டிருந்தார்கள். அவ்வுணவு அவற்றுக்கு உகக்கவில்லை. இரவில் காட்டில் சென்று மேய விரும்பின. அவற்றின் ஓசை கேட்டு திரும்பி நோக்கிய

இளைய யாதவர் “அவை காட்டுக்குள் செல்லட்டும்” என்றார். அவை அவரை நோக்கியே கனைத்தன. யுயுத்ஸு “இங்கே புலி இருக்கக் கூடும்” என்றான். “இருக்க வாய்ப்பில்லை” என்று இளைய யாதவர் சொன்னார். “தொடர்ந்த போரொலியால் அவை நிலையழிந்திருக்கும். ஆகவே விட்டுச்சென்றிருக்கும்.” அவன் “நரிகளும் ஓநாய்களும்...” என சொல்லத் தொடங்க இளைய யாதவர் மறித்து “அவை எளிய மானுட ஊனை உண்டு பழகிவிட்டிருக்கும்” என்றார்.

அவன் துணுக்குற்றான். மேற்கொண்டு சொல்லெடுக்க இயலவில்லை. புரவிகளை காட்டுக்குள் செலுத்திவிட்டு பாறைமேல் படுத்துக்கொண்டான். அர்ஜுனன் மடியில் வில்லுடன் அமர்ந்திருந்தான். எரிகுழியில் கனலடங்கி புகைமணம் எழுந்தது. பின்னர் காற்று கனலை முற்றாக அணைத்தது. கனல்மணம் இருந்தாலே போதும், விலங்குகள் அணுகா. இளைய யாதவர் படுத்துக்கொண்டார். அப்பால் அர்ஜுனனும் படுத்தான். அவனருகே இணையாக காண்டீபம் கிடந்தது. அவன் விண்மீன்களை நோக்கிக்கொண்டிருந்தான். இளைய யாதவரின் துயிலோசை கேட்டது. அர்ஜுனன் துயில்வதுபோல் தெரியவில்லை. அவன் திரும்பி நோக்கினான். அர்ஜுனனின் இரு கண்களும் வானோக்கி விரிந்து நீர்த்துளிபோல் ஒளிவிட்டுக்கொண்டிருந்தன.

அவன் துயில்வதே இல்லை என்பதை அவன் கேட்டிருந்தான். அது ஓர் அணிச்சொல் என்றே எண்ணியிருந்தான். மெய்யாகவே துயில்வதில்லையா? எனில் உள்ளம் எங்ஙனம் அடங்குகிறது? துயிலாதவனுக்கு பகலிரவு உண்டா? அவனுடைய காலம் பிறிதொன்றா? அவன் காணும் விண்ணிலிருப்பவை எவை? அவன் அர்ஜுனன் விழிகளை

நோக்கிக்கொண்டிருந்தான். அசைவற்ற இரு பளிங்கு மணிகள். விண்மீன்களின் மறைந்து மறைந்து எழும் ஒளிகொண்டவை. அவன் காண்டீபத்தை நோக்கினான். அது உயிருள்ளதுபோல் தோன்றியது. மெல்ல நெளிவதுபோல். செவியறியாமல் ரீங்கரிப்பதுபோல்.

அவன் துயிலில் ஆழ்ந்தபோதுகூட உள்ளம் அஞ்சிக்கொண்டிருந்தது. துயிலில் அவன் உருண்டு சென்றான். அவனை சம்வகை பிடித்துக்கொண்டாள். "இங்கே பாறையின் விளிம்பு... ஆழம்" என்றாள். "அந்த நாகம், அது அவர் அருகே கிடக்கிறது" என்றான். "அது உங்களை அறியாது" என்று அவள் சொன்னாள். அவன் அதை நோக்கிவிட்டு "ஆம்" என்றான். "துயில்க!" அவள் புன்னகை இனிதாக இருந்தது. "நீ எப்படி இங்கே வந்தாய்?" அவள் புன்னகைத்துவிட்டு பின்னால் சென்றாள்.

அவன் விழித்துக்கொண்டபோது காற்று வீசிக்கொண்டிருந்தது. இளைய யாதவரின் மூச்சின் ஒலி கேட்டது. அர்ஜுனன் அவ்வண்ணமே விழித்த கண்களுடன் படுத்திருந்தான். யுயுத்ஸு எழுந்து அமர்ந்து விண்ணை நோக்கினான். விடிவெள்ளி எழுந்து இளஞ்செந்நிறமாக சுடர்விட்டுக்கொண்டிருந்தது. அவன் அதை நோக்கிக்கொண்டிருந்தான். காகங்களின் குழறலோசைகள். காடு விழித்தெழுந்து கொண்டிருந்தது. அவன் தலைக்குமேல் சிறகோசையுடன் வெளவால்கள் கடந்துசென்றன. அவன் எழுந்துசென்று பாறை விளிம்பில் நின்று கைகளை வாயில் சேர்த்து கூரிய ஒலியை எழுப்பினான். மீண்டும் மீண்டும் அவ்வோசையை எழுப்பிக்கொண்டிருந்தபோது புரவியின் செருக்கடிப்போசை அப்பால் கேட்டது. அவை இரண்டும்

இணைந்தே புதர்களுக்குள் இருந்து வந்தன. அவை நன்கு உண்டு துயில்கொண்டிருப்பது தெரிந்தது.

அவன் நீராடி மீண்டான். இளைய யாதவரும் அர்ஜுனனும் நீராடச் சென்றிருந்தார்கள். அவன் புரவிகளை தேரில் பூட்டியபோது அவர்கள் நீராடிவிட்டு அணுகினார்கள். தேருக்குள் ஏறியமர்ந்தபோது அர்ஜுனன் காண்டீபத்தின் நாணை வீணை என விரல்களால் வருடி மீட்டிக்கொண்டிருப்பதை யுயுத்ஸு கண்டான். அர்ஜுனனின் முகம் மாறியிருந்தது. நெடுநாட்களுக்கு முன்பு கண்ட முகம். சில நாட்களாக முற்றாகவே மறந்துவிட்டிருந்த முகம்.

மாலையில்தான் ஒற்றன் ஒருவன் அவர்களை வந்து சந்தித்தான். சாலையின் ஓரமாக நின்றவன் கைச்செய்கை காட்டி அவனை அறிவித்தான். யுயுத்ஸு தேரை நிறுத்தி அவனை அருகே அழைத்தான். அருகணைந்து வணங்கி "அவர் இங்கேதான் இருக்கிறார். பரசுராமரின் தவக்குடிலில்" என்றான். யுயுத்ஸு வியப்புடன் "பரசுராமர் இங்கே இருக்கிறாரா?" என்றான். "ஆம், இது அவர்களின் நூற்றெட்டு தவக்குடில்களில் ஒன்று. இப்போதைய பரசுராமர் இங்கு வந்து தங்கியிருக்கிறார்." யுயுத்ஸு "அவர் இங்கிருப்பதை உறுதிசெய்துகொண்டாயா?" என்றான். "ஆம், நானே நேரில் பார்த்தேன்" என்றான் ஒற்றன். "சில நாட்களுக்கு முன்னர்தான் அவர் இங்கே வந்திருக்கிறார். வந்த நாள் முதல் ஒரு மரக்குடிலில் தன்னந்தனிமையில் இருக்கிறார். அவருக்கும் பிறருக்கும் நடுவே ஒரு சொல்கூட பரிமாறப்படவில்லை. சொல்லப்போனால் அவர் பகலில் வெளியே வருவதே இல்லை. இரவில் மட்டும் ஒருமுறை காட்டுக்குச் சென்று மீள்கிறார்..."

“பரசுராமருக்கும் அவருக்கும் இடையே நிகழ்ந்தவை என்ன?” என்று யுயுத்ஸு கேட்டான். “நானறிந்தவரை ஒன்றுமே இல்லை” என்றான் ஒற்றன். உள்ளிருந்து அர்ஜுனன் “மூத்தவர் அறிவாரா அஸ்வத்தாமன் இங்கிருப்பதை? அவர் இங்கே வந்தாரா?” என்றான். “இல்லை, இதுவரை அவர் இங்கே வந்துசேரவில்லை” என்றான் ஒற்றன். “நன்று... இனி அவர் வந்தால்கூட அவரிடம் பரசுராமருடன் அஸ்வத்தாமன் இருக்கும் செய்தியை தெரிவிக்க வேண்டியதில்லை” என்று அர்ஜுனன் சொன்னான். இளைய யாதவரிடம் “இப்போரை நான் நிகழ்த்துவேன், யாதவரே. நான் அதை பலமுறை உள்ளே நிகழ்த்திவிட்டேன். என் காண்டீபம் இப்போது எழுந்துவிட்டிருக்கிறது” என்றான். இளைய யாதவர் புன்னகைத்தார்.

யுயுத்ஸு தேரை காட்டுக்குள் பிரிந்துசென்ற சிறுபாதையில் செலுத்தினான். தேர் வேர்ப்புடைப்புகளிலும் கற்களிலும் ஏறியமைந்து ஊர்ந்துசென்றது. அவன் நெஞ்சு படபடத்துக்கொண்டிருந்தது. ஒருவேளை அர்ஜுனனின் இறப்பு இங்கே நிகழுமோ? அனைத்தும் இங்கே வந்து முடியும்பொருட்டுத்தான் இதுவரை கோக்கப்பட்டுள்ளனவா? அந்தப் போர் நிகழாமல் எதுவும் முடியாது என அவனுக்குத் தோன்றியது. முன்னால், மேலும் முன்னால் என சென்று நோக்கினால் அப்போர் தொடங்கியது அவர்களிடையே இருந்துதான். துருபதனை அர்ஜுனன் சிறுமைசெய்த இடத்திலிருந்து தொடங்குகிறது குருக்ஷேத்ரம் என ஒரு சூதன் பாடக் கேட்டான். அவரை அர்ஜுனன் சிறுமைசெய்தது அஸ்வத்தாமன் பொருட்டுத்தான். அவன் தலையை உலுக்கி அவ்வெண்ணங்களை அகற்றினான். அவ்வாறு எண்ணப்

புகுந்தால் அதற்கு முடிவே இல்லை. ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று பிணைந்துள்ளன. அனைத்துமே தொடக்கங்கள்தான்.

தேர் மேலும் செல்லாமல் நின்றுவிட்டது. அவர்கள் இறங்கிக்கொண்டார்கள். அவன் தேரை அருகே அவிழ்த்து புரவிகளை காட்டுக்குள் செலுத்தினான். காண்டீபத்துடன் அர்ஜுனன் நடக்க இளைய யாதவர் உடன் சென்றார். அவன் அவர்களுக்குப் பின்னால் நடந்தான். அவர்களைச் சூழ்ந்திருந்த காடு வெயில் படாத தழைச்செறிவு கொண்டிருந்தது. இலைநுனிகளிலிருந்து தவளைகள் துள்ளித்தெறித்தன. அருவிகள் பொழிந்து நிலைத்ததுபோல கொடிகள் தொங்கிய பெருமரங்கள் அடிவேர்களால் நிலத்தை அள்ளிப்பற்றி புடைத்த கைகளை விரித்து பசுங்கூரையை தாங்கி நின்றிருந்தன. மேலே பறவையோசை முழக்கமாக கேட்டுக்கொண்டிருந்தது. மிக அருகிலெங்கோ அருவி ஒன்று இருக்கக்கூடும் என ஓசை காட்டியது.

காட்டின் ஓரமாக பாறையொன்றின்மேல் அமர்ந்திருந்த ஒருவன் சருகு உதிர்வதுபோல ஓசையில்லாமல் இறங்கி "வருக பாண்டவரே, வருக யாதவரே, உங்களை அழைத்துவரும்படி ஆணை" என்றான். "என் பெயர் மிருகண்டன். பரசுராமரின் மாணவர்களில் ஒருவன். நீங்கள் வருவதாக எனக்கு சொல்லப்பட்டது" என்றான். இளைய யாதவர் புன்னகைத்து அவனை வணங்கி "மிருகண்டரே, எங்களை எதிர்பார்த்திருப்பீர்கள் என அறிவேன். நீங்கள் அனுப்பிய செய்தி கிடைத்தது" என்றார். மிருகண்டன் முனிவன்போல் சடைத்திரிகள் தொங்கும் தோள்களும் அடர்ந்த தாடியும் கொண்டிருந்தான். மெலிந்த வெண்ணிற உடலில் நீல நரம்புகள் புடைத்திருந்தன.

“ஆசிரியர் இங்குதான் இருக்கிறாரா?” என்றான் யுயுத்ஸு. “இக்காட்டில் எங்கள் குருநிலை ஆயிரமாண்டுகளாக உள்ளது. முதலாசிரியர் இங்கே வருவது அரிது. சென்ற ஒரு மாதமாக இங்குதான் இருக்கிறார்” என்றான் மிருகண்டன். “சொல்லப்போனால் குருக்ஷேத்ரப் போர் தொடங்குவதற்கு முந்தையநாள் அவர் இங்கே வந்தார்.” யுயுத்ஸு அதை எதிர்பார்த்திருந்தான். அவர்கள் காட்டுக்குள் சென்ற ஒற்றையடிப்பாதையில் நடந்தார்கள். மிருகண்டன் அவர்களை பெரிதாக பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. புதர்களுக்கு அப்பால் பசுங்கொடிகள் படர்ந்து மண்மேடுகள் என்றே தோன்றிய குடில்கள் தெரியத் தொடங்கின. அவற்றிலிருந்து அடுமனைப்புகை எழுந்துகொண்டிருந்தது.

“தவக்குடிலின் மாணவர்கள் தேன் எடுக்கவும் உணவு சேர்க்கவும் ஊன் கொள்ளவும் காட்டுக்குள் சென்றுள்ளனர். கன்றுமேய்ப்பவர்களும் இனிமேல்தான் திரும்புவார்கள். இப்பொழுதில் குடில்வளாகம் அமைதியாகவே இருக்கும்” என்றான் மிருகண்டன். “இங்கே எத்தனை பேர் உள்ளனர்?” என்றான் யுயுத்ஸு. “எழுபது பேர்...” என்றான் மிருகண்டன். “இங்கே பொழுது மிக முன்னரே இருட்டிவிடும். ஆகவே அந்திப்பொழுதுக்கான வேள்விகளை தலைக்குமேல் பறவையோசைகள் அடங்குவதற்குள்ளேயே முடித்துவிடுவோம்” என்றான் மிருகண்டன். அவர்கள் குடில்வாயிலை நெருங்கியபோது உள்ளிருந்து கொம்போசை எழுந்தது. குடில்வாயிலுக்கு வந்த மாணவர்கள் மூவர் தலைவணங்கினர். அவர்களில் மூத்தவர் “பாண்டவருக்கும் யாதவருக்கும் நல்வரவு. என் பெயர் லிகிதன். உங்களை ஆசிரியரிடம் அழைத்துச்செல்ல அமர்த்தப்பட்டிருக்கிறேன்” என்றார்.

அந்தக் குடில்வளாகம் செங்குத்தாக எழுந்து செறிந்து நின்றிருந்த மூங்கில்மரங்களால் வேலியிடப்பட்டிருந்தது. குடில்வாயிலை கடந்துசெல்ல அமைக்கப்பட்டிருந்த பலகைக்கு அடியில் நீரோடை ஒன்று ஒலித்து ஒளிர்ந்து சென்றது. லிகிதர் அவர்களுக்குரிய குடிலை காட்டினார். "நீராடி ஆடைமாற்றி ஆசிரியரைக் காண தாங்கள் வரலாம்" என்றார். யுயுத்ஸு "நாங்கள் இங்கே துரோணரின் மைந்தர் அஸ்வத்தாமனை சந்திக்கும்பொருட்டு வந்திருக்கிறோம். அவரை போருக்கு அறைகூவ இளைய பாண்டவர் அர்ஜுனன் விழைகிறார்" என்றான். "அவருடைய விழைவின்பேரிலேயே நீங்கள் வந்துள்ளீர்கள். அவரை நீங்கள் ஆசிரியர் முன்னிலையில் சந்திக்கலாம்" என்றார் லிகிதர். "அவர் எந்நிலையில் இருக்கிறார்?" என்றான் யுயுத்ஸு. "போரிடும் நிலையில்தான்" என்றபின் லிகிதர் புன்னகைத்து தலைவணங்கினார்.

அவர்களை மிருகண்டன் அழைத்துச்சென்றான். குடில்கள் நடுவே ஓடிய ஓடையில் நீராடி குடிலுக்கு மீண்டு புதிய மரவுரிகளை அணிந்துகொண்டார்கள். அவர்களுக்கு மரக்குடுவைகளில் பழங்கள் இட்டு தேனும் பாலும் சேர்த்து சமைக்கப்பட்ட இன்கஞ்சி அளிக்கப்பட்டது. இளைய யாதவர் ஒரு சொல்லும் பேசவில்லை. அர்ஜுனன் தன் உள்ளே மிகவும் சென்றுவிட்டவன் போலிருந்தான். ஆனால் அவன் உடலென்றே மாறிவிட்டிருந்த காண்டீபத்தில் விரல்கள் ஓடிக்கொண்டே இருந்தன. யுயுத்ஸு ஒருவகையான திணறலை உணர்ந்தான். அங்கே எங்கோதான் அஸ்வத்தாமன் இருந்துகொண்டிருக்கிறார். ஏதோ இருண்ட குடிலுக்குள். தன்னந்தனிமையில். தனிமையில் அவர் பெருகியிருக்கக்கூடுமா அன்றி சிறுத்திருப்பாரா?

பரசுராமரின் குடில் அந்த வளாகத்தின் மையத்தில் இருந்தது. அது வட்டமாக கூம்பு என எழுந்த கூரையுடன் பெரிய கூடை எனத் தோன்றியது. பிருகுகுலத்தின் மழு முத்திரைகொண்ட கொடி மேலே பறந்துகொண்டிருந்தது. அவர்களை அழைத்துச்சென்ற மிருகண்டன் லிகிதரிடம் ஒப்படைத்துவிட்டு அகன்றான். லிகிதர் அவர்களை உள்ளே அழைத்துச் சென்றார். அந்தக் குடில் வட்ட வடிவிலிருந்தமையால் உள்ளே அத்தனை இடமிருக்கக்கூடும் என உணரமுடியவில்லை. உட்பகுதி வட்டமான பெரிய முற்றம் என்றே தோன்றியது. அதன் சுவர்களில் வண்ணம் தீட்டப்பட்ட பாய்கள் அமைக்கப்பட்டிருந்தன. குடிலின் நடுவே கூரைக்கூம்பு முனையிலிருந்து தொங்கிய கொத்துவிளக்கு நூறு சுடர்கள் ஏற்றத்தக்கதாக இருந்தது. குடிலுக்குள் ஏழு சாளரங்களில் மூன்றினூடாக சாயும் ஒளி உள்ளே வந்து மென்மையாகப் பரவியிருந்தது.

அதன் மறு எல்லையில் மரத்தாலான மேடைமேல் புலித்தோல் விரிக்கப்பட்ட பீடத்தில் பரசுராமர் அமர்ந்திருந்தார். தூய வெண்ணிறமான குழல் தோளில் பரவியிருந்தது. வெண்ணிறத் தாடி மார்பில் விழுந்திருக்க முதுமையால் வளைந்த மூக்கு சிவந்து தெரிந்தது. ஆயினும் அவரை முதியவர் என எண்ண முடியவில்லை. சிறுவர்களுக்குரிய தெளிந்த விழிகளும் இளைஞர்களுக்குரிய முறுகிய தோள்களும் நரம்புகள் புடைத்த உறுதியான கைகளும் விரிந்த மார்பும் செறிந்தமைந்த வயிறும்தான் அப்படி எண்ணச்செய்கின்றன என யுயுத்ஸு உணர்ந்தான். அவர் மூவரில் எவரையும் பார்க்கவில்லை. மடியிலிருந்த ஏட்டுச்சுவடியை அப்பாலிருந்த சிறிய பீடத்தில் வைத்தார்.

லிகிதர் நின்று அவர்களை முறைப்படி அறிமுகம் செய்ய அர்ஜுனனும் யுயுத்ஸுவும் தலைவணங்கினர். அவர் அதை ஏற்றுக்கொண்டு இளைய யாதவரை நோக்கினார். இளைய யாதவர் தலைவணங்கவில்லை. அவர்களின் நோக்குகள் தொட்டுக்கொண்டன. மிக மெல்லிய ஒரு தலையசைப்பு பரசுராமரில் நிகழ்ந்தது. அல்ல, அவ்வாறு தோன்றும் ஓர் அசைவு விழிகளில் எழுந்தது. அல்ல, அவ்வாறு தோன்றும் முகநிகழ்வு. அதுகூட அல்ல, அது நிகழவே இல்லை. அது தன் உள்ளம் கொண்ட பதிவு. பிறிதொன்று நிகழ்ந்தது அவர்களுக்குள். அவன் இளைய யாதவரின் முகத்தை பார்த்தான். அங்கே எவ்வுணர்ச்சியும் இல்லை. மாறாப் புன்னகையுடன் என்றுமெனச் சமைந்திருந்தது அது. என்ன நிகழ்ந்தது? அவனால் அறியக்கூடாத ஒன்று. அறிந்தாலும் அறிந்த பிறிதொன்றாக அவன் எண்ணிக்கொள்வது.

பரசுராமர் "அமர்க!" என்றார். அர்ஜுனனும் இளைய யாதவரும் அமர்ந்துகொள்ள யுயுத்ஸு கைகட்டி அப்பால் நின்றான். பரசுராமர் "இங்கேதான் இருக்கிறார் துரோணரின் மைந்தர். அவர் விழைந்தால் நீங்கள் அவரை சந்திக்கலாம். உங்கள் வருகை அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது" என்றார். யுயுத்ஸு "ஆசிரியரே, பாண்டவ மைந்தர்களை அவர் நெறிமீறி குடில்புகுந்து கொன்றார் என அறிந்திருப்பீர்கள். அரசநெறிப்படி அவரிடம் பழிநிகர் கொள்ள இளைய பாண்டவருக்கு உரிமை உள்ளது. அந்த அறைகூவலை அவருக்கு விடுக்கவே வந்துள்ளோம்" என்றான். பரசுராமர் புன்னகைத்து "இக்குருநிலை அறப்போருக்கு எப்போதும் எதிரானது அல்ல என அறிந்திருப்பீர்கள். வேதம் நிலைகொள்வதன் பொருட்டென்றால் அறம் கடந்து போரிடவும் இது தயங்கியதில்லை" என்றார்.

லிகிதர் உள்ளே வந்து தலைவணங்க அவரைக் கடந்து அஸ்வத்தாமன் உள்ளே வந்தான். லிகிதர் திகைத்து விலகினார். யுயுத்ஸு கைகளைக் கூப்பியபடி நகர்ந்தான். "யார் என்னை தேடி வந்தது?" என்றான் அஸ்வத்தாமன். அவன் காட்டாளன் போலிருந்தான். அழுக்கடைந்து கிழிந்த தோலாடை அவன் உடலில் நார்களாகத் தொங்கியது. உடலெங்கும் மண்ணும், சேறும், காட்டில் உதிர்ந்த மலர்ப்பொடிகளும், இலைத்துகள்களும், சிற்றுயிர்களின் இறகுகளும் படிந்திருந்தன. தலைமயிர் அதற்குள்ளாகவே சடைபோலாகி விழுதுகளாகத் தொங்கியது. தாடிமயிர்களும் நார்களாக ஆகிவிட்டிருந்தன. வலக்கையில் வில் வைத்திருந்தான். விழிகள் கலங்கி அலைபாய்ந்தன. "என்னை அறைகூவியவன் எவன்?" என்று அவன் கேட்டான். காட்டுவிலங்கொன்றின் உறுமல் போலிருந்தது அக்குரல்.

யுயுத்ஸு பேசமுற்படுவதற்குள் அர்ஜுனன் எழுந்து காண்டீபத்தை கையிலேந்தியபடி "நான், பாண்டவனாகிய பார்த்தன், உங்களை போருக்கு அறைகூவும்பொருட்டு வந்துள்ளேன். என் மைந்தரை நெறிமீறி குடில்புகுந்து துயிலில் கொன்ற பெரும்பழிக்கு நீங்கள் நிகர்செய்தாகவேண்டும், ஆசிரியர்மைந்தரே" என்றான். "நெறியா?" என்றபின் அவன் உரக்க நகைத்து "இவர்கள் இருவருக்கும் முன்னால் நின்று நெறியைப் பற்றியா பேசுகிறாய்? எவருடைய நெறி?" என்றான். "என் நெறி. என் அரசியின் சொல். அதையே நான் தலைக்கொள்கிறேன்" என்றான் அர்ஜுனன். "நீங்கள் என்னுடன் தனிப்போருக்கு வந்தாகவேண்டும். இறப்புவரை அப்போர் நிகழட்டும். இது என் அறைகூவல்."

“அவர் சாவிலி என அறிவாயா?” என்றார் பரசுராமர். “ஆம், நான் பேசுவது என் சாவைப்பற்றி... இப்போரில் வென்றாலொழிய நான் மீளப் போவதில்லை” என்றான் அர்ஜுனன். “எனில் வருக, இப்போதே போரை நிகழ்த்துவோம். வருக!” என்றான் அஸ்வத்தாமன். பரசுராமர் “இல்லை, இந்தக் காட்டில் என்றால் எங்கள் நெறிகளின்படிதான் போர் நிகழமுடியும்... பொழுது எழுந்து பொழுது அணைவதற்கு நடுவேதான் போர் நிகழவேண்டும்” என்றார். அர்ஜுனன் “ஆசிரியரே, நீங்கள் வகுத்தளியுங்கள் பொழுதை” என்றான். “நாளை முதற்கதிர் எழும்போது” என்றார் பரசுராமர். “இக்காட்டிலுள்ள சுமஹரிதம் என்னும் புல்வெளியில்.” அர்ஜுனன் “ஆம்” என்றான். “ஆம்” என்றான் அஸ்வத்தாமன். “ஆசிரியரே, நீங்களே நடுவராக அமைந்து போரை நிகழ்த்துக!” என்றார் இளைய யாதவர். புன்னகையுடன் “அவ்வாறே” என்றார் பரசுராமர்.

தலைவணங்கி அஸ்வத்தாமன் திரும்பிச் சென்றான். இளைய யாதவர் எழுந்துகொள்ள அர்ஜுனனும் உடன் எழுந்தான். அவர்கள் பரசுராமருக்கு தலைவணங்கி வெளியே நடந்தனர். அர்ஜுனன் மீண்டும் அத்தனிமையை சென்றடைந்தான். யுயுத்ஸு தலைகுனிந்து உடன் சென்றான். அவர்கள் முற்றத்தை அடைந்ததும் எதிர்பாராத தருணத்தில் அர்ஜுனன் “நில்... கீழ்மகனே நில்!” என்று கூவியபடி அஸ்வத்தாமனை நோக்கி ஓடினான். “நில்! நில்! இழிபிறவியே நில்!” அவன் மூச்சுவாங்க ஓடி அஸ்வத்தாமன் முன் சென்று நின்றான். “நீ அன்னை வயிற்றில் பிறந்தவன் என்றால் சொல், நீ என் மைந்தரை எண்ணி வருந்தவில்லையா? உன் கைகளால் அவர்களைக் கொன்றதைப்பற்றி ஒரு கணமேனும் துயர்கொள்ளவில்லையா? சொல்!” அர்ஜுனன்

நடுங்கிக்கொண்டிருந்தான். அவன் விழிகளிலிருந்து நீர் வழிந்தது. காண்டீபத்தை கைகள் இறுகப் பற்றியிருந்தன.

யுயுத்ஸு அருகே செல்ல விழைந்தான். ஆனால் உடலை அசைக்க முடியவில்லை. இளைய யாதவர் புன்னகையுடன் வெறுமேனே நோக்கி நின்றார். "நீ கொன்ற மைந்தரின்பொருட்டு வருந்துகிறாயா?" என்றான் அஸ்வத்தாமன். அர்ஜுனன் தளர்ந்து "ஆம், ஒவ்வொரு கணமும் அனலில் என எரிகிறேன். வாழ்வதென்பது இத்தனை பெரிய துயராக ஆகிவிடுமென ஒருபோதும் எண்ணியதில்லை. நான் வாழ்ந்துகொண்டிருப்பதே மானுடருக்கு அமையும் கொடுநரகம்!" என்றான். "ஏனென்றால் நீ கொன்ற பின்னரே இத்துயரை அடைந்தாய்" என்று அஸ்வத்தாமன் சொன்னான். "நான் இத்துயர் அனைத்தையும் அடைந்து அதனூடாகக் கடந்துவந்து அவர்களைக் கொன்றேன்." அர்ஜுனன் "என்ன சொல்கிறாய்?" என்றான்.

"ஒவ்வொரு கணமும் அறிந்திருந்தேன். அதோ அவன் அறிந்திருப்பதுபோல் அறிந்திருந்தேன். அவன் முயன்றதுபோலவே நானும் முயன்றேன். ஆகவே அவனைப்போலவே நானும் பெருந்துயருடன் எஞ்சுகிறேன்" என்றான் அஸ்வத்தாமன். அவன் விழிகள் பித்தனின் விழிகளைப்போல அலைபாய்ந்தன. அர்ஜுனன் பெருஞ்சீற்றத்துடன் "இழிமகனே, என் மைந்தர்களின்பொருட்டு உன்னை வெல்வேன். உன்னை தீராப் பெருநரகிற்கு தள்ளுவேன். இது என் வஞ்சம்! என் மைந்தருக்காக! என் மூதாதையருக்காக! என் தெய்வங்களின்மேல் ஆணை!" என்று கூவினான். அஸ்வத்தாமன் உதடுகளில் மெல்லிய புன்னகை எழுந்தது. ஒருமுறை இளைய யாதவரை நோக்கிவிட்டு அவன்

திரும்பி நடந்தான். அர்ஜுனன் சீறலோசையுடன் அழுதபடி தலைகுனிந்து நின்றான்.

நீர்ச்சுடர் - 38

பகுதி ஐந்து : எஞ்சும் கனல் – 8

குடிலை அடைந்து மரவுரி விரிக்கப்பட்ட மூங்கில் மஞ்சங்களில் அமர்வது வரை இளைய யாதவரும் அர்ஜுனனும் ஏதும் பேசிக்கொள்ளவில்லை. கால் தளர்ந்து பரசுராமரின் முற்றத்தில் அமர்ந்து அழுத அர்ஜுனனை இளைய யாதவர் தோள்தழுவி அணைத்து அழைத்துவந்தார். அவன் விம்மிக்கொண்டே இருந்தான். அவர் ஆறுதாக ஒரு சொல்லும் உரைக்கவில்லை. அவன் ஓய்ந்து மஞ்சத்தில் படுத்துக்கொண்டதும் "உன் அழுகை நன்று... சில எல்லைகளை கடந்துவிட்டாய் என்பதற்கான சான்று அது" என்றார்.

அர்ஜுனன் சீறி எழுந்து "வாயை மூடுங்கள்... இனி ஒரு சொல்லும் கேட்கவேண்டியதில்லை... உங்கள் சொற்களால் என் ஆத்மா அழிந்தது. தீராப் பழி கொண்டவன் ஆனேன். போதும்" என்றான். இளைய யாதவர் புன்னகைத்தார். "இன்னும் பேசி என்னை கொல்லவேண்டாம், யாதவரே. அளிகூர்க, என்னை விட்டுவிடுக... நான் எளியவன். உங்கள் புதிய வேதமும், அதிலிருந்து எழும் யுகமும் என் எண்ணம் சென்று எட்டாதவை. கண்ணும் காதும் சொல்லும் சித்தமும் தொட்டறியும் மெய்மையை மட்டுமே என்னால் உணரமுடியும். இதில் சிக்கி உழன்றுகொண்டிருக்கிறேன்... இதிலிருந்து உங்கள்

சொற்கள் என்னை மீட்காதென்று அறிந்தேன்...” என அவன் அழுகையுடன் சொன்னான்.

“நானும் அவற்றில்தான் சிக்கியிருக்கிறேன். நானும் விழிநீர் வடித்துக்கொண்டுதான் இருக்கிறேன்” என்று இளைய யாதவர் சொன்னார். “அதை நீ காணமுடியாது. ஏனென்றால் அது இங்கு நிகழவில்லை, அங்கே நான் இருளுழ்கத்தில் அமர்ந்திருக்கும் குகைக்குள் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.” அர்ஜுனன் திகைப்புடன் அவரை நோக்கினான். இளைய யாதவர் புன்னகைத்து “எண்ணி நோக்காதே, வந்தடையமாட்டாய். விடு. இன்றிரவு நீ துயிலவேண்டும்” என்றார். “என்னால் துயில்கொள்ள முடியுமென எண்ணுகிறீர்களா?” என்றான் அர்ஜுனன்.

“எவரும் துயில்வதில்லை. ஏனென்றால் நீத்தார் அனைவருமே இன்னும் இங்குதான் இருக்கிறார்கள். நம்மை சூழ்ந்திருக்கிறார்கள். நீர் பெற்று அவர்கள் மூச்சுலகை அடைந்த பின்னரே எவருக்காயினும் துயில் அமையும்” என்றார் இளைய யாதவர். “என்னை துயிலவையுங்கள், யாதவரே. என்னை ஒரு இரவேனும் துயிலச்செய்யுங்கள்...” என்று அவன் இறைஞ்சினான். “நேற்றிரவும் அவர்களை கண்டேன். அருகே வந்து நின்றிருந்தனர். மூச்சொலியுடன், உடல்வெம்மையுடன், விழிநோக்கின் ஒளியுடன்... அவர்களை அகன்றுபோகச் செய்யுங்கள்.”

இளைய யாதவர் எழுந்து வந்து அர்ஜுனனின் நெற்றிப்பொட்டின்மேல் தன் கையை வைத்தார். “துயில்க!” என்றார். “அவர்கள் அகலமாட்டார்கள். ஆனால் அவர்கள் இனியவர்களாக முடியும்.” அவன் முகம் துயரில் நெளிந்துகொண்டே இருந்தது. விழிநீர் வழிந்து காதுகளை அடைந்தது. “துயில்க! துயில்க!” என அன்னைக்குரிய

மென்குரலில் இளைய யாதவர் சொன்னார். “ஒவ்வொன்றாக பொருளிழந்து மறைக! கொண்டவை பொருளிழக்கட்டும். ஆம், அவ்வாறே ஆகுக! விழைபவை பொருளிழக்கட்டும். ஆம், அவ்வாறே ஆகுக! ஏற்றவை பொருளிழக்கட்டும். ஆம், அவ்வாறே ஆகுக! மறுப்பவையும் பொருளிழக்கட்டும். ஆம், அவ்வாறே ஆகுக! வெறுப்பவையும் சினப்பவையும் பொருளிழக்கட்டும். ஆம், அவ்வாறே ஆகுக! துறந்தவையும் கடந்தவையும் பொருளிழக்கட்டும். பொருளின்மையே திகழ்க! பொருளின்மையின் இனிமை நிறைக! ஆம், அவ்வாறே ஆகுக!”

அர்ஜுனன் துயில்கொள்ளத் தொடங்கிவிட்டிருந்தான். அவன் முகம் மலர்ந்திருந்தது. உதடுகளில் புன்னகை தெரிந்தது. அவன் முன் இனிய எவரோ நின்றிருந்தனர் என்று தோன்றியது. யுயுத்ஸு தானும் படுத்துக்கொள்வதற்காக மஞ்சத்தில் அமர்ந்தான். இளைய யாதவர் தன் மஞ்சத்தில் கால்மடித்து அமர்வதை கண்டான். அவர் ஊழ்கம் செய்யப்போகிறாரா? “துயிலவில்லையா தாங்கள்?” என்றான். “இல்லை, அவன் கொள்வது என் துயிலை” என்றார் இளைய யாதவர். யுயுத்ஸு அவரை புரியாமல் நோக்க அவர் புன்னகைத்து “துயில்க!” என்றார். அவன் படுத்துக்கொண்டான்.

அவனுக்கு அருகே காண்டீபம் நின்றிருந்தது. அது உயிருடன் நெளிகிறதா? அவன் ஆழ்துயிலில் மூழ்கியபோது அர்ஜுனன் சிரிப்பதை கேட்டான். கையூன்றி எழுந்து அர்ஜுனனை பார்த்தான். அர்ஜுனன் சிறுவன்போல சிரித்துக்கொண்டு புரண்டு படுத்தான். அவன் திரும்பி இளைய யாதவரை பார்த்தான். அவர் முகத்தைக் கண்டு திடுக்கிட்டான். அது கடுந்துயரில் நெளிந்துகொண்டிருந்தது. வலியில் இறுகிய உதடுகள், புடைத்த

தசைகள். அவர் விரல்கள் தவித்துத் தவித்து ஒன்றை ஒன்று தொட்டு அலைந்தன.

அவன் கண்களை மூடிக்கொண்டான். நீத்தார் எங்கிருக்கிறார்கள்? துரியோதனனும் கர்ணனும் இளைய அரசர்களும் மைந்தர்களும்தான் அவனுக்கு அணுக்கமானவர்கள். அவர்கள் அவன் கனவில் ஒருமுறைகூட வந்ததில்லை. அவன் அவர்களை மறக்கவில்லை. நாளில் பலமுறை நினைவுகூர்ந்தான். அவன் முகமறிந்த எவரையும் போரில் கொல்லவில்லை. கொன்றவர்களுக்குத்தான் நீத்தார் தென்படுவார்களா என்ன? அர்ஜுனனின் சிரிப்பொலி கேட்டது.

அந்தியில் பரசுராமரின் மாணவர்கள் வேதம் ஓதும் ஒலி கேட்டது. வேள்விப்புகையின் மணத்தை அவன் உணர்ந்தான். எனில் இன்னமும் அந்திகூட ஆகவில்லை. பறவையோசை அவியவில்லை. அவன் மேலும் மேலுமென துயிலில் ஆழ்ந்தான். குருக்ஷேத்ரப் போர்க்களத்தில் நின்றிருந்தான். எரியெழுந்து களத்தை மூடியிருந்தது. புகையின் மூச்சடைக்கச்செய்யும் கெடுமணம். அதில் ஊன்நெய் உருகி அனல்கொண்டெழுவதன் குமட்டும் மணம். அலறல்கள், ஓலங்கள். அவன் விழித்துக்கொண்டபோது வேள்வியின் ஓசைகள் கேட்டுக்கொண்டிருந்தன.

மீண்டும் கண்களை மூடிக்கொண்டான். குருக்ஷேத்ரத்தில் தன்னந்தனியாக நின்றிருந்தான். அவனைச்சுற்றி நூற்றுவரும் இறந்துகிடந்தனர். இதை நீ முன்னரே அறிவாய் என்று துரியோதனன் சொன்னான். நீ என்னிடம் சொல்லவில்லை. ஏன்? அவன் வெறித்து நோக்கிக்கொண்டு நின்றான். பலமுறை சொல்லியிருக்கிறேன், மூத்தவரே. ஆனால் அதை அவன்

சொல்லவில்லை. அவன் மேல் இருள் மூடி அழுத்தி ஆழத்திற்கு கொண்டுசென்றது.

விழித்துக்கொண்டபோது அர்ஜுனன் எழுந்து நின்றிருந்தான். "யாதவரே" என அவன் அழைக்க இளைய யாதவர் விழிதிறந்தார். "இன்று பிறந்தெழுந்ததுபோல் உணர்கிறேன். உள்ளம் இத்தனை தெளிந்து நான் அறிந்ததே இல்லை..." என்று அவன் சொன்னான். சிறுவன்போல கூச்சலிடும் குரலில் "விடுதலை எனில் இதுவே. அனைத்தையும் கடந்துவிட்டேன். அவர்கள் என் கனவில் வந்தனர். என் மைந்தர்கள் அனைவருமே வந்தனர். அரவானும் அபிமன்யுவும் திரௌபதி மைந்தரும் பிற மூவரும்... என்னைச் சூழ்ந்து விளையாடினர். இரவு முழுக்க அவர்களுடன் கொண்டாடினேன்" என்றான்.

"ஆனால் அவர்கள் எல்லோருமே சிறுமதலைகளாக இருந்தனர். சொல் திருந்தாத குழவியர். நடைகூட அமையவில்லை. ஒற்றைப் பாற்பல் சிரிப்புகள். கண்களில் துள்ளிய ஒளி. அள்ளிக்கொள் அள்ளிக்கொள் என நீட்டிய கைகள்..." அவன் பேருவகையுடன் கைகளை விரித்தான். "அள்ளி அள்ளி என் மேல் சந்தனம்போல் பூசிக்கொண்டேன். முத்தமிட்டு முத்தமிட்டு சலிக்கவே இல்லை... ஒரு முழுப் பிறவியையும் வாழ்ந்துவிட்டேன், யாதவரே." அவன் நிலைகொள்ளாமல் அறைக்குள் சுற்றிவந்தான். "தழுவி முத்தமிடுகையில் அவர்களின் இதழ் ஈரம் படும் மெய்ப்பு... மானுடன் பிறந்ததே அப்பேரின்பத்திற்காகத்தான்."

"அதுவும் காமமே" என்று இளைய யாதவர் சொன்னார். "காமத்தின் மிகமிக உயர்ந்த நிலை. காமமெனும் பாற்கடலின் அமுது என்பார்கள் கவிஞர்." அர்ஜுனன் அவரை திகைப்புடன் நோக்கினான். "இன்று நீ முடிவெடுக்கலாம். என்னுடன்

சுனைக்கரைக்கு உன்னை அழைத்துச்செல்வதாக இருந்தேன். அங்கே உனக்கு ஊழ்கநிறைவை அளிக்க எண்ணியிருந்தேன். அதன்பின் உன் குண்டலினியிலிருந்து விழைவு முற்றொழியும். அதன்பின் இவ்வின்பத்தை நீ அடையவே இயலாது. இப்பிறவியில் அல்ல, இனி எப்பிறவியிலும். உன் நினைவிலிருக்கும் இன்பங்கள்கூட தடமில்லாது அழியும்."

அர்ஜுனன் கைகள் தளர்ந்து தொங்க நோக்கியபடி நின்றான். "காமத்தின் உச்ச இன்பத்தை அறிந்துவிட்டாய். பருகும்தோறும் விடாய் மிகுவதே காமத்தின் இயல்பு. உன்னுள் பெருகுவது அலையும் அதன் நுரையும். சொல்க, ஊழ்கநிறைவுக்கு நீ சித்தமாக இருக்கிறாயா?" என்றார் இளைய யாதவர். "அதை அடையாமல் நீ உன் தந்தை அளித்த அம்பை பயன்படுத்த இயலாது. அந்த அம்பு இல்லாமல் நீ அஸ்வத்தாமனை எதிர்கொள்வதும் முடியாதது."

அர்ஜுனனை கூர்ந்து நோக்கியபடி இளைய யாதவர் தொடர்ந்தார். "காமத்தை ஒழியலாகாது என்றால் உன்முன் வழி ஒன்றே உள்ளது. பழிகொள்ளும் வஞ்சினத்தை கைவிடுக! உன்னால் இயலாதென்று கூறி மீள்க! காமத்தை அறியாத உயிர் இல்லை. காமத்தின் மெய்யுருவை அறிந்தோர் சிலரே. ஒருமுறை அதை அறிந்தவன் நல்லூழ் கொண்டவன். அவன் மேலும் மேலும் பெருகும் ஒரு அமுதத்துளியை பெற்றுக்கொண்டிருக்கிறான். நீ அடையக்கூடும் இன்பம் இங்கிருந்து தொடங்குகிறது."

அர்ஜுனன் ஒருகணம் தன்னை இறுக்கிக்கொண்டான். பின்னர் "யாதவரே, அது மெய்மையும் மீட்பும் அளிக்கும் பேரின்பமே ஆயினும் நான் கொண்ட கடமையிலிருந்தும் கூறிய சொல்லிலிருந்தும் விலகமாட்டேன் என நீங்கள் அறிவீர்கள்.

இப்போதும் மற்றொன்றில்லை" என்றான். "நீ சற்று எண்ணிச்சூழலாம். நீ துறக்கவிருப்பது அன்பென்றும் காதலென்றும் பற்றென்றும் ஆகி உயிர்க்குலங்களைச் சூழும் அரிய இன்பத்தை. மெய்மையென்றாகும் பேரின்பத்தை. முழுமையைச் சென்றடையும் இன்பத்துக்கு அப்பாற்பட்ட நிலையைக்கூட கவிஞரும் முனிவரும் அதைக்கொண்டே விளக்கினர்" என்றார்.

"மானுடர் அவ்வின்பத்தை முழுதடையாமல் தடுக்கும் விசைகள் பல அவர்களுக்குள்ளேயே உறைகின்றன. காமத்தை ஆணவத்துடன் கலந்துகொள்கின்றனர் மானுடர். காமத்தையே ஆணவம் என்றும் ஆணவத்தையே காமம் என்றும் சமைத்துக்கொள்கின்றனர். ஆணவம் சென்று தொடும் அனைத்தையும் காமத்துடன் இணைத்துக்கொள்கின்றனர். பொருள்விழைவு, அடையாள நாட்டம், வெற்றித்துடிப்பு அனைத்தும் காமம் என்று உருமாறுகின்றன. காமம் என்னும் இனிமைப்பெருவெளி திரிபடைகிறது. காமத்தில் கோன்மை குடியேறுகிறது. கோன்மை கரவுக்கு வழிகோலுகிறது. கரவு தன்னிரக்கத்தை, கசப்பை, சினத்தை வஞ்சத்தை கொண்டுவருகிறது. ஆகவே இப்புவியில் மானுடர் காமம் என அடைவதெல்லாம் துன்பத்தை மட்டுமே."

"நீ அவை அனைத்தையும் அடைந்து கடந்துவிட்டாய். குருக்ஷேத்ரத்திற்குப் பின் இனி இப்புவியில் நீ அறியவேண்டிய இருள் என ஏதுமில்லை. இருளை அறிந்தமையால் ஒளியின் பொருளையும் உணர்ந்துவிட்டாய். இனி நீ அடையும் காமம் தடைகள் அற்றது. தேவர்களும் விழைவது. அதை இழக்கவேண்டாம் என்பதே உன் உலகியல்தோழனாக நான் அளிக்கும் சொல்" என்றார் இளைய யாதவர். யுயுத்ஸு

பரபரப்புடன் அர்ஜுனனை பார்த்தான். அர்ஜுனன் முகம் கூரிய உணர்வை மட்டுமே காட்டியது. "எண்ணிச்சொல்ல சற்றே பொழுதளிக்கிறேன். இக்குடிலில் நீ சற்றுபொழுது தனித்திருக்கலாம்" என்றார் இளைய யாதவர்.

"தேவையில்லை" என்றான் அர்ஜுனன். "தனிமையை அஞ்சாதே. எழுந்து வரும் எண்ணம் என நீயே நோக்கு" என்றபின் இளைய யாதவர் வெளியே சென்றார். யுயுத்ஸு அவரைத் தொடர்ந்து வெளியேறினான். இளைய யாதவர் முற்றத்தில் நின்றார். யுயுத்ஸு அவர் அருகே செல்லாமல் அகன்று நின்றான். அவரை நோக்க அவன் அஞ்சினான். புலரிமுன் இருள் சூழ்ந்திருந்தது முற்றத்தில். காடு இருள்வடிவில் ஓசையிட்டுக்கொண்டிருந்தது. எங்கோ ஒரு நரியின் ஊளை எழுந்தது.

இளைய யாதவர் அசைந்தபோது யுயுத்ஸு விழிப்பு கொண்டான். இளைய யாதவர் குடிலுக்குள் நுழைந்தார். அங்கே மஞ்சத்தில் அர்ஜுனன் காண்டீபத்துடன் அமர்ந்திருந்தான். வீணையை மடியிலிட்டு மீட்டும் பாணனைப்போல என யுயுத்ஸு எண்ணினான். முகத்திலும் அந்த பாவனையே தெரிந்தது. இளைய யாதவர் அவனிடம் "என்ன முடிவெடுத்தாய்?" என்றார். அவன் புன்னகையுடன் "தனிமை நன்று. முழுதுற உளம்நோக்க முடிகிறது. பிறிதொரு சொல்கூட அகத்தே எழவில்லை. நான் கூறியதேதான். யாதவரே, என் கடமையையே தலைக்கொள்கிறேன்" என்றான்.

இளைய யாதவரும் அர்ஜுனனும் சென்றபின் யுயுத்ஸு குடிலில் தனித்திருந்தான். அவர்கள் காட்டுக்குள் நுழையும்

எல்லைவரை சென்றபின் அவன் தயங்கி நின்றான். இளைய யாதவர் அவனை அழைக்கவில்லை. அவன் திரும்பிவந்தான். குடிலின் முகப்பில் மூங்கில் பீடத்தில் அமர்ந்தபடி இருளை நோக்கிக்கொண்டிருந்தான். மிருகண்டன் அவனை அணுகி "போருக்கான அனைத்தும் ஒருங்கிவிட்டன. அக்களத்தை தூய்மை செய்ய ஆசிரியர் ஆணையிட்டார். சற்றுமுன்னர்தான் அப்பணி முடிந்தது. ஆசிரியர் லிகிதருடன் நீராடச் சென்றிருக்கிறார்" என்றான்.

யுயுத்ஸு தலையசைத்தான். "காலை வேள்வி முதற்கதிருக்கு முன்னரே முடிவது இங்கே வழக்கம். இன்று அதை முதல் பறவைக்கு முன்னரே முடிக்க ஆணை" என்று மிருகண்டன் சொன்னான். "குருநிலையில் மாணவர் அனைவருமே போர் காண அங்கே வருகிறார்கள். இப்போர் நெடுங்காலம் நூல்களில் யாக்கப்படுவதாக அமையும் என்கிறார்கள்." அவன் "ஆம்" என்றான். "பார்த்தனும் யாதவரும் நீராடச்சென்றார்கள் போலும்... அவர்களை அழைக்க நான் வருகிறேன்" என்றான். "தேவையில்லை, நாங்களே அங்கே வருகிறோம்" என்றான் யுயுத்ஸு.

மிருகண்டன் சென்றபின் அவன் பதற்றத்துடன் கண்மூடினான். மூடிய கண்களுக்கு அப்பால் எவரோ வருவதுபோலத் தெரிந்தது. விழிதிறந்தபோது புரவியை நிறுத்திவிட்டு பீமன் அவனை நோக்கி வருவதைக் கண்டான். அவனுடன் வந்த மிருகண்டன் "மூத்த பாண்டவர் வருகை முன்னரே அறிவிக்கப்படவில்லை. ஆசிரியரிடம் சொல்லி ஆணை பெறவும் இப்போது பொழுதில்லை. அவர் போரில் சான்று நின்றிருக்க வந்திருக்கிறார் போலும்" என்றான். ஆம் என யுயுத்ஸு தலையசைத்தான். பீமன் பொறுமையிழந்து

அசைந்தான். மிருகண்டன் அவனை வியப்புடன் நோக்கிவிட்டு திரும்பிச் சென்றான்.

பீமன் உரத்த குரலில் "எங்கே அவர்கள்? நிகழ்ந்தவற்றை அந்த மாணவன் சொன்னான். எங்கே இளையவன்?" என்றான். யுயுத்ஸு "அவர்கள் காட்டுக்குள் சென்றிருக்கிறார்கள்" என்றான். "நான் அவர்களை பார்த்தாகவேண்டும்... உடனே" என்றபடி பீமன் திரும்ப யுயுத்ஸு "நில்லுங்கள், மூத்தவரே. வேண்டாம். அவர்கள் சென்றிருப்பது நீராடுவதற்காக அல்ல" என்றான். "பிறகு?" என்று அவன் கேட்டான். "யாதவர் இளையவருக்கு சொல் அளிக்கவிருக்கிறார். இந்திரனின் அம்பை கையாளும் முறையை" என்றான். "அதை இப்போதுதானா அறியப்போகிறான் அவன்? தந்தையின் அம்பைக் கையாள பிறிதொருவர் சொல் தேவையா அவனுக்கு?"

யுயுத்ஸு அழுத்தமான குரலில் "இதற்கு அப்பால் தங்களுக்கு அதை உரைக்க இயலாது, மூத்தவரே" என்றான். "ஆனால் அவர்களின் தனியுலகுக்குள் நீங்கள் நுழையவேண்டியதில்லை." பீமன் சீற்றத்துடன் "நீயா என்னை தடுப்பது?" என்றான். "ஆம், நானேதான்" என்றான் யுயுத்ஸு. பீமன் "நான் அவனை அறைகூவிவிட்டே கிளம்பினேன். இளையவனுக்கு முன்னரே அவனை நான் அறைகூவிவிட்டேன்" என்று கூவினான். "அவர் நேரில் அறைகூவிவிட்டார். பரசுராமரின் முன் நாளும் பொழுதும் குறிக்கப்பட்டுவிட்டது" என்றான் யுயுத்ஸு. "அதை நான் ஏற்கவியலாது. என்னை எவரும் கட்டுப்படுத்த முடியாது" என்று பீமன் கைகளை ஓங்கி அறைந்தான்.

"மூத்தவரே, அஸ்வத்தாமன் ஏற்றுக்கொண்டது இளையவரின் அறைகூவலை" என்று யுயுத்ஸு சொன்னான். "அதை நீங்கள் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். அப்போர் முடியட்டும். நீங்கள்

உங்கள் அறைகூவலை முன்வைக்கலாம். அவர் ஏற்றாரென்றால் போரிடலாம்." பீமன் சலிப்புடன் அமர்ந்தான். "அவன் கைதளர்ந்திருந்தான். காண்டீபத்தையே மறந்துவிட்டிருந்தான். ஐவரில் போருக்கான ஊக்கம்கொண்டு எஞ்சுபவன் நான் மட்டுமே..." என்று தனக்குத்தானே சொன்னான். "அவனால் அஸ்வத்தாமனை எதிர்கொள்ளமுடியாது. அவன் அம்புக்கு இரையாகக்கூடும்."

"அவருடன் இளைய யாதவர் இருக்கிறார்" என்றான் யுயுத்ஸு. "இப்போர் நீங்கள் எண்ணுவதுபோன்றது அல்ல..." பீமன் அவனை வெறித்து நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தான். "நீங்கள் நீராடி ஒருங்கலாம், மூத்தவரே. பொழுதில்லை" என்றான் யுயுத்ஸு. சற்றுநேரம் வெறுமனே நோக்கியபின் "ஆம்" என பீமன் எழுந்துகொண்டான். எடையுடன் அவனுக்கு நிகராக நடந்தபடி "என்ன நிகழ்கிறது என்றே புரியவில்லை. அவன் எப்படி களம்நிற்க இயலும்? போரில் அங்கன் வீழ்ந்ததுமே அவனும் வீழ்ந்துவிட்டான்" என்றான்.

"மூத்தவரே, இது அவர்களுக்குள் மட்டுமே நிகழ்ந்தாகவேண்டிய போர்" என்று யுயுத்ஸு சொன்னான். "இப்படி ஒரு போர் எஞ்சியிருந்தது. அவர்கள் பிறந்த கணம் முதல் இது ஒருங்கிக்கொண்டிருந்தது." பீமன் "ஆம்" என்றான். பின்னர் பெருமூச்சுவிட்டு "ஊழின் கடன்களை முற்றாக முடித்துவிட்டே செல்வோம் போலும்" என்றான். "பொன்னின் உலையென்றாகவேண்டும் வாழ்க்கை என ஒரு சொல் உண்டு, வாசிஷ்டசூத்ரத்தில்" என்றான் யுயுத்ஸு. "அனைத்து மாசுகளையும் அகற்றி தூய்மை செய்யவேண்டும். பொன் அனலென்றாகும்போதே அதிலுள்ள மாசுகள் மறைகின்றன."

பீமன் சலிப்புடன் தலையை அசைத்தான். சுனையில் நீராடும்போது அவன் எண்ணி எண்ணி தலையை ஆட்டி முனகிக்கொண்டிருந்தான். குடிலுக்கு மீண்டு மரவுரி அணிந்துகொண்டிருக்கையில் மிருகண்டன் அவர்களை தேடிவந்தான். முற்றத்தில் நின்று "பாண்டவரே!" என்றான். யுயுத்ஸு வெளியே சென்றான். "களம் ஒருங்கிவிட்டிருக்கிறது. ஆசிரியர் சென்றுவிட்டார். இங்குள்ள மாணாக்கர் அனைவரும் அங்குதான் இருக்கிறார்கள்." யுயுத்ஸு "கிளம்புவோம்" என்றான். "அவர்கள் எங்கே?" என்று மிருகண்டன் கேட்டான். "அவர்கள் அங்கேயே வந்துவிடுவார்கள்" என்றான் யுயுத்ஸு.

உரத்த குரலில் "பொழுதுக்கு முன் அவர்கள் அணையவில்லை என்றால் நான் பொருதுகிறேன். நானும் அவனை அறைகூவியிருக்கிறேன்" என்றான் பீமன். மிருகண்டன் "அதை முடிவுசெய்யவேண்டியவர் ஆசிரியரே" என்றான். அவர்கள் முற்றத்தில் இறங்கினர். பீமன் கருக்கிருட்டை அண்ணாந்து நோக்கிவிட்டு கைகளை வீசியபடி நடந்தான். அவனுக்குப் பின்னால் மிருகண்டனும் யுயுத்ஸுவும் நடந்தார்கள்.

அக்களம் காட்டுக்குள் சற்று தள்ளி இருந்தது. அங்கே மண்ணுக்கு அடியில் மாபெரும் பாறை ஒன்று இருக்கக்கூடும். ஆகவே மரங்கள் ஏதும் முளைக்காமல் புல்வெளி உருவாகியிருந்தது. அங்கே பரசுராமரின் குருநிலையைச் சேர்ந்தவர்கள் வழக்கமாக விற்பயிற்சி கொள்வார்கள் என தெரிந்தது. குறிப்பலகைகளும் படைக்கலப்பெட்டிகளும் அமர்வதற்கான மூங்கில் பீடங்களும் அப்பகுதியெங்கும் பரவிக்கிடந்தன. பரசுராமரின் மாணவர்கள் அங்கே குழுமி வளைந்திருந்தனர். அவர்கள் அணுகியபோது அங்கே

எழுந்துகொண்டிருந்த பேச்சுக்குரல் முழக்கம் அடங்கி மேலெழுந்தது.

களத்தின் தென்மேற்குமூலையில் கொற்றவையின் சிறு சிலை பீடத்தில் நிறுவப்பட்டிருந்தது. செம்பட்டு அணிந்து செங்காந்தள் மாலைசூடி செஞ்சுடர்கள் ஏழு எரிந்த இரு அடுக்குவிளக்குகளுக்கு நடுவே அன்னையின் சிறிய கருஞ்சிலை அமர்ந்திருந்தது. வெள்ளியாலான விழிகள் பதிக்கப்பட்ட முகம் அனலாட்டத்தில் உயிர்கொண்டிருந்தது. எதிரே பலிபீடத்தில் குருதிபலி கொடுக்கப்பட்ட வெள்ளாட்டின் தலை விழிகள் வெறித்திருக்க, நாக்கு நீண்டு சரிந்துதொங்க வைக்கப்பட்டிருந்தது. குருதியின் மணம் அப்பகுதியை சூழ்ந்திருந்தது.

கொற்றவைச் சிலைக்கு நேர் எதிராக வடகிழக்கு மூலையில் மரப்பீடத்தில் பரசுராமர் அமர்ந்திருந்தார். அவர் அருகே லிகிதர் நின்றார். மாணவர்கள் சூழ்ந்து நின்றிருந்தனர். பீமன் அவரை அணுகி கால்தொட்டு வணங்கினான். அவர் அவனை தலை தொட்டு வாழ்த்தினார். பீமன் ஏதேனும் சொல்வான் என யுயுத்ஸு எதிர்பார்த்தான். ஆனால் அவன் அக்களத்தை நோக்கியதுமே உளம்குழம்பிவிட்டவன் போலிருந்தான். பரசுராமரின் அருகிலேயே பீமன் நின்றுகொண்டான். யுயுத்ஸு அருகே சென்று நின்றான்.

கொம்பொலி எழுந்ததும் அனைவரும் திரும்பி நோக்கினர். தனியாக கையில் வில்லுடன் அஸ்வத்தாமன் வந்தான். அவன் அணுகுந்தோறும் கூட்டத்தில் பேச்சொலி எழுந்து அவன் களத்திற்குள் புகுந்ததும் ஆழ்ந்த அமைதி உருவாகியது. அஸ்வத்தாமன் பரசுராமரை வணங்கிவிட்டு தன் வில்லை கொற்றவையின் முன் குருதிபீடத்தின்மேல் வைத்தான்.

தலைவணங்கிவிட்டு அன்னைசிலையின் வலப்பக்கமாக நின்றான். பீமனின் விழிகள் அஸ்வத்தாமனிலேயே பதிந்திருந்தன.

அஸ்வத்தாமனின் நெற்றியில் அந்தச் செந்நிற அருமணியை அப்போதுதான் யுயுத்ஸு கண்டான். முந்தைய நாள் அதைக் கண்டது நினைவுக்கு வரவில்லை. அப்போது அவனுடைய சடைக்கற்றைகள் முகத்தில் சரிந்து அதை மறைத்திருக்கலாம். அப்போது அவன் சடைகளை அள்ளி பின்னுக்குத்தள்ளி தோல்பட்டை ஒன்றை கட்டியிருந்தான். அந்த அருமணி ஒரு துளி அனல் என மின்னியது. நுதல்விழி. அவனுடைய குழல் எப்படி சடையாகியது என யுயுத்ஸு உணர்ந்தான். குருதிக்கூழ் முடியுடன் கலந்து அதை சடையென்று ஆக்கும் தன்மை கொண்டது. செஞ்சடையன்.

நீர்ச்சுடர் - 39

பகுதி ஐந்து : எஞ்சும் கனல் – 9

எப்போதுமே தனிமையை ஓர் அழுத்தமாகவே யுயுத்ஸு உணர்ந்து வந்தான். ஆனால் ஒன்று நிகழ்வதற்கு முன் அமையும் தனிமையை அவன் வியப்புடன் மீளமீள எண்ணிக்கொள்வதுண்டு. அப்போது மானுடர் அனைவருமே சற்று கைவிடப்பட்டவர்களாகத் தெரிவார்கள். அவர்களை ஆட்டுவித்த சரடுகள் அனைத்தும் தளர்ந்துவிட, செய்வதறியாமல் தளர்ந்து நின்றிருப்பார்கள். செயல் அவர்களில் விண்ணிலிருந்து மின் இறங்கி மரங்களைப் பற்றி எரியச்செய்வதுபோல நிகழ்கிறது. செயல்கள் அனைத்தையும்

அவற்றுக்குரிய தெய்வங்களே இயற்றுகின்றன. பெருஞ்செயல்களை பெருந்தெய்வங்கள்.

அவன் அஸ்வத்தாமனும் அர்ஜுனனும் போருக்குரிய சடங்குகளைச் செய்வதை நோக்கி நின்றிருந்தான். அவர்கள் இருவருமே தளர்ந்துபோய், ஆர்வமற்றவர்களாகவே தெரிந்தனர். தொய்ந்த நடையில் சென்று கொற்றவையையும் பின்னர் பரசுராமரையும் வணங்கினர். இரு எல்லைகளிலாக நின்றுகொண்டனர். பரசுராமரின் மாணவர்கள் மேலும் விரிந்து அந்தக் களத்தை விரிவாக்கினர். பறவைகளின் ஒலி மட்டும் அங்கே கேட்டுக்கொண்டிருந்தது. அஸ்வத்தாமனின் வில் அவனுடைய தலைக்குமேல் புலியின் வால் என எழுந்து தெரிந்தது. காண்டீபம் அத்தனை உயரம் கொண்டதாக இருக்கவில்லை. இருவரும் கால் அகற்றி நிலைகொண்டனர்.

யுயுத்ஸு இருவரின் கால்களையும் நோக்கிக்கொண்டிருந்தான். வில்லவர்களின் கால்கள் பறவைக்கால்களைப்போல, மண்ணில் ஊன்றியிருந்தாலும் அவை மண்ணுக்குரியவை அல்ல. அவை காற்றிலெழும் கணம் தேடியே மண்ணில் தொட்டுத்தாவுகின்றன. பறவைக்கால்களால் மட்டுமே நடனமாட முடியும். அனைத்துப் பறவைகளும் நடனமாடுகின்றன. நடனமாடும் விலங்கு பறவையாகிவிடுகிறது. இந்த வில், இது விசைகொண்டு வளைந்த கிளை. அந்த அம்புகள் பறவைகள். பறவைகளை ஆள்பவர்கள் வில்லவர். அவர்கள் பறத்தலை உன்னி ஊழ்கம் செய்து தேர்ந்து தாங்களும் ஒருவகை பறவைகளாக ஆகிவிடுகிறார்கள்.

பரசுராமரின் மாணவர் லிகிதர் போருக்கான நெறிமுறைகளை அறிவித்தார். அதன்பின் பரசுராமரை வணங்கி வலப்பக்கம்

சென்று நின்றார். பரசுராமர் போர் தொடங்குக என கைதூக்கினார். ஒரு சங்கொலி தேம்பி அணைந்தது. அவ்வொலி கேட்டு பறவைகள் கலைந்து வானில் எழுந்து கூச்சலிட்டபடி சுழன்றன. வானிலிருந்து மெல்லிய புலரொளி விழுந்து களமுற்றம் துலங்கியது. கூழாங்கற்கள் முழுத்து எழுந்து தெரிந்தன. இளங்காற்று ஒன்று கடந்துசென்றபோது மேலாடைகள் வண்ணங்களுடன் அசைந்தன. உதிர்ந்த சருகொன்று எழுந்து இடம் மாறியது.

இரு வில்லவர்களும் ஒருவரை ஒருவர் நோக்கிக்கொண்டு அசையாமல் நின்றிருந்தார்கள். அவர்களுக்குள் விசை முனைகொண்டு விழிகளில் ஒளித்துளியாகியது. கைவிரல்கள் விற்களை மலர்த்தண்டை என பற்றியிருந்தன. கால்களில் தசைகள் இழுபட்டிருந்தன. எக்கணம் போர் நிகழும் என எவராலும் சொல்லிவிட முடியாது. எவர் அம்பு எடுப்பார் என்றும். அது நூறுமுறை ஆயிரம் முறை நோக்கினாலும் கணிப்புகள் அனைத்துக்கும் அப்பாற்பட்டது. அவர்களில் இப்போது நிகழ்வதென்ன? எவரோ வந்து அமர்ந்துகொள்வதற்கு முன்பிருக்கும் பீடத்தின் வெறுமையின் தவிப்பு.

போர் தொடங்கிவிட்டிருந்தது. அஸ்வத்தாமன் முதல் அம்பை அர்ஜுனனை நோக்கி தொடுக்க அர்ஜுனன் அதை இயல்பாக உடல்வளைந்து ஒழிந்தான். கூட்டத்திலிருந்து ஒரு மென்முழக்கம் எழுந்தமைந்தது. அர்ஜுனனின் அம்பை அஸ்வத்தாமன் ஒழிந்தான். அர்ஜுனனிடம் இருந்த பெண்மை லாஸ்யமென வெளிப்பட அஸ்வத்தாமனிடம் வெளிப்பட்டது தாண்டவம். இருவரும் தேர்ந்தவர்களாக இருக்கையில் நிகழ்வது அம்பு என்னும் வடிவுக்கும் மானுட உடலென்னும் வடிவுக்கும் இடையேயான போட்டிதான். அம்பின்

நேர்ப்போக்கும் உடலின் வளைதலும். அம்பின் சீற்றமும் உடலின் நடனமும். உடல் ஒழியும் அம்புகளை நிலம் வாங்கிக்கொள்கிறது. நிலமே உடலென்பர் நூலோர். அன்னம் கொள்ளும் இரு வடிவங்கள்.

அம்புகள் மின்னி மின்னி காற்று சீறும் ஒலியுடன் கடந்து சென்றன. மண்ணில் தைத்து நின்று சிறகசைந்தன. நாற்றுநட்ட வயல் என ஆயிற்று அக்களம். அவற்றில் ஏதேனும் வடிவம் உள்ளதா? ஒழுங்கற்றவை எனத் தோன்றினாலும் வடிவமென ஒன்று இருந்தாகவேண்டும். அர்ஜுனனுக்குப் பின்னாலிருக்கும் இந்த அம்புகளின் வடிவம் அவன் உடலால் ஒழியப்பட்டது. அவன் உடலின் இந்நடனத்தின் நிழலுருவம் அதில் இருந்தாகவேண்டும்.

யுயுத்ஸு புன்னகைத்தான். அவனால் போரை உள்ளம் பெருகி ஓடாமல் நிகழ்த்த முடிவதே இல்லை. ஆகவேதான் அவன் மிகத் திறன் குறைந்த வில்லவனாக ஆனான். அவனுக்குப் பயிற்றுவித்த கிருபர் "உனக்குரியது சொல் மட்டுமே" என்றார். துரோணர் "நீ களத்திற்கே வரவேண்டியதில்லை. அரசநெறிகள் உசாவுகையில் மட்டும் வந்து அமர்ந்துகொள்" என்றார். அவன் குருக்ஷேத்ரத்திலும் சொல்பெருகும் உள்ளத்துடன்தான் நின்றிருந்தான்.

அவனை எந்த அம்பும் தாக்கவில்லை. ஏனென்றால் அவன் பெரும்பாலும் களத்திற்குப் பின்னணியிலேயே இருந்தான். யுதிஷ்டிரனும் அவனும் படைசூழவே நின்றிருந்தனர். அங்கும் அம்புகள் வந்து கவியத்தான் செய்தன. ஆனால் எந்த அம்பும் அவனை அடையவில்லை. சொல்பெருகி ஒரு அரண் என அம்புகளை தடுத்திருக்கலாம். அந்தப் படைப் பின்னணிநிரை என்பது ஓர் ஆழம். மேல்தட்டில் அம்புகள் கொந்தளித்தன.

அவையே சொற்களென ஆகி அடித்தட்டில் படிந்துகொண்டே இருந்தன. சேறுபோல. குப்பைபோல. அவன் அங்கே திகழ்ந்தான். கடலடியின் கரிய அட்டைபோல. நீந்தல் அறியாதது. விழியிலாதது.

போர் விசைகொண்டபடியே சென்றது. இரு வில்லவர்களும் இரு எல்லைகளிலும் நின்று சுழன்றனர். விழிதொட முடியாத விரைவுகொண்டிருந்தன அவர்களின் கைகள். யாழ்க்கலைஞனின் விரல்கள்போல. அவை பருவடிவம் அழிந்து நீர்வடிவம் கொள்கின்றன. பின்னர் காற்றென்றே ஆகிவிடுகின்றன. அவன் இசை நுகர்பவன் அல்ல. ஆனால் இசையெனும் விந்தையை எப்போதுமே திகைப்புடன் நோக்கிவந்தான். மானுட உடல் தன் எல்லையை மீறும்போதே மெய்யான இசை எழுகிறது. அம்புகளும் அவ்வாறே. எந்தக் கலையும் அவ்வகையான மீறல் மட்டுமே.

எத்தனை முறை கண்டிருப்போம் இரு இணைவில்லவரின் போர்களை. இமையசைக்காமல் காலமில்லாமல் நோக்கி நின்றிருப்போம். அவை எழுகையில் வெவ்வேறு. முடியும்போது அறியமுடியாமை நிகழ்ந்து நின்ற கணம். ஆனால் நடுவே நிகழ்வென அவை ஒன்றே. ஒரே அசைவுகள், எழுப்பும் உணர்ச்சிகளும் ஒன்றே. ஆனாலும் அவை சலிப்பதில்லை. ஏனென்றால் அவற்றில் என் உள்ளமும் சென்று சேர்ந்துவிடுகிறது. இதோ இரண்டெனப் பிரிந்து நின்று போரிடுவது நானே. ஓர் எண்ணம் இன்னொரு எண்ணத்தை அறைவதுபோல. ஓர் உணர்வு இன்னொரு உணர்வால் அறைந்து சுழற்றப்படுவதுபோல.

நோக்க நோக்க சலிக்காதிருப்பது எதுவோ அதுவே இறைநிகழ்வு போலும். கடலோ காடோ முகிலோ யானையோ.

இதில் சலிக்காதிருப்பது என்ன? விரைவா? கைசுழல கால்கள் தொட்டுத்தாவ நிகழும் எளிதான இயல்கையா? இரு மானுடர் இறகென அனலென ஆகிவிடும் விந்தையா? பிறிதொன்று. அவர்கள் ஒருவரை ஒருவர் உள்ளத்தால் கவ்விக்கொண்டிருக்கிறார்கள். ஒருவர் மற்றவரை எண்ணி எண்ணி உட்புகுந்து ஒருவர் பிறிதொருவராகவும் மாறி நின்று போரிட்டுக்கொள்கிறார்கள். உடலென்றும் உள்ளமென்றும் இருப்பென்றும் ஆன எல்லைகளை கடந்துசெல்கிறார்கள். உருவமே உடலின் எல்லை. உருவத்தை உதறிச்செல்ல அதற்கிருக்கும் ஒரே வழி விசைகொள்ளுதல்தான்...

யுயுத்ஸு அவனுடைய உள்ளத்தின் கட்டற்ற சொற்பெருக்கு அணைந்துகொண்டே இருப்பதை உணர்ந்தான். சொற்கள் ஒன்றோடொன்று முட்டிக்கொண்டு விசையழிந்தன. தேங்கிய சொற்கள் பிற சொற்களை தடுத்தன. சொற்கள் குழம்பிக்கொள்ள ஓர் ஓலமென ஆகியது அகம். பின்னர் ஒன்றும் நிகழவில்லை. ஓடி எழுந்து மலைவிளிம்பிலிருந்து விண்ணுக்குப் பாய்ந்துவிட்டதுபோல. அவன் அமைதியில் விழுந்து விழுந்து இறங்கிக்கொண்டே இருந்தான். அனைத்தும் ஒரு ரீங்காரமாக மாறி அகல முழுமையான அமைதி.

அவன் வேறெங்கோ நின்று நோக்கிக்கொண்டிருந்தான். அஸ்வத்தாமனின் தோற்றம் என கர்ணன் எழுந்துவிட்டிருப்பதை கண்டான். அழகிய கரிய நீளுருவம். நெளியும் பெருங்கைகள். கூரிய விழிகள். "அங்கர்! அங்கர்!" என கொந்தளித்துக் கூச்சலிடுவது யார்? அங்கரை எதிர்த்துப் போரிடுவது அர்ஜுனன் அல்ல என அவன் கண்டான். "பீஷ்மர்!" பிதாமகரின் கைகள் அமைதியாகச் சுழல அம்புகள் சீராக எழுந்துகொண்டிருந்தன. அவை கர்ணனின் அம்புகளை

மணியோசையுடன் அறைந்து வீழ்த்தின. பீஷ்மரின் உடலை கர்ணனின் நீளம்பு ஒன்று தைத்தது. அவர் உறுமியபடி எடுத்துத் தொடுத்த அம்பு கர்ணனின் நெஞ்சிலறைந்து அவனை தூக்கி வீசியது.

கைஊன்றி புரண்டு தாவி எழுந்தவன் ஜயத்ரதன் என்று யுயுத்ஸு கண்டான். இது என்ன விந்தை, என் விழிமயக்கா என அவன் வியந்தான். ஆனால் அது நிகழ்ந்துகொண்டிருந்தது. ஜயத்ரதனை எதிர்ப்பது யார் என அவன் நோக்கினான். அர்ஜுனனின் உடல் மருவி பூரிசிரவஸாக தெரிந்தது. என்ன நிகழ்கிறது? நான் மயங்கி விழுந்துவிட்டேனா? அஸ்வத்தாமன் உடல் உருகி பிறிதொன்றாகியது. அங்கே துரோணரை அவன் கண்டான். அவரை எதிர்த்துப் போரிட்டுக்கொண்டிருந்தவர் கிருபர். அவன் அந்த உளமயக்கை உதறி மீள முயன்றான். ஆனால் அது உளமயக்கல்ல, விழிமுன் நிகழ்ந்துகொண்டிருந்தது.

ஒவ்வொரு உருவாக மாறி மாறி எழுந்தது. அஸ்வத்தாமனாக பீமன் எழ அவனை எதிர்த்து அர்ஜுனன் போரிட்டான். எவரை எதிர்த்து எவர் எழுகிறார்கள்? எவர் வெல்கிறார்கள்? கொல்பவரும் கொல்லப்படுபவரும் எவர்? அறுதியாக எழுந்த துரியோதனனை எதிர்ப்பவர் இளைய யாதவரா என்ன? அர்ஜுனன்தான், ஆனால் பீலி சூடியிருந்தான். முகம் புன்னகையில் மலர்ந்திருந்தது.

யுயுத்ஸு தனிமையை மீண்டும் உணர்ந்தான். இதுவரை போர் தொடங்கவில்லை என்பதுபோல. இன்னும் போர் எழவிருக்கிறது என்பதுபோல. போர் உண்மையில் நிகழ்கிறதா? ஏதேனும் நூலில் படித்துக்கொண்டிருக்கிறேனா? எந்த நூல்? அவன் கனவில் ஒரு நூலை அடிக்கடி படிப்பதுண்டு. பல

ஆயிரம் பாடல்கள் கொண்டது. வாழ்க்கையின் அத்தனை உணர்வுகளையும் உரைப்பது. அத்தனை எண்ணங்களையும் உள்ளடக்கியது. நெறிகளனைத்தையும் ஒன்றுவிடாமல் உரைப்பது. பிறிதொரு நூல் புவியில் தேவையில்லை என தான் நிலைகொள்வது.

அவன் மெய்ப்புகொண்டான். அந்நூலைத்தான் இதோ பார்த்துக்கொண்டிருக்கிறேன். இவை அந்நூலில் சொல்லெனத் திகழ்பவை. அப்பேராசிரியனின் கைபட்டு ஏட்டில் மலர்பவை. அவன் எழுதிக்கொண்டே இருக்கிறான். தலைமுறைகளுக்கு முன் அஸ்தினபுரியில் இருந்து மறைந்த வியாசனாகிய கிருஷ்ண துவைபாயனன் மறையவில்லை என்று சொல்லப்படுவதுண்டு. அவர் எங்கிருந்தோ அனைத்தையும் அறிகிறார். அனைத்தையும் எழுதிக்கொண்டிருக்கிறார். இங்கு நிகழும் ஒரு நிகழ்வுகூட மறையப்போவதில்லை. சொல்லப்படும் ஒரு சொல்கூட வீணாக ஆவதில்லை.

யுயுத்ஸு தன் எதிரே வியாசரை பார்த்தான். அவர் தர்ப்பைப்புல் விரிக்கப்பட்ட மரத்தாலான மேடையில் அமர்ந்திருந்தார். எதிரே பெரும்பள்ளத்தாக்கு கீழிறங்கி அலையென மடிந்தெழுந்து மலையடுக்குகளாக மேலேறிச் சென்று ஒளிரும் உச்சிப்பாறைகளை சூடியிருந்தது. முகில்கள் ஒளிகொண்டிருந்தன. அவர் கண்களை அவ்வெளி நோக்கி நிலைக்கவிட்டு கைகளால் தாடியை தடவிக்கொண்டிருந்தார்.

அவருடைய வலப்பக்கம் கரிய, பெருத்த உடல்கொண்ட ஓர் கற்றுச்சொல்லி அமர்ந்திருந்தான். மிக இளையவன். அவருக்கு முன்னால் நான்கு மாணவர்கள் அமர்ந்திருந்தனர்.

வைசம்பாயனன் அவர்களில் அகவை மூத்தவன். சுமந்து, ஜைமினி, பைலன் மூவரும் இளையோர். அப்பால் கையில் யாழுடன் தனித்து அமர்ந்திருப்பவன் அவருடைய சூத மாணவன்.

வியாசர் "சொல்க!" என்றார். "நான் எப்படி அதை சொல்லமுடியும்? நான் கவிஞன் அல்ல, சொல்வலனும் அல்ல" என்றான் யுயுத்ஸு. "நீ அதை விழிகளால் பார்த்தாய்" என்றார் வியாசர். "ஆம், நான் பார்த்தேன்" என யுயுத்ஸு பெருமூச்சுவிட்டான். "நீ உன் அகவிழிகளாலும் பார்த்தாய். நிகழ்வுகள் எளியவை. அவற்றின்மேல் சென்று படியும் அகமே அவற்றை பொருள்கொண்டவை என ஆக்குகிறது. பாறைமேல் பவளப்பூச்சிகள் பல்லாயிரமாண்டுகளாக படிகின்றன. ஒன்றின்மேல் இன்னொன்று படிகிறது. அவை படிகமாகி பவளமாகின்றன. பாறை அதற்கு அடியில் வெறும் முதல் வடிவம் என அமைந்துள்ளது" என்றார் வியாசர்.

"ஆம், நான் என் முழுச் சொற்களாலும் அந்நிகழ்வின்மேல் அறைந்தேன். என்னை சிதறடித்துக்கொண்டேன். நான் அறிந்தவற்றை, நான் என தொகுத்துக்கொண்டவற்றை... ஒரு துளி எஞ்சாமல் அங்கே இருந்தேன்" என்று யுயுத்ஸு சொன்னான். "அதுவே உன்னை சொல்லும் தகுதி கொண்டவனாக்குகிறது" என்றார் வியாசர். யுயுத்ஸு சொற்களை திரட்டிக்கொள்ள முயன்றான். முதற்சொல் என எழுவது எது? முதற்சொல்! முதற்சொல்! அவன் அகம் தவித்தது. பின்னர் சலித்தமைந்தது. சோர்ந்து என்னால் இயலாது என எண்ணிக்கொண்டான். அவன் பின்வாங்கிய கணம் ஒரு சொற்றொடர் அவனை வந்தடைந்தது.

“தெய்வம் மானுடனுக்கு அருள்கையில் அவனை தெய்வமாக்குகிறது. தெய்வத்தை ஒருகணம் மானுடனாக்கி அவ்வருளை மானுடன் பெற்றுக்கொள்கிறான்” என்று அவன் சொன்னான். வியாசரின் முகம் மலர்ந்தது. கனிந்த விழிகள் அவனை நோக்கின. மாணவர்களும் முகம் மலர்ந்து அவனை பார்த்தனர். அவன் தன் உள்ளம் சொற்பெருக்கென பொங்கி எழுவதை உணர்ந்தான். “ஆசிரியரே, நான் கண்டேன் அப்பெரும்போரை. நிகரிலாத பெரும்போர் ஒன்று முடிந்த பின்னர் அது நிகழ்ந்தது. அனால் அப்போரும் அதே விசைகொண்டிருந்தது. அதே அழிவையும் உருவாக்கியது” என அவன் சொல்லத் தொடங்கினான்.

அர்ஜுனன் போரிட்டுக்கொண்டிருக்கையிலேயே உருமாறி தெய்வங்களும் மானுடருமாக தோன்றி மறைவதை, மறுபக்கம் அஸ்வத்தாமன் அவ்வண்ணமே நிகர் உருமாற்றம் கொள்வதை நான் கண்டேன். எந்தப் போரும் இங்கு எப்போதும் நிகழ்ந்துகொண்டிருக்கும் போர் ஒன்றின் பகுதியே என்று உணர்ந்தேன். அப்போரை நான் நூறாக ஆயிரமாக உடைந்து பரவி பல்லாயிரம் விழிகளால் பார்த்துக்கொண்டிருந்தேன். எண்ணற்ற வடிவங்களில் எண்ணற்ற இடங்களில் அது நிகழ்ந்துகொண்டிருந்தது.

அஸ்வத்தாமன் தன் நெற்றியில் அணிந்த அந்த மூவிழி ஒளிகொண்டு சிவந்தபடியே செல்வதை கண்டேன். அது அவருக்குள் எரியும் பெருந்தழல் ஒன்று பீறிட்டு வெளிவரும் சிறுதுளை எனத் தோன்றியது. செஞ்சடைகள் கொழுந்துவிட்டெரிந்தன. அம்புகளைத் தொடுத்தபடி சுழன்ற கைகளில் மானும் மழுவும் தோன்றி மறைந்தன. முப்புரம் எரித்த வில் அவர் கையிலெழுந்தது. ஒற்றைக்கால் ஊன்றி

மறுகால் தூக்கி சடை சுழன்று பறக்க அவர் எழுந்தாடியபோது ஊழித் தாண்டவத்தைக் கண்டேன்.

ஒரு கணத்தில் கைகளில் தோன்றி மறைந்தது பேரழிவின் முத்திரை. வடவை எழுந்தது. அழிகிறது புவி என ஓலமிட்டன பூதங்கள் ஐந்தும். ஆம் ஆம் ஆம் என முழங்கியது வானம். சூழ்ந்தமைந்த தேவர்கள் அஞ்சி ஒருவரோடொருவர் ஒண்டிக்கொண்டார்கள். வெற்புகள் பொடிபடும் என முழங்கிய இடியோசையை கேட்டேன். வெற்றுக்களியொடு பூதக்கூட்டம் பாடும் எக்காளம். துடியொடு முழவும் உடுக்கொலியுடன் இணையும் வெறிமிகு தாளம். ஆழியில் அலைஎழுவதுபோல் அனல்பொங்கி அணைவதை கண்டேன். எஞ்சாது இனி எதுவும் என எண்ணி உளம் சமைந்தேன்.

இவ்விந்தையை என்னால் விளக்க இயலாது. ஒற்றைக் காற்புள்ளியில் சுழலும் முக்கண்ணனின் உருவிலெழுந்தன அத்தனை தெய்வங்களும். அத்தனை தேவர்களும் முனிவரும் எழுந்தனர். மூதாதையர் முகங்கள் தோன்றின. மூதன்னையர் தோன்றினர். மறைந்த மாவீரர்கள், பேரரசர்கள் எழுந்தனர். கற்றோர் கலைதேர் சூதர் எழுந்தனர். ஆசிரியரே, நான் மீண்டுமொருமுறை கண்டேன். அத்தோற்றத்தில் கையில் வேய்குழலும் முடியில் பீலியும் புன்னகைக்கும் முகமும் சிறுவர்களுக்குரிய விழிகளுமாக அவரை.

அவரைக் கண்டதுமே திகைத்துத் துடித்து மறுபக்கம் அர்ஜுனனை நோக்கினேன். அவரும் உருமாறிவிட்டிருந்தார். மேலும் மேலும் அகவை பின்னடைய இளமையின் பொலிவும் அழகும் தோன்றிக்கொண்டிருந்தன. இளந்தோள்கள், இளைய மார்பு. இளையோருக்குரிய சிரிப்பு. விழிகளில் அச்சமின்மையின் ஒளி. அவர் பதினெட்டு அகவை

கொண்டவராகத் தெரிந்தார். அவர் கையில் இருந்த வில் உருமாறிவிட்டிருந்தது. அது கரும்பாலான வில். அவர் அம்புகள் அனைத்தும் மலர்கள். உடலிலி அவர் உடலென எழுந்துவிட்டிருந்தான். தன் மெல்லிய விரல்களால் அவர் வெண்ணிற முல்லைமலர் ஒன்றை எடுத்து நாணில் தொடுத்து எய்தார்.

பேரலை என எழுந்து சுருண்டு அணுகிவந்த அனலை எதிர்கொண்டது குளிர்ந்த வெண்ணிற சிறுமலர். அக்கணம் அனல்பெருக்கு உறைந்தது. செந்நிற மலர்வெளி என மாறியது. அச்சுழி நடுவே நின்றிருந்த அஸ்வத்தாமனின் நுதலில் சுடர்ந்த எரிமணியும் ஒரு மலர் என ஆவதை கண்டேன். அவர் முகத்திலும் அனல் அணைந்தது. மென்முறுவல் எழுந்தது. அவர் தலையில் ஒரு வெண்சுடர் எழக்கண்டேன். அது கூனலிளம்பிறைக்கீற்று என தெளிந்தேன். அதன் குளிரொளி அவர் உடலெங்கும் வழிந்திறங்க அவர் மெய்ப்பு கொண்டார். கை தழைய வில் தாழ்ந்து நிலம் தொட்டது. ஆசிரியரே, அவர் உடலின் இடப்பகுதியில் பெண்மை எழுந்தது. இடக்கை அசைவு கொடியென மென்மைகொண்டது.

மறுபக்கம் அர்ஜுனனின் இளைய உடல் முதுமை கொள்வதை கண்டேன். தசைகள் வற்றிச் சுருங்கி கருமை கொண்டன. பின்னர் அவை தழல்கொண்டு எரியலாயின. அவர் தலையில் குழல்கற்றைகள் செந்தழலாக கொழுந்தாடின. காதுகளில் நாகங்கள் குண்டலங்களாக நெளிந்தன. ஆசிரியரே, அவர் நெற்றியில் ஓர் அனல்துளி விழிதிறந்தமைவதை கண்டேன். அவரிடம் என்றுமிருந்த பெண்மை முற்றிலும் அகன்றுவிட்டிருந்தது. கொடியொன்று மரமாகி வேர் இறுகி உறுதியடைந்ததுபோல.

அஸ்வத்தாமனுக்கும் அர்ஜுனனுக்கும் நடுவே எழுந்த பரசுராமர் இரு கைகளையும் விரித்து நின்றிருப்பதை யுயுத்ஸு கண்டான். இடமுணர்ந்து, பொழுதுணர்ந்து நடுக்குகொண்டு நின்றான். "இங்கு இப்போர் முடிகிறது. இருவரும் தொடுத்தவை இணையாற்றல் கொண்ட அம்புகள். அவை ஒன்றையொன்று நிகர் செய்துவிட்டன. இனி போரில்லை" என பரசுராமர் அறிவித்தார். "இருவரும் வென்றனர், இருவரும் தோற்றனர்" என்று அவர் கூறியதும் அர்ஜுனனும் அஸ்வத்தாமனும் தலைவணங்கினர். "ஒருவரை ஒருவர் வணங்குக! ஒருவரில் எழுந்த தெய்வத்தை பிறிதொருவர் தொழுவதாகவே அதற்குப் பொருள்" என்று பரசுராமர் ஆணையிட்டார்.

அர்ஜுனன் சென்று அஸ்வத்தாமனின் அருகே காண்டீபத்தைத் தாழ்த்தி அவன் கால்களைத் தொட்டு வணங்கினான். அவன் தன் வில்லை அர்ஜுனன் முன் தாழ்த்தி அவன் கால்களைத் தொட்டு வணங்கினான். இருவரையும் வாழ்த்தி கூடியிருந்தவர்கள் குரலெழுப்பினர். இருவரும் சென்று பரசுராமரை வணங்கினர். அவர் இருவருக்கும் தலைதொட்டு வாழ்த்தளித்தார். "சில போர்கள் முடிவதில்லை என்று உணர்க! இப்போர் இனி உங்களிடையே நிகழலாகாது" என்றார் பரசுராமர். "ஆம்" என்று அர்ஜுனன் பெருமூச்சுவிட்டான். அஸ்வத்தாமன் புன்னகைத்தான்.

அர்ஜுனன் தலைவணங்கி திரும்புகையில் அஸ்வத்தாமன் "நில், பார்த்தா" என்றான். தன் நெற்றியிலணிந்திருந்த அருமணியைக் கழற்றி நீட்டி "இதை உன்னிடம் அளிப்பதற்கே எந்தை உண்மையாக விழைந்தார். அதனால்தான் அதை நான் என் நெற்றியிலேயே சூடியாகவேண்டும் என உறுதி

கொண்டிருந்தேன். இன்று இதை நான் கடந்துவிட்டிருக்கிறேன். இது உனக்குரியது" என்றான். அர்ஜுனன் புன்னகையுடன் "அது எனக்கு அரியது. ஆனால் அதைச் சூடும் தகுதியிலாதவன் நான்" என்று தலைவணங்கி பின்னடைந்தான்.

அக்கணம் முன்னால் எழுந்த பீமன் "நான் அதன்பொருட்டே வந்தேன். அந்த அருமணியை எனக்களியுங்கள், ஆசிரியரே" என்றான். அஸ்வத்தாமன் புன்னகையுடன் அதை அவனை நோக்கி வீச பீமன் பற்றிக்கொண்டான். அஸ்வத்தாமனின் நெற்றியில் அந்த அருமணியின் கூர் பதிந்திருந்த இடத்தில் கூரிய குருதிப்புண் ஒன்று தோன்றியிருந்தது. அது ஊறிக்கசிந்து நெற்றியில் வழிந்தது. அவன் இளைய யாதவரை ஒருகணம் நோக்கியபின் திரும்பி காட்டுக்குள் நடந்து மறைந்தான்.

யுயுத்ஸு அப்போதுதான் இளைய யாதவர் அங்கிருப்பதை உணர்ந்து அவரை பார்த்தான். அவர் அர்ஜுனன் தோளைத் தொட்டு செல்வோம் என உதடசைக்க அர்ஜுனன் தலை அசைத்து உடன் சென்றான். பரசுராமர் எழுந்து லிகிதருடன் நடந்து அகன்றார். பீமன் அந்த அருமணியை தன் கையில் வைத்து புரட்டி நோக்கிக்கொண்டு செல்வதை யுயுத்ஸு கண்டான். அந்நிகழ்வின் பொருளை வெவ்வேறு கோணங்களில் பேசியபடி அனைவரும் கலைந்துசென்ற பின்னரும் அவன் அங்கேயே நின்றுகொண்டிருந்தான். அந்நிகழ்வுக்கு முன்பிருந்த தனிமையை சென்றடைந்தான்.

அத்தருணத்தை ஒரு சிறுநூலாக ஆக்கவேண்டும். அதை வியாசரின் மாணவர்கள் எவரைக் கொண்டாவது படித்துப்பார்க்கச் செய்யவேண்டும். ஒரு நூல். அதன் பெயர் அவன் நினைவிலெழுந்தது. மல்லீஸ்வரவிஜயம். மலரம்பனின் வெற்றி. ஆனால் தன்னை அளித்து அடைவது வெற்றியா

என்ன? தன்னை அளிக்காமல் வெற்றி என்பது உண்டா? அவன் அந்நூலை ஏற்கெனவே இயற்றி வியாசரிடமே படித்துக்காட்டிவிட்டதுபோல் உணர்ந்தான். அந்நூலின் முதல் வரிகூட நினைவில் இருந்தது. வானவில்போல வண்ணக்குழம்பலாக அது கரைந்துவிட்டிருந்தது. அவன் அதை நினைவிலிருந்து மீட்டெடுக்க முயன்றபடி நடந்தான்.

நீர்ச்சுடர் - 40

பகுதி ஆறு : விழிக்குமிழிகள் – 1

சகதேவன் கண்விழித்தபோது அருகே சுருதசேனன் நின்றுகொண்டிருந்தான். அவன் அசையாமல் மைந்தனை உணர்ந்தபடி படுத்திருந்தான். அவனுடைய உடலின் வெம்மை. மூச்சின் மெல்லிய ஓசை. அதற்கும் அப்பால் அருகே ஓர் உயிர் இருப்பதை உயிர் அறியும் நுண்ணுணர்வு. சற்றே அசைந்தால்கூட அக்கணம் கலைந்துவிடும் என அவன் அறிந்திருந்தான். கலைவதற்கு முன்புவரை அது முற்றிலும் உண்மை. கலைந்த கணமே கனவு அல்லது மாயை. இமையசைவுபோதும். அல்லது உள்ளம் அசைந்தாலே போதும்.

பெரும்பாலான நாட்களில் சுருதசேனன் அவனருகே தோன்றினான். துயில்விழித்தெழுகையில் எப்போதுமே அவனிடம் எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் எதிர்பார்ப்பு கூர்கொண்டிருந்தால் சுருதசேனன் தோன்றுவதில்லை. எண்ணி ஏங்கினால், எழுவான் என உறுதிகொண்டிருந்தால் அவன் வருவதில்லை. வெறுமையும் சலிப்பும் மிகுந்து உள்ளம் எண்ணங்களை கோக்கக்கூட ஆற்றல் அற்றிருக்கவேண்டும்.

வேறெங்கோ உளம்திரும்பியிருக்கவேண்டும். ஓர் ஆறுதல்மிக்க தொடுகைபோல அவன் தோன்றினான். மிக அருகே, ஒரே கணத்தில்.

இருப்பும் இன்மையும் ஒரே கணத்தில்தான் வேறுபடுகின்றன போலும். அவன் அணுகி வருவதில்லை. அகன்று மறைவதுமில்லை. அவன் தொலைவிலெங்கும் இல்லை. மிக அருகேதான் இருந்துகொண்டிருக்கிறான். உடனிருந்துகொண்டிருக்கிறான். ஒளி மாறுபடுகையில் வலமிருந்து இடமும் பின்பிருந்து முன்பும் தோன்றும் நிழல் என. அவன் பேசுவதில்லை. அவனிடம் அவன் ஒரு சொல்லும் உரைத்ததில்லை. அவன் நோக்கை எப்போதும் உடல்மேல் உணர்ந்திருந்தாலும் அவன் விழிகளை சந்தித்ததில்லை. அவன் முகத்தை ஏறிட்டதுகூட இல்லை.

இருமுறை அவன் காட்டில் தனித்திருக்கையில் அருகே எழுந்தான். ஒருமுறை கங்கைக்கரையினூடாக நடக்கையில் உடன் நடந்தான். ஒவ்வொரு முறை அவன் தோன்றும்போதும் சகதேவன் தன்னுள் இருந்து எடை முழுக்க எழுந்தகல்வதை உணர்ந்தான். கடுவலி நின்றுவிடுவதுபோல. அக்கணம் அகத்தில் இருக்கும் சொல் பொன்னொளி கொள்ளும். அது அனைத்தையும் ஒளிரச்செய்யும். புவியும் வானும் இனிதாகும். உயிர்க்குலங்கள் இனிதாகும். சென்றவையும் நிகழ்வனவும் வருவனவும் அமுதென்றாகும்.

முதல்முறை அவன் சுருதசேனனைக் கண்டது அங்கு வருவதற்கு முன்பு காட்டுக்குள் குடிலில் தங்கியிருந்தபோது. ஓயாது வீழ்ந்துகொண்டிருந்தது மழை. நின்று துளியுதிர்த்து பின் எண்ணிக்கொண்டு வீறிட்டெழுந்தது. குளிரில் குடில்சுவர்கள் விறைத்திருந்தன. நிலம் நனைந்து

ஊறியிருந்தது. ஓயாது ஒற்றைச் சொல்லையே சொல்லிக்கொண்டிருந்தது உள்ளம். அச்சொல்லை நேருக்குநேர் கண்டு திகைத்து அதை உந்தி அப்பால் செலுத்தினால் மேலும் சில சொற்கள். சென்று தேய்ந்து ஒரு சொல்லில் முட்டி நின்று மீண்டும் அச்சொல்லே என திகழ்ந்தது அகம்.

சொல் பேய் என ஆகி அச்சுறுத்தியது. ஆறாத புண் என வலி அளித்தது. அனலென எரித்து எரித்து உள்ளிறங்கியது. எச்சொல்லும் நஞ்சே. உயிருள்ளவை அனைத்தும் ஒருநிலையில் நஞ்சாகக்கூடும் என்கின்றன நூல்கள். அழுகியவை அனைத்தும் நஞ்சே. செரிக்காத உணவு நஞ்சு. கருவறைக்குள் உயிர்துறக்கும் குழவி நஞ்சாகி அன்னையைக் கொல்லும். சொல்லின் உயிர் என்பது பொருள். பொருளிழந்த சொல் இலக்கற்றது, எழுந்த கருவறையைக் கொல்லும் நஞ்சென்று ஆவது.

அவன் துயின்று நாட்கணக்காகிவிட்டிருந்தது. துயில் துயில் என விழித்திருக்கும் கணமெல்லாம் சித்தம் தவித்தது. விழியிமைகள் இறங்க அகச்சொல் குழம்பித்தவிக்க நாகுழைய கைகள் தளர்ந்து சரிய துயில் எடைகொண்டு அவனை மூடியது. அழுந்தி நிலம்படிந்த கணமே கூரிய முள்ளால் குத்தியதுபோல் அவனை எழுப்பியது ஒன்று. திடுக்கிட்டு எழுந்து உடல்நடுங்குவான். அது என்ன என்று நெஞ்சை துழாவுவான். சிக்குவது பிறிதொரு சொல். பொருளிலாத சொல். மழை, மரம், மீன், நீர்... பொருளில்லாவிடில் சொற்களுக்கிடையே வேறுபாடென ஏதுமில்லை.

எழுந்ததும் கண்முன் பேருருக்கொண்டு நின்றிருக்கும் அச்சொல். வழிமறிக்கும் பாறைபோல் சித்தம் திகைக்கச் செய்யும். மீண்டும் துயில்கொள்ள நெடும்பொழுதாகும்.

துயிலவேண்டும் என எண்ணும்போதே அச்சொல் பெரிதாகத் தொடங்கும். சூழ்ந்துகொள்ளும். அச்சொல்லுடன் படுக்க இயலாது. படுத்து துயிலவே இயலாது. படுத்த கணமே உள்ளம் முழு விழிப்பை அடைந்துவிடும். மஞ்சத்திலேயே எழுந்து அமர்ந்திருப்பான். துயில் மேலோங்க சரிந்து மஞ்சத்தில் விழவேண்டும். கால்நாழிகைப்பொழுதுகூட துயில் நீடிக்காது. அது துயிலே அல்ல.

துயிலின்மையால் வாய் கசந்தது. கண்கள் எப்போதுமே வெம்மைகொண்டு நீர் பெருக்கின. பசியென்பதையே அறிய முடியவில்லை. உண்ணும் உணவு அழுகிய குருதியின் மணம் கொண்டிருந்தது. உடல் எப்போதும் நடுங்கிக்கொண்டே இருந்தது. கைகளில் சிறுபொருட்களைக்கூட வைத்திருக்க இயலவில்லை. நடப்பதும் கடினமாகியது. மூச்சிளைக்க நின்று, அவ்வப்போது நிலைதடுமாறி அருகிருப்பனவற்றை பற்றிக்கொண்டு மெல்லத்தான் செல்ல இயன்றது. மஞ்சத்தில் படுத்திருப்பதையே உடல் விழைந்தது. செயலிழந்து, மஞ்சத்துடன் ஒட்டிக்கொண்டு, பெரும்பகுதி உயிரிழந்ததுபோல் தன்னை இழந்திருக்க உடல் கிடப்பதை அவன் அதற்குள் ஒரு மெல்லிய தன்னுணர்வு என அமைந்து நோக்கிக்கொண்டிருந்தான்.

அன்று அந்தியில் மஞ்சத்தில் விழித்தெழுந்தபோது அவன் உணர்ந்தான், அவன் மைந்தர்களை எண்ணிக்கொள்ளவேயில்லை என்று. அவர்களின் முகங்களை நினைவில் திரட்ட முயன்றான். அவை தொலைவில் நின்றிருந்தன. அணுகும்தோறும் கலைந்தன. சுருதசேனனின் முகத்தையாவது அருகே கொண்டுவர முயன்றான். அது

முழுமையாகவே மறைந்துவிட்டிருந்தது. எங்கிருக்கிறார்கள் அவர்கள்? உறுதியாக ஏன் முகம் காட்டுவதை மறுக்கிறார்கள்?

பின்னர் ஒரு நடுக்குடன் அவன் உணர்ந்தான், அவன் குருக்ஷேத்ரத்தையும் முற்றாகவே மறந்துவிட்டிருந்தான். எண்ணி எண்ணி முயன்றபோது குருக்ஷேத்ரப் போருக்குக் கிளம்பிவந்தது நினைவில் சில உதிரி ஓவியங்களாக தெளிந்தது. படைகளை அவனே நெடுந்தொலைவிலிருந்து நோக்கிக்கொண்டிருப்பதுபோல. ஒழுகும் மானுடப்பெருக்கு. பருப்பொருள் நீர்மைகொண்ட நெளிவும் அலைவும். பின்னர் பலகை விரிக்கப்பட்ட பாதைகள். அதன்மேல் சகடங்களின் ஒலி. குளம்புகளின் தாளம். போர்க்களம் என சொல்லிப்பார்த்தான். அது பொருளிலாச் சொல்லென திகழ்ந்தது. எந்தக் காட்சியையும் நினைவிலெழுப்பவில்லை. குருதி, சாவு, எரி, சிதை என சொல்லிச் சொல்லிப் பார்த்தான். அவையனைத்துமே வெற்றுச் சொற்களென்றே திகழ்ந்தன. எவ்வகையிலும் காட்சியாகவில்லை.

சலிப்புடன் அவன் எண்ணத் திசையை திருப்பிக்கொண்டான். கண்களை மூடி இமையின் அடிப்பக்கத்தை பார்த்துக்கொண்டிருந்தான். அனைத்தையும் ஒட்டுமொத்தமாகவே மறந்துவிட்டிருந்தான். மிகமிக எச்சரிக்கையாக உள்ளத்தின் ஆழத்தில் இருந்த நினைவுகளை எடுக்கத் தொடங்கினான். மைந்தர்களின் குழவிப்பருவம். அவர்கள் சிறுவர்களாகி கூச்சலிட்டு, பூசலிட்டு விளையாடிய காலம். அவற்றை அழுத்தி அழுத்தி அப்பால் என மறைத்திருந்தான். அவற்றில் ஒரு துளி மீண்டாலே உள்ளம் அழிந்து சாவு நிகழ்ந்துவிடும் என அஞ்சியிருந்தான். ஆனால் அவையும் மீண்டு எழவில்லை. சொற்கள் மட்டுமே

எழுந்துவந்தன. நீரடியில் படிந்த வெற்றுச் சகதிச்சருகுகளைப்போல.

அன்று அவன் எழுந்து இருளில் விரைந்தான். தன் உள்ளமெங்கும் நிறைந்திருப்பவை வெறும் சொற்கள். அனைத்துச் சொற்களும் பொருளிழந்துவிட்டன. வெற்றோலமிட்டுச் சுழன்றலைகின்றன. அவனால் நின்றிருக்க இயலவில்லை. சுழலும் சொற்களை தன் உடலைச்சுற்றிப் பறப்பவையாகவே உணர்ந்தான். அவற்றைத் தொட்டு கைகளால் அள்ளிவிடமுடியும் என்பதுபோல. இது பித்து. இப்போது பித்து என இதை உணரும் தருணத்தில் இருக்கிறேன். மேலும் ஒரு அடி முன்னகர்ந்தால் போதும். ஒருகணம் போதும். அந்தத் தன்னுணர்வையும் இழந்துவிடுவேன். பின்னர் சொற்சுழல் என்னை தூக்கிக்கொண்டு செல்லும். என்னை மண்மீதெங்கும் அலைக்கழிக்கும்.

அவன் தானறிந்த பித்தர்களை நினைவுகூர்ந்தான். அவர்களின் நாவில் ஒலிப்பதே அப்போது தன் சித்தமென ஓடிக்கொண்டிருப்பதாக அறிந்தான். செல்லச்செல்ல அவன் காலடிகளில் விசை கூடியது. நடுக்காட்டில் சென்று நின்றான். அப்போது அவனுள் சொற்கள் மேலும் விசை கொண்டிருந்தன. என்னென்ன சொற்கள்! இவையெல்லாம் எங்கிருந்தன? எத்தனை பயனற்றவை சொற்கள்! இத்தனை சொற்களை ஏன் உருவாக்கினார்கள்? இவற்றை அள்ளித்திணித்து ஏன் உள்ளமென்று தொகுத்துக்கொண்டேன்?

அவன் தன் இடையிலிருந்து குறுவாளை எடுத்து கழுத்து நரம்பில் வைத்துக்கொண்டபோதுதான் அருகே ஓர் இருப்புணர்வென சுருதசேனனை உணர்ந்தான். திரும்பி நோக்க

அஞ்சி நடுங்கும் கைகளுடன் அசையாமல் நின்றிருந்தான். மெல்லமெல்ல அத்தனை சொற்களும் அடங்கின. உள்ளம் விடுதலை கொண்டது. உடல் தளர்ந்தது. கைகள் இருமருங்கும் விழுந்தன. அவன் மைந்தனை உணர்ந்தபடி அங்கேயே நின்றிருந்தான். பின்னர் அந்த மரத்தடியிலேயே படுத்து ஆறுநாழிகை தன்னை மறந்து உறங்கினான்.

அதன்பின் சுருதசேனன் மீண்டும் மீண்டும் அவன் முன் தோன்றினான். அவன் தோன்றிய நாளில் அனைத்தும் எளிதாகவும் இனிதாகவும் அமையும். அவனை எக்கணமும் மீண்டும் கண்டுவிட முடியும் என்பதுபோல் ஓர் எண்ணம் எப்போதும் அகத்தே திகழும். காட்டுக்குள் சென்று அமர்ந்திருப்பான். கங்கை ஓட்டத்தை நாள் முழுக்க வெறுமனே நோக்கியபடி இருப்பான். மெல்ல மெல்ல உள்ளத்தில் சொல் ஊறத்தொடங்கும். சொல்பெருகும். சொற்பெருக்காகும். சொற்சுழிப்பு அவனை அள்ளிச்சென்று விசைகொள்கையில் மீண்டும் அவன் தோன்றுவான்.

சகதேவன் ஒரு சொல்லேனும் மைந்தனிடம் பேச விழைந்தான். ஒரு சொல், அது எச்சொல்லாக இருப்பினும் சரி. வேறென்ன சொல்? அவன் பெயர்போல் இனிய சொல் வேறில்லை. அவன் பெயர்போல் இனியது ஏதுமில்லை. அவன் "சுருதசேனா!" என்றான். அச்சொல்லே அனைத்தையும் கலைக்க அவன் எழுந்தமர்ந்தான். பெருமூச்சுவிட்டு குடிலை நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தான். பின்னர் எழுந்து வெளியே சென்றான். உடலில் களைப்பு அகன்றிருந்தது. உள்ளத்தில் இனிய சலிப்பு மட்டுமே எஞ்சியிருந்தது. அவன் கங்கையை அடைந்து கரையில் வெறுமனே நீரொழுக்கை நோக்கி அமர்ந்திருக்கவே விழைந்தான்.

அவனுக்காக ஏவலன் காத்து நின்றிருந்தான். தலைவணங்கி "தாங்கள் துயின்றுகொண்டிருந்தமையால் எழுப்பவேண்டாம் என எண்ணினேன், அரசே" என்றான். "சொல்" என்றான் சகதேவன். "அரசர் தங்களைக் காண விழைகிறார். உடனே வரச்சொல்லும்படி ஆணையிட்டார்" என்றான். அவன் மேலும் சொல்லும்பொருட்டு சகதேவன் காத்திருந்தான். "நேற்றிரவே இளைய அரசர் அர்ஜுனனும் பீமசேனனும் இளைய யாதவரும் மீண்டு வந்துவிட்டனர். உடன் யுயுத்ஸுவும் வந்தார். அவர்கள் அஸ்வத்தாமனின் அருமணியுடன் வந்தனர். ஆகவே நாளை முதல் நீர்க்கடன்கள் தொடங்கப்படும் என தெரிகிறது. அதன்பொருட்டுதான் அரசர் தங்களை அழைக்கிறார்."

"அருமணியை இளையவர் வென்றாரா?" என்று சகதேவன் கேட்டான். "அஸ்வத்தாமனை வென்றவர் பார்த்தன். அருமணியுடன் வந்தவர் பீமசேனன். நேற்றிரவே அந்த மணியை கொண்டுசென்று அரசிக்கு அளித்திருக்கிறார். அதை நாளை நீர்க்கடனின்போது மைந்தர்களுக்கான படையலாக வைக்கும்படி அரசி ஆணையிட்டிருக்கிறார்" என்று ஏவலன் சொன்னான். சகதேவன் சலிப்புடன் "நன்று" என்றான். பின்னர் கைவீசி அவன் செல்லலாம் என்று காட்டினான். ஏவலன் தலைவணங்கி அகன்றான்.

சகதேவன் யுதிஷ்டிரனின் அவையை அடைந்தபோது அங்கே ஏற்கெனவே தௌம்யரும் மாணவர்களும் கூடியிருந்தனர். சகதேவனின் விழிகள் நகுலனை இயல்பாகத் தேடி கண்டுகொண்டன. நகுலன் யுதிஷ்டிரனுக்குப் பின்னால் மறைந்ததுபோல் நின்றிருந்தான். பீமனும் அர்ஜுனனும் இளைய யாதவரும் அங்கிருப்பார்கள் என அவன் எதிர்பார்த்தான்.

அவர்கள் இல்லை என்பது சற்று ஏமாற்றத்தை அளித்தது. நீராடி ஆடைமாற்றிக்கொண்டிருக்கையில் எல்லாம் அவன் அவர்கள் அனைவரும் அமர்ந்திருக்கும் ஓர் அவையை கனவு கண்டிருந்தான்.

அவர்கள் அவனை திரும்பி நோக்கினர். யுதிஷ்டிரன் அவனைக் கண்டு முகம் மலர்ந்து ஏதோ சொல்ல தௌம்யர் புன்னகைத்தார். அவன் அணுகி வாழ்த்துரைத்தான். யுதிஷ்டிரன் அவ்வாழ்த்தை ஏற்றுக்கொண்டு அவனை கைதூக்கி வாழ்த்தியபின் சிப்பிமூடியிட்ட சிறுபேழையிலிருந்து அருமணி ஒன்றை எடுத்துக் காட்டி "இளையோனே, இதை பார்த்ததை நினைவுறுகிறாயா?" என்றார். சகதேவன் தலையசைத்தான். "அஸ்வத்தாமனின் நுதல்மணி. இளையோர் அவனை வென்று இதை கொண்டுவந்தார்கள்" என்று யுதிஷ்டிரன் சொன்னார். "இனி நீர்க்கடன்களுக்கு எந்தத் தடையும் இல்லை" என்றார்.

தௌம்யர் "இத்தனை எளிதாக இது முடியுமென நான் எண்ணவில்லை. எதுவாயினும் நன்று..." என்றார். "எஞ்சும் பகையுடன் நீர்க்கடன் முடித்தோமென்னும் இழுக்கு இனி இல்லை. நோக்கினால் அரசி சொன்னதும் உண்மை. மைந்தரில் எவருக்கேனும் வஞ்சம் சிறிது எஞ்சியிருந்தாலும் நீர்க்கடன் வீணாகும்" என்றார். யுதிஷ்டிரன் "ஆம், நாம் அஞ்சிவிட்டிருந்தோம். இப்பெரும்போர் நம் அகத்தை தளர்த்திவிட்டிருந்தது. அவள் நெஞ்சு தளரவே இல்லை. ஐந்து மைந்தரை கண்முன் இழந்தும் அரசியென்றே நிமிர்ந்து நிற்கிறாள். ஐயமின்றி அவளே பாரதவர்ஷத்தை ஆளத் தக்கவள்" என்றார்.

சகதேவன் பெருமூச்சுடன் அந்த அருமணியை பார்த்தான். அதன் ஒளி குறைந்து கூழாங்கல் என மாறிவிட்டிருந்தது.

உண்மையில் அதற்கிருந்த ஒளியெல்லாம் அஸ்வத்தாமனின் நுதலில் அது அமைந்திருந்தமையால்தானா? யுதிஷ்டிரன் "எங்கே இளையோர்?" என்றார். நகுலன் "வந்துகொண்டிருக்கிறார்கள்" என்றான். யுதிஷ்டிரன் எரிச்சலுடன் "எங்கே சென்றார்கள்?" என்றார். "பணிகள் மலைபோல் எஞ்சியிருக்கின்றன." தௌம்யர் "பணிகள் பெரும்பாலும் முடிந்துவிட்டன. அரசியர் வந்துவிட்டார்கள். விதுரர் பொறுப்பேற்றுக்கொண்டுவிட்டார்" என்றார்.

சகதேவன் அப்பால் பீமன் வருவதை கண்டான். நோக்கிய முதற்கணத்திலேயே அவனிடமிருந்த மாற்றம் நெஞ்சில் அறைந்தது. பீமனிடம் கைவீசி யானைபோல அசைந்து வரும் அந்த வழக்கமான நடை மீண்டுவிட்டிருந்தது. அருகணைந்தபோது அவன் முகம் மலர்ந்திருப்பதை, இளமைந்தர்களுக்குரிய முறையில் அவன் இருபுறமும் காட்டை நோக்கியபடி வருவதை அவன் கண்டான். சிரித்தபடி "அசைந்தாடி வருகிறான், அறிவிலி" என்றார் யுதிஷ்டிரன். பீமன் வந்து பணிந்தபோது "நலம் சூழ்க!" என்று வாழ்த்தியபின் "நாம் நம் கடன்களை இயற்றவேண்டியிருக்கிறது, இளையோனே. அனைத்தும் ஒருங்கியாகவேண்டும்" என்றார்.

பீமன் "ஆம்" என ஆர்வமின்றி சொல்லி அப்பாலிருந்த பாறைமேல் அமர்ந்தான். தொலைவில் இளைய யாதவரும் அர்ஜுனனும் வருவது தெரிந்தது. அவர்களும் இயல்பான உடலசைவுகளுடன் மெல்லிய சொல்லாடலுடன் அணுகினர். சகதேவன் அர்ஜுனனை கூர்ந்து நோக்கினான். அவனிடம் என்ன நிகழ்ந்திருக்கிறது என்று உணர முடியவில்லை. அவன் பீமனைப்போல இளமைக்கு மீளவில்லை. முன்பிருந்த இயல்புகள் எவையும் அவனிடம் இல்லை. ஆனால் அவன்

அசைவுகளில் விடுதலை இருந்தது. தன்னை முற்றாக காற்றுக்கு ஒப்புக்கொடுத்த சருகுகளில் இருக்கும் விடுதலை.

அவர்கள் வந்து யுதிஷ்டிரனைப் பணிந்து வாழ்த்து பெற்றனர். அவர்களை அழைக்கச் சென்றிருந்த யுயுத்ஸு அவர்களை தொடர்ந்து வந்து அப்பால் நின்றான். அர்ஜுனன் விலகிச் சென்று பீமனின் அருகே அமர இளைய யாதவர் யுதிஷ்டிரனின் அருகே அமர்ந்தார். யுதிஷ்டிரன் "நான் உங்களுக்காகவே காத்திருந்தேன். நாம் நீர்க்கடன் செய்ய இனி எந்தத் தடையும் இல்லை. தௌம்யரிடம் ஆணையிட்டுவிட்டேன். இனி நாம் ஒவ்வொருவரும் இங்கு நிகழும் எவற்றுக்கெல்லாம் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும் என்பதை மட்டும் பிரித்துக்கொள்வோம். தௌம்யர் அவற்றை உரைக்கட்டும். அவர் சொல் என் ஆணை எனக் கொள்ளப்படும்" என்றார். இளைய யாதவர் "ஆம், பணிகளை தொடங்கவேண்டியதுதான். நமக்கு இன்னமும் ஒரு பகலும் ஓர் இரவுமே எஞ்சியிருக்கின்றன" என்றார்.

யுயுத்ஸு மெல்ல கனைத்தான். யுதிஷ்டிரன் திரும்பி அவனை பார்த்தார். அவன் தாழ்ந்த குரலில் "அதற்கு முன் ஒன்று எஞ்சியிருக்கிறது. மூத்தவர்கள் தங்கள் அரசியரிடம் ஒரு சொல்லேனும் பேசியாக வேண்டும்" என்றான். யுதிஷ்டிரன் சினத்துடன் "அனைத்தையும் பேசிவிட்டோமே? அரசியின் ஆணைப்படிதான் இங்கே அஸ்வத்தாமனின் நுதல்மணி வந்துள்ளது" என்றார். "ஆம், அது முதல் அரசியிடம் நாம் பேசியது. இன்னமும் பிற அரசியர் எஞ்சியிருக்கிறார்கள்" என்று யுயுத்ஸு சொன்னான். "அவர்கள் நேற்று மாலைதான் இங்கே வந்திறங்கியிருக்கிறார்கள். அவர்கள் எந்நிலையில் இருக்கிறார்கள் என்பதை நாம் இன்னமும் அறியோம்."

“அவர்கள் இருக்கும் உளநிலையை அறிய பெரிய கற்பனை ஏதும் தேவையில்லை” என யுதிஷ்டிரன் எரிச்சலுடன் சொன்னார். “முறைப்படி அவர்களிடம் சொல்பெற்று நீர்க்கடன் நிகழட்டும். அவர்களிடம் சொல்பெற நாளை முதற்காலைப் பொழுதில் வருவோம் என்னும் செய்தியை மட்டும் அவர்களிடம் தெரிவிக்கலாம். மற்றபடி இப்போது நாம் செய்வதற்கொன்றுமில்லை.” அவர் ஏனென்றறியாமல் சீற்றம் கொண்டார். “ஒருவேளை அவர்கள் ஒவ்வொருவருக்கும் திரௌபதியைப்போல வஞ்சினங்கள் இருக்குமென்றாலும் இனி நாம் அவற்றை பொருட்படுத்தப்போவதில்லை.”

யுயுத்ஸு “அவர்களிடம் வஞ்சினம் இருக்கும், எதிரிகள் என நாம் அமைவோம்” என்றான். யுதிஷ்டிரன் சீறித்திரும்பி “என்ன சொல்கிறாய்?” என்றார். யுயுத்ஸு “அவர்களிடம் சில சொற்களேனும் நமக்கென இருக்கும். நாம் அவற்றை கேட்டாகவேண்டும். அரசே, நீங்களும் மூத்தவர்களும் தங்கள் பிற அரசியரையும் சந்தித்தாகவேண்டும். அதுவே முறை” என்றான். “ஒருவேளை அவர்கள் தீச்சொல்லிடலாம். எனில் நாம் அதைப் பெற்றே ஆகவேண்டும்.”

யுதிஷ்டிரன் “வீண்பேச்சு... இனி இதை நாம் தொடங்கினால் இந்த நீர்க்கடன் சடங்கு நிகழவே போவதில்லை” என்றார். “அவர்கள் இரண்டாமிடத்தில் இருப்பவர்களே. இப்போர் நிகழ்ந்தது திரௌபதிக்காக. வேறு எவருக்காக என்றாலும் இவை நிகழ்ந்திருக்காது. அதை அவர்களும் நன்கறிவார்கள்.” யுயுத்ஸு “அதையும் அவர்களிடமே சொல்லலாமே” என்றான். “நீ உன் இடமறிந்து பேசு... போதும்” என்றார் யுதிஷ்டிரன். யுயுத்ஸு “ஆம்” என தலைவணங்கினான்.

சகதேவன் அர்ஜுனனையே நோக்கிக்கொண்டிருந்தான். அவனிடம் இருக்கும் விடுதலை என்ன? எதிலிருந்து அடைந்த விடுதலை? அவன் அதுவரை அமர்ந்திருக்கும் கோலம் நினைவுக்கு வந்தது. தலைகுனிந்து முடிக்கற்றைகள் விழுந்து முகம் மறைக்க, விரல்கள் பின்னி நெளிந்துகொண்டே இருக்க, உதடுகள் வலிகொண்டவை என நெளிய, புருவங்கள் நெரிபட எக்கணமும் எழுந்து எதையோ சொல்லிவிடுபவன்போல, அல்லது எழுந்து அகன்றுவிடுபவன் என தோன்றுவான். அப்போது அவன் முழுதமைந்திருந்தான். அங்கிருக்கும் அந்தக் கல்லைப்போல குளிர்ந்து, பதிந்து, காலம் கடந்து.

ஒரு கணம் அவனுக்கு விந்தையானதோர் உணர்வு ஏற்பட்டது, அர்ஜுனன் ஒரு முனிவராக மாறிவிட்டதாக. நோக்க நோக்க அவ்வுணர்வு மீறி எழுந்தது. விழிவிலக்கி அவ்வெண்ணத்தை ஆராய்ந்து மீண்டும் நோக்கினான். அந்த எண்ணம் மேலும் வலுத்தது. அவனை யோகி என்பதுண்டு. வில்லை ஊழ்கமெனக் கொண்டவன். யோகியர் முனிவர்களாவது எப்போது? யோகமெனப் பயிலும் அந்தப் பாதையையும் அவர்கள் கடந்துவிடும்போதா?

யுதிஷ்டிரன் பெருமூச்சுடன் எழுந்துகொண்டு "அனைத்தும் இனி தௌம்யரின் எண்ணப்படி ஆகுக. நாளை காலை நம் குலத்து மாண்டோர் விண்புகுக!" என்றார். தௌம்யர் "ஆம், அனைத்தும் நிறைவுறுக!" என்றார். யுதிஷ்டிரன் விழிகளை அப்பால் வெயில் விரிந்த பாதை நோக்கி திருப்பிக்கொண்டு "நீ கூறுவதும் ஒருவகையில் சரிதான். நாம் அவர்களைச் சென்று நோக்கியாகவேண்டும்... இளையோர் தங்கள் மறுதுணைவியரைச் சென்று கண்டு சொல் பெறட்டும்" என்றார்.

பீமன் “அதற்கான தேவை உண்டா?” என்றான். யுதிஷ்டிரன் “உனக்கு தனியாக நான் ஆணையிடவேண்டுமா என்ன?” என்றார். பீமன் சலிப்புடன் தலையசைத்தான். நகுலன் “நாம் செய்யவேண்டியவைதான், மூத்தவரே” என்றான். அர்ஜுனன் புன்னகையுடன் அமர்ந்திருக்க யுதிஷ்டிரன் அவனை ஒருகணம் நோக்கிவிட்டு மேலாடைக்காக கைநீட்டினார். ஏவலன் மேலாடையை எடுத்து அளிக்க அதை சுற்றிக்கொண்டு நடந்தார். நகுலனும் யுயுத்ஸுவும் அவருக்கு இருபுறமும் சென்றனர். பீமன் தனியாக நடக்க இளைய யாதவரும் அர்ஜுனனும் உடன் சென்றார்கள். அவர்களைத் தொடர்ந்து தௌம்யரும் மாணவர்களும் அகன்றனர்.

ஏவலரும் சென்றபின் சகதேவன் தலைகுனிந்து ஒரு சிறு குச்சியால் மண்ணை கீறியபடி அங்கேயே அமர்ந்திருந்தான். உள்ளத்தில் சொற்கள் ஊறிக்கொண்டிருந்தன. அர்ஜுனனின் நிறைவுமுகம். பீமனின் இளமை மீண்ட முகம். திரௌபதியின், யுதிஷ்டிரனின் முகம். அவன் சொற்கள் வழியாக சென்றுகொண்டிருந்தபோது அருகே மீண்டும் சுருதசேனனை உணர்ந்தான். அவன் உள்ளம் முற்றாக செயலிழந்திருக்கவில்லை. ஆகவே திடுக்கிட்டுத் திரும்பி நோக்கினான். சுருதசேனன் துயரம் நிறைந்த விழிகளுடன் நின்றிருந்தான்.

இது உளமயக்கல்ல, கனவும் அல்ல. இது மெய். இந்த மரங்களைப்போல, இந்த பாறைக்கல்லைப்போல. அவன் அவ்வுருவை கலைக்க எண்ணினான். ஏனென்றால் அது அவனை பதறச் செய்தது. அதன் அந்த வெளிப்படைத் தன்மையில் பிழை என ஏதோ தோன்றியது. “மைந்தா!” என்றான். “தந்தையே!” என்று சுருதசேனன் சொன்னான். “நீயா?

நீ இங்குதான் இருக்கிறாயா?" சுருதசேனன் "ஆம் தந்தையே, நாங்கள் உங்களுடன்தான் இருக்கிறோம்" என்றான்.

அவனுக்குப் பின்னால் நிர்மித்ரனும் யௌதேயனும் சுருதகீர்த்தியும் சர்வதனும் சுதசோமனும் தோன்றினார்கள். பிரதிவிந்தியன் சற்று அப்பால் நின்றிருந்தான். அவனுடன் சதானீகன் நின்றான். அபிமன்யுவுக்காக அவன் விழிகள் தேட சுருதசேனன் "அபிமன்யு எங்களுடன் இல்லை. அவனுடைய வழி வேறு" என்றான். "ஏன்?" என்றான் சகதேவன். "அவனுடைய அகம் நிறைவுறவில்லை" என்றான் சுருதசேனன். "நீங்கள் நிறைவுற்றீர்களா, மைந்தர்களே?" என்றான் சகதேவன்.

"நாங்கள் எதையும் விழையவில்லை. எதையும் எஞ்சவிட்டும் செல்லவில்லை" என்று சுருதசேனன் சொன்னான். "அபிமன்யு அங்கிருக்கிறான்" என்றான் சதானீகன். "எங்கே?" என்றான் சகதேவன். சதானீகன் மறுமொழி சொல்லவில்லை. "எங்கிருக்கிறான்?" என்று மீண்டும் சகதேவன் கேட்டான். "தந்தையே, இனி நாங்கள் தங்களை பார்க்க இயலாது. எவ்வகையிலும் உடனிருக்க இயலாது. இன்று பகலிரவு மட்டுமே எஞ்சியிருக்கிறது. ஆகவேதான் வந்தோம்" என்றான் பிரதிவிந்தியன். "இந்தப் புவியின் ஐம்பருக்களுடனும் எங்களுக்கு இன்று தொடர்பில்லை. ஆயினும் இந்த உலகம் எங்களை பற்றிக்கொண்டிருக்கிறது" என்று சதானீகன் சொன்னான். "ஒவ்வொரு கணமும் துயரையே உணர்கிறோம். எனினும் எங்களால் விலக இயலவில்லை" என்றான் சுருதசேனன்.

சுருதகீர்த்தி "உண்மையில் இது ஓர் அலைக்கழிப்பு... எங்களை ஒவ்வொரு கணமும் கலைத்துக்கொண்டிருக்கிறது வெளி. நாங்கள் உருவெடுக்க, நிலைகொள்ள போராடுகிறோம்" என்றான்.

“உங்கள் துயரமே எங்களை இங்கே தக்க வைத்திருக்கிறது. உங்கள் உள்ளத்தில் எஞ்சும் வடிவையே நாங்கள் கொள்ளமுடிகிறது. நீங்கள் துயரழிகையில் நாங்கள் மறைந்துவிடுவோம்.” பிரதிவிந்தியன் “துயர்கொண்டவர்கள் அனைவருமே அத்துயரை எவ்வகையிலேனும் கரைத்தழிக்கவே முயல்கிறார்கள். நீங்களும் நாளை அதை கரைக்கத் தொடங்குவீர்கள். அந்நிகழ்வு ஒரு தொடக்கம். பற்பல தலைமுறைகளாக செய்யப்பட்டு பொருளேற்றம் கொண்டது. எங்களை உங்கள் அகத்திலிருந்து கரைத்துவிடுவீர்கள்” என்றான்.

“என்ன?” என்றபடி சகதேவன் எழுந்துகொண்டான். “என்ன சொல்கிறாய்?” என்று கேட்டபடி அவன் கையை நீட்டினான். “நாளை காலை நீர்க்கடன் அளித்து எங்களை விண்ணேற்றிவிடுவார்கள்” என்றான் நிர்மித்ரன். “அதன்பின்? அதன்பின்?” என்றான் சகதேவன். உடலெங்கும் பரவிய பதற்றத்துடன் “அதன்பின் எங்கிருப்பீர்கள்? என் மைந்தர்களே, அதன்பின் எங்கிருப்பீர்கள்?” என்றான். “அதன்பின் விண்ணில் இருப்போம். ஆனால் உருவழிந்து, தன்னிலை கரைந்து. தந்தையே, மண்ணிலிருந்து விண்ணிலெழும் எதுவும் அவ்வாறே ஆகிவிடுகிறது.”

“என் செல்லங்களே, என் தெய்வங்களே!” என சகதேவன் கதறினான். “உங்களை எப்படி நான் விடுவேன்? அதன்பின் இப்புவியில் எனக்கு எஞ்சியிருப்பது என்ன?” அவன் அவர்களை பிடிக்க முன்னகர அவர்கள் இயல்பாக பின்னடைந்தார்கள். சுருதசேனன் “நாங்கள் சென்றேயாக வேண்டும், தந்தையே. அதுவே மாறா நெறி” என்றான். “இல்லை, நான் ஒப்பமாட்டேன். நீர்க்கடன் நிகழ விடமாட்டேன்...” என்று சகதேவன் கூவியபடி

மைந்தனைப் பிடிக்கத் தாவினான். அவர்கள் துயர் நிறைந்த முகத்துடன் மேலும் பின்னடைந்தார்கள். “சுருதசேனா, மைந்தா!” என்று கதறியபடி முகம்படிய மண்ணில் விழுந்து நினைவழிந்தான் சகதேவன்.

நீர்ச்சுடர் - 41

பகுதி ஆறு : விழிக்குமிழிகள் – 2

சகதேவன் விதுரரின் குடில் நோக்கி மூச்சிரைக்க ஓடினான். அவனை வழியில் கண்ட ஏவலர்களும் இளம் அந்தணர்களும் திகைத்து விலகினார்கள். விதுரரின் குடில்முன் ஏவலர் சிலர் நின்றிருந்தார்கள். அவன் அவர்களிடம் ஒப்புதல் பெறாமல் குடிலுக்குள் நுழைந்து “அமைச்சரே” என்று கூவினான். விதுரர் அவனை திகைப்பில்லாமல் நோக்கி “அமர்க, அரசே!” என்றபின் பிறரிடம் வெளியேறும்படி கண்காட்டினார். சகதேவன் அவர் கைகளை பற்றிக்கொண்டு “இந்த நீர்ச்சடங்கு நிகழலாகாது... இதை எவ்வண்ணமேனும் தடுத்து நிறுத்தியாகவேண்டும்” என்றான்.

விதுரர் “பொறுங்கள்... உங்கள் உணர்வுகள் எனக்குப் புரியவில்லை” என்றார். “அமைச்சரே, நான் என் மைந்தர்களை பார்த்தேன். சற்றுமுன் அருகில் பார்த்தேன். அவர்களுடன் உரையாடினேன். அவர்கள் இங்குதான் இருக்கிறார்கள்” என்றான் சகதேவன். பதற்றத்துடன் “அவர்கள் நம்மை சூழ்ந்திருக்கிறார்கள். இச்சொற்களைக்கூட அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்... அமைச்சரே, நாம் நீர்க்கடன் செய்து அவர்களை கங்கையில் கரைக்கிறோம். மண்ணிலிருந்து

அறுத்து விண்ணுக்குச் செலுத்துகிறோம்... அதன்பின் அவர்கள் இங்கிருக்க இயலாது. அவர்களை நாம் முற்றாகவே இழந்துவிடுவோம்" என்றான்.

அவர் அனைத்தையும் புரிந்துகொண்டார். தணிந்த குரலில் "அமர்க... முதலில் அமர்க!" என்று அவன் கையைப் பிடித்து பீடத்தில் அமரவைத்தார். "சுக்ரா" என அழைத்தபோது ஏவலன் தோன்றினான். "இன்நீர்" என்றார். அவன் தலைவணங்கி அகன்றான். சகதேவன் அவர் கைகளைப் பிடித்து அசைத்தபடி "அது வெறும் உளமயக்கு அல்ல. கனவு அல்ல. மெய். இதோ உங்களிடம் பேசுவதுபோல அவர்களிடம் பேசினேன். அவர்கள் இங்கிருந்து செல்ல விரும்பவில்லை. நம்முடன் இருக்க விரும்புகிறார்கள். அமைச்சரே, அவர்களுக்கு இப்புவி மீதான பற்று இன்னமும் அகலவில்லை" என்றான்.

"அது இயல்பு. அவர்கள் இங்கே வாழ்ந்து நிறையவில்லை. குருத்துக்களாகவே வீழ்ந்தவர்கள். ஆனால் அவர்கள் இவ்வுலகு சார்ந்தவர்கள் அல்ல. அவர்களுக்கு இனி இங்கே எந்த இன்பமும் இல்லை. நாம் அறிவதுபோல் வெறுமனே இருந்துகொண்டிருக்கலாம், அவ்வளவுதான்" என்றார் விதுரர். அவர் அவன் அருகே அமர்ந்து அவன் கைகளை பற்றிக்கொண்டார். "சொல்லுங்கள் அரசே, நம் நலனுக்காக அவர்களை வெறுமனே இங்கே நிலைநிறுத்தியிருப்பது நன்றா?" சகதேவன் சொல்லிழந்து அமர்ந்திருந்தான். "கூறுக, அவர்கள் என்ன சொன்னார்கள்? அவர்கள் இங்கிருப்பது எப்படி? நம்மைச் சாராமல் அவர்களுக்கு இருப்பும் இன்பமும் உண்டா?"

"இல்லை" என்று சகதேவன் சொன்னான். அவன் உள்ளம் தவிக்கத் தொடங்கியது. விதுரர் "ஆம், அதையே முன்னோரும் சொல்லியிருக்கிறார்கள். நாம் இப்போது காணும் அவர்களின்

உருவம் நம்மால் அளிக்கப்படுவது. இறுதியாக அவர்கள் நம் விழியிலும் உள்ளத்திலும் எஞ்சிய வடிவத்திலேயே அவர்கள் நம் முன் எழமுடியும். நாம் முதிர்வோம், அவர்களுக்கு அகவையும் மாற்றமும் இல்லை. நம் விழைவால் மட்டுமே அவர்கள் தோன்றமுடியும்" என்று விதுரர் சொன்னார். "ஆம்" என்றான் சகதேவன். "உண்மையில் சற்று அகவை முதிர்ந்த அனைவரும் அறிந்த உண்மைதான் இது." சகதேவன் பெருமூச்சுவிட்டான்.

"அரசே, நாம் ஏன் அவர்களை எழுப்பிக்கொள்கிறோம்?" என்று விதுரர் கேட்டார். "அவர்கள் தோன்றவில்லை, நம் விழைவால் அவர்கள் திரட்டப்படுகிறார்கள். சொல்க, ஏன் அவர்களை திரட்டிக்கொள்கிறோம்?" சகதேவன் "எனக்குத் தெரியவில்லை, அமைச்சரே" என இடறிய குரலில் சொன்னான். விதுரர் "நாம் அவர்களிடமிருந்து அகன்று செல்கிறோம். நாம் பேரொழுக்கொன்றில் செல்பவர்கள். நம்மை மீறியது அது. அதை காலம் என்கிறோம். நம் உள்ளத்தில் சொற்பெருக்கென நிகழ்வது காலமே. நம் உடலில் அகவை முதிர்வென அது நிகழ்கிறது. அதைக் கடந்து உள்ளம் செலுத்த, கற்பனையை ஏவ எவராலும் இயலாது" என்றார்.

"ஆனால் அவர்கள் இப்பெருக்கின் கரைப்பாறைகள் என நின்றிருப்பவர்கள்" என விதுரர் தொடர்ந்தார். "அவர்களை விட்டு நாம் அகன்றுசென்றே ஆகவேண்டும். வேறுவழியே இல்லை. ஆனால் அதில் நாம் குற்றவுணர்வு கொள்கிறோம். ஆகவே கற்பனையை திருப்பிச் செலுத்துகிறோம். சொற்களால் காலத்தை உந்துகிறோம். சொற்கள் அவ்விசையால் சிதைவுறுகின்றன. அவை தேங்கித் திகைத்து நிற்கையில் மட்டுமே அவர்களை அழைக்கிறோம்." சகதேவன் "நான்

அழைக்கவில்லை...” என்று கூவினான். “உங்கள் உள்ளம் அழைக்கவில்லை. ஆழம் அழைக்கிறது.”

சகதேவன் “வெறும் சொற்கள், இவற்றால் எதையும் விளக்கிவிட முடியும். எந்த உண்மையையும் தொடமுடியாது” என்றான். “இவை உண்மை என நீங்களே அறிவீர்கள்” என்றார் விதுரர். “அவர்கள் எப்போது எழுகிறார்கள் என்பதை நோக்கினாலே உணரலாம். உங்கள் வழிகள் முட்டிக்கொள்ளும்போது. நீங்கள் சலித்து செயலற்றிருக்கையில்.” சகதேவன் இல்லை என்பதுபோல் தலையை அசைத்தான். அவன் உள்ளம் எரிச்சலடைந்தது. எழுந்து சென்றுவிடலாமெனத் தோன்றியது. ஆனால் அங்கிருந்து எழவும் உடல் உயரவில்லை.

“எண்ணுக, நாம் உளநெகிழ்ச்சிகளை அடைவதுகூட இவ்வாறுதான்!” என விதுரர் தொடர்ந்தார். “பொருளின்மையும் சலிப்பும் கொண்டு நம் அகம் செயலிழக்கையில் இயல்பாக நகர்ந்துசென்று கண்ணீர் துளிக்கும் ஒரு நெகிழ்ச்சியை அடைகிறோம். அதில் திளைக்கிறோம். அனைத்தையும் அதன் ஒளியில் விளக்கிக்கொள்கிறோம். ஆனால் அகத்தே ஒரு துளி ஐயம் எஞ்சியிருக்கிறது. மெல்லிய குருதித்தீற்றல் என அது உடன் வருகிறது. அது மேலெழுந்து நெகிழ்ச்சியை வெல்லும்போது அந்தத் தோல்வியை ஒரு நகையாடலாக மாற்றிக்கொள்கிறோம். சிரித்து அதை கடக்கிறோம். நெகிழ்ச்சிக்குப் பின் எத்தனை விரைவில் நகையாடலுக்கு மீள்கிறோமோ அந்த அளவுக்கு நாம் அறிவார்ந்தவர்கள், நம்மை நாமே நோக்கும் நுண்ணுணர்வு கொண்டவர்கள். அவ்வாறுதான் இதுவும் நிகழ்கிறது...”

சகதேவன் பெருமூச்சுடன் கண்களை மூடிக்கொண்டான். “அவர்கள் இங்கிருக்கும்வரை மட்டுமே நம்மவர். நம் குருதியிலிருந்து எழுந்தது அவர்களின் உடல் மட்டுமே. குருதியே நமக்கும் அவர்களுக்குமான உறவனைத்தையும் உருவாக்குகிறது. அவ்வுறவிலிருந்து எழும் அத்தனை உணர்ச்சிகளும் அக்குருதியாலானவை மட்டுமே” என விதுரர் தொடர்ந்தார். “ஆகவேதான் நாம் உடலை எரிக்கிறோம். அது உப்பாகி மண்ணில் கரைந்தழிக என எண்ணினர் மூதாதையர். இங்கு ஒவ்வொன்றும் எஞ்சாதொழிவதென்பது இயற்கைக்கு ஆணையிடும் தெய்வங்களின் நெறி. கண்ணெதிரே எஞ்சாதழிபவை கோடிகோடி. கைகூப்பி வணங்கும் சுடர் அணைந்த அக்கணமே இல்லை என்றாகிறது. மட்கி அழிகின்றன மாமரங்கள். மலைகளும் மறைந்துகொண்டிருக்கின்றன என்கின்றனர் நூலோர். எஞ்சாதழிவதை ஏற்றுக்கொள்வதொன்றே மானுடன் அடையும் மெய்மைகளில் தொன்மையானது.”

“யவனரும் பீதரும் காப்பிரிகளும் நீத்தாரை மண்ணிலிருந்து நீங்கவிடுவதில்லை. நீத்தாருக்கு நினைவிடங்கள் அமைக்கிறார்கள். புதைக்கும்போது அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் உடன் வைக்கும் வழக்கம் அவர்களிடமுண்டு. இங்கு அரக்கர்களும் அசுரர்களும்கூட அதை செய்கிறார்கள். அதனால் என்ன பயன்? அவர்கள் செய்வது எத்தனை பெரிய அறிவின்மை! உயிருடன் இருந்தவர்களுக்கு நிகராக ஒரு பருப்பொருளை நிறுத்திக்கொள்வதனால் என்ன ஆகப்போகிறது? அப்பருப்பொருட்கள் அவர்கள் அல்ல, அவர்களின் அடையாளங்கள் மட்டுமே. அவ்வடையாளங்கள் நிறுவப்பட்ட கணம் முதல் பொருள் மாறுபடத் தொடங்குகின்றன.

சொல்லிச்சொல்லி அவற்றை பிறிதொன்று ஆக்குவார்கள். எண்ணி எண்ணி புதிதென சமைப்பார்கள்.”

“ஓராண்டுகாலம் அவை அன்றாட உணர்வென நீடிக்கும். ஏழாண்டுகாலம் அவை அவ்வப்போது எழும் நினைவென எஞ்சும். ஒருதலைமுறைக்காலம் அடையாளமென பேணப்படும். பின்னர் எவருடையதோ என ஆகி நின்றிருக்கும். இப்புவியிலுள்ள பொருட்பெருக்கில் ஒரு துளியென அமைந்திருக்கும்” என்றார் விதுரர். “நாமோ பெயரினை நீக்குகிறோம். சூரையங்காட்டிடைச் சுடுகிறோம். நீரில் மூழ்கி நினைப்பொழிகிறோம். அன்னமும் நீரும் அளித்து விண்செலுத்துகிறோம். மைந்தர் என அவர்களின் ஊன்வடிவம் மீண்டெழுவதில் முடிவிலாச் சுழற்சி ஒன்றைக் கண்டு அகம் நிறைகிறோம். பெயர் சூட்டி அவர்களை மீண்டும் நிகழச்செய்கிறோம். எதுவும் எஞ்சுவதில்லை என்றும் எதுவுமே அழிவதுமில்லை என்றும் ஒரே தருணத்தில் உணர்வதே நமக்கு வேதமெய்மை என அளிக்கப்பட்டுள்ளது.”

“அமைச்சரே” என இடறிய குரலில் அழைத்தான் சகதேவன். “அவர்கள் ஏன் இவ்வண்ணம் எஞ்சுகிறார்கள்? ஏன் நம் முன் தோன்றுகிறார்கள்?” விதுரர் “சுடர் அணைந்த பின்னர் விழிகளில் கணப்பொழுது எஞ்சும் பாவை போன்றவர்கள் அவர்கள்” என்றார். “அது நம் தோற்றம். சுடரென இங்கே வந்தது அதற்கு முன்பு இருந்தது. பின்பும் இருக்கும். நாம் சுடரென அதை நம் விழிகளில் தக்கவைத்துக்கொள்ள முயல்கிறோம்.” சகதேவன் கைகளில் முகத்தை வைத்து உடல்மடித்து அமர்ந்தான்.

விதுரர் மேலும் அவன் அருகே வந்து அவனுக்கு மட்டுமான குரலில் “அவர்கள் சென்றே ஆகவேண்டியவர்கள். இங்கிருந்து எஞ்சாமல் சென்றாலொழிய அவர்கள் மீண்டும் எழவியலாது”

என்றார். திடுக்கிட்டவன்போல சகதேவன் அவரை நோக்கினான். “இங்கே துளியும் எஞ்சாமல் அவர்களை நாம் அனுப்பி வைப்பது அதன்பொருட்டே” என்றார் விதுரர். “அணிந்த ஆடைகளை முழுமையாகக் களைந்தாலொழிய அவர்களால் புத்தாடை அணிய இயலாது.” சகதேவன் விதுரரின் முகத்தை நோக்கி இமையசையாமல் அமர்ந்திருந்தான். அவர் முகம் அன்னையின் கனிவைக் கொண்டிருந்தது.

“அமைச்சரே, என் தந்தையின் இடத்தில் இருப்பவர் நீங்கள். கூறுக, மெய்யாகவே மறுபிறப்பு என ஏதேனும் உண்டா?” என்று சகதேவன் கேட்டான். “பிறவிச் சுழலில் இருக்கின்றன உயிர்க்குலங்கள் என நினைவறிந்த நாள் முதலே கற்பிக்கப்பட்டவன் நான். ஆனால் மெய்யாகவே உள்ளதா? அந்தச் சிறு ஐயம் என்னுள் இல்லாமலிருந்ததே இல்லை.” விதுரர் “அந்த ஐயம் இல்லாதவர்களே இல்லை, மைந்தா” என்றார். அவன் தலையைத் தொட்டு குழலில் கைசெலுத்தி நீவியபடி “ஏனென்றால் இங்கு, இப்போது, இவ்வண்ணம் என்றே மானுட அகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அந்த மூன்று பிடிகளால் நாம் இங்கே நிறுத்தப்பட்டுள்ளோம். இங்கு உயிருடன் உணர்வுடன் இருக்கும் வரை முந்தைய பிறவியை நினைவுகூரவோ வரும் பிறவியை முன்னுணரவோ இயலாது. ஆகவே எந்நிலையிலும் பிறவிச் சுழல் என்பது சொல் என, எண்ணம் என மட்டுமே மானுடருக்குள் நின்றிருக்கும்” என்றார்.

“ஆனால் அறிதலென அது ஆகும் தருணம் ஒன்றுண்டு” என்று விதுரர் தொடர்ந்தார். “அது ஓர் அறிதல். விண்ணிலிருந்து மின் என நம் மீது இறங்குதல். நெற்றியில் மூன்றாம் விழியொன்று எழுதல். நாமறிந்த அனைத்தும் மாறிவிட்டிருக்கும். அறிவு அறிவின்மையென்றும் மாயை மெய்மையென்றும்

மாறிவிடக்கூடும். அதன்பின் நாம் அறிகிறோம், அது சொல் அல்ல, எண்ணமும் அல்ல. அது மெய்மை. மாற்றோ மறுப்போ இல்லாதது எதுவோ அதுவே மெய்மையென்றறிக! அது மெய்மை." சகதேவன் அவர் கைகளை தன் நடுங்கும் கைகளால் பற்றியபடி "நீங்கள் அறிவீர்களா?" என்றான். "ஆம், நான் அறிந்தேன்" என்றார் விதுரர்.

சற்றுநேரம் சகதேவனால் ஒன்றும் பேச முடியவில்லை. விதுரர் மேலும் ஏதோ சொல்வார் என அவன் எதிர்பார்த்தான். அவர் ஒன்றும் சொல்லவில்லை. அவன் முனகலாக "அவர்கள்..." என சொல்லத்தொடங்கி தயங்கினான். "எங்கு எவ்வண்ணம் மீண்டும் நிகழ்வார்கள் என நாம் அறியமுடியாது. அறியக்கூடுபவர்கள் உண்டு. அவர்களில் ஒருவரையேனும் நான் அறிவேன்" என்றார். சகதேவன் பெருமூச்சுவிட்டான். "அரசே, அதை விட்டுவிடுங்கள். அது உங்களை மேலும் துயர்கொள்ளவே செய்யும். இனியதாயினும் அழுகிய உணவு நஞ்சே" என்றார் விதுரர்.

"நான் துயரை விலக்க விரும்பவில்லை..." என்றான் சகதேவன். "அதுதான் உங்கள் உளச்சிக்கல். உங்கள் மைந்தரின்பொருட்டு குற்றவுணர்ச்சி கொள்கிறீர்கள். ஆகவே அவர்களை எண்ணி துயருற்றாகவேண்டும் என எண்ணுகிறீர்கள். துயருறுகையில் உண்மையில் அவர்களுக்கு எதையோ நீங்கள் அளிப்பதாகவே கருதிக்கொள்கிறீர்கள். அதைப்போல் அறிவின்மை வேறில்லை. இத்துயர் என்றல்ல, எத்துயரும் பொருளற்றதே. உயிரின் இயல்புநிலை மகிழ்ச்சி. துயர் என்பது திரிபு" என்றார் விதுரர். "இத்துயரால் எவருக்கும் எந்தப் பயனும் இல்லை. இது ஒரு வீண்நடிப்பு அன்றி வேறல்ல."

சகதேவன் சீற்றத்துடன் முகம் தூக்க "எல்லைகடந்து நீடிக்கும் எந்தத் துயரும் நடிப்பே" என்றார் விதுரர். சகதேவன் எழப்போனான். விதுரர் அவன் கையை பிடித்துக்கொண்டார். "எண்ணிநோக்குக! அதை நாம் ஏன் வளர்த்துக்கொள்கிறோம்? அது குறையும்போது ஏன் நிறைவின்மை கொள்கிறோம்? அது நாமறியாத பிறிதெதையோ நமக்கு அளிக்கிறது. எதையோ மறைக்கிறது. எதையோ நிகர்செய்கிறது.
பிறிதொன்றின்பொருட்டு தான் நின்றிருக்கிறது" என்றார். சகதேவன் தளர்ந்து "ஆம்" என்றான்.

"நாம் ஏன் துயரை நேர்கொண்டு நோக்குவதே இல்லை? நாம் நேர்நோக்கினால் துயர் ஏன் கூச்சமடைந்து முகம்திருப்பிக்கொள்கிறது? சற்றே தொட்டால்கூட ஏன் சுருண்டுகொள்கிறது? துயர் என்பது எந்நிலையிலும் துயர் மட்டும் அல்ல" என்றார் விதுரர். சகதேவன் தலைகுனிந்து அமர்ந்திருக்க மீண்டும் அவன் தலையை வருடி "நீர்க்கடன்கள் நிகழட்டும், மைந்தா. நம் சிறுவர் விண்ணேகட்டும். இங்கு அவர்கள் ஒருதுளியும் எஞ்சாதொழியட்டும். எழுமுலகில் அவர்கள் நிறைவுகொள்ளட்டும். நம்மிலிருந்து அவர்கள் முற்றிலும் மறையட்டும். வான்பறவைத் தடம்போல் ஆகுக அவர்கள் சென்ற பாதை!" என்றார். சகதேவன் "ஆம்" என்றான்.

விதுரர் "நான் பேரரசரை சந்திக்கும்பொருட்டு செல்லவிருந்தேன்" என்றார். இன்நீரை அருந்தி முடித்து எழுந்துகொண்ட சகதேவன் "கிளம்புக!" என்றான். "இல்லை, நீயும் உடன்வரலாம்" என்றார். "நானா? எனக்குரிய பணிகள்..." என்றான் சகதேவன். "இன்று இதுவே உனக்குரிய பணி. வருக!" என்று விதுரர் அவன் தோளை தட்டினார். சகதேவன் "அவரை

தாங்கள் இன்னமும் சந்திக்கவில்லையா?" என்றான். "இல்லை, நான் நேற்று மாலைதான் வந்தேன். மூத்தவர் மாலையிலேயே துயில்கொள்வார் என்றனர். இன்று கிளம்புவதற்குள் தௌம்யர் அளித்த பணிகள் சூழ்ந்துகொண்டன" என்றார் விதுரர்.

அவர் தன் தலைப்பாகையை அணிந்து மேலாடையை சுற்றிக்கொண்டார். சகதேவன் அவருடன் கிளம்பினான். "நடந்தே செல்வோம். இப்பகுதியை நான் இன்னும் முழுமையாக பார்க்கவில்லை. இதன் அமைப்பு தெரியாததனாலேயே என்னால் உரிய முறையில் பணியாணைகளை விடுக்க இயலவில்லை" என்றார் விதுரர். சகதேவன் "ஆம், இடத்தின் அளவுகளை அறியாமல் ஆணையிட முடியாதென்பதை குருக்ஷேத்ரத்தில் அறிந்தேன். அஸ்தினபுரியும் இந்திரப்பிரஸ்தமும் என் அகத்தே இருந்தமையால் இயல்பாக ஆணையிட்டேன். குருக்ஷேத்ரத்தில் நான் இட்ட ஆணைகள் பிழையாக ஆனபோது ஒன்றை அறிந்தேன், நான் அந்நிலத்தைப்பற்றிய ஓர் உளப்பதிவையே மெய்யெனக் கொண்டிருந்தேன். அவ்வுளப்பதிவுக்கு எந்த அறிதற்பின்புலமும் இல்லை. சொற்களில் இருந்து எழுந்த வெறும் கற்பனை" என்றான்.

விதுரர் ஒன்றும் சொல்லவில்லை. அவன் ஒரு சில கணங்களுக்குப்பின் "நான் குருக்ஷேத்ரத்தைப் பற்றிப் பேசியதை நீங்கள் விரும்பவில்லையா, அமைச்சரே?" என்றான். "இல்லை" என்று விதுரர் சொன்னார். சகதேவன் "நீங்கள் செவிகொள்ளாமலிருந்திருக்க இயலாதே?" என்று சொன்னான். "செவிகொள்ளாத இடத்தில் செவிகொள்ளாத வாழ்வில் இருந்தேன்" என்றார் விதுரர். "அங்கிருந்து கிளம்புவதற்குமுன் என்ன நிகழ்ந்தது என்று கேட்டறிந்தேன்." சகதேவன் "ஒரே

நாளிலா?" என்று திகைப்புடன் கேட்டான். "ஒரு நாழிகையில்" என்றார் விதுரர். "பதினெட்டுநாள் போரையுமா?" என்றான் சகதேவன். "பதினெட்டு மானுடவாழ்வுக்காலம், பதினெட்டு யுகங்கள் என்கிறார்கள்..."

"பதினெட்டு வரிகளுக்கு அப்பால் அதில் சொல்வதற்கொன்றுமில்லை" என்றார் விதுரர். "இறுதியில் என்ன எஞ்சியது என்று மட்டுமே கேட்டறிந்தேன்." சகதேவன் "ஆம், அதுவும் உண்மையே" என்றான். "இப்போர் சொல்லிச்சொல்லிப் பெருகும் என்பதே என் எண்ணமாக இருந்தது. எண்ணி எண்ணிச் சுருங்கும் என்பதை கருதவில்லை." பின்னர் "ஆனால் நான் எண்ணிக்கொண்டே இருக்கிறேன். எண்ணலாகாதென்று தடுத்தாலும் எண்ணம் எழுகிறது. நினைவுகூர்தல் சிலபோது. மெய்யென அதில் சென்று வாழ்தல் சிலபோது" என்றான்.

விதுரர் "அதை உன்னால் தவிர்க்க முடியாது" என்றார். "ஆம், இழப்புகள் எங்களை தொடர்கின்றன" என்றான் சகதேவன். "இழப்புகளை மானுடர் கடக்கவே விழைவார்கள், எளிதில் கடந்தும் விடுவார்கள்" என்றார் விதுரர். "உங்கள் வெற்றிகள் அதிலுள்ளன. வெற்றிகளை எவரும் மறப்பதில்லை. ஏனென்றால் வெற்றிகளினூடாக அவர்கள் வளர்கிறார்கள். பெருகி விரிகிறார்கள். பிறிதொருவரென்றாகிறார்கள். ஒவ்வொரு வெற்றியிலும் தாங்கள் என தாங்களறிந்த எல்லையை தாங்கள் கடந்திருப்பதை உணர்கிறார்கள். தங்களை கடத்தலையே மானுடர் பேரின்பம் என்று உணர்கிறார்கள். உள்ளமைந்து இறுகி சுவர்களை முட்டிக்கொண்டிருக்கும் ஆணவத்திற்கு மேலும் புழங்க இடம் கிடைக்கிறது. அது

துள்ளிமகிழ்கிறது. அந்த இடத்தை மீண்டும் நிறைத்துக்கொள்கிறது.”

சகதேவன் “நான் அவ்வண்ணம் வளர்ந்தேன் என்கிறீர்களா?” என்றான். “சற்றுமுன் நீ சொன்னது அத்தகைய ஒரு வெற்றியை. அந்நிலத்தை சித்தத்தால் ஆளத்தொடங்கிய கணத்தை நீ மறக்கவில்லை. அவ்வண்ணம் பெரிதும் சிறிதுமாகிய பலநூறு கண்டடைதல்கள் அங்கே நிகழ்ந்திருக்கும். கண்டடைதல் இல்லாத வெற்றி இல்லை. வெற்றி நிகழாது கண்டடைதலும் நிகழ்வதில்லை. அறிதலென்பது கடந்து செல்லல் என்று அதனால்தான் சொல்லப்படுகிறது” என்றார் விதுரர். “நீங்கள் அங்கே மீண்டு சென்றுகொண்டேதான் இருப்பீர்கள். நீங்கள் புதுப் பிறவி கொண்டு எழுந்த கருவறை அது. இனி உங்களை அங்கிருந்துதான் தொடங்குவீர்கள்.”

சகதேவன் பேச்சை ஒழிய விழைந்தான். விதுரர் மாறிவிட்டிருந்தார். இனியவையே சொல்லும் அமைச்சரையே அவன் அறிந்திருந்தான். அத்தனை கூரிய சொற்களால் உள்கிழித்துச் செல்லும் நாவலரை அவன் கண்டிருக்கவில்லை. அவருக்கு என்ன ஆயிற்று? போரில் ஈடுபட்டவர்கள் அனலிடை புகுந்தவர்கள் என உருகி உருவழிந்து மீண்டும் எழுந்தனர். போரிலிருந்து அகலும்பொருட்டு ஐம்புலன்களையும் உள்ளிழுத்துக்கொண்டவரும் பிறிதொருவர் என்றாகிவிட்டிருக்கிறார்.

அவர்கள் குடில்நிரைகளின் ஊடாகச் சென்றனர். எதிரே வந்தவர்கள் தலைவணங்கி ஒதுங்கினர். விதுரர் அவர்கள் ஒவ்வொருவரையும் நின்று வாழ்த்தி முன் சென்றார். முன்பு அவர் தலைவணங்குபவர்களுக்கு உளமறியாத மறுவணக்கம்

ஒன்றை அளிப்பார். அவன் அவரை அணுக்கமாக அறிந்த அந்நாட்களில் எப்போதும் அவர் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு விரைந்து சென்றுகொண்டிருப்பவர் எனத் தோன்றுவார். இரு இடங்களும் அவரிடமிருக்கும். அப்போது துயர் முழுத்திருந்த தன் மூத்தவரை சந்திக்கச் செல்கையிலும் செல்லுமிடத்தை மறந்துவிட்டவர் போலிருந்தார்.

"நீங்கள் ஊழ்கம் பயின்றீர்களா, அமைச்சரே?" என்று சகதேவன் கேட்டான். "இல்லை" என்றார் விதுரர். "ஊழ்கத்திலமர்ந்து அனைத்தையும் கடந்துசெல்ல என்னால் இயலுமென்று எண்ணியிருந்தேன். அதன்பொருட்டே சென்றேன். ஊழ்கம் எனக்குரியதல்ல என்று கண்டுகொண்டேன்." சகதேவன் "பிறகென்ன செய்தீர்கள்?" என்றான். "வெறுமனே இருந்தேன். நினைவறிந்த நாள் முதல் அஸ்தினபுரியை இயற்றுபவன் நான் என எண்ணியிருந்தேன். அனைத்திலிருந்தும் ஒதுங்கிய பின்பு என் அகம் மேலும் விசைகொண்டு அனைத்தையும் ஆற்றிக்கொண்டிருந்தது. அவற்றில் இருந்து அகன்றேன்."

"இடத்தை அகற்றுவது உள்ளத்தை அகற்றுவதற்கு எளிய வழி என கண்டுகொண்டேன். சிறுகுடிலில் கிழங்குகளையும் கனிகளையும் மட்டுமே உண்டு எவரிடமும் சொல்லாடாமல் எவர் முகத்தையும் நோக்காமல் அமர்ந்திருந்தேன். நூல் நவிலவில்லை. இசை கேட்கவில்லை. என்ன செய்தேன் எனில் வெறுமனே அமர்ந்திருந்தேன். என் வாழ்நாளில் முதல்முறையாக." அவர் புன்னகைத்து "வெறுமனே இருக்கையில் முதலில் உள்ளம் ஓலமிடுகிறது. வெளிச்செயலுக்கு அது ஆற்றிப்பழகிய எதிர்விசையை அளிக்கிறது. அக்கூச்சலே நம்மை வெறுமனே அமரவிடாமல்

தடுக்கிறது. அது ஓய்ந்தபின் நம்மால் ஒன்றும் செய்யாமல் அமர முடியும்" என்றார்.

"ஆம்!" என்று சகதேவன் ஊக்கத்துடன் சொன்னான். "குருக்ஷேத்ரப் போர்களத்தில் நான் அதை கண்டுகொண்டேன். சூழ்ந்திருக்கும் பேரோசைக்கு நிகரான ஓசை ஒன்றை எழுப்பியே நம் உள்ளம் நிகர்நிலை கொள்கிறது. அப்பேரோசைக்கு என் அகம் எதிரோசை எழுப்புவதை தவிர்த்தேன். ஒவ்வொரு நாளும் என அதை பயின்றேன். என் அகத்தின் ஓசை அவிந்ததும் புறவோசை கேட்காமலாகியது. புயலெனக் கொந்தளிக்கும் அந்தக் களத்தில் நான் முற்றிலும் நிகர்நிலை கொண்டிருந்தேன்."

நகைத்தபடி அவன் தொடர்ந்தான். "ஓசைகளில் மிதப்பவர்கள் அங்கிருந்த வீரர்கள் அனைவருமே. ஓசையற்ற அகம் கொண்டவன் கொந்தளிக்கும் நீர் நடுவே நிலைத்த பாறை போன்றவன். போர்க்கொந்தளிப்பில் இருந்தவர்கள் என்னை வந்து வந்து அறைந்து மீண்டனர். அவர்கள் என் கண்களை சந்திக்கையில் அடைந்த திகைப்பை நினைவுகூர்கிறேன்." விதுரர் அவனை திரும்பி நோக்கினார். சகதேவன் "புறம் என்பது ஓசையால் கோக்கப்பட்டிருக்கிறது. ஓசையில்லையேல் அவை ஒவ்வொன்றும் தனித்தனியானவை. ஓசையற்ற குருக்ஷேத்ரம் அச்சமூட்டும் பெரும்பரப்பு அல்ல என்று கண்டேன். அது தனித்தனியாக அசையும் மானுடர்களும் விலங்குகளும் கொண்டது. அதை அறிந்த கணமே அச்சமொழிந்தேன்" என்றான்.

விதுரர் புன்னகைப்பதைக் கண்டு அவன் பேச்சை நிறுத்தினான். "என்ன எண்ணுகிறீர், அமைச்சரே?" என்றான். "கற்பது இனிது"

என்ற விதுரர் "நாம் அணுகிவிட்டோம் அல்லவா?" என்று கேட்டார். "ஆம், இங்குதான்" என்றான் சகதேவன்.

நீர்ச்சுடர் - 42

பகுதி ஆறு : விழிக்குமிழிகள் – 3

திருதராஷ்டிரரின் குடில் முன் சஞ்சயன் நின்றுகொண்டிருந்தான். அவர்கள் வருவதைக் கண்டு புன்னகையுடன் அருகணைந்து விதுரரின் கால்களைத் தொட்டு வணங்கினான். அவன் தலைமேல் கைகளை வைத்து வாழ்த்திய விதுரர் "எப்படி இருக்கிறார்?" என்றார். சஞ்சயன் "உடல்நிலை நலமாகவே இருக்கிறது" என்றான். சகதேவன் "மகிழ்ச்சியாக இருக்கிறார் என்றுதானே கேள்விப்பட்டேன்" என்றான். சஞ்சயன் "ஆம், அதை மகிழ்ச்சி என சொல்லலாம் என்றால் நேற்று மாலைவரைகூட மகிழ்ச்சியாகவே இருந்தார்கள்" என்றான்.

விதுரர் "சொல்க!" என்றார். "நீங்கள் அவரை சந்திக்க வந்திருக்கிறீர்கள்" என்றான் சஞ்சயன். "அவர் நிலையை அறிந்தபின் சந்திக்கிறேன்" என்றார் விதுரர். சஞ்சயன் "அதை நான் விளக்க முடியாது. நிகழ்ந்தவை என்ன என்று மட்டும் சொல்கிறேன்" என்றான். விதுரர் இயல்பாக நடந்து பக்கவாட்டிலிருந்த சஞ்சயனின் குடிலை நோக்கி சென்றார். சஞ்சயன் அவர் பின்னால் வந்தான். அவர் அங்கிருந்த மூங்கில் பீடத்தில் அமர்ந்துகொள்ள அவன் முன்னால் நின்றான். சகதேவன் அருகே சென்று நின்று அவர்கள் இருவரின் முகங்களையும் மாறிமாறி நோக்கினான்.

சஞ்சயன் “இங்கே அரசரும் இளையோரும் வந்து வாழ்த்துச்சொல் பெற்றுச் சென்றதை அறிந்திருப்பீர்கள். அந்நாளில் அக்கணங்களுக்கு முன்புவரை அவர் கொந்தளித்துக்கொண்டுதான் இருந்தார். சினமும் பழிவெறியும் ஒரு கணம் மீதெழும். மைந்தர் வாழவேண்டும், குடிசெழிக்கவேண்டும் என்னும் விழைவு அதை வெல்லும். அவர் எந்நிலையில் இருக்கிறார் என்பதை எவராலும் சொல்ல முடிந்ததில்லை. சுழற்காற்றில் அலையும் காற்றுத்திசைகாட்டிபோல விண்ணால் ஆட்டுவிக்கப்படுகிறார் என்று நான் எழுதிக்கொண்டேன்” என்றான்.

ஆனால் அன்று பாண்டவ உடன்பிறந்தார் ஐவரும் வந்து பணிந்து வாழ்த்துச்சொல் பெற்றபோது அவரிடமிருந்து தந்தையே மேலெழுந்தார். தன்னை ஒரு பெருந்தந்தை, குலமூதாதை என அவர் கண்டுகொண்டார். அது அவரை விடுதலை செய்தது. அனைத்து உளக்கசடுகளும் அகன்று தெளிந்தார். பேரன்பு நிறைந்தவராக ஆனார். அவர்கள் சென்றபின் அந்த இரும்புப் பாவையை அவரிடம் அளித்தார்கள். உண்மையில் அதை அவரிடம் அளிக்கும் எண்ணம் இளைய யாதவருக்கு இருக்கவில்லை. அதை திரும்பக்கொண்டுசெல்லவே அவர் சொல்லியிருந்தார். ஆனால் பேரரசர் அதை நினைவுகூர்ந்து அதை கொண்டுவரும்படி சொன்னார்.

நான் அப்போது அவர் அருகே இருந்தேன். “அது எதற்கு இப்போது?” என்று கேட்டேன். “அதை கொண்டு வா” என்று அவர் சொன்னபோது முகம் மலர்ந்திருந்தது. உளக்கிளர்ச்சி கொள்ளும்போது தலையை உருட்டியபடி உதடுகளை மெல்வது அவர் வழக்கம். “என் மைந்தனின் உடல் அது... என்

மைந்தனைத் தழுவும் உணர்வு நான் அடைந்தது" என்றார். "அது பீமசேனனின் உடலுருவில் அமைக்கப்பட்டது அல்லவா?" என்றேன். "அது அவன் உடலும்கூடத்தான். அவர்கள் வெவ்வேறல்ல... கொண்டுவருக!" என்றார். அருகே இருந்த பேரரசி "அப்பாவையா? அது அவனைப்போலவா உள்ளது?" என்றார். அவர் முகமும் மலர்ந்திருந்தது.

நான் அது அவர்களுக்கு நல்ல உளநிலையை உருவாக்கும் களிப்பாவையாக அமையும் என எண்ணினேன். கலிங்கச் சிற்பிகளை வரச்சொல்லி அதை மீண்டும் பொருத்த முடியுமா என்று பார்த்தேன். அது எளிதில் பொருந்தும்படி சமைக்கப்பட்டது. ஆகவே அரைநாழிகைக்குள் அதை முன்பென அமைத்துவிட்டார்கள். பேரரசரிடம் அதை கொண்டு சென்றபோது அது வரும் ஒலியிலேயே உணர்ந்துவிட்டார். பாய்ந்தெழுந்து ஓடிவந்து இரு கைகளாலும் அதை அள்ளி எடுத்து நெஞ்சோடணைத்து வெறிகொண்டு முத்தமிட்டார். கண்ணீருடன் "மைந்தா! மைந்தா!" என்று புலம்பினார். அதை அணைத்துச் சுழற்றியபடி நடனமாடினார்.

என்ன வியப்பென்றால் அப்பாவையை தழுவியும் வருடியும் பேரரசியும் மகிழ்ந்ததுதான். அவர்கள் அதை தங்கள் மடியில் போட்டுக்கொண்டு கொஞ்சினார்கள். அழுகையும் கண்ணீரும் மறைந்தபின் சிரிப்பும் களிப்பும் வெளிப்பட்டது. அதை அவர்கள் மைந்தன் என்றே எண்ணினர். அதனுடன் உரையாடினர். ஊடியும் நகையாடியும் அதனுடனேயே இருந்தனர். அதுவும் நன்றே என நான் எண்ணினேன். அது அவர்களின் துயரத்தை தணிக்குமென்றால் ஆகுக என கருதினேன். அவ்வண்ணம்தான் இருந்தது, நேற்று அந்திவரை.

நேற்று அந்தியில் அவர்கள் இருவரும் குடிலுக்குள் மஞ்சத்திற்கு சென்றபோது இருவருக்கும் நடுவே அந்தப் பாவை இருந்தது. ஒவ்வொரு நாளும் அவ்வாறுதான் அவர்கள் இரவு உறங்குகிறார்கள். அது அவர்களுக்கு நடுவே படுத்திருக்கையில் ஏறத்தாழ பேரரசரின் அளவுக்கே பெரிதாக இருக்கிறது. ஆனால் அவர்கள் இருவரும் அதை நடத்தும் முறையில் நாமே அறியாது அது ஒரு கையளவு சிறிய குழவி என எண்ணத்தலைப்படுவோம். அதற்கு மரவுரிப் போர்வையை மெல்ல இழுத்து போர்த்துகையில் அரசியின் கையிலிருக்கும் அந்த மென்மையை, முகத்திலிருக்கும் கனிவைக் காண்கையில் அந்தப் பாவையும் அதை உணர்கிறதோ என்று தோன்றும்.

அமைச்சரே, அது உண்மையில் என்ன என்று எனக்கு இன்னமும் புரியவில்லை. தொலைவிலிருந்து பார்க்கையில் அவர்கள் அதை கொஞ்சி மகிழும்போது அதுவும் அவர்களுடன் விளையாடுகிறதோ என்ற எண்ணத்திலிருந்து அகல முடிவதில்லை. அவர்கள் அதை கைகளால் வருடுகையில் மெல்ல உடலை ஒடுக்கி கருக்குழவிபோல் சுருண்டு அவர்களிடம் ஒண்டிக்கொள்கிறது. அவர்கள் அதன் தலையை மடியில் வைத்து அமர்ந்துகொள்கையில் கால் மேல் கால் போட்டபடி அவர்களின் கைகளை எடுத்து விரல்களால் பற்றி நெஞ்சோடு வைத்துக்கொண்டு மென்மொழி பேசுவதுபோல் தோன்றுகிறது. குழவியரும் சிறுவரும் கொள்ளும் உடலசைவுகள் அனைத்தும் அதில் கூடுகின்றன.

இது என் விழிமயக்காக இருக்கலாம். ஆனால் மெய்யாகவே அதில் ஏதோ உள்ளது. பொருட்களில் கூடும் தெய்வங்கள் எவையோ அதில் கூடியுள்ளன. அது மறைந்த அரசரின் எஞ்சும் இருப்போ என நான் எண்ணியதுண்டு. ஆனால் அவர்

உயிருடன் இருந்தபோதுகூட அதில் ஏதோ குடியிருந்தது. அவருடன் இணைநின்று போரிட்டது அதுதான். அவர் மறைந்தபின் குருக்ஷேத்ரத்தில் எழுந்து நின்றிருந்தது. இப்போது மைந்தனென, மகவென மாறி இங்கிருக்கிறது. நலம் நாடுவதா அன்றி வஞ்சம் கொண்டு பலி கோருவதா என்று அதை இன்று வகுக்க இயலவில்லை. அது தன்னை மாற்றிக்கொண்டே இருக்கிறது. மாறிக்கொண்டே இருப்பதுதான் தெய்வங்களின் இயல்புபோலும்.

அதன் முகத்தை பார்த்துக்கொண்டே இருக்கிறேன். இரும்புப் பாவைமுகம். தசையென நெகிழாதது. உள்ளிருந்து எந்த ஒளியையும் வெளிக்கொணராதது. தலைக்கவசம் இட்டு ஒருவர் முன் வருகையில் அவரது முகம் மறைந்துவிடுவதை கண்டிருப்போம். ஆனால் தலைக்கவசமிட்ட ஒருவருடன் உரையாடிக்கொண்டிருக்கையில் மெல்ல மெல்ல அத்தலைக்கவசமே அவரது முகமாக மாறுவதை உணர்கிறோம். அது அவரது உணர்வுகளை காட்டத்தொடங்குகிறது. அதை நோக்கி நாம் அனைத்தையும் பேசத்தலைப்படுகிறோம். அதைப்போலத்தான் அந்தப் பாவையை அரசர் துரியோதனன் என்றே நானும் எண்ணினேன். அவ்வாறே அதை நடத்தினேன். அதன் முன் பணியாது ஒரு சொல்லும் நான் உரைத்ததில்லை. பொறுத்தருள்க அரசே என்று சொல்லாமல் அதை தொட்டதுமில்லை.

நேற்றிரவு சங்குலன் கதவை மூடி வெளிவரும்போது நான் வெளியே நின்றிருந்தேன். அவன் என்னைப் பார்த்து ஒன்றும் சொல்லாமல் தலைவணங்கி அங்கிருந்த தாழ்வான பீடத்தில் அமர்ந்துகொண்டான். நான் என் மரவுரியை போர்த்திக்கொண்டு இக்குடிலுக்கு மீண்டேன். இரவு மட்டுமே நான் அரசரிடமிருந்து

விலகியிருக்கிறேன். அதுவும் இப்போது அவர் பேரரசியுடன் இருப்பதால். அஸ்தினபுரியில் பெரும்பாலான இரவுகளில் நான் அவர் அருகிலேயே தரையில் படுத்துக்கொள்வது வழக்கம். அவர் இல்லாதபோதும் அவர் இருப்பை எப்போதும் உணர்பவன் நான்.

மஞ்சத்தில் படுத்து கண்களை மூடியபடி ஆற்றவேண்டிய பணிகளைப் பற்றி எண்ணினேன். அவரிடம் மறுநாள் சொல்லி முடிக்கவேண்டியவற்றை. சொல்லத் தவறியவற்றை. பெரும்பாலான இரவுகளில் அவ்வண்ணம் விழிமூடி படுத்திருக்கையில் நான் அவரிடம் சொல்லாது தவிர்த்த சொற்களை உள்ளிருந்து வெளியே எடுப்பேன். அவ்விருளுக்குள் ஒவ்வொன்றாக வெளியே விடுவேன். அவை பறந்தும் தவழ்ந்தும் அவரை சென்றடைந்துவிடும் என்பதைப்போல். அவர் துயின்றபின் அவர் உள்ளத்துள் புகுந்து அங்கிருக்கும் என்பதுபோல். மறுநாள் காலையில் அவர் என்னிடம் பேசும்போது முந்தைய இரவில் நான் வெளிவிட்ட சொற்களுக்கான மறுமொழிகளும் உடன்பாடுகளும் இருப்பதை பார்த்திருக்கிறேன். நாங்கள் விழித்திருக்கையில் பேசுவது குறைவு. துயிலினூடாகவே கைமாறும் சொற்கள் மிகுதி.

அந்த அரைத்துயிலில் நான் அவரை மிக அருகில் எனக் கண்டேன். எனக்கு அம்முகத்தோற்றம் ஒரு பதற்றத்தை அளித்தது. பாண்டவ ஐவர் முன் அவர் பெருந்தந்தை என எழுந்த அத்தருணத்தில் அவருடன் இருந்தேன். உளம் நெகிழ்ந்து விழிநீர் சிந்தினேன். அவர் சென்றடைந்த அனைத்து உச்சிகளுக்கும் நானும் சென்றேன். அப்போதும் அந்தப் பேரரசர் நான் அறிந்தவரல்ல என்று தோன்றிக்கொண்டுதான் இருந்தது. இப்போதும் அந்த ஐயம் நீடிக்கிறது. சினவெறி கொண்டு

கைகளை அறைந்துகொண்டு உறுமி கொந்தளித்து சுழன்று வரும் பேரரசரை கண்டிருக்கிறேன். அப்போதும் இதே உணர்வுதான், அது அவரல்ல பிறிதொன்று என்று. இவ்வாறும் அவ்வாறும் வெளிப்படும் இவ்விருவருக்கும் அப்பால் பிறிதொருவர் உண்டு என நான் எண்ணிக்கொள்கிறேன். அவ்வாறு ஒருவரை உருவாக்காமல் அவருடன் என்னால் இருக்க இயலாது.

அவர்களுக்கு நடுவே அந்தப் பாவை படுத்திருப்பதைப் பற்றி எண்ணிக்கொண்டேன். அது ஒரு தெய்வம் எனில் இப்போது எப்படி உணரும்? எவ்வாறு அது அவர்களை எண்ணும்? அங்கிருந்து எழுந்து இருளில் பேருருக்கொண்டு நின்று அவர்களை பார்த்துக்கொண்டிருக்கும் என எண்ணிக்கொண்டேன். இல்லை, அது வெறும் பொருள். மானுடரைக் கண்டு மானுடரைப்போல் உருவாக்கப்படுபவை பாவைகள். அவை மானுடருக்குரிய நிலையழிவுகள் ஏதும் இல்லாதவை என்பதனாலேயே அவை மானுடரைவிட மேம்பட்டவை ஆகிவிடுகின்றன. மானுடர் பிற மானுடரை என பாவைகளை எண்ணத்தலைப்படுகிறார்கள். பிற மானுடரை எப்போது அச்சத்துடனும் ஐயத்துடனுமே அவர்கள் அணுகுகிறார்கள் என்பதனால் பாவைகளையும் அவ்வாறே கருதுகிறார்கள். பாவைகளின் இரக்கமற்ற பிழையின்மையினால் அவர்களின் அச்சம் மேலும் மேலும் என பெருகுகிறது.

அது மானுடன் அல்ல. அது வெறும்பொருள். ஆனால் மானுடருடன் அவர்களைச் சூழ்ந்திருக்கும் அனைத்துப் பொருட்களும் விளையாடிக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பொருளிலும் ஒரு தெய்வம் உள்ளது. நம் காலைக் கிழிக்கும்

கூழாங்கல், நாம் தலையில் இடித்துக் கொள்ளும் நிலைப்படி, நாம் கைநீட்டுகையில் சற்றே அகன்றுவிடும் கைப்பிடி அனைத்திலும் நம்முடன் விளையாடும் தெய்வங்கள் உள்ளன. இந்தப் பாவையில் இருக்கும் தெய்வம் எது? என்றேனும் எவரேனும் அதை முழுமையாக அறிந்துகொள்ள முடியுமா என்ன? ஏதேனும் தெய்வத்தை மானுடர் அவ்வாறு அறிந்து முழுமையாக வகுத்துள்ளார்களா? மானுடர் வகுத்துக்கொள்ளாதவற்றையே தெய்வம் என்று உணர்கிறோமா?

நான் துயின்றுவிட்டிருந்தேன். பின்னிரவில் கூச்சல்கள் கேட்டு எழுந்து வெளியே சென்றேன். பேரரசரின் குடிலின் கதவைத் திறந்து சங்குலன் உள்ளே செல்வதை கண்டேன். நானும் உடன் உள்ளே சென்று பார்த்தபோது பேரரசரை சங்குலன் தன் இரு பெரிய கைகளால் பற்றி இறுக்கி அள்ளித் தூக்கி அப்பால் கொண்டு செல்வதைக் கண்டேன். அவருக்குப் பின்னால் நின்றிருந்த அப்பாவையை அதன் பின்னரே கண்டு திடுக்கிட்டு பின்னடைந்தேன். அது இரு கைகளையும் விரித்து மற்போரிட சித்தமாக நின்றிருந்தது. சங்குலன் அவரை கொண்டு சென்று குடிலுக்குப் பின்னால் இருந்த வாயிலினூடாக அப்பால் மறைந்தான். அது தன் இரு கைகளையும் அறைந்தபடி விழியற்றதுபோல் தலையைச் சுழற்றியபடி குடிலை சுற்றி வந்தது.

நான் அதன் பின்னரே மஞ்சத்தில் அமர்ந்திருந்த பேரரசியைக் கண்டேன். அரசியின் விழிகள் அதை நோக்குவதுபோல் தெரிந்தது. அது சுழன்று வரும்போது அவர் தலைதிருப்பவில்லை. உறைந்ததுபோல் இரு கைகளையும் மடியில் கோத்து மஞ்சத்தில் அமர்ந்திருந்தார். எனினும் அதன்

அசைவுகள் அனைத்தையும் அவர் உணர்ந்திருப்பார் என்று அவருடைய உடல்மெய்ப்பாடுகளிலிருந்து தோன்றியது. நான் அந்தப் பாவையை பற்றிநிறுத்த வேண்டுமென்று விரும்பினேன். எக்கணமும் அது தன் இரும்புக் கைகளால் பேரரசியை தாக்கிவிடக்கூடும் என்று தோன்றியது. அறைக்குள் அது கைநீட்டி துழாவியது.

அந்தப் பாவைக்கு நன்கு நோக்குணர்வு உண்டென்றும், அதைவிட மிகுதியாக செவியுணர்வு உண்டென்றும் அறிந்திருந்தேன். அப்போது அது விழியற்றதாகத் தோன்றியது ஏன் என வியந்தேன். அவரால் உடைக்கப்பட்டபோது அதன் விழிகள் பழுதுபட்டிருக்கலாம். ஆனால் முந்தையநாள் அதன் விழிகளை நான் பார்த்திருந்தேன். அவர்களுடன் அது இருந்தபோது நான் உள்ளே நுழைந்த அசைவைக் கண்டு சீற்றத்துடன் திரும்பி நோக்கியது. அதன் உணர்வுகள் என நான் கண்டுகொண்டவை முழுக்க அந்த விழியசைவுகளில் இருந்தே. அது கைகளை அறைந்துகொண்டது. உறுமியபடி நிலத்தை ஓங்கி மிதித்தது.

சங்குலன் கதவைத் திறந்து உள்ளே வந்து இயல்பாக நடந்து அதை அடைந்தான். அவனைக் கண்டதும் அது திகைத்து பின்னடைந்து அவனை போருக்கு அழைப்பதுபோல கைகளை விரித்தது. அவன் அதன் இரு கைகளையும் பற்றிச் சுழற்றி நிலத்தில் இட்டான். அது திமிறி எழ முயல தசைபுடைத்த தன் பெரும் கைகளால் அதைப் புரட்டி இரும்புக் கைகளை மடித்து பின்பக்கம் கொண்டுவந்து சேர்த்து தன் தலையில் சுற்றியிருந்த தலைப்பாகைத் துணியால் இறுகக் கட்டினான். அதைத் தூக்கி உருட்டி அப்பால் இட்டான். அது உறுமியபடி துள்ளி எழ முயல

அவன் அதை அழுத்தி மண்ணோடு பற்றிக்கொண்டான். அது மெல்ல அடங்கி செயலிழந்தது.

அதற்குள் தோளால் உந்திக் கதவைத் திறந்து உள்ளே வந்த பேரரசர் "கொல் அவனை! கொல் அவனை!" என்று கூவினார். அவரது இரு கைகளும் பின்பக்கம் கட்டப்பட்டிருந்தன. "எங்கே? எங்கே அவன்?" என்று கேட்டபடி குடிலுக்குள் சுழன்று வந்தார். சங்குலன் எழுந்து அவரை மீண்டும் பிடித்துத் தூக்கி மஞ்சத்தில் அமர வைத்து "அமர்க!" என்றான். அவர் "விலகுக! அறிவிலி! விலகிச்செல்! இக்கணமே அவனை கொல்ல வேண்டும். எங்கே அவன்?" என்றபடி எழ முயல அவன் அவரை ஓங்கி கன்னத்தில் அறைந்தான்.

அந்த ஓசை கேட்டு என் உடல் உலுக்கிக்கொண்டது. கட்டுப்படுத்த முடியாமல் போகும்போது அவன் அவரை அறைவதை முன்பும் பலமுறை நான் கண்டதுண்டு. அது இரு மல்லர்களுக்கு போரில் நிகழும் தாக்குதல் என்றே எப்போதும் எனக்குத் தோன்றியிருக்கிறது. அறைபட்டதும் அவர் தன் தலையைத் தாழ்த்தி பற்களைக் கடித்துக்கொண்டு உடற்தசைகள் இறுகி நெகிழ்ந்து உருள திமிறினார். பின்னர் ஒரு கணத்தில் தளர்ந்து உறுமல்போல் ஒலியெழுப்பி அழுதபடி சரிந்து மஞ்சத்தில் விழுந்தார். சங்குலன் அவர் கைகளைக் கட்டியிருந்த மேலாடையை அவிழ்க்க அவர் தன் இரு கைகளாலும் தலையை ஓங்கி ஓங்கி அறைந்துகொண்டு கூவி அழுதார். முகம் தலையணையில் அறைய மஞ்சத்திலேயே குப்புற விழுந்தார்.

அந்தப் பொழுது முழுக்க வெறுமனே நோக்கியபடி பேரரசி அமர்ந்திருந்தார். பேரரசியின் கூரிய நோக்கை நான் முன்னரும் உணர்ந்திருந்தபோதும்கூட அதுபோல எப்போதும்

அறிந்ததில்லை. அந்தக் காட்சியே ஒரு கனவோ எனத் தோன்றியது. பேரரசியின் முகம் ஒரு பளிங்குப் பாவை போலிருந்தது. இவர்கள் அனைவருக்குமே பாவை என ஆகும் உளநிலை உண்டு. பேரரசர் கருங்கல் சிற்பம் என ஆவார். துரியோதனனும் துச்சாதனனும் மட்டுமல்ல கௌரவ நூற்றுவரும் அமர்ந்த இடத்திலேயே அசைவிழந்து கல்லென ஆகும் கலை அறிந்தவர்கள்.

நான் குடிலின் படலை மெல்ல சார்த்தி வெளியே வந்தேன். என் குடிலுக்கு வந்து மஞ்சத்தில் அமர்ந்துகொண்டு கண்களை மூடி பேரரசரின் முகத்தை நினைவில் கொண்டுவர முயன்றேன். அமைச்சரே, அத்தருணத்தில் ஒன்று தோன்றியது. அப்போது அங்கே மஞ்சத்தில் படுத்து அழுதுகொண்டிருக்கும் பேரரசர்தான் மெய்யானவர் என்று. ஆனால் அவரை நானோ பேரரசியோ அணுக இயலாது. அவரை அணுகக்கூடியவன் சங்குலன் மட்டுமே.

சங்குலன் வெளிவந்து மீண்டும் தன் தாழ்ந்த மஞ்சத்தில் கால் நீட்டி அமர்ந்து கைகளை மடியில் கட்டி சுவரில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டான். நான் இங்கிருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். அவன் சில கணங்களிலேயே துயின்று நீள்மூச்செறியத் தொடங்கினான். அவன் மூச்சொலியைக் கேட்டபடி நான் இங்கு அமர்ந்திருந்தேன். நெடும்பொழுது நான் துயிலவில்லை. என்னை அந்நிகழ்வு உலைத்துவிட்டது. அவ்வண்ணம் ஒரு நிகழ்வு உருவாகக்கூடும் என எண்ணியிருந்தேன். அது உருவானபோது வெறுமையை அடைந்தேன்.

என்ன நிகழ்ந்தது என்று இன்று காலை பேரரசியிடம் கேட்டேன். பேரரசி தனக்குத் தெரியவில்லை, பேரரசர்

சொன்னதைத்தான் தன்னால் சொல்ல முடியும் என்றார். நள்ளிரவில் அந்தப் பாவை எழுந்து பேரரசரை கொல்ல முயன்றது. அவர் மேலேறி அமர்ந்து கால்களால் அவர் உடலை கவ்விக்கொண்டு கழுத்தை நெரித்து இறுக்கியது. அவர் அதை முழு உடல் விசையாலும் உந்தி அப்பாலிட்டு எழுந்து தாக்கினார். அவர்கள் இரு இணைமல்லர்கள்போல் போரிட்டுக்கொண்டனர். அதன் அடிகளை பேரரசரால் தாள முடியவில்லை. இருமுறை அது பேரரசரைத் தூக்கி அப்பால் வீசியது. அது அவரை கொன்றிருக்கும். அவரது அலறல் கேட்டு சங்குலன் உள்ளே வந்து அவரை காப்பாற்றினான் என்றார்.

சகதேவன் "அவர் மிக எளிதில் அதை உடைத்ததை நான் பார்த்தேன். அவர் தோள்களுக்கு அது இணையே அல்ல. அது துரியோதனன் தனக்கு நிகரான மல்லனாக உருவாக்கியது. மூத்தவர் பீமசேனன் வடிவில் அதை அமைத்தார் என்றும் மேலும் மேலும் மேம்படுத்தி அதை தன் வடிவிலேயே ஆக்கிக்கொண்டார் என்றும் சொல்கிறார்கள். அவர்கள் இருவருமே பேரரசரைவிட மிகச் சிறிய உடல் கொண்டவர்கள்" என்றான். விதுரர் "அது பேரரசரின் உடலையும் தான் எடுத்துக்கொண்டிருக்கலாம்" என்றார். "அது எங்ஙனம்?" என்றபின் "அது இயல்வதா என்ன?" என்று சகதேவன் கேட்டான். "அது தன் எதிரியின் ஆற்றலை கற்றுக்கொண்டு நிகரானதாக ஆகும் நுட்பம் கொண்டது" என்று விதுரர் சொன்னார்.

"அவ்வாறெனினும்கூட அவர்கள் ஒருமுறைகூட பொருதவில்லையே? அவர் அதை கொஞ்சி வருடி உவகைகொண்டபடி அல்லவா இருந்தார்?" என்று சகதேவன் கேட்டான். புன்னகையுடன் எழுந்துகொண்டு "நான் மூத்தவரை

சந்திக்கிறேன்" என்று விதுரர் சொன்னார். சஞ்சயன் "அவர் பலமுறை நீங்கள் வந்துவிட்டீர்களா என்று கேட்டார். நேற்றே நீங்கள் வந்துவிட்டதை சொன்னேன். அழைத்து வரவா என்று கேட்டேன். வேண்டாம், அவனே வரட்டும் என்றார்" என்றான். விதுரர் "அவர் இன்று காலை எப்படி இருக்கிறார்?" என்றார். "நேற்று நிகழ்ந்தவற்றுக்குப் பின் அவர் சோர்வுற்றிருப்பார் என்றே எண்ணினேன். அவ்வண்ணமே இருக்கிறார். காலையில் எழுந்து அவரோ அரசியோ ஒரு சொல்கூட பேசிக்கொள்ளவில்லை" என்றான் சஞ்சயன்.

விதுரர் நடக்க சகதேவன் அவருக்குப் பின்னால் சென்றான். "இந்நாட்களில் நீ விந்தையான எதையாவது பார்த்தாயா அவரிடம்?" என்றார் விதுரர். "விந்தையா? இங்கே நிகழ்வன அனைத்துமே விந்தைதானே?" என்றான் சஞ்சயன். "நீ எண்ணாதது, முன்னர் நீ காணாதது" என விதுரர் மீண்டும் கேட்டார். "பல உள்ளன. எதை சொல்வேன்?" என்றான் சஞ்சயன். பின்னர் "இன்று காலை ஒரு புதிய பேச்சு எழுந்தது" என்றான். "சொல்க!" என விதுரர் சொன்னார்.

"இன்று காலை அவர் மறைந்த அரசியின் பெயரை சொன்னார்" என்றான் சஞ்சயன். "யார்?" என்றார் விதுரர். "இளைய அரசி சம்படையின் பெயரை சொன்னார்" என்றான் சஞ்சயன். "அவர் மறந்தும் ஒருமுறைகூட அப்பெயரை சொன்னதில்லை." விதுரர் "அவர் என்ன சொன்னார்?" என்றார். "சம்படை என்றும் மட்டும் சொன்னார். தலைகுனிந்து அமர்ந்திருந்தார். தனக்குள் என ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார். அச்சொல் என்ன என நான் விழிகளால் அறிந்தேன். இளைய அரசி சம்படையின் பெயர்" என்றான் சஞ்சயன்.

விதுரர் அவனை புரியாதவர்போல சில கணங்கள் நோக்கி நின்றார். பின்னர் நடந்தார். சகதேவன் "அரசி சம்படைக்கு இங்கே நீர்க்கடன்கள் தேவை இல்லை அல்லவா? அவருக்குரிய அனைத்தும் பல்லாண்டுகளாக செய்யப்படுகின்றன" என்றான். விதுரர் ஒன்றும் சொல்லவில்லை. "அரசி விண்புகுந்திருப்பார்" என்றான் சகதேவன். விதுரர் தனக்குள் என "சிலர் விண்புகுவதே இல்லை" என்றார்.

நீர்ச்சுடர் - 43

பகுதி ஆறு : விழிக்குமிழிகள் – 4

சங்குலன் திருதராஷ்டிரரின் அறையிலிருந்து வெளிவந்து, விதுரரை பார்த்ததும் நின்றான். அவர் அருகணைந்ததும் அவன் முகம் விரிந்து புன்னகையாகியது. தலைவணங்கி விலகி நின்றான். விதுரர் அவனருகே சென்று அவனுடைய தோளில் கை வைத்து புன்னகையுடன் "மெலிந்துவிட்டாய்" என்றார். அவன் நாணத்துடன் சிரித்து தலைகுனிந்து "போர் நாட்களில் மலையில் இருந்தேன். போதிய உணவில்லை" என்றான். அவர் அவன் தோளில் கைவிரல்களைச் சுருட்டி இருமுறை குத்திய பின் "அங்கும் வேட்டையாடி உண்டிருப்பாயே" என்றார். அவன் சிரித்தபோது சிறுவனாக மாறிவிட்டிருந்தான். அவர் அவன் உடலின் நெஞ்சக்கூட்டுக்குள்ளேயே அடங்கும் உடல்கொண்டிருந்தார். ஆனால் உணர்ச்சிகள் உடலசைவுகள் வழியாக அவர் பேருருக்கொண்டு தந்தையாக அவன் சிறுமகவாக மாறிவிட்டிருந்தான்.

“இருக்கிறாரா?” என்று விதுரர் கேட்டார். “ஆம், எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்” என்று அவன் சொன்னான். “அவர் உடல்நிலை எவ்வண்ணம் உள்ளது?” என்றார் விதுரர். “நலம், காலையில் உள்ளமும் நிகர்நிலையில் உள்ளது” என்று அவன் சொன்னான். விதுரர் தலைகுனிந்து கைகூப்பியபடி குடிலுக்குள் நுழைந்தார். சங்குலனின் முகத்தில் விதுரருக்கு மட்டுமாக எழுந்த அப்புன்னகை அக்கணமே மறைந்து அவன் முகம் சிலையென்று ஆவதை சகதேவன் கண்டான். அவன் சென்று தன் பீடத்தில் அமர்ந்துகொள்ள சகதேவன் திரும்பி தாழ்ந்த குரலில் சஞ்சயனிடம் “உண்மையில் இரும்புப் பாவை என்பது இவன்தான்” என்றான். சஞ்சயன் இதழ் மட்டும் விரிய விழிகளுக்குள் புன்னகைத்தான். சகதேவன் “அவர் தனக்கு நிகராகப் போரிடும்பொருட்டு உருவாக்கிக் கொண்ட பாவை” என மீண்டும் சொன்னான்.

குடிலுக்குள் திருதராஷ்டிரர் மஞ்சத்தில் தலையணைகளை அடுக்கி அதில் சாய்ந்தவராக கால் நீட்டி அமர்ந்திருந்தார். வெண்ணிற மேலாடை தோளிலிருந்து வழிந்து நீண்டு அப்பால் கிடந்தது. கைகளைக் கோத்து மடியில் வைத்து தலையைத் தாழ்த்தி உதடுகளை இறுக்கி காலடியோசைகளை கேட்டுக்கொண்டிருந்தார். சற்று அப்பால் தாழ்ந்த பீடத்தில் காந்தாரி அமர்ந்திருந்தாள். பக்கத்து அறையிலிருந்து சத்யசேனை கதவுப் படலை திறந்து எட்டிப்பார்த்தாள். விதுரரின் காலடி ஓசைக்கு ஏற்ப உடலில் மெய்ப்பு அலைகளைக் கொண்டபடி விழிக்குமிழ்கள் உருள திருதராஷ்டிரர் முனகினார். அவருடைய பெரிய கரிய உடலில் மயிர்ப்புள்ளிகள் தோன்றி அமைவதை தொலைவிலிருந்தே சகதேவன் கண்டான்.

சஞ்சயன் அருகணைந்து "அமைச்சர் விதுரர் தங்களைக் காணும்பொருட்டு வந்திருக்கிறார், பேரரசே" என்றான். திருதராஷ்டிரர் ஒன்றும் கூறவில்லை. விதுரர் அருகணைந்து அவர் கால்களைத் தொட்டு வணங்கினார். திருதராஷ்டிரர் கைநீட்டி அவரை வாழ்த்தவில்லை. யானைமூச்சென பெருமூச்சு மட்டும் எழுந்தது. விதுரர் அவர் வாழ்த்தை எதிர்பார்க்காமல் எழுந்து சென்று காந்தாரியின் கால்களைத் தொட்டு வணங்கினார். காந்தாரி தன் வலக்கையை அவர் தலையில் வைத்து "சிறப்புறுக! நிறைவுறுக!" என்று வாழ்த்தினாள். சிற்றறையில் இருந்து வந்து நின்றிருந்த இளைய அரசியரை அணுகி மூப்பு முறையில் அவர்களை கால்தொட்டு வணங்கினார் விதுரர். அவர்கள் காந்தாரியைப் போலவே அவரை வாழ்த்தினர். சத்யசேனை மெல்ல விசும்பினாள். காந்தாரி திரும்பி கட்டப்பட்ட கண்களால் அவளை நோக்க சத்யவிரதையும் விசும்பி பின் தன் வாயை கைகளால் அழுத்திக்கொண்டாள். அரசியர் அனைவருமே விழிநீர் வடித்துக்கொண்டிருந்தனர்.

விதுரர் கைகளைக் கட்டியபடி திருதராஷ்டிரர் முன் நின்று "இன்று முழுக்க பணிகள் உள்ளன, மூத்தவரே. நீர்க்கடனை முறைப்படி ஆற்றி நிறைவு செய்யவேண்டிய பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இங்கு அமைச்சர்கள் பலர் வந்துவிட்டனர். அவர்களில் பலர் இளையோர். அவர்களுக்கு கற்றுத்தர வேண்டியிருக்கிறது" என்றார். "பிறர் எங்கே?" என்றார் திருதராஷ்டிரர். "ஓர் அரசர் நீங்கினால் அவருடைய அமைச்சர்கள் பணிநீங்குவது மரபு. பெரும்பாலும் அனைவருமே கானேகிவிட்டார்கள்." திருதராஷ்டிரர் "ஆம், அறிந்தேன்" என்றார். அவர் ஏதோ எண்ணிக்கொண்டிருக்க முகம் ஒருகணம் கடும்

சினம் கொண்டதுபோல், பின்னர் துயிலில் ஆழ்ந்ததுபோல், பின்னர் அழுகையில் இழுபட்டதுபோல் தோன்றியது.

விதுரர் "தங்களிடம் வாழ்த்துச்சொல் பெற்று திரும்ப வேண்டும் என்று எண்ணினேன். நேற்றே வந்துவிட்டேன். தாங்கள் துயின்றிருப்பீர்கள் என்று கூறினார்கள்" என்றார். "துயிலா?" என அவர் புன்னகைத்தார். "அல்லது ஒருவேளை இப்போதும்கூட துயின்றுகொண்டிருக்கிறேன் போலும்" என்று தனக்குத்தானே என கூறினார். கைகளை வீசி "எல்லாம் கனவு" என்றார். விதுரர் மறுமொழி ஏதும் கூறவில்லை. திருதராஷ்டிரர் எண்ணியிராத கணம் வெடித்தெழுந்து உரத்த குரலில் "செல்க! செல்க! உன்னை இங்கு யார் அழைத்தார்கள்? இங்கு எதைப் பார்க்க வந்தாய்?" என்றார். விதுரர் கைகள் கூப்புவதுபோல் நெஞ்சில் படிந்திருக்க நின்றார். "செல்க! நிற்காதே, செல்க!" என்று திருதராஷ்டிரர் மீண்டும் கூச்சலிட்டார். விதுரர் "திரும்பிவர எண்ணவில்லை. வராமலிருக்க இயலவில்லை" என்றார். "ஆம்" என்றார் திருதராஷ்டிரர். தொண்டை அடைப்பதுபோல கனைத்துக்கொண்டே இருந்தார். பலமுறை கனைத்த பிறகு சற்றே அமைதியடைந்தார்.

"நீ கிளம்பும்போது உண்மையில் ஓர் அகநிறைவை அடைந்திருந்தேன். எனக்குத் தெரிந்திருந்தது, இவையனைத்தும் இவ்வண்ணமே நிகழும் என்று. அதை அறியாத தந்தையர் இங்கு எவருமில்லை. ஆகவே அதற்குமுன் நீ கிளம்பியது நன்றென்றே எண்ணினேன்" என்றார். "ஆம், நான் கிளம்பியது மீளாமல் சென்று மறையும்பொருட்டே. ஆனால் நான் வந்தாகவேண்டும், உங்களிடம் இருந்தாகவேண்டும்" என்றார் விதுரர். "என்னுடனா?" என்று திருதராஷ்டிரர் தலை திருப்பினார். "எனக்காகவா திரும்பி வந்தாய்?" விதுரர் "ஆம்

மூத்தவரே, உங்களால்தான். அந்தப் பற்றினால்தான் நான் எங்கும் செல்ல முடியாமல் ஆகியது" என்றார். "இல்லையெனில் எங்கு சென்றிருப்பாய்?" என்று திருதராஷ்டிரர் கேட்டார். "தொலைவு, நெடுந்தொலைவு" என்றார் விதுரர். "எங்கு என்று எனக்குத் தெரியாது. ஆனால் நெடுந்தொலைவாக அன்றே சென்றிருக்கக்கூடும்."

திருதராஷ்டிரர் இரு கைகளையும் கோத்துக்கொண்டார். தலையை குனிந்து சில கணங்கள் அமர்ந்திருந்த பின் "சொல்க, நீ எதை அடைந்தாய்?" என்றார். விதுரர் ஒன்றும் சொல்லவில்லை. "இளையோனே, நீ செய்த ஊழ்கம் என்ன?" என்றார் திருதராஷ்டிரர். விதுரர் புன்னகைத்து "அகன்றிருப்பதனால் பரப்பு மட்டுமே குறைகிறது என அறிந்தேன். பரப்பு குறைகையில் கூர்மை மிகுகிறது" என்றார். திருதராஷ்டிரர் அதை புரிந்துகொள்ளாமல் தலையை அசைத்தார். பின்னர் "அஸ்தினபுரியின் அந்த கைவிடுபடைகள் அனைத்தும் பொறிகளிலிருந்து எழுந்துவிட்டன, அறிவாயா?" என்றார். விதுரர் திடுக்கிடுவதை சகதேவன் கண்டான். அவர்களுக்குள் என்ன அறியாச் சொல் பரிமாறப்பட்டது என வியந்தான். "நீ சென்று அந்தக் கைவிடுபடைகளை பார்க்கலாம். நாணும் வில்லும் தளர்ந்து அவை அந்த மேடைகளில் அமைந்திருப்பதை நான் எண்ணிக்கொண்டேன்" என்றார் திருதராஷ்டிரர். விதுரர் பெருமூச்சுவிட்டார். "நன்று, நீ அஸ்தினபுரிக்குச் செல்லாதொழிவதே உகந்தது" என்றார்.

விதுரர் மீண்டும் பெருமூச்செறிந்தார். "அவை நெடுங்காலமாக நின்றிருந்தன" என்ற திருதராஷ்டிரர் "அந்தக் கைவிடுபடைகளால் கொல்லப்பட்டவர்கள் எவர் என்று நான் எண்ணிக்கொள்வதுண்டு. அவர்களின் முப்பாட்டன்களின்

காலத்தில் அவை அமைக்கப்பட்டிருக்கக் கூடும்...” என்றார். அவர் புன்னகைத்து தலையைச் சுழற்றி “அவற்றை அமைத்தவர்களின் கொடிவழியினர்தான் கொல்லப்பட்டார்கள் என்று எண்ணிக்கொண்டேன். பொருளில்லாத கீழ்மைதான். ஆனால் அப்படி எண்ணவே தோன்றியது” என்றார். விதுரரிடமிருந்து ஆழ்ந்த மூச்சொலி வெளிப்பட்டது. திருதராஷ்டிரர் “சரி விடு. அதைப்பற்றி நாம் எண்ணவேண்டியதில்லை. அதை நான் உன்னிடம் சொல்லியிருக்கக் கூடாது” என்றார். விதுரர் “ஆம்” என்றார்.

திருதராஷ்டிரர் தன் கைகளை நீட்டி துழாவ விதுரர் முழந்தாளிட்டு அமர்ந்து தன் தலையை அங்கு வைத்தார். தலைமேல் திருதராஷ்டிரரின் பெரிய கைகள் அமைந்தன. குழலை வருடி கழுத்தை வளைத்து இழுத்து தன் மடிமேல் அமைத்துக்கொண்டு “நீ வந்திருக்க வேண்டியதில்லை. மீண்டு இங்கே வந்திராவிடில் இவ்வளவு பெரிய இழப்பையும் துயரையும் நீ அறிந்தே இருக்கமாட்டாய்” என்றார். “ஆனால் நான் வந்தாகவேண்டும்” என்று விதுரர் சற்றே உடைந்த குரலில் சொன்னார். “இதுவரை நான் ஒருகணம்கூட அகன்றதில்லை. உடனிருந்திருக்கிறேன். உடலாலும் உள்ளத்தாலும்” என்றார். அவரை தோள் சுழற்றித் தூக்கி தன் நெஞ்சோடணைத்தபடி திருதராஷ்டிரர் விழிநீர் வழிய உடல் குலுங்க அழத்தொடங்கினார்.

சகதேவன் எழுந்து வந்த நீள்மூச்சை அடக்கி பின்னடைந்து குடிலிலிருந்து வெளியே செல்லலாம் என்று முயன்றான். ஓரடி பின்னெடுத்து வைத்தபோது அங்கிருந்து செல்ல முடியாதென்று உணர்ந்து அங்கேயே நின்றான். அவ்வுணர்ச்சிகளுக்கு அப்பால் நிற்பவன்போல் சஞ்சயன் தோன்றினான். காந்தாரியின்

கண்களில் கட்டப்பட்டிருந்த இளநீலத் துணி நனைந்து விழிநீர் வழிந்தது. திருதராஷ்டிரர் ஓசையின்றி அழுதுகொண்டிருந்தார். மழைக்காலத்தில் மண்ணும் விண்ணும் குளிர்ந்த பின் எழும் மழைபோல ஓசையே இல்லாமல். அலைவின்றி, எழுவதோ வீழ்வதோ நிகழாமல், பளிங்குத் திரையென அசையாது நின்றுகொண்டிருக்கும் மழை. நிரைமழை எனப்படும் அதில் விண்ணும் மண்ணும் ஒன்றாகி தங்களை முற்றுமாக மறந்துவிடுகின்றன. அத்தனை நீண்ட பொழுது ஒருகணமும் குறையாது ஒரு அழுகை நிகழமுடியுமென்பதை சகதேவன் உணர்ந்ததில்லை. விதுரரும் அவ்வழுகையில் மூழ்கி முற்றழிந்து பிறிதெங்கோ இருந்தார்.

பின்னர் அவனுக்கு விந்தையானதோர் எண்ணம் ஏற்பட்டது. திருதராஷ்டிரரும் விதுரரும் மட்டுமே ஒரு கண்காணா வட்டத்திற்குள் சென்றுவிட்டதாக. அதற்கு வெளியேதான் அவனையும் சஞ்சயனையும்போல காந்தாரியும் நின்றிருப்பதாக. பின்னர் திருதராஷ்டிரர் மெல்ல தணிந்தார். இரு கைகளாலும் கன்னங்களைத் துடைத்தபடி "நீ இங்கு வந்திருக்கவேண்டியதில்லை. இங்கு வந்து இத்துயரனைத்தையும் நீ அடையவேண்டியதுமில்லை" என்றார். "நான் துயரடைவதில் ஓர் அறம் இருக்கிறது. எங்கெங்கோ தருக்கியிருந்தேன். வஞ்சங்களையும் கீழ்மைகளையும் என் அகத்தில் சேர்த்துக்கொண்டிருந்தேன். என் பொருட்டு நீ இத்துயர் அனைத்தையும் அடைவதில் எப்பொருளுமில்லை." விதுரர் "என்றும் தங்கள் பொருட்டே துயருறுகிறேன், மூத்தவரே" என்றார்.

திருதராஷ்டிரர் தலையைத் தாழ்த்தி இரு கைகளிலும் நெற்றியைத் தாங்கி அமர்ந்து உடலை இறுக்கிக்கொண்டார்.

தலையின் எடையை தாளாதவர்போல் மேலும் தழைந்தார். மெல்லிய குரலில் "நீ இளையோனைப் பார்த்தாயா?" என்றார். விதுரர் "ஆம்" என்றார். அவர்கள் இருவரும் சில கணங்கள் சொல்லின்மையில் அமர்ந்திருந்தனர். திருதராஷ்டிரர் "நான் அவனை பார்த்தேன்" என்றார். விதுரர் "ஆம்" என்றார். "நேற்றிரவு... நேற்றிரவு அவன் என்னை..." என்றபின் தலைதூக்கி "சஞ்சயா!" என்றார். "பேரரசே!" என்றான் சஞ்சயன். "எங்கே அந்தப் பாவை?" என்று அவர் கேட்டார். "அதை சங்குலன் அறிவான்" என்று சஞ்சயன் சொன்னான். "அதை கொண்டுவருக! எங்கிருந்தாலும் அது இங்கு வந்தாகவேண்டும்" என்று திருதராஷ்டிரர் சொன்னார். "பேரரசே, அது நேற்று..." என்று சஞ்சயன் சொல்லத்தொடங்க "அதை கொண்டுவருக!" என்றார். சஞ்சயன் தலைவணங்கி அறையைவிட்டு வெளியே சென்றான்.

திருதராஷ்டிரர் விதுரரின் கைகளை பற்றிக்கொண்டு "நேற்றிரவு... நேற்றிரவு நான் அவனை பார்த்தேன்" என்றார். விதுரர் ஒன்றும் கூறவில்லை. திருதராஷ்டிரர் "தெய்வங்களே!" என்று முனகியபடி நிமிர்ந்து கைகளை பின்னால் ஊன்றி மஞ்சத்தில் சாய்ந்தமர்ந்தார். தலையை மேல் நோக்கி தூக்கி விழியற்ற குருதிக்குழிகள் துள்ள "தெய்வங்களே! மூதாதையரே!" என்றார். விதுரர் "தாங்கள் சற்று ஓய்வெடுக்கலாம்" என்றார். "இல்லை! ஓய்வு? ஓய்வென ஒன்று எனக்குண்டா? இனி என் உள்ளம் அமையும் தருணம் அமையுமா?" என்றார் திருதராஷ்டிரர். விதுரர் ஒன்றும் கூறவில்லை. "இளையோனே, சொல்! என் நெஞ்சு ஆறுமா? துயர் மீண்டு ஒருநாளேனும் இனி நான் உயிருடன் இருப்பேனா?" என்றார். விதுரர் அதற்கும் மறுமொழி கூறவில்லை.

திருதராஷ்டிரர் தன் இரு கைகளையும் ஓங்கி அறைந்து வெடிப்போசை எழுப்பியபடி எழுந்தார். விதுரருக்கு மேல் பெருமரமென ஓங்கி நின்றார். தன் பெரிய கைகளை அவர் தோளில் ஊன்றியபடி குனிந்து "சொல்! ஒருகணமேனும் இனி எனக்கு இயல்பு வாழ்க்கை உண்டா? இருத்தலில் இன்பத்தை இனி எப்போதேனும் நான் அறிவேனா?" என்றார். விதுரர் "மெய் சொல்வதென்றால், இல்லை" என்றார். "சிறிய இடைவேளைகளில் உளமயக்கென வந்து செல்லும் இனிமைகள் இருக்கலாம். அவை துயரை பெருக்கிக்கொள்ளும்பொருட்டு எழுபவை மட்டுமே. ஒருபோதும் இனி நிறைவும் இன்பமும் இல்லை" என்றார். திருதராஷ்டிரரின் கைகள் அவர் தோளிலிருந்து விலகின. அவை உரசும் ஒலியுடன் இரு பக்கமும் தழைந்தன. பின்னர் அவர் பின்னடைந்து மீண்டும் மஞ்சத்தில் அமர்ந்தார். அவர் எடையில் மஞ்சம் முனகலோசை எழுப்பி அசைந்தது.

"அந்தச் சிறிய உவகை கூரியது. நம்பிக்கை அளிப்பது. சற்றுநேரம் அன்னை என தூக்கி இடையில் வைத்துக்கொள்வது. அதன் உச்சியை விரைவில் சென்றுசேர்ந்துவிட முடியும்" என்றார் விதுரர். "ஆனால் அது உடனே குற்றவுணர்ச்சியை உருவாக்கும். மேலும் துயரத்தை இழுத்துக்கொண்டுவரும். திமிறித் தவிக்காமல் துயரை அடையும்பொருட்டு உள்ளம் அதை உருவாக்குகிறது." திருதராஷ்டிரர் உறுமலோசைபோல் முனகினார். "ஏனென்றால் துயரிலேயே உங்கள் இருத்தல் பொருள்கொள்கிறது. துயரின்மையில் நீங்கள் நின்றிருக்க நிலமே இல்லை" என விதுரர் தொடர்ந்தார். "இந்த ஊசலில் இருந்து இனி ஒருகணமும் வெளியேற இயலாது." பெருமூச்சுடன் "ஆம்!" என்று திருதராஷ்டிரர் கூறினார். அவர்கள் அமைதிக்கு

திரும்பினர். இளைய அரசியர் விழிநீர் வடித்தபடி மேலும் பின்னடைந்து சுவருடன் ஒட்டிக்கொண்டனர்.

திருதராஷ்டிரர் "இளையோனே, மானுடர் அனைவரும் காலத்தில் ஒழுகிக்கொண்டிருப்பதாக சொல்கிறார்களே? ஆகவே இங்குள்ள எதையும் நம்மால் உறுதியாக பற்றிக்கொள்ள முடியாதென்றும் இங்குள்ள எதுவும் நிலையாக நம்முடன் இருக்கப்போவதில்லை என்றும் சொல்லப்பட்டுள்ளதே" என்றார். "ஒவ்வொன்றும் அகன்று செல்லும் இந்த வெளியில் நான் மட்டும் இங்கே இவ்வுணர்வு வெளியில் அசையாமல் நின்றிருப்பேனா என்ன?" விதுரர் "ஆம், மூழ்கியவை இடம்பெயர்வதில்லை" என்றார் விதுரர். "இனி உங்களுக்கு காலம் என்பதும் இல்லை. இங்கு இவ்வண்ணமே இனி எப்போதும் இருப்பீர்கள்." திருதராஷ்டிரர் "எப்போதும் என்றால்?" என்று கேட்டார். "நெடுநாட்களா? இன்னும் எத்தனை நாட்கள்?" விதுரர் "அதை நான் எவ்வண்ணம் சொல்லமுடியும்?" என்றார்.

திருதராஷ்டிரர் திரும்பி சகதேவனை பார்த்தார். "இங்கு சகதேவன் இருக்கிறான். அவன் சொல்லட்டும்" என்றார். "இல்லை, நான்..." என்றபடி சகதேவன் அறையை விட்டு வெளியே சென்றான். திருதராஷ்டிரர் உரக்க "மைந்தா, அருகே வா" என்றார். "வேண்டாம், தந்தையே" என்று சகதேவன் சொன்னான். "இது என் ஆணை! அருகே வா!" என்று சொன்னார் திருதராஷ்டிரர். சகதேவன் தயங்கிய காலடி எடுத்து அவர் அருகே வந்தான். அவர் தன் கைகளை நீட்ட மேலும் அருகே சென்று அவர் காலடி தொட்டு வணங்கினான். அவர் தன் பெரிய கையை அவன் தலையில் வைத்து, பின்னர் தோள்களை வளைத்து தன் உடலோடு சேர்த்துக்கொண்டார்.

அவர் உடலிலிருந்து எழுந்த உப்புமணம் அவனுக்கு எப்போதுமே உளநிறைவை அளிப்பது. சிறு மைந்தன் என்றாகி அவர் உடலுடன் ஒட்டிக்கொள்வதுபோல் அமர்ந்தான். அவர் கைகள் அவன் தலைமயிரை, செவிகளை, தோள்களை, நெஞ்சைத் தொட்டு வருடி அலைந்தன. தொண்டையை கனைத்துக்கொண்டு "மைந்தா, கூறுக! இத்துயர் இன்னும் எத்தனை நாள்? நான் இருக்கப்போவது எத்தனை காலம்?" என்றார். "அதை நான் எவ்வண்ணம் கணிப்பேன்?" என்றான் சகதேவன். "கூறுக, உன்னால் கணிக்க முடியும்! எனது நாளும் விண்மீனும் உனக்குத் தெரியும். இங்கேயே களம் வரைந்து கணித்து சொல்க!" என்றார் திருதராஷ்டிரர். சகதேவன் விதுரரை பார்க்க அவர் "கணித்துக் கூறுக! இத்தருணத்தில் அது ஒன்றே மூத்தவருக்கு ஆறுதலை அளிப்பது" என்றார்.

சகதேவன் சூழ நோக்கி அப்பாலிருந்த சிறு குச்சியொன்றை எடுத்துக்கொண்டு வந்தான். குடிலுக்குள் தரையில் செம்மண் கருங்கல்லால் அறைந்து இறுக்கப்பட்டிருந்தது. அவன் அதில் அக்குச்சியால் கீறி பன்னிரு களத்தை வரைந்தான். அதற்குள் ராசிகளுக்குரிய எண்களையும் குறிகளையும் எழுதினான். கண்மூடி ஊழ்கத்தில் அமர்ந்து மெல்ல ஒவ்வொரு ராசியிலும் சுட்டுவிரல் தொட்டு எண்ணிச் சென்றான். பின்னர் விழிதிறந்து பதற்றத்துடன் எழுந்து "நான் அரசியை மறந்துவிட்டேன். பேரரசி, தங்கள் ஆணையின்றி இதை செய்யக்கூடாது. தாங்களும் அவருடன் பிணைந்தவர் என்பதை அறிந்திருப்பீர்கள்" என்றான். "எனது ஆணையும் கூட, நோக்குக! இன்னும் எத்தனை இரவுகளை நான் கடக்கவேண்டும்?" என்றாள் காந்தாரி.

காந்தாரியின் உடன்பிறந்த அரசியர் வந்து அவளுக்குப் பின்னால் நின்றனர். அவர்கள் அனைவர் முகங்களும் ஒன்றுபோலிருந்தன. விழிகள் அனைத்தும் சிவந்து தசை தளர்ந்து நோயுற்றிருந்தன. அனைவருமே கைகளை மார்பில் கட்டியிருந்தனர். உதடுகள் சுருங்கி குவிந்து முதுமை கொண்டு நெடுந்தொலைவு சென்றுவிட்டிருந்தனர். சகதேவன் மீண்டும் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டு ராசிகள் ஒவ்வொன்றாக கையைத் தொட்டு நகர்த்திகொண்டு சென்று பின் விழி திறந்தான். அவன் நோக்கில் அவர்கள் மிக அகன்று வெறும் விழிகளெனத் தெரிந்தனர். "இன்னும் ஓராண்டு" என்று சகதேவன் சொன்னான். "எப்போது?" என்று மீண்டும் கேட்டார் திருதராஷ்டிரர். "ஆண்டு நீர்க்கடன் முடிந்தபின் சில நாட்களில்" என்றான். "எங்கு?" என்று அவர் மீண்டும் கேட்டார். "வடகிழக்கே ஒரு காட்டில். அதை நான் கண்டேன்" என்றான்.

திருதராஷ்டிரர் பெருமூச்சுவிட்டார். "எவ்வண்ணம்? நோயுற்றா?" என்று கேட்டார். "அனல்" என்று சகதேவன் சொன்னான். அவர் புன்னகைத்து "நன்று, அனல் நன்று!" என்றார். "இளையோனே, அனலைப்போல் என்னை அறிந்த பிறிதொன்று உண்டா?" என்று விதுரரிடம் கேட்டார். விதுரர் "ஆம், மூத்தவரே. அனல் நன்று" என்றார். திருதராஷ்டிரர் சிரித்தபடி திரும்பி காந்தாரியிடம் "அனல்! பெரும்பாலும் அது காட்டெரி" என்றார். சகதேவன் காந்தாரியின் முகம் மலர்வதை பார்த்தான். அவளுக்குப் பின்னால் நின்றிருந்த இளைய அரசியர் அனைவரின் முகங்களும் மலர்ந்தன. அவர்கள் அடையும் உணர்வென்ன என்று அவனால் உணரமுடியவில்லை. அனைத்திலிருந்தும் விடுதலை பெற்றவர்கள்போல், இழந்த அனைத்தையும் மீளப் பெற்றவர்கள்போல் அவர்கள் உவகை கொண்டனர். ஒருவரை ஒருவர் கைகளை பற்றிக்கொண்டனர்.

காந்தாரி “ஓர் ஆண்டு எனில் பன்னிரு மாதங்கள். நானூறு நாட்கள்கூட இல்லை” என்றாள். “ஓராண்டெனில் எவ்வாறு நானூறு நாட்களாகும்? நானூறுக்கு குறைவாகவே நாட்கள்... இல்லையா, மைந்தா?” என்று திருதராஷ்டிரர் கேட்டார். “ஆம், நானூறு நாட்கள் இல்லை. குறைவாகவே” என்று சகதேவன் சொன்னான். “நன்று, மைந்தா. இந்நீண்டநாட்களில் என் செவியில் விழுந்த இன்சொல் இது. நீடுவாழ்க!” என்று திருதராஷ்டிரர் அவன் தலைமேல் கைவைத்து மீண்டும் வாழ்த்தினார். விதுரர் “அவ்வண்ணமே ஆகுக, மூத்தவரே!” என்றார். பின்னர் மீண்டும் தலைவணங்கி “நாங்கள் விடைகொள்கிறோம். எங்கள் பணிகள் மிகுந்துள்ளன” என்றார்.

“இளையோனே, இங்கு நீர்க்கடன் முடிந்த பின்னர் நீ கிளம்பலாம்” என்று திருதராஷ்டிரர் சொன்னார். “ஆம், அவ்வண்ணம்தான் நான் எண்ணியிருக்கிறேன்” என்று விதுரர் கூறினார். “கிளம்புகையில் இதை எண்ணிக்கொள். என்னை முற்றிலும் கைவிட்டுச் செல்லும் உரிமையை நான் உனக்கு அளிக்கிறேன். என்னை மறந்துவிடுவதே நீ இனி செய்ய வேண்டியது” என்றார். விதுரர் “ஆம், அது ஒன்றே எஞ்சியுள்ளது” என்றார். பெருமூச்சுடன் “ஆனால் என்னால் அது இயலுமா என அறியேன்” என்றார். திருதராஷ்டிரர் உரக்க “மறந்துவிடுக, இங்கு நாம் இருவரும் சந்திப்பது இன்றே இறுதியாகட்டும்!” என்றார். “நாளை நீர்க்கடனின்போது நீ என் அருகில் இருக்கலாகாது. இந்நீர்க்கடன்கள் எதையும் நீ இயற்ற வேண்டாம். இவ்வனைத்திலிருந்தும் நீ விடுதலைகொள்க!” என்றார். விதுரர் உதடுகளை இறுக்கிக்கொண்டார்.

“இப்புவியில் உடன்பிறந்தார் என்று நாம் வாழ்ந்தது இன்றுடன் நிறைவுறுகிறது. என்றும் எனக்கினியவனாக இருந்தாய்.

ஒருகணமும் ஒரு செயலாலும் எனக்கு நீ உவப்பற்றவனாக ஆகவில்லை. மூத்தவன் என்று அமர்ந்து உன்னை வாழ்த்துகிறேன். இனி இது ஒன்றே உனக்கு நான் அளிக்கக்கூடியது" என்றார் திருதராஷ்டிரர். விதுரர் அவர் கால்களைத் தொட்டு வணங்க அவர் விதுரரின் தலைமேல் கைவைத்து "உளம் அமைக! மெய்மையின் ஒளி உன்னை தொடுக! விண்புகுந்து நிறைவுறுக!" என்றார். விதுரர் குனிந்து காந்தாரியின் கால்களைத் தொட்டு மீண்டும் வணங்க அவள் "அவ்வண்ணமே ஆகுக!" என்றாள்.

கைகளைக் கூப்பியபடி பின்னடி எடுத்து வைத்து விதுரர் விலகிச்சென்றார். சகதேவன் அவரைத் தொடர்ந்து வெளியே சென்றான். வாயிலுக்கு வெளியே சங்குலன் அந்த இரும்புப் பாவையுடன் வருவதை அவன் கண்டான். அது அவனுக்கு இணையாகவே நடந்து வந்தது. அதன் விழிகள் ஒளிகொண்டிருந்தன. புன்னகைத்துக் கொண்டிருப்பது போலிருந்தது அதன் முகம்.

நீர்ச்சுடர் - 44

பகுதி ஆறு : விழிக்குமிழிகள் – 5

விதுரருடன் நடந்தபோது சகதேவன் தன் உள்ளம் ஒழிந்து கிடப்பதை உணர்ந்தான். ஒரு நினைவு கூட இன்றி, அடுத்த கணம் குறித்த ஒரு துளி எண்ணம் கூட இன்றி, வெறுமனே மின்னிக்கொண்டிருந்த இலைப்பரப்புகளையும், மரக்கூட்டங்களையும், ஒளி எழத் தொடங்கியிருந்த வானையும், எழுநிழல்களின் மேல் அமர்ந்திருந்த கூழாங்கற்களையும்,

பல்லாயிரம் பாதச்சுவடுகளாக விரிந்திருந்த செம்மண் நிலத்தையும் பார்த்துக்கொண்டு நடந்தான். அன்று காலை எழுந்த பின்னர் அத்தனை நிகழ்வுகள் ஒன்றன்மேல் ஒன்றென விழுந்து உள்ளத்தை அழுத்தி நிறைத்த பின்னரும் அவ்வெறுமை எழுந்தது வியப்புக்குரியது என்று தோன்றியது.

ஒன்று பிறிதொன்றை நிகர் செய்து இன்மையென்று ஆகிவிட்டதா என்று எண்ணினான். எண்ணங்களினூடாக பின்னால் சென்று காலை எழுந்தது முதல் நிகழ்ந்தவற்றை திரட்டிக்கொள்ள முயன்றான். நிகழ்ந்தவை அனைத்தும் ஒற்றைப் பெரும்பரப்பென கலந்துவிட்டிருந்தன. அவற்றின் முடிவிலாச் சுழியிலிருந்து எந்த ஒரு நிகழ்வையும் பிரித்தெடுக்க இயலாதென்று தோன்றியது. விதுரர் கைகளை பின்னுக்குக் கட்டி தலைகுனிந்து நடந்தார். அவருடைய நிழல் நீண்டு அவன் முன்னால் விழுந்தது. அதை மிதிக்கலாகாதென்று விலகி அவன் மறுபக்கத்தை அடைந்தான். அவ்வசைவை உணர்ந்து அவர் திரும்பிப்பார்த்து பின்னர் விழிகளை திருப்பிக்கொண்டார்.

அந்நோக்கில் ஏதோ ஒன்று தட்டுப்பட அவன் உள்ளம் விழித்தெழுந்தது. அதுவரை இருந்த இன்மை அகன்றதும் அதுவே ஊக்கத்தை அளிக்க அந்நோக்கில் இருந்ததென்ன என்று அவன் கூர்ந்தறிய முயன்றான். விதுரர் தோள்களைக் குறுக்கி நடந்ததும் யுதிஷ்டிரனின் சாயல் ஒன்று எழுந்தது. சிற்றடிகள், விசை கொண்ட உடலசைவுகள். அவர் தன்னை நோக்கியபோது எதையோ வினவ சொல்லெழுந்து அக்கணமே அடங்கியதுபோல் தோன்றியது. ஒருவர் ஓர் எண்ணத்தை உள்ளத்தில் அடக்கிக்கொள்ளும்போது அதை உடல் எப்படி தெளிவாக வெளிக்காட்டுகிறது என்பதை எண்ணி அவன்

வியந்தான். விதுரர் அதை கேட்கப்போவதில்லை. எழுந்த ஓர் எண்ணத்தை அடக்குவாரெனில் எக்கணமும் விழித்து அதில் விழிப்புடன் இருக்கிறார் என்று பொருள். எழும் எண்ணத்திற்கு நிகராக பிறிதொரு எண்ணம் ஒருங்கி நின்றிருக்கிறது.

அவர் ஒருபோதும் அதை சொல்லாக்கிக் கொள்ளப்போவதில்லை. அது என்ன என்று அவன் எண்ணி, மேலே மேலே சென்று சலித்து, பின்னர் நின்றான். அக்கணத்தில் விதுரர் இயல்பாக "அன்னை எவ்வண்ணம் இருக்கிறார்?" என்றார். அக்கணமே அனைத்தும் தெளிவாக விரிய, அவன் நடை தளர்ந்தான். அவர் அவன் இரண்டடி பின்னகர்ந்ததை உணராமல் நடந்துகொண்டிருந்தார். விரைவுகொண்ட காலை எடுத்து வைத்து அவன் அருகணைந்து "அன்னை தன்னிலையில் இல்லை. அவ்விழப்பிலிருந்து அவர் மீளவே இல்லை" என்றான். அவர் ஒன்றும் சொல்லவில்லை. அவருடைய நடையின் விசை குறையவுமில்லை.

அவர் எதிர்பார்ப்பதென்ன என்று அவனுக்குத் தெரியவில்லை. "நான் அறிந்த நாளிலிருந்தே அன்னை எப்பொழுதும் ஓர் ஆடலில்தான் இருந்தார். துயில்கையிலும் நாற்களத்தில் கரு நீக்கிக்கொண்டிருப்பார் என்று அவரைப்பற்றி மூத்தவர் கூறினார். அது உண்மை" என்றான். விதுரர் அச்சொற்களை கேட்டதாகவே தெரியவில்லை. அது அவனை சீண்டியது. அவர் நின்று திரும்பி நோக்கி எதையாவது சொல்லவேண்டும் என்று எண்ணினான். அவரிலிருந்து பிறிதொரு சொல்லை பெயர்த்தெடுக்கும் கூர்மை கொண்ட ஒன்று தேவை. அவ்வாறு எண்ணியதுமே அது நினைவில் எழுந்தது. எப்பொழுதும் அத்தகைய படைக்கலங்கள் முன்னரே உள்ளங்களில்

ஒளிந்திருப்பதை அவன் கண்டிருந்தான். தேவையானபோது உரிய பழிச்சொல்லோ இழிசொல்லோ நாவிலெழாத எவரேனும் இப்புவியில் இருக்கமுடியுமா என்ன?

அவன் அவ்வெண்ணத்தை ஒரு நச்சுப்படைக்கலத்தை ஆடைக்குள் கரந்திருப்பதுபோல் உணர்ந்தான். அவனிடமிருந்த வெறுமை அனைத்தும் அகன்றது. உள்ளம் ஆழத்தில் ஒரு மெல்லிய உவகையைக் கொண்டு தத்தளித்தது. "அன்னை கொண்டிருந்த விழிகளை நான் நினைவுகூர்கிறேன். நாங்கள் இளையோராக இருக்கையில் சௌவீரத்தின்மீது படையெடுத்துச் சென்றோம். சௌவீர மணிமுடியுடன் மூத்தவர் திரும்பி வந்தார். அவரை எதிர்கொள்வதற்காக அன்னை கோட்டை முகப்பிற்கு வந்திருந்தார். மூத்தவர் அப்போது என்ன எண்ணினார் என்று அறியேன், மணிமுடியை அன்னையின் காலடியில் வைத்தார். அன்னை பெருமிதத்துடன் சிரிக்க அவர் அதை எடுத்து அன்னையே இந்த மணிமுடியை சூடுக என்று அளித்தார். அன்னை என்ன செய்கிறாய், அறிவிலி, வேண்டாம் என்று கூவினார். பீமசேனன் அன்னையின் கைகளை பற்றிக்கொள்ள அவர் திமிறி கைவிலக்கி அந்த மணிமுடியை தள்ளிவிட முயன்றார். ஆனால் அன்னையின் விழிகள் ஒளிகொண்டிருந்தன" என்றான் சகதேவன். அவரிடம் எந்த அசைவும் வெளிப்படவில்லை. ஆனால் அச்சொற்கள் சென்றடைவதை அவனால் உணர முடிந்தது.

"மூத்தவர் பின்னர் ஒருமுறை அவருடைய உளநிலையை சொன்னார். அன்னை நாணி மறுத்து சிரித்து பின்னடைவார் என்று எதிர்ப்பார்த்தார். அது எனக்கு அப்போதே தெரியும். அறிவிலி வேண்டாம் விலகு என அன்னை சொன்னபோது அவர் உடல் அறியாது எழுந்து முன்னணைந்தது. அதிலொரு

மலர்வு தெரிந்தது. தலையில் அணிந்திருந்த வெண்ணிற ஆடை பின்னால் சரிந்தது. மூத்தவர் அந்த மணிமுடியை அவருக்குச் சூட்டினார். அன்னை அதை தன் தலையில் சூடி இரு கைகளாலும் பற்றிக்கொண்டு விழுந்துவிடப்போகிறது மூடா என்று கூவினார். மெல்லிய பொற்கம்பிகளைக்கொண்டு பின்னி அதில் செங்கழுகின் இறகுகளை சீராகப் பொருத்தி செய்யப்பட்டிருந்த அந்த மணிமுடியை நினைவுகூர்கிறேன். நகர்மக்கள் வெற்றிக்குரல் எழுப்பி மலர்களை அள்ளி அவர்கள் மேல் வீசினர். சூழ்ந்து பொங்கிய உணர்ச்சிப்பெருக்கால் அன்னையும் கொண்டுசெல்லப்பட்டார். இரு கைகளையும் தூக்கி சௌவீர மணிமுடியை நெற்றிமேல் நன்றாக அணிந்து நிமிர்ந்த தலையுடன் அன்னை தேர்த்தட்டின்மீது நின்றார்.”

“நகருலாவின்போது அன்னை அந்த மணிமுடியை அடிக்கடி கையால் சீரமைத்துக்கொண்டே இருந்தார். நான் அருகே சென்றதும் அதை நன்கு பொருத்தி என் தலைக்கு சரியாக பொருந்துகிறது என்றார். அப்போது அவர் முகத்திலிருந்தது சிறுமிக்குரிய கூச்சமும் உவகையும் கொண்ட நகைப்பென்று அன்று தோன்றியது. பின்னர் அவ்வுள ஓவியம் மங்கலாகி கரைந்தழிய அக்கண்கள் மட்டும் அவ்வாறே நினைவில் உள்ளன. அக்கண்களைத்தான் அன்னை எப்போதும் கொண்டிருந்தார். எத்துயரிலும் அவை மணிமுடி சூடிய கண்கள்தான்” என்று சகதேவன் சொன்னான். சொல்லச்சொல்ல அந்நினைவுகளால் அவன் கொண்டுசெல்லப்பட்டான். “அன்று தாங்களும் அங்கிருந்தீர்கள் என அறிவேன். அன்னை மணிமுடி சூடியது அன்று அஸ்தினபுரியில் ஒரு கசப்பை உருவாக்கியது. உண்மையில் இந்த வஞ்சமும் பகைமையும் அன்று உருவானவை என்பார்கள்.”

“அன்று அன்னை எதையோ ஒன்றை வெளிக்காட்டிவிட்டார். அது எப்போதும் அவர் விழிகளில் இருந்தது. அன்றுதான் அவர்கள் அதை ஐயமற உணர்ந்தனர்” என்று சகதேவன் சொன்னான். விதுரரின் நடையில் மாற்றம் எதுவும் வரவில்லை. அவர் முகத்தை முன்னால் சென்று நின்று பார்க்கவேண்டும் என்று அவன் விழைந்தான். ஒருவர் தன் முகத்தை திருப்பிக்கொண்டாலும் அவர் உடல் முகமாக மாறி உணர்வுகளை அதுவே காட்டும். ஆனால் அப்போது உடலும் திரைகொண்டிருந்தது. அவன் “நாங்கள் காடுகளில் அலைந்திருக்கிறோம். வறண்ட பாலையில் உணவும் நீருமின்றி மயங்கியிருக்கிறோம். எத்தனையோ நாட்கள் மறுநாள் என்ன செய்வோம் என்று அறியாது இரவை கழித்திருக்கிறோம். எப்போதும் அன்னை கொண்டிருந்தவை அவ்விழிகளே” என்று தொடர்ந்தான்.

“அந்த அன்னை இன்றில்லை, அமைச்சரே. இங்கு வந்தபின் ஒருமுறை அன்னையை சென்று கண்டேன். அன்னை இப்போதெல்லாம் விழித்திருப்பதே இல்லை. விழிப்பு கொண்டதுமே இடமுணர்ந்து, தன்னிலை கொண்டு எழுந்தமர்ந்து இரு கைகளையும் விரித்து கூச்சலிட்டு அழத் தொடங்கிவிடுகிறார். நெடுநாட்களாக போதிய உணவின்றி இருப்பதனால் உடல் மெலிந்து, தசைகள் வற்றி, கைகால்கள் வலிப்புகொண்டவைபோல் இழுத்துக்கொண்டுள்ளன. விரல்கள் ஒன்றுக்கு மேல் ஒன்று ஏறியிருக்கின்றன. சொற்களில் பொருளும் இசைவும் அகன்றுவிட்டன. வெற்றொலியாக கூச்சலிட்டு உதடுகளை பற்களால் இறுகக்கடித்து குருதி வார விழுந்து மீண்டும் வலிப்புகொள்கிறார். உடனே மீண்டும் அகிபீனா அளிக்கப்படுகிறது. நான் குடில் வாயிலில் நின்று அன்னை அகிபீனாவை அருந்துவதை ஒருமுறை கண்டேன்.

கரைவந்த மீனின் தவிப்பு அவர் உடலில் இருந்தது. மூச்சுக்குத் துள்ளும் மீனென அவர் வாய் திறந்து மூடியது. அவ்விழிகள் நானறிந்த அன்னையுடையவை அல்ல. அவை இறந்த உடலில் உறைந்தவை எனத் தெரிந்தன."

விதுரர் நின்று திரும்பி நோக்கி அவனிடம் ஏதோ சொல்ல நாவெடுத்தார். அவன் அவர் விழிகளை நோக்கி "தாங்கள் விழைந்தால் அன்னையை பார்க்கலாம், அமைச்சரே" என்று சொன்னான். விதுரர் விழி திருப்பிக்கொண்டார். அவன் மேலுமொரு அணுவிடை முன்னகர விழைந்தான். அக்கணமே அதற்கான நினைவு எழுந்தது. "முன்பொருநாள் தாங்கள் அன்னையிடம் பேசிக்கொண்டிருந்தபோது நான் உடனிருந்தேன்" என்றான். "அன்று தங்களைக் கண்டதும் அன்னை உளம் உடைந்து அழுததை நினைவுகூர்கிறேன். அன்னை அவ்வண்ணம் எவருமிலா பெண்ணென அழ முடியுமென்பதை அன்றுதான் கண்டேன். அன்று அவர் அழுதபோதும் அரசியென்றே இருந்தார். விழிகளில் ஒருகணமும் தணிவு எழவில்லை" என்றான்.

விதுரரின் விழிகள் மாறின. "அன்று உடனிருந்தவன் நகுலன்" என்றார். "ஆம், ஆனால் நாங்கள் ஒருவரே" என்று சகதேவன் தொடர்ந்தான். "அன்னை அன்று மீளும்போது முகம் தெளிந்து புன்னகை செய்துகொண்டிருந்தார்." விதுரர் தலைகுனிந்து அசையாமல் நின்றார். அவன் சற்றே முன் சென்று திரும்பி அவர் முகத்தை பார்த்தான். அவர் ஏதேனும் சொல்லக்கூடும் என்று எதிர்பார்த்தான். பின்னர் "தாங்கள் விரும்பினால் அன்னையை சந்திக்கலாம், நான் அழைத்துச்செல்கிறேன்" என்றான். "வேண்டியதில்லை" என்று விதுரர் கூறினார். "ஒருவேளை அன்னை தங்களிடம் எதையேனும்

சொல்லக்கூடும்" என்று அவன் கூறினான். இல்லை என்பதுபோல் தலையசைத்து விதுரர் திரும்பி நடந்தார்.

அவன் உடன் நடந்தபோது தனக்குத்தானே என புன்னகைத்துக்கொண்டான். அவர் நடை முற்றாக மாறிவிட்டிருந்தது. திருதராஷ்டிரரின் குடிலுக்குள்ளிருந்து வெளிவந்த போதிருந்த தற்கோப்பு முழுமையாக அழிந்து உள்ளம் பல திசைகளிலாக சிதறிப் பரவ, இலக்கில்லாதவர்போல் நடந்தார். காற்றில் அலைவதென கைகள் சுழன்றன. தன் குடில் வாயில் வரும்வரை அவர் ஒரு சொல்லும் உரைக்கவில்லை. குடிலுக்கு முன் நின்று அவர் விடைகோரும்பொருட்டு தலையசைத்தார். அவனும் தலைவணங்கி முன்னகர்ந்தான். குடில் முகப்பில் அவருடைய ஆணைக்காக ஏவலர்கள் காத்திருந்தனர். விதுரர் "மைந்தா" என்று பின்னால் அழைத்தார். அவன் திரும்பிப்பார்த்தான். "சற்று உள்ளே வந்து செல்க!" என்றார்.

அவர் உள்ளே நுழைய அவனும் உள்ளே நுழைந்தான். அங்கிருந்த ஏவலரிடம் தலையசைவால் வெளியேறும்படி ஆணையிட்டுவிட்டு விதுரர் தன் மஞ்சத்தில் அமர்ந்தார். அவன் எதிரே நின்றுகொண்டிருக்க "அமர்க!" என்று கைகாட்டினார். அவன் தயங்கி பின்னடைந்து தாழ்வான மஞ்சத்தில் அமர்ந்தான். அவர் கூறப்போவதென்ன என்பதை எதிர்பார்த்து அமர்ந்திருந்தான். அத்தருணம் அவனால் உருவாக்கப்பட்டது. சதுரங்கத்தில் நாற்களத்தில் கருக்களை நகர்த்தி எதிரி கருவை திரும்ப முடியாத முனை மடிப்பு வரை கொண்டு சென்று நிறுத்துவதுபோல. அத்தகைய தருணங்களில் மானுடர் எவ்வண்ணம் செயல்படுகிறார்கள் என்பது அவர்களை காட்டுகிறது. எத்திசையிலும் நகர இயலாதென்று

உணரும்போது பெரும்பாலானவர்கள் சீற்றம் கொண்டு தங்கள் நிறைநிலை அழிந்து சொல் தெறிக்கவிடுவார்கள். சிலர் உடைந்து மடிந்து அழுவார்கள். சிலர் ஆழந்த அமைதிகொள்வார்கள். மூன்றுமே அத்தருணத்தை தவிர்ப்பதற்கான வழிகள். அத்தருணத்தில் எழும் மாற்றமுடியாமை ஒன்றை உணர்பவர் சிலரே.

மெய்மையை மானுடர் தேடிக்கொண்டிருப்பதில்லை. வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் எதையோ ஒன்றை வைத்து அகற்றவே முயல்கிறார்கள். ஏதேனும் ஒரு வழியினூடாக அதிலிருந்து தப்பிச் செல்லவே தவிக்கிறார்கள். தவறி அதன்மேல் விழுபவர்கள் உண்டு. அறைபட்டு அதன்மேல் தூக்கி வீசப்படுபவர்கள் உண்டு. மெய்மைக்கு எதிரான அனைத்தாலும் கைவிடப்பட்டு மெய்மையுடன் தனித்து நின்றிருப்பவர்கள் உண்டு. மெய்மை வாழ்வுக்கு எதிரானது. வாழ்வின் உண்மைகள் அனைத்திற்கும் அப்பால் நின்றிருப்பதே மெய்மை. பொருட்களனைத்துக்கும் விசையும் எடையும் வடிவும் அளிப்பது வெறுமையே என்றொரு சொல் உண்டு.

விதுரர் நெடுநேரம் கைகளால் தாடியை துழாவியபடி தனித்து அமர்ந்திருந்தார். அவன் உடனிருப்பதை முற்றிலும் மறந்துவிட்டிருப்பதைப்போல தெரிந்தார். அவன் அவர் கைவிரல்களின் நிலையிலா அசைவைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். முகம் நிமிர்த்தி அவர் முதலில் சொல்லக்கூடும் சொல் எதுவாக இருக்கும்? அவர் அன்னையை சென்று பார்க்கவே விழைவார். ஒருபோதும் அதை தவிர்க்கப் போவதில்லை. ஒருபோதும் அவரால் இதிலிருந்து விலக இயலாது. அவன் தன் உள்ளத்துள் புன்னகைத்தான். சற்று முன்னர் தன் மூத்தவருக்காகவே இங்கு திரும்பி வந்தேன்

என்று அவர் சொன்னார். எவருக்காக அதை கூறியிருப்பார்? அது பொய்யல்ல, அத்தருணத்தில் அதை நம்பியே சொன்னார். அதை சொல்வதனூடாக நம்ப முயன்றார். அந்நம்பிக்கையினூடாக பிறிதொன்றை மறைக்க முயன்றார்.

எத்தனை எளியவர்கள் மானுடர்! அவர்கள் பெரியவர்களாகும்தோறும் அவர்களின் உணர்வுகளும் எண்ணங்களும் பெரிதாகின்றன. எனவே இடர்களும் சரிவுகளும் கூட பெரிதாகின்றன. பெரியவர்கள் தங்கள் இடர்களின் முன், சரிவுகளின்முன் மிகச் சிறியவர்களாகும் தருணங்கள் உண்டு. பெரியவர்கள் பெரும் சிறுமை கொள்ளாது ஒழியவே இயலாது. அவன் அவ்வெண்ணங்கள் எல்லாம் பன்னிரு களமாகவே தன்னுள் எழுவதை உணர்ந்தான். எல்லா களத்திலும் எதிரிக்கோள் எங்கிருந்தோ நோக்கிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கோளும் பிறிதொன்றுக்கு எதிரி. நன்று தீதென ஏதுமில்லை. சுக்ரன் விழிநோக்க குலமழிந்தோரும் இருக்கலாகும்.

விதுரர் "நான் இறக்கும் தருணம் என்ன? இன்னும் உள்ள காலமென்ன? கணித்துக் கூறுக, மைந்தா!" என்றார். சகதேவன் திடுக்கிட்டு "தந்தையே, அத்தருணத்தில் தாங்கள் அவ்வாறு ஆணையிட்டதால் அதை செய்தேன். மெய்யாக அதை நான் செய்யலாகாது. நிமித்திகன் எவருக்கும் அவர்களின் இறப்புப் பொழுதையும் இறக்கும் முறையையும் உரைக்கலாகாதென்று நெறிகள் உரைக்கின்றன" என்றான். "இங்கு உன்னிடம் நான் தந்தையென்று இருந்து ஆணையிடுகிறேன், கூறுக!" என்றார் விதுரர். "அதை அறிவதனால் எப்பயனுமில்லை. இறப்பன்றி பிறிதிலாத ஒருவருக்குக் கூட அதில் சற்று பொருள் உள்ளது.

நீடுநோயாளனுக்கு அதை கூறலாமென்று சூரியப் பிரதீபம் கூறுகிறது" என்றான் சகதேவன்.

"நான் நீடுநோயாளன். மாளாத் துயர் கொண்டவன்" என்று விதுரர் சொன்னார். சகதேவன் அவரை நிமிர்ந்து பார்த்தான். "மெய், ஒரு சொல்லும் மிகையல்ல. கூறுக!" என்று விதுரர் கூறினார். சகதேவன் சிலகணங்கள் அவரை நோக்கி இருந்துவிட்டு எழுந்து "பொறுத்தருள்க தந்தையே, என்னால் அது இயலாது!" என்றான். "ஏன்?" என்று விதுரர் கேட்டார். "தங்கள் துயரென்ன என்று அறியேன். ஆனால் இப்புவியில் துயரிலாத எவருமில்லை. புவித்துயருக்கு இறப்பு ஒரு முடிவும் அல்ல. இறப்புத் தருணத்தை அறிந்ததனால் எவ்வகையிலும் துயர் குறைவதும் இல்லை. என் நெறிநூல்கள் ஆணையிடுவதற்கப்பால் நான் அதை செய்யலாகாது. பொறுத்தருள்க!" என்றான்.

"என் துயரை உன்னிடம் எவ்வாறு அறிவிப்பேன்? துயரை அறியும் வழி என உன் நூல்கள் ஏதேனும் நவில்வதுண்டா?" என்றார் விதுரர். சகதேவன் "கொடுந்துயர் கொண்டவர்களின் உடலில் தொட்டறிய முடியாத நடுக்கு ஒன்று இருக்கும் என்பார்கள். அவர்கள் தொட்டால் தாலத்து நீர் நலுங்கும் என்று கேட்டிருக்கிறேன். முன்பு ஏழு முறை சாவின் கணத்தில் தாங்கொணாப் பெருவலியில் துடிக்கும் சிலரை அவ்வாறு தொட வைத்துப் பார்த்திருக்கிறேன்" என்றான். விதுரர் தன் மஞ்சத்தில் கையால் தட்ட ஏவலன் வந்து நின்றான். "அகன்ற தாலத்தில் நீர் கொண்டு வருக!" என்றார். தலைவணங்கி அவன் வெளியே சென்றபின் "நோக்குக! இப்புவியில் இன்றிருக்கும் எந்த மானுடரை விடவும் பெருந்துயர் என்னில் உள்ளது. என் உடலில் திகழ்கின்றது பெருவலி" என்றார்.

“தந்தையே, நீங்கள் அனைத்திலிருந்தும் ஒழிந்து அமர்ந்திருந்தீர்கள். நீங்கள் இங்கு நிகழ்ந்தவை எவற்றையுமே அறியவில்லை” என்று சகதேவன் சொன்னான். “ஆம், அது எவ்வகையிலும் தப்புதல் அல்ல” என்று விதுரர் கூறினார். “தாங்கள் குருதிச்சுற்றமென எவரையும் இழக்கவில்லை. தாங்கள் நம்பியிருந்தது எதுவும் உடையவும் இல்லை. தங்கள் நிலையில் எந்த மாறுதல் நிகழவுமில்லை” என்றான் சகதேவன். கசப்புடன் நகைத்து “ஒருவேளை அதனால்தானோ என்னவோ” என்று விதுரர் கூறினார். “ஏது இலாதது மாற்றிலாதது என ஆகிவிடுகிறது.” சகதேவன் “எனில் தாங்கள் ஆற்றிய ஊழ்கத்துக்கு என்ன பயன்?” என்றான். “ஊழ்கத்தினால் துயரிலிருந்து தப்ப முடியாதா என்ன?”

“ஊழ்கம் என் துயரை கூர்கொள்ளவே செய்தது போலும்” என்று விதுரர் கூறினார். ஏவலன் தாலத்தில் நீருடன் வந்து அவரருகே வைத்தான். விதுரர் தன் சுட்டுவிரலை நீட்டி அந்நீர்ப்பரப்பை தொடப்போனார். அதற்குள் கூரிய காற்றால் ஊதப்பட்டதுபோல் நீர் அலைவு கொண்டது. “தந்தையே...” என்று துயரம் நிறைந்த குரலில் சகதேவன் அழைத்தான். விதுரர் அவனை நோக்கி புன்னகைத்து “கூறுக, இன்னும் எத்தனை காலம் இப்பெருந்துயரை நான் தாங்க வேண்டும்?” என்றார். சகதேவன் சூழ நோக்கி அங்கிருந்த கரித்துண்டை எடுத்துவந்து ஏடெழுதும் பலகைப்பரப்பில் பன்னிரு களம் வரைந்து அவற்றில் எண்களைப் பொறித்து சுட்டுவிரலை அவற்றில் வைத்து ஒவ்வொன்றாகத் தாவி ஊழ்கத்தில் அமைந்தான்.

விழி திறந்தபோது தன் கை தொட்டுக்கொண்டிருக்கும் ராசிநிலையைப் பார்த்து நீள்மூச்செறிந்துவிட்டு “தங்களுக்கும் ஓராண்டே” என்றான். “அடுத்த நீர்க்கடன் வரை?” என்றார்

விதுரர். "ஆம்" என்றான். "எவ்வண்ணம்?" என்று விதுரர் கேட்டார். "தாங்கள் இங்கிருந்து கனிந்து உதிர்வீர்கள். முனிவர்களுக்குரிய சாவு" என்று சகதேவன் சொன்னான். விதுரர் கண்களைச் சுருக்கி "மெய் கூறுக. அவ்வண்ணம் ஒன்று எனக்கு எவ்வாறு அமையக்கூடும்?" என்றார். "மெய்யாகவே அதைத்தான் காண்கிறேன். முனிவர்களுக்குரிய வகையில் விழிகளினூடாக உங்கள் உயிர் பிரியும். ஆனால்..." என்றபின் விரலை சற்றே நகர்த்தி பிறிதொரு ராசிநிலையைத் தொட்டு "அது முனிவர்களுக்குரிய சாவல்ல. இங்கு எஞ்சியிருக்கும் ஒரு பற்று உங்கள் உடனிருக்கும். உங்கள் அன்புக்குரிய ஒருவர் அருகிருப்பார். அனைத்தையும் துறந்து இங்கிருந்து செல்கையில் துறக்க விழையாத ஒன்றை அவருக்கு அளித்து அகல்வீர்கள். அந்தப் பற்றினால் கனிந்து விழுந்தாலும் அங்கு சென்றுசேரமாட்டீர்கள். பிறிதொரு பிறவி உண்டு. அதில் ஈடேறும் அனைத்தும்" என்றான்.

விதுரர் நீள்மூச்செறிந்து புன்னகைத்து "அது நன்று. அவ்வாறாகுமெனில் அது என் பேறு. என்னுள் எஞ்சுவதென்ன என்றறியேன். ஆனால் நான் ஒவ்வொன்றையும் உதற முயலும்போதும் உதற முடியாத ஒன்றை எங்கிருந்தோ உணர்கிறேன்" என்றார். பின்னர் எழுந்து கொண்டு "நன்று, மைந்தா. இச்சொற்களுக்காக நான் உன்னை வாழ்த்துகிறேன்" என்றார். சகதேவன் எழுந்துகொள்ள அவர் தன் எழுத்தாணி ஒன்றை எடுத்து அவனுக்கு அளித்து "இதை நிமித்திகனுக்குரிய காணிக்கையாகக் கொள்க!" என்றார். அவன் அதை வாங்கி கண்களில் ஒற்றிக்கொண்டு "வாழ்த்துக, தந்தையே!" என்றான். அவர் தலையில் கைவைத்து "நலம் சூழ்க!" என்றார்.

சகதேவன் அவ்வெழுத்தாணியுடன் வெளியே சென்றான். அதை தன் இடைக்கச்சையில் செருகிவிட்டு தன் குடில் நோக்கி நடந்தான். குடிலை அணுகுந்தோறும் அவன் நடை தளர்ந்தது. இடையில் கைவைத்து நின்று குடிலையே நோக்கிக்கொண்டிருந்தான். அந்தக் குடில்வளாகம் முழுக்க ஏவலர் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தனர். வேள்விக்குரிய பொருட்களை அந்தணர்கள் கங்கைக்கரையில் அமைந்திருந்த வேள்விநிலத்திற்கு கொண்டுசென்றனர். வேள்விநிலத்தில் இடையில் கைவைத்தபடி நின்று தௌம்யர் ஆணைகளை பிறப்பித்துக்கொண்டிருப்பதை காண முடிந்தது. அவன் குடிலிலிருந்து விலகி கங்கைக்கரையோரமாக நடந்தான். குடில் நிரையின் ஓசை அகன்று அகன்று மறையும் வரை காட்டுக்குள் சென்றுகொண்டே இருந்தான். பின்னர் ஓசையற்று ஒளிப்பெருக்காக வழிந்துகொண்டிருந்த கங்கையை நோக்கியபடி ஒரு மண்மேட்டில் நின்றான்.

நெடுநேரமாக நின்றுகொண்டிருப்பதை கால்கள் உளைந்த போது உணர்ந்து அங்கே அமர்ந்தான். அதுவரை வெவ்வேறு உளமாடல்களினூடாக மறைக்கப்பட்டிருந்த அது வெளிவந்தது. மாறாதது. மலையென நின்றிருப்பது. கேட்டுணர்ந்த சொற்கள், கண்டுணர்ந்த உணர்வுகள், எண்ணிக்கொண்டவை, இயற்றியவை அனைத்தும் பொய்யே என்றுணர்ந்தான். மெய்யென்று அது மட்டுமே அருகில் நின்றது. அவன் உளம் கரைந்து நெஞ்சு விம்ம தேம்பி அழுதான். அழுகையின் இடையில் தலை தழைந்து முழங்கால் மூட்டில் நெற்றி பட்டது. தாள முடியா வலியால் என அவன் உடல் மடித்து நடுங்கிக்கொண்டிருந்தான். பின்னர் ஓர் எண்ணம் எழ நிமிர்ந்து கண்களை

துடைத்துக்கொண்டான். தாடி நனைந்து மடியில் நீர் சொட்டிக்கொண்டிருந்தது. கைகளால் நீவி அதை துடைத்தபின் அந்த எழுத்தாணி எடுத்து மண்ணில் பன்னிரு களம் ஒன்றை வரைந்தான். அதில் தனது ராசிக்களத்தில் முதற்புள்ளியிட்டு எழுத்தாணியால் தொட்டுத் தொட்டு சென்றான்.

ஆனால் ஊழ்கம் கூடவில்லை. கலைந்து மீண்டும் முயன்றான். ஏழு முறை முயன்றபோதும் உளம் கலைந்து சொல் திரளவில்லை. சினமெழுந்து அவ்வெழுத்தாணியை களத்தில் இட்டுவிட்டு பற்களைக் கடித்து தலையசைத்தபடி அமர்ந்திருந்தான். நிமித்திகன் ஒருபோதும் தனக்கென காலம் நோக்க இயலாது. தன் ஊழை கணிப்பவன் பிறர் ஊழை அறிய இயலாதவன். அவன் தன் ஆசிரியர்களை நினைவுகூர்ந்தான். நீள்மூச்சுடன் அண்ணாந்து இலைத்தழைப்புகளுக்கு அப்பாலிருந்து வந்த கதிரொளியை முகத்தில் வாங்கி கண்மூடி அமர்ந்திருந்தான். பின்னர் எழுந்து இடையாடையையும் மேலாடையையும் களைந்து கரையிலிட்டுவிட்டு ஓடி பாய்ந்து கங்கை நீரில் விழுந்தான். மூழ்கி ஆழத்துக்கிறங்கினான். நெஞ்சு உடையும்படி மூச்சு இறுகி நின்றிருக்க நீருக்குள் சுழன்று சுழன்று நோக்கினான். பல்லாயிரம் நீர்மணிக் குமிழிகளைக் கண்டான். அவை விழிகளாயின. அறிந்த விழிகள். அவனிடம் உவகையும் துயரும் கொண்டு பேச முனையும் விழிகள்.

நீர்ச்சுடர் - 45

பகுதி ஏழு : தீராச்சுழி – 1

முதுசேடி பூர்ணை தன் அரசி தேவிகையின் ஆடைகள் அடங்கிய மென்மரப்பெட்டியை எடுத்துக்கொண்டு வெளிவந்தாள். ஏவலன் அவளை நோக்கி ஓடிவந்து அதை வாங்கிக்கொண்டு தேரில் வைத்தான். தேவிகையும் பலந்தரையும் விஜயையும் அருகருகே நின்றிருந்தனர். மூவரின் முகங்களும் மேலாடையால் மூடப்பட்டிருந்தன. அவர்கள் ஒருவருக்கொருவர் ஒரு சொல்லும் பேசிக்கொள்ளவில்லை. முகத்தின்மீது மேலாடையை இழுத்துவிட்டுக்கொள்வது பல நாட்களாகவே அவர்களின் வழக்கமாக ஆகிவிட்டிருந்தது. முகத்திரை சரிந்தாலே தலையும் குனிந்துவிடுகிறது. முகத்திரை அவர்களை புறஉலகத்திலிருந்து பிரித்தது. ஓசையில்லாமல் பொழிந்த அருவி ஒன்றிற்குள் நின்றிருப்பதுபோல. அவ்வப்போது அவர்கள் அதற்குள் இருந்து வெளிவந்து அறியா உலகைக் கண்டு திகைப்படைந்தனர்.

முற்றாகவே ஆடையால் மூடி அமர்ந்திருக்கையில் அது அவர்களை மண்ணுக்குள் புதைந்திருப்பதுபோல உணரச்செய்தது. வால்மீகி அமர்ந்த புற்று அது. அவர்களை உள்ளிட்டு மூடிக்கொண்ட வாயில் இல்லாச் சிறை. எவ்விழிகளையும் பார்க்க வேண்டியதில்லை, எவ்விழிகளும் அவர்களை பார்க்கப்போவதும் இல்லை. அந்தத் தனிமை துயரை பெருக்கியது. ஆனால் அது உகந்ததாகவும் இருந்தது. அத்திரைச்சீலையை இழுத்து அகற்றி தலைநிமிர்த்தி பிறரை நோக்கத் தொடங்கினால் அத்தனிமையை கடந்துவிடலாம். அதை அவர்களால் இயற்ற இயலவில்லை. அதற்குள் காலமிருக்கவில்லை. ஆகவே அவர்கள் பகலிரவுகளை அறியவில்லை. அத்திரை வெண்ணிற வான்வெளிபோல்

அவர்களைச் சூழ்ந்திருந்தது. அவர்களிடம் சொல்லப்படும் சொற்கள் நெடுந்தொலைவு பயணம் செய்து அவர்களைச் சென்றடைந்தன.

நீர்க்கடனுக்கு அவர்கள் கிளம்பிச்செல்லவேண்டுமென்ற ஆணையுடன் துணையமைச்சர் சந்திரசேனர் வந்தணைந்தபோது உபப்பிலாவ்யத்தின் முகப்புக்கூடத்தில் அவர்கள் அமர்ந்திருந்தனர். சந்திரசேனர் அதைக் கூறி தலைவணங்கி இரண்டடி பின்வைத்தார். மூவரும் தங்கள் திரைகளுக்குள் தலைகுனிந்து அமர்ந்திருந்தனர். நெடும்பொழுதுக்குப் பின் தேவிகை பெருமூச்சுவிட்டு அசைவுகொண்டாள். அவள் சொற்கள் என பூர்ணை "நன்று, இன்றே நாங்கள் கிளம்புகிறோம்" என்றாள். சந்திரசேனர் அச்சொற்களை தேவிகை பேசினாளா என திகைப்பவர்போல நோக்கிவிட்டு "இன்றல்ல, நாளை புலரியில்கூட கிளம்பலாம், பொழுதிருக்கிறது" என்றார்.

"இல்லை, இவ்வாணை வந்த பின்னர் இங்கே காத்திருப்பதுதான் கடினமானது" என்று பூர்ணை கூறினாள். "இங்கு காத்துக்கொண்டிருப்பதே எங்கள் ஊழென்றாகி நெடுநாட்களாகிறது. ஆயினும் இனிமேல் காத்திருக்க இயலாது." சந்திரசேனர் திகைப்புடன் மீண்டும் அரசியரை நோக்கிவிட்டு "அவ்வாறே" என்று தலைவணங்கி வெளியே சென்றார். அதன் பின்னர் மூவரும் அவ்வறையில் அசைவிலாது அமர்ந்திருந்தனர். மீண்டும் நெடும்பொழுது கழிந்து பூர்ணை வேண்டுமென்றே காலடி ஓசை எழுப்பி அருகணைந்து தலைவணங்கினாள். விஜயை மூடுதிரையை விலக்கி சற்றே அவளை பார்த்தாள். "நாம் இங்கிருந்து உடனே

கிளம்ப வேண்டும், அரசி. காவலர்தலைவரிடம் ஆணைகளை அளிக்கிறேன்" என்றாள். அவள் தலையசைத்தாள்.

ஏவற்பெண் சந்திரிகை வந்து தலைவணங்கினாள். "நாம் உடனே கிளம்புகிறோம். அனைத்து ஒருக்கங்களையும் செய்ய காவலர்தலைவரிடம் கூறுக!" என்றாள் பூர்ணை. "பொருட்களை எடுத்துக்கொள்ள வேண்டும் அல்லவா?" என்று சந்திரிகை கேட்டாள். பூர்ணை "பொருட்கள் என எதை எடுத்துக்கொள்வது?" என்றாள். சந்திரிகை "எப்படியும் ஆடைமாற்றியாகவேண்டும். மருத்துவப் பொருட்கள் உள்ளன... என்றாள். பூர்ணை தேவிகையை திரும்பிப் பார்த்தாள். அவளுக்கு அகிபீனா அளிக்கலாமா என்று அவள் மருத்துவரிடம் கேட்டபோது அவர் புன்னகைத்து "அகிபீனா உண்டு வரும் நிலையில்தான் இப்போதே இருக்கிறார்கள்" என்றார். தேவிகையின் உடலில் அசைவு ஏதும் தென்படவில்லை. அவள் வெளியே செல்ல அவர்கள் மூவரும் அசைவில்லாது அங்கேயே அமர்ந்திருந்தனர்.

சாளரத்துக்கு வெளியே வெயில் அணைந்து நிழல்கள் நீண்டு அறைக்குள் சரிந்தன. பூர்ணை உள்ளே வந்து "தேர்கள் ஒருங்கியிருக்கின்றன, அரசி. இங்கிருந்து உஜ்வலம் எனும் துறை வரை தேர். அங்கிருந்து படகில் முக்தவனம் வரை சென்றுவிடலாம்" என்றாள். விஜயை எழுந்து தன் அறைக்குச் செல்வதற்கென திரும்ப, தேவிகையும் எழுந்து உடன் சென்றாள். "பொருட்கள் அனைத்தும் தேரில் ஏற்றப்பட்டுவிட்டன, அரசி" என்றாள் பூர்ணை. தேவிகை நின்று திரும்பி அங்கிருந்தே தேர்முற்றத்தை நோக்கி சென்றாள். பலந்தரை எழுந்து தேவிகைக்குப் பின்னால் செல்ல விஜயை

திரும்பி அவர்களைத் தொடர்ந்தாள். அவர்கள் நிழல்கள்போல நடந்தனர். அவர்களின் ஆடைகள் காற்றில் மெல்ல உலைந்தன.

அவர்கள் மூவரும் தேர்முற்றத்தில் நின்றிருந்த மூடுதிரையிட்ட தேரில் ஏறி மஞ்சங்களில் அமர்ந்தனர். பூர்ணை வெற்றிலைப் பேழையுடன் தேருக்குள் ஏறிக்கொண்டாள். திரைகள் சரிந்து அவர்களை மூடின. மூடுதிரையிட்ட தேருக்குள்ளும் அவர்கள் முகத்திரையுடனே இருந்தனர். அதை விலக்க வேண்டுமெனும் எண்ணம் அவர்களுக்கு எழவில்லை. அவர்களின் சொல்லின்மை பூர்ணையையும் பற்றிக்கொண்டது. நெடும்பொழுதுக்குப் பின் நீள்மூச்சுடன் கலைந்து தேரின் முகப்புத்திரையை விலக்கி அமரத்திலிருந்த ஏவலனை பார்த்தாள். "காவல் வீரர்கள் அணிநிரந்து கொண்டிருக்கிறார்கள், அரசி. இன்னும் சற்று நேரத்தில் கிளம்பிவிடலாம்" என்று அவன் கூறினான். அவள் மறுமொழி எதுவும் சொல்லாமல் திரையை மூடினாள்.

தேர் திடுக்கிட்டு கிளம்புவது வரை அவர்கள் அங்கிலாததுபோல் இருந்தனர். தேரின் அசைவுகளுக்கு ஏற்ப அவர்கள் உடல் அசையத் தொடங்கியது. அதுவரை சொல்லின்றி இருந்த அவள் உள்ளமும் அசையத் தொடங்கியது. ஒன்றுடன் ஒன்று பொருந்தாத நினைவுகள் தொட்டுத் தொட்டு ஓடத்தொடங்கின. விஜயை நெடும்பொழுதுக்குப் பிறகு நீள்மூச்செறிந்து கால்களை நீட்டி கைகளை மார்பில் கட்டிக்கொண்டு தலையை தேர்த்திண்டில் சாய்த்தாள். தேவிகையும் உடலை எளிதாக்கிக்கொண்டாள். பலந்தரை தொடக்கம் முதலே மரப்பாவை என்று அமர்ந்திருந்தாள். தேர் குலுக்கிக்கொண்டபோது கூண்டுகளிலும் விளிம்புகளிலும்

அவள் உடல்தான் மிகுதியாக முட்டிக்கொண்டது. அவள் அதை அறியவே இல்லை என்று தோன்றியது.

தேர் செல்லச் செல்ல அவர்கள் துயின்று ஆளுக்கொரு திசைக்கு சாய்ந்தனர். தேர் குழியொன்றில் விழுந்தெழுந்தபோது பலந்தரையின் நெற்றி விசையுடன் கூண்டில் மோதியது. அவள் கண்களை விழித்து பொருளின்றி அந்தக் கூண்டு விளிம்பை நோக்கியபின் விழிமூடிக்கொண்டாள். சற்று நேரத்தில் பிறிதொரு குழியில் சகடம் விழ தேவிகையின் தலை தேர்க்கூண்டில் மோதியது. அவள் அரைவிழி திறந்து நேர் நோக்கில் அவ்வண்ணமே நெடுநேரம் நிலைத்து மீண்டும் விழி மூடினாள். தேரின் மூங்கில்தூண்கள் கழிகளாகி அவர்களை அறைந்துகொண்டிருப்பதுபோல பூர்ணை எண்ணினாள். எண்மர் சூழ்ந்து நின்று அவர்களை தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். சொல்லின்றி ஒலியின்றி அவர்கள் அந்த அடிகளை வாங்கிக்கொண்டிருந்தார்கள்.

மறுநாள் புலரியில் அவர்கள் கங்கைக்கரையை சென்றடைந்துவிட்டிருந்தனர். தேர் நின்றதும் ஏவலன் பின்னால் வந்து நின்று "அரசியருக்கு வணக்கம்" என்று மும்முறை கூறி தேர்க்கூண்டில் கையால் தட்டியபோது அவர்கள் விழித்துக்கொண்டார்கள். பூர்ணை முதலில் இறங்கினாள். தேவிகை மேலாடையை நன்றாக இழுத்துவிட்டு நிலத்தில் இறங்கி நின்றாள். பலந்தரையும் விஜயையும் இறங்கியபின் அவர்கள் ஒன்றும் சொல்லாமல் தேர் மேடையிலிருந்து நீர்முகப்பு நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். அங்கே தொன்மையான படகுத்துறை இருந்தது. தடித்த மரங்களை கங்கைக்குள் நிறுத்தி அவற்றுக்கு மேல் மரப்பலகை வேய்ந்து அமைக்கப்பட்ட துறைமேடைக்கு அப்பால் அவர்கள் செல்ல

வேண்டிய படகு பாய் தளர்த்தி நீரில் அசைந்தபடி நின்றது. அதன் படகோட்டிகள் துடுப்புகளுடன் படகில் நின்றிருக்க நான்கு காவலர்கள் துறைமேடையில் வேல்களுடன் நின்றனர்.

அவர்கள் அணுகியதும் ஒருவன் திரும்பி கொம்போசை எழுப்பினான். அவர்களுக்குப் பின்னால் வந்த ஏவலன் "அரசியர் ஓய்வெடுத்துக் கொள்வதென்றால்..." என்று திரும்பிச் சுட்டிக்காட்டி "இங்கே ஒரு சிறு ஓய்விடம் உள்ளது. மஞ்சங்களும் உள்ளன" என்றான். "தேவையில்லை" என்று பூர்ணை கையசைத்தாள். அவர்கள் படகில் ஏறிக்கொண்டதும் காவலர்களின் விரைவுப்படகு முன்னால் அலைகளில் ஏறிச் சென்றது. தொடர்ந்து அவர்களின் படகு பாய்விரித்து காற்றில் தன்னை தொடுத்துக்கொண்டது. படகின் அசைவுகளுக்கு ஏற்ப உடல் அசைய மூவரும் பலகைப் பீடத்தில் அமர்ந்தனர். தேவிகையும் விஜயையும் மீண்டும் துயில் கொண்டதுபோல் தோன்றியது. பலந்தரை தன் நெற்றியை தடவிக்கொண்டாள். பல இடங்களில் மூங்கிலில் முட்டிக்கொண்ட முழைகள் இருந்தன.

தேவிகை சற்று நேரத்திலேயே ஆழ்ந்துறங்க விஜயை தன் முகத்தின் மேல் படபடத்த மெல்லிய வெண்பட்டுத் திரைச்சீலையினூடாக காலைஒளி எழுந்து கொண்டிருந்த கங்கையை பார்த்துக்கொண்டிருந்தாள். அன்று பகல் முழுக்க அவர்கள் கங்கையிலேயே விழிநட்டு படகில் அமர்ந்திருந்தனர். ஏவலர் இன்நீர் கொண்டுவந்து அளித்தனர். பல நாட்களாகவே வெல்லமும் கருக வறுத்த பயறுமாவும் கலந்து காய்ச்சப்பட்ட கொழுவிய இன்நீரை மட்டுமே அவர்கள் உணவென அருந்திக்கொண்டிருந்தனர். அன்னம் உண்பது அவர்களால் எண்ணியும் பார்க்க இயலாததாகியிருந்தது. பலமுறை பூர்ணை

உணவைக் கொண்டுவந்து அவர்கள் முன் வைத்தாள். பெரும்பாலான தருணங்களில் அவர்களிடம் ஆழ்ந்த பசியும் இருந்தது. ஆனால் உணவு முன் அமர்ந்து அன்னத்தை கையில் எடுத்து வாயில் வைக்கும்போதே தொண்டை இறுகி அடைத்துக்கொண்டது. ஒருவாய் உணவைக்கூட உள்ளிறக்க இயலவில்லை.

பல நாட்களுக்கு முன் அபிமன்யு மறைந்த செய்தி வந்த அன்று உணவின் முன் அமர்ந்து அன்னத்தை வாயிலிட்ட தேவிகை தாலத்திலேயே அதை உமிழ்ந்துவிட்டு நெஞ்சடைக்க இருமி மூச்சுத்திணறி மயங்கி பக்கவாட்டில் விழுந்தாள். ஏவற்பெண்கள் அவளைத் தூக்கி அமர்த்தி வாய்திறந்து சங்கில் சிறிதளவு இன்னீரை அவள் தொண்டையில் ஊற்றி மூச்சை சீரமைத்து நினைவு மீளச்செய்தனர். அதன் பின்னர் வெவ்வேறு வகையான உணவுகளை அவர்கள் கொண்டுவந்து அவர்களுக்கு அளித்தனர். இன்கூழைக் கூட அவர்களால் உண்ண இயலவில்லை. இன்நீரை அருந்தும்போது கூட பெருவிடாயுடன் இரு கைகளாலும் குவளையை வாங்கி வாயிலழுத்தி சிலமுறை அருந்தி மூச்சுத் திணற கலத்தை கீழிறக்கினர். பிறிதொரு முறை பூர்ணை அவர்கள் முன் கலத்தை தூக்கி வாயில் பொருத்தி "அருந்துக, அரசி!" என்றாள். மீண்டும் இருமுறை விழுங்கிவிட்டு மூச்சு இரைக்க போதும் என்று கைகாட்டி நிறுத்தினார்கள்.

சில நாட்களிலேயே அவர்கள் உடற்தசைகள் வற்றி, கண்கள் மங்கலடைந்து குழிந்து, உதடுகள் மடிந்து வாய்க்குள் செல்ல, முதுமையும் நோய்மையும் வந்து மூட, முற்றிலும் பிறராக மாறிவிட்டிருந்தனர். உடலுக்குள் குடிகொள்ளும் தெய்வம் தனக்கேற்ப உடலை உருமாற்றிக் கொள்கிறதென்று சூதர்

சொல்லி பூர்ணை கேட்டிருந்தாள். காதல் கொண்ட பெண் அழகில் பொலிந்தெழுவதுபோல் துயர் கொண்டவள் மெலிந்து உருகி உருமாறுகிறாள். கண்ணெதிரே அவர்கள் உயிரிழந்து மட்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று அவள் எண்ணினாள். முதுசெவிலி "உள்ளிருந்து உடலை உண்கின்றது ஒரு தெய்வம்" என்றாள். "அது நன்று, தெய்வங்களுக்கு அளிப்பதற்கு நம்மிடம் உடலாவது உள்ளதே" என்று இளம் சேடி ஒருத்தி சொன்னாள்.

பூர்ணை விஜயையின் முதுசேடியான அபயையை எண்ணிக்கொண்டாள். நச்சுநா கொண்டவள் என அவளை சொல்வார்கள். "பெண்டிர் அன்னத்தை அளிப்பவர்கள்" என்று அவள் சொல்வதுண்டு. "அல்குலை கணவர்களுக்கு. முலைப்பாலை மைந்தருக்கு. முழு உடலையும் அளித்தபின் விண்புகுகிறார்கள்." இந்திரப்பிரஸ்தத்தின் அகத்தளத்தில் இருண்ட அறையொன்றில் உடல்நலிந்து மறைந்தாள். சாவின் கணத்தில் அவள் உடனிருந்தாள். "சேடியர் பரத்தையரைப்போல. உடலை எவரெவரோ உண்ணக்கொடுப்பவர்கள்" என்று அவள் சொன்னாள். "இறுதியாக வருபவன் இக்காதலன்" என்று அவள் புன்னகைத்தபோது அவளுடைய மட்கிய உடலின்மேல் அமைந்திருந்த வெற்றுக்கூடு போன்ற முகத்தில் பற்கள் வெளிப்பட்டன. கண்கள் விந்தையான குழிவிலங்குபோல் ஒளிகொண்டிருந்தன.

முக்தவனம் நெருங்கியதும் காவலர் படகிலிருந்து கொம்பொலி எழுந்தது. பூர்ணை தேவிகையை அணுகி தலைவணங்கி "முக்தவனம் அணைந்துள்ளது, அரசி" என்றாள்.

தேவிகை பாவைபோல் எழுந்துகொள்ள "இல்லை, இன்னும் படகு துறைமேடையை அணைய அரைநாழிகைக்கு மேலாகும். தாங்கள் அமரலாம்" என்றாள். தேவிகை மீண்டும் அமர்ந்துகொண்டாள். படகு துறைமேடையை அணுகியபோது அவர்கள் மூவரும் துயிலிலாழ்ந்ததுபோல் அமர்ந்திருந்தனர். பூர்ணை "அரசி! அரசி!" என்று பலமுறை அழைத்த பின்னரே தேவிகை கண் திறந்தாள். "படகுகள் துறையணைந்துவிட்டன. இறங்கும் பொழுது!" என்றதும் உணர்ச்சியற்ற விழிகளுடன் நோக்கிக்கொண்டிருந்தாள். "தாங்கள் கரையிறங்கலாம், அரசி" என்றாள் பூர்ணை.

தேவிகை எழுந்து திரும்பி எவரையும் பார்க்காமல் படகு விளிம்பை அடைந்து துறைமேடை நோக்கி போடப்பட்டிருந்த பலகை மேல் நடந்து கரையணைந்தாள். அவளைத் தொடர்ந்து பலந்தரையும் விஜயையும் இறங்கினர். மூவரும் நிரையாக நடந்து செல்ல அவர்களை வரவேற்கும் பொருட்டு துறைமேடைக் காவல்மாடத்திலிருந்து சங்கொலி எழுந்தது. காவலர்தலைவன் வந்து வணங்கி "அரசியருக்கு வணக்கம். தங்களுக்குரிய குடில்கள் ஒருங்கியிருக்கின்றன. சற்று ஓய்வெடுத்துவிட்டுச் செல்லலாம். இன்நீரும் உணவும் உள்ளது..." என்றான். "அவர்கள் உடனே செல்லவே விரும்புகிறார்கள்" என்று பூர்ணை சொன்னாள். "தேர்கள் வந்துள்ளனவா?" காவலன் அவள் முந்திச்சொல்வதை விரும்பவில்லை "ஆம், ஒருங்கியிருக்கின்றன" என விழிநோக்காமல் சொன்னான்.

அரசியர் செல்லவேண்டிய எடையற்ற சிறிய வண்டி பாதையில் நின்றது. "அந்த வண்டிகள்தான், அரசி" என்றாள் பூர்ணை. தேவிகை திரும்பிப்பாராமல் நடந்துசென்று அதில் ஏறிக்கொள்ள

பலந்தரையும் விஜயையும் தொடர்ந்து ஏறிக்கொண்டனர். தேர் கிளம்பி குடில்நிரைகளினூடாக சென்றபோது கூட அவர்கள் எதையும் பார்க்கவோ எங்கிருக்கிறோம் என்று உணரவோ இல்லை. தொலைவில் அஸ்தினபுரியின் கொடியைப் பார்த்ததும் பலந்தரை "இங்கு வண்டியை நிறுத்துங்கள்" என்றாள். தேர் நின்றதும் அவள் மறுமொழி கூறாமல் தேரிலிருந்து கீழிறங்கி ஏவலரிடம் "அது அஸ்தினபுரியின் அரசியரின் குடில் அல்லவா?" என்றாள். அவள் குரலை நெடுநாட்களுக்குப் பின்னர் கேட்கிறோம் என்று பூர்ணை எண்ணிக்கொண்டாள்.

"ஆம் அரசி, அங்குதான் அஸ்தினபுரியின் அரசி பானுமதியும் இளையவர் அசலையும் தங்கியிருக்கிறார்கள். அதற்கப்பால் உள்ள குடிகளில் கௌரவ அரசியரும் இளவரசியரும் தங்கியிருக்கிறார்கள்" என்றான் காவலர்தலைவன். "என்னை அங்கு அழைத்துச்செல்க!" என்று பலந்தரை கூறினாள். "அரசி, நீங்கள் செல்லவேண்டிய இடம் அது அல்ல" என்றாள் பூர்ணை. அவள் சொற்களை பலந்தரை கேட்காததுபோல் தோன்றியது. தேருக்குள்ளிருந்து தேவிகையும் விஜயையும் வெற்றுவிழிகளுடன் அவளை நோக்க பலந்தரை அவர்களை வெறுமனே நோக்கி ஏதோ சொல்வதற்கென இதழ்கள் அசைத்தபின் திரும்பிக்கொண்டாள்.

"தேர்" என்று ஏதோ சொல்ல காவலன் நாவெடுக்க "தேவையில்லை, நான் நடக்கிறேன். காசிநாட்டு அரசியரின் குடிலுக்கு என்னை அழைத்துச்செல்க!" என்று பலந்தரை சொன்னாள். அவள் நடந்தகல்வதை நோக்கியபடி தேவிகையும் விஜயையும் அமர்ந்திருந்தார்கள். "கிளம்பலாமா, அரசி?" என்று பாகன் கேட்டான். "கிளம்புக!" என்றாள் பூர்ணை. தேர் அசைவு

கொண்டு முன்னால் சென்றது. தேவிகையும் விஜையையும் மீண்டும் விழிமூடி மெல்ல அசைந்து கொண்டிருந்தனர். பூர்ணை அவர்களின் முகங்களை திரைகளினூடாக நோக்க முயன்றாள். அவர்கள் உள்ளே இல்லை என்று தோன்றியது. உள்ளிருப்பது வேறெவரோ. இறந்து மட்கிய விழிகள் கொண்ட இரு உடல்கள்.

அவர்கள் இருவருக்கும் ஒரே குடில்தான் அளிக்கப்பட்டது. அவர்களுக்காக அது ஒருக்கப்பட்டிருக்கவில்லை. அங்கே குடில்கள் நிறைந்து புதிய குடில்கள் கட்டப்பட்டுக்கொண்டிருந்தன. பூர்ணை குடிலுக்குள் நுழைந்து பார்த்தாள். அதன் செவ்வக வடிவ அறைக்குள் நெருக்கமாக இரு மூங்கில் மஞ்சங்கள் போடப்பட்டிருந்தன. பொருட்களை வைப்பதற்கான பீடங்கள் எதுவும் இல்லை. கூரையிலிருந்து தொங்கவிடப்பட்ட கொக்கிகளிலும் சரடுகளிலுமே அரசியரின் பெட்டிகளையும் ஆடைப்பொதிகளையும் தொங்கவிட வேண்டியிருந்தது. அறை நடுவே மேலிருந்து தொங்கிய சரடில் மண்ணாலான ஐந்து திரிகளிடப்பட்ட விளக்கு தொங்கியது. பகலில் அதில் ஒரு திரியில் மட்டும் சுடர் எரிந்தது.

பூர்ணை பொருட்களை உள்ளே கொண்டு வந்து வைத்தபின் "இங்கு குறைவான இடமே உள்ளது. ஆனால் நாம் இங்கு நெடுநாள் தங்கப்போவதில்லை. நாளை காலையிலேயே நீர்க்கடன்கள் தொடங்கும் என்கிறார்கள். எனில் நாளை மாலையே நாம் இங்கிருந்து கிளம்ப வேண்டியிருக்கும்" என்றாள். தேவிகை மறுமொழி கூறாமல் மஞ்சத்தில் அமர்ந்து தலைகுனிந்து கைகளை மடியில் சேர்த்து அசைவிழந்தாள். பிறிதொரு மஞ்சத்தில் விஜயை அவ்வாறே அமர்ந்தாள். பூர்ணை "தங்களுக்கு இந்த அறை போதுமானது, இங்கே

இருவரும் சேர்ந்திருப்பதே நன்று" என்றபின் "அருந்துவதற்கு இன்நீர் கொண்டுவருகிறேன்" என்றபடி வெளியே சென்றாள்.

அவர்களிருவரும் அசைவிலாது பாவைகளென அமர்ந்திருந்தனர். உள்ளமிலாதாகி அருகில் கேட்கும் ஒலியிலோ அசைவிலோ மீள்வதும் திகைப்பும் பதைப்புமென அவற்றை எதிர்கொள்வதும் மீண்டும் உட்புகுந்துகொண்டு அகமிலாதாகி அமைவதும் அவர்களின் வழக்கமாக இருந்தது. பூர்ணை வெளியே சென்றபோது விஜயையின் பணிப்பெண்ணாகிய சந்திரிகை வந்து நின்றிருந்தாள். "அரசியருக்கு இன்நீர் கொண்டுவருக!" என பூர்ணை ஆணையிட்டாள். சந்திரிகை சென்றபின் தேரில் எஞ்சிய பொருட்களை குடிலுக்குள் கொண்டுசென்று வைத்தாள்.

சந்திரிகை அவர்களுக்கு இன்நீர் கொண்டுவந்தாள். அதை வாங்கி பூர்ணை அவர்கள் இருவரையும் சில மிடறுகள் குடிக்க வைத்தாள். "தாங்கள் ஆடைமாற்றிக்கொள்ளலாம், அரசி" என்றாள் பூர்ணை. அதை பலமுறை அவள் சொன்ன பின்னரே தேவிகை உணர்ந்து தலையசைத்தபின் எழுந்து நின்றாள். பூர்ணை தேவிகையை கைபற்றி அழைத்துச் சென்று சிறிய மூங்கில் பீடத்தில் அமரச்செய்தாள். மரவுரியை குடில்சுவரிலிருந்து இழுத்துக்கட்டி சிறிய மறைப்பை உருவாக்கினாள். அவள் தேவிகையின் ஆடைகளை களைந்துகொண்டிருக்கையில் சந்திரிகை குடுவையில் கொதிக்கும் நீர் கொண்டுவந்து வைத்தாள். தேவிகையின் ஆடைகளை முழுமையாகக் களைந்து வெற்றுடலுடன் அமரச்செய்து மரவுரிச்சுருளை வெந்நீரில் முக்கி அவளை துடைத்தாள் பூர்ணை.

தேவிகையை நாற்பதாண்டுகளுக்கும் மேலாக நீராட்டி பணிவிடை செய்யும் பழக்கம் கொண்டிருந்தவள் பூர்ணை. தேவிகையைவிட பதின்மூன்று ஆண்டுகள் மூத்தவள். தேவிகையை வயற்றாட்டி கொண்டுவந்து அகத்தளத்துப் பெண்டிருக்குக் காட்டுகையில் அவளும் இரு இடைகள் நடுவே புகுந்து நோக்கினாள். தன் கைகள் வழியாகவே அவ்வுடல் மாறி வந்திருப்பதை அவள் அறிந்தாள். யுதிஷ்டிரனின் அரசி என அஸ்தினபுரிக்கு அவள் வந்தபோது அவளும் உடன்வந்தாள். அன்று அவள் சிறிய தோள்களும், அடுக்கடுக்கான கழுத்தெலும்புகளும், விலாஎலும்புகள் நிரை கொண்ட மெலிந்த உடலும் கொண்டிருந்தாள். அவள் மிக மெலிந்திருக்கிறாள் என்று சிபி நாட்டில் பேச்சிருந்தது. அவளை அஸ்தினபுரிக்குக் கொண்டுவந்ததும் சாளரங்களில் குவிந்த பெண்களும் அப்படி பேசிக்கொண்டனர்.

எனினும் அவள் தோலில் உயிர் மெருகும், மென்மயிர்ப் பரவல்களில் பொன்மினுப்பும் இருந்தது. நீண்ட முகமும் செந்தளிர் நிறமும் கொண்டிருந்தாள். அவளை முதல்முறையாக நீராட்ட வந்த அஸ்தினபுரியின் முதுசெவிலி "அரசி, புதுமுளைகள் எழவிருக்கும் மூங்கில் போலிருக்கிறார்" என்றாள். அதுவே பெயர் என்றாகி அவளை அகத்தளப்பெண்டிர் மூங்கில் என்றே அழைத்தனர். பின்னர் அன்னையாகி தசைப்பூச்சு கொண்டதும் கழுத்தெலும்புகள் மறைந்தன. பொற்சங்கிலி தசைமேல் வரையப்பட்டதுபோல் பதிந்தது. முலைகள் திரண்டு ஒளிகொண்டன. முலைக்கண்கள் கருமை அடைந்தன. மைந்தன் பிறந்த பின் அவள் வயிற்றின் இருபுறமும் பூர்ஜமரத்தின்மேல் வரிகளென மென்கோடுகள் விழுந்தன. ஒவ்வொரு மாற்றமும் அவளை மேலும் மேலும் அழகியென்றாக்குவதாகவே அவளுக்கு தோன்றியிருந்தது.

பூர்ணையின் கைகள் அவள் உடலை தொடத் தயங்கி நடுங்கின. ஓரிரு நாட்களில் ஒரு மனித உடல் அவ்வாறு ஆகமுடியும் என்று அவள் எண்ணியதே இல்லை. முன்பு ஒருமுறை அவள் உறவினளான முதியவள் ஒருத்தி அவ்வாறு உடல் நைந்து இறந்ததை அவள் கண்டதுண்டு. அவ்வுடல் உயிர்நீத்த பின்னர் ஒரு நாள் முழுக்க காத்திருக்க வேண்டியிருந்தது. அன்று ஆடி மாத கருநிலவு நாள். சிபிநாட்டு வழக்கப்படி அந்நாளில் எவரையும் சிதையேற்றுவதில்லை. ஆகவே உடலை கொண்டுசென்று ஊருக்கு வெளியே ஒரு விடுதியில் வைத்து முழுநாளும் காத்திருந்தார்கள். உடலைச் சுற்றி தேவதாருப் பிசின் இட்டு புகையெழுப்பினார்கள். சூழ்ந்திருந்தவர்கள் நீத்த உடலை நாடிவரும் பாலைநிலத்துப் பேய்களை அகற்றும் பொருட்டு பாடிக்கொண்டிருந்தனர்.

அந்த உடல் மலைத்தேன் பூசப்பட்டு தாலிப்பனை பாயில் படுக்க வைக்கப்பட்டிருந்தது. அது கண்ணெதிரே ஒவ்வொரு கணமுமென நைந்து நிறம் மாறிக்கொண்டிருப்பதை அவள் பார்த்தாள். மறுநாள் காலை உடலை சிதைக்கு கொண்டு செல்லும்போது அது மண்ணால் செய்யப்பட்டதுபோல் மாறிவிட்டிருந்தது. அதன் விழிகள் மட்கி உள்ளிழுத்துக் கொண்டிருந்தன. உதடுகள் வீங்கி சற்றே திறந்திருக்க உள்ளிருந்து பழுப்பேறிய பற்கள் நீட்டியிருந்தன. அது சற்று வீங்கியதுபோல், அதன் தோல் நைந்து உள்ளிருக்கும் நீர் வழியவிருப்பதுபோல் தோன்றியது. அதன் அனைத்து துளைகளிலிருந்தும் சேற்றுப்பிளவினூடாக எழும் மூச்சடைக்க வைக்கும் எரியாவி எழுந்தது. அவள் அன்று மயங்கிவிழுந்தாள். அவள் அந்த ஒருநாளை தன் சித்தத்திலிருந்து முற்றாக மறைத்துக்கொண்டிருந்தாள். ஒருபோதும் அதை அவள்

நினைவுகூர்ந்ததில்லை. எப்போதேனும் கனவில் அது எழுகையில் திடுக்கிட்டு விழித்தெழுந்தாள்.

தேவிகையின் உடலும் தோலும் அவ்வாறாக மாறிக்கொண்டிருந்தன. கழுத்திலும் முலையிடுக்குகளிலும் தூள்பாசி போலவோ தேமல் போலவோ ஏதோ படிந்திருந்தது. உடலுக்குள் இருந்து தோல்நெய் ஊறி பரவவில்லை. ஆகவே தோலில் செதில்கள் எழுந்தன. உதடுகளின் இணைப்புகள் புண்ணாகியிருந்தன. செவிகளுக்குப் பின்னும் விரலிடுக்குகளிலும் புண் எழுந்திருந்தது. எலும்பு வளையங்களாக அடுக்கப்பட்ட கழுத்தும் புடைத்தெழுந்து தோலை கிழித்துவிடுமெனத் தோன்றிய விலாஎலும்புகளும் அவள் கைபடும் உணர்வைக்கூட அடையவில்லை. அவள் கைக்கு வந்த தொடுவுணர்வு அவ்வுடலை உயிருள்ளது என்று காட்டவில்லை.

நீரள்ளி விட்டு, காரமணலிட்டு தேய்த்துக் கழுவி நறுஞ்சுண்ணமிட்டு அவளை மீட்கமுடியுமென்று அப்போதும் தோன்றியது. அதுவரை இருந்தது அரண்மனையின் இருளில். நாளை வருவது அரசநிகழ்வு. ஆனால் அத்தருணத்தில் அதற்கான வாய்ப்பிருப்பதாக தெரியவில்லை. உடலை அழுத்தித் தொடும்போது அது உடைந்துவிடுமென்ற அச்சம் ஏற்பட்டது. நீராட்டி துடைத்து மாற்றாடை அணிவித்து தேவிகையை கொண்டு சென்று மஞ்சத்தில் அமரச்செய்தாள். விஜயையின் ஏவல்மகள் சந்திரிகை அவளை கைபற்றி அழைத்துச் சென்றாள். அவளை நீராட்டும்போது பூர்ணை சென்று நோக்கினாள். அவள் உடலும் தேவிகையின் உடல்போலவே இருந்தது.

இருவரையும் மஞ்சத்தில் அமரவைத்த பின்னர் மீண்டும் ஒருமுறை இன்நீரளித்து அவர்கள் இருவரும் தலைவணங்கி வெளியே சென்றனர். தங்கள் குடில்களுக்குச் சென்று நீராடி ஆடைமாற்றி நெடும் பொழுது கழித்து அவர்கள் வந்து பார்த்தபோதும் இருவரும் மஞ்சத்திலேயே அசையாமலிருக்கக் கண்டனர். பூர்ணை தேவிகையை மெல்ல பற்றி சரித்து "படுத்துக்கொள்ளுங்கள், அரசி" என்றாள். அவள் கையில் உடல் தந்து தளர்ந்து சரிந்த தேவிகையை பற்றிச் சாய்த்து மஞ்சத்தில் படுக்க வைத்து தலையணையை தலையில் வைத்து மரவுரிப் போர்வையை இழுத்து போர்த்தினாள். விஜயையையும் அவ்வாறே அவள் படுக்க வைத்தாள். பின்னர் குடில்படலை மெல்ல சார்த்தி வெளியே வந்தாள். சந்திரிகை அவளுக்குப் பின்னால் காலடி ஒலிக்காமல் வெளியே வந்தாள்.

வெண்முரசு விவாதங்கள்

நீர்ச்சுடர் - 46

பகுதி ஏழு : தீராச்சுழி – 2

யுதிஷ்டிரன் தேவிகையைப் பார்க்க வருகிறார் எனும் செய்தியை ஏவலன் வந்து அறிவித்தபோது அதை பூர்ணைதான் முதலில் கேட்டாள். அவள் குடில்வாயிலில் அமர்ந்திருந்தாள். ஏவலன் அவளிடம் செய்தியைச் சொன்னபோது "நான் அரசியிடம் தெரிவிக்கிறேன்" என்று அவள் சொன்னாள். "அரசியிடம் தனிப்பட்ட முறையில் தெரிவிக்க வேண்டுமென்று ஆணை" என்று ஏவலன் கூறினான். பூர்ணை "அரசியிடம் நான் தெரிவித்துவிடுகிறேன்" என்றாள். ஏவலன் உறுதியுடன் "அரசுச்

செய்திகள் அரசியிடம் நேரில் கூறப்படவேண்டியவை" என்று கூறினான். பூர்ணை சற்றே எரிச்சலுற்று "வருக!" என்று உள்ளே அழைத்துச் சென்றாள்.

குடிலின் உள்ளே மஞ்சத்தில் முகத்தின் மீது மேலாடையை முழுக்க இழுத்துவிட்டு அசைவிலாதிருந்த இரு அரசியரைக் காட்டி "அரசியர் தேவிகையும் விஜயையும் இங்குள்ளார்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்ட செய்தியை இங்கு சொல்லலாம்" என்றாள் பூர்ணை. இருவரையும் மாறி மாறிப் பார்த்தபின் ஏவலன் "அவர்கள் நல்ல உளநிலையில் உள்ளார்களா?" என்றான். பூர்ணை "அதை அறியும் பொறுப்பு உங்களுக்குள்ளதா என்ன? உங்கள் செய்தியை மட்டும் கூறலாம்" என்றாள். அவன் "இவர்களில் சிபிநாட்டு அரசி யார்?" என்று தாழ்ந்த குரலில் கேட்டான். தேவிகையை சுட்டிக்காட்டி "கூறுக!" என்றாள் பூர்ணை. அச்சொற்களை தேவிகையோ விஜயையோ அறிந்ததாகவே தெரியவில்லை.

ஏவலன் தயங்கி அவளை நோக்கி பின் முடிவெடுத்து தலைவணங்கி "அரசி, அரசர் நாளை நிகழவிருக்கும் நீர்க்கடனுக்கு ஆணைபெறும்பொருட்டு தங்களைக் காண்பதற்காக இங்கு வரவுள்ளார். இன்னும் சற்று பொழுதில் இங்கு வந்து சேர்வார். தாங்கள் ஒருக்கமாகியிருக்கவேண்டும் என ஆணை" என்றான். தேவிகையிடமிருந்து மறுமொழி எதுவும் எழவில்லை. தத்தளிப்புடன் அவன் பூர்ணையை நோக்க அவள் தாழ்ந்த குரலில் "நூறுமுறை கூவினாலும் இதுவே எதிர்வினையாக இருக்கும்" என்றாள். ஏவலன் விடைபெறும் முகமாக தலைவணங்கி தயங்கிய காலடிகளுடன் வெளியே சென்றான். அவள் உடன் சென்றாள்.

ஏவலன் வெளியே நின்றான். அவள் அணுகியதும் "இங்கு காசிநாட்டு அரசி இல்லையா?" என்றான். "காசிநாட்டு அரசி பலந்தரை தன் உடன்பிறந்தாருடன் சென்றிருக்கிறார்" என்று பூர்ணை சொன்னாள். "அங்கா? அங்கு... அவர்கள்..." என்றபின் "அவர்கள் மூவரையும் அரசர்கள் சந்திப்பதாக திட்டம். அரசியர்களை அரசர்கள் சந்தித்து நாளை நீர்க்கடனின்போது அவர்கள் ஆற்ற வேண்டிய பணியைக் குறித்து கூறவேண்டுமென்பது தௌம்யரின் ஆணை. அதன் பொருட்டே அரசர் இங்கு வருகிறார். இவர்களிருவரும் ஒரே குடிலில் இருப்பதை நான் அறியவில்லை" என்றான். அவன் குழம்பிப்போயிருந்தான். "செய்தியை நான் கூறிவிட்டேன் என்று சொல்வதா?" என்று கேட்டான். பூர்ணை ஒன்றும் சொல்லவில்லை.

பிறிதொரு ஏவலன் அணுகி வந்து "மத்ரநாட்டு அரசி விஜயைக்கு அரசரின் தூதுடன் வந்துள்ளேன்" என்றான். முதல் ஏவலன் அவன் தோளில் தட்டி "ஏற்கெனவே நான் அறிவித்திருக்கிறேன்" என்றான். அவன் "என் பணி..." என்று குழம்ப "இவளிடம் சொன்னால் போதும்" என்றான் முதல் ஏவலன். "காசிநாட்டு அரசி பலந்தரையிடம் நீங்கள் உங்கள் செய்தியை அறிவிக்கலாம். அவர்கள் தங்கள் மூத்தவர்களுடன் அக்குடிலில் இருக்கிறார்கள்" என்று பூர்ணை சொன்னாள். "முறைப்படி அது அஸ்தினபுரியின் பகுதி. அங்கு இந்திரப்பிரஸ்தத்தின் ஏவலனாக நான் செல்ல அனுமதி உண்டா என்று தெரியவில்லை. இன்னமும் நமது அரசர் அஸ்தினபுரி ஆட்சியை முறைப்படி கைக்கொள்ளவில்லை. அஸ்தினபுரி பேரரசர் திருதராஷ்டிரர் ஆட்சியில்தான் உள்ளது" என்றான் ஏவலன்.

“இந்த முறைமைச்சிக்கல்களுக்கு நான் ஒன்றும் கூற முடியாது” என்று பூர்ணை சலிப்புடன் சொன்னாள். ஏவலன் “நன்று, நமக்குரிய பணியை ஆற்றிவிட்டோம். அரசர்களிடம் அதை தெரிவிப்போம்” என்று சொல்லிவிட்டு இன்னொருவனின் தோளில் தட்டினான். இருவரும் கிளம்பிச்சென்றார்கள். பூர்ணை உள்ளே சென்று அரசியரைப் பார்த்தாள். அவர்களின் முகங்கள் முகத்திரைகளுக்குள் விழித்திருப்பது தெரிந்தது. எப்படி இப்படி அமரமுடிகிறது? உளநலம் குன்றியவர்களால் மட்டுமே அப்படி நெடுநேரம் செங்குத்தாக அமரமுடியும். அவர்களின் உள்ளத்தின் இறுக்கம் உடலிலும் அமைந்துவிடுகிறது. அவர்களின் உள்ளம் ஓய்வுகொள்வதே இல்லை. அவள் அவர்களை நோக்கியபடி சற்று நேரம் நின்றாள். அவளுக்கு சிறு அச்சமொன்று ஏற்பட்டது. இள அகவையிலிருந்து அவள் அறிந்த அரசியல்ல அவள் என தோன்றியது.

பூர்ணை வெளிவந்து குடில் வாயிலில் சிறு மூங்கில் பீடத்தில் அமர்ந்தாள். ஒன்றும் நிகழாமல் பொழுது கடந்துகொண்டிருந்தது. வெயில் முற்றத்தில் நிறைந்து நின்றது. ஓசையின்றி வெயில் பொழிவதன் விந்தையை அவள் ஒரு கணத்தில் கண்டாள். மண்ணை வெம்மை கொள்ளச்செய்து, இலைகளை ஒளிரவைத்து, அனைத்து உயிர்களையும் துலங்க வைக்கும் பொழிவு முற்றிலும் ஓசையின்றி நிகழ்கிறது. முற்றிலும் ஓசையின்றி எனும் சொல்லை அவள் தனக்குள் சொல்லிக்கொண்டாள். முற்றிலும் ஓசையின்றி. முற்றிலும் ஓசையின்றி நிகழ்பவை மிகமிக மென்மையானவை. மென்மையானவை எங்கும் முரண்கொள்ளாதவை. எதிலும் உரசிக்கொள்ளாமல் எதிலும் முட்டிக்கொள்ளாமல் இயங்குபவை. உயவு போடப்பட்ட கதவுகள்போல.

வெண்கலத்தாலான பொருட்களைப்போல. இது வெள்ளி. இது வெண்பளிங்கு.

வெயிலைப் பார்த்தபடி அமர்ந்திருந்தபோது அவள் உள்ளம் விரிந்து விரிந்து சென்று அமைதியடைந்தது. விரியும்போது அடர்த்தி குறைந்துவிடுகிறது. குவிகையில் கூர் எழுகிறது. எடை உருவாகிறது. செறிவு நிகழ்கிறது. விரிகையில் அனைத்தும் தளர்ந்து எடையிழந்துவிடுகின்றன. வெம்மையழிந்து குளிர்கொள்கின்றன. அவள் விழிகள் மெல்ல சரிந்தன. துயிலில் என தலை அசைந்தது. ஆனால் உள்ளம் ஓடிக்கொண்டேதான் இருந்தது. அவள் அங்கிருப்பதை அவளே நோக்கிக்கொண்டிருந்தாள். அவளுடைய இன்னொரு துளி சிபிநாட்டில் இருந்தது. அங்கே அவள் சிறுமியாக இருந்தாள். அங்கே எங்கும் வெயில்தான் நிரம்பி அலைகொண்டிருக்கும். வெயிலைப்பற்றித்தான் அவர்களின் மொழியில் பெரும்பாலான பழமொழிகள். அங்குள்ள மரங்களின் இலைகள் வெயிலில் வாடுவதில்லை. அங்குள்ள குழந்தைகள்கூட வெயிலில் துன்புறுவதில்லை. அந்த மண் வெயிலில் வறுபட்டுக்கொண்டே இருப்பது. ஆகவே மிகமிகத் தூய்மையானது. அங்கே எதையும் நீரில் கழுவுவதில்லை. ஆடைகளையும் கலங்களையும்கூட வெயிலில் வைத்து உலரச்செய்து புழுதிதட்டி எடுத்துக்கொள்வார்கள். அனைத்தையும் தூய்மைப்படுத்தும் பொழிவு அது.

இத்தனைக்குப் பிறகும் வெயில் பொழிந்துகொண்டுதான் இருக்கிறது என்று அவளுக்குத் தோன்றியது. போர்ச்செய்திகள் வந்துகொண்டிருந்த நாட்களில் ஒவ்வொரு நாளும் புலரியின் இளவெயிலுக்காக அவள் ஏங்கினாள். இரவெல்லாம் தொடர்ந்து மழை பெய்து அரண்மனைச் சுவர்களும் முற்றமும் குளிர்ந்து

விறைத்திருந்தன. அதற்கு முன்னரும் அவள் பெருமழைகளை கண்டதுண்டு என்றாலும் மழையிலிருந்து அத்தனை கடுங்குளிர் எழுமென்று அவள் அறிந்ததில்லை. மரவுரிகளை மேலும் மேலும் உடல் மேல் போர்த்திக்கொண்டாலும்கூட உள்ளிருந்து குளிர் வெளிவந்து தசைகளை விதிர்க்கச் செய்தது. எலும்புத்தண்டுகள் உலோகம் எனக் குளிர்ந்துவிட்டவை போலிருந்தன. குளிரில் விரல் மூட்டுகள் வலிகொண்டன. பற்கள் கிட்டித்துக்கொண்டு தாடை வலியெடுத்தது. பகலில்கூட நெடுநேரம் கதிரொளி எழவில்லை.

முதல் கதிர் எழுந்து சற்றே முற்றம் துலங்குகையில் அவள் சென்று அவ்வெயிலில் அமர்ந்துகொண்டாள். வெயில் அவள் மேல் பொழிந்து நெடுநேரத்திற்குப் பின்னரே மெல்லிய வெம்மையை உணரமுடிந்தது. அது குருதியை சூடாக்கியது. எண்ணங்களை அசைவு கொள்ளச்செய்தது. ஈரத்தை உதறி சிறகுகள் கொண்டு ஒவ்வொரு சொற்களாக முளைத்து எழுந்து பறக்கத்தொடங்கின. ஆனால் உடனே முகில்வாயில்கள் ஓசையிலாது மூடிக்கொள்ள வெயில் பொழிவு அறுபட்டது. ஒவ்வொரு இலையாக இருண்டமைய நிலம் கருமை கொண்டு மறைந்தது. தொடர்ந்து நின்று பெய்துகொண்டிருந்து மழை. ஒவ்வொரு துளி வெயிலுக்கும் அவள் முற்றத்திற்கு ஓடிவந்தாள். வெயிலில் அமர்ந்து விழிமூடிக்கொள்கையில் மெல்ல அனைத்திலிருந்தும் விடுபட்டாள்.

தேவிகை சிபிநாட்டில் இருந்திருந்தால் அவளை ஆடையின்றி வெயிலில் அமரச்செய்திருப்பார்கள் மூதன்னையர். வெயில் அனைத்தையும் உலரச்செய்யும். தூய்மைப்படுத்தும். விழியிமைகளினூடாக, தோலினூடாக உள்ளே செல்லும். அகத்தில் ஒளியாக நிறையும். வெயிலாட்டு சிபிநாட்டின்

உவகைகளில் ஒன்று. அதுவே மருத்துவமும் கூட. அங்கே அத்தனை விலங்குகளும் வெயிலில் விழிசொக்கிக் கிடக்கும். சிபிநாட்டிலிருந்து வந்தபின் ஒருநாளாவது தேவிகை வெயிலில் அமர்ந்திருப்பாளா? இங்கே அரசியருக்கு திறந்த வானமே இல்லை. அவர்களை மாளிகைகளும் பல்லக்குகளும் பட்டுக்குடைகளும் முகத்திரைகளும் ஆடைகளும் அணிகலன்களும் மூடியிருக்கின்றன.

உபப்பிலாவ்யத்திலிருந்து அவர்கள் கிளம்புவதற்கு முந்தையநாள் வரை தொடர் மழைப்பொழிவு இருந்தது. முக்தவனத்திற்கு வந்தபின்னர்தான் பூர்ணை வெம்மையை பெருக்கும் வெயிலை பார்த்தாள். அவள் விழிதிறந்து சரியும் இமைகளுடன் வெயிலை நோக்கிக்கொண்டிருந்தாள். தரை வெம்மை கொண்டு கூழாங்கற்கள் ஒவ்வொன்றும் நிறம் மாறின. நிழல்கள் குறுகி அணைந்தன. காற்றில் பஞ்சுச் சருகுகளுடன் சிறிய விதைகள் பறந்தலைந்தன. மணியோசையுடன் ஏவலர்கள் இருவர் பசுக்களை கூட்டிச் சென்றனர். செவிகளை அடித்தபடி சிறுமணி ஓசையுடன் அவற்றின் கன்றுகளும் பின்னால் சென்றன. அவற்றின் மென்மையான மயிரடர்ந்த முதுகின்மேல் வெயில் எண்ணையென வழிந்து மெருகு காட்டியது. அவள் துயிலில் மேலும் மேலும் ஆழ்ந்தாள். அவளுக்குள் வெயில் நிறைந்திருந்தது.

அப்பாலிருந்து சங்கொலி கேட்க அவள் எழுந்து மேலாடையை சீர்செய்து மார்பின்மேல் கைகளைக் கோத்தபடி நின்றாள். ஒரு பல்லக்கு அசைந்து அருகணைந்தது. அதன் முகப்பில் சங்கொலியுடன் காவல்வீரன் ஒருவன் வந்தான்.

பல்லக்கின் பின்புறம் நான்கு வீரர்கள் கைகளில் வேலுடன் நடந்து வந்தனர். பல்லக்குத் திரைகள் நலுங்கி அசைந்தன. அதிலிருந்த மின்படைக்கொடி காற்றிலாது தொங்கிக்கிடந்தது. பல்லக்கு அருகணைந்து நிற்க அவள் கைகூப்பி தலைவணங்கினாள். பல்லக்கை மெல்ல தரையில் வைத்தனர் போகியர். ஒருவன் திரைவிலக்க உள்ளிருந்து சகதேவன் இறங்கினான். தொடர்ந்து யுதிஷ்டிரன் இறங்கி தன் மேலாடையை சீர்செய்தபடி குடிலை கூர்ந்து நோக்கினார்.

பூர்ணை முன்னால் சென்று தலைவணங்கி முகமன் ஏதும் உரைக்காமல் நின்றாள். "உன் பெயர்தான் பூர்ணையா?" என்றார். "ஆம் அரசே, நான் சிபிநாட்டவள். பேரரசியின் செவிலி. முன்பு பலமுறை தங்களைக் கண்டதுண்டு" என்றாள். யுதிஷ்டிரன் விழிகளைச் சுருக்கி "ஆம், உன் முகம் பார்த்ததும் உன்னை பலமுறை கண்டிருப்பதை நினைவுகூர்கிறேன். உன் பெயர் என் நினைவில் இல்லை" என்றார். "அரசிக்குரிய சீர்பொருட்களுடன் சிபிநாட்டிலிருந்து இங்கு வந்தவள் நான். அன்று அந்த சேடியர்நிரையை தலைமை கொண்டேன்" என்றாள். "ஆம், நினைவுள்ளது" என்று பொருட்டின்றி கூறிய யுதிஷ்டிரன் "அரசி எந்நிலையில் இருக்கிறாள்?" என்றார். "சொல்லறிகிறார்" என்றாள் பூர்ணை.

யுதிஷ்டிரன் அவளை கூர்ந்து நோக்கி "நீ நூல்கற்றவளா?" என்றார். "ஆம்" என்று பூர்ணை சொன்னாள். யுதிஷ்டிரன் திரும்பி சகதேவனிடம் "வருக!" என்று சொல்லி குடிலுக்குள் நுழைந்தார். சகதேவனும் உடன் நுழையப்போய் ஒருகணம் தயங்கி பூர்ணையிடம் "இரு அரசியரும் உள்ளே இருக்கிறார்களா?" என்றான். "ஆம், உள்ளே இருக்கிறார்கள்" என்றாள் பூர்ணை. யுதிஷ்டிரன் நின்று "வருக!" என்று

கைகாட்டிவிட்டு உள்ளே நுழைந்தார். பூர்ணை முற்றத்திலேயே நின்றாள். சகதேவன் "அவர்கள் பேசுகிறார்களா?" என்றான். பூர்ணை "இல்லை" என்றாள். "நீயும் உள்ளே வா" என்றான் சகதேவன். அவள் உடன் நுழைந்து கதவோரமாக நின்றுகொண்டாள்.

யுதிஷ்டிரன் குடிலுக்குள் நுழைந்தபோது இரு அரசியரும் அதை அறியாதவர்போல் அமர்ந்திருந்தனர். ஒருகணம் அவர்களை அரசியரென்று உணராதவர்போல் யுதிஷ்டிரன் தடுமாறினார். திரும்பி பூர்ணையைப் பார்த்து "அவர்கள் நலமாக இருக்கிறார்களா?" என்றார். பூர்ணை விழிநிமிர்த்தி "மைந்தரை இழந்த அன்னையர் எவ்வண்ணம் இருக்க இயலுமோ அப்படி இருக்கிறார்கள்" என்றாள். அக்குரலிலிருந்த கூர்மை யுதிஷ்டிரனை திடுக்கிட வைத்தது. திரும்பி இரு அரசியரையும் பார்த்தார். அவர்களிருவரும் எழுந்து முகமன் உரைக்கவில்லை என்பதை அதன் பின்னரே அவர் உணர்ந்தார். அவரை அறியாமலேயே அவர் உடல் வெளியே செல்லும்பொருட்டு அசைவுகொண்டது. அதை உணர்ந்து அவரே தடுத்தார். அரைக்கணம் அவர் நோக்கு பூர்ணையை வந்து தொட்டது. அத்தடுமாற்றத்தை மறைக்க விரும்பி எதையாவது பேச விழைந்தார்.

"கரேணுமதி இங்கே வரவில்லையா?" என்றார். "அவர் சேதிநாட்டுக்குச் சென்று நெடுநாட்களாகின்றன. தான் எவரென்றே தெரியாதவராக நோயுற்றிருக்கிறார்" என்றாள் பூர்ணை. "ஆம், மறந்துவிட்டேன்... அவள் சென்று நீணாள் ஆகிறது" என தடுமாற்றத்துடன் யுதிஷ்டிரன் சொன்னார். "அங்கே உத்தரையும் இருக்கிறாள் இல்லையா?" என்றார். "அரசே, விராடநாட்டு இளவரசி துவராகையில் உடல்நலம்

இல்லாமலிருக்கிறார்.” யுதிஷ்டிரன் “ஆம், செய்தி சொல்லப்பட்டது... அவள் கருவுற்றிருக்கிறாள். நீண்ட பயணம் நன்றல்ல... துவாரகையிலிருந்து சுபத்திரை வந்துவிட்டாளா?” என்றார். “நேற்றுமாலையே வந்துவிட்டார்... தனிக்குடிலில் இருக்கிறார்” என்றாள் பூர்ணை. அவருடைய தடுமாற்றம் அப்பேச்சால் மட்டுப்பட்டது. மீண்டும் அவர்களை நோக்கி தேவிகையை அடையாளம் கண்டுகொண்டு அவளருகே சென்று “அரசி” என்றார். தேவிகை அக்குரலை கேட்கவில்லை. மீண்டும் உரக்க “அரசி!” என்று அவர் அழைத்தார்.

பூர்ணை முன்சென்று தேவிகையின் தோளைப்பற்றி மெல்ல உலுக்கி “அரசி!” என்றாள். தேவிகை மெல்ல விழிப்புகொண்டு “யார்?” என்றாள். நீண்டநாட்களுக்குப் பின் அக்குரலைக் கேட்பதுபோல் உணர்ந்து பூர்ணை திடுக்கிட்டாள். “அரசர் தங்களை பார்க்க வந்திருக்கிறார்” என்று கூறி முகத்திலிட்ட திரையை பின்னால் இழுத்தாள். “அரசரா?” என்றபடி எழுந்த தேவிகை யுதிஷ்டிரனை ஒருகணம் நேருக்கு நேர் பார்த்தாள். யுதிஷ்டிரனும் அவள் முகத்தைப் பார்த்து வாய் திறந்து செயலற்று நின்றார். அவள் முகத்திரையை மீண்டும் இழுத்து தன் முகத்தின் மேல் விட்டுக்கொண்டு மஞ்சத்தில் மீண்டும் அமர்ந்தாள். இரு கைகளையும் விரல்கோத்து மடிமேல் வைத்துக்கொண்டு தோள்களை குறுக்கிக்கொண்டாள்.

யுதிஷ்டிரன் “அரசி!” என்றார். தேவிகை மறுமொழி கூறவில்லை. “என்ன ஆயிற்று அவளுக்கு? அவள் உள்ளம் நிலையில் இல்லையா?” என்றார். பூர்ணை “தாங்கள் வந்திருப்பது அரசமுறைமையின் பொருட்டென்றால் அதற்குரிய சொற்களை அரசியிடம் கூறலாம். அரசி இன்று இந்த நிலையில் தங்கள் முன் உள்ளார்” என்று கூறினாள்.

யுதிஷ்டிரன் அவள் முகத்தை சில கணங்கள் கூர்ந்து பார்த்துவிட்டு ஆம் என்பதுபோல் தலையசைத்தார். பின்னர் தேவிகையை நோக்கி "அரசி, இங்கு நாங்கள் நீர்க்கடனுக்கான நோன்பு பூண்டு அமர்ந்திருக்கிறோம் என்பதை அறிந்திருப்பாய். நமது மைந்தர் விண்ணேகும்பொருட்டு நாளை இங்கு நீர்க்கடன்கள் செய்யப்பட இருக்கின்றன. புலரியில் உன் கையிலிருந்து நீர் பெற்று சொல் கொண்டு செல்லும்பொருட்டு இங்கு வருவேன்" என்றார்.

"நமது மைந்தனைக் குறித்து..." என்றபின் மேற்கொண்டு என்ன சொல்லவேண்டுமென்று அறியாது திகைத்து பின் சொல்திரட்டி "நம் மைந்தன் வீரர்களுக்குரிய இறப்பை அடைந்தான். ஒளிர்ந்த வானை நோக்கி போர்க்களத்திலிருந்து எழுந்தான். மூச்சுலகில் நம் சொற்களுக்காக காத்திருக்கிறான். நம் கையிலிருந்து அன்னமும் நீரும் பெற்று மூதாதையர் உலகுக்கு செல்லவிருக்கிறான். அவன் அங்கு நிறைவுறுக! பிறவிச்சுழலில் அமைந்து முழுமையுற அன்னையென்றும் தந்தையென்றும் நின்று மைந்தனுக்கென நாம் ஆற்றுவதற்கிருப்பது இது மட்டுமே" என்றார். உரிய சொற்களை முறைப்படி கூறிவிட்ட நிறைவை அடைந்து பூர்ணையைப் பார்த்து "இச்சொற்களை அவர்கள் கேட்கிறார்களா?" என்றார்.

"ஆம் அரசே, அவர்கள் கேட்கிறார்கள்" என்று பூர்ணை சொன்னாள். எரிச்சலுடன் "பொருள் கொள்கிறார்களா?" என்றார் யுதிஷ்டிரன். பூர்ணை "பொருள் கொள்கிறார்கள். நீங்கள் எண்ணியவாறே பொருள் கொள்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது" என்றாள். "எண்ணியவாறு சொற்களுக்கு பொருள் கொள்வதற்குப் பெயர்தான் உரையாடல் என்பது" என்றார் யுதிஷ்டிரன். பூர்ணை "எப்போதேனும் பெண்டிர் அவ்வண்ணம்

பொருள் கொண்டிருக்கிறார்களா?" என்றாள். யுதிஷ்டிரன் அவள் கண்களையே நோக்கி நின்றார். "அல்லது அவர்களின் சொற்கள் உங்களால் பொருள் கொள்ளப்பட்டுள்ளனவா?" என்றாள்.

"நீ எவரிடம் பேசுகிறாய் என்று நினைவிருக்கிறதா?" என்று உரத்த குரலில் யுதிஷ்டிரன் கேட்டார். "ஆம். குருக்ஷேத்ரப் போரில் பெருவெற்றி கொண்டு இந்திரப்பிரஸ்தத்துக்கும் அஸ்தினபுரிக்கும் மணிமுடி சூடி அமரப்போகும் பாரதவர்ஷத்தின் முதற்பெரும் சக்ரவர்த்தியிடம் பேசிக்கொண்டிருக்கிறேன்" என்று அவள் சொன்னாள். அக்குரலில் இருப்பதென்ன என்று அறியாமல் யுதிஷ்டிரன் சில கணங்கள் நோக்கிக்கொண்டிருந்தார். பின்னர் "செல்க!" என்பதுபோல் கைவீசி திரும்பி சகதேவனிடம் "இளையோனே, உரிய சொற்களை நீயும் கூறிவிட்டு வருக! இதுவும் நமக்கு தெய்வங்கள் ஒருக்கிய ஒரு தருணம் போலும்" என்றார். சகதேவன் பூர்ணையை நோக்கிவிட்டு யுதிஷ்டிரனிடம் "ஆம்" என்றான்.

யுதிஷ்டிரன் வெளியேற சகதேவன் "விஜயை..." என்றான். விஜயை அசையாமல் அமர்ந்திருந்தாள். "விஜயை" என்று மீண்டும் அவன் அழைத்தான். "விஜயை, நான் உன்னிடம் பேசும்பொருட்டு வந்தேன். விஜயை, என் குரலை கேட்கிறாயா? விஜயை" என்றான். அவள் அசைவிலாது ஒலியிலாது அமர்ந்திருக்க அவன் தவிப்புடன் பூர்ணையை பார்த்தான். பின்னர் "அவளுடைய சேடி எங்கே?" என்றான். "இளஞ்சேடி ஒருத்தியே உடனிருக்கிறாள். அவள் அப்பால் நிற்கிறாள்" என்றாள் பூர்ணை. "அவளை அழைத்து என் வருகையைக் கூறு" என்றான். பூர்ணை அருகணைந்து விஜயையின் தோளைப் பற்றி மெல்ல உலுக்கி "அரசி" என்றாள். "ஆம்" என்று அவள்

கூறினாள். "தங்கள் அரசர் தங்கள் சொல்பெறும்பொருட்டு வந்திருக்கிறார்" என்றாள் பூர்ணை. விஜயை "ஆம்" என்று மீண்டும் கூறினாள்.

சகதேவன் "விஜயை, நான் உன் துணைவன். உன்னிடம் கூற எனக்கு சொல்லெதுவும் இல்லை. நம் மைந்தனின் பொருட்டு நீ அடையும் துயரத்தை நானும் அடைகிறேன். சற்றும் குறைவிலாமல்... அதுவன்றி சொல்வதற்கு ஒன்றுமில்லை என்னிடம்" என்றான். சில கணங்கள் அவளுடைய எதிர்வினைக்காக எதிர்பார்த்துவிட்டு "நீ என்னை தீச்சொல்லிட விழைந்தால் அவ்வாறே செய்யலாம். பழியென ஏதேனும் கூற விரும்பினாலும் அதுவும் ஆகுக!" என்றான். மீண்டும் சில கணங்கள் காத்திருந்துவிட்டு "நீ அனலென எரிந்துகொண்டிருப்பாய் என்று எண்ணினேன்" என்றான்.

அவள் முகத்தை நோக்கி அவன் நின்றான். பின்னர் உடைந்த குரலில் "நான் முன்னரே இறந்துவிட்டவன்போல் உணர்கிறேன். ஒரு தருணத்திலும் உளம் மறந்து துயிலவில்லை. இப்பெருந்துயரில் மீட்பிலாது சிக்கியிருக்கிறேன். இப்புவியில் எவரிடமேனும் என் தன்னிலையை முற்றழித்து பேசமுடியும் என்றால் அது உன்னிடம்தான். ஒருபோதும் உன்னிடம் அவ்வாறு நான் பேசியதில்லை என்று உன்னிடம் சொல்லியிருக்கிறேன். இங்கெல்லாம் ஐவரில் ஒருவனாக மட்டுமே நின்றிருக்கிறேன். உன்முன் இப்போது முற்றிலும் தனிமையாக வந்து நின்றிருக்கிறேன்" என்றான்.

மீண்டும் சற்று நேரம் அவள் மறுமொழிக்காக எதிர்பார்த்துவிட்டு "இவ்வாறு உன்முன் வந்து நின்றுள்ளேன் என்பதையாவது நீ ஏற்றுக்கொள்க! இங்கு நின்றிருப்பவன் இறந்தகாலமும் எதிர்காலமும் இல்லாத எளிய மானுடன்.

துயர் மட்டுமே தனக்கென கொண்ட சிற்றுயிர். அதையாவது நீ அறிந்திருக்கிறாயா? அது மட்டும் நான் அறிய விரும்புகிறேன்" என்றான். உடலில் மெல்லிய நடுக்கத்துடன், நெஞ்சில் கூப்புவதுபோலக் குவிந்த கைகளுடன், அவன் விஜயையின் எதிர்வினைக்காக காத்து நின்றான். அவன் முகம் வலிப்புகொண்டதுபோல் இழுபட்டது. பற்கள் வெளித்தெரிந்தன. கண்ணீர் வழிந்து முகவாய் நுனியில் துளித்து நின்றது. "எச்சொற்களையும்விட நீ அளிக்கும் இந்த சொல்லின்மை கொடியது. நன்று, அதற்கு தகுதியானவனே. பிறிதொன்றில்லை" என்றபின் வெளியே சென்றான்.

விஜயை மெல்லிய முனகலோசை எழுப்பியதுபோல் தோன்ற திடுக்கிட்டு திரும்பிப்பார்த்தான். ஒரு சொல் எழக்கூடுமென்பதுபோல் எதிர்பார்த்து நின்றான். பின்னர் பூர்ணையைப் பார்த்து ஏதோ சொல்லெடுக்க வாய் திறந்தபின் திரும்பி வெளியே சென்றான். பூர்ணை விஜயையின் முகத்தின் மீது சரிந்திருந்த ஆடையை சீரமைத்துவிட்டு அவனுடன் வெளியே சென்றாள். அவன் செல்கையில் குடிலின் வாயில் மூங்கிலை பற்றிக்கொண்டு நின்று தன்னை நிலைப்படுத்திக்கொண்டான். அவன் உடல் அப்போதும் நடுங்கிக்கொண்டிருந்தது.

குடிலுக்கு வெளியே யுதிஷ்டிரன் அவனுக்காக காத்து நின்றிருந்தார். பூர்ணை வெளியே சென்று கைகளை நெஞ்சில் சேர்த்து நின்றாள். "இருவரும் இந்நிலையில்தான் அன்றும் இருந்தார்களா?" என்றார் யுதிஷ்டிரன். "ஆம் அரசே, நால்வரும் இவ்வாறுதான் இருக்கிறார்கள்" என்று அவள் சொன்னாள். "மைந்தரின் இறப்புக்குப் பின் இங்ஙனம் ஆனார்கள் போலும்" என்றார் யுதிஷ்டிரன். "இல்லை அரசே, அவர்கள் போர்

தொடங்கும்போதே உளமழியத் தொடங்கிவிட்டிருந்தனர். அபிமன்யுவின் இறப்புநாளில் நால்வருமே முற்றிலும் சொல்லழிந்தனர்" என்றாள் பூர்ணை.

யுதிஷ்டிரன் வியப்பில் புருவங்கள் உயர அவளை பார்த்தார். பின்னர் "பலந்தரை எங்கே?" என்றார். "அவர்களும் நிலையழிந்தே இருந்தார்கள். இன்று வந்திறங்குகையில் மட்டுமே அவரிடம் சிறு மாற்றத்தை கண்டேன். தன் உடன்பிறந்தவரைக் காணும்பொருட்டு அங்கு கிளம்பிச்சென்றார்" என்றாள். "ஆம், கூறினார்கள். முறைப்படி திருதராஷ்டிரரின் ஒப்புதல் பெற்ற பின்னரே பீமன் அங்கு சென்று அவளை சந்திக்க இயலும். அவன் சென்று சந்திப்பான் என்று தோன்றவில்லை" என்றார். சகதேவன் "இளையவர் யாதவ அரசியை சென்று சந்திக்க வேண்டுமல்லவா?" என்றான். "ஆம், அதுவும் முறைதான்..." என்ற பின்னர் "அவள் எந்நிலையில் இருக்கிறாள் என்று தெரியவில்லை. பிறிதொரு நிலையிலிருக்க வாய்ப்பில்லை" என்று கூறி பல்லக்கை நோக்கி சென்றார்.

பூர்ணை கைகூப்பியபடி நின்றாள். அவர்கள் பல்லக்கிலேறிக்கொண்டு போகிகளின் மெல்லிய மூச்சொலிகளுடன் அகன்று செல்வதை நோக்கிக்கொண்டிருந்தாள். விஜயையின் சேடியான சந்திரிகை அருகே வந்து "அடுமனையிலிருந்து இன்நீர் கொண்டுவருவதற்காக சென்றிருந்தேன்" என்றாள். "நன்று. அவர்களுக்கு இப்போது தேவைப்படும். வருக!" என்றபடி பூர்ணை உள்ளே நுழைந்தாள். அவளுக்குப் பின்னால் வந்த சந்திரிகை "அரசர் வந்திருந்தபோது அரசியர் ஏதேனும் கூறினார்களா?" என்றாள். பூர்ணை "இல்லை" என்றாள்.

இன்நீரை சிறுகுவளையில் விட்டு விஜயையை அணுகி அவள் முகத்திரையை விலக்கி “அருந்துக, அரசி!” என்று கொடுத்தாள் சந்திரிகை. அவள் அதை உணரவில்லை. “அருந்துக, அரசி...” என்று கோப்பையை அவள் வாயருகே கொண்டுசென்றபோது விழிப்படைந்து இரு கைகளாலும் அதை பற்றிக்கொண்டு ஓரிரு மிடறுகள் உண்டாள். பின்னர் எஞ்சிய நீர் வாயிலிருந்து வழிய தலைகுனிந்தாள். “இன்னும் ஒரு மிடறு, அரசி” என்றாள் சந்திரிகை. பூர்ணை இன்நீர் கோப்பையுடன் தேவிகையின் தலையாடையை மெல்ல விலக்கியபோது அவள் உள்ளே உடல் இறுகி, கழுத்து நரம்புகள் புடைக்க, பற்கள் ஒன்றையொன்று இறுகக் கடித்திருக்க அமர்ந்திருப்பதை கண்டாள். அவள் கன்னத்தை தட்டி “அரசி! அரசி!” என்றாள். இன்நீர் கோப்பையின் விளிம்பையே அவள் பற்களுக்கிடையில் வைத்து நெம்பி வாயை திறந்தாள்.

தோளைப் பிடித்து பலமுறை உலுக்கியதும் தேவிகை உடல் தளர்ந்தது. “இன்நீர் அருந்துக, அரசி!” என்றாள் பூர்ணை. தேவிகையிடமிருந்து மறுமொழி எதுவும் வரவில்லை. கோப்பையை திரும்பி சந்திரிகையிடம் நீட்டியபின் தேவிகையின் இரு கைகளும் பற்றி தூக்கினாள். மெலிந்த விரல்கள் இறுக சுருண்டு நகங்கள் உள்ளங்கை சதைக்குள் ஆழப் புதைந்திருந்தன. “இன்நீர் ஊட்டுங்கள்” என்றாள் சந்திரிகை. “இப்போது உணவூட்டுவது நன்றல்ல. உடல் இறுகியிருக்கிறது. ஒருவேளை வலிப்பு வரக்கூடும்” என்று பூர்ணை கூறினாள். தேவிகையின் முதுகை வருடியபடி “இன்நீர்க் கலத்தை அங்கு வைத்துவிட்டுச் சென்று அகிபீனா கொண்டுவருக!” என்றாள். “ஆம்” என்றபின் சந்திரிகை வெளியே சென்றாள்.

நீர்ச்சுடர் - 47

பகுதி ஏழு : தீராச்சுழி – 3

பூர்ணை குடிலுக்கு வெளியே முகமனுரையை கேட்டாள். "அரசியருக்கும் சேடியருக்கும் வணக்கம்" எனும் குரல் சற்று அயலாக ஒலிக்கவே சந்திரிகையிடம் விழிகளால் பார்த்துக்கொள் என்று காட்டிவிட்டு குடிலிலிருந்து வெளியே வந்தாள். அங்கு நின்றிருந்த மருத்துவர் அவளுக்கு முகமறியாதவராக இருந்தார். அவர் மீண்டும் தலைவணங்கி "நான் தங்களைத்தான் பார்க்க வந்தேன். அரசியர் இருக்கும் நிலையை நான் அறிவேன். தாங்கள் ஒருமுறை எங்கள் அரசியை வந்து பார்க்க இயலுமா?" என்றார். பூர்ணை திரும்பி நோக்கி "நான் இங்கே இருக்கவேண்டியிருக்கிறது. அவர்கள் உடல்கள் நைந்துகொண்டிருக்கின்றன. உள்ளமும் முற்றிலும் விசையழிந்து நின்றுவிட்டிருக்கிறது" என்றாள். "தாங்கள் எங்கள் அரசியரை நோக்கி ஏதேனும் சொல்லமுடியுமா?" என்று சற்றே குரல் தணித்து கேட்டாள்.

ரமிதன் "இனி நமக்குள் பேசிக்கொள்வதற்கு ஒன்றுமில்லை, செவிலியே. அவர்களை மீட்பது மிகவும் கடினம். உள்ளம் நின்றுவிட்ட பிறகு மெல்ல உடலும் நின்றுவிடுவதே நான் கண்டது. உள்ளத்தை செலுத்தும் கலை மருத்துவர்களிடமில்லை. அது முனிவர்களாலும் தேவர்களாலும் மட்டுமே இயல்வது" என்றார். "அவ்வுடல் மேலும் நைந்துபோகாமல் பார்த்துக்கொள்ளலாமல்லவா?"

என்றாள் பூர்ணை. "ஆம், அதற்கு நிறைய மருத்துவமுறைகள் உள்ளன. ரத்தசந்தனம் தொடர்ச்சியாக பூசிக்கொண்டிருக்கலாம். நறுஞ்சுண்ணம் ஈரத்தைப் போக்கும். ஆனால் தோல் உலரவும் செய்யும். வேறு மருந்துகளும் உள்ளன.
சோற்றுக்கற்றாழையால் செய்த குழம்பு ஒன்று என்னிடம் உள்ளது. அதை அளிக்கிறேன். ஆனால் நெடுங்கால அளவில் எதனாலும் எப்பயனுமில்லை என்பதே நான் இந்நாட்களில் கண்டுகொண்டது" என்றார் ரமிதன்.

பூர்ணை பெருமூச்சுவிட்டு தலையசைத்தாள். "இப்போது நான் வந்தது தாங்கள் ஒருமுறை வந்து யாதவ அரசியை பார்க்க முடியுமா என்று அழைப்பதற்காகத்தான்" என்றார் ரமிதன். "நானா? ஏன், யாதவ அரசியுடன் அவருடைய சேடியும் செவிலியரும் இருந்தனரே?" என்றாள் பூர்ணை. "இன்று காலை அவர்கள் இங்கிருந்து கிளம்பிச்சென்றுவிட்டிருக்கிறார்கள். முற்புலரியிலேயே சென்றுவிட்டார்கள் என்று அறிந்தேன்" என்றார் ரமிதன். பூர்ணை "சென்றுவிட்டார்களா? அரசியை கைவிட்டுவிட்டா?" என்றாள். "ஆம், இங்கு இருந்த அத்தனை யாதவர்களும் நேற்றிரவு கிளம்பிச்சென்றுவிட்டிருக்கிறார்கள். அவர்களுக்குள் ஏதோ பேச்சு ஓடிக்கொண்டிருந்திருக்கிறது" என்று ரமிதன் சொன்னார். "தாங்கள் வந்து அரசியை பார்க்க வேண்டும்."

"வருகிறேன்" என்றபின் அவள் தன் மேலாடையை சீரமைத்துக்கொண்டபடி அவருடன் நடந்தாள். அவளுடன் நடந்தபடி "நானும் யாதவன்தான். என் பெயர் ரமிதன், விருஷ்ணி குடியை சேர்ந்தவன்" என்றார். பூர்ணை அவர் மேலே பேசுவதற்காக தலையசைத்தபடி உடன் நடந்தாள். "நான் இளைய யாதவருக்கு என்னை அளித்தவன். அவரிடம்

இன்றுவரை ஒரு சொல்கூட உரையாடியதில்லை. எந்தை மதுவனத்தில் பிறந்தார். இளைய யாதவருடன் துவாரகைக்கு குடிபெயர்ந்தார். மதுவனத்தில் சிறுமூங்கில் குடில்களில் வாழ்ந்தவர்கள் எங்கள் மூதாதையர். துவாரகையில் வெண்பளிங்குக் குன்று போன்ற மாளிகையில் நாங்கள் குடியிருந்தோம். எங்கள் வாழ்வு இளைய யாதவரால் அமைந்தது. ஆனால் அதை இன்று யாதவர்கள் மறந்துவிட்டிருக்கிறார்கள்" என்றார் ரமிதன்.

"நான் பிறந்தபோது எந்தை என்னை இரு கைகளிலும் ஏந்திக்கொண்டு சென்று இளைய யாதவரின் தேர் செல்லும் வழியில் வைத்து காத்திருந்தார்" என்றார் ரமிதன். "தேர் நின்று இளைய யாதவர் தலை நீட்டி என்ன செய்கிறாய் என்று உரக்க கூவ தங்கள் கைகளால் என் மைந்தனை ஒருமுறை தொட வேண்டும், அவன் பிறவிக்கொரு இலக்கு இத்தருணத்தில் உருவாக்க வேண்டும் என்றார் எந்தை. அவன் பிறவியை வடிவமைக்க நீ யார் என்று இளைய யாதவர் கேட்டார். இலக்கிலாது வாழ்வது வீண் என்று அறிந்த தந்தை நான். பிறப்பதற்கு முன்னரே இலக்கு கொண்டவர்கள் நல்லூழ் கொண்டவர்கள், அவர்கள் தேடுவதற்கு ஒன்றுமில்லை. தலை கொடுப்பதற்கான பலிபீடம் முன்னரே ஒருங்கியிருக்கிறது என்றார் எந்தை."

"இளைய யாதவர் இறங்கி எந்தை கையிலிருந்து என்னை வாங்கி என் புன்மயிர்த் தலையில் தன் உதடுகளால் முத்தமிட்டு வாழ்க என்றுரைத்து என் கைகளுக்குள் ஒரு சிறு கணையாழியை வைத்தபின் திரும்பி தேரிலேறிக்கொண்டார். அரசர் எனக்களித்த அந்தக் கணையாழி எந்தையிடமிருந்தது. எனக்கு பதினெட்டு ஆண்டு அகவை நிறைந்தபோது என்

கைகளில் அதை வைத்து உன் கைக்கு இப்போதுதான் இது பொருந்துமாறாகியிருக்கிறது என்று கூறினார். இளமையிலிருந்து நான் இளைய யாதவரின் கதைகளன்றி பிறிதொன்றையும் கேட்டதில்லை. எந்தை விழைவுப்படி இலக்கு முன்னரே வகுக்கப்பட்டவனாகவே வாழ்ந்தேன். குருக்ஷேத்ரக் களத்திலும் அவ்வாறே இருந்தேன்."

"என் தொழில் மருத்துவம். அதில் தேர்ச்சி கொள்வதே எனது போர். இக்கைகளின் வழியாக பலநூறு படைவீரர்களின் உயிரை காப்பாற்றினேன். அதைவிட பத்துமடங்கு வீரர்கள் வலியிலாது மண் நீங்க உதவினேன்" என்றார் ரமிதன். பூர்ணை "நன்று" என்று மட்டும் சொன்னாள். "போருக்குப் பின் யாதவர்களில் பெரும்பகுதியினர் கிளம்பி துவாரகைக்கும் மதுவனத்துக்கும் மதுராவுக்கும் சென்றுகொண்டிருக்கிறார்கள். போரில் பெரும்பாலான யாதவர்கள் அஸ்தினபுரியின் தரப்பிலிருந்தார்கள் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இளைய யாதவருடன் நின்றவர்கள் தனிப்பட்ட முறையில் அவருடன் உளஇசைவு கொண்ட என்னைப்போன்ற சிலரே. இப்போரில் யாதவர்களில் படைக்கலம் எடுத்துவந்தவர்கள் முக்காலும் அழிந்தனர்."

"போரில் எஞ்சியவர்கள் மிகச் சிலர். புண்பட்டவர்கள், உறுப்பிழந்தவர்கள், சித்தம் பிறழ்ந்தவர்கள், தப்பியோடி காடுகளுக்குள் அடைக்கலம் புகுந்தவர்கள் என எஞ்சியிருந்த யாதவர்கள் அனைவரும் துளித்துளியாக திரளத்தொடங்கினர். காட்டுக்குள் இரு தரப்பிலிருந்தும் யாதவர்கள் சந்தித்து அக்கணமே பகைமறந்து ஒன்றாகத் திரண்டனர். அவர்களுக்கு சிறு சிறு தலைமைகள் உருவாயின. எவ்வண்ணம் இவ்வாறு ஒற்றை எண்ணம் உருவாகிறது என்பது விந்தையானது. இந்தப்

போரே யாதவர்களை அழிக்கும்பொருட்டு உருவானது என்றும், அதை இரு தரப்பில் இருந்தவர்கள் கூடி அமைத்தார்கள் என்றும் ஒரு பேச்சு நிகழ்கிறது. யாதவர்களை அழிப்பதற்காக அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்வார்களா என்ற எளிய வினாவைக்கூட யாரும் கேட்டுக்கொள்ளவில்லை."

"வெறியுடன் ஒன்றை நம்பத்தொடங்கினால் மானுடர் முதலில் தங்கள் கல்வியையும் உசாவும் திறனையும் இழந்துவிடுகிறார்கள். அவற்றை சுருட்டிக்கட்டித் தூக்கி அப்பால் வீசிவிடுகிறார்கள் என்றுகூட சொல்லலாம். அந்நம்பிக்கை அவர்களை எவ்வகையிலோ காக்கிறது. கேடயமாகவும் ஊன்றுகோலாகவும் ஊர்தியாகவும் அதுவே ஆகிறது போலும். இன்று யாதவர்கள் நடுவே யாதவர்களை முற்றழிப்பதற்கான ஒரு சூழ்ச்சியே குருக்ஷேத்ரப் போர் என்றும், எஞ்சியிருப்பவர்கள்தான் யாதவ குலத்தை இப்புவியில் நிலைநாட்டும்பொருட்டு தெய்வங்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள் என்றும் உறுதியான எண்ணம் நிலவுகிறது" என்றார் ரமிதன்.

பூர்ணை "உயிருடன் எஞ்சியவர்கள் அவ்வாறு தெய்வங்களையோ ஊழையோ துணைக்கொள்ளாமல் இப்புவியில் எவ்வாறு வாழமுடியும்?" என்று கேட்டாள். "அதைத்தான் நானும் எண்ணினேன்" என்று அவர் சொன்னார். "ஆனால் அதனூடாக அவர்கள் தங்களை மேலும் அழித்துக்கொள்ளக்கூடும் என்று தோன்றுகையில் அஞ்சவா நகைக்கவா என தெரியவில்லை." பூர்ணை புன்னகைத்தாள். "அவர்கள் ஓடைகள் பெருகி நதியாவதுபோல இன்று பெரிய படையாக மாறிவிட்டிருக்கிறார்கள். யாதவ குலத்தை இனி காக்கும் ஆற்றல் கிருதவர்மன் ஒருவருக்கே உண்டென்றும்,

அவர் தன் நாட்டுக்கு சென்றுவிட்டாரென்றும், அங்கே யாதவர்கள் காடுகளிலிருந்து வந்து ஒரு பெரும்படையாக திரண்டுகொண்டிருக்கிறார்கள் என்றும் இங்கு செய்தி பரவியிருக்கிறது."

"கிருதவர்மன் தனது படையுடன் கிளம்பிச்சென்று துவாரகையை கைப்பற்றி முடிசூடவிருக்கிறார் என்கிறார்கள். இங்கு அத்தனை ஷத்ரிய அரசுகளும் ஆற்றல் இழந்துகிடப்பதனால் துவாரகை முன்னிலும் விசைகொண்டு பேரரசென எழுந்து பாரதவர்ஷத்தை ஆளப்போகிறதென்று நேற்று ஒரு முதியவர் சொல்லிக்கொண்டிருந்தார். எனது பிழை, இந்தப் பொருளின்மை அனைத்தையும் எதிர்த்துப் பேசியதுதான். ஆகவே மெல்ல மெல்ல என்னை அவர்கள் தங்கள் வட்டத்திலிருந்து விலக்கினார்கள். அவர்களுக்குள் என்ன நிகழ்கிறதென்று எனக்கு முற்றிலும் தெரியாமலிருந்தது. இன்று புலரியில் அரசியின் குடிலிலிருந்து எனக்கு செய்தி வந்தது, அங்கே ஏவற்பெண்டுகள் எவருமில்லை என்று. அதன்பின்னரே நானும் அறிந்தேன், இங்கு முக்தவனத்திலிருந்த யாதவர்களில் ஏழு பேர் தவிர பிற அனைவருமே இங்கிருந்து கிளம்பிச்சென்றுவிட்டார்கள் என்று."

"பிறிதொரு செய்தியும் இங்கு பரவிக்கொண்டிருக்கிறது. வடபுலம் சென்ற பலராமர் அங்கிருந்து ஒரு படையுடன் வந்துகொண்டிருப்பதாக. தனது முதல் மாணவர் துரியோதனனின் சாவுக்கு பழிநிகர் செய்யும்பொருட்டு அவர் வருகிறார் என்று சொல்லப்படுகிறது" என்றார். பூர்ணை "இப்போரிலிருந்து ஒருபோதும் மானுட உள்ளம் விலகாது போலும்" என்றாள். "ஆம், ஒரு பெரும்போர் போரின்மையை உருவாக்கும் என்று எண்ணுவோம். ஆனால் அது தற்கொலை

எண்ணத்தையே உருவாக்குகிறது. இங்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் தங்களை கொன்றுகொள்கிறார்கள். தனி மானுடர்கள் உளம் நைந்து உடல் இற்று உயிர் அழிவதை காண்கிறேன். இனி நாடுகளும் நகரங்களும் கூட அவ்வாறு அழியும்போலும்" என்றார்.

பின்னர் "நான் தங்களை அழைக்க வந்தது பிறிதொன்றுக்காக" என தொடர்ந்தார். "யாதவ அரசி எந்நிலையிலிருக்கிறார் என்பதை தாங்கள் கேட்டு அறிந்திருப்பீர்கள். மைந்தனை இழந்த பின்னர் பல நாட்கள் வெறிகொண்டவர்போல் கொதித்து கொந்தளித்துக்கொண்டிருந்தார். அவர் அருகே சென்ற அனைவரையும் கைகளாலும் படைக்கலங்களாலும் தாக்கினார். கூச்சலிட்டு அழுவதும் தன்னைத்தானே படைக்கலங்களால் புண்படுத்திக்கொள்வதும் வழக்கமாக இருந்தது. ஆகவேதான் தொடர்ந்து அகிபீனா மயக்கத்திலேயே வைக்க வேண்டியிருந்தது. நல்லவேளையாக அவர் துவாரகையில் இருந்தார். ஆனால் இப்போது நீர்க்கடனுக்கு இங்கே வந்தாகவேண்டியிருந்தது."

"இங்கு வரும் வரைக்கும்கூட அவர் எங்கு வருகிறோம் என்பதை அறியாதவராக இருந்தார். ஆனால் இன்று காலை குடிலில் விழித்தபோது அவர் மிகவும் உளத்தெளிவோடு இருக்கிறார். அத்தெளிவுதான் அச்சுறுத்துகிறது. அவருடன் பேசுமளவுக்கு கல்வி கொண்ட எவரும் சேடியர் நிரையில் இல்லை. அரசியர் எவரும் பேசும் நிலையில் இல்லை. அப்போதுதான் உங்களைப்பற்றி சொன்னார்கள். சிபிநாட்டு பூர்ணை அரசியரைவிட உளத்தெளிவு கொண்டவள் என்றார்கள். ஆகவே உங்களை அழைத்துவர வந்தேன்" என்றார் ரமிதன்.

“அரசி அனைத்தையும் அறிந்தமைந்தவராக, அனைத்து உளக்கொந்தளிப்பையும் இழந்து தெளிந்தவராகத் தெரிகிறார்.”

“அரிய தருணங்களில் அகிபீனா அவ்வாறு நோயாளருக்கு உளத்தெளிவை அளிப்பதுண்டு” என்று பூர்ணை சொன்னாள். “இது அகிபீனாவிலிருந்து வந்த எதிர்வினை அல்ல. அவர் ஏதோ ஒரு தெளிவை அடைந்திருக்கிறார்” என்றார் ரமிதன். “தெளிவு நல்லதுதானே?” என்றாள் பூர்ணை. “ஆம், ஆனால் வாழவேண்டுமென்ற தெளிவெனில் மட்டுமே அது நன்று” என்றார் ரமிதன். “வாழ்வதற்கான விழைவு அதற்குரிய அனைத்து சொற்களையும் அதுவே படைத்துக்கொள்ளும். வாழ்வுமறுப்பும் அதற்கான சொற்களை உருவாக்கிக்கொள்ளும். விழிளைக் கொண்டோ நடத்தையைக் கொண்டோ அதை கணிக்க இயலாது. தவறாக கணித்தலும் ஆகும். இதை மருத்துவர்கள் நன்கு அறிவார்கள்” என்றார் ரமிதன்.

“மிக அரிதாக உளம் கலங்கிய நோயாளிகள் எண்ணியிராக் கணத்தில் தெளிவு கொள்கிறார்கள். மகிழ்ந்து பேசுபவர்கள் உண்டு. இயல்பு நிலைக்கு முற்றிலும் மீண்டவர்கள்கூட உண்டு. உற்றவர்களுக்கும் சூழ்ந்தவர்களுக்கும் உரிய அனைத்தையும் சீரான முறையில் முடித்துவிட்டு அவர்கள் தங்களை மாய்த்துக்கொள்கிறார்கள். அறியாத மருத்துவர்கள் அந்த விந்தையை எண்ணி திகைப்பார்கள். பல தற்சாவுகளில் நீங்கள் பார்த்திருக்கலாம், அதை கண்டிருந்த எளிய உள்ளம் கொண்டோர் சாவுக்கு முன் அவர்கள் மிகத் தெளிவடைந்திருந்ததாகவும் அனைத்தும் சீரடைந்துவிட்டதென்ற நம்பிகையை அளித்ததாகவும் ஆகவே சாவு முற்றிலும் நம்பமுடியாததாக உள்ளதாகவும் கூறுவார்கள். மருத்துவரோ அந்த ஒவ்வாத் தெளிவே அதற்கான சான்றென்று

கொள்வார்கள்" என்றார் ரமிதன். பூர்ணை "ஆம், அதற்கான வாய்ப்பிருக்கிறது" என்று சொன்னாள்.

"நீங்கள் அவரிடம் பேசவேண்டும், செவிலியே" என்று ரமிதன் சொன்னார். "நீங்கள் இதை இளைய யாதவரிடம் கூறினீர்களா?" என்று கேட்டாள் பூர்ணை. "இல்லை, எனக்கு நேரிடையாக அவரிடம் பழக்கமில்லை. அவர் செல்லும்போது அகன்று பார்த்து நின்று வணங்குவது என் வழக்கம். அவரிடம் என்னால் முறையான சொற்களை எடுக்க முடியும் என்று தோன்றவில்லை. நான் தங்களை அழைத்தது அதன்பொருட்டும் கூடத்தான். நான் என்ன செய்யவேண்டும், எவரிடம் தெரிவிக்கவேண்டும் என்று நீங்களே கூறுக!" என்றார் ரமிதன். "நாம் அதை நம் உள்ளுணர்வின் பாற்பட்டே முடிவெடுக்கவேண்டும். இப்போது எண்ணித்தெளிவதெல்லாம் எவருக்கும் இயல்வதல்ல" என்றாள் பூர்ணை. "உள்ளுணர்வா? எனக்கு அது சாம்பல்மூடிக் கிடக்கிறது" என்றார் ரமிதன்.

ஒரு கணத்திற்குப்பின் பூர்ணை "இளைய பாண்டவர் பார்த்தன் வந்து யாதவ அரசியை பார்த்தாரா?" என்றாள். "ஒருமுறை" என்றார் ரமிதன். "பின்னிரவில் அவர் உள்ளே நுழையும்போது அங்கு இளைய அரசி மயக்கத்தில்தான் இருந்தார். மயங்கிய நிலையிலேயே அரசியைப் பார்த்துவிட்டு அவர் மீள்வது நன்றென்று நானும் எண்ணினேன். ஆனால் குடில் முற்றத்திற்கு அவர் வந்தபோது எவ்வகையிலோ அதை உணர்ந்தவர்போல் யாதவ அரசி எழுந்து உரக்க கூச்சலிட்டு அழுதார். மஞ்சத்திலிருந்து எழுந்து கதவை நோக்கி ஓடிவந்து அதை பிடித்து இழுத்து கட்டியிருந்த கயிறு தெறிக்க வெளியே பாய்ந்தார். இரு சேடியர் அவரை பற்றிக்கொள்ள இளைய பாண்டவர் பின்னடைந்து இருளுக்குள் புதைந்து தன் புரவியை

நோக்கி சென்றார். அவர் புரவியிலேறி வெளியே செல்லவும் யாதவ அரசி சேடியரை உதறியபடி கூச்சலிட்டுக்கொண்டு ஓடி வந்து முற்றத்தில் முகம் அறைந்து விழுந்தார். அவர்கள் சந்தித்துக்கொள்ளவில்லை. அல்லது நாமறியாத எங்கோ அவர்கள் சந்தித்துக்கொண்டனர்."

பூர்ணை நீள்மூச்செறிந்து "நான் செய்வதற்கொன்றுமில்லை என்றே தோன்றுகிறது. எனினும் முயல்கிறேன்" என்றாள். அதன்பின் அவர்கள் பேசவில்லை. அவர்களின் காலடியோசைகள் மட்டுமே ஒலித்துக்கொண்டிருந்தன.

பூர்ணை சுபத்திரையின் குடிலை அடைந்தபோது அங்கே ஏற்கெனவே ஓர் இளம் சேடி நின்றிருந்தாள். அவள் பூர்ணையை நோக்கி விரைந்துவந்து "அரசி தன் மூத்தவரை பார்க்க வேண்டுமென்று கூறுகிறார். உடனடியாக அழைத்து வரும்படி ஆணை. அவ்வாணையை தலைக்கொள்வதா என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே அரசிக்குத் தெரியாமல் இங்கு நின்றிருக்கிறேன்" என்றாள். அவள் குரல் பதறிக்கொண்டிருந்தது. "அரசி இருக்கும் உளநிலை என்னவென்று அறியக்கூடவில்லை. நான் பாஞ்சாலத்து அரசியின் சேடி. இங்கு யாரும் இல்லையென்பதனால் என்னை இங்கு வர ஆணையிட்டார்கள். யாதவ அரசியை நான் ஓரிரு முறைதான் பார்த்திருக்கிறேன். என் முகமும் அவர்களுக்கு நினைவில்லை" என்றாள்.

பூர்ணை சில கணங்களுக்குப்பின் "நான் உள்ளே சென்று யாதவ அரசியிடம் பேசுகிறேன். அதுவரை நீ இங்கே வாயிலில் என்னை எதிர்பார்த்து அமர்ந்திரு. நீ சென்று இளைய யாதவரை

அழைக்கவேண்டுமா என்பதை நான் கையசைவால் காட்டுகிறேன்" என்றாள். மருத்துவரிடம் விடைகொள்ளும் பொருட்டு தலையசைத்துவிட்டு பூர்ணை குடிலுக்குள் நுழைந்தாள். அவள் காலடி ஓசை கேட்டு தலைநிமிர்ந்த சுபத்திரையிடம் தலைவணங்கி "சிபிநாட்டு முதுசேடியாகிய என் பெயர் பூர்ணை. தங்கள் பணிக்காக இங்கு அமர்த்தப்பட்டுள்ளேன்" என்றாள். "பிறிதொருத்தி இங்கு வந்தாளே?" என்று சுபத்திரை கேட்டாள்.

அவள் குரல் முற்றிலும் மாறிவிட்டிருந்தது. எப்போதுமே அவள் குரல் சற்று தடித்தது. ஆயினும் தடித்த பெண்குரல்களுக்குரிய இனிமையும் அவளுக்கிருந்தது. தடித்த பெண்குரல் பெரியகுடம் கொண்ட வீணைக்குரிய கார்வையை சூடியிருப்பது. அவ்வினிமை முற்றாக மறைந்து ஆண்குரலாகவே அது அப்போது ஒலித்தது. மஞ்சத்தில் கால்களை சேர்த்து வைத்து மார்பில் கைகளை கட்டிக்கொண்டு நிமிர்ந்த தோள்களுடன் அவள் அமர்ந்திருந்தாள். பெரிய வெண்ணிற உடல், மற்போராளிகளுக்குரிய திரண்ட திண்தோள்கள். நீலநரம்போடிய பருத்த கைகள். கழுத்தில் ஒரு நரம்பு புடைத்து அசைந்தது. கன்னத்திலும் நீலநரம்புகள் தெரிந்தன. மின்நீலம் கலந்த சிறிய விழிகள். அவள் குழல்சுருள்கள் அவிழ்ந்து மஞ்சத்தில் விழுந்து கிடந்தன. அவள் மெலிந்திருந்தாலும்கூட பேருருக்கொண்டவளாகவே தோன்றினாள்.

"தங்கள் பணிக்காக அமர்த்தப்பட்டுள்ள மூத்த சேடி நான். எனக்கு செய்தி வருவதற்கு முன் இங்குள்ள சிறு வேலைகள் செய்யும் பொருட்டு அவள் அமர்த்தப்பட்டாள்" என்றாள் பூர்ணை. "நீ தேவிகையின் செவிலியா?" என்று சுபத்திரை கேட்டாள். "அரசியின் மூத்த தோழி. அவர்கள் வரும்போது சிபி

நாட்டிலிருந்து வந்தேன்" என்றாள் பூர்ணை. சுபத்திரை அவளை சிலகணங்கள் உற்று நோக்கியபின் "நான் என் மூத்தவரை உடனே சந்திக்கவேண்டும். அவ்விளைய பெண்ணிடம் சேதி சொன்னேன். அவளால் அவரை சந்தித்து அழைத்துவர முடியுமா என்று தெரியவில்லை. நீ சென்று அழைத்து வா" என்றாள். "ஆணை" என்றாள் பூர்ணை. "இத்தருணத்தில் மூத்தவரை சந்திப்பது அனைத்து வகையிலும் உகந்ததே."

"ஆனால் இப்போது சற்று பதற்றத்தில் இருப்பார் என்பது மட்டும்தான் நான் கூறவேண்டியது. தாங்கள் அறிந்திருப்பீர்கள், இங்கிருந்த அனைத்து யாதவக் குடிகளும் இங்கிருந்து கிளம்பிவிட்டார்கள். அவர்கள் அனைவரும் இளைய யாதவரிடம் நம்பிக்கையும் அர்ப்பணிப்பும் கொண்டு இங்கு இத்தனை நாள் இருந்தவர்கள். இவ்வண்ணம் அவர்கள் இறுதிக் கணத்தில் விட்டுச்செல்வார்கள் என்பது உகந்த செய்தி அல்ல." சுபத்திரை "அதை மூத்தவர் எவ்வகையிலேனும் பொருட்படுத்துவார் என்று எண்ணுகிறாயா?" என்றாள். "பொருட்படுத்தமாட்டார். அவருக்கு இதெல்லாமே விளையாட்டுதான். அவரிடம் நாம் எதையும் எப்போதும் சொல்லலாம்."

"ஆயினும், விளையாட்டே என்றாலும்கூட அவருக்கு ஒரு நிலைகுலைவை உருவாக்கும் இச்செய்தி என்றே தோன்றுகிறது" என்றாள் பூர்ணை. "ஏனெனில், அவர்கள் இங்கிருந்து கிளம்பியதற்கு சொல்லப்படும் ஏதுக்களில் ஒன்று மூத்தவர் படையுடன் இங்கு வருகிறார் என்னும் செய்தி. அது மெய்யல்ல. எனக்கு அது தெரியும். மூத்தவர் ஒருபோதும் இளையவருக்கு எதிராக படையுடன் வரமாட்டார். ஆனாலும் அவ்வாறு ஒரு செய்தி எழுந்தமை உகந்தது அல்ல.

கிருதவர்மன் பெரும்பகையுடன் யாதவர்களை ஒன்று திரட்டிக்கொண்டிருக்கிறார் என்பதும் வெறும் செய்தியாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை."

"எனக்கு இந்தச் செய்திகளில் எந்த அக்கறையுமில்லை. நான் இங்கிருப்பது வேறொன்றுக்காக. நான் என் மைந்தனை நேற்று கனவில் பார்த்தேன்" என்றாள் சுபத்திரை. பூர்ணை "இங்கு அனைவருமே மைந்தர்களை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சில தருணங்களில் அது கனவென்றும் சில தருணங்களில் மெய்நிகர் என்றும் தோன்றுகிறது" என்றாள். சுபத்திரை மேலும் சொல்லெடுப்பதற்குள் பூர்ணை "இங்கு அவர்கள் நிறைந்திருக்கிறார்கள். நீர்க்கடனுக்கு முந்தைய நாள் அவர்கள் தங்கள் மூத்தவர்களை அறுதியாக தொடர்பு கொள்ள முயல்வார்கள் என்றும், விடைபெறும் சந்திப்பு அது என்றும் சொல்வார்கள்" என்றாள்.

"இது அவ்வாறல்ல" என்று சுபத்திரை சொன்னாள். "ஒவ்வொரு நாளும் அவனை நான் பார்த்துக்கொண்டிருந்தேன். பலமுறை என் அருகே நின்றிருந்திருக்கிறான். என் கைகளை பற்றிக்கொண்டிருந்திருக்கிறான். விளையாட்டாக என்னை பலமுறை குடிலிலிருந்து வெளியே அழைத்துச் சென்றிருக்கிறான். ஒருமுறைகூட அவன் என்னிடம் உரையாடியதில்லை. நேற்று அவன் என்னிடம் உரையாடினான்." உணர்வுகளைக் காட்டாமல் "கூறுக!" என்றாள் பூர்ணை. "அவன் குரலை நான் நினைவுறுகிறேன். அன்னையே உனக்கு அந்த தாமரைச்சூழ்கையிலிருந்து வெளியேறும் வழி தெரியுமா என்று அவன் கேட்டான்." அவள் விழிகள் பித்துகொண்டோரின் நோக்கென அலைபாய்ந்தன.

“அவன் மிகச் சிறுவனாக இருந்தான். விளையாட்டுச் சிறுவன்... விளையாடும் சிறுவர்களிடம்தான் எத்தனை உளவிசை! எவ்வளவு உடலாற்றல்! அவர்கள் பேசுவதே இல்லை, கூச்சல்தான். நான் அவனை துரத்திக்கொண்டிருந்தேன். இருவரும் தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒரு மலர்ச்சூழ்கைக்குள் நுழைந்தோம். நீ அதை பார்த்திருக்க மாட்டாய். துவாரகையில் என் அரண்மனையின் மலர்த்தோட்டத்தில் அது அமைக்கப்பட்டிருந்தது. மலர்ச்செடிகளாலும் பாறைகளாலும் அமைக்கப்பட்ட வட்டச்சுழற்பாதை. பெண்டிர் விரும்பி விளையாடும் ஆடல். இளமையில் நான் அதிலிருந்து மிக எளிதில் வெளிவந்துவிடுவேன். ஏனென்றால் மேலிருந்து நோக்கி நோக்கி அதன் வழிகளை உளப்பாடம் செய்துவைத்திருந்தேன்.”

“அவன் உள்ளே ஓடினான். நான் துரத்திச்சென்றேன். அவனை பிடித்துவிட்டேன். இடையில் தூக்கி வைத்துக்கொண்டு அம்மலர்ச்சூழ்கையின் வட்டங்களுக்குள் நடந்து வெளிவர முயன்றேன். ஆனால் வழி குழம்பிவிட்டது. எங்கே என்று தெரியவில்லை, ஏதோ ஒரு வளைவில் ஒரே ஒரு சிறு பிழை செய்துவிட்டேன். என் உள்ளத்திலிருந்த வழிப்பாடம் இழை கலைந்துவிட்டது. நினைவுகூருந்தோறும் அது மேலும் குழம்பியது. பதற்றம் கொண்டபோது முற்றாகவே சிதறியது. திரும்பத் திரும்ப அதிலேயே சுற்றிக்கொண்டிருந்தேன். என்னால் வழி கண்டுவிட முடியவில்லை. களைத்து சோர்ந்து அமர்ந்தேன். என்ன இது இவ்வளவு எளிய ஒரு வட்டத்திலிருந்து வெளிவர இயலவில்லை என்று எண்ணினேன்...”

“வளர்ந்த பின் நான் அதில் ஆடியதில்லை. சிறுவர்கள் விளையாடுவதை உப்பரிகையில் எனது அறையிலிருந்து நான் பார்த்துக்கொண்டிருப்பேன். மாடத்தில் இருந்து பார்க்கையில் அது மிக எளிய ஒரு சுழல்பாதை என தெரியும். அதில் வழி கண்டுபிடிப்பதற்காக குழந்தைகள் முட்டி மோதுவதை பார்க்கையில் தாள முடியாத சிரிப்பு எழும். மிக அருகில் வந்து திசைமாறிச் செல்வார்கள். நின்று ஒருமுறை எண்ணினாலே கண்டுபிடித்துவிடக்கூடும் வழியை தவறவிட்டு அதன் அருகிலேயே நின்று தயங்கி மீண்டும் இறுதி வரை தேடிக்கொண்டிருப்பார்கள். அஞ்சி அங்கேயே அமர்ந்து கூக்குரலிட்டு அழும் குழந்தைகள் உண்டு. வெறிகொண்டு அலைந்து களைத்து விழுந்துவிடும் குழந்தைகள் உண்டு. தற்செயலாக வெளியே வந்துவிட்டு அதில் திகைத்து உவகைக்கூச்சலிட்டு மீண்டும் உள்ளே சென்று சிக்கிக்கொள்ளும் குழ்ந்தைகளும் உண்டு.”

“தெய்வங்கள் விண்ணிலிருந்து பார்க்கையில் மானுட வாழ்க்கை அவ்வாறுதான் தோன்றும் என்று என் சேடி ஊர்மி ஒருமுறை சொன்னாள். அதில் நான் அவ்வாறு மீட்பின்றி சிக்கிக்கொள்வேன் என்று எண்ணவே இல்லை. மீண்டும் மீண்டும் பலமுறை முயன்ற பின்னர் களைத்து அமர்ந்தேன். இறுதியாக ஒருமுறை, இம்முறை மீண்டும் ஒருமுறை, இம்முறை நிகழும் என எண்ணி எண்ணி முயன்று சலித்தேன். மைந்தன் என் தோளைத்தட்டி என் கன்னத்தைப் பற்றி அசைத்து அன்னையே உங்களுக்கு மெய்யாகவே மீளும் வழி தெரியுமா என்றான். எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. நான் இதற்கு முன்பும் வந்தேன் என்றேன். எனக்கும் வழி தெரியவில்லை என்று அவன் சொன்னான்.”

“அதன் பின் நான் விழித்துக்கொண்டேன். அனைத்தும் தெளிவடைந்திருந்தது. இத்தனை நாள் எனக்குள் இருந்த கொந்தளிப்பென்ன என்று உணர்ந்தேன். ஆகவேதான் மூத்தவரை பார்க்க வேண்டுமென்று விழைந்தேன்” என்றாள். “அவர் அதற்கு என்ன செய்ய இயலும்?” என்று பூர்ணை கேட்டாள். “நீ கற்றறிந்தவள் என்று எண்ணுகிறேன். என் மைந்தன் இங்கிருந்து வெளியேற வழி தெரியாமல் மறைந்தவன். அவன் சிக்கிக்கொண்ட மலர்ச்சூழ்கைக்குள்ளிருந்து மீளும் வழி இப்போதும் அவனுக்குத் தெரியவில்லை. இப்புவியில் அத்தனை பெரிய வினாவை எஞ்சவிட்டு மறைந்தவன் எவ்வண்ணம் விண்புகமுடியும்? அவன் அடையவேண்டியவை இங்கேதானே உள்ளன? எனில் அவனுக்கு நீர்க்கடன் அளிப்பதென்றால் என்ன பொருள்?”

பூர்ணை “மண்ணில் வினை முடித்து எவருமே விண்புகுவதில்லை. ஊழ்கத்தில் நிறைவுகண்ட முனிவர்களைத் தவிர. எஞ்சும் கடன்களே மானுடரின் பிறவிச்சரடின் அடுத்த கண்ணியை முடிவுசெய்கின்றன” என்றாள். “ஆம், வாழ்வு அத்தனை இனியது. அத்தனை துயர் மிக்கது. அத்தனை சொல்லி முடியாத புதிர்களும் பதிலாக வினாக்களும் கொண்டது. அவை ஒவ்வொன்றையும் வரும் பிறவிகளில் மானுடர் மீட்க முடியும். ஆனால் இப்பிறவியில் இத்தனை பெரிய விடையின்மையுடன் ஒருவன் விண்புகுந்தானெனில் அவனுக்கு மறுபிறவியிலும் மீட்புண்டா? இதே விடையின்மை அவனை ஊழ் எனத் தொடரும். மறுபிறவியிலாவது அவன் மீட்படையவேண்டும். எனவே அவனிடம் இச்சூழ்கையிலிருந்து வெளிவரும் வழி இப்போதே சொல்லப்படவேண்டும்.”

“என்ன சொல்கிறீர்கள்?” என்றாள் பூர்ணை “இப்பிறவியில் அவன் அதை அறிந்துவிட்டு செல்லட்டும். இன்னும் அதற்கு ஒரு நாளே உள்ளது. இன்றிரவுக்குள் எவ்வண்ணமேனும் அவனுக்கு அதை தெரிவித்தாகவேண்டும். நாளை நீர்க்கடன் பெற்று அவன் மூச்சுலகில் கலக்கையில் இங்கு அவன் ஆடிய ஆட்டத்தை நிறைத்துவிட்டுச் செல்லட்டும்” என்றாள் சுபத்திரை. பூர்ணை “அரசி, வாழ்க்கையை வாழ்ந்துதான் அறியமுடியும். பிற அறிதல்கள் அனைத்தும் மேலும் வினாக்களையே உருவாக்கும்” என்று சொன்னாள். “நான் அதை அவரிடம் பேச விரும்புகிறேன். அவரால் இயலும்... அவர் வரட்டும்” என்று சுபத்திரை கூறினாள். “நன்று அரசி, நான் அவரிடமே அதை கூறுகிறேன்” என்றபின் பூர்ணை தலைவணங்கி வெளியே வந்தாள். அவளை நோக்கி நின்ற இளஞ்சேடிக்கு கைகாட்டினாள்.

நீர்ச்சுடர் - 48

பகுதி ஏழு : தீராச்சுழி – 4

இளைய யாதவர் வரும்போது பூர்ணை சுபத்திரையின் குடில் வாயிலில் நின்றிருந்தாள். இளைய யாதவர் தேரில் வருவார் என்று அவள் எண்ணினாள். அவர் தொலைவில் நடந்து வருவதைக் கண்டதும் மெல்லிய திகைப்பு ஏற்பட்டது. அவர் களைத்து தனித்து வருவதாக முதலில் தோன்றியது. ஆனால் அணுகுந்தோறும் இளமை கொண்டு சிறுவனென்றாகிவிட்டதாக விழிகள் மயங்கின. தலையிலிருந்த பீலி காற்றில் அசைந்தது. இருபுறமும் நோக்கி, அவ்வப்போது

நின்று கூர்ந்து பார்த்து, முகம் மலர தனக்குள் மகிழ்ந்து தலையசைத்து உள்ளே ஓடும் சொற்களை மெல்ல சொல்லிக்கொண்டு சிறுவனாகவே அவர் அணுகி வந்தார்.

ஒளிபட அவர் அணுகியபோது கருவறை தெய்வம் அகலொளியில் என அவர் முகத்திலிருந்த விரிந்த புன்னகையைக் கண்டு பூர்ணை படபடப்பு கொண்டாள். சொல்லெழாமல் கைகூப்பி நின்றாள். இளைய யாதவர் அருகணைந்து அவளிடம் "எப்படி இருக்கிறாள்?" என்றார். பூர்ணை அவ்விழிகளையும் புன்னகையையும் கண்டு சொல்மறந்து நெஞ்சில் கூப்பிய கைகள் மேலும் இறுகி நடுங்க நின்றாள். அவர் அவள் தோளில் கைவைத்து "உளம் தெளிந்திருக்கிறதா?" என்றார். அதன் பின்னரே அவள் சொல் மீண்டு "ஆம் அரசே, உளம் தெளிந்திருக்கிறார். தங்களிடம் பேச விரும்புகிறார்" என்றாள். "நன்று" என்றபின் அவர் குடிலுக்குள் சென்றார். உள்ளே நுழைய ஒப்புதல் கோரவில்லை. அவளைச் சொல்பெற்றுவர அனுப்பவுமில்லை.

பூர்ணை வாசலில் அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு நின்றாள். இளைய யாதவர் திரும்பி அவளைப் பார்த்து புன்னகைத்துவிட்டு முகம் திருப்பிக்கொண்டார். அவர்கள் அவளை அகன்று போகச் சொல்லவில்லை என்பதனால் அவள் அங்கேயே நின்றாகவேண்டும் என உணர்ந்தாள். சுபத்திரை இளைய யாதவரைக் கண்டதும் எழுந்து மேலாடையை சீர்செய்து ஆடைமுனையை தலைக்கு மேல் சுழற்றி குழல் மறைத்து அமைத்தபடி தலைநிமிர்ந்து நின்றாள். அவள் முகமன் ஏதும் உரைக்கவில்லை. ஆனால் அவள் ஏதோ பேசிக் கொதிப்பதுபோல் முகம் நெளிந்துகொண்டிருந்தது.

இளைய யாதவர் “நான் இருமுறை வந்து உன்னைப் பார்த்துவிட்டு சென்றேன், சுபத்திரை. அன்று நீ துயின்றுகொண்டிருந்தாய். உன் முகம் மிகவும் கொந்தளித்துக்கொண்டிருந்தது. உடல் மிகவும் தளர்ந்துவிட்டிருந்தது. இன்று ஓரளவுக்கு தேறியிருக்கிறாய் என்று நினைக்கிறேன். நன்று, உளம் தேறினால் உடலும் தேறும்” என்றார். சுபத்திரை அவர் முகத்தை பார்த்து “உங்களுக்கு மலர்ச்சூழ்கையிலிருந்து வெளியேறும் வழி தெரியுமா?” என்றாள். அவர் புன்னகைத்து “நான் வெளியேறும் முறைகள் எதையும் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை. எப்போதும் வெளியேதான் நின்றிருக்கிறேன். எதற்குள்ளும் நுழைவதில்லை” என்றார்.

அவள் சீற்றத்துடன் “இத்தகைய சொல்விளையாடல்களுக்கு எனக்கு பொழுதில்லை. என் மைந்தனுக்கு நீங்கள் உரைத்த மலர்ச்சூழ்கையை உடைத்து உள்ளே செல்லும் வழிதான் அவனை கொன்றது. அதிலிருந்து மீளும் வழியை நீங்கள் அவனுக்கு ஏன் சொல்லவில்லை?” என்றாள். “யாருக்கேனும் அது சொல்லப்படுகிறதா?” என்றார் இளைய யாதவர். “யாரேனும் வெளியேறியிருக்கிறார்களா?” என்று மீண்டும் கேட்டார். “என்னிடம் விளையாடவேண்டாம். இச்சொற்களுக்கு என்னிடம் எந்தப் பயனுமில்லை!” என்று உரத்த குரலில் சுபத்திரை சொன்னாள். “நான் என் மைந்தனைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் அவனுக்கு மலர்ச்சூழ்கைக்குள் செல்லும் வழியை கற்பித்தீர்கள். மீளும் வழி கற்பிக்கப்படவில்லை. ஆகவேதான் அவன் அங்கேயே சிக்கிக்கொண்டான்.”

“இதெல்லாம் சூதர்கள் உருவாக்கும் கற்பனைகள். அவன் தனது அத்துமீறும் இயல்பினால் தனித்து அச்சூழ்கைக்குள் சென்று சிக்கிக்கொண்டான். போர் என்பது ஒத்திசைவால் மட்டுமே நிகழ்த்தப்படுவது. எந்நிலையிலும் தன் படைகளின் ஒரு பகுதியாக நிலைகொள்பவனே மெய்யான வீரன். இளமையின் துடுக்கும் புகழ் தேடவேண்டும் என்னும் மிகைவிழைவும் உன் மைந்தனை அலைக்கழித்தன. அவன் அவ்வாறு மீறிச்செல்வதை எவரும் எதிர்பார்க்கவில்லை. அவனும் எவரையும் திரும்பி நோக்கவில்லை. ஆகவே மலர்ச்சூழ்கையிலிருந்து அவனை மீட்கும் பொழுது பாண்டவப் படைகளுக்கு அமையவில்லை... மெய்யாகவே நிகழ்ந்தது இதுவே.”

“நடந்ததை நீயே உசாவி அறியலாம், அரசி” என்று இளைய யாதவர் தொடர்ந்தார். “அப்போது இளைய பாண்டவர்கள் இருவரும் வெவ்வேறு திசைகளிலிருந்தனர். அவர்கள் பலரை வென்று கடந்து வந்து அச்சூழ்கையை உடைக்கவேண்டியிருந்தது. அபிமன்யுவைக் களத்தில் சூழ்ந்து நின்றிருந்தவர்கள் அங்கரும் துரோணரும் ஜயத்ரதனும் என கௌரவத் தரப்பின் மாவீரர்கள். அவர்களே அம்மலரின் இதழ்கள். அவனால் அச்சூழ்கையை உடைத்து எப்படி வெளிவர இயலும்? வீண் கதைகளை உன் எண்ணத்தில் ஏற்றிக்கொள்ள வேண்டியதில்லை” என்றார் இளைய யாதவர்.

“இல்லை! மீளும் வழி தெரிந்திருந்தால் என் மைந்தன் வந்திருப்பான். அவனை எவராலும் அவ்வண்ணம் சிறைப்படுத்தியிருக்க இயலாது!” என்று அவள் சொன்னாள். “அத்தனை மாவீரர்களையும் தன்னந்தனியாக நின்று அவன் எவ்வாறு எதிர்க்கமுடியும்?” என்றார் இளைய யாதவர். “அவன்

எதிர்த்தான். பொருதி அவர்களை வென்றான். அவர்கள் ஒவ்வொருவரும் பின்னடைந்தனர்!" என்று சுபத்திரை சொன்னாள். "அவன் வெல்லற்கரியவன். தேவர்களுக்கு இனியவன். அவனை வென்றது ஊழ். இப்புவியில் எவருமல்ல, வெல்லற்கரிய ஊழ்" என்று அவள் கூவினாள். "நான் அறிவேன். அந்த ஊழின் திறவுகோல் உங்களிடமிருந்தது. அதை நீங்கள் அவனுக்கு அளிக்கவில்லை!"

அவர் பொறுமையுடன் "போருக்குப் பின் கதைகள் பெருகிக்கொண்டே இருக்கும். அங்கு என்ன நிகழ்ந்ததென்று எவர் கண்டது? அவனை எதிர்ப்பதில் அனைவருக்கும் தயக்கமிருந்தது என்பதே உண்மை. களத்தில் அவனைக் கொன்றாகவேண்டும் என்று அவர்கள் எண்ணினார்கள். எனில் மட்டுமே போர் அடுத்த கட்டத்திற்குச் செல்ல இயலும் என்பதை அறிந்திருந்தார்கள். ஆனால் அங்கர் தன் கையால் அவன் இறப்பதை விழையவில்லை. கிருபர் அவன் வீழ்த்தப்படவேண்டும் என்று மட்டுமே எண்ணினார். ஜயத்ரதன் கூட முழுமையாக போரிடவில்லை. துரியோதனன் அப்போரிலேயே இல்லை. மெய்யாகவே எதிர்த்தவர் துரோணர் மட்டுமே. அவரும் விரைவிலேயே பின்னடைந்து நம் மைந்தன் தப்பிப்போக முடியுமென்றால் செல்லட்டுமே என்ற முடிவை அடைந்தார்" என்றார்.

"அவனை தப்ப விடாது நின்று போரிட்டவன் லக்ஷ்மணனும் கோசல மன்னன் பிருஹத்பலனும் மட்டுமே. அவன் அவர்களைக் கொன்றான். அப்போது கூட அவனை அவர்கள் முழுமையாக சுற்றி வளைக்கவில்லை. அறுதியில் அவனை வீழ்த்தியவன் ஜயத்ரதன். அவனைக் கொன்றவன் துருமசேனன். இதுதான் நடந்தது..." அவள் தலையை இல்லை

இல்லை என்று அசைத்தாள். “என் மைந்தனுக்கு வெளியேறும் வழி தெரிந்திருக்கவேண்டும். தெரிந்திருந்தால் அவன் இவ்வண்ணம் வீழ்ந்திருக்க மாட்டான். அது உங்கள் பிழை. எனது பிழை!” என்று கூவினாள். அவள் கண்கள் கலங்கி வெறித்திருந்தன. முகம் சிவந்து மூச்சு சீறியது. பிச்சி போலிருந்தாள்.

“அவன் உள்நுழைந்த சூழ்கைகள் என்னென்ன என்று நமக்கு தெரியாது. விண்ணிலிருந்து பார்க்கும் தேவராலும்கூட மண்ணில் மானுடர் புகுந்து ஆடும் சூழ்கைகளைப்பற்றி அறியமுடியாது...” என்றார் இளைய யாதவர். “நீங்கள் விண்ணிலிருந்து பார்ப்பவர். உங்களுக்கு தெரியாதது ஒன்றுமில்லை” என்று சுபத்திரை சொன்னாள். “இப்பிறவியிலாவது அவன் அச்சூழ்கையை அறுத்து முன்னகர வேண்டும்... இங்கிருந்தாவது அவன் அதை கடந்துசெல்லவேண்டும்” என்று அவள் கூச்சலிட்டாள். முன்னால் வந்து இளைய யாதவரின் கைகளைப் பற்றிக்கொண்டு உலுக்கியபடி “அவன் விடுதலை பெற்றாகவேண்டும்... அவன் கடந்துசென்றாகவேண்டும்!” என்றாள்.

“உன் நாவிலிருந்து வந்தது ஓர் அரிய சொல். உணர்க. அவன் இச்சூழ்கைக்குள் சிக்கிக்கொண்டது இப்போது மட்டுமல்ல. ஒரு வாழ்வில் ஒருவர் அடையும் துன்பங்கள் அனைத்தும் முந்தைய பிறப்பின் தொடர்ச்சிகள் என்றும் அடுத்த பிறப்பின் தொடக்கங்கள் என்றும் உணர்வது ஒரு மெய்யறிதல். அச்சூழ்கைக்குள் அவன் பல பிறவிகளுக்கு முன்னரே நுழைந்துவிட்டிருந்தான். மீள மீள முயன்று ஒவ்வொன்றாக இழந்து ஒருசிலவற்றை ஈட்டி அவன் பிறவிச்சுழலில் சென்று

கொண்டிருக்கிறான். வரும் பிறவிகளில் அவன் கண்டடைவான். அவன் மீளக்கூடும். அவன் ஊழ் அவனை அழைத்துச் செல்லும். அதுவே நெறி" என்று இளைய யாதவர் சொன்னார்.

"அனைத்திற்கும் மறுமொழியாக இதை சொல்கிறார்கள்!" என அவள் கசப்புடன் சொன்னாள். "ஊழ் ஊழ் ஊழ் என்று ஒரு சொல். எனக்கு அச்சொல் வெறுப்பை அளிக்கிறது... மானுடனின் அறியாமையையும் கீழ்மையையும் சிறுமையையும் அதைப்போல் வெளிப்படுத்தும் பிறிதொரு சொல் இல்லை." இளைய யாதவர் "விரும்பியும் விரும்பாமலும் இங்கு அனைவரும் ஊழில்தான் அமர்ந்திருக்கிறார்கள். ஊழென்பது முன்னைவினை நிகழ்வினை பின்னைவினை என்று மும்முகம் கொண்டு நம்மை வந்து அடைகிறது. ஆனால் ஊழ் என்பது முன்னரே வகுத்துவைக்கப்பட்ட பாதை அல்ல. நிகழ்வன எழுதப்பட்ட நூலுமல்ல. அது ஒரு பயிற்சி. அதில் வென்று கடந்த உயிர்கள் முன் செல்கின்றன" என்றார்.

இளைய யாதவரின் குரல் கனிந்திருந்தது. சிறுமியிடம் பேசுவதுபோல் குனிந்து அவளிடம் சொன்னார் "அப்பயிற்சிக்கு குறுக்கு வழிகள் இல்லை, அரசி. குறுக்கு வழிகளால் வெல்பவன் எதையும் கற்றுக் கடந்து செல்வதில்லை. உன் மைந்தன் இங்கு முன்னரே அவனுக்கு வகுக்கப்பட்டிருந்த சூழ்கை ஒன்றில் உட்புகுந்து சிக்கிகொண்டான். அவனுக்காக வைக்கப்பட்ட அத்தேர்விலும் சிலவற்றை வென்றிருப்பான். சிலவற்றை ஈட்டியிருப்பான். அதுவே இனி அவனை கொண்டுசெல்லும் ஊர்தி. அவனுடைய வழிகாட்டி அது. அதை நீ இங்கிருந்து உணர முடியாது." சுபத்திரை "அவன் என்

கனவில் வந்தான். அச்சுழியிலிருந்து அவனை விடுவிக்கும்படி என்னிடம் கோரினான்" என்றாள்.

"உன் கனவில் வந்தானா? தன்னை விடுவிக்கும்படி அவன் கோரினானா?" என்று முதல்முறையாக குரல் கூர்மையடைய இளைய யாதவர் கேட்டார். "ஆம், அதனால்தான் நான் தவிக்கிறேன்" என்றாள் சுபத்திரை. அவர் மேலும் கூர்ந்து அவள் கண்களுக்குள் நோக்கி "நன்கு எண்ணிச்சொல். அவன் அவ்வாறு கூறினானா?" என்றார். "கூறினான்! அது கனவல்ல, மெய். நாங்கள் துவாரகையின் வட்டச்சுழல் பாதையில் வழி தவறினோம். அன்னையே உனக்கு மீளும் வழி தெரியுமா என்று அவன் கேட்டான்" என்றாள் சுபத்திரை.

இளைய யாதவர் புன்னகைத்து "உனக்கு மீளும் வழி தெரியுமா என்று மட்டுமே கேட்டிருக்கிறான்" என்றார். "அது அவ்வழியை அவனுக்கு நான் சொல்லவேண்டும் என்பதற்கான கோரிக்கை மட்டுமே. அவனை நான் அறிவேன்" என்றாள் சுபத்திரை. இளைய யாதவர் சற்றே சலிப்படைந்து "இவ்வெண்ணத்தை விட்டுவிடு, சுபத்திரை. இது நன்றல்ல. ஊழை அறிந்துகொள்ள முயல்வது என்பது அதை எதிர்த்து நிற்பதற்கு நிகர்தான். அந்த அத்துமீறலை ஊழ் சமைத்த ஆற்றல்கள் விரும்புவதில்லை. எதிர்த்து நிற்பவர்களுக்கு ஊழ் மேலும் ஆற்றல் கொண்டதாகிறது" என்றார்.

"நீ உன் உள்ளத்தில் செறிந்திருக்கும் ஆணவத்தால் ஊழை எதிர்க்கலாம் என்னும் எண்ணத்தை அடைகிறாய். உன்னால் எதுவும் முடியுமென்று எண்ணுகிறாய். நீ உன்னையே கூட இன்னும் அறியவில்லை. உன்னைச் சூழ்ந்தவற்றை கூட இன்னும் கடக்கவில்லை. ஒவ்வொருவரும் தங்கள் சூழ்கைகளுக்குள் சென்றுகொண்டிருக்கையில் பிறருக்கு

வழிகாட்டுபவர் என எவருமில்லை. மைந்தருக்கும், சுற்றத்திற்கும், எளியவருக்கும், கற்றோருக்கும், சான்றோருக்கும், அந்தணருக்கும், முனிவருக்கும், தெய்வங்களுக்கும் நாம் அளிக்கும் அனைத்து கடமைகளும் நாம் வெளியேறும் பொருட்டு நாம் செய்வது மட்டுமே" என்றார் இளைய யாதவர்.

"இச்சொற்கள் எவற்றையும் நான் செவிகொள்ளப் போவதில்லை. இத்தகைய சொற்களால் என் வாழ்நாள் முழுக்க சித்தத்தை நிரப்பிவிட்டிருக்கிறேன். சற்றே எண்ணியிருந்தால் என் மைந்தனுக்கு வெளியேறும் வழியை நான் சொல்லியிருப்பேன். இனி அது நிகழலாகாது. அடுத்த பிறவியிலாவது அதை அவன் அறிந்தாகவேண்டும். என் மைந்தனுக்கு இன்னும் பொழுதில்லை. இன்றிரவுக்குள் அவனை நான் சந்திக்க வேண்டும். அவன் எங்கிருந்தாலும் என் முன் வரவேண்டும். அவனுக்கு நான் சொல்ல வேண்டும், அதிலிருந்து வெளியேறும் வழி என்ன என்று" என்றாள் சுபத்திரை. "சொல்லுங்கள், மலர்ச்சூழ்கையிலிருந்து வெளியேறும் வழி என்ன?"

இளைய யாதவர் "மலர்ச்சூழ்கையிலிருந்து வெளியேறும் வழி ஒன்றே" என்றார். "அதன் மிகவும் ஆற்றல் குறைந்த பகுதி அதன் குவிமுனைதான். அதன் இதழ்களை ஊடுருவி எவரும் வெளியேற முடியாது. ஆனால் இதழ்கள் வந்து கவ்வுவதனால் ஒவ்வொருவரும் அதை ஊடுருவவே முயல்வார்கள். எதிர்ப்போரை மட்டுமே எதிர்ப்பது என்பது போர்ச்சூழலில் நிகழும் உளமாயம். மலர்ச்சூழ்கையின் இதழ்கள் குவியும் இடத்தில் ஒரு சிறு வாயில் இருந்தே ஆகவேண்டும். ஒவ்வொரு இதழும் ஒன்றையொன்று அழுத்துவதனால் உருவாகும் சிறு துளை அது. இதழ்கள் விசை

கொள்ளும்தோறும் அத்துளை மேலும் தெளிவடைகிறது. அதனூடாக அன்றி வேறெவ்வகையிலும் மலர்ச்சூழ்கையிலிருந்து வெளியேற இயலாது."

சுபத்திரை "இதை என் மைந்தனிடம் சொல்லவேண்டும். நான் சொல்லவில்லையெனில் இப்பிறவியில் எந்நிறைவையும் அடையப்போவதில்லை. அன்னையென இங்கிருப்பது வீணென்றே உணர்வேன்" என்றாள். இளைய யாதவர் "ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சூழ்கை. இப்பிறவியில் மலர்ச்சூழ்கை, அடுத்த பிறவியில் அவனுக்கு காத்திருப்பது எச்சூழ்கை என்று நீ எவ்வாறு அறிவாய்?" என்றார். சுபத்திரை "இதை அவன் அறிந்து செல்லட்டும். இப்பிறவியில் அவனுக்கொரு தெளிவிருக்கட்டும். இங்கிருந்து இத்தனை பெரிய விடையின்மையுடன் அவன் செல்லலாகாது" என்றாள்.

"நீ எண்ணுவதுதான் என்ன? அவனது மீட்பா? அல்லது இதனூடாக உன் பொறுப்பிலிருந்து நீ விடுவித்துக்கொண்டாய் எனும் நிறைவா?" என்று இளைய யாதவர் கேட்டார். சுபத்திரை திகைப்புடன் இளைய யாதவரை பார்த்தாள். பின் உரக்க கூவியபடி குடில் மூலையிலிருந்த வாளை எடுத்து உருவி தன் கழுத்தில் வைத்துக்கொண்டாள். "இக்கணம் நீங்கள் உரைக்கவேண்டும். என் மைந்தனுடன் நான் உரையாட முடியுமா? என் மைந்தனை என் முன் வரவழைக்க முடியுமா? என் எண்ணத்தை அவனிடம் சொல்ல முடியுமா? இல்லையெனில் மறுகணம் இதை இழுத்துக்கொள்வேன். இங்கு உயிர்வாழமாட்டேன்! உங்கள்மேல் ஆணை!"

"சுபத்திரை..." என்று கை நீட்டியபடி இளைய யாதவர் முன்னகர்ந்தார். "கூறுக, ஆமெனக் கூறுக" என அவள் கூவினாள். "நான் அறிவேன், உங்களால் இயலும் என.

வேறெந்த சொல்லையும் ஏற்கமாட்டேன்." இளைய யாதவர் "பொறு... பொறு... நான் நீ கோருவதைச் செய்கிறேன்... பொறு" என்றார். அவள் வாளை அழுத்தியபடி அவரை வெறி நிறைந்த விழிகளால் நோக்கினாள். "அவன் இங்குதான் இருக்கிறான். நீர்க்கடனுக்கு முன் உற்றாரை சூழ்ந்திருப்பது நீத்தாரின் இயல்பு" என்றார். "அவனிடம் நான் பேசியாக வேண்டும். அவனிடம் அனைத்தையும் கூறியாகவேண்டும்" என்றாள் சுபத்திரை.

"அவனை இங்கு வரவழைப்போம். அதற்கு நான் ஒருங்கு செய்கிறேன்" என்றார் இளைய யாதவர். சுபத்திரை கழுத்தில் பதித்த நடுங்கும் வாளுடன், நீர் நிறைந்து நிலைத்த விழிகளுடன், சிவந்து குருதி படிந்தவைபோல் மாறியிருந்த முகத்துடன் இளைய யாதவரை பார்த்துக்கொண்டிருந்தாள். "மெய்யாகவே அதை செய்யலாம். ஆணை... நம்பு" என்றார் இளைய யாதவர். "எனக்கு ஒரு முனிவரை தெரியும். நான் அவரை தண்டகாரண்யத்தில் ஒருமுறை கண்டேன். அவரை அழைத்து வரச் சொல்கிறேன்" என்று இளைய யாதவர் சொன்னார்.

அவள் வாளை ஓசையுடன் நிலத்திலிட்டு தன் இரு கைகளையும் தலையில் சேர்த்து பற்றிக்கொண்டு எடையுடன் மஞ்சத்தில் குனிந்து அமர்ந்தாள். இளைய யாதவர் "நீ செய்வதென்ன என்று உனக்குத் தெரியவில்லை. இந்நெறிகள் இரக்கமற்றவை. புவி முழுக்க உயிர்களை கட்டுப்படுத்துபவை என்பதனால் அவை அவ்வாறுதான் இருக்க இயலும். ஏனென்றால் இங்கு ஓர் உயிருக்கு காட்டும் இரக்கம் பல்லாயிரம் உயிர்களுக்கு இழைக்கும் கொடுமையாக மாறிவிடகூடும். இங்கு ஒரு நெறி முடிச்சவிழ்கையில்

பல்லாயிரம் கோடி முடிச்சுகள் மேலும் இறுகக்கூடும். இதில் ஒரு அணுவையும் மாற்றுவதற்கு எவருக்கும் உரிமையில்லை. இவையனைத்தையும் படைத்து காக்கும் மும்மூர்த்திகளுக்கும் கூட" என்றார்.

"பரம்பொருளென்பது இப்பல்லாயிரம் கண்ணிகளால் தன்னை தொடுத்துக்கொண்டு புடவியெங்கும் நெறிகளென்றும், நிகழ்வுகள் என்றும் நிறைந்திருக்கும் ஒன்று. நீ அறிந்துகொள்ள முயல்வது முனிவர் ஊழ்க நிறைவில் அடைவதை. நீ எதிர்ப்பது உன்னுள்ளும் உறையும் அம்முடிவின்மையை" என்றார் இளைய யாதவர். "நான் எதையும் எண்ண விரும்பவில்லை. என் மைந்தன் என்னுடன் பேசவேண்டும். அவனிடம் நான் சொல்லியாக வேண்டும். அது ஒன்றே எனக்கு இப்போதைய தேவை" என்றாள் சுபத்திரை.

இளைய யாதவர் சுபத்திரையிடம் விடைபெறும் முகமாக "நன்று, நான் உரியன செய்கிறேன்... நீ பொறுத்திரு" என்று கூறி திரும்பியபோது அவர் முகத்தை பூர்ணை பார்த்தாள். அதில் அங்கு வரும்போது இருந்த அதே புன்னகை இருப்பதைக் கண்டு அவள் திகைத்தாள். இளைய யாதவர் அவளிடம் அதே புன்னகையுடன் "என் ஏவலன் வெளியே வந்துள்ளானா?" என்றார். அவள் திரும்பிப்பார்க்க வெளியே அவருடைய அணுக்க ஏவலனாகிய யாதவ இளைஞன் வந்திருப்பதை கண்டாள். "ஆம்" என்றாள்.

அவர் வெளியே வந்து அவனை அருகணையும்படி கைகாட்டினார். இயல்பாக அவன் தோளில் கைவைத்து தாழ்ந்த குரலில் பேசத்தொடங்கினார். அவன் அவர் விழிகளையே

நோக்கிக்கொண்டிருந்தான். பின்னர் தலைவணங்கி திரும்பிச் சென்றான். இளைய யாதவர் பூர்ணையிடம் "நான் அறிந்த முனிவர் இங்குள்ளார். அவர் நீத்தாரை வரவழைத்து அவர்களுடன் நம்மை பேச வைக்கும் ஆற்றல் கொண்டவர். அவரை ஒருமுறைதான் நேரில் கண்டிருக்கிறேன். ஆனால் அவர் ஆற்றலை உணர்ந்திருக்கிறேன். அவரை அழைத்துவரும்படி தூதனுப்பியிருக்கிறேன். அவர் மிக அருகேதான் இருக்கிறார். அதை நான் உணர்கிறேன். அங்குதான் அனுப்புகிறேன்" என்றார்.

அவள் தலையசைத்தாள். "சற்றுநேரத்திலேயே அவர் வந்துவிடுவார். அதுவரை நீ தங்கையுடன் இரு. அவள் உள்ளம் தளராது நோக்குக" என்றார். அவள் "அவர் உள்ள உறுதி கொண்டிருப்பதாகத்தானே தோன்றுகிறது?" என்றாள். "இல்லை. அது இன்னொரு வகையான தளர்வு" என்றபின் தலையசைத்துவிட்டு இளைய யாதவர் ஏவலன் கொண்டுவந்து நிறுத்தியிருந்த தன் புரவியை நோக்கி சென்றார். அதில் ஏறிக்கொண்டு மெல்லிய தாவல்நடையில் அவர் இருளுக்குள் செல்வதை அவள் நோக்கி நின்றாள். பின்னர் நீள்மூச்சுடன் திரும்பினாள்.

பூர்ணை சுபத்திரையை அணுகி "தாங்கள் ஏதேனும் அருந்தலாம், அரசி" என்றாள். "அவரால் இயலும். அவர் என் மைந்தனிடம் பேச வைப்பார். அவனுக்கு நான் இங்கு என்ன நிகழ்ந்ததென்று கூறுவேன். வெளியேறும் வழியை அவனுக்கு நான் கூறுவேன்... ஐயமில்லை" என்று அவள் சொன்னாள். "ஆம், உங்கள் உள்ளம் அதை அழுத்தமாக ஆணையிடுகிறது என்றால் அதை செய்க" என்றாள் பூர்ணை. "ஆனால் அது ஊழின் நெறியைக் குலைத்தல் என்றும் அது தீங்கை விளைவிக்கும்

என்றும் இளையவர் கூறுகிறாரே?" என்று சுபத்திரை சொன்னாள். பூர்ணை புன்னகைத்து "அரசி, நாம் ஒன்றை நம் உயிரை மீறி செய்துவிடமுடியுமா?" என்றாள்.

அக்கோணத்தில் முதன்முறையாக எண்ணிய சுபத்திரை திகைப்புடன் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தாள். "நீங்கள் இவ்வண்ணம் எண்ணுவதும் இதை இயற்றுவதும் கூட மறைந்த இளவரசரின் ஊழின் ஒரு பகுதியோ என்னவோ. நம் உள்ளம் ஏவுவதை செய்வோம். நம் உள்ளத்தை ஏவுவது எவரென்றும் ஏனென்றும் நாம் அறிய முடியாதல்லவா?" என்றாள் பூர்ணை. "ஆம்" என்று சுபத்திரை பெருமூச்சுவிட்டாள். எழுந்து தன் விழிகளை துடைத்து மேலாடையை சீரமைத்தாள். அவள் வளையல்கள் ஒலித்தன. ஆடை சரசரத்தது.

பூர்ணை அவளை நோக்கினாள். அவள் கையில் நிறைந்திருந்த வளையல்கள் பெரிதாகி மணிக்கட்டிலிருந்து கழன்று நழுவி வெளியே விழும்படி தோன்றின. வெண்ணிறமான கைகளில் நீல நரம்புகள் புடைத்து பரவியிருந்தன. "நான் வேண்டுமென்றால் இளைய பாண்டவரை இங்கு வரச்சொல்கிறேன். தங்களிடம் அவர் முறைப்படி ஏதோ சொல்ல வேண்டுமென்று கூறப்பட்டது" என்றாள் பூர்ணை. "வேண்டாம்!" என்று உரக்க சுபத்திரை சொன்னாள். மூச்சுத் திணற பற்களைக் கடித்து "இத்தருணத்தில் நான் எவரையாவது சந்திப்பதை முற்றாக தவிர்க்கிறேன் என்றால் அவரைத்தான்" என்றாள்.

"அவர் துயருற்றிருக்கிறார். தாங்களும் துயருற்றிருக்கிறீர்கள். இத்தருணத்தில் நீங்கள் ஒருவரோடொருவர் கைமாறிக்கொள்ளும் சொற்கள் எவையாயினும் அவை நன்றே. வசையோ பழியோ கூட ஆறுதல் அளிப்பதுதான்" என்று

பூர்ணை சொன்னாள். "வேண்டியதில்லை!" என்று அவள் உரக்க சொன்ன்னாள். "ஒருநாள் கூட அவரிடம் நான் எதையும் பகிர்ந்துகொண்டதில்லை. ஒருமுறை கூட அணுக்கமாக உணர்ந்ததும் இல்லை. அவருடன் எனக்கு இன்று எந்த உளத்தொடர்பும் இல்லை."

"அவரை விரும்பி அவருடன் வந்தீர்கள்... அவர் தேரை நீங்கள் செலுத்திய கதையை சூதர்கள் பாடிக் கேட்டிருக்கிறேன்" என்றாள் பூர்ணை. "ஆம், அது ஒரு சிறு பொழுது... ஆனால்..." என்றபின் "இந்நகருக்குள் நுழைந்தபோதும் முதல் நாளிலேயே தெரிந்துகொண்டேன், அவர் உள்ளத்தில் வேறு பெண்களுக்கு இடமில்லை என்று" என்றாள் சுபத்திரை. "ஆனால்..." என்று பூர்ணை சொல்லத் தொடங்க "ஆம், பல பெண்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் அவருடைய வேறு வேறு வடிவங்களே. அவர்களும் அதை உணர்ந்து தங்களை அந்த வடிவங்களாக மாற்றிக்கொண்டு அவருக்கு அணுக்கமானார்கள். சில தருணங்களில் அவரை வென்றார்கள்" என்றாள் சுபத்திரை.

"நான் யாதவரின் தங்கை. துவராகையின் அரசி. பிறிதொருவரின் மாற்றுவடிவமாக மாறுவது என்னால் இயலாது. அவ்வாய்ப்பை முற்றாகவே தவிர்த்துவிட்டேன். ஆகவே ஒருபோதும் அவருக்குள் நுழையவுமில்லை, அவருக்கு அணுக்கமாக ஆகவும் இல்லை. ஓரிரவு ஓரிரு சொற்கள் அதற்கு மேல் எனக்கும் அவருக்கும் எவ்வுறவுமில்லை. இம்மைந்தன் அவருடன் நான் கொண்ட அன்புக்கான சான்றல்ல. நான் கொண்ட விலக்கத்தின் சான்று மட்டுமே. இது அவரிலிருந்து நான் அள்ளி எடுத்துக்கொண்ட எனக்குரிய வடிவம். இதில் திகழ்ந்த நான் சமைத்துக்கொண்ட இளைய பாண்டவர் அவன்" என்றாள் சுபத்திரை.

பூர்ணை “ஆம்” என்று பெருமூச்சுவிட்டாள். “அவன் நிலையற்றிருக்கிறான். துயருற்றிருக்கிறான். அத்துயர் எதனால் என்று என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை” என்றாள் சுபத்திரை. “நீர்க்கடனுக்கு முன் அத்தனை ஆத்மாக்களும் துயருறுகின்றன, நிலையழிகின்றன என்கிறார்கள்” என்றாள் பூர்ணை. “இருக்கலாம். என் மைந்தனின் துயர் அவ்வாறல்ல. அதற்கும் மேலான ஒன்று. அதற்கான தீர்வொன்றையே நான் காண்கிறேன்...” என்று சுபத்திரை சொன்னாள்.

பூர்ணை சில கணங்கள் அவளை நோக்கி அமர்ந்தபின் “தாங்கள் விராட இளவரசியை பார்த்தீர்களா?” என்று கேட்டாள். சுபத்திரை திகைத்து திரும்பி அவளைப் பார்த்தாள். அவள் உதடுகள் மெல்ல பிரிந்தன. மூச்சில் நெஞ்சு ஏறி இறங்கியது. “அங்கே துவாரகையில்தான் இருக்கிறார்கள்” என்றாள் பூர்ணை. “இல்லை” என்று அவள் சொன்னாள். முற்றாக நிலையழிந்து கைகளால் ஆடைமுனையைச் சுழற்ற தொடங்கினாள்.

சுபத்திரையை கூர்ந்து நோக்கி பூர்ணை சொன்னாள் “தாங்கள் முதலில் உங்கள் மூத்தவரிடமல்ல விராட இளவரசியிடம் அல்லவா பேசியிருக்க வேண்டும்?” சுபத்திரை தன் முழு உளவிசையையும் திரட்டி “தேவையில்லை!” என்று உரக்க கூவினாள். கைகளை காற்றில் விசிறிபோல வீசி “தேவையில்லை தேவையில்லை தேவையில்லை” என்றாள். அவள் குரல் உடைந்து ஒலித்தது. “நீ செல்லலாம்... வெளியே செல்லலாம்” என்று கைகாட்டினாள். பூர்ணை தலைவணங்கி குடிலிலிருந்து வெளிவந்தாள்.

நீர்ச்சுடர் - 49

பகுதி ஏழு : தீராச்சுழி – 5

பூர்ணை குடிலிலிருந்து வெளியே வந்து சில கணங்கள் வெறும் வெளியை நோக்கியபடி நின்றாள். பின்மாலையின் சாய்வெயிலில் மரக்கிளைகள் ஒளிகொண்டிருந்தன. காட்டுக்குள் சாய்ந்திருந்த ஒளிச்சட்டங்கள் அங்கு அசையா நெருப்பு நின்றிருப்பதுபோல் தோன்றச் செய்தன. பறவைகளின் ஒலிகள் மாறுபட்டு கான்முழக்கம் கார்வை கொண்டிருந்தது. குடில் நிரைகளில் இருந்த ஏவலர்கள் பேசும் ஒலிகளும் பின்முழக்கம் ஒன்றைச் சூடியிருந்தன. குடில் முன் நின்றிருந்த புரவி அரைத்துயிலில் தலையை நன்கு தாழ்த்தி ஏதோ எண்ணத்திலாழ்ந்திருந்ததுபோல் உறைந்திருந்தது.

அவள் அப்புரவியை நோக்கிக்கொண்டே நின்றாள். எண்ணம் விரைந்தோடும் போது விழிகளை எங்கேயாவது நாட்டி நிற்பது அவள் வழக்கம். எண்ணம் சென்று தொடும் முடிவு அவள் விழி நாட்டி இருக்கும் அப்பொருளுடன் தொடர்புள்ள வடிவிலேயே தோன்றும் விந்தையை அவள் முன்பே அறிந்திருந்தாள். எனவே விழித்தெழுந்தபோது அப்புரவி எவருடையது என்று எண்ணம் எழுந்ததும் அவள் வியப்படையவில்லை. சூழ நோக்கியபோது இளஞ்சேடி அப்பால் வந்தாள். அவளைக் கைகாட்டி அழைத்து "இப்புரவி எவருடையது?" என்றாள். அவள் கூர்ந்து நோக்கியபின் "இங்கு அரசர் இளைய பாண்டவர் ஒரு காவலனை நிறுத்தியிருந்தார், தேவையெனில் செய்தி கொண்டுசெல்வதற்கு" என்றாள்.

"அவருக்கா?" என்றாள் பூர்ணை. "ஆம்" என்றாள் அவள். "ஆனால் அரசி இதுவரை செய்தி என எதையும் அனுப்பவில்லை."

பூர்ணை "இப்போது அக்காவலன் எங்கே?" என்றாள். இளம் சேடி மெல்லிய தவிப்படைவதை பார்த்ததும் அவளுக்கு புரிந்தது. "அக்குடிலுக்கு பின்னால் அவன் நின்றிருக்கிறானா?" என்றாள். இளஞ்சேடி விழி தழைத்தாள். "அவனை வரச்சொல்க" என்று அவள் சொன்னாள். இளஞ்சேடி "இல்லை, நான்தான்... அவர்..." என்று சொல்லத்தொடங்க கூரிய குரலில் மறித்து "செல்க!" என்று பூர்ணை சொன்னாள். இளஞ்சேடி தலைவணங்கி சென்று குடிலுக்குப் பின்னால் அகன்று அங்கு நின்றிருந்த காவலனிடம் பேசினாள்.

அவர்களின் கசங்கிய பேச்சுக்குரல்கள் சொல்லின்றி ஒலித்தன. பின்னர் அவன் தயங்கியபடி அவள் அருகே வந்து நின்றான். அவள் நோக்கியதும் தலைவணங்கினான். அவள் அவனிடம் "இங்கு உன் பணி காவல்" என்றாள். "பொறுத்தருள்க, நான் உண்மையில்" என்று அவன் சொன்னான். இளஞ்சேடி "நான்தான்..." என ஊடே புக அவளை விழிகளால் அடக்கியபின் "சென்று இளைய பாண்டவர் பார்த்தனை இங்கே வரச்சொல்க. அவரை அவர் துணைவி பார்க்க விழைகிறார் என்று கூறுக" என்றாள். "ஆம், ஆணை" என்று அவன் புரவியை நோக்கிச்சென்று அதன் முதுகை தட்டி மேலேறி திரும்பி விரைந்தான்.

வால் சுழல, சிறுதாவல்களாகச் செல்லும் அந்த புரவியை அவள் நோக்கிக்கொண்டிருந்தாள். இளஞ்சேடி அவள் ஆணைக்காக காத்திருந்தாள். அவள் திரும்பி பார்த்தபோது தலைகுனிந்து நின்றாள். அவள் முகத்திலிருந்த பொலிவை, கைவிரல்கள் பதற்றத்துடன் ஒன்றையொன்று தொட்டு நிலையழிவதை பூர்ணை கண்டாள். ஒருகணம் சீற்றம் எழுந்தாலும் மறுகணம் புன்னகை வந்தது. அத்தனை துயரிலும்

மானுடர் தங்கள் விழைவுகளை தொடர்கிறார்கள். இடுகாட்டில் பூக்கள் மலர்கின்றன என்ற சூதர் பாடல் நினைவு வந்தது. “செல்” என்றபின் சென்று குடில் திண்ணையில் அமர்ந்தாள்.

உடல் ஓய்வை நாடியது. மண் அவள் தசைகளை இழுத்தது. தன் எண்ணங்களை தொகுத்துக்கொள்ள முயன்றாள். எதன்பொருட்டு இளைய பாண்டவரை வரச்சொன்னோம் என்ற தெளிவே அவளுக்கு இருக்கவில்லை. அம்முடிவை எடுத்த பின்னரே அதை எவ்வண்ணம் கொண்டுசெல்ல போகிறோம் என்று எண்ணத்தொடங்கினாள். எப்போதும் அவள் இயல்பு அதுதான். எண்ணி எடுத்த முடிவுகள் எவையும் அவளுக்கு கைகொடுத்ததில்லை. அவை மீண்டும் எண்ணினால் நிகரான ஆற்றல் கொண்ட மறுதரப்பை உருவாக்கின. எண்ணாமல் எடுத்த முடிவுகள் அனைத்தும் எவ்வண்ணமோ ஊழுடனும் தெய்வங்களுடனும் தொடர்பு கொண்டிருந்தன.

எண்ணாமல் வாழும் உயிர்கள் ஊழுக்கு ஒப்புக்கொடுத்தவை. பேரொழுக்கில் நலுங்காது ஒழுகிச் செல்பவை. ஊழுடன் முரண்படுபவருக்கே துயர், ஆகவே தான் ஆற்றலுள்ளோர் அழிவை நாடுகின்றனர். தேடல் கொண்டோர் துயர் மிகுகிறார்கள். அவள் தேவிகையை சென்று பார்க்க வேண்டுமென்று விழைந்தாள். அவள் அன்றிரவு முழுக்க அங்குதான் இருக்கவேண்டும் என்று தோன்றியது. தேவிகை எந்நிலையில் இருக்கிறாள்? அவள் வந்திருக்கும் இடமாவது அவளுக்குத் தெரியுமா? அவள் தன் பீடத்தை மெல்ல தட்டியபோது இளஞ்சேடி வந்து நின்றாள்.

“நீ சென்று மத்ரநாட்டு சேடியிடம் சொல், இன்றிரவு நான் வரப்போவதில்லை என்று. இரு அரசியரையும் பேணும் பொறுப்பு அவளுக்குரியதென்று தெரிவித்துவிட்டு வா” என்றாள்.

அவள் தலைவணங்கி நடந்து சென்றாள். முற்றத்தின் விளிம்பை தாண்டுவது வரை இறுகிய உடலும் ஒடுங்கிய தோளுமாக சென்ற அவள் குறுங்காட்டினூடாக சென்ற பாதையில் ஏறியதுமே சிறுமிபோல் மெல்லிய துள்ளலுடன் கைகளை வீசி செல்வதை அவள் கண்டாள். புன்னகை விரிய அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மலர்கள் புன்னகையின் தூய வடிவங்கள். ஒவ்வொரு நாளும் பல்லாயிரம் புன்னகைகளால் தேவர்கள் இம்மண்ணை பொலிவுறச் செய்கிறார்கள் என்ற சூதர் வரியை நினைவுகூர்ந்தாள்.

தொலைவில் அர்ஜுனனின் புரவி வருவது தெரிந்தது. அது சுழன்று நிலமறையும் குளம்போசையுடன் பெருவிரைவில் வந்தது. அந்த விரைவை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது. புரவி முற்றத்தில் வந்து வளைந்து நிற்க அர்ஜுனன் கால் சுழற்றி இறங்கி கடிவாளத்தை அதன் மேல் வீசியபடி அவளை நோக்கி வந்தான். அவன் முகம் பதற்றம் கொண்டிருந்தது. அவள் எழுந்து நின்று "கவலை கொள்வதற்கு ஒன்றுமில்லை, அரசே. அரசியை தாங்கள் பார்க்கலாமென நான் எண்ணினேன்" என்றாள். அர்ஜுனன் "அரசி என்னை பார்க்க விரும்புவதாக செய்தி வந்ததே" என்றான். "ஆம், அச்செய்தியை நான்தான் அனுப்பினேன். தாங்கள் அரசியை இத்தருணத்தில் பார்க்கவேண்டும், தாங்கள் சிலவற்றை அவர்களிடம் சொல்லியாக வேண்டும் என கருதினேன்" என்றாள்.

அர்ஜுனன் புருவம் சுருக்கினான். "தன் மைந்தனைப்பற்றி அவர்கள் உளம் கொதிக்கிறார்கள். தன் மைந்தனின் ஊழ் தன்னால் தவறாக வகுக்கப்பட்டுவிட்டது என்னும் குற்றஉணர்வு கொண்டு தவிக்கிறார்கள். அவ்வாறல்ல, அது தவிர்க்க முடியாத ஊழ் என்று நீங்கள் அவர்களிடம்

கூறவேண்டும். அவர்கள் உளம் சற்றேனும் அடங்கவேண்டும்" என்றாள். அர்ஜுனன் எரிச்சலுடன் "ஊழ் குறித்து உரையாடுவதற்கா இத்தனை தொலைவு நான் வந்தேன்?" என்றான். "ஆம், தங்கள் மைந்தனின் ஊழ் குறித்து" என்ற பின் "உத்தரையைப்பற்றி அவர்களிடம் சொல்லுங்கள்" என்றாள்.

அவன் திடுக்கிட்டவன்போல் தலைதூக்கி "உத்தரையைப் பற்றியா?" என்று கேட்டான். "இங்கு அனைவரும் அறிந்ததுதான். அனைவரும் தயங்கிக்கொண்டிருப்பதும் கூட. நீங்கள் இருவரும் அதைப்பற்றி ஆழ்ந்து ஒரு சொல்லும் இதுவரை உரையாடியிருக்கமாட்டீர்கள். சொல்வதற்கு ஏதேனும் இருப்பின் அவற்றை சொல்லிவிடுங்கள். பிறகு என்றேனும் அவற்றை சொல்வதற்கான தருணம் வாய்க்காது போகும்" என்றாள். அர்ஜுனன் தவிப்புடன் "நான் என்ன கூறுவது?" என்றான். "அரசே, கூறவேண்டியது ஒன்று எஞ்சியுள்ளது. விராடநாட்டு அரசியின் கருவில் வளரும் மைந்தனைப்பற்றி" என்றாள்.

அர்ஜுனனின் விழிகள் தழைந்தன. அவன் கைகள் தவித்து ஒன்றையொன்று பற்றிக்கொண்டன. "தாங்கள் காமத்தை கடந்துவிட்டீர்கள் என்று இங்கே பேசிக்கொண்டிருந்தார்கள். எனில் அது உருவாக்கும் இடர்களிலிருந்தும் நீங்கள் வெளியேறியிருக்கவேண்டும். இதுவே அதைச் சொல்வதற்கான தருணம். சென்று கூறுக" என்றாள் பூர்ணை. "நான் அதிலிருந்து முழுக்க வெளியேறவில்லை என்று இப்போது உணர்கிறேன்" என்றான் அர்ஜுனன். "விழைவை கடந்துள்ளேன். அச்சங்களையும் தயக்கங்களையும் அல்ல." பூர்ணை "தங்களால் வெளியேற முடியும். அதற்கான வாய்ப்பென்று இதைக் கொள்க. செல்க" என்று அழுத்தமாகச் சொன்னாள்.

அர்ஜுனன் உள்ளே செல்லத் தயங்கி வாயிலிலேயே நின்றான். பின்னர் “முழுமையான செய்திகளை நீ அறிந்திருக்க வாய்ப்பில்லை. அஸ்தினபுரியிலும் இந்திரப்பிரஸ்தத்திலும் அரசகுடியினர் அனைவருடைய கருக்களும் கலைந்துள்ளன. முதற்குடியினரும் அணுக்கரும் ஐந்தாமவரும்கூட முழுமையாகவே கருக்குழவிகளை இழந்துள்ளனர். ஒவ்வொரு நாளும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. குருகுலத்தின் கொடிவழியில் இன்று எஞ்சியிருப்பது உத்தரையின் கருவிலிருக்கும் குழவி மட்டுமே. அவன் நீளாயுள் கொண்ட மைந்தன் என்றும் முடிசூடி அமரும் ஊழ் கொண்டவன் என்றும் நிமித்திகர்கள் கூறினர். அவ்வண்ணம் ஒரு குழவி எஞ்சுவதென்பது ஊழ் என்பது ஒன்றே என்னை ஆறுதல்படுத்துகிறது” என்றான்.

“என்ன நிகழ்ந்தது எவ்வண்ணம் என்று நான் இப்போது விரித்துரைக்க தேவையில்லை. விராடரின் ஆணை அது. உத்தரையின் குழவி அரியணை அமரவேண்டும் என்று அவர் கூறினார். அதற்குரிய வாய்ப்புகள் அன்று இல்லை என்று தோன்றியது. அபிமன்யு அவன் தமையருக்கு அடங்கமாட்டான், தனி முடி நாடுவான் என்று அவர் எண்ணினார். எனக்கும் அவ்வண்ணமே தோன்றியது. அடுத்த தலைமுறையில் அது நிகழட்டும் என்று அப்போது எண்ணினேன். இன்று அந்த எண்ணம் அனைத்தும் உண்மையாகிவிட்டிருக்கிறது. இன்று அவள் குழவி இந்திரப்பிரஸ்தத்தையும் அஸ்தினபுரியையும் ஆளும் நிலை உள்ளது... இத்தருணத்தில்...” என்றான் அர்ஜுனன்.

“அதை அரசியிடம் சொல்லுங்கள்” என்றாள் பூர்ணை. “ஒருவேளை அவர்கள் அச்சொல்லால் உளம் அமையக்கூடும்.”

அர்ஜுனன் "இல்லை, அவள் விரும்பமாட்டாள். அவள் உத்தரையை வெறுக்கிறாள்" என்றான். பூர்ணை "அது இயல்பு... ஆனால் வாழ்வது அவர் மைந்தனின் குருதி" என்றாள். அர்ஜுனன் தத்தளித்து "உத்தரை கருக்கொண்டிருப்பவன் முடிசூடும் அரசன் என நிமித்தச்சொல் உள்ளது அவளுக்குத் தெரியுமா?" என்றான். மீண்டும் "அது தன் மைந்தனின் குருதி என்று அவள் எண்ணுகிறாளா?" என்றான். மீண்டும் அவனே "அது அவளை ஆறுதல்படுத்துவதுதானா?" என்றான்.

"உண்மை அவர்களுக்கு தெரியும். ஆகவே தான் மீளும்வழி குறித்து பேசுகிறார்கள்" என்றாள் பூர்ணை. "அவர் சென்று சிக்கிக்கொண்டது என்பது என்ன என்று நன்கு அறிந்திருக்கிறார்." அர்ஜுனன் "எனில் ஏன் இதை அவளிடம் சொல்லச் சொல்கிறாய்?" என்றான். "ஒவ்வொன்றையும் ஒவ்வொரு இடத்தில் புதைத்து வைத்திருப்பதனால் எதிலும் தெளிவில்லாமல் இருக்கிறார். அனைத்தும் பேசப்பட்டு முழுத் தருணம் அமையட்டும். அதன் பின்னர் என்ன எஞ்சுகிறதோ அதுவே மெய்மை என்றாகட்டும்" என்றாள் பூர்ணை.

"இத்தருணத்தில் இதை அவளிடம் சொல்லலாமா என்று தெரியவில்லை. நான் ஒரு சொல் இளைய யாதவரிடம் கேட்டுவிட்டு..." என்று அர்ஜுனன் சொல்ல அவள் தடுத்து "அவர் ஆணுடலில் இருக்கிறார். பரம்பொருளே ஆயினும் திகழும் சிலைக்கு கட்டுப்பட்டது என்பார்கள். பெண்ணுளம் அவர் அறியாதது" என்றாள். சற்றே கடும்குரலில் "சென்று அனைத்தையும் கூறுக, அரசே. எஞ்சாது அனைத்தையும் கிழித்து முன்வையுங்கள். பின்விளைவதென்ன என்று அவருக்கு தெரியட்டும். இன்று அவர்கள் எடுக்கும் முடிவுக்கு

பின்பு வருந்த நேரக்கூடாது. அனைத்தும் அறிந்தபின் எடுத்த முடிவு என்று அவர்கள் தெளிவுற எண்ணட்டும்" என்றாள்.

அர்ஜுனன் சில கணங்கள் அவளை நோக்கிவிட்டு "உன்னை நம்பி இம்முடிவை எடுக்க வேண்டியிருக்கிறது. உன் அகவையை. அரசியரை அணுகியறிந்த உன் வாழ்வை... எனக்கு வேறு வழியில்லை" என்றான். பின்னர் மெல்லத் தயங்கி "இது என்னை மட்டும் சார்ந்ததல்ல. உத்தரையையும் சார்ந்தது. குருகுலத்தின் அனைவரையும் ஒருவகையில் தொடர்புறுத்துவது" என்றான். "இத்தருணத்தில் இது உங்கள் இருவருக்கும் இடையே மட்டும் நிகழ்வது" என்றாள் பூர்ணை. தலைகுனிந்து அர்ஜுனன் உள்ளே சென்றான்.

பூர்ணை அக்குரல்கள் தனக்குக் கேட்கும்படியாக வாயிலுக்கு வெளியே நின்றாள். அர்ஜுனன் உள்ளே நுழைந்த பின் சிறிது நேரம் ஓசை எதுவும் கேட்கவில்லை. அவர்கள் சந்தித்துகொண்டார்களா என்று ஆவலுடன் பூர்ணை படலை திறந்து உள்ளே பார்த்தாள். மஞ்சத்தில் கண்களை மூடிக்கொண்டு சுபத்திரை படுத்திருப்பது தெரிந்தது. அவளை நோக்கியபடி அர்ஜுனன் நின்றிருந்தான். அவன் அவளை அழைக்கவில்லை. அவள் அவன் வந்ததை உணர்ந்திருக்கிறாள் என்று தோன்றவில்லை.

உள்ளே சென்று சுபத்திரையை எழுப்பவேண்டுமா என்று எண்ணியபோது சுபத்திரை தன்னுணர்வால் அவன் வந்திருப்பதை உணர்ந்து திடுக்கிட்டு விழித்தாள். கையூன்றி எழுந்தமர்ந்து "யார்?" என்றாள். எழுந்து நின்றபோது அவள் அர்ஜுனனை விட உயரமாக இருந்தாள். அவன் உடலைவிட பெரிய உடல். "எப்போது வந்தீர்கள்?" என்றாள். "சற்று முன்னர்தான்" என்று அவன் சொன்னான். கனிந்த குரலில்

“உன்னைப் பார்க்க வேண்டுமென்று வந்தேன். இறுதியாக உன்னிடம் சில சொல்ல வேண்டியுள்ளது. நீ சொல்வதை நானும் கேட்டாகவேண்டும்” என்றான்.

அவள் உணர்ச்சியற்ற குரலில் “உங்களிடம் எனக்கு சொல்வதற்கு எதுவுமில்லை. நமக்கிடையே இன்னும் உறவென்று ஏதும் எஞ்சியிருப்பதாகவும் நான் எண்ணவில்லை. நீங்கள் செல்லலாம்” என்றாள். “நம் மைந்தன்” என்று அவன் சொல்லத்தொடங்க “நம் மைந்தனுக்கும் நமக்குமான உறவு அறுந்துவிட்டது. அவனில்லை என்றாகிவிட்ட பிறகு உங்களுக்கும் எனக்கும் என்ன உறவு?” என்றபின் கைசுட்டி “நீங்கள் செல்லலாம்” என்றாள். “சுபத்திரை” என்று அவன் தளர்ந்த குரலில் அழைத்தான். “எதையும் பொறுப்பேற்றுக் கொள்ளும் தகுதிகொண்டவன் அல்ல நான். எனினும் உன் பொருட்டு அனைத்தையும் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். அனைத்தும் என் பிழையே என்று ஒப்புக்கொள்கிறேன். அதற்கான பழிச்சொற்கள் எதையும் ஏற்கவும் சித்தமாக இருக்கிறேன்” என்றான்.

“பழி கொள்ள வேண்டியவர் எவரென்று எனக்குத் தெரியும்” என்று சுபத்திரை சொன்னாள். “நீங்கள் வெறும் கருவி. உங்களுக்கு எந்த உரிமையுமில்லை. ஆனால் வெறும் கருவிகளிடம் உரையாடும் நிலையில் நானில்லை. செல்க” என்றாள். “நான் நம் மைந்தனைப்பற்றி சில விஷயங்களை அறுதியாக கூற வந்தேன்” என்றான். “என் மைந்தனைப் பற்றி நீங்கள் என்னிடம் எதுவும் கூறவேண்டியதில்லை” என்று அவள் உரக்க கூறினாள். அவள் உடல் நடுங்கியது. முகம் சிவந்து மூச்சு சீறத்தொடங்கியது.

“சுபத்திரை, உன் தோற்றம் என்னை தளரச்செய்கிறது. இருமுறை வந்து உன்னை பார்த்து சென்றிருந்த போதும் கூட இத்தனை நெகிழ்ந்திருப்பாய் என்று எண்ணவில்லை” என்றபடி அர்ஜுனன் கைநீட்ட அவள் சீறல் ஒலியெழுப்பி பின்னகர்ந்து சுவர் சாய்ந்து நின்றாள். “என்னிடம் மறுசொல்லேதும் எடுக்க வேண்டியதில்லை. கிளம்புக” என்று உரக்க கூவினாள். எண்ணியிராதபடி சீற்றம்கொண்டு எழுந்து “எதன்பொருட்டு சினம்?” என்று அர்ஜுனன் கூச்சலிட்டான். “களத்தில் நான் ஆசிரியரையும் பிதாமகரையும் கொன்றேன். உடன்குருதியினர் அனைவரையும் கொன்றேன். குருதியில் நீராடி வெற்றிக்கென இறுமாப்பும் கொண்டேன். அதன் பொருட்டு வரும் தலைமுறைகள் என் மேல் பழி சுமத்தலாம். இழிமகன் என்று என்னை வகுத்துரைக்கட்டும். துணைவியென உன் முன் நின்று நான் சிறுமை கொள்வதற்கென்ன உள்ளது?”

அவன் கைசுட்டி கூவினான். “நம் மைந்தன் சிறுவனல்ல. குண்டலமணிந்து படைக்கலம் எடுத்தவன். களம்நின்று அவன் கொய்தெறிந்த தலைகள் நானும் நிகழ்த்தியதற்கு நிகரானவை. கொல்பவன் கொல்லப்படுவதற்கும் உரியவன். அவன் களம் எழுந்ததன் பொருட்டு நீ இத்தனை துயரடைகிறாய் என்பது அவனுக்கு இழிவு.” அவள் கண்ணீரைத் துடைத்து வஞ்சத்துடன் அவனை நோக்கினாள். வஞ்சம் அவளை கூர்கொள்ளச் செய்தது. “எனில் கூறுக, நீங்கள் இப்போது துயரடைவது எதன்பொருட்டு?” என்று அவள் கேட்டாள். அவன் விழி தாழ்த்தி “அனைத்துக்காகவும்” என்றான். துயர் தளர்த்திய குரலில் “களத்தில் இன்றி எரிந்தழிந்த என் மைந்தருக்காகவும்” என்றான்.

அவள் இதழ்கோட்டி “அவர்களுக்காகவும் அல்ல. துயர்கொள்வது பிறிதொன்றுக்காக. தன் பிழையொன்றிலாத

இழப்பின் பொருட்டு மானுடர் நீடுதுயர் கொள்வதில்லை" என்றாள். அவன் முன்னடி வைத்து நெஞ்சைத் தொட்டு "என் பிழை என்ன?" என்று உரக்க கேட்டான். அவள் ஒன்றும் சொல்லவில்லை. "சொல், என் பிழை என்ன?" என்று அவன் மீண்டும் கேட்டான். சுபத்திரை ஒன்றும் சொல்லாமல் இகழ்ச்சி தெரிய நோக்கிக்கொண்டு நின்றாள். "சொல் இழிமகளே, என் பிழை என்ன? சொல்" என்று அர்ஜுனன் கூவினான்.

பூர்ணை மெல்ல நகர்ந்து வெளிவந்து அகன்ற முற்றத்தில் நின்றாள். உள்ளே அவர்கள் இருவரும் உரத்த குரலில் மாறி மாறி கூச்சலிடுவது கேட்டது. அவள் வெறிகொண்டவள்போல "செல்க! செல்க!" என்று கூவிக்கொண்டிருந்தாள். "நான் சொல்வதைக் கேள்... ஒரு சொல் கேள்" என்று அர்ஜுனன் கூறுவது கேட்டது. பின்னர் ஓசையடங்கினர். தாழ்ந்த குரலில் அவள் ஏதோ சொன்னாள். அர்ஜுனன் திகைத்து அவளை நோக்கியபடி நிற்பதை அவளால் பார்க்க முடிந்தது.

பின்னர் அர்ஜுனன் கதவைத் திறந்து வெளிவந்து அவளைப் பார்த்தான். "அவள் கழுத்திலிருக்கும் அந்த வாளைத் தாழ்த்தும்படி சென்று சொல்" என்றான். "அவர் தாழ்த்திக்கொள்வார்" என்று பூர்ணை சொன்னாள். அர்ஜுனன் தலையை அசைத்து "ஒன்றும் புரியவில்லை... ஒருகாலத்தில் ஒவ்வொன்றையும் புரிந்துகொள்ள முடியுமென்று எண்ணியிருந்தேன். இன்று மானுடரால் எதையேனும் புரிந்துகொள்ள முடியுமா என்ற அயர்வை அடைந்துவிட்டேன்" என்றான்.

"தாங்கள் இப்போதேனும் கூறியது நன்றே" என்றாள் பூர்ணை. "நான் எதையும் கூறவில்லை. அவள் எதையும் செவிகொள்ளும் நிலையில் இல்லை" என்றான் அர்ஜுனன்.

“கூறிவிட்டீர்கள். இவ்வளவுதான் அவரிடம் கூறமுடியும். இதற்கப்பால் சொல்லெடுக்க இயலாது” என்று பூர்ணை சொன்னாள். அர்ஜுனன் சில கணங்கள் அவளைப் பார்த்துவிட்டு “இவையனைத்தும் இந்திரப்பிரஸ்தத்தில் குருகுலம் நீடிக்க வேண்டும் என்பதற்காக ஊழ் வகுத்த சூழ்கை என்று நேற்று மாலை இளைய யாதவர் என்னிடம் சொன்னார்” என்றான்.

“நிகழ்வன அனைத்தும் ஊழே என்பது ஒரு நல்ல எண்ணம். செல்வதற்கான வழி மிகத் தெளிவாக வகுக்கப்பட்டுவிடுகிறது” என்றாள். அர்ஜுனன் “இவள் எதற்காக காத்திருக்கிறாள்?” என்றான். “தன் மைந்தனிடம் பேசுவதற்காக. மலர்ச்சூழ்கையிலிருந்து வெளிவரும் வழியை தன் மைந்தனிடம் தெரிவித்துவிடவேண்டும் என்கிறார்கள். அதை அறியாமல் மைந்தன் விண்புகலாகாது என்று சொல்கிறார்கள்” என்றாள் பூர்ணை. “இறந்தவர்களிடம் பேசவைக்கும் முனிவர் ஒருவரை அழைத்துவருவதற்காக ஏவலன் ஒருவன் சென்றிருக்கிறான்.”

“இறந்தவரிடமா?” என்றபின் “மைந்தனிடமா?” என்றான் அர்ஜுனன். “ஆம்” என்றாள் பூர்ணை. “என்ன பேசப்போகிறாள்?” என்று அர்ஜுனன் கேட்டான். அவள் சொற்களை அவன் செவிகொள்ளவில்லை என்று தெரிந்தது. “அவர் சென்று சிக்கிக்கொண்ட அந்த மலர்ச்சூழ்கையிலிருந்து எவ்வாறு வெளிவருவதென்று அவருக்கு தெரிந்தாகவேண்டுமாம். அதன் பின்னரே இங்கிருந்து அவர் மூச்சுலகிற்கு மீளவேண்டும் என்கிறார்.”

அர்ஜுனனின் முகம் மாறுபட்டது. “அந்த தாமரை மலர் பலநூறு இதழ்கொண்டது. அதில் ஒரு இதழ் இளைய யாதவர். பிறிதொன்று அவள். பிறிதொன்று நான். என்னுடன் என்

உடன்பிறந்தார்கள், அவன் உடன்குருதியினர், துரியோதனன், கௌரவர், அங்கர், துரோணர், லட்சுமணன், துருமசேனன், ஜயத்ரதன் என இதழ்கள் ஏராளமாக உள்ளன. அவள் அவனுக்கு எதை சொல்லப்போகிறாள்? அந்த ஒவ்வொருவருடைய ஊழ் நெறியையும் சொல்லிவிடுவாளா என்ன? சொல்லி முடிக்க எத்தனை ஆண்டுகளாகும்?"

அவள் வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தாள். அவன் தன் தலையில் ஓங்கி அறைந்து "அறிவின்மை! முற்றிலும் அறிவின்மை!" என்றான். "அவள் அவனை இடருக்கே கொண்டுசெல்வாள். அதற்கு நான் விடப்போவதில்லை... அது நடவாது என்று அவளிடம் சொல்" என்றபின் அவன் புரவியை அணுகி அதிலேறி விரைந்து சென்று மறைந்தான். அவள் புரவி செல்வதை நோக்கியபடி நின்றபின் மீண்டும் சென்று திண்ணையில் அமர்ந்தாள்.

நீர்ச்சுடர் - 50

பகுதி ஏழு : தீராச்சுழி – 6

பூர்ணை ஓர் ஒவ்வாமை உணர்வை அடைந்து அது என்ன என்று வியந்துகொண்டிருக்கையிலேயே தொலைவில் சகடத்தின் ஓசையை கேட்டாள். அது என்ன என்று உடனே அவளுக்குப் புரிந்தது. பதற்றத்துடன் எழுந்து நின்றாள். ஏவலன் புரவியிலிருந்து இறங்கி அருகே வந்து "வணங்குகிறேன், செவிலியே... முனிவர் வந்துகொண்டிருக்கிறார்" என்றான். அவள் "அரசியிடம் சொல்வதற்கு முன்னர் இளைய யாதவருக்கு தெரிவிக்கவேண்டும்" என்றாள். "ஆம், அதுதான் என் குழப்பம்...

இவரை அழைத்துவரும் செய்தி இங்கே எவருக்கும் தெரியாது... நான் எங்கே கொண்டுசெல்வது?" என்றான் ஏவலன்.

பூர்ணை ஒருகணம் எண்ணிவிட்டு "நேராக கங்கைக்கரைக்கே கொண்டுசெல்லுங்கள். கங்கைப் படித்துறையில் அமரச்செய்யுங்கள்" என்றாள். "கங்கைப் படித்துறையிலா? இந்தப் பொழுதில் அங்கே..." என்று ஏவலன் தயங்க "முனிவர்கள் கங்கைப் படித்துறையில் இருப்பதில் விந்தை என ஏதும் தோன்றாது. இங்கு எங்கு அவர் இருந்தாலும் அது நோக்குகளை ஈர்ப்பதாகவே அமையும்" என்றாள். "எனில் நீங்களே அவரை அங்கே அழைத்துச்செல்லுங்கள். நான் சென்று இளைய யாதவரிடம் செய்தியை அறிவித்து வருகிறேன்" என்றான் ஏவலன். பூர்ணை அணுகிவந்த சகடத்தை நோக்கிவிட்டு "ஆகுக!" என்றாள்.

ஏவலன் புரவியில் ஏறி அகன்று சென்றான். அவள் கைகளைக் கூப்பியபடி நின்றிருக்க வண்டி அணுகியது. அதன் நுகத்தில் அமர்ந்திருந்த வண்டியோட்டி அவளைக் கண்டு தயங்க வண்டியை நிறுத்தும்படி அவள் கை காட்டினாள். வண்டி நின்றது. குதிரை செருக்கடித்து பிடரி சிலிர்த்துக்கொண்டது. வண்டியின் பின்பக்கத் திரையை விலக்கியபடி எட்டிப்பார்த்த சடைமுடித்தலைகொண்ட முனிவர் "எவர் என்னை எதிரேற்பது? நீ யார்?" என்றார். அவள் தொழுதபடி அருகணைந்து "நான் சிபிநாட்டு பணிப்பெண்ணான பூர்ணை. என் அரசியின் பொருட்டு தங்களை வணங்கி வரவேற்கிறேன்" என்றாள். "பணிப்பெண்ணா என்னை வரவேற்பது? என்னை அழைத்த யாதவ அரசர் எங்கே?" என்று அவர் கேட்டார்.

"பொறுத்தருள்க, தவத்தாரே! அவர் தங்களை இங்கே சந்திப்பது முறையாகாது என்று பட்டது. மங்கலம் பொலியும்

இடங்களில்தான் அரசர்கள் தவமுனிவரை எதிர்கொள்ளவேண்டும் என்பது நெறி... இங்கே நீத்தார்ச்சடங்குகள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. சுற்றியிருப்பது காடு. ஆகவே என்ன செய்வதென்று தெரியவில்லை. கங்கை அழியா மங்கலம் கொண்டவள். ஆகவே தங்களை அவர் கங்கைக்கரையில் சந்திக்கலாம் என்று எண்ணினேன்... தங்களை அங்கே அழைத்துச்செல்லலாம் என்று காத்து நின்றேன்" என்றாள் பூர்ணை. "எனக்கு அவ்வகை மங்கலங்கள் ஏதுமில்லை. நான் செய்யும் தவம் வேறு" என்று விகிர்தர் சொன்னார். "எனினும் நன்று. அரசர்கள் தங்கள் மங்கலங்களை பேணிக்கொள்ளவேண்டும். அதுவே நிலம் பொலியச் செய்வது."

பூர்ணை அவர் கால்கள் படிந்த நிலத்தைத் தொட்டு வணங்க அவர் அவளை தொடாமல் "நலம் சூழ்க!" என வாழ்த்தினார். "வருக, அறத்தாரே!" என அவள் அவரை அழைத்த பின் ஓடிச்சென்று புலித்தோல் சுருள் ஒன்றை எடுத்துக்கொண்டு கங்கைக்கரை நோக்கி இட்டுச் சென்றாள். அவள் கையசைக்க இளம் ஏவற்பெண்டு ஒருத்தி அவளைத் தொடர்ந்து வந்தாள். கங்கையின் அப்பகுதியில் ஓரிரு ஏவலர்கள் மட்டுமே தென்பட்டனர். அது குடில்களில் தங்கும் பெண்கள் நீராடும் படித்துறைகள் அமைந்த பகுதி. ஏவற்பெண்கள் முன்னரே நீராடிவிட்டிருந்தனர். மறுநாள் புலரிக்கான நீராட்டு தொடங்கப்படவில்லை. மரப்பலகைகள் இடப்பட்ட பாதை வழியாக அவள் அவரை அழைத்துச்சென்றாள். அவருடைய குறடுகள் பலகைகளில் உரசி ஓசையிட்டன. அவருடைய ஒரு கால் சற்று முடம்கொண்டதாக இருக்கலாம் என எண்ணிக்கொண்டாள்.

அவர் அரையிருளிலேயே வண்டியிலிருந்து இறங்கினார். பந்தஒளி நோக்கி தன் முகத்தை கொண்டுசெல்லவுமில்லை. ஆகவே அவள் அவரை நிழலுரு போலவே பார்த்தாள். அவருடைய அசைவுகளில் ஓர் ஒத்திசைவின்மை இருந்தது. அவர் ஒரு பந்த ஒளிப்பகுதியை கடந்தபோது நிழல் எழுந்து அவள் முன் தெரிந்தது. அதில் அந்தக் கோணல் மேலும் பெரிதாகத் தெரிந்தது. அவள் உள்ளம் ஒவ்வாமை கொண்டு குமட்டுவதுபோல் உடலே அதிர்ந்தது. அவர் மூச்சிரைத்து நின்று "நெடுந்தொலைவோ?" என்றார். "இல்லை, அருகேதான்" என்றாள். "நீர்ப்பரப்பின் ஒளி அதோ தெரிகிறது." அவர் "இந்தப் பகுதியே இருண்டு கிடக்கிறதே?" என்றார். அவள் ஒன்றும் சொல்லாமல் நடந்தாள். "என் பேச்சுக்கு மறுமொழி இல்லாமலிருப்பதை நான் விரும்புவதில்லை" என்று அவர் சொன்னார். "இங்கே சடங்குகள் ஏதுமில்லை, அறத்தாரே" என்றாள் பூர்ணை.

படிக்கட்டு கங்கைமேல் அறைந்து நிறுத்தப்பட்ட அடிமரங்களின்மேல் பலகைகளால் அமைக்கப்பட்டிருந்தது. பூர்ணை அதை அடைந்து முதல் படிமேல் புலித்தோலை விரித்து "அமர்க!" என்றாள். அவர் அமர்ந்தபோது மீண்டும் அந்தக் கோணல் தெரிந்தது. அவருடைய ஒரு கால் குறுகலாக இருந்தது. அவள் அவரை கூர்ந்து நோக்க அஞ்சினாள். "தாங்கள் அருந்துவதற்கு..." என்று அவள் சொல்ல "இன்நீர்... உண்பதற்கும் ஏதாவது" என்றார். "இன்கிழங்குகள் உள்ளன" என்றாள். "ஊனுணவு வேண்டும்... நான் ஊனின்றி உண்பதில்லை" என்றார் விகிர்தர். அவள் "அவ்வாறே" என்றபின் தன்னை தொடர்ந்து வந்த ஏவற்பெண்டிடம் அவருக்கு ஊனும் இன்நீரும் கொண்டுவரும்படி ஆணையிட்டாள்.

“என்னை எதற்காக அழைத்தார்கள் என்று தெரியவில்லை. நான் இளைய யாதவரை ஒரே ஒருமுறை தண்டகாரண்யத்தில் சந்தித்திருக்கிறேன்” என்றார். “தாங்கள் நீத்தோருடன் பேசும் ஆற்றல்கொண்டவர் என்றார்கள்” என்றாள். “நீத்தோரிடமா?” என அவர் சிரித்தார். “நீத்தோர் அனைவரிடமும் அல்ல. நீத்து இங்கேயே முந்தைய வாழ்வின் நீட்சி என இருப்போரிடம் மட்டுமே. அவர்கள் உடல்நீத்தோர் மட்டுமே, பிறவிநீத்தோர் அல்ல. இங்கே அவ்வண்ணம் பலநூறுபேர் சூழ்ந்திருக்கிறார்கள்.” பூர்ணை மெய்ப்பு கொண்டாள். “இங்கா?” என சூழவும் நோக்கியபின் “இங்கு அருகிலா?” என்றாள்.

அவர் சற்றே சலிப்புற்ற குரலில் “இங்கென்றால், நாம் அவர்களை எண்ணும் இச்சூழலில் என்று பொருள். அவர்களுக்கு காலமும் இடமும் இல்லை. ஆகவே இங்கென்றும் அங்கென்றும் இல்லை. எண்ணியோர் அருகே இருக்க இயலும். இங்கிருக்கையிலேயே அஸ்தினபுரியிலோ இந்திரப்பிரஸ்தத்திலோ இருக்க இயலும். ஆனால் அவர்கள் உடல்வாழ்வு கொண்டிருந்தபோது இருந்த இடங்களில் மட்டுமே திகழ இயலும்...” என்றார். அவள் பெருமூச்சுவிட்டாள். “பல்லாயிரவர். இங்கே மானுட வாழ்க்கை நிகழத்தொடங்கியபின் இத்தனை உயிரெச்சங்கள் இப்படி வெறும்வெளியில் தவித்து நிறைந்திருப்பதை நான் கண்டதில்லை... கொடியது இப்போர்” என்றார் விகிர்தர்.

இன்நீரும் ஊனுணவும் வந்தது. அவள் அதை வாங்கி அவருக்கு படைத்தாள். அவர் அதன் அருகே அமர்ந்து ஒரு கையை ஊன்றிக்கொண்டார். அவர் உடல் ஒருபக்கமாகச் சாய்ந்திருந்தமையால் அது தேவைப்பட்டது. மெல்லிய முனகலோசையாக நுண்சொற்களைச் சொல்லி ஊனுணவிலும்

இன்நீரிலும் சற்று எடுத்து இடப்பக்கமும் வலப்பக்கமும் இட்டார். பின்னர் அள்ளி உண்ணத் தொடங்கினார். அவருடைய நாவோசை கேட்டுக்கொண்டிருந்தது. "மாபெரும் அழிவுகளில் இப்படி நிகழுமென அறிந்திருக்கிறேன். நகர் எரிகொள்கையில், நிலம் நடுங்குகையில், பெருவெள்ளத்தில்... வாழ்வோரால் கைவிடப்பட்டவர்கள் மூச்சுலகில் அலைமோதுவார்கள். இப்போது மூச்சுலகமே திணறும்படி நிறைந்திருக்கிறார்கள்" என்றார்.

"நீத்தார் அனைவரிடமும் நீங்கள் பேசக்கூடுமா?" என்று அவள் கேட்டாள். "ஆம், அவர்கள் இங்கே நீர்க்கடன் முடிக்கப்பட்டு நிறைவுகொண்டு ஃபுவர்லோகத்திற்குச் சென்றுவிட்டிருக்கக் கூடாது." அவள் தாழ்ந்த குரலில் "சூதர் மைந்தர்களுமா?" என்றாள். "ஏன், அவர்களும் உயிர்கள் அல்லவா? அனைத்துயிரும் இச்சுழற்சியிலேயே உள்ளன. ஆனால் பிற உயிர்கள் உடலால் மட்டுமே வாழ்பவை, உள்ளம் உடலின் ஒரு பகுதியென்றே இயங்குபவை. உடலழிந்ததுமே உளம் அழியும் ஊழ்கொண்டவை. மானுடர் உள்ளம்செலுத்தி சித்தம்திரட்டி வாழ்பவர்கள். அவர்களுக்குத்தான் உடலுக்கு அப்பால் எழும் உள்ளம் உள்ளது. உடல் அழிந்த பின்னரும் அது காற்றில் வாழ்கிறது."

அவர் கைவிரல்களை ஒவ்வொன்றாக நக்கினார். அவள் பெருமூச்சுவிட்டாள். "அவர்கள் நம்மிடம் பேசலாம், நாமும் அவர்களிடம் பேசலாம். இரு உலகுக்கும் நடுவே இருக்கும் அந்தப் படலத்தில் எண்ணியிராது கிழிசல் விழுமென்றால் அது நிகழும். ஆனால் அது தற்செயலாகத்தான் நிகழ்கிறது. மிஞ்சி எழும் உணர்வுகளின் விசையாலும் நிகழலாம். ஆனால் எளியோருக்கு அது எண்ணினால் இயல்வதல்ல" என்றார். "நான்

அத்தொழில் கற்றவன். அதை யோகமெனப் பயிலலாம் என்று எண்ணினேன். அது இப்புடவிநெசவின் முடிச்சுகள் சிலவற்றை அவிழ்க்குமென கணக்கிட்டேன்." அவர் எண்ணியிராக் கணத்தில் உரக்க நகைத்தார். "பின்னர் அறிந்தேன், அவ்வண்ணம் எவரும் இப்புடவிநெசவை அறிந்துவிடமுடியாதென்று. அறிந்து விடுபடுவதைப்போல் பிழையான எண்ணம் வேறொன்றில்லை."

"பின்னரும் இதை ஏன் தொடர்கிறேன் என்று எண்ணுகிறாயா? அறிந்ததை உதறுவது எளிதல்ல. அதற்கு அறிந்தவை அனைத்தையும் அழிக்கும் பேருணர்வொன்று தேவையாகிறது. அத்திசை நோக்கி என்னால் செல்ல இயலவில்லை. அதற்குத் தடையாக இருப்பது என்ன என்று அறிவாயா?" அவர் சூழ இருந்த இருளை நோக்கி கைவீசி "இவர்கள்... இதோ என்னருகே நின்றிருக்கும் இச்சூத இளைஞன். துயர்கொண்டிருக்கிறான். பேசவிழைகிறான். அவனுக்கான நீர்க்கடனைச் செலுத்தவேண்டியவர் அவன் நீத்தான் என்றே அறியாமலிருக்கிறார்" என்றார். பூர்ணை கைநீட்டி ஒரு சொல் எடுத்து அவரை நோக்கிச்சென்று தன்னை இறுக்கிக்கொண்டாள். அவர் கங்கைநீரில் கைகளை கழுவிக்கொண்டார். கங்கையிலேயே நீரை காறி உமிழ்ந்தார்.

மேலே விளக்கொளி அசைந்தது. இளைய யாதவர் வந்துகொண்டிருந்தார். அவரைத் தொடர்ந்து சுபத்திரை வருவதை அதன் பின்னரே பூர்ணை கண்டாள். சுபத்திரை தன் தலைமேல் ஆடையை இழுத்துப் போர்த்தியிருந்தாள். இளைய யாதவர் புன்னகைத்துக்கொண்டிருப்பதுபோல அவ்வொளியில் தெரிந்தது. அது அவர் முகத்தின் இயல்பா? அன்றி நோக்குவோர் அதன்மேல் ஏற்றிவைக்கும் மாயையா? அவள் நோக்கிக்கொண்டே நிற்க விகிர்தர் "அவர்தான்... நான் அன்று

நோக்கிய அதே வடிவில் இருக்கிறார்" என்று கூவினார். கங்கைவிளிம்பில் இருந்து மேலேறி வந்து கையை உதறியபடி "அவருடைய நோக்கம் என்னவென்று தெரியவில்லை. நீத்தாரிடம் பேச விழைகிறாரா? யாதவர்களில்தான் நீத்தார் மிகுதி. அவர்களைத் திரட்டி நீத்தாரால் ஒரு படைதிரட்ட எண்ணுகிறாரா?" என்றார்.

அவருடைய நகைப்போசை பூர்ணையை நடுங்கச் செய்தது. சுபத்திரை நின்றுவிட்டாள். இளைய யாதவர் சீராக காலடி வைத்து நடந்துவந்தார். அருகணைந்து "வணங்குகிறேன், விகிர்தரே... இத்தருணத்தில் மீண்டும் காண்போம் என அன்றே தோன்றியது" என்றார். "ஆம், அன்று சொன்னீர்கள். புதைந்ததை மீட்டெடுக்க மீண்டும் சந்திப்போம் என்று" என்றார் விகிர்தர். சுபத்திரையை நோக்கி திரும்பிய இளைய யாதவர் "சுபத்திரை, இவர் நான் கூறிய முனிவர். காலச்சுழிப்பை அறிந்தவர். கரைகளைக் கடக்கும் கலை தேர்ந்தவர்" என்றார். விகிர்தர் அதற்கும் பேரோசையுடன் நகைத்தார். சுபத்திரை அவரை முகம் சுளித்து நோக்கியபடி நின்றாள்.

பூர்ணை அப்போதுதான் அவரை முழுமையாக பார்த்தாள். அவர் உடலில் ஒரு பகுதி இன்னொரு பகுதியின் பாதியளவே இருந்தது. கால்கள், கைகள், தோள்கள் அனைத்திலுமே அந்த வேறுபாடு தெரிந்தது. முகமே அதனால் ஒரு பக்கமாக இழுத்துக்கொண்டது போலிருந்தது. ஒரு கண் மிகச் சிறிதாக நோக்கில்லாத செந்நிறக் குழியாக தெரிந்தது. இளைய யாதவர் "முனிவரை வணங்குக!" என்றார். சுபத்திரை முன்னால் வந்து அவரை வணங்க "நிறைவுறுக!" என்றார். அவள் நிமிர்ந்து அவரை நோக்கி "களம்பட்ட என் மைந்தனிடம் பேச உங்களால் இயலுமா?" என்றாள். "அவன் இங்கே இருக்கவேண்டும்...

அவனுக்கு நீர்க்கடன் அளிக்கப்பட்டுவிட்டதென்றால் ஃபுவர்லோகம் புகுந்திருப்பான். அங்கே என் குரல் சென்றடையாது" என்றார். "ஃபுவர்லோகத்தில் சிலர் நெடுங்காலம் இருப்பார்கள். சிலர் மறுகணமே கருவறை புகவும்கூடும்."

"உங்களால் இயலுமா? மெய்யாகவே இயலுமா?" என்று கூவியபடி சுபத்திரை அவர் அருகே மண்டியிட்டாள். "என் மைந்தன் அபிமன்யுவிடம் நான் பேசவேண்டும். அவன் களம்பட்டான். அவனுக்கு நீர்க்கடன் செய்யப்படவில்லை. அவன் இங்குதான் இருக்கிறான். அவனிடம் நான் பேசவேண்டும். அவனிடம் ஒன்று சொல்லவேண்டும்." விகிர்தர் அவளை இரக்கத்துடன் நோக்குவது போலிருந்தது. "சொல்க, உனக்கு அவனிடம் பேசவேண்டிய தேவை என்ன?" அவள் "நான் அவனிடம் சொல்லவேண்டியது ஒன்று உண்டு. அவன் இங்கே சிக்கிக்கொண்ட சூழ்கை ஒன்றைப்பற்றி... அவனால் அதிலிருந்து வெளியேற இயலவில்லை. அவன் அதை அறிந்தாலே போதும். அறியாமல் அவன் இப்பிறவி நீங்கக்கூடாது" என்றாள்.

"அறிக அன்னையே, நீத்தார் சுமந்து செல்லும் எடை என்பதே இப்பிறவியில் எஞ்சுவதுதான்! அணையாத் துயர்கள், எஞ்சும் வஞ்சங்கள், தவறிய கடமைகள், வளரும் பற்றுக்கள்... அறிவும் கூட சுமையே. குறைவான சுமையுடன் அவர்களை இங்கிருந்து அனுப்புவதே நாம் அவர்களுக்குச் செய்யும் நல்லுதவி" என்றார் விகிர்தர். "எடை மிகக்கொண்டு செல்பவர்கள் விரைந்து கருவறை புகுந்துவிடுகிறார்கள்." சுபத்திரை சீற்றத்துடன் "நான் நற்சொல் கேட்க எவரையும் நாடவில்லை. என் மைந்தனிடம் பேச எனக்கு உதவ இயலுமா? அதைமட்டுமே கேட்டேன்"

என்றாள். "உன் தமையன் என் நண்பர். அவருக்காகவே இதற்கு ஒப்புக்கொண்டேன். இது எளிய செயல் அல்ல. தெய்வங்களின் ஆணைக்கு அறைகூவலிடுவது" என்றார் விகிர்தர். "நான் அறைகூவலிடுகிறேன். நான் அத்தனை தெய்வங்களையும் அறைகூவுகிறேன்" என்று உடைந்த குரலில் சுபத்திரை கூறினாள்.

"நீ என் மகள் என எண்ணி இதை சொல்கிறேன். நீ அவனுக்கு பெருந்தீங்கு இழைக்கக்கூடும்" என்றார் விகிர்தர். "நான் அவனிடம் பேசியாகவேண்டும்..." என்று அவள் இரு கைகளையும் மேலே தூக்கி கூச்சலிட்டாள். "எதுவாயினும் சரி, அவன் சிக்கிக்கொண்ட அந்தச் சூழ்கை என்ன என்று அவன் அறியவேண்டும். வெளியேறும் வழியை அறிந்த பின்னரே அவன் இப்பிறவி முடித்து விண்ணேகவேண்டும். இல்லையென்றால் இச்சூழ்கை அடுத்த பிறவியிலும் தொடரும். அங்கும் வெளியேறவியலாது என் மைந்தன் சிக்கிக்கொள்வான்... அவன் அடுத்த பிறவியிலாவது விடுபட்டாகவேண்டும்." விகிர்தர் "எண்ணிக்கொள்க, அது அத்தனை எளிதல்ல!" என்றார். "எனக்கு இனி சொற்கள் தேவையில்லை" என்றாள் சுபத்திரை.

"யாதவரே, உமது ஆணை என்ன?" என்று விகிர்தர் கேட்டார். "அவள் விழைவு அது. ஆகவேதான் உங்களை வரவழைத்தேன்" என்றார் இளைய யாதவர். அவரை சில கணங்கள் கூர்ந்து நோக்கியபின் "நீர் விளையாடுவதென்ன என்று எனக்கு மெய்யாகவே புரியவில்லை. ஆனால் எனக்கு வேறுவழியில்லை என்று மட்டும் தெரிகிறது..." என்றபின் சுபத்திரையை நோக்கி "ஒன்றைமட்டும் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன். ஒரே ஒரு முறைதான். அதற்குள்

கூறவேண்டியதை கூறிவிட வேண்டும். பிறகு என்னிடம் எதையும் கோரக்கூடாது" என்றார். "இல்லை, ஒருமுறை போதும்" என்றாள் சுபத்திரை. அவர் "மீண்டும் இறுதியாகச் சொல்கிறேன், இது நன்றல்ல" என்றார். "அளிகூருங்கள், முனிவரே. உங்கள் அடிபணிந்து கோருகிறேன்" என்று அவள் கைநீட்டி அழுதாள்.

"சரி" என்றபின் அவர் கங்கையை நோக்கி கண்களை மூடி ஊழ்கத்தில் அமர்ந்தார். தவிப்புடன் அவரைப் பார்த்தபடி சுபத்திரை அருகே அமர்ந்தாள். பூர்ணை பெருமூச்சை அடக்கிக்கொண்டாள். மார்பில் கைகளைக் கட்டியபடி இளைய யாதவர் அப்பால் நின்றார். கங்கை கரிய நெளிவென ஒழுகிக்கொண்டிருந்தது. நீண்ட பெருமூச்சுடன் விகிர்தர் கண்களை திறந்தார். சுபத்திரையை நோக்கி "உன் மைந்தனுக்கு நீர்க்கடன் அளித்தாகிவிட்டதே, அரசி. அவன் இப்போது இங்கே இல்லையே" என்றார். "யார்?" என்று அவள் அலறினாள். "இல்லை. நீர்க்கடன் இதுவரை அளிக்கப்படவில்லை. என் மைந்தனுக்கு எவரும் நீர்க்கடன் அளிக்கவில்லை." மறுகணம் என்ன நடந்தது என்று அவளுக்குப் புரிந்தது. இளைய யாதவரை நோக்கி கைநீட்டி "அவர் அதை செய்திருக்கிறார். உங்கள் தோழர் அதை செய்திருக்கிறார். என்னை தோற்கடிக்க அவர் அதை செய்திருக்கிறார்" என்று கூவினாள்.

விகிர்தர் "ஆம், அவர் அதை செய்யக்கூடியவரே" என்றார். "என்ன செய்வது? முனிவரே, என்ன செய்வது? என் மேல் இரக்கம் கொள்ளுங்கள். எனக்கு ஒரு வழிகாட்டுங்கள்" என்று சுபத்திரை அழுதாள். "பொறு" என்றபடி விகிர்தர் மீண்டும் கண்களை மூடினார். சுபத்திரை தவிப்புடன் இளைய யாதவரை பார்த்தாள். விகிர்தர் கண்களை மூடி "நீர்க்கடன் முடித்து

நெடும்பொழுது ஆகவில்லை. ஃபுவர்லோகத்தில் வாழ்பவர்களிடம் நாம் உரையாட இயலாது. ஆனால் நம் சொற்கள் சிலவற்றை அவர்களுக்கு அனுப்பிவிடமுடியும்" என்றார். கங்கை நீரில் இறங்கி கரையோரம் மலர்ந்துகிடந்த தாமரைகளையும் குவளைகளையும் பார்த்தபடி நின்றார். பின்னர் திரும்பி "உன் மைந்தன் ஏறும் கருபீடம் ஒருங்கிவிட்டது. அவன் அங்கே நிகழவிருக்கிறான்" என்றார்.

"எங்கே? எந்த வயிற்றில்?" என்று கை கூப்பியபடி பதறிய குரலில் சுபத்திரை கேட்டாள். "அது எவருக்கும் தெரியாது. மனிதனா மிருகமா பறவையா புழுவா என்று கூடக் கூற முடியாது" என்றார் விகிர்தர். "ஆசிரியரே, இப்போது என்ன செய்வது? எனக்கு ஒரு ஆறுதல் சொல்லுங்கள். என் மைந்தனிடம் ஒரு சொல்லேனும் நான் உரைக்கவேண்டும். இச்சூழ்கையின் மந்தணத்தை மட்டுமாவது சொல்லிவிடவேண்டும்" என்று சுபத்திரை சொன்னாள். "ஆத்மா தனக்குரிய முதல் உயிரணுவாகிய பார்த்திவப் பரமாணுவை ஏற்று அதனுடன் இணைவதுவரை வாய்ப்பிருக்கிறது. இணைந்துவிட்டால் இப்பிறவியுடனான அதன் தொடர்பு முற்றிலும் அறுந்துவிடும். பார்ப்போம்..."

விகிர்தர் நீரில் இறங்கி ஒரு தாமரை மலரை பறித்தார். அதை எடுத்து வந்து நெஞ்சோடணைத்து அவளிடம் நீட்டினார். "இதோ பார். இதில் உன் மைந்தன் இருக்கிறான்" என்றார். அவள் அதை வாங்கிக்கொண்டு அமர்ந்து மடியில் வைத்து குனிந்து கூர்ந்து நோக்கினாள். அந்தத் தாமரைப்பூவின் மகரந்த பீடத்தில் இரு சிறு வெண்புழுக்கள் நெளிந்தன. மெல்லிய நுனி துடித்து துவண்டு உந்த அவை நீந்தி நகர்ந்தன. "இது என் மாயக்காட்சி. உன் மகன் இருக்கும் கரு இந்த மலர். இதிலொன்று உன்

மைந்தன். நீ அவனிடம் பேசு. ஆனால் இந்தத் தாமரை கூம்பிவிட்டால் பிறகு எதுவும் செய்யமுடியாது." சுபத்திரை அதை கூர்ந்து நோக்கி மேலும் குனிந்தாள். "இதில் என் குழந்தை யார், ஆசிரியரே?" என்றாள். "இதோ இந்தச் சிறு வெண்புழு. அவர்கள் இரட்டையர்கள்" என்றார் விகிர்தர்.

சுபத்திரையின் முகம் மலர்ந்தது. உவகையால் எழுந்த பதற்றம் அவள் கைகளை நடுங்கச்செய்தது. எண்ணங்கள் எழாமல் முகம் உறைந்து உதடுகள் அசைவிழந்து விழிகள் நிலைத்து அமர்ந்திருந்தாள். பூர்ணை அந்தப் புழுவை நோக்கினாள். பட்டுத் தொட்டிலில் கைகால் உதைத்து நெளியும் சிறு மகவு போலிருந்தது. விகிர்தர் "விரைவு" என்றார். சுபத்திரையிடம் பேச்சே எழவில்லை. "பேசு பேசு" என்றார் விகிர்தர். "அபிமன்யு" என்று அவள் அழைத்தாள். தொண்டை அடைக்க "மைந்தா, அபிமன்யு" என்றாள். அந்தச் சிறு புழு அசைவற்று நின்றது. பிறகு அதன் தலை மேல்நோக்கி உயர்ந்தது. சிவந்த புள்ளிகள்போல அதன் கண்களை பூர்ணை கண்டாள்.

சுபத்திரையிடமிருந்து ஒரு விம்மலோசை வெளிப்பட்டது. "பேசு பேசு" என்று விகிர்தர் அதட்டினார். திடீரென்று அந்த இன்னொரு புழுவை சுபத்திரை பார்த்தாள். "ஆசிரியரே, இது யார்? அவனுடைய இரட்டைச் சகோதரன் யார்?" என்றாள். "அது எதற்கு உனக்கு? நீ உன் குழந்தையிடம் கூற வேண்டியதைக் கூறு" என்றார் விகிர்தர். "இல்லை. நான் அதை அறிந்தாக வேண்டும். அவன் யார்?" என்று அவள் கூவினாள். விகிர்தர் அலுப்புடன் "நீ தேவையற்றதை அறிய விழைகிறாய். அது ஊடுருவல். மானுடருக்கு அந்த உரிமை இல்லை" என்றார். "அவன் யார்? என் மைந்தனின் ஒற்றைக்குருதியினன் யார்? எனக்குத் தெரிந்தாகவேண்டும்" என்று அவள் கூச்சலிட்டாள்.

விகிர்தர் "என்ன இது, யாதவரே?" என்றார். "கூறுக!" என்றார் இளைய யாதவர். அவரை ஒருகணம் நோக்கிவிட்டு "நன்று, எனில் கூறுகிறேன்" என்றார் விகிர்தர். "அவன் பெயர் பிருஹத்பலன். கோசல மன்னனாக இருந்தவன்." சுபத்திரை திகைத்து "கோசல மன்னனா? என் மகனால் போர்க்களத்தில் கொல்லப்பட்டவனா?" என்று கூவினாள். "ஆம். அவர்கள் இருவருக்கும் இடையே மாற்ற முடியாத ஓர் உறவு பிறவிகள்தோறும் தொடர்கிறது. அதன் தொடர்ச்சியை எவரும் அறிய முடியாது. நீ உன் குழந்தையிடம் சொல்ல வேண்டியதை சொல்லிவிடு" என்றார் விகிர்தர்.

"அடுத்த பிறவியில் என்ன நிகழப்போகிறது?" என்றாள். "அது உனக்கு எதற்கு?" என்று விகிர்தர் எரிச்சலுடன் சொன்னார். சுபத்திரை "அபிமன்யு! அது கோசல மன்னன் பிருஹத்பலன். உன்னால் கொல்லப்பட்டவன். உன் இரட்டைச் சகோதரன் உன் எதிரி. மைந்தா, எச்சரிக்கை கொள். அவன் உன் எதிரி" என்று கூவினாள். விகிர்தர் சினத்துடன் "என்ன பேசுகிறாய் நீ?" என்று கூவினார். சுபத்திரை களைப்புடன் மூச்சிரைத்தாள். தாமரைச்சூழ்கை பற்றி அதுவரை கூறவில்லை என்று உணர்ந்தாள். "அபிமன்யு, இதோ பார். பத்மவியூகம்தான் உன் ஊழின் புதிர். அதிலிருந்து வெளியேறும் வழியை கூறுகிறேன்" என்றாள்.

ஆனால் தாமரை இதழ்கள் கூம்பத்தொடங்கின. "அபிமன்யு! அபிமன்யு!" என அவள் கூவிக்கொண்டே இருந்தாள். தாமரையை உலுக்கி திறக்க முயன்றாள். அது இறுகிய கைவிரல்கள் என மூடிவிட்டது. "ஆசிரியரே..." என்று கூவியபடி அதை பிரிக்க முயன்றாள். "பயனில்லை, அரசி. அவன் சென்றுவிட்டான்" என்றார் விகிர்தர். "ஆசிரியரே, என்னை

காத்தருள்க! எனக்கு அருள்க!" என்று கதறியழுதபடி அவர் காலில் விழுந்தாள் சுபத்திரை. "எனக்கு அளிகூருக! என் குழந்தையிடம் மேலும் ஒரு சொல் பேசிக் கொள்கிறேன்... மேலும் ஒரு சொல்... ஒரே ஒரு சொல்!" என்று அவர் பாதங்களை பற்றிக்கொண்டாள்.

விகிர்தர் அவள் கைகளை மெல்ல உதறிவிட்டு அப்பால் நடந்தார். இளைய யாதவரை ஒருகணம் நோக்கி நின்றார். அவர் முகத்தில் ஒரு தவிப்பு தெரிந்தது. இளைய யாதவரின் முகம் புன்னகை மாறாமல் அப்படியே இருந்தது. சுபத்திரை கால் தளர படிகளில் அமர்ந்து முழங்காலில் முகம் புதைத்து கதறிக் கதறி அழுதாள். இளைய யாதவர் அருகே சென்று குனிந்து அவள் தோளில் தன் கையை வைத்தார். "மூத்தவரே, அபிமன்யு... என் குழந்தை அபிமன்யு" என்று அவள் ஏங்கினாள். "வா, போகலாம். இனி ஒன்றும் செய்வதற்கில்லை" என்றார் இளைய யாதவர். "என் குழந்தைக்கு இப்போதும் வெளியேறும் வழி தெரியவில்லையே. தன் ஊழின் புதிரை சுமந்தபடி அவன் போகிறானே. நான் பழிகாரி, நான் கீழ்மகள், நான் இழிந்தோள்!" என்று சுபத்திரை கதறினாள்.

இளைய யாதவர் அவளைத் தூக்கி எழுப்பினார். "வா. அழுது என்ன பயன்?" "என் குழந்தைக்கு அவன் விதியிலிருந்து மீளும் வழி தெரியவில்லையே" என்றாள் சுபத்திரை. "எவருக்குத் தெரியும் அது? உனக்குத் தெரியுமா? வழி தெரிந்தா நீ உள்ளே நுழைந்தாய்?" என்றார் இளைய யாதவர். அவள் அச்சொற்களை செவிகொள்ளவில்லை. "என் குழந்தையின் ஊழ்தான் என்ன? அடுத்த பிறவியில் அவனுக்கு என்ன நேரிடும்?" இளைய யாதவர் புன்னகைத்து "தெரியவில்லை. ஆனால் அதன் தொடக்கம் மட்டும் இன்று தெரிந்தது" என்றார். "எப்படி?" என்று

அவள் அவரைத் தொடர்ந்து ஓடியபடி கேட்டாள். இளைய யாதவர் “நான் அறியேன், சுபத்திரை. மெய்யுரைக்கவேண்டும் என்றால் நானும் இச்சூழ்கையில் சிக்கியிருப்பவனே...” என்றார்.

சுபத்திரை திகைத்தவள்போல நின்றுவிட்டாள். இளைய யாதவர் மேலே ஏறிச்சென்று ஏவலரிடம் முனிவரை அனுப்பும்படி கைகளால் ஆணையிடுவதை பூர்ணை கண்டாள். அருகே சென்று சுபத்திரையின் தோள்களைப் பற்றி அணைத்துக்கொண்டாள்.

நீர்ச்சுடர் - 51

பகுதி எட்டு : விண்நோக்கு – 1

ஹம்சகுண்டத்திலிருந்து சுகோத்ரன் கிளம்பியபோது அவனுடன் அவனுடைய இளைய சாலைமாணாக்கனாகிய உஜ்வலன் மட்டுமே இருந்தான். எட்டாண்டுகளுக்கு முன்பு அவன் அங்கே நிமித்தநூல் கற்கும்பொருட்டு வந்தபோது இளையவனாக அறிமுகமானவன். நிமித்தநூல் ஆசிரியரான ஃபலோதகரின் குருநிலையில் அவன் மட்டுமே ஷத்ரியன். பிற அனைவருமே நிமித்தநூல் நோக்கும் சூதர் குடியைச் சேர்ந்தவர். ஃபலோதகரும் சூதர்தான். ஆகவே அவனுக்கு அங்கே ஓர் அயல்தன்மை இருந்தது. அவனை பிற மாணவர்கள் மதிப்புடன் வணங்கி அகற்றினர். அங்கே உஜ்வலன் மட்டுமே அந்தணன். அவனும் விலக்கை உணர்ந்திருக்கவேண்டும். அதுவே அவர்களை இணைத்தது.

சுகோத்ரன் மிகக் குறைவாகவே பேசும் வழக்கம் கொண்டிருந்தான். உஜ்வலன் அவனுடன் பேசிக்கொண்டே இருப்பான். அவன் வெண்ணிறமான சிறிய உடலும் செந்தளிர் காதுகளும் கொண்டிருந்தான். மழிக்கப்பட்ட தலையில் சிறுகுடுமி சுருட்டிக் கட்டப்பட்டிருந்தது. சிவந்த உதடுகள். நீலம் கலந்த கண்கள். தாவித்தாவி நடக்கும் இயல்பு. அவன் குரல் சிறிய பறவையின் ஓசைபோல இடைவிடாது ஒலிப்பது. சுகோத்ரன் உயரமானவன். கரிய நிறம் கொண்டவன். அவன் கைகளிலும் கால்களிலும் மயிர்ப்பரவல் செறிந்திருந்தது. ஆறாண்டுகளுக்கு முன்னரே அவனுக்கு அடர்ந்த மீசையும் தாடியும் வந்துவிட்டிருந்தன. அவன் குரலும் கார்வை மிக்கதாக ஆகியிருந்தது. பேசும்போது அவனுடைய குரல்வளை ஏறியிறங்கியது. உஜ்வலன் குரல் எப்போதும் தன்னைச் சுற்றி ஒலிப்பதாகவே சுகோத்ரன் உணர்ந்தான்.

ஆசிரியர் ஃபலோதகரே ஒருமுறை அவனிடம் "நிமித்திகன் சொற்களை வீணடிக்கலாகாது. சொற்களில் திகழும் ஆழமே அவனுடைய ஊழ்கத்தின் களம். சொற்களை அளைபவன் ஆழத்தை இழக்கிறான்" என்றார். "என்னால் பேசாமலிருக்க முடியவில்லை. நான் என் இல்லத்தில் அன்னையிடம் ஓயாது பேசிக்கொண்டே இருந்தவன்" என்று உஜ்வலன் சொன்னான். "எனக்கு நிமித்தநூலில் ஆர்வமில்லை. ஆனால் மாளவத்தில் முதன்மை அமைச்சராக ஆகவேண்டிய தகுதிகளில் ஒன்று நிமித்தநூல் தேர்ந்திருப்பது. ஆகவே எந்தை என்னை இங்கே அனுப்பினார்."

"பதினைந்து அகவைக்குப் பின்னரே நெறிநூல்களும் பின்னர் அரசநூல்களும் கற்கவேண்டும். இருபத்தி ஒன்றாம் அகவையில் அமைச்சராக நுழைந்து இருபத்தொரு ஆண்டுகள்

ஏழு அமைச்சுநிலைகளில் பணியாற்றி நற்பெயர் ஈட்டிய பின்னரே முதன்மை அமைச்சராக முடியும். நான் தலைமை அமைச்சராக ஆகவேண்டும் என்பது தந்தையின் விழைவு. அதற்கு ஊழ் வேண்டும். நமக்கு முன்னாலிருக்கும் ஒரு சில அமைச்சர்களின் வாழ்க்கை வழியிலேயே முடியவேண்டும். ஆனால் அதற்கு வழியில்லை. அமைச்சர்களுக்கு நீளாயுள் என்பது மரபு" என்று அவன் சொன்னான். "உண்மையில் நிமித்தநூல் கற்றுத்தெளிந்தபின் நான் அத்தனை அமைச்சர்களின் வாழ்நாளையும் கணித்துப் பார்க்கவிருக்கிறேன். என் தந்தை உட்பட."

சுகோத்ரன் அவன் பேச்சை விரும்பினான். ஆனால் எதிர்வினை ஆற்றுவதில்லை. உஜ்வலன் அதை பொருட்படுத்துவதுமில்லை. "நிமித்தநூலால் ஏதேனும் பயன் உண்டா என்பதே ஐயமாக இருக்கிறது. ஐயங்களை ஆறுதல்களாக ஆக்கிக்கொள்ளும் சில சொற்களை பயில்தலையே நிமித்தநூல் என்கிறோமா?" சுகோத்ரன் புன்னகைத்தான். "தங்கள் தந்தை நிமித்தநூல் தேர்ந்தவர். அதனாலென்ன? அவரால் அந்தக் குலத்தின் பூசலை சற்றேனும் தடுக்க முடிந்ததா என்ன? அவர் தன்னுடைய துயரையாயினும் குறைத்துக்கொண்டாரா? எதையும் எதுவும் செய்ய இயலாதென்றால் நிமித்தநூல் எதற்காக?" சுகோத்ரன் அதற்கும் புன்னகையையே அளித்தான்.

உஜ்வலன் அவனருகே நெருங்கி "சொல்லுங்கள் ஷத்ரியரே, நீங்கள் நிமித்தநூல் கற்கவந்தது எதன்பொருட்டு?" என்றான். "அதை நான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாக முடிவுசெய்கிறேன். ஆகவே சொல்லவேண்டியதில்லை என்பதே என் எண்ணம்" என்றான் சுகோத்ரன். "நீங்கள் அதைக் கற்பதற்கு வந்தது ஏன் என்றுதான் எனக்குப் புரியவில்லை. நிமித்தநூலின்

பயன் என்பது அச்சத்தை அகற்றுவது. அச்சத்தை அகற்ற மிகச் சிறந்த வழி என்பது பொய்யே. ஏனென்றால் மெய் என்பது அச்சமூட்டுவது. இப்புடவியின் பேருரு, இதன் சிக்கலின் முடிவின்மை, காலமென்னும் எண்ணத்தொலையா பெருக்கு... எவருக்கும் அச்சம் இருக்கத்தான் செய்யும். இங்கே உயிர்களில் திகழும் முப்பெரும் உணர்வுகள் பசி, காமம் மற்றும் அச்சம்" என்றான் உஜ்வலன். "காமத்துக்கு காவியம். பசிக்கு அறநூல். அச்சத்துக்கு நிமித்திகம் என பொய்களை வகுத்து ஆறுதல்படுத்தியிருக்கிறார்கள் முன்னோர்."

"நிமித்திகர் அரசர்கள் தெய்வங்கள் மேல் கொண்டுள்ள அச்சத்தை களையவேண்டும். குடிகளுக்கு அரசன் மேலுள்ள அச்சத்தை களையவேண்டும். அதற்கு அவர்கள் அரசர்களையும் குடிகளையும் கூர்ந்து நோக்கிக்கொண்டிருக்கவேண்டும். அவர்களின் அச்சங்களைப் புரிந்துகொண்டு அவற்றை தொகுக்கவேண்டும். அதன்பொருட்டே அவர்கள் வாழவேண்டும். ஆகவேதான் நிமித்திகம் என்பது குலத்தொழில் என வகுத்தனர். அது நன்று. குலத்தொழிலைச் செய்பவர்கள் பிறிதொன்று அறிவதில்லை. இளம் அகவையிலேயே இயல்பாக அதை நோக்கி வந்துவிடுகிறார்கள். முட்டை விரித்து எழுந்த ஆமைக்குஞ்சு கடலை நோக்கிச் செல்வதுபோல. ஆகவே அவர்களுக்கு ஐயமிருப்பதில்லை. அதை ஒரு வாழ்க்கையென இயற்றி மறைகிறார்கள்."

ஐயமில்லாது ஒலிக்கும் சொல்லையே அரசரும் குடிகளும் நாடுகிறார்கள். நிமித்தநூல் தேரும்போது அவர்களின் விழிகளை நான் நோக்கிக்கொண்டிருப்பேன். அவர்கள் நிமித்திகரின் கண்களையே நோக்கிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் நடிக்கிறார்களா பொய் சொல்கிறார்களா என்று

நோக்குவார்கள். கண்கள் பொய்யை காட்டிக்கொடுத்துவிடும். நம் கண்களை நோக்கி அமர்ந்திருக்கும் ஒருவரிடம் நம்மால் பொய் சொல்லமுடியாது. பொய்யை தானே நம்பிச் சொல்லும் நிமித்திகனே சிறந்தவன். அதற்கான பயிற்சியே நிமித்தநூல் கல்வி என்பது.

எண்ணுக, ஏன் இத்தனை நூல்கள்? ஏன் இவ்வளவு பயிற்சிகள்? இந்தக் களம், இந்தக் கவிடி? இந்தப் பிறவிநூல்கள் எல்லாம் எதன்பொருட்டு? நாம் ஒன்றை நம்பவேண்டுமென்றால் அதை புறவயமாக ஆக்கிக்கொள்ளவேண்டும். அகவயமான ஒன்றை நம்மால் நம்ப முடியாது. ஏனென்றால் நாம் எனும் விலங்கு புலன்களால் தொட்டறியாத எதையும் ஆழத்தில் மறுத்துக்கொண்டே இருக்கும். ஆகவே தெய்வங்களை கல்லுருவாக்குகிறோம். நெறிகளை நூல்களும் அடையாளங்களும் ஆக்குகிறோம். நெறிநூல்களுக்கு பொன்னில் சரடு அமைப்பது ஏன் என்று நான் ஒருமுறை தந்தையிடம் கேட்டேன். அதை பார்க்கையிலேயே அது ஒரு தெய்வச்சிலை என்று தோன்றவேண்டும் என்றார்.

“முற்காலங்களில் நெறிகளை கல்லில் பொறித்துவைத்தனர். ஏனென்றால் கல்லில் திகழ்வன எல்லாமே தெய்வம் என நம்பினர். இன்று ஏடுகள் அந்த இடத்தை அடைந்துவிட்டன. தொன்மையான ஏடு என்றால் மேலும் பெருமை உடையது. அதை படிக்கவே முடியலாகாது. ஏடு பழுத்து தொட்டால் உதிர்ந்துவிடவேண்டும். எழுத்துக்கள் மங்கிவிட்டிருக்கவேண்டும். மொழியே அயலாக இருந்தால் மேலும் நன்று. நெறியுரைக்க எப்போதும் ஒரு முதுமுதியவரை அவைக்குக் கொண்டுவருவது மாளவநாட்டு வழக்கம். அவர் ஐம்புலன்களும் மங்கலடைந்து இங்கிருந்து பெரும்பாலும்

மறைந்துவிட்டவராகவே இருப்பார். என்ன ஏது என புரிந்துகொள்ளும் திறனை இழந்துவிட்டிருப்பார். ஆனால் அவர் ஒரு சிலை. தசையில் எழுந்த தெய்வச்சிலை. ஆகவே அவர் அவையில் அமர்ந்து ஒரு தீர்ப்பைச் சொன்னால் அதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். விந்தைதான். இங்கே நெறிகளை நிலைநாட்டுவன பெரும்பாலும் தனக்கென பொருளில்லாத வெற்றுப் பொருட்கள்... நான் என்ன சொல்லவந்தேன்?"

சுகோத்ரன் புன்னகைத்தான். "எப்போதுமே இப்படித்தான் சொல்லவருவனவற்றிலிருந்து விலகிச்செல்கிறேன்... ஆனால் விலகிச்செல்கையிலேயே நான் சொல்லவேண்டியவற்றை கண்டடைகிறேன்" என்றான் உஜ்வலன். "நான் சொல்லவந்தது இதுவே. நிமித்தநூல் என்பது அரசனும் மக்களும் கொண்ட அச்சங்களை களையும்பொருட்டு அளிக்கப்படும் உளமயக்கு. பொய் என்று சொன்னால் சற்று கூர்மையாக உள்ளது. உளமயக்கு என்பது மேலும் சரி. வலிகொண்டவர்களுக்கு உளமயக்கு அளிப்பது நலம் பயப்பது என மருத்துவர் சொல்கிறார்கள். அதுவன்றி பிறிதல்ல. அதை கேட்பவர் ஐயமில்லாது ஏற்கும்வண்ணம் சொல்வதற்கான பயிற்சியையே நிமித்தநூல் கற்றல் என்கிறோம். அவர்களிடமிருக்கும் அச்சத்தின் வகை அறியவேண்டும். அதற்குரிய சொற்களை சொல்லவேண்டும்."

"மக்கள் மூவகை அச்சங்களால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். தெய்வம், புறப்பொருட்கள், மானுடர் ஆகியோர் அளிக்கும் அச்சங்கள் என்கின்றன நூல்கள். நான் அதை மேலும் விரித்துக்கொள்வேன். தெய்வம் அளிக்கும் அச்சம் மூவகை. நிலையாமை, உட்பொருளில்லாமை, அறியமுடியாமை.

இங்குள்ள ஒவ்வொன்றும் இவ்வண்ணம் தன்னைக் காட்டி மறுகணமே மாறிக்கொண்டிருப்பதை மானுடர் காண்கிறார்கள். மாறிக்கொண்டிருப்பவை காட்டும் எக்காட்சியும் மெய்யல்ல. ஏனென்றால் மெய்யென உணரும் கணம் அது தான் காட்டிய நிலையில் இருப்பதில்லை. ஆகவே எதையும் அறியமுடியாது என அவர்கள் உணர்கிறார்கள். அறியமுடியாமை ஏன் நிகழ்கிறது? ஏனென்றால் அறியக்கூடுவது என ஒன்றில்லை. அறியக்கூடுவது என ஒன்றிருந்தால் அது எந்நிலையிலாவது அறியப்பட்டே ஆகவேண்டும். அறியப்படவே இல்லை என்பதே அறிபடுமெய் என ஒன்றில்லை என்பதற்கான அறுதியான சான்று."

பேசப்பேச உஜ்வலன் ஊக்கமடைந்தான். அவன் குரல் எழுந்தது. அவனுடைய அகவை குறுகிக்கொண்டே சென்றது. சிறுவனுக்குரிய கையசைவுகளும் சிறிய சொற்குழறலும் உருவாயின. "பொருட்கள் அளிக்கும் அச்சம் மிக எளிதானது. நாகம் கடிக்கிறது. பாறை உருண்டு விழுகிறது. வயல்கள் மலடாகின்றன. நதி வறண்டு போகிறது. நோய் வந்து சூழ்கிறது. ஆனால் இவை தெய்வங்களின் கைகளில் படைக்கலங்கள். ஆகவே இவை முதல் துயரின் கண்கூடான வடிவங்கள். ஆகவே மீட்பற்றவை" என்று அவன் சொன்னான். "ஆதிதெய்விகமே ஆதிபௌதிகமாக உருவாகிறது என்று ஒரு வணிகன் அன்று சொன்னான். அனைத்தும் அறிந்திருந்தான். அறிவிலிபோல இங்கே நிமித்தநூல் நோக்க வந்தான்..."

"நான் சொல்லிக்கொண்டிருந்தது என்ன? ஆம், ஆதிமானுடம். மனிதர்களால் அளிக்கப்படும் துயர். துயர்களில் முதன்மையாக நாம் அன்றாடம் அறிந்துகொண்டிருப்பது இது. எத்தனை காவியங்கள் விளக்கிவிட்டன! எத்தனை சூதர்கள் சொல்லியும்

நடித்தும் காட்டிவிட்டனர்! எத்தனை நெறிநூல்கள் வகுத்துச் சொல்லிவிட்டன! இருந்தும் மானுடர் ஒருவருக்கொருவர் அறியமுடியாதவர்களாகவே நீடிக்கிறார்கள். ஏனென்றால் அதற்கும் ஆதிதெய்விகத்தையே சுட்டுவேன். இங்கே எதுவும் நிலையில்லை. மானுடரும்கூடத்தான். மானுடரைப் பற்றி நாம் அறிவன எல்லாமே அவர்களை நாம் அறியும் அக்கணத்துக்கு மட்டுமே பொருந்துவன. மானுடரை அவர்களின் முந்தைய கணம் வரையிலான வாழ்க்கையைக் கொண்டு புரிந்துகொண்டு மதிப்பிட்டு அடுத்த கணத்தை எதிர்கொள்கிறோம். மானுட உறவு என்பது கருதுவதும் ஏமாற்றம் கொள்வதும் மீண்டும் கருதுவதும் என ஓயாது அசையும் ஊசல் அன்றி வேறில்லை.”

ஆகவேதான் நிமித்தநூல் நமக்கு தேவையாகிறது. மூன்று துயர்களுக்கும் நிமித்தநூல் ஆறுதல் அளிக்கிறது. நிமித்தநூலின் மாபெரும் ஏமாற்றுச்செயல் பொழுது கணித்தல். மானுடன் என்றும் அறியும் ஒரு விந்தை உண்டு. ஒரு கணத்தில் அனைத்தும் மாறிவிடுகிறது. மலையுச்சியில் கால் வழுக்கும் கணத்திற்கு முந்தைய கணம் வரை வாழ்க்கை மற்றொன்று. ஆகவே கணத்தில் இருக்கிறது முடிச்சு. காலத்தின் உள்ளே மறைந்துள்ளன அனைத்து விடைகளும். நான் பலமுறை சொன்னதுண்டு, அறிவிலிகளே. இறந்தகாலத்தில் இல்லை நிகழ்காலம். நிகழ்காலம் எதிர்காலத்தை கருக்கொள்வதுமில்லை. அவ்வாறு எண்ணத்தலைப்படுவதே இப்புவியில் நாம் கொள்ளும் மாயம். இறந்தகாலம் தன்னை நிகழ்காலத்தினூடாக எதிர்காலமாக ஆக்கிக்கொள்கிறது எனில் காலமெனும் ஒழுக்கே நிகழவேண்டியதில்லையே. ஆம், சிறு மாறுதல் ஒன்று நிகழலாம் என்பார்கள். எனில் அந்த மாறுதல் மட்டுமே வாழ்க்கை என்று நான் சொல்வேன்.

காலக்கணம் குறித்த அந்த அச்சத்தை நிமித்தநூல் தன் படைக்கலமாகக் கையாள்கிறது. ஷத்ரியரே, எண்ணிநோக்குக! நம் மக்கள் கருதிக்கொள்வது என்ன? ஒன்று ஒரு கணத்தில் நிகழ்கிறது. ஏனென்றால் அக்கணமே அதன் பீடம். அதற்கு முந்தைய கணத்திலோ பிந்தைய கணத்திலோ அது இல்லை. ஆகவே நாம் முந்தைய கணத்திலோ பிந்தைய கணத்திலோ இருந்துவிட்டால் அந்நிகழ்வை ஒழியலாம். ஒரு கணம் முன்னதாக தலையை தாழ்த்திவிட்டால் வெட்ட வந்த வாள் கழுத்தை தவறவிடும். ஒரு நாழிகை முன்னதாகச் சென்றால் போர்த்தோல்வி கடந்துசென்றுவிடும். ஒரு நாள் முன்னதாக தொடங்கிவிட்டால் கெடுநிகழ்வு ஒன்று அதன் பெறுநரைக் காணாமல் திகைத்து அப்பால் சென்றுவிடும். என்ன ஒரு பொருளில்லாத நம்பிக்கை! ஆனால் காலந்தோறும் இதை நம்பியே நிமித்தநூல் இயங்கிக்கொண்டிருக்கிறது. பொழுது கணித்தளிப்பதற்காகவே நிமித்திகர் உலகமெங்கும் உள்ளனர்.

நிமித்தநூல் பயில்தல் அக்குலத்தாருக்கு வாழ்க்கை. அவர்கள் சொல்கேட்பவர்களுக்கு அது ஆறுதல். அந்தணருக்கும் ஷத்ரியர்களுக்கும் அதனால் என்ன பயன்? அந்தணருக்குப் பயனுண்டு, நிமித்தநூலின் எல்லைகளை அவர்கள் அறிந்துகொண்டால் நிமித்திகர்களை எங்கே வைப்பது என்று அறிந்துகொண்டதுபோல. நிமித்திகர் நிறுத்தும் இடத்திலிருந்து தொடங்குகிறது அந்தணரின் பணி. நிமித்திகர் இவை இவ்வண்ணம் வகுக்கப்பட்டுள்ளது எனவே இவற்றை இவ்வண்ணமே எதிர்கொள்ள முடியும் என்கிறார்கள். நன்று என்கிறான் அந்தணன். தன் மதிசூழ்கையால் நிகழ்வனவற்றை ஆள்கிறான். வருவனவற்றை வகுக்கிறான். அவனே அமைச்சன். ஆனால் ஷத்ரியர் நிமித்தநூல் கற்று ஆகப்போவது என்ன?

நீங்கள் இங்கு ஏன் வந்தீர்கள் என எனக்கும் புரியவில்லை. அஸ்தினபுரியில் எழவிருக்கும் பெரும்போர் ஒன்றை உங்கள் தந்தை முன்கண்டு உங்களை இங்கே அனுப்பியதாக சொல்லப்படுகிறது. அது வெற்றுச்சொல்லாகக்கூட இருக்கலாம். இங்கே சொல்பவர்கள் எவரும் நல்லெண்ணம் கொண்டவர்கள் அல்ல. அச்சத்தால் வருபவரும் அல்ல நீங்கள். ஆனால் உங்கள் மேல் இங்கே எந்த மதிப்பும் இல்லை. தன் இயல்பு வழுவிய எவரையும் பொதுஉள்ளம் மதிப்பதில்லை. ஷத்ரியரே, நீங்கள் கடந்து செல்லவேண்டியது இதைத்தான். இந்த நிமித்தக்கல்வியை. இதனூடாக உங்கள் அகத்தே திரண்டுள்ள ஐயங்களையும் தயக்கங்களையும். அதன் பின்னரே உங்களை நீங்கள் கண்டடைவீர்கள்.

உஜ்வலன் உரத்த குரலில் "நான் இதை முன்னரும் பலமுறை சொல்லியிருக்கிறேன். நிமித்தக்கல்வி உங்களை செயலற்றவர் ஆக்கியிருக்கிறது எனில் அதை உதறி செயலூக்கம் கொள்க! செயலே ஷத்ரியனின் விடுதலைக்கான வழி என்கின்றன நூல்கள்..." சுகோத்ரன் புன்னகைத்து "எந்நூல்கள்?" என்றான். "நெறிநூல்கள்" என்றான் உஜ்வலன். "அவற்றைத்தானே சற்றுமுன் வேறுவகையான பொய்கள் என்றீர்?" என்றான் சுகோத்ரன். உஜ்வலன் திகைத்து பின் புன்னகைத்து "ஆம், நான் பேசிப்பேசி என்னையே தோற்கடித்துக்கொள்கிறேன்" என்றான். "ஆம், நீரே நீர் கேட்பன அனைத்துக்கும் மறுமொழியும் சொல்லிவிடுகிறீர்" என்றான் சுகோத்ரன்.

அவர்கள் முக்தவனத்திற்குக் கிளம்பவேண்டும் என்ற ஆணை வந்தபோது அவன் தன் குடிலில் இருந்தான். உஜ்வலன் நீளமாக பாடியபடி நூல் ஒன்றை நோக்கெழுதிக்

கொண்டிருந்தான். சுகோத்ரன் வெளியே மரங்கள் காற்றிலாடுவதை பார்த்துக்கொண்டிருந்தான். ஏவலன் அந்த ஆணையை அளித்ததும் சுகோத்ரன் மஞ்சத்திலிருந்தே கிளம்பினான். "எங்கே?" என்றான் உஜ்வலன். "முக்தவனத்திற்கு..." என்றான் சுகோத்ரன். "ஆம், நீங்கள் செல்லவேண்டியிருக்கும் என்றனர். ஆனால் உடனே இப்படியே செல்வதா?" என்றான் உஜ்வலன். "இப்படியே செல்லவேண்டியதுதான். எனக்கு இங்கே ஏதும் இல்லை" என்றான் சுகோத்ரன். "எந்தையர் என்னை இங்கே அனுப்பியதே இதற்காகத்தான் என நினைக்கிறேன்." அவன் தன் ஏட்டுக்கட்டை எடுத்துக்கொண்டான். "அது எதற்காக?" என்று உஜ்வலன் கேட்டான். "இது என் ஆசிரியர் எனக்கு அளித்த தொல்நூல். சூரியதேவரின் பிருஹதாங்கப் பிரதீபம்" என்றான் சுகோத்ரன். "இதைப்பற்றித்தான் நான் ஏதோ சொன்னதாக நினைவு" என உஜ்வலன் முணுமுணுத்தான்.

அவர்கள் ஃபலோதகரின் மையக்குடிலை அணுகினர். அங்கே நின்றிருந்த சூதர்குலத்து இளைஞர்கள் தலைவணங்கி விலகி நின்றனர். அவர்கள் வழியாகச் செல்லும்போது சுகோத்ரன் தன் உடலெங்கும் நோக்குகளை உணர்ந்தான். இவர்கள் அனைவருக்கும் இன்னும் பல தலைமுறைகள் தொடர்ந்து பயிலவேண்டிய ஒரு பெருநூல் என குருக்ஷேத்ரம் திகழும் என நினைத்துக்கொண்டான். நிமித்திகரும் கணியரும் புலவரும் ஆட்டரும் விறலியருமாக சேர்ந்து அதை எழுதி விரிப்பார்கள். அது விரிந்து பெருகி ஒரு அழியா நிலம் என ஆகி நின்றிருக்கும். அதில் வருந்தலைமுறைகள் வாழ்வார்கள். அங்கே அந்தப் போர் ஒருகணமும் ஒழியாது நிகழ்ந்துகொண்டிருக்கும்.

ஃபலோதகர் குடிலுக்குள் இருந்தார். அவர் முன் கற்றுச்சொல்லி அமர்ந்திருந்தான். அவன் உள்ளே சென்று வணங்கி "எனக்கான அழைப்பு வந்துவிட்டது" என்றான். அவர் அவனை கூர்ந்து நோக்கினார். அவர் மலைமகன்களில் இருந்து வந்தவர். மஞ்சள் முகம் சுருக்கங்கள் செறிந்திருந்தது. சிறிய கண்கள். வாய் சுருக்கிக் கட்டப்பட்ட பட்டுப் பைபோல. அவர் "நீ மீளவேண்டும்" என்றார். அவன் தலைவணங்கினான். "மீளவேண்டும் என்பதை உன் தெரிவாகவே வைத்துக்கொள்" என்று மீண்டும் அவர் சொன்னார். "ஆம்" என்று அவன் சொன்னான். அவர் அவன் தலைமேல் கைவைத்து வாழ்த்தினார்.

உடன் உஜ்வலனும் வந்து வணங்கினான். அவர் சிறு ஒவ்வாமையுடன் நோக்கி "நீ எங்கே செல்கிறாய்?" என்றார். "அவருக்கு துணையாக... இங்கும் அவருக்கே துணையாக இருந்தேன்" என்றான் உஜ்வலன். "ஒரு கணக்கில் நன்று. அமைச்சர் எவரும் அறியவேண்டியவையே அங்கு நிகழவிருக்கின்றன. நீ செல்லலாம்" என்றார் ஃபலோதகர். உஜ்வலன் அவரை வணங்கி "அங்கே நிகழ்வனவற்றில் அமைச்சர்கள் கற்றுக்கொள்ள என்ன உள்ளன என்று அறியேன். நிமித்திகர்கள் கற்றுக்கொண்டதை மறப்பதற்கான இடம் அது" என்றான். அவர் முதற்கணம் சீற்றம் கொண்டாலும் உடனே நகைத்து "நன்று, அதுவே நிகழ்க!" என அவனை வாழ்த்தினார்.

படகுத்துறை வரை அவர்கள் நடந்தே வந்தனர். "நாம் ஏன் நடக்கவேண்டும்? நிமித்திகர் மஞ்சலில் ஏறலாமே" என்றான் உஜ்வலன். "நாம் இன்னமும் நிமித்திகர் ஆகவில்லை. நம் கல்விநிறைவை ஆசிரியர் அறிவிக்கவில்லை" என்றான் சுகோத்ரன். "ஏன் அவரிடம் கேட்டிருக்கலாமே? மெய்யாகச்

சொல்கிறேன். இன்று அவரிடமிருந்து நீங்கள் கற்றறிய ஏதுமில்லை. நூல்களை அவர் உங்களிடமே கேட்டுக்கொள்கிறார். நூற்பொருளும் பல தருணங்களில் நீங்களே உரைக்கிறீர்கள்...” என்றான் உஜ்வலன். “நம் கல்விநிறைவை நாம் முடிவுசெய்ய முடியாது” என்றான் சுகோத்ரன். “நாம் அறிவோம் அல்லவா?” என்று உஜ்வலன் கேட்டான்.

“நாம் அறிவதுமில்லை... நம் ஆசிரியரே அறியமுடியும்” என்றான் சுகோத்ரன். “அவ்வாறல்ல. இந்த குருநிலைக்குப் பெருமையே புகழ்பெற்ற அஸ்தினபுரியின் இளவரசன் இங்கே கல்விபயில்கிறார் என்பதுதான். நீங்கள் இங்கே மெய்யாசிரியனாகவும் இருக்கிறீர்கள். நீங்கள் இங்கிருந்து செல்வது உவப்பானதா என ஐயுறுகிறார். ஆகவேதான் தயங்குகிறார்” என்றான் உஜ்வலன். “கேட்டீர்கள் அல்லவா? மீண்டுவருக என்றார். என்ன பொருள் அதற்கு? வந்து இந்தக் குருநிலையிலேயே தொடர்க என்றுதானே?” என்று அவன் கேட்டான். சுகோத்ரன் மறுமொழி சொல்லவில்லை. உஜ்வலன் அவனுடன் நடந்தபடி பேசிக்கொண்டே வந்தான். “மஞ்சலில் செல்வது நன்று. ஆனால் அதைப்பற்றி நான் பேசவில்லை. நான் பேசுவது பிறிதொன்று...”

“நீங்கள் ஏன் திரும்பி வரவேண்டும்? இங்கே இனி கற்பதற்கும் ஒன்றுமில்லை. ஆசிரியர் அமர்ந்த அந்த சிறிய மணைப்பலகையில் அமரவேண்டுமா என்ன? உங்களுக்கு அங்கே அஸ்தினபுரியின் அரண்மனை அல்லவா காத்திருக்கிறது?” சுகோத்ரன் திரும்பி நோக்கவில்லை என்றாலும் அவனில் நிகழ்ந்த எண்ணத்தை உடல் காட்டியது. “ஆம், மெய்யாகவே அஸ்தினபுரியின் அரண்மனை. எண்ணி

நோக்குக! இன்று குருகுலத்தில் எஞ்சியிருக்கும் ஒரே இளவரசர் நீங்கள் மட்டுமே... உங்களுக்கு இளவரசுப்பட்டம் கட்டினால் மட்டுமே அஸ்தினபுரியின் குருதிவழி நீடிக்கமுடியும்... வேறுவழியில்லை" என்றான் உஜ்வலன்.

"அவர் என்ன சொன்னார் தெரியுமா? நீங்கள் முடிதுறந்து மீண்டு வரவேண்டும் என்று. ஏன் முடிதுறக்கவேண்டும்? அஸ்தினபுரியின் அரசர் பாரதவர்ஷத்தின்மேல் மும்முடி சூடி அமர்ந்திருப்பவர் அல்லவா? நீங்கள்தான் அந்த முடிக்குரியவர் என ஊழ் முடிவெடுத்திருக்கிறது போலும். இல்லையேல் இவ்வண்ணம் ஏன் நிகழவேண்டும்? அதுதான் ஊழ் என்றால் நாம் ஏன் அதை தவிர்க்கவேண்டும்?" என்று உஜ்வலன் சொன்னான். சுகோத்ரன் அவனை திரும்பி நோக்கவில்லை. அவன் "நான் கேட்கவிழைவதை அங்கே கேட்டிருப்பேன். ஆனால் நாம் கிளம்பவேண்டியிருந்தது. நான் எங்கும் இதை கேட்பேன்... நீங்கள் அஸ்தினபுரியின் அரசர் என்பதை முடிவெடுக்கும்படி யுதிஷ்டிரனிடம் சொல்லவேண்டுமென்றால்கூட எனக்கு தயக்கமில்லை. அந்தணன் எதை அஞ்சவேண்டும்?" என்றான்.

படகில் ஏறி அமர்ந்ததுமே அவன் மடிமேல் கையை வைத்து விழிமூடி அமர்ந்தான். அவன் அருகே அமர்ந்து நோக்கிக்கொண்டிருந்த உஜ்வலன் "ஊழ்கத்தில் உங்கள் ஊழ் தெரிகிறதெனில் நன்று... ஒவ்வொன்றுக்கும் நாமறியாத பொருள் உண்டு என்றல்லவா நிமித்தநூல் சொல்கிறது? போர்வெறிகொண்டவர்கள் மாய்ந்தனர். நூல்கற்றவர் அரசேறவேண்டும் என்பதுதான் இந்நிகழ்வுகளின் மெய்ப்பொருள் என ஊழ்கமில்லாமலேயே எனக்குத் தெரிகிறது" என்றான். அவன் சற்றுநேரம் சுகோத்ரனை

நோக்கிக்கொண்டிருந்தான். பின்னர் சலிப்புடன் நீர்ப்பரப்பை பார்க்கத் தொடங்கினான்.

ஆனால் நெடுநேரம் அவனால் அவ்வண்ணம் இருக்க இயலவில்லை. "இப்படி நீர்ப்பயணம் செல்கையில் ஒன்று தோன்றுகிறது. நாம் சென்றுகொண்டிருக்கிறோம். இவை எல்லாம் இங்கேயே இருந்துகொண்டிருக்கின்றன. நோக்கி நோக்கி கடந்துசெல்வதையே வாழ்க்கை என கொள்கிறோம். ஒன்றையும் நாம் தக்கவைக்க முடியாது. ஒன்றிலும் நாம் தங்கியிருக்கவும் இயலாது. எல்லாம் வீண்..." அதன்பின் தன் சொற்களின் முரண்பாட்டை அவனே உணர்ந்து "அதற்காக நான் எதையும் பொருளற்றது என்று சொல்லமாட்டேன். எதையாவது பற்றிக்கொள்ளாவிட்டால் நமக்கு வாழ்க்கை இல்லை. பற்றிக்கொள்ள பெரிதாக ஏதேனும் அமைந்தால் ஏன் அதை மறுக்கவேண்டும்?" என்றான்.

நீர்ச்சுடர் - 52

பகுதி எட்டு : விண்நோக்கு – 2

முக்தவனத்தை அவர்கள் அடையும்போது பகல் அணைந்து அந்தி எழத்தொடங்கிவிட்டிருந்தது. பகல் முழுக்க வளைந்த பிரம்புக்கூரைக்குக் கீழே அசைந்தாடிய மஞ்சத்தில் உஜ்வலன் துயிலிலேயே இருந்தான். சுகோத்ரன் அவனருகே நீர்ப்பரப்பை நோக்கியபடி அமர்ந்திருந்தான். படகோட்டிகளின் கரிய முதுகுகள் வெயிலில் நெய்ப்பாறை என மின்னின. அவர்களின் மூச்சொலி சீராக எழுந்தது. படகின் விலாவில் அறைந்த அலைகளின் ஓசையுடன் அது இணைந்தது.

அவ்வப்போது வெண்பறவைகள் வந்து பாய்மரக் கயிறுகளின் மேல் அமர்ந்து காற்றுக்கு வெவ்வேறு வகையாக சிறகு கலைத்து அடுக்கி சமன்கொண்டு பின் உந்தி எழுந்து பறந்தன.

படகு கரையணையும்போதுதான் உஜ்வலன் விழித்துக்கொண்டான். "எந்த இடம்?" என்றான். சுகோத்ரன் "முக்தவனம்" என்றான். "வந்துவிட்டதா?" என அவன் எழுந்தான். "நீர்ப்பயணம் மிக விரைவானது. நீர் மண்ணில் குறுக்குவழியை கண்டடைந்து வைத்திருக்கிறது" என எழுந்து கரையை நோக்கியபடி சோம்பல் முறித்தான். "நீங்கள் துயில்கொள்ளவில்லையா?" என்றான். "இல்லை" என்றான் சுகோத்ரன். "நாம் மிகவும் பிந்தி வந்திருக்கிறோம். நாளை காலை இங்கே நீர்க்கடன் நிகழ்கிறது எனில் இன்றிரவு இங்கே எவருக்கும் துயில் இருக்காது. ஆகவேதான் நான் மெய்மறந்து துயின்றேன்" என்றான் உஜ்வலன்.

படகுத்துறையிலிருந்து கொடியசைவால் ஆணை எழுந்ததும் அவர்களின் படகு கரையணைந்தது. சுகோத்ரன் அவன் படகிலிருந்து இறங்கியதும் அவனை எதிர்பார்த்து நின்றிருந்த யுயுத்ஸு விரைந்த காலடிகளுடன் அணுகி தாழ்ந்த குரலில் "நாளைக் காலை சடங்குகள் தொடங்குகின்றன. இக்கணம் வரை மெய்யாகவே சடங்குகள் தொடங்குமா என்று தெரிந்திருக்கவில்லை. இன்றிரவுதான் அனைத்தும் முடிவாகும். இன்னமும்கூட சிலரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்றான். "வருக. உங்களுக்கான ஒருக்கங்கள் அனைத்தும் சித்தமாகியிருக்கின்றன!"

உஜ்வலன் "இத்தனை பெரிய இடமா?" என வியந்தான். "நான் நீர்க்கடன் என்னும்போது ஒரு மிகச் சிறிய நிகழ்வு என கருதினேன்." யுயுத்ஸு அவனை நோக்கி புன்னகை செய்து

“பொதுவாக அஸ்தினபுரியிலும் இந்திரப்பிரஸ்தத்திலும் எந்நிகழ்வும் பெரிதாகிவிடுகிறது” என்றான். “இன்று இப்பொழுதுவரை நிகழ்வனவற்றைக்கொண்டு நோக்கினால் மெய்யாகவே இங்கே நாளை காலை நீர்க்கடன் நடக்குமா என்றே ஐயுறுகிறேன்” என்றான். சுகோத்ரன் “நடக்கும்” என்றான். யுயுத்ஸு திகைப்புடன் திரும்பி நோக்கி உடனே நகைத்து “ஆம், நீ நிமித்தநூல் கற்றவன் அல்லவா?” என்றான். “உன் தந்தை மட்டுமே ஷத்ரியகுடியில் நிமித்தநூல் கற்றவர் என்பார்கள். நீ கற்கச் சென்றதை இங்கே அனைவருமே மறந்துவிட்டிருக்கின்றனர்.”

மெல்லிய புன்னகையுடன் யுயுத்ஸு தொடர்ந்தான் “உண்மையில் உன் பெயர் எவருக்குமே நினைவில் இல்லை. நிமித்தநூல் கற்கச் சென்றவனை ஷத்ரியர் நினைவுகூர விழையவில்லை போலும்.” சுகோத்ரன் “அது இயல்பு” என்றான். “ஏன்?” என்றான் யுயுத்ஸு. “ஷத்ரிய இயல்பை கைவிடாமல் நிமித்தநூலை கற்க இயலாது.” யுயுத்ஸு ஒரு கணத்திற்குப் பின் “ஷத்ரிய இயல்பை கைவிடாமல் எந்நூலையும் கற்க இயலாது, அரசியல் நூல்களைக் கூட” என்றான். “ஏன்?” என்றான் உஜ்வலன். “ஏனென்றால் கற்றல் வெல்லுதலுக்கு எதிரானது. அறிதல் ஆட்கொள்ளலுக்கு மாற்றானது” என்று யுயுத்ஸு சொன்னான். உஜ்வலன் “எண்ணிநோக்குவதற்குரியதே” என்றான். அவன் சொற்கள் உள்ளடங்க தலை எடைகொண்டதுபோலத் தழைந்தது.

“உண்மையில் உன் பெயர் என் எண்ணத்துக்கு எப்படி வந்தது தெரியுமா? நேற்று முன்னாள் அரசர் யுதிஷ்டிரன் அவையமர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது அபிமன்யுவின் கருவில் எஞ்சுவதே குருகுலத்தின் ஒரே குருதித்துளி என்றார். அதை

இந்நீர்க்கடனில் எவ்வண்ணமோ அறிவிக்கவேண்டும் என்றார். என்ன விந்தை என்றால் எனக்கும் அதுவே இயல்பாக உடனே தோன்றியது. அவை கலைந்து குடிலுக்கு நடக்கும்போதுதான் நான் இயல்பாக உன்னை நினைவுகூர்ந்தேன். வியந்து நின்றுவிட்டேன். எப்படி உன்னை மறந்தேன் என என்னை நானே கேட்டுக்கொண்டேன். மீண்டும் அரசரின் குடில்நோக்கி சென்றேன். அரசே ஒருவன் உயிருடன் இருக்கிறான். நீங்கள் அவனை மறந்துவிட்டீர்கள் என்றேன். உடனே அவருக்கும் உன் பெயர் நினைவுக்கு வர அவர் முகம் பதற்றம் கொண்டது.”

“உன் தந்தை அவையிலிருந்தார். அவர்கூட உன்னை நினைவுகூரவில்லை. நான் சொல்லக்கேட்டதும் அவர் உன்னை நினைவுகூர்ந்து நிலைகுலைவதுபோலத் தெரிந்தது. நானே உன் பெயரைச் சொல்லவேண்டும் என்பதுபோல அவர்கள் சொல்லின்றி அமர்ந்திருந்தனர். நான் நம் மைந்தன் சுகோத்ரன் இன்னமும் நலமாக இருக்கிறான். குருகுலத்தின் எஞ்சும் குருதி அவன் அல்லவா என்றேன். ஆம் என்று அரசர் முனகினார். பீமசேனன் ஆம், அவனே. அவன் வரட்டும், அவன் இளவரசனாக முடிகொள்ளட்டும் என்றார். பார்த்தன் ஒன்றும் சொல்லவில்லை. உன் தந்தை தலைகுனிந்து அமர்ந்திருந்தார்.”

“என்ன முடிவெடுப்பது என தெரியாமல் அனைவரும் அமர்ந்திருந்தார்கள். இதில் முடிவெடுக்க என்ன உள்ளது, மைந்தன் அஸ்தினபுரியின் குருகுலத்தின் எஞ்சும் குருதி என்பதை எவர் மறுக்க இயலும் என்று நான் கேட்டேன். ஆனால் ஏதோ ஒன்று அனைவரையும் தடுத்தது.” உஜ்வலன் உரத்த குரலில் “அவர்கள் முடிவெடுத்துவிட்டார்கள். தவறான முடிவை எடுத்துவிட்டாலும் நாம் ஒரு முடிவை எடுத்துவிட்டால் அதை உறுதியாக பற்றிக்கொள்கிறோம்”

என்றான். “இருக்கலாம். நானே ஒரு வழி சொன்னேன். விதுரரிடம் உசாவலாம் என்றேன். அனைவரும் உடனே அதை ஏற்றுக்கொண்டார்கள். ஆம், விதுரர் முடிவெடுக்கட்டும் என்றார்கள்.”

“விதுரரிடம் நானே உசாவினேன். நீ வந்தாகவேண்டும் என்று அவர் சொன்னார். உனக்கு முறையான செய்தி அறிவிக்கப்படவில்லை என்பதையே அவர் அப்போதுதான் அறிந்தார். அவன் கல்விநிலைக்குச் சென்றமையால் அழைப்பு அளிப்பது குறித்த குழப்பம் வந்திருக்கலாம் என்றேன். கல்விநிலைக்கு அனுப்புவதில் இருமுறை உண்டு. குடித்தொடர்பும் குலநீட்சியும் முற்றறுத்து மைந்தனை ஒரு குருநிலைக்கு கொடையளித்தல் உண்டு. அது அதர்வவேத குருநிலைகள் கோரும் வழக்கம். அவர்களை மீண்டும் அழைக்கமுடியாது. வழக்கமாக கல்விநிலைகளுக்கு அனுப்புகையில் பூணூல் மாற்றி திரும்ப அழைத்துக்கொள்வதே நெறி. அவன் அவ்வண்ணம் மாணவனாகவே அனுப்பப்பட்டான். அவன் இக்குடிக்கும் குலத்திற்கும் உரியவன். அவன் வந்தாகவேண்டும் என்றார்.”

“நான் வந்தாகவேண்டும்” என்றான் சுகோத்ரன். “நீர்க்கடன் முடிக்க நீ இருப்பது இன்றியமையாதது... ஒருவேளை அதன்பொருட்டே உன்னை தெய்வங்கள் விட்டுவைத்துள்ளன போலும்” என்றான் யுயுத்ஸு. “வருக!” என அழைத்துச்சென்றான். செல்லும் வழியில் அங்கே நிகழந்தனவற்றை சொல்லிக்கொண்டே வந்தான். “இங்கே எவருமே இயல்பான உளநிலையில் இல்லை. அனைவரும் பித்தர்கள். அனைவரும் நோயுற்றவர்கள்” என்றான். “நோய் தொடங்கியது நெடுநாட்களுக்கு முன்னரே. அது இப்போதுதான்

தெரிகிறது.” சுகோத்ரன் “எவருக்கும் முற்றிலும் தெரியாத ஊழ் என ஏதுமில்லை. அதுவே நிமித்தநூலின் அடிப்படை. ஊழ்க்கணிப்பு செய்யும்போது கேட்பவரின் உள்ளிருந்து அதை ஏற்றுக்கொள்ளும் ஒரு நுண்புலன் உள்ளது. அதை நோக்கியே நிமித்திகன் பேசுகிறான்” என்றான்.

அவர்களுக்காக காத்து நின்றிருந்த சிறிய தேரில் சுகோத்ரன் ஏறிக்கொண்டான். உஜ்வலன் அருகே ஏறி அமர்ந்தான். “அருகே தெரிகிறது குடில்நிரை. ஆயினும் நீங்கள் தேரில்தான் சென்றாகவேண்டும். அதுவே முறை” என்றான். யுயுத்ஸு “நான் புரவியில் உடன் வருகிறேன்” என்றபின் செல்க என தேர்ப்பாகனுக்கு கைகாட்டினான். தேர் கிளம்பி மரப்பலகை பரப்பப்பட்ட பாதையில் ஓசையுடன் சென்றது. குடில்தொகைகளிலிருந்து ஓசையும் புகைமணமும் எழத்தொடங்கின. உஜ்வலன் “அடுமனைப்புகையுடன் வேள்விப்புகை கலக்கும் சிற்றூர் என ஏதோ காவியத்தில் படித்த நினைவு” என்றான்.

சற்று அப்பால் கங்கை நோக்கி விழும் சிற்றோடை ஒன்றை அருவியாக்கி அதில் சுழலுருளையை அமைத்திருந்தனர். அது ஒன்றையே சொல்லிக்கொண்டு சுழல அதில் இணைக்கப்பட்ட கழுக்கோல்கள் தங்களைத் தாங்களே சுற்றிக்கொண்டு கிளம்பி அருகிருந்த குடிலுக்குள் சென்றன. “மாவரைக்கும் பொறி” என்று உஜ்வலன் சொன்னான். “மாளவத்தில் இவ்வாறு நான் கண்டதில்லை.” குடிலுக்குள் எடைமிக்க குழவிகள் சுழலும் ஒலி கேட்டது. “ஓர் மானுட உள்ளம், ஓயாத எண்ணச் சுழலோட்டம்” என்றான் உஜ்வலன். சுகோத்ரன் அவன் பேச்சை கேட்டதுபோல் காட்டாமல் குடில்களின்மேல் பறந்த கொடிகளைப் பார்த்துக்கொண்டு சென்றான்.

“நீங்கள் இளவரசர். இங்கு வந்து நீங்கள் இறங்கும்போது முரசுகளும் கொம்புகளும் முழங்கியிருக்கவேண்டும்” என்றான் உஜ்வலன். “இது நீர்க்கடன் செய்யும் இடம், நகரல்ல” என்றான் சுகோத்ரன். “அது பொருட்டல்ல. யுதிஷ்டிரன் அவ்வண்ணம் முரசும் கொம்பும் இன்றி வந்திறங்குவாரா என்ன?” என்று உஜ்வலன் கேட்டான். “அரசர்கள் முறைமைகளால் உருவாக்கப்படுகிறார்கள். அதை மறக்கவேண்டியதில்லை.” சுகோத்ரன் ஒன்றும் சொல்லவில்லை. “ஆனால் இவர் வந்தது நன்று... இவர் உங்களுக்கு தந்தை முறை கொண்டவர். இவர் வரவேற்றதனால் முறைமை ஓரளவு காக்கப்பட்டது என்று கொள்ளலாம்” என்று உஜ்வலன் சொன்னான்.

நீர்க்கடனுக்கான ஒருக்கங்கள் ஏறத்தாழ முடிந்துவிட்டிருந்தன. அந்திப்பொழுது ஆகி விட்டிருந்தமையால் பல்லாயிரம் நெய்விளக்குகளும் பந்தங்களும் எரிந்தன. கங்கையின் படித்துறை செஞ்சுடர் சரடுகளால் ஆனதாக இருந்தது. உஜ்வலன் அவற்றை நோக்கிக்கொண்டிருந்தான். “விண்மீன்களைப்போல!” என்றான். “விண்மீன்கள் நீத்தாரின் விழிகள் என்பார்கள்... முடிவிலாக் கோடி. அத்தனைபேர் இங்கே மண்ணில் போரிட்டு மடிந்திருக்கிறார்கள்.” அவன் உரக்க நகைத்து “மண்ணின் துகள்களின் எண்ணிக்கையைவிட அது மிகுதி என்று படுகிறது” என்றான். சுகோத்ரன் புன்னகைத்தான்.

சுகோத்ரன் புன்னகைப்பதை உணர்ந்து திரும்பி நோக்கிய உஜ்வலன் “நான் மண் நாடுவதில் பொருளில்லை என்று சொல்லவில்லை. எதிலும் பொருளுண்டு. மண் ஆழ்ந்த பொருள் உடையது. இல்லையென்றால் இத்தனைபேர் அதற்காகப் பொருதி மடிந்திருக்க மாட்டார்கள்” என்றான். “உலகியலைத் துறக்க முயல்பவர்கள் எவருமே முழுமையாக

வென்றதில்லை என்றுதான் நிமித்தநூல்கள் சொல்கின்றன. ஏனென்றால் மானுட உடல் அன்னத்தாலும் அனலாலும் ஆனது.”

அவனுக்கான குடில்வாயிலில் சகதேவன் நின்றிருந்தான். அவனை எதிர்பார்த்துத்தான் அவன் நின்றிருக்கிறான் என தெரிந்தது. ஆனால் அவன் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஏவலனிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு குளம்போசை கேட்டு இயல்பாகத் திரும்புவதுபோல சுகோத்ரனை நோக்கி விழிகளை விரித்தான். சுகோத்ரனால் முதலில் அவனை அடையாளம் காண முடியவில்லை. அடையாளம் கண்டுகொண்டதும் அவன் உள்ளம் படபடத்தது. வண்டியிலிருந்து அருகே சென்று தந்தையின் காலடிகளைத் தொட்டு வணங்கினான். சகதேவன் முகம் ஒவ்வாமைகொண்டு சுளித்திருப்பதுபோல தோன்றியது. “நீடுவாழ்க! சிறப்புறுக!” என வாழ்த்தி திரும்பி உஜ்வலனை நோக்கி “இவர் யார்?” என்றான். “என் சாலைத்தோழர். மாளவத்து அந்தணர். கௌண்டின்ய குலத்து உஜ்வலன்” என்றான் சுகோத்ரன்.

“மாளவம் இப்போரில் முழுமையாக தோற்கடிக்கப்பட்டது” என்றான் சகதேவன். அவன் ஏன் அதைச் சொன்னான் என எண்ணி, பின் அவன் நிலைகுலைந்திருப்பதை சுகோத்ரன் உணர்ந்தான். நிலைகுலைகையில் மானுடர் தங்கள் மெய்யான இயல்புகளில் ஒன்றை பொய்யான நடிப்பினூடாக வெளிப்படுத்துகிறார்கள். உஜ்வலன் “ஆம், அஸ்தினபுரி வென்றது” என்றான். அச்சொற்களில் இருந்த கூர்மை சகதேவனை தைக்க அவன் உஜ்வலனை கூர்ந்து நோக்கி “நீங்கள் நிமித்தநூல் கற்பது ஏன், அந்தணரே?” என்றான். “எங்கள்

குடியில் நிமித்தநூல் பயில்வது அமைச்சர்பணிக்கு இன்றியமையாதது என கருதப்படுகிறது" என்றான் உஜ்வலன்.

"ஆம், நிமித்தநூல் ஆட்சிநூலுக்கு இன்னொரு பக்கம் என்பார்கள்" என்றான் சகதேவன். "அந்தணருக்கும் பிறருக்கும் நிமித்தநூலின் பயன்கள் வேறு" என்றான் உஜ்வலன். "அந்தணர் நிமித்தநூலை படைக்கலமாகக் கொள்பவர்கள். பிறர் அதன் படைக்கலமாக தங்களை ஆக்கிக்கொள்கிறார்கள்." சகதேவன் அவனிடம் மேலும் பேச விழையவில்லை. சுகோத்ரனிடம் "நீ இங்கே ஓய்வெடுக்கலாம்... முடிந்தால் பின்னிரவில் வந்து மூத்தவரைக் கண்டு வாழ்த்து பெற்றுக்கொள்... அவரும் உன்னைப் பார்க்க விழையக்கூடும்" என்றான்.

"நாங்கள் ஓய்வெடுக்க விழையவில்லை. உடனே வந்து அவரைப் பார்க்க எண்ணுகிறோம்" என்றான் உஜ்வலன். "ஏனென்றால் சில முடிவுகளை முன்னரே எடுக்க நாம் அவருக்கு பொழுதளிக்க வேண்டும்." சகதேவன் "என்ன?" என்றான். உஜ்வலன் அவனை நேர்விழிகளால் நோக்கி "அஸ்தினபுரியின் குருகுலத்துக் குருதிவழியில் எஞ்சியிருக்கும் ஒரே இளவரசர் அஸ்தினபுரியின் எதிர்கால அரசரைப் பார்ப்பதற்கு உரிய பொழுது என்றும் சில உண்டு. நாளை காலை நாமகள்பொழுது முதல் நீர்க்கடனுக்காக கணிக்கப்பட்டுள்ளது. நீர்க்கடன் அன்றி பிறவற்றை எண்ணக்கூடாது" என்றான்.

சகதேவன் உஜ்வலனை சில கணங்கள் கூர்ந்து நோக்கிவிட்டு "உங்கள் விருப்பப்படி நடக்கட்டும், உத்தமரே. இதில் நான் கூறவேண்டியது என ஏதுமில்லை" என்றபின் திரும்பிச் சென்றான். யுயுத்ஸு "இவர் நன்கு பேசுகிறார். அஸ்தினபுரிக்கே இவர் அமைச்சராகலாம்" என்றான். "நான் மாளவத்தின்

தலைமை அமைச்சனாக ஆகப்போகிறவன்... அஸ்தினபுரி வாழும். ஆனால் மாளவமும் மகதமும் உடன் வாழும். அதை மறக்கவேண்டாம்" என்றான் உஜ்வலன். யுயுத்ஸு "இல்லை, நான் மறுத்து எதையும் சொல்லவில்லை" என்றான். உஜ்வலன் "நான் இவருடைய தோழராக இங்கே வந்தேன். அதை மட்டுமே இயற்றுகிறேன். அஸ்தினபுரியிலோ குருகுலத்திலோ எனக்கு ஆர்வமில்லை" என்றான்.

அவர்கள் நீராடி ஆடைமாற்றிக்கொண்டிருக்கையில் உஜ்வலன் பேசிக்கொண்டே இருந்தான். "நாம் முடிவெடுக்கவேண்டிய நேரம் இது. அவர்கள் எப்படி உங்களை மறந்தார்கள்? நாம் எண்ண விழையாத ஒன்றையே மறக்கிறோம். நம் மறதியில் எப்போதுமே இருப்பது ஒவ்வாமை, அச்சம், துயரம் மூன்றும்தான். அவ்வண்ணம் அவர்கள் உங்களை ஒதுக்க எந்த அடிப்படையும் இங்கில்லை... நீங்கள் அரசகுடிப் பெண்ணுக்கு மைந்தராகப் பிறந்தீர்கள். பாண்டவர் குடியின் குருதிகொண்டவர். இதை எவரேனும் மறுக்கமுடியுமா?" சுகோத்ரன் அவன் சொற்களினூடாக அங்கே தன்னை நிகழவிட்டான்.

உஜ்வலனே ஏவலனிடம் "நாங்கள் மாமன்னர் யுதிஷ்டிரனை சந்திக்க விழைகிறோம். உகந்த பொழுதைக் கேட்டு வா" என்று ஆணையிட்டான். "இப்போதா?" என்று சுகோத்ரன் தயங்க "இனி பிந்தவேண்டியதில்லை" என்றான் உஜ்வலன்.

யுதிஷ்டிரனின் ஏவலன் வந்து பொழுதை அறிவித்தபோது சுகோத்ரன் ஆடைமாற்றிவிட்டிருந்தான். இன்நீர் வந்திருந்தது. உஜ்வலன் அதை ஓசையுடன் அருந்தினான்.

சுகோத்ரன் தன் மேலாடையைச் சீரமைத்தபடி கிளம்பினான். உஜ்வலன் வாயைக் கழுவியபின் உடன் வந்தான். அவன் புத்தெழுச்சி கொண்டதுபோல தோன்றியது. "நான் நன்கு துயின்றுவிட்டேன்... நீண்ட துயில்... இனி நீண்ட பகலுக்கும் நான் ஒருக்கமே" என்றான்.

அவனுடைய குரல் சுகோத்ரனை அழைத்துச்சென்றது. "எப்போதும் உங்கள் உள்ளம் என்ன என்று எனக்கு புரிந்ததே இல்லை. நான் ஒரு மலையோடை போலவும் நீங்கள் பாறை போலவும் எனக்குப் படும். உங்களைச் சூழ்ந்து கொந்தளித்து அலைகொண்டபடியே இருக்கிறேன்... ஆனால் உங்கள் சொற்களில் சிலவற்றை உண்மையில் என் சொற்களிலிருந்தே கண்டடைகிறீர்கள். காற்றில் விழும் ஆலம்பழ மழையில் ஒன்றிரண்டை நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள். நான் மிகையாகப் பேசுவது அதற்காகவே" என்றான்.

அவர்கள் செல்வதற்காக தேர் ஒருங்கியிருந்தது. "இப்போது உங்கள் உள்ளம் என் சொற்கள் வழியாகவே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இல்லையா? மெய் கூறுக!" என்றான் உஜ்வலன். "ஆம்" என்றான் சுகோத்ரன். சிரித்தபடி "ஆம் என நானும் அறிவேன்... நீங்கள் என் சொற்களில் எவற்றை உங்கள் சொற்களென அறிகிறீர்கள் என்பதை மட்டுமே என்னால் புரிந்துகொள்ள முடிந்ததில்லை... நன்று. அதற்கும் ஒரு வழி இருக்கும்" என்றான் உஜ்வலன். சுகோத்ரன் பெருமூச்சுடன் "நான் அதற்கு எதையும் நம்பியிருக்கவில்லை. நம் ஊழ் எதிர்காலத்திலிருந்து ஊறிப்பெருகி வந்து நம்மை அறையும் ஒரு பேரலை. நான் அத்திசை நோக்கி செவிகூர்கிறேன்" என்றான்.

“அதுவும் நிமித்தநூலில் உள்ள வரிதான்” என்று உஜ்வலன் சொன்னான். “நிமித்தநூலில் எப்பொருளும் இல்லை. நான் கற்று அறிந்தது அது மட்டுமே... நாம் நம் விழைவுகளை அதன்மேல் ஏற்றிக்கொள்கிறோம்” என்றான். “அதை என்னால் நூறுமுறை சொல்லமுடியும். நிகழ்காலத்தை முடிவுசெய்ய எதிர்காலத்தை எதிர்பார்ப்பதில் எப்பொருளும் இல்லை. அது கற்பனை. இறந்தகாலமே மெய். நம்மால் எண்ணியோ பேசியோ மாற்றிவிடமுடியாத புறம் அது. அதன் நெறிகளை மட்டுமே கருதுக! அதையே அறிந்தோர் செய்வார்கள்.”

அவர்கள் யுதிஷ்டிரனின் குடிலை அடைந்தபோது வாயிலில் யுயுத்ஸு அவர்களுக்காக காத்து நின்றிருந்தான். அவர்களை வந்து எதிர்கொண்டு “மூத்தவர் காத்திருக்கிறார். நீர்க்கடனுக்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன... அவர் சற்று பதற்றத்தில் இருக்கிறார். யாதவ அரசிக்கு ஏதோ ஆகிவிட்டிருக்கிறது. அது என்னவென்று அறிந்துவர மூத்தவர் அர்ஜுனன் நேரில் சென்றிருக்கிறார். என்ன நிகழவிருக்கிறதென்று எவருக்கும் தெரியவில்லை... சுருக்கமாகவே பேசிக்கொள்ளுங்கள்” என்றான். சுகோத்ரன் “ஆம்” என்றான். “நான் பேசுகிறேன்” என்று உஜ்வலன் சொன்னான். “சுருக்கமாகப் பேசுவது என் வழக்கம்... பேசிப்பேசி நான் சுருக்கிக்கொள்கிறேன்.”

அவர்கள் குடிலுக்குள் நுழைந்தார்கள். உள்ளே யுதிஷ்டிரன் மட்டும் தரையிலிட்ட பாயில் அமர்ந்திருந்தார். சிறிய மூங்கில்மேடையில் சுவடியை வைத்து படித்துக்கொண்டிருந்தார். ஏழு நெய்த்திரி இட்ட விளக்கு மலர்க்கொத்துபோல் அசைவிலாச் சுடர்களுடன் நின்றிருந்தது. அவர் நிமிர்ந்து நோக்கியபோது சுகோத்ரனை அடையாளம்

காணவில்லை. அவருக்கு வருகையை அறிவித்திருந்தபோதும் உள்ளம் அதை தொடவில்லை. யுயுத்ஸு முன்னால் சென்று "இளைய பாண்டவர் சகதேவனின் மைந்தர் சுகோத்ரன் வந்துள்ளார். அவருடைய சாலைமாணாக்கரான உஜ்வலன் உடனிருக்கிறார்" என அறிமுகம் செய்தான்.

யுதிஷ்டிரன் புன்னகையுடன் சுகோத்ரனை நோக்கி வருக என கைகாட்டினார். அவர்கள் அருகே சென்றனர். சுகோத்ரன் குனிந்து யுதிஷ்டிரனின் கால்களைத் தொட்டு வணங்கினான். யுதிஷ்டிரன் "நீளாயுள் கொள்க! நிறைவுறுக!" என வாழ்த்தினார். உஜ்வலனை வணங்கி "உத்தமரே, இங்கே தங்கள் வருகை சிறப்புறுக!" என்றார். உஜ்வலன் அவரை கை தூக்கி வாழ்த்தினான். "இன்று மாலைதான் வந்து இறங்கினார்கள், மூத்தவரே. இரவு கடந்ததும் நீர்க்கடனுக்குரிய நேரம் உருவாகிவிடும் என்பதனால் இப்போதே வந்திருக்கிறார்கள்" என்றான் யுயுத்ஸு.

யுதிஷ்டிரன் சற்றே சலிப்புடன் "இன்றுவரை இந்நிகழ்ச்சி நடைபெறுமா என்ற ஐயம் நீடிக்கிறது. தடைகள் எழுந்தபடியே உள்ளன... கணித்தளிக்கும்படி உன் தந்தையிடம் கேட்டேன். அவனால் அவனுடைய ஊழை கணிக்கவியலாது என்றான்" என்றார் யுதிஷ்டிரன். "நீ கணிக்க முடியுமா பார்" என்று சுகோத்ரனிடம் சொன்னார். சுகோத்ரன் "இது என் ஊழும்கூட" என்றான். யுதிஷ்டிரன் "ஆம்" என்றார். உஜ்வலன் "அவருடைய ஊழை முடிவுசெய்யவேண்டிய தருணம் இது... அரசே, சுகோத்ரன் நாளை தன் மூதாதையருக்கும் உடன்பிறந்தாருக்கும் நீர்க்கடன் செய்யவிருக்கிறாரா?" என்றான். "ஆம், செய்யவேண்டியதுதான்... அதற்காகவே அவன் அழைக்கப்பட்டான்" என்றார் யுதிஷ்டிரன்.

“எனில் எவ்வண்ணம்? அஸ்தினபுரியின் இளவரசனாக கங்கணம் அணிந்துகொண்டா?” என்று உஜ்வலன் கேட்டான். “அதெப்படி? அவன் இன்னமும் தன் கல்விநிலையின் புரிநூலை கழற்றவில்லையே” என்றார் யுதிஷ்டிரன். “அதை கழற்றிவீசலாம். அவர் ஷத்ரியர்... அவருக்கு அப்படி நெறியெல்லாம் இல்லை” என்றான் உஜ்வலன். “அஸ்தினபுரியின் எஞ்சிய ஒரே இளவரசன் என்னும் நிலையில் அவருக்கு உரிமையுள்ளது அந்தக் கங்கணம்.” யுதிஷ்டிரன் விழிகள் மாறுபட உஜ்வலனை நோக்கி “இதைச் சொல்லவா வந்தீர்கள்?” என்றார். “ஆம், இது என் கடமை என்றே வந்தேன்” என்றான் உஜ்வலன்.

யுதிஷ்டிரன் சுகோத்ரனிடம் “நீ கல்விநிலைக்குச் செல்கையில் துறந்துசென்றாய் என எண்ணிக்கொண்டேன். இல்லை எனில் நீயே அம்முடிவை எடுக்கலாம். எனக்கு மாற்றுச்சொல் இல்லை” என்றார். சுகோத்ரன் சில கணங்கள் எண்ணிவிட்டு “நான் நாளை அந்த முடிவை சொல்கிறேன், தந்தையே” என்றான். “நாளை காலைக்குள் சொல்” என்றார் யுதிஷ்டிரன். சுகோத்ரன் தலைவணங்கி “ஆம்” என்றான். உஜ்வலன் “நாங்கள் வெளியே சென்று கலந்தாடி உடனே கூட வந்து சொல்லமுடியும்” என்றான். “இல்லை, பொழுதிருக்கிறது” என்றார் யுதிஷ்டிரன்.

தௌம்யரின் மாணவர்கள் இருவர் ஆணை கேட்க வெளியே வந்து நிற்பதாக ஏவலன் வந்து சொன்னான். யுதிஷ்டிரன் அவர்களை கையசைவால் உள்ளே அழைக்க சுகோத்ரனும் உஜ்வலனும் வணங்கி வெளியேறினர். வெளியே வந்ததுமே உஜ்வலன் “என்ன சொன்னீர்கள் என எண்ணித்தான் கூறினீர்களா? நாவில் உளம் அமையாத நீங்கள் கற்ற

நிமித்தநூல்தான் என்ன?" என்று சீறினான். "நீங்கள் உறுதியாக ஏதும் சொல்லவில்லை என்பதே பிழையான ஒரு குறிப்பு. நாடு கைகொள்பவருக்கு முதலில் தேவை உறுதி..." என்றான்.

"நான் நாடு கைக்கொள்வேனா என்று சொல்லத் தெரியவில்லை" என்றான் சுகோத்ரன். "உங்கள் உள்ளம் நிமித்தநூலில் சிக்கிக் கிடக்கிறது. முதலில் அதை மறந்துவிடுங்கள்" என்றான் உஜ்வலன். சுகோத்ரன் "என் இயல்பு அவ்வண்ணம் போலும்" என்றான். "இல்லை, அதில் நீங்கள் இறக்கிவிடப்பட்டிருக்கிறீர்கள். அது ஒரு சூழ்ச்சி என்றே எண்ணத்தோன்றுகிறது. எத்தனை நம்பிக்கையுடன் அரசர் ஆணையிடுகிறார், நாளை வரை பொழுதுள்ளது என்று. என்ன பொருள் அதற்கு? அவர் அறிந்திருக்கிறார், இதிலிருந்து மீள்வது எளிதல்ல என்று. ஷத்ரியரே, ஒன்று அறிக! மானுடன் தன் ஊழிலிருந்தும் உறவிலிருந்தும்கூட விடுபடலாம். தான் கற்றறிந்தவற்றிலிருந்து விடுபடுவது மிகமிகக் கடினம்..."

"ஏனென்றால் தானறிந்த கல்வி தான் அறிந்தது என்பதனாலேயே தன்னுடையதாகிவிடுகிறது. தன்னுடையது எதையும் நம்பிச் சூடிக்கொள்வதும் அதன்பொருட்டு நிலைகொள்வதும் மானுட இயல்பு. தான் அடைபட்ட கூண்டை தன் உடைமை என விலங்குகள் நினைக்கும் என்பார்கள்... மீறுக, வெளிவருக! அறிவென்பது கூண்டு. மெய்யறிவு என்பது அதிலிருந்து வெளியேறுவது" என்றான் உஜ்வலன். "வெளியேற ஒரே வழிதான். தன்னை கிழித்துக்கொண்டு அனைத்தையும் உடைத்துக்கொண்டு வெளியே பாய்தல். கணநேரத்தில் வெடித்தெழுதல். அறிவின் கூண்டில் இருந்து அறிவைக்கொண்டு வெளியேறலாம் என எண்ணும் அறிவின்மைதான் அறிவு அளிக்கும் மாயைகளில்

முதன்மையானது. அறிந்து அறிந்து எவரும் அறிவை கடக்க முடியாது. அறிவைக் கடத்தல் என்பது ஓர் அறிதல்நிலை அல்ல. அது ஒரு மீறல். ஓர் ஆதல். வேறேதும் அல்ல.”

குடில்வரை அவர்கள் பேசிக்கொண்டே சென்றார்கள். உஜ்வலனால் பேசாமலிருக்க முடியவில்லை. அடுத்தநாள் செய்யவேண்டியவை என்னென்ன என அவன் சொற்களாலேயே வகுத்துக்கொண்டிருந்தான். அவர்கள் குடிலை அடைந்தபோது அவன் பேசிக் களைத்திருந்தான். உணவு உண்டபின் உடனே படுத்து அவன் துயில்கொள்ளலானான். சுகோத்ரன் திண்ணையில் இருளை நோக்கியபடி மடிமேல் கைகோத்து அமர்ந்திருந்தான்.

நீர்ச்சுடர் - 53

பகுதி எட்டு: விண்நோக்கு – 3

சுகோத்ரன் இருளில் மெல்லிய அசைவொன்று தெரிவதைக்கண்டு விழி கூர்ந்தான். அசைவு உருவென மாறுவதற்கு உள்ளம் சென்று அதைத் தொடவேண்டியிருக்கிறது. உரு பொருள்கொள்வதற்கு மேலும் ஒரு சிறு தாவல். விதுரர் என்று உணர்ந்ததும் அவன் எழுந்து நின்றான். மெல்லிய கூனலுடன், விரைந்த சிற்றடிகளுடன் விதுரர் நடந்து வந்தார். அவருடைய கால்களில் ஏதோ சிறு குறைபாடு இருப்பதுபோல் நடை ஒருபக்கமாக இழுத்தது. அருகணைந்து, நடந்து வந்ததன் அலுப்புடன் நீள்மூச்செறிந்து “விழித்திருப்பீர்களா என்ற ஐயம் ஏற்பட்டது” என்றார். “துயில்கொள்ள இயலவில்லை” என்று சுகோத்ரன் சொன்னான்.

“ஆம், இன்று இந்த பகுதியில் எவரும் துயில்கொள்வார்கள் என்று தோன்றவில்லை. அனைவருமே பதற்றத்திலிருக்கிறார்கள்” என்றார் விதுரர். “ஏன்?” என்று கேட்டான் சுகோத்ரன். அவனுக்கு அவர் கூறப்போவதில் ஆர்வமிருக்கவில்லை. அவரிடம் பேசவே பிடிக்கவில்லை. எவரிடமும் பேசப் பிடிக்கவில்லை. “மிகையான ஆட்சியின் சிக்கல்” என்றார் விதுரர். “ஒரு செயல் சிறப்பாக நடக்கவேண்டுமென்றால் முதன்மைமேலிடத்திலிருந்து மிகக் குறைவான ஆணைகள் இடப்படவேண்டும். வழிகாட்டுதல்கள் மட்டுமே அந்த ஆணையில் இருக்கவேண்டும். செயல்முறையை அதைச் செய்பவர்களே முடிவெடுக்கவேண்டும். செய்பவர்களுக்குள் முரண்பாடுகள் வரும். அவற்றை அவர்களே தீர்த்துக்கொள்ளவேண்டும். அதனூடாகவே அவர்கள் ஒருவரை ஒருவர் கண்டுகொள்கிறார்கள். ஒருவரை ஒருவர் நிரப்பி இசைந்து ஓர் செயல்படும் அமைப்பாக மாறுகிறார்கள்.”

“மேலிடத்தில் இருந்து மிகையாக ஆணைகள் அளிக்கப்பட்டால் ஒவ்வொருவருக்கும் இறுக்கமான செயல்முறைகள் அமைந்துவிடுகின்றன. மீற முடியாதவை. அவை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தருணத்தில் அளிக்கப்பட்டவை. எனவே அவை பிறிதொன்றுடன் இசைவு கொள்வதில்லை. ஆகவே ஒவ்வொரு செயல்தளமும் பிறிதொன்றுடன் முரண்பட்டுக்கொண்டிருக்கும். ஒவ்வொருவரும் தாங்கள் செய்வதே அறுதியானதென்றும், முறையான ஆணைப்படி இயங்குவதாகவும் எண்ணிக்கொண்டு பிறரை முழுமையாகவே புறக்கணிப்பார்கள்” என்று விதுரர் சொன்னார்.

அவனுக்கு ஆர்வம் வந்தது. "இங்கு இதை தெரிந்தவர் எவருமில்லையா?" என்றான். "யுயுத்ஸுவுக்கு தெரியும். நெடுங்காலம் என்னுடன் பணியாற்றியவன். ஆனால் அவன் இங்கு பெரிதாக எதுவும் செய்ய இயலாது. யுதிஷ்டிரன் அனைத்தையும் தானே செய்வதாக எண்ணிக்கொண்டிருக்கிறார். ஒவ்வொரு நாளும் எண்ணி எண்ணி புதிய ஆணைகளை அளிக்கிறார். அந்த ஆணைகளை அவரே மாற்றுகிறார். அனைவராகவும் நின்று அவரே எண்ணி அனைத்தையும் முற்றாக வடித்துவிடுகிறார். முற்றாகவே வடித்துவிட்ட ஒன்று எப்படி பிழையாகும் என அவர் சினம்கொள்கிறார். முற்றாக வடிக்கப்பட்ட பின் அது இயங்கமுடியாது, பிழை என்று மட்டுமே அதில் இயக்கம் இருக்கமுடியும் என்று அவருக்குச் சொல்ல முடியவில்லை" என்றபடி விதுரர் திண்ணையில் சாய்ந்து அமர்ந்தார்.

அவர் அருகே சுகோத்ரன் அமர்ந்தான். "நாளைக் காலை சடங்குகள் தொடங்கவிருக்கின்றன. உண்மையில் இது ஒரு பெரிய நிகழ்வே அல்ல. அரசர்கள் ஐவர் நீர்க்கடன் அளிக்கிறார்கள். அதன்பின் இங்குள்ள படைவீரர்களும் ஏவலர்களும் பிறரும் நீர்க்கடன் அளிக்கிறார்கள். இதைவிட பலநூறு மடங்கு பெரிய நீர்க்கடன் நிகழ்வுகள் அஸ்தினபுரியிலும் இந்திரப்பிரஸ்தத்திலும் பாரதவர்ஷம் முழுக்கவும் நடந்துகொண்டிருக்கின்றன. அவற்றை எவரும் ஆணையிட்டு ஒருங்கிணைத்து நடத்துவதில்லை. தன்னியல்பாகவே அவை நிகழ்கின்றன, நன்றாகவே முடிகின்றன" என்று விதுரர் சொன்னார்.

"பிறகு இங்கு மட்டும் ஏன் ஒருங்கிணைப்பு?" என்று சுகோத்ரன் கேட்டான். "ஒருங்கிணைக்காவிட்டால் ஒவ்வொன்றும்

தன்னியல்பாக நிகழும். மேல்கீழ் என்னும் அடுக்கு உண்மையில் எவ்வாறோ அப்படி அமையும். அங்கே முறைமைகள் நிகழாது" என்றார் விதுரர். "சிதைவுகள் இருக்குமா?" என்றான் சுகோத்ரன். "இருக்காது. ஏனெனில் என்ன செய்யவேண்டுமென்பதிலும் எவ்வாறு அதிலிருந்து மீள்வதென்பதிலும் அங்கு செல்லும் ஒவ்வொருவருக்கும் ஒரு தெளிவிருக்கிறது. அதற்கு ஊறு விளைவிக்கும் எதையும் செய்யக்கூடாது என்று அவர்கள் அறிவார்கள். ஆகவே முட்டி மோதி ஒருவரை ஒருவர் நிகர் செய்துகொண்டு ஒரு அமைப்பாக மாறி அச்செயலை செய்து மீள்வார்கள். மிகக் குறைவான குழப்பங்களும் அரிதாக சில முரண்பாடுகளும் மட்டுமே எழும்."

"நான் வரும் வழியில் கங்கைக்கரை முழுக்க அவ்வாறு நீர்க்கடன்கள் நிகழ்ந்துகொண்டிருப்பதை கண்டேன். பலர் கங்கையில் விழுந்து உயிர் துறக்கிறார்கள் என்று அறிந்தேன்" என்று சுகோத்ரன் சொன்னான். "ஆம், அது அவர்களின் முடிவு. அதை நாம் ஒன்றும் செய்ய முடியாது. அதையும் இந்நீர்க்கடனின் ஒரு பகுதியாகக் கொள்வதே முறையாகும்" என்றார் விதுரர். அவர்கள் அப்பேச்சால் இயல்புநிலைக்கு மீண்டுவிட்டிருந்தனர். சுகோத்ரன் முன்பிருந்த உள இறுக்கத்தை இழந்து தானும் உடலை எளிதாக்கி இயல்பாக அமர்ந்தான். விதுரர் பெருமூச்சுவிட்டார். இயல்படைந்ததுமே சுகோத்ரன் சோர்வையும் அடைந்தான்.

"போருக்குப் பிந்தைய தற்கொலைகள்... அதைப்போல விந்தையான பிறிதில்லை" என்று சுகோத்ரன் சொன்னான். "போருக்குப் பின் எஞ்சுபவர்களில் ஒரு பகுதியினர் தங்களை அழித்துக்கொள்கிறார்கள். இரு வகையில்" என்று விதுரர்

சொன்னார். “களத்திலேயே உடனடியாக வாளை எடுத்து கழுத்தில் பாய்ச்சிக்கொள்பவர்கள் சிலர் உண்டு. பின்னர் ஏதோ ஒரு கணத்தில் உடனடியாக முடிவெடுத்து நீரில் பாய்ந்து மறைபவர்கள், எரிபுகுபவர்கள் என பலர் உண்டு. அது ஒரு உள அழுத்தத்தின் உச்ச வெடிப்பு. ஆனால் கொடியது ஒன்றுண்டு, கணந்தோறும் அத்துயரத்தை ஒத்திப்போடுதல். அதன் பொருட்டு ஏதேனும் ஒன்றைப் பற்றிக்கொள்ளுதல். அகிபீனாவை, மதுவை, சிவமூலியை.”

“அது வெளித்தெரிவது. வெளித்தெரியாதவை மேலும் சில உண்டு” என்றார் விதுரர். “பலர் ஏதேனும் செயல்களை அவ்வாறு பற்றிக்கொள்கிறார்கள். தெய்வங்களைப் பற்றிக்கொள்பவர்களும் உண்டு” என்றார். “அது நன்றல்லவா?” என்றான் சுகோத்ரன். “இல்லை, அவ்வாறு எதையேனும் ஒன்றை பற்றிக்கொண்டு ஒன்றையே மிகுதியாக செய்பவர்கள் தங்கள் ஆளுமையை ஒடுக்கிக்கொள்கிறார்கள். கையையோ காலையோ சேர்த்துக்கட்டி நெடுநாட்கள் வாழ்வதுபோல அது. விரைவிலேயே அவர்கள் ஆளுமை குறுகிவிடுகிறது. அதுவும் ஒருவகையான தற்கொலைதான். போருக்குப் பின் பெரும்பாலானவர்கள் எவ்வாறோ குறுகிச் சிறுத்துவிடுகிறார்கள்” என்றபின் “பாண்டவர்களும் அவ்வாறே ஆகிவிடுவதற்கான வாய்ப்புகளே மிகுதி” என்றார் விதுரர்.

“ஐவருமா?” என்று சுகோத்ரன் கேட்டான். “ஆம், அவர்களுக்கு வேறு வழியில்லை” என்று விதுரர் கூறினார். சுகோத்ரன் பெருமூச்சுவிட்டான். “யுதிஷ்டிரன் நிலையழிந்திருக்கிறார். அவர் பிறப்பிக்கும் ஆணைகளிடம் எந்த ஒத்திசைவும் இல்லை. அதைக் குறித்து என்னிடம் ஏவலர்கள் வந்து முறையிட்டுக்கொண்டே இருக்கிறார்கள். என் நாள் முழுக்க

அவர் இடும் ஆணைகளுக்குள் எவ்வாறு ஒரு ஒத்திசைவைக் கண்டடைவது என்பதிலேயே செலவிடப்படுகிறது. அரசரின் ஆணையை தவிர்க்கும் ஆற்றல் எனக்கில்லை. அதை நான் இயற்றுவதும் கூடாது. ஆகவே அவருடைய ஆணைகளுக்குள் ஓர் இசைவு ஏற்படும்படி புதிய சில ஆணைகளை நான் இடவேண்டியிருக்கிறது. மிக எளிய ஒரு செயல் இவ்வாறு சில செயல்சார்ந்த முரண்பாடுகளினால் ஆற்றுவதற்கரிதாக மாறிவிட்டிருக்கிறது" என்றார்.

சுகோத்ரன் மெல்ல நகைத்து "இதை நான் தௌம்ரரின் கல்விநிலையத்தில் கற்றபோது சொல்வார்கள். எடையற்ற ஒரு பொருளை கீழே வைத்து ஐவர் அழுத்த ஐவர் தூக்கவேண்டும் என்பார்கள். எவராலும் அதை தூக்க இயலாது. அசைக்க கூட சில தருணங்களில் இயலாது" என்றான். "ஆம், அதுதான் நிகழ்ந்துகொண்டிருக்கிறது" என்று விதுரர் கூறினார். சுகோத்ரன் மேலும் சிரித்து "விந்தைதான். பல லட்சம் பேர் கூடி போரிட்டு வென்ற ஒரு பெருநிகழ்வு இங்கு ஒருங்கிணைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு சின்னஞ்சிறு நிகழ்வை ஒருங்கிணைக்க தடுமாறிக் கொண்டிருக்கிறோம்" என்றான். "இன்றிருப்பவர்களே வேறு... போர் ஒரு சூளை... எரிந்து உருகி உருவழிந்தவர்கள் இங்கே இருப்பவர் அனைவரும்" என்றார் விதுரர்.

"இதற்குள் இப்போரின் பேருரு பற்றி முடிவிலாத கதைகளை சூதர்கள் பாடத்தொடங்கிவிட்டிருக்கிறார்கள். எங்கள் நிமித்திக நிலையில் அவ்வாறு பாடல்களை பாடுவதற்கும் போர்ப்பரணிகளை உருவாக்குவதற்கும் தடை உள்ளது. ஆயினும் ஒவ்வொருவரும் அதை கேட்க விழைகிறார்கள். எப்போதேனும் எவரேனும் சூதர் அவ்வழியாக வந்தால் அவரை

இழுத்துக்கொண்டுவந்து அருகிலிருக்கும் காட்டில் அமர்ந்து இளைஞர்கள் கூடி சூழ்ந்து அதைக் கேட்டு மகிழ்கிறார்கள். உளம்கிளர்ந்து தங்களுக்குள் பாடிக்கொண்டே இருக்கிறார்கள்" என்றான் சுகோத்ரன்.

"ஏன் போர்ப்பரணிக்கு தடை?" என்று விதுரர் கேட்டார். "சூதர்களின் இரு பணிகள் இசைபாடுவதும் நிமித்திகம் நோக்குவதும். நிமித்தம் நோக்குபவனுடைய வழி வேறு, இசை பாடுபவனுடைய வழி வேறு. நிமித்தம் நோக்குபவன் புறத்தை முற்றாக மறுத்து உள்ளே குவியவேண்டும். இசைப்பாடகன் புறம் நோக்கி விரிந்துகொண்டே இருக்கவேண்டும். இசைப்பாடலுக்குச் செல்பவன் தன் நிமித்தத்தில் ஒரு பகுதியை இழந்தே அங்கு செல்கிறான் என்கிறார்கள். இங்கு என்ன நிகழ்கிறது என்பது ஒரு நிமித்திகனுக்கு எவ்வகையிலும் பொருட்டல்ல, இங்குள்ள அனைத்தும் கருக்கொள்ளும் அங்கு என்ன நிகழ்கிறது என்பதே அவனுடைய கணிப்பு. அங்கு நிகழ்வனவற்றின் நிழல்கள் தான் இங்கு ஆடுகின்றன என்று நிமித்தநூல்கள் கூறுகின்றன" என்று சுகோத்ரன் சொன்னான்.

சில கணங்கள் அவனை கூர்ந்து நோக்கிவிட்டு "மைந்தா, நீ நிமித்தநூல் கற்க செல்வதற்கு என்ன தேவை இருந்தது?" என்று விதுரர் கேட்டார். "அறியேன். அது நானறியா அகவையில் எந்தை எடுத்த முடிவு. நான் நினைவறிந்த நாள் முதலே தௌம்ரரின் கல்விச்சாலையிலேயே இருக்கிறேன்" என்றான் சுகோத்ரன். "அவருடன் அமர்ந்து நிமித்தநூலை பிறிதொன்றறியாமல் கற்றேன். இப்போது எண்ணுகையில் அவர் நிமித்தநூல்களை படித்துக் கொண்டிருக்கையில் அவர் முகத்திலிருக்கும் அந்தப் பெரும் உவகையை அருகிலிருந்து கண்டதுதான் எனக்கு அதில் ஆர்வத்தை உருவாக்கியது என்று

தோன்றுகிறது. பிற தருணங்களில் எவரிடமும் அந்த பேருவகையை நான் கண்டதில்லை" என்றான் சுகோத்ரன்.

"மனிதர்கள் அறியும்தருணத்தில் அன்றி வேறு எப்போதும் அத்தனை மகிழ்ச்சியுடன் இருப்பதை நான் பார்த்ததில்லை" என சுகோத்ரன் தொடர்ந்தான். "உணவுண்கையில், விளையாடுகையில், போர் பயில்கையில், பெண்களுடன் விளையாடுகையில் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியாக இருப்பதை பார்த்திருக்கிறேன். நான் என் தந்தையர் ஐவரையும் அரிதாகவே கண்டிருக்கிறேன். ஆகவே அவர்களை என் கற்பனையில் வரைந்துகொண்டேன். அம்பு தொடுக்கையில் வில்லவரிடம் கூடும் ஆழ்ந்த அமைதியே மூத்த தந்தை அர்ஜுனன். கதை சுழற்றுகையில் மூத்த தந்தை பீமசேனனின் உடலெங்கும் தசைகள் அலைகொள்வதை அத்தனை மல்லரிடமும் கண்டேன். அரசர் யுதிஷ்டிரன் நூல் நவில்கையில் அவர் முகத்தில் உவகையும் ஆவலும் திகைப்பும் மாறி மாறி எழுவதையும் குருநிலையிலேயே சிலரிடம் கண்டிருக்கிறேன். ஆனால் எந்தையின் உலகு தௌம்ரருடையது. அது நிமித்தநூல்களில் இருந்தது. ஒளியுடன் வெடித்து எரியத் தொடங்கிய ஒன்று அவ்வண்ணமே உறைந்து நின்றாற்போலிருக்கும் அவர் முகம்."

"அது என் கற்பனைதான். நான் அந்நாட்களை எண்ணி எண்ணி வளர்த்து பெரிதாகப் புனைந்து கொண்டிருக்கிறேன் இன்று. சாளரங்களினூடாக ஆசிரியர் நூல்நவில்வதை நோக்கிக்கொண்டிருப்பேன். அது அவர் மட்டும் அடைவதா என்று முதலில் ஐயம் கொண்டிருந்தேன். அத்தனை நிமித்திகர்களிடமும் அது கூடுவதைக் கண்டேன். நிமித்திகன் நிமித்தம் உரைப்பதற்காக வரும்போது வெளிப்படுபவன் அல்ல.

அது அவனுள் இருக்கும் ஏரியிலிருந்து ஒரு குடம் நீரை மொண்டு வெளியே அளிப்பதுதான். நிமித்திகனின் எல்லாச் சொற்களிலும் ஏரியின் அலையும் துமியும் திகழ்கிறது. அவன் விழிகளில் அதன் ஒளி வெளிப்படுகிறது.”

நிமித்திகர்கள் தங்கள் இல்லத்தில் ஒவ்வொரு நாளும் நிமித்தநூல் தேர்கிறார்கள். தங்கள் வாழ்நாளில் பெரும்பகுதியை நூல்களில் செலவிடுகிறார்கள். தங்களை சூழ்ந்திருக்கும் ஒவ்வொன்றுக்கும் நிமித்தமென்ன என்று எண்ணுகிறார்கள். இப்புடவி நிமித்தங்களால் ஒன்று சேர்ந்து கட்டப்பட்டிருக்கிறது என்று அவர்களின் நூல்கள் கூறுகின்றன. இங்குள்ள மேடையில் ஆடும் பாவைகளை அவற்றின் சரடுகளினூடாகவும், சரடுகள் வழியாக அவற்றை ஆளும் விரல்களையும் அறியமுயல்பவர்கள். அவர்களிடம் இருக்கும் அந்த பேருவகையை கண்டு அதற்குள் நுழைந்தேன். குருநிலைக்குச் சென்றபோது எனக்கு சொல்திருந்தவில்லை, மொழி படியவுமில்லை. ஆகவே சுவடிகளை படிப்பதுபோல் நடிப்பேன்.

குருநிலையில் நான் பிறருடைய விளையாட்டுக்குரிய குழவியாக வளர்ந்தேன். ஒவ்வொருநாளும் நூல்நவில்கை நிகழ்கையில் சென்று அமர்ந்துகொள்வேன். எண்ணும் எழுத்தும் பயிலும்போதே நாற்களக் கணக்குகளையும் கற்றேன். என்னை நிமித்திகனாகவே எண்ணத்தலைப்பட்டேன். ஒருநாள் நான் ஆசிரியர் தன் தனியறையில் அமர்ந்து நூலாய்ந்து கொண்டிருப்பதைக் கண்டேன். அவர் எழுந்து சென்றபின் அவருடைய கையிலிருந்த நூலை எடுத்து பிரித்து அதன் சொற்களைப் படிக்கத் தொடங்கினேன். அது சூரியதேவரின் பிரஹதாங்கப் பிரதீபம். துருவநிமித்தநெறியின் முதல் நூல்.

துருவனின் கதையை நான் அறிந்திருந்தேன். அந்நூல் நிமித்திகர் மட்டுமே அறிந்த துருவம் என்னும் மொழியில் அமைந்தது. அதன் சில எழுத்துக்களே எனக்குத் தெரிந்திருந்தன.

உள்ளே பிறிதொரு சுவடி தேடச்சென்றிருந்த ஆசிரியர் திரும்பி வந்து என் பின்னால் நின்றிருந்தார். அவர் நிழலைக் கண்டு நான் திடுக்கிட்டு எழுந்தேன். ஆசிரியர் புன்னகையுடன் என் அருகணைந்து "மைந்தா, இவற்றில் உனக்கு மெய்யாகவே ஆர்வம் உள்ளதா?" என்றார். "ஆம்" என்றேன். "நிமித்தநூல் நோக்குபவன் ஒருபோதும் வாளெடுத்து போரிட இயலாது என்பார்கள்" என்றார். "எந்தை போரிடுகிறாரே" என்றேன். "ஆம், அவர் போரிடுகிறார். ஆனால் உண்மையான போராளி அல்ல. சூதர் பாடல்களில் அவரும் வீரர் என புனையப்பட்டுள்ளது. ஏனென்றால் அஸ்தினபுரியின் மணிமுடி அவர்களிடம் அமைந்துள்ளது. ஆனால் அவரால் போர்நடத்த இயலாது" என்றார்.

"ஏன்? அவருடைய தோள்கள் ஆற்றல் அற்றவையா?" என்று நான் கேட்டேன். "மைந்தா, நாம் கொல்லவிருப்பவனின் முற்பிறவியும் வருபிறவியும் நமக்குத் தெரியுமெனில் அந்த வாளை எப்படி ஏந்துவோம்? எப்படி அவன் தலைமேல் இறக்குவோம்?" என்றார். நான் திகைத்து அமர்ந்திருந்தேன். "நீ ஷத்ரியன். உன் ஷத்ரியப் பண்பில் பெரும்பகுதியை திரும்ப அளித்தே நீ நிமித்திகப் பண்பை பெறமுடியும். நிமித்திகன் ஆகுகையில் நீ அரசநிலையிலிருந்து எப்போதைக்குமென இறங்குகிறாய்" என்றார். "எனில் எந்தை ஏன் அதை கற்றார்?" என்று நான் கேட்டேன். "அவரை நீங்கள் ஏன்

ஏற்றுக்கொண்டீர்கள்?" என்றேன். "அவர் பிற நால்வரிடமிருந்தும் விலகவிரும்பினார்" என்றார்.

"விலகவா? ஏன்?" என்று நான் கேட்டேன். "அவர்கள் நால்வரும் ஆள்வது ஷத்ரியர்களுக்குரிய நான்கு உலகங்களை. தொல்நெறி தேர்தலும், தோள்திறன் பேணுதலும், விற்கலையும், புரவிக்கலையும் ஷத்ரியர்களுக்கு வகுக்கப்பட்ட நான்கு தளங்கள். ஐந்தாவது ஒன்று இருந்தது, அது அரசுசூழ்தல். அதைக் கற்றுக்கொள்ளும்படி சகதேவனிடம் பீஷ்மர் கூறினார். ஆனால் உன் தந்தை பிறிதொரு முடிவை எடுத்தார். நிமித்தநூலை தெரிவுசெய்தார்..." என்றார் தௌம்ரர். "அத்தருணத்தில் எது அவ்வாறு ஆணையிட்டதென்று தெரியவில்லை. அவர்கள் நால்வரிடமிருந்தும் முரண்பட்டு பிறிதொருவனாக ஆகவேண்டும் என்று தோன்றியிருக்கலாம். நாம் வாழ்க்கையில் எடுக்கும் சிறிய முடிவுகளுக்கே காரியகாரண விளக்கம் உண்டு. பெரிய முடிவுகளை நம்முள் எழுந்து நம்மை ஆளும் நாமறியா விசைகளே எடுக்கின்றன."

"ஷத்ரியக் குடியில் பிறந்தவனிடம் ஷத்ரியப் பண்பு இயல்பாகவே இருக்கும். இக்கலையினூடாக அது அகலும். அதன்பின் வென்றெடுக்கவோ, வெற்றியில் திளைக்கவோ, இயற்றியவை அனைத்தையும் எண்ணி எண்ணி நிகர் செய்துகொள்ளவோ, பிறர்மேல் உனக்கு இயல்பான கோன்மை உள்ளதென்று எண்ணிக்கொள்ளவோ இயலாது. நீ இந்நூலை தேர்வு செய்வாய் என்றால் உன் பதினான்கு தலைமுறை மூதாதையர்கள் தங்கள் வீரப்பண்புநலன்களால் சேர்த்தளித்த அனைத்தையும் கைவிடுகிறாய்" என்றார் தௌம்ரர்.

சுகோத்ரன் சிரித்து "அன்று என்னிடம் அவர் பேசிய ஒவ்வொரு சொல்லையும் நினைவுகூர்கிறேன்" என்றான். "எல்லைகடந்த

நினைவாற்றல் கொண்டவர்களே நல்ல நிமித்திகர்" என்றார் விதுரர். "ஆம், நான் எதையுமே மறப்பதில்லை" என்றான் சுகோத்ரன். "அன்று நான் திகைத்து அமர்ந்திருந்தேன். அதனை நான் எண்ணியிருக்கவே இல்லை. என்னுள் அப்போது வீரக்கனவுகளே நிறைந்திருந்தன. என் தந்தையரின் போர்வெற்றிகளையும் புகழையும் ஒவ்வொரு நாளும் கேட்டுக்கொண்டிருந்தேன். தாங்கள் அறிந்திருப்பீர்கள், அஸ்தினபுரியில் அத்தனை பேருமே அவர்களைப்பற்றி எண்ணிஎண்ணித்தான் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அவ்வாறு எண்ணும்பொருட்டே இங்கு கதைகள் சொல்லப்பட்டன. நானும் அவ்வாறே வளர்ந்தேன்."

நான் அஸ்தினபுரியின் இளவரசர்களில் ஒருவன் என்பதை அறிந்திருந்தேன். ஆகவே எனக்கு எந்நிலையிலும் மணிமுடியோ நிலமோ கிடைக்கப்போவதில்லை. ஒரு சிறு படையுடன் கிளம்பிச் செல்வதைப்பற்றி, கிழக்கிலோ தெற்கிலோ மேற்கிலோ விரிந்து கிடக்கும் ஆளில்லா நிலங்களில் அரசொன்றை அமைப்பதை பற்றி, என் குருதியிலிருந்து புகழ் பூத்த அரசகுலம் ஒன்று பெருகி வளர்வதைப்பற்றி, எனது பெயர் அவர்களின் குடிநினைவுகளில் நிலைகொள்வதைப்பற்றி, அவர்களின் இல்லமுற்றங்களில் தெய்வமாக நான் நின்றிருப்பதைப்பற்றி, எனக்கு அவர்கள் குருதி பலியும் அன்னமும் நீரும் அளித்து வணங்குவதைப்பற்றி, அந்த அகவையிலேயே நான் கற்பனை செய்துகொண்டிருந்தேன்.

நான் வெல்ல வேண்டிய எதிரிகளை உருவாக்கிக்கொண்டேன். அவர்களை வெவ்வேறு வகையில் களப்போர்களில் வென்றேன். அவர்களை கொன்று குவித்தேன். வென்று என் குலத்துடன் சேர்த்துக்கொண்டேன். அவர்களின் மேல் கோன்மை

கொண்டேன். ஆகவே ஆசிரியரின் அக்கூற்று எனக்கு திகைப்பை அளித்தது. "தந்தை போரில் வெல்வதைப்பற்றி எண்ணியிருக்கவேயில்லையா? உடன்பிறந்தார் நால்வரையும் உதறிவிட்டு கிளம்பிச்சென்று வென்று தனக்கான அரசு ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற கனவு அவருக்கு உருவானதே இல்லையா?" என்றேன்.

"அதை நான் கேட்கவில்லை. ஏனென்றால் நான் மானுட உள்ளத்தை நன்கறிவேன்" என்றார் ஆசிரியர். "உன்னிடம் இப்போதிருக்கும் கனவு அவரிடமும் இருந்திருக்கும். நிமித்தநூல் வழியாக அதை கடந்து சென்றிருப்பார். அதை கடந்து செல்லும்பொருட்டே நிமித்தநூலைக் கற்றிருப்பார்" என்றார். நான் அவரை வெறுமனே நோக்கியபடி அமர்ந்திருந்தேன். ஆசிரியர் புன்னகை செய்து "இளையோனாக இருப்பதென்பது சில தருணங்களில் துறவுக்கு நிகர்" என்றார். நான் மெல்லிய அதிர்ச்சியை அடைந்தேன். "நன்று. நீ ஒருநாளை எடுத்துக்கொள். உன் வாழ்வின் மிக முதன்மையான முடிவை எடுக்கப்போகிறாய். அதை நீயே எடுக்கவேண்டும்" என்றார்.

"நிமித்தநூல் கற்பதற்கு ஓர் அகவை உள்ளது. முதிரா இளமைக்குள் நிமித்தநூலை கற்றாகவேண்டும். அதன்பிறகு பழகும்போது சிந்தை பழகுமே ஒழிய ஆழம் பழகாது. இன்று நீ சிறுவன். உன் முடிவை இப்போதே வகுத்தாகவேண்டும்" என ஆசிரியர் சொன்னார். "சிறந்த கல்வி என்பது குழவிப்பருவத்திலேயே தொடங்குவது. ஆனால் அக்கல்வியை தெரிவுசெய்வதில் ஓர் இடர் உள்ளது. அம்முடிவை கற்பவனே எடுக்க இயலாது. இது ஒரு தீய கூறு. நிமித்திக குலத்தில் பிறந்தவர்களுக்கு இந்த சிக்கல்கள் இல்லை. அவர்கள்

அக்குலத்தில் பிறந்ததனாலேயே இயல்பாக அம்முடிவை எடுக்க வேண்டிய நிலைக்கு செல்கிறார்கள். அருங்கலைகள் அனைத்துமே அவ்வண்ணம்தான் கற்கப்படுகின்றன. அதன்பொருட்டே அவர்களுக்கான குலங்கள் வகுக்கப்பட்டுள்ளன."

"ஷத்ரியன் அனைத்தையும் கைவிட்டு அதைப் பற்றிக்கொள்ளவேண்டும். அம்முடிவை அவனே எடுக்கவேண்டும். தந்தையோ ஆசிரியரோ அம்முடிவை எடுத்தால் அது பெரும்பழி என ஆகக்கூடும். ஆகவே உன் முடிவை நீயே எடு" என்றார் தௌம்ரர். நான் வெறும்விழிகளாக அமர்ந்திருந்தேன். "இந்த சிற்றகவையிலேயே நீ உன்னை வாழ்நாள் முழுக்க நடத்தும் முடிவை எடுக்கவிருக்கிறாய். எதை நீ உசாவுவாய், எவ்வண்ணம் நீ அங்கு சென்றுசேர்வாய் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் நீ அம்முடிவை எடுக்காமல் இருப்பதே உகந்ததென்று எண்ணுகிறேன். ஏனெனில் நீ ஷத்ரியன் என்பதனால் நீ அதற்குள் நுழைவதால் இழப்பதே மிகுதி" என்று அவர் தொடர்ந்தார்.

நான் அவரை வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தேன். எனக்கு என்ன எண்ணுவதென்றே புரியவில்லை. என் உள்ளத்தில் சொற்கள் ஒன்றுடன் ஒன்று மோதி கலைந்துகொண்டிருந்தன. வாழ்க்கையின் பெருமுடிவுகளை எடுக்க நேர்கையில் மொத்தப் புடவியின் சிக்கலையும் ஒரே கணத்தில் எதிர்கொள்கிறோம். கடுவெளி திறந்துகொண்டதுபோல. உள்ளம் மலைத்து நின்றுவிடுகிறது.

"நீ என்ன முடிவை எடுத்தாலும் அது பெரும்பிழையாக இருப்பதற்கான வாய்ப்புகள் மிகுதி" என தௌம்ரர் சொன்னார். "எடுத்த முடிவிலிருந்து ஒருவேளை நீ வெளியேற விழையவும்

கூடும். அப்போது நீ வெளியேற முடியாமல் உன்னை அது கட்டுப்படுத்தலாம். அதன் பொருட்டு நீ இழந்த அனைத்தும் உன் முன் வந்து நின்று உனக்கு பெரும் சலிப்பையும் உருவாக்கலாம். ஆயினும் இப்போது எனக்கு வேறு வழியில்லை. அம்முடிவை நீயே எடுக்க வேண்டும். ஏனெனில் பிறிதொரு நாள் எண்ணும்போது அம்முடிவு உன்னால் எடுக்கப்பட்டதென்றே எண்ணம் உனக்கு இருக்கவேண்டும்" என்றபின் ஆசிரியர் அகன்று சென்றார்.

"நான் அச்சிற்றறையில் என் ஊழை எதிரே நோக்கியபடி அமர்ந்திருந்தேன்" என்று சுகோத்ரன் சொன்னான். "என் முடிவை அன்றுதான் எடுத்தேன். தாதையே, அது நான் எடுத்த முடிவு அல்ல."

நீர்ச்சுடர் - 54

பகுதி : எட்டு விண்நோக்கு – 4

விதுரர் சுகோத்ரனிடம் "அப்போது உன் அகவை என்ன?" என்றார். "ஆறு. நான் இலக்கணக் கல்வியை முடித்து நெறிநூல்களை கற்கத் தொடங்கியிருந்தேன்" என்றான் சுகோத்ரன். "அந்த அகவையில் அது பெரிய பொறுப்புதான்" என்றார் விதுரர். "ஆம், ஆனால் அந்த அகவையில் என்பதால்தான் என்னால் உறுதியான முடிவை எடுக்கமுடிந்தது" என்றான் சுகோத்ரன்.

நான் அந்த ஏட்டுச் சுவடியுடன் அங்கேயே அமர்ந்திருந்தேன். சிற்றறை அது. அதன் ஒவ்வொரு அணுவும் இன்று என என்

காட்சியில் உள்ளது. நான்கு சாளரங்களினூடாகவும் ஒளி உள்ளே வந்தது. அந்தச் சுவடி நன்கு வெளிச்சம் படும் இடத்தில் இருந்ததனால் அது சுடர்விடுவது போலிருந்தது. அறைக்குள் வந்த காற்றில் திரைச்சீலைகள் கொந்தளித்துக்கொண்டிருந்தன. என்னிடம் அது உசாவுவதுபோல தோன்றியது. எந்தக் கலையும் தன்னை முற்றளிக்கும்படி கோருகிறது. முற்றளிக்காதவனை அது ஏளனம் செய்கிறது. ஒரு கலையின் பொருட்டு பிற அனைத்தையும் இழப்பவனே அக்கலையை அடைகிறான். அக்கலையில் அவன் தேர்வான் என்றால் பிற அனைத்தையும் அக்கலையே அவனுக்கு அளிக்கும்.

ஆனால் பிற அனைத்தையும் விடுவதற்கான முடிவு எடுப்பது அத்தனை எளிதல்ல. முதிரா அகவையில் எடுத்த முடிவு அது. அதை எத்தனை நூறு முறை மீண்டும் எடுத்திருப்பேன். கனவுகளிலேயே வளர்க்கப்பட்ட ஷத்ரியனாகிய எனக்கு அளிக்கப்பட்டது. எழுக, விரிக என்னும் ஆணை. தாதையே கூறுக, உலகு நோக்கி விரிக என்ற ஆணையை ஒவ்வொரு ஷத்ரியனுக்கும் விதைப்பது அக்குலமா, அவனுக்கு அளிக்கப்படும் கல்வியா, அவன் குருதியா? அறியேன். ஆனால் ஷத்ரியனை நிலைகொள்ளாமலாக்குவது, அவன் ஒருகணமும் எங்கும் அமையாதவனாக ஆக்குவது அதுதான்.

இதோ குருக்ஷேத்ரப் பெருங்களத்தில் இத்தனை ஷத்ரியர்கள் முட்டி மோதி உயிர்துறந்திருப்பது அவர்களுக்குள் விதைக்கப்பட்ட அக்கனவினால்தான். அது பேரழிவை உருவாக்கும் தீச்சொல்போல. கனவெனினும் கடந்து போக முடியாத ஒன்று. ஷத்ரியர்கள் என்னும் குலம் ஏன் உலகில் உருவானது? ராஜஸமென்னும் இயல்நிலையின் மானுட

வடிவங்கள் அவர்கள். இப்புடவியை நெய்திருக்கும் மூன்று விசைகளில் அதுவே முதன்மையானது. எழுவிசை அது. இக்களத்தில் படைப்பிறையால் வைக்கப்பட்ட கருக்கள் ஷத்ரியர். அழிப்பதும் அழிவதும் அவர்களின் இயல்பு. விலங்குகளில், பூச்சிகளில்கூட ஷத்ரியர்கள் உண்டு என்பார்கள்.

மண்மீதான பற்றை துறப்பது சூத்திரர்களுக்கு கடினம். பொன்மீதான பற்றை துறக்கும் வைசியர் அதனினும் அரியர். சொல்மீதான ஈர்ப்பை அறுக்க அந்தணன் அருந்தவம் செய்யவேண்டும். தாதையே, வெற்றிமேல் ஷத்ரியன் கொள்ளும் விழைவை அறுப்பது இயல்வதே அல்ல. அவன் ஷத்ரியன் அல்லாமல் ஆகவேண்டும் அதற்கு. விஸ்வாமித்திரரும் ஜனகரும் கடந்துசென்றனர். அதற்கு முன் அவர்கள் தங்களை படிகளாக்கி தாங்களே மிதித்தேறி அந்தணர் ஆயினர்.

நான் அன்று பகல் முழுக்க அங்கு அமர்ந்திருந்தேன். ஒவ்வொரு கணமாக அச்சுவடி நோக்கி செல்கிறேன் என்று தோன்றியது. ஒவ்வொரு கணத்திலும் அச்சுவடியிலிருந்து என்னைத் தடுக்கும் பெருவிசைகளை உணர்ந்திருந்தேன் என்று தோன்றியது. அச்சுவடி மட்டும் ஒளிவிட அறை இருண்டு அமைந்தது. சுவடியின் அருகே இருந்த சிற்றகலின் வெளிச்சத்தில் அதை பார்த்தபடி அந்தியில் அமர்ந்திருந்தேன். எண்ணெய் தீர்ந்து அகல் அணைய சுவடி இருளில் மறைந்தது. இருளுக்குள் அதன் இருப்பு இருந்தது. அருகே நான் அமர்ந்திருந்தேன். பின்னர் அது மட்டுமே இருந்தது, நான் இல்லாமலிருந்தேன். பின்னர் அது மறைந்தது நான் இருந்துகொண்டிருந்தேன். பிறகு வேறெங்கோ எங்கள் இருவரையும் நான் பார்த்துக்கொண்டிருந்தேன்.

முழு இரவும் அங்கு அமர்ந்திருந்தேன். மறுநாள் புலரி எழுவதை ஓசைகளினூடாக உணர்ந்தேன். புலரியா என்று எண்ணியபோது திகைப்பாக இருந்தது. அத்தனை பொழுது அங்கு அமர்ந்து எதை எண்ணினேன் என்று பின்னாட்களில் பலமுறை தொகுத்துப் பார்த்தேன். எதையுமே எண்ணவில்லை, வெற்றுச் சொற்களால் நெஞ்சை நிரப்பிக்கொண்டு அங்கு அமர்ந்திருந்தேன் என்று தோன்றியது. சலிப்புற்று எழுந்து ஓடிவிடவேண்டும் என்று எண்ணி, ஆனால் உடலை அங்கிருந்து எடுக்க இயலாமல்தான் அங்கேயே படிந்திருந்தேன். சாளரங்கள் ஒளி கொண்டன. ஒளி சரிந்து உள்ளே விழுந்தது. முதற்கதிர்! அதன் செம்பொன் நிறம்!

அச்சுவடி அவ்வொளியில் மீண்டும் பொலியத் தொடங்கியது. இப்போது முற்றிலும் புதிதாக இருந்தது. அவ்விரவில் அது எங்கோ கிளம்பிச்சென்று மீண்டதுபோல. புடவி முழுக்க நிறைந்திருக்கும் பேரிருள் ஒன்றில் கரைந்திருந்து மீண்டும் உயிர்கொண்டதுபோல. அவ்விருள்தான் புடவிகள் அனைத்தையும் இணைக்கும் சரடு. இருளே அனைத்துக்கும் பொருள் அளிக்கிறது. நிமித்திகனின் ஊடகம் இருள். அவன் மொழியிலெழுவது இருள். இருளின் அளவிடமுடியாமையையே அவன் ஊழென்று விளக்குகிறான். அளியென்று ஆக்கி ஆறுதலென சமைத்து அளிக்கிறான்.

நிமித்திகன் அறியக்கூடுவதில் ஒரு பகுதியை மட்டுமே நாம் நிமித்தநூலில் கற்கிறோம். மொழி தொடும் இடமே சிறிது. மொழியில் நாம் உளம் திறக்கும் இடம் அதைவிட சிறிது. உளம் திறக்கும் இடத்தை நாம் உலகியலுக்கு விளக்குவது அதைவிட சிறிது. ஏரியல்ல அது, கடல். ஆழி, பரவை, அலகிலி. அதை என் உள்ளத்தில் அள்ளிக்கொள்ளவேண்டும். ஆனால்

நான் அதில் இறங்கிவிடவேண்டும். என் முன் அதன் கரை வளைந்திருந்தது. மாபெரும் நாவுகள் என அலைகள் கொந்தளித்தன.

அச்சம் ஏற்பட்டு நான் எழுந்தேன். என்னால் அது இயலாதென்று தோன்றியது. ஆழியில் குதிப்பவன் கரையை முற்றாக மறந்துவிடவேண்டும். ஆடை அனைத்தையும் முற்றாக களைந்துவிடவேண்டும். பெயரை, அடையாளங்களை, உறவை இழந்துவிட வேண்டும். ஆழியன்றி பிறிதொன்று இருக்கக் கூடாது. ஆழியாகவே மாறிவிடவேண்டும். ஆழியில் எதுவும் சிறு துளியே. பெருங்கலங்கள் கூட. தீவுகள் கூட துளிகளே.

நான் அவ்வறையிலிருந்து வெளியே செல்வதற்காக திரும்பிய கணம் சாளரத்தினூடாக வாள் வீச்சென ஒரு சிறு பறவை உள்ளே வந்து சுழன்று திரும்பிச் சென்றது. ஒருகணம் கூட இல்லை. அதை நான் பார்க்கவே இல்லை. அதன் வீச்சொலியை மட்டுமே கேட்டேன். அதன் காற்று அசைவென்று உடலைத் தொட உணர்ந்தேன். மெய்ப்பு கொண்டு அங்கேயே நின்றேன். சுவர் சாய்ந்து மெல்ல அமர்ந்தேன். என் உடல் துள்ளி நடுங்கிக்கொண்டிருந்தது. என் கண்களிலிருந்து நீர் வழிந்தது. இரு கைகளையும் கோத்து மடியில் வைத்து இறுக்கிக் கொண்டிருந்தேன்.

தௌம்ரர் உள்ளே வந்து "என்ன முடிவெடுத்திருக்கிறாய்?" என்றார். "ஆசிரியரே, நான் நிமித்தநூல் கற்கிறேன், நிமித்திகனாகிறேன்" என்றேன். "அறுதி முடிவா இது?" என்று அவர் கேட்டார். "ஆம், அறுதியாக" என்று நான் சொன்னேன். ஆசிரியர் மகிழ்ந்தாரா? முகம் மலர்ந்ததா? இன்றுகூட அதை என்னால் உணர முடியவில்லை. இத்தனை தொலைவுக்கு

அந்த நாளை, அக்கணங்களை விரித்து விரித்து சொல்லாக்கிக் கொண்டபின்னரும் அவர் முகம் பொருளில்லாத சொல் எனவே நினைவில் நீடிக்கிறது.

ஆசிரியர் என்னை அருகே அமர்த்தி, ஏட்டுச் சுவடியை எடுத்து மடியில் வைத்து "நோக்கு" என்றார். அது பட்டு நூலால் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. மிகத் தொன்மையான ஏடு. தாளியோலையில் எழுதப்பட்டது. பொன்னிற ஓலை காலத்தால் பழுப்பு நிறமாகி சாம்பல் நிறமாக மாறிவிட்டிருந்தது. "இது சூரியதேவரின் பிரஹதாங்க பிரதீபத்தின் பதினெட்டாவது அங்கம். இது ஊழ் குறித்தது. இதில் உன் கை திறக்கும் பகுதியை காட்டு" என்றார்.

நான் அதன் செம்பட்டுச் சரடை சுற்றி பிரித்து அதை செங்குத்தாக அடுக்கி ஏட்டு அடுக்கின் வரிகளின்மேல் விரலோட்டி "தெய்வங்களே!" என்று எண்ணியபடி ஒரு பக்கத்தில் விரலமிழ்த்தி அதை பிரித்து வைத்தேன். தாளியோலையின் அப்பக்கத்தில் எழுத்தாணியால் மிக மெலிதாகக் கீறி எழுதப்பட்ட எழுத்துக்களின் மீது மஞ்சளும் சுண்ணமும் கலந்த செஞ்சாந்து பூசப்பட்டிருந்தது. ஒருகாலத்தில் செவ்வண்ணத்தால் எழுதப்பட்ட எழுத்துக்கள். பின்னர் உலர்ந்த குருதியென்றாகி பின்னர் கருங்கோடுகளாக சமைந்து அதிலிருந்தன .

தௌம்ரர் "அதில் ஒரு சொல் மீது உன் கையை வை" என்றார். நான் விழி தழைக்க "நோக்காது வை" என்றார். நான் சுட்டுவிரலை அதன்மேல் நிறுத்தி ஒருகணம் காத்திருந்தேன். அவ்வேட்டில் ஒரு வார்த்தை எனக்காக காத்திருக்கிறது என்று தோன்றியது. அச்சொல் எது? அது முன்னரே எனக்காக காத்திருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளாக. சூரியதேவர்

பிருஹதாங்க பிரதீபத்தை எழுதிய காலம் முதலே அது என்னுடையது. எனக்கு முன் பல்லாயிரம் கைகள் அதை தடவியிருக்கும். அவர்கள் அனைவரையும் என்னுடன் இணைக்கிறது. அது அச்சரடில் மேலும் மேலும் ஆளுமைகளை கோத்து ஒரு மாலையை அமைத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு நோக்கம் இருக்கக்கூடும். அச்சொல் முதல்முறையாக அவர் உள்ளத்தில் எழுந்தபோது, கற்றுச்சொல்லியால் முதலில் சுவடியில் எழுதப்பட்டபோது நான் அங்கு நின்றிருப்பேன்.

"கையை வை" என்று தௌம்ரர் சொன்னார். பிறிது எண்ணாமல் நான் கையை வைத்தேன். அவர் அச்செய்தியை படித்தார். "எப்போதும் அலகு நிமிர்ந்திருக்கும் பறவை" என்ற வரியைப் படித்து முகம் மலர்ந்து "நன்று, அழகிய வரி" என்றார். "என்ன பொருள்?" என்று கேட்டேன். "அலகு நிமிர்ந்திருக்கும் பறவை என்பது ஓர் அழகிய நிமித்தம்" என்றார் தௌம்ரர். "ஆசிரியரே, அதன் பொருளென்ன?" என்றேன். உண்மையில் அப்போது என் கற்பனையில் அப்பறவையை கண்டுவிட்டிருந்தேன்.

"பறவைகளில் இருவகை உண்டு. அமர்ந்திருக்கையில் குனிந்து நிலம் நோக்கும் பறவை ஒன்று. எக்கிளையில் அமர்ந்தாலும் தலையை வான் நோக்கி நிமிர்த்தியிருக்கும் பறவை பிறிதொன்று. நோக்குக, பறவைகள் விண்ணையும் மண்ணையும் நோக்கும்! சிறகு விண்ணுக்கு கால் மண்ணுக்கு. விழி விண்ணுக்கு அலகு மண்ணுக்கு. ஆனால் பசித்து இரை தேடி அமர்ந்திருக்கையிலும் வான் நோக்கி அமர்ந்திருக்கும் பறவைகள் சில உண்டு. சிட்டுக்குருவி நிலம் நோக்குவது மிகவும் குறைவு."

"ஆம், சிட்டுக்குருவி நிலம் நோக்கி நான் பார்த்ததில்லை" என்றேன். "மைந்தா, ஒவ்வொரு கணமும் மண்ணில்

இரைநோக்கி வாழவேண்டிய ஊழ் அதற்கு இருக்கிறது. அது ஊழை அறியவும் செய்கிறது. ஆயினும் தன் கூரலகை வானை நோக்கியே நிமிர்த்தியிருக்கிறது. கிளையிலிருந்து எழும்போது எப்போதும் மேலே நோக்கியே எழுகிறது. சுழன்று கீழிறங்கினாலும் மேலே நோக்கி சென்றுவிடுகிறது. அலகு மேல் நோக்கிய பறவை... நன்று" என்றார். "சின்னஞ்சிறு பறவை... உலகோர் விழிகளுக்கு தென்படாமலேயே வாழவும்கூடும் அது... ஆற்றலற்றது. எளிதென்பதையே ஆற்றல் எனக்கொண்டது... நன்று."

எழுந்து என்னை தன்னருகே நிறுத்தி "என் தாள் பணிந்து இச்சுவடியை பெற்றுக்கொள். உனக்கு அனைத்து நலன்களும் கூடும்" என்றார். நான் எழுந்து அவர் கால்களைத் தொட்டுச் சூடி வாழ்த்து பெற்றேன். "தெளிக! தெளிந்து அவற்றை கடந்து செல்க! நிறைவடைக!" என்று அவர் வாழ்த்தினார். பின்னர் பிரஹதாங்க பிரதீபத்தை பட்டு நூல் சுற்றி என் கையில் அளித்து "இது உன்னிடம் இருக்கட்டும். இதில் இல்லாத எதுவுமே இல்லை" என்றார். "இங்கு வெளியே விரிந்து கிடக்கும் ஒவ்வொன்றும் இதில் உள்ளது. வான்விரிவு அனைத்தையும் அள்ளி வைத்திருக்கும் நீர்த்துளியின் ஆடிப்பரப்பு போன்றது இது. இது ஒரு கடல். அழியாத பெருவிரிவு. என்றும் மானுடர் இதில் வந்து மூழ்கித்துழாவி உசாவிக்கொண்டேதான் இருப்பார்கள்."

"அவர்களுக்கு உரியதை அவர்களுக்கு அளிக்கும். அவர்களுக்கு வழி காட்டும், ஆறுதல்படுத்தும், செயலூக்கத்தை அளிக்கும். உரிய தருணத்தில் செயலின்மையும் அவர்களுக்கு கூறும். அதன் நாவென்று நீ ஆகுக! கோடானுகோடி இலை முளைத்த மரம்போல நா முளைத்த சுவடி இது. ஒரு நாவு

உன்னுடையதென்று ஆகுக! நிமித்திகன் நா ஆலயத்து மணியின் நாவுக்கு நிகரானது. அது தெய்வச்சொல் என்பார்கள். தன்னை தெய்வத்துக்கு ஒப்புக்கொடுத்தவனே அவ்வாறு ஆகமுடியும். ஒப்புக்கொடு. எச்சமிலாது அளிக்கையில் எஞ்சும் ஒன்று உண்டு. அதுவே நிறைவென்பது. ஆம், அவ்வாறே ஆகுக!" என்று அவர் என்னை வாழ்த்தினார்.

"அவரை வணங்கி நான் பிருஹதாங்க பிரதீபத்தை பெற்றுக்கொண்டேன். என் கையில் எப்போதும் அச்சுவடியை வைத்திருப்பேன்" என்று சுகோத்ரன் கூறினான். "நான் அவரிடம் ஐந்தாண்டுகள் கற்றேன். அதன்பின் அவரிடம் விடைபெற்று மீண்டும் கற்கும்பொருட்டு ஆசிரியர்களை நாடிச் சென்றேன்" என்றான் சுகோத்ரன். "இங்கே நிகழ்ந்தவை எதையும் நான் முழுமையாக அறியவில்லை. என் கல்வியே தவமென சூழ்ந்திருந்தது. அஸ்தினபுரிக்கும் இந்திரப்பிரஸ்தத்திற்கும் அன்னையரைச் சந்திக்கும் பொருட்டு சிலமுறை வந்தேன். தந்தையர் கானேகியிருப்பதை அறிந்தேன். ஆனால் என் உள்ளம் விலக்கம் கொண்டிருந்தது."

விதுரர் "அது நன்று. இக்களத்திலிருந்து அவ்வாறு ஒருவர் விலக்கப்பட்டது மிக நன்று" என்றார். "ஆனால் அவ்வாறு விலக்கப்பட்டதன் பழியை நான் அடைகிறேன். நான் பயிலும் அனைத்து கல்விநிலைகளிலும் கோழையென்றே கருதப்படுகிறேன். சாவுக்கு அஞ்சி நூலுக்குள் ஒளிந்துகொண்டவன் என்று என்னை சூதர்கள் எண்ணுகிறார்கள். இப்போர் முடிந்த செய்திகள் வரும்போது ஒருகணம் அது மெய்யோ என்று எனக்கும் தோன்றியது. அவ்வெண்ணத்திலிருந்து என்னால் தப்ப இயலவில்லை. ஆகவேதான் இங்கு கிளம்பி வந்தேன். இத்துயரின், அழிவின்

நினைவுகளில் உழன்ற பின்னரும் என்னிடம் எஞ்சுவதென்ன என்று பார்க்கலாம் என்று தோன்றியது" என்று சுகோத்ரன் கூறினான்

"ஆம், வந்தது நன்றே" என்றார் விதுரர். அவர் பேசவந்ததை பேசவிரும்புவதுபோலத் தோன்றினார். சுகோத்ரன் அதற்காகக் காத்திருந்தான். அவர் சற்றுநேரம் இருளை நோக்கிக்கொண்டிருந்தார். பின்னர் "உன் நிமித்தநூல் என்ன சொல்கிறது, அஸ்தினபுரியின் எதிர்காலம் பற்றி?" என்றார். "நான் கணிக்கவில்லை. நெறிகளின்படி நான் என் வாழ்க்கையையும் என் உற்றார் வாழ்க்கையையும் கணிக்கக் கூடாது" என்றான்.

விதுரர் "ஆம், அதை அறிவேன். ஆயினும் நீ உன்பொருட்டன்றி பிறர் பொருட்டு அதை செய்யலாம். அஸ்தினபுரியின் எதிர்காலமே இனி பாரதவர்ஷத்தின் எதிர்காலம். அதை கணிக்காமல் எவரும் பிற எதையும் கணித்துவிட முடியாது" என்றார். "மெய்தான். அஸ்தினபுரியின் எதிர்காலத்தை நான் கணித்தேன். அது குடிபெருகி வாழும். நீடித்த அமைதியை காணும். செல்வமும் சிறப்பும் அமையும்" என்றான். விதுரர் "வேறெந்த நாடுகள் சிறப்புறும்?" என்றார். "மாளவமும் கலிங்கமும் வங்கமும் வாழும். மகதம் பெருஞ்சிறப்புடன் எழும் ஒரு காலம் வரும்" என்றான் சுகோத்ரன்.

விதுரர் பெருமூச்சுவிட்டு "நெடுங்காலத்திற்கு முன் என் அன்னை சத்யவதியின் அவையில் ஒரு நிமித்திகன் அதை சொன்னான். அதன்பின் அதை எண்ணி எண்ணி வியந்திருக்கிறேன். அன்று மகதம் சிறுநாடு. அதன்பின் அதை விரித்து எடுத்தவன் அரக்க குடிப்பிறப்பு கொண்ட ஜராசந்தன்... எவ்வண்ணம் அது பாரதவர்ஷத்தை முழுதாளும்? சலித்து

அதுவே ஊழ் போலும் என விட்டுவிடுவேன். இன்றும் அதே உளத்தயக்கத்தையே அடைகிறேன்" என்றார்.

மீண்டும் ஒரு சொல்லின்மை வந்தமைந்தது. விதுரர் சற்று கடந்துசென்று மீண்டும் சொல்லெடுத்தார். "நீ உன் மூதன்னை குந்தியை சந்திக்கவேண்டும். அவர் உன்னிடம் சிலவற்றை கோர விழையலாம்" என்றார். "நான் சிலமுறை அஸ்தினபுரிக்கும் இந்திரப்பிரஸ்தத்திற்கும் வந்துள்ளேன். அவரைச் சந்திக்கும் விழைவு இருந்தது. அவர் விரும்பவில்லை" என்றான் சுகோத்ரன். "அவர் என்னை அரண்மனைச்சூழலில் இருந்தே விலக்கிவிட்டிருந்தார். என் அன்னையிடம் அவன் முழு நிமித்திகனாக வரட்டும், முதிர்வுக்கு முன் அவன் உங்களையெல்லாம் சந்திப்பதே கூட நன்றல்ல என்றார். அதன் பின் நான் கல்விநிலையிலிருந்து வெளிவரவே இல்லை" என்றான் சுகோத்ரன்.

"அவர் இன்று பிறிதொருவராக ஆகிவிட்டிருக்கிறார்... இன்று அவர்..." என்று விதுரர் தொடங்க "உய்த்துணர முடிகிறது. ஆனால் இன்றைய நிலையில் எந்நிமித்திகரும் அவர்களை காணலாகாது. அவர்களால் மூதன்னைக்கு எப்பயனும் இல்லை" என்றான் சுகோத்ரன். விதுரர் "உன்னை இளங்குழவி என கானகம் அனுப்பியது உன் தந்தை எடுத்த முடிவு" என்றார். "இன்று நிகழ்ந்துவிட்ட அனைத்தையும் அவர் முன்னுணர்ந்திருக்கலாம். மூழ்கும் தோணியில் இருந்து கைமகவை கரை நோக்கி எறிவதுபோல உன்னை அவர் தௌம்ரருக்கு அளித்திருக்கலாம்."

"அந்நாளில் அம்முடிவைப்பற்றி நான் அவரிடம் கேட்டேன். நிமித்தஞானம் மட்டும் மொழிக்கு முன்னரே கற்கப்படவேண்டும். சொற்களுக்கு உலகியல் அளிக்கும்

பொருளே இயல்பாகக் கிடைப்பது. அதற்கு முன்னரே காலமும் வானமும் அளிக்கும் மெய்ப்பொருளை அறிந்தவனே நிமித்தவியலின் மெய்மையை தொடமுடியும். மொழியறிந்த பின் நிமித்தநூல் கற்பவன் நிமித்தஞானத்தை தானறிந்த உலகியல் மொழிக்குபெயர்த்து புரிந்துகொள்பவன். அவன் புரிந்துகொள்ளலாம், உணர்ந்துகொள்ளல் இயலாது. இது கல்லையும் மண்ணையும் அளக்கும் கணக்கு அல்ல, வான்முகிலையும் காற்றையும் அளக்கும் கணக்கு என்றார்."

"நிமித்தநூல் ஆசிரியரிடமிருந்தே என் மைந்தன் மொழியையும் கற்கவேண்டும். அவன் வந்து நின்றிருக்கையில் அவனிடமிருந்து நான் மேலும் கற்கவேண்டும் என்றார். என்னால் அதை மறுக்கமுடியவில்லை" என்று விதுரர் தொடர்ந்தார். "உன் தாலிக்காப்பு விழவுக்கு மறுநாளே தௌம்ரர் தன் ஏழு மாணவர்களுடன் இந்திரப்பிரஸ்தத்திற்கு வந்தார். மூதரசி குந்தி உன்னை ஒரு பொற்தாலத்தில் படுக்கவைத்து பொன்நாணயங்களால் மூடி இரு கைகளால் எடுத்து அவருக்கு அளிக்க அவர் வணங்கி பெற்றுக்கொண்டார். அரசியர் தேவிகையும் கரேணுமதியும் பலந்தரையும் விழிநீர் உகுத்ததை கண்டேன். உன் அன்னை வெற்றுவிழிகளுடன் நோக்கி நின்றார். நீ விழிமுன் இருந்து அகன்றதும் பெருமூச்சுடன் திரும்பினார். கால்தளர்ந்து மயங்கிவிழுந்தார்."

"நான் அன்று உளம்கொந்தளித்தேன். ஆனால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கொந்தளிப்பு நிகழ்ந்துகொண்டிருந்தது. பின்னர் அனைத்தும் நலம் திகழ்வதற்கே என என்னை தேற்றிக்கொண்டேன். ஒருவன் அகன்றிருப்பது இன்றியமையாதது என உன் தந்தை நெஞ்சில் எழுந்த தெய்வம் ஆணையிடுகிறது போலும் என

எண்ணிக்கொண்டேன். அது நன்று என இன்று உறுதிகொண்டிருக்கிறேன். நீ இவ்வண்ணம் வந்து அமர்ந்திருக்கையில் தெய்வங்களையும் மூதாதையரையும் மீள மீள அழைத்து நன்றி சொல்கிறேன். உன் மூதன்னையும் உன் வருகையை அறிந்தால் விழிநீர் சிந்துவார். ஒருவேளை அவர் இன்று கொண்டிருக்கும் அப்பெருந்துயர் சற்றே அகலவும்கூடும்."

சுகோத்ரன் "இல்லை, அது மிகவே வாய்ப்பு" என்றான். விதுரர் "என்னை விட நீ அறிந்தவன்" என்றார். சுகோத்ரன் "என் அன்னையையும் சந்திக்கவேண்டும். புலரி எழட்டும்" என்றான். விதுரர் "ஆம், அவர் மகிழக்கூடும்" என்றார். "இல்லை, மேலும் துயருறுவார்" என்றான் சுகோத்ரன். "ஏன்?" என்று விதுரர் கேட்டார். சுகோத்ரன் புன்னகை செய்தான். "ஏன்?" என்று மீண்டும் விதுரர் கேட்டார். அவன் ஒன்றும் சொல்லவில்லை. அவர் அவனை கூர்ந்து நோக்கிவிட்டு சொல்லொழிந்தார். "நீ வந்தது ஒரு அருநிமித்தம். நம் குடிக்கே ஒரு பெருவாய்ப்பு. தெய்வங்களின் ஆணையே இதுவென இருக்கலாம்" என்றார். அவன் அதைச்செவிகொள்ளாமல் இருளை நோக்கி விழிநிலைக்கவிட்டு அமர்ந்திருந்தான்.

அவர் பேசவந்தது அப்போதும் அவர்களுக்கு நடுவே நின்று தத்தளித்தது. நேரடியாகவே அதை நோக்கி செல்லவேண்டும் என அவர் முடிவெடுப்பதை சிறு உடலசைவே காட்டியது. ஆனால் சொல்லுக்காக வாய் அசைவுகொண்டதுமே அவர் உள்ளம் பின்னடைய உதடுகள் திறந்தபடி நின்றன. ஒரு கணம் சிலை என ஆகி உறைந்து பின் எண்ணம் வேறெங்கோ முட்டிக்கொள்ள பெருமூச்சுவிட்டு திரும்பிக்கொண்டார். அவன்

அவரை நோக்கி "அஞ்சவேண்டியதில்லை. அஸ்தினபுரிக்கு குருகுலத்தின் குருதித்தொடர்ச்சி உண்டு" என்றான்.

"ஆம், அதை வேறு நிமித்திகர்களும் கூறியிருக்கிறார்கள்" என்றார் விதுரர். "அது எவராக இருக்கக்கூடும் என நான் உன்னிடம் கேட்கப்போவதில்லை" என்றார். மீண்டும் அந்தத் தவிப்பு. பிறகு நீள்மூச்செறிந்து "உன்னால் விராடநாட்டரசி உத்தரையின் பிறவிநூலை கணிக்கமுடியுமா?" என்றார். அவன் புன்னகையுடன் "ஆம்" என்றான். விதுரர் மெல்லிய பரபரப்புடன் "அதை நானே வரைந்து கொண்டுவந்துள்ளேன்..." என்று இடையிலிருந்து ஓர் ஓலையை நீட்டினார். அவன் புன்னகையுடன் அதை வாங்கினான். அதை கூர்ந்து நோக்கியபடி சில கணங்கள் அமர்ந்திருந்தான். பின்னர் கண்களை மூடி சற்றுநேரம் ஊழ்கத்திலமைந்தான்.

பின்னர் விழிகளைத் திறந்து அவரை நோக்கி "நன்று சொல்வதென்றால், விராடஅரசியின் மைந்தன் நாடாள்வான்" என்றான். "அவனுக்கு நாகத்தீங்கு உண்டு. ஆனால் அவன் கொடிவழியினர் இங்கே பல தலைமுறைக்காலம் நீடித்து வாழ்வார்கள்." விதுரர் வெறும்விழிகளால் நோக்க "தீது என்றால் அவருக்கு நீடித்த வாழ்வு இல்லை. இந்த ஆண்டே ஒரு சாவிடரை காட்டுகிறது பிறவிநூல். வலுவானது" என்றான். "ஆனால் அது அவருக்கு விடுதலையே. எட்டு களங்களிலிருந்தும் கடுந்துயர் வந்து தாக்கும் நிலையில் இருக்கிறார். தன்னினைவு கொள்வதே பெருவலியை அளிக்கும் அளவுக்கு சூழ்துயர்."

விதுரர் பெருமூச்சுவிட்டார். சுகோத்ரன் "மேலும் சொல்லலாம், ஆனால் நீங்கள் அறியவேண்டுவதென்ன?" என்றான். "அம்மைந்தனின் பிறவித்தருணத்தை கணிக்க முடியுமா?

அதைக்கொண்டு அவன் வாழ்வை கணிக்கலாகுமா? எளிய நிமித்திகர்களால் இயலாது" என்றார் விதுரர். "அனைத்து நிமித்திகர்களாலும் இயலும். நீங்கள் கேட்கவிருப்பதை குடிக்கு வெளியே ஒரு நிமித்திகரிடம் கேட்க விழையவில்லை, அவ்வளவுதான்" என்றான் சுகோத்ரன். "ஆம்" என்று விதுரர் சொன்னார். "தாதையே, அவன் குருகுலத்துக் குருதியினன். அதற்கப்பால் அவன் பிறப்பு குறித்து ஆராய நமக்கு உரிமை இல்லை" என்றான் சுகோத்ரன்.

"ஆனால்..." என்று விதுரர் சொல்லெடுக்க சுகோத்ரன் ஊடே புகுந்து "எவருடைய பிறப்பையும் ஆராயும் உரிமை பிறருக்கில்லை. அன்னையரின் கருப்பைக்குள் விழிசெலுத்துவது தவமுனிவரின் ஊழ்கத்தைக் கலைக்கும் பழியைச் சேர்ப்பது" என்றான். விதுரர் தலைகுனிந்து அமர்ந்திருந்தார். பின்னர் எழுந்துகொண்டு "நெறி எதுவாயினும் ஆகுக! இங்கே ஒரு சிறுபழி சேராமல் கடக்க இயலுமா என்பதே என் உசாவல். நன்று, நீயே அறிந்திருப்பாய். உன்னால் அதை தவிர்க்க முடியும். நீ குருகுலத்துக் குருதியினன். எஞ்சும் ஒரே மைந்தன். நீ உரிய முடிவை எடுத்தால் போதும்" என்றார்.

சுகோத்ரன் மறுமொழி சொல்வதற்குள் விதுரர் ஒன்றும் சொல்லாமல் எழுந்து இருளுக்குள் நடந்து அகன்றார். சுகோத்ரன் அவரை நோக்கியபடி இருந்தான். பின்னர் மார்பில் கைகளை கட்டிக்கொண்டு இருளை நோக்கி அமர்ந்திருந்தான்.

நீர்ச்சுடர் - 55

பகுதி எட்டு : விண்நோக்கு – 5

முற்புலரியில் சுகோத்ரன் கண்விழித்து எழுந்தான். அவன் திண்ணையில் அமர்ந்தபடியே துயில்கொண்டுவிட்டிருந்தான். எழுந்து நின்றபோதுதான் உடலின் வலி தெரிந்தது. சூழ்ந்திருந்த இருளில் நூற்றுக்கணக்கான செந்நிற ஒளித்துளிகள் அலைந்தன. பந்தங்கள், பளிங்குக்குழாய் போட்டு மூடப்பட்ட பீதர்விளக்குகள், சிற்றகல்கள். தொலைவில் கங்கையின் கரையோரமாக ஒளியாலான ஒரு நீண்ட வேலி தென்பட்டது. அவன் உள்ளே சென்று உஜ்வலனை தட்டி எழுப்பினான். அவன் தொட்டதுமே உஜ்வலன் எழுந்துகொண்டு வாயைத் துடைத்துவிட்டு "விடிந்துவிட்டதா?" என்றான். அப்போது இளஞ்சிறுவன் என்றே தோன்றினான்.

"ஆம்" என்று சுகோத்ரன் சொன்னான். "நீங்கள் துயில்கொள்ளவில்லையா?" என்று அவன் கேட்டான். "சற்று கண்ணயர்ந்தேன்" என்றான் சுகோத்ரன். "துயிலவில்லை என்பதுபோல் உள்ளன விழிகள்..." என்றான் உஜ்வலன். கைகளை விரித்துச் சோம்பல்முறித்துக்கொண்டு "நீங்கள் துயிலப்போவதில்லை என அறிந்திருந்தேன். ஏனென்றால் நீங்கள் முடிவெடுக்க முடியாமல் இருக்கிறீர்கள்" என்றபடி வெளியே சென்றான். சுகோத்ரன் அவனை நோக்கியபடி கைகளை கட்டிக்கொண்டு நின்றான். காலைக்காற்று குளிருடன் இருந்தது. கங்கையிலிருந்து சேற்றுமணம் கொண்ட காற்று வீசியது. ஆடிமாதம் மழைக்குப்பின் கங்கைநீரின் மணம் அது. உஜ்வலன் திரும்பி வந்து "முடிவெடுக்க தயங்குபவர்கள் தங்களைப்பற்றி தாங்களே புரிந்துகொண்டவர்கள் அல்ல. அல்லது பிழையாக வகுத்துக்கொண்டவர்கள்" என்றான்.

மறுமொழியாக “செல்வோம்” என்று மட்டும் சுகோத்ரன் சொன்னான்.

அவர்கள் மரவுரியுடன் கங்கைக்கு நீராடச் சென்றனர். செல்லும் வழியெங்கும் மூங்கில்தூண்களில் மீன்நெய்ப் பந்தங்கள் நடப்பட்டு ஒளிவிரிக்கப்பட்டிருந்தது. தரையில் பலகைகளைப் பரப்பி வழி அமைத்திருந்தனர். அவை நடந்தவர்களின் உடையிலிருந்து சொட்டிய ஈரத்தால் வழுக்கின. நீராடுவதற்கு கங்கையில் தண்டுகளை அறைந்து பலகைகளை பரப்பி படிக்கட்டுகள் உருவாக்கப்பட்டிருந்தன. நீராடி முடித்த ஏவலரும் சூதரும் குளிரில் தோள்களைக் குறுக்கியபடியும், பற்களை இறுக்கி மூச்சொலியில் பேசியபடியும் எதிரே வந்தனர். அந்தணர்கள் முந்தைய நாள் இரவே வேள்விப்பந்தலுக்குச் சென்றுவிட்டிருந்தனர் போலும் என சுகோத்ரன் எண்ணிக்கொண்டான். தொலைவில் வேள்விநிலையிலிருந்து வேதச்சொல் ஒலித்துக்கொண்டே இருந்தது. அது காலையின் காட்டொலியுடன் இயல்பாக இணைந்துகொண்டது. அவ்வொலியை பெரும்பாலும் அவன் காலையொலியுடன் இணைந்தே கேட்டிருந்தான்.

கங்கைநீர் குளிர்ந்திருந்தது. அதன்மேல் கரையிலிருந்த செவ்வொளி அலைகொண்டது. படிக்கட்டை அடைந்தபோதே அந்தக் குளிர் காற்றில் ஈரமெனக் கசிந்து பரவி வந்து தொட்டு சிலிர்ப்பை உருவாக்கியது. மரப்படிக்கட்டில் உடல் செறிந்து ஏராளமானவர்கள் நீராடிக்கொண்டிருந்தனர். உஜ்வலன் அக்குளிரில் பேச்சிழந்தவன் போலிருந்தான். அவன் பேசாமலிருந்தபோது சுகோத்ரன் தன் உள்ளம் கூச்சலிட்டுக் கொண்டிருப்பதைப்போல உணர்ந்தான். உஜ்வலன் மரவுரியை உடுத்திக்கொண்டு படிகளின்மேல் கைகளை மார்பில் கட்டியபடி

தோள்களைக் குறுக்கி நின்றான். அவ்வப்போது குளிர்நீர் உடலில் பட்டதுபோல மூச்சொலியுடன் உலுக்கிக்கொண்டான். சுகோத்ரன் சீரான அசைவுகளால் ஆடைகளைக் களைந்துவிட்டு படியில் நின்று இருண்ட பெருக்காகச் சென்ற கங்கையை நோக்கினான்.

விடிவெள்ளி எழவில்லை. வானமெங்கும் விண்மீன்கள் நிறைந்துகிடந்தன. பலநாட்கள் வானம் மழைமூடிக் கிடந்தமையால் விண்மீன்களைப் பார்த்தே நெடுநாட்களாகிவிட்டன என அவன் எண்ணிக்கொண்டான். கைகளைக் கூப்பி கண்மூடி கங்கையைப் போற்றும் பாடலை நாவசையாமல் சொன்னபடி அவன் நீரில் இறங்கினான். நீரின் குளிரில் உடல் மெய்ப்புகொள்ள கூப்பிய கைகள் நடுங்க தோள்கள் குறுக மணலில் கால் உழல இடைவரை சென்று நின்றான். நீரில் ஒழுகிச்சென்ற சிறிய சருகுகள் திடுக்கிடச்செய்தன. "அன்னையே!" என முனகியபடி நீரில் மூழ்கி எழுந்து குழலை அள்ளி பின்னாலிட்டான்.

உஜ்வலன் கரையிலேயே நீரை நோக்கிக்கொண்டு நின்றிருந்தான். அவனை ஒருமுறை நோக்கியபின் சுகோத்ரன் மீண்டும் மூழ்கினான். பின்னர் கைவீசி நிந்தி நீருக்குள் சென்றான். அலைகளின் பக்கவாட்டு அசைவு மாறியது. மையப்பெருக்கு இளவெம்மையுடன் இருந்தது. அதில் கங்கையின் ஆழத்திலிருக்கும் மெல்லிய சாம்பல் கலந்த மணம் இருந்தது. அவன் மூழ்கி நீந்தி எழுந்து தலையை உதறிக்கொண்டு நோக்கியபோதும் உஜ்வலன் அங்கேயே நின்றிருந்தான். அவன் உஜ்வலனை அழைக்கலாமென எண்ணிய கணம் அவன் மீன்போல கைகளைக் குவித்து நீட்டி நீரில் பாய்ந்து அம்பென உள்ளே சென்றான்.

அவன் தன்னருகே எழுந்தபோது சுகோத்ரன் அவனுடைய சிரிக்கும் பற்களின் ஒளியைக் கண்டான். "இன்னும் அரைநாழிகையில் நாமகள்பொழுது... இதை இரவென்றுதான் சொல்லவேண்டும்" என்றான் உஜ்வலன். சுகோத்ரன் "ஆம்" என்றான். "வேள்வியை நேற்று அந்தியிலேயே தொடங்கிவிட்டனர். நள்ளிரவில் நிறைவுசெய்து ஒரு நாழிகைக்குள் அடுத்த நாள் வேள்வியை தொடங்கியிருக்கிறார்கள்..." என்று அவன் சொன்னான். "தௌம்யர் அனைத்தையும் முறைப்படி செய்பவர்" என்றான் சுகோத்ரன். உஜ்வலன் மூழ்கி அப்பால் எழுந்தான். கைகளால் நீரை உந்தி எழுந்து மீண்டும் மூழ்கினான். அவன் தன் சிற்றிளமையியே நீடிப்பதுபோலத் தோன்றியது.

நீந்தி அருகே வந்து நீரை உமிழ்ந்தபின் "இளவரசே, நீங்கள் ஏதேனும் முடிவை எடுத்தீர்களா?" என்று உஜ்வலன் கேட்டான். "இல்லை" என்றான் சுகோத்ரன். "முடிவெடுக்காமல் அங்கே செல்வது நன்றல்ல... முடிவெடுக்க குழம்புகிறீர்கள் என்பதே நம்மை பிழையாக அவர்களுக்குக் காட்டும்" என்றான் உஜ்வலன். "என்னால் முடிவெடுக்க இயலவில்லை" என்றான் சுகோத்ரன். "ஏன்?" என்று உஜ்வலன் கேட்டான். "எனக்குத் தெரியவில்லை. என்னால் இன்னமும் முடிவெடுக்க இயலவில்லை" என்றான் சுகோத்ரன்.

"இதில் நீங்கள் ஒற்றை முடிவையே எடுக்க முடியும். அஸ்தினபுரியின் பட்டத்து இளவரசர். அல்லது முற்றாகக் குடிதுறத்தல்... குடிதுறப்பது என்பது ஒருவகை சாவு" என்றான் உஜ்வலன். சுகோத்ரன் அதற்கு மறுமொழி சொல்லவில்லை. "துறவு என்பது துறப்பனவற்றைவிட மேலான சிலவற்றைப் பற்றிக்கொண்டால் மட்டுமே பொருளுள்ளதாகிறது. துறந்தவை

அனைத்தையும் மிகச் சிறியவை என ஆக்கும் ஒன்றைச் சென்றடையவில்லை என்றால் துறந்தவை பேருருக்கொள்ளும். சூழ்ந்துகொண்டு துயர் அளிக்கும். பல்லாயிரம் கைகள் கொண்டு பெருகி நம்மை அள்ளி திரும்ப இழுத்துக்கொள்ளும்" என்றான் உஜ்வலன்.

"நாம் துறக்கும்போது நலமும் அழகும் கொண்டவையாக இருப்பவை துறந்து தோல்வி கண்டு மீண்டு வருகையில் திரிந்து இருட்தெய்வங்களால் ஆளப்பட்டுக் கொண்டிருப்பதையே காண்போம். துறந்து மீண்டவர் கவ்விக்கொண்டதில் இருந்து மீளவே முடியாது. ஆகவேதான் இயலாத் துறவு பழி சேர்க்கும் என்கிறார்கள் மூத்தோர்" என்று உஜ்வலன் சொன்னான். "ஏன் இயலாத் துறவை மேற்கொள்கிறோம்? நம்மை நாம் மிகையாக மதிப்பிட்டுக்கொள்கிறோம் என்பதனால். நம் ஆற்றலை, நம் தேடலை, நம் ஊழை. நாம் எந்நிலையில் நின்றிருக்கிறோம் என்று அறிவதே அறிவு அளிக்கும் முதற்பயன்."

சுகோத்ரன் பெருமூச்சுவிட்டு நீரில் மூழ்கினான். நீருக்குள் இலைகள் அவனை வந்து தொட்டுத் தொட்டுச் சென்றன. குமிழிகள் வெடிக்கும் ஒலி காதில் விழுந்தது. எழுந்து மூச்சை அள்ளி உண்டபோது அருகே உஜ்வலன் அவனை நோக்கி நீந்தி வந்தான். "உங்களைப்பற்றி நீங்கள் அறிய முடியவில்லை என்றால் உங்களுக்கு அணுக்கமானவரிடம் கேளுங்கள் நீங்கள் எவர் என. அவர்கள் ஆடி என உங்களைக் காட்டுவார்கள். ஆம், ஆடி அழுக்கு கொண்டிருக்கும், வளைந்திருக்கலும் ஆகும். ஆயினும் அது ஆடி. அது கொள்வன அனைத்தையும் கொடுத்தாகவேண்டும்."

“என்னிடம் கேளுங்கள், நான் சொல்கிறேன். நீங்கள் எவரென்று சொல்கிறேன்” என்றான் உஜ்வலன். “சொல்லுங்கள், நான் யார்?” என்று சுகோத்ரன் புன்னகையுடன் கேட்டான். “நீங்கள் ஷத்ரியர். அக்குடிக்குரிய அனைத்து குருதியியல்புகளும் கொண்டவர். உங்கள் தந்தை பெரும்போர் ஒன்றை நுண்ணிதின் கண்டார். குலமே அழியக்கூடும் என்று உணர்ந்தார். ஆகவே உங்களை அந்தச் சுழியிலிருந்து அகற்றினார். உங்கள் தற்தெரிவால் அல்ல தந்தையின் ஆணையால் நிமித்தநூல் கற்க வந்தீர்கள். வந்தபின் அதை ஏற்றுக்கொண்டீர்கள்.”

“ஆம், நான் ஏற்றுக்கொண்டேன். அது முழுக்கமுழுக்க என் தெரிவு. ஆசிரியர் என்னிடம் இருந்தே அம்முடிவு எழவேண்டும் என்று சொன்னார்” என்றான் சுகோத்ரன். “நானும் அதைக் கேட்டிருக்கிறேன்” என்றான் உஜ்வலன். “சொல்லுங்கள், அம்முடிவை எடுக்கையில் நீங்கள் அரண்மனை வாழ்க்கையின் இன்பங்கள் என்ன என்று அறிந்திருந்தீர்களா? ஒரு போர்வெற்றியின் கொண்டாட்டத்தையாவது அடைந்திருந்தீர்களா? குடிப்பெருக்கின் முன் முடிசூடி தலைமகன் என நின்றதுண்டா? சூதரும் புலவரும் புகழ்பாட காலமே நான் என தருக்கியதுண்டா?”

சுகோத்ரன் “இல்லை” என்றான். “எனில் எதை தெரிவுசெய்தீர்கள்? நீங்கள் அறிந்தது ஒன்றே ஒன்று. அதைத் தெரிவுசெய்வதற்குப் பெயர் முடிவெடுத்தலா என்ன?” என்றான் உஜ்வலன். சுகோத்ரன் நீரலைகளை நோக்கிக்கொண்டிருந்தான். “நீங்கள் தெரிவுசெய்யவில்லை, செலுத்தப்பட்டீர்கள்” என்று உஜ்வலன் தொடர்ந்தான். “ஐயமே தேவையில்லை. உங்களுக்குள் உறைபவன் ஷத்ரியன். அவன் நாடுவது முடியும் மண்ணும் வெற்றியும் புகழுமே. அதை அணுக்கனாகிய நான்

அறிவதுபோல் எவரும் அறியமாட்டார்கள். பிறிதொன்றை எண்ணித் தயங்கவேண்டியதில்லை. முடிவெடுங்கள்...”

சுகோத்ரன் பெருமூச்சுடன் “நன்று, உங்கள் சொற்களும் என் முடிவுக்கு உதவட்டும். நான் இத்தருணத்தை ஊழ் எங்ஙனம் வகுக்கப்போகிறது என்று நோக்கி நின்றிருக்கிறேன். இது இவ்வாழ்க்கையை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு எனக்கு உதவக்கூடியது” என்றான். மறுமொழி சொல்லாமல் உஜ்வலன் நீரில் மூழ்கி அப்பால் சென்று எழுந்து “மனிதர்கள் தங்களிடம் தாங்களே சொல்லிக்கொள்ளும் பொய்கள் அளவுக்கு வேறெங்கும் சொல்வதில்லை. தெய்வங்களிடம்கூட” என்றான். சிரித்தபடி மீண்டும் மூழ்கினான்.

அவர்கள் நீராடி குடில்மீளும்போது உஜ்வலன் அமைதியாக இருந்தான். உடைமாற்றி உணவுண்டு கிளம்புவதற்குச் சித்தமாகிக்கொண்டிருக்கையில் உஜ்வலன் மீண்டும் பேசத்தொடங்கியிருந்தான். “அவர்களுக்கு ஏன் உங்கள் நினைவே எழவில்லை? எப்படி அவர்கள் உங்களை மறக்கலாம்?” என்றான். “ஏனென்றால் நீங்கள் மலைமகள் மைந்தன். பால்ஹிகர்களை அவர்கள் இன்னமும் அஞ்சுகிறார்கள். நிகர்நிலத்து மைந்தன் ஒருவனை அவர்கள் தங்கள் அரசனாக நாடுகிறார்கள். அவன் நிஷாதக்குருதி கொண்டவன் என்றாலும் தாழ்வில்லை என எண்ணுகிறார்கள்.”

“அவர்கள் இன்று எண்ணுவதென்ன என்று மெய்யாகவே உங்களுக்குப் புரியவில்லையா? இன்று எஞ்சும் குருகுலத்துக் குருதி அபிமன்யுவின் மைந்தனுடையது என்று காட்டவும் அதை அரியணை நிறுத்தவும் முயல்கிறார்கள். ஏனென்றால்

அவர்களுக்கு அபிமன்யுவின் பெயர் தேவை. விராடனின் மகள் வயிற்றிலெழுந்தவன் என்பதனால் அந்த மைந்தனுக்கு நிஷாதர்களின் ஆதரவு இருக்கும். அவன் யாதவ அன்னையின் பெயர்மைந்தன் என்பதனால் அவன் யாதவக்குருதியினன் என்றும் நிலைநாட்டமுடியும்...” என்று உஜ்வலன் தொடர்ந்தான். “உண்மையில் இந்தப் போரில் வெற்றியுடன் மீண்டிருப்பவர்கள் யாதவர்களே. அடுத்த மூன்று தலைமுறைக்காலம் யாதவர்களின் குருதியுறவு அஸ்தினபுரியின் ஆற்றலாக நிலைகொள்ளும்.”

“எண்ணி நோக்குக. அவர்களின் பெரும்பகுதியினர் இன்னமும் எஞ்சுகிறார்கள். அவர்களின் நகரம் எஞ்சுகிறது. அவர்களின் இரு அரசர்களும் அவ்வாறே ஆற்றலுடன் நீடிக்கிறார்கள். ஆகவே யாதவர்களே இனி பாரதவர்ஷத்தின் பேராற்றல் மையம். அவர்களின் ஆதரவு தேவை என்றால் சுபத்ரையின் மைந்தனின் குருதி இங்கே ஆளவேண்டும்... அத்துடன் நிஷாதர்களின் ஆதரவும் இருக்குமென்றால் ஐயமே தேவையில்லை, அவன் பாரதவர்ஷத்தை ஆள்வான். இது இயல்பான மறதி அல்ல. இது அரசியல் சூழ்ச்சி. எனக்கு அதில் ஐயமே இல்லை.”

அச்சொற்கள் சுகோத்ரனின் செவிகளின் வழியாக ஒழுகிச்சென்றபடியே இருந்தன. வெளியே வந்தபோது அவர்களுக்கான ஒற்றைப்புரவி வண்டி ஒருங்கி நின்றிருந்தது. அதில் ஏறிக்கொண்டு யுதிஷ்டிரனின் குடில் நோக்கிச் சென்றார்கள். “அங்கே அரசர் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் நாம் இயற்றவேண்டிய கடமை என்ன என்று அறிந்துகொள்ளலாம்” என்றான் சுகோத்ரன். செல்லும் வழியெங்கும் குடில்நிரைகளில் செந்நிறச் சுடர்களுடன்

அகல்விளக்குகளும் பீதர்நாட்டு பளிங்குக்குழல் விளக்குகளும் எரிந்துகொண்டிருந்தன. குடில்களுக்குள் பெண்களின் பேச்சொலிகளும் கலங்கள் முட்டிக்கொள்ளும் ஓசையும் கேட்டன.

"அங்கே பெண்டிர் விழித்திருப்பார்கள்" என்று உஜ்வலன் சொன்னான். "அவர்கள் தங்கள் கணவர்களுக்கு சொல்லளித்திருப்பார்கள். தங்கள் மைந்தர்களை விண்ணுக்கு அனுப்பும்படி ஆணையிட்டிருப்பார்கள்." சுகோத்ரன் வெறுமனே திரும்பி நோக்கினான். "அரசியர் நோன்பிருந்து தங்கள் மைந்தருக்காக வேண்டிக்கொண்டிருப்பார்கள்." பேச்சினூடாக எண்ணிக்கொண்டு "உங்கள் அன்னையை நீங்கள் சந்திக்கவில்லை" என்றான் உஜ்வலன். "ஆம்" என்றான் சுகோத்ரன். "நீங்கள் சென்று சந்திக்கலாம். அவர்கள் உள்ளம் நிலைகுலைந்திருப்பதாகச் சொன்னார்கள்" என்றான் உஜ்வலன்.

சுகோத்ரன் எண்ணத்தை ஓட்டியபடி சற்று நேரம் நின்றான். "ஆம், பார்த்துவிடுவோம்" என்றான். உஜ்வலன் "அரசரின் ஆணையை நாம் கேட்பதற்குள் அன்னையின் சொல்லை கேட்பது நன்று" என்றான். அவர்கள் இருளுக்குள் நடந்து சென்றனர். எதிர்ப்பட்ட சேடி ஒருத்தியிடம் "மத்ரநாட்டு அரசி விஜயையின் குடில் எங்குள்ளது?" என்று சுகோத்ரன் கேட்டான். "அதோ அந்தக் குடில். குடில்வாயிலில் இருப்பவள் பூர்ணை. அவள் சிபிநாட்டு செவிலி... அவளுடைய அரசியும் அதே குடிலில்தான் இருக்கிறார்கள்" என்றாள் சேடி.

குடிலை நெருங்கியபோது உஜ்வலன் "அன்னை சொல்வதை ஆணை என்றே கொள்க" என்றான். "அன்னை என்ன சொன்னாலும் அது ஆணையா?" என்றான் சுகோத்ரன் புன்னகையுடன். "ஆம், அன்னை என்றால் அவர் பிறிதொன்று

சொல்ல வாய்ப்பில்லை" என்றான் உஜ்வலன். "நான் அன்னையைக் கண்டு நெடுநாட்களாகின்றன" என்றான் சுகோத்ரன். "அன்னை உங்களை எண்ணிக்கொண்டிருப்பார். அவர் உங்களை எதிர்பார்த்திருப்பார். சொல்லவேண்டியவை அவருக்குள் கனிந்து கூர்கொண்டிருக்கும்" என்றான் உஜ்வலன்.

குடில் முன் வண்டி நின்றது. அவர்கள் இறங்கியதும் பூர்ணை அவனை அடையாளம் கண்டுகொண்டாள். கூப்பிய கைகளுடன் சொல்லின்றி எழுந்து நின்றாள். "நான் அன்னையை..." என்று அவன் சொன்னான். "வருக, இளவரசே" என அவள் உள்ளே அழைத்துச்சென்றாள். அவன் தலைகுனிந்து உள்ளே செல்ல உஜ்வலன் வெளியே நின்றான். சுகோத்ரன் இருமுறை திரும்பி உஜ்வலனை நோக்கிவிட்டு உள்ளே நுழைந்தான். பூர்ணை உஜ்வலனிடம் "நீங்களும் உடன் செல்லலாம்" என்றாள். "நான் செல்ல ஒப்புதல் உண்டா?" என்றான் உஜ்வலன். "செல்க, அவருக்கு துணை தேவை" என்று பூர்ணை சொன்னாள். உஜ்வலன் உடன் நுழைந்தான்.

குடிலுக்குள் இரு மஞ்சங்களில் மேலாடையால் முகத்தை மூடிக்கொண்ட இருவர் அமர்ந்திருந்தார்கள். அசைவில்லாதவர்களாக. அங்கே இரு பொருட்கள் இருப்பதாகவே சுகோத்ரனுக்குத் தோன்றியது. பூர்ணை முன்னால் சென்று ஒருத்தியின் மேலாடையை விலக்கினாள். சுகோத்ரன் தன் அன்னையை அடையாளம் கண்டான். நெடுநாட்களுக்கு முன் அவன் கண்ட முகம் அல்ல. அந்த முகம் முதிர்ந்து இறந்து மட்கிவிட்டது போலிருந்தது. அவன் உள்ளம் எந்த உணர்ச்சியும் இல்லாமலிருந்தது.

அவள் விழிகள் அவனை நிலைகுத்தி நோக்கின. எந்த உணர்ச்சியும் ஏற்படவில்லை. "அரசி, தங்கள் மைந்தன்" என்று

பூர்ணை சொன்னாள். "தங்கள் மைந்தன் இதோ வந்திருக்கிறார். கண்முன் நிற்கிறார். அரசி... இதோ உங்கள் மைந்தன் சுகோத்ரன்" என்றாள். அவள் விழிகளில் மணிகள் நிலையற்று அலைந்தன. வறண்டு சுருங்கி உதடுகள் உலர்ந்து உள்ளிழுத்துக்கொண்டிருந்த முகம் மரத்தாலான பாவை போலிருந்தது. தீய சடங்குகளுக்காக அசுரகுடியினர் உருவாக்கும் பாவை.

பூர்ணை அவனிடம் "பேசுக, உங்கள் குரல் கேட்கட்டும்" என்றாள். அவன் "அன்னையே, நான்தான் சுகோத்ரன்... உங்கள் மைந்தன் சுகோத்ரன்... அன்னையே" என்றான். அவளிடம் எந்த மெய்ப்பாடும் ஏற்படவில்லை. "மைந்தர்களின் இறப்பை கேட்டு இப்படி ஆகிவிட்டார்கள்... தாங்கள் உயிருடனிருப்பதையே மறந்துவிட்டிருக்கிறார்கள்" என்றாள் பூர்ணை. அவன் அவள் விழிகளை நோக்கினான். அந்த வெற்று நோக்கு இரு கூரிய முனைகளாக அசையாது நின்றிருந்தது.

"நானும் இறந்துவிட்டேன் என்றா எண்ணுகிறார்கள்?" என்றான் சுகோத்ரன். "அவ்வாறல்ல... ஒவ்வொரு மைந்தனின் இறப்பும் அவர்களை கொந்தளிக்கச் செய்தது. கற்பனையில் சாவுகள் மேலும் பெருகின. ஒவ்வொரு நாளுமென நிலையழிந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் மைந்தர்களிடம் எந்த வேறுபாட்டையும் பார்க்கவில்லை" என்றாள் பூர்ணை. "எனில் அவர்களுக்கு தன் மைந்தன் உயிருடனிருப்பது தெரியாது. அவரை மறந்துவிட்டிருக்கிறார்கள். அவர் அழிந்துவிட்டார் என எண்ணுகிறார்கள்" என்றான் உஜ்வலன். பூர்ணை தயக்கத்துடன் "ஆம்" என்றாள்.

"அவர்களின் மைந்தன் உயிருடன் இருப்பதை அவர்கள் அறியவேண்டும். அறிவிக்கவேண்டியது நம் கடமை. அவர்கள்

மீளக்கூடும்...” என்றான் உஜ்வலன். திரும்பி சுகோத்ரனிடம் “சொல்க, நீங்கள் சாகவில்லை என்று சொல்க...” என்று கைபற்றி உலுக்கினான். சுகோத்ரன் ஒருகணம் எண்ணியபின் “அவர்கள் அவ்வாறே இருக்கட்டும். துயர் மிக்கதென்றாலும் அவர்கள் இன்றிருக்கும் இந்நிலையில் பேருணர்வென ஒன்றுள்ளது. என் அன்னை மைந்தரிடம் வேறுபாடு காணாமலேயே இருக்கட்டும்” என்றான்.

“அறிவின்மை... அறிவின்மையின் உச்சம்” என்று உஜ்வலன் கூவினான். “அவர்கள் உயிர்மீள்வார்கள். முன்னிருந்த நிலையை அடையவும்கூடும்.” சுகோத்ரன் “ஆம், ஆனால் தன் மைந்தனையும் பிற மைந்தரையும் வேறுபடுத்தி நோக்குபவர்களாக ஆகிவிடுவார்கள். தன் மைந்தன் சாகவில்லை என மகிழ்வது பிற மைந்தர் இறந்தமைக்கு மகிழ்வதாகவே திரிபடையலும் ஆகும். அது மானுட இயல்பு... அது நிகழவேண்டியதில்லை” என்றபின் அன்னையை ஒருகணம் நோக்கினான். அருகணைந்து குனிந்து விஜயையின் கால்களை தொட்டு வணங்கினான்.

அவள் அவன் வணங்குவதை அறியவில்லை. அவன் எழுந்தபோது அவன் தலையின் அசைவைக் கண்டு திடுக்கிட்டு கையை எடுத்தாள். அக்கை அவன் தோளில் பட திகைப்புடன் அவன் தோளில் மீண்டும் கையை வைத்தாள். தவிப்புடன் அவள் கை அவன் தோளிலும் கைகளிலும் பரவி அலைந்தது. விரல்கள் நடுநடுங்கின. அவள் முகமெங்கும் தசைகள் நெளிந்தன. மெலிந்து நரம்பு முடிச்சுகள் பரவிய கழுத்து அதிர்ந்தது. உறுமல்போல ஓர் ஓசை அவளிடமிருந்து எழுந்தது. அவள் எழுந்து தன் இரு கைகளாலும் அவனை அள்ளி அணைத்து உடலுடன் இறுக்கிக்கொண்டாள்.

அவன் அவள் பிடியில் மூச்சுத்திணறினான். அவளிடமிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயன்றான். அவள் அவனை வெறிகொண்டு முத்தமிட்டாள். விலங்குபோல அவனை மாறி மாறி கவ்வினாள். அவன் தோளில் அறைந்தாள். நெஞ்சில் குத்தினாள். பின்னர் உடல் தளர்ந்து அவன் கைகளிலேயே நினைவழிந்து விழுந்தாள். பூர்ணை அவளை ஏந்திக்கொள்ள அவளை மெல்ல பீடத்தில் அமர்த்தினார்கள். அவன் கையை விலக்கியதும் அவள் நினைவுமீண்டு பதற்றத்துடன் அவன் கையைப் பற்றிக்கொண்டாள். "போகாதே... போகாதே" என்றாள்.

"இல்லை அன்னையே, செல்வதில்லை. இங்குதான் இருப்பேன்" என்று அவன் சொன்னான். "இங்கேயே இரு... என்னுடன் இரு" என்றாள். உடனே விந்தையான ஒலியெழுப்பி நகைக்கத் தொடங்கினாள். அவ்வுணர்வுகள், அவ்வசைவுகள், அந்த ஓசைகள் அனைத்துமே விலங்குகளுக்குரியவை என்று தோன்றியது. நகைத்து நகைத்து உடல் குலுங்கினாள். அவன் உடலை கைகளால் சுற்றிக்கொண்டு அவன் இடையில் தலையைச் சாய்த்தாள். பெருமூச்சுடன், கண்ணீர் வழிய மீண்டாள். "நீ போகக்கூடாது. இங்கிருக்கவேண்டும்" என்றாள். "ஆம் அன்னையே, இங்கேதான் இருப்பேன்" என்றான் சுகோத்ரன்.

அவள் மெல்ல கண்களை மூடினாள். இமைகள் நீருலர்ந்து ஒட்டிக்கொண்டன. முகம் மலர்ந்திருந்தது. உதடுகள் எதையோ முணுமுணுப்பவைபோல அசைந்தன. நீள்மூச்சொலி எழுந்தது. அவன் ஆடையைப் பற்றிய கைகள் தளர்ந்தன. அவள் தலை துயிலில் தழைந்தது. கைகள் பிடிவிட்டு விழுந்தன. அவள் விழித்துக்கொண்டு "உம்" என்றாள். உடனே எழுந்துகொண்டு "நீ போகக்கூடாது. இங்கே உன்னை சிலர் சென்றுவிடும்படி

சொல்வார்கள். அஸ்தினபுரியின் மணிமுடிக்குரியவன் நீ. அந்த நிஷாதகுலப் பெண்ணின் கருவிலிருப்பவனை இளவரசனாக ஆக்க எண்ணுகிறார்கள்... நீதான் குருகுலத்தின் குருதியின் எச்சம். மெய்யான இளவரசன் நீ. பட்டம் உனக்குரியது" என்றாள்.

சுகோத்ரன் மறுமொழி ஏதும் சொல்லவில்லை. "ஆம், இப்போது தெரிகிறது அது. இத்தனை சாவுகள் ஏன் என்று. இளவரசர் அனைவரும் மடிந்தது நீ முடிசூடவேண்டும் என்பதற்காகவே. நீ அரியணை அமரவேண்டும் என்பதே ஊழ். அதன்பொருட்டே இவையெல்லாம்..." அவள் அவன் தோள்களை நடுங்கும் கைகளால் பற்றிக்கொண்டாள். "நீ அரியணை அமர்வாய். மும்முடி சூடி பாரதவர்ஷத்தை ஆள்வாய். உன் குருதிவழி இங்கே நிலைகொள்ளும். என் வழியாக மலைவாழ் மத்ரர்கள் பாரதவர்ஷத்தை ஆளும் செங்கோலைச் சென்றடைவார்கள்... ஆம், அதுதான் ஊழ்."

"நான் கிளம்புகிறேன், அன்னையே..." என்று சுகோத்ரன் சொன்னான். "நீர்க்கடனுக்கான வேள்வி தொடங்கிவிட்டது. நான் சென்றாகவேண்டும்." விஜயை அவன் கையை பிடித்துக்கொண்டு "எனக்கு சொல் அளித்துவிட்டுச் செல்... இங்கிருப்பாய் என்று... மணிமுடிசூடுவாய் என்று... சொல்!" என்றாள். "நான் சொல் அளிப்பதில்லை, அன்னையே" என்றான் சுகோத்ரன். "இது நான் கோரும் சொல். உன் அன்னை கோரும் சொல்" என்றாள் விஜயை. "நான் நிமித்தநூல் கற்றவன். ஊழை அறியும் ஆற்றல்கொண்டவன். நிமித்திகர் வஞ்சினம் உரைக்கலாகாது, ஆணையிடவும் கூடாது" என்றான் சுகோத்ரன்.

"நிமித்தநூலை தூக்கி வீசு... அது உனக்கு இனி தேவை இல்லை. இதுவும் என் ஆணைதான். அடிபணிந்திருக்கும்

ஊழ்கொண்டவர் தன்னை ஆள் என அமைத்துக்கொள்ளும்பொருட்டு அதைக் கற்றார். அதனாலேயே கோழை என்றானார். நிமித்தநூல் சூதர்களுக்குரியது. பாரதவர்ஷத்தின் பேரரசனுக்கு அது எதற்கு... நான் சொல்வதைக் கேள். இது என் ஆணை..." என்று விஜயை கூவினாள். சுகோத்ரன் தலைவணங்கி கைகூப்பிவிட்டு குடிலைவிட்டு வெளியே சென்றான்.

விஜயை "நில், நான் ஆணையிடுவதைச் செய்" என்று கூவியபடி அவனுக்குப் பின்னால் வந்தாள். அவன் திரும்பி நோக்காமல் நடக்க உஜ்வலனும் உடன் சென்றான். அவள் குடில்வாயிலைப் பற்றிக்கொண்டு நிற்க அவளை பூர்ணை ஏந்திக்கொண்டாள். "மைந்தா, சொல்வதை கேள். உன் அன்னையின் ஆணை இது" என விஜயை கூவிக்கொண்டே இருந்தாள். அவர்கள் தேரிலேறிக்கொண்டார்கள். சுகோத்ரன் "அரசரின் குடிலுக்குச் செல்க" என பாகனுக்கு ஆணையிட்டான்.

நீர்ச்சுடர் - 56

பகுதி எட்டு : விண்நோக்கு – 6

யுதிஷ்டிரனின் குடில் முன் இறங்குவதுவரை உஜ்வலன் ஒன்றும் சொல்லவில்லை. குடிலில் யுயுத்ஸு மட்டும் இருந்தான். அவர்களை அவன் எதிர்கொண்டு "அரசரும் உடன்பிறந்தாரும் கங்கைக்கரைக்குச் சென்றுவிட்டார்கள். வேள்வியில் அமர்ந்திருக்கிறார்கள். நீங்களும் அங்கே செல்லலாம் என ஆணை" என்றான். அவன் முகமும் குரலும் இறுக்கமாக இருந்தன. அவன் விழிகளிலிருந்த விலக்கத்தை

சுகோத்ரன் உணர்ந்தான். "இளைய யாதவர் எங்கே?" என்றான். "அவர் தன் குடிலிலேயே இருக்கிறார்" என்றான் யுயுத்ஸு.

"ஏன்?" என்று உஜ்வலன் கேட்டான். "ஏன் அவர் நீர்க்கடனுக்கு வரவேண்டும்? அவருக்கு அங்கே செய்வதற்கேதுமில்லை" என்றான் யுயுத்ஸு. அவர்களிடம் அவன் பேசவே விரும்பவில்லை என்று தோன்றியது. "மெய்தான். இத்தனை சாவுகளில் அவருக்கு அணுக்கமான எவரும் இல்லை..." என்றான் உஜ்வலன். யுயுத்ஸு சீற்றத்துடன் விழிதூக்க புன்னகையுடன் "அல்லது அனைவருமே அவருக்கு அணுக்கமானவர்கள்தான் என்றும் சொல்லலாம்" என்றான். யுயுத்ஸு தன்னை கட்டுப்படுத்திக்கொண்டான்.

சுகோத்ரன் "இளைய யாதவர் அழைத்துவர ஆணையிட்ட முனிவர் வந்தாரா?" என்றான். "ஆம்" என்று யுயுத்ஸு அவனை நோக்காமலேயே சொன்னான். "அவர் திரும்பிச் சென்றுவிட்டாரா?" என சுகோத்ரன் மீண்டும் கேட்டான். "ஆம், அவர் சொன்னதென்ன என்று அறியேன். எனக்குரிய செய்தி அல்ல அது" என்று யுயுத்ஸு சொன்னான். சுகோத்ரன் "எனக்குரிய செய்தி அது. நான் நிமித்தம் அறிந்தவன்" என்றான். யுயுத்ஸு விழிதூக்கி நோக்கி "அதை நான் உங்களிடம் சொல்வதற்கு எனக்கு ஆணையில்லை" என்றான்.

சுகோத்ரன் வெறுமனே தலைவணங்கினான். ஒருகணத்திற்குப் பின் யுயுத்ஸு "இளவரசே, நான் உங்களிடம் ஒன்று கூறவேண்டும்" என்றான். "கூறுக, தந்தையே" என்றான் சுகோத்ரன். "இந்த அந்தணர் சற்றே விலகி நிற்கட்டும்" என்றான் யுயுத்ஸு. சுகோத்ரன் உஜ்வலனை பார்க்க அவன் புன்னகையுடன் தலைவணங்கி விலகி வெளியே சென்றான். யுயுத்ஸு "நான் நேற்றிரவு விதுரர் உங்களிடம்

பேசிக்கொண்டிருந்ததை அறிவேன்" என்றான். "நீங்கள் அறியாத எதுவும் இங்கே நிகழாது என்பது தெரியும்" என்றான் சுகோத்ரன்.

யுயுத்ஸு "அது என் கடமை" என்றான். "என்ன பேசிக்கொண்டீர்கள் என்றும் தெரியும். இன்று முற்புலரிக்கு முன் உங்கள் தந்தை சகதேவனிடம் அதைப்பற்றிப் பேச வாய்த்தது. அதை உங்களிடம் சொல்லியாகவேண்டும்." சுகோத்ரன் பேசாமல் நின்றான். "விதுரர் உங்களிடம் பேசிக்கொண்டிருந்த அதே பொழுதில் நான் இக்குடிலுக்கு வந்தேன். வெளியே காட்டோரமாக இருளுக்குள் மெல்லிய வெண்ணிழல் என உங்கள் தந்தை நின்றிருப்பதைக் கண்டேன். அவருடைய உடல் என் விழிகளுக்கு அத்தனை அறிமுகமான ஒன்று என்பதனால்தான் அவரை என்னால் காணவே முடிந்தது."

அருகணைந்து அவரை வணங்கினேன். என் வருகையை அவர் விரும்பவில்லை. தனிமையில் புதைந்திருந்தார். ஆனால் இந்த முக்தவனத்தில் எவருக்காயினும் தனிமை நோயும் நஞ்சும் மட்டுமே என நான் அறிந்திருந்தேன். ஆகவே அவர் கொண்ட அத்தனிமையை கலைக்க நான் தயங்கவில்லை. மீண்டும் முகமன் உரைத்தேன். எரிச்சலுடன் என்னை நோக்கி என்ன என்று வினவினார். நான் நீர்க்கொடைச் சடங்குகள் குறித்து பேசினேன். அவர் நான் ஏதாவது புதிதாகச் சொல்வேன் என்று எண்ணி செவியளித்தார். பின்னர் சலிப்புடன் சில வினாக்களை கேட்டார். இளைய யாதவர் அழைத்துவந்திருந்த முனிவரின் செய்தியை சொன்னேன். அது அவருக்கு சற்றே ஆர்வம் அளித்தது.

அதன்பின்னர் விதுரர் உங்களைச் சந்தித்ததைப் பற்றி சொன்னேன். அவர் துயர்கொண்டவர்போல் முகம் சுளித்தார்.

அவருடைய உணர்வுகள் என்ன என்று என்னால் கணிக்க முடியவில்லை. "விதுரர் இயல்பாகச் சென்று பார்க்கவில்லை. எதையோ சொல்கிறார் அல்லது கோருகிறார்" என்றேன். "ஆம், அவர் கோருவது ஒன்றாகவே இருக்கமுடியும், அவர் அவனிடம் அஸ்தினபுரியின் முடியைக் கோரும்படி சொல்வார்" என்றார் உங்கள் தந்தை. நான் அதை அறிந்திருந்தேன் என்றாலும் "ஏன்?" என்றேன்.

"பீஷ்ம பிதாமகர் இங்கிருந்தாலும் அதைத்தான் சொல்லியிருப்பார். அவர்களுக்கெல்லாம் குருதியின் இயல்பான வழி மட்டுமே ஊழின் வழி. பிற அனைத்தும் பிழைபடுதலே" என்றார். நான் "அவர் குருதித்தூய்மையை எண்ணுகிறாரா?" என்றேன். "அதையும் கருதுபவர்தான். ஆனால் அவர் இப்போது எண்ணுவது அதையும் கடந்த ஒன்றை" என்றார். "அதைப்பற்றி நாம் பேசவேண்டாம். அவர் மைந்தனிடம் கோருவது அஸ்தினபுரியின் முடியை அவன் சூடவேண்டும் என்று" என்றார்.

"ஆம்" என்றேன். "நான் அவனிடம் இன்று எதையும் சொல்ல முடியாது. அவன்மேல் எனக்கு சொல் உண்டா என்றே எனக்கு ஐயமாக உள்ளது. அவனை நேரில் காண்பது வரை அவ்வாறு தோன்றவில்லை. அவன் பருவுடலாக, விழிகளாக, நகைப்பாக என் முன் தோன்றியபோது என் அகம் திடுக்குற்றது. அவன் இருக்கிறான் என்பதையே மறந்துவிட்டிருந்தேன். அவ்வாறு மறக்கும்பொருட்டே அவனை நிமித்தக்கல்விக்கு அனுப்பியிருக்கிறேன். அவன் மீண்டதைக் கண்ட கணம் நான் அடைந்தது ஆழ்ந்த குற்றவுணர்ச்சி மட்டுமே. என் மூத்தவரின் மைந்தர்கள் அனைவரும் மறைந்தபின் அவன் மட்டும்

எஞ்சியிருப்பது பெரும்பிழை என்னும் எண்ணமே என்னுள் இருந்தது" என்றார் உங்கள் தந்தை.

"ஏனென்றால் நான் அதை திட்டமிட்டு இயற்றியிருக்கிறேன் என எனக்கே தெரிந்திருந்தது. அவ்வுண்மை எதனாலும் மழுப்ப முடியாத உண்மை என முன்னால் எழுந்து நின்றது. அவன் உயிருடன் இருப்பதே என் தமையன்களை நான் வஞ்சித்ததற்கான சான்று என்று தோன்றியது. ஆகவே அவனிடம் என்னால் பேசமுடியவில்லை" என்று அவர் சொன்னார். "அவன் முடிசூடினான் என்றால் அது மிகப் பெரிய சூழ்ச்சியாக ஆகிவிடுகிறது. நிமித்திகனாகிய நான் அனைத்தையும் முன்னரே கணித்து என் மைந்தனை இதன்பொருட்டு காத்துக்கொண்டேன் என்றே பொருள்படும்" என்றார்.

நான் அவரைத் தடுத்து "அவ்வாறு எவர் எண்ண முடியும்? தங்களைப்பற்றி அறியாதோர் எவர்?" என்றேன். அவர் கசப்புடன் புன்னகைத்து "ஆட்சியாளர்களையும் அரசகுடியினரையும் சான்றோரையும் மக்கள் கூர்ந்து நோக்கிக்கொண்டே இருக்கிறார்கள். அவர்களிடம் குறைகள் காண விழைகிறார்கள். ஆகவே இல்லாக் குறையையும் உண்டுபண்ணி கண்டடைகிறார்கள். அதனூடாக தங்கள் அன்றாடச் சிறுமைகளை கடந்துசெல்கிறார்கள். மேலும் நம்மைப்பற்றி பேசவிருப்பவர்கள் நாமறிந்தவர்கள் அல்ல, நம்மை அறிந்தவர்களும் அல்ல. வழிவழியாக வந்துகொண்டே இருப்பவர்கள்" என்றார்.

என்னால் மறுமொழி சொல்ல இயலவில்லை. "இது என் அச்சம், இதை நான் அவனிடம் சொல்ல இயலாது. இன்று நான் அழைக்காமலேயே இத்தனை தொலைவுக்கு அவன் கிளம்பி

வந்துள்ளான் என்றால் அவனுள் விழைவு உள்ளது என்றே எண்ணுகிறேன். அவனுடன் வந்துள்ள அந்தணன் அதைத்தான் பேசுகிறான். அந்தணனை துணைகொண்ட ஷத்ரியன் அரசனாக விழைபவன்" என்றார். நான் "அவர் அவ்வாறு சொல்லவில்லை" என்றேன். "அவன் விழைவதில் பிழை ஏதுமில்லை. அவனுக்குரியதே இன்று இந்நிலமும் முடியும். அவனை விலக்க எனக்கு உரிமையில்லை. தகுதியுமில்லை" என்றார்.

அவர் சொல்லவருவதென்ன என்று நான் காத்திருந்தேன். "அவனிடம் நீ சொல்லலாம். அவனுடைய முடிவு முழுக்க முழுக்க அவனுடைய தெரிவு என நான் எண்ணுவதாகச் சொல். அவன் எதைத் தெரிவுசெய்தாலும் நான் அவனை வாழ்த்துவேன். ஆனால் அரசை அவன் தெரிவுசெய்தால் வருந்துவேன்" என்றார். "ஆனால் என் வருத்தம் ஒரு பொருட்டல்ல. அதை ஒரு துளியென்றாக்கும் பெருங்கடல் போன்ற துயர்மேல் சென்றுகொண்டிருக்கிறேன்." நான் தலைவணங்கினேன். அதற்குள் அவரை அரசர் அழைப்பதாக ஏவலன் வந்து அழைத்தான். என்னிடம் ஒன்றும் சொல்லாமல் திரும்பிச் சென்றார்.

"நான் என் சொற்களை தொகுத்து இதை சொல்லியிருக்கிறேன். என் விழிமுன் இருப்பது பந்த வெளிச்சத்தில் தெரிந்த அவருடைய துயர்மிக்க முகம் மட்டுமே. அந்த முகம் அளித்ததே அச்சொற்களுக்கான மெய்ப்பொருள்" என்று யுயுத்ஸு சொன்னான். "நீங்கள் எனக்கு சொல்வதென்ன, தந்தையே?" என்றான் சுகோத்ரன். "நீங்களே முடிவெடுக்கலாம், இளவரசே. ஆனால் நெறிநூல்கள் மைந்தனின் முதற்கடமை தந்தையை நிறைவுறச்செய்வதே என்கின்றன" என்றான் யுயுத்ஸு.

“அன்னையின் ஆணையை மைந்தன் எவ்வண்ணம் தலைக்கொள்ளவேண்டும்?” என்றான் சுகோத்ரன். யுயுத்ஸு திகைப்புடன் அவனை நோக்கி “அரசியை சந்தித்தீர்களா?” என்றான். “ஆம்” என்றான் சுகோத்ரன். “நன்று, நான் நெறிநூல்கள் சொல்வதையே சொல்கிறேன். மைந்தன் அகவை நிறைந்துவிட்டபின் அவன்மேல் அன்னையருக்கு எந்த உரிமையும் இல்லை. மகள்களிடம் அவர்களுக்கு இணையுரிமை உள்ளது. அவர்கள் இளவரசியர் என்றால் அவ்வுரிமையும் இல்லை” என்று யுயுத்ஸு சொன்னான். சுகோத்ரன் புன்னகையுடன் “தங்கள் சொற்களை செவிகொண்டேன், தந்தையே” என்றான்.

தலைவணங்கி அவன் வெளியே வந்தான். உஜ்வலன் அவனுக்காகக் காத்திருந்தான். அவர்கள் நடக்கையில் உஜ்வலன் “அவர் சொன்னதென்ன என்று அறிவேன்” என்றான். “நீங்கள் அஸ்தினபுரியின் மணிமுடியை மறுக்கவேண்டும், அவ்வளவுதானே?” சுகோத்ரன் “எங்ஙனம் உணர்கிறீர்?” என்றான். “அவர் முகமும் விழிகளும் சொற்களும் மாறியிருக்கின்றன. இரவில் அவர் எவரையேனும் சந்தித்திருக்கலாம். பெரும்பாலும் அது உங்கள் தந்தை சகதேவன்.” “ஏன்?” என்றான் சுகோத்ரன். உஜ்வலன் “நேற்று அவர் பேச எண்ணிய எதையோ பேசாமல் கடந்துசென்றார் என்று பட்டது. உங்களை நேருக்குநேர் பார்த்தபோது அதிர்ச்சியடைந்தார்” என்றான்.

சுகோத்ரன் “மெய்தான்” என்றான். “அவருடைய நற்பெயரை அவர் எண்ணுகிறார். போரின் முற்றழிவை முன்னரே உணர்ந்து, நீங்கள் முடிசூடவேண்டுமென திட்டமிட்டு, உங்களை வெளியே அனுப்பினார் என்னும் பழி வருமென அஞ்சுகிறார்” என்றான் உஜ்வலன். “அவ்வண்ணம் பழி வராதா?” என்றான்

சுகோத்ரன். “உறுதியாக வரும்” என்றான் உஜ்வலன். “ஆனால் நீங்கள் நல்லாட்சி கொடுக்கமுடிந்தால், வெற்றிகளை ஈட்டினால், வேள்விகளை நிகழ்த்தினால், அந்தணர்க்கும் அறவோர்க்கும் சூதருக்கும் புலவருக்கும் அள்ளி வழங்கினால் மிக விரைவிலேயே அப்பழி அகலும். சொல்லப்போனால் உங்களைக் காத்து அஸ்தினபுரியின் குருதிவழியை நிலைநிறுத்திய உங்கள் தந்தை மாபெரும் சூழ்திறன் கொண்டவர் என்றே புகழப்படுவார்.”

சுகோத்ரன் “ஆம், அவ்வாறே எப்போதும் நிகழ்கிறது” என்றான். “உங்கள் தந்தை இன்று முனியக்கூடும். ஆனால் அந்த முனிதல்கூட மேல்மட்டத்திலேயே. ஆழத்தில் அவருடைய உள்ளம் நாடுவது உங்கள் அன்னை ஆணையிட்டதைத்தான்” என்று உஜ்வலன் சொன்னான். “ஏன்?” என்று சுகோத்ரன் கேட்டான். “அன்னையர் தந்தையரின் ஆழுள்ளத்தையே வெளிப்படுத்துகிறார்கள்” என்றான் உஜ்வலன். சுகோத்ரன் கண்சுருக்கி நோக்க “ஏனென்றால் அன்புள்ள தந்தையர் ஆழத்தில் அன்னையர்” என்றான் உஜ்வலன். சுகோத்ரன் புன்னகைத்தான். “நகையாட்டல்ல, பழிசூழாமல் நீங்கள் முடிசூடலாகும் என்றால் சகதேவன் வேண்டாம் என்றா சொல்வார்?” என்று உஜ்வலன் கேட்டான்.

“இத்தகைய வினாக்களுக்கு எவர் மறுமொழி சொல்ல இயலும்?” என்றான் சுகோத்ரன். “அவருடைய நற்பெயரை அவர் காத்துக்கொள்ளவேண்டும், அவ்வளவுதான். ஆனால் நீங்கள் முடிசூடவும் வேண்டும். ஆகவேதான் உங்களிடம் சொல்லாமல் யுயுத்ஸுவிடம் சொல்கிறார். அவர் அவ்வாறு சொன்னது ஆவணமாகிறது அல்லவா?” சுகோத்ரன் சீற்றத்துடன் “நீர் தந்தையை இழிவுசெய்கிறீர்” என்றான். “இல்லை, மானுட

உள்ளம் செயல்படும் முறையை மட்டுமே சொன்னேன்" என்றான் உஜ்வலன்.

உஜ்வலன் தொலைவில் தெரிந்த யுயுத்ஸுவின் உருவை திரும்பி நோக்கிவிட்டு "அவர் அஞ்சுகிறார்" என்றான். "எதை?" என்றான் சுகோத்ரன். "உங்களை" என்றான் உஜ்வலன். "என்னையா?" என்று சுகோத்ரன் கேட்டான். "அல்லது நீங்கள் எடுக்கவிருக்கும் முடிவை" என்று உஜ்வலன் சொன்னான். சுகோத்ரன் "ஏன்?" என்றான். "அவர் எண்ணியிருக்கும் ஒன்றுக்கு மாறானது அது" என்றான் உஜ்வலன். சுகோத்ரன் எண்ணங்களில் ஆழ்ந்து அச்சொற்களை செவிகொள்ளாமல் வெறுமனே தலையசைத்தான்.

யுயுத்ஸு அனுப்பிய ஏவலன் வழிகாட்ட அவர்கள் வேள்விக்களம் நோக்கி சென்றனர். கங்கைக்கரை முழுக்க மீன்நெய்ப்பந்தங்களின் ஒளியில் செந்நிறமாகத் தெரிந்தது. பலநூறு ஏவலரும் காவலரும் அவர்களின் நிழல்களுடன் அசைய அப்பகுதியே கொந்தளிப்பதுபோல் இருந்தது. கலைந்து குழம்பிய ஓசைகளின் முழக்கம் காட்டின் மரச்செறிவுக்குள் எதிரொலித்துச் சூழ்ந்திருந்தது. அவர்கள் அவ்வோசையால், ஒளியால் ஈர்க்கப்பட்டு சொல்லற்று நடந்தார்கள்.

கங்கைக்கரையில் உயரமான உலர்ந்த இடத்தில் மண் நிரப்பாக்கப்பட்டு வட்டவடிவமான வேள்விச்சாலை அமைக்கப்பட்டிருந்தது. நூற்றெட்டு மூங்கில்கள் நாட்டப்பட்டு ஈச்சையோலை முடைந்து கூரையிடப்பட்டிருந்த பந்தலின் உச்சியில் மூன்று முகடுகள் அமைக்கப்பட்டு அதன்மேல் அஸ்தினபுரியின் அமுகதகலக் கொடி பறந்தது.

வேள்விப்பந்தலின் கூரைமேல் புகை ஊறிப்பெருகி எழுந்து திரண்டு நின்றிருந்தது. புகைச்சுருள்கள் மேல் பந்தங்களின் ஒளி பட நீர்த்துப்போன தழல் என அது தோன்றியது. அனலின் புகை பறவைகளை எச்சரிக்கையடையச்செய்ய காட்டுக்குள் கலைவோசை எழுந்தது. சிறகடிப்புகள் இருளில் சுழன்று சுழன்று தெரிந்தன.

“மங்கலம் என்று சொல்லப்படும் எதையுமே இங்கே கொண்டுவரலாகாது என்று நெறியுள்ளது” என்று உஜ்வலன் சொன்னான். “மலர்கள், கனிகள், பட்டு, ஆடி, பொன் அனைத்தும் விலக்கப்பட்டுள்ளன. ஆகவேதான் இங்கே பெண்களைக்கூட வரலாகாது என விலக்குகிறார்கள். மங்கலைகள் வரலாகாது. கைம்பெண்கள்கூட வருவது விலக்கப்பட்டுள்ளது. பெண்கள் எந்நிலையிலும் மங்கலைகளே என்பது வேதநெறி. இறப்பு எனும் மங்கலமின்மையின் இடம் இது. நீர்க்கடன் அளிக்குமிடத்தை இடுகாட்டின் தங்கை என்று சூதர் சொல்வதுண்டு.” கைசுட்டி வேள்விச்சாலையைக் காட்டி “ஆனால் அங்கே வேதச்சொல் முழங்கிக்கொண்டிருக்கிறது. முதல் மங்கலம் என்று வேதத்தைச் சொல்வதுண்டு” என்றான். சுகோத்ரன் அதை நோக்கியபின் “பருவடிவுகொண்ட நூற்றெட்டு மங்கலங்களில் முதன்மையானது தீ. அனலோன் செல்லாத இடமொன்று உண்டா?” என்றான். உஜ்வலன் “ஆம், மெய்” என்றான்.

“இங்கே அனலோன் எழவேண்டும். அவன் உண்டவை நம் குடியினரின் உடல்கள். விண்புகும்வரை அவர்களை அனலவனின் பொன்னிற நாக்கே ஏந்தி வைத்துள்ளது என்பதே நூல்கூற்று” என்றான் சுகோத்ரன். “அங்கே குருக்ஷேத்ரத்தில் நிகழ்ந்தது ஒரு பெருவேள்வி என்கின்றனர் சூதர். எனில் இது

மிகச் சிறிய வேள்வி. குருக்ஷேத்ரத்தில் விருந்துண்டு சலித்து மயங்கிக்கிடக்கும் அனலவனுக்கு வயிற்றை எளிதாக்கும் பொருட்டு அளிக்கும் இஞ்சிநீர்" என்றான் உஜ்வலன். சுகோத்ரன் வேள்விச்சாலையை நோக்கியபடி நடந்தான். "அங்கே களத்தில் ஒலித்த போர்க்கூச்சல்களும் சாவோலங்களும்கூட வேதச்சொற்களே என்று சூதன் ஒருவன் பாடினான்" என்றான் உஜ்வலன்.

சுகோத்ரன் 'ஜாதவேதன்' என்னும் சொல்லை அக்கணம் செவிகொண்டு மெய்ப்படைந்தான். வேதங்களில் பிறந்தவன். வேதங்களுடன் பிறந்தவன். வேதமெனப் பிறந்தவன். வேதன். தன்னைப் படையலிட்டுக்கொண்டவன். உண்பவன், உண்ணப்படுபவன். அவன் அச்சொல்லையே தன்னுள் ஊழ்கநுண்சொல் என சொல்லிக்கொண்டு நடந்தான். வேள்விச்சாலையை அணுகுந்தோறும் எரிமணம் நிறைந்த காற்று எழுந்து வந்து மூச்சை நிறைத்தது. அவன் முன்பும் ஒருமுறை அவ்வண்ணம் அதே வேள்விச்சாலையில் அதே உணர்வுநிலைகளுடன் சென்றதுபோல் உணர்ந்தான். முற்பிறவியில் எங்கோ.

வேள்விச்சாலையைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த மூங்கில்வேலியின் வாயிலில் நின்றிருந்த காவலர்கள் தலைவணங்கி அவர்களை செல்லவிட்டனர். அவர்கள் சுடர்காட்ட வேள்விச்சாலை முகப்பில் நின்றிருந்த காவலர்கள் அவர்களை எதிர்கொண்டு உள்ளே அழைத்துச்சென்றனர். உள்ளே வேள்விக்குளங்களில் எரிந்த தழலின் ஒளி சூழ்ந்திருந்த அனைவரின் உடல்களையும் அனல்வடிவாகக் காட்டியது. அவர்களின் நிழல்கள் பெருகி எழுந்து கூரைமேல்

அலைவுகொண்டன. பேருருவ தெய்வங்கள் எழுந்து குனிந்து அவர்கள் செய்யும் எரிசெய்கையை நோக்குவதுபோல.

வேள்விச்சாலைப் பொறுப்பாளரான சிற்றமைச்சர் ஸ்ரீமுகர் அவர்களை வணங்கி முகமன் உரைத்து வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். அங்கே அமைக்கப்பட்டிருந்த மூன்று எரிகுளங்களைச் சுற்றி அந்தணர்கள் அமர்ந்து நெய்யூற்றி எரியோம்பி வேதம் உரைத்துக்கொண்டிருந்தனர். அவர்கள் முன்னால் பாண்டவர்கள் ஐவரும் தர்ப்பை விரிப்பின்மேல் அமர்ந்திருந்தார்கள். யுதிஷ்டிரன் கைகூப்பி கண்மூடி அமர்ந்திருந்தார். மற்றவர்கள் தழலின் கொழுந்தாட்டத்தை கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தனர். தௌம்யர் தாமரைபீடத்தில் அமர்ந்து வேள்வித்தலைவராக வேள்வியை நிகழ்த்தினார்.

சூழ்ந்து அமர்ந்திருந்தவர்களில் பெரும்பாலானவர்களை சுகோத்ரன் முன்னர் கண்டதில்லை. அவர்களில் பெரும்பாலானவர்கள் அந்தணர்கள். சிலர் படைத்தலைவர்களாக இருக்கலாமெனத் தோன்றியது. அவன் அவர்களுடன் அமர்ந்துகொள்ளப் போனபோது உஜ்வலன் "நீங்கள் அரசகுடியினருடன் சென்று அமரவேண்டும்... இங்கல்ல" என்றான். சுகோத்ரன் "அந்தணர் அழைக்காமல் செல்லக்கூடாது" என்றபடி அமர்ந்தான். தரையில் மூங்கில்பாய் போடப்பட்டிருந்தது. "நம்மை அங்கே கொண்டு அமரச்செய்ய யுயுத்ஸு கூறியிருக்கவேண்டும்... இது எவ்வகையிலும் முறையல்ல" என்றபடி உஜ்வலன் அமர்ந்தான்.

சுகோத்ரன் வேள்வித்தழலை நோக்கியபடி அமர்ந்திருந்தான். அது எழுந்து கிழிந்து துள்ளி பறந்தது. தயங்கி அமைந்து குளமாகியது. பக்கவாட்டில் சுழன்று எழுந்து மீண்டும் நெளிந்தாடியது. அதன் அசைவுகளை நோக்க நோக்க அது

எதையோ சொல்லும் ஒரு நாக்கு என்ற எண்ணம் வந்தது. அந்த வேதப்பாடலுக்கும் அதற்கும் தொடர்பில்லை. அது வேறு எதையோ சொல்லிக்கொண்டிருந்தது. மிக மிகப் புதிரான ஒன்றை. மானுடன் இன்னமும் அறிந்திராத ஒன்றை. அது நடனம் அல்ல, அது உரையாடல்தான். உரையாடல் என்பது நாவின் நடனம்.

அனலவனே

முற்றிலும் எரிந்தமையா அவனை துயருறச்செய்யாதே

அவனுடைய உடலையோ தோலையோ சிதறடிக்காதே

வேதங்களுடன் பிறந்தவனே நீ அவனை தூய்மையாக்கு

அதன்பின் மூதாதையருக்கு அருகே அமர்த்து

வேதங்களின் துணைவனே

அவனை தூய்மையாக்கியபின் தந்தையரிடம் கொண்டுசெல்க

உயிர்கள் தோன்றும் இடத்திற்கே செல்கையில்

அவன் தேவர்களுக்குரியவன் ஆகிறான்

யுதிஷ்டிரன் விழிதிறந்து சூழ நோக்கியபோது அவனை கண்டார். அவருடைய உதடுகள் மட்டும் மெல்ல அசைந்தன. அதை உணர்ந்தவர்போல ஸ்ரீமுகர் ஓடி சுகோத்ரன் அருகே வந்தார். மெல்ல குனிந்து "அரசர் உங்களை அங்கே வரச்சொல்கிறார்" என்றார். "எங்கே?" என்றான் சுகோத்ரன். "வேள்வியை இயற்றுபவர்களுக்குரிய இடத்தில், உங்கள் தந்தையர் ஐவருடனும் அமரும்படி சொல்கிறார்." உஜ்வலன்

கூர்நோக்கை சுகோத்ரன் மேல் பதித்து அமர்ந்திருந்தான். சுகோத்ரன் "இல்லை, என் உளம்கூடவில்லை என்று அவரிடம் கூறுக!" என்றான். ஸ்ரீமுகர் தலைவணங்கி அகன்றார்.

"இளவரசே" என அடக்கிய குரலில் உஜ்வலன் அழைத்தான். "அங்கு சென்று அமர்வதென்பது நீங்கள் இந்த அரசகுடியில் நீடிக்கிறீர்கள் என்பதற்கான சான்று. இங்கிருந்தே தொடங்குகிறது அனைத்தும்." சுகோத்ரன் "என் உளம் கூடவில்லை. இன்னமும் அது அலைபாய்ந்துகொண்டே இருக்கிறது" என்றான். ஸ்ரீமுகர் யுதிஷ்டிரனிடம் பேசிவிட்டு மீண்டு வந்து "அரசர் நீங்கள் வருவது கடமை என அறிவிக்கச் சொன்னார். இது நீங்களும் அமர்ந்திருக்கவேண்டிய வேள்வி என்றார்" என்று சொன்னார். சுகோத்ரன் "அரசரிடம் சொல்க! நான் முடிவெடுத்துவிட்டேன் என்றால் உடனே அங்கே வந்தமர்வேன் என்று" என்றான். ஸ்ரீமுகர் "ஆம்" என தலையசைத்து திரும்பிச்சென்றார்.

"இது என்ன அறிவின்மை..." என்று உஜ்வலன் கொதிப்புடன் சொன்னான். "ஐயமே இல்லை. இது அறிவின்மை அன்றி வேறல்ல." சுகோத்ரன் "நான் இன்னும் மறுக்கவில்லை" என்றான். "எனக்கு இன்னும் உள்ளிருந்து ஆணை வரவில்லை." உஜ்வலன் "அதை அவர் மறுப்பாகவே எடுத்துக்கொள்வார்" என்றான். "அதன்பொருட்டு என் உள்ளம் அறிவிக்காத ஒன்றை நான் செய்ய முடியாது" என்றான் சுகோத்ரன். உஜ்வலன் சலிப்புடன் தலையை அசைத்தான். "நான் சொன்ன சொற்களெல்லாம் வீண் என்று உணர்கிறேன்... இங்கே நான் வந்திருக்கவே கூடாது." சுகோத்ரன் அவனை திரும்பியே நோக்கவில்லை.

வேதம் முழங்கிக்கொண்டிருந்தது. புகை வேள்விப்பந்தலை மூடியிருந்தது. நீத்தோர் பல்லாயிரம் நுண்விழிகளுடன் வந்து வேள்விச்சாலையை நிறைத்திருந்தனர். ஒவ்வொரு சொல்லையும் அவர்கள் தலையசைத்து ஏற்றனர். ஒவ்வொரு நெய்க்கொடையையும் பொன்னிற நாநீட்டி பெற்றுக்கொண்டனர்.

விழிகள் கதிரவனைச் சென்றடைக!

காற்றைச் சென்றடைக மூச்சு!

நீ வாழ்ந்த வாழ்வுக்கு ஏற்ப

மண்ணுக்கோ சுடருக்கோ செல்க!

விண்ணின் தூய நீர்களில் திகழ்க!

அங்குள்ள தாவரங்களில்

நீ கொள்ளவிருக்கும் உடல்களுடன் நிலைகொள்க!

அனலோனே,

உடலில் பிறப்பில்லாத ஒன்று உறைகிறது

உன் வெம்மையால் அதை வெம்மைகொண்டு எழச்செய்க!

உன் தழலும் ஒளியும் அதை ஒளிகொள்ளச் செய்க

வேதங்களாகப் பிறந்தவனே

உன்னால் அழிக்கப்பட்ட அவனுடைய

மங்கலம்நிறைந்த உறுப்புகளுடன்

அவனை நல்லுலகுக்கு இட்டுச்செல்க!

கைகளக் கூப்பியபடி அமர்ந்திருந்த சுகோத்ரனின் விழிகளிலிருந்து நீர் வழிந்து கைகளிலும் மடியிலும் சொட்டிக்கொண்டிருந்தது. அவன் விழிநட்டு அந்தச் செஞ்சுடர் அலைவையே நோக்கிக்கொண்டிருந்தான். எவர் சொன்ன சொற்கள் இவை. எத்தனை தொன்மையானவை. அழிவற்றவை. என்றோ எவரோ சென்று முட்டிக்கொண்டிருக்கிறார்கள் இந்த மெய்மையில். அல்லது அன்னை குழவியை என அவர்களை மெய்மை அள்ளி எடுத்து நெஞ்சிலும் தலையிலும் சூடிக்கொண்டிருக்கிறது. முத்தமிட்டுச் சீராட்டியிருக்கிறது, மடியிலிட்டு முலையூட்டியிருக்கிறது.

தழலோனே

நீ வெம்மையாக்கி எரித்த

அனைத்தையும் மீண்டும் தண்மையாக்க வருக!

இங்கே நீராம்பல் மலர்க!

இளம்புல் செறிக. செடிகள் தழைத்தெழுக

குளிர்ந்தவளே ஈரநிலமே

பசும்புற்கள் நிறைந்தவளே இனிமையளிப்பவளே

பெண்தவளைகளுடன் இணைந்து இங்கே எழுக!

இந்தச் சுடரோனை மகிழ்விப்பாயாக!

மெல்ல மெல்ல வேதமும் அனலும் ஒன்றாயின. ஓம்புபவரும் நோக்குபவரும் அதன் பகுதியென்றாயினர். ஒரு தழல்வு

மட்டுமே அங்கிருந்தது. மிகமிகமிகத் தொன்மையானது. எரிபடுபொருள் இன்றி தன்னையே தழலென்றாக்கிக்கொண்டது. முதல்முடிவற்றது. அதன் நா சுழல எழுந்த பொறிகளிலிருந்து புடவிகள், விண்மீன்கள், கோள்கள் எழுந்து தெறித்துச் சுழன்று பறந்து இருளில் மறைந்துகொண்டிருந்தன.

நீர்ச்சுடர் - 57

பகுதி எட்டு : விண்நோக்கு – 7

சுகோத்ரன் கண்களை மூடி அந்தக் காலத்தையும் இடத்தையும் கடந்து வேறெங்கோ இருந்தான். உஜ்வலன் அசைந்து அசைந்து அமர்ந்தான். அவ்வப்போது சுகோத்ரனை நோக்கினான். வேள்வி தொடர்ந்து நடக்க வெளியே பறவைக்குரல்கள் மாறுபட்டன. கீழே கங்கையிலிருந்து எழுந்த காற்று மாறுபாடு கொண்டது. அதில் நீராவியின் வெம்மை கலந்திருப்பதை உடல் உணர்ந்தது. அதுவரை காட்டிலிருந்து கங்கை நோக்கிச் சென்று சுழன்று வந்த காற்று வடக்கு நோக்கி செல்லத் தொடங்கியது. புகையை அது முழுமையாக அள்ளிச்சென்றமையால் வேள்விச்சாலைக்குள் மூச்சுத்திணறல் குறைந்தது.

சாவே,

தேவர்கள் அணுகாத தனிமைகொண்டதும்

உனக்கு மட்டுமே உரியதுமான

வழியினூடாக அகன்று செல்க!

கண்கள் கொண்ட உன்னிடம்

செவிகள் கொண்ட உன்னிடம்

நான் மன்றாடுகிறேன்

எங்கள் மைந்தர்களையும் வீரர்களையும் வருத்தாதே

சாவின் வழியிலிருந்து அகலுங்கள்

தேவர்கள் செல்லும் வழியில் செல்லுங்கள்

நீண்ட நலமான வாழ்நாளை கொள்ளுங்கள்

வேள்விசெய்பவர்களே

செல்வத்துடனும் மைந்தர்களுடனும் செழித்திருக்க

தூயவர்களாக இங்கே தோன்றுங்கள்

கால்கள் மரத்துப்போகுமளவுக்குப் பொழுது கடந்துவிட்டிருந்தது. இறுதியாக எமனுக்குரிய தெற்குதிசையில் கரிய பட்டாடையை பரப்பி அதன்மேல் எருமைக்கொம்புகளை வைத்து எமனை அங்கே நிறுவினார்கள். காலவடிவனை அழைக்கும் வேதச்சொல் ஒலிக்கலாயிற்று.

எமனே

அங்கிரீசர்களான மூதாதையருடன்

இணைந்திருப்பவனாகிய நீ

இந்த வேள்வியிலே வந்து அமர்க!

கவிஞர்களால் பாடப்படும் இந்தச் சொற்கள்

உன்னை ஏந்தி இங்கே கொண்டுவருக!

அரசனே

உன்னை இந்தப் படையல்கள் மகிழ்வுறுத்துக!

எமனுக்குரிய அவி படைக்கப்பட்டது. பாண்டவர் ஐவரிடமிருந்தும் பெறப்பட்ட பொருட்கள் அனலில் இடப்பட்டன. வேள்விநிறைவு செய்து தௌம்யர் கைகளால் ஆணையிட வைதிகர் அனைவரும் இணைந்து வேதச்சொல் எழுப்பினர். கைகள் நாவுகள் என அசைந்து சொற்களாயின. அனல் எழுந்து குதித்து தலைசுழற்றியது.

வேதத்துணைவனே

நீ இந்த உலகில் இல்லாதவர்களும் இருப்பவர்களும்

அறியப்பட்டவர்களும் அறியப்படாதவர்களும் ஆகிய

எல்லா மூதாதையர்களையும் அறிந்தவன்

இங்கே முறையாகச் செய்யப்படும் வேள்வியை

ஏற்றருள்க!

அனலால் எரிக்கப்பட்டவர்களும்

அனலால் எரிக்கப்படாதவர்களும்

இச்சுடரின் அளிக்கப்படும் கொடையால்

விண்ணிலிருந்து மகிழ்வுகொள்க!

நீ அவர்களுடன் இணைந்து

மூச்சுலகை அடைக!

அங்கே நிறைவுகொள்க!

ஆம் அவ்வாறே ஆகுக!

ஆம்! ஆம்! ஆம்!

தௌம்யர் எழுந்துகொண்டு ஆணையிட யுதிஷ்டிரனும் இளையோரும் எழுந்து கைதொழுது நின்றனர். தௌம்யர் அவர்களின் தலைக்குமேல் அரிசியும் மலருமிட்டு வாழ்த்தினார். அவர்கள் அவரை அடிபணிந்து வணங்கினர். மும்முறை எரிகுளங்களைச் சுற்றிவந்து வணங்கி நிற்க தௌம்யர் அவர்கள் நெற்றியில் வேள்விக்கரியால் மங்கலக் குறியிட்டார்.

அவியன்னம் பகுக்கப்பட்டது. அதில் வேள்விக்காவலர்களுக்குரிய பங்கு தனியாக எடுக்கப்பட்டு ஐந்தாக பங்கிடப்பட்டது. தௌம்யர் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அளித்த வேள்வியன்னத்தை புதிய சுடுமண் தாலங்களில் எடுத்து தலையில் வைத்துக்கொண்டனர். பச்சையிலை மேல் வைக்கப்பட்ட தாலங்களுடன் கங்கை நோக்கி அவர்கள் சென்றனர்.

அவர்களுக்கு முன்னால் வெண்சங்கு ஊதியபடி ஒரு காவலன் சென்றான். தொடர்ந்து இரு ஏவலர் தரையில் வெள்ளைத் துணியை விரித்துச்செல்ல அதன்மேல் முதலில் யுதிஷ்டிரனும் பின்னர் மூப்புமுறைப்படி பிற பாண்டவர்களும் நடந்தனர். தொடர்ந்து அந்தணர் செல்ல இறுதியாக ஏவலர் சென்றனர்.

இருபுறமும் ஏவலர்களும் காவலர்களும் வாளும் வேலும் தாழ்த்தி தலைகுனிந்து நின்றனர்.

சுகோத்ரன் உஜ்வலனிடம் "வருக!" என கைகாட்டிவிட்டு முன்னால் சென்றான். அரசர்கள் சென்றபின் அந்த வழியில் அங்கே நீர்க்கடன் கொடுக்கும்பொருட்டு வந்துசேர்ந்திருந்தவர்கள் அனைவரும் நீண்ட நிரையாகச் சென்றனர். அவர்களுடன் சுகோத்ரனும் உஜ்வலனும் இணைந்து சென்றனர். சுகோத்ரனின் விழிகள் நிலைநட்டு நோக்கிழந்திருந்தன. உஜ்வலன் சூழ நோக்கிக்கொண்டு நடந்தான்.

கங்கைக்கரையில் விதுரரும் காவலர்தலைவர்களும் நின்றிருப்பதை சுகோத்ரன் கண்டான். விதுரர் கைகளை அசைக்க அதற்கேற்ப அங்கிருந்தவர்கள் செயலாற்றினர். அவருடைய முகம் கண்கள் சுருங்க, கடுமையான தோற்றத்துடனிருந்தது. சுகோத்ரன் அங்கே இளைய யாதவர் வரக்கூடுமா என எதிர்பார்த்தான். அவர் வரப்போவதில்லை என உணர்ந்திருந்தான். அவர் அங்கே என்ன செய்துகொண்டிருப்பார் என்று ஓர் எண்ணமெழுந்தது. அங்கிருப்பவர்கள் அனைவருமே ஒரு கணமேனும் அவரை நினைத்துக் கொள்ளாமலிருக்க மாட்டார்கள். அவன் பெருமூச்சுவிட்டான்.

அவர்கள் அணுகியபோது கூடிநின்றவர்களிடமிருந்து சொல்லில்லாத முழக்கம் ஒன்று எழுந்தது. சங்கொலி விம்மல் என எழுந்து ஓங்கி தேம்பி ஒலித்தது. வேதியர் எழுவர் அவர்களை எதிர்கொண்டு அழைத்துச்சென்று கங்கைநீரை அடைந்தனர். அவர்களுடன் பாண்டவர்கள் ஐவரும் நீரில் இறங்கி இடைவரை மூழ்கி நின்று வேள்வியன்னத்தை கங்கை நீரில் தலைக்குப் பின்புறம் சரித்துப் போட்டு ஏழுமுறை மூழ்கி

எழுந்தார்கள். கரையில் நின்றிருந்த வேதியர் வேதச்சொல் உரைத்தனர். அவர்கள் படியேறி வந்தபோது சங்குகள் முழங்கின.

கரையேறி வந்த பாண்டவர்களை சூதப்பூசகர் எழுவர் வரவேற்று அழைத்துச்சென்றார்கள். வேதியர் எழுவரும் திரும்பிநோக்காமல் மேலேறிச்சென்று ஒற்றைத்திரளாக நடந்து விழிகளிலிருந்து மறைந்தனர். ஏழு சூதர்களும் வழிகாட்ட பாண்டவர்கள் நடந்துசென்று காட்டுவிளிம்பில் புதர்களை விலக்கி அமைக்கப்பட்டிருந்த சிறிய வெளியில் களிமண் குழைத்து உருவாக்கப்பட்டிருந்த மேடையை அடைந்தனர். அதன்மேல் ஐந்து சிறிய பசுமண் கலங்கள் செம்பட்டு கொண்டு வாய்மூடிக் கட்டப்பட்டு, செங்காந்தள் மலர்சூட்டி வைக்கப்பட்டிருந்தன.

யுதிஷ்டிரரும் இளையோரும் அதை கைகூப்பி வணங்கியபடி நின்றனர். "ஏழு பிடி சாம்பல்" என்று உஜ்வலன் மெல்லிய குரலில் சொன்னான். "குருக்ஷேத்ரத்தில் எரிந்த அனைவருக்காகவும். அது நன்று. தீ அனைவரையும் ஒன்றெனக் கருதுகிறது. ஒரே சாம்பலென ஆக்குகிறது." சுகோத்ரன் திரும்பி நோக்கவில்லை. யுதிஷ்டிரனும் இளையோரும் அக்கலங்களை நிலம்படிய விழுந்து வணங்கினர். சூதர்கள் அவற்றை எடுத்து அளிக்க தலையில் ஏற்றிக்கொண்டனர்.

ஈமநிகழ்வுகளுக்குரிய தளர்தோல் குறுமுழவும் சிறுபறையும் எருதுக்கொம்புகளும் முழங்கின. வலிகொண்டு தேம்புவனபோல் இருந்தது அவற்றின் ஓசை. இசைக்கலன்களுடன் ஈமச்சூதர் பன்னிருவர் முன்னால் வர ஐவரும் சாம்பற்கலங்களை தலைக்குமேல் ஏற்றிக்கொண்டு

தொடர்ந்து நடந்துவந்தனர். யுதிஷ்டிரன் நடை தள்ளாடினார். பிற நால்வரும் துயிலில் நடப்பவர் போலிருந்தார்கள்.

கங்கையின் படித்துறைக்கு அருகே காடு வெட்டி விலக்கி, நிரப்பாக்கப்பட்டு மணல் விரித்திருந்த நீள்வட்ட வடிவ நிலத்திற்கு அவர்களை அழைத்துச்சென்றனர் சூதர். ஐவரும் அமர்வதற்கான தர்ப்பைப்புல் விரிக்கப்பட்ட பீடங்கள் இருந்தன. செம்பாலான கலங்களும் நீர்க்குடங்களும் ஒருக்கப்பட்டிருந்தன. மண்ணாலான ஏழு திரி இடப்பட்ட விளக்கு நிறைந்த எண்ணையின்மேல் சுடரொளி பரவியிருக்க எரிந்துகொண்டிருந்தது. அவர்கள் அக்கலங்களை இறக்கி வைக்க அவை வரிசையாக மண்ணில் அமைக்கப்பட்டன.

பாண்டவர்கள் சூதர் வழிகாட்ட அமர்ந்ததும் சூதர்கள் எதிரே அமர்ந்தனர். மும்முறை சங்கு முழங்கி அமைந்தது. கலங்களுக்கு மலர்மாலை சூட்டி வணங்கினர். ஈமச்சடங்குக்குரிய இசைக்கலன்களின் ஓசை வயிற்றை அதிரச் செய்தது. யுதிஷ்டிரன் திரும்பி நோக்க ஸ்ரீமுகர் அருகே சென்று பணிந்தார். அவர் சொற்களைக் கேட்டு திரும்ப ஓடிவந்து சுகோத்ரனிடம் "நீங்கள் பலியன்னம் சமைக்க வரவேண்டும் என்று அரசர் கோருகிறார்" என்றார்.

சுகோத்ரன் விழித்தெழுந்து "என்ன?" என்றான். "பலியன்னம் சமைக்க வந்து அமர்க என்கிறார் அரசர்" என்றார் ஸ்ரீமுகர். "செல்க இளவரசே, இதுவே உகந்த தருணம்... இதைவிட ஓர் அடையாளச்செயல் பிறிதில்லை" என்றான் உஜ்வலன். சுகோத்ரன் மேலும் தயங்கிய பின் "இல்லை, நான் என் ஆணையைப் பெறவில்லை" என்றான். ஸ்ரீமுகர் "இது இரண்டாவது அழைப்பு. இம்முறையும் அரசர் அதை வேண்டுகோளாகவே முன்வைக்கிறார்" என்றார்.

“நீங்கள் எதை அஞ்சுகிறீர்கள்?” என்று உஜ்வலன் சீற்றத்துடன் கேட்டான். சுகோத்ரன் மறுமொழி சொல்லாமல் நிற்க ஸ்ரீமுகர் அவன் சொல்லுக்காகக் காத்தார். சுகோத்ரன் “என் சொல் எழுமெனில் நான் வருகிறேன்” என்றான். ஸ்ரீமுகர் தலைவணங்கி திரும்பிச்சென்றார். அவர் சென்று சொல்ல யுதிஷ்டிரன் சலிப்பு கொண்டவர்போல திரும்பி நோக்கினார். “இங்கே நீர்க்கடனுக்கு நீங்கள் அமரவில்லை என்றால் ஒருவேளை ஒருபோதும் நீங்கள் குடித்தொடர்பை கோரமுடியாமலாகலாம்” என்றான் உஜ்வலன். சுகோத்ரன் பெருமூச்சுவிட்டு உடலை எளிதாக்கி கைகளை மார்பில் கட்டிக்கொண்டான்.

சூதர்கள் கொண்டுவந்த மண்கட்டிகளைக் கொண்டு, அவர்கள் வழிகாட்ட பாண்டவர்கள் அடுப்புகளை அமைத்தனர். அதன்மேல் புதிய கலங்களை அமைத்து எரிமூட்டினர். நீரூற்றி கொதிக்கவைத்து புல்லரிசியும் எள்ளும் நீரில் கழுவிக் களைந்து உள்ளே போட்டனர். அன்னம் கொதிக்கத் தொடங்கியதும் ஐந்துவகை காய்களை உள்ளே போட்டனர். பலியன்னங்களுக்கே உரிய கறைமணம் எழத்தொடங்கியது. புகையை காற்று வடக்காக அள்ளிக்கொண்டு சென்றது. காற்று நின்றபோது புகை சூழ யுதிஷ்டிரன் இருமினார்.

தொலைவில் கொம்பொலி கேட்டது. திரும்பி நோக்கிய உஜ்வலன் “மூதரசர்” என்றான். ஒரு இரட்டைக் குதிரைத்தேர் வந்து நின்றது. அதன் முன் கொம்பூதியபடி வந்தவர்கள் முன்னால் வந்து நிலைகொண்டனர். தேருடன் நடந்துவந்த யுயுத்ஸு பின்பக்கம் சென்று படிகளை பொருத்தினான். தேருக்குப் பின்னால் வந்த சங்குலன் திருதராஷ்டிரரின் தோள்களைப் பிடித்து மெல்ல இறக்கினான். அவர் நின்று

உடலை நிமிர்த்தி தலையை உருட்டி ஏதோ சொன்னார். பின்னர் அவன் தோளைப்பற்றியபடி கால் வைத்து நடந்து வந்தார்.

அவனுடன் வந்த சஞ்சயன் திருதராஷ்டிரரின் இடப்பக்கம் நடந்தான். அவர்களுக்கு முன் யுயுத்ஸு நடக்க அவர் நின்று நின்று நடந்து வந்தார். கொம்புகளுடன் வந்தவர்கள் அங்கேயே நின்றுவிட சங்கு முழக்கியபடி ஒரு வீரன் மட்டும் முன்னால் வந்தான். திருதராஷ்டிரர் மூச்சிரைப்புடன் பல இடங்களில் நின்றார். அங்கிருந்த மணத்தை உணர விழைபவர்போல மூக்கைச் சுளித்தபடி சுற்றுமுற்றும் நோக்கியபின் மீண்டும் நடந்தார். கூடிநின்ற அனைவருமே அவரையே நோக்கிக்கொண்டிருந்தனர்.

கங்கைக்கரையை அடைந்ததும் அவரை படித்துறையில் அமரவைத்தனர். அவர் கைகளை மடியில் கோத்து தலைகுனிந்து அமர்ந்தார். சுகோத்ரன் அவருடைய உடலின் பெருந்தோற்றத்தை விழிமலைக்க நோக்கிக்கொண்டு நின்றான். பாதாளப் பெருநாகங்கள் பின்னிப்பிணைந்து ஓர் உடலென்றானதுபோல, அவை முறுகி நெளிந்து நெகிழ்ந்து மீண்டும் முறுகிக்கொள்வதுபோல. உள்ளே சிக்கிக்கொண்ட பாறை ஒன்றை அவை இறுகி உடைத்து தூளாக்கிவிட முயல்வதைப்போல. அல்லது அவை தங்களைத் தாங்களே நெரித்துக்கொள்கின்றன.

திருதராஷ்டிரர் மெல்ல முனக யுயுத்ஸு குனிந்து அவர் சொல்லை கேட்டான். பின்னர் ஓடிச்சென்று விதுரரிடம் கூற அவர் அருகே வந்து நின்றார். திருதராஷ்டிரர் கைநீட்டி விதுரரை தொட்டார். அவருடைய கைகள் விதுரரின் தலையையும் தோளையும் வருடின. விதுரர் அழுகையை

அடக்கிக்கொண்டவராக கங்கையை நோக்கி முகம் திருப்பிக்கொண்டார். அமைச்சர் ஸ்ரீமுகர் ஓடி அருகணைய விதுரர் திருதராஷ்டிரரிடம் சொல்லிவிட்டு அப்பால் சென்று அவருக்கு ஆணைகளை இட்டார். அவர் பலிச்சோறு சமைக்கப்படும் இடம் நோக்கி சென்றார்.

சூதர்கள் அருகே நின்று மெல்லிய குரலில் வழிகாட்ட பாண்டவர்கள் அன்னத்தை சமைத்தனர். கலங்களிலிருந்து அன்னத்தை ஐந்து இலைகளில் படைத்தனர். அவற்றை ஏழு சிறு உருளைகளாக ஆக்கினர். அங்கே பேச்சென ஏதும் எழவில்லை. கங்கையின் அலைகளின் ஓசையும் அப்பாலிருந்து காட்டின் காற்றோசையும் எழுந்துகொண்டிருந்தன. எங்கோ முறுகக்கட்டியிருந்த எதுவோ அசைந்து அசைந்து முனகலோசை எழுப்பிக்கொண்டிருந்தது. நீரோட்டத்தில் இழுபட்ட படகா என சுகோத்ரன் திரும்பி நோக்கினான்.

கங்கைப்பரப்பில் ஒளி எழத் தொடங்கியிருந்தது. கரையோரக் காடு இருட்டுக்குள்தான் இருந்தது. கங்கையின் கரை முழுக்க மானுடர் செறிந்திருந்தனர். முதுசூதர் பாண்டவர்களின் குடித்தெய்வமான கொற்றவையை ஒரு கிடைக்கல் மேல் நீள்கல்லாக பதிட்டை செய்தார். அக்கல்லின்மேல் செந்நிறக் களபமும் குங்குமமும் பூசி செந்நிற பட்டுத்துணியை அணிவித்தார். செம்மலர்களைச் சூடி அவள் முன் சிறுநெய்விளக்கு ஒன்றை ஏற்றிவைத்தார். "குடித்தெய்வத்தை வணங்குக!" என்று சூதர் கூறியபோது யுதிஷ்டிரன் திரும்பி விழிகளால் துழாவி சுகோத்ரனை பார்த்தார். மெல்லிய குரலில் அவர் ஏதோ சொல்ல அங்கே நின்றிருந்த சிற்றமைச்சர்

மாதவர் தலைவணங்கியபின் பதற்றத்துடன் ஓடி சுகோத்ரன் அருகே வந்தார். "அரசர் அழைக்கிறார், வருக!" என்றார்.

"செல்க!" என்று உஜ்வலன் சொன்னான். "சென்று அமர்க... நீர்க்கடன் செய்வதற்குத்தான் நாம் வந்துள்ளோம்." சுகோத்ரன் தயங்கிய காலடிகளுடன் நடந்து மாதவருடன் சென்றான். அவனுடன் உஜ்வலன் உடன் சென்றான். சுகோத்ரன் அணுகுவதை முதுசூதர் ஓரவிழியால் நோக்கியபடியே தங்கள் சடங்குகளை தொடர்ந்தார்கள். சுகோத்ரன் யுதிஷ்டிரன் அருகே சென்று நின்றான். அவர் அவனிடம் அமரும்படி கைகாட்டினார். அவன் கைகூப்பியபடி நின்றான். அவர் அமர்க என மீண்டும் கைகாட்டினார். சகதேவன் அவனை வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தான். அவன் அமரப்போகிறவன்போல கால்களை சற்றே மடித்தான்.

அக்கணத்தில் வாளை உரசி உருவும் ஓசையுடன் ஒரு சிறு பறவை ஊடாகச் சீறிப்பறந்தது. திடுக்கிட்டு சுகோத்ரன் திரும்பி நோக்கினான். அப்பறவையை நோக்க முடியவில்லை. அவன் திரும்பி நோக்கியபோது கரையில் ஒரு கலைவைக் கண்டான். அங்கே மீண்டும் ஒரு கொம்பின் ஒலி எழுந்தது. அனைவரும் திகைப்புடன் திரும்பி நோக்க ஒற்றைக்குதிரை பூட்டப்பட்ட தேர் வந்து நின்றது. கொம்பூதி மீண்டுமொருமுறை ஊதி நுனி தழைத்து உடல் வளைத்து அகன்றான். தேரின் திரையை விலக்கி பூர்ணை இறங்கினாள். தொடர்ந்து இன்னொரு இளம்சேடி இறங்கி நின்றாள். இருவரும் உள்ளே கைநீட்டிப் பற்றி மிக மெல்ல குந்தியை இறக்கினார்கள். கூட்டத்திலிருந்து திகைப்போசை எழுந்தது.

விதுரர் பரபரப்புடன் சூழநோக்க ஸ்ரீமுகர் அருகே ஓடிவந்தார். அவர் விரைந்த சொற்களில் ஆணையிட ஸ்ரீமுகர் உடல்

குலுங்க குந்தியை நோக்கி ஓடினார். விதுரர் யுதிஷ்டிரனின் அருகே சென்றார். யுதிஷ்டிரன் எழமுயல முதுசூதர் "சடங்கின் நடுவே எதன்பொருட்டும் எழலாகாது, அரசே" என எச்சரித்தார். யுதிஷ்டிரன் தவிப்புடன் அமர்ந்துகொண்டார். விதுரர் "அவர்கள் இங்கே வரட்டும், அரசே" என்றார். "அவர்கள் இங்கே வரலாமா?" என்றார் யுதிஷ்டிரன். "வரலாகாது, ஆனால் வந்தபின் ஒன்றும் சொல்வதற்கில்லை" என்றார் விதுரர்.

குந்தி மிகமிக மெல்ல வந்துகொண்டிருந்தாள். "எதற்காக வருகிறார்?" என்று யுதிஷ்டிரன் கேட்டார். "எதன்பொருட்டென்றாலும் வந்துவிட்டார். அதை எதிர்கொள்வோம்" என்றார் விதுரர். "அவரால் இனி நன்றென ஏதும் நிகழ்வதற்கில்லை" என்றார் யுதிஷ்டிரன். "கடுஞ்சொல் உரைக்கும் இடமல்ல இது" என்றார் முதுசூதர். யுதிஷ்டிரன் சீற்றத்துடன் தலையை அசைத்தார். பின்னர் "நான் அவரை சென்று பார்க்கிறேன் என செய்தியனுப்புங்கள்" என்றார். பீமன் "மூத்தவரே, பொறுங்கள்" என்றான்.

ஸ்ரீமுகர் ஓடிவந்து "அமைச்சரே, இங்கே வரவேண்டியதில்லை, அரசரே அவரைப் பார்க்கவருவார் என்று அரசியிடம் சொன்னேன். அரசி என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. அந்த முதுசேடி அரசி இங்கே வரவே விழைகிறார் என்றாள்" என்றார். "வரட்டும்" என்றார் விதுரர். "என்ன இது, அமைச்சரே? என்ன நிகழ்கிறது இங்கே? நீர்க்கடன் என ஒன்று நிகழுமா இல்லையா?" என்றார் யுதிஷ்டிரன். சினத்தில் அவர் நடுங்கிக்கொண்டிருந்தார். பீமன் "மூத்தவரே, சொல் காக்க!" என்றான். யுதிஷ்டிரன் உறுமலோசையை எழுப்பினார்.

குந்தி நின்று விழப்போகிறவள் என சாய பூர்ணை பிடித்துக்கொண்டாள். "அவரால் நடக்க இயலாது. அவருடைய

உடலில் உயிர் தொற்றி நிற்கிறது... ஏன் இத்தனை நீண்ட நடை? நான் எழுந்து செல்கிறேன்" என்றார் யுதிஷ்டிரன். "என்ன ஆகும்? அனைத்துச் சடங்குகளையும் மீண்டும் செய்யவேண்டும், அவ்வளவுதானே?" முதிய சூதர் "அல்ல, அது மட்டும் போதாது. இங்கே நீத்தோர் வந்து கூடியிருக்கிறார்கள். அவர்களின் கண்களும் செவிகளும் நாவுகளும் காத்திருக்கின்றன. அவர்களை உதறிவிட்டுச் செல்வதென்றால் அவர்கள் அதை ஏற்கவேண்டும். மீண்டும் அழைத்தால் அவர்கள் வரவேண்டும்" என்றார்.

"என் ஊழ் இது" என்று யுதிஷ்டிரன் உடைந்த குரலில் சொன்னார். "மூதாதையருக்கும் நீத்தார்க்கும் நீர்க்கடன் செய்யக்கூட தகுதியற்ற பழியன் ஆகிவிட்டிருக்கிறேன். இப்புவியில் என்னைப்போல் கீழோன் எவருமில்லை." அவர் விம்மி முகம் தாழ்த்திக்கொள்ள எவரும் எதுவும் சொல்லவில்லை. சுகோத்ரன் நடுங்கிக்கொண்டு நின்றிருந்தான். அந்தப் பறவை எது என அவன் எண்ணம் தவித்தது. அது மெய்யாகவே பறவையா? பிறிதொரு பறவையும் அங்கே எங்கும் இல்லை. அது ஓர் ஒலி உடலென எழுந்தது.

குந்தி அணுகிவர அவர்கள் அவளை விழிமலைத்து நோக்கி நின்றனர். அவள் ஒற்றை அடிகளாக வந்துகொண்டிருந்தாள். வெண்ணிற புகைச்சுருள்போல எடையற்றிருந்தாள். சில தருணங்களில் அவள் காற்றிலாடுவது போலிருந்தது. சில தருணங்களில் அவள் உருவழிந்து வெளியில் கரைந்துகொண்டிருப்பது போலிருந்தது. வெண்ணிறக் கொடிபோல நின்ற இடத்திலேயே துவள்வது போலிருந்தது. நோக்கி நோக்கி சித்தம் எடைகொண்டது. அவன் நோக்கை

விலக்கிக்கொண்டு கங்கையை பார்த்தான். மீண்டும் நோக்கியபோதும் அவள் வந்துகொண்டிருந்தாள்.

குந்தி அருகணைந்தபோது அவன் உளம்களைத்து சலிப்புற்றுவிட்டிருந்தான். அங்கிருந்த அனைவருமே அவ்வண்ணம் ஆகிவிட்டிருந்ததை உடல் தளர்வுகள் காட்டின. குந்தி நின்றபோது அவள் கால்கள் தரையில் தொடவில்லை. இரு சேடியரும் அவளை தோள்பற்றித் தாங்கியிருந்தார்கள். அவள் மயங்கி விழிமூடி அவர்களின் மேல் படிந்திருந்தாள். பின்னர் மெல்ல முனகினாள். அவர்கள் அவளை மேலும் சுமந்து முன்னால் கொண்டுவந்தனர். அவள் முனகிக்கொண்டே இருந்தாள். தீராப் பெருவலி கொண்டவள்போல.

அவள் உடலெங்கும் மெல்லிய தசைத்துடிப்பு இருந்தது. மெலிந்து நரம்புக்கொத்துபோல் ஆகிவிட்டிருந்த கைகள் முறுக்கிக் கொண்டிருந்தன. உள்ளங்கைகள் வாடிக்கூம்பிய மலர்கள்போல உள்நோக்கித் திரும்பி சுருண்டிருந்தன. கால்களும் அவ்வாறே முறுகியிருக்க இரு பாதங்களும் வெவ்வேறு திசைகளில் திரும்பியிருந்தன. அவள் முகத்தின்மேல் மேலாடை விழுந்து கிடந்தது. அவளை ஏந்தி வந்த பூர்ணையின் விழிகள் மட்டும் மின்னிக்கொண்டிருந்தன.

பூர்ணை குந்தியை கால்களில் நிறுத்தி ஒற்றைக்கையால் பற்றிக்கொண்டாள். "அரசே, பேரரசி குந்தி உங்களிடமும் இங்கே கூடியிருக்கும் அனைவரிடமும் ஒன்று சொல்ல விரும்புகிறார்" என்றாள். கைகூப்பியபடி அமர்ந்திருந்த யுதிஷ்டிரன் அறியாமல் எழப்போக முதுசூதர் கையமர்த்தி அமரச்செய்தார். விதுரர் "கூறுக, அரசி!" என்றார். முதுசூதர் "இது ஈமநிலம். இங்கே நீத்தாருக்குரிய சொற்களன்றி எதுவும் சொல்லப்படலாகாது. இடுகாட்டிலும் ஈமநிலத்திலும் எடுக்கப்படும் வஞ்சினங்கள்,

விடுக்கப்படும் ஆணைகள் எவையும் நிலைகொள்ளவேண்டிய தேவையில்லை” என்றார்.

குந்தி மெல்லிய குரலில் ஏதோ சொன்னாள். பூர்ணை “அரசி ஈமநிலத்திற்குரிய சொற்களைச் சொல்லவே வந்திருக்கிறார்” என்றாள். பின்னர் அவள் கைகாட்ட ஏவலன் ஒருவன் நீர்க்குடுவையுடன் ஓடிவந்தான். அதை அவள் குந்தியின் வாயருகே நீட்டினாள். அவள் முலைக்காம்பை நாடும் கைக்குழவி என வாய் நீட்டி அதனைப் பற்றி உறிஞ்சினாள். நாலைந்து மிடறு உண்டதும் கண்களை மூடிக்கொண்டாள்.

அவள் முகத்திரை விலகி பின்னால் சரிந்தது. ஒடுங்கி வற்றிவிட்டிருந்த முகம் மிகமிகச் சிறிதாகத் தெரிந்தது. கன்னங்கள் குழிந்து வாய் முன்னால் நீட்டியிருந்தது. உதடுகள் இருப்பதாகவே தெரியவில்லை. சிறிய மூக்கு வெண்மெழுகாலானதுபோலத் தோன்றியது. அவள் கண்களை மூடி நின்றாள். நெற்றியின் இருபுறமும் நீலநரம்புகள் துடிப்பது தெரிந்தது. கழுத்தின் நரம்புகள் அசைந்தன. குரல்வளை பதைத்தது.

முனகலோசை எழுந்ததும் பூர்ணை அவளை நோக்கி குனிந்தாள். குந்தி எதிர்பாராதபடி தெளிவான குரலில் “யுதிஷ்டிரா, என் வயிற்றில் பிறந்த உன் தமையன் கர்ணனுக்கும் உரிய நீர்க்கடன்களைச் செய்க!” என்றாள். யுதிஷ்டிரன் கைகளைக் கூப்பியபடி, ஒடுங்கும் தோள்களுடன், நடுங்கும் உதடுகளுடன் கேட்டு அமர்ந்திருந்தார். “அனைவரும் அறிக... இதை இவ்வுலகே அறிக! நான் ஈன்ற மைந்தன் கர்ணன். கதிரவனை நோற்று என் வயிற்றில் அவனை ஏந்தி பெற்றெடுத்தேன்.”

அவள் குரல் நடுக்குடன் மேலும் ஓங்கியது. “அஸ்தினபுரியின் முதல் மைந்தன் அவனே. மணிமுடிக்குரியவனும் அவனே. அவன் அதை அறிந்திருந்தான். அவனிடம் நான் சென்று இரந்து பெற்ற இறுதிக்கொடையே பாண்டவர்களின் போர்வெற்றி. அவர்களின் உயிர் அனைத்தும் தமையன் தம்பியருக்கு அளித்த பரிசு மட்டுமே.” பீமன் எழுந்துவிட்டான். முதுசூதர் கைநீட்ட அவன் அவரை கையை அசைத்து விலக்கினான். அர்ஜுனன் தலைகுனிந்து நிலம்நோக்கி அமர்ந்திருந்தான். சகதேவனும் நகுலனும் கைகளை பற்றிக்கொண்டார்கள்.

“குடியச்சத்தால் அவனை நான் துறந்தேன். முடிவிழைவால் அவனை மறந்தேன். அவனுக்கு நான் முலையூட்டவில்லை. ஓர் இன்சொல்கூட கூறவுமில்லை. இன்று இந்த ஈமநிலையில் இந்தக் குடியவைமுன் சொல்லும் இச்சொற்களே என் மைந்தனுக்கு, என் மைந்தர்களில் தலைமகனுக்கு, நான் செய்யும் ஒரே கடன். அவன் இவ்வன்னையை பொறுத்தருளட்டும். தன் இளையோரை வாழ்த்தட்டும். விண்ணில் தன் மூதாதையருடன் அவன் நிறைவுற்று அமரட்டும்.” அவள் கைகூப்பினாள். விழிகள் வறண்டிருந்தன. செல்வோம் என தலையசைத்தாள். பூர்ணை அவளை பற்றிக்கொண்டாள். அவர்கள் திரும்ப நடந்தனர்.

யுதிஷ்டிரன் பெருமூச்சொலி எழுப்பினார். ஏதோ சொல்லவருபவர்போல விம்மி ஒரு விக்கலோசையுடன் இடப்பக்கமாகச் சரிந்து நினைவழிந்து விழுந்தார். சூதர்கள் அவரை நோக்கி கூடி குனிய “விலகுக... ஒன்றுமில்லை, விலகுக!” என்றார் விதுரர். அச்செய்தி ஒரு முழக்கமாக அங்கே கூடியிருந்தவர்கள் நடுவே பரவுவதை கேட்கமுடிந்தது.

எதையும் உணராதவளாக இரு சேடியரால் தாங்கப்பட்டு குந்தி தன் தேர் நோக்கி சென்றாள்.

நீர்ச்சுடர் - 58

பகுதி எட்டு : விண்நோக்கு – 8

கங்கைக்கரை எங்கும் ஓசைகளும் உடலசைவுச்சுழல்களும் உருவாயின. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் நிலையழிய அச்சூழலே கொந்தளித்துக் கொண்டிருந்தது. ஸ்ரீமுகர் அங்குமிங்கும் ஓடினார். தொலைவில் குந்தியின் தேர் கிளம்பிச் சென்றதை காணமுடிந்தது. ஸ்ரீமுகர் அங்கிருந்து உடல் குலுங்க ஓடி அருகணைந்தார். எதையோ மறந்தவர்போல திருதராஷ்டிரரை நோக்கி சென்றார். அவரிடம் ஓரிரு சொற்களைச் சொல்லிவிட்டு திரும்பிவந்தார்.

விதுரரின் கையசைவாலும் சிறுசொற்களாலும் விடுக்கப்பட்ட ஆணைகள் பரவ சற்றுநேரத்திலேயே அங்கிருந்த அத்தனை ஓசைகளும் கலைவுகளும் அடங்கி கூட்டம் இல்லையென்றாகியது. விதுரர் சென்று திருதராஷ்டிரரிடம் பணிந்து அனைத்தையும் விளக்கிவிட்டு திரும்ப வந்தார். அதற்குள் சூதர்கள் யுதிஷ்டிரனை எழுப்பி அமரச்செய்து முகத்தில் நீர் தெளித்தனர். நீர் அருந்தக்கூடாது என முதுசூதர் கையசைவால் தடுத்தார்.

யுதிஷ்டிரன் சற்றுநேரம் எங்கிருக்கிறோம் என்று தெரியாதவர்போல் விழிமலைத்திருந்தார். பின்னர் உணர்வுகொண்டு ஓசைமிக்க கேவல்களுடன்

அழத்தொடங்கினார். பீமனும் நகுலனும் சகதேவனும் வெறுமனே நோக்கிக்கொண்டிருக்க அர்ஜுனன் தலைகுனிந்து அங்கே இல்லாதவன்போல் தோன்றினான்.

முதுசூதர் "அரசே, அழுவதற்கு இன்னமும் முழு வாழ்நாளும் உள்ளது. இது நீத்தாரின் தருணம். அவர்கள் உங்களுக்காகக் காத்திருக்கிறார்கள்" என்றார். யுதிஷ்டிரன் அதை கேட்கவில்லை என்று பட்டது. முதுசூதர் உரக்க "அரசே, நீங்கள் எவருக்காக அழுகிறீர்களோ அவரும் இங்குள்ளார். உங்கள் மூத்தவர், அங்கநாட்டரசராகிய வசுஷேணன்" என்றார். யுதிஷ்டிரன் திடுக்குற்றவர்போல நிமிர்ந்து நோக்கினார். "ஆம், அவரும் இங்கிருப்பார். அது அவருடைய அன்னைக்கு அவர் அளித்த ஆணை... நீர்க்கடன்களை செய்க!" என்றார் முதுசூதர்.

யுதிஷ்டிரன் "என் மூத்தவர்..." என்றார். "சுடரை நோக்குக! அவர் உங்கள்மேல் அளிகொண்டு இங்கே வந்திருக்கிறாரா என உசாவுக!" என்றார் முதுசூதர். ஒரு மலரை அவரிடம் அளித்து அதை அந்தக் கலத்தின்மேல் இடும்படி கைகாட்டினார். யுதிஷ்டிரன் அதை சாம்பல்கலத்தின் மேல் இட்டார். இனிய தென்றல் ஒன்று அப்பகுதியைச் சூழ்ந்து ஆடைகளையும் குழல்களையும் அசையவைத்துக் கடந்துசென்றது. "ஆம்" என்றார் யுதிஷ்டிரன். "அவர் என்னை வாழ்த்துகிறார்."

"அவ்வுலகில் அவர்கள் அனைவருமே தந்தையர்" என்று முதுசூதர் சொன்னார். "அங்கே வஞ்சங்கள் இல்லை. வஞ்சம்கொண்டோர் வாழும் உலகம் இன்னொன்று. இருண்டது, ஆழம் நிறைந்தது. அங்கிருந்து எழும் காற்றில் எரிமணம் இருக்கும்." யுதிஷ்டிரன் பெருமூச்சுவிட்டார். "அன்னம் அளியுங்கள், அரசே. உங்கள் மூத்தாருக்கு நீங்கள் செய்ய இனி எஞ்சியிருப்பது அது ஒன்றே" என்றார் முதுசூதர்.

யுதிஷ்டிரன் நடுங்கும் கைகளுடன் மீண்டும் அன்னத்தை பகுத்தார். சூதர் ஆணையிட பாண்டவர்கள் அனைவரும் மூன்று உருளைகளை இலையில் எடுத்து தாலத்தின்மேல் வைத்து கொண்டுசென்று காட்டின் விளிம்பில் பாறைமேல் காகங்களுக்குப் படைத்தனர். ஐவரும் நின்று கைகளை தட்டியபோது காகங்கள் காட்டின் இருளே துளித்துச் சொட்டி நிற்பதுபோல் மரக்கிளைகளில் தோன்றின. அவை அணுகி வரவில்லை. அங்கேயே எழுந்து கலைந்துகொண்டிருந்தன.

முதுசூதர் "அவை வரும் தருணம் ஒன்று உண்டு" என்றார். யுதிஷ்டிரன் "அவர்களில் எவர்?" என்றார். "அதை நாமறிய இயலாது. ஆனால் சில தருணங்களில் நாம் அறியவும் கூடும். சிலபோது கனவுகளில்" என்றார் முதுசூதர். "அழையுங்கள், அழைத்தபடியே இருங்கள்." யுதிஷ்டிரன் மீண்டும் மீண்டும் கைகளை தட்டினார். காகங்கள் அணுகி வரவில்லை. "முதலில் வரவேண்டியவர் உங்கள் குடிமூத்தவராகிய பால்ஹிகர்" என்றார் முதுசூதர். "வேண்டிக்கொள்க! அவர்கள் வராமல் இங்கிருந்து நீங்கள் செல்லமுடியாது என்று உணர்க!"

"ஆம், அவர்கள் வராவிட்டால் இங்கேயே உயிர்துறப்பதே செய்யக்கூடுவது" என்றார் யுதிஷ்டிரன். அவர்கள் கைகளை தட்டிக்கொண்டிருந்தனர். பொழுது சென்றுகொண்டிருந்தது. கங்கைக்கரையில் கூடி நின்றவர்கள் பொறுமையிழப்பது தெரிந்தது. திருதராஷ்டிரர் எழுந்து நிற்க விதுரர் அவரை நோக்கி சென்றார். யுதிஷ்டிரன் வெறிகொண்டவர்போல கைகளை தட்டிக்கொண்டிருந்தார். காகங்கள் எழுந்து எழுந்து அமைந்தன. பின்னர் ஒட்டுமொத்தமாக எழுந்து வானில் சுழன்று காட்டுக்குள் சென்று மறைந்தன.

யுதிஷ்டிரனின் விசை மேலும் கூடியது. நகுலனும் சகதேவனும் கைதட்டுவதை நிறுத்திவிட்டனர். மீண்டும் காகங்கள் வந்து கிளைகளில் அமர்ந்தன. அவர்களை நோக்கி கரிய அலகுகளைக் காட்டி கரைந்தபடியே இருந்தன. சலித்துச் சோர்ந்து தலைகுனிந்து யுதிஷ்டிரன் கைகளை தட்டிக்கொண்டே இருந்தார். பீமன் கைகளை ஓங்கி அறைந்தபடி முன்னால் சென்று "பிதாமகரே, வருக... இது என் அழைப்பு. உங்கள் மைந்தனின் ஆணை இது, வந்து எங்கள் அன்னத்தைக் கொள்க!" என்றான்.

கரிய காகம் ஒன்று எழுந்து நிலத்தில் அமர்ந்தது. பின்னர் நடந்து முன்னால் வந்து தயங்கி தலை சரித்து நோக்கியது. சிறகடித்து எழுந்து அன்னத்தின் அருகே வந்து அமர்ந்து கொத்தி அண்ணாந்து விழுங்கியது. கரைந்தபடி எழுந்தமர்ந்து மீண்டும் கொத்தியது. அர்ஜுனன் கைதட்டியபடி முன்னால் சென்று "மூத்தவரே, உங்கள் இளையோனுக்கு அருள்க! வருக!" என்றான். இன்னொரு காகம் பறந்து வந்து அமர்ந்தது. யுதிஷ்டிரன் கண்ணீருடன் புன்னகைத்தார்.

பீமன் "தார்த்தராஷ்டிரர்களே, உடன்பிறந்தவர்களே வருக. அன்னம் கொள்க... நிறைவுறுக!" என்றான். காகங்கள் ஒவ்வொன்றாக வந்து அன்னம் கொள்ளத்தொடங்கின. கூட்டத்திலிருந்து மூதாதையரை வாழ்த்தும் ஓசைகள் எழுந்தன. திருதராஷ்டிரர் கைகளை கூப்பிக்கொண்டு தலைகுனிந்து அமர்ந்திருந்தார். நூற்றுக்கணக்கான காகங்கள் வந்தன. அவை எழுப்பிய பூசல் ஓசை கங்கைக்கரைவரை கேட்டது. திருதராஷ்டிரர் திரும்பி செவிகூர்ந்தார். கைகளை விரித்து தலையை அசைத்து உறுமினார்.

திரும்பி வந்தபோது யுதிஷ்டிரன் தலைகுனிந்து அழுதுகொண்டிருந்தார். சூதர் ஒருவர் அவர் அருகே, அவர் தளர்ந்தால் ஏந்தும் பொருட்டு உடன்நடந்தார். "சற்றுநேரம்தான்... ஆனால் எத்தனை எண்ணங்கள். எவ்வளவு ஐயங்கள், தற்பழிகள்..." என்றார். சகதேவன் "அவர்கள் வந்துவிட்டார்கள்" என்றான். "ஆம், அவர்கள் வரும் வரை வராமல் ஒழிவார்களோ என்று எண்ணினோம் அல்லவா? அதுவே நம் கெடுநரகம்" என்றார் யுதிஷ்டிரன்.

அவர்கள் மீண்டும் வந்தமர்ந்ததும் யுதிஷ்டிரன் நிமிர்ந்து நோக்கினார். சுகோத்ரனிடம் அமர்க என்று கைகாட்டினார். சுகோத்ரன் "இல்லை, தந்தையே" என்றான். "நான் நீர்க்கடன்கள் செய்யப்போவதில்லை" என்றான். யுதிஷ்டிரன் திகைப்புடன் "நீ அதற்காகவே வந்தாய்" என்றார். "ஆம், ஆனால் இப்போது வேண்டாம் என முடிவெடுத்தேன். எனக்கான ஆணை இப்போது வந்தது. இந்தப் பொறுப்பை நான் எடுத்துக்கொண்டால் இப்பழிக்கும் இத்துயருக்கும் நான் பொறுப்பாகிறேன். இவற்றை நான் துளியும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இவை எவையும் என்னுடையவை அல்ல" என்றான்.

யுதிஷ்டிரன் விழிகள் பளபளக்க அவனை ஏறிட்டு நோக்கிக்கொண்டிருந்தார். சகதேவனின் முகத்தில் எவ்வுணர்வும் வெளிப்படவில்லை. சுகோத்ரன் முதுசூதரிடம் "என் பெயர் இங்கே சொல்லப்படலாகாது, சூதரே. இக்குலத்தில் இருந்தும் இக்குருதியின் சரடில் இருந்தும் நான் என்னை முற்றாக விடுவித்துக்கொள்கிறேன்" என்றான். முதுசூதர் "இது உங்கள் குலதெய்வம், இளவரசே. நீங்கள் இவளை விட்டாலும் இவள் உங்களை விடாவிட்டால் அகன்றுசெல்ல முடியாது" என்றார்.

“நான் என்ன செய்யவேண்டும்?” என்று சுகோத்ரன் கேட்டான். “ஒரு மலரையும் ஒரு பிடி அரிசியையும் எடுத்து அவள் முன் வையுங்கள். அன்னையே உன்னை துறக்க அருள்செய்க என்று கோருங்கள். அன்னையின் ஆணை வரும்” என்றார் முதுசூதர். யுதிஷ்டிரன் “மைந்தா, வேண்டாம்” என்றார். அவன் அவரை திரும்பி நோக்கவில்லை. அங்கிருந்த எவரும் அங்கில்லை என்றே உணர்ந்தான். அவன் உள்ளம் அலையற்றிருந்தது.

சுகோத்ரன் முதுசூதர் அளித்த செம்மலரிதழையும் அரிசிமணிகளையும் எடுத்து தலைமேல் வைத்து வணங்கி கொற்றவைப் பதிட்டையின் மேல் போட்டு உதடுகளுக்குள் வேண்டிக்கொண்டான். “அன்னையே, பெற்றிடும் அன்னை மகவை என என்னை விடுதலை செய்க! என்னை வாழ்த்துக! இனி ஒரு போதும் உன்னை நினைக்காமலிருக்க எனக்கு அருள்செய்க!” எரிந்துகொண்டிருந்த நெய்விளக்கு நீர்த்துளி பட்டதுபோல சிறு வெடிப்போசையுடன் சுடர் துள்ளியது. முதுசூதர் “அன்னையின் ஆணை... நீங்கள் அன்னையை துறக்கலாம். வேறு தெய்வங்களுக்கு உங்களை கொடுக்கலாம்” என்றார்.

சுகோத்ரன் மீண்டும் ஒருமுறை கொற்றவையை வணங்கிவிட்டு பின்னடி வைத்தான். திரும்பி கங்கையையும் கூடியிருந்தவர்களையும் நிலம் தொடக் குனிந்து வணங்கினான். பின்னர் யுதிஷ்டிரனை நோக்கி திரும்பி தலைதாழ்த்தி வணங்கி “அரசே, எனக்கு விடைகொடுங்கள்” என்றான். யுதிஷ்டிரன் நடுங்கும் தலையுடன் அவனை நோக்கிக்கொண்டிருந்தார். “நான் இங்கிருந்து கிளம்புகையில் ஒரு பொடி மண்பருவோ ஒரு நினைவுத்துளியோ என்னிடம் எஞ்சலாகாதென்று அருள்க!” என்றான்.

“நீ நலம்வாழவேண்டும், இளைஞனே” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “இத்துயரத்தின் துளிகூட உன்னிடம் எஞ்சாதொழிக! இவையனைத்திலும் இருந்து முழு விடுதலை நிகழ்க!” சுகோத்ரன் பாண்டவர் ஐவரையும் பொதுவாக வணங்கிவிட்டு பின்னால் நகர்ந்தான். உஜ்வலன் அவனை ஒட்டி தானும் வந்தான். அங்கே நிகழ்வன எவ்வாறோ அனைவருக்கும் தெரிந்திருந்தது. மெல்லிய சொல்முழக்கம் அவர்களை சூழ்ந்திருந்தது. விழிகள் அவர்கள் மேல் படிந்திருந்தன.

அவர்கள் கங்கைக்கரைக்கு வந்ததும் யுயுத்ஸு “ஷத்ரியரே, நீங்கள் குடிதுறப்பதென்றால் குலத்தையும் துறப்பதென்றே பொருள்” என்றான். “அதை இங்கே அறிவியுங்கள். உங்கள் குலத்தோர் உங்களுக்கு விடைகொடுக்கட்டும்.” சுகோத்ரன் “ஆம், நான் ஷத்ரிய குலத்தையும் துறக்கவே எண்ணுகிறேன்” என்றான். யுயுத்ஸு அங்கிருந்த முதிய காவலரை நோக்கி “ஷத்ரியன் தன் குலத்தை துறக்க என்ன நெறி, முதியவரே?” என்றான்.

“அது அரிதாகவே நிகழ்கிறது... தானே குலம்துறப்போர் இல்லை. குலம்துறப்புத் தண்டனை அளிக்கப்படுவதுண்டு. அப்போது சில நெறிகள் கடைப்பிடிக்கப்படும்” என்று அவர் சொன்னார். “குடிமூத்தவர் ஒருவரிடம் அவர் தன் வாளையும் குண்டலங்களையும் திருப்பி அளிக்கவேண்டும். தன் இடைக்கச்சையைக் கழற்றி இடப்பக்கமாக வீசவேண்டும். அவ்வாறு செய்கையில் ஷத்ரியக் குடியினர் அவருக்குச் செல்க செல்க எனச் சொல்லி விடை அளிக்கவும் வேண்டும்.”

“ஆம், அவ்வாறே” என்றான் சுகோத்ரன். தன் காதிலிருந்த குண்டலங்களைக் கழற்றினான். இடையிலிருந்த குறுவாளையும் எடுத்துக்கொண்டு திருதராஷ்டிரரை அணுகி

“மூதாதையே, கொள்க என் குலத்து அடையாளங்களை! என்னை விடுவித்தருள்க!” என்றான். திருதராஷ்டிரர் கண்ணீரோடு நெஞ்சுடன் கைசேர்த்து அமர்ந்திருந்தார். அவன் அவற்றை அவர் காலடியில் வைத்தான். “நன்று, மைந்தா. இது உனக்கு நலமே பயக்கும். இனி உன் வழியில் ஒரு துளிக் குருதியும் இல்லாமலாகுக! ஒரு பழிச்சொல்லும் உன் செவியை அடையாமலாகுக! உன் நிறைவு நிகழ்க!” என்றார் திருதராஷ்டிரர்.

அவன் தன் இடையிலிருந்து கச்சையை உருவி இடப்பக்கமாக வீசி எறிந்தான். கூட்டத்தினர் ஓசையில்லாமல் நோக்கி நின்றனர். அவன் அவர்களுக்காக காத்து நின்றிருந்தான். ஓசை ஏதும் எழவில்லை. யுயுத்ஸு “ஷத்ரியர்களே, இக்குலத்தை உதறுவது அவருக்கு விடுதலை என்றால் குரலெழுப்புக!” என்றான். சற்றுநேரம் அமைதி நிலவியது. பின்னர் ஒரு முதியவர் “செல்க! செல்க!” என்றார். கூட்டம் “செல்க! செல்க!” என முழக்கமிட்டது.

சுகோத்ரன் நதிக்கரையின் மணல்சரிவில் ஏறிச்செல்ல உஜ்வலன் உடன் வந்தான். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. சுகோத்ரன் தன் குடிலுக்கு வந்ததும் “நான் கிளம்புகிறேன்” என்றான். “எங்கு?” என்று உஜ்வலன் கேட்டான். “இங்கிருந்து கிளம்புகிறேன்... பெரும்பாலும் ஆசிரியரிடமேதான் சென்று சேர்வேன் என எண்ணுகிறேன். ஆனால் கிளம்புகையில் அம்முடிவை எடுக்கவில்லை” என்றான் சுகோத்ரன். “நானும் உடன் வருகிறேன்” என்றான் உஜ்வலன்.

அவர்கள் தங்கள் பொதிகளுடன் நடந்தனர். உஜ்வலன் பேசாமல் காட்டை விழி அலைத்து நோக்கியபடி நடந்தான். சுகோத்ரன் "நீர் எண்ணியது நிகழவில்லை அல்லவா?" என்றான். "ஆம், ஆனால் அதில் பிழையெல்லாம் இல்லை. மண்ணை கொள்வது நல்லது. மண்ணை விடுவது அதைவிட நல்லது" என்றான் உஜ்வலன். சுகோத்ரன் புன்னகையுடன் திரும்பி அவனை நோக்கினான். உஜ்வலன் "நான் என்றுமே புறம்சார்ந்தவன்" என்றான்.

"இது என் ஊழ் என உணர்ந்தேன்" என்றான் சுகோத்ரன். "ஊழ் என்று கொள்ளலாம். இது உங்களுக்குரிய நல்முடிவு. உங்களை நீங்கள் கண்டுகொண்டீர்கள். ஆகவே இம்முடிவை எடுக்க இயன்றது" என்றான் உஜ்வலன். "ஒவ்வொருவரும் கவ்விக்கொண்டிருப்பது உடைமைகளை அல்ல, விழைவை அல்ல, பற்றை அல்ல, துயரத்தையே. அவர்களை அது கவ்விக்கொண்டிருப்பதாக எண்ணுகிறார்கள்" என்றான் சுகோத்ரன். "நூல்கள் மீளமீளச் சொல்வதுதான்..." என்றான் உஜ்வலன்.

அவர்கள் கங்கையை வந்தடைந்தனர். அங்கே அப்பொழுதில் எவருமில்லை. பந்தங்கள் அணையக்குறுகி கரி உமிழ்ந்து எரிந்துகொண்டிருந்தன. படகுகளில் துடுப்புகளும் இல்லை. சுகோத்ரன் படகோட்டிகள் எவராவது இருக்கிறார்களா என்று பார்த்தான். அதன் பின்னரே படகுத்துறையின் பலகை அடுக்குகளுக்கு அப்பால் ஒருவன் கிடப்பதை கண்டான். "எழுப்புக அவனை!" என்றான். "பாவம் கிழவன்" என்றபடி உஜ்வலன் தயங்கினான். சுகோத்ரன் முன்னால் சென்று அவனை கைகளால் உலுக்கி "படகுத்துறைவரே, எழுக! எழுக!" என்றான்.

அவன் எழுந்து அமர்ந்தான். விழிகள் பித்தர்களுக்குரியவை போலிருந்தன. தாடி கிழிந்த ஆடைபோல நூல்களாகத் தொங்கியது. "படகை ஓட்டலாகுமா? நான் இங்கிருந்து செல்லவேண்டும்" என்றான் சுகோத்ரன். "ஆம்" என்றபடி அவன் எழுந்து வந்தான். தளர்ந்த முதியவன் என்று தோன்றிய கணமே அவன் பறவை என தாவி நீரில் ஆடிய படகில் நின்றான். சுகோத்ரன் படித்துறையில் ஏறி மெல்ல பலகைமேல் நடந்து படகில் சென்று அமர்ந்தான்.

உஜ்வலன் பலகைமேல் ஏறியபோது அது ஆடியது. அவன் கைவிரித்து நடனம்போல் ஆடி "ஊழ்நடனம்!" என்றான். சுகோத்ரன் நகைத்து "வருக!" என்றான். உஜ்வலன் அவன் அருகே வந்தமர்ந்தான். "விட்டுச்செல்லும் இடங்கள் அழகுகொள்கின்றன" என்றான் உஜ்வலன். "செல்லவிருக்கும் இடங்கள் பேரழகு கொள்கின்றன." "எதிலேனும் நிலைகொள்வீரா நீர்?" என்றான் சுகோத்ரன். உஜ்வலன் "உங்கள் மொழியையே சற்று மாற்றிச் சொல்கிறேன், நிலைகொள்ளுதலே துயரம்" என்றான். சுகோத்ரன் நகைத்தான்.

"அரிய கருத்து... எனக்கே விந்தையாகத் தோன்றுகிறது. நிலைகொள்வதற்கு நிலமென்று இருப்பவை அனைத்தும் நேற்றின் தொடர்ச்சிகளே. ஆகவே அவை அனைத்தும் துயரங்களே" என்ற உஜ்வலன் "இதை ஏதேனும் நூலில் எழுதிச் சேர்த்துவிடலாமா?" என்றான். "ஏன் தனி நூலாக எழுதினால் என்ன?" என்று சுகோத்ரன் துடுப்பை நீரிலிட்டபடி கேட்டான். "நான் அறிந்தவரை நூல்களில் கொண்டாடப்படும் வரிகளெல்லாமே இடைச்செருகல்கள்தான்" என்றான் உஜ்வலன். "ஏன்?" என்றான் சுகோத்ரன். "நூல்கள் உருவாகி படிக்கப்பட்டு பல கோணங்களில் ஏற்றும் மறுத்தும் உசாவப்பட்டு

தெளிந்தபின் அவற்றில் எஞ்சுமிடம் ஒன்று கண்டடையப்படுகிறது. அந்த இடமே அந்நூலின் மையம். அங்கே அந்நூலில் இருந்து கடைந்து திரட்டி எடுக்கப்பட்ட சொல் சேர்க்கப்படுகிறது. அந்நூலின் மெய்மை அதுவே" என்றான் உஜ்வலன்.

"என்ன சொல்கிறீர்? வெறுமனே பேச்சுக்கென பேசலாகாது. பல நூல்களில் வெற்றுவரிகளே இடைச்செருகல்களாக அமைந்துள்ளன" என்று சுகோத்ரன் சொன்னான். "ஆம், ஆனால் அந்த வெற்றுவரிகள்தான் அவற்றின் மையம் போலும்" என்றான் உஜ்வலன். "மாபெரும் மெய்நூல்களில் அமையும் பொருளிலா வரிகளுக்கு என்ன இலக்கு?" என்றான் சுகோத்ரன். "அந்த மாபெரும் மெய்மையின் நடுவே ஒரு அறிவின்மை திகழ்ந்தால்தான் அதற்கு பொருள் முழுமை கொள்கிறதோ என்னவோ" என்றான் உஜ்வலன். "உம்மிடம் பேச என்னால் இயலாது" என்று சுகோத்ரன் சொன்னான்.

படகோட்டி துடுப்புகளை துழாவிக்கொண்டிருந்தான். காலை நன்கு விடிந்திருந்தாலும் விண்மீன்கள் தெரிந்தன. உஜ்வலன் விண்மீன்களைப் பார்த்துக்கொண்டு "நெடுநாட்களாகின்றது பகலில் விண்மீன்களை நோக்கி" என்றான். சுகோத்ரன் மேலே நோக்கி "ஆம்" என்றான். படகு கங்கையின் அலைகளுக்கு மேல் எழுந்து சென்றது. ஊசல் என எழுந்தாடியது. படகோட்டி துடுப்பை வலிந்து செலுத்தவில்லை. பாய்கள் இல்லையென்றாலும் காற்றே படகை தள்ளிக்கொண்டு சென்றது.

"காற்று ஏன் இத்தனை எடைகொண்டிருக்கிறது? மூச்சுத் திணறுகிறது" என்றான் சுகோத்ரன். "காற்றில் உங்கள் உடன்பிறந்தார் நிறைந்திருக்கிறார்கள் போலும்" என்றான்

உஜ்வலன். சுகோத்ரன் அவனை திரும்பி நோக்கினான். அவனுடைய பற்கள் ஒளியுடன் தெரிந்தன. "ஆம், மெய்யாகவே அவர்கள் சூழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் எனக்கு ஆணையிட்டனர்" என்று சுகோத்ரன் சொன்னான்.

உஜ்வலன் "நீங்கள் நிமித்தநூலை இன்னமும் நம்புகிறீர்களா? அது நாம் பிறருக்குச் சொல்லவேண்டியது அல்லவா?" என்றான். சுகோத்ரன் அதை கேளாதவனாக "செல்க என அவர்கள் ஆணையிட்டனர். உதறிச்செல்க என்றனர். ஒட்டியிருப்பதும் பற்றுகொண்டிருப்பதும் அல்ல. விட்டுச்செல்வதே உறவுகளின் நிறைவு என்றனர்" என்றான். "ஒற்றைக் கீச்சொலி... கூரியது. வாள் என வெட்டி என்னை அறுத்தது."

"ஒரு சொல்லுக்கு அத்தனை பொருளா?" என்று உஜ்வலன் நகைத்தான். "ஒருசொல்... அதனூடாக நெடுந்தொலைவு செல்லமுடியும்" என்றான் சுகோத்ரன். உஜ்வலன் "செல்லுங்கள்... நான் அறிந்தது ஒன்றே. பற்றுக, பற்றமுடியாவிட்டால் விடுக! இரண்டுக்கும் பொருள் ஒன்றே" என்றபின் கால்நீட்டி படகில் படுத்துக்கொண்டான். "இனிய அசைவு. தொட்டில் போலிருக்கிறது" என்றான். சற்றுநேரத்திலேயே அவனுடைய மூச்சின் ஒலி எழுந்தது.

படகோட்டி மேலும் துழாவிக்கொண்டிருந்தான். பின்னர் நிறுத்திவிட்டான். சுகோத்ரன் "நீர் குகரா?" என்றான். "ஆம், என் பெயர் நிருதன்" என்று அவன் சொன்னான். அவன் கைகள் படகில் தாளமிட்டன. மெல்லிய குரலில் அவன் பாடத்தொடங்கினான். பாடவேண்டாம் என்று சொல்ல சுகோத்ரன் விழைந்தான். ஆனால் முதல் வரியே அவனை செவிகொடுக்கச் செய்தது.

*'அன்னையே என்ன நினைக்கிறாய்**?*

*எதற்காக நீ மெல்ல சிரித்தாய்**?*

*ஜனகன் மகளே**, பூமியின் வடிவே**,*

*பொன்றாப் பெரும்பொறையே என்ன நினைத்தாய்**?*

*எதற்காக நீ மெல்ல சிரித்தாய்**?'*

எந்தப் பாடல் அது? எங்கோ கேட்ட பாடல். ஆனால் எங்கே? மிகத் தொன்மையானது. படகோட்டிகள் பாடுவது. அவர்கள் தங்கள் படகில் ஏறி கங்கையைக் கடந்து கானேகிய சீதையை அப்பாடல் வழியாக நினைவில் பொறித்திருக்கிறார்கள்.

'அன்னையே சொல்

எதற்காக நீ புன்னகை செய்தாய்?

உன் செவ்வடி மலர்களை

என் குளிர்ந்த மெல்விரல்கள் தொடும்போது

எதற்காக நீ புன்னகை செய்தாய்?'

அவை கங்கையின் சொற்கள். படகை ஓட்டியவன் தொல்குகன். படகுத்துடுப்பை பிடித்த அனைவருக்கும் முதல் தந்தையானவன். அவர்களின் குடிமுகப்பில் தெய்வமென அமைந்தவன். ராகவராமனுக்கு உடன்பிறந்தான் என அமைந்தவன். தெய்வத்தின் தோழன். தேவியை அறிந்தவன். தேவியின் விழிகளால் தெய்வத்தைக் காணும் பேறுபெற்றவன்.

'சொல் அன்னையே நீ சிரித்தது எதற்காக?

உன் செவ்வண்ணச் சிற்றடி எழுந்து

படகில் ஊன்றியபோது

மெல்ல பறந்த கருங்குழல் சுரிகளை

கையால் ஒதுக்கி நீ கண்மலர்ந்தது எதற்காக?'

'அன்னையே சொல்லமாட்டாயா?

உன் துயர்முறுவல் எதற்காக?

உன் தோள்களில்

என் சிற்றலை முத்துக்களை சிதறியாடுகின்றேன்.

உடல் சிலிர்த்து உன் தலைவனருகே நகர்கிறாய்.

சொல், உன் துயரமுறுவல் எதற்காக?'

அவன் அந்தப் பாடல் வழியாக சென்றுகொண்டிருந்தான். இவன் பெயர் நிருதன். இப்பெயரிலும் ஒரு தெய்வம் இருக்கிறது. முன்பு அன்னை அம்பாதேவியை படகில் ஏற்றி சால்வநாட்டுக்கும் அஸ்தினபுரிக்கும் ஓட்டிச்சென்றவன். அவளுக்கு எரிதோழன் என்றானவன். அஸ்தினபுரியின் படகுத்துறை முகப்பில் கோயில்கொண்டவன். ஊரெல்லாம் குகர்களால் வணங்கப்பெறுபவன்.

'சொல்லுக தாயே, இந்த மென்னகை எதற்காக?

எழுந்த பல்லாயிரம் மீன் விழிகளால் சூழ்ந்து

உன்னைப் பார்த்து திகைக்கின்றேன்.

உன் மென்னகை எதற்காக?

'உலகீன்றவளே ஏன் நகைத்தாய்?

பெண்ணுடலை கணவனும் நானும் மட்டுமே காண்கிறோம்.

பெண் உள்ளத்தை காண்பவளோ நான் மட்டுமே.

சொல்லுக தேவி நீ நகைத்தது எதற்காக?

அவன் கங்கையின் கரையோரத்தை நோக்கியபடி படகில் அமர்ந்திருந்தான். கங்கைக்கரை மானுடத் தலைகளால் ஆனதாக இருந்தது. அது அசைவுகளால் அலைகொண்டது. பல்லாயிரம் கைகளால் நீரும் அன்னமும் அளிக்கப்படுகின்றன. பல்லாயிரம் பல்லாயிரம் நீங்குயிர்கள் வந்து அவற்றுக்காக காத்திருக்கின்றன. நீரின் அலைகளாக. காற்றின் தொடுகையாக. இலைநுனிகளாக. ஒளிரும் சிறகுகளும் இமையா விழிகளும் கொண்ட பூச்சிகளாக.

உன் பாதங்கள் தொட்டுச் செல்லும் பூமி அதையறியும்.

உன் மேனி வருடிச் செல்லும் காற்றும் அதையறியும்.

அன்னையே உன்மேல் ஒளி பொழிந்து விரியும் வானும் அதையறியும்.

நானுமறிவேன் பொற்பரசியே,

நீ அனல் கொண்ட சொல்லெறிந்து

நிலம் பிளந்து மறைகின்ற எரிவாயின்

தழல் தணிக்க போதாது

விண்பிளந்து நான் மண்நிறைக்கும் நீரெல்லாம்.

அலையடித்து அலையடித்து தவிப்பதன்றி

நான் என் செய்வேன் தாயே?

குகன் பாடிக்கொண்டிருக்க சுகோத்ரன் நீரையே நோக்கி அமர்ந்திருந்தான். கங்கையின் நீரில் அவன் ஒளிரும் சில விண்மீன்களைக் கண்டான். அவை விழிகள் என ஒளிவிட்டன. மீண்டும் கூர்ந்தபோது நீர்ப்பரப்பிற்கு அடியில் மீன்கள் செறிந்து அசைவிழந்திருப்பதைக் கண்டான். மீன்கூட்டங்களின் விழிகளை நோக்க முடிவது போலிருந்தது.

நீர்ச்சுடர் - 59

பகுதி ஒன்பது : சிறகெழுகை – 1

யுயுத்ஸு சுகோத்ரன் செல்வதை விழிநிலைக்க நோக்கிக்கொண்டிருந்தான். அவன் சென்று மறைவதை கண்டபின் விழிவிலக்கி கங்கைச்சூழலை நோக்கினான். அங்கிருந்த அனைவருமே சுகோத்ரனைத்தான் பார்த்துக்கொண்டிருந்தார்கள். விட்டுச்செல்பவனுக்கு அமையும் அந்த நடை எவருக்கேனும் இயலுமா என்று யுயுத்ஸு எண்ணிக்கொண்டான். எடையின்மை. தளையின்மை. இறந்தகாலம் இன்மை. ஒருவகையில் எதிர்காலம் இன்மையும்கூட.

இறந்தகாலத்தை உதறிவிடமுடிகிறது. உலகியலாளன் எதிர்காலத்தை ஒருகணமும் அகற்ற முடிவதில்லை.

நிகழ்காலத்தின்மேல் அது பேரெடையுடன் ஏறி அமர்ந்திருக்கிறது. ஒவ்வொரு கணத்தையும் முடிவு செய்கிறது. நாளை என எண்ணாது செய்த ஒரு செயலேனும் தன் வாழ்வில் உண்டா என அவன் எண்ணிக்கொண்டான். திட்டங்கள் கணிப்புகள் சூழ்தல்கள். எதிர்காலமே அனைத்து இன்பங்களின் மேலும் கவியும் நிழல். ஏனென்றால் இன்பங்கள் அனைத்தும் நிகழ்காலத்திலேயே.

எதிர்காலத்தில் இருப்பது அறியமுடியாமை. அங்கிருக்கும் இன்பங்கள் அனைத்தும் வெறும் கற்பனை. அதன்பொருட்டு நிகழ்காலத்தை இழக்கிறார்கள். அறியா இன்பங்களுக்காக அனைத்துத் துன்பங்களையும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஒருகணத்தில் உள்ளம் மலைத்தது. எத்தனை பெரிய மாயையில் சிக்குண்டு உழல்கிறார்கள் மானுடர். அறிவின்மையில் திளைக்கிறார்கள். அறிவின்மையே துயரம். ஊழ் அல்ல. தெய்வங்கள் அல்ல. உடனுறைவோரும் அல்ல. அறியாமையே.

ஸ்ரீமுகர் வந்து "சடங்குகள் இன்னும் சில நாழிகையில் முடியும். நீராடி வருபவர்களுக்குரிய நோன்புணவு ஒருங்கிக்கொண்டிருக்கிறது. முதல் கடனாளர் நீர் விட்டு எழுந்ததும் ஓர் அறிவிப்பை அளிக்கும்படி சொன்னார்கள்" என்றார். "என்ன உணவு?" என்று யுயுத்ஸு கேட்டான். "கம்பரிசிச் சோறும் காட்டுக்கீரை கடைசலும் மட்டுமே" என்றார் ஸ்ரீமுகர். "இங்கிருந்து நீங்கும்வரை அதுவே உணவு. இங்கே நீர்க்கடன் முடிந்து ஓர் இரவுக்குமேல் தங்கலாகாதென்பது நெறி."

"ஆம்" என்று யுயுத்ஸு பரபரப்படைந்தான். "எனில் இன்றேகூட பலர் கிளம்பக்கூடும். அமைச்சர்களுக்கு இனி இங்கே

பணிகளேதுமில்லை. அவர்களில் இருவர் இங்கே நின்றால் போதும். எஞ்சியோரில் சந்திரசேனரும் ஹிரண்யரும் சென்று படகுகளை ஒருக்கட்டும்... படகுகள் எங்கே நின்றிருக்கின்றன?" ஸ்ரீமுகர் "இங்கே இடமில்லை என்பதனால் கங்கையின் மறுகரையில் நிறுத்தப்பட்டுள்ளன" என்றார்.

"அது நன்று, அங்கிருந்து ஒவ்வொன்றாக அழைப்பை ஏற்று இக்கரைக்கு வந்து உரியவர்களை ஏற்றிச்செல்லவேண்டும். படகோட்டிகள் ஒருங்கியிருக்கட்டும். அவர்கள் முன்னரே உணவுண்டு காத்திருக்கவேண்டும். பெண்டிர் சிலர் நீர்க்கடன் முடிந்ததுமே கிளம்ப விரும்பலாம்" என்றான் யுயுத்ஸு. "முரசொலி எழுப்ப ஆணையிடுக! நான் கையசைவு காட்டுவேன். உடனே முரசொலி எழவேண்டும்... நோக்குக, மங்கல முரசு அல்ல! சிறுமுரசு." ஸ்ரீமுகர் தலைவணங்கினார்.

அவன் யுதிஷ்டிரனை நோக்கி சென்றான். யுதிஷ்டிரன் விழிகளிலிருந்து நீர் வடிய தலைமயிர் முகத்தில் சரிந்திருக்க குனிந்து அமர்ந்திருந்தார். முதுசூதர் "சடங்குகளை தொடங்கலாம் அல்லவா?" என்றார். யுதிஷ்டிரன் திடுக்கிட்டு விழித்து "ஆம்" என்றார். முதுசூதர் "இந்த நீர்க்கொடை சடங்கு நன்கு நிறைவுறுக! தடைநீக்கி நின்றருளும் கரிமுகன் அருள் எழுக!" என வணங்கி மஞ்சள் விழுதை உருட்டி வாழையிலைமேல் நிறுவி அதன்மேல் அருகம்புல்லை வைத்து மூத்தவனை பதிட்டை செய்தார். ஒரு துளி வெல்லமும் வெண்மலரும் படைத்து வணங்கினார்.

யுயுத்ஸு அனைத்துப் பூசனைப்பொருட்களும் அங்கே ஒருங்கியிருக்கின்றனவா என்று நோக்கினான். ஒன்றும் குறையவில்லை. ஆனால் ஒன்று குறையும். ஏதோ ஒன்று. அதை கண்டுபிடிக்கவே முடியாது. குறைவது தெரியும்போது

இதை எப்படி மறந்தேன் என நெஞ்சு வியக்கும். அதை நிகழ்த்துபவை தெய்வங்கள். தோணிகளை கவிழ்ப்பவை. அணைகளை உடைப்பவை. பெரும்புயல்களை, எரிப்பெருக்கை நிகழ்த்துபவை. பொருட்களைக்கொண்டு மானுடரை வெல்பவை. படைக்கலங்களில் அவை வாழ்கின்றன. கூர்கொண்ட அனைத்திலும் திகழ்கின்றன.

யுயுத்ஸு அறியாது புன்னகைத்தான். அவன் அடைந்த அனைத்து துறவு விழைவுகளும் எங்கோ மறைந்துவிட்டிருந்தன. அவ்வெண்ணங்களை மீட்டெடுக்க முயன்றான். நினைவிலெழவில்லை. சுகோத்ரனின் நடையை எண்ணிக்கொண்டான். ஆனால் அதை நினைவில் தீட்டிக்கொள்ள முடியவில்லை. என் துறவெண்ணம் என்பது என் உலகியல் நோக்கை செறிவூட்டும்பொருட்டே. நான் இங்கே பிணைக்கப்பட்டிருக்கிறேன். இவையனைத்திலும். மீட்பிலாமல். இதோ இந்த ஐவரும்கூட மீளக்கூடும். நான் மீள இயலாது.

சடங்குகள் சீராக முறையாக நடந்துகொண்டிருந்தன. சடங்குகள் செய்துவைப்பவர்களுக்கு ஒரு சீர்நடை இருக்கிறது. ஒவ்வொன்றையும் ஒரே விசையில் ஒரே போக்கில் இயற்றுகிறார்கள். செய்துசெய்து பழகியதனாலாக இருக்கலாம். அல்லது இச்செயல்களுக்கு எதிர்விளைவுகள், உடனடிப் பயன்கள் இல்லை என்பதனாலாக இருக்கலாம். சடங்குகள் மட்டுமே இப்படி செய்யப்படுகின்றன. எவருக்கும் எந்தப் பதற்றமும் இல்லை. செய்விப்பவரின் விரைவின்மைக்கு செய்பவரும் தன்னை அளித்துவிடுகிறார்.

சூதர்கள் மெல்லிய குரலில் ஆணைகளை இட யுதிஷ்டிரன் அவற்றை செய்தார். அவர் செய்தபின் பிற நால்வரும் செய்தனர். அவர்கள் ஒன்றுபோல் செய்வதாகத் தோன்றியது.

ஆனால் கூர்ந்து நோக்கினால் அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவகையில் அதை செய்தனர். யுதிஷ்டிரனிடம் முதியவரின் நடுக்கம் இருந்தது. பீமனிடம் அவன் கைக்குப் பொருந்தாத செயலின் தடுமாற்றம் இருந்தது. அவன் பெரிய விரல்களால் மெல்லிய மலர்களை எடுக்கமுடியவில்லை. கிண்ணங்களை தேவையற்ற வலிமையுடன் பற்றினான். அர்ஜுனனின் கையசைவுகள் நடனம் போலிருந்தன. புரவிபேணுபவனின் கைகள் என நகுலனின் செயல்கள் காட்டின. அடுமனையாளன் எனத் தெரிந்தான் சகதேவன்.

"மூதாதையரை நினைவுகொள்க!" என்றார் முதுசூதர். யுதிஷ்டிரன் கைகூப்பி கண்களை மூடினார். சூதர் வேகவைத்த சோற்றுருளைகளை கரிய எள்ளுடன் சேர்த்து பிசைந்தார். மெல்லிய குரலில் "வெண்ணிறமான அன்னம் என எழுக அன்னையே, திருமகளே! அன்னையுடன் இணைந்தருள்க, மைந்தனாகிய சனியே! ஒளியும் இருளும் என நீளுலகங்களை கடந்துசெல்க! எங்கள் மூதாதையரின் உலகை சென்றடைக! அவர்களின் பசியும் விடாயும் அணைக! ஆம், அவ்வாறே ஆகுக!" என்றார்.

குருகுலத்தின் அரசர்நிரையை அருகே நின்றிருந்த சூதர் உரக்கச் சொன்னார். "முதல்முடிவிலியாகிய விஷ்ணுவுக்கு வணக்கம். விஷ்ணுவிலிருந்து பிரம்மன் தோன்றினான். பிரம்மனிலிருந்து அத்ரி. அத்ரியிலிருந்து சந்திரன். சந்திரனிலிருந்து புதன், புதனிலிருந்து சந்திரகுலத்தோன்றல் புரூரவஸ் பிறந்தான்." அவருடைய குரல் உணச்சியற்று ஒலித்தது. ஒரு முழவோசை போல. அந்தச் சொற்களை அவ்விருளே சொல்வது போல. "ஆயுஷ், நகுஷன், யயாதி, புரு, ஜனமேஜயன், பிராசீனவான், பிரவீரன், நமஸ்யு, வீதபயன், சுண்டு,

பஹுவிதன், ஸம்யாதி, ரஹோவாதி, ரௌத்ராஸ்வன், மதிநாரன், சந்துரோதன், துஷ்யந்தன், பரதன், சுஹோத்ரன், சுஹோதா, கலன், கர்த்தன், சுகேது, பிருஹத்க்ஷத்ரன், ஹஸ்தி என்னும் மங்காப் புகழ்கொண்ட அரசர்களின் பெயர்கள் என்றும் வாழ்வதாக!”

“மாமன்னன் ஹஸ்தியின் மைந்தனான அஜமீடனின் வழிவந்த ருக்ஷன், சம்வரணன், குரு ஆகியோரின் புகழ் ஒருநாளும் குன்றாதிருப்பதாக! குருவம்சத்தின் பெருமை அழியாமல் திகழ்வதாக!” என இன்னொரு சூதர் தொடர்ந்தார். “குலமூதாதை குருவின் பெயர் நிலைகொள்க! ஜஹ்னு, சுரதன், விடூரதன், சார்வபௌமன், ஜயத்சேனன், ரவ்யயன், பாவுகன், சக்ரோத்ததன், தேவாதிதி, ருக்ஷன், பீமன் என மாமன்னர்களின் வரிசை வாழ்க! பிரதீபரும் சந்தனுவும் விசித்திரவீரியரும் நிறைவுறுக! பெருந்தந்தையர் பேரன்னையராகிய தங்கள் துணைவர்களுடன் விண்பொலிக! ஆம், அவ்வாறே ஆகுக!”

யுதிஷ்டிரனின் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. “மண்நீத்த மைந்தர்கள் விண்வளர் மூதாதையருடன் நிலைகொள்ளவேண்டும் என்று வேண்டிக்கொள்க! இத்தொல்குடியின் மைந்தர் பெயர்கள் அனைத்தும் இங்கே எழவேண்டும்” என்று முதுசூதர் சொன்னார். “நீத்தாரின் பெயர்நிரையில் இப்போது சற்றுமுன் குடித்தெய்வத்தை நீத்துச் சென்ற இளவரசரின் பெயரும் மீனும் இணையட்டும்.” யுதிஷ்டிரன் திகைப்புடன் நோக்க “அதுவும் நீத்தலே. அவருக்கும் இங்கே அன்னமும் நீரும் அளித்து நிறைவுச்சடங்குகள் செய்வோம். அதன்பின் அவர் உங்களுக்கும் நீங்கள் அவருக்கும் எக்கடனும் இயற்றவேண்டியதில்லை” என்றார் முதுசூதர்.

“ஆம்” என்று யுதிஷ்டிரன் சொன்னார். அவருடைய உதடுகள் நடுங்கின. அவர் மீண்டும் நினைவழிந்து விழக்கூடும் என்று முதலில் தோன்றியது. ஆனால் அச்சடங்கை செய்யச் செய்ய அவர் மீண்டபடியே வந்தார். சகதேவன் உறைந்த முகத்துடன் எரியும் அகல்சுடரை நோக்கியபடி அமர்ந்திருந்தான். நகுலன் நிலம் நோக்கியிருந்தான். பீமன் தன் கையிலிருந்த அன்னத்தை சீற்றத்துடன் நோக்குபவன் போலிருந்தான்.

சூதர் “பேரரசரிடம் இட்டுச்செல்க எங்களை!” என்றார். யுயுத்ஸு தலைவணங்கி நடக்க ஏழு சூதர்களும் அவனுடன் நடந்தார்கள். அவர்கள் வருவதை திருதராஷ்டிரர் எவ்வண்ணமோ உணர்ந்திருந்தார். அவருடைய தலை நடுங்கிக்கொண்டிருந்தது. அவர்கள் அருகணைந்தபோது அவர் தொல்பெரும் பறவை ஒன்று சிறகுவிரிப்பதுபோல கைகளை இருபக்கமும் நீட்டினார். யுயுத்ஸு அருகணைந்து “தந்தையே, சடங்குகளுக்குரிய சூதர்கள்” என்றான். அவர் “ஆம்” என்றபடி எழுந்துகொண்டார்.

சூதர்களில் ஒருவர் கையில் சிறுசெப்புச்சிமிழில் களச்சாம்பலை வைத்திருந்தார். இன்னொருவர் தட்டில் பரப்பிய இலையில் பலியன்னத்தை. முதற்சூதர் “வருக!” என்று சொல்லி துழாவிக்கொண்டிருந்த திருதராஷ்டிரரின் கையில் அச்சிமிழை வைத்தார். அது என்ன என்று அவர் அறிந்துகொள்ளவில்லை. இன்னொரு கையை பற்றி சஞ்சயன் அவரை அழைத்துச்செல்ல தடுமாறும் கால்களுடன் அவர் நடந்தார். தலையைச் சுழற்றியபடி வாயை மென்றபடி வேறெங்கோ நோக்கியவர்போல சென்று கங்கையின் படிக்கட்டை கால் தொட்டதும் நின்றார்.

“என்ன? என்ன?” என்றார். “வருக, அரசே!” என்றார் சூதர். “ஏன்? ஏன்?” என்றார் திருதராஷ்டிரர். “வருக, அரசே!” என்றான்

சஞ்சயன். "இல்லை..." என அவர் தயங்கி காலை பின்னெட்டு எடுத்தார். "வருக!" என்றான் சஞ்சயன். அஞ்சும் யானையின் அசைவு என யுயுத்ஸு எண்ணினான். "இல்லை இல்லை" என்று சொல்லி அவர் மேலும் பின்னடைந்தார். "அரசே, இது நீர்க்கடன். நீங்கள் உங்கள் மைந்தர்களுக்கு இயற்றியாகவேண்டியது" என்றான் சஞ்சயன். "இல்லை இல்லை" என்றபடி திருதராஷ்டிரர் மேலும் பின்னடைந்தார்.

கரையில் நின்றிருந்த சங்குலன் இறங்கி அருகே வந்து அவர் தோளை தன் மாபெரும் கைகளால் பற்றி "இறங்குக!" என்றான். "என்ன?" என்றார் திருதராஷ்டிரர். "நீரிலிறங்குக!" என அவன் உறுமல்போன்ற மென்குரலில் சொன்னான். கூடவே அவரை பற்றித்தூக்கி கொண்டுசென்றான். அவர் உடலில் தசைகள் இளகி நெகிழ்ந்து அசைந்தன. அவருக்குள் இருந்து யானையின் உறுமலென ஓர் ஓசை எழுந்தபடியே இருந்தது. அவன் அவரை கங்கைநீருக்குள் கொண்டுசென்றான். குளிர்நீர் பட்டதும் அவர் விலங்குபோல அலறி அவன் பிடியிலிருந்து தப்ப முயன்றார்.

அவன் அவரை நீரில் நிறுத்தினான். சூதர்களிடம் "ம்" என்றான். முதிய சூதர் சற்று அப்பால் நின்றபடி "மூதாதையர்களை எண்ணிக்கொள்க! தந்தையரை எண்ணிக்கொள்க! மைந்தரையும் பெயர் மைந்தர்களையும் எண்ணிக்கொள்க! அவர்களின் எஞ்சிய அன்னத்தை இதோ இந்நீரில் கரைக்கிறோம். அவர்கள் விண்சென்று அமைக! அவர்களின் அன்னம் ஆழியை சென்றடைக! உப்புக்கள் உப்பை, அனல் அனலை, காற்று காற்றை, வெறுமை வெறுமையைச் சென்றடைக! ஆம், அவ்வாறே ஆகுக! "என்றார்.

திருதராஷ்டிரர் திமிறிக்கொண்டே இருந்தார். அச்சொற்களை அவர் கேட்டதாகத் தெரியவில்லை. சங்குலன் அவரை ஓங்கி

உலுக்கி "ம்ம்" என்றான். அவர் திடுக்கிட்டு நின்றார். சங்குலன் சூதர்களிடம் மீண்டும் அவற்றை சொல்லச்சொன்னான். அவர்கள் அச்சொற்களை நடுங்கும் குரலில் சொன்னார்கள். "நீரில் நீர் கலக்கட்டும். அனலில் அனல் கரையட்டும். காற்றில் காற்று சென்றமையட்டும். வானம் வானமென்றே எஞ்சட்டும். ஆம், அவ்வாறே ஆகுக!" அவருடைய குரல் முதுமையும் நடுக்குமாக குழறியது. அவர் விம்மி விழிநீர் வழிய அழுதார்.

"எரிமிச்சத்தை நீரில் ஒழுக்குக, அரசே!" என்றார் சூதர். திருதராஷ்டிரர் "மைந்தா மைந்தா மைந்தா" என விம்மினார். "அரசே..." என்றார் சூதர். சங்குலன் அவரைப் பிடித்து அழுத்த அவர் அச்சிமிழை மார்போடணைத்துக்கொண்டு "மைந்தா மைந்தா மைந்தா" என்று சொல்லிக்கொண்டிருந்தார். "அமிழ்க! அமிழ்க!" என்று சூதர் சொல்ல சங்குலன் அவரை அழுத்தினான். அவர் அவனுடைய விசையால் உடல் தசைகள் நெளிந்து இறுக நின்று பின் மெல்ல மூழ்கினார். "உதிர்த்துவிடுங்கள்... நீரில் விட்டுவிடுங்கள்" என்றார் சூதர். "ம்ம் ம்ம்ம்" என முனகியபடி திருதராஷ்டிரர் அதை நெஞ்சோடு அணைத்துக்கொண்டார். சூதர் மீண்டும் சொன்னார். திருதராஷ்டிரர் "ம்ம் ம்ம்" என்றார்.

சூதர் கையால் அவர் கையிலிருந்த சிமிழை தட்டிவிட அது நீருள் விழுந்தது. திருதராஷ்டிரர் பதறி அதை பற்றப்போக அது அமிழ்ந்தது. அவர் "ஆ ஆ" என கூவியபடி நீரை துழாவினார். சங்குலன் அவரைப் பிடித்து நீரில் மூழ்கடித்தான். அவர் எழுந்து வாய் திறந்து மூச்செறிய முகத்தில் நீர் வழிந்தது. மீண்டும் அவன் அவரை முக்கி எடுத்தான். மூன்றாம் முறை முக்கி எடுத்தபோது அவர் விலங்கோசையுடன் கூவிக்கொண்டிருந்தார். அவரை மீண்டும் கரைக்கு கொண்டுவந்தனர். உடல் தளர்ந்து

அவர் படிகளில் விழுந்தார். அவர் கையில் அன்னத்தை அளித்தனர். சங்குலன் அவர் கைகளைப் பற்றி அன்னத்தை தலையில் வைத்துக்கொள்ளச் செய்தான்.

அவர் அனைத்தையும் மறந்து கனவிலென திகழ்ந்தார். உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. சங்குலன் அவரை நீருக்குள் கொண்டுசென்று நிறுத்தினான். சூதர்கள் "அன்னம் அன்னத்தை நிறைவுறச்செய்க! மூச்சு மூச்சை நிறைவுறச் செய்க! அங்கிருக்கும் உலகை இந்த அன்னம் சென்றடைக! அங்கிருப்போர் விடாயை இந்நீர் தணிவிக்குமாறாகுக! அனைவர் பசியையும் போக்குக இந்தத் தூய அன்னம்! தொன்மையான நீரே எங்களை என்றுமழியாத உலகங்களுடன் பிணைத்து நிறுத்து. எளியவர்களாகிய எங்களை மாறாதவற்றுக்கு அருகே நிலைகொள்ளச் செய். உனக்கு வணக்கம்" என்று தொன்மையான சொற்களை சொன்னார்கள். அவர்களின் உதடுகள் ஒன்றென அசைந்து ஒரே குரலெனக் கேட்டன.

"உன்னில் என் மூதாதையரிட்ட அத்தனை அன்னப்பலிகளுக்கும் வணக்கம். என் மைந்தர்களும் கொடிவழியினரும் இடப்போகும் அனைத்து அன்னப்பலிகளுக்கும் மங்கலம். ஆம், அவ்வாறே ஆகுக!" சூதர் திருதராஷ்டிரரிடம் "விரும்பிய ஒன்றை கைவிடுக, அரசே!" என்றார். "ம்?" என்றார் திருதராஷ்டிரர். "விரும்பிய ஒன்றை நீத்தார் பொருட்டு கைவிடுக!" என்றார் சூதர். "விட்டேன் என்று கூறி மூழ்குக!" திருதராஷ்டிரர் கையை அசைத்தார். "விட்டேன் என்னும் சொல்" என்றார் சூதர். சங்குலன் அது தேவையில்லை என்று கைகாட்ட அவர் சரி என தலையசைத்தார். திருதராஷ்டிரர் கையை அசைத்துக்கொண்டே இருந்தார்.

பின்னர் திடுமென அஞ்சியவர்போல நடுங்கி கரைநோக்கி ஓட முயன்றார்.

அதை எதிர்நோக்கியிருந்தவன்போல அவரை சங்குலன் பிடித்து நீரில் மூழ்கி எழச்செய்தான். அன்னம் நீரில் விழுந்ததும் அங்கே மீன்கள் கொப்பளித்தன. அவர் மூழ்கி மூழ்கி எழுந்ததும் தாடி திரிகளாக நீர்ச்சரடுகளுடன் தெரிந்தது. அவரை அவன் குழவிபோல தூக்கி கரைக்கு கொண்டுவந்தான். படிகளில் அமரச்செய்தான். சஞ்சயன் கொண்டுவந்த மரவுரியை வாங்கி அவன் அவர் தலையை துவட்டத் தொடங்கினான். அவர் குழவி என அவன் கைகளுக்கு தன்னை அளித்தார். கைகளைக் கோத்து மடியில் வைத்து தலைகுனிந்து அமர்ந்திருந்தார்.

யுயுத்ஸு உடல் தளர்ந்து பெருமூச்சுவிட்டான். அப்பாலிருந்து பாண்டவர்கள் ஐவரும் நிரையாக எரிசிமிழ்களுடன் கங்கையில் இறங்கினர். அவர்கள் அச்சடங்குகளைச் செய்வதை அவன் நோக்கி நின்றான். “நீருக்கு அளிக்கப்படுவது நீடுதொலைவு செல்கிறது. அழிவிலா ஆழியைச் சென்றடைகிறது. அனலுக்கு அளிக்கப்படுவது மேல்நோக்கி எழுகிறது. முடிவிலா விண்ணுக்குச் செல்கிறது. அன்னம் நீரில் அமைக! அன்னமென மீண்டு எழுக! ஆவி விண்ணுக்கு எழுக! அங்கே அழிவற்றோருடன் அமைக! என்றுமிருப்பவை என்றும் திகழ்க! இங்கெழுபவை இங்கு மீண்டும் எழுக! சுழல்பவை சுழல்க! மையம் அங்கனமே அமைக! ஆம், அவ்வண்ணமே ஆகுக!”

யுதிஷ்டிரன் நீரில் மூழ்கி எழுந்தார். கைகூப்பியபடி நின்றபோது அவர் அழுவதை காணமுடிந்தது. சூதர் அவர் தோளில் தொட்டு கரைநோக்கி செல்லும்படி சொன்னார். படித்துறைக்குச் சென்றபின் அவர் அன்னத்துடன் மீண்டும் நீரிலிறங்கினார்.

அன்னமும் நீரில் கரைக்கப்பட்டபின் ஐவரும் தொழுதபடி கங்கையிலிருந்து நீங்கினர். கரைப்படிகளில் நின்று கங்கையை மலரும் அரிசியும் இட்டு வணங்கினர். பின்னர் திரும்பி நோக்காமல் வேள்விநிலம் நோக்கி சென்றனர்.

முழவுகளும் கொம்புகளும் ஓசையிடத் தொடங்கின. சூதர்கள் கைகளைக் காட்ட நீர்ப்பலி இடும்பொருட்டு காத்து நின்றவர்கள் அனைவரும் நிரையாக கங்கை நோக்கி இறங்கினர். நீர்க்கரையெங்கும் உடல்கள் செறிந்தன. அவர்களின் மறுபக்கம் என மீன்கூட்டங்கள் நீர்ப்பரப்பில் நிறைந்திருந்தன. மீன்களும் மானுடரும் நீர்விளிம்புக்கோட்டின் இருபக்கமும் நின்று ஒருவர் கொடுக்க ஒருவர் பெற்றுக்கொண்டனர்.

அவன் அந்நீர்க்கடனை நோக்கி நின்றிருந்தான். நீரிலிருந்து எழுந்த விதுரர் யுயுத்ஸுவை நோக்கி வந்தார். "அனைத்தும் நிறைவுற்றன. இனி ஆகவேண்டியவற்றை முடிப்போம். நான் சொல்வதற்கு ஏதுமில்லை. இங்கே நின்றிருத்தலும் எனக்கு ஆகாது. குடில் மீள்கிறேன்" என்றார். யுயுத்ஸு "ஆம்" என்றான். விதுரர் கொஞ்சம் பதற்றம்கொள்வது போலிருந்தது. அவர் எதையோ சொல்ல விழைவதுபோல. அவர் அதை சொல்லாமல் திரும்ப முயன்று இறுதிக் கணத்தில் திரும்பிக்கொண்டு "நீ மாளிகைமேல் இருந்து விழுந்தவளுக்கு நீர்க்கடன்களைச் செய்வது உண்டல்லவா?" என்றார்.

அவன் திடுக்கிட்டான். அங்கே அதை எதிர்பார்த்திருக்கவில்லை. உடலுக்குள் உள்ளத்தின் அடியாழத்திலிருப்பது. மறந்துவிட்டிருந்தது. ஆனால் ஒரு சொல்லில் சென்று தொடும்படி மிக அண்மையிலும் இருந்திருக்கிறது. "என்ன?" என்றான். "அவள் மல்லநாட்டு இளவரசி அல்லவா?" என்றார் விதுரர். "ஆம், ஆம்" என்றான் யுயுத்ஸு. "அவளுக்கு நீர்க்கடன்

செய்வதில்லையா?" என்றார். அவன் "இல்லை" என்றான். அவர் "ஏன்?" என்றார். "நான் அவளை மணம்புரியவே இல்லை. ஒரு சிறு சடங்குதான் நிகழ்ந்தது. முதல்நாளிலேயே அவள் என்னை சூதனென்று அறிந்தாள். மாளிகை மேலிருந்து பாய்ந்து காலொடிந்து கிடந்தாள். மல்லநாட்டுக்கே மீண்டு ஈராண்டில் உயிர்விட்டாள்..."

விதுரர் "ஆம், அவளை நானும் பார்த்ததில்லை. உன் மறுமணத்தின்போதுகூட எவரும் அவளை நினைவுகூரவில்லை" என்றார். "நான் அவளை மீண்டும் ஒருமுறைகூட சந்திக்கவில்லை. அவள் என்னை முற்றாக மறுத்து உயிர்விட்டாள். என் பலிநீரை எப்படி பெற்றுக்கொள்வாள்?" என்றான். அவர் மேலும் பேசுவதற்குள் "நான் சூதன்... அவள் மாய்ந்தது அதனால்தான். என் அன்னம்கொள்ள அவள் வரமாட்டாள்" என்றான்.

"என் அன்னை என்னிடமிருந்து இன்றுவரை அன்னம்கொண்டதில்லை" என்று விதுரர் சொன்னார். "ஆனால் அன்று முதல் ஆண்டுதோறும் நான் அவருக்கு நீர்ப்பலியும் அன்னமும் அளித்துவருகிறேன். என் மைந்தரும் அளிப்பார்கள். ஏழு தலைமுறை ஆகலாம். அல்லது எழுநூறு தலைமுறை ஆகலாம். அளித்தபடியே இருப்பது நம் கடமை." யுயுத்ஸு "நான்..." என்றான். "இம்மண்ணில் இன்றிருப்போர் சிறுதுளி. நீத்தோர் முடிவிலா ஆழி" என்றார் விதுரர். யுயுத்ஸு தலைவணங்கினான்.

அவர் திரும்பிச்செல்ல அவன் அவரை நோக்கி நின்றான். பின்னர் பெருமூச்சுடன் நீர்ப்பரப்பை அடைந்தான். உடல்களின் நெரிசலே ஒரு பெரிய திரை என தோன்ற தனிமைகொண்டான். சடங்குகளைச் செய்விக்கும் சூதர் அவனிடம் "அருகே வருக,

இளவரசே!” என்றார். அவன் ஆடை களைந்ததும் “எவருக்காக?” என்று கேட்டார். அவனுக்கு அவள் முகம் நினைவுக்கு வரவில்லை. சூதனுக்கு மனைவியாக விழையாமல் இறந்தவள். தன்னை ஷத்ரியப்பெண் என்று மட்டுமே அறிந்தவள். எங்கிருக்கிறாள்? அவன் அவள் பெயரை நினைவுறுத்திக்கொள்ள விழைந்தான். அதுவும் நினைவிலெழவில்லை.

“பெயர் இல்லை” என்றான். “நாள், கோள்?” என்றார் சூதர். “நினைவில் இல்லை” என்றான். “எவர்?” என்றார் சூதர். “அதுவும் நினைவில் இல்லை. எதுவுமே நினைவில் எழவில்லை.” அவர் புன்னகைத்து “அவ்வண்ணம் ஒருவர் இருந்தாரென்பதே போதும்” என்றார். “அவருடன் என்ன உறவு உங்களுக்கு?” அவன் நா தவித்தது. என் மனைவி. ஆனால் அவள் அதை ஏற்கவில்லை. நானும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வண்ணமென்றால் என்ன உறவு? ஆனால் அவள் கழுத்தில் நான் ஒரு கருகமணியை அணிவித்தேன். அது போதுமா? “என் மனைவி” என்றான்.

சூதர் வியப்பை வெளிப்படுத்தவில்லை. நுண்சொற்களை சொல்லத் தொடங்கினார். “பிழைகளைப் பொறுத்தருள்க, நீத்தோரே! இங்குளோர் அனைவரும் ஊழின் துளிகள். ஊழுக்கு அப்பாலெழுந்தவர்களே, இங்குள்ள அனைவரையும் பொறுத்தருள்க! கனிக! அருள்க! இங்குள்ளோரை வாழ்த்துக! உடனமைக! இந்த அன்னத்தை கொள்க! நீரை கொள்க! இங்கெழுக! இங்கமைக! இந்த அலைகளைப்போல. இந்தக் காற்றின் நெளிவென. இங்குள ஒளியென. ஆம், அவ்வாறே ஆகுக!”

அவன் விழிகள் நீர்கொண்டன. தொண்டை அடைப்பது போலிருந்தது. அவன் இடைவரை நீரில் நின்று அச்சொற்களைச் சொன்னபடி அவர் ஆணையிட்ட சடங்குகளை செய்யலானான். சூதர் "விரும்பிய ஒன்றை விடுக!" என்றார். "என்ன?" என்றான். "விரும்பிய ஒன்றை விடுக!" என்றார் சூதர். 'பொருளையா?" என்றான். "பொருளையோ, பழக்கத்தையோ. பொருளனைத்தும் பழக்கங்களே" என்றார் சூதர். அவன் நடுங்கிக்கொண்டிருந்தான். அது உளநடுக்கு. ஆனால் வெளிக்குளிரென உள்ளே நுழைந்தது. "எதை?" என்றான். "எதையாயினும்... நாம் விரும்பா பொருள் இங்கு ஏதுமில்லை" என்றார் சூதர்.

யுயுத்ஸு தன் நினைவிலிருந்த பொருட்கள் அனைத்தையும் தொட்டுத் தொட்டு சென்றான். அத்தனை பொருட்களும் பொருளிழந்திருந்தன. அவன் தொட்டதும் அனைத்தும் பொருள்கொண்டன. அவன் "எந்தப் பொருள்?" என்றான். "உணவு, பயன்பொருள், கைப்பொருள், நினைவுப்பொருள் எதுவாயினும். தந்தையர் தந்ததோ ஈட்டியதோ ஆகலாம்." அவன் "ஆம்" என்றான். "எண்ணிக்கொண்டுவிட்டீர்களா?" என்றார். "ஆம்" என்றான். இவளை கைவிடுகிறேன். இந்த மல்லநாட்டு இளவரசியை. இனி ஒருபோதும் அவள் என் நினைவில் எழாதொழிக! "எண்ணியதை கைவிடுக!" என்றார். "ஆம், விட்டேன்" என்றான். "மூழ்குக!" என்றார் சூதர். அவன் மூழ்கி எழுந்தான்.

நீரிலிருந்து மேலெழுந்தபோது அவன் உள்ளம் தெளிந்திருந்தது. முகத்தை கைகளால் துடைத்தபடி படிகளில் ஏறினான். திருதராஷ்டிரர் கிளம்பிக்கொண்டிருந்தார். சங்குலனின் கைகளைப் பற்றியபடி அவர் எழுந்தார். அவன் அவர் அருகே

சென்றான். அவர் "உம் உம் உம்" என முனகிக்கொண்டிருந்தார். சஞ்சயன் அவர் அருகே சென்று நின்றான். சங்குலன் "செல்வோம்" என்றான். முக்தவனத்திலிருந்த அனைவரும் நீர்ப்பலி அளிப்பதற்காக வந்துகொண்டிருந்தனர். மழைநீரில் சிற்றோடைகள் அனைத்தும் ஆற்றுக்கு வருவதுபோல.

திருதராஷ்டிரர் திரும்பாமலேயே "சஞ்சயா..." என்றார். சஞ்சயன் "அரசே..." என்றான். "இனி நீ என்னுடன் வரவேண்டாம்..." என்றார். அவன் "ஆணை" என்றான். அவர் மேலும் ஏதும் சொல்லாமல் நடக்க சஞ்சயன் தலைவணங்கி கைகட்டி நோக்கியபடி நின்றான். யுயுத்ஸு அவனை பார்த்தான். அவன் ஏதாவது சொல்வான் என எண்ணினான். அல்லது முகத்தில் ஏதேனும் உணர்வு இருக்கும் என்று. ஆனால் எப்போதும்போல பொருளில்லா புன்னகை ஒன்றையே சஞ்சயன் கொண்டிருந்தான். யுயுத்ஸு அவனை நோக்கி ஏதேனும் சொல்ல விழைந்து அவனிடம் சொல்ல ஏதுமில்லை என உணர்ந்து முன்னால் சென்றான்.

சில அடிகள் எடுத்து வைத்ததும்தான் சஞ்சயனின் அந்த முகம் இளைய யாதவருடையது என அவன் எண்ணினான். அந்தப் புன்னகைதான் அவ்வண்ணம் காட்டுகிறது. அவன் திரும்பி சஞ்சயனை பார்த்தான். "ஆம்" என சொல்லிக்கொண்டான். மீண்டும் ஓர் அடி வைத்தபோது அவனுக்கு அவள் பெயர் நினைவிலெழுந்தது. தேவப்பிரபை. மல்லநாட்டாள். அவள் முகம் மிக அருகிலெனத் தெரிந்தது. விழிநீர் வஞ்சமென வழியும் அழகிய சிறுமுகம். அவன் மீண்டும் திரும்பி சஞ்சயனின் புன்னகையை பார்த்தான்.

நீர்ச்சுடர் - 60

பகுதி ஒன்பது : சிறகெழுகை – 2

யுயுத்ஸு யுதிஷ்டிரனின் சிற்றவைக்குச் சென்றபோது தொலைவிலேயே சிரிப்பொலியை கேட்டான். அறியாமல் கால்தயங்கி நின்றான். திரும்பி தன் குடிலுக்கே சென்றுவிடலாமா என்ற எண்ணம் எழ, அதை தவிர்த்து நிலத்திலிருந்து பிடுங்குவதுபோல் காலைத் தூக்கி வைத்து, முன் சென்றான். யுதிஷ்டிரனின் அவையில் அவருக்கு சுற்றிலும் அர்ஜுனனும் பீமனும் நகுலனும் சகதேவனும் இருப்பதை முதற்கணத்தில் அவன் கண்டான். தௌம்யர் பீடத்தில் அமர்ந்திருக்க சற்று அப்பால் இளைய யாதவர் மறைந்ததுபோல் அமர்ந்திருந்தார். அங்கிருந்து பார்த்த போது அவர்கள் இருவரின் உடல்களும் பாதி பாதியாக இணைந்து ஒருடல்போல் தெரிந்தனர்.

விதுரரும் அங்கிருக்கக்கூடும் என்று எண்ணி அவன் சூழ்ந்திருந்த முகங்களைத் தொட்டு விழிசுழற்றி அவர் இல்லையென்பதை கண்டுகொண்டான். தௌம்யரின் மாணவர்களும் ஆணையேற்கும் ஏவலர்களும் காவலர்தலைவர் இருவரும் அங்கிருந்தனர். யுயுத்ஸு யுதிஷ்டிரனை அணுகி தலைவணங்கி முகமன் உரைத்தான். சிரித்துக்கொண்டிருந்த முகம் அவ்வாறே மலர்ந்திருக்க அவர் அவனை நோக்கி "என்ன செய்திகள்?" என்றார். ஒரு வேடிக்கை வினா என்று அது தோற்றமளித்தது. "ஒவ்வொன்றும் முறையாக நிறைவு பெற்றுள்ளன, அரசே" என்று யுயுத்ஸு சொன்னான்.

"ஆம், முறையாக நிகழ்ந்துள்ளன" என்று யுதிஷ்டிரன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டார். பின்னர் இளைய

யாதவரை நோக்கி திரும்பி “அனைத்திலிருந்தும் விடுதலை அடைந்ததுபோல் உணர்கிறேன், யாதவனே. முறையாக செய்யப்பட்ட ஒன்று முழுமையடைகிறது. அம்முழுமையால் அது நம்மை அதிலிருந்து விடுவிக்கிறது என்று நெறிநூல்களில் சொல்லப்பட்டுள்ளது. இன்று அதை தெளிவாக உணர்கிறேன்” என்றார். இளைய யாதவர் புன்னகை புரிந்தார். “முழுமையடைந்தது என்பதையே அது அளிக்கும் விடுதலையிலிருந்து உணரலாம் போலும்” என யுதிஷ்டிரன் மேலும் சொன்னார்.

பின்னர் சற்றே முகம் மாறி நீள்மூச்செறிந்து “மெய்யுரைப்பதென்றால் இந்நீர்க்கடனை இங்கே இவ்வண்ணம் செய்து முடிக்க இயலுமா என்பதே எனக்கு ஐயமாக இருந்தது. ஒரு கட்டத்தில் இது ஒருபோதும் நிகழப்போவதில்லை என்றே எண்ணினேன். என் இயற்பிழைகள், ஈட்டிய பிழைகள், தெய்வங்கள் முனிந்த சொற்கள் அனைத்தும் என் மேல் அழுத்த இதை செய்து முடிப்பதிலிருந்து நான் அகற்றப்படுகிறேன் என்று தோன்றியது. ஒரு கணக்கில் அது நன்று. இவையனைத்தும் இவ்வண்ணம் குறையின்றி நிகழ்ந்தமையால்தான் இவற்றிலிருந்து இத்தருணம் விடுதலை பெற்றிருக்கிறேன்” என்றார்.

இளைய யாதவர் யுயுத்ஸுவை நோக்கி “நம் படைகளிலோ ஏவலர் அணிகளிலோ உளக்குறையென்று ஏதேனும் கூறப்பட்டதா?” என்றார். “இல்லை, அரசே. நான் ஒற்று உசாவியவரை அவ்வண்ணம் ஒரு சொல்லும் உரைக்கப்படவில்லை” என்றான். “பெரும்பாலானவர்கள் காலையில் பதற்றம் கொண்டிருந்தனர். நீர்க்கடனின்போது கொந்தளித்தனர். இப்போது அமைதியடைந்துள்ளனர்.” “அவர்கள்

மெல்ல மீண்டும் உயிர்த்துடிப்படைவார்கள். பேசிக் குவிப்பார்கள். ஏனென்றால் அவர்கள் சொல்லிக்கொள்வதற்கு விந்தையான பல நிகழ்வுகள் இங்கே நடந்திருக்கின்றன" என்று பீமன் சொன்னான். "அவற்றை ஏற்கெனவே தாங்கள் அறிந்திருந்தார்கள் என்றும், பிறர் அறியாத ஒன்று தன்னிடம் இருக்கிறதென்றும் நடித்துக்கொண்டு, பேசிப் பேசி கடந்து செல்ல அவர்களுக்கு இன்னும் நெடும்பொழுதாகும்."

நகுலன் "ஆம், அரசர்கள் என்போர் மக்களின் பொருட்டு மேடையில் நடிக்கும் கூத்தர்கள்போல என்றொரு சொல் உண்டு. நாம் நடிகர்கள். இளிவரலும் துயரும் நடிப்பவர்கள். ஒவ்வொன்றுக்கும் உச்சத்தை மண்ணில் நிகழ்த்திக்காட்டுபவர்கள்" என்றான். யுதிஷ்டிரன் "இளையோனே, ஷத்ரியர்கள் ரஜோகுணம் நிறைந்தவர்கள். ரஜோகுணம் என்பது எழுவிசை. எழுவதனைத்தும் அதன் உச்சத்தை சென்றடைந்தே தீரும். இப்புவியில் பிற மூன்று குலத்தார்க்கும் இல்லாத பேருவகையும் கடுந்துயரும் ஷத்ரியர்களுக்கு உண்டு. அதற்குரிய வாய்ப்புகளும் இடர்களும் அவர்களுக்கு அமையும். உச்சங்கள் அமைவதனாலேயே அவர்கள் உதறிச்சென்று மேலெழவும், விண்தொட்டு அமையவும் வாய்ப்புண்டு" என்றார்.

அவ்வெண்ணத்தின் வழியாகச் சென்று யுதிஷ்டிரன் தொடர்ந்தார். "நூல்களை உசாவுகையில் ஒன்று தெரிகிறது, இம்மண்ணில் அமைதியான வாழ்க்கை ஷத்ரியர்களுக்கு விதிக்கப்படவில்லை. அந்தணர் அறியும் வாழ்வின் அமைதியை ஒருபோதும் ஷத்ரியர்கள் எண்ணி நோக்க இயலாது. ஆனால் இங்கிருந்து விடுபட்டு எழுபவர்கள், இங்கு அமையா பேருண்மை ஒன்றை சென்று தொடுபவர்கள், அங்கிருந்து அதை கொண்டு வந்து இங்கு நிலை நாட்டுபவர்கள்

பெரும்பாலும் ஷத்ரியர்களே. அந்தணர் அவற்றை விரித்துரைக்கலாம். அவற்றில் இங்குள்ள மானுடருக்கு பயன் தருவனவற்றை மட்டும் சொல்லிப் பரப்பலாம். நிலைகொண்டு அவற்றை இங்கு நிலைநாட்டலாம். சென்று தொடும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லை. ஏனெனில் எதன்பொருட்டேனும் கொல்லவும் சாகவும் உலகனைத்தையும் வெல்லவும் முற்றிழக்கவும் துணிபவர்களே அனைத்தையும் அடைகிறார்கள்."

யுயுத்ஸு "இன்றைய செய்திகளை நான் கூறிவிடுகிறேன், அரசே" என்றான். "ஆம், கூறுக!" என்றார் யுதிஷ்டிரன். "நாளை காலையிலேயே முக்தவனத்தை ஒழிந்து இங்கிருந்து நாம் கிளம்பவேண்டும். சடங்கு முடிந்த பின்னர் ஓரிரவுக்கு மேல் நீர்க்கடன் அளிக்கும் படித்துறையில் தங்கலாகாது என்பது நெறி" என்று யுயுத்ஸு சொன்னான். "ஆம், கூறினார்கள்" என்று யுதிஷ்டிரன் சொன்னார். "நாம் கிளம்பவேண்டியதுதான். நம் உள்ளம் இவ்விடத்தைவிட்டு ஏற்கெனவே எழுந்துவிட்டிருக்கிறது." யுயுத்ஸு "நாம் அஸ்தினபுரிக்கு எப்போது செல்கிறோம் என்பதை வகுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. அதற்குரிய நற்பொழுதும் முறைமைகளும் முடிவு செய்யப்படவேண்டும்" என்று சொன்னான்.

"நாம் அஸ்தினபுரிக்கா செல்கிறோம்?" என்று பீமன் கேட்டான். "ஆம், அஸ்தினபுரிக்குத்தான் செல்லவேண்டும்" என்றார் யுதிஷ்டிரன். "பிறிதொரு நகரத்திற்குள் முதல் காலடியை வைக்கலாகாது. நாம் வென்றிருக்கிறோம். நமது நகர்நுழைவு அதற்குரிய முறையிலேயே நிகழவேண்டும். அது பாரதவர்ஷமெங்கும் தெரியவேண்டும். எனில் மட்டுமே நமது வெற்றியை ஆழ நிலைநாட்ட முடியும்." சகதேவன் "ஆம்,

அதுவே முறை” என்றான். “நகர்நுழைவு என்பது வெற்றி அறிவிப்பு மட்டும் அல்ல, நாம் கொள்ளும் முதல்மங்கலமும் கூட.”

யுதிஷ்டிரன் “தௌம்யர் இங்கிருக்கிறார். இளையோனும் பொழுது கணிக்க அறிந்தவன். அவர்கள் கூறட்டும், நாம் எப்போது கிளம்புவது, எத்தருணத்தில் அங்கு சென்று சேர்வது என்று” என்றார். “இங்கிருந்து நாம் மட்டுமே கிளம்புகிறோம்” என்று யுயுத்ஸு சொன்னான். “பேரரசரும் பேரரசியும் இன்று அந்தியிலேயே இங்கிருந்து கிளம்பி ரிஷபவனம் நோக்கி செல்கிறார்கள். அங்கு அவர்களுக்கான குடில்களை அமைக்கும்படி ஆணை சென்றுள்ளது” என்றான். “ரிஷபவனத்திற்கா? அது இங்கிருந்து நெடுந்தொலைவில் அல்லவா உள்ளது?” என்று யுதிஷ்டிரன் கூவினார். “நமது ஆட்சிக்குட்பட்ட நிலமும் அல்ல. அரக்கர்களும் அசுரர்களும் ஆளும் காடு.”

“ஆம், அஸ்தினபுரியின் கோல்எல்லையிலிருந்து அகன்றுவிடவேண்டும் என்பதே அவரது எண்ணமாக இருக்கிறது. ஆணையிடுகையிலேயே அதைத்தான் சொன்னார்” என்றான் யுயுத்ஸு. யுதிஷ்டிரன் சிலகணங்கள் அவனை வெறும் விழிகளால் நோக்கிவிட்டு திரும்பி இளைய யாதவரை பார்த்தார். இளைய யாதவர் “அவ்வண்ணம் அவர் விழைவதில் பொருள் உள்ளது, அரசே” என்றார். யுதிஷ்டிரன் நீள்மூச்சுவிட்டு “ஆகுக!” என்றார். பின்னர் பீமனை நோக்கிவிட்டு “அங்கும் நமது ஒற்றர்களும் மறைமுக காவலர்களும் நிற்க இயலும்” என்றார்.

“வேண்டியதில்லை” என்று இளைய யாதவர் கூறினார். “அவர் இன்று எந்தக் குலத்திற்கும் தலைவரல்ல. எந்நாட்டுக்கும் பேரரசரும் அல்ல. முடிதுறந்து குடியும் துறந்து இங்கிருந்து

செல்கிறார். எனவே அரக்கர்களுக்கோ அசுரர்களுக்கோ அவரிடம் பகையேதும் இருக்க வாய்ப்பில்லை.” யுதிஷ்டிரன் “அக்காட்டில் அவர்கள் என்ன செய்யக்கூடும்? அரண்மனையில் மைந்தருடன் மகிழ்ந்திருப்பதே பேரரசரின் உள்ளத்திற்கு உகந்ததென்று நான் அறிவேன். இங்கு இன்னமும் பெண்டிர் இருக்கிறார்கள். நம் குலம் இன்னும் முளைத்தெழும். அவர் தோள்களையும் கைகளையும் நிரப்பும் குழவிகள் அரண்மனையில் நிறையும். இங்கு நம்முடன் இருப்பதொன்றே அவர் செய்யக்கூடுவது” என்று யுதிஷ்டிரன் கூறினார்.

“அவருடைய விழைவு வேறு” என்றான் யுயுத்ஸு. “அவரிடம் சென்று நான் மன்றாடினால் என்ன? உகந்தது இதுவென்று வலியுறுத்திக் கூறினால் இங்கு அவர் தங்கக்கூடும். ஒருவேளை அவர் எதிர்பார்ப்பதே இவ்வண்ணம் நான் சென்று அடிபணிந்து மன்றாடவேண்டும் என்பதாகக்கூட இருக்கலாம்” என்றார் யுதிஷ்டிரன். இளைய யாதவர் “இல்லை, இனி அவர் தோள்களில் எந்த மைந்தனும் அமர முடியாது. இதுவரை குழந்தைகளை அவர் பார்த்த கண்ணல்ல இன்று அவரிடம் இருப்பது” என்றார். “ஏன்?” என்று யுதிஷ்டிரன் கேட்டார். “அரசே, அவர் இனிமேல் குழந்தைகளை விரும்பமாட்டார். இன்று அவர் பெருந்தந்தை அல்ல” என்று இளைய யாதவர் சொன்னார். “ஏன்?” என்று யுதிஷ்டிரன் மீண்டும் கேட்டார்.

தௌம்யர் “யாதவ அரசர் கூறுவது உண்மை. இன்று அவர் தொடும் குழவிகள் அவரிடமிருந்து உளம் நிறைந்த நற்சொல்லை பெறமாட்டார்கள். அவரால் எச்சமின்றி வாழ்த்தவும் இயலாது. மகவிலியின் வாழ்த்து மைந்தருக்கு உகக்காதென்பார்கள். மைந்தரை இழந்த தந்தையின் கைத்தொடுகையும் நாவெழும் சொல்லும் அவ்வண்ணமே”

என்றார். யுதிஷ்டிரன் முகம் சுளிக்க தௌம்யர் "கேட்கையில் இது இரக்கமற்ற சொல்லென்றே தோன்றும். சில உண்மைகள் இரக்கமற்றவை" என்றார். யுதிஷ்டிரன் ஒன்றும் சொல்லவில்லை. சிலகணங்கள் அங்கே அமைதி நிலவியது.

"அவர் அரசியுடன் தனித்து தங்கி அங்கு என்ன செய்யப்போகிறார்? தவம் செய்வது அவர் இயல்பல்ல" என்றான் சகதேவன். "சிலர் விழைந்து தவம் இயற்றுகிறார்கள். சிலர் தவம் நோக்கி செலுத்தப்படுகிறார்கள். கணமேனும் தவம் அமையாத வாழ்க்கையே மண்ணில் இல்லை என்பார்கள்" என்று இளைய யாதவர் சொன்னார். "நோயும் முதுமையும் தனிமையும் தவமாகக்கூடும்" என்றபின் "தனிமை தவமாக மாறும், கைவிடப்பட்டு அமையும் தனிமையே ஆயினும்" என்றார்.

மீண்டும் அங்கு சிலகணங்கள் அமைதி நிலவியது. யுயுத்ஸு அதை கலைத்து "அரசே, தாங்கள் வந்து பேரரசரை இன்று வழியனுப்ப வேண்டும். அவர்கள் கிளம்புகையில் அங்கு தாங்கள் இருப்பது நன்றென்று எண்ணுகிறேன்" என்றான். யுதிஷ்டிரன் "ஆம், அது என் கடமை. நாங்கள் ஐவரும் வருகிறோம்" என்றார். யுயுத்ஸு "காசிநாட்டரசி பானுமதியும் இளையவர்கள் இருவரும் இங்கிருந்து நேராகவே காசிநாட்டுக்கு செல்லவிருக்கிறார்கள். காசிநாட்டரசி செல்வதற்கு காசியிலிருந்து இன்றிரவே இங்கு படகு வரும் என்று செய்தி வந்துள்ளது" என்றான்.

யுதிஷ்டிரன் "ஆம், அதுவே முறை" என்றார். "காசிநாட்டரசியையும் தாங்கள் வந்து முகமன் உரைத்து வழியனுப்புவதே முறையாகும்" என்று யுயுத்ஸு சொன்னான். "ஆம், அதை செய்யவேண்டும் நான்" என்று யுதிஷ்டிரன்

கூறினார். “பிற இளவரசியரும் இங்கிருந்தே தங்கள் பிறந்த நாடுகளுக்கு செல்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக படகுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அப்பணியைத்தான் இன்றிரவெல்லாம் நான் செய்யவேண்டியிருக்கிறது. நாளை முதற்கதிர் எழுகையில் இந்த ஈமக்கடன் நிலையில் நாம் மட்டுமே இருப்போம். இங்கிருந்து பிற அனைவரும் சென்ற பிறகே நாம் கிளம்பவிருக்கிறோம்.” யுதிஷ்டிரன் நீள்மூச்செறிந்தார். ஆனால் அவர் முகத்தில் இனிய களைப்பொன்றே தெரிந்தது.

யுயுத்ஸு “விதுரர் இன்னும் சற்று நேரத்தில் இங்கிருந்து கிளம்பவிருக்கிறார்” என்றான். அவர் “தன் மூத்தவரை வழியனுப்பிவிட்டுச் செல்வார் என்று எண்ணினேன்” என்றார் யுதிஷ்டிரன். “அவர் முன்னரே அவரிடமிருந்து விடைபெற்றுவிட்டார்” என்று யுயுத்ஸு சொன்னான். “அவரையும் நான் வந்து வழியனுப்ப விழைகிறேன். அரச முறைமையில் அதற்குத் தடையில்லை எனில்” என்று யுதிஷ்டிரன் சொன்னார். யுயுத்ஸு “தடையில்லை என எண்ணுகிறேன்” என்றான். சகதேவன் “இல்லை, அரசர் என்றல்ல, எவருமே துயர்நிலையிலிருந்து செல்பவர்களுக்கு விடையளிக்கலாகாது” என்றான். “ஆம், ஆனால்...” என யுதிஷ்டிரன் சொல்ல சகதேவன் “அவர்கள் உதறிச்செல்வது துயரை” என்றான்.

சகதேவன் “நான் விதுரரிடம் பேசினேன். அவர் தங்களிடம் சொல்கொள்ளவோ தங்களை சந்தித்து விடைகொள்ளவோ விழையவில்லை” என்றான். யுதிஷ்டிரன் “ஏன்?” என்று திகைப்புடன் கேட்டார். “அரசே, இவர்கள் அனைவருமே மீளாது விடைகொள்கிறார்கள். மீளாவிடை கொண்டு சென்றாலே துறவு

சிறக்கும் என்று நூல்கள் சொல்கின்றன. விடைகொள்கையில் சொல்லும் ஒற்றைச்சொல் ஒரு விதையென உள்ளத்தில் விழுந்து செல்லும் திசையெங்கும் வளர்ந்து சூழ்ந்து சிறைப்படுத்தும் என்றும் அது விட்டுச்செல்லும் அனைத்திலும் தன்னைப் பிணைத்து விடுபடுதலை இல்லாமலாக்கும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. கூறாமல் துறவு கொள் என்கின்றன நூல்கள். இவையனைத்தும் துறவுகள்" என்றான்.

யுதிஷ்டிரன் விழிகள் தத்தளிக்க "இச்சொற்கள் அளிக்கும் ஈர்ப்புக்கு இணையே இல்லை. உண்மையில் நான் விழைவது அவ்வண்ணம் ஒரு கூறாத் துறவு மட்டுமே" என்றார். யுயுத்ஸு மேலும் தயங்குவதுபோல் தெரிய பீமன் அதை உணர்ந்து "சொல்க!" என்றான் "அரசியும் விதுரருடனே செல்வதாக தெரிகிறது" என்று யுயுத்ஸு சொன்னான். "யார்?" என்றபடி யுதிஷ்டிரன் எழப்போனார். "மூதரசி குந்திதேவி" என்றான் யுயுத்ஸு. "யார் சொன்னது?" என்று உரக்க கேட்டார் யுதிஷ்டிரன். "அவரே என்னை அழைத்து ஆணையிட்டார். விதுரருடன் அவரும் செல்வதற்குரிய ஒருக்கங்களை செய்யச் சொன்னார்."

"எங்களிடம் கூறும்படி சொன்னாரா?" என்றார் யுதிஷ்டிரன். "இல்லை" என்று யுயுத்ஸு சொன்னான். "அவரும் கூறாமல் துறவு கொள்ள விழைகிறார் போலும்" என்றான் சகதேவன். யுதிஷ்டிரன் "அன்னையா? இன்று அன்னை இருக்கும் உடல்நிலையில்..." என்றபின் "எனில் நாங்கள் நகர்நுழைவதை அவர் காண வேண்டாமா? அங்கே குருவின் அரியணையில் அமர்ந்து முடிசூடுவதை பார்க்க வேண்டாமா? என்ன சொல்கிறார்?" என்றார். "அவர்கள் அதற்கு விழையவில்லை என்பது தெளிவு" என்றான் யுயுத்ஸு.

“அறிவின்மை! முற்றான பொருளின்மை!” என்று உரக்க கூவினார் யுதிஷ்டிரன். “அன்னை தன் வாழ்நாளெல்லாம் போராடியது அதற்காகத்தான். அஸ்தினபுரியின் முடி சூடி நான் அமர்வதை காணவேண்டுமென்று அவர் எத்தனை இரவுகளில் விழிநீர் வழிய சொல்லியிருக்கிறார்! மும்முடி சூடி நான் பாரதவர்ஷத்தை ஆளவேண்டும் என்பதற்காகவே எழுபதாண்டுகளாக அவர் உயிர் வாழ்ந்தார். அதன் பொருட்டே வஞ்சம் கொண்டார். இன்பங்களைத் துறந்தார். மானுடருக்கு மண்ணில் அளிக்கப்பட்டுள்ள ஒவ்வொன்றையும் இழந்தார். தான் எந்நிலையிலும் விழையாதனவற்றைக்கூட இயற்றினார். தன் முதல் மைந்தனை துறக்கவும் துணிந்தார். இன்று அவை அனைத்தையும் உதறி அவர் செல்வதென்பது...”

“அவருக்கு ஏதோ ஆகிவிட்டது. அவர் உளம் நல்நிலையில் இல்லை. அவரிடம் நான் சென்று பேசுகிறேன். மருத்துவர்கள் அவரிடம் பேசட்டும். சிலநாட்கள் அவர் ஓய்வெடுத்து உடல் தேறட்டும். அதன் பின் முடிவெடுக்கலாம். இன்று அந்த நைந்த உடலிலிருந்து எடுக்கப்படும் முடிவுகளுக்கு அவர் பொறுப்பல்ல” என்றார் யுதிஷ்டிரன். இளைய யாதவர் மெல்லிய குரலில் “அவர் எடுத்து தெளிந்த முடிவு அது. அம்முடிவிலேயே அது தெரிகிறது” என்றார். ”என்ன சொல்கிறாய், இளைய யாதவனே? அன்னை இதுவரை வாழ்ந்ததற்கு என்ன பொருள்?” என்று யுதிஷ்டிரன் கேட்டார். “மெய்மையை வழிதவறிச்சென்று அடைபவர்களும் உண்டு” என்று இளைய யாதவர் சொன்னார்.

சொல்லிழந்து அவரை நோக்கிக்கொண்டிருந்த யுதிஷ்டிரன் பின்னர் “அவ்வாறல்ல. அதை நான் ஒப்ப இயலாது. நான் அவர் அவ்வாறு விடைபெற்றுச் செல்ல ஒருபோதும் ஒப்பமாட்டேன்.

ஒரு சொல்லேனும் அவரிடம் சொல்லியே அனுப்புவேன். அச்சொல் அவரை திரும்பக் கொண்டுவரும் என்றால் அதுவே என் இலக்கு. எனது சொல் பெறாது அவர் இங்கிருந்து கிளம்ப முடியாது... நான் ஒப்ப மாட்டேன்" என்றார். பீமன் "மூத்தவரே, இத்தருணத்தில் அன்னைக்கு நாம் செய்யக்கூடுவது அவரை விட்டுவிடுவது என்றே தோன்றுகிறது" என்றான்.

"நீ என்ன சொல்கிறாய் என்று தெரிகிறதா? அன்னை நம் பொருட்டே உயிர் வாழ்ந்தவர். நமக்காக அருந்தவம் இயற்றியவர்" என்றார் யுதிஷ்டிரன். "அதை நமக்காக அன்னை செய்தார் என்று நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம். நாமறியாத ஏணி ஒன்றில் அவர் ஏறிக்கொண்டிருக்கிறார். இப்போது நம்மைக் கடந்து மேலே சென்றுவிட்டார். அவரை நம்மை நோக்கி இழுப்பது நமக்கு பெருமையல்ல" என்று பீமன் சொன்னான். யுதிஷ்டிரன் சகதேவனை பார்த்தார். சகதேவன் "அவர் கூறுவதே மெய். மூத்தவரே, அன்னையை அவ்வண்ணம் விட்டுவிடுவதே நாம் செய்யக்கூடுவது" என்றான். "இல்லையேல் பிறகு அதை எண்ணி நாம் வருந்தவேண்டியிருக்கும்."

"இத்தருணத்தில் அன்னை பயணம் செய்யக்கூடாது. செல்லும் வழியில் அவர் உயிர் துறந்தால்கூட வியப்பில்லை. பார்த்தாயல்லவா? குடிலிலிருந்து நீர்க்கடன் நிலைவரை வருவதற்கே அன்னையால் இயலவில்லை" என்றார் யுதிஷ்டிரன். "அவ்வாறு உயிர் துறப்பார் என்றால் அதுவும் அவரின் விடுதலை என்று கொள்ளவேண்டியதுதான்" என்று பீமன் சொன்னான். அர்ஜுனனைப் பார்த்து "என்ன சொல்கிறாய், இளையோனே?" என்றார் யுதிஷ்டிரன். அர்ஜுனன் யுயுத்ஸுவிடம் "அவர் பேசும்போது எங்கேனும் ஒரு

சொல்லேனும் என்னைப்பற்றிய குறிப்பு இருந்ததா?" என்றான். யுயுத்ஸு "இல்லை" என்றான். அர்ஜுனன் "எனில் அவர் கிளம்புவது நன்று" என்றான்.

அவன் என்ன சொல்கிறான் என்று புரியாமல் யுதிஷ்டிரன் அவனையும் இளைய யாதவரையும் மாறி மாறி பார்த்தார். "இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொன்று எண்ணுவதில் பொருளில்லை. நாம் அன்னையை அவ்வாறு விடமுடியாது. அன்னை நம்மை விட்டுச்சென்றால் அதன் பழி அனைத்தும் நம்மேல் வந்து விழும். இன்று நமது குடியினர் எவரும் நம்மேல் கனிவுடன் இல்லை என்பதை மறக்கவேண்டியதில்லை. இப்பேரழிவு அனைத்திற்கும் பொறுப்பை என் மேல் ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள். இன்று நாம் அனைவரும் அப்பழியை மணிமுடியென அணிந்துகொண்டிருக்கிறோம். அஸ்தினபுரிக்குள் நுழைந்து முடிசூட்டி அமர்கையில் அன்னை நம்மிடம் இல்லையெனில் அவரும் நம்மை கைவிட்டுவிட்டார் என்றே தோன்றும்" என்றார்.

உடைந்த குரலில் "அன்னை இல்லை எனில் எவருக்காக நான் அம்முடியை சூடுகிறேன்? தந்தை விட்டுச் செல்கிறார். அன்னை விட்டுச் செல்கிறார். மூத்தவர்கள் பெரியவர்கள் எவரும் உடனில்லை. எவருக்காக இதை செய்யவேண்டும்?" என்றார் யுதிஷ்டிரன். "வரும் தலைமுறைகளுக்காக" என்று யுயுத்ஸு சொன்னான். "வருந்தலைமுறையா? அடுத்த தலைமுறையினன் இங்கு நம்மை விட்டுச் சென்றதை நீ பார்த்தாயல்லவா? குருகுலத்தில் எஞ்சியிருப்பது ஓர் எளிய கரு" என்று யுதிஷ்டிரன் கூறினார். "அக்கரு நிலைகொள்கிறதா என்பதை

நோக்க ஒவ்வொரு நாளும் ஒற்றர்களை அனுப்பிக்கொண்டிருக்கிறேன்.”

அதைச் சொன்னதுமே தன் நாவால் அதை சொல்லி பிழை இயற்றிவிட்டோம் என்று எண்ணி தன்னை கட்டுப்படுத்திக்கொண்டார். யுயுத்ஸு “நம் நலனுக்காக எடுக்கும் முடிவல்ல இது. நாம் இன்று அவருக்கு ஒரு பொருட்டே அல்ல. தங்கள் விடுதலையை நாடுபவர்களுக்கு பிறர் அனைவரும் அதற்கான தடை என்றே தோன்றுவார்கள்” என்றான். “அன்னையை நான் அவ்வாறு விடப்போவதில்லை. அன்னையிடம் சென்று மன்றாடவிருக்கிறேன். அவர் கால்களில் தலையை வைத்து கோருகிறேன், அன்னையே என்னுடன் இருங்கள் என்று அழுகிறேன். என் முடிசூட்டு நிகழ்வுக்காவது அவர் இருந்தாகவேண்டும் என்று கோருகிறேன்” என யுதிஷ்டிரன் கூவினார்.

மேலும் உளச்சீற்றம் கொண்டு “அவர் இல்லாமல் இங்கே நாம் முடிசூடக்கூடாது. அது என்னை பெரும்பழியில் கொண்டு சேர்க்கும். இவையனைத்தும் அன்னைக்காக. அவர் அதை உணரட்டும்” என்றார். யுயுத்ஸு “இங்கே சொல்லப்பட்ட பின்னரே நானும் உணர்கிறேன். அவர் உங்களிடம் விடைபெறாதபோது நீங்கள் அவரைக் காணச்செல்வது அத்துமீறல்” என்றான். “ஆம், அத்துமீறல்தான். அன்னை மடிமீது தொற்றித் தவழ்ந்து ஏறும் மகவுபோல அத்துமீறுகிறேன்” என்றபடி தன் மேலாடையை எடுத்து தோளிலிட்டு “கிளம்புக!” என்று தேர் நோக்கி நடந்தார்.

நீர்ச்சுடர் - 61

பகுதி ஒன்பது : சிறகெழுகை – 3

யுதிஷ்டிரன் முன்னால் நடக்க அவருடைய விரைவுக்கு முந்தாமலும் பிந்தாமலும் யுயுத்ஸு சற்று பின்னால் நடந்தான். அவன் உடன் வருவதை யுதிஷ்டிரன் உணர்ந்ததுபோல் தெரியவில்லை. தனக்குத்தானே பேசிக்கொள்பவர்போல உதடுகள் அசைய, கைகள் சுழிக்க, சிற்றடிகளுடன் முன்னால் தெறித்து தெறித்து விழுபவர்போல நடந்தார். அத்தனை விரைவான நடை அவருக்குப் பழக்கமில்லாததால் சற்று தொலைவு சென்று மூச்சிரைத்தார். அவருடைய கழுத்தில் நரம்புகள் துடித்தன. முகம் சிவந்துவிட்டது.

யுயுத்ஸு சற்று அருகே சென்று "நாம் தேரிலேயே செல்லலாம், அரசே" என்றான். அவர் திடுக்கிட்டு அவனைப் பார்த்து, அவன் யார் என்பதுபோல் சில கணங்கள் விழிமலைக்க நின்று, "என்ன?" என்றார். "நாம் தேரிலேயே செல்லலாம். தொலைவிருக்கிறது அல்லவா?" என்றான். "ஆம், தேரை கொண்டுவரச்சொல்" என்றார் யுதிஷ்டிரன். யுயுத்ஸு திரும்பி தேர்ப்பாகனை அருகே வரும்படி கையசைத்தான். அவர்கள் நடந்து செல்வதை திகைப்புடன் அப்பால் நின்று பார்த்திருந்த தேர்ப்பாகன் ஒற்றைப்புரவி கட்டப்பட்ட சிறிய விரைவுத்தேரை அருகே கொண்டு வந்தான்.

யுயுத்ஸு அதன் படிகளை அமைப்பதற்குள்ளாகவே கையை ஊன்றி பாய்ந்து உள்ளே ஏறி அமர்ந்த யுதிஷ்டிரன் "ஏறிக்கொள்" என்றார். யுயுத்ஸு அதன் படிகளில் தொற்றிக்கொள்வதற்குள்ளேயே பாகனிடம் "செல்க! செல்க!" என்றார். தேர் செல்லும்போது நிலையழிந்து உள்ளே

விழுவதுபோல் சரிந்து கையூன்றி யுயுத்ஸு அமர்ந்துகொண்டான். “விரைக! விரைக!” என்றார் யுதிஷ்டிரன். “விசை கூட்டுக!” என்று கையை வீசினார். யுயுத்ஸு “இதற்குமேல் விரைவாக செல்ல இயலாது, மூத்தவரே” என்றான். யுதிஷ்டிரன் எரிச்சலுடன் அவனை பார்த்தார். சற்றுநேரத்திற்கு முன் மலர்ந்து அழகுகொண்டிருந்த முகமா இது என யுயுத்ஸு எண்ணிக்கொண்டான். விழிகள் தளர்ந்து தசைவளையங்கள் தொங்கின. முகத்தசைகள் இடப்பக்கமாக தொய்ந்திருக்க வாய் கோணலாகி இழுத்திருக்க நோய்கொண்டவராக தெரிந்தார்.

தேர் சகட ஓசையுடன் குடிசைநிரைகளின் நடுவே சென்றது. அந்தப் பொழுதில் அனைத்து குடில்களும் கலைந்த தேனீக்கூடுகள்போல குழம்பி ஓசையிட்டுக் கொண்டிருந்தன. ஏவலர்கள் முன்னும் பின்னும் ஓடினர். காவலர்கள் ஒருவரையொருவர் கூவி அழைத்தனர். ஒவ்வொரு குடிலுக்குள்ளிருந்தும் பொருட்கள் வெளியே வந்துகொண்டிருந்தன. அங்கு சிறிய பொழுதில், அச்சிறிய இடத்தில், சிலநாட்கள் மட்டுமே வாழ்ந்தவர்கள் அதற்குள் அத்தனை பொருட்களை சேர்த்துவிட்டிருப்பது யுயுத்ஸுவை திகைப்படையச் செய்தது. ஆடைகள், மரவுரிகள், கலங்கள், வெவ்வேறு சிறு பேழைகள், குடுவைகள், மரப்பொருட்கள், இரும்புப்பொருட்கள், கரண்டிகள், மண்கிளறிகள், மண்வெட்டிகள், ஈட்டிகள், வேல்கள், வெவ்வேறு வகையான அரிவாள்கள், குத்துக்கத்திகள்...

மனிதர்களை நோக்கி அத்தனை பொருட்களும் வந்து சேர்வதுபோல் தோன்றியது. எங்கெங்கோ இருந்து அவை கிளம்பி மனிதர்களை நாடி வந்துகொண்டிருக்கின்றன. காட்டில்

குருதியுண்ணும் சிற்றுயிரிகள் விலங்குகளை நாடி வருவதுபோல. மானுடர் இன்றி அவை இல்லை. அல்லது தெய்வத்தை நாடும் மானுடர் போலவா? மனிதர்கள் இக்கருவிகள் இல்லாமல் இருக்க இயலுமா என்ன? அவர்களுடைய கைகள் ஏற்கெனவே அவர்களிடமிருந்து பிரிந்து கருவிகளாக மாறி எங்கும் பரவிவிட்டன. கைகளிலிருந்து அத்தனை கருவிகளும் சென்ற பிறகு அங்கிருப்பது இரு தசைத்துண்டுகள்தான். அவற்றால் எதையும் ஆற்ற முடியாது. அவற்றுக்கு மீண்டும் அத்தனை ஆற்றலும் அக்கருவிகளின் வடிவாக திரும்பி வந்தாகவேண்டும்.

அவன் அங்கு கிடந்த ஒரு பொருளை பார்த்தான். அது என்ன என்று புரியவில்லை. தேர் நகர்ந்து சென்றபின்னர்தான் அது மண்ணை ஆழக்குத்தி விதைகளை மண்ணுக்குள் இடுவதற்கான உட்குடைவான நீண்ட கூம்புவடிவ இரும்புக்கழி என்று தெரிந்தது. காடு வளர்ப்பதற்குரியது. இங்கு எவர் விதைகளை இடுகிறார்கள் என்று எண்ணினான். ஆனால் இங்கும் மனிதர்கள் விதைகளை நட்டு வளர்த்துவிட்டுத்தான் செல்வார்கள். அவர்கள் சென்றபின் இம்மரங்கள் இங்கே எழுந்து நின்றிருக்கும். ஒருவேளை இன்னும் பல தலைமுறைகளுக்கு எவரும் இந்தப் படித்துறைகளில் வராமலாவார்கள். இந்த மரங்கள் இவர்கள் நின்ற தடங்களுக்கு மேல் முளைத்து வளர்ந்து இவர்களின் சுவடுகளை இல்லாமலாக்கும்.

அவன் மரங்களை நோக்கிக்கொண்டு சென்றான். பிரதீபர் நட்ட இந்த ஓங்குமரங்களுக்கு அடியில் நிகழ்ந்தது இந்த பலிக்கொடை. அந்த மரங்களின் விதைகள் போலும் இவை. இறப்பின் கணத்தில்கூட ஒரு விதையை நடாமல் மனிதனால்

அகன்று செல்ல இயலவில்லை. என்ன எண்ணிக்கொண்டிருக்கிறோம் என்று அவன் தன்னைத்தானே வியந்தான். எதை எண்ணவேண்டுமோ அதை தவிர்த்து பிறிதொன்றை எண்ணுவது அவனுடைய இயல்பு. ஒருவேளை மானுட இயல்பே அதுவாக இருக்கலாம். சுழன்று சுழன்று மையப்புள்ளியை அணுகுவதே உள்ளத்தின் வழியாக இருக்கிறது. நேராகச் சென்று தொடுவதற்கு அச்சம். அல்லது தயக்கம்.

அல்ல, அதற்கப்பால் ஒன்று. நேராக சென்று தொடுவதென்பது அதை எதிர்கொள்வதுதான். அறியாததை எதிர்கொள்ள இயலாது. எதிர்கொள்ள முடியாதவற்றை நோக்கி சென்றாக வேண்டியிருக்கிறது. சுழன்று சுழன்று, தன்னந்தனியாக, ஒவ்வொன்றையும் பிறிதொன்றாக ஆக்கிக்கொண்டு, ஒவ்வொரு கணத்தையும் உந்தி பின்னிழுத்துக்கொண்டு, தவிர்க்க முடியாமல் தன்னை ஒப்படைத்துக்கொண்டு சென்றுகொண்டே இருக்கிறோம். சாவை மட்டுமல்ல. துயரை மட்டுமல்ல. இன்மையை மட்டுமல்ல. வாழ்வை, இனியவற்றை, மெய்மையைக்கூட அப்படித்தான் அணுகுகிறோம்.

அவன் தொலைவிலேயே திருதராஷ்டிரரின் குடிலை கண்டான். அங்கு எவருமில்லை என்று முதற்கணத்திலேயே தோன்றியது. அங்கு காவலர்கள் நின்றிருந்த முறைதான் அவ்வண்ணம் காட்டியது. சஞ்சயன் குடிலுக்குள்ளிருந்து வெளிவந்து அணுகும் தேரை நோக்கியபடி நின்றான். தேர் சென்று நின்றதும் யுதிஷ்டிரன் முன்பக்கம் வழியாக பாய்ந்திறங்கி சஞ்சயனை நோக்கி ஓடினார். தன் மேலாடையை அள்ளிச் சுழற்றி தோளிலிட்டபடி சஞ்சயனை அணுகி உரத்த குரலில் “தந்தை எங்கே? தந்தையும் அன்னையும் எங்கே?” என்றார்.

“அவர்கள் நேற்று மாலையே அனைத்தும் ஒருக்கி வைத்திருந்திருக்கிறார்கள், அரசே. இன்று காலை சடங்கு முடிந்து வந்ததுமே உடனே கிளம்பிவிட்டார்கள்” என்றான் சஞ்சயன். “இன்று கிளம்பிவிட்டார்களா? கிளம்பப்போவதாகத்தானே அறிந்தேன்” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “அவர்கள் நான் இங்கே வருவதற்கு முன்னரே கிளம்பிவிட்டிருக்கிறார்கள், அரசே. சடங்கு முடிவதற்காக காத்திருந்திருக்கிறார்கள்” என்று சஞ்சயன் சொன்னான். “அவர்கள் இங்கிருந்து எந்தப் பொருளையும் எடுத்துக்கொள்ளவில்லை. வண்டியில் நேரே சென்று ஏறி அமர்ந்து செல்க என்று ஆணையிட்டிருக்கிறார்கள்.”

யுதிஷ்டிரன் இரு கைகளையும் தளரவிட்டு நெடுமூச்செறிந்தார். தளர்ந்த குரலில் “நெடுந்தொலைவு சென்றிருப்பார்களா?” என்றார். “ஆம், அவர்கள் செல்லும் விசையில் நெடுந்தொலைவு சென்றிருப்பதற்கே வாய்ப்பு” என்றான் சஞ்சயன். “நான் செல்கிறேன். சென்று அவர்களை பார்க்கிறேன். அவர்களிடம் ஒரு சொல்லாவது நான் சொல்லியாக வேண்டும்” என்றார் யுதிஷ்டிரன். சஞ்சயன் உறுதியான குரலில் “அரசே, அதற்கு உங்களுக்கு உரிமையில்லை. விட்டுச் செல்பவர்களை தொடர்ந்து செல்வதென்பது மீறல். மானுட நெறிகளுக்கும் தெய்வ நெறிகளுக்கும் எதிரானது” என்றான்.

“நான் என்ன செய்வேன்! என்ன செய்வேன்!” என்று யுதிஷ்டிரன் கைகளை விரித்து சொன்னார். “அவர்கள் என்னை விட்டுச் செல்கிறார்கள். ஒவ்வொருவரும் என்னை விட்டுச் செல்கிறார்கள்!” என்றார். “விட்டுச் செல்வதே அவர்களுக்குரிய ஒரே வழி. முன்னரே அது முடிவெடுக்கப்பட்டுவிட்டது. அவர்கள் எங்கு செல்லவேண்டுமோ அங்குதான் செல்கிறார்கள்”

என்றான் சஞ்சயன். "இனி அவர்களை பார்ப்பேனா? சஞ்சயா, இனி ஒருமுறையேனும் அவர்களை பார்ப்பேனா?" என்றார் யுதிஷ்டிரன். சஞ்சயன் "மீண்டும் ஒருமுறை அவர்களை பார்ப்பீர்கள்" என்றான்.

யுதிஷ்டிரன் திகைப்புடன் நோக்க சஞ்சயன் "ஓராண்டுநிறைவு நீர்க்கடனுக்குப் பின்னரே அவர்கள் உயிர் துறப்பார்கள் என்று இங்கு கணித்து சொல்லப்பட்டிருக்கிறது" என்றான். "எவர் கணித்தார்கள்? எப்போது கணித்தார்கள்?" என்று உரக்க கேட்டார் யுதிஷ்டிரன். சஞ்சயன் மறுமொழி சொல்லவில்லை. "சகதேவனா? அறிவிலி! இதை ஏன் அவரிடம் சொன்னான்?" என்று யுதிஷ்டிரன் கூவினார். "எங்கு சொல்லவேண்டும் எப்படி சொல்லவேண்டும் என்பதை அவர் அறிவார், நம்மைவிட" என்றான் சஞ்சயன். யுதிஷ்டிரன் தளர்ந்து "ஆம், அவன் அறிவான். அவனிடம் கேட்கவேண்டும். எனக்கான பொழுதென்ன என்று. நான் இயற்றுவதற்கு என்ன உள்ளதென்று கேட்கவேண்டும்" என்றார்.

சஞ்சயன் "தாங்கள் கேட்கப்போவதுமில்லை, கேட்டாலும் அவர் கூறப்போவதுமில்லை, அரசே" என்றான். "தங்களுக்கு இன்னும் நெடுந்தொலைவு இருக்கிறது." திகைத்ததுபோல் அவனை சிலகணங்கள் நோக்கிவிட்டு யுதிஷ்டிரன் "ஆம்" என்றார். "நெடுந்தொலைவு சென்றிருப்பார்கள்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டார். "ஆம் அரசே, நெடுந்தொலைவு சென்றிருப்பார்கள்" என்று சஞ்யனன் சொன்னான். "மீண்டும் அவர்களை பார்க்கும்போது அவர்கள் எவ்வண்ணம் இருப்பார்கள்! நான் எப்படி இருப்பேன்! ஓராண்டு! பன்னிரு மாதங்கள், முந்நூற்று அறுபத்தாறு நாட்கள்!"

“நீண்ட பொழுதுதான், ஆனால் ஒருகணப்பொழுதுக்கும் நிகரானது அது” என்று சஞ்சயன் சொல்லி புன்னகைத்தான் யுதிஷ்டிரன் அவனைப் பார்த்தபின் “நீ யார்? நீ ஏன் இளைய யாதவரைப் போலவே எப்போதும் தோன்றுகிறாய்?” என்றார். சஞ்சயன் “அவருடைய ஒரு கூறு என்னில் இருக்கிறதென்று கொள்ளலாம்” என்றான். எண்ணியிராத கணத்தில் நினைவுகூர்ந்து யுதிஷ்டிரன் “அன்னை! அன்னையும் கிளம்பிவிடக்கூடும்! விதுரரும் அன்னையும் கிளம்புவதற்குள் அவர்களை பார்த்தாக வேண்டும். அதற்காகவே கிளம்பினேன்” என்றபடி யுயுத்ஸுவிடம் “கிளம்பு! கிளம்பு!” என்று தோளில் தட்டி தன் தேரை நோக்கி ஓடினார்.

யுயுத்ஸு சஞ்சயனிடம் “நீங்கள் எப்போது கிளம்புகிறீர்கள்?” என்றான். “இங்கிருந்து அனைவரும் கிளம்புகையில்தான். நான் மீண்டும் அஸ்தினபுரிக்கே வரத்தான் எண்ணுகிறேன். எனது கடன் அங்குதான் உள்ளது. பயிற்றுவித்தல்” என்றான் சஞ்சயன். “எதை பயிற்றுவிக்கச் செல்கிறீர்? தாங்கள் கற்ற அனைத்தையுமா?” என்று யுயுத்ஸு சொல்ல “இல்லை, குருக்ஷேத்ரத்தில் கற்ற ஒவ்வொரு சொல்லையும் மறக்கவே விழைகிறேன். தொடக்கநிலை மாணவர்களுக்கு எழுத்தறிவித்தல் அன்றி எவருக்கும் எதுவும் கற்றுக்கொடுக்கக் கூடாது என்று முடிவு செய்திருக்கிறேன்” என்றான்.

“தாங்கள் அடைந்தவை, அறிந்தவை...” என்று யுயுத்ஸு சொல்ல “அவற்றுக்கு எப்பொருளுமில்லை. அதை உணரவே எனக்கு இத்தனை பொழுதாகியிருக்கிறது. நான் இனி ஒருபோதும் ஒரு சொல்லையும் திரும்பிப் பார்க்கப்போவதில்லை” என்றான் சஞ்சயன். “நேற்று இவ்வெண்ணம் எழுந்தது. இன்று நீர்க்கடன் முடிந்தபோது முதற்சொல்லை மறக்கவேண்டும் என்று

எண்ணினேன். முதற்சொல்லை மறந்தும்விட்டேன். இனி ஒவ்வொரு சொல்லாக" என்றான். "முதற்சொல் எது?" என்று யுயுத்ஸு கேட்க சஞ்சயன் புன்னகைத்தான்.

தேரில் ஏறி அமர்ந்து யுதிஷ்டிரன் "வருக! என்ன செய்கிறாய் அங்கே?" என்றார். மேலும் ஏதோ கேட்க எண்ணிய யுயுத்ஸு கை தூக்கி பின் அதை தவிர்த்து "நன்று! வருகிறேன்" என்றபின் யுதிஷ்டிரனின் தேரை நோக்கி ஓடினான்.

யுதிஷ்டிரன் தனக்குத்தானே என புலம்பிக்கொண்டே இருந்தார். "அன்னை அங்கிருக்க வேண்டும். தெய்வங்களே, அன்னை அங்கிருக்க வேண்டும். அன்னை அங்கிருக்க வேண்டும்." யுயுத்ஸு அச்சொற்களிலிருந்தே ஒன்றை உணர்ந்தான். அவருக்குள் எங்கோ ஓர் எண்ணம் அன்னையும் அங்கிருக்கமாட்டார்கள் என்று சொல்கிறது. அதை அவனும் அறிவான். அவர்கள் எவரும் ஒருகணம்கூட இங்கு தங்கியிருக்கக் கூடாதென்ற முடிவில் முன்னரே இருந்திருக்கிறார்கள். அவர்கள் கிளம்புவதற்கு இங்கு எந்தத் தடையும் இல்லை. கிளம்புவதற்குத் தடையாக இருப்பவை இங்குள்ள மானுடர், இங்குள்ள பொருட்கள்.

ஆம், பொருட்கள். அவன் திரும்பி குடில்நிரைகளுக்கு வெளியே எடுத்துப் போடப்பட்ட பல நூறு பொருட்களை பார்த்துக்கொண்டு போனான். இங்கிருக்கும் இத்தனை பொருட்களாலும் கட்டப்பட்டிருக்கிறோம். ஒவ்வொரு பொருளையாக இவற்றை துறப்பதற்குள் வாழ்வு முடிந்துவிடுகிறது. ஒரு பொருளை வாழ்க்கையில் துறப்பதென்பது எவ்வளவு பெரிய நகர்வு! ஒன்றை துறப்பது என்பது முற்றிலும் தன்னை உடைத்து மறுவார்ப்பு செய்வதென்றே தோன்றுகிறது. நீர்ப்பலி அளிக்கையில்

ஏதேனும் ஒன்றை துறக்கும்படி சொல்கிறார்கள். அவன் அகம் திடுக்கிட்டான். அவ்வெண்ணத்தை அகற்ற எண்ணினான். ஆனால் அதைச் சார்ந்தே அகச்சொல் பெருகி ஓடியது.

ஒரு பொருளை, ஓர் உறவை. துறந்துவிடுங்கள் என்று கூறப்படுகையில் மானுடர் திகைக்கிறார்கள். எதைத் துறப்பதென்று நெஞ்சால் துழாவுகிறார்கள். ஒவ்வொரு பொருளையும் தொட்டுத் தொட்டு அவை தேவை என்று எண்ணி தவிக்கிறார்கள். பயனற்ற ஒரு பொருளும் தன்னைச் சூழ்ந்து இல்லை என்பதை உணர்கிறார்கள். இனி ஒருபோதும் இல்லை என்று உணர்ந்தால் அத்துறப்பு மேலும் ஆற்றல் கொள்கிறது. இனி ஒருபோதும் இல்லாததைப்போல் பேருருக்கொள்வது, முடிவிலியைச் சென்று தொடுவது பிறிதில்லை. மிக எளிதான ஒன்றை சொல்லும்பொருட்டு எண்ணி எண்ணி கீழிறங்கி கீழிறங்கி செல்கிறார்கள். பிடிக்காத காய்கறிகள். முற்றிலும் பயனற்ற பொருட்கள். என்றோ மறந்துபோனவை. எப்போதுமே தொட்டிராதவை. எண்ணிக்கூட நோக்காது எங்கோ கிடந்தவை...

ஆனால் அவற்றைச் சொன்ன அக்கணமே அவை பெருகி திசைசூழ நின்றிருக்கின்றன. கொடுந்தெய்வமென பதினாறு கைகளும் அருள் விழிகளும் கொண்டு வழிமறிக்கின்றன. கணம் திரும்பி கொடும் சிரிப்புடன் வான் நிறைக்கின்றன. பின்னர் அவற்றின் நிழலில் வாழ்கிறார்கள். எண்ணி எண்ணி ஏங்கி விழிநீர் உகுக்கிறார்கள். நாளில் நூறு முறை சென்று தொட்டு மீள்கிறார்கள். விழிப்பென்பது அதன் நினைவே என வாழ்வு கடத்துகிறார்கள். விடுவது எளிதல்ல. விடுவது எனில் அனைத்தையும் விடவேண்டும். ஒன்றை விடுவதைப்போல்

அறிவின்மை வேறில்லை. ஒன்றை மட்டும் விட்டவரென எவரேனும் உண்டா?

விட்டவர்கள் உதிர்ந்தவர்கள். சுவரிலிருந்து பல்லி உதிர்வதுபோல. தான் பற்றிய சுவர் தன்னைப் பற்றியிருப்பதாக எண்ணியிருக்கும் எளிய சிற்றுயிர்கள். உதிர்ந்தவர்கள் ஆழ்ந்திறங்கி அகல்கிறார்கள். ஒருபோதும் மீள இயல்வதில்லை. ஏனெனில் அது அடியிலா ஆழம். அல்ல, மேலெழுந்துகொண்டே இருக்கிறார்கள். அவன் நீள்மூச்செறிந்து அசைந்தமர்ந்தான். வண்டி நின்றுகொண்டே இருப்பதுபோலத் தோன்றியது. யுதிஷ்டிரன் வண்டியின் கழியை இரு கைகளாலும் இறுகப் பற்றியிருந்தார். வண்டி வானில் பறப்பது போலவும் அவர் அதில் தொங்கிக்கிடப்பது போலவும்.

எத்தனை பொருட்கள்! சாவுக்கடன் முடிக்க வந்த இடம், ஆனால் எத்தனை மகிழ்வுப்பொருட்கள்! சாய்வுத்திண்டுகள், மென்மரத் தலையணைகள், அமர்ந்துண்ணும் வண்ணப்பாய்கள், நறுமணப் புகையூட்டும் துளைச்சட்டிகள்... ஒப்பனைப்பொருட்கள்! சுண்ணச்சிமிழ்கள், அணிப்பேழைகள், துணிப்பெட்டிகள். அப்பொருட்கள் அனைத்தும் தனக்குத் தேவை என்று அவன் உணர்ந்தான். ஒன்றைக் கூட தன்னால் துறக்க இயலாது. இதோ தனித்துக் கிடக்கும் இந்தச் சிறு மண்கலத்தை இனி ஒருபோதும் நோக்கலாகாது, எண்ணலாகாது என்று என்னால் முடிவெடுக்க இயலுமா? அவன் புன்னகைத்துக்கொண்டான்.

பொருள் என இவற்றுக்கு எப்படி பெயர் வந்தது? பொருண்மை கொண்டவை என்பதனால். உட்பொருள் என்பது பொருண்மையின்மை. இவை பொருதுகின்றன. சித்தத்துடன், இருத்தலுடன். பொருட்களென இப்புவியை நிறைப்பது யார்?

மானுடன் சமைத்த பொருட்களின் பெருவெளி. அதைச் சூழ்ந்து தெய்வங்கள் சமைத்த பொருட்கள். பொருட்களை மானுடனுக்கு காவல் நிறுத்தியிருக்கின்றன தெய்வங்கள்.
சிறையிட்டிருக்கின்றன அவனை. இல்லை.
வெற்றுவெளியிலிருந்து பொருட்களால் அவனை காக்கின்றன.
தன்னால் பொருள்கொள்ளத்தக்க பொருட்கள் இல்லா வெளியில் எவரேனும் வாழ இயலுமா என்ன?

குந்தியின் குடிலை நெருங்குவதற்குள்ளாகவே தெரிந்துவிட்டது, அங்கே எவருமில்லை என்று. வாயிலில் குந்தியின் சேடி பத்மை நின்றிருந்தாள். யுதிஷ்டிரன் தேருக்குள்ளேயே அமர்ந்து தன் தலையை முழங்காலில் வைத்து விசும்பினார். யுயுத்ஸு அவரைப் பார்த்துவிட்டு இறங்கி பத்மை அருகே சென்று "பேரரசி?" என்றான். "பேரரசி கிளம்பிச் சென்றுவிட்டிருக்கிறார். என்னிடமும் கூறவில்லை. நான் பேரரசிக்குரிய உணவுடன் வந்தபோது இங்கு எவருமில்லை. எவரிடம் சென்று கேட்பதென்று தெரியவில்லை. காவலரிடம் கேட்டேன். சற்று முன்னர்தான் படகில் விதுரரும் பேரரசியும் ஏறிக்கொண்டதாக சொன்னார்கள். படகு நெடுந்தொலைவு சென்றிருக்கும். எவரிடம் சென்று சொல்வது என்று அறியாமல் இங்கு திகைத்து நின்றிருக்கிறேன்" என்றாள்.

கை வீசி அவளை விலக்கிவிட்டு யுயுத்ஸு திரும்பி வந்து தேர் அருகே நின்றான். "என்ன? அன்னை எங்கிருக்கிறார்?" என்று யுதிஷ்டிரன் கேட்டார். "முன்னரே கிளம்பிச் சென்றுவிட்டிருக்கிறார்கள். அங்கு நாம் நீர்க்கடன் முடித்துக்கொண்டிருக்கையிலேயே படகில் ஏறிவிட்டிருக்கிறார்கள்" என்றான் யுயுத்ஸு. "நானும் அதை கணிக்கவில்லை. நிகழ்வை முடிப்பதிலேயே என் எண்ணம்

இருந்தது.” யுதிஷ்டிரன் “எவரிடமும் சொல்லாமல், எப்பொருளையும் எடுக்காமல்... அல்லவா?” என்றார். உடைந்த குரலில் “ஒவ்வொருவராலும் அது இயல்கிறது. என்னால் இயலவில்லை. எப்போதுமே இயலுமென்று தோன்றவும் இல்லை” என்றார்.

யுயுத்ஸு பேசாமல் நின்றான். யுதிஷ்டிரன் எண்ணியிராத கணத்தில் கடும் சினத்துடன் “ஆம் என்று உரைக்கிறாய் அல்லவா? என்னால் துறக்கவே முடியாதென்று நினைக்கிறாய் அல்லவா?” என்றார். அவன் வெறுமனே நோக்க “உன்னுள் என்னை நோக்கி இளிவரல் உரைக்கிறாய் அல்லவா? சொல்!” என்றார். யுயுத்ஸு அவர் முகத்தை பார்த்தபடி பேசாமல் நின்றான். “நான் இங்கு அனைத்திலும் பற்றுகொண்டவன் என்கிறாய். இவை அனைத்துக்குமாக வாழ்பவன் என்கிறாய். இல்லையா?” என்றார் யுதிஷ்டிரன். யுயுத்ஸு உறுதியான குரலில், அவர் விழிகளை நோக்கி “ஆம்” என்றான்.

யுதிஷ்டிரன் திகைத்து கைநடுங்க வாய்திறந்திருக்க அவனை ஒருகணம் பார்த்துவிட்டு மீண்டும் விம்மி அழுதபடி தன் தலையை முழங்காலில் வைத்துக்கொண்டார். யுயுத்ஸு தேர்ப்பாகனிடம் திரும்பிச்செல்வோம் என்று கை காட்டினான். தேர் சகட ஓசையுடன் பலகைகளின்மேல் சென்றது. செல்லும் வழியெங்கும் பயணத்துக்கான அனைத்தும் ஒருங்கியிருந்தன. அரசியர் பலர் முற்றங்களில் நின்றிருந்தனர். கங்கையில் மீன்கூட்டங்கள் என படகுகள் செறிந்திருந்தன.

அவர்கள் மீண்டும் அவையை அடைந்தபோது அவர்களைக் காத்து சகதேவன் குடில் வாயிலில் நின்றிருந்தான். யுயுத்ஸு தேரிலிருந்து இறங்கி சகதேவனின் அருகணைந்ததும் அவன் “அன்னையும் பேரரசரும் சென்றுவிட்டார்கள் என்று அறிந்தேன்”

என்றான். "ஆம்" என்று யுயுத்ஸு சொன்னான். சகதேவன் "காசிநாட்டு அரசியர் கிளம்பவிருக்கிறார்கள் என செய்தி வந்தது" என்றான். "அவர்களை அரசர் வழியனுப்பி வைக்கவேண்டும் அல்லவா?" என்று யுயுத்ஸு சொன்னான். "வேண்டியதில்லை என்று அவர்கள் கூறிவிட்டார்கள். இங்கிருந்து ஒரு சொல்லும் எஞ்சாமல் கிளம்பவேண்டும் என்பது அவர்களுடைய எண்ணம். ஆகவே எந்த முறைமையும் தேவையில்லை, எவரும் உடன் வரலாகாது என்று காசிநாட்டரசி ஆணையிட்டிருக்கிறார். நானே படகுகளுக்கு ஆணையிட்டுவிட்டு இங்கு வந்தேன். இன்னும் சற்று பொழுதில் அவர்கள் கிளம்பிவிடுவார்கள்" என்றான் சகதேவன்.

பெருமூச்சுடன் யுயுத்ஸு "நன்று" என்றபின் தேரிலிருந்து தளர்ந்த தோள்களுடன் இறங்கிய யுதிஷ்டிரனை பார்த்தான். யுதிஷ்டிரன் மெல்ல நடந்து அவனருகே வந்து "மஞ்சத்தை போடு. என்னால் அமர்திருக்கவே இயலாது என்று தோன்றுகிறது" என்றார். சகதேவன் "தௌம்யர் என்னிடம் அஸ்தினபுரிக்குள் நாம் நகர்நுழைவதற்கான நாள் நோக்கும் பொருட்டு ஆணையிட்டார்" என்றான். "நோக்கிவிட்டாயா?" என்றார். "ஆம், நாம் நாளை காலை இங்கிருந்து கிளம்புகிறோம். அஸ்தினபுரிக்குள் சென்று சேரும் பொழுதை இரண்டுநாட்களாக ஆக்கிக்கொள்ளலாம். நாளை மறுநாள் அந்தியில் நற்பொழுது. நாம் நகர் நுழையலாம்" என்றான். "ஆவன செய்" என்பதுபோல் யுதிஷ்டிரன் கைகாட்டினார்.

யுயுத்ஸு சகதேவனிடம் "இங்கிருந்து அனைவருமே கிளம்புவதுபோல அல்லவா?" என்றான். "ஆம், இங்கிருந்து இளவரசியர் ஒவ்வொருவரும் தங்கள் நாடுகளுக்கு கிளம்பிச் செல்கிறார்கள். எவருக்கும் எந்த முறைமையும்

தேவையில்லை. நீத்தாரில்லம் நீங்குவது என்பது சொல்லின்றியே நிகழவேண்டும் என்று நெறி உள்ளது என்றார் தௌம்யர். நாமும் சொல்லின்றியே நீங்க வேண்டும். நாம் சென்ற பிறகு இங்கு எஞ்சியிருக்கும் வெறுமையை திரும்பிப் பார்க்கலாகாது. திரும்பிப் பார்த்தவர்கள் மீண்டும் வர நேரும் என்கிறார்கள்" என்றான் சகதேவன்.

கோணலாக புன்னகைத்து "ஆனால் ஒவ்வொரு கணமும் இங்கு திரும்பி வந்துகொண்டேதான் இருப்போம்" என்றான். யுயுத்ஸு ஒரு சிறு திடுக்கிடலை அடைந்தான். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை.

நீர்ச்சுடர் - 62

பகுதி ஒன்பது : சிறகெழுகை – 4

யுயுத்ஸு கிளம்புவதற்கான பொழுதையும் சகதேவன் குறித்துக் கொடுத்திருந்தான். அந்தப் பொழுதை அடைவதற்குள் செய்து முடிக்க வேண்டிய பணிகளென ஓர் அட்டவணையை யுயுத்ஸு கரியால் பலகையில் எழுதி வைத்திருந்தான். செய்யச் செய்ய ஒவ்வொன்றாக ஈரத்துணியால் தொட்டு அழித்தான். ஆனால் மேலும் மேலும் புதிய பணிகளை அழித்த இடத்திலேயே எழுத வேண்டியிருந்தது. செயல்கள் பெருகி அங்கே எழுதத்தொடங்கியதைவிட இருமடங்குச் செயல்கள் எஞ்சியிருந்தன.

முக்தவனத்திலிருந்து கிளம்புவது அங்கு வந்து சேர்வதைவிட பெரிய அலுவலாக இருந்தது. அங்கு வந்தபோது

ஒவ்வொருவரும் தனித்தனியாக வந்தனர். பலநாட்கள் புலரி முதல் அந்தி வரை ஒவ்வொருவராக வந்து சேர்வதற்கான ஒருக்கங்கள் நடந்துகொண்டே இருந்தன. வந்து இறங்குபவர்களை வரவேற்று அவர்களுக்குரிய குடில்களில் சேர்ப்பது, அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கும் அவர்களுக்குரிய வைதிகச்சடங்குகளையும் குலச்சடங்குகளையும் செய்வதற்கும் ஒருக்கங்களை அமைப்பது என. ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்குரிய முறைமைகள் இருந்தன. குலமுறைமைகள், மூப்புமுறைமைகள், சடங்குமுறைமைகள்.

ஒவ்வொரு நாளும் அவை ஒன்றுடன் ஒன்று முரண்பட்டன. முதற்சடங்கைச் செய்ய அகவை குறைந்த ஒருவர் வருவாரென்றால் அகவை மூத்தவரை என்ன செய்வது என்ற ஐயம் எழுந்தது. அவர் அகவை மூத்தவரை வணங்கிவிட்டுச் செல்லலாம் என விதுரர் வகுத்தார். குலச்சடங்குகள் வைதிகச்சடங்குகளுடன் முரண்பட்டால் அவற்றை வெவ்வேறு இடங்களில் நடத்தலாம் என்றார். அரசகுடியினர் தொல்குடிச் சடங்குகளைச் செய்யலாமா என்ற வினா எழுந்தபோது அதற்கு மட்டும் அரசக்கணையாழியை கழற்றலாம் என்றார் தௌம்யர். பல்லாயிரம் வினாக்கள், அவற்றுக்குரிய தீர்வுகள். எல்லாவற்றுக்கும் எங்கோ ஒரு செல்வழி இருந்தது. "நீருக்கும் காற்றுக்கும் எங்கும் வழியுண்டு" என்றார் தௌம்யர்.

நீர்க்கடன் முடித்துக் கிளம்புகையில் அனைவருமே ஒரே தருணத்தில் எழுந்தனர். ஆகவே எண்ணி நோக்க முடியாத அளவிற்கு இடர்கள் நிறைந்ததாக விடைகொள்ளல் மாறியது. கங்கை முழுக்க படகுகள் நிரம்பி நின்றன. படகுத்துறைக்கு இளவரசியரின் குழுவொன்று வரும்போது அவர்களை

அழைத்துச் செல்வதற்கான படகுகள் கங்கையின் நடுவொழுக்கில் நின்றன. அவை படித்துறையில் அணைய முடியாதபடி அங்கே பிற படகுகள் தேங்கி நின்றன. அப்படகுகளுக்குரிய இளவரசிகள் அப்போதும் தங்கள் குடில்களிலிருந்து கிளம்பாமல் அலைமோதிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் பிறிதொருவரை தேடினர். தேடியவர்களை பிறர் தேடினர்.

யுயுத்ஸு மேலும் மேலும் காவலர்களை தெரிவு செய்து அவர்களை ஒருங்கிணைப்பவர்களாக மாற்றி ஆணைகளை பிறப்பித்தான். "ஆணைகளை எழுதிக்கொள்ளுங்கள். எங்கேனும் எழுதி வையுங்கள். ஒவ்வொன்றையும் இயற்றி முடித்தபின் அவற்றை அழியுங்கள். இங்குள்ள செயலிறுக்கத்தில் ஆணைகளை மறந்துவிடுவீர்கள். எண்ணுக, மறக்கப்பட்ட ஒவ்வொரு ஆணையும் பாறாங்கல்லென பிறிதொருவரின் செயலை மறிக்கிறது! செய்யப்படாத செயல்களாலேயே அனைத்தும் சிக்கலாகின்றன. செய்யப்பட்டவை நம் கையிலிருந்து அகன்று நம்மை விடுவிக்கின்றன" என்று அவன் மீள மீள கூறிக்கொண்டே இருந்தான்.

அஸ்தினபுரிக்கு அவன் கிளம்பவேண்டிய பொழுது வந்தபோது அவன் செய்யத்தொடங்கிய செயல்களைவிட பலமடங்கு செயல்களை செய்துவிட்டிருந்தான். பலமடங்குச் செயல்கள் எஞ்சியிருந்தன. மல்லநாட்டு அரசியர் பலர் கிளம்பவேண்டியிருந்தது. மச்சநாட்டு இளவரசிகள் அப்போதும் கிளம்பியிருக்கவில்லை. அங்கு ஒவ்வொருவரும் பிறிதொருவராக உருமாறியிருந்தனர். அச்சடங்குகள் முடிவது வரை அச்சடங்கொன்றே அவர்களுக்கு பொருட்டாக இருந்தது. எவரும் தங்களைப்பற்றி எண்ணியிருக்கவில்லை. சடங்குகள்

முடிந்தமை ஒவ்வொருவருக்கும் ஓர் அறிவுறுத்தலென மாறி வளைக்கப்பட்ட மூங்கில் நிலைமீள்வதற்கான அறுபடல் போலாகியது. ஒவ்வொருவரும் அவர்கள் எவரோ அவர்களாயினர்.

அவர்கள் தன்முனைப்பும் தனி எண்ணங்களும் கொண்டவர்களாயினர். ஒவ்வொருவரும் பிறருடன் தங்களை ஒப்பிட்டனர். தங்கள் குல முறைகளும் மூப்பு முறைகளும் பேணப்படவேண்டுமென்று எதிர்பார்த்தனர். மல்லநாட்டு இளவரசியர் கிளம்பிய பின்னரே மச்சநாட்டு இளவரசியர் கிளம்ப வேண்டுமென்பது முறை. ஆனால் மச்சநாட்டு இளவரசிகளில் ஏழுபேர் முன்னரே படகுகளில் கிளம்பிவிட்டிருந்தனர். அச்செய்தி அறிந்த மல்லநாட்டு இளவரசியர் தங்கள் ஆடைகளைச் சுருட்டி எறிந்துவிட்டு "எங்களுக்கு இங்கு எந்த ஒருக்கங்களும் செய்யவேண்டியதில்லை. நாங்கள் எங்கள் நாட்டிலிருந்து வரும் படகுகளில் சென்றுகொள்கிறோம். நாங்கள் எவரையும் நம்பி இல்லை" என்று கூவினர்.

ஆசுர குலத்தைச் சேர்ந்த இளவரசியர் தனியாக கிளம்ப ஒருங்கு செய்யப்பட்டிருந்தது. அவர்களுடன் ஷத்ரிய குடியைச் சேர்ந்த இளவரசி ஒருத்தியின் படகு கிளம்பவிருந்தது. அங்கு சென்ற பின்னரே தன்னுடன் கிளம்புபவர்கள் ஆசுர குலத்தவர்கள் என்று புரிந்து "திருப்புக, படகை கரைசேருங்கள்! நான் கிளம்பவில்லை. பின்னர் தனியாக கிளம்புகிறேன்" என்று அவள் கூச்சலிடத் தொடங்கினாள். படகு கரையணைய முடியாதபடி அடுத்த நிரை படகுகள் வந்துவிட்டிருந்தன. அவற்றில் ஏற்றப்படவேண்டிய பொருட்கள் குடில்களிலிருந்து வந்துசேர்ந்திருக்கவில்லை.

ஒவ்வொருவரையும் யுயுத்ஸுவே சென்று தலைவணங்கி ஆறுதல் கூறி பொறுத்தருளும்படி மன்றாடி கேட்கவேண்டியிருந்தது. பாண்டவர்கள் எவருமே அவர்களை வழியனுப்ப வரக்கூடாதென்று நெறியிருந்தது. அந்தணர்கள் முன்னரே கிளம்பிச் சென்றுவிட்டிருந்தனர். ஒவ்வொரு இடத்திலும் யுயுத்ஸு முழுப் பொறுப்பையும் தான் ஏற்றுக்கொண்டவனாகவும் முழு இழிவையும் தானே சூடிக்கொண்டவனாகவும் தோன்றினான். அவர்கள் அவனை பாண்டவன் என எண்ணி வசைபாடினர். பாண்டவர்களுக்குரிய மதிப்பை வழங்க மறுத்தனர்.

அவன் கிளம்பும்பொழுது வந்துவிட்டதை ஏவலன் வந்து சொன்னபோது முற்றிலும் களைத்து கைகால்கள் சோர்ந்து படித்துறையில் நின்றிருந்தான். இறுதி அணியின் படகுகள் கங்கை மேல் அசைந்துகொண்டிருந்தன. அந்தி கடந்துவிட்டிருந்தது. "இன்னும் அரை நாழிகையில் தாங்கள் கிளம்பவேண்டும்" என்று ஏவலன் சொன்னதும் "நன்று" என்று சொல்லி அவன் திரும்பிப்பார்த்தான். ஏவலர் தலைவன் சுஃப்ரனும் முக்தனும் அருகே வந்தனர். அவர்களுக்குரிய ஆணைகளை விரைவாக சொல்லிக்கொண்டே நடக்க அவர்கள் அவற்றை உளம் பதித்தபடி பின்னால் வந்தனர்.

அவன் குடில் முன் ஸ்ரீமுகர் நின்றிருந்தார். அவனைப் பார்த்ததும் ஓடிவந்து "எங்கு சென்றிருந்தீர்? அரசர் தங்களை திரும்பத் திரும்ப கேட்டுக்கொண்டிருக்கிறார். தாங்கள் கிளம்புவதற்கான பொழுதும் முன்னரே வகுக்கப்பட்டுவிட்டதல்லவா?" என்றார். "ஆம்" என்றான் யுயுத்ஸு. "தாங்கள் நீராடி ஆடைமாற்றி கிளம்புவதற்கு இனி பொழுதில்லை. இன்னும் அரை நாழிகைகூட இல்லை. தாங்கள்

இறுதியாக அரசரைப் பார்த்து விடைபெற்றுக்கொண்டுதான் செல்லவேண்டும்" என்று ஸ்ரீமுகர் சொன்னார். "படகில் ஏறியதுமே துயிலப்போகிறேன். செல்லும் வழியில் ஓரிடத்தில் இறங்கி நீராடிக்கொள்கிறேன்" என்றான் யுயுத்ஸு.

தன் குடிலுக்குள் சென்று இன்றியமையாத பொருட்களை மட்டும் மரவுரியில் கட்டி ஏவலனிடம் அளித்து தேரில் வைக்கும்படி சொல்லிவிட்டு ஸ்ரீமுகருடன் விரைந்து நடந்தான். யுதிஷ்டிரனின் குடில் முகப்பில் ஏவலர்கள் அலைமோதிக்கொண்டிருந்தார்கள். குடிலுக்குள் நகுலனும் அவரும் மட்டும் தனித்திருந்தார்கள். யுதிஷ்டிரன் புன்னைக்காய் எண்ணை விளக்கை தன் அருகே வைத்து அதன் ஒளியில் ஒரு சுவடியை வைத்து கூர்ந்து படித்துக்கொண்டிருந்தார். அவன் உள்ளே நுழைந்து தலைவணங்கியதும் "ஆம், நீ இன்று கிளம்பவேண்டுமல்லவா?" என்றார்.

"ஆம் மூத்தவரே, இன்று கிளம்புகிறேன்" என்றான் யுயுத்ஸு. "நாங்கள் நாளை காலை புலரியில் கிளம்புகிறோம் அல்லவா?" என்று அவர் மீண்டும் கேட்டார். அதை பலமுறை கூறியிருந்தமையால் யுயுத்ஸு ஒருகணம் சலிப்படைந்து "ஆம் மூத்தவரே, நாளை முற்புலரியில் தாங்கள் உடன்பிறந்தாருடன் இங்கிருந்து கிளம்புகிறீர்கள். அதன் பின்னர் பகல் முடிவதற்குள் ஏவலர்கள் கிளம்புகிறார்கள் அந்தியில் காவலர்கள் கிளம்புவார்கள். அதன் பின்னர் ஒரு காவல்படை மட்டுமே இங்கே இருக்கும்" என்றான். "இங்கு எதற்கு காவலர்கள்?" என்று யுதிஷ்டிரன் கேட்டார்.

அதையும் பலமுறை அவரிடம் சொல்லியிருந்த யுயுத்ஸு சலிப்புடன் "ஏழு நாட்கள் இங்கே காவல் இருக்கவேண்டும். அதற்குள் எவரும் இங்கே வந்து படித்துறையை

பாழ்படுத்திவிடக்கூடாது. வேதம் விளைந்த நிலம் ஏழு நாட்கள் காக்கப்படவேண்டும் என்று நெறியுள்ளது" என்றான். "ஆம், இங்கு ஒரு படை இருக்கவேண்டியதுதான்" என்று யுதிஷ்டிரன் சொன்னார். "நன்று! நீ கிளம்பலாம்" என்றபின் நகுலனிடம் "நாம் சென்று சேர்வதற்கு மூன்று நாட்களாகும் அல்லவா?" என்றார். "ஆம்" என்று நகுலன் சொன்னான். "நாட்களை பொதுவாகவே கணித்திருக்கிறோம்." யுதிஷ்டிரன் "ஏன்?" என்றார்.

"வழியில் இரண்டு இடங்களில் தங்குகிறோம். யுயுத்ஸு சென்று சேர்ந்து அங்கு நம்மை வரவேற்பதற்கான ஒருக்கங்கள் அனைத்தும் முடிவதற்கு அந்தப் பொழுது தேவைப்படும். அங்கு அனைத்தும் சித்தமாகிவிட்டன என்று நமக்கு செய்தி வந்த பின்னரே நாம் நகர்நுழைகிறோம்" என்றான் நகுலன். "அங்கு ஏதும் சிக்கலிருந்தால்? ஒருக்கம் முழுமையாகாவிட்டால்?" என்று யுதிஷ்டிரன் கேட்டார். அவர் நூல்நவில்தல் வழியாக நெடுந்தொலைவு சென்றுவிட்டிருந்தார் என தெரிந்தது.

நகுலன் தானும் சலிப்புடன் "மூத்தவரே, இதையும் ஏற்கெனவே விரிவாக பேசி வகுத்துவிட்டோம். மொத்தம் மூன்று நற்பொழுதுகள் வகுக்கப்பட்டுள்ளன. முதல் நற்பொழுது மூன்று நாட்களுக்குப் பிறகு. ஏழு நாட்களுக்குப் பிறகு பிறிதொன்று. பதினாறு நாட்களுக்குப் பிறகு மற்றொன்று. நமது நகர்நுழைவுக்கான அனைத்து ஒருக்கங்களும் முடிந்து அங்கிருந்து அழைப்பு வந்த பிறகே நாம் அஸ்தினபுரியை சென்றடைவோம். அதுவரை செல்லும் வழியிலேயே தாங்கள் தங்குவதற்கு இரண்டு சிற்றூர்கள் ஒருக்கப்பட்டுள்ளன. அங்கு நாம் அனைவரும் தங்குவதற்கான குடில்களும் படித்துறையும் அமைக்கப்படும்" என்றான்.

ஆர்வமின்றி "நன்று!" என்றபின் யுதிஷ்டிரன் அந்த ஓலையை தரையில் வைத்து கைகளைக் கோத்து நெட்டி முறித்து "எவ்வளவு பணிகள்!" என்றார். "அஸ்தினபுரியின் மக்களின் உளநிலை என்னவென்று எனக்குத் தெரியவில்லை. நாம் நகர்நுழைவதை அவர்கள் எவ்வாறு எதிர்பார்ப்பார்கள்? நம்மை எதிர்கொள்ள எவரேனும் வருவார்களா?" நகுலன் ஒன்றும் சொல்லவில்லை. "வருவார்கள்" என்று யுயுத்ஸு சொன்னான். "நாம் மணிமுடி சூடும்பொருட்டு உள்ளே நுழைகிறோம். உங்கள் மேல் எதிர்ப்புள்ளவர்கள், உங்கள் அரசில் வாழ விரும்பாதவர்கள் அனைவருமே நகர்விட்டு சென்றுவிட்டார்கள். இனி அங்கிருப்பவர்கள் வாழ விழைபவர்கள், அனைத்தையும் மறந்து முன் செல்ல எண்ணுபவர்கள். உங்கள் நகர்நுழைவு புதிய தொடக்கமாக இருக்கும் என அவர்கள் எண்ணுவார்கள்."

"எப்போதுமே துயரும் வலியும் முடிந்து வரும் இடைவெளியை பெரும்களிப்புடனே மக்கள் கொண்டாடுகிறார்கள். நீங்கள் நகர்நுழைவதை அனைத்தையும் முடித்துவிட்ட பிறகு ஒரு புதிய காலகட்டம் தொடங்கவிருக்கிறது என்பதற்கான அறிவிப்பாகவே கொள்வார்கள். அதை பெருநிகழ்வாகவே கொண்டாடுவார்கள்" என்றான் நகுலன். "ஆம், அவ்வாறுதான் தோன்றுகிறது. ஆனால் மானுட உள்ளங்களைப் பற்றி ஒன்றும் சொல்ல இயலாது. அனைத்தும் ஒருங்கிவிட்டபின் அறுதிக்கணத்தில் ஓர் அலையென கசப்பும் துயரும் வந்து சேரக்கூடும். ஏனென்றறியாமலேயே காழ்ப்பும் சினமும் கொள்ளக்கூடும்" என்று யுதிஷ்டிரன் சொன்னார்.

யுயுத்ஸு ஒன்றும் கூறவில்லை. "பொழுதாகிறது, நீ கிளம்பலாம்" என்று யுதிஷ்டிரன் சொல்ல யுயுத்ஸு முன்னால் நடந்து குனிந்து அவரை வணங்கினான். அவர் கைதூக்கி

வாழ்த்தி "சென்று வருக!" என்றார். யுயுத்ஸு வெளியே வந்து தன்னுடன் வந்த ஸ்ரீமுகரிடம் "எஞ்சிய ஆணைகளை நான் தனியாக ஓலையில் எழுதியிருக்கிறேன். விரைந்த அடையாளக்குறிப்புகளாகவே அவை இருக்கின்றன. அவற்றை தாங்கள் மட்டுமே படிக்க முடியும். என் குடிலுக்கு என்னுடன் வருக! நான் அவற்றை தங்களிடம் அளித்துவிடுகிறேன்" என்றான்.

"இங்கிருந்து கிளம்ப வேண்டும், அவ்வளவுதானே? இதற்கென்ன இவ்வளவு பணிகள்?" என்று ஸ்ரீமுகர் கேட்டார். "கிளம்புவது எளிதல்ல" என்றான் யுயுத்ஸு. ஸ்ரீமுகர் "விந்தையாக இருக்கிறது. குருக்ஷேத்ரத்திற்கு சென்று சேர்வதற்கு பலநாட்களாயின. குருக்ஷேத்ரத்தை அமைத்து முடிக்க அதைவிட பலமடங்கு நாட்களாயின. அங்கிருந்து கிளம்புவது கனி உதிர்வதுபோல அத்தனை எளிதாக நடந்தது. எவரும் எதையும் அறியவில்லை" என்றார்.

திடுக்கிட்டவன்போல யுயுத்ஸு பார்த்தான். அப்பொழுதில் குருக்ஷேத்ரத்தை அவர் நினைவுபடுத்தியிருக்கக் கூடாது என்று அவன் எண்ணினான். ஆனால் அவ்வண்ணம் நினைவுபடுத்தாமல் ஒவ்வொன்றையும் எண்ணி நோக்கும் பழக்கமே இல்லாமலாகிவிட்டிருக்கிறது என்றும் தோன்றியது. "இடிந்து விழுவதற்கும் பிரித்து அடுக்குவதற்குமான வேறுபாடு" என்றான். ஸ்ரீமுகர் "ஆம்" என்றார். "இங்கிருந்து செல்பவர்களுக்கு இது ஒரு தொடக்கம்... அதுதான் இத்தனை சிக்கல்களை உருவாக்குகிறது" என்றான் யுயுத்ஸு.

குடில் நிரைகளின் முகப்பில் கொம்பொலி எழுந்தது. "யார்?" என்று ஸ்ரீமுகர் கேட்டார். யுயுத்ஸுவும் அந்த ஓசையை கேட்டான். "தூதர்கள் எவரோ" என்றான். "ஆம், தூதர்கள்" என்று

ஸ்ரீமுகர் சொன்னார். "அஸ்தினபுரியிலிருந்தா? இப்போது அங்கிருந்து தூது வருவதென்றால்..." என்றார். யுயுத்ஸுவும் அதிலிருந்த விந்தையை உணர்ந்து உளநடுக்கு கொண்டான். ஒவ்வொரு செய்தியும் தீயதாகவே இருக்கக்கூடும் என்று ஏன் தோன்றுகிறது? நன்றென்று ஒன்றை திட்டமிடுகையில்கூட. ஆனால் மானுடர் எப்போதும் தீமையை மட்டுமே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தெய்வங்களின் அருளை உண்மையாக நம்பும் எவருமில்லை போலும்.

ஸ்ரீமுகர் வெளியே சென்றார். அவன் படகுத்துறை நோக்கி செல்கையில் அவர் மீண்டும் அவனிடம் வந்தார். "அவர்கள் குருக்ஷேத்ரத்திலிருந்து வந்திருக்கிறார்கள்" என்றான். "கங்கநாட்டிலிருந்து பிதாமகர் பீஷ்மரின் குடியினர் வந்து அவரை பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவருக்கு அங்கே ஒரு குடில் அமைக்கப்படுகிறது..." யுயுத்ஸு நெடுநாட்களுக்குப் பின் அவரை நினைவுகூர்ந்தான். "ஆம், அவர் அங்கே கிடக்கிறார். காத்திருக்கிறார்" என்றான். ஆனால் அது சொல்லாகவில்லை, அவனுள்ளே ஒலித்தது.

"வருகிறேன், ஸ்ரீமுகரே" என்றபடி அவன் படகில் ஏறிக்கொண்டான். நான்கு பாய்கள் கொண்ட விரைவுப்படகு. ஸ்ரீமுகர் கரையில் நின்றார். "சென்றதுமே செய்தி அனுப்புகிறேன்" என்றபின் அவன் சிற்றறைக்குள் சென்றான். மஞ்சத்தில் படுத்து கால்களை நீட்டிக்கொண்டான். எண்ணங்கள் சேர்ந்து ஒற்றை அலையாக அவனை அறைந்தன. விந்தையான வெறுமையுணர்வு தோன்றியது. பெருமூச்சுக்களாக விட்டுக்கொண்டிருந்தான். ஆனால் சாளரம் வழியாக கரை அலைந்தாடி அகன்று செல்வதைக் கண்டதும்

உள்ளம் ஆறுதல்கொண்டது. அந்த ஆறுதல் வழியாக அவன் துயில்நோக்கி சென்றான்.

[**நீர்ச்சுடர் நிறைவு]**